வெளியீடு 28-8-1982]

[Issued 28-8-198

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

வியாழக்கிழமை, மார்ச் 4, 1982—தொகுதி XXXI எண் 1

Thursday, 4th March 1982—Volume XXXI No. 1

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600 009

**Legislative Assembly Department, Fort St. George**
**Madras-600009**

விலை ரூ. 3-50 காசுகள்]

[Price Rs. 3-50 Paise

D
Y211.31 N82
N82-331)
122231

## உள்ளடக்கம்

**4—3—1982**

| | பக்கங்கள் |
|---|---|
| (i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | |
| (ii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் .. .. | |
| (iii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியல் (தொகுதிகள் உள்பட அகர வரிசையில்) .. | |
| 1. வினாக்கள் – விடைகள்— | |
| உடுகுறியிட்ட வினாக்கள் | 1—47 |
| 2. அறிவிப்பு— | |
| திருத்தப்பெறும் விடைகளும் துறைககு அனுப்பப்பெறுதல் .. .. .. | 48 |
| 3. தகவல் கோரல்— | |
| (அ) பேரவையின் அலுவல் நேரம் .. | 48 |
| (ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் .. .. .. | 48—49 |
| 4. உரிமைப் பிரச்சினை— | |
| வானொலி மீது .. .. .. | 49—51 |
| 5. ஒத்திவைப்புத் தீர்மானம்— | |
| வடஆற்காடு மாவட்டத்தில் மின்தடை மற்றும் தூத்துக்குடி அனல் மின் நிலையம் இயங்காதது .. .. .. | 51—60 |
| கவன ஈர்ப்பு— | |
| மதுரா கோட்ஸ் ஆலை கழிவு நீர் தாமிரபரணி ஆற்றில் கலப்பது .. .. .. | 60—62 |
| அரசினர் சட்ட முன்வடிவுகள்— | |
| (அ) மாகாண சிறு வழக்கு நீதி மன்றங்கள் (தமிழ் நாடு திருத்த) சட்டமுன்வடிவு, 1982 | 62 |
| (ஆ) சென்னை மாநகர சிவில் வழக்கு நீதி மன்றம், மாநிலச் சிறு வழக்கு நீதி மன்றங்கள் (திருத்த) ரத்து சட்டமுன்வடிவு, 1982 | 63 |

## உள்ளடக்கம்—தொடர்ச்சி


| | | பக்கங்கள். |
|---|---|---|
| 8. வரவு செலவுத் திட்டம் 1982-83 - பொது விவாதம்—(தொடர்ச்சி) | .. | 63—119 |
| திரு. பி. எம். வெங்கடேசன் | .. | 63—66 |
| மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் | .. | 64 |
| திரு. மி. வின்செண்ட் | .. | 66—74 |
| மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் | .. | 67,75,109 |
| திரு. ஆர். தியாகராசன் | .. | 79—86 |
| திரு. க. பாலசுப்பிரமணியன் | .. | 87—92 |
| திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் | .. | 93—98 |
| திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சோராணை | .. | 98—103 |
| செல்வி வி. விஜயலட்சுமி | .. | 103—106 |
| திரு. பொ. உத்திராபதி | .. | 106—112 |
| திரு. கே. தனுக்கோடித் தேவர் | .. | 112—117 |
| திரு. கா. சோமசுலகிருஷ்ணன் | .. | 117—119 |
| 9. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் | .. | 119—120 |


## உள்ளடக்கம்

5—3—1982


| | | பக்கங்கள் |
|---|---|---|
| 1. வினாக்களுக்கு—விடைகள்— உடுக்குறியிட்ட வினாக்கள் | .. | 121—167 |
| 2. ஒத்திவைப்புத் தீர்மானம்— வட ஆற்காடு மாவட்டம் கோனலம் அரிஜனங்கள் கொடுமைப்படுத்தப் பெற்றது | .. | 168—177 |
| 3. கவன ஈர்ப்பு— மதுரை மாவட்டம் தேவாரத்தில் துப்பாக்கிச் சூடு | .. .. .. | 177—179 |
| 4. அறிக்கை அளித்தல்— விதி 106-ன் கீழ் ஹஜ் யாத்திரிகர்கள் பற்றிய நீர்ப்பாசனத்துறை அமைச்சரின் அறிக்கை | .. .. .. | 179 |
| 6. வரவு செலவுத் திட்டம் 1982-83—பொது விவாதம் (தொடர்ச்சி)— | | |
| திரு. ரா. கு. பெருமாள் | .. | 180—184 |
| திரு. என், எஸ். வி. சித்தன் | .. | 185—192 |
| திரு. என். சங்கரய்யா | .. | 193—212 |
| மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் | .. | 192—220 |
| மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் | .. | 205, 212—213 |
| டாக்டர் கே. பி. இராமலிங்கம் | .. | 213—218 |
| திரு. ப. தனபால் | .. | 219—224 |
| திரு. ப. சுந்தரம் | .. | 224—227 |
| திரு. இரா. கருப்பையா | .. | 228—237 |
| டாக்டர் கே, சௌரிராஜன் | .. | 238—246 |
| மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் | | 238—239 |
| திரு. ஏ. தங்கராசு | .. | 246—249 |
| திரு. செ. இராமலிங்கம் | .. | 249—255 |
| திரு. கே. சௌந்திரராசன் | .. | 256—262 |
| திரு. ப. நெடுமாறன் | .. | 262—270 |
| திரு. ந. குலசேகரபாண்டியன் | .. | 271—274 |

பக்கங்கள்.


5. வரவு செலவுத் திட்டம் 1982-83—பொது விவாதம்—தொடர்ச்சி—

திரு. ஏ. சாகுல் ஹமீது .. 274—280
திரு. இரா. அருணாசலம் .. 280—284
திரு. பு. கோ. ஆலூர் ஜெகதீசன் .. 284—291
மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் .. 290—299
திரு, ப. வெங்கடசுப்பிரமணியம் .. 291—293
திரு. பம்மல் நல்லதம்பி .. 294—300
திரு. வே. இரா. ஜெயராமன் .. 300—304
திரு. ஏ. சி. சண்முகம் .. 304—308
திரு. இரா. சண்முகம் .. 309—313
திரு. எஸ். என். இராமசாமி .. 314—315
திரு. ச. பாலகிருஷ்ணன் .. 315—318
திரு. மு. அரங்கநாதன் .. 318—323
திரு. ந. சிவஞானம் .. 323—326
திரு. இரா. சா. முனிரத்தினம் .. 326—329
திரு. எம். பி. இரத்தினம் .. 329—332
திரு. நா. சுந்தரராஜ் .. 332—343
திரு. ஜி. மூர்த்தி .. 343—348
திரு. மு. ப. முனுசாமி .. 348—351
திரு. இ. முத்துராமலிங்கம் .. 351—353
திரு. என். பெருமாள் .. 353—355
திரு. ஜே. எஸ். இராசு .. 355—357
திரு. ஜி. கே. சுப்பிரமணியன் .. 358—361

6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 361


## உள்ளடக்கம்

6—3—1982

பக்கங்கள்


1. வினாக்கள்— விடைகள்— 367—401

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள் .. ..

2. ஒழுங்குப் பிரச்சினை—

(அ) பேரவைக் கூட்டம் நடைபெறுகையில். புதுத் திட்டங்களை பேரவையில் அறிவிக்காது. மேலவையில் அறிவிப்பது. .. .. .. 402—406

(ஆ) வினாப் பட்டியலில் சேர்க்கப்பெற்ற வினாக்கள் ஒத்திவைக்கப்பெறுதல். .. 406—407

3. வரவு செலவுத் திட்டம், 1982—83— பொது விவாதம் — (தொடர்ச்சி) — .. 407—415

திரு. கே. எஸ். ஜி. ஹாஜாசெரீப் .. .. 407—410
மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு .. .. 414
டாக்டர் மு. கருணாநிதி .. .. .. 417—444
மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் .. 443—445

4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 445—446

8. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (வேளாண்மைத் துறை அமைச்சர்)—வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு மற்றும் அக்ரோ பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (கூட்டுறவு—சட்ட அமைச்சர்)—சட்டம், நீதிமன்றங்கள் சிறைகள், எடைகள் மற்றும் அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், நிறுவனங்கள் பதிவு, கடன் வழங்கல் மீதான நிவாரணச் சட்டம், சீட்டு பற்றிய சட்டம், கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் நிவாரணம், பூமிதானம், கிராமதானம், நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்)—தொழிலாளர் வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகர அமைப்பு, இட வசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்)—மக்கள் நல்வாழ்வுத்துறை.

13. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்)—வேளாண்மை பணி, கூட்டுறவு சங்கங்கள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள், வக்ப்.

14. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத்துறை அமைச்சர்)—அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு (தொழில்துறை அமைச்சர்)—பெருந் தொழில்கள், சுரங்கங்கள், கனிப் பொருள்கள், நெசவாலைகள்.

16. மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் (கதர் மற்றும் பொதுப் பணித்துறை அமைச்சர்)—கதர், மது மனுமதிச் சீட்டு வழங்கல் நீங்கலாக மது விலக்கு, பயண இசைவுச் சீட்டு, பொதுப் பணித்துறை மற்றும் பொதுப் பணித்துறை அலுவல்கள் சம்பந்தமாக.



17. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்)—ஆதி திராவிடர் நலம், எழுதுபொருள், அச்சுத்துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர், வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

18. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத் துறை அமைச்சர்)—மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

Governor of Tamil Nadu.

Thiru S. SADIQ ALI.

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. Hon. Thiru M. G. RAMACHANDRAN (Chief Minster)- Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Planning, Molasses and Archaeology.

2. Hon. Dr. V. R. NEDUNCHEZHIYAN (Minister for Finance)— Finance, Legislature, Elections, Food, Fisheries, Backward Classes, Youth Service Corps, Price Control and Ex—Servicemen.

3. Hon. Thiru S. RAMACHANDRAN (Minister for Electricity)—Electircity, Iron and Steel Control.

4. Hon. Thiru K. A. KRISHNASAMY (Minister for Rural Industries) — Rural Industries including Village, Cottage and Small Industries, Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. Hon. Thiru S. D. SOMASUNDARAM (Minister for Revenue)— Revenue, Commercial Taxes, Excise and Census.

6. Hon. Thiru R. M. VEERAPPAN (Minister for Information and Religious Endowments)— Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest and Cinchona and Grant of Liquor Permits.

7. Hon. Thiru C. ARANGANAYAKAM (Minister for Education)— Education Including Technical Education, Official Language and Handlooms.

8. Hon. Thiru K. KALIMUTHU (Minister for Agriculture) —Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

| | | பக்கங்கள் |
|---|---|---|
| | திரு. எம். அண்ணாதாசன் .. | 564–565 |
| | திரு. டி. மணி .. .. .. | 571–577 |
| | திரு. சீ. சிவப்பிரகாசம் .. .. | 577–581 |
| | திரு. சோ. அழகர்சாமி .. .. | 581–593 |
| | திரு. எம். எஸ். மாணிக்கம் .. | 594–600 |
| | திரு. கே. தனுக்கோடித் தேவர் .. | 600–604 |
| | திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள். | 604–609 |
| | திரு. ஏ. சாகுல் ஹமீது .. .. | 609–611 |
| | திரு. பெ. சு. திருவேங்கடம் .. | 611–620 |
| | மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன். | 621 |
| | மாண்புமிகு திரு. கா. காளிமுத்து .. | 622–630 |
| 7 | பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. .. | 632 |


## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

### தமிழ்நாடு ஆளுநர்.

திரு. சாதிக் அலி.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்:

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்)—பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சி பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்ட துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு திட்டம், சர்க்கரை பாகு கழிவு, தொல்பொருள் இயல்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்)—நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, நீர் வளம், பிற்பட்ட வகுப்பினர், இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு, முன்னாள் ராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின்துறை அமைச்சர்)—மின்சாரம், இரும்பு எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (ஊரகத் தொழில் துறை அமைச்சர்)—கிராம குடிசை சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள்; பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிப்புத்துறை, முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த் துறை அமைச்சர்)—வருவாய்கள், வணிக வரிகள், ஆயத்துறை, மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி அறநிலையத் துறை அமைச்சர்)—செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், இந்து அறநிலையத்துறை, வனங்கள், சின்கோனா, மது அனுமதிச் சீட்டு வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்)—தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சிமொழி, கைத்தறி.

9. Hon. Thiru C. PONNAIYAN (Minister for Co-operation and Law)—Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits and Co-operation.

10. Hon. Thiru P. KULANDAIVELU (Minister for Local Administration)— Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. Hon. Thiru S. RAGHAVANANDHAM (Minister for Labour)—Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. Hon. Dr. H. V. HANDE (Minister for Health)—Health.

13. Hon. Thiru K. RAJA MOHAMMED (Minister for Irrigation)— Agro Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

14. Hon. Thiru S. MUTHUSAMY (Minister for Transport)— Transpor, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. Hon. Thiru. S. THIRUNAVUKKARASU (Minister for Industries)—Large Scale Industries, Mines and Minerals and Textiles.

16. Hon. Thiru S. N. RAJENDRAN (Minister for Public Works and Khadi)— Handlooms, Khadi, Prohibition excluding grant of Liquor permits, Passports, Public Works Department and Establishment matter relating to Public Works Dept.

17. Hon. Thiru M. VIJAYASARATHI (Minister for Adi-Dravidar Welfare)— Adi Dravidar Welfare, Stationery, and Printing, Government Press, News Print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

18. Hon. Thirumathi GOMATHI SRINIVASAN (Minister for Social Welfare)— Social Welfare including Women and Children Welfare, Animal Husbandary, Beggars Home, Orphanages, Indians Overseas, Refuges and Evacuees and Correctional Administration.



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்

பேரவைத் தலைவர் :

* மாண்புமிகு திரு. க. இராசாராம்.

பேரவைத் துணைத் தலைவர் :

* மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்.
2. திரு. ப. வேங்கடசுப்பிரமணியம்.
3. திரு. துரை முருகன்.
4. திரு. இல. பலராமன்.

சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. கி.மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

துணைச் செயலாளர்கள்.

திரு. த. இராதாகிருஷ்ணன்.
திரு. இரா. பாலகுரு, பி.ஏ.
திரு. பி. எம். பத்மநாப நம்பியார், பி.ஏ. பி.ஜி.எல்.
திரு. கா. சீனிவாசன், பி.எஸ்.சி. (குழு அலுவலர்.)
திரு. வி. சீதாராமன், பி.காம். (சார்புச் செயலாளர்.)
திரு. பெ. பள்ளிகொண்ட பெருமாள், பி.ஏ. பி.எல். (சார்புச் செயலாளர்.)
திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ, பி.எல். (சார்புச் செயலாளர்.)
திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம். (சார்புச் செயலாளர்.)
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி.ஏ. (சார்புச் செயலாளர்.)
திரு. டி. எஸ். துளசிராம் (எஸ்டேட் அலுவலர்)
திரு. டி. கோதண்டராமன் (பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்.)
திரு. மா. சந்திரசேகரன் (தலைமை நிருபர்.)

(விவாத பதிப்பாளர்.)

திரு. ஜி. எஸ். அனந்தநாராயணன், பி.லிட்.

* 21—6—1980 அன்று தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.
** 2—2—1982 அன்று நியமனம் செய்யப் பெற்றார்கள்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் [தமிழ் அகர வரிசைப்படி] தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல்.

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|---|
| 1 | அங்குசாமி, திரு. ச. | .. | திருவாடானை |
| 2 | அண்ணாதாசன், திரு. எம். | .. | திருவரும்பூர் |
| 3 | அப்துல் ரசாக், திரு. கே. எம். | .. | ஆலந்தூர் |
| 4 | அப்பாதுரை திரு. மு. | .. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 5 | அம்பிகாபதி, திரு. மு. | .. | மன்னார்குடி |
| 6 | அரங்கநாதன், திரு. எஸ். | .. | தர்மபுரி |
| 7 | அரங்கநாதன், திரு. மு. | .. | கூனூர் (செ.வ.) |
| 8 | அரங்கநாயகம், திரு. செ. | .. | கோவை (மேற்கு) |
| 9 | அரங்கராசன், திரு. வெ. | .. | உப்பிலியாபுரம் |
| 10 | அருணகிரி, திரு. இரா. | .. | திருப்பத்தூர் |
| 11 | அருணாசலம், திரு. இரா. | .. | நாமக்கல் (செ.வ. |
| 12 | அழகர்சாமி, திரு. சோ. | .. | கோவில்பட்டி |
| 13 | அன்பழகன், திரு. க. | .. | புரசைவாக்கம் |
| 14 | அன்பழகன் திரு. தி. | .. | தாட்ராம்பள்ளி |
| 15 | அன்பில்தர்மலிங்கம், திரு. | .. | லால்குடி |
| 16 | ஆண்டி அம்பலம், திரு. மெ. | .. | நத்தம் |
| 17 | ஆண்டித்தேவர், திரு. எஸ். | .. | உசிலம்பட்டி |
| 18 | ஆறுமுகம், திரு. எம். | .. | அவினாசி (செ.வ.) |
| 19 | சேலம் ஆறுமுகம், திரு. மு. | .. | சேலம்—2 |
| 20 | ஆறுமுகம், திரு. த. | .. | அரியலூர் |
| 21 | ஆனூர் ஜெகதீசன், திரு. | .. | செங்கல்பட்டு |
| 22 | [illegible]ம், திரு. எம். வி. | .. | பொள்ளாச்சி |
| 23 | இராசகுமார், திரு. மெ. அ. | .. | மருங்காபுரி |
| 24 | இராசமாணிக்கம், திரு. இரெ. | .. | குத்தாலம் |
| 25 | இராசரத்தினம், திரு. து. | .. | பூந்தமல்லி |
| 26 | இராசாம்பாள், திருமதி தா. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 27 | இராசாராம், திரு. க. | .. | பனமரத்துப்பட்டி |
| 28 | இராசாராமன், திரு. எஸ். | .. | பாபநாசம் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 29 | இராசு, திரு. ஜே. எஸ். | பெரம்பலூர் வ. |
| 30 | இராசேந்திரன், திரு. எஸ். என். | தூத்துக்குடி (பெ .) |
| 31 | இராமச்சந்திரன், திரு. எம். ஜி. | மதுரை (மேற்கு) |
| 32 | இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர் |
| 33 | இராமச்சந்திரன், திரு. ச. | பண்ருட்டி |
| 34 | இராமச்சந்திரன், திரு. செஞ்சி ந. | செஞ்சி |
| 35 | இராமசாமி, திரு. எஸ். என். | சாத்தான்குளம் |
| 36 | இராமசாமி, திரு. த. | இராமநாதபுரம் |
| 37 | இராமசுப்பிரமணியன், திரு. இ. | ஸ்ரீ வைகுண்டம் |
| 38 | இராமலிங்கம், திரு. ஏ. | காட்டுமன்னார் [செ.வ.] |
| 39 | இராமலிங்கம், டாக்டர். கே. பி. | இராசிபுரம் |
| 40 | இராமலிங்கம், திரு. செ, | திருவிடைமருதூர் |
| 41 | இராஜசேகரன், திரு. வெ. | இராதகிருஷ்ணநகர் |
| 42 | இராஜாராம்நாயுடு, திரு. தெ. இரா. | தல்லி |
| 43 | இராஜேந்திரன், திரு. எஸ். எ. | ஆண்டிப்பட்டி |
| 44 | இளையப்பெருமாள், திரு. எல். | எழும்பூர் (செ.வ.) |
| 45 | ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி. | அம்பாசமுத்திரம் |
| 46 | உகம்சந்த், திரு. எஸ். டி. | மதுராந்தக |
| 47 | உச்சி, திரு. கே. | கூடலூர் |
| 48 | உத்திராபதி, திரு. பொ. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 49 | உமாநாத், திரு. ரா. | நாகை |
| 50 | கண்ணன், திரு. ம. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 51 | கணபதி, திரு. கே. ஆர். | சிதம்பரம் |
| 52 | கணேசன், திரு. இ. | இடப்பாடி |
| 53 | கணேசன், திரு. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 54 | கந்தசாமி, திரு. கா. வே. | கிணத்துக்கடவு |
| 55 | கந்தசாமி, திரு. பி. | பொங்கலூர் |
| 56 | கபாலி, திரு. டி. | மைலாப்பூர் |
| 57 | கருணாநிதி, டாக்டர். மு. | அண்ணாநகர் |
| 58 | கருப்பசாமிப் பாண்டியன், திரு. வி. | பாளையங்கோட்டை |
| 59 | கருப்பையா, திரு. இரா. | குளித்தலை |
| 60 | கருப்பையா, திரு. ஏ. டி. | வால்பாறை |
| 61 | கல்லன், திரு. கே. | உதகமண்டலம் |
| 62 | கலிதீர்த்தான், திரு. சோ. | சங்கராபுரம் |
| 63 | கலியமூர்த்தி, திரு. பெ. | மங்களூர் (செ. வ.) |
| 64 | நன்னிலம் கலையரசன், திரு. அ. | நன்னிலம் (செ. வ.) |
| 65 | காளிமுத்து, திரு. கா. | திருப்பரங்குன்றம் |
| 66 | கிட்டப்பா, திரு. என். | மாயவரம் |
| 67 | கிருஷ்ணசாமி, திரு. கா. கோ. | காங்கேயம் |
| 68 | கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | ஆயிரம்விளக்கு |
| 69 | கிருஷ்ணமூர்த்தி, திரு. சா. | ஆண்டிமடம் |
| 70 | கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. | நெல்லிக்குப்பம் |
| 71 | கிருஷ்ணராஜ், திரு. ஜி. | சேலம்-1 |
| 72 | கிருஷ்ணன், திரு. ரா. | வாசுதேவநல்லூர் |
| 73 | குப்புசாமி, திரு. என். | மொரப்பூர் |
| 74 | குப்புசாமி, திரு. கே. | ஒட்டன்சத்திரம் |
| 75 | குப்புசாமி, திரு. செ. | வந்தவாசி (செ. வ.) |
| 76 | குமரி அனந்தன், திரு. | திருவொற்றியூர் |
| 77 | குருசாமி, திரு. ப. | அந்தியூர் (செ. வ.) |
| 78 | குலசேகர், திரு. ஏ. டி. | சிங்காநல்லூர் |
| 79 | குலசேகரப் பாண்டியன், திரு. ந. | வாணியம்பாடி |
| 80 | குழந்தைவேலு, திரு. ப. | உடுமலைப்பேட்டை |
| 81 | கேசவ ஆதித்தன், திரு. சி. | திருச்செந்தூர் |
| 82 | கோபால், திரு. சி. | சோளிங்கர் |
| 83 | கோபாலகிருஷ்ணன், திரு. கா. | பெரியகுளம் |
| 84 | கோபாலன், திரு. ஆர். டி. | கம்பம் |
| 5 | கோமதி சீனிவாசன், திருமதி | வலங்கை (செ. வ.) |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 86 | கோவேந்தன், திரு. எம். ஆர்... | பேராவூரணி |
| 87 | கோவைத்தம்பி, திரு. .. | பேரூர் |
| 88 | சக்கரபாணி, திரு. ஆர். .. | பொன்னேரி |
| 89 | சங்கரய்யா, திரு. என். .. | மதுரை (கிழக்கு) |
| 90 | சட்டநாத கரையாளர், திரு. கி. .. | தென்காசி |
| 91 | சண்முகம், திரு. இரா. .. | திருத்தணி |
| 92 | சண்முகம், திரு. ஏ. சி. .. | ஆரணி. |
| 93 | சத்தியமூர்த்தி, திரு. வ. .. | கடலாடி. |
| 94 | சந்திரசேகரன், திரு. ஏ. .. | சோழவந்தான். |
| 95 | சபாபதி, திரு. சி. .. | அரூர் (செ.வ.). |
| 96 | சமரசம், டாக்டர், கே. .. | காவேரிப்பட்டணம். |
| 97 | சாகுல் ஹமீது, திரு. ஏ. .. | கடையநல்லூர். |
| 98 | சாமிக்கண்ணு, திரு. தா. .. | செங்கம். |
| 99 | சித்[illegible]ன், திரு. என். எஸ். வி. | திருமங்கலம். |
| 100 | சிதம்[illegible]ரம், திரு. சி. த. .. | காரைக்குடி. |
| 101 | சிவசாமி, திரு. செ. .. | இளையான்குடி. |
| 102 | சிவஞானம், திரு. ந. .. | திருவோணம். |
| 103 | சிவப்பிரகாசம், திரு. சி. .. | சேந்தமங்கலம் (செ.வ.) |
| 104 | சிவபெருமான், திரு. மு. .. | ஓமலூர். |
| 105 | சிவராமன், திரு. எ. எஸ். .. | சின்னசேலம். |
| 106 | சின்னசாமி, திரு. எம். .. | கரூர். |
| 107 | சின்னதுரை, திரு. ஏ. .. | மேல்மலையனூர். |
| 108 | சின்னராசு, திரு. க. இரா. .. | கிருஷ்ணகிரி. |
| 109 | சின்னராசு, திரு. மா. .. | தொண்டாமுத்தூர். |
| 110 | சுந்தரம், திரு. கே. ஆர். .. | குடியாத்தம். |
| 111 | சுந்தரம், திரு. ப. .. | திருப்பத்தூர். |
| 112 | சுந்தரம், திரு. மு. .. | ரிஷிவந்தியம். |
| 113 | சுந்தரமூர்த்தி, திரு. ஆர். .. | முசையூர். |
| 114 | சுந்தரராஜ், திரு. நா. .. | திருமயம். |
| 115 | சுந்தரராஜன், திரு. மு. .. | விருதுநகர். |
| 116 | சுப்பிரமணியன், திரு. உ. .. | சிவகங்கை. |
| 117 | சுப்பிரமணியன், திரு. கே. எம். எஸ். .. | போடிநாயக்கனூர். |
| 118 | சுப்பிரமணியன், திரு. மா. .. | திருவையாறு. |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 119 | சுப்பிரமணியன், திரு. வி. .. | திருநாவலூர். |
| 120 | சுப்பிரமணியன், திரு. ஜி. கே. | பவானிசாகர். |
| 121 | சுவாமிநாதன், திரு. வி. வி. .. | புவனகிரி. |
| 122 | செங்கோட்டையன், திரு. கு. அ. | கோபிச்செட்டிபாளையம். |
| 123 | செம்மலை, திரு. செ. .. | தாரமங்கலம். |
| 124 | செல்லமுத்து, திரு. எம். .. | திருவாரூர் (செ.வ.), |
| 125 | செல்வராசன், திரு. அ. .. | துறைமுகம், |
| 126 | சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. ப. செ. .. | அரவக்குறிச்சி. |
| 127 | சேதுராமன், திரு. ஏ. எம். .. | ஆற்காடு. |
| 128 | சொக்கலிங்கம், திரு. கே. .. | திருப்போரூர். |
| 129 | சோமசுந்தரம், திரு. எஸ். டி. | பட்டுக்கோட்டை. |
| 130 | சோமு, திரு. என். வி. என். | பூங்கா நகர். |
| 131 | சௌந்திரராசன், திரு. கே. | திருச்சி-2. |
| 132 | டாக்டர் சௌரிராஜன், திரு. கே. | தி. நகர். |
| 133 | தங்கமணி கவுண்டர், திரு. கே. எம். | திண்டிவனம். |
| 134 | தங்கராசு, திரு. ஏ. .. | குறிஞ்சிப்பாடி. |
| 135 | தங்கவேல்ராஜ், திரு. பி. எம். | கிருஷ்ணராயபுரம் (செ.வ.). |
| 136 | தங்கவேலு, திரு. பி. .. | ஜெயங்கொண்டான். |
| 137 | தவசி, திரு. ஆர். .. | பரமக்குடி (செ. வ.). |
| 138 | தனபால், திரு. ப. .. | சங்கரி (செ. வ.). |
| 139 | தனுக்கோடித் தேவர், திரு. கே. .. | முதுகுளத்தூர். |
| 140 | தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிபுத்தூர். |
| 141 | தியாகராசன், திரு. ஆர். .. | விருத்தாசலம். |
| 142 | திருச்சி சௌந்திரராசன் திரு. ஆர். .. | ஸ்ரீரங்கம். |
| 143 | திருநாவுக்கரசு, திரு. எஸ்... | அறந்தாங்கி. |
| 144 | திருமாறன், திரு. பெ. .. | ஆலங்குடி. |
| 145 | திருமான், திரு. இரா. .. | ஏற்காடு (செ.வ.). |
| 146 | திருவேங்கடம், திரு. பெ. சு... | கலசப்பாக்கம். |
| 147 | தீர்த்தராமன், திரு. ப. .. | பொன்னகரம். |
| 148 | துரைசாமி, திரு. பி. எஸ். .. | பர்கூர். |
| 149 | துரைமுருகன், திரு. இரா .. | ராணிப்பேட்டை |
| 150 | துரை ராமசாமி, திரு. .. | வெள்ளக்கோவில் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 151 | துரைராஜ், திரு. பி. .. | சங்கரநாயினார் கோவில் (செ. வ.) |
| 152 | தேவராஜ், திரு. வி. எம். .. | வேலூர் |
| 153 | நடராஜன், திரு. எஸ். .. | தஞ்சாவூர் |
| 154 | நரசிம்மன், திரு. பூ. மு. .. | பள்ளிப்பட்டு |
| 155 | நல்லப்பன், திரு. தி. கா. .. | பெருந்துறை |
| 156 | நவநீத கிருஷ்ண பாண்டியன். . திரு. | ஆலங்குளம் |
| 157 | நாச்சிமுத்து, திரு. கே. பி. .. | மேட்டூர் |
| 158 | நாராயணசாமி, திரு. கே. .. | திருவண்ணாமலை |
| 159 | நாராயணன், திரு. பி. ஜி. .. | பவானி |
| 160 | நெடுஞ்செழியன், டாக்டர் இரா. .. | திருநெல்வேலி |
| 161 | நெடுமாறன், திரு. ப. .. | மதுரை (மத்திய) |
| 162 | பக்கீர் முகம்மது, திரு. இ. எஸ். எம். .. | கும்பகோணம் |
| 163 | பட்டாபிராமன், திரு. செ. .. | திருவள்ளூர் |
| 164 | பம்மல் நல்லதம்பி, திரு. .. | தாம்பரம் |
| 165 | பரமசிவ கவுண்டர், திரு. பி. .. என். | பல்லடம் |
| 166 | பலராமன், திரு. இல. .. | போளூர் |
| 167 | பழனிசாமி, திரு. சு. .. | மேட்டுப்பாளையம் |
| 168 | பழனிமுத்து, திரு. சி. .. | ஆத்தூர் |
| 169 | பழனியப்பன், திரு. கு. ப. .. | விழுப்புரம் |
| 170 | பழனிவேல், திரு. என். .. | பழனி (செ.வ.) |
| 171 | பாண்டியன், திரு. பி. எச். .. | சேரன்மாதேவி |
| 172 | பாபு கோவிந்தராஜன், திரு. .. | கடலூர் |
| 173 | பாபு ஜனார்த்தனன், திரு. .. | செய்யாறு |
| 174 | பாரமலை, திரு. க. .. | மானாமதுரை (செ.வ.) |
| 175 | பாலகிருஷ்ணன், திரு. ச. .. | மொடக்குறிச்சி |
| 176 | பாலகிருஷ்ணன், திரு. வி. .. | சிவகாசி |
| 177 | பாலசுப்பிரமணியன், திரு. க. .. | சீர்காழி (செ.வ.) |
| 178 | வேடசந்தூர் பாலசுப்பிரமணியன், திரு. வி. பி. .. | வேடசந்தூர் |
| 179 | பாலன், திரு. சு. .. | பெரம்பூர் (செ.வ.) |
| 180 | பாலுச்சாமி, திரு. ஏ. .. | சமயநல்லூர் (செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 181 | பிச்சை, திரு. எம். .. | அருப்புக்கோட்டை |
| 182 | பிரபாகரன், திரு. ஜே. சி. டி. .. | வில்லிவாக்கம் |
| 183 | புருஷோத்தமன், திரு. நு. .. | சைதாப்பேட்டை |
| 184 | பூங்காவனம், திரு. என். ஏ. .. | காட்பாடி |
| 185 | பெரியசாமி, திரு. ஏ. .. | தாராபுரம் (செ.வ.) |
| 186 | பெரியசாமி, திரு. ரா. .. | தொட்டியம் (செ.வ.) |
| 187 | பெருமாள், திரு. என். .. | வரகூர் (செ.வ.) |
| 183 | பெருமாள், திரு. ரா. கு. .. | விளாத்திகுளம் |
| 189 | பொன்னம்மாள், திருமதி. ஏ. எஸ். .. | நிலக்கோட்டை (செ. வ.) |
| 190 | பொன்னுரங்கம், திரு. ப. .. | ராயபுரம் |
| 191 | பொன்னையன், திரு. சி. .. | திருச்செங்கோடு |
| 192 | மணி, திரு. டி. .. | விளவங்கோடு |
| 193 | மணிமாறன், திரு. ஆர். .. | திருப்பூர் |
| 194 | மாணிக்கம், திரு. எம். எஸ். .. | வேதாரண்யம் |
| 195 | மாரிமுத்து, திரு. த. .. | குளத்தூர் (செ.வ.) |
| 196 | முகமது இஸ்மாயில், திரு. பி. .. | பத்மநாபபுரம் |
| 197 | முசிறிப்புத்தன், திரு. பி. .. | திருச்சி-1 |
| 198 | முத்துகிருஷ்ணன், திரு. சு. .. | கன்னியாகுமரி |
| 199 | முத்துசாமி, திரு. சு. .. | ஈரோடு |
| 200 | முத்துராமலிங்கம், திரு. இ. .. | ராமநாதபுரம் |
| 201 | முத்துவேல், திரு. என். .. | வானூர் (செ.வ.) |
| 202 | முத்தையா, திரு. இரா. .. | சேடப்பட்டி |
| 203 | முனிரத்தினம், திரு. இரா. சா. .. | கும்மிடிபூண்டி |
| 204 | முனுசாமி, திரு. மு. ப. .. | பாலக்கோடு |
| 205 | மூர்த்தி, திரு. ஜி. .. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 206 | மொக்கையன், திரு. பி. .. | ராஜபாளையம் (செ.வ.) |
| 207 | யசோதா, திருமதி. டி. .. | ஸ்ரீ பெரும்புதூர் |
| 208 | ரகுமான்கான், திரு. அ. .. | சேப்பாக்கம் |
| 209 | ரங்கசாமி, திரு. ஆர். .. | சத்தியமங்கலம் |
| 210 | ரங்கசாமி, திரு. க. .. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 211 | ரமணி, திரு. கு. .. | கோயம்புத்தூர் (கிழக்கு) |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 212 ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான், திரு. | புதுக்கோட்டை |
| 213 ராஜமாணிக்கம், திரு. எம். கே. | முசிறி |
| 214 ரெத்தினராஜ், திரு. எஸ். | குளச்சல் |
| 215 வரதராஜன், திரு. என். | திண்டுக்கல் |
| 216 விசயலட்சுமி, செல்வி வி. | வீரபாண்டி |
| 217 வின்சென்ட், திரு. மி. | நாகர்கோவில் |
| 218 விஜயசாரதி, திரு. எம். | அரக்கோணம் (செ. வ.) |
| 219 விஜயபாலன், திரு. என். | பூம்புகார் |
| 220 விஜயராகவன், திரு. பொ. | கிள்ளியூர் |
| 221 விஸ்வநாதன், திரு. கே. | அணைக்கட்டு |
| 222 வீராசாமி, திரு. த. | ஒரத்தநாடு |
| 223 வீராணம்பலம், திரு. க. வெ. | மேலூர் |
| 224 வெங்கடசுப்பிரமணியம், திரு. ப. | காஞ்சி |
| 225 வெங்கட ரெட்டி, திரு. டி. | ஒசூர் |
| 226 வெங்கடேசன், திரு. பி. எம். | பேரணமல்லூர் |
| 227 வெள்ளைச்சாமி, திரு. அ. | ஆத்தூர் |
| 228 வேணுகோபால், திரு. த. | தண்டராம்பட்டு |
| 229 வேலப்பன், திரு. சி. வி. | கபிலர்மலை |
| 230 ஜகத்ரட்சகன், திரு. எஸ். | உத்திரமேரூர் |
| 231 ஜான் வின்சென்ட், திரு. மு. | நாங்குனேரி |
| 232 ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி |
| 233 ஹாஜா செரீப், திரு. கே. எஸ். ஜி. | திருவல்லிக்கேணி |
| 234 ஹேமச்சந்திரன், திரு. ஜே. | திருவட்டார் |
| 235 மார்க்ரெட் எலிசபெத் பிலிக்ஸ், திருமதி. | நியமன உறுப்பினர் |

பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்கள்.

1. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்—அமைச்சர்.
2. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்—அமைச்சர்.
3. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே—அமைச்சர்.
4. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது—அமைச்சர்.
5. திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி—தலைமை வழக்கறிஞர்.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் கூடும் ஏழாவது சட்டமன்றப் பேரவையின் நான்காவது கூட்டத்தொடர்.

வியாழக்கிழமை, 1982 மார்ச் 4.

மாசி 20, துன்மதி—திருவள்ளுவர் ஆண்டு 2013.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

“ ஆற்றின் அளவறிந்து கற்க அவையஞ்சா
மாற்றம் கொடுத்தற் பொருட்டு ”

அவைக்கு அஞ்சாமல் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு விடையளிக்கும் பொருட்டு, நெறிமுறைப்பட்ட நூல்களை எண்ணிப் பார்த்து தொடர்பு அறிந்து கற்க வேண்டும்.

(1) வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

*Microhydal Power Stations at Vaigai and Pykara.*

* Q. 341.—THIRU P. VENKATASUBRAMANIAM : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

Whether schemes formulated by Government of Tamil Nadu for setting up two microhydal power stations one at Vaigai and another at Pykara have been approved by the Planning Commission ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** ஆம், மத்திய திட்டக் குழுவின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றது.

**திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டங்களுக்கான மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு? இவைகள் எந்தக் காலக் கட்டத்தில் வேலை செய்யத் தொடங்கும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அறிவிப்பாரா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, வைகை அணை சிறிய நீர் மின் நிலையம் 396.5 லட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப் பெறும். 1984-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் இயக்கி வைக்கப்படும். பைகாரா அணை சிறிய நீர் மின் நிலையம் 146.5 லட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப்பெறும், அதுவும் 1984-ஆம் ஆண்டு நவம்பரில் இயக்கி வைக்கப்படும்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற சிறிய புனல் மின் நிலையங்கள் தமிழகத்திலே வேறு எங்கேனும் தொடங்க அனுமதி கேட்டு, மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, சிறிய நீர் மின் திட்டங்கள் என்கிற வகையில் வைகை அணையில் இரண்டு 3 மெகாவாட்டும், பைகாரா அணையிலே ஒரு 2 மெகாவாட்டும், கீழ்பவானி திட்டத்தில் இரண்டு 4 மெகாவாட்டுமாக 3 திட்டங்கள் மைய அரசினுடைய அனுமதியைப் பெற்றுள்ளன. மத்திய அரசு ஜப்பான் நாட்டின் உதவியுடன் இந்த திட்டங்களை நிறைவேற்றவும் முன்வந்துள்ளது.

திரு. உ. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே மிக உயரமான பைப் லைன் கொண்டது சுருளி மின் நிலையத்தில் தான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதிலே இரண்டாவது மின் நிலையம் ஒன்றை ஏற்படுத்தினால், அதிகமான அளவில் மின்விசை உற்பத்தி செய்ய வாய்ப்பு இருக்குமே, அதைப்பற்றி அரசு ஆலோசித்து ஏதாவது நடவடிக்கை எடுக்க உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தனித் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, மத்திய அரசுக்கு அனுமதிக்காக அனுப்பி அனுமதி பெற்றிருக்கிற இந்தத் திட்டங்களுக்கு காஸ்ட் ஆப் புரொடெக்ஷன் என்ன இருக்கும் என்பதை முதலிலேயே வொர்க்-அவுட் பண்ணியிருப்பீர்கள். இப்பொழுது உற்பத்தியாகக் கூடிய காஸ்ட் ஆப் புரொடெக்ஷனுக்கும், அங்கே உற்பத்தி பண்ணக்கூடிய காஸ்ட் ஆப் புரொடெக்ஷனுக்கும் கம்பேரிட்டிவ்லி காஸ்ட் எப்படி இருக்கிறது ? ஜாஸ்தியாக உள்ளதா ? குறைந்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மின் உற்பத்தி செலவைப் பார்த்துதான் இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்பட இருக்கின்றன. வைகை அணையில் ஒரு யூனிட்டுக்கு 17.5 பைசாவாகவும், பைகாரா அணையில் 16.8 காசாகவும் இருக்கும். அங்கே சிக்கனமான திட்டங்கள் ...



திரு. பாபு ஜனார்த்தனன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சிறிய புனல் மின் திட்டங்களை பல இடங்களில் ஏற்படுத்தப் போவதாக சில விவரங்களை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதேபோல வட ஆற்காடு மாவட்டத்தில் சாத்தனூர் அணையில் ஒரு சிறிய புனல் மின் . . .
(மணியடிக்கப் பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக்கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. வட ஆற்காட்டுக்கும் வைகைக்கும் வெகு தூரம்.

### மேல்தாம்பிரபரணி நீர்மின் திட்டம்.

* வினா எண் 342—திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல கோடி ரூபாய் செலவில் மேல் தாம்பிரபரணி நீர்மின் திட்டம் செயல்படுத்த தமிழக அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் இதுபற்றிய விபரம் என்ன ?

(இ) திட்ட மதிப்பீடு எவ்வளவு ?

(ஈ) எத்தனை மெகாவாட் மின்சாரம் கிடைக்கும் ?

(உ) வேலை எப்பொழுது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்; (அ) ஆம்.

(ஆ) மத்திய மின் அதிகாரக் குழுவின் அறிவுரையின் பேரில் திருத்திய திட்ட அறிக்கைக்காக மறு ஆய்வுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(இ) ஆய்வுப்பணிகள் முடிந்தவுடன் இத்திட்டத்தின் மதிப்பீடு தெரிய வரும்.

(ஈ) 120 மெகாவாட் மின்சாரம் கிடைக்கும்.

(உ) ஆய்வுப்பணிகள் முடிந்து திட்ட அறிக்கை மத்திய அரசுக்கு அனுப்பி, மத்திய அரசின் ஒப்புதல் கிடைத்த பிறகு வேலைகள் துவங்கப்படும்.

திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் : இந்த மேல் தாம்பிரபரணி நீர் மின் திட்டத்தைப் பொறுத்த வரையில் ஏற்கெனவே மத்திய அரசு புலி வருகிறது, புலி வருகிறது என்று மாநில அரசை மிரட்டிக் கொண்டு அதற்கு வழி இல்லை என்று சொல்லிவந்தது . . .

திரு. என். எஸ். வி. சித்தன்: மத்திய அரசு மிரட்டிக் கொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள். கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டை அனுமதிக்கிறீர்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி மேல் தாம்பிரபரணி நீர் மின் திட்டம் பற்றியது. இதில் ஏன் மத்திய அரசைக் கொண்டுவர வேண்டும் ?

திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் : மத்திய அரசிடம் மீண்டும் வற்புறுத்தி சீக்கிரம் இந்த வேலையை ஆரம்பிக்க, சீக்கிரம் ஆய்வு செய்து முடிப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இந்தத் திட்டப்பகுதியில் முண்டந் துறையில் யானைகள் மற்றும் புலிகள் சரணாலயம் அமைந்துள்ளதால் இந்தப் பிரச்சினைகள் ஏற்பட்டன. அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். மத்திய சர்க்கார் புலி போல் இருப்பது நல்லதுதானே, எலி யாக இல்லாமல். மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களும் நானும் கலந்து பேசி அந்தப் பகுதியில் இத்திட்டத்திற்கான ஆய்வுகளை மேற்கொள் வதற்கு அனுமதி வழங்கியுள்ளோம். அந்த ஆய்வுகளை மின்சாரத் துறையினர் இப்போது நடத்தி வருகிறார்கள். அந்த ஆய்வுமுடிவு கிடைத்த பின் மேற்கண்ட நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கும்.

திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் : நாளுக்கு நாள் வி[illegible]கள் விஷம்போல் ஏறிவருகின்றன. ஏற்கெனவே இத்திட்டத்திற்காக ஒரு எஸ்டிமேட் தயாரித்திருப்பார்கள். வனத் துறை அமைச்சர் அவர்களும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும் பேசி இத்திட்டத்தைக் கொண்டுவர இருப்பதாக அத் தொகுதி மக்கள் சார்பிலும் தமிழக மக்கள் சார்பிலும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் காலம் கடப்பதால் விலைவாசியேற்றம் அதிகமாகி பணம் விரயமாகும். ஆகவே காலாகாலத்தில் இத்திட்டத்தை அமல்படுத்துவ தற்கான முறையில் ஒரு நாள் குறித்து கொண்டுவருவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இந்தத் திட்டத்திற்கான எஞ்சிய ஆய்வுப்பணிகளை ஆறு மாதத்தில் முடிக்கவேண்டுமென்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

திரு. என். பழனிவேல்: மேல் தாம்பிரபரணி நீர்மின் திட்டத்தை செயல் படுத்துவது சம்பந்தமான விளக்கங்களை அமைச்சர் அவர்கள் அளித்தார்கள். அதேபோல் பழனிப் பகுதியில் சண்முகா நதி நீர் மின் திட்டம் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக்கேள்விக்கும் இதற்கும் தொடர் பில்லை.





ஆற்காடு கெங்கா ஈசுவரன் கோவிலிலிருந்து களவுபோன சிலைகள்.

* வினா எண் 343.—திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காட்டிலுள்ள கெங்கா ஈசுவரன் கோவிலிலிருந்து பிள்ளையார் சிலையும், அம்மன் சிலையும் களவு செய்யப்பட்டு பிறகு காவல் துறையினரால் இரண்டு பஞ்சலோக சிலைகளும் வழக்கை முன்னிட்டு அனுப்பப்பட்டதா ?

(ஆ) களவாளிகள் மீது வழக்கு மன்றம் எடுத்துள்ள முடிவு என்ன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) மற்றும் (ஆ), ஆம். 21—8—1979 அன்று சிலைகளைக் களவாடிய குற்றவாளிகள் 31—8—1979 அன்று கைது செய்யப்பட்டு அவர்கள்மீது தொடரப்பட்ட வழக்கு வேலூர் முதல் நிலை குற்றவியல் நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது. குற்றவாளிகள் ஜாமீனில் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

திரு. ஏ. எம். சேதுராமன்: இந்தக் கோவில் ஆற்காட்டில் பழமை வாய்ந்த கோவில். [illegible]ந்தக் கோவிலில் இரண்டு சிலைகளும் இல்லாததால் அக்கோவிலில் திருவி[illegible] நடைபெறுவது நிறுத்தப்பட்டுள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா ? அந்தச் சிலைகளை மீண்டும் அந்தக் கோயிலுக்குத் திருப்பித் தருவதற்கு கோர்ட்டுக்கு அல்லது அரசுக்கு அறநிலையத் துறை சிபாரிசு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: அது களவாடப்பட்ட சிலை என்ற அந்த வகையில் நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிற காரணத்தால் அந்த வழக்கு முடிவடைவது வரை அந்தச் சிலைகளைத் திருப்பித் தர மாட்டார்கள். அது உற்சவமூர்த்தியாக இருக்கிற சிலையாக இருக்குமானால் அதற்காக வேறு ஏற்பாடுகள் செய்வது பற்றி அறநிலையத் துறை பரிசீலனை செய்யும்.

திரு. ஏ. எம். சேதுராமன்: அந்தச் சிலைகளை அறங்காவலர் மூலமாகக் கொடுப்பதற்கு அறங்காவலர்களிடமிருந்து ரூ. 60,000 பெறுமான மதிப்பீடு சான்றுகொடுத்தால் அந்தச் சிலைகளை கொடுப்பதாகக் கோர்ட்டில் சொல்லி யிருக்கிறார்கள். அந்தச் சான்றைக் கொடுப்பதற்கு அறங்காவலர்கள் அஞ்சுகிற காரணத்தால் அறநிலையத் துறை அதை ஏற்று அந்தச் சிலைகளை கோவிலுக்குக் கொடுக்க ஆவன செய்யுமா ?

(முற்பகல் 9.10)

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, அப்படிப் பொறுப்புக் கொடுத்தால் சிலைகளைத் திருப்பித் தருவதாக நீதி மன்றத்திலே தெரிவிப்பார்களானால், அதற்கான முயற்சிகளை அறநிலையத் துறை மேற்கொள்ளும்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சிலை திருட்டு தமிழ்நாட்டிலே ஒரு தொடர் நடவடிக்கையாக பல இடங்களில் நடைபெற்று, வெளி நாடுகளுக்கு கடத்திச் செல்லப்பட்டு, அண்மையிலே கூட லண்டனிலே பல லட்சக்கணக்கான பெருமதிப்புள்ள சிலைகள் அங்கிருப்பதாக பத்திரிக்கைச் செய்தி வந்திருக்கிறது. இந்தச் சிலை திருட்டை ஒட்டுமொத்தமாக நிறுத்துவதற்கு என்ன முறையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மிகுந்த தீவிரமான நடவடிக்கைகள் பல வகைகளிலே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இருந்தாலும், அவைகளையெல்லாம் மீறித்தான் நடந்து கொண்டிருக்கின்றது. இன்னும் ஒரு கருத்தை இந்த நேரத்தில் சொல்ல வேண்டியிருக்கிறது. இந்தச் சிலை திருட்டு சம்பந்தமாக செய்திகள் வருகின்ற போது, 10 இலட்சம், 20 இலட்சம், 50 இலட்சம் என்று அவைகளினுடைய மதிப்புகளை பத்திரிகைகளில் போடுகிறார்கள். அதனால் பல பேருக்கு எதாவது ஒரு சிலையைத் திருடினால், பல இலட்சங்களைச் சம்பாதிக்கலாம் என்ற எண்ணம் இப்போது வளர்ந்து கொண்டு வருவதாகத் தெரிகிறது. ஆனால் எல்லாச் சிலைகளும் பல லட்சக்கணக்கான பெறுமானமுள்ள சிலைகள் அல்ல. ஆனால், இப்படிப்பட்ட செய்திகள் வந்து, அதிலே ஆர்வத்தைப் பல பேருக்கு ஏற்படுத்தி விடுகிறதோ என்கிற ஐயப்பாடு இப்போது அரசுக்கு வந்திருக்கிறது. இருந்தாலும் இந்தச் சிலை திருட்டைத் தடுப்பதற்கு மிக அதிகமான அளவிலே இப்போது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. திருடப்பட்ட சிலைகளை மீட்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு, அப்படி மீட்கும் போதுதான் இந்தச் செய்திகள் எல்லாம் இப்போது வெளியே வந்து கொண்டிருக்கின்றன.



**திரு. இரா. தாமரைக்கனி :** பேரவைத் தலைவர் அவர்களே, * * * * * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது மத வாதிகளின் எண்ணங்களைப் புண்படுத்துவதாக இருப்பதால், இந்தக் கேள்வி அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்படுகிறது.

**திரு. இல. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுவரன் கோயில் உற்சவர் சிலையின் மதிப்பு என்ன ? அந்தச் சிலையை வழிபாட்டிற்கு நீதிமன்றத்திலே இருந்து வாங்கித் தருவதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ளுமா ? அதனால், உற்சவம், திருவிழா செய்வது தடைபடுவதால், அரசு அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறது ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, நீதிமன்றத்திலே இருந்து 60,000 ரூபாய் அதற்கு ஜாமீன் தர வேண்டுமென்று கேட்டதிலிருந்து, அதனுடைய மதிப்பு அதையொட்டி இருக்கிறது என்பது தெரிகிறது. அப்படி தர வேண்டுமென்று கேட்பார்களானால், அதற்கு அறநிலையத்துறை பொறுப்பேற்று அதுபற்றி பரிசீலிக்கும் என்பதை நான் முதலில் கேள்விக்கு பதிலளித்திருக்கிறேன்.

**திரு. என். ஏ. பூங்காவனம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, * * * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தக் கேள்வி அனுமதிக்கப்படவில்லை. அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்படுகிறது.

**தென்காசி விசுவநாதர் ஆலயத்திற்கு ராஜகோபுரம் கட்டும் பணி.**

*** வினா எண் 344—திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு செய்தி அற நிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி ஜில்லா, தென்காசி விசுவநாதர் கோயில் ராஜகோபுரம் கட்டுவது தொடர்பாக அரசுக்கு கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** ஆம். ஆலய அறங்காவலர் குழு கோரிக்கை வைத்ததின் தொடர்பாக, திருப்பணிக் குழு அமைக்கப்பட்டு திருப்பணி செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.

**திரு. எஸ். என். இராமசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தென்காசி இராஜ கோபுரம் இருந்த காலங்களிலிருந்து, கிழக்கே கீழப்பாவூர் வந்தவுடனே தென்காசி அழகாகத் தெரியும். இப்போது பல ஆண்டுகளாகியும் அந்தக் கோபுரம் புதுப்பிக்கப்படாமல் இருக்கிறது. அதைப் புதுப்பிப்பதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, 1963ஆம் ஆண்டிலே அதற்கான திட்டங்கள் தொடங்கப்பட்டு, அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதற்குப் பிறகும், அதற்குப் பொறுப்பு ஏற்றுக் கொண்டு நிதி வசூல் செய்து, அந்தத் திருப்பணியை முடிப்பதற்கு யாரும் முன் வராத காரணத்தால், அது தடைபட்டு நிற்கிறது. காரணம், அதற்கு 30 இலட்ச ரூபாய் செலவாகும் என்று அப்போது மதிப்பிட்டிருக்கிறார்கள். இப்போது திருப்பணிக் குழுவினர் அளித்திருக்கின்ற அந்த எஸ்டிமேட்படி, சுமார் 70 இலட்சத்தைத் தாண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே இது ஒரு மிகப் பெரிய திருப்பணியாக இருக்கிற காரணத்தாலே, திரு. சிவந்தி ஆதித்தன் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய தலைமையிலே ஒரு திருப்பணிக் குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. விரைவிலே திருப்பணி துவங்கப்பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. குமரி அனந்தன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது நமது ஷெரீப் அவர்களுடைய தலைமையிலே திருப்பணிக் குழு போடப்பட்டு அந்தக் கோபுரத் திருப்பணிகள் செம்மையுற முடிவுறும் என்றதற்காக அவருக்கு நன்றியைத் தெரிவித்து கொள்கிறேன். அந்தக் காசி விசுவநாதர் ஆலயம் மிகப் பழமையானதாக இருக்கிற காரணத்தால் சிற்பங்களை எல்லாம் செம்மைப்படுத்துவதற்கு முன் போட்டோ படங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றனவா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இங்கே திருப்பணி பற்றிய கேள்விக்கான விவரங்கள் என்னிடத்திலே உள்ளன. இதுபோன்ற ஆலயக் கோபுர திருப்பணிகள் நடைபெறுகிறபோது முறையாக என்னென்ன நடைமுறைகள் பின்பற்றப்படுமோ அவைகள் பின்பற்றப்பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. ரா. கிருஷ்ணன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, பொதுவாக திருப்பணிகள் நடக்கக்கூடிய இடத்திலே அதன் பெயரால் தொல்பொருளாக இருக்கிற சிலைகள், அதனுடைய ஒரிஜினாலிட்டியை இழக்கக்கூடிய அளவிற்கு சில மாற்றங்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. இவற்றைத் தடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமோ என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர் எம் வீரப்பன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, திருப்பணிகள் என்பது கோபுரங்கள் அல்லது மற்றக் கட்டடங்களைப் பொறுத்துதான் வருகின்றன. கோபுரங்களிலே உள்ள இந்த சிலைகள் அல்லது பொம்மைகள் முதலியவை முறையாக ஸ்தபதிகளினாலே அல்லது அதைப்பற்றி நன்கு அறிந்தவர்களாலேதான் மீண்டும் செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### நீலகிரியில் தொலைக்காட்சி அஞ்சல் நிலையம் அமைக்கும் திட்டம்.

* **வினா எண் 345—திரு. பெ. சு. திருவேங்கடம் மற்றும் திரு. செ. சிவசாமி:** மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தின் மேற்கு பகுதி பயன்பெறும் வகையில் நீலகிரி T.V. அஞ்சல் நிலையம் அமைக்க வேண்டுமென மத்திய அரசுக்கு மாநில அரசு ஆலோசனை வழங்கியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** (அ) மற்றும் (ஆ) இல்லை

**திரு. பெ. சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கிற எல்லா மாவட்டங்களிலும் இன்றையதினம் டி.வி. பார்க்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. தெற்கு பக்கத்திலே கொடைக்கானலிலே கோபுரம் அமைக்கிறபோது தெற்கு மாவட்டங்கள் பயன் பெறும் என்று சொன்னார்கள். இப்போது சிலோன் டி.வி. யிலே தெற்கு மாவட்டங்களிலே பார்க்கக்கூடிய ஒரு வசதி ஏற்பட்டிருக்கிறது. கோவை, சேலம், வட ஆற்காடு மாவட்டங்களிலேதான் இந்த டி.வி. பார்க்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதற்காக அந்தப் பக்கத்திலே ஒரு கோபுரம் அமைக்க மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1982 மார்ச் 4

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மத்திய அரசிடத்திலே மாநில அரசு தெரிவித்த கருத்துக்களையொட்டித்தான் கொடைக்கானலிலே தொலைக் காட்சி ஒளிபரப்பு நிலையத்தை ஏற்படுத்த விருக்கிறார்கள். கொடைக்கானலிலே ஒளிபரப்பு நிலையம் அமைத்ததற்குப் பிறகு மதுரை, பெரியார், திருச்சி, கோவை ஆகிய மாவட்டங்கள் முழுமையாகவும், இராமநாதபுரம் மாவட்டம் 95 சதவீதத்திற்கும், தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருநெல்வேலி, சேலம், நீலகிரி ஆகிய மாவட்டங்களில் சில பகுதிகளும் பயனடையும் என்று தெரிவித்திருக்கிறார்கள். குறிப்பாக உதகமண்டலம் இதனாலே பயன்பெறுவதற்கு சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்றும் தெரிவித்து இருக்கிறார்கள். முதல் முயற்சி வெற்றி பெற்றதற்கு பிறகு இரண்டாவது கட்டத்தைப்பற்றி மாநில அரசு கேட்பது பயனளிக்கும் என்று கருதுகிறேன்.

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, சென்னையிலே ஒளிபரப்பப்படுகிற அந்த நிகழ்ச்சிகளை வட ஆற்காடு, தர்மபுரி போன்ற மாவட்டங்களிலே பார்க்க முடியவில்லை. ஏலகிரி மலையிலே மாநில அரசினுடைய செலவிலாவது சிறிய கோபுரம் அமைத்து அந்த மக்களுக்கு வசதி ஏற்படுத்த அமைச்சர் உரிய நடவடிக்கை எடுப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய ஆலோசனையைப் பற்றி நமக்கு விவரம் தெரியவில்லை. அப்படிக் குறைந்த செலவிலே ஒளிபரப்பு நிலையங்களை அமைக்க முடியுமா என்பதைப்பற்றி ஒளிக்காட்சி நிலையத்தோடு தொடர்பு கொண்டு அதைப்பற்றி கருத்துக்களை பின்னாலே பரிசீலிக்க இயலும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9.20)

**திரு. செ. சிவசாமி:** தலைவர் அவர்களே, தற்போது டி.வி. வரும் என்று மதுரையிலும், இராமநாதபுரத்திலும், பரமக்குடியிலும், காத்துக்குடியிலும் எங்கு பார்த்தாலும் ஆன்டனா இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் அந்தப் பகுதியிலே இன்னும் டி.வி. காட்சிகள் ஒளிபரப்பும் நிலை வரவில்லை. கொடைக் கானலில் டி.வி. நிலையம் ஆரம்பிப்பதற்காக ஒரு ஆண்டுக்குள் நில ஆர்ஜிதம் எல்லாம் செய்யப்பட்டு ஏற்பாடு செய்யப்படும் என்று சொல்லப்பட்டது. அது இன்று என்ன நிலையில் உள்ளது ? கொடைக்கானலில் ஆரம்பிக்கப்படும் டி.வி. ஸ்டேஷனை சீக்கிரமாக ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்படுமா ?



82 மார்ச் 4]

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** தலைவர் அவர்களே, கொடைக்கான
ல் நில ஆர்ஜிதம் செய்வதில் சில தடைகள் இருந்தன. அந்தத்
டைகள் எல்லாம் கடந்து 3, 4 ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதம் செய்து நாம்
த்திய அரசினிடத்திலே ஒப்படைத்து விட்டோம். மத்திய அரசு ஒளிபரப்புத்
றையினர் உடனடியாக வேலைகள் தொடங்குவதற்காக டெண்டர்கள்
தலியன விட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. எப்படியும் ஒன்றிரண்டு
ஆண்டுகளுக்குள் முடிந்துவிடும் என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

**திரு. செ. சிவசாமி :** தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்
திலே 5 சதவீதம் தெரியாது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது
எந்தப் பகுதி ? ராஜபாளையம் பகுதியா ? திருப்பத்தூர் பகுதியா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவர் அவர்களே, இந்த ஒளி
பரப்பு நிலையம் வந்ததற்குப் பிறகு அந்த 5 சதவீதம் பகுதிகளுக்குகூட
தெரிகின்ற நிலைமை ஏற்படலாம். ஏனென்றால் பொறியியல் நிபுணர்கள்
கொஞ்சம் ஜாக்கிரதையாகத்தான் சொல்வார்கள். ஆகவே எந்தப் பகுதியிலே
தெரியவில்லை என்பதைப்பற்றி இப்போதே சொல்லி அந்தப் பகுதி மக்களுக்கு
வீணாக ஒரு ஆர்வத்தை உண்டாக்குவது நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

**ஆடுதுறையிலுள்ள விவசாய ஆராய்ச்சி நிலையத்திற்கான நிதி உதவி.**

*** வினா எண் 346—திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு வேளாண்மைத்
துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆடுதுறையில் உள்ள விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் தமிழ்நாடு
முழுவதும் உள்ள நெல் பற்றிய ஆராய்ச்சி நடத்தி உணவு உற்பத்தியை அதி
கரிக்க தமிழக அரசு இந்திய விவசாய ஆராய்ச்சி கழகத்திடம் நிதி உதவி
கோரியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** (அ) மற்றும் (ஆ) தேசிய
வேளாண்மை ஆராய்ச்சித் திட்டத்தின் கீழ் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக்
கழகம், 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து ஐந்து வருடங்களுக்கு
ஆடுதுறை நெல் பரிசோதனை நிலையத்தின் அபிவிருத்திக்கென ரூபாய் 60
இலட்சங்களை அளிக்க இருக்கிறது.

**திரு. இரா. தாமரைக்கனி :** தலைவர் அவர்களே, இந்த ஆடுதுறை விவசாய ஆராய்ச்சி நிலையத்திற்காக தேசிய வேளாண்மை ஆராய்ச்சித் திட்டத்தின் கீழ் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் கொடுக்கும் 60 லட்சம் ரூபாயைக் கண்காணிக்கின்ற பொறுப்பு பல்கலைக் கழகத்திற்கா அல்லது அரசாங்கத்திற்கா ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** பல்கலைக் கழகம் கவனிக்கும்.

**திரு. இரா. தாமரைக்கனி :** ஆடுதுறை விவசாய ஆராய்ச்சி நிலையத்திலே உள்ள தொழிலாளர்களுக்கு என்று பயிற்சி நிலையம் ஆரம்பிக்கும் செயற் குறிப்பு உண்டா ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** உள்ளது.

**திரு. ந. சிவஞானம் :** ஆடுதுறையில் உள்ள வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் நெல், வாழை போன்றவற்றிற்கு ஆராய்ச்சி செய்யப்படுவதைப் போல் கரும்புக்கும் ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்த உத்தேசம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** அதற்கான ஆராய்ச்சி நிலையம் கடலூரில் இருக்கிறது. இது முழுக்க முழுக்க நெல்லுக்காகவே பயன்படுத்தப் படுகிறது.

**திரு. இரெ. இராசமாணிக்கம் :** தலைவர் அவர்களே, ஆடுதுறை விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் இதுவரை எத்தனை புது ரக நெல் ஆராய்ச்சி செய்து வெளியிடப்பட்டிருக்கிறது ? சென்ற ஆண்டு ஏதாவது புது ரக நெல் வெளியிடப்பட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தனிக் கேள்வி போட வேண்டும்.

## மேலமணக்குடி—கீழமணக்குடி இடையே இணைப்பு பாலம் அமைக்கும் திட்டம்.

* **வினா எண் 347—திரு. மி. வின்சென்ட் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குமரி மாவட்டத்தில் மேலமணக்குடி-கீழமணக்குடி ஆகிய ஊர்களுக்கு இடையே இணைப்பு பாலம் அமைக்க செயற்குறிப்பு உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** இனிவரும் ஆண்டுகளில் இப் பணியை மேற்கொள்ளப் பரிசீலனை செய்யப்படும்.



**திரு. மி. வின்சென்ட் :** தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் முதல் கோவளம் வரையில் கடற்கரையை இணைக்கும் முக்கியமான பாலமாக இது இருப்பதாலும், இண்டர்நேஷனல் டூரிஸ்ட் சென்டராக அறிவிக்கப்பட்டு இருக்கின்ற குமரி முனைக்கும் கோவளத்திற்கும் இடையே வருகின்ற முக்கிய மான பாலமாக இருப்பதாலும் குமரியைப் பெருமைப்படுத்தும் இந்தப் பாலத்தின் தேவையை உணர்ந்து அரசு அதற்கான ஆக்கப்பணிகளை துரிதப் படுத்த முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவர் அவர்களே, இந்த முக்கிய மான பாலம் கீழமணக்குடியையும் மேலமணக்குடியையும் இணைக்கிற பாலம் ஆகும். அது மட்டுமல்லாது அந்த பாலம் அமைக்கப்பட்டால், குமரியிலிருந்து கோவளத்திற்கு நிரந்தரமான கடற்கரை சாலையை அமைப்பதாகவும் இருக்கும். இதற்காக 80 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப் பட்டிருக்கிறது. கிழக்கு கடற்கரைச் சாலையில் இதை ஒரு பகுதியாக எடுத்து கொள்ள வேண்டுமென்று நாம் மத்திய அரசுக்கு எடுத்துச் சொன்னோம். பணம் இல்லை, ஆகவே கிழக்கு கடற்கரைச் சாலையை எடுத்துக்கொள்ள இயலாத நிலையில் இருக்கிறோம் என்று அறிவித்திருக்கிறார்கள். ஆகவே உடனடியாகத் தேவையை முன்னிட்டு கிழக்கு கடற்கரைச் சாலையை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம். ஆகவே வருகிற ஆண்டில் அந்தப் பாலத்தைக் கட்டி முடிப்பதற்கான வேலைகள் பற்றி பரிசீலிக்கப்படும்.

**திரு. மி. வின்சென்ட் :** பேரவைத் தலைவரவர்களே, கீழமணக்குடி கிராமத் திற்கும் மேலமணக்குடி கிராமத்திற்கும் உள்ள தூரம் ஒரு பர்லாங்தான். ஆனால் இந்தக் கிராமத்திலிருந்து அந்தக் கிராமத்திற்கு செல்ல வேண்டு மென்றால் 27 கிலோ மீட்டர் சுற்றிக்கொண்டு செல்கிறார்கள். எனவே, மேம் பாலம் போடாவிட்டாலும், ஒரு கிலோ மீட்டர் தள்ளி சில இலட்சம் ரூபாயில் அவசியம் கருதி அவசரமாக இந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவரவர்களே, கீழமணக்குடி கிராமத்திற்கும் மேலமணக்குடி கிராமத்திற்கும் இடையிலே உள்ள தூரம் ஏறத்தாழ 700 மீட்டர்தான். இந்த பாலத்தை அமைக்க வேண்டும் என்றால் 700 மீட்டருக்கு அமைக்க வேண்டும். அப்படி அமைப்பது என்றால் சில லட்சம் ரூபாய்களில் முடிக்க முடியாது. இப்பொழுது உள்ள விலைவாசிகளில் கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய் ஆனாலும் ஆகும். இப்படிப்பட்ட நிலையில் தேவையை முன்னிட்டு அடுத்த ஆண்டில் இதைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வதாக இருக்கிறோம்.

[1982 மார்ச் 4

**கொடைக்கானலில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் திட்டம்.**

*வினா எண் 348—திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானலில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) நகராட்சி நடவடிக்கை எடுத்து வருகிறது.

(ஆ) ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் எல்லா வசதிகளுடன் கூடிய ஒரு நவீன பேருந்து நிலையம் கட்டும் திட்டத்தை நகரியக்குழு அங்கிகரித்துள்ளது.

திரு. கா. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுதுள்ள பஸ் ஸ்டாண்டில் 3 பஸ்களுக்கு மேல் நிற்கத் தகுதி இல்லாத நிலைமையில் இருக்கிறது. மீதமுள்ள பஸ்கள் நடுரோட்டில் நிற்கின்றன. அதனால் போக்குவரத்திற்கு மிகவும் இடைஞ்சலாக இருப்பதால் புது பஸ ஸ்டாண்டை விரைவில் அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, இந்தப் பேருந்து நிலையம் அமைப்பதற்காகக் கொடைக்கானலில் 8.79 எக்கர் பரப்பளவுள்ள தனியார் இடத்தை Woodhill Compound என்ற இடத்தை ஆர்ஜிதம் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருக்கின்றன. அதுவும் குறிப்பாக இந்தத் திட்டத்திற்கு 65 இலட்சம் செலவாகும் என்று மதிப்பிடு செய்யப்பட்டு முதல் கட்டமாக 20 லட்சம் ரூபாய் கேட்கப்பட்டிருக்கிறது. இது அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது.

திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அமைக்கப்படவிருக்கும் பஸ் ஸ்டாண்டில் கடைகளும், தங்குவதற்கான அறைகளும் கட்டப்படுமா ? அதைக் கட்டுவதற்கான உத்தேச மதிப்பீடு என்ன ? பஸ் ஸ்டாண்ட் எவ்வளவு விரைவில் ஆரம்பிக்கப் பட முடியும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, கடைகள் கட்டுவது, பேருந்து நிலையத்தில் பஸ்கள் நிற்கின்ற இடங்கள் கட்டுவது ஆகிய



1982 மார்ச் 4]

இவைகளுக்கெல்லாம் சேர்த்துத்தான் 65 இலட்சம் ரூபாய் என்று மதிப்பீடு செய்யப்பட்டு, முதல் கட்டமாக 20 இலட்சம் ரூபாய் தேவைப்படும் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதைப் போல, போக்குவரத்திற்கு இடைஞ்சலாக இருக்கக்கூடிய அந்தப் பேருந்து நிலையத்தை மாற்றி Woodhill Compound என்ற இடத்தை அரசாங்கம் எடுத்து அங்கே அந்தப் போக்குவரத்து நிலையத்தை ஏற்படுத்த முடிவு செய்திருக்கிறது. ஆனால், அந்த Woodhill Compound என்ற இடத்தை வாங்குவதற்கு அதன் சொந்தக்காரர்கள் சில தடங்கல்களை ஏற்படுத்தியிருக் கிறார்கள் என்று கேள்விப்பட்டேன். அந்தத் தடங்கலெல்லாம் நீங்கி இப்பொழுது அந்த இடத்தை அரசாங்கம் முழுமையாகப் பெற்றிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். அதோடு, அந்தப் பேருந்து நிலையத்தை ஏற்படுத்தும்பொழுது அதன் உள்ளேயே டாக்சி ஸ்டாண்டையும் கொண்டுபோனால் இன்னும் போக்குவரத்திற்குச் சாதகமாக இருக்கும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதை அரசாங்கம் ஏற்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, Woodhill Compound என்ற இடத்தை ஆர்ஜிதம் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தடைகள் இருப்பதாக என்னிடத்தில் குறிப்புகள் இல்லை. ஆனால் தடைகள் இருந்தாலும் அவைகள் நீக்கப்படவும், உடனடியாக அந்த இடத்தை எடுப்பதற்கும் உரிய நடவடிக் கைகள் எடுக்கப்படும். அதே நேரத்தில் பேருந்து நிலையத்தை நல்லமுறையில் அமைப்பதற்காக ஏற்கனவே பாண்டியன் போக்குவரத்துக் கழகம்கூட எடுத்துக்கொள்வதாக இருந்தார்கள். ஆனால் நகரியத்தினுடைய வரு மானத்தை முன்னிட்டு நகரியமே இதை ஏற்று நடத்த வேண்டுமென்பதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார். ஆகவே, தகுந்த முறையில் சீக்கிரமாக நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**சாலைகள் அமைப்பதற்குத் தேவைப்படும் தார்.**

*வினா எண் 349.—திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூசியில்லாச் சாலைகள் அமைப்பதற்குத் தேவையான தார் கிடைக்காததால் கிராமப் பகுதிகளில் [illegible] சாலை சீரமைப்புப் பணிகள் தேக்கமடைந்திருப்பது அரசுக்குத் தெரியுமா ?

[1982 மார்ச் 4

(ஆ) தமிழ்நாட்டிற்குத் தேவையான தாரை எந்த எந்த நிறுவனங்களிடமிருந்து அரசு பெறுகிறது ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) ஆம்.

(ஆ) இந்தியன் எண்ணெய் கழகம், பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் மற்றும் ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் இவைகளிடமிருந்து அரசு தார் பெறுகின்றது.

**திரு. ச. பாலகிருஷ்ணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கடந்த 6 மாத காலமாக தமிழகத்திற்கு மட்டும் தார் கிடைக்காத காரணம் என்ன ? தமிழகத்திற்கு தார் வழங்கிட மத்திய அரசின் அனுமதி மறுக்கப்பட்டதாகச் சொல்லப்படுவது உண்மையா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவரவர்களே, நமக்குக் கொடுக்க வேண்டிய தார் குறைவாக மத்திய அரசின் மூலமாகக் கொடுக்கப்பட்டு வருகிறது. 1979-80-லேயும்கூட 85,000 டன் நமக்கு வேண்டுமென்று நாம் கேட்டோம். அதற்குப்பின்னால் 1981-82-க்கு 1,20,000 மெட்ரிக் டன் தார் தேவை என்று கேட்டோம். ஆனால் இதுவரையிலும் நமக்குக் கொடுக்கப்பட்ட தாரின் அளவு 57,000 டன்தான். ஆகவே, இருக்கின்ற நிலைமைகளை அனுசரித்து, அதுவும் குறிப்பாகத் தன்னிறைவுத் திட்டம் போன்ற பெரிய திட்டங்களை அமல்படுத்தும் இந்த மாநிலத்திற்கு அதிகம் தார் தேவை என்று வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். சமீபத்திலே கூட தமிழக முதல்வர் அங்கே மத்திய அமைச்சர்களை நேரிலே கேட்டுக் கொண்டதற்கிணங்க 2,000 டன் தார் அனுப்பப்பட்டிருக்கிறது. நிலைமைகள் இன்னும் சீராகும் என்று எதிர்பார்க்கிறோம். இல்லாவிட்டாலும், அடிக்கடி வற்புறுத்தியாவது, எப்படியாவது வாங்க வேண்டுமென்ற சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம்.

(முற்பகல் 9-30)

**திரு. ச. பாலகிருஷ்ணன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தாரை 'ஒப்பனாக' லாரிகளில் கொண்டு வந்து இரவோடு கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால் சேதாரமும், பணிகளில் காலதாமதமும் இரட்டிப்பு ஏற்படுகிறது. ஆகவே, முன்பு கொடுத்ததைப் போல டிரம்களில் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** நமக்குக் கொடுக்கப்படுகிற தார் இரண்டு வகையாகக் கொடுக்கப்படுகிறது. ஒன்று, Bulk Bitumen மொத்தமாகக் கொடுப்பது. இரண்டாவது Packed Bitumen



1982 மார்ச் 4]

திரப்பப்பட்ட டின்களின் மூலமாகக் கொடுப்பது. இப்படித்தான் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதிக அளவு கொடுக்கக்கூடிய தாரை இப்பொழுதெல்லாம் Bulk Bitumen ஆகத்தான் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனாலும், அதிலே எந்த விதமான ஊழலும் ஏற்படக் கூடாது என்பதற்காக, கண்காணிப்புத் துறைகள் மூலமாகத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த மாநிலத்திலேயிருந்து வெளி மாநிலங்களுக்குக் கடத்திச் சென்று விடக்கூடாது என்பதற்கும், இங்கே இருக்கிற தலைமைப் பொறியாளர் அவர்களிடம் 'நோ அப்ஜக்ஷன்' சர்டிபிகேட் வாங்கினால்தான் வெளி மாநிலத்திற்குக் கொண்டு போக முடியும் என்கின்ற நிலைமைகள் உருவாகக்கப்பட்டுள்ளன.

**திரு. என். வரதராஜன் :** தலைவர் அவர்களே, நாம் புதிதாகப் போடும் படியான ரோடுகள் விரைவிலேயே பழுதடைந்து விடுகின்றன. ஆகவே, இப்பொழுது சமீபத்தில் வந்து கொண்டிருக்கிற தாரின் தரம் குறைந்து கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அதைப்பற்றி அரசு ஆய்வு செய்ததா ? செய்திருந்தாலும், மீண்டும் ஆய்வு செய்து தரத்தை உயர்த்த முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, தரம் ஒரே மாதிரியாகத் தானிருக்கிறது. ஆனால் போடுகின்ற அளவில் தான் குறைவாகப் போடுவதும், அதிகமாகப் போடுவதும் என்கின்ற அளவில் தான் வித்தியாசம் இருக்கின்றது. குறிப்பாக, நாம் போடும் சாலைகள் 'கோல்ட் மிக்சிங்' முறையில் போடப்படுகின்றன. ஆகவேதான் இந்த நிலைமைகள் உருவாகின்றன. அதற்குச் செலவு குறைவு. ஆனால், 'ஹாட் மிக்சிங்' முறையில் போட்டால் செலவு அதிகம், செலவு 3 மடங்கு அதிகம் ஆகிறது. கோல்ட் மிக்சிங் முறையில் போடக்கூடிய சாலைகள் 5 ஆண்டுகள்தான் நிற்கும். ஆனால் ஹாட் மிக்சிங் முறையில் போடக்கூடிய சாலைகள் 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள் நிற்கும் என்கின்ற கணக்கைக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, செலவைக் குறைக்க வேண்டியதையும் நாம் பார்க்க வேண்டியிருக்கிறது. மேலும் பணம் எவ்வளவு இருக்கின்றது என்கின்ற கணக்கையும் நாம் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். தரத்தையும் நாம் பார்க்கவேண்டியிருக்கிறது.

**திரு. ப. [illegible]னுரங்கம் :** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் நமக்குப் போதுமான அளவு தார் வழங்கவில்லையென்று சொன்னார்கள். அதனால்தானோ என்னவோ, தெரியவில்லை, என்னுடைய தொகுதியில் ஆடுதொட்டிப் பகுதியில் போடப்பட்ட ரோடு போட்டுவிட்டு வந்தவுடனே கையோடு வந்துவிடுகிறது. பட்டுத் துணி போல், கிளாஸ்கோ மல் போல் மின்னாகப் போடப்படுகிறது. ஆகவே, கொஞ்சமான தார் இருந்தாலும்,

[1982 மார்ச் 4

போடுகின்ற ரோடுகளை கொஞ்சமாக எடுத்துக் கொண்டு, திக்காகப் போட அரசு முன்வருமா ? ஐந்து ஆண்டுகள், பத்து ஆண்டுகள் நிற்கின்றன என்று சொல்கிறார் அமைச்சர். ஆனால், ஆடுதொட்டிப் பகுதியில் ஐந்து நாட்கள் கூட வரவில்லை. அது ஆதி ஆந்திர மக்கள் வாழ்கின்ற பகுதி. ஆகவே, அடுத்து ரோடு போடுகின்ற நேரத்தில் இதுபோன்ற குறைகளை நிவர்த்தி செய்ய அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு** : தலைவர் அவர்களே, தன்மையான, தரமான, ரோடுகளைப் போட வேண்டுமென்பதுதான் நமமுடைய எண்ணமும் கூட. ஆகவே, எந்தப் பகுதியில் எப்படிப்பட்ட நிலைமைகள் இருந்தாலும், உடனடியாக சரி செய்யப்படும்.

**கும்பகோணம் பேருந்து நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றும் திட்டம்.**

* **வினா எண் 350.—திரு. மு. அம்பிகாபதி** : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் கும்பகோணம் பேருந்து நிலையத்தை வேறு இடத்துக்கு மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு** : கும்பகோணம் நகராட்சி இது குறித்து நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவித்துள்ளது. அரசிடம் தற்சமயம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது** : பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் நகராட்சியின் சார்பாக, பேருந்து நிலையத்தை மாற்றுவதற்காக எத்தனை ஏக்கர் இடம் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது ? அதனுடைய மதிப்பீடு என்ன ? எவ்வளவு சீக்கிரம் அது முடிக்கப்படும் ? காலம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு** : தலைவர் அவர்களே, இதற்காக 7 ஏக்கர் 58 சென்ட் நிலத்திற்கான பட்டா அரசிடமிருந்து கும்பகோணம் நகராட்சிக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக, ரூ. 65 இலட்சம் செலவாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. செ. சிவசாமி**: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த பஸ் ஸ்டாண்டில் எத்தனை பஸ்கள் நிற்கக்கூடிய அளவு இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு** : தலைவர் அவர்களே, இது ஒரு ஏ கிளாஸ் பஸ் ஸ்டாண்டாக ஏற்படுத்தப்படுகிறது. குறைந்தது 50 பஸ்களாவது நிறுத்துவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.



1982 மார்ச் 4]

**பெருந்துறை காசநோய் மருத்துவமனை.**

* **வினா எண் 351.—திரு. இ. கா. நல்லப்பன்** : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம் பிரிந்த பின்னும், பெருந்துறை காசநோய் மருத்துவமனை தலைவராக கோவை மாவட்ட ஆட்சித் தலைவரே இருப்பதன் காரணம் என்ன ?

(ஆ) அது எப்போது பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவரின் கீழ் கொண்டு வரப்படும் ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே** : (அ) தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டம் பிரிந்தபோது ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவரை இதன் தலைவராக நியமனம் செய்யலாமா என்று காசநோய் சங்கத்தின் கவர்னிங் பாடி, ஆளுகைக் குழு கருதியது. ஆனால் இச்சங்கத்தின் எல்லா உறுப்பினர்களும் தற்பொழுது இருந்துவரும் நிலையே தொடரட்டும் என விரும்பிய காரணத்தினாலே இவரே தலைவராக தொடர்ந்து நீடித்துக் கொண்டு வருகிறார்.

(ஆ) இக் கேள்வி எழ இடமில்லை.

**திரு. இ. கா. நல்லப்பன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த காசநோய் மருத்துவமனையைப் பொறுத்தவரையில் ஒன்றாக இருந்த அந்தக் கோவை மாவட்டத்தில் அப்போது இருந்த தலைமையின் காரணமாக அந்தமாவட்ட ஆட்சித் தலைவரே தலைமைப் பொறுப்பில் இருந்தார். ஆனால், நிர்வாக சீர்திருத்தம் காரணமாக பிரிக்கப்பட்ட பின்பும் இந்த நிலை இருப்பது சரிதானா ? அதை மாற்றி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ? என்பதை அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே** : மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் இந்தப் பிரச்சினையை மூலக் கேள்வி[illegible] பதில் சொல்லும்போது நன்கு விளக்கி இருக்கிறேன். Societies Registration Act 21 of 1960 என்று இருக்கிறது. அந்தச் சட்டத்தைத் திருத்தினால்தான் நாம் இதை மாற்றி அமைப்பதற்கான நிலை இருக்கின்றது. காரணம் பெரும்பாலான அளவில் இருக்கின்ற அந்த உறுப்பினர்கள் கோவை மாவட்ட ஆட்சித் தலைவரே அதன் தலைவராக இருக்கலாம் என்று விரும்பிய காரணத்தால் அதிலே ஒரு டெக்னிக்கல் ரீசன் இருக்கின்ற காரணத்தாலே, இந்த நிலையில் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1982 மார்ச் 4

அந்த மருத்துவ மனைக்கு அண்மைக் காலத்தில், 6 மாதத்திற்கு முன்னால் நான் சென்று பார்வையிட்டு, சில யோசனைகளைத் தெரிவித்துவிட்டு வந்து இருக்கிறேன். அங்கேயிருக்கும் மருத்துவர்கள் நல்ல திறமைசாலிகளாக இருக்கிறார்கள். அதை மேலும் விரிவுப்படுத்த என்ன செய்யலாம் என்பது பற்றி பின்னர் பரிசீலிக்கலாம்.

**திரு. க. அன்பழகன் :** பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்துறை காசநோய் மருத்துவமனை, அமைந்திருக்கிற இடம் பெரியார் மாவட்டத்தில் இருக்கிற காரணத்தால், பெரியார் மாவட்டத்தின் ஆட்சித் தலைவர் அதற்குத் தலைவராக இருப்பது தான் பொருத்தமுடையதாகவும், நியாயமானதாகவும் இருக்கும். அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களும் ஒன்று தான். ஆகவே, பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர் அதற்குத் தலைவராக இருப்பதற்கு வழிவகை செய்யப்படுமா ? நிர்வாகக் குழுவில் உள்ள பெரும்பான்மையான உறுப்பினர்கள் பெரியார் மாவட்டத்தில் இருக்கிற ஆட்சித் தலைவர் அதற்குத் தலைவராக இருப்பதற்கு உடன்பட வில்லை என்பதால் இப்படி வைத்திருக்கிறார்களோ என்ற தவறான கருத்து ஏற்படுவதற்கு இடம் ஏற்படும். ஆகவே, பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர் தான் அதற்குத் தலைவராக இருப்பார் என்கிற வகையில் விதிமுறை களில் ஒரு எளிய திருத்தத்தின் மூலம் செய்து, அதை நடைமுறைப்படுத்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் எழுப்பிய கேள்வியை ஏற்கனவே திரு. நல்லப்பன் அவர்களும் கேட்டார்கள். அந்த நேரத்தில் நான் அளித்த பதில் (Societies Registration Act 21 of 1960) அடிப்படையில் அதைத் திருத்தவேண்டிய அவசியத்தில் இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறேன். ஆகவே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லப்பன் அவர்களும் தெரிவித்த அந்தக் கருத்துக்களின் அடிப்படையில், அந்த யோசனையை அரசாங்கம் நிச்சயமாகப் பரிசீலிக்கும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

*Centralised purchase system for purchase of drugs.*

* Q. 352—DR. K. P. RAMALINGAM : Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) Whether there is any proposal for creating common centralised purchase system for purchasing Drugs and Medicines for the Government Hospitals and Dispensaries?

(*b*) If so, the details thereof?



1982 மார்ச் 4]

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** அரசாணை நிலை எண் 584 சுகாதாரம், நாள் 4—4—1981-ல் மருத்துவக் கல்வி இயக்குநர் இயக்ககத்திலும், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநல இயக்குநர் இயக்ககத்திலும் மருந்து வாங்கும் முறையை மையப்படுத்த அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இது ஏப்ரல் 1982 முதல் அமுலுக்கு வரும். இவ்வாணைப்படி மருந்துகள் வாங்குவதற்கு உதவி செய்ய மருந்து வாங்கும் குழு ஒன்றை அரசு ஏற்படுத்தி யுள்ளது. இம்முறையினால் மருந்துகள் மொத்தமாக இயக்ககங்களினால் வாங்கப்பட்டு அனைத்து மருத்துவ நிறுவனங்களுக்கும் நிர்ணயிக்கப்பட்ட விலையில் சீராக வினியோகம் செய்யப்படும்.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம் :** தலைவர் அவர்களே, மருந்து வாங்கும் குழு அமைத்து இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் குழுவிலே யார் யார் இடம் பெற்று இருக்கிறார்கள் என்பதை அறிவிக்க இயலுமா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருந்துகள் வாங்குவதற்கு உதவி செய்ய 'பர்சேஸ் கமிட்டி' ஒன்று நியமித்து இருக்கிறோம். இதுவரையில், அந்தந்தத் துறைக்குத் தேவை யானதை அவர்கள் மனு செய்து பெற்று வந்தார்கள். அதாவது, மருத்துவக் கல்வி இயக்குனராக இருந்தால், அவர் தனியாக மனு செய்து மருந்துகள் வாங்குவார். டி.எம்.எஸ். துறையாக இருந்தால் அவர் தனியாக மனு செய்து மருந்துகள் வாங்குவார். ஆனால் இப்போது இத்துறைகளுக்காக ஒரு 'சென்ட்ரல் பர்சேஸ் கமிட்டி' நாம் நியமித்து இருக்கிறோம். அந்தக் கமிட்டி யில்

Director of Medical Education

Director of Medical Services & Family Welfare

Director of Public Health and Preventive Medicine

Director of Primary Health Centres

Joint State Drug Controller

என்று ஐந்து துறையைச் சார்ந்தவர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அதற்கு சேர்மனாக டைரக்டர் ஆப் மெடிகல் சர்வீசஸ் ஒரு ஆண்டும், டைரக்டர் ஆப் மெடிகல் எடுகேஷன் ஒரு ஆண்டும், மாறிமாறி வருவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. தி. கா. நல்லப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஏறக்குறைய 45 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த சட்ட திட்டங்களை வைத்து பதிவு செய்யப்பட்டது. இருப்பினும் அன்றையதினம் அந்த கவர்னிங் பாடியிலே இருக்கக்கூடியவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் நீங்கலாக அத்தனை பேர்களும், ஏதோ தங்களுடைய வசதியின் காரணமாக பொழுது போக்குக்காக வந்து கொண்டிருக்கிறார்களே தவிர, உண்மை நிலையை ஆராய்ந்து அவர்கள் செயல்படும் நிலையில் இல்லாத காரணத்தால், இந்த சட்டத்திட்டங்களை மாற்றுவதற்கு அரசு மீண்டும் பரிசிலனை செய்யுமா? என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் சொல்லக்கூடிய சட்டத்தை திருத்தக்கூடிய அந்த யோசனையை ஆராயலாம். ஆனால் அந்தக் காசநோய் மருத்துவ மனையிலே பணிகள் நன்றாக நடந்துகொண்டிருக்கின்றன. அரசாங்கம் கூட அதை எடுத்துக் கொள்ளலாம் என்று யோசனை செய்தது. ஆனால், அங்கே பணிகள் நல்லமுறையில் நடந்து கொண்டிருக்கின்ற காரணத்திற்காக அங்கே எந்தவிதமான மாறுதலும் ஏற்படுத்தவேண்டாம் என்று வைத்திருக்கிறோம். அது சிறிது நஷ்டத்திலே ஓடிக்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள் என்று கருதுகிறேன்.

**திரு. கு. ரமணி :** தலைவர் அவர்களே, அந்தப் பெருந்துறையிலே உள்ள காசநோய் மருத்துவமனை 40 ஆண்டுகளுக்கு முன்னாலே கோவை மாவட்டமும், பெரியார் மாவட்டமும் ஒன்றாக இருந்தபோது உருவாக்கப்பட்டது. கோவை மாநகராட்சி உட்பட, பல்வேறு ஸ்தாபனங்கள் அதற்கு ஏராளமான பணத்தை நன்கொடையாக இன்றைக்கும் அளித்துக் கொண்டிருக்கிறார்கள். தலைவர் எப்படி மாறுவது என்பதைப் பற்றி பிரச்சினை இல்லை. ஆனால், அடுத்த மாவட்டத்திற்கு இது மாறி விட்டது என்பதனால், கோவை மாவட்டம் முழுவதுமே இன்றைக்கு வேறு காசநோய் மருத்துவமனை இல்லாத நிலையில் அங்கே கிடைக்கின்ற மருத்துவ வசதி, பெரியார் மாவட்டத்தில் அனைவருக்கும் கிடைக்கும்படி அமைச்சர் அவர்கள் பாதுகாப்பு அளிப்பாரா, அல்லது கோவை மாவட்டத்திற்கு என்று தனியாக ஒரு காசநோய் மருத்துவமனையை உருவாக்கித் தருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எனக்கு சாதகமான ஒரு வினாவை எழுப்பி அதற்குப் பதில் கொடுக்கும் முறையில் அது அமைந்து உள்ளது. இரண்டு மாவட்டங்களுக்கும் பொதுவான இடமாக இருக்கட்டும் என்ற காரணத்திற்காகத்தான் அந்த கவர்னிங்பாடி உறுப்பினர்கள் பெரியார்



மாவட்ட கலக்டர் தலைவராக இருக்கலாம் என்று பரிந்துரை செய்திருக்கிறார்கள். ஆனால் அத்தனை உறுப்பினர்களும் சேர்ந்து அப்படித் தேவையில்லை, இரண்டு மாவட்டத்திற்கும் பொதுவான இடமாக இருக்கட்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். இப்போது அங்கே இரண்டு மாவட்டங்களுக்கும் அது நன்றாக பணிசெய்து கொண்டிருக்கிறது என்பதைத் தங்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(முற்பகல் 9-40)

**திரு. துரைராமசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த காசநோய் ஆஸ்பிடல் ஆரம்பித்து 45 ஆண்டுகள் ஆகிவிட்டது. அது எந்த நிலையில் ஆரம்பிக்கப்பட்டதோ அந்த நிலையில் தான் இன்றைக்கும் தொடர்ந்து நடந்து கொண்டு இருக்கிறது. அது விரிவுபடுத்தப்படவில்லை. தனியார் நடத்துவதால் நஷ்டம் ஏற்படுவதுடன், போதிய நிதி இல்லை என்றும் சொல்கிறார்கள். ஆகவே, அதை அரசே ஏற்றுக்கொண்டு, அதை விரிவுப்படுத்தி, இன்னும் பெரிய அளவில் அதைச் செய்வதற்கு, அரசு முன் வருமா? மேலும், பெருந்துறைக்கு அருகாமையில் அது இருப்பதால் அந்தப் பகுதியில் உள்ள சீதோஷ்ண நிலைமை இந்த காசநோயைப் போக்குவதற்கு பொருத்தமாக இருக்கிற காரணத்தால், அதை அரசே எடுத்துக் கொண்டு நடத்துவதற்குமுன் வருமா? கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அங்கே மெடிகல் காலேஜ் ஆஸ்பிடல் பெரிய அளவில் இருப்பதால், பெரியார் மாவட்டம் போன்று புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மாவட்டங்களில் இத்தகைய மருத்துவமனைகளை விஸ்தரிக்க முன்னுரிமை வழங்க அரசு முன் வருமா என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மருத்துவ மனையைப் பொறுத்தவரையில் அரசாங்கத்திற்கு அதிலே பொறுப்பு இருக்கிறது.

Annual expenditure of the above T.B. Sanitorium 16 லட்ச ரூபாய் ஒரு வருஷத்திற்குச் செலவாகிறது. அதற்கு வரக்கூடிய வருமானம் 13 லட்ச ரூபாய் என்ற அளவில் இருக்கிறது. அதற்கு இரண்டு லட்ச ரூபாய் அரசாங்கமே மானியமாகக் கொடுத்துக் கொண்டு இருக்கிறது. எல்லாக் காசநோய் மருத்துவ மனைகளையும் அரசாங்கமே எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நிலைமை இருக்குமானால், அதிலே சங்கடம் வரும். எல்லா காசநோய் மருத்துவமனைகளையும் அரசாங்கம் எடுத்துக்கொள்ளவேண்டு மானால் 50 லட்ச ரூபாய், 1 கோடி ரூபாய் செலவாகும். பல்வேறு மாவட்டங்களில் இந்த மாதிரியான காசநோய் மருத்துவமனைகள் இருக்கின்றன. இது கொள்கை ரீதியாகப் பரிசீலிக்கப்படவேண்டிய ஒன்று. அது மட்டுமல்ல, தனியார்த்துறையில் மருத்துவமனைகள் துவங்குவதற்கு நாம் ஊக்கம் கொடுத்தால் தான் அது நல்ல பலன் தருவதாக இருக்கும்.

[1982 மார்ச் 4

**டாக்டர் கே. பி. இராமலிங்கம் :** தலைவரவர்களே, இந்த முறையிலே கால்நடை மருத்துவமனைகளுக்கும் மற்ற மருத்துவமனைகளுக்கும் சம்பந்தம் இருக்கிறதா ? கால்நடை மருத்துவமனைகளுக்கு வாங்கப்படுகிற மருந்து களுக்கும் இந்த மத்திய பர்ச்சேஸ் முறை கையாளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவரவர்களே, இல்லை.

**துவரங்குறிச்சியிலுள்ள மகப்பேறு மருத்துவமனைக் கட்டிடம்.**

* **வினா எண் 353.**—திரு. மே. அ. இராசகுமார் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் மருங்காபுரி ஒன்றியம் துவரங்குறிச்சியில் மகப்பேறு மருத்துவமனை கட்டிடம் கட்டப்பட்டு பின் அது தடை செய்யப் பட்டுள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன்பேரில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** (அ) மற்றும் (ஆ) மேற்கூறப் பட்ட கட்டிடம் கட்ட அரசு ஆணை பிறப்பித்த பின்பு, கட்டிடம் கட்ட ஏற் பட்ட தடைகளை நீக்கி கட்டிடங்கள் யாவும் கட்டி முடிக்க 11—1—1982 நாளிட்ட மக்கள் நல்வாழ்வுத்துறை அரசாணை எண் (நிலை) 40-ல், ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**திரு. மே. அ. இராசகுமார் :** தலைவரவர்களே, இந்தத் தடையைப் பெறுவதற்கு அரசு அதிகாரிகளே முன்வந்திருப்பதால், அந்த அரசு அதிகாரிகள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவரவர்களே, இந்தத் தடைக்கு காரணம் என்னவென்றால் அது ஒரு கோவில் நிலம். 'ஹிந்து ரிலிஜியஸ் அண்ட் சாரிட்டபிள் எண்டோமென்ட்' டிபார்ட்மென்டைச் சேர்ந்த ஒரு கோவில் நிலம் அது. அதை ஆர்ஜிதம் செய்யக்கூடிய நேரத்தில் இரண்டு துறைகளுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு, பின்னால் சுமூகமாகத் தீர்க்கப் பட்டு, இப்போது ஆணை பிறப்பிக்கப்பட்டு, வேலை தொடங்க ஆயத்தமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1982 மார்ச் 4]

**மதுரை இராஜாஜி மருத்துவமனைக்கு தண்ணீர் கொண்டுவரும் திட்டம்.**

* **வினா எண் 354**—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) மதுரை இராஜாஜி மருத்துவமனைக்கு பால்பண்ணை திட்டத்தி லிருந்து தண்ணீர் கொண்டுவரும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் இத்திட்டம் எப்பொழுது செயல்படுத்தப்படும் ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** (அ) & (ஆ) உள்ளது, இத் திட்டத்தின்படி பால்பண்ணை திட்டத்திலிருந்து மதுரை இராஜாஜி மருத்துவமனைக்கும் மருத்துவக் கல்லூரிக்கும் தண்ணீர் கொண்டுவர குழாய் மூலம் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. பால்பண்ணை திட்டத்திற்குள் குழாய் இணைப்பு பணிகள் முன்னேறி வருகின்றது.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** தலைவரவர்களே, நம்முடைய அமைச் சரவர்கள் பதில் சொல்லும்போது பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னார்கள், பாராட்டுகிறேன். ஆனால், ஏற்கெனவே அந்த மருத்துவ மனையிலிருக்கிற மக்கள், நானும் திரு. நெடுமாறன் அவர்களும் அங்கே சென்றிருந்தபோது முறையிட்டார்கள். அதன் பின்னர் நாங்கள் கலெக்டர், டீன் ஆகியோருடன் பேசி, அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத் துப் பேசி, இவ்வளவு நாளைக்குள் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று சொன் னார்களே. அது நிறைவேற்றப்பட்டிருக்கிறதா? இல்லை என்றால் இவ்வளவு காலதாமதம் ஏற்படுவதற்கு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், திரு. நெடுமாறன் அவர்களும் இது சம்பந்தமாக பேசியதன் காரணமாக என்று சொல்லி தங்களுடைய முயற்சிக்கு பெருமை சேர்த்துக்கொள்கிறார்கள். அதில் ஒன்றும் குந்தகம் இல்லை. அதை ஒத்துக்கொள்கிறேன். எல்லா எம்.எல்.ஏ.-க்களும் அதற்கு முயற்சி செய் தார்கள். குறிப்பாக திரு. நெடுமாறன் அவர்கள் அதிக அக்கறை காட்டினார் கள், பாராட்டுகிறேன். இப்போது 3,10,000 ரூபாய் செலவு செய்து அதை முடித்திருக்கிறோம். இப்போது தண்ணீர் வர ஆரம்பித்திருக்கிறது என் பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பணியை முடித்த தன் காரணமாக நமக்கு தண்ணீர் சப்ளை கூட முன்னைவிட கூடியிருக்கிறது. முன்னால் நாள் ஒன்றுக்[illegible]ராசரியாக 52 பர் காபிட்டா கன்சம்ஷன் இருந்தது. இப்போது [illegible]பதிலாக 120 பர் காபிட்டா கன்சம்ஷன் சராசரியாக [illegible] இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-50)

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை உண்மையிலேயே நான் பாராட்டுகிறேன். ஆனால் இன்னும் கூட தண்ணீர் பற்றாமல் இருக்கின்றது. ஆகவே முன்பு சமயநல்லூர் மின் சார நிலையம் இயங்கிக்கொண்டிருந்தபோது வைகையிலே இருந்து கிணறு வெட்டப்பட்டு தண்ணீர் கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால் மின்சார நிலை யத்தை விற்றுவிட்டதற்கு பிறகு இப்போது கிணறு மூடப்பட்டிருக்கின்றது என்பது அரசுக்குத் தெரியுமா ? ஆகவே தண்ணீர் பற்றாக்குறையைப் போக்க அந்த கிணற்றிலே இருந்து தண்ணீர் கொண்டுவருவதற்கான வழிவகை செய்யப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவரவர்களே, அந்த யோசனை கூட அரசினுடைய கவனத்திலே இருக்கின்றது. இருந்தாலும் பால் பண்ணையிலே இருந்து கிடைக்கின்ற தண்ணீரை நாம் மேக்ஸிமம் யுட்டிலைசேஷன் செய்தோமேயானால் அதுவே பெரிய வெற்றியாக இருக்கும். ஆனால் இன்னொரு சங்கடமும் இருக்கின்றது. நிறைய தண்ணீரைப் பயன் படுத்தினால் சுவரேஜ் ப்ளாக் ஆகிவிடக்கூடும். ஆகவே அதற்குத் தகுந்த அளவிலே சுவரேஜ் வசதியும் இருக்கின்றதா என்பதைப் பார்க்கவேண்டும். ஆகவே எந்த அளவுக்குத் தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்த முடியுமோ அந்த அளவுக்கு பயன்படுத்தினால் நன்றாக இருக்கும்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவரவர்களே, பால் பண்ணையிலே இருந்து தண்ணீர் பெறுவது என்பது பாலுக்கும் தண்ணீருக்கும் உள்ள நெருக்கத்தை காட்டுகின்றது. மதுரை ராஜாஜி மருத்துவமனையைப் பொறுத்தவரையிலே குடிநீரிலே சாக்கடைத் தண்ணீர் கலக்கின்ற கொடுமை இன்னும் விட்டபாடில்லை. ஆகவே நல்ல தண்ணீர் போதுமான அளவுக்கு விரைவிலே கிடைக்க அரசாங்கம், க்ராஷ் ப்ரோக்ராம் என்ற வகையிலே ஏதாவது தீவிரமான நடவடிக்கையினை எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவரவர்களே, இந்த விஷ யத்திலே க்ராஷ் தேவையில்லை. க்ராஷ் ஆகிவிட்டால் ஆபத்து. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அடுக்கு மொழிக்காக சில வார்த்தைகளை பயன்படுத்தி இருக்கிறார்கள். ஆகவே இதிலே பாலுக்கும் தண்ணீருக்கும் சம்பந்தமே கிடையாது. இது ஒரு புனிதமான ஸ்கீம். பால்பண்ணையிலே இருந்து வருகின்ற தண்ணீரை இவர்கள் பயன்படுத்துகிறார்கள். இந்த ஸ்கீம் வேண்டும் என்பதற்காக எல்லோரும் முயற்சி எடுத்துக்கொண்டோம். குறிப் பாக மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் போன்று எல்லோரும் நல்ல முயற்சி



எடுத்துக்கொண்டதன் காரணமாக, எல்லா கட்சியினரையும் பேச வைத்து நல்ல ஸ்கீமைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே தண்ணீர் பால் இட்டயே போகாது. மருத்துவமனைக்குத்தான் வரும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

## பஸ்கள், லாரிகளுக்கான தேசிய உரிமங்கள் வழங்குவதில் பிற்படுத்தப்பட்டோருக்கு ஒதுக்கீடு செய்யும் திட்டம்.

*** வினா எண் 335.**—திரு. செ. செம்மலை மற்றும் திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தாழ்த்தப்பட்டோருக்கு பஸ்கள், மற்றும் லாரிகள் தேசிய பர்மிட் வழங்க ஒதுக்கீடு அளித்துள்ளது போல் பிற்படுத்தப்பட்டோருக்கும் ஒதுக்கீடு செய்ய அரசு பரிசீலிக்குமா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** நிலைப் பேருந்து உரிமங்கள் வழங்கு வதில் பிற்படுத்தப்பட்டோருக்கு ஒதுக்கீடு, செய்யப்பட்டுள்ளது. வாடகை லாரி உரிமங்கள் வழங்குவதில் எண்ணிக்கை கட்டுப்பாடு இல்லாததால் ஒதுக் கீடு செய்ய வேண்டிய அவசியமில்லை. தேசிய உரிமங்கள் வழங்குவதில் பிற்படுத்தப்பட்டோருக்கும் ஒதுக்கீடு செய்வது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

**திரு. செ. செம்மலை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் பரிசீலனையில் இருப்பதாக அமைச்சரவர்கள் பதிலளித்தார்கள். அப்படி பிற்படுத்தப்பட்டவர்களுக்கு குறிப்பிட்ட சதவீதம் என்று தனி ஒதுக் கீடு இல்லை என்றாலும் நேஷனல் பெர்மிட் வழங்குகின்ற நேரத்திலே பிற்படுத் தப்பட்டவர்களைப் பற்றி அரசு கவனத்தில் கொள்கின்றதா ? இந்த ஆண்டு பஸ்களுக்கான தேசிய பெர்மிட் வழங்குகின்றபோது தனியார்களுக்கு அப்படிப் பட்ட பெர்மிட்டுகள் ஏதேனும் வழங்கப்பட்டதா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவரவர்களே, பிற்படுத்தப்பட்ட வர்களுக்கு என்று தனியாக ஒதுக்கீடு செய்கின்ற வழிமுறைகள் இதுவரை இல்லாத காரணத்தால்தான் அதுபற்றி கவனத்தில் கொண்டு செய்யப்பட வில்லை. ஆனால் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் பெர்மிட்டுகள் நிச்சயமாகக் கிடைத்திருக்கின்றது என்பதிலே மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஐயம் வேண்டாம். ஆனால் எதிர்காலத்திலே இதை இப்படிச் செய்வதற்குரிய வகையிலே அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கின்றது என்று ஏற்கெனவே சொன்னேன்.

[1982 மார்ச் 4

**திரு. வேடச்சந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** தலைவரவர்களே, தாழ்த்தப்பட்டவர்களுக்கு அப்படிப்பட்ட சலுகைகள் கொடுக்கப்படுவது பற்றி அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் அரசால் வழங்கப்படுகின்ற சலுகைகள் தவறான முறையிலே பயன்படுத்தப்படாமல் இருக்கின்ற வகையிலே அந்த சலுகைகளின் அடிப்படையிலே பெர்மிட்டுகளைப் பெற்றவர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அதாவது 5 ஆண்டு அல்லது 10 ஆண்டுகளுக்கு வேறு யாருக்கும் மாற்றக்கூடாது என்று அரசு ஆணை பிறப்பிக்குமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவரவர்களே, அப்படிப்பட்ட ஆணையை நாம் இதுவரை பிறப்பிக்கவில்லை. ஆனால் வாங்கிய உரிமங்களைத் தேவையான நல்ல காரியங்களைக் காட்டாமல் மாற்றிக்கொள்ள முடியாது என்று இருக்கின்ற சட்டம் எல்லோருக்கும் பொருந்துகின்ற வகையிலேதான் இருக்கின்றது. ஆகவே அதுவே போதும் என்று நாங்கள் நம்புகிறோம்.

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** தலைவரவர்களே, லாரிகளுக்காக நேஷனல் பெர்மிட் கேட்டு அப்ளிகேஷன் போட்டவர்களில் யார்யாருக்கு இதுவரை பெர்மிட் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்ற விவரம் அறிந்துகொள்ளப்படாமல் இருக்கின்றது. ஆகவே அரசு உடனடியாக அதை அறிவிக்க நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவரவர்களே, ஒரு வார காலத்திற்கு முன்பே அது அறிவிக்கப்பட்டுவிட்டதாகத்தான் நான் நம்புகிறேன். அப்படிப்பட்ட தகவல் வந்திருக்கின்றது. அப்படி அறிவிக்கப்படாமல் இருக்குமேயானால் அதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்து சொல்வார்களேயானால் நடவடிக்கை எடுக்கப்படும்.

Thiru V. KRISHNAMOORTHY : The Hon. Minister should be definte while answering questions. He should not presume things.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மூலக்கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை.

**திரு. அ. ரகுமான்கான் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பட்டியல் அறிவிக்கப்பட்டதாக சொல்கிறார்கள். அதிலே பல வழக்குகளில் ஆஜர் ஆகிய வக்கிலாகிய எனக்கே அது தெரிந்து அறிவிக்கப்படவில்லை என்றால், இப்படி அறிவிக்கப்பட்டதாக சொல்வது தவறான தகவல் என்று நினைக்கிறேன். அமைச்சர் அவர்கள் விளக்குவாரா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களோடு சேர்த்துக் கொண்டுதான் என்னையும் சொன்னேன். எனக்கு அப்படி தகவல் வந்தது என்ற நினைப்பில், அறிவிக்கப்பட்டதாக நம்புகிறேன்



1982 மார்ச் 4]

என்றுதான் சொன்னேன். நிச்சயமாக அறிவிக்கப்பட்டதாகச் சொல்லவில்லை, அதற்குள் அதை தவறான தகவல் என்று சொல்லிவிட வேண்டாம். நிச்சயமாக வேண்டுமானால், நாளையதினம் தெரிந்துக் கொண்டு வந்து தெரிவிக்கிறேன்.

**திரு. இ. கா. நல்லப்பன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தேசிய உரிமங்களை வழங்குகிறபோது, படித்து வேலையில்லாமல் இருக்கக் கூடிய பட்டதாரிகளுக்கு முன் உரிமை கொடுத்து வழங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்ய முன் வருமா என்று அறியவிரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோருக்கு தேசிய உரிமம் வழங்குவதிலே ஏற்பட்ட கேள்வி இது. அதிலே பல்வேறு வழிமுறைகளை வைத்திருக்கிறார்கள். அதிலே இதுவும் கூட வருகிறது என்று நம்புகிறேன்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோருக்கும் கொடுக்கப்படுமா என்பது குறித்து. இதுவரைக்கும் இந்தக் கேள்வி அரிசனங்களுக்கு தேசிய பெர்மிட் கொடுப்பது போல, அரிசன மக்கள், ஆதிதிராவிட மக்களுக்கு என்று இந்த தேசிய பெர்மிட்டுகள் எவ்வளவு கொடுக்கப்பட்டிருக்கிறது ? அப்படி கொடுக்கப்பட்டவர்களில் யாராவது அதை விற்பதற்கு முன் வந்திருக்கிறார்களா ? ஏனென்றால் அப்படி ஒரு கேள்வியை கனம் அங்கத்தினர் கேட்டார். அதுபோல் உண்டா என்று அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்டவர்களைப் பற்றிய கேள்வியாக இது இருப்பதால், ஆதி திராவிட மக்களில் எத்தனை பேருக்கு இந்த உரிமம் வழங்கப்பட்டிருக்கிறது என்பதற்கான விவரங்கள் என்னிடத்தில் இல்லை. ஆனாலும் தேசிய பெர்மிட்டுகளைப் பொறுத்தவரையில் 18 சதவீதம் ஒதுக்கீட்டை இவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. அதை வாங்கியவர்கள் யாராவது விற்றிருக்கிறார்களா என்ற கேள்விக்கே இடமில்லை. ஏனென்றால் அதை விற்பதற்கு யாருக்குமே உரிமை இடையாது. தேவையானால் சொந்தக்காரர்கள் யாருடைய பெயருக்காவது மாற்றலாமே தவிர, விற்பனை செய்ய முடியாது. அதற்கு யாருக்கும் உரிமை இடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண்கள் 356-ம், 358-ம் சேர்த்து எடுத்துக் கொள்ளப்பெறுகிறது. வினா எண் 357 இதிலேயே வேறு பொருள் பற்றியது என்பதால், இதை அதற்கடுத்து எடுத்துக் கொள்ள

[1982 மார்ச் 4

**பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம்.**

* **வினா எண் 356.—திரு. து. புருஷோத்தமன் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் மேலும் கப்பல்களை வாங்க ஏதேனும் செயற்குறிப்புள்ளதா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** ஆம்.

* **வினா எண் 358.—திரு. கு. ரமணி :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் கப்பல் கழகத்துக்குச் சொந்தமான கப்பல்கள் தற்பொழுது உள்ளனவா ?

(ஆ) ஆம் எனில் எத்தனை கப்பல்கள் உள்ளன ? எப்படிப் பயன் படுகின்றன ?

(இ) புதிய கப்பல்கள் ஏதாவது வாங்க திட்டமுள்ளதா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

(இ) ஆம்.

**திரு. து. புருஷோத்தமன் :** பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்திற்கு புதிய கப்பல் வாங்குவது பற்றிய கேள்வியைத்தான் நான் கேட்டேன். இதிலே அமைச்சர் அவர்கள் என்ன பதில் சொன்னார் என்பதை என்னால் புரிந்துக் கொள்ள முடியவில்லை. இந்த விவகாரத்தில் இரு வேறு கருத்துக்கள் நாட்டிலே செய்திகளாக வந்துக் கொண்டிருக்கின்றன. ஒன்று, நம்முடைய தமிழக அரசு இந்தக் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக கப்பல்களை வாங்குவதற்கு மத்திய சர்க்கார் அனுமதி மறுத்திருக்கிறது என்ற செய்தியும், அதற்கு மறுப்பு தெரிவிக்கிற முறையிலே, உலக அரங்கிலே கப்பலின் விலை 22 கோடி ரூபாயாக இருக்கும்போது, நம்முடைய சர்க்கார் அதனை 33.3 கோடி ரூபாய் விலையில் மேற்கு ஜெர்மனியில் இருந்து வாங்குவதற்கு ஒப்பந்தம் செய்திருந்தது என்றும், அதற்காகத்தான் மத்திய அரசு அதற்கு அனுமதி மறுத்திருக்கிறது என்றும் செய்தி வந்திருக்கிறது. ஆகையால் நான் கேட்கவிரும்புவது, உலக அளவிலே டெண்டர் கோரப்பட்டதா ? அதாவது க்ளோபல் டெண்டர்கள் கேட்கப்பட்டதா ? ஜப்பான், தென்கொரியா போன்ற நாடுகளில் ஒரு கப்பலின் விலை 22 கோடி ரூபாய் என்று மட்டுமே இருக்கிறபோது, 33.3 கோடி ரூபாய்



1982 மார்ச் 4]

விலையில் ஒப்பந்தம் செய்யப்பட்டது உண்மையா ? ஏற்கெனவே கப்பல் பேரம் குறித்து ஊழல் புகார்கள் விவகாரங்கள் இருக்கிறபோது, இவ்வாறு வாங்கவேண்டிய அவசியம் என்ன ? (கூச்சல்—குழப்பம்) இது குறித்து அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிப்பாரா அல்லது அறிக்கையாவது வைப்பாரா என்று அறியவிரும்புகிறேன் ?

(முற்பகல் 10-00)

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவா அவர்களே, ஒரு அறிக்கை வைப்பதை விட இப்போதே நான் விளக்கமாகச் சொல்கிறேன். கொஞ்சம் பொறுமையாகக் கேட்கவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். முதலில் சொன்னார்கள், என் கேள்விக்கு என்ன பதில் சொனனார்கள் என்று புரிய வில்லை என்று உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். வினா எண் 356-க்கும் வினா எண் 358(இ)-க்கும் இரண்டுக்கும் சேர்த்து ' ஆம் ' என்று சொன்னேன். எனவே வினா எண் 356-க்கு விடை ' ஆம் '.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக் கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மத்திய அரசாங்கத்தின் குழு நாம் பரிந்துரைத்த, தமிழக அரசால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு பரிந்துரைத்த அந்தக் கப்பலை வாங்க தடை விதித்திருப்பதாகவும் அதிலே சில குறைகளைச் சொல்லியிருப்பதாகவும் இங்கே எடுத்துச் சொன்னார்கள். நான் இன்னொன்றும் கூட இதோடு சேர்த்துச் சொல்ல விரும்புகிறேன். பத்திரிகைகளில் நானும் படித்தேன். ஏதோ மாநில அரசுக்கும் மத்திய அரசுக்கும் ஒரு மோதல் என்ற அடிப்படையில் ஒரு கருத்தைச் சொல்லியிருக் கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை இல்லை எனபதை நான் முதலில் தெளி வாக்கியாக வேண்டும். எதை வாங்கினால் இலாபகரமாக இருக்கும் அரசுக்கு என்பதை நாம் பரிசீலித்து சில அறிக்கைகளை நாங்கள் அங்கே வைத்திருக்கிறோம். அதிலே சிலவற்றை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்கான விளக்கத்தை நாங்கள் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். அதற் கான முழு விளக்கத்தையும் நான் இங்கே கொடுக்க விழைகிறேன்.

அங்கே 22 கோடி ரூபாயில் கப்பல் இடைக்கிறது என்று ஒரு கருத்தைச் சொன்னார்கள். நாம் இந்தக் கப்பல்வேண்டுமென்று சொல்லி வாங்க முயற்சி எடுக்கிறபோதே முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். உலக நாடு களிடத்தில், அத்தனையிடத்திலிருந்தும் இதற்கான விலைப் பட்டியல் பெறு வதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்க வேண்டும் ; அதே நேரத்தில் இடைத் தரகர்கள் எந்தக் காரணத்தைக் கொண்டும் இருக்கக்கூடாது என்ற கருத்தை முதல் அமைச்சர் அவர்கள் தெளிவாக, ஒரு கோப்பிலே எழுதினார்கள்.

[1982 மார்ச் 4

அதை அடிப்படையாக வைத்து நாம் இந்த க்ளோபல் டெண்டர் ( global
tenders ) கால்பார் செய்தோம். அப்படிச் செய்கிறபோது ஏறத்தாழ 26
நாடுகளில் உள்ள 113 கப்பல் தளங்களுக்கு நாம் நேரடியாகவே கடிதங்கள்
எழுதியுள்ளோம். இப்படி மனுக்கள், பார்ம்ஸ் அனுப்புகிறோம். அதிலே எங்கள்
தேவை என்ன என்பதைச் சொல்லியிருக்கிறோம், அதற்கேற்ப நீங்கள் விலைப்
பட்டியலைக் கொடுக்க வேண்டும் என்று சொல்லி எழுதியிருக்கிறோம். என்
அந்த 113 க்கு மட்டும் எழுதினோம் என்றால் இந்தக் கப்பல்தளங்களின் ஒரு
லிஸ்ட் வைத்திருக்கிறார்கள். இதில் 30,000 (முப்பதினாயிரம்) டன்னுக்கு
அதிகமாக ஏற்றக்கூடிய கப்பல்களை யார் யார் தயார் செய்து விற்றிருக்கிறார்
களோ அவர்களுக்கு எல்லாம் இந்தக் கருத்தை நாம் சொல்லியிருக்கிறோம்.

26 நாடுகளுக்கு 113 கப்பல் தளங்களுக்கு எழுதியதில் நமக்கு பதில்
40 கப்பல் தளங்களிலிருந்துதான் கிடைத்திருக்கிறது. ஜப்பானிலிருந்துகூட
8 கப்பல்தளங்கள் முடியாது என்று சொல்லி பதில் எழுதியிருக்
கிறார்கள். எனவே நாலே நாலு கப்பல்தளங்கள் இந்த இந்த விலைக்கு
நாங்கள் கொடுக்க முடியும் என்று அந்த விலைப் பட்டியலைக் கொடுத்திருக்
கிறார்கள். அந்த நான்கு கப்பல்தளங்கள் இங்கிலாந்து ஒன்று, வெஸ்ட்
ஜெர்மனி, யுகோஸ்லேவியா, பல்கேரியா. இந்த நான்கு கப்பல் தளங்கள்
நமக்கு கப்பல் கொடுப்பதற்கு ஒப்புதல் தந்திருக்கிறார்கள். இப்போது
மத்திய அரசினுடைய அந்தக் குழு 22 கோடிக்கு கிடைக்கிறது என்ற
கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இங்கேயும் 22 கோடிக்கு நமக்கு
கப்பல் கொடுப்பதாக ஒரு கப்பல்தளம் ஏற்றுக்கொண்டிருக்கிறது,
பல்கேரியாவிலிருந்து ; அதையும் இந்த அரசின் நிபுணர் குழு ஒப்புதல் அளித்
துள்ள இன்றையதினம் பரிந்துரைக்கின்ற ரூ 33 கோடிக்கு ஒரு ஜெர்மானிய
கப்பல், ரூ. 33 கோடி கப்பலை, இரண்டையும் ஒப்பிட்டுச் சொல்கிறேன்.
அதற்குப் பின் நீங்கள் கணக்கு போட்டுக்கொள்ளவேண்டும். பல்கேரியா
கப்பல் 22 கோடிக்குக் கொடுக்கமுடியும் என்ற கருத்தை அவர்கள் சொல்லி
நமக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதேநேரத்தில் நம்மால் பரிந்துரைக்கப்
பட்ட—இந்த நிபுணர் குழு பரிந்துரைத்திருப்பதை அப்படியே சொல்கிறேன்,
என் கருத்தல்ல, நிபுணர் குழு கருத்தை அப்படியே சொல்கிறேன். 33.33
கோடிக்கு கப்பல் கொடுக்கமுடியும் என்று சொல்லி ஜெர்மனியிலிருந்து ஒரு
கப்பல் தளம் நமக்குச் சொல்கிறார்கள். இவ்வளவு விலை வித்தியாசம் இருந்
தாலும் இந்த 22 கோடி கொடுத்து வாங்கக்கூடிய கப்பல் 24,200 டன் ஏற்றக்
கூடிய கொள்ளளவு கொண்டது. ஆனால் அந்த இடத்தின் ஆழம் 11.20
மீட்டர் இருக்கிற இடத்தில் மட்டும்தான் 24,200 டன்னை ஏற்ற முடியும். இந்த
33 கோடி ஜெர்மன் கப்பல் என்று சொல்லியிருக்கிறார்களே, அது ஏறத்தாழ
30,000 டன்னை 10.06 மீட்டர் ஆழமுள்ள இடத்தில் ஏற்றமுடியும். நமக்கு



1982 மார்ச் 4]

ஏற்றத்தைப்பற்றி பிரச்னையில்லை. காரணம், தூத்துக்குடி துறைமு
எட்டரை மீட்டர் ஆழம் மட்டும்தான் இருக்கிறது. எனவே அந்தயிட ந
கப்பலில் எவ்வளவு ஏற்றமுடியும் என்று கணக்கு பார்க்க வேண்டும். அப்
கணக்கு போடுகிறபோது—இது 33 கோடி விலை சொல்லியிருக்கிறார்க
வெஸ்ட் ஜெர்மனி கப்பல், அதில் 29,000 டன் நாம் ஏற்றமுடியும். அ
நேரத்தில் பல்கேரியா கப்பல், 22 கோடி சொல்கிறார்களே அதில் 24,000 ட
மட்டும்தான் ஏற்றமுடியும்.

இப்படி கணக்குப் பார்த்தால், நமக்கு ஓராண்டுக்கு தேவையான நிலக்
ஏறத்தாழ 20 இலட்சம் டன். இந்த 20 இலட்சம் டன்னை கொண்டு வந்
சேர்ப்பதற்கு, 22 கோடி ரூபாய் கப்பலாக இருந்தால், 4 கப்பல்கள் தேவை
இந்த 33 கோடி ரூபாய் கப்பலாக இருந்தால் 3 கப்பல்கள் போதும். எனவே
ஒட்டுமொத்தமாக இந்த 3 கப்பல்களின் மதிப்பை 100 கோடி என்று சொல்
யிருக்கிறார்கள். இந்த பல்கேரிய கப்பலின் விலை 22 கோடி என்று
கப்பல்கள் சேர்த்து விலை 88 கோடி ரூபாய்தான் ஆகிறது. அப்படியிரு
தாலும்கூட, இதிலே 12 கோடி வித்தியாசம் இருக்கிறதே என்று மாண்புமி
உறுப்பினர்கள் கேட்கலாம். இந்த 22 கோடி ரூபாய் கப்பலில் 4 கிரேன்க
தான் இருக்கும், இந்த 33 கோடி ரூபாய் கப்பலில் 6 கிரேன்கள் வருகிறது
நாம் ஒரு மணி நேரத்தில் 2 ஆயிரம் டன்னை கீழே இறக்க வேண்டியிரு
கிறது. இப்படி 20 இலட்சம் டன்னை, அங்கேயிருந்து இறக்க ஒரு ஆ
டிற்கு கணக்கு பார்க்கிறபோது, 1 டன்னை தூத்துக்குடித் துறைமுகத்திற்
கொண்டுவந்து சேர்ப்பதற்கு 22 கோடி ரூபாய் பல்கேரிய கப்பலில் ரூ. 1
செலவாகிறது. ஆனால், 33 கோடி ரூபாய் வெஸ்ட் ஜெர்மனி கப்பலி
ரூ. 123 செலவாகிறது. ஆக, இந்த வித்தியாசக் கணக்கைப் பார்க்க வேண்டு
இப்படி 20 லட்சம் டன்னை ஓராண்டிலே கொண்டு வந்து சேர்ப்பதிலே
கோடியே 40 லட்சம் ரூபாய் இந்த 22 கோடி கப்பல்களை வாங்குவதால் அதி
மாகச் செலவாகிறது. எனவே, இந்த 33 கோடி ரூபாய் வெஸ்ட் ஜெர்ம
கப்பலுக்கும், இந்த 22 கோடி ரூபாய் பல்கேரிய கப்பலு
கும் இடையே நமக்கு ஒரு ஆண்டிற்கு ரூ. 4.40 கோடி வித்தியாசம் ஏற்ப
கிறது. எனவே, 3 ஆண்டு காலத்தில் நாம் ரூ. 12 கோடி விலையாக அதிக
கொடுத்தும் தொகையை ஈடுகட்டி விட முடியும்.

இன்னொரு கணக்கையும் நான் சுலபமாகச் சொல்ல விரும்புகிறேன். 3
ஆண்டு காலத்திற்கு இந்தக் கப்பல்களைப் பயன்படுத்த முடியும் என்
நம்பிக்கையைச் சொல்லியிருக்கிறார்கள். அப்படி 30 ஆண்டுகளுக்கு கண
குப் பார்த்தால், ஓராண்டு காலத்திற்கு ரூ. 4.40 கோடி வீதம், ஏறத்தாழ 13
கோடி ரூபாய் அளவு இந்த 33 கோடி ரூபாய் கப்பல்களை வாங்குவதல்
மூலம் நமக்கு செலவு குறைய சாத்தியமுண்டு. எனவே, இந்த 33 கோடி

[1982 மார்ச் 4

**திரு. கு. ரமணி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வி மிகவும் குறிப்பான கேள்வி. அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற போது இல்லை என்று சொல்லிவிட்டார்கள். நான் தெரிந்து கொள்ள விரும்புவது கேள்வியில் கடைசி 'இ' என்பதில் புதிய கப்பல்கள் வாங்க ஏதாவது திட்டமுள்ளதா ? இதற்கு முதலிலே இல்லையென்று சொல்லி மற்ற கேள்விகள் எழவில்லை என்று சொல்லிவிட்டார். அது சரியல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பூம்புகார் கப்பல் கழகத்திற்கு கப்பல் இல்லை என்று சொல்லி, புது கப்பல் வாங்கப் போகிறோம் என்று சொல்லி இருக்கிறார். இரண்டையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** நான் விளக்கிவிடுகிறேன். முதல் கேள்வி, "பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்துக்குச் சொந்தமான கப்பல்கள் தற்போது உள்ளனவா" என்பது. நான் அதற்கு பதில் 'இல்லை' என்று சொன்னேன். அடுத்த கேள்வி "ஆம் எனில், எத்தனை கப்பல்கள் உள்ளன ? எப்படிப் பயன்படுகின்றன" என்பது. அதற்கு நான் 'இக்கேள்விக்கு இடமில்லை' என்று பதில் சொன்னேன். அதற்கு அடுத்த கேள்வி "புதிய கப்பல்கள் ஏதாவது வாங்கத் திட்டமுள்ளதா ?" என்பது. அதற்கு "ஆம்" என்று நான் பதில் அளித்திருக்கிறேன். அந்தவகையிலே தான் நான் பதில்களைச் சொல்லி இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கு. ரமணி :** இந்தக் கப்பல் ஆரம்பிக்கப்பட்டு பல வருடங்கள் ஆகி விட்டன. இந்தக் கழகத்திலே அதற்குச் சொந்தமான கப்பல்கள் எல்லாம் நீண்டநாட்களாக வைக்கப்படாமல் இருந்திருக்கின்ற ஒரு சூழ்நிலை இருக் கிறது. அப்படி இருந்ததற்கு என்ன காரணம் ? கப்பல் கம்பெனி என்று வைத்து அதிலே கப்பலே இல்லாத அளவுக்கு எப்படி வியாபாரம் செய்ய முடியும் ? அப்படியானால் வாடகைக்குத்தான் கப்பல்கள் வாங்கி விடப்படு கின்றனவா ? ஏன் இந்த நிலை ஏற்பட்டது ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** அப்படி நீண்டநாட்களாக இருந்தது என்று சொல்ல முடியாது. 1981 ஆம் ஆண்டு இரண்டாவது மாதத்திலே ஒன்றை விற்றிருக்கிறோம், இன்னொன்று 1980 ஆம் ஆண்டு விற்கப்பட்டிருக் கிறது. அதனால் இப்போது வாடகைக் கப்பல்களைப் பயன்படுத்தி வருகின்றோம். கப்பல்கள் வாங்க வேண்டுமென்பதால் தான் இங்கே இப்படிப் பட்ட விவாதத்தை நாம் நடத்திக்கொண்டிருக்கிறோம். இந்தக் கழகம் கப்பல் போக்குவரத்தை நடத்தவேண்டுமென்பதற்காகவும் கப்பல்களை வாங்க வேண்டுமென்பதற்காகவும் தான் இப்போது இங்கே அதுபற்றிப் பேசி கொண்டிருக்கிறோம்.



32 மார்ச் 4]

**திரு. கு. ரமணி :** கப்பல்களை வாங்கி இந்த கப்பல் கழகம் மாநில அரசுக்கு
ல்ல வேலைசெய்யவேண்டுமென்பதை ஏற்றுக்கொண்டுதான் அந்த நல்ல
ண்ணத்தை பரிபூரணமாக வரவேற்று அதைப் பலப்படுத்துவதற்காகத்தான்
ரம் கேள்விகளை கேட்கிறோம். இந்தக் கப்பல் கழகத்தில் இன்றையவரையில்
ட்டை உடைசல் இல்லாத புதுக்கப்பல்களை வாங்காமல் கப்பல்
ாழ்க்கைக்காலத்திலே முக்கால்வாசி முடிந்துபோய் உள்ள கப்பல்களை
ாங்குவதால்தான் இப்படி ஏற்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமை
இல்லாமல் இனிமேல் புதுக் கப்பல்களை வாங்கி, வாடகைக் கப்பல்களையே
ரயன்படுத்திக்கொண்டிராமல் சொந்தமாக புதுக்கப்பல்களை வாங்கி
விடுவதற்கு திட்டவட்டமாக அரசு முடிவெடுக்குமா ? இந்தப் புதுக்கப்பல்களை
எப்போது வாங்கப் போகிறார்கள் ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** பழைய கப்பல்களினால் என்ன ஏற்பட்
டது என்பதற்குள்ளேயெல்லாம் நான் போகவில்லை. புதிய கப்பல்கள்
தேவை என்பதால்தான் இவ்வளவு பெரிய ஏற்பாடுகளை இவ்வளவு இக்கட்
டான சூழ்நிலையில், எதிர்ப்புக்களுக்கிடையே செய்து கொண்டிருக்கிறோம்.
எப்போது செய்யப்படும் என்று கேட்கிறார்கள். மத்திய அரசு என்று
அனுமதிக்கிறார்களோ அன்று அது முடிந்துவிடும்.

**திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீபு :** ஸ்பீக்கர் சார், உலகத்திலே சில சிக்க
லான வியாபாரங்கள் இருக்கும் என்றால் அதில் கப்பல் வியாபாரம் ஒன்று.
இங்கே எவ்வளவோ நாம் நம்முடைய பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பரேஷனிலே
ஓட்டினாலும் லாஸ் ஏற்பட்டது. கேரளாவிலேகூட அவர்கள் ஓட்டி இப்
போது மூடிவிட்டார்கள் என்று தெரிகிறது. கர்நாடகத்திலேயும் அதே சூழ்
நிலை இருந்து வருகிறது. இப்போது அமைச்சர் அவர்கள் சில புள்ளிவிவரங்
களைக் கொடுத்தார்கள். பல்கேரியா கப்பல் 27 கோடி ரூபாய் என்றும்
10.6 மீட்டர் வாங்குவதற்கு 30 கோடி ரூபாய் ஆகும் என்றும் கணக்குக்
கொடுத்தார்கள். ஒரு மீட்டர் என்றால் கிட்டத்தட்ட மூன்றே கால் அடி
வரும். அதனால் ஒன்றும் மூழ்கிப்போகாது. 1,700 டன் வரும். இப்போது
சிலம்ப் (Slump) இருப்பதன் காரணமாக புது கப்பல்கள், 3, 4 வருடங்கள்
சர்வீஸ் உள்ள கப்பல்கள் 20, 25 கோடி ரூபாய்க்கு நன்றாகக் கிடைக்கிறது.
அரசாங்கம் அதை அறியவேண்டும். யார் மூலமாக இந்த டீல் ஏற்படுத்
தினார்கள். பம்பாயிலே பல பெரிய கம்பெனிகள் இருக்கிறார்கள், அவர்களின்
மூலமாகச் செய்கிறார்களா அல்லது புரோக்கர்கள் மூலமாக ஏற்படுத்தினார்
களா ? எப்படி இருந்தாலும் இந்த கப்பல் வாங்குகிறபோது நல்ல தேர்ச்சி
பெற்ற குழு அமைத்து அதன்மூலமாக வாங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன். 30 கோடி ரூபாய்க்கு வாங்குவது என்றால் அது ரொம்ப

கப்பல்களை, இப்பொழுது கப்பல் ஒன்றுக்கு 33 கோடி ரூபாய் என்று போட்டு வாங்குகின்ற சமயத்திலும் சரி கையாளப்பட்ட முறைகள் ஒரேமாதிரியாகத்தான் இருக்கிறது. நான் பத்திரிகையிலே படித்தேன், அமைச்சரவர்கள் அதைச் சொல்லவில்லை. இந்தக் கப்பல் வாங்குகின்ற விஷயத்தில் தமிழ்நாடு அரசாங்கம் அந்தக் கப்பலை சப்ளை செய்யக் கூடியவர்களோடு ஒப்பந்தம் முடித்து விட்டதாக அக்ரிமென்ட் போட்டு விட்டதாகப் பத்திரிகையில் வருகிறது. இப்படி வரு வதற்கு முன்னதாகவே மத்திய அரசாங்கத்தோடு இப்படி நாங்கள் செய்யப் போகிறோம், இப்படி வாங்கப் போகிறோம் என்று பூர்வாங்கமாகக் கலந்து ஆலோசித்து அதற்குப் பிறகு அக்ரிமென்ட் ஏன் போடவில்லை. அப்படிப் போட்டிருந்தால் இந்தப் பூம்புகார் கப்பல் தரை தட்டாமல் இருந்திருக்கும் அல்லவா? இந்தப் பிரச்னை தரை தட்டாமல் கப்பல் வந்திருக்கும் அல்லவா? எனவே, இதுபற்றி மத்திய அரசாங்கத்தோடு தமிழ்நாடு அரசாங்கம் பேசி யதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன், கப்பல் வாங்குவதற்காக நாம் எடுத்த நடவடிக்கைகளிலே மத்தியக் குழு இப்பொழுது நம்மிடத்தில் எந்தத் தவறையும் சொல்ல வில்லை. தவறையும் சொல்லவும் முடியாது. அவர்கள் சொல்லியிருப்ப தெல்லாம், இதைவிடக் குறைந்த விலைக்குக் கிடைப்பதாக நாங்கள் அறி கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். நாம் வாங்குவதற்காக பின்பற்றிய முறையை நான் ஏற்கனவே சொன்னேன். நாம் எல்லா உலக நாட்டு கப்பல் தளங்களிலிருந்து விலைப் பட்டியலைக் கேட்டோம். Global tenders— ஐ நாம் Call f r செய்தோம். அதிலே யார் யார் கொடுத்திருக் கிறார்கள், யார் யார் கொடுக்கவில்லை என்பதைப்பற்றி நாம் பரிசீலிக்க முடியாது. கொடுக்காதவர்களை நாம் போய்க் கேட்க முடியாது. எனவே அவர்கள் எங்கே பார்க்காமல் விட்டுவிடுவார்களோ, பத்திரிகையைப் பார்க்காமலே விட்டு விடுவார்களோ என்பதற்காக 113 கப்பல் தளங்களுக்கு நாம் நேரடியாகக் கூட அந்தக் கடிதங்களை அனுப்பி வைத்திருக்கிறோம். எனவே, அவர்கள் போடாமல் இருந் திருந்தால் நம்முடைய தவறு அல்ல: இன்றையதினம் ஜப்பான் நாட்டிலே யிருந்து கேட்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ஜப்பான் நாட்டுக்கு மட்டும் 35 கப்பல் தளங்களுக்கு நாம் கடிதம் எழுதியிருக்கிறோம். 5 கப்பல் தளங்கள்தான் திருப்பி நமக்குப் பதிலைச் சொல்லியிருக்கிறார்கள். எங்களால் கொடுக்க முடியாது என்ற பதிலைச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, செய்த முறையிலே எந்தவிதமான தவறையும் யாராலும் சொல்ல முடியாது. அந்த அளவிற்கு முறை சரியாக . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினாவர்கள் கேட்பது, மத்திய அரசாங்கத்தோடு நீங்கள் தொடர்பு கொண்டீர்களா என்பது. அதற்கு மட்டும் பதில் சொன்னால் போதும்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவரவர்களே, ஒரு திட்டத்தைப் பற்றி யோசிக்கும்பொழுது மத்திய அரசாங்கத்தினிடத்தில் போய்ச் சொல்லி விட்டு வர முடியாது. அதை எப்படிப்பட்ட முறையிலே பரிசீலித்திருக்கிறோம், யார் யார் என்னென்ன விலைக்குக் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள் என்பதை நாம் அங்கே அனுப்புகிறோம். ஆனால் ஏற்கனவே கப்பல் வாங்குவதற்காக முயற்சிகள் இருந்து கொண்டிருந்த காரணத்தால் மத்திய அரசாங்கத்தினிடத்திலே தனியாகப் போய் இதைப்பற்றி விவாதிக்க வேண்டிய அவசியமில்லை.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பூம்புகார் ஷிப்பிங் காப்பரேஷன் தற்போது வாடகைக்குக் கப்பல்களை வாங்கி இயக்கிக் கொண்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். ஜெர்மானியக் கப்பல்களை வாங்க உத்தேசித்திருக்கின்ற இந்தக் கப்பல்களை வேண்டாமென்று சொல்லி கோரிய கப்பல்களை வாங்க சொல்லுகின்ற மைய அரசு நிறுவனம் நாம் வாடகைக்குப் பெற்றுக்கொண்டிருக்கின்ற நிறுவனத்திற்கு ஜெர்மானிய அரசாங்கத்தில் இருக்கின்ற கப்பல்களை வாங்க நிதி உதவி செய்து இருக்கிறது என்கிற விஷயம் உண்மையா ? மேலும் தமிழகத்தில் இயங்கி வருகின்ற பூம்புகார் ஷிப்பிங் காப்பரேஷன் ஜெர்மானியக் கப்பல் கம்பெனியோடு பெற்றிருக்கின்ற தொழில் நுட்ப விஷயங்களையும், அதனுடைய டிசைன் முறைகளையும் கொரியா நாட்டுக் கப்பல் நிறுவனத்திற்குக் கொடுக்க வேண்டுமென்று மைய அரசு நிறுவனம் தமிழ்நாடு நிறுவனத்தைக் கோரியுள்ளதா என்கின்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட தகவல் இங்கே எதும் இல்லை. அவர்கள் வாங்குகிறார்களா ? வாங்க ஏதாவது திட்டம் இருக்கிறதா என்பதைப்பற்றி என்னிடத்திலே எந்தவிதமான விளக்கமும் இல்லை.

**திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, தமிழக அரசு பூம்புகார் நிறுவனத்திற்காக கப்பல்கள் வாங்குகிற முயற்சியிலே ஈடுபடுகிற பொழுது, கப்பல்களை வாங்குவதற்கு இறுதியாக, முடிவாக, மத்திய அரசின் சார்பிலே அனுமதி கிடைத்தாக வேண்டுமென்ற அடிப்படையை அறியும். எனவே, அப்படி வாங்குவதற்கு அனுமதி கேட்பதற்கு முன்னர் எந்த வகையிலேனும் ஜெர்மனி நாட்டோடு அல்லது ஜெர்மனிய கம்பெனியோடு ஒரு ஒப்பந்தத்திற்குத் தமிழக அரசு வந்திருக்கிறதா ? அல்லது பூம்புகார் காப்பரேஷன் அக்ரிமெண்ட் என்ற





முறையில் ஏற்கனவே ஏதாவது அக்ரிமென்டுக்கு வந்திருக்கிறதா ? அல்லது மத்திய அரசு அனுமதி கொடுத்ததற்குப் பின்னர்தான் கப்பல் வாங்குவத கான அக்ரிமென்ட் செய்யக்கூடிய அந்த நிலையிலே இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, ஏற்கனவே ஒரு முறை இந்தக் கப்பலை வாங்க நாம் முயற்சி எடுத்தபொழுது, அதை மத்திய அராரங்கத்திடம் சொல்லி, அதன்மீது நாம் நடவடிக்கை எடுத்தோம். இது இரண்டாவது முறையான முயற்சி. எனவே, அப்படி எடுக்கிறபொழுது இந்த ஜெர்மானியக் கப்பலின் விலைப்பட்டியலைப் பற்றி நாம் சொல்லவில்லை ஆனால், இங்கே வந்த பின்பு, அந்த விலைப் பட்டியலை வைத்து எது இலா கரமாக இருக்கும் என்பதை நமக்கேற்ப நாம் ஆராய்ச்சி செய்து அந்த கருத்தை மத்திய அரசாங்கத்தினுடைய குழுவிடத்திலே நாம் சொல் இருக்கிறோம். அவர்கள் அந்த விலையைப் பற்றித்தான் இப்பொழுது சொல்லிக் கொண்டிருக்கிறார்களே ஒழிய, ஏன் அனுமதி கேட்கவில்லையென்று அதைப்பற்றி அவர்கள் சொல்லவில்லை. ஏற்கனவே நாம் கேட்டிருக்கிறோம் (குறுக்கீடுகள்).

* **திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, நான் கேட்ட கேள்வி ஏற்கனவே தமிழக அரசின் சார்பில் பூம்புகார் கார்ப்பரேஷன் ஏதேனும் ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறதா ? ஒப்பந்தம் எதும் செய்யப்படாமல், மேலே, மத்தியிலே உள்ள கப்பல் வாங்குவது சம்பந்தமான அந்தக் குழுவினிடத்திலே அனுமதி கேட்டிருக்கிறதா ? ஒப்பந்தம் செய்துகொண்டபின் அனுமதி கேட்கிறதா ? என்றுதான் நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, நாம் இங்கேயிருந்து விலைப் பட்டியலைக் கேட்கும்போது, இந்த விலைப் பட்டியல் குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும்தான் செல்லும் என்று அவர்கள் கொடுக்கிறார்கள். அதற்குள்ளாக நாம் அனுமதியைப் பெறமுடியாது. எனவே, நாம் என்ன செய்கிறோம் என்று சொன்னால், மத்திய அரசாங்கம் அனுமதியைக் கொடுத்தால் இந்த விலைக்கு நீங்கள் தருவதற்கு ஒப்புதல் தருகிறீர்களா என்று, நேரடியாக அவர்களை அழைத்துப் பேசி, அவர்களிடத்திலே ஒப்புதலை வாங்கியிருக்கிறோம். அந்த ஒப்பந்தத்தை நாம் ஏற்படுத்தியிருக்கிறோம். மத்திய அரசாங்கம் அனுமதி அளிக்கவில்லையென்று சொன்னால், அந்த ஒப்பந்தம் செல்லாது. எனவே, மத்திய அரசு அனுமதி அளித்தால் மட்டும்தான் அந்த ஒப்பந்தம் செல்லக்கூடியதாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசு நடத்துகிற பொது நிறுவனங்கள் 'குளோபல் டெண்டர்கள்' கேட்பதற்கு உரிமையுண்டு. அந்த குளோபல் டெண்டர்களைப்

ார்த்து ஏற்றுக் கொள்வதற்கு மாநில அரசிற்கு உரிமை உண்டு. அதற்கு ண்டிய அன்னியச் செலாவணிக்கு மட்டும்தான் மத்திய அரசுக்கு எழுது றோம். பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் பொறுத்தவரையில் ஷிப்பிங் டெவலப்மெண்ட் பண்டிலே நிதி கொடுப்பார்கள், அதற்காக எழுதி ருப்பார்கள். ஆகவே, உலகம் முழுவதும் நாம் டெண்டர் கேட்டு, அதிலே முடிவு எடுக்கிற உரிமை, மாநில அரசுக்கு இருக்கிற உரிமை. அதை நாம் த்திய அரசிற்கு விட்டுவிடுவோமானால், அதற்குப் பிறகு குளோபல் டென் டர் கேட்பதிலே பயனில்லை. அவர்களே, எல்லாம் செய்யலாம். இது தான் மாநில சுயாட்சி என்றால் அதை யார் தான் ஏற்றுக்கொள்வார்களோ தெரியவில்லை.

* **திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்களுக்கு எந்த அளவு மாநில சுயாட்சியிலே அக்கறை இருக்கிறதோ அதைவிடக் குறைவாக, என்னைப் பொறுத்தவரை யில் இருக்காது என்பது அவருக்குத் தெரியும். ஆனால், வெளிநாட்டுச் செலாவணி சம்பந்தம் இல்லாமல் கப்பல் வாங்குகிற காரியம் நடைபெறாது. வெளி நாட்டுச் செலாவணியை அனுமதிக்க வேண்டிய அந்த அதிகாரம் எப்படியோ மத்திய அரசாங்கத்திடம் இருக்கிறது. எனவே, மத்திய அரசாங் கத்திலே அந்த அதிகாரம் இருக்கிற காரணத்தால்—அந்த அதிகாரம் இன் னும் மாற்றப்படவில்லை, இந்த ஆட்சி வந்ததற்குப் பின்னாலும் கூட அந்த அதிகாரம் மாற்றப்பட்டு விட வில்லை—அவர்கள் அனுமதித்தால்தான் வாங்க முடியும் என்ற நிலைமையிருக்கிற பொழுது, ஒருவேளை ஏதேனும் சில காரணங்களால், ஏற்கனவே ஒப்பந்தம் ஆகிவிட்டதா ? எந்த வகையிலேனும் தமிழக அரசு பாதிக்கப்படக்கூடிய வகையில் ஆகிவிட்டதா, என்பதுதான் என்னுடைய கேள்வியை தவிர, அதற்கு போக்குவரத்து அமைச்சர் சொன்ன பதிலில் ஓரளவு நியாயமான விளக்கம் இருந்தது. அந்த விளக்கப்படி நாங்கள் ஒப்பந்தம் செய்து கொண்டாலும், மத்திய அரசு ஏற்றுக் கொள்ளா விட்டால், அது செல்லாது என்ற அடிப்படையினை, அவர்கள் ஒத்துக் கொண்டு சொல்லியிருக்கிறார். அந்த அளவிலே அந்த விடை தெரிந்து விட்டது. இடையில், அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் பதில் சொன்ன காரணத்தால் தான், இந்த விளக்கத்தைச் சொல்ல வேண்டியவனானேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திராவிட முன்னேற்றக் கழகத்திலே, மூன்று பேரை அனுமதித்திருக்கிறேன். அக்கட்சியின் துணைத் தலைவர் பேசி யிருக்கிறார். அதற்கடுத்த தலைவர் பேசியிருக்கிறார். இன்னொருவர் பேசி இருக்கிறார். (கூச்சல்—குறுக்கீடுகள்) இதற்காக 30 நிமிடங்கள் செலவாகி இருக்கின்றது. திரு. ப. நெடுமாறன், (கூச்சல்—குறுக்கீடுகள்)



**திரு. எஸ். ஆண்டித் தேவர் :** ஒரு தவறான முன்மாதிரி ஏற்படும்விட சொல்ல கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். நான் பேராசிரியருக்காகச் கூடாது. வில்லை. பெரிய கட்சிகள், சிறிய கட்சிகள் என்று பார்க்கக் அவர்களுக்கு ஒரே கேள்வியிலே நான்கு முறை பேச அனுமதித்திருக்கிறீர்கள். காலையிலிருந்து நெடுமாறன் கையைத் தூக்கிக் கொண்டிருக்கிறார், அவரை, நீங்கள் அனுமதிக்கவில்லை. இது தவறான முன் மாதிரியாகும்.

**திரு. அ. ரகுமான்கான் :** கேள்விகளைச் சேர்த்து எடுத்து இருக்கிறார்கள்.

(முற்பகல் 10-30)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஆண்டித்தேவருக்கு ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். நான் அனைவருக்கும்தான் வாய்ப்பு கொடுத்து இருக்கிறேன். புருஷோத்தமன் முதல் கேள்வி போட்டார் இரண்டாவது கேள்வியை திரு. ரமணி போட்டார். இரண்டு பேர்களுக்கும் நான்கு கேள்விகள் கொடுக்கப்பட்டன. அது முடிந்த பின்பு ஆளுங்கட்சியின் சார்பில் திரு. வி. பி. பாலசுப்பிரமணியத்திற்கு வாய்ப்பு தரப்பட்டது. பின்னர் திரு. ஹாஜாசெரீப் அவர்களுக்கும் அதன் பிறகு திரு. வி. கிருஷ்ணமூர்த்திக்கும் வாய்ப்புகள் தரப்பட்டன. அதன் பிறகு எதிர்க் கட்சித் துணைத் தலைவர் என்ற முறையில் பேராசிரியர் அவர்களுக்கு வாய்ப்பு தரப்பட்டது. இப்போது திரு. நெடுமாறன் அவர்களை அழைத்திருக்கிறேன். இத்துடன் இந்தக் கேள்விக்கு 30 நிமிடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளது. கேள்வி கேட்டவர்களைத் தவிர, மற்றவர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கின்றது. கேள்வி கேட்டவர் களுக்கு முன்னுரிமை தரப்படும். அதிலே எந்த தயவு தாட்சண்யமும் கிடையாது.

**திரு. ப. நெடுமாறன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு அரசு புதிதாக கப்பல்கள் வாங்காமல் பம்பாயில் உள்ள நிறுவனம் ஒன்றில் குத்தகைக்கு பெற்றுக் கொள்ளவேண்டும் என்று மத்திய அரசு தமிழக அரசாங்கத்தை நிர்ப்பந்தம் செய்வது உண்மையா? அதன் விளைவாக தமிழக அரசாங்கத்திற்கு அதிகமான நஷ்டம் வரும் என்பது உண்மையா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, அப்படி மத்திய அரசாங்கத்தினுடைய வேறு கப்பல்களை எடுத்து நாம் பயன்படுத்தினால் நிச்சயம் நஷ்டம் வரும். பதினொன்று கோடி ரூபாய் நஷ்டம் வரும் என்று நான் ஏற்கனவே சொல்லி இருக்கிறேன். ஆனால் நம்மை நிர்ப்பந்தம் படுத்தி யிருக்கிறார்கள் என்ற தகவல் இங்கே இல்லை.

* **வினா எண் 357—திரு. என். எஸ். வி. சித்தன் மற்றும் திரு. நா. பழனிவேல் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பரேஷனில் கழிந்த இரண்டு ஆண்டுகளில் ஏற்பட்ட நட்டம் எவ்வளவு ?

(ஆ) நட்டம் ஏற்படக் காரணங்கள் யாவை?

(இ) நட்டம் ஏற்படாது இருக்க எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** (அ)

| | | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|
| 1979–80 | இழப்பு .. .. .. | — 38.10 |
| 1980–81 | இலாபம் .. .. .. | + 22.51 |
| ஆக இரண்டாண்டில் மொத்த இழப்பு .. .. | | — 15.59 |

(ஆ) 1974-ல் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தால் வாங்கப்பட்ட "தமிழ் அண்ணா", "தமிழ்ப் பெரியார்" என்னும் கப்பல்கள், வாங்கும்போது சுமார் 17 வயதடைந்திருந்தன. இரண்டு கப்பல்களும் வயதடைந்திருந்ததாலும், செலவுமிக்க பழுதுகள் மிக அதிகமாக இருந்ததால் தேய்மானக் கணக்கில் கழகத்திற்கு ரூ. 9.33 இலட்சம் இழப்பு ஏற்பட்டது. 1979-80 ஆம் ஆண்டில் தேய்மானத்துடன் ரூ. 38.10 இலட்சம் இழப்பு ஏற்பட்டது.

(இ) 1974-ல் வாங்கப்பட்ட இரண்டு கப்பல்களும் வயதானதாக இருந்ததாலும், மேற்கொண்டு உபயோகப்படுத்த பழுதுபார்க்கும் செலவு அதிகமாக செய்ய வேண்டியிருந்ததாலும், இந்திய அரசு நிறுவனமான கல்கத்தாவிலுள்ள உலோக சிதைவு வாணிபக் கழகம் Metal Scrap Trade Corporation மூலம் சிதைவுக்கு விற்கப்பட்டன.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிக்க தலைவர் அவர்களே, இந்த பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பரேஷன் மூலமாக வாடகைக்குக் கப்பல்களை அமர்த்தி, அதன் மூலம் நமக்குத் தேவையான நிலக்கரியை ஏற்றிவருவதற்கான நிலையில் நமக்கு ஏற்பட்ட நஷ்டம் அதிகமா? அல்லது நாமே கப்பல்களை வாங்கி அதன் மூலம் நிலக்கரியை ஏற்றிவருவதால் ஏற்பட்ட நஷ்டம் அதிகமா? இதன் விவரம் கூற இயலுமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, ஏற்கனவே நாம் விற்றுவிட்ட கப்பல்கள் வாங்குவதற்கு முன்னாலே வாடகைக்கு பெறப்பட்டதற்கான கணக்குகள் என்னிடத்திலே இல்லை. இந்த இரண்டு ஆண்டுகளுக்கான கணக்குகள்தான் இருக்கின்றன. அதற்கு முன்னாலே இருந்ததை ஒப்பிட்டுப் பார்த்து சொல்லும்படியான கணக்குகள் என்னிடத்திலே இல்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பரேஷன் அண்மையில் கப்பல் வாங்குவது சம்பந்தமாக மத்திய கப்பல் போக்குவரத்துக் கழகத்திற்கு எழுதிய



கடிதத்தின் விவரங்களையும், அதற்கு மத்திய கப்பல் போக்குவரத்துக் கழகம் எழுதிய பதில் விவரங்களையும்—அது மிக முக்கியமான விஷயமாக இருப்பதால்—சபையில் வைப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியைப் பொறுத்தவரையில், அதற்கும் இதற்கும் கொஞ்சம் கூட சம்பந்தம் இல்லை. அது தேவை என்று தனியாகக் கேட்டால், அதைப்பற்றி சிந்திப்பதற்குத் தயாராக இருக்கிறோம்.

### அரசு கட்டுமான பணிகளுக்கு வழங்கப்படும் தொகையை உயர்த்திக் கொடுக்கும் திட்டம்.

***வினா எண் 359—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு கதர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் அரசு கட்டுமானப் பணிகளுக்கு ஒப்பந்தக்காரர்களுக்கு தற்போது வழங்கப்படும் தொகை Rate உயர்த்திக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் :** பொதுப்பணித்துறையைச் சார்ந்த வட்டங்கள் அளவில், ஒவ்வொரு நிதி ஆண்டிற்கும் புதிய விலை விவரப்பட்டியல்கள் Shedule of Rates தயாரிக்கப்படுகிறது. ஒப்பந்தக்காரர்கள் அளித்திடும் விலை விவரங்கள் இத்துடன் ஒப்பிடப்பட்டு, ஒப்பந்தப்புள்ளியேற்கும் அதிகார வரம்பிற்கு உட்பட்டவாறு ஏற்றுக் கொள்ளப்படும். எனவே, ஒப்பந்தக்காரர்களுக்கு தற்போது வழங்கப்படும் தொகையை உயர்த்திக் கொடுக்கும் சூழ்நிலை ஏதும் எழவில்லை.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறை சார்ந்த கட்டுமானப் பணிகளை ஒப்பந்தக் காரர்கள் ஒப்பந்தம் கேட்டு எடுத்தபின்பு, அரசாங்கம் குறிப்பிட்டுச் சொல்கிற அந்தத் தேதிக்குள் அந்தப் பணிகளை முடித்துக்கொடுக்காமல், காலதாமதம் செய்கின்றனர். இதனால் அரசாங்கத்திற்கும் பெயர் கெடுகிறது. இதைத் தவிர்க்கும் வகையில் பொதுப்பணித் துறை கட்டுமானப் பணிகள், மற்றும் மிகமிக முக்கிய பணிகளை இந்த ஒப்பந்தக்காரர்களிடத்தில் கொடுக்காமல், அரசாங்கமே ஒரு தனி நிறுவனத்தின் மூலம் இந்தக் கட்டுமானப் பணிகளைச் செய்வதற்கு முன்வருமா? அத்தகைய செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் :** தலைவர் அவர்களே, ஒப்பந்தக்காரர்களின் இந்த நிலைமையின் காரணமாக பொதுப்பணித் துறைக்கு ஏற்பட்டு வருகிற அவப்பெயரைத் தடுக்கும் விதத்தில், தற்போது

அரசு ஒரு ஒப்பந்தக்காரருக்கு ஒரு வேலையை விடக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டால், அந்த வேலை முடிகின்ற வரைக்கும் அந்த ஒப்பந்தக்காரருக்கு வேறு வேலை கொடுக்கக்கூடாது என்ற நிலைமையை உருவாக்கியிருக்கிறோம். மேலும், வேலையில்லாமல் இருக்கும் பொறியியல் பட்டதாரிகள் கூட்டுறவு சங்கத்தை அமைத்து, அவர்கள் தங்களுக்கு அந்த வேலைவாய்ப்புகளை அளிக்க வேண்டுமென்று கேட்டு வருகிற காரணத்தால் அவர்களுக்கும் தருகின்ற வகையில் இந்தச் சூழ்நிலை மாற்றியமைக்கப்பட்டு வருகிறது என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஊராட்சி ஒன்றியங்களில் கால்நடை விரிவாக்க அலுவலர்களாக கால்நடை மருத்துவர்களை நியமிக்கும் திட்டம்.**

*** வினா எண் 360—திரு. ந. குலசேகரபாண்டியன், திரு. இரா. தாமரைக்கனி மற்றும் திரு. எஸ். ரெத்தினராஜ் :** மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியங்களில் (E. O. A. H.) கால்நடை விரிவாக்க அலுவலர்களாக கால்நடை மருத்துவர்களை நியமனம் செய்ய செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் நியமனம் செய்யப்படும் ?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** (அ) ஆம்.

(ஆ) ஊராட்சி ஒன்றியங்களில் (E. O. A. H.) கால்நடை விரிவாக்க அலுவலர்களாக கால்நடை மருத்துவர்களை நியமனம் செய்ய அரசு ஆணை எண் (நிலை) 2319, வேளாண்மை, நாள் 19—10—1981-ல் ஆணை பிறப்பித்துள்ளது. இவ்வாணை உயர்நீதி மன்ற தடை உத்தரவினால் செயல் படுத்தப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

**திரு. ந. குலசேகரபாண்டியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்பு இன்றைக்கு கிராமப்புறங்களில் இன்றியமையாததாக இருக்கிறது என்பதை உணர்ந்து, ஊராட்சி ஒன்றியங்களில் கால்நடை விரிவாக்க அலுவலர்களாக கால்நடை மருத்துவர்களை நியமிக்க அரசு உத்தரவிட்டபோதிலும், கோர்ட் தடைஉத்தரவு பிறப்பித்து இருப்பதால், அது சரிவர நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. ஆகவே, அந்தத் தடையை நீக்க அரசு சார்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ? அந்தத் தடையை விரைவில் நீக்கி, அந்த ஆணையை விரைவில் அமல்படுத்த அரசு முன்வருமா ?





**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** தலைவர் அவர்களே, நீதி மன்றத்தால் விதிக்கப்பட்டுள்ள தற்காலிக தடையை நீக்கக் கோரி அரசு சார்பில் மனு செய்துள்ளோம். இன்னும் தடை நீக்கப்படவில்லை. அந்த மனு மீதான விசாரணை 25—3—1982-ல் நடக்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி :** தலைவர் அவர்களே, அரசு எடுத்த முடிவு பிடிக்கவில்லை என்றால் தமிழக முதலமைச்சர் அவர்களிடத்திலோ அல்லது சமூக நல அமைச்சரிடத்திலோ கால்நடை ஆய்வாளர்கள் பேசி இருக்க வேண்டும். அதைவிடுத்து, முக்காடு ஊர்வலம், பிண ஊர்வலம் போன்று அரசு அதிகாரிகள் என்பதற்கே அவமானச் சின்னமாக இருக்கும், போராட்டம் நடத்திய அவர்களுக்குப் பாடம் கற்பிக்கும் வகையில் கால்நடை ஆய்வாளர் களின் சங்கத்தின் பதிவு உரிமையை ரத்து செய்ய அரசு ஆவன செய்யுமா

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு போட்ட உத்தரவுக்கு எதிராக கால்நடை ஆய்வாளர்கள் முக்காடு ஊர்வலம் நடத்தியதற்காக அவர்கள் மீது முறைப்படி என்ன நடவடிக்கைகளைக் கையாளவேண்டுமோ அதையெல்லாம் அரசு மேற்கொண்டு இருக்கிறது. அதற்காக அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

**திரு. எஸ். ரெத்தினராஜ் :** தலைவரவர்களே, ஒவ்வொரு ஒன்றியத்திற்குப் தனித்தனியாக கால்நடை மருத்துவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்களா ஒவ்வொரு ஒன்றியத்திலும் எத்தனை கால்நடை மருத்துவர்கள் இருக்கிறார்கள் ? இரண்டு, மூன்று ஒன்றியங்களுக்கு என்று இல்லாமல் ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் தனித்தனியாக மருத்துவர்களை நியமனம் செய்யும் உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** தலைவரவர்களே, ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் எத்தனை கால்நடை மருத்துவர்கள் இருக்கிறார்கள் என்ற விவரம் தற்போது என்னிடம் இல்லை. ஆனால் மொத்தமாக 1,243 கால்நடை மருத்துவர்கள் இருக்கிறார்கள், ஒவ்வொரு கால்நடை மருத்துவ மனைக்கும் கால்நடை மருத்துவரை போட்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—வினாவின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப்பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

இதில் அவை உரிமை மீறல் எவ்வாறு நிகழ்ந்துள்ளது என்பதைச் சுருக்க மாகக் கூறும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு மன்றத்தின் தலைவரவர்களே, சென்னை வானொலிக்கு எதிராக இந்த உரிமை மீறல் பிரச்சனையை நான் அவையில் எழுப்புகிறேன்.

1—3—1982 அன்று காலை கேள்வி நேரத்தின்போது சட்டமன்றத்திலே மாண்புமிகு அமைச்சர் திரு. இராஜா முகமது அவர்கள் கங்கை-காவிரி இணைப்புபற்றி விளக்கமான பதில் சொன்னபோது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் எழுந்து இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முதல் கட்ட நீரேற்று நிலையத்திற்கு இன்று இந்தியா முழுவதும் பயன்படும் மின்சாரம் தேவைப்படும் என்று அன்றைய மத்திய அமைச்சர் கே. எல். ராவ் அவர்கள் கருத்து தெரிவித்திருக்கிறாரே, ஆகவே இந்தத் திட்டத்திலே ஏதாவது மாற்றம் ஏற்பட்டிருக்கின்றதா என்று கேட்டார்கள். உடனே அமைச்சர் இராஜா முகமது அவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிடுவது உண்மைதான், எனவேதான் காவிரி-கோதாவரி இணைப்பு பற்றி இப்போது பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம் என்று பதில் சொன்னார்கள். நாட்டின் ஒரு நன்மையைக் கருதி எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன கருத்தை வேண்டும் என்றே சென்னை வானொலி நிலையத்தினர் 1—3—1982 மாலை 7.00 மணி ஒலிபரப்பில் சட்டமன்ற நிகழ்ச்சிகள் பற்றிக் குறிப்பிட்ட போது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்ட கேள்வியையும் அதற்கு அமைச்சர் சொன்ன பதிலையும் இருட்டடிப்பு செய்திருக்கிறார்கள். கேள்வி பதில் சம்பந்தமாக ஒரு பகுதியை மட்டும் சொல்லிவிட்டு மறுபகுதியை இருட்டடிப்பு செய்தது வேண்டுமென்றே திட்டமிட்டு உள்நோக்கத்தோடு செய்யப்பட்ட காரியமாகும். கங்கை-காவிரி இணைப்புத் திட்டம் சாத்தியம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்து காவிரி-கோதாவரி இணைப்பு பற்றி பரிசீலிக்கிறோம் என்று சொல்வது ஒரு அடிப்படை திட்டத்தைக் கைவிட்டு வேறு திட்டத்தைப் பரிசீலிக்கிறோம் என்று ஒரு புது திட்டத்தை அறிவிக்கிறார். ஆனால் வானொலி நிலையமோ கைவிடப்பட்ட திட்டம் பற்றிய கேள்வியை மட்டும் அறிவித்துவிட்டு அந்தத் திட்டத்தைப் பற்றி எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்ட கேள்வி, அதற்கு அவர்கள் வைத்த வாதம், அதற்குப் பின்னாலே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் சொன்ன பதில், திட்டம் இவைகளைப்பற்றி எல்லாம் சென்னை வானொலி நிலையம் வேண்டுமென்றே அரசியல் உள்நோக்கத்தோடு வானொலியிலே ஒலிப் பரப்பா மல் புறக்கணிப்பு செய்திருக்கிறது. இது வேண்டுமென்றே திட்டமிட்ட உ



உரிமையை மீறல் காரியமாகும். மக்களுடைய
நோக்கமாகும். சபையின் உரிமையை மீறல் நடைபெறுகின்றது. அப்படிப்
வரிப்பணத்திலேதான் வானொலி நிலையம் இயங்கக்கூடாது. ஆளும்
பட்ட ஒரு நிலையம் அரசியல் உள்நோக்கத்தோடு எதிரொலிக்கின்ற அமைப்பாக அது
கட்சியினருடைய கருத்துக்களை மட்டும் அவையினுடைய உரிமையை மீறிய காரியம்.
இருக்கக்கூடாது, எனவே இது முழுமையாக சொல்ல
எனவே கேள்வி-பதில் பற்றிச் சொல்கின்றபோது வெளியிட்டுவிட்டு மறு
வேண்டுமே தவிர, அதிலே ஒரு பகுதியை மட்டும் இருட்டடிப்பு செய்வது தவறு.
பகுதியை அரசியல் உள்நோக்கத்தோடு எனவே இதை உரிமை மீறல்
ஆனால் அப்படிச் செய்யப்பட்டிருக்கின்றது. விசாரிக்க வேண்டும் என்று கேட்டுக்
குழுவிற்கு அனுப்பி அவர்கள் இதுபற்றி
கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப் பிரச்சினை குறித்து வானொலி நிலையத்தாருக்கு எழுதி விளக்கம் கேட்டு பிறகு எனது தீர்ப்பை அளிக்கிறேன்.

## 5. ஒத்திவைப்புத் தீர்மானம்.

**வட ஆற்காடு மாவட்டத்தில் மின்தடை மற்றும் தூத்துக்குடி அனல் மின் நிலையம் இயங்காதது.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. பெ. சு. திருவேங்கடம் அவர்கள்
"வடாற்காடு மாவட்டம் திருவண்ணாமலை மின் திட்டத்தில் திருவண்ணா,
மலை, போளூர், காஞ்சி, நாயுடுமங்கலம், அவலூர்பேட்டை,
கீழ்பெண்ணாத்தூர், தண்டராம்பட்டு முதலிய துணை மின் நிலையப்
பகுதிகளில் அடங்கிய கிராமங்களில் சென்ற 27—2—1982-ல் இருந்து பெரிதும்
மின்தடை ஏற்பட்டுள்ளதால் பல்லாயிரம் ஏக்கர் நெற்பயிர் சாவியாகும் அபாய
நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க
வேண்டும்" என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்பு
கொடுத்துள்ளார்.

திருவாளர்கள் இல. பலராமன், கே. ஆர். சுந்தரம், ஈஸ்வரமூர்த்தி என்கிற
பி. சொரணம், ரா. கிருஷ்ணன், என். எ. பூங்காவனம், எஸ். ஆண்டித்தேவர்,
கே. எம். தங்கமணி, ஆர். சுந்தரமூர்த்தி, ப. சுந்தரம், ஆர். நவநீதகிருஷ்ண
பாண்டியன், எஸ். என். இராமசாமி, இ. முத்துராமலிங்கம், கே. நாராயண
சாமி, பாபு ஜனார்த்தனம், என். எஸ். வி. சித்தன் ஆகியோர் இதே பொருள்
குறித்தும், மேலும் தூத்துக்குடி அனல் மின்நிலையம் இயங்காதது குறித்தும்
விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டும் என்ற
தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர்;

## 2. அறிவிப்பு.

### திருத்தப் பெறும் விடைகளும் துறைக்கு அனுப்பப் பெறுதல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு அமைச்சர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்டு வினாக்களுக்கான விடைகள் பேரவைத் துறைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. இந்த விடைகள் தான் வினாக்கள் பேரவையில் கேட்கப்பட்டவுடன் பத்திரிகைகளுக்குக் கொடுக்கப்பட்டு வருகின்றன. சில சமயங்களில் பேரவையில் வினாக்கள் விடையளிக்கப்படுகையில் மாண்புமிகு அமைச்சர்கள் திருத்திய விடைகளை அளிக்கிறார்கள். அப்படி தாங்கள் ஏற்கெனவே அனுப்பிய விடைகளில் திருத்தம் இருக்குமானால் பேரவைத் துறைக்கு முன்னதாகத் தகவல் அளித்து, திருத்தப்பட்ட விடைகளையும் அனுப்பி வைப்பதுதான் முறையாக இருக்கும் என்பதை மாண்புமிகு அமைச்சர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 3. தகவல் கோரல்.

### (அ) பேரவையின் அலுவல் நேரம்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவரவர்களே, நம்முடைய மாமன்றத்திலே 1982-83 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. சனிக்கிழமை அன்று கட்சித் தலைவர்கள் பேசி, விவாதத்திற்கு பதில் அளிக்க இருக்கிறார்கள். எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில் இன்றைக்கு இரண்டாவது பிரதான எதிர்க்கட்சியாக இங்கே இருக்கிறது. அப்படி இருந்தாலும் நாள் ஒன்றுக்கு கட்சிக்கு ஒருவர் பேசுவது என்ற நடைமுறை இருப்பதால் பல உறுப்பினர்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. ஆகவே மாலை நேரத்திலும் அவைக் கூட்டத்தை நடத்தி, பல உறுப்பினர்களுக்குப் பேச வாய்ப்பு அளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

### (ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்.

**திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் :** தலைவரவர்களே, தூத்துக்குடியிலுள்ள அனல் மின்சார நிலையம் தீப்பிடித்ததன் காரணமாக இரண்டு, மூன்று நாட்களாக் வேலை செய்யவில்லை. அதனால் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மின்சாரம் பற்றிய ஒத்திவைப்பு தீர்மானம் இன்றைக்கு வருகிறது. உட்காருங்கள்.



**திரு. இரெ. இராசமாணிக்கம் :** சார், பாயிண்ட் ஆஃப் ஆர்டர். என்னுடைய தொகுதியில் பயங்கரமான கலவரம் ஏற்பட்டு, பல்லாயிரக் கணக்கான ரூபாய் சொத்துக்கள் சூறையாடப்பட்டிருக்கின்றன. பலர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதுபோன்ற பிரச்சனைகளை இப்படி திடீரென்று எழுந்து கேட்டால் எப்படி பதில் சொல்ல முடியும்? ஏதாவது பொதுப் பிரச்சனையாக இருந்தால் சொல்லலாம்.

**திரு. பொ. உத்திராபதி :** தலைவரவர்களே, நேற்றிலிருந்து இராஜபாளையத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாடு நடக்கிறது. அங்கே மக்களுக்கு குடிப்பதற்குக்கூட தண்ணீர் கிடைக்கவில்லை. சாப்பிட்டுவிட்டு, கை கழுவுவதற்கும்கூட தண்ணீர் இல்லை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதைப்பற்றி சட்டசபையில் கேட்க வேண்டியதில்லை ; அங்கே இருக்கிற நகராட்சியில் சொல்லலாம்.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** தலைவரவர்களே, நான் 2, 3 உரிமைப் பிரச்சனைகள் கொடுத்திருக்கிறேன் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதைப்பற்றி அறையில் வந்து கேளுங்கள்.

## 4. உரிமைப் பிரச்சினை.

### வானொலி மீது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் 246-வது விதியின்கீழ், "வானொலி" மீது அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சனையைப் பேரவையில் எழுப்ப என் இசைவைக் கேட்டு மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ரகுமான்கான் அவர்கள் ஒரு முன்னறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இப்பிரச்சனையைப் பேரவையில் எழுப்ப என் இசைவை அளிக்கிறேன்.

"சென்னை வானொலி நிலையம் 1-3-1982 அன்று மாலை 7.00 மணி ஒலிபரப்பில் சட்டமன்ற நிகழ்ச்சியைப் பற்றி குறிப்பிட்டபோது எதிர்க் கட்சித் தலைவரின் கேள்வியையும் அதற்கு அமைச்சர் சொன்ன பதிலையும் இருட்டடிப்புச் செய்து இருக்கிறது. கேள்வி-பதில் சம்பந்தமாக ஒரு பகுதியைச் சொல்லிவிட்டு மறுபகுதியை இருட்டடிப்பு செய்வது வேண்டுமென்றே திட்டமிட்டு உள்நோக்கத்தோடு செய்யப்பட்ட காரியம் ஆகும். இது அவையின் உரிமையை மீறிய செயலாகும். எனவே, இதனை உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டுகிறேன்" என்று திரு. ரகுமான்கான் அவர்கள் தன் முன்னறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி திரு. பெ. சு. திருவேங்கடம் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே கொடுத்திருக்கின்ற இந்த அறிவிப்பின்படி இன்றையதினம் வடஆர்க்காடு மாவட்டத்திலே இருக்கின்ற விவசாய மக்கள் தங்களுடைய நெற்பயிரின் பலனைப் பெற முடியாத அவல நிலைமைக்கு ஆளாகி இருக்கின்றார்கள். மின்சாரத் துறையின் பட்ஜெட்டின் மீது நான் பேசும்போதுகூடச் சொன்னேன். இந்த மாநிலம் மின்சாரப் பற்றாக்குறை மாநிலம், ஆகவே இப்படிப்பட்ட கால கட்டங்களிலே மற்ற மாநிலங்களிலே தொழில் துறைக்கு மின்வெட்டைக் கொண்டு வந்து விவசாயத்தைக் காப்பாற்றி இருக்கிறார்கள். நீங்களும் அந்த அடிப்படையிலே விவசாயிகளைக் காப்பாற்றுங்கள் என்று நான் அப்போதே சொன்னேன்.

மேலும் தமிழகத்திலே மின்சார வெட்டு பற்றி அபாய அறிவிப்பு வருகின்றது என்று சொன்னால் முதலிலே திருவண்ணாமலையில்தான் சிவப்பு விளக்கு எரிகின்றது என்று சொன்னேன். அதேபோன்று 26, 27 தேதிகளில் துணை மின் நிலையம் இருக்கின்ற எல்லா பகுதிகளிலும் அபாய அறிவிப்பு வந்து மின்சாரம் வழங்குவது தடைப்பட்டிருக்கின்றது. நான் 28 ஆம் தேதி

(முற்பகல் 10.50)

என்னுடைய கிராமத்திற்கு சென்றிருந்தபோதுகூட பல்வேறு விவசாயிகள் வந்து தங்களுடைய நிலைமைகளை என்னிடத்திலே சொன்னார்கள். நானும் நேரிலேயே கண்கூடாகப் பார்த்தேன். திருவண்ணாமலையில், கலசப்பாக்கத்தில் இன்னும் போளூர், செய்யாறு, திருப்பத்தூர் போன்ற பல இடங்களிலும் இதே நிலைமை ஏற்பட்டு அந்த இடங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. 28 ஆம் தேதி நான் போய் பார்த்துவிட்டு வந்ததற்குப் பிறகு, 1 ஆம் தேதியன்று எனக்குப் பல தந்திகள் வந்தன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலேகூட நான் இதனை எடுத்துச் சொல்லி, அந்தத் தந்திகளை, இந்தக் கோட்டையிலே அவரிடத்திலே கொடுத்தேன். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களிடத்திலேகூட நேரிலேயே சொன்னேன். நிலைமை இன்னும் சீர்செய்யப்பெறவில்லை என்றுதான் தெரிகிறது.

நான் 2 ஆம் தேதிதான் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்தேன். இன்றையதினம்கூட எங்களுக்கு வருகிற தகவல்களில் 40 நிமிடம் நான் மொத்தமாகவே நேற்றையதினம் மின்சாரம் வந்தது, அதிலே மின்சார





மோட்டார்கள் இயங்க முடியவில்லை என்று இருக்கிறது. திருவண்ணாமலை, போளூர் கலசப்பாக்கம் போன்ற பகுதிகளில் எல்லாம் இதே நிலைமை ஏற்பட்டு விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது. இது மிக மிக முக்கியமான பிரச்சனை. ஆனால் இத்தகைய முக்கியப் பிரச்னையில் அரசாங்கம் அக்கறை காட்டவில்லையே என்பதை பார்க்கிறபோது நாங்கள் எல்லாம் மிகவும் மனவருத்தப்படுகிற சூழ்நிலைதான் ஏற்படுகிறது. நான் கேட்க விரும்புவதெல்லாம் மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள், அந்தப் பாதிக்கப்பட்டிருக்கிற பகுதிகளுக்கு ஒழுங்காக மின்சாரம் தரப்போகிறாரா இல்லையா ? அந்தப் பயிரைக் காப்பாற்றப்போகிறாரா இல்லையா ? அல்லது வேண்டும் என்றே விவசாயிகளை பழிவாங்கக் கூடிய நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறதா ? அல்லது உங்களுடைய மனத்திலே என்னதான் எண்ணியிருக்கிறீர்கள் என்பதை தயவுசெய்து சொல்லியாகவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மின்சாரத்தை யாரும் பாக்கெட்டில் தூக்கி வைத்துக்கொள்ள முடியாது. மின்சாரம் தருகிறீர்களா இல்லையா என்று வேண்டுமானால் கேளுங்கள். மனத்திலேயிருப்பதை எல்லாம் சொல்லுங்கள் என்று ஏதாவது உள்நோக்கம் கற்பித்து பேசுவதெல்லாம் வேண்டாம்.

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** அரசாங்கம் எடுக்கவிருக்கும் நிலைமைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லியாக வேண்டும். வட ஆர்க்காடு மாவட்டத்தில் இருக்கும் அந்த விவசாயிகளுக்கு தேவையான மின்சாரத்தை உடனடியாக வழங்க தக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று கேட்டு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்னையை இன்னும் ஆழமாக, விரிவாக விவாதிக்கும் பொருட்டு, இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும், அதன்மூலம் இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண முயல வேண்டும் என்று உங்களைக் கேட்டுக் கொண்டு முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.

**திரு. இல. பலராமன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆர்க்காடு மாவட்டத்தில் திருவண்ணாமலை பகுதியில் பெரும் பகுதியும், வட ஆர்க்காடு மாவட்டத்தில் வேலூர் பகுதிகளிலும், வேலூர் மின் திட்டத்தில் மின்சாரம் இல்லாத நிலைமை இருக்கிற காரணத்தால், கடந்த டிசம்பர் மாதத்திலிருந்து தொடர்ந்தாற்போல் மின்சாரம் இல்லாத நிலைமை ஏற்பட்டு பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. மின்சார நிதிநிலை அறிக்கை வந்த போதுகூட, அதன்மீது பேசும்போதுகூட, நாங்கள் இந்தக் கருத்துக்களை

எடுத்துச் சொன்னோம். வேறு ஏதாவது மாற்று ஏற்பாடுகள் செய்து, அல்லது வேறு எங்கேனும் மின் வெட்டையாவது செய்து, பாதிக்கப்பட்ட அந்தப் பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் ஏதாவது அறிக்கை வைப்பார் என்று பெரிதும் எதிர்பார்த்தோம். ஆனால் இல்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

எப்பொழுது மின்சாரம் வரும், எப்பொழுது போகும் என்பதில்கூட எந்தவித நிச்சயமும் இல்லாமல், பல நாட்களாக தொடர்ந்தாற்போல் 2 நிமிடம், 3 நிமிடம், 10 நிமிடம் என்ற அளவுக்கே மின்சாரம் வந்து வந்து போய்க் கொண்டிருக்கிற நிலைமைதான் அந்தப் பகுதிகளிலே இருக்கிறது. சிங்கில்-பேஸ் என்று கூறுவார்களே அந்த அளவில்கூட மின்சார சப்ளை அங்கே இல்லை. ஆனால் அந்த மாவட்டத்தில் வறட்சிக்குப் பின்னால் நவரைப் பயிர்களை லட்சக்கணக்கான ஏக்கர்களில் விவசாயிகள் பயிரிட்டிருக்கிறார்கள். அவைகளுக்கே பாய்ச்ச தண்ணீரே இல்லை. அங்கே ஏரியிலே தண்ணீர் இல்லை. கிணற்றை நம்பித்தான் அங்கே விவசாயம் நடக்கிறது என்ற நிலைமை அரசுக்கும் தெரியும், எல்லோருக்கும் கூட தெரியும். அந்த அளவுக்கு மின் இணைப்பைக் கொண்டுதான் விவசாய உற்பத்தி செய்யக்கூடிய நிலைமை அந்த வட ஆற்காடு மாவட்டத்தில் இருந்துக் கொண்டிருக்கிறது. தமிழகத்தில் தஞ்சைக்கு. அடுத்தபடியாக உணவுப் பொருள்களை ஏராளமாக உற்பத்தி செய்யக்கூடிய மாவட்டம் வட ஆற்காடு மாவட்டம் தான். ஆனால் அந்த மாவட்டத்தில் இன்று விவசாயிகள் பயிர் செய்திருக்கக்கூடிய நவரைப் பயிர்களுக்கு பாய்ச்ச தண்ணீர் இல்லை, அவைகள் மின்சாரம் இல்லாமல் பாதிக்கப் பட்டிருக்கிறது என்றால் அதனால் பெரும் நஷ்டம் அடையப்போவது விவசாயிகளுக்கு அடுத்தபடியாக அரசாங்கம் தான். அந்த அளவுக்கு அந்தப் பயிர்கள் சேழியக்கூடிய நிலைமை இருக்கிறது. இதனால் விவசாயிகளுடைய பொருளாதார நிலைமை மட்டுமல்ல, நாட்டினுடைய பொருளாதாரமே பாதிக்கக் கூடிய நிலைமை ஏற்படும் என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். அங்கே இன்றைக்கு கிராமங்களிலே மின்சாரமே இல்லை என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மக்கள் பீதியடையக்கூடிய அளவுக்கு, தாங்கள் போட்ட முதலீடுகூட எடுக்க முடியாமல் நஷ்டம் ஏற்பட்டு விடுமோ என்று விவசாய மக்கள் பீதி அடையக்கூடிய நிலைமைக்கு அந்தப் பகுதிகள் மிகவும் பாதிக்கப் பட்டிருக்கின்றன. இது குறித்து மின்சாரத் துறையிடம் விளக்கம் கேட்டால், எண்ணூர் அனல் மின் நிலையம் போன்ற மின்சார நிலையங்கள் எல்லாம், 400 மெகாவாட் உற்பத்தி செய்யக்கூடிய மின் நிலையங்கள் எல்லாம், 50 மெகா வாட்க்கும் குறைவாக, 30, 40 மெகாவாட் என்ற அளவில் உற்பத்தி செய்தால்



என்ன செய்ய முடியும் என்று சொல்கிறார்கள். இந்த நிலைமையை எல்லாம் பார்க்கிறபோது, இவைகளுக்கெல்லாம் என்ன காரணம் என்று விளக்கம் கூறக்கூட முடியாத நிலை இந்த அவைக்கு இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது.

அந்தளவிற்கு அவர்கள் தகுதி குறைந்திருக்கிறதா அல்லது உற்பத்தி செய்யக்கூடிய மின் நிலையங்களின் தகுதி குறைந்திருக்கிறதா ? ஏன் அந்தள விற்குக் குறைந்திருக்கிறது, உற்பத்தி செய்வதில் ஏன் தாமதம் என்பதை அரசு விளக்க வேண்டும். இது ஒரு வாழ்க்கைப் பிரச்சனை என்பது மட்டுமல்ல ; பொருளாதாரப் பிரச்சனையும்கூட என்பதை உணர்ந்து இதுபற்றி விரிவாக விவாதிக்க அவையின் பிற அலுவல்களை ஒத்துவைத்து விவாதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. ஆர். சுந்தரம் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் திருவண்ணாமலை, போளூர், மட்டு மல்லாமல் குடியாத்தம், காட்பாடி, வேலூர் போன்ற பகுதிகளில் டிசம்பருக்குப் பிறகு மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டு அங்கேயுள்ள விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்போது கிடைக்கிற மின்சாரம் கூட ஒரு மணி நேரம் அல்லது இரண்டு மணி நேரம் கிடைத்தாலும்கூட எந்த நேரத்தில் அது கிடைக்கும் என்ற வாக்குறுதி இதுவரையில் இல்லை. மின்சாரம் எப்போது வரும் எப்போது நின்றுவிடும் என்று தெரிவதில்லை. அதனால் ஆயிரத்திற்கு மேற்பட்ட பம்ப்செட்கள் தீய்ந்து கருகி அதனால் விவசாயிகள் பாதிக்கப்படக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இதுகுறித்து 27—2—1982-ல் வேலூரில் எஸ்.இ. ஒரு கூட்டத்தைக் கூட்டிவைத்து நடத்தியதில் நானும் கலந்து கொண்டேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. பலராமன் அவர்களும் கலந்து கொண்டார்கள். அங்கே இந்தப் பிரச்சனையைக் கிளப்பினோம். அதற்கு அவர்கள் அளித்த பதில் என்னவெனில் எனக்கே தெரியாது எப்போது வரும் எப்போது நின்றுவிடும் என்று. அப்படியென்றால் விவசாயிகள் கதி என்ன என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

அதேபோல் தூத்துக்குடியில் இரண்டு தினங்களுக்கு முன்பு இயந்திரங்கள் பழுதுபட்டு அந்த வட்டாரத்திலுள்ள விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக் கிறார்கள். இது வட ஆற்காடு மாவட்டத்தில் மட்டுமல்ல. இன்று காலை சென்னையிலேயே அண்ணா சாலைக்குச் சென்றிருந்தபோது அங்குள்ள கடைகளில் காலை 6 மணி முதல் 9 மணி வரை மின்சாரம் தடை என்று சொன்னார்கள். தமிழ்நாடு பூராவும் இப்படிப்பட்ட நிலைதான் இருக்கிறது. இதைப் போக்குவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறோம் என்று

அறிவிக்க வேண்டியிருக்கிறது. விவசாயிகளுக்கு முன் உரிமை அளித்து குறிப்பிட்ட சில தொழில்களுக்கு மின்வெட்டைக் கொண்டுவரலாம். எனவே இவற்றைபற்றியெல்லாம் விரிவாக விவாதிக்க இந்த அவையில் பிற அலுவல் களை ஒத்திவைத்து இப்பிரச்னை பற்றி விவாதிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. என். ஏ. பூங்காவனம் :** வட ஆற்காடு மாவட்டம் விவசாயப் பொருட் களை அதிகமாக உற்பத்தி செய்யக்கூடிய ஒரு மாவட்டமாகும். அந்த மாவட் டத்தில் தோல் தொழிற்சாலைகளும் வேறு பல தொழிற்சாலைகளும் உள்ளன. அந்த மாவட்டம் கடந்த மூன்று ஆண்டுகளாக வறட்சியால் பாதிக் கப்பட்டு இப்போதுதான் விவசாயத்தைத் துவங்கலாம் என்ற நிலை ஏற்பட்டு இருக்கிறது. இப்போது மின்சார வெட்டு இல்லையென்றுதான் அரசுத் தரப் பிலிருந்து சொல்லப்பட்டு வருகிறது. ஆனால் நடைமுறையில் எங்கள் பகுதி களில் மின்சாரம் எப்போது வரும் எப்போது நின்றுவிடும் என்பதற்கு உத்தர வாதம் இல்லாத நிலைதான் இருக்கிறது. ஆகவே மின்சாரத்தை வழங்குவதில் அதை முறைப்படுத்தி இன்னின்ன பகுதிகளில் இன்னின்ன நேரங்களில் கொடுக்கப்படும் என்று அரசாங்கம் பகிரங்கமாக அறிவிக்கவேண்டும்.

அடுத்தபடியாக, உண்மையில் மின்சாரப் பற்றாக்குறை இருக்கிறது என் றால், அதை அறிவித்துவிட்டுப் பற்றாக்குறையை எப்படி நீக்கலாம் அல்லது சமாளிக்கலாம் என்பதுபற்றி அரசு ஆராய வேண்டும். விவசாயம், சில முக்கியத் தொழில்கள் இவற்றிற்கு முதலிடம் அளிக்க வேண்டும். ஆகவே அதைப்பற்றியெல்லாம் விவாதித்து நல்ல முறையில் ஒரு முடிவு எடுக்க இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இப்பிரச்சினை பற்றி விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11.00)

**திரு. எஸ். ஆண்டித்தேவர் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் 27—2—1982 முதல் விவசாயத்திற்கு மின்சாரம் இடைக்கவில்லை என்பது சம்பந்தமாக இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து அது பற்றி விவாதிக்க வேண்டும் என்று பல உறுப்பினர்கள் பேசினார்கள். வட ஆற்காடு மாவட்டத்தில் மட்டுமல்ல. தமிழகம் முழு வதுமே இப்படி இருக்கிறது. நிதி நிலை அறிக்கையிலே விவசாயிகள்தான் இந்த நாட்டில் முதுகெலும்பு என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது அரசுக்கும் தெரிந்திருக்கிறது, அப்படியிருந்தும், தஞ்சை மாவட்டம் போன்ற மாவட்டங்களைத் தவிர, அனைத்து மாவட்டங்களிலும் விவசாயிகள் மின்



வைத்து
தவிர, அனைத்து மாவட்டங்களிலும் விவசாயிகள் மின்சாரத்தை
நிலத்தடி நீரைப் பயன்படுத்தி, தங்கள் கடுமையான உழைப்பின் காரணமாக
உற்பத்தி செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மின்வெட்டு வந்திருக்
கிறது. வட ஆற்காடு மாவட்டத்தில் டிசம்பர் மாதம் முதல் அவர்களுக்கு
மின்சாரம் கிடைக்கவில்லை.

இன்றைக்கு ஒரு ஆபத்தான நிலைமை ஏற்பட்டிருப்பதாகத் தகவல் வந்
இருக்கிறது. தூத்துக்குடி மின் நிலையம் எரிந்து போய்விட்டதாகச் சொல்லு
கிறார்கள். மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, மாவட்டங்களுக்கு மின்
உற்பத்தி கொடுக்கின்ற அந்த மின் நிலையம் இப்போது எரிந்திருக்கிறது.
ஏற்கெனவே, நான் மின் துறை மானியத்தின் மீது பேசுகின்றபோது
சொன்னேன். தமிழகத்திலே உள்ள விவசாயிகளுக்கு எந்த நேரத்தில் மின்
சாரம் வருமென்பது டிசம்பர் மாதம் முதல் தெரியவில்லை. அப்படி திடீ
ரென்று கொடுத்தாலும், குறிப்பாக நான் ஒன்றைச் சொல்கிறேன். என்னுடைய
தொகுதியில் டிசம்பர் மாதம் ஒரே நாளில் 300 பம்பு செட்டுகள் எரிந்து
விட்டது. அதற்காக இன்றைக்கு அந்த 300 பம்பு செட்டுகளையும் ஒவ்வொரு
விவசாயியும் வாங்குவதென்றால், பழுது பார்ப்பதென்றால் 1,000, 2,000
ரூபாய்கள் ஆகும். ஆகவே, மின்சாரம் எப்போது வரும் என்பது விவசா
யிக்குத் தெரியவில்லை. விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டும் என்று
சொன்னால், மின்துறை எந்த அளவுக்கு மற்றவர்களுக்குக் கொடுத்தாலும்
கூட, இந்த நாட்டிலே தொழிற்சாலைகளுக்கு நாம் மின் இணைப்பு கொடுக்க
வேண்டும் என்று சொன்னாலும்கூட, அவர்கள் ஜெனரேட்டர்களை வாங்கி
உபயோகப்படுத்துகின்ற வாய்ப்பு இருக்கிறது. எனவே, தொழிற்சாலை
களுக்குக் குறைத்தாவது இந்த விவசாயிகளுக்கு மின்சாரம் கொடுக்க
வேண்டும். இந்த நாட்டில் உணவு உற்பத்தி செய்கின்ற இந்தச் சமுதா
யத்தை இந்த அரசு காக்கும் வகையில் அவர்களுக்கு ஒரு உத்தரவாதம்
கொடுக்க வேண்டும். அந்த நிலையை ஏற்படுத்துவதற்கு ஒரு விரிவான
விவாதம் தேவைப்படுகிறது. ஆகவே, இந்த அவையின் இதர அலுவல்களை
ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஆர். நவநீத கிருஷ்ண பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம் அல்ல; தமிழகத்திலுள்ள எல்லா
மாவட்டங்களிலும், குறிப்பாகத் திருநெல்வேலி மாவட்டத்திலே தூத்துக்குடி
யிலே ஒரு அனல் மின் நிலையம் இயங்கவில்லை என்பதாலே, அங்கே முழுமை
யாக மின்சாரம் வருவதில்லை. திருநெல்வேலி மாவட்டம் முழுதும் மின்
சாரம் வரவில்லை. பரவாயில்லை. நகரத்திற்கு எப்படியோ மின்சாரம்

இருக்கிறது. ஆனால் கிராமங்களுக்கு நிச்சயமாக மின்சாரம் வருவதில்லை. இதுபற்றி இங்கே பல மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். விவசாயிகள் சேற்றிலே கால் வைக்க முடியாவிட்டால் நாம் சோற்றிலே கைவைக்க முடியாது என்கிற நிலை இருக்கிறது. ஆகவே, விவசாயிகளைப் பாதுகாக்கின்ற வகையில் மின் இணைப்பு கொடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

இதற்கு முன்னாலே எப்படி இருக்கும் என்று சொன்னால், ஒரு வாரத்தில் ஒரு நாள் மின்சாம் நிறுத்துவார்கள். ஒரு புதன் கிழமை அல்லது வெள்ளிக் கிழமை என்றிருக்கும். அன்றைக்கு மின்சார இலாகாவினர் தங்களுடைய பழுதுபார்ப்பு வேலைகளைப் பார்த்துக் கொள்வதற்காக அந்த தினத்தை ஒதுக்குவார்கள். அன்றைய தினம் தொழிற்சாலைகளுக்கு விடுமுறை விடப்படும். விவசாயிகளும் அன்றைக்கு மின்சாரம் வராது என்பதை நிச்சயமாகத் தெரிந்து, அதற்கு முன்தினமே நிலத்திற்குத் தண்ணீர் பாய்ச்சுவார்கள். இதற்கிடையே மின்சாரத் துறையிலேத் தடை ஏற்பட்டாலும், அதை முன்கூட்டியே தெரிவிப்பார்கள். அப்படிப்பட்ட நிலை இருந்தது. ஆனால், இப்போது அப்படிப்பட்ட நிலை இல்லை. இப்போது மின்சாரம் எப்போது வருகிறது அல்லது வருமா வராதா என்ற நிலைமை இன்றைக்குக் கிராமங்களிலே இருக்கிறது. எனவே இந்த நிலையை மாற்றுவதற்கு இதைப்பற்றி விளக்கமாக, விரிவாகப் பேசுவதற்கு இந்த சபையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன்.

* **மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொண்டுவந்து, மின் பற்றாக் குறையைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பல கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அதன் அடிப்படையில், அரசு இன்றுள்ள நிலையை விளக்கி, எடுத்துள்ள முடிவுகளை அவையில் அறிவிப்பதற்கு நான் கடமைப் பட்டிருக்கிறேன் என்கிற வகையில், கீழ்க்கண்ட விவரங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

சட்டமன்றப் பேரவையில் ஏற்கெனவே அறிவித்தபோது, தமிழ்நாட்டில் மின்சக்தியைப் பொறுத்தவரையில் எவ்விதப் பற்றாக்குறையும் இல்லை அதாவது எனர்ஜி. மின் உச்சத் தேவையை சமாளிப்பது தான் கடினமாக உள்ளது. கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்திலேயே மின் உச்சத் தேவை 2100 மெகாவாட்டை எட்டியுள்ளது. பொதுவாக மார்ச்-ஏப்ரல் திங்களில் எல்லா பயனீட்டாளர்களும் ஒருசேர மின்சக்தியைப் பயன்படுத்துவதால், உச்சத் தேவை அதிகரிப்பது வழக்கம். சாதாரணமாக இப்பருவத்தில் மின் உச்சத்தேவை





2400 மெகாவாட்டை எட்டும். ஆயினும் ஊரகப் பணிகளை இரண்டாகப் பிரித்து மின்சாரம் வழங்குவதாலும் நகர்ப்புறங்களில் நாள் ஒன்றுக்கு சில பகுதிகளில் இரண்டரை மணி அளவும் சென்னை நகரில் சில பகுதிகளில் ஒன்றரை மணி அளவும் முன்னேற்பாடான மின் நிறுத்தம் செய்வதாலும் இத் தேவையை 1800 மெகாவாட் அளவில் கொண்டுவரப்பட்டது. மார்ச் மாதம் முதல் மேட்டூர் அணையில் நீர்விடுவது நிறுத்தப்பட்டுள்ளதால் புனல் மின் உற்பத்தித் திறன் குறைந்துள்ளதாலும், அண்டை மாநிலமான கேரள மாநிலம் நாம் எதிர்பார்க்கும் அளவிற்கு அவ்வப்போது மின்சாரத்தைத் தர இயலாததாலும், தமிழகத்திலுள்ள நெய்வேலி அனல் மின் நிலையம் உள்பட அனைத்து அனல் மின் உற்பத்தி நிலையங்களும் ஒழுங்காக இயங்கினால்தான் மின் உச்சத் தேவையை சரிக்கட்ட இயலும். எண்ணூரிலோ, தூத்துக்குடியிலோ ஏதேனும் ஒரு பிரிவில்கோளாறு ஏற்பட்டாலும் மின் நிறுத்தம் செய்ய வேண்டி உள்ளது. கடந்த பத்து நாட்களில், மூன்று நாட்கள் மின் நிறுத்தம் தேவைப் படவில்லை. ஆனால் மற்ற நாட்களில் மின் நிறுத்தம் தேவைப்பட்டது. குறிப்பாக 25.2.82-ல் தூத்துக்குடி இரண்டாவது பிரிவில் பழுது ஏற்பட்டது. 26.2 82-ல் எண்ணூர் அனல் மின்நிலையத்தில் பழுது ஏற்பட்டது. மார்ச் 2, 3 தேதிகளில் தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் மின் ஓட்ட மின் மாற்றி (கரண்ட் ட்ரான்ஸ்பார்மர்ஸ்) உடைந்ததின் காரணமாக மின் உற்பத்தி முழுமையும் பாதிக்கப்பட்டது. எனினும் தூத்துக்குடி இரண்டாவது பிரிவு 3.3.82 மாலை உற்பத்தியைத் துவங்கியது. தூத்துக்குடி முதலாவது பிரிவு இன்று உற்பத்தியைத் துவங்கியுள்ளது.

மின் உற்பத்திப் பிரிவுகளில் பழுது ஏற்படுமானால் மின்நிறுத்தம் அவசியமாகிறது. ஏற்கெனவே 2 பிரிவுகளாகப் பிரித்து மின்சாரம் வழங்கப்படும் ஊரகப்பகுதிகளில் எக்காரணத்தைக் கொண்டும் மின்நிறுத்தம் செய்யக்கூடாது எனவும், மின் நிறுத்தம் தேவைப்பட்டால் மற்றப் பகுதிகளிலேயே செய்யப்பட வேண்டும் எனவும் மின் வாரியத்திற்கு அரசு ஆலோசனை வழங்கியுள்ளது. மின் தேவையும் மின் உற்பத்தியும் சரிக்குச் சரியாக இருப்பதால் ஏதேனும் ஒரு இயந்திரம் பழுது பட்டாலும் மின் நிறுத்தம் தேவைப்படுகிறது. இதைக் கருத்திற்கொண்டு உயர் மின் அழுத்தத் தொழிகளுக்கு மின் உச்சத் தேவையை மேலும் குறைப்பதென அரசு தீர்மானித்து கீழ்க்கண்ட நடவடிக்கைகளை இன்று முதல் அமுல்படுத்த முடிவெடுத்துள்ளது :

1. மின் உற்பத்தி செய்யும் சாதனங்களைப் பெரும்பாலும் பெற்றுள்ள (டீசல் ஜெனரேட்டர்களை) வைத்துள்ள உயர் அழுத்த தாற்பு தொழிலாளர்களுக்கு அவர்களது மின் உச்சத் தேவையில் 45 சத விகிதம் மின்வெட்டு அமுல் படுத்தப்படும்.

[திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம்] [1982 மார்ச் 4

யேற்றுகிறோம் என்று அவர்கள் சொன்னார்கள். ஆனால் அந்தத் தண்ணீர் தேங்குகிற இடத்தில் அவர்கள் மறைமுகமாக ஒரு வால்வு வைத்து அவ்வப்போது அதைப் பிடுங்கி விடுவதால் சுத்தம் செய்யப்படாமலேயே பெரும்பகுதி நாட்களிலே வந்துகொண்டிருக்கிறது. ஆனால் அங்கே இருக்கின்ற கற்களைப் பார்த்தாலே தெரியும், சாம்பல் போன்று பறக்கின்ற நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட மோசடியை அங்கே செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து கழிவுநீர் தாமிரபரணி ஆற்றில் கலக்க விடாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா ? தாமிரபாணியில் கலப்பதால் குடிநீர் எடுப்பவர்கள் அதனால் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே அப்படிப் பாதிக்கப்படாமலிருக்க அந்த ஆற்றிலே கலக்காமல் வேறு இடத்திலே கொண்டுபோய்விட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** அதற்காக ஒரு முறை இருக்கிறது. இத்தனை ஏக்கர் இடம் என்று ஒதுக்கி அந்த இடத்திற்குள்ளே நீரிலே இருக்கின்ற பையாலாஜிக்கல் பொட்டன்சியைக் குறைத்து பிறகு ஆற்றிலே விடுவதுதான் பொருத்தமாக இருக்கும். உலகத்திலே எல்லா இடங்களிலும் இப்படித்தான் செய்யப்படுகிறது. இந்த நிறுவனம் அப்படிச் செய்யவில்லை என்பதால்தான் அவர்களுக்கு ஷோ காஸ் நோட்டிஸ் கொடுத்து கம்பெனியை நிறுத்தக்கூடிய நிலை ஏற்பட்டது. இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுத் தீவிரமாகக் கண்காணித்துக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் சொன்ன தவறு அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்து நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### (7) அரசினர் சட்ட முன்வடிவுகள்

#### (அ) மாகாண சிறு வழக்கு நீதிமன்றங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** துணைத் தலைவர் அவர்களே, 1982 ஆம் ஆண்டு மாகாண சிறு வழக்கு நீதிமன்றங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.



1982 மார்ச் 4]

#### (ஆ) சென்னை மாநகர சிவில் வழக்கு நீதிமன்றம், மாநிலச் சிறு வழக்கு நீதி மன்றங்கள் (திருத்த) ரத்து சட்ட முன்வடிவு, 1982.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** துணைத் தலைவர் அவர்களே 1982 ஆம் ஆண்டு சென்னை மாநகர சிவில் வழக்கு நீதிமன்றம், மாநிலச் சிறு [illegible] நீதிமன்றங்கள் (திருத்த) ரத்து சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

### (8) வரவு-செலவுத் திட்டம், 1982-83 பொது விவாதம்—தொடர்ச்சி.

* **திரு. பி. எம். வெங்கடேசன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்அவர்களே, இம் மாமன்றத்தில் பொணமல்லூர் தொகுதியின் குறைபாடுகளைப் பற்றியும், அங்கே நடந்திருக்கின்ற ஊழல்களைப் பற்றியும் இம்மாமன்றத்தில் பேச வாய்ப்பளித்தமைக்காக பொணமல்லூர் தொகுதியின் சார்பாக முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்திலே முதியோர்களுக்கும், விதவைத் தாய்மார்களுக்கும் அரசு உதவித் தொகை அளித்துக் கொண்டு வருகிறது. மேலும் தீபாவளிப் பண்டிகை நாளிலும், பொங்கல் பண்டிகை நன்னாளிலும் சேலை, வேட்டிகள் கொடுக்கிறோம். ஆனால் பொணமல்லூர் தொகுதியில் ஆர்.ஐ.-யாக வந்திருக்கின்ற சங்கரன் என்பவர், மேற்படி நாட்களில் சேலை, வேட்டி கொடுக்கின்றபோது முதியோர்களிடமும் விதவைத் தாய்மார்களிடமும் ரூபாய் ஒன்றிலிருந்து ஐந்து ரூபாய் வரையில் கொடுத்தால் தான் அரசு கொடுக்கும் உதவித் தொகையை கொடுக்க முடியும் என்று சொல்கிறார். இதைப்பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், தாசில்தார் அவர்களுக்கும், ஆர்.டி.ஓ. அவர்களுக்கும் 24.1.82 அன்று மனுக் கொடுக்கப்பட்டுள்ளது. 25-2-82-ஆம் தேதியன்று தாசில்தார் அவர்கள் பொணமல்லூருக்கு விஜயம் செய்யும் நேரத்தில், ஆர்.ஐ. அவர்கள் முன்னிலையிலும் தாசில்தார் அவர்களிடமும் ஒரு விதவைத் தாயாரான சாரதம்மாள் என்பவள் நான் பொங்கல் பண்டிகைக்குச் சேலை வாங்கும்பொழுது ஒரு ரூபாய் லஞ்சம்

2. மற்ற உயர் அழுத்தத் தொழில்களைப் பொறுத்தவரையில் 2 எம்.வி.ஏ. திறனுக்கு மேற்பட்ட மின் தேவையுள்ள தொழில்களுக்கு அவர்களது மின் உச்சத் தேவையில் 25 சதவிகிதம் மின் வெட்டு அமுல்படுத்தப்படும்.

3. மின்வெட்டு கணக்கிடுவதில் அத்தொழில்கள் 1961 டிசம்பர் வரையுள்ள ஒரு ஆண்டில் ஏதேனும் ஒரு மாதத்தில் உபயோகித்த உச்ச மின் தேவை அடிப்படையாகக் கொள்ளப்படும்.

4. மேற்குறிப்பிட்டுள்ள மின் உச்சத் தேவையில் விதிக்கப்பட்டுள்ள வெட்டு, ஊரகப்பகுதிகளில் இரண்டாகப் பிரிக்கப்பட்ட உயர் அழுத்தத் தொழில்களுக்குப் பொருந்தாது.

இதன்மூலம், மின் உச்சத் தேவை வெகுவாகக் குறைக்கப்பட்டு மின் நிறுத்தம் அறவேத் தவிர்க்கப்படும் என அரசு நம்புகிறது.

தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் 3-வது பிரிவு, ஏப்ரல் மாத இறுதியில் மின் உற்பத்தியைத் துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் எண்ணூர் மின் நிலையத்தின் 5-வது பிரிவு பழுது பார்க்கப்பட்டு மின் உற்பத்தியை ஏப்ரல் மாதத்தில் துவங்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இச்சமயத்தில் மேலே அமுல்படுத்தப்பட்டுள்ள மின் தேவை மீதான மின்வெட்டு மீண்டும் ஆய்வு செய்யப்படும்.

அரசு இந்த நடவடிக்கைகளை எடுத்திருக்கிற காரணத்தால் அவையின் அலுவல்களை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

## (6) கவன ஈர்ப்பு.

### மதுராகோட்ஸ் ஆலை கழிவு நீர் தாமிரபாணி ஆற்றில் கலப்பது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திருவாளர்கள் ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம், டி. மணி எம். செல்வமுத்து ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.



(முற்பகல் 11.10)

**திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் :** தலைவர் அவர்களே, "அம்பாசமுத்திரம் தொகுதியிலுள்ள மதுரா கோட்ஸ் ஆலையிலிருந்து வெளியேறும் கழிவுநீர் தாமிரபாணி ஆற்றில் கலப்பதால் அப்பகுதி மக்கள் நோயால் பாதிக்கப்படுவது குறித்து" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவரவர்களே, திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் தொகுதியிலுள்ள மதுரா கோட்ஸ் ஆலைக் கழிவு நீரை தாமிரபாணி ஆற்றில் விடுவதால், அண்மையில் மீன்கள் இறந்து விடுகின்றன என்றோ அல்லது ஆற்று நீரைக் குடிப்பதால் நோய்கள் ஏற்படுவதாக ஒரு கூற்றோ புகாரோ வரவில்லை. திருநெல்வேலி மீன் துறை இயக்குநர் இத்தகைய புகார் ஏதும் வரவில்லை என தெரிவித்துள்ளார். மதுரா கோட்ஸ் நிறுவனத்தின் கழிவு நீர் ஆற்றில் கலப்பதால் தண்ணீர் கெடுவதாகப் புகார் இருந்து வருகிறது. இதன்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு கழிவு நீரை தக்க முறையில் சுத்தம் செய்ய 'பையலாஜிக்கல்' முறையை கடைப்பிடிக்குமாறு நிர்வாகத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. மதுரா கோட்ஸ் நிறுவனம் தனது ஆலையின் கழிவுநீரை சுகாதார முறையில் ட்ரீட்மென்ட் செய்து வெளியேற்ற தகுந்த நடவடிக்கை எடுக்கும் வரை ஆலையின் லைசென்ஸை தற்காலிகமாக நிறுத்தி வைக்கும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக மதுரா கோட்ஸ் நிறுவனம் நேஷனல் என்வைரன்மென்டல் எஞ்சினியரிங் ரிசர்ச் இன்ஸ்டியூட் என்ற அமைப்பினை தம்முடைய ஆலோசகராக நியமித்து அந்த அமைப்பின் பரிந்துரைகளை சுகாதாரத் துறைக்கு அளித்துள்ளது. மேலும் கழிவு நீர் ட்ரீட் செய்வது குறித்து வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்கள். இந்நிறுவனம் அளித்துள்ள அறிக்கையில் இருந்த சில குறைபாடுகளைத் திருத்திக் கொள்ளுமாறு நம்முடைய துறை அவர்களுக்கு அறிவுரை கூறினார்கள். கழிவு நீர் ஆற்றில் கலப்பதால் ஆற்று நீர் கெடுவதைத் தடுக்க தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள். ஏற்கெனவே அந்த மில்லில் கழிவு நீரைச் சுத்தம் செய்வதற்காக 2, 3 பிளாண்ட்கள் வைத்திருக்கிறார்கள். அந்த பிளாண்டிலிருந்து வெளி

கொடுத்துத்தான் புடவையைப பெற்றுக் கொண்டேன் என்று தாசில்தார் அவர்களிடத்தில் நேரில் சொல்லியும் அந்த ஆர்.ஐ.மீது எந்தவிதமான நடவடிக்கையும் இதுநாள் வரையில் அவர்கள் எடுக்கவில்லை.

மேலும் இந்த மாமன்றத்தில் 14.7.80-ஆம் நாளன்று நான் பேசும்பொழுது பொணமல்லூர் தொகுதி பின்தங்கிய நிலையில், தாழ்த்தப்பட்ட நிலையில் எந்த வசதியும் இல்லாத காரணத்தால் கிராமத்தை விட்டு நகரத்தை நோக்கி பெருமக்கள் செல்கிறார்கள். ஆகவே, அங்குள்ள ஏழை எளியவர்கள் வாழ வகை செய்ய பசுமாடுகள் கடன் வழங்க வேண்டும்; உழவு மாடுகள் கடன் வழங்க வேண்டும். பழைய கிணறுகளைப் புதுப்பிக்கவும், புதிய கிணறுகள் வெட்டவும், வண்டி மாடுகள் வாங்கவும் கடனுதவி செய்யுமாறு இந்த மாமன்றத்தைக் கேட்டேன். இந்தத் தேதி வரை எந்தக் கடனுதவியும் செய்யவில்லை.

அதுமட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே பொணமல்லூர் பேரூராட்சிக்கு பத்து படுக்கை வசதியுள்ள ஒரு மருத்துவமனை அங்கீகரிக்கப்பட்டு எக்காரணத்தினாலேயோ அந்த மருத்துவமனை அங்கீகாரம் செய்யப்படாத காரணத்தால் 18—7—1980 அன்று பேசும்பொழுது அந்த மருத்துவமனையை . . .

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, உறுப்பினரவர்கள் தன்னுடைய தொகுதியில் முதியோர்களுக்கும், விதவைகளுக்கும் உதவித் தொகை கொடுக்கவில்லை என்றும் ஏதோ தவறு நடந்ததாகவும் இலஞ்சம் வாங்கியதாகவும் குறிப்பிட்டார்கள். அதைப் பற்றியக் குறிப்பு ஒன்றும் அரசுக்குத் தெரியவில்லை. அதைப் பற்றி ஏதாவது குறிப்பு கொடுத்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. பி. எம். வெங்கடேசன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் முதியோர் தொகை கொடுக்கப்படவில்லை என்று சொல்லவில்லை. ஏற்கெனவே முதியோர் உதவித் தொகை கொடுக்கப்பட்டு வருகிறது. அப்படிக் கொடுக்கும் நேரத்திலே இப்பொழுது பொணமல்லூரில் ஆர்.ஐ.யாக இருக்கும் சங்கரன் என்பவர் அந்தத் தொகையைக் கொடுப்பதற்கு இலஞ்சம் கொடுத்தால்தான் கொடுக்க முடியும் என்று சொல்லியிருக்கிறார். விதவைத் தாய்மார்களில் ஒருவரான சாரதம்மாள் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் ஒரு ரூபாய் கொடுத்துத்தான் நாங்கள் பெற்றிருக்கிறோம் என்று தாசில்தார் முன்னிலையில் சொல்லி, அதைப் பற்றி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு 25—2—1982 ஆம் தேதி மனுக்கொடுத்து, ஆர்.டி.ஓ.-விடம் மனுக்கொடுத்து தாசில்தார் அவர்களுக்கு மனுக்கொடுத்து உள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





(முற்பகல் 11.20)

பேரவைத் துணைத் தலைவரவர்களே, அங்கே இருக்கும் அதிகாரி என்ன செய்து கொண்டிருக்கிறார்? ஒவ்வொரு தடவையும் அமைச்சரால் பார்க்க முடியுமா? அப்படியென்றால் இந்த அரசு எந்த அளவுக்குச் சென்று கொண்டிருக்கிறது என்பதைச் சொல்லத்தானே நான் பேசினேன்.. ஆகவே, 18-7-80 அன்று பேசிய அந்த மருத்துவமனை இன்றுவரை செயல்படவில்லையென்றால் நீங்கள் கிராமந்தோறும் வீதிக்கு வீதி மருத்துவ மனை வீட்டுக்கு வீடு மருத்துவமனைச் சிகிச்சை செய்கிறோம் என்று சொல்கிறீர்களே, அன்று திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே அங்கீகரிக்கப்பட்ட 10 மருத்துவ படுக்கை கொண்ட மருத்துவ மனை இன்று வரை அமுல் செய்யப்படவில்லையென்றால், பொதுமக்கள் என்ன நினைப்பார்கள்?

மேலும் ஆளுங்கட்சிக்காரர்கள் சொல்கிறார்கள், திருச்செந்தூருக்கு வழி நடைப்பயணம் செய்த நேரத்திலே, ஊழல் செய்தவர்கள் வருகிறார்கள் என்று சொல்கிறார்கள். ஐந்து இலட்சம் மக்கள் சென்றது உண்மை என்று சொல்லுகிறார்கள். ஐந்து இலட்சம் மக்களிலே நானும் ஒருவன். அப்பொழுது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்திலே, யார் அமைச்சர்களாக இருந்தார்கள்? நாவலர் இருந்தார், இப்பொழுது மின் துறை அமைச்சராக இருப்பவர் அப்பொழுது அமைச்சராக இருந்தார். (குறுக்கீடு) பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்லவில்லை. ஆளுங்கட்சியின் மாண்புமிகு உறுப்பினர் கணேசன் அவர்கள் சொன்னார்கள். அங்கே நடைவழிப்பயணம் செய்தவர்கள் 5 இலட்சம் பேர் இருப்பார்கள் என்று சொன்னார்கள். அந்த ஐந்து இலட்சம் பேர்களிலே நானும் ஒருவன், ஊழல் பேர்வழிகள் என்று சொன்னார். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே அமைச்சராக இருந்தவர் நாவலர் அவர்கள், மின் துறை அமைச்சராக இப்பொழுது இருப்பவர் அப்பொழுது அமைச்சராக இருந்தார். ப. உ. சண்முகம் அப்பொழுது அமைச்சராக இருந்தார் அவர்கள் எல்லாம் எங்கு இருக்கிறார்கள் என்பது இங்குள்ள அனைவருக்கும் தெரியும். இலஞ்சம் வாங்கினார்கள் என்று சொல்கிறார்களே, அதற்காகத் தான் சொல்கிறேன். இப்பொழுது தி.மு.கழகம் தூய்மையாக இருக்கிறது.

அடுத்தபடியாக பொணமல்லூர் தொகுதியில், சப்படாங்குளத்தில் கிராம மருத்துவ மனை ஒன்றும் நமத்தோடு கிராமத்தில் ஒரு கிராம மருத்துவ மனை ஒன்றும் வல்லம் கிராமத்தில் ஒரு மருத்துவ மனை ஒன்றும் ஆரம்பிக்க வேண்டுமென்று இந்த அரசை விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்

[பி. எம். வெங்கடேசன்]  [1982 மார்ச் 4

1952-ஆம் ஆண்டு பொணயல்லூரிலே அரசு உயர் நிலைப்பள்ளி ஏற்படுத்தியும், தற்போது அதை மேல்நிலைப் பள்ளியாக மாற்றியும் இதுநாள் வரை சுற்றுச்சுவர் இல்லை. மேலும் 10 வகுப்புகள் படிக்க அறைகள் இல்லை. சுற்றுச்சுவர் இல்லாத காரணத்தால், மாணவர்கள் விளையாடும் நேரத்தில் ஆடு மாடுகளும் உடன் விளையாடுகின்றன. ஆகவே, மேல்நிலைப் பள்ளிக்குச் சுற்றுச்சுவரும் பிள்ளைகள் படிக்க 10 வகுப்பு அறைகளும் உடனடியாகக் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இத்துடன் என்னுடைய சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. மி. வின்செண்ட் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் சமர்ப்பித்துள்ள நிதிநிலை அறிக்கையின்மீது பேசுகின்ற வாய்ப்பை அளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த பட்ஜெட் ஏழைக் குழந்தைகளுக்கு தினமும் சோறு போடும் ஒரு அமுத சுரபி என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். முதன் முதலில், குமரி மாவட்டத்தில் ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர்களுக்காக, இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு என்னுடைய அனுதாபத்தை நான் தெரிவித்துக் கொள்கிறேன். வாரி வழங்கும் பாரி வள்ளல் நமது தமிழக முதல்வர் அவர்கள் இறந்தவர் குடும்பத்தினருக்கு உதவித் தொகையாக ரூ. 10,000 வழங்கிட வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் என்னுடைய வேண்டுகோளை அரசுக்குத் தெரிவிக்கிறேன்.

அண்ணன் தம்பிகளாக, சகோதார உணர்வோடு பலநூறு ஆண்டுகளாக குமரி மாவட்டத்தில் மதவேறுபாடற்று, இனவேறுபாடு அற்று இருந்த மக்கள் இன்றையதினம் சில வேறுபாடுகளுக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றார்கள் என்றால், அதன் பின்னணியை அரசு கண்டுபிடிக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் அரசைக் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். மதத்தில் மக்களின் மனதைப் பிரிக்கும் நிலையைப் போக்க இன்றைக்கு அனைத்து மதத்தினரையும் கொண்டு ஒற்றுமை மாநாடுகளை அரசு நடத்த வேண்டும் என்பதை இந்த நேரத்தில் கேட்க ஆசைப்படுகிறேன். அப்படிப்பட்ட ஒற்றுமை மாநாடுகள் மதத்தால் மாறுபட்டு இருக்கும் மக்களின் மனப்பான்மையை சகோதர உணர்வோடு உருவாக்குவதற்கு பயன்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அடுத்து சென்னையில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க கதீட்ரல் சாலை டி.டி.கே. சாலை என்று மாற்றப்படும் என்று செய்தி வந்துள்ளது. இது சிறுபான்மையினருக்கு வருத்தம் அளிப்பதாக இருப்பதால் அதை மீண்டும் பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.



1982 மார்ச் 4]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை பற்றி நான் ஒரு கருத்தை அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். தென் வெளியிட்டு அதன்மூலம் அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். தென் சென்னை, மைலாப்பூரிலே வாழ்கின்ற முக்கியமானவர்கள் டி.டி.கே. அவர்கள் பெயரால் கதீட்ரல் சாலையை மாற்றி அமைக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்ததை ஏற்று, தமிழ்நாட்டுக்காக பாடுபட்ட முக்கியமான தலைவருடைய பெயர் நினைவில் என்றென்றும் தங்கவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில், சில வெள்ளைக்காரர்கள் பெயரிலேயும், வேறு சில பேர்களிலும் உள்ள பெயர்களை மாற்றி அமைக்கின்ற தன்மையின் அடிப்படையில் கதீட்ரல் சாலையை டி.டி.கே. சாலை என்று மாற்றி அமைக்கவேண்டும் என்ற வேண்டுகோளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்று டி.டி.கே. சாலை என்று அமைக்கலாம் என்ற எண்ணத்தை வெளியிட்டார்கள். ஆனால் கதீட்ரல் சாலை என்பது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மதக் கோயிலை அடிப்படையாக வைத்து அது அமைந்து இருப்பதன் காரணமாக, அதனுடைய பெயரை மாற்ற வேண்டாம் என்று ஒரு உணர்வோடு கிறித்துவப் பெருங்குடி மக்கள் அத்தனை பேர்களும் ஒரு எண்ணத்தைத் தெரிவித்து, அதன் காரணமாக அவர்கள் விடுத்த வேண்டுகோளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்று, கதீட்ரல் சாலையை டி.டி.கே. சாலை என்று மாற்றுவதை நிறுத்தி, எப்போதும் போல்வே அது கதீட்ரல் சாலை என்றே வழங்கும் என்று முடிவெடுத்து, இப்போது மௌபரீஸ் சாலை என்று வழங்கும் சாலையை—அது மைலாப்பூர் பகுதியிலே இருப்பதன் காரணமாக—அதை டி.டி.கே. சாலை என்று மாற்றி அமைக்கலாம் என்ற கருத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொண்டிருப்பதன் காரணமாக கதீட்ரல் சாலை என்ற பெயர் அப்படியே இருக்கும் என்பதையும், மௌபரீஸ் சாலை என்பது டி.டி.கே. சாலையாக மாற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மி. வின்செண்ட் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே இது நடக்காது என்றும் மக்கள் புண்பட இது நடக்காது என்றும் பொன்னான ஆட்சி இது என்றும், ஆகவே இந்தப் புனித ஆட்சி வாழ்க என்று வாழ்த்தி எனக்குத் தெரியும். நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

பட்ஜெட்டிலே குறிப்பிடப்பட்டுள்ள, குமரி மாவட்டத்தில் உள்ள சின்ன முட்டத்தில் மீன்பிடி துறைமுகம் அமைக்கும் நடவடிக்கையை விரைவுபடுத்த வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் திருப்பரப்பு கால்வாயை விரிவுபடுத்தும் பணிக்காக 46.70 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. மி. வின்செண்ட்] [1982 மார்ச் 4

இந்த பட்ஜட்டிலே மாக்னசைட் கற்களை உற்பத்தி செய்து கல் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றையும் சிறந்த மாக்னசைட் கற்களை உற்பத்தி செய்து கனிப்பொருள் வளர்ப்புக்கும் தொழிற்சாலை ஒன்றையும் நிறுவ வந்த இந்த அரசைப் பாராட்டுகிறேன். குமரி மாவட்டத்தில் மணவாளக்குறிச்சியில் மானோசைட், இல்லுமினைட், சாக்கான், ரூட்டைல் போன்ற விலை உயர்ந்த அணு தயாரிக்கும், விமான பாடி கட்டும் தாது கிடைக்கின்றது என்பதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். 1980-81 ஆம் ஆண்டு இல்லுமினேட் என்ற தாது மட்டும் ஜப்பான், இங்கிலாந்து போன்ற நாடுகளுக்கு 25 லட்சம் ரூபாய் பாரின் எக்ஸ்சேஞ் நமக்குக் கிடைக்கக் கூடிய அளவுக்கு ஏற்றுமதியாகியது. 1981-82 ஆம் ஆண்டு 15 லட்சம் பாரின் எக்ஸ்சேஞ் கிடைக்கக் கூடிய அளவுக்கு ஏற்றுமதி ஆகியது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதை விரைவுபடுத்தினால் கோடிக்கணக்கான ரூபாய் பாரின் எக்ஸ்சேஞ் கிடைக்க வழி உண்டாகும் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

(முற்பகல் 11.00)

அதேபோல், உள்ளூர் ஆதாரங்கள், மூலப்பொருள்கள், தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள், அடிப்படை வசதிகள் முதலியவற்றைக் கணக்கில் எடுத்து தொழில் வளர்ச்சியில் அக்கறை மேற்கொள்ளப்படும் என்று குறிப்பிடப் பட்டுள்ளது. என்னுடைய மாவட்டத்தில் 27,000 ஏக்கர் நிலங்களில் ரப்பர் பயிர் செய்யப்படுகின்றன. அதிலே 10,000-க்கு மேற்பட்ட ஏக்கரில் அரசுக்குச் சொந்தமான ரப்பர் கிடைக்கிறது. அதுமட்டுமல்ல, பல கோடி ரூபாய்க்கு மேல் மூலப்பொருள்கள் அங்கே கிடைக்கின்ற காரணத்தால், அகில இந்தியா விலேயே ஒரு மாவட்டத்தில் அதிகமான ரப்பர் கிடைக்கின்றதைக் கணக் கிட்டால் கன்னியாகுமரி மாவட்டத்தில் தான் அதிகப்படியான ரப்பர் கிடைக்கின்றது என்ற காரணத்தால், அந்தக் குமரி மாவட்டத்தில் ரப்பர் பேசுடு இன்டஸ்டரீஸ் துவக்கப்பட வேண்டும் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன்.

வடக்கே காஷ்மீருக்குக் கிடைக்கும் முக்கியத்துவம் முக்கடலும் முத்தமிட்டு மகிழும் குமரி முனைக்கும் கிடைத்திட வேண்டுமென்று, கன்னியாகுமரி மாவட்டம் மேம்பாடு அடைவதற்காக கோடிக்கணக்கான ரூபாய்களுக்கான திட்டத்தை, மைய அரசின் உதவியை எதிர்பார்க்காமல், செயல்படுத்திவரும் மாநில அரசை இந்த நேரத்தில் நான் பாராட்டுகிறேன்.

'காஷ்மீர் டு கன்னியாகுமரி, இந்தியா ஈஸ் ஒன்' என்று தேசிய ஒருமைப் பாடு பேசும் மத்திய அரசு கன்னியாகுமரியையும், காஷ்மீரத்தையும் இணைக் கின்ற வகையில் ரயில் விட்டு, போக்குவரத்திலே ஒருமைப்பாட்டைக் காக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1982 மார்ச் 4] [திரு. மி. வின்செண்ட்]

... பெண்கள் பல்கலைக் கழகம் வர இருப்பதை நான் அறிகிறேன். கற்றறிந்த பெண்கள் நிறைந்த நகரமாக இருக்கும் நாகர்கோவில் நகரத்தில் அந்தப் பெண்கள் பல்கலைக் கழகத்தைக் கொண்டு வருமாறு கேட்டுக்கொள்கிறேன். அதற்குக் காரணம், அங்கே பெண்கள் பல்கலைக்கழகம் கொண்டு வந்தால் 'குமரிப் பல்கலைக்கழகம்' என்று பெயர் வைக்கப் பொருத்தமாக இருக்கும் என்பதையும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

தொழில் வளர்ச்சியில் தமிழகம் பின் தங்கவில்லை. ஆனால் மத்திய அரசு தொழில்களுக்காக நிதி ஒதுக்கீடு செய்வதில் 1967 ஆம் ஆண்டுக்குப் பிறகு குறைவு ஏற்பட்டுள்ளது. இந்த மனப்போக்கை மத்திய அரசு கைவிட வேண்டும். தமிழ் நாட்டிற்கு தொழில் வளர்ச்சிக்காக அதிகத் தொகை ஒதுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

சிறு தொழில், ஊரகத் தொழில், நடுத்தரத் தொழில் என்று தொழில் துறையில் அரசு அக்கறை காட்டி வருகிறது. சொல்லப்போனால், மற்ற மாநிலங்களுக்கு வழி காட்டுகின்ற வகையில் அமைந்துள்ளது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் தங்களுக்குச் சொந்தமாக உள்ள தொழிற்பேட்டைகளில் 300 தொழில் கூடங்களை 1981-82 ஆம் ஆண்டில் கட்டியுள்ளது. மூலப்பொருள்கள் வழங்குவதிலும் இந்த நிறுவனம் சரியான சாதனையைச் செய்து இருக்கிறது. அதாவது வழங்கும் பொருள்களின் மதிப்பு 1980-81-ல் ரூ. 18 கோடி. பிறகு இந்த நடப்பாண்டில் ரூ. 24 கோடியாக அது உயர்ந்துள்ளது என்பதற்காக நான் இந்த நேரத்தில் அரசைப் பாராட்டுகிறேன்.

ஒரு நாட்டுக்கு முதல் மூன்று தேவைகள் எது என்று லெனினிடம் கேட்கப் பட்டது. அதற்காக அவர் பதில் சொல்கிற நேரத்தில் கூறினார். முதல் தேவை மின்சாரம், இரண்டாம் தேவை மின்சாரம், மூன்றாம் தேவை மின்சாரம். அதை இந்த பட்ஜெட் வெளிப்படுத்துகிறது என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன். இந்த மாநிலத்துக்கு 6-வது திட்டத்திற்கு ஒதுக்கீடு 3,150 கோடி ரூபாய். அதில் மின்சாரத்திற்காக ஏறக்குறைய 1023 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது. அதாவது ஏறக்குறைய 3-ல் ஒரு பங்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

புனல் மின்சாரம், அனல் மின்சாரம், அணு மின்சாரம் ஆகிய 3 வகை களிலும் இந்த அரசு அக்கறை காட்டியுள்ளது. தொழில் வளர்ச்சிக்கு அடிப்படைத் தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்வதில் முந்தைய அரசு வழிவிட்டது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். இந்தியாவில் பல மாநிலங்களில் ஓடுகின்ற அத்தனை நதிகளையும், எல்லா மாநிலங்களில்

ஓடும் நதிகளையும் நாட்டுடைமை ஆக்கவேண்டும். இப்படி ஆறுகளை 'நேஷனலைசுடு ரிவர்ஸ்' என்று ஆக்குவதன் மூலம் தேசிய ஒருமைப்பாடு ஏற்படுவதற்கு வழி ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த சிந்தனைதான் காவிரி பிரச்சனைக்கு இறுதியாகத் தீர்வதற்கு சரியான விடையாக இருக்கும். இந்த வேண்டுகோளை இந்திய நாடு ஏற்கும் நிலையேற்படும். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தீர்க்கதரிசனத்தோடு சொல்லியது நிச்சயம் நடந்தே தீரும் என்பதையும் நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

எப்படி வியட்நாமை மீக்காங் ரிவர் வேலி பிராஜக்ட் செழிப்பாக்குகிறதோ, எப்படி அமெரிக்காவில் டென்னஸி ரிவர் வேலி பிராஜக்ட் செழிப்பாக்குகிறதோ, எப்படி நைல் நதி திட்டம் ஆப்பிரிக்காவை செழிப்படையச் செய்கிறதோ அதைப்போல இந்தியாவின் தென்மாநிலங்கள் செழிப்படைய வேண்டுமென்றால் காவிரி வேலி பிராஜக்ட் வந்தே ஆகவேண்டும். இதை மத்திய அரசிடம் மாநில அரசு வற்புறுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தியத் துணைக் கண்டத்திலேயே சட்டம், ஒழுங்கு காக்கப்படும் முதல் மாநிலம் தமிழகமே. இதை யாரும் மறுக்க முடியாது. தமிழக கோவில் சிலை ஆப்ராகாம் லிங்கன் பிறந்த மண்ணுக்குக் கடத்தப்பட்டாலும் மீட்டுவரும் வல்லவர்கள் தமிழக போலீசார் என்று பாராட்டும்போது ஆப்ராகாம் லிங்கனை கடத்திவிட்டால் யார் மீட்பது என்று அந்த உறுப்பினர்கள் கேட்கமாட்டார்கள் என்று கருதுகிறேன். சுதந்திரம் பெற்ற இந்திய நாட்டில் தமிழகத்தின் பல்லாயிரக்கணக்கான கிராம மக்களுக்கு அடிப்படை வசதிகளான பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வசதி, சாலை வசதி, போக்குவரத்து வசதி, மின்சார இணைப்பு வசதி, சுகாதார வசதி, கல்வி வசதி போன்ற அடிப்படைத் தேவைகளை இன்றையதினம் இந்தியத் துணைக் கண்டத்திற்கே வழிகாட்டியாக தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் நம்முடைய தமிழகத்தில் நடத்திக்காட்டி, காந்தியடிகளின் ராமராஜ்யத்தை கண்டுகொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லி மகிழ்கிறேன்.

இரண்டு வயது முதல் 10 வயது வரையுள்ள ஏழைக் குழந்தைகள் சுமார் 60 இலட்சம் பேர்களுக்கு சுமார் 100 கோடி ரூபாயில் பகல் உணவு வழங்கும் திட்டத்தைக் கொண்டுவந்து, ஏழைக் குழந்தைகளுக்கு உயிர் கொடுத்து, வாழ்வு கொடுத்துவிட்ட புரட்சித் தலைவரை வாழ்க, வாழ்க என்று நான் வாழ்த்துகிறேன்.

ஒரு குழந்தைகூட பட்டினி கிடக்கக்கூடாது என்ற தாய்ப் பாசம் யாருக்கு வரும்? தமிழக மக்களின் தாய் புரட்சித் தலைவருக்கே வரும். பசியைத் தெரிந்து மறந்தவரல்ல எங்கள் புரட்சித் தலைவர். பசியைத் தெரிந்து மக்கள் பிணி போக்கும் மணிமேகலை எங்கள் புரட்சித் தலைவர். இந்தத் திட்டத்தினால் தமிழக முதல்வரை தமிழக மக்கள் தாய் என்று வாழ்த்துகிறார்கள்; தெய்வம் என்று வணங்குகிறார்கள்.

'ஏழையின் ரொட்டியில் கடவுளைப் பார்க்கிறேன்' என்றார் காந்தி. 'ஏழையின் சிரிப்பிலே இறைவனைப் பார்க்கிறேன்' என்றார் அண்ணா. ஏழைக் குழந்தைகளுக்கு ரொட்டியைக் கொடுத்து சிரிக்க வைக்கிறார் எங்கள் புரட்சித் தலைவர். அந்த காந்தியும் அண்ணாவும் இன்றையதினம் புரட்சித் தலைவர் ஆட்சிக்கு ஆசி வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். நல்லாட்சி நடக்கிறது, நீடூழி வாழட்டும் என்று வாழ்த்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

அமெரிக்க பிரசிடென்ட் ரூஸ்வெல்ட் 'நியூ டீல்' என்ற ஒரு திட்டத்தை நாட்டிலே கொண்டுவந்தார். அதன்படி ஏழை நீக்ரோ குழந்தைகளுக்கு அவர்கள் வசிக்கும் பகுதியிலேயே ஒருவேளை மதிய உணவு அளிக்க வேண்டும் என்று அமெரிக்காவில் 23 மாநிலங்களில் நடைமுறைக்கு வந்தன அந்தத் திட்டம். ஆனால் அந்த நேரத்தில் மக்கள் மத்தியில் செல்வாக்கை இழந்த கோமாளிகள் இதை கோமாளித்தனமான முயற்சி என்று விமர்சித்தார்கள். அந்த நேரத்தில் ரூஸ்வெல்ட் சொன்னார்.

" You call me a joker for the reason I think of the poor, but please remember the word belongs to the joker "

என்று சொல்லிவிட்டுச் சொன்னார். இந்தத் திட்டம் மாற்றப்பட வேண்டுமென்று யாராவது நினைத்தால் அந்த மக்களின் சாபம்தான் கிடைக்கும் என்று சொன்னார்

குழந்தைகள் பெயரால் கொள்ளை என்று சொல்கிறவர்களுக்கு நான் ஒன்றை ஞாபகப்படுத்துகிறேன்: ஒட்டிய வயிறுக்குச் சொந்தக்காரர்களாய் உண்பதற்கு உணவு இல்லாமல், ஆழிவாய் முத்தம் கொடுக்க பேணி வளர்த்த தாய் முன்பு உண்பதற்கு உணவு இல்லையே என்று அழுது புலம்புகின்ற அந்த நேரத்தில் உண்பதற்கு உணவு தருகிறோம் என்ற தாய்ப்பாசத்தோடு பகல் உணவுத் திட்டத்தைத் தொடங்கி, ஒருவேளை உணவு கொடுக்க வேண்டுமென்ற திட்டத்தை கொண்டுவந்த எங்கள் புரட்சித் தலைவரின் தாய்ப் பாசத்தை புதிய திட்டத்தை கொள்ளை என்று வர்ணித்தால் ரூஸ்வெல்ட் சொன்ன சாபு

[திரு. மி. வின்சென்ட்] [1982 மார்ச் 4

கேடே உங்களுக்குக் கிடைக்கும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். Guilty conscience pricks the mind குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கிறது என்று சொல்வார்கள். தான் திருடி, அடுத்த வீட்டுக் காரியை நம்பமாட்டாள் என்று சொல்வார்கள். மக்களுக்காகத் திட்டம் போடும் புரட்சித் தலைவர் ஊழலுக்காகத் திட்டம் போடுபவர் அல்ல. புரட்சித் தலைவர் அரசின் திட்டம் சட்டமன்றத்தில் சொல்லப்படுகிறது. பட்ஜெட்டில் இடம் பெறுகிறது. அரசின் திட்டம் இது. அரசு பணம் இது. இதற்கு கணக்கு உண்டு. கொள்ளைக்கு இடமில்லை. உண்டியல் வைத்து பிரித்து, அட்டையை வைத்து பிரித்து அறிவிக்கும் திட்டம் அல்ல இது. புரட்சித் தலைவரின் திட்டத்திற்கு கணக்கு உண்டு. ஏனென்றால் இது அரசின் திட்டம். ஆனால் குழந்தைகள் பேரால் கொள்ளை என்கிறார் சோமு. அவர் பழைய முகத்தை கண்ணாடியில் பார்த்திருக்கிறார்; பரவாயில்லை. பிறந்தநாள் திட்டம் ஒன்றைக் குறிப்பிடுகிறேன். (குறுக்கீடுகள்).

**திரு. என். வி. என். சோமு :** சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். அவர் என்னைப்பற்றிக் குறிப்பிடுவதால் நான் குறுக்கிட வேண்டியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவர் முடிந்த பிறகு நீங்கள் விளக்கம் சொல்லலாம்.

(முற்பகல் 11-40)

**திரு. மி. வின்சென்ட் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிறந்த நாள் திட்டம் ஒன்றை இங்கே நான் குறிப்பிடுகிறேன். 1971 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திலே கலைஞர் அவர்களின் 48-வது பிறந்த நாளிலே பிச்சைக் காரர் மறுவாழ்வுத் திட்டம் என்ற ஒரு திட்டம் அறிவிக்கப்படுகிறது,—நான் ஆதாரங்களை வைத்துத்தான் இவற்றை குறிப்பிடுகிறேன். சர்க்காரியா கமிஷன் ஆஃப் என்கொயரி-யின் ஃபைனல் ரிப்போர்ட் இதோ என்னிடத்திலே இருக்கின்றது; குறுக்கிடுபவர்கள் வேண்டும் என்றால் என்னிடத்தில் வந்து இந்த ஆதாரத்தைப் பெற்றுக்கொள்ளலாம். (குறுக்கீடு) பிச்சைக்காரர் மறு வாழ்வுக்காக ஒரு இலட்சம் ரூபாய்க்கு ஒரு செக்கை அனுப்பி இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பட்ஜெட் பற்றிப் பேசி சீக்கிரம் முடித்துவிடுங்கள்.

**திரு. மு. வின்சென்ட் :** பிச்சைக்காரர் மறுவாழ்வுக்காக ஒரு இலட்சம் ரூபாய்க்கான செக்கை எதிர்க்கட்சித் தலைவருக்கு அனுப்பி இருக்கிறார்கள். அதை வாங்க மறுக்கிறார். பிறகு அந்தச் செக் எப்படிச் செல்கின்றது தெரியுமா? (குறுக்கீடு) 50 ஆயிரம் கலைஞர் கருணாநிதி



1982 மார்ச் 4] [திரு. மி. வின்சென்ட்]

டிரஸ்டுக்குச் செல்கிறது. 50 ஆயிரம் கோடைக்கானல் Gulf Club -க்கு செல்கிறது. பிச்சைக்காரர்களுக்கு ஒரு காசுகூட கிடையாது. பிச்சைக் காரர்கள் பணத்தைக்கூட கொள்ளை அடித்தார்கள்.

**திரு. அ. ரகுமான்கான் :** துணைத் தலைவரவர்களே, ஒரு பாயின்ட் ஆஃப் ஆர்டர். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சர்க்காரியா கமிஷனுடைய அறிக்கை பற்றிய விவரங்களை இங்கே குறிப்பிடுகிறார்கள். அப்படி அவர்கள் குறிப்பிடுகின்ற சர்க்காரியா கமிஷனுடைய அறிக்கையில் நாவலரைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கக்கூடிய கருத்தையும் அவர்கள் ஏற்றுக் கொள்கிறாரா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன் . . . (குறுக்கீடுகள்-குழப்பம்).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இது எல்லாம் பாயின்ட் ஆஃப் ஆர்டர் அல்ல.

**திரு. மி. வின்சென்ட் :** துணைத்தலைவர் அவர்களே, எங்களுடைய பட் ஜெட்டைப் பார்த்து கொள்ளைக்காரன் பட்ஜெட் என்றெல்லாம் சொன்னார் களே, அப்படி எல்லாம் மட்டும் பேசலாமா? ஆகவே அப்படி பிச்சைக்காரர் களின் பணத்தைக்கூட கொள்ளை அடித்தவர்கள் எங்களைப் பார்த்து கொள்ளைக்காரன் என்று கூறுவது சரிதானா என்று கேட்க ஆசைப் படுகிறேன் . . .

**திரு. துரைமுருகன் :** துணைத் தலைவரவர்களே, நாவலர் அவர்களைப் பற்றியும் . . . (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்போது எல்லோருமே பட்ஜெட்டிலே பேசுவதில்லை, இப்படி விவாதம்தான் செய்துகொண்டிருக் கிறார்கள். ஆகவே அவர்கள் பேசி முடித்ததற்குப் பிறகு மற்றவர்களின் கருத்துக்களை அவரவர்கள் பேசுகின்றபோது தெரிவித்துக்கொள்ளலாம். (குறுக்கீடுகள்-குழப்பம்.)

**திரு. மி. வின்சென்ட் :** துணைத் தலைவர் அவர்களே, எதிர்கால சமு தாயத்தை எண்ணிப் பார்த்து அது அழிந்துவிடக்கூடாது என்ற நவீன சிந்தனையின் செயல்தான் இந்த 100 கோடி திட்டம். இந்தத் திட்டம் நிச்சயம் வெற்றி பெறும். இந்திய நாட்டின் மற்ற மாநிலங்கள் இந்தத் திட்டத்தை இரவல் கேட்கும். இந்த ஆட்சியைப் பார்த்து திட்டங்கள் இல்லாத ஆட்சி என்று சொல்கிறார்கள். ஆனால் ஊழலுக்காக எங்களிடத்திலே திட்டங்கள் இல்லைதான், எங்களுடைய திட்டங்கள் எல்லாம் மக்களுக்காகவே என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்த 100 கோடி ரூபாய் திட்டத்தை வெற்றி மேல் வெற்றியாக குவித்து எங்களுடைய அருமை புரட்சித் தலைவர் அவர்கள் இதனை நடத்தி முடிக்கிற நேரத்திலாவது நீங்கள் நன்றி சொல்வீர்கள் என்று எதிர் பார்க்கிறேன். உங்களுக்கு ஆட்சி ஒரு கேடா என்று எங்களைப் பார்த்து, மாண்புமிகு அண்ணன் சோமு அவர்கள் கேட்டார்கள். எங்களைப் பார்த்து அப்படிக் கேட்டாரே, உங்களுக்கு நீதி ஒரு கேடா? பாத யாத்திரை ஒரு கேடா? பாதி யாத்திரை பண்ணிவிட்டு பாத யாத்திரை என்று சொல்கிறீர்களே என்று நான் உங்களைக் கேட்கிறேன். வெள்ளையனின் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, ரொட்டியும், கஞ்சியும் குடித்து சுதந்திரப் போராட்டக் காலத்தில் செய்த பாத யாத்திரை போன்றதா உங்களுடையது? * உங்களுக்கு இப்படிப்பட்ட பாத யாத்திரைகள் ஒரு கேடா . . . (குறுக்கீடுகள், கூச்சல், குழப்பம்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** "நீங்கள் முடிவு எடுத்து விட்டு வந்திருக்கிறீர்கள்" என்று என்னைப் பார்த்து திரு. துரைமுருகன் அவர்கள் உட்கார்ந்துகொண்டே சொல்வது தவறு. முடிவு எடுக்க எனக்குத் தெரியும். உறுப்பினர்கள் எதையும் பேசும்போது சற்று யோசித்துவிட்டு பேசுவது நல்லது. உங்களை யாரும் புண்படுத்தக்கூடாது என்று நினைக்கிறீர்கள். சரிதான்—ஆனால் நான் யாரையும் புண்படுத்தவும் இல்லை. என்னை நோக்கி நீங்கள் அப்படியெல்லாம் பேசக்கூடாது.

**திரு. துரைமுருகன் :** *

Are you going to send me out. Mr. Deputy Speaker?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இந்த மாதிரியான வார்த்தைகள் எல்லாம் வேண்டாம். நான் ஒரு முடிவோடுதான் வந்திருக்கிறேன் என்று என்னை நீங்கள் சொல்வது என்ன அர்த்தம்?

**திரு. துரைமுருகன் :** நீங்கள் ஆளும் கட்சிக்காரர்களுக்கு எல்லாவற்றையும் பேச அனுமதிக்கிறீர்கள். எங்களுடைய ஸ்பீச்சில் நேற்று எக்ஸ்பென்ச் செய்தீர்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இதுமாதிரி பாய்வது போன்ற செயல்கள் எல்லாம் வேண்டாம். இந்த அவையில் இருக்கிறோமே என்று நான் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறேன். இந்த அவைக்கு எல்லோரும் மரியாதை கொடுக்க வேண்டும் . . .

---

(*) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன



**திரு. துரைமுருகன் :** நீங்கள் தான் தவறாகச் சொல்கிறீர்கள். மதிப்பிற்குரிய அந்த இருக்கையில் இருந்து கொண்டு இப்படிப் பேசுவது உங்களுடைய பதவிக்கு அழகு அல்ல? இது தேவையானதா என்பதை நீங்கள் சிந்திக்க வேண்டும் . . . (குறுக்கீடுகள்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் இப்படிப் பேசுவது தான் அழகு அல்ல. 5 பேர்களும் ஒன்றாக எழுந்து நின்று பேசிக் கொண்டிருந்தால் நான் எப்படி உங்களுக்குப் பதில் சொல்ல முடியும்?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவையின் துணைத் தலைவருக்கும், ஒரு உறுப்பினருக்கும் இடையிலேயே இப்படி வாதம் ஏற்பட்டு விடுமானால், அதைச் சமாதானம் செய்யும் வகையில் யாரும் முன் வரமுடியாத நிலைமை ஏற்பட்டு விடும். அவையிலே அமைதி காக்க வேண்டிய பொறுப்பு துணைத் தலைவர் அவர்களுக்கு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேரும் அவருக்கு இதில் ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும். இங்கே நம் மாநிலத்திற்கு தேவையான ஒரு வருட பட்ஜெட் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பட்ஜெட்டைக் குறித்து ஏதாவது கருத்துச் சொன்னீர்களேயானால் எனக்குப் பயன் படும். மற்ற விவகாரங்களை வெளியிலே வைத்துக்கொள்வீர்களேயானால் மிக மிக நல்லது. நான் இதை இரு பக்கத்தில் இருப்பவர்களுக்கும் சேர்த்துத்தான் சொல்கிறேன். வைக்கப்பட்டிருக்கக்கூடிய பட்ஜெட்டிலே உபயோகமாக என்ன கருத்துக்களை எடுத்துச் சொல்லலாமோ அதைச் சொன்னால் எனக்கும் உபயோகப்படும், நாட்டுக்கும் நலமாக அமையும். ஆகவே, அந்த வகையில்தான் மாண்புமிகு உறுப்பினர்கள் பேச வேண்டும். பாக்கி விஷயங்களுக்குப் போக வேண்டியதில்லை. எங்கெங்கே எதை எதை எடுத்துச் சொல்லலாமோ, அவ்வாறு எடுத்துச் சொன்னால், அதற்குப் பதில் தருவதற்கும், நிறைய வாய்ப்புகள் வெளியிலே இருக்கிறது. ஆகவே வீண் விவகாரங்களைத் தவிர்த்து, எடுத்துச் சொல்ல வேண்டியவைகளை மாத்திரம் கூறி முடிக்கும்படி மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-50)

**திரு. க. அன்பழகன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வின்செண்ட் அவர்கள் பேசிய ஒரு பகுதி திராவிட முன்னேற்றக் கழகத்தைக் குற்றஞ்சாட்ட வேண்டும் என்பதற்காக சொன்ன வார்த்தைகள். பட்ஜெட்டிலே இப்படித்தான் இரண்டு பக்கமும் பேசுகிறார்கள் என்று தாங்கள் சொன்ன காரணத்தால் அது தொடர்கிறது.

ர்ந்த எதிர்க்கட்சியை வேண்டுமானாலும் குற்றஞ்சாட்டலாம். ஆனால் குற்றஞ் சாட்டுகிறபோது ஆதாரத்தை வைத்து குற்றஞ்சாட்ட வேண்டுமே தவிர தன் மனதில் பட்டது என்பதற்காக ஒரு குற்றச்சாட்டைச் சொல்வதும், அப்படி மனதில் பட்ட குற்றச்சாட்டுக்களையெல்லாம் சொல்லலாம் என்று தாங்கள் அனுமதித்திருப்பதும் எதிர்க்கட்சியில் உள்ள திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் அல்லது கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள், மற்றவர்கள் இன்னும் கடுமையான குற்றச்சாட்டுக்களைச் சொல்லவேண்டிய நிலைமையை நாளா வட்டத்தில் தோற்றுவிக்கும். எனவே தாங்கள் சொன்ன தீர்ப்பு தவறான நிலைக்கு வழி வகுக்கும். ஆதாரம் இல்லாமல் சொல்லக்கூடாது என்று நீங்களே ஏற்கனவே இந்த அவையில் சொல்லியிருக்கிறபோது ஆதாரம் கையில் இல்லாமல் கொள்ளையடிக்கிறார்கள், கொள்ளையடித்தார்கள் என்று சொல்வதை அனுமதித்து * எனவே அப்படி பேசப்பட்ட பகுதிகளை எல்லாம் நீக்குவதன் மூலமாக—அவை முன்னவர் அவர்கள் எழுந்து பேசுகிற போது பட்ஜெட் அளவில் பேசினால் போதும் என்று தெரிவித்திருக்கிறபோது அந்தக் கருத்துக்களை நீக்குவதற்கு ஒப்புக்கொண்டு நீக்குவதன் மூலமாக * என்பதையும் நான் நினைவூட்ட விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு உறுப்பினர் திரு. வின்சென்ட் அவர்கள், ஆதாரபூர்வமான கருத்துக்களைத்தான் எடுத்துப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். மேலும் இவைகள் எல்லாம் ஏற்கெனவே பல தினசரிப் பத்திரிகைகளில் வந்திருக்கின்றன. அவைகள் மறுக்கப்படவில்லை இது வரையில். (குறுக்கீடுகள்) (கூச்சல்)

**திரு. க. அன்பழகன் :** *
(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவர்கள் எந்த உறுப்பின ருடைய பெயரையும் சொல்லவில்லை. இரண்டு பக்கங்களிலும் நடக்கும் விவா தத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். சார்ஜஸ் அன்ட் கவுண்டர் சார்ஜஸ் தான். நம்முடைய விவாதம் இன்று இந்தளவில்தான் நடந்து கொண்டிருக் கிறது. இந்த அளவிற்கு நடந்து கொண்டிருப்பதை நான்கு நாட்களாகப் பார்க்கிறேன்.

**திரு. க. அன்பழகன் :** திராவிட முன்னேற்றக் கழகம் சார்பாகப் பேசப் படுகிறபோது ஆதாரம் இல்லாமலோ சான்று இல்லாமலோ, அல்லது அரசாங் கத்தைப் பற்றி ஒரு பகுதியில் நடைபெறுகிற ஒரு குறையோ எடுத்துச் சொல்லப்

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



பட்டது. அரசாங்கத்தினுடைய ஒரு பகுதியில் நடைபெறுகிற குற்றத்தையோ குறையையோ எடுத்துச் சொல்ல சட்டமன்றம் பயன்படுத்தப்பட வேண்டும், அது தவறு அல்ல. ஆனால் அதற்கு மாறாக *
என்று பேசினால், தாங்கள் அதை அனுமதிப்பதாக இருந்தால் *
(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தலைவரைப் பார்க்கும்போது பார்க்கிற பார்வையும் காட்டுகிற கையும் கண்டிக்கத்தக்கவை. அப்படி இந்த நாற்காலியைப் பார்த்து, காட்டுவதைக் கண்டிக்கிறேன். நீங்கள் * அடிப்பதாகச் சொன்னதைப் பற்றிச் சொன்னீர்கள். முதலில் பட்ஜெட் விவா தத்தைத் துவக்கி வைத்த சோமு அவர்கள் அப்படிப் பேசினார்கள். அதற்கு இவர்கள் பதில் சொல்லுகிறார்கள். அவ்வளவுதான். இரண்டு பக்கங்களிலும் இப்படிப் பேசுவதால், தினமும் சூடு பிடிக்கின்றது. ஆகவே, இரண்டு பக்கங் களிலும் இவ்வாறு பேசாமல் இருந்தால் இந்த நிலையைத் தவிர்க்க முடியும்.

**திரு. க. அன்பழகன் :** துணைத் தலைவர் அவர்களே, அவை நல்முறை யில் நடக்க முன்னவர் அவர்கள் ஆலோசனை சொன்னார்கள். எங்களுக்கு அந்த ஆலோசனையில் கருத்து மாறுபாடு இல்லை. ஆனால், ஆலோசனை சொன்னதைப் பின்பற்றுவதாக இருந்தால், ஆதாரம் இல்லாமல் ஏதேனும் சில சான்றுகள் இல்லாமல் அதற்கான விளக்கங்கள் இல்லாமல், மொத்தமாக குற்றச் சாட்டுகள் சொல்வதைத் தவிர்க்க வேண்டும். அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலே ஏறக் கூடாது. மறைமுகமாக ஒரு தனிப்பட்டவரை, * இங்கே பேசியதினுடைய கருத்து உங்களுக்குத் தெரியும். அப்படிப் பேச வேண்டிய அவசியமில்லை. தாங்கள் ஏற்றுக்கொள்வதாக இருந்தால், அவ்வாறு குறிப்பிட்டு ஒருவரைச் சொல்லவில்லை என்று சொன்னாலுங்கூட, சொல்லப் பட்ட கருத்து தங்களுக்கே தெரியும். இதை அனுமதிப்பதன்மூலம் மறை முகமாக மாறுபட்ட உணர்ச்சி ஏற்பட ஏதுவாகிறது. எனவே, அப்பேற்பட்ட கருத்து தேவையில்லை, அவை முன்னவர் அவர்கள் சொன்னதுபோல், தொடர்ந்து அவ்வாறு பேசாமல் இருக்க வேண்டும். அப்படிப் பேசியவற்றை அவைக் குறிப்பிலே இடம் பெறாமல் செய்யத் தாங்கள் முன்வரவேண்டும்.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. ப. நெடுமாறன் :** தலைவர் அவர்களே, இந்த வரவு-செலவுத் திட்ட விவாதத்திலே தொடர்ந்து இதுபோன்ற வேண்டாத நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அரசியல் விமர்சனம் பற்றிச் சொல்வது என்பது வேறு. இப்படிச் சபையின் முக்கியமான விவாதத்திற்குரிய நேரத்தை வீணாக்குவதால், எங்களைப் போன்ற கட்சியினர் பேசுவதற்கு நேரமில்லாமல் இருக்கிறது. இத்தகைய போக்குக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்றும் இதற்கு எங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையிலும் நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பின்னர் தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்பு செய்தனர்.)

**திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் :** துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்திலே, பொதுவாக பட்ஜெட் விவாதத்தின் மீது பேசுகின்றபோது, பட்ஜெட்டைப் பற்றிப் பேசுவது தான் நல்லது. ஆனால், வேண்டுமென்றே மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள், அண்ணா தி.மு.க.வைப் பற்றிப் பேசுவதும், அண்ணா தி.மு.க. உறுப்பினர்கள் தி.மு.க. உறுப்பினர்களைப் பற்றிப் பேசுவதும், இப்படி ஒரு அசம்பாவிதத்தை ஏற்படுத்துவது ஒழுங்கல்ல. இதனால் எங்கள் கட்சிக்கு 14வது இடத்தைக் கொடுக்கிறீர்கள். ஒன்றரை அல்லது இரண்டு மணிக்குத்தான் எங்களுக்கு பேச வாய்ப்பு கிடைக்கிறது. 5 நிமிஷங்களுக்கு மேல் பேச முடிவதில்லை. எனவே, நாங்களும் இந்தப் போக்கைக் கண்டித்து வெளிநடப்பு செய்கிறோம்.

(பின்னர் காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்பு செய்தனர்)

**திரு. பொ. உத்திராபதி :** துணைத் தலைவர் அவர்களே, பட்ஜெட் விவாதம் வருகின்றபோது எங்கள் கட்சிக்கு 7, 8 ஆவது இடம்தான் வருகிறது. எங்களுக்கு 5, 3 நிமிஷங்கள் கூட பேச வாய்ப்பு கிடைப்பதில்லை. இந்த மாதிரிப் போக்கை . . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கட்சியிலுள்ள எண்ணிக்கையை வைத்துத்தான் நேரம் ஒதுக்கப்படுகிறது. சில கட்சிகளிலே 1, 2 பேர்கள் இருக்கிறார்கள்; சில கட்சியிலே 7 பேர்கள் அல்லது 20 பேர்கள் இருக்கிறார்கள். ஆகவே, அந்த அடிப்படையிலேதான் நேரம் ஒதுக்கப்படுகிறது.



**திரு. பொ. உத்திராபதி :** குறை சொல்லவில்லை. அத்தகைய வாய்ப்பு இருக்கிறது. தொடர்ந்து இப்படிக் கடுமையான சொற்களை, தவறான சொற்களைப் பயன்படுத்தினால், தமிழ்நாட்டு மக்கள் என்ன நினைப்பார்கள்? எனவே, இந்தத் தவறான பேச்சைக் கண்டித்து, எங்கள் கட்சியைச் சார்ந்தவர்களும் வெளிநடப்பு செய்கிறோம்.

(பின்னர் கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்பு செய்தனர்.)

துணைத் தலைவர்

**திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் :** சட்ட அவர்களே, தொடர்ந்து இப்படிச் சம்பவங்கள் நடப்பதின் காரணமாக, இதர ஆக்கபூர்வமான மன்றத்தின் கவுரவம் கூடப் பாதிக்கப்படுகிறது. ஒரு தவறான இப்படிப்பட்ட விஷயங்களைப் பற்றி பேசுவதற்கு பதிலாக, மார்க்சிஸ்ட் நிலைமை ஏற்படுகிறது. இதை நாங்கள் கண்டிக்கிற முறையிலே கம்யூனிஸ்ட் கட்சி வெளிநடப்பு செய்கிறது.

(பின்னர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்பு செய்தனர்.)

பேராசிரியர் அவர்கள்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ரெபர் செய்த அந்த வாசகத்தை நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

(நண்பகல் 12.00)

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் இன்னொன்றையும் ஞாபகப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் * என்று சொன்னார்கள். அதையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதையும் சேர்த்து நீக்குகிறேன்.

**திரு. ஆர். தியாகராசன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1982-83 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். சுணக்கு நிலைமையைப் பற்றி நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். சென்ற ஆண்டு தமிழகத்தில் நிதிநிலை சரியான முறையில் இல்லாததாலும், வானம் பொய்யாத

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

காரணத்தாலும் பல மாவட்டங்களில் வறட்சி நிலை ஏற்பட்டு இன்னமும் அந்த மாவட்டங்கள் தங்களுடைய பழைய நிலையை அடையாத நிலையில் இருக்கின்றன. தென்னார்க்காடு, வட ஆர்க்காடு மாவட்டங்களில் விவசாயிகள் மின்சார மோட்டார்களை வைத்து விவசாயம் செய்வது அரசுக்குத் தெரியும். இன்றைய நிலையில் மோட்டார் போடவேண்டுமென்றால், குறைந்தது 15 ஆயிரம், 20 ஆயிரம் என்று செலவாகிறது. ஆகையினால் விவசாயிகளின் விளை பொருள்களுக்கு நியாயமான விலை நிர்ணயிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் அவர்களுக்கு இப்போது சரியான விலை கிடைப்பதில்லை. மின்சார வரியை அதிகப்படுத்துகிறோம் என்று நிதியமைச்சர் அவர்களும், மற்றவர்களும் கூறியுள்ளார்கள். இன்றைக்கு சென்னையை எடுத்துக் கொண்டால் பல ஆடம்பரக் காரியங்களுக்காக செலவிடப்படும் மின்சாரத்தை கிராமப் பகுதிகளுக்குக் கொடுத்தால் குறைந்தது ஒரு இரண்டு மாவட்டங்களுக்கு அவைகள் தன்னிறைவு பெறுவதற்கு உதவியாக இருக்கும். இதற்கான உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் விவசாயிகள், அரிசனங்கள், ஏழை எளியவர்கள் வீட்டு மனை பெறுவதற்குரிய, அதற்கான உதவிகளைச் செய்யக்கூடிய திட்டங்களை நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் தீட்டுவதற்கு சற்று மறந்து விட்டார்கள் என்றே என்னுடைய கருத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நகர்ப்புறங்களில் இருப்பவர்கள் மாதத்திற்கு 300 ரூபாய் அளவில் சம்பளம் வாங்கிக் குடும்பத்தை நடத்தி வருவதை அனைவரும் அறிவோம் கிராமப்புறங்களில் விவசாயிகளின் நிலையை எண்ணிப் பார்க்க வேண்டும் அரிசனங்களுக்கும், ஏழை விவசாயிகளுக்கும் வீட்டு மனை கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கு மனை கொடுக்கும் திட்டம் நிதிநிலை அறிக்கையிலே இல்லை.

உணவு கொடுக்கும் திட்டத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். கிராம வளர்ச்சித் திட்டங்களைக் குறித்து இந்த நிதிநிலை அறிக்கையில் எதுவும் இல்லை. விவசாயிகளுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை நினைவு கூர்ந்து, அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் தாங்க முடியாத கடன் சுமையைக் குறைப்பதற்குத் திட்டங்கள் வகுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். விவசாயிகள் தங்களுடைய பணியைத் தாய்மையாக வைத்துக் கொண்டு பணியை ஆற்றினால்தான் நாடு அந்த அளவிற்குப் பயன் பெறமுடியும். அவர்கள் வாழ்வு வளம்பெற, அவர்கள் பட்ட கடனை அரசு ஏற்றுக்கொண்டு விடுதலை அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.





விருத்தாசலம் தொகுதியில் விருத்தாசலம், பெருவம்பார், மாவனந்தல் சென்னை செல்லும் பெருவழிச் சாலையிலே ஒரு ஹைவேஸ் ரோடு வந்து இணைகிறது. குறுக்கே உள்ள மணிமுத்தா நதியில் ஒரு பாலம் கட்டவேண்டுமென்று எனக்கு முன்னால் இருந்த சட்டமன்ற உறுப்பினர்களும் நானும் வற்புறுத்திக் கூறினோம். அமைச்சரிடத்திலே நேராகவும் சொன்னோம், தன்னிறைவுத் திட்டத்திலே சேர்த்துக் கொள்ளுங்கள் என்று சொன்னோம். தன்னிறைவுத் திட்டத்திலே ஒரு இலட்சத்திற்கு மேலே எடுத்துக் கொள்ள முடியாது, அதனாலே முடியாது என்று சொன்னார்கள். சரி, பார்ட் டு ஸ்கீமிலே எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்னோம், பார்க்கிறேன் என்றார்கள். உள்ளாட்சித் துறை அமைச்சரிடத்திலே நான் சென்று இந்தப் பாலம் எந்த அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை எடுத்துச் சொன்னேன். 40 ஆயிரம் மக்கள் 15, 20 கிராம மக்கள் நகரத்தோடு தொடர்பற்ற நிலையிலே இருக்கிறார்கள். ஆகவே, அமைத்துத் தர வேண்டுமென்று பல முறைகள் சொல்லியும்கூட அமைச்சரும் அரசும் கவனிக்கவில்லை. ஆனால் இவர்கள் சொல்கிறார்கள் மத்திய சர்க்கார் எங்களைப் புறக்கணிக்கிறது, புறக்கணிக்கிறது என்று, எங்களுக்கு எதுவுமே கொடுக்கவில்லை, செய்யவில்லை, அந்த மாநிலத்திற்கு அப்படிச் செய்கிறார்கள், இந்த மாநிலத்திற்கு இப்படிச் செய்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அமைச்சர்கள் எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள் பகுதியிலே உள்ளவற்றைச் சிறப்பான முறையிலே செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே மணிமுத்தா அணை பல ஆண்டுக் காலத்திற்கு முன்னாலே வெள்ளையர் காலத்திலே கட்டப்பட்டது. அதன்மூலமாக சிறப்புமாக விவசாயம் செய்து வாழ்ந்த மக்கள், முப்போகம் விவசாயம் செய்து வாழ்வும் வளமும் பெற்று வந்த அந்த மக்கள் இன்றைக்கு அதற்கு மேலே மணிமுத்தா, கோமுகி, மயூரா என்ற மூன்று அணைகள் கட்டப்பட்ட காரணத்தினால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதன் காரணத்தினாலே அந்தப் பகுதியிலே உள்ள விவசாயிகள் பாதிக்கப்பட்டு நஞ்சை பயிர்செய்வதை விட்டுவிட்டு புஞ்சைக்கு மாற்றிவிடுகின்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது. ஏற்கெனவே நன்றாக இருந்ததை மாற்றுகிற வகையிலே—வசதியாக இருக்கின்றவர்களிடமிருந்து எடுத்து வசதியில்லாதவர்களிடம் கொடுக்கிறமாதிரி—செய்து விட்டார்கள். அவர்களுக்கு தண்ணீர் கொடுக்கிற திட்டம் அந்தத் திட்டத்திலே இல்லை. அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், பாதிக்கப்பட்டவர்களுக்கு சாத்தனூர் வலதுகரைக் கால்வாயிலிருந்து வரும் தண்ணீரின் ஒரு பகுதியைக் கொடுப்போம், பாதிக்கப்பட்ட மக்களுக்கு திருப்தி ஏற்படும் அளவுக்குப் பாசனத்திற்குத் தண்ணீர் கொடுக்கப்படும் என்று சொல்லியும்கூட ஒரு ஆண்டு ஆகியும்கூட எந்த

[திரு. ஆர். தியாகராசன்] [1982 மார்ச் 4

ளை அனைவரையும் அரசாங்கமே எடுத்துக் கொள்ளலாம் என்பது டைய கருத்து. அவ்வாறு எடுத்து அவர்களைத் தகுதி உள்ளவர்களா க்குவதற்குச் செய்ய வேண்டிய அனைத்துச் செலவுகளையும் அரசாங்கமே செய்து, அவர்கள் வளர்ந்த பிறகு வேலைக்கு அனுப்புகின்ற முறையில் செ யலாம். இப்பொழுது இந்த நாட்டில் ஏழை பணக்காரன், ஜாதி, மதம், இன என்றெல்லாம் கூறுகிறோமே அதை நீக்கி ஒரே இடத்தில் படித்து வருவத கான நிலைமை ஏற்படும் என்பது என்னுடைய கருத்து. இன்றைய தின பெரும்பாலும் ஏழைகளாக இருக்கின்ற பெரியவர்கள் சாராயம் குடிக் றார்கள். அந்தச் சூழ்நிலையில் இந்தக் குழந்தைகள் அங்கே படிக் முடியாது. சாராயத்திற்குக் கொடுக்கக் கூடிய பணத்தை ஏழைகளுக்கு கொடுத்தால் நல்லதாக இருக்கும். அரசாங்கம் இந்த ஏழைக் குழந்தைகளின் நலன்களைக் கருதி இதற்காக வரி போட்டாவது எல்லோரும் சமத்துவம் என் முறையில் 5 வயதிற்கு மேற்பட்ட விடில்லாத அனாதைக் குழந்தைகள் அனை வரையும் அரசே எடுத்து வளர்த்து அவர்களைத் தகுதியுள்ளவர்களாக ஆக் வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதற்குச் செலவாகும் நிதியை சாராயத்திலிருந்து வரும் பணத்திலிருந்து எடுத்துக்கொள்ளலாம். அல்லது, ஏதாவது வரி போட்டால் கூட பாவ யில்லை. சமுதாயத்தில் பெரிய இடத்தைப் பெறுவதற்காக அந்தச் செலவு செய்தால், இந்த அரசுக்கு நல்ல பெயர் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. ரூபாய் 100 கோடி ஏழை மாணவர்களுக்குப் புரட்சித் தலைவர் ஒதுக்கி யிருப்பதை நான் பாராட்டுகிறேன். அதுபோல், இன்னும் பெரும் பாராட்டுதலைப் பெற வேண்டுமானால் நான் சொன்னதைச் செய்ய வேண்டு மென்பது என்னுடைய கருத்து.

ஆனால், ஏனோ தெரியவில்லை, விவசாயிகளிடத்திலே அவருக்கு மனம் நிறைவுடடவே இல்லை. எப்பொழுது பார்த்தாலும், எங்காவது போராட்டம் நடத்துகிறார்களே என்றோ என்னவோ, அவர்கள் மேல் எண்ணம் செல்ல வில்லை. நான் மீண்டும் சொல்கிறேன், விவசாயிகள் நலிவுற்றுப் போயிருக் கிறார்கள் என்பதை உணர வேண்டும். காரணம், உரவிலை ஏறி விட்டது. இடுபொருள்களின் விலை ஏறிவிட்டது, மின்சார விலை உயர்ந்துவிட்டது, கூலி உயர்ந்து விட்டது, பாசனத்திற்கு ஏர் ஓட்ட ரூ. 10, 15. ஆனால், நெல் விலையை உயர்த்த மறுக்கிறார்கள். (குறுக்கீடு) நாட்டிலே இருக்கிற சிலர், தொழிலாளி, தொழிலாளி என்று மட்டும்தான் பேசுகிறார்கள். மற்றவர்களைப் பற்றியெல்லாம் பேசுவதில்லை. இங்கு விவசாயிகள் நிறையபேர்கள் இருக்கிறார்கள். ஆனால். அவர்களைப் பற்றிப் பேசுவதற்கு



1982 மார்ச் 4] [திரு. ஆர். தியாகராசன்]

தொழிலாளி ஒரு இடத்திலே அடிபட்டால், உடனே இங்கு சத்தம் வருகிறது. எல்லோரும் பேசுகிறார்கள். விவசாயிகள் அங்கே அடிபடுகிறார்கள், உதைபடுகிறார்கள். அவர்களைப் பற்றிப் பேச நாதி யில்லை. விவசாயிகள் இந்த நாட்டினுடைய முதுகெலும்பு என்று சொல்கி றார்கள். சொல்வதோடு சரி. ஆகவே முதல்வர் அவர்களே, பெரும் பொறுப்பு எடுத்துக் கொண்டு அவர்கள் விஷயத்திலே ஏதாவது செய்ய வேண்டும். அவர்களுக்கு என்ன, என்ன செய்தால் நல்லது என்று பார்க்க வேண்டும். ஆனால், இதுவரை என்ன செய்யப்பட்டிருக்கிறது ? ஒன்றும் செய்யவில்லை. 3 ஆண்டுகளுக்கு முன்புகூட, பாசன வாய்க்காலில் 3 அடி, 4 அடி வெட்டினால் தண்ணீர் வரும். அத்தகைய வாய்க்கால்களைக்கூட இந்த அரசு சீர்திருத்தம் செய்யவில்லை. பல ஆண்டுகளாக அவற்றைத் தூர் வார வில்லை. இதனால் இப்பொழுது ஒரு ஆள் உயரத்திற்குத் தோண்டித்தான் தண்ணீர் பாய்ச்ச வேண்டியிருக்கிறது. இந்த நாட்டிலே அதிகமாக வெயிலிலும், மழையிலும், சேற்றிலும், காய்ந்து, கருவாடாகிக் கொண்டிருப் பவன் விவசாயிதான். விவசாயிகள் ஏதாவது சொல்லிவிட்டு, உங்களைக் கோபமூட்டுகிறார்கள். ஒரு ஊரிலே ஒரு திருடன் இருந்தால், அந்தக் கிராமத் திலே இருப்பவர்கள் அனைவரும், அயோக்கியர்கள், திருடர்கள் என்று நினைக்கக்கூடாது. அப்படிச் சொல்வது தவறு. அதுபோல்தான் யாராவது ஒரு விவசாயி ஏதாவது சொன்னால், அதை ஏற்றுக் கொள்ளக் கூடாது. உழைத்துப் பலன் அடையாத விவசாயிகள், பல கோடிக்கணக்கானவர்கள் இருக்கிறார்கள். பெரிய விவசாயிகள் சில பேர்கள் இருப்பார்கள். அவர்களுக் கெல்லாம் தனி, ஸ்பெஷல் வரி போடுங்கள். அதற்கு ஆட்சேபனை இல்லை. ஆனால், தாழ்த்தப்பட்ட, சிறு விவசாயிகள் விஷயத்திலே, உங்களுடைய மனதைத் திருப்பிக் கொஞ்சம் கருணை காட்ட வேண்டும். அதைப் போல் விவசாயிகள் கூலி விஷயத்திலும் நிர்ணயம் செய்ய வேண்டும். இந்தப் பிரச் னையை அரசு முடிக்காமல், அதற்கு நல்ல வழி காண முடியாது. ஒரு இடத் திலே ரூ. ஒன்றரைக்கு வேலை செய்யக்கூடிய நிலையிருக்கிறது. இன்னொரு இடத்திலே ரூ. இரண்டரைக்கு வேலை செய்யக்கூடிய நிலை இருக்கிறது. இன்னொரு பக்கத்திலே ரூ. 10-க்கு வேலை செய்யக்கூடிய நிலையிருக்கிறது. தஞ்சாவூரிலே அதிகக் கூலி வாங்கக்கூடிய தொழிலாளி இருக்கிறான். ஆகவே, விவசாயிகளையும் தொழிலாளிகளையும் வைத்துப் பேசி, இதில் ஒரு முடிவு கொண்டு வரவேண்டும். இன்னொன்று, 33 ஆண்டுகள் ஆகின்றன. இன்னும், இன்ன கூலிக்கு, இவ்வளவு வேலை என்று நிர்ணயிக்கவில்லை. உங்கள் இவ் வளவுதான் கூலி, இவ்வளவுதான் வேலை என்று நிர்ணயம் செய்யுங்கள்.

...ப்பணையும் அவர்கள் அடையவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதை அமைச்சரும் அரசும் கவனித்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து என் தொகுதியிலே சம்பந்தப்பட்டதுதான் இதுவும். நெய்வேலி ஒன்றாவது நிறுவனம், இரண்டாவது நிறுவனம் எல்லாம் இருக்கிறது. அங்கே ஒன்றாவது நிறுவனத்திலே கரி எடுக்கிற நேரத்திலே எடுக்கப்படுகின்ற தண்ணீர் பரவனாற்றிலே போய்ச் சேரும்படி விடப்படுகிறது, அதனால் விவசாயிகளுக்குப் பயன் இல்லை. இப்போது இரண்டாவது நிறுவனத்திலே வருகின்ற தண்ணீரை ஜம்பேரியிலே விடுகிறார்கள், அங்கிருந்து பிறகு பரவனாற்றிற்கு விடுகிறோம் என்று சொல்கிறார்கள். அந்த நீரை மணிமுத்தாவிலே கொண்டு வந்துவிட்டால் அதனால் 10 கிராமங்களாவது பயன் அடையும். ஆனால் என்.எல்.சி.-யினர் ஜம்பேரியிலேதான் விடுவோம் என்று சொல்கிறார்கள். ஜம்பேரி சிறிய குட்டை, அங்கே விடுவதற்குத்தான் திட்டமிடுகிறார்கள். நம்முடைய மாநில அரசு தலையிட்டு அதை விருத்தாசலம் அணையிலே விடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நெய்வேலியில் உள்ள முதல் நிறுவனத்திலே தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுப்பதிலே சரியாக நடக்கவில்லை. என்றாலுங்கூட இரண்டாவது நிறுவனத்திலாவது அதற்காக நிலம் கொடுத்த, மனை கொடுத்த தொழிலாளர்களுக்கு ஏழைகளுக்கு வேலை கொடுப்பதற்குத் திட்டமிடப்பட்டு அமைச்சரும், மாவட்ட ஆட்சித் தலைவரும், கார்பரேஷன் எம்.டி.யும் பேசி ஒரு முடிவு எடுக்கப்பட்டது. 100-க்கு 65 சதவிகிதம் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்று அன்றைக்குப் பேசி முடிவெடுக்கப்பட்டது. ஆனால் இன்றைய தினம் வரை சுமார் 200 பேர்கள், 220 பேர்களுக்குத்தான் வேலை கொடுத்திருக்கிறார்கள். மீதியுள்ள, ஏழைமக்களுக்கு, பாதிக்கப்பட்டவர்களுக்கு வேலை கொடுக்கவில்லை என்பதை அரசின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

(பிற்பகல் 12.10)

அடுத்தபடியாக, கம்மாவரம் பஞ்சாயத்து யூனியனிலே நடுவிலே மணிமுத்தாறு நதி போய்க் கொண்டிருக்கிறது. கம்மாவரத்திலிருந்து பல கிராமங்களுக்குச் செல்ல வேண்டுமென்றால் மணி முத்தா ஆற்றைக் கடந்துதான் செல்ல வேண்டும். கம்மாவரத்தில்தான் அனைத்து அரசு அலுவலகங்களும், காவல் அலுவலகம், ரெஜிஸ்தார் ஆபிஸ், மருத்துவ மனைகள் போன்றவைகள் இருக்கின்றன. எனவே, தேவங்குடி, புத்தூருக்கு ஒரு நடை பாலம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று நானும் மனுக் கொடுத்திருக்கிறேன். மாவட்ட ஆட்சித்





தலைவரவர்களும் வளர்ச்சிமன்றக் கூட்டத்தில் அவசியம் இந்தப் பாலம் கட்டப்பட வேண்டுமென்று சிபார்சு செய்திருந்துங்கூட, அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதைச் சொல்லிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

விருத்தாசலத்திலுள்ள உயர்நிலைப் பள்ளி, கலைக் கல்லூரி போன்றவற்றிற்கு ஹாஸ்டல் கட்டிடம் கிடையாது. ஹாஸ்டல் ஒரு சத்திரத்தில் இருந்தது. அதுவும் இடிந்து விட்டது. இப்பொழுது வாடகைக் கட்டிடத்தில்தான் இருந்து கொண்டிருக்கிறது. ஏழைகள் நிறைந்த அந்த பேக்வேர்ட் பகுதியில் மாணவர்கள் தங்கிப் படிப்பதற்கு இதுவரைக்கும் ஹாஸ்டல் கட்டிடம் இல்லை. நான் இதுபற்றிப் பல முறை கோரிக்கைகள் வைத்திருக்கிறேன். கல்லூரி முதல்வரவர்களும் எழுதியிருக்கிறார்கள். எனவே அங்கே ஒரு ஹாஸ்டல் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அங்குள்ள முனிசிபல் கோர்ட் போன்ற நீதிமன்றங்களும் வாடகைக் கட்டடத்தில்தான் இருக்கின்றன. விருத்தாசலம் தென்னார்க்காடு மாவட்டத்தின் தலைநகரமாகக் கொஞ்ச ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த பெரிய நகரமாகும். அங்கே இரயில்வே ஸ்டேஷன் இருக்கிறது; தாலுக்கா அதிகாரிகள் இருக்கிறார்கள், சில மாவட்ட அதிகாரிகள்கூட அந்தப் பகுதியில் இருக்கிறார்கள். அவர்கள் தங்குவதற்கான வீட்டு வசதி கூடக் கிடையாது. காரணம், சென்னை, திருச்சி போன்ற இடங்களில்தான் வீட்டுவசதி வாரியம் வீடுகள் கட்டிக் கொடுக்கின்றனவே தவிர சிறு நகரங்களிலே கட்டித்தருவதில்லை. இதன்காரணமாகச் சிறு நகரங்களிலே அதிகாரிகள் தங்கமாட்டேன் என்கிறார்கள். அம்மாதிரி சிறு இடங்களுக்குப் போடப்படும் அதிகாரிகள் சிபார்சு பிடித்து வேறு இடங்களுக்குப் போய் விடுகிறார்கள். உதவிக் கோட்டப் பொறியாளர்களெல்லாம் அந்தப் பகுதிக்கு வேலைக்கு வந்தால் கெஸ்ட் ஹவுசில் தங்கிக்கொண்டு பிறகு அந்த ஊரை விட்டு மாற்றிக்கொண்டு போய்விடுகிறார்கள். கேட்டால், வீடு கிடைக்கவில்லை தங்க மாட்டோம் என்று சொல்கிறார்கள். எனவே, சிறு சிறு முனிசிபல் நகரங்களிலேயும் மாநகராட்சிகளில் கட்டிக் கொடுப்பதைப் போல வீடு கட்டும் திட்டத்தின் கீழ் அரசு அதிகாரிகள் தங்குவதற்காகவும், மற்ற அதிகாரிகள் தங்குவதற்காகவும், இடம் கொடுத்து ... பகுதிகளை வளர்ப்பதற்கு வீடு கட்டும் திட்டத்தை கிராமப் பகுதிகளிலும் அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குழந்தைகளுக்கு உணவு அளிப்பதற்காக 100 கோடி ரூபாய் செலவு செய்யப்போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அது வரவேற்கப்பட வேண்டிய ஒன்றுதான். இப்படி ஒரு வேளைச் சோறு, அரை வேளைச் சோறு என்று போடுவதைவிட, அனாதைகளாகவும், ஏழைகளாகவும் உள்ள ...

(பிற்பகல் 12-20)

அந்த இந்த அரசு அல்ல வேறு எந்த அரசும் இதைப் பற்றிச் செ... வில்லை. விலை நிர்ணயம் செய்தால் தான் கூலி நிர்ணயம் செய்ய முடியும், கூலி நிர்ணயம் செய்தால்தான் விலை நிர்ணயம் செய்ய முடியும். ஒரு நாளைக்கு ஆள் பஞ்சம் இருந்தால் 25 ரூபாய் கூட கூலி கேட்பார்கள். அடுத்த நாள் அதிகம் பேர்கள் வந்தால் 1 ரூபாய் தான் கொடுப்பார்கள். இதை எல்லாம் சமப் படுத்தி, விவசாயிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் உதவி செய்கின்ற வகையில் கூலி நிர்ணயத்தையும், விலை நிர்ணத்தையும் செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் கிராமங்களிலே உள்ள விவசாயிகளிடம் தொழில் ஒற்றுமை நீடிக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் ஜல்லி ரோடு போடுவதை எடுக்க மாட்டேன் என்று சொல்லுகிறார்கள். கேட்டால் ரோலர் கிடைக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். ஜல்லி ரோடு போட்டால்தான் நல்லது. மண் ரோடு போட்டால் மழை வந்தால் அரித்துக் கொண்டு போய்விடும். இப்போது அங்கே வெயில் அதிகமாக காய்வதால் அங்கே 2 கிலோ மீட்டர் ரோடுகூட போட முடியவில்லை. அவ்வளவு காய்ந்து ரோடு இறுக்கிக் கொண்டு உள்ளது தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் வேலை செய்கின்றவர்களுக்கு ஒரு கிலோ அரசியும் 2½ ரூபாய் கூலியும் தரப்படுகிறது.

இதிலே கிராம சேவக்குகளிடம் இந்த வேலைகள் ஒப்படைக்கப் பட்டுள்ளது. அவர்கள் வைத்ததுதான் சட்டமாக இருக்கின்றது. அதிலே ஏகப்பட்ட ஊழல் நடைபெறுகிறது. கிராம சேவக்குகள் வேலையில் வேறு யாரும் தலையிட முடியாத நிலை இருக்கின்றது. நானும் என் தொகுதியில் ஒரு சில இடங்களில் செக் செய்தேன். எல்லா இடங்களிலும் செக் பண்ண முடியாத நிலை இருக்கின்றது.

கிராம சேவக்கு, ஓவர்சியர், இன்ஜினியர், ஊராட்சி ஒன்றிய கமிஷன இவர்கள் வைத்ததுதான் சட்டமாக இருக்கின்றது. இதை கவனித்து நட வடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மற்றபடி தன் னிறைவுத் திட்டத்தின்கீழ் பாதை வேலைகள், பால வேலைகள் இவைகள் நல்ல முறையில் நடந்து கொண்டு இருக்கின்றன. அதை நான் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் குடிநீர் தருகிற வேலைதான் சரிவ நடக்கவில்லை. ஒரு இடத்திலே தருகிறார்கள். பல இடங்களிலே தரு தில்லை. டிரௌட் ரிலீப் என்று சொல்லி தெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷ டிஸ்லர்போட்டு ஆழ் கிணறு தோண்டினார்கள். ஆனால் அதற்காக பண





கொண்டு இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்குப் பணம் சேர ஏற்பாடு செய்யவேண்டும், அமைச்சர் அவர்கள் அதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டு, வாய்ப்பு தந்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய முதல்வர், பேரறிஞர் அண்ணா அவர்கள் அன்புத் தம்பி, இதயதெய்வம் புரட்சித் தலைவர் ஆட்சியிலே 1982-83 ஆண்டுக் கான நிதி நிலை அறிக்கையை மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் இந்த மன்றத்திலே அளித்திருப்பதை ஆதரித்துப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த உங்களுக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தின் கடைசிப் பகுதியிலே இருக்கின்ற நான் தஞ்சை மாவட்டத்தின் 'டெயில் என்ட்' என்று சொல்லக் கூடிய சீர்காழி தாலுக்கா மேட்டூர் தண்ணீரை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற இந்த நாளிலே, பிப்ரவரி மாதம் 15-ந்தேதியே தண்ணீரை நிறுத்தவேண்டிய நிலை இருந்தும், தஞ்சை மாவட்ட விவசாயிகள் நிலை கருதி இதயதெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் 15 நாட்களுக்கு தண்ணீர் விடுவதற்கு நீட்டித்துக் கொடுத்ததற்கு தஞ்சை மாவட்ட மக்களின் சார்பாக புரட்சித் தலைவர் அவர்களுக்கும், நீர்ப்பாசன அமைச்சர் அவர்களுக்கும் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மன்றத்திலே அளிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையிலே ஒன்றுமே இல்லை என்று சொன்னார்கள். நான் இங்கே குறிப்பிட விரும்புவது இது மணிமேகலை கையிலே இருந்த அமுதசுரபியாகிய அட்சயப் பாத்திரம் என்று சொன்னால் அது மிகையாகாது. காரணம், மணிமேகலை கையில் இருந்த அந்த அட்சயப் பாத்திரத்தை யாரிடத்தில் கொடுத்து, அமுதத்தை முதலில் பெறவேண்டும் என்று யோசித்து, பின்னர் ஆதிரையைத் தேடிச் சென்று, அந்த ஆதிரையின் கையாலே உணவு பெற்று அங்கேயிருக்கிற உலகத்தின் பட்டினிப் பசியைப் போக்கினர் என்பது மணிமேகலை வரலாறு. அதேபோல்தான் இன்றையதினம் தமிழகத்தின் இதய தெய்வம், புரட்சித் தலைவர் அவர்கள் ஏழை மக்களுக்கு அளித்த அட்சயப் பாத்திரத்தை முதலில் இந்த அவையில் வைத்த நாவலர் அவர்கள், அந்தப் பத்தினிப் பெண் ஆதிரையைப் போல், மனிதர்களிலே, ஆண்களிலே பத்தினியாக இருக்கிற நாவலர் அவர்கள் இந்த அவைக்கு அளித்திருப்பதை பாராட்டக்குரியது என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மணிமேகலை ஆசிரியர் சீத்தலைச் சாத்தனார் சொல்வார்

“ மண்டினி ஞாலத்தில் வாழ்வோர்க்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே ” என்று

அந்த அளவிற்கு புரட்சித் தலைவர் அவர்கள் இந்தத் தமிழகத்திற்கு நல் முறையில் இந்த அறிக்கையைத் தந்து இருக்கிறார்கள் என்பதை இங் யிருக்கிற மாண்புமிகு உறுப்பினர் மட்டுமல்ல, தமிழகத்தில் உள்ள அனைவரும் கடல் கடந்து சென்றுள்ள நாடுகளில் உள்ள மக்களும் உளமாரப் பாராட் கிறார்கள் என்பதை நான் அறிவேன்.

திருவள்ளுவர் பெருந்தகைச் சொல்கிறார்

“ முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும் ” என்று

அந்த அளவிற்கு இறைவனுக்குச் சமமாகவே ஏழை எளியவர்களுக்கா ஆட்சிக்கு வந்து, அந்த ஆட்சியை பயன்படுத்திக்கொண்டு இருக்கின்ற இத தெய்வம், புரட்சித் தலைவர் அவர்கள் போடுகின்ற ஒவ்வொரு திட்டமும் எந்த அளவிற்கு யாரை பாதிக்கும், யாரை பாதிக்காது என்று பார்த்து, நல் முறையில் போடப்படுகிறது என்பதை எண்ணிப்பார்த்து. அதனை பாராட்டாமல் இருக்க என்னால் முடியவில்லை.

மகாகவி பாரதி சொன்னான் :

“ ஏழை என்றும் அடிமை என்றும் எவருமில்லை ஜாதியில்
இழிவு கொண்ட மனிதரென்பர் இந்தியாவில் இல்லையே ” என்று.

அவரைத் தொடர்ந்து வந்த பாரதிதாசன் சொன்னார் :

“ கோரிக்கையற்று கிடக்குதண்ணே
இங்கே வேரில் பழுத்தபலா
மிகக் கொடியதென்றெண்ணிடப் பட்டதண்ணே
குளிர் வடிகின்ற வட்டநிலா ” என்று.

நம்முடைய தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் எல்லாம் இப்படிக் கூறியிரு கிறார்கள். இங்கேயிருந்து மட்டும் பார்க்காமல் வடநாட்டில் தோன்றிய மிக பெரிய கவி தாகூர் அவர்கள் ‘ கீதாஞ்சலி ’-யில் என்ன சொல்லியிருக்கிறா என்றால்—

“ மூலையிலே உட்கார்ந்து உத்திராட்சத்தை உருட்டிக்கொண் கடவுளை வேண்டிக்கொண்டு இருண்ட இருட்டில் உட்கார்ந்து கொண் இருக்கிறீர்களே, நீங்கள் தேடுகின்ற ஆண்டவன் இங்கே இல்லை, காலையிலே எழுந்து, மாலை வரை சாலையில் வேலை செய்கிறானே தொழிலாளி



அவனிடத்தில் இருக்கிறான் கடவுள். நெற்றி வியர்வை நிலத்தில் வி பாடுபடுகிறானே விவசாயத் தொழிலாளி அவனிடத்தில் இருக்கிறான் கடவுள் அவனைப் போய் பாருங்கள் ” என்று சொல்கிறார்.

இப்படி அவர்களெல்லாம் சொன்னபிறகும்கூட, தமிழகத்திலே— இந்தியாவிலே என்று சொல்ல மாட்டேன்—ஏழை எளியவர்களுக்கு என்ற நல்ல திட்டங்களை யாராவது போட்டால் அதை வரவேற்கத் தயாராக இல்லை. சுதந்திரம் அடைந்து 35 ஆண்டுகள் கடந்து விட்டன. முறையான திட்டங்கள் இதுவரையில் போடப்படவில்லை. ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள் கீதாஞ்சலியில் சொன்னதைப்போல, சாலையில் வேலைசெய்கிற தாய்மார்கள், ஒட்டுத் துணியோடு, அந்த ஒட்டுத் துணியிலே பிள்ளையைச் சுமந்து கொண்டு, பால் கொடுக்க வழியில்லாமல், மரநிழலில் ஏணை போட்டு தாலாட்டுகிறாளே, அந்தக் குழந்தைக்குப் பால் கொடுக்க திட்டம் தீட்டி யிருக்கிறார். அந்த குழந்தையைத் தாலாட்டுகிறபோது அந்தப் பெண்மணி பாடுகிறாள். “ ஏன் பிறந்தாய் மகனே, ஏன் பிறந்தாயோ, இல்லை ஒரு பிள்ளையென்று, ஏங்குவோர் பலர் இருக்க, இங்கு வந்து ஏன் பிறந்தாய் செல்வமகனே ” என்று அவள் பாடுகிறாள். பின்னர், அவளே சிந்திக்கிறாள். ‘ நான் பிறந்த காரணத்தை நானே அறியும் முன்னே நீயும் வந்து ஏன் பிறந்தாய் செல்வமகனே ’ என்று பாடுகிறாள் என வருணிக்கிறார் கவிஞர் கண்ணதாசன். ஆகவே, அவள் பிறந்த காரணத்தை அவளே அறியமுடியா விட்டாலும், அவளுடைய பிரச்னைகளை புரட்சித் தலைவர் அவர்கள் எப்படியோ புரிந்து கொண்டு, அவர்களுக்கு ஒரு வேளைக்குச் சத்துணவு கொடுக்க முன்வந்து இருக்கிறார்கள் என்றால், அந்த பாச உள்ளம் கொண்ட புரட்சித் தலைவரை இந்த இந்தியாவில் மட்டுமல்ல, இந்த உலகத்திலே உள்ள யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது என்பதை அறுதியிட்டு நான் கூறமுடியும். இன்னும் சொல்லப்போனால், புதிய சமுதாயம் உருவாக்க வேண்டும் என்று சொல்கிறோம். அந்தப் புதிய சமுதாயம் உருவாக்கவேண்டும் என்று சொன்னால், புதிய உணர்வு வரவேண்டும். அந்தப் புதிய உணர்வு வருவதற்குப் பொதுவான உணவு தரவேண்டும். அந்தப் பொதுவான உணவு தந்தால்தான் புதிய உணர்வு வரும். அந்தப் புதிய உணர்வு வந்தால் தான் புதிய சமுதாயத்தை உருவாக்கமுடியும். இது தான் இயற்கைத் தத்துவம். அந்தத் தத்துவத்தை எப்படிப் புரிந்துகொண்டாரோ புரட்சித் தலைவர் அவர்கள். அத்தனை தத்துவவாதிகளையும் தூக்கி எறிந்து விட்டு இன்று தமிழகத்தில் புது மாதிரியான ஒரு திட்டத்தை, ஏழை எளிய மக்களுக்கு சத்துணவு வழங்கும் திட்டத்தைக்கொண்டு வந்து இருக்கிறதை யாராலும் பாராட்டாமல் இருக்க முடியாது.

(பிற்பகல் 12-30)

இந்த நேரத்திலே நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். புரட்சித் தலைவருடைய இந்த நிதிநிலை அறிக்கையிலே ஒன்றும் இல்லை என்று விவரம் புரிந்தவர்கள்கூட சொன்னார்கள். நான் சொல்கிறேன். "கூடி உழைக்கும் தொகுப்புத் திட்டம்" என்ற ஒரு நல்ல திட்டத்தை ஆதி திராவிட மக்களுக்கு இதிலே கொடுத்திருக்கிறார்கள். வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கடன் உதவி, இதர சலுகைகள் கொடுக்க வேண்டுமென்று இந்த நிதிநிலை அறிக்கையிலே அறிவித்திருக்கிறார்கள். ஏழு கோடி ரூபாய் செலவில் 18,000 கிராம கைவினைஞர்கள் தொழில் செய்வதற்கு உதவி செய்கின்ற பல்வேறு திட்டங்கள் இதிலே இடம் பெற்றிருக்கின்றன. இதை எல்லாம் திட்டம் இல்லை என்று சொல்கிறார்கள்.

என்னுடைய தொகுதியில் பழையாறு மீன்பிடித் துறைமுகம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசின் தொகை கொண்டு நிறைவேற்றப்பட இருக்கிற அந்தத் திட்டம் நல்லமுறையில் செயல்பட்டால் ஏறத்தாழ ஆயிரம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

இன்னும் ஒரு உயர்ந்தத் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். வெளி நாடுகளில் இருக்கிற தமிழர்கள் எவ்வளவோ பணத்தை குவித்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த பணத்தை இங்கே கொண்டுவந்து புதிய திட்டங்களை உருவாக்கி, அவர்களுக்கு தவணை முறையில் பணத்தைத் திருப்பிக்கொடுக்கவும், அந்தத் தொகையை வைத்து தமிழ்நாட்டில் தொழில் மேம்பாட்டுக் கழகம் மூலம் நல்ல பல திட்டங்களை நிறைவேற்றவும் ஒரு திட்டத்தை இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்காக இந்த அரசை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்ட ஒரு கருத்தைப்பற்றி இங்கேச் சொன்னார்கள். 'வசதி படைத்தவர்களை தட்டி எடு, ஏழைகளை நட்டி கொடு' என்று சொன்னார்கள். அதை சிலர் தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறார்கள். அண்ணா அவர்கள் சொன்னது வசதி படைத்த பணக்காரர்களுடைய கதவைத் தட்டி, அங்கே உபரியாக இருப்பதை எடுத்துவந்து, அதைக் கொண்டுவந்து, ஏழை எளியவர்கள் சிற்றால் ஆன தட்டியை கதவாகக் கொண்ட குடிசைகளில்தானே வாழ்கிறார்கள், அந்த குடிசையிலிருக்கிற கீற்றுத் தட்டியைத் தட்டி கொடுங்கள் என்பது. அதைத்தான் இன்றையதினம் புரட்சித் தலைவர் அவர்கள் செய்துகொண்டிருக்கிறார்கள்.

புரட்சித் தலைவரின் சிறந்த இந்தத் திட்டங்களை எல்லாம் பாராட்ட மனமில்லாதவர்கள் வரி போட்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். எந்த எந்த பொருள்களுக்கு வரி போட்டிருக்கிறார்கள்? யார் கொடுக்க முடியுமோ





அவர்களுக்கு வரி; கொடுக்க முடியாதவர்களுக்கு வரி இல்லை. அதிலும் புதிய வரி எதுவும் இல்லை. இருந்த வரியைத்தான் கொஞ்சம் கூட்டியிருக்கிறார்கள். இதைப் பாராட்டாமல் ஏதோ சொல்கிறார்கள்.

கடைசியாக நான் கூற விரும்புவது, புரட்சித் தலைவரின் சிறந்த இந்தத் திட்டங்களைப் பாராட்ட மனமில்லாத "இங்கேயும் சில மனிதர்கள்" "பராசக்தி" யாக காட்சியளிக்கின்றார்கள். அதோடு நிற்கவில்லை, மற்றவர்களைத் தூண்டிவிட்டு "ஆடு பாம்பே" என்று வேடிக்கை பார்க்கிறார்கள். அதையெல்லாம் கண்டுபிடித்த புரட்சித் தலைவர் "மர்மயோகி" யாக மாறியது "பிள்ளையோ பிள்ளை" என்று கூவித் திரிபவர் கண்களுக்கு கொள்ளையோ கொள்ளை என்று தெரிகிறது. ஆனால் இலவச சத்துணவுத் திட்டத்தின் மூலம் கைகொடுக்க "எங்கள் தங்கம்" ஆக நடைபோடுகிறார் புரட்சித் தலைவர். அவரைப்பார்த்து "மலைக்கள்ளன்" என்று பரிகாசம் செய்பவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், நீங்கள் நடந்துவந்த "மனோகரமான" பாதையை சற்றேனும் "திரும்பிப்பாரு"ங்கள் என்று.

கைத்தறிப் பட்டுத் துணிக்கு வரியை உயர்த்தினால் கை கொட்டி சிரிக்கின்றார்கள்; பதைக்கின்றார்கள்; துடிக்கின்றார்கள். அவர்கள் எந்தப் "பூக்காரி"-க்கு பட்டுப்புடவை வாங்கிக்கொடுக்க எப்போது ஒப்புக் கொண்டார்கள் என்று தெரியவில்லை. நான் கருதுகிறேன், "மந்திரி குமாரி" களாக வளர்த்த தங்கள் பெண் பிள்ளைகளைப் பட்டுப் புடவையால் அலங்கரித்து "அரசிளங்குமரி"-களாக மாற்ற முயற்சித்திருப்பார்கள். அவர்கள் எல்லாம் எங்கே எங்கள் புரட்சித் தலைவர் "மாடிவீட்டு ஏழை" களாக மாற்றிவிடப் போகிறாரோ என்ற ஏக்கப் பெருமூச்சில் "அவன் பித்தனா" என்று கூட சந்தேகிக்கத் தோன்றும். ஆனால் "காஞ்சித் தலைவரின்" அன்புத்தம்பி புரட்சித் தலைவரிடம் ஒன்றும் பலிக்காது என்று தெரிந்திருந்தும் போராட்டம் கூட ஒன்று புதிதாக ஆரம்பிக்கலாம். புழுதி அள்ளி வா- "வண்டிக்காரன் மகன்"-ஆக "பூம்புகாருக்கு" செல்ல. இப்படிப்பட்டவர்களின் வரலாற்றை தமிழக மக்கள் "மறக்க முடியுமா" என்று இந்த நேரத்திலே நினைவு கொள்வது நல்லதென்று கருதுகிறேன்.

அது மட்டுமன்னியில் கடைசியாக ஒரு முயற்சி கூட நடந்தது. அது என்னவென்றால், அதுதான் "நெஞ்சுக்கு நீதி" கேட்டு நடத்திய நெடிய பயணம். அந்த பயணத்திலே பலபேர் "வாலிப விருந்து" உண்டு, "குறவஞ்சி" பாடி போர் எது என்று கூட தெரியாமல் நெடியேறி சென்று வந்ததையும் தமிழகம் கண்டுகளித்தது. அவர்கள் சென்ற நோக்கம் "புதையல்" ஏதாவது கிடைக்காதா என்றுதான். அது என்னவென்று "காலம் பதில் சொல்லும்" என்று கருதுகிறேன்.

இங்கே சிலபேர் தங்களைத் தமிழக மக்கள் “ குலக்கொழுந்தாக ” ஏந்திக் கொள்வார்கள் என்று நப்பாசைப்படுகிறார்கள். அந்தோ பரிதாபம்! அவர்கள் தமிழக மக்கள் முன்னால் “ தாயில்லாப் பிள்ளை ”-களாக காட்சியளிப்பதைப் பார்த்து அனுதாபப்படாமல் இருக்க முடியவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றையதினம் இப்படி புரட்சித் தலைவர் அவர்களுடைய உள்ளத்தைப் புரிந்துகொள்ளாமல், புரட்சித் தலைவரின் நல்லெண்ணத்தைப் புரிந்து கொள்ளாமல் இருப்பதை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஏசுநாதர் அவர்களால் பைபிளிலே ஒன்று சொல்லப்பட்டிருக்கின்றது. அதாவது “ தன்னுடைய கண்ணிலே இருக்கின்ற உத்தரத்தை அகற்ற முயற்சிக்காமல் அயலார் கண்ணிலே இருக்கின்ற துரும்பை அகற்ற நினைக்காதே ” என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அந்தத் தத்துவத்தை தமிழகத்திலே இருப்பவர்கள் அனைவரும் கவனத்திலே கொண்டு இந்த அரசின் திட்டங்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு எனக்கு இந்த வாய்ப்பினை அளித்த துணைத்தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்திலே ஒரு முறை உண்டு. எழுதி வைத்துப் படிப்பது என்பது கன்னிப்பேச்சு ஒன்றுக்குத்தான் உரியதாகும். ஆனால் இப்போது பேசி முடித்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுதி வைத்துக்கொண்டுதான் படித்தார். அவர் மட்டுமல்ல பல உறுப்பினர்கள் இப்படி எழுதி வைத்துக் கொண்டுதான் படிக்கின்றார்கள். இது முறை என்று தாங்கள் அனுமதிப்பதாக இருந்தால் அதுபற்றி இந்த அவைக்கு அறிவிக்கவேண்டும். ஆனால் குறிப்புக்களை பார்த்துப் பேசுவதிலே தப்பு இல்லை, ஆனால் எழுதிவைத்துக் கொண்டு வாசிப்பது என்பது சட்டமன்ற முறைக்கு ஏற்றதல்ல, தங்களுடைய தலைமையிலே அப்படி ஒரு முறை ஏற்றுக்கொள்ளப்படுமேயானால் அதுபற்றி இந்த அவைக்கு தெரிவிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சிலர் குறிப்புக்களை வைத்துக் கொண்டு பேசுகிறார்கள். சில உறுப்பினர் பார்த்து படித்துக் கொண்டு இருக்கிறார்கள். இந்த நிலைமை இரண்டு பக்கமும் இருக்கின்ற உறுப்பினர்களிடத்திலேயும் இருக்கின்றது. ஆகவே பார்த்துப் படிக்கக் கூடாது. குறிப்புகளை வைத்துக் கொண்டு பேசலாம்.



கூடாது என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் அதேநேரத்திலே குறிப்புகளைக் கையிலே வைத்துக்கொண்டு அதைப் பார்க்கவே கூடாது என்று சொல்வது சரியாக இருக்க முடியாது. எல்லா உறுப்பினர்களும் அப்படி குறிப்புகளை கையிலே வைத்துக்கொண்டு பேசலாம், ஆனால் வார்த்தைக்கு வார்த்தை, வரிக்கு வரி அப்படியே பார்த்து படிக்கக்கூடாது என்பதை மட்டும் தீர்ப்பாக வழங்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதைத்தான் நான் சொன்னேன். எழுதி வைத்துக்கொண்டு அப்படியே வார்த்தைக்கு வார்த்தை இங்கே படிக்கக் கூடாது.

* **திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1982-83 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களைக் கூறுவதற்கு அனுமதி அளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு தமிழகத்திலே இருக்கின்ற 4½ கோடி மக்களும் தானைத் தலைவராகவும், இதய தெய்வமாகவும் ஏற்றுக்கொண்டிருக்கின்ற புரட்சித் தலைவர் அவர்களின் அரசிலே நாவலர் அவர்களால் அறிமுகப் படுத்தப்பட்டிருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கை தமிழகத்திலே இருக்கின்ற மக்களுக்கு ஒரு நல்லாதரவை அளிப்பதாகும். இந்த நாட்டிலே இருக்கின்ற வறுமையை விரட்டிவிட்டு நல்ல ஒரு எதிர்காலத்தை உருவாக்கக்கூடிய நிதிநிலை அறிக்கையாக இங்கே வைக்கப்பட்டிருப்பதைப் பார்த்து நான் பெருமைப்படுகிறேன்.

கடந்த ஆண்டிலே ஏற்பட்ட பயங்கரமான வறட்சியின் காரணமாக பல இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டது. அந்த நிலையிலும், உணவு தானிய உற்பத்தியிலே ஒரு நிலையான இடத்தை வைத்துக்கொண்டு, மக்களுக்கு கிடைக்கவேண்டிய அத்தியாவசியப் பண்டங்கள் ஒழுங்கான முறையிலே தமிழக அரசு விநியோகித்ததை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதனுடைய விளைவாக இந்தியாவிலேயே 8 லட்சம் டன் அரிசியும், 0.70 லட்சம் டன் சிறு தானியங்களாகவும், 1.50 லட்சம் டன் பயிறு வகைகளாகவும் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டிருப்பது, வெள்ளாமையிலே, விளைச்சலிலே நாம் முதன்மையாக வந்துக் கொண்டிருக்கிறோம் என்பதற்கு எடுத்துக்காட்டாக அமைந்திருப்பதாகும்.

(பிற்பகல் 12-40)

அதைப்போலவே, நியாய விலைக் கடைகள் மூலம் அத்தியாவசியப் பண்டங்களை வழங்குவதற்காக, புதிய ரேஷன் கார்டுகளை வழங்குவதற்கு வழி செய்யப்போவதாக அறிவித்திருப்பது, எத்தனையோ ஏழை எளிய மக்களுடைய தேவைகளுக்கு ஏற்ப அத்தியாவசியப் பொருள்கள் அவர்களுக்கு

கிடைக்காத காரணத்தால், அந்த மக்களை மனதில் வைத்து, அவர்களுக்கு நிவாரணம் கொடுப்பதற்காகவே செய்யப்பட்டிருக்கும் ஒரு நல்ல ஏற்பாடு. இதை நான் பாராட்டி வரவேற்கிறேன். ஏழை எளிய மக்கள் நல்லமுறையில் அத்தியாவசியப் பண்டங்களை குறைந்தவிலையில் பெறவேண்டும் என்பதற்காக, புதிய ரேஷன் கார்டுகள் வழங்கும் திட்டம் கொண்டு வரப் படுவதை அனைவருமே வரவேற்பார்கள் என்றும் நம்புகிறேன்.

அடுத்தபடியாக, நல்ல தரமான வித்துக்கள் இருந்தால்தான், நல்ல வகையில் மகசூலை அதிகப்படுத்த முடியும். ஆனால் அந்த வித்துக்கள் மோசமாக இருக்கிற காரணத்தால் பயிர்கள் பாழாகக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, மகசூலை அதிகப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் விதைப் பண்ணைகளை அமைக்க அரசு ஏற்பாடு செய்திருப்பது, விவசாயிகளுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். ஆகவே, இதை நான் மனதார பாராட்டி வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன், என்று கூறிக்கொள்கிறேன்.

"பனை வைத்தவன் பார்த்து சாவான், தென்னை வைத்தவன் தின்று சாவான்" என்பது கிராமத்திலே வழங்கப்படும் பழமொழி. அதற்கேற்ப நம் மாநிலம் முழுவதும் தென்னை மரங்கள் வளர்ப்பதற்கு மும்மர திட்டத்தை ஏற்படுத்தியிருப்பது வரவேற்கத் தக்க விஷயமாகும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்ததாக, பால் உற்பத்தியில் ஆனந்த் முறையை முன்மாதிரியாகக் கொண்டு, ஏராளமான பால் உற்பத்திக்கு வகை செய்து, பால் உற்பத்தியிலே ஒரு தன்னிறைவு பெறும் வகையில் ஒரு திட்டத்தை வகுத்து கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் இதனை நிறைவேற்ற எண்ணியிருப்பது குறித்து, நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். இந்த திட்டத்தை பாராட்டி வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையில், அதன் நிலவள வங்கிகளில் இருக்கும் சில சிக்கல்களை தீர்ப்பதற்கு இந்த அரசு பாடுபட்டிருப்பதற்காக நான் ஏழை எளிய மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த வங்கிகள் அவர்களுக்கு ஓரளவு வழிகாட்டியாக இருக்குமாதலால், இந்தப் பணிகளுக்கான என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போலவே காடு வளர்ப்பைப் பொறுத்தமட்டில், சர்க்கார் காடுகளை வளர்க்கவேண்டும் என்று ஊக்குவித்துக் கொண்டிருக்கக்கூடிய நேரத்திலே பல இடங்களில் காடுகளையும், மரங்களையும் அழிப்பதிலே சிலர் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த சமூக விரோதிகளை கண்டு பிடித்து நடவடிக்கை எடுக்க போதுமான வாகன வசதிகளும், சாலை வசதிகளும் இல்லாமல்



இருந்த சூழ்நிலையை மாற்றி 20 லட்சம் ரூபாயை வாகனங்களுக்கும், ஏனைய சாதனங்களை வாங்குவதற்கும் காட்டு வளப் பணியாளர்களுக்கு அரசு வழங்கும் என்று குறிப்பிடப்பட்டிருப்பது வரவேற்கத் தகுந்ததாகும். இந்த அரசு காட்டு வளர்ச்சியிலே எவ்வளவு அக்கறையும், முன்னேற்றத்தையும் கொண்டிருக்கிறது என்பதற்கு இதுவே ஒரு சிறந்த உதாரணமாகும்.

அதைப்போலவே 18 ஆண்டுக்காலமாக பல இடங்களில் சாலைகள் கேட்பாரற்ற நிலையில், பழுது பார்க்கப்பெறாமல், குண்டும் குழியுமாக காட்சியளித்தன. ஆனால் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு வந்தபிறகு, எவ்வளவோ சாலைகளை புதுப்பித்ததும் அல்லாமல், புதியதாக 31 சாலைகள் அமைப்பதற்கு 18 கோடி ரூபாய் செலவிலே திட்டமிடப்பட்டிருப்பது வரவேற்கத் தகுந்த விஷயமாகும்.

அதைப்போலவே பாசனத்தை எடுத்துக் கொண்டால், பெரும் பாசனத்திற்கும் நடுத்தரப் பாசனத் திட்டங்களுக்காகவும், 22.23 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது, தமிழகத்தில் இருக்கக்கூடிய விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஒரு நிவாரண நிலையை ஏற்படுத்தியிருக்கிறது என்பதற்காக, இந்தத் திட்டத்தை வாழ்த்தி வரவேற்கிறேன்.

அடுத்தாற்போல் ஏராளமான பள்ளிக்கூடங்களை தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் நாம் ஊர் ஊராக கட்டிக் கொண்டிருக்கிறோம். ஆனால் அந்தப் பள்ளிக்கூடங்களில் மாணவர்கள் இருக்கக்கூடிய விகிதாசாரத்திற்கு தக்கவாறு ஆசிரியர்கள் இல்லாத குறை இருப்பதை நிவர்த்திக்க ஆயிரம் ஆசிரியர்களுக்கு புதியதாக வேலை வாய்ப்புக் கொடுப்பதற்காக வழி வகை செய்திருப்பதை பார்க்கக்கூடிய நேரத்தில் கல்வித் துறையிலே இந்த அரசு எவ்வளவு அக்கறை கொண்டுள்ளது என்பது புலனாகிறது.

அதுபோலவே அகில இந்திய அளவில் முதல் முதலாக தன்னிறைவுத் திட்டங்களைத் தீட்டி கிராமங்கள் தோறும், கிராம வளர்ச்சிக்கும், சாலைகள் அமைப்பதற்கும், குடிதண்ணீர் வசதி செய்வதற்கும், மருத்துவ மனைகள் திறப்பதற்கும் இன்னும் பல நல்ல காரியங்கள் செய்வதற்கும், திட்டம் தீட்டி வருகிறோம். மற்ற மாநில முதல்வர்களும், அமைச்சர் பெருமக்களும் எப்படி இந்த திட்டத்தை நீங்கள் செயல்படுத்தி நிறைவேற்றுகிறீர்கள் என்று நம்மிடம் வந்து கேட்கக்கூடிய ஒரு சூழ்நிலையில் நாம் இருந்து கொண்டிருக்கிறோம். அத்தகைய திறமை வாய்ந்த நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களின் அரசு தமிழகத்தில் இருக்கக்கூடிய ஏழைக் குழந்தை களின் பசியைப் போக்க, சுமார் 100 கோடி ரூபாய் செலவில் அவர்களுக்கு உணவு கொடுக்க வேண்டும் என்ற வகையில் ஒரு திட்டத்தைக் கொண்டு வந்துள்ளார்.

அதற்கான ஒரு சீரிய திட்டத்தை அமல்படுத்தவேண்டுமென்று 100 கோடி ரூபாய் செலவில் குழந்தைகளுக்கு அமுது வழங்கும் திட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்தத் திட்டம் நிறைவேறக் கூடிய நோக்கில் இந்த நாட்டு மக்கள் நூறு ஆண்டுகளுக்கு நிச்சயமாக புரட்சித் தலைவர் அவர்களை மறக்க மாட்டார்கள். இது உறுதி.

அதேபோல் தன்னிறைவுத் திட்டம் போன்ற பல சீரிய திட்டங்களை இந்த அரசு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. உலக வங்கியின் உதவியோடு குழந்தைகளுக்கு ஊட்டச் சத்துணவு திட்டம் என்ற முறையில் குறிப்பாக மதுரை மாவட்டத்திலுள்ள எல்லா ஒன்றியங்களிலும் சத்துணவுத் திட்டத்தை அமல்படுத்தி அதற்காக பல அலுவலர்களை ஏற்படுத்தி நிறை மாதக் கர்ப்பணிகளுக்கும், ஆறு மாத கர்ப்பணிகளுக்கும், குழந்தை பிறந்து நான்கு மாதங்கள் வரை அந்தக் குழந்தை நல்லமுறையில் வளரவேண்டும் என்ற அக்கறையில் சத்துணவுத் திட்டம் இன்று அமல்படுத்தப்பட்டுவருவது பாராட்டத்தக்கதாகும்.

எனது தொகுதி மக்கள் சார்பாக சில கோரிக்கைகளை நான் புரட்சித் தலைவர் அவர்கள் திருப்பாதங்களில் சமர்ப்பிக்க விரும்புகிறேன். மதுரை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அதை இரண்டாகப் பிரிக்கவேண்டும் என்ற கொள்கையை இந்த அரசு அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. அப்படி வரும்போது மதுரை மாவட்டத்தின் மற்றொரு மாவட்ட தலைநகராக திண்டுக்கல் அமையவேண்டும் என்பது சிலர் கருத்தாக இருக்கிறது. புரட்சித் தலைவர் அவர்கள் கொள்கைக்கிணங்க, தமிழ்நாட்டின் தலைநகரம் அதன் நடுமையமாக இருக்கக்கூடிய திருச்சியில் அமையவேண்டும், அப்போதுதான் இந்த நாட்டு மக்கள் சிரமமில்லாமல் தலைநகருக்கு வந்து செல்லமுடியும் என்ற அந்த கருத்தின் அடிப்படையில் மதுரை மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும்போது பெரியகுளத்தை தலைநகராக அமைக்கவேண்டும் என்ற என் வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். அது மையப் பகுதியாக இருக்குமானதால் மற்றப் பகுதிகளிலிருந்து தலைநகருக்கு வந்து செல்ல ஏதுவாக இருக்கும். எங்கள் போடியிலிருந்து மதுரை செல்லவேண்டுமானாலும் 60 மைல்கள், திண்டுக்கல் செல்லவேண்டுமென்றாலும் 60 மைல்கள். எனவே பெரியகுளம் தலைநகராக ஆக்கப்படவேண்டும். அதில் சிரமமிருந்தால் கோர்ட்ஸ் போன்றவற்றை திண்டுக்கல்லில் வைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தை பெரியகுளத்தில் வைக்கவேண்டும்.

அடுத்து, தேவாரம், கோம்பை, பண்ணைப்புரம் உள்ளடக்கிய ஏழு பஞ்சாயத்துக்களுக்கு உள்ளடக்கி உலக வங்கி உதவியோடு ஒரு கூட்டு குடிநீர் திட்டம் 1977-ல் போடப்பட்டது. ஆனால் இன்றுவரை அந்தக் கூட்டு





குடிநீர் திட்டம், உலக வங்கி அனுமதி கிடைக்காததால், நிறைவேற்றப்படாமல் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே அந்தத் திட்டத்தை விரைவில் ஏற்படுத்திக் கொடுத்து அந்தப் பகுதி மக்களுக்கு குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தேவாரத்தில் உள்ள பொது மக்கள் நீண்ட காலமாக அங்கே ஒரு அரசு மருத்துவமனை வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அந்த மருத்துவமனையை அமைத்துத் தருவதாக முன்பிருந்த மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் வாக்குறுதி அளித்திருந்தார்கள். அது வராததன் காரணமாக அந்தப் பகுதி மக்கள் பெரிதும் ஏமாற்றமடைந்திருக்கிறார்கள். ஆகவே விரைவில் அங்கே ஒரு அரசு மருத்துவமனையை அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் போடிமெட்டு டாப்ஸ்டேசன் கேரளாவின் அருகாமையில் இருக்கிறது. கேரளாவிலிருந்து வரக்கூடிய போலீஸ் ஊடுருவலால் அங்குள்ள தமிழ் மக்களுக்கு பாதுகாப்பில்லாததொரு சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே போடிமெட்டிலும், டாப்ஸ்டேஷனிலும் போலீஸ் அவுட்போஸ்ட்ஸ் அமைக்க வேண்டும்.

குரங்கணி டாப்ஸ்டேஷனுக்கும் போடி அகமலைக்கும் சாலை வசதி ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

(பிற்பகல் 12-50)

பாரஸ்ட் இலாகா நிலங்களில் சிறு விவசாயிகள் இலவம்பஞ்சு விவசாயம் செய்து வருகிறார்கள். வன இலாகா அதிகாரிகள் அவர்களை அந்த நிலங்களிலிருந்து அப்புறப்படுத்த, அவர்கள் அந்த நிலங்களிலிருந்து காலி செய்யவேண்டும் என்று சொல்கிறார்கள். இப்போது நில மேம்பாட்டுத் திட்டத்திலே, அந்தப் பகுதியிலே உள்ள பட்டா நிலங்களை அளந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அரசு அந்த அதிகாரிகளிடம் கூறி அந்த பாரஸ்ட் நிலங்களையெல்லாம் அளந்து அரசாங்கத்திற்கு குறிப்பை சமர்ப்பிக்கும்படி சொல்லி, அதைப்பார்த்து அரசாங்கம் என்ன முடிவு செய்கிறதோ, அதை ஏற்றுக்கொள்ள அந்தப் பகுதி மக்கள் தயாராக இருக்கிறார்கள். எனவே, இந்த நில மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்தும்போது, அங்குள்ள அலுவலர்களுக்கு பாரஸ்ட் நிலங்களை அளந்து அதற்கான கணக்கை அரசுக்குத் தெரிவிக்கும்படி உத்தரவிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, சென்ற 1980-81 ஆம் ஆண்டு தன்னிறைவுத் திட்டத்திலே, பூதிப்புரத்திலே போடி-தேனி நெடுஞ்சாலையிலே ஒரு அடிமட்ட பாலம் கட்டுவதற்கான திட்டம் போடப்பட்டது. ஆனால், அந்த ஆற்றிலே வரக்கூடிய வெள்ளப் பெருக்கினால், அந்தப் பாலம் நிற்காது; வெள்ளம் அதிகமாக வருகின்றபோது, அந்தப் பாலத்தை இழுத்துக்கொண்டு போய் விடும். எனவே, ஒரு உயர்மட்டப் பாலம் அமைக்கவேண்டும் என்ற எண்ணத்திலே, அந்தப் பாலத்தை கைவிட்டு விட்டார்கள். ஆகவே, விரைவிலே அந்தப் பாலத்தை அமைத்துக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

போடி நகரத்திலே தீர்வை செலுத்தப்படும் அரசு புறம்போக்கு நிலங்கள் ஏராளமாக இருக்கின்றன. கள்ளர் சீரமைப்பு, அரிசன, அதேபோல் பிற்பட்ட வகுப்பினர் குழந்தைகள் தங்குவதற்கான விடுதிகள் அங்கே கிடையாது. அதை ஏற்படுத்துவதற்கு, அந்த நிலங்களை முறைப்படி ஆர்ஜிதம் செய்து, அந்தக் கட்டிடங்களைக் கட்டுவதற்கு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு ஆணையிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு மீண்டும் நன்றி கூறிக்கொண்டு, "போற்றுவோர் போற்றட்டும், புழுதி வாரித் தூற்றுவோர் தூற்றட்டும், என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற எண்ணத்தோடு, இந்த நாட்டு மக்களுக்கு தன்னை அர்ப்பணித்துக் கொண்ட எங்கள் தானைத் தலைவர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு இதயப் பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

**திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் :** பேரவைத் துணை சபாநாயகர் அவர்களே, ஏற்கனவே இன்றைய பட்ஜெட்டின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்துக்களை எங்கள் அணியைச் சேர்ந்த திருவாளர்கள் வரதராஜன், மணி, செல்லமுத்து ஆகியோர் சில விபரங்களைக் கூறியிருக்கிறார்கள். அவர்கள் கூறிய விவரங்கள் போக, வேறு சில விவரங்களைப்பற்றி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முதலாவதாக, மாநிலங்களுக்கு மத்திய சர்க்கார் கொடுக்கின்ற பங்கு நாளுக்கு நாள் குறைந்துகொண்டே, கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகப் போய்க் கொண்டிருக்கிறது. சென்ற ஆண்டுகளில் 30 சதவிகிதம் பங்கீடு மாநிலங்களுக்கு மத்திய அரசால் கொடுக்கப்பட்டு வந்தது. இன்னும் சொல்லப்போனால், ஜனதா ஆட்சிக் காலத்திலேகூட இந்த 30 சதவிகிதம் ஒதுக்கப்பட்டது. ஆனால், இப்போது இருக்கின்ற முறையிலே பல்வேறு





வரிகளை மாறுபட்ட வகையிலே மாற்றிப் போட்டதன் விளைவாக, இந்த 30 சதவிகிதம் பங்கானது, கழுதை தேய்ந்து கட்டெறும்பானதைப்போல், 4 சதவிகிதம் என்று வந்திருக்கிறது. இப்படி நமக்கு கிடைக்கின்ற அளவுக்கு மத்திய சர்க்கார் ஒரு கொள்கையைக் கடைப்பிடித்து இந்த ஆண்டு பட்ஜெட்டிலே பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். இப்படி மாநிலங்களின் அதிகாரத்தைப் பறிக்கின்ற போக்கை, மாநிலங்களுக்கு இன்னும் அதிக அதிகாரம் கொடுக்க வேண்டுமென்று கேட்கின்ற நேரத்தில், அதைப் படிப்படியாக மத்திய அரசாங்கம் குறைப்பதுபற்றி சில இடங்களிலே நமது நிதியமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இப்படிச் சுட்டிக் காட்டி இருந்தாலும்கூட, இன்னும் கொஞ்சம் வலுவான முறையில், அண்ணாவின் பாதையின் அடிப்படையிலே, இப்படி இலேசாகச் சுட்டிக் காட்டாமல், இன்னும் கொஞ்சம் வலுவாக வற்புறுத்திக் கேட்கவேண்டும் என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். இன்னும் சொல்லப் போனால், தமிழகத்திலே உள்ள அனைத்துக் கட்சிகளின் ஆதரவோடும், மத்திய அரசாங்கத்தை வற்புறுத்திப் பெறுகின்ற முறைக்கு இந்த அரசாங்கம் முன்வரவேண்டும்.

மத்திய அரசாங்கம் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வழங்க வேண்டுமென்பது நமது கோரிக்கை. ஆனால், இன்றைக்கு இதைப் பார்க்கின்றபோது, மத்திய அரசாங்கம் மாநிலங்களினுடைய அதிகாரத்தைப் படிப்படியாக குறைத்துக் கொண்டு வருகிற அபாய நிலை இருக்கிறது. எனவே, அதிக அதிகாரங்களைக் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்க நீங்கள் முன்வர வேண்டும்.

அடுத்தபடியாக, இந்த பட்ஜெட்டிலே தொழிலாளர்கள் நலனைப் பற்றி சில விபரங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே என்ன சொல்லப் பட்டிருக்கிறது? தொழிலாளர் சட்டங்கள் பலவற்றை நிறைவேற்றுவதிலே இந்த அரசு கண்ணும் கருத்துமாக இருக்கிறது என்று, இந்த அறிக்கையிலே 55 ஆம் பக்கத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இந்த அவையிலே பல சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அவற்றை அமல் நடத்துவதற்கான விதிகள் ஏதுவும் இல்லாததால் அவை கிடப்பிலே தொங்கிக்கொண்டிருக் கிறது. விதிகள் கொண்டுவருவதற்கான எந்தவிதமான குறிப்பும் இதில் இல்லை. ஆகவே இதை செம்மைப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தப்படியாக விவசாயத் தொழிலாளர்கள் நலன்களைப் பாதுகாப்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கிறோம் என்று சொல்கிறார்கள். இரண்டு தினங்

பக்கத்திலே என்று கருதுகிறேன், நியாயமான கூலி கேட்டதற்காக நிலச்சுவான்தார்கள் விவசாயத் தொழிலாளர்கள் மீது அடிதடியிலே இறங்கியிருக்கிறார்கள். நிலச்சுவான்தார்கள் மீது எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை. ஆனால் கூலி கேட்ட தொழிலாளர்கள் மீது நடவடிக்கை எடுப்பதான போக்கு சரியானது அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களுக்கு உரிய பாதுகாப்பு கொடுக்கப்பட வேண்டும், தொழிலாளர்களுக்கு உணவு வழங்கக்கூடிய கூட்டுறவு ஸ்தாபனங்கள் இருக்கின்றன. அவைகளுக்கு லெவியிலேயிருந்து விலக்கு கொடுக்கப்பட்டிருந்தது. அந்த வழக்கம் நீடித்தாலும் கூட இந்த தடவை அதில் சிறு மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. சென்ற தடவை போடப்பட்ட உத்தரவிலே மார்க்கெட் ரேட்டிலே வாங்கி மக்களுக்கு விநியோகிக்கலாம் என்று விதியிருந்து, லெவி இல்லாத சூழ்நிலையில் கடனின் அடிப்படையில் அறுவடையிலே வாங்கி ஸ்டாக் செய்து குறைந்த விலைக்கு தொடர்ந்து விற்றுக் கொண்டிருந்தார்கள். அதனுடைய விளைவு மற்ற வியாபாரிகள் விற்பதை விட 40 பைசா, 50 பைசா கூட்டுறவு ஸ்தாபனங்கள் குறைத்து விற்றுக் கொண்டிருந்தன. இன்றைய உத்தரவு எப்படி இருக்கிறது என்று சொன்னால் மார்க்கெட் ரேட்டிற்கு வாங்கக் கூடாது. அதற்கு பதிலாக அரசாங்கம் நிர்ணயிக்கிற விலைக்கு தான் வாங்க வேண்டும் என்று போட்டதனுடைய விளைவு இன்று எந்த கூட்டுறவு ஸ்தாபனங்களும்—மதுரையிலே இருக்கிற தொழிலாளர்களுக்கு உணவு வழங்குகின்ற கோ-ஆப்பரேட்டிவ் ஸ்டோர் ஆக இருக்கட்டும், அல்லது விக்கிரமசிங்கபுரத்தில் இருக்கிற ஆர்.வி. மில் தொழிலாளர் கூட்டுறவு பண்டகசாலையாக இருக்கட்டும்—அவர்களுக்கு இந்த உத்தரவு காரணமாக ஒரு படி நெல் கூட வரவில்லை. இதனால் வியாபாரிகள் 50 சதவீத லெவியை கொடுத்து, அதனுடைய நஷ்டத்தை அந்த விலையிலே தாக்கி வைத்து, அதற்கு பிறகு அவர்கள் வைக்கக்கூடிய லாபத்திலேயிருந்து அரிசியை வாங்கி, அதற்கு பிறகு நிர்வாகச் செலவிற்காக இவர்கள் வைத்து விற்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. தொழிலாளர்களுடைய நலன் பாதுகாப்பதற்கு பதிலாக தனிப்பட்ட நபர்கள் வைக்கக்கூடிய விலையில் வாங்கி விற்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அரசாங்கம் இந்த உத்தரவை வாபஸ் பெறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்கக் கூடிய முறையிலே அரசாங்கம் இன்னமும் போதிய அளவிற்கு கவனம் செலுத்த வேண்டும். கவனம் செலுத்தவில்லை என்று நான் சொல்லவில்லை. ஏற்கனவே இந்த அரசு விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டும் என்ற முறையிலே ஒரு குவிண்டால் நெல்லுக்கு 150 ரூபாய் நிர்ணயிக்க வேண்டுமென்று தொடர்ந்து கேட்டாலும் கூட, மத்திய சர்க்கார் 119-க்கு மேல் கேட்பது சரியில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே



அரசு எடுத்த முடிவின் அடிப்படையிலே 150 ரூபாய் கொடுப்பதற்கான முறையிலே தொடர்ந்து வற்புறுத்த வேண்டுமா, இல்லையா? நேற்றைக்கு முன்தினம் கூட பாராளுமன்றத்திலே விலை நிர்ணய கமிஷன் தன்னுடைய அறிக்கையை சொன்னதற்கு பிறகு பல மாநிலங்களிலிருந்து கேட்டிருக்கிறார்கள். தமிழகத்திலேயிருந்து எந்த கருத்தும் வரவில்லையென்றும், எந்த விதமான பதிலும் தமிழக சர்க்கார் சொல்லவில்லையென்றும் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே என்ன நிலை எடுத்திருக்கிறோம் என்பதை இந்த அரசு தெரிவிக்க வேண்டும். இதர மாநிலங்கள் 150, 162 என்று கேட்டிருக்கிறார்களே அதைப்போல கேட்டு வாங்கி விவசாயிகளுக்கு கிடைப்பதற்கு பூரணமான உத்தரவாதம் கொடுக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். எங்களைப் பொறுத்தவரையில் தொழிலாளர்கள் மட்டுமல்ல, விவசாயிகள் மட்டுமல்ல, உழைக்கிற கஷ்டப்படுகிற ஏழை நடுத்தர மக்களுடைய நிவாரணத்திற்காக அவர்களுடைய நலனைப் பாதுகாப்பதிலே பின்தங்கியவர்கள் அல்ல.

அடுத்தபடியாக 100 கோடி ரூபாய் திட்டத்தைப்பற்றியெல்லாம் பேசினோம். வாசகத்தைப் பார்த்தால் புரிந்துகொள்வதற்கே மிகவும் கஷ்டமான நிலை இருக்கிறது. "பட்டினி கிடக்கும் குழந்தைகளுக்கு ஒருவேளை இலவச உணவு" என்ற தலைப்பிலே "ஒரு வேளை உணவுக்கும் வழியின்றித் தவிக்கும் மிக ஏழ்மையிலுள்ள குழந்தைகளுக்கு மதிய உணவு இலவசமாக வழங்க இத்திட்டம் மேற்கொள்ளப்படும்" என்று சொல்லியிருக்கிறீர்கள். ஒருவேளை உணவைக்கூட சாப்பிடவில்லையென்றால் என்ன நிலைமை என்பதை சிந்திக்க முடியவில்லை. ஒன்று சொல்லுங்கள், ஏற்கெனவே ஊராட்சிப் பள்ளிகளிலும் தனியார் பள்ளிகளிலும் படிக்கின்ற குழந்தைகளுக்கு மதிய உணவு என்ற பெயரால் 15 பைசா கொடுக்கப்படுகிறது. அந்தக் குழந்தைகளுக்கு 15 பைசாவுக்குப் பதிலாக நல்ல சத்துணவு கொடுக்கப்படும் என்று சொன்னால் புரிந்துகொள்ளமுடியும். அப்படித் திருத்துவதன் மூலம் அந்தப் பணத்தைச் செலவிட ஏற்பாடு செய்ய முன்வர வேண்டும்.

(பிற்பகல் 1-00)

அதைச் சரிக்கட்டுவதற்காக வரி உயர்வு என்று சொல்கிறீர்கள். ஒரு பக்கத்திலே நெசவுத் தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்காகச் சட்டம் என்று சொல்கிறீர்கள். இன்னொரு பக்கம் அந்தத் துறையிலே உள்ளவர்களைப் பாதிக்கக்கூடிய முறையிலே வரிப் போடுகிறீர்கள். பட்டு சேலை என்றால் சாதாரண ஏழை எளிய மக்கள் கூட கல்யாண பட்டுசேலை என்றும் சடங்கு பட்டு சேலை என்றும் சொல்வார்கள். பணக்காரர்கள் 5, 6 ஆயிரம் ரூபாய்

சேலை வாங்குவார்கள், ஏழை எளிய மக்கள் 300, 400 ரூபாய் பட்டு சேலைகளை வாங்குவது பழக்கம். ஆகவே அவர்கள்மீது இந்த வரியைப் போடுவதன் மூலமாக பாதுகாக்கப்பட வேண்டிய அந்தத் தொழில் பாதிக்கப் படுகிறது. தமிழகத்திலே இருக்கின்ற 6 லட்சம் தறிகளிலே பட்டு நெசவுத் தொழிலை ஏற்று இருக்கின்ற சுமார் 1 லட்சம் தறிகள் மூடி முடங்கிக் கிடக்கின்ற நிலை ஏற்பட்டு இருக்கின்றது. அவைகளையெல்லாம் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்காக அவர்கள் எல்லோரும் அந்தத் தொழிலிலே ஈடுபட்டு இருக்கின்ற அனைத்துமக்களும் தொழிலாளர் களும் கடைகளை மூடியிருக்கிறார்கள் என்பதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

அதேபோல் பிஸ்கட்டிற்கு வரி உயர்வு. பணக்காரர்கள் வேண்டுமானால் நாய்களுக்கு பிஸ்கட் போடலாம். ஆனால் வீட்டிலே இருக்கின்ற சிறு பிள்ளைக்குக்கூட பத்து பைசா கொடுத்தால் உடனே பக்கத்திலே உள்ள கடைக்குப் போய் பிஸ்கட்டோ சாக்லெட்டோ வாங்கிச் சாப்பிடும். பிஸ்கட்டிற்கு வரி என்றால் ஒரு பக்கத்திலே குழந்தைகளுக்கு உணவு என்றும் இன்னொரு பக்கத்திலே அவர்கள் சாப்பிடுகின்ற பிஸ்கட்டிற்கு வரி உயர்வு என்றும் சொன்னால் சரியில்லை. அதைப்போக்க வேண்டும்.

ஏற்கெனவே டயர், டியூப் விலையெல்லாம் உயர்ந்திருக்கிறது, இப்போது வரியைப் போடுகிறீர்கள். மோட்டார் உறுப்புகளுக்கும் வரியை உயர்த்து கிறீர்கள். சரியாக மெயின்டெனன்ஸ் செய்யாததால் போக வேண்டிய இடங்களுக்குப் போகாமல் பஸ்கள் எல்லாம் இடையிலேயே படுத்துக் கிடக்கின்ற நிலைமை இருக்கிறது. இந்த விலையேற்றத்தின் காரணமாக நாம் எதிர்பார்ப்பதற்கு எதிர்மாறான விளைவுகள் தான் ஏற்படக்கூடிய அபாயம் இருக்கிறது. ஆகவே இந்த வரிகளைப் புனர் பரிசீலனை செய்யவேண்டும் மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்திடத்திலே வாங்கவேண்டியதை வாங்கி, அதிலேயும் பற்றாக்குறை ஏற்பட்டால் எங்கே இருந்து எடுக்க வேண்டுமோ அங்கேயிருந்து எடுக்க வேண்டுமே தவிர ஏழை எளியவர்கள்மீது வரிப் போடுவதைத் தவிர்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அம்பாசமுத்திரம் தொகுதியிலிருந்து கேரளத்திற்குச் செல்வதற்கு ஒரு பாதை, அப்பர்டாமிலிருந்து போனால் 12 கிலோமீட்டர் தொலைவு தான் இருக்கிறது. இதைப்பற்றி சட்டமன்றத்திலே எடுத்துப் பேசி அதற்கா எஸ்டிமேட் தயாரிக்கப்பட்டு அதற்காக 45 லட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டு இப்போது அரசாங்கத்திலே நிதிநிலை சரியில்லை என்று சொல்லி விட்டுவிட்டார்கள். ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்கு 150 கிலோமீட்டர் சுற்றிவராமல் 12 கிலோமீட்டர் தொலைவிலேயே செல்ல





கூடிய நல்ல திட்டம், ஆகவே நிதிநிலை சரியில்லை என்று சொல்லாமல் அதை மாற்றிக் கொண்டு இதை நிறைவேற்ற ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே நிலைதான் அம்பாசமுத்திரத்திலே உள்ள தலைமை மருத்துவ மனைக்கு. அதை விஸ்தரிக்கவேண்டுமென்று மேல்வரையில் பரிசீலிக்கப்பட்டு எஸ்டிமேட் தயாரிக்கப்பட்டு இருக்கிறது. அதுவும் நிதிநிலை சரியில்லை என்ற பெயரால் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. அதையும் புனர் பரிசீலனை செய்து ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தாமிரபரணி ஆற்றிலே இரும்புப்பாலம் இருக்கிறது, அது பழுதடைந் திருக்கிறது, 6 ஆயிரம் தொழிலாளர்கள் நடக்கிறார்கள், 10 ஆண்டுகளுக்கு முன்னாலே கட்டப்பட்டது. அதற்குப் பதிலாக ஒரு புதிய பாலம் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடையம் [illegible]த்திலே ஒரு தொழிற்சாலை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆழ்வார்குறிச்சி-பாப்பாக்குளம் ஆகியவற்றை இணைக்கிற கடலாடியிலே ஒரு பாலம் கட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல பிரமதேசம், மலைச்சாணி ஆகியவற்றை இணைக்கக்கூடிய பாலம் கட்டித் தரவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். விக்கிரமசிங்கபுரத்திலே மருந்தகம் தான் இருக்கிறதே தவிர ஆஸ்பத்திரி கிடையாது. ஆகவே, அந்த இடத்திலே படுக்கைகளைக் கொண்ட ஒரு ஆஸ்பத்திரியைக் கட்டிக் கொடுப்பதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த பட்ஜெட் பற்றிச் சொல்லியிருக்கின்ற குறைபாடுகளையெல்லாம் நீக்கி நல்லமுறையிலே கொண்டுவர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன், வணக்கம்.

*** செல்வி வி. விசயலட்சுமி :** மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சரவர்களால் இப்பேரவை முன்னர் வைக்கப்பட்டிருக்கின்ற 1982-83 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்தினை இம்மாமன்றத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

இரண்டு வயதுக்கு மேற்பட்டு பத்து வயது வரை உள்ள ஏழைக் குழந்தை களுக்கு இலவச உணவு அளிக்க அரசு முன்வந்துள்ளதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் முதியோர்களுக்கு அளிக்கும் உதவித் தொகையை 25 ரூபாயிலிருந்து 35 ரூபாயாக உயர்த்தியுள்ளதையும் நான் பாராட்டுகிறேன். இந்த இரண்டு செயல்களையும் பார்க்கும்பொழுது நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களுடைய அரசு குழந்தை களுக்குத் தாயாகவும், முதியோர்களுக்குச் சேயாகவும் செயல்பட்டு வருவதை 'றிந்து நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்,

ம,

[செல்வி வி. விசயலட்சுமி] [1982 மார்ச் 4

மேலும் இந்த ஆண்டில் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் 150 ஊராட்சி ஒன்றியங்களை விரிவுபடுத்த இருப்பதையும், கல்வித் திட்டத்தில் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் விதத்தில் ஆசிரியர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தவிருப்பதும், மோட்டார் பொருத்திய சைக்கிள் ரிக்‌ஷாக்களை அதிகப்படுத்தும் விதத்தில் 1,000 சைக்கிள் ரிக்‌ஷாக்களுக்கு 11.30 இலட்சம் ரூபாய் உதவித் தொகை வழங்க முன்வந்துள்ளதையும், விபத்து மற்றும் அவசரப் பணித் திட்டத்தின்கீழ் ரூபாய் 50 இலட்சத்தை ஒதுக்கியுள்ளதையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

புதிதாக 200 பாலர் நிலையங்களை அமைக்க அரசு 15 இலட்சம் ரூபாய் செலவு செய்ய முடிவு செய்துள்ளதையும், ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மருந்து வழங்கும் திட்டத்தில் அரசு முன்வந்துள்ளதையும் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்று ஒவ்வொரு கிராமத்திலும் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக உற்பத்தியாளர்கள் தாங்கள் பட்ட கஷ்டங்களுக்கேற்பப் பயன்பெறுவதைத் தடுக்கும் இடைத் தரகர்களை அகற்றி, அவர்களுக்கு உரிய முறையில் இலாபம் கிடைக்க அந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் வழிவகை செய்து வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் நம்முடைய தமிழக அரசின் மூலம் நடப்பாண்டில், நாட்டுக்கு உழைத்த நல்லவர்களுக்கு நன்றி கூறும் வகையில் அவர்களுடைய பெயரில் போக்குவரத்துக் கழகங்களை அமைத்து அவர்களுக்கு நன்றி கூறும் புரட்சித் தலைவர் அரசினை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களுக்குக் குறைந்த பட்ச ஓய்வூதியம் 125 ரூபாய் அளவிற்கு உயர்த்தியதையும், அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் பயணப்படி, தினப்படி, நிலையான பயணப்படி ஆகியவற்றை உயர்த்துவதையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்ற ஆண்டு இதே மாமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையைப் பற்றி நான் குறிப்பிடும்போது அதைக் குறிஞ்சி மலருக்கு உவமையாக எடுத்துக் காட்டினேன். குறிஞ்சி மலரானது இயற்கையின் நியதிப்படி 12 ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் மலரும். ஆனால் இந்த நிதிநிலை அறிக்கையானது இம்மாமன்றத்தில் 12 மாதங்களுக்கு ஒரு முறை குறிஞ்சி மலர் மலர்வதைப்போல் இன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் கூறிக்கொள்கிறேன்.



1982 மார்ச் 4] [செல்வி வி. விசயலட்சுமி]

இங்கே பேசிய மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி ஒருசில குறைகளைக் கூறியிருக்கிறார்கள். ஆனால் இந்த நிதிநிலை அறிக்கையில் ஏழை எளிய மக்களுக்கும், பாட்டாளி மக்களுக்கும் வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு அரசு முன்வந்துள்ளது. இங்கே பேசிய மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்களும், குறைகூறி எழுதுகின்ற பத்திரிகையாளர்களும், பயன்பெறும் பாமர மக்களின் கருத்துக்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டிருந்தால் உண்மை விளங்கும். பத்திரிகையாளர்களுக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் தொடர்பில்லாத பாமர மக்கள் புரட்சித் தலைவர் அரசினைப் பாராட்டி, நன்றி தெரிவிப்பதை என்னால் உணர முடிகிறது.

(பிற்பகல் 1-10)

என்னுடைய தொகுதியைப் பற்றி நான் சில கருத்துக்களை எடுத்துக் கூற விழைகிறேன். என்னுடைய தொகுதியைச் சேர்ந்த சிவதாபுரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராம மக்கள் சுமார் 10 கிலோ மீட்டர் தூரம் உள்ள சேலம் மருத்துவ மனைக்குச் சென்று சிகிச்சை பெற்று வருகின்றனர். பத்து கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள மருத்துவ மனைக்குச் சென்று சிகிச்சை பெற வேண்டியுள்ளதால், சில சமயங்களில் சேலம்-கோவை செல்லும் ரயில்வே கேட் மூடிவிடுவதால் அவசர சிகிச்சைப் பெற முடியாமல் இருக்கிறது. எனவே, சிவதாபுரத்தில் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் அமைத்து, அம்மக்கள் பயன்பெறுகின்ற வகையில் செய்து கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

சூரமங்கலத்தில் ஒரு பத்திரப் பதிவு அலுவலகம் ஏற்படுத்த வேண்டும். சூரமங்கலம் இன்று வருவாயற்ற நகராட்சியாக இருந்து கொண்டிருக்கிறது. நகராட்சிகள் எல்லாம் தமிழக அரசின் தன்னிறைவுத் திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். நகராட்சிகள் எல்லாம் தன்னிறைவுத் திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்படும் என்று கூறப்பட்டு இருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். சூரமங்கலம் நகராட்சியைத் தன்னிறைவுத் திட்டத்தில் எடுத்துக் கொண்டு, அந்த நகராட்சிக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமாய் நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இந்தச் சூரமங்கலம் நகராட்சியில் ஒரு மருத்துவமனை உள்ளது. அந்த மருத்துவ மனையில் ஹோமியோபதி டாக்டர் ஒருவர் இருக்கிறார். அவர் ஒருவர் மட்டுமே இருப்பதால், அப்பகுதியில் உள்ளவர்கள் முழு மருத்துவ வசதிகள் பெற வசதியில்லாமல் இருக்கிறது. அதனால், அந்த டாக்டருக்குப் பதிலாக, பட்டப் படிப்பு படித்த ஆண் டாக்டர் ஒருவர், பெண் டாக்டர்

ஒருவர் என இருவரை நியமித்து, அப்பகுதியிலுள்ள மக்கள் பயன்பட வழிவகை செய்ய வேண்டுமாய்ச் சுகாதார அமைச்சரவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், சேலம் மாவட்டத்தில் மகளிருக்கு ஒரு பாலிடெக்னிக் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சேலம் மாவட்டத்தில் உள்ள மக்கள் அதிக நாட்களாகக் கனவு கண்டு கொண்டிருக்கும் மருத்துவக் கல்லூரி ஒன்றும் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு எதிர்க் கட்சி உறுப்பினர்கள் தன்னிறைவுத் திட்டத்தைக் குறை கூறிப் பேசினார்கள். உண்மையில், தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் ஏழை, எளிய மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றன என்பதை நான் கூற விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியில் வீரபாண்டி ஒன்றியம் தன்னிறைவுத் திட்டத்தில் எடுக்கப்பட்டு, இதுநாள் வரையில் கிராமங்களில் செய்யப்படாத வசதிகள் அந்தத் தன்னிறைவுத் திட்டத்தில் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைக் கூறிக்கொள்கிறேன். இந்தத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் குடிநீர் வசதி, பாதை வசதி, மருத்துவ வசதி, இன்னும் பலவித வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைக் கூறிக்கொள்கிறேன். இவ்வாறு செய்து கொடுக்கப்படுவதனால், கிராமங்கள் இன்று புத்துணர்ச்சியுடனும் புதுப் பொலிவுடனும் காணப்படுகின்றன என்று நான் கூற விரும்புகிறேன்.

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்கின்றோம் என்ற அண்ணாவின் வாய்மொழிக்கேற்ப, நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், அவர்களின் வழியில் இன்று ஏழை எளிய மக்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்து இன்பத்தைக் கண்டு கொண்டிருக்கிறோம் என்பதை நான் கூறிக்கொண்டு எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

* **திரு. பொ. உத்திராபதி :** துணைத் தலைவர் அவர்களே, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நிதி அமைச்சர் தாக்கல் செய்துள்ள நிதிநிலை அறிக்கையின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இதே நேரத்தில்தான் மத்திய அரசும் பட்ஜெட் தாக்கல் செய்து நாடாளுமன்றத்தில் விவாதம் நடந்து கொண்டு இருக்கிறது. ஆனால் மத்திய அரசு 1,271 கோடி ரூபாய்க்கு இந்தியாவிலே வாழுகின்ற அனைத்து மக்கள் பேரிலும் வரி போட்டிருக்கிறது. அதிலே பற்றாக்குறை 1,700 கோடி ரூபாய். வெளிநாட்டுக் கடன் 5,000 கோடி ரூபாய். ஆனால் நமது அரசு போட்டிருக்கக்



கூடிய வரி ரூ. 38 கோடி, பற்றாக்குறை ரூ. 204 கோடி. ஆக பற்றாக்குறையும் வரிவிதிப்பும், வெளிநாட்டுக் கடன்களும் யார் தலையிலே விழுகிறது ; யார் சுமக்கிறார்கள் என்றால் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழக் கூடிய மக்களை, வாழ நினைக்கின்ற விவசாயிகள் என்று யாரை நினைக்கிறோமோ அவர்கள் தலையிலே விழ, அவர்கள் மேலும் மேலும் வறுமைக்குத் தள்ளப்படுகிறார்கள். எனக்கு முன்னாலே பேசிய ஒரு உறுப்பினர் சொன்னார். விவசாயிகளைப் பற்றி யார் பேசுகிறார்கள் விவசாயிகளுக்கு என்ன நன்மை கிடைக்கிறது என்றெல்லாம் கேட்டார்கள். அவர் ஒரு கணம் சிந்திக்க வேண்டும். டீசல் விலை உயர்ந்தது. சரக்குக் கட்டண உயர்வு, ரயில்வே கட்டண உயர்வு, தபால் விலை உயர்வு, சிமெண்டு விலைவாசி உயர்வு இந்த உயர்வுக்கு யார், மத்திய அரசு தான் பொறுப்பு. மண்வெட்டி விலையை உயர்த்தியது யார் ? விவசாயிகள் வாங்கும் கலப்பை விலையை உயர்த்தியது யார் ? டாட்டா போன்ற பெரும் முதலாளிகளைப் பாதுகாக்கின்றது மத்திய அரசுதான் என்று சொல்ல விரும்புகிறேன். ஜனதா ஆட்சிக் காலத்தில் உர விலை கொஞ்சம் குறைக்கப்பட்டிருந்தது. ஆனால் காங்கிரஸ் ஆட்சி வந்த உடனே விவசாயிகள் வாங்கக்கூடிய பூச்சி மருந்து, யூரியா, சல்பேட்டு போன்ற அத்தனைக்கும் விலை உயர்த்தி விட்டது, மத்திய அரசு. ஆனால் விவசாயிகள் உற்பத்தி செய்யும் நெல் மற்ற தானியங்களுக்கு கட்டுப்படியான விலை கொடுக்க மத்திய அரசு தயாராக இல்லை. ஆனால் மாநில அரசு விவசாயிகள் வறட்சியால், வெள்ளத்தால், புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு சென்ற ஆண்டு கடனைத் தள்ளுபடி செய்கின்ற நேரத்தில் மத்திய அரசு மாநில அரசுக்கு கடிவாளம் போட்டது. விவசாயிகள் கடனை, தள்ளுபடி செய்யக் கூடாது ; விவசாயிகள் கடனை, ஒத்திவைக்கக் கூடாது, பூராவும் வசூல் செய்யவேண்டும் என்று மத்திய அரசு கட்டளை பிறப்பித்தது. அப்படிப்பட்ட மத்திய அரசைத் தட்டிக் கேட்க மாநில அரசு தயக்கம் காட்டுகிறது என்பதைக் குறித்து நாங்கள் எல்லாம் வருத்தப்பட வேண்டியுள்ளது.

இருபது அம்சத் திட்டத்தை நிறைவேற்றப்போவதாகச் சொல்லி இருக்கிறார்கள். அதை நாங்கள் வரவேற்கிறோம். அதிலே முக்கியமாக என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால் நிலச் சீர்திருத்தம். அதே நிலச் சீர்திருத்தத்தை சென்ற ஆண்டு நமது செவின்யு அமைச்சர் அவர்கள் சட்டமாகப் போட்டு 1958-வது ஆண்டுக்கும் 1960-வது ஆண்டுக்கும் இடையிலே நடந்த பினாமி நிலத்தைப் பெறுவதற்காக சட்டமாக இயற்றி மத்திய அரசுக்கு அனுப்பியதே, அதை மத்திய அரசு அங்கீகரித்ததா ? இருபது அம்சத் திட்டத்தை அமலாக்கவேண்டும் என்று சொல்லுகின்ற இந்திரா காந்தி அம்மையார் அவர்கள், பினாமி நிலத்தை எடுப்பதற்காக மாநில அரசு கொண்டு வந்த சட்டத்தை நிராகரித்துத் திருப்பி அனுப்பினார்

என்றால் இதை எங்கே போய் சொல்வது? ஒரு பக்கம் நிலச் சீர்திருத்தம்; மற்றொரு பக்கம் பினாமி நிலத்தை எடுக்கக் கூடாது; இத்தகைய மத்திய அரசைக் கண்டிப்பதற்கு தமிழக அரசு முன் வரவேண்டும். இதை எல்லாம் பார்க்கும்போது, தமிழகத்திலே, இந்தியாவிலே பண வீக்கத்தாலும், விலை ஏற்றத்தாலும் நிர்வாக ஊழலாலும், ஏழைகள் பாதிக்கப்படுகிறார்கள். இதனாலே விலை உயர்வுதான் மேலும் மேலும் உச்சக் கட்டத்திலே இருக்கிறது. இப்போக்கை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அதே நேரத்தில், தமிழக அரசு மண்ணெண்ணெய் விலையை 40 சதவிகிதம் குறைத்திருக்கிறது. முதியோர் பென்சன் 25 ரூபாயில் இருந்து 35 ரூபாயாக உயர்த்தி இருக்கிறார்கள். ஓய்வு ஊதியம் 100 ரூபாயிலிருந்து 125 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது, வரவேற்கிறோம். அது பாராட்டுக்குரியதாகும்.

ஆனால் குழந்தைகளுக்கு மதிய உணவுக்காக 100 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள். அதை நான் வரவேற்கிறேன். ஆனால் ஏழைக் குழந்தைகளுக்கு 100 கோடி ரூபாய் என்றால் எந்த அடிப்படையில் கொடுக்கப் போகிறீர்கள். வருமான அடிப்படையிலா, வயது அடிப்படையிலா என்பது தெரியவில்லை. பள்ளியில் படிக்கும் குழந்தைகளுக்கு மதிய உணவே சரியாகக் கொடுக்கப்படவில்லை என்றும் பாதி சாப்பிட்டுவிட்டு குழந்தைகள் வீட்டுக்குப் போகிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது. இந்தத் திட்டத்தை எப்படி நிறைவேற்றப் போகிறோம் என்று கேட்க விரும்புகிறேன். இதிலே பாராட்டுதலைவிட ஊழலுக்கு இடம் அளிக்கும் என்று வருத்தத்தோடு சொல்லிக் கொள்கிறேன். எதிர்காலத்தில் எச்சரிக்கையாக இந்தத் திட்டத்தை அணுகவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் விவசாயிகள், புயலால், வெள்ளத்தால், வறட்சியால் பாதிக்கப்பட்ட அந்த விவசாயிகள், குவிண்டாலுக்கு 150 ரூபாய் கேட்கின்றார்கள். நமது அரசு கூட 139 ரூபாய் கொடுக்கலாம் என்று இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு மத்திய அரசுக்கு சிபாரிசு செய்திருக்கிறது. ஆனால் இன்றைக்கு எல்லா மாநிலங்களிலும் இருந்து சிபாரிசு செய்து இருப்பதாகவும் நமது மாநில அரசு எப்படி மௌனியாக இருக்கிறது என்றும் நாடாளுமன்றத்திலே சொல்லி இருக்கிறார்கள். இது தவறாக இருக்குமானால் மாநில அரசு இதைக் கண்டிக்கவேண்டும். நமது மாநில அரசு உடனடியாக 150 ரூபாய்

(பிற்பகல் 1-20)

தமிழக விவசாயிகளுக்குக் கிடைக்கும்படி செய்து, அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். தற்போதாகிலும் மாநில அரசு விவசாயிகள் பிரச்னையை நல்ல முறையில்



அணுகித் தீர்க்கவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சில தினங்களுக்குள்ளாக மத்திய அரசை அணுகுவதற்காக எல்லாக் கட்சியைச் சேர்ந்த விவசாய சங்கப் பிரதிநிதிகளையும் அனுப்பி வைப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன். மத்திய அரசை இதற்குக் கைகாட்டாமல், மாநில அரசின் சொந்தப் பொறுப்பில் விவசாயிகள் பிரச்னையைத் தீர்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** துணைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு கருத்தை மட்டும் இந்த நேரத்தில் விளக்கிவிட விரும்புகிறேன். கோதுமையின் விலை நிர்ணயம் செய்வது, நெல்லின் விலை நிர்ணயம் செய்வது குறித்த கேள்வி நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்ட நேரத்தில் இந்திய உணவு அமைச்சர் அவர்கள் கோதுமையைப் பற்றி தமிழக அரசு குறிப்பிடவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். தமிழ்நாடு அரசு கோதுமை பற்றிக் குறிப்பிடாததற்குக் காரணம் இங்கே கோதுமை உற்பத்தி இல்லை. நெல்லைப் பொறுத்தவரையில் நாம் எழுதியிருக்கிறோம். ரூ. 147 ஒரு குவிண்டாலுக்குக் கொடுக்கவேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறோம். அங்கே எழுப்பப்பட்ட கேள்வி, கோதுமை பற்றியதாகும். கோதுமையைப் பற்றி ஒவ்வொரு மாநிலமும் சொல்லி இருக்கிறது. தமிழ்நாட்டில் இருந்து எந்த பதிலும் வரவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் உற்பத்தி இல்லாத காரணத்தால் நாம் இவ்வளவு ரூபாய் கோதுமைக்கு நிர்ணயிக்கவேண்டும் என்று சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஆகவே, கோதுமையைப் பற்றிச் சொல்லவில்லை. நெல்லுக்கு ரூ. 147 ஒரு குவிண்டாலுக்குக் கொடுக்கவேண்டும் என்று வலியுறுத்திச் சொல்லியிருக்கிறோம்.

**திரு. பொ. உத்திராபதி :** துணைத் தலைவர் அவர்களே, விவசாயத் தொழிலாளிக்கு கூலி கொடுப்பது பற்றி சட்டம் இல்லை என்று சொன்னார்கள். தமிழகம் முழுமைக்கும் ஆணுக்கு ரூ. 7-ம், பெண்ணுக்கு ரூ. 5-ம், அறுவடைக்கு 8-ல் ஒரு பங்கும் என்று சட்டம் இருக்கிறது. எந்த மாவட்டத்திலும் இந்தக் கூலி கொடுப்பது இல்லை. விவசாயத்தொழிலாளி கேட்டால் தருவது இல்லை. அவன் போராட்டம் ஏதாவது நடத்தினால் திருடி விட்டான் என்று சொல்லி, வழக்குப் போட்டு விடுகிறார்கள். அந்த வகையில் எவ்வளவோ பேர் கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். பல மாவட்டங்களில் இன்றைக்கு இந்த நிலைமை இருக்கிறது. அந்தச் சட்டத்தை அமல் படுத்த காவல்துறையும் தயாராக இல்லை. அவர்கள் நிலப்பிரபுக் களுக்குச் சாதகமாகத்தான் இருந்து கொண்டு இருக்கிறார்கள்.

[திரு. பொ. உத்திராபதி] [1982 மார்ச் 4

மேலும், கீழத் தஞ்சையில் ஒரு மிகப்பெரிய போராட்டத்தை நடத்தி ஆணுக்கு 9-ம், பெண்ணுக்கு 7-ம், அறுவடை காலத்தில் 1 லிட்டர் கூடுதலாக —விலைவாசி உயர்வு ஏற்பட்டுள்ளதால் கொடுக்கவேண்டும் என்று கடந்த இரண்டாண்டு காலமாகக் கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அதன் விளைவாக கீழத்தஞ்சை குடவாசல் பகுதியில் கோரிக்கையை வலியுறுத்தியதன் விளைவாக 110-க்கணக்கான விவசாயத் தொழிலாளிகள் மீது வழக்கு போடப்பட்டு இருக்கிறது. ஆகவே, நம்முடைய ரெவின்யூ அமைச்சர் அவர்கள் இது குறித்த ஒரு நல்ல அறிவிப்பை அறுவடை கூலி 8-ல் 1 என்று இந்தக் கூட்டத்தொடரில் அறிவிக்கவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்கிறேன்.

அதேபோல், 60 வயதான விவசாயத் தொழிலாளர்கள் அனாதைகள் என்று லிஸ்டில் சேர்த்து இருக்கிறீர்கள். நான் கேட்டுக் கொள்வது : அவர்கள் அநாதைகள் அல்ல. இந்த தேசத்திற்காக உழைத்தவர்கள். அவர்கள் 60 வயதை எய்திவிட்டால் அவர்களுக்கு மாதம் ரூ. 50 பென்ஷன் தரவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் உள்ள சில கோரிக்கைகளை நான் சொல்ல விரும்புகிறேன்.

திருத்துறைப்பூண்டியில் நீண்டகாலமாக ஆண்கள் மருத்துவ மனை, பெண்கள் மருத்துவ மனை என்று தனித்தனியாக இருக்கிறது. அவைகள் இரண்டையும் ஒன்றாக இணைத்து விரிவான முறையில் அதைச்செய்ய வேண்டும்.

அதைப்போலவே, தியணைப்பு நிலையம் தேவை என்று நீண்டநாட்களாக கேட்டு வருகிறோம். முதலமைச்சர் அவர்கள் அதைச் செய்வதாக அறிவித்து இருக்கிறார்கள். இன்னும் அது நிறைவேற்றப்படவில்லை. அதையும் நிறைவேற்றித் தரவேண்டும்.

திருத்துறைப்பூண்டி பேருந்து நிலையம் சிறிய பேருந்து நிலையமாக இருக்கிறது. நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், விரைவில் உலக வங்கி உதவியோடு அந்தப் பேருந்து நிலையம் விரிவுபடுத்தப்படும் என்று. அதைச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இருபத்தேழு லட்ச ரூபாய் செலவில் திருத்துறைப்பூண்டி நகரத்திற்கு குடிநீர் திட்டம் நிறைவேற்றப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கான சர்வே கூட செய்தாகிவிட்டது. அதை விரைவில் நிறைவேற்றித் தரவேண்டும்.



1982 மார்ச் 4] [திரு. பொ. உத்திராபதி]

பேரூராட்சியை நகராட்சியாக மாற்றவேண்டும் என்று நீண்டநாள் கோரிக்கை. ஏற்கனவே அது அறிவித்தாகிவிட்டது. வாக்குக்கொடுத்துவிட்டால் நிறைவேற்றாமல் இருக்கமாட்டோம் என்று அமைச்சர்கூட சொன்னார். ஆகவே, அதை நகராட்சியாக மாற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போலவே பெண்கள் உயர்நிலைப் பள்ளி வேண்டும் என்பது நீண்டநாள் கோரிக்கை. அதற்காக பத்து ஆயிரம் ரூபாய் கூட கட்டியாகிவிட்டது. அதையும் நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். முத்துப்பேட்டையில் பேருந்து நிலையம் இல்லாமல் இருக்கிறது. மக்கள் ரோடில் நிற்கிறார்கள். அதற்கு பேருந்து நிலையம் கட்டித்தரவேண்டும். கோட்டூரில் மருத்துவமனை அமைத்துத் தரவேண்டும். புதுக்கோட்டை மாவட்ட விவசாயத் தொழிலாளர்கள் மின்சாரம், குடிநீர், சாலை வசதி போக்குவரத்து வசதி வேண்டும் என்று கேட்டு ஒரு வார காலமாக பாதயாத்திரை நடத்தியிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனு கொடுத்து இருக்கிறார்கள். அதையும் நிறைவேற்றித் தரவேண்டும். தஞ்சைக்கு வரும் காவேரி தண்ணீரை தேவைக்கு போக கடலில் விழும் தண்ணீரை திருப்பிவிடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, தமிழ்நாட்டின் மேம்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில் சேதுசமுத்திரத் திட்டத்தை உடனடியாக மத்திய அரசை வலியுறுத்தி நிறைவேற்றுவதற்கு இந்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, தஞ்சை மாவட்டத்தில் வேதாரணியம் அருகே ஒரு நாளைக்கு 1,500 பீப்பாய் எண்ணெய் எடுக்கப்படுகிறது. தஞ்சை மாவட்டம் முழுக்க முழுக்க விவசாயத்தை நம்பியே இருக்கிறது ; அங்கே தொழில் வளம் கிடையாது. எனவே மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்தி தஞ்சை மாவட்டத்தில் ஒரு எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல வேதாரணியம் பகுதியில் உப்பு அதிகமாக உற்பத்திச் செய்யப்படுகிறது. இந்த உப்பைப் பயன்படுத்தி, அங்கே ஒரு இரசாயன தொழிற்சாலை அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

தஞ்சை மாவட்டத்தில் நாகப்பட்டினம் T.O திருச்சி வரை நாகை துறைமுகம் இரயில் பாதையை வளர்ச்சி பெறும் வண்ணம் ரயில் பாதையை அகலப் படுத்த நமது அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பட்டுக்கோட்டை, மன்னார்குடி, கும்பகோணம், சேத்தியாத்தோப்பு, நெய்வேலி, விழுப்புரம் வழியாக இரயில் பாதை அமைக்க மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்தி ஏற்பாடு செய்ய வேண்டும்.

[திரு. பொ. உத்திராபதி] [1982 மார்ச் 4

தஞ்சைமாவட்டத்தில் வடுவூர் மன்னார்குடி—திருத்துறைப்பூண்டி வேதாரண்யம் கோடிக்கரை வரை சாலையை அகலப்படுத்த வேண்டுகிறேன். தஞ்சை மாவட்டத்திற்கு வந்த அமைச்சர்களுக்கு அது நன்றாகத் தெரியும். அதை இருவழிப் பாதையாக மாற்றி அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

விவசாயத்தில் நலிந்திருக்கிற மக்களை, கிராமப்புற மக்களை, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமென்றால் தமிழக அரசு அவர்களுக்காக பல்வேறு நல்ல திட்டங்களை நிறைவேற்றுவதோடு குழந்தைகள் சாப்பிடும் மிட்டாய், சாக்லெட்டுகளுக்கு போட்டிருக்கிற வரியை நீக்க வேண்டும்.

இன்றைக்கு வர்த்தக ஆதாடிகளின் சுரண்டலில் சிக்கியிருக்கிற மக்களை விடுவிக்க வேண்டும். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நெல் விலை குறைந்துவிட்டதன் காரணமாகவும் வறட்சியின் காரணமாகவும் அங்கே விவசாயிகள் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, சர்க்கார் கடனை வசூல் செய்வதில் கெடுபிடி காட்டாமல், தவணை முறையில் பணத்தை வசூல் செய்வதற்கும் நெல்லுக்கு கட்டுப்படியான விலை கொடுக்கவும் அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்தில் தொழில் வளம் கிடையாது, அடிப்படை மக்கள் பிரச்சினை தீர்க்கின்ற பட்ஜெட்டாக இது அமையவில்லை என்று சொல்லி விடைபெறுகிறேன், வணக்கம்.

*** திரு. கே. தனுக்கோடித் தேவர் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்று மாண்புமிகு நாவலர் அவர்கள் இங்கே சமர்ப்பித்திருக்கிற நிதிநிலை அறிக்கையைப் பார்க்கிறபோது, " யானை வரும் பின்னே, மணி ஓசை வரும் முன்னே " என்று பெரியவர்கள் சொல்வார்களே, அதைப் போல அமைந்திருக்கிறது என்று நான் முதலிலே குறிப்பிட விரும்புகிறேன்.

நலிந்த மக்கள் மத்தியிலே நல்ல எண்ணத்தைப் பெற்றிருக்கிற இந்த அரசு, இந்த நாட்டு மக்களுக்கு நல்ல பல திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்ற நல்ல நோக்கோடு இந்த பட்ஜெட்டைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு நல்ல நிதிநிலை அறிக்கையைப் பார்க்கும்போது நான் சார்ந்திருக்கிற அகில இந்திய பார்வேர்டு பிளாக் கட்சியின் சார்பாக வரவேற்கிற சூழ்நிலையில் இருக்கிறேன். இருந்தாலும் சில விவரங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே முதலில் குறிப்பிடப்பட்டிருப்பது உணவு பற்றி. உணவு என்பது இந்த நாட்டில் வாழ்கின்ற மனித வர்க்கத்திற்கு முக்கியமானது. அதைத்தான் உணவை முதலிலே வைத்திருக்கிறார்கள்.



1982 மார்ச் 4] [திரு. கே. தனுக்கோடித் தேவர்]

என்னைப் பொறுத்தவரையில் நான் கிராமத்தில் வாழ்ந்தவன் என்பதால் இந்த உணவுப் பிரச்சினையைப் பற்றி நன்றாக அறிந்திருக்கிறேன். நான் சிறுவனாக இருக்கும்போது உணவு நிலைமை எப்படி இருந்தது என்பதை இங்கே சொல்லாமல் இருக்க முடியாது.

நான் சார்ந்திருக்கின்ற முதுகுளத்தூர் தொகுதி மிகவும் பின்தங்கிய பகுதி என்பது எல்லோரும் அறிந்திருக்கிற உண்மை. நாடு சுதந்திரம் அடைந்த பின்னாலும் அங்கே உணவு நிலைமை எப்படி இருந்தது என்பதை குறிப்பிட விரும்புகிறேன். அப்போதெல்லாம் ரேஷன் கடையில் நான்கு நாட்கள் வரிசையில் காத்துக்கிடந்து உணவுப் பொருட்களை வாங்கவேண்டும். நானே அப்படி காத்துக்கிடந்து வாங்கியிருக்கிறேன். அவ்வளவு கஷ்டமாக இருந்தது உணவுப்பொருள் கிடைப்பது. ரேஷன் கடையில் நான்கு நாட்கள் காத்துக்கிடந்து வாங்கினாலும் அது சாப்பிடுவதற்கு முடியாத அளவுக்கு இருக்கும். உளுத்துப்போன சோளம்தான் கிடைக்கும். சாப்பிட முடியாத உளுத்துப்போன சோளம்தான் அப்போது இந்த நாட்டு மக்களுக்கு கிடைத்தது என்பதை தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நிலையில் போன ஆண்டு நான் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்குப் பிறகு என்னுடைய தொகுதி வறட்சியால் பாதிக்கப்பட்டது. ஆனால் நான் சிறுவனாக இருந்த நேரத்திலே அங்கே என்னுடைய தொகுதியில் உளுத்துப்போன சோளத்தைச் சாப்பிட்டதை எண்ணிப் பார்த்தேன். நம்முடைய காலத்திலேயும் அப்படி ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சம் எனக்கு ஏற்பட்டது.

(பிற்பகல் 1-30)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் முன் அனுமதியுடன் பேரவையின் நேரம் நீட்டிக்கப்பெறுகின்றது.

**திரு. கே. தனுக்கோடித்தேவர் :** ஆனால் என்னுடைய பகுதியிலே அப்படி நிலைமை ஏற்படவில்லை. வறட்சி நிவாரணப் பணியிலே ஈடுபட்டவர்கள் உணவு தானியங்களை எந்த விலைக்கு கொடுக்கவேண்டுமோ அந்த விலைக்குக் கொடுத்து உணவுப் பற்றாக்குறை ஏற்படாத வகையிலே நிவாரணம் செய்யப்பட்டது. இதையெல்லாம் நான் பெருமையாகச் சொல்லவில்லை. இவை அனைத்தும் நடைமுறை உண்மை என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். ஆகவே ஏழை எளியவர்களின் நல்லெண்ணத்தைப் பெற்று தமிழக முதல்வர் அவர்கள் நல்ல திட்டங்களைக் கொண்டுவந்திருக்கிறார்கள். பிறர் போற்றினாலும் சரி, தூற்றினாலும் சரி எங்களைப் பொறுத்தவரையில் இந்த அரசு

இந்த நாட்டிலே வாழ்கின்ற ஏழை எளியவர்களை வாழ வைக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு தான் திட்டங்களைக் கொண்டுவந்துகொண்டு இருக்கின்றது. அதை எல்லாம் நாங்கள் வரவேற்கிறோம்.

தன்னிறைவுத் திட்டத்தினைக் கொண்டுவந்ததன் மூலம் கிராமங்களில் சைக்கிளில் கூடச் செல்ல முடியாமல் இருந்த நிலைமைகளை எல்லாம அகற்றி இருக்கிறார்கள். அந்தத் திட்டத்தின் மூலம் சாலைகள் போன்றவற்றை ஏற்படுத்தி இருக்கிறார்கள். கட்டிடம் இல்லாமல் மரத்தடியிலே பிள்ளைகள் படித்துக்கொண்டிருந்த பள்ளிக்கூடங்களுக்கு கட்டிடங்களைக் கட்டிக் கொடுத்து இருக்கிறார்கள். இதை எல்லாம் நான் குறிப்பிடுகின்றபோது என்னுடைய தொகுதியைப்பற்றித்தான் சொல்கிறேன், மற்ற தொகுதிகளில் தன்னிறைவுத் திட்டம் எந்த அளவில் நடந்தது என்பது எனக்குத் தெரியாது. ஆகவே இந்த அரசு கொண்டு வந்திருக்கின்ற நல்ல திட்டங்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் இந்த அரசு கொண்டு வந்திருக்கின்ற நல்ல திட்டங்களைப் பற்றி குறை கூறுகின்ற, பழி கூறுகின்ற சில அதிகாரிகள் பொறுப்பு இல்லாமல் தவறுகள் செய்து வருகிறார்கள். அதனை அரசு கண்காணிப்போடு இருந்து பார்த்துக்கொள்ள வேண்டும்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே நல்லபல திட்டங்களைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அந்தத் திட்டங்கள் பூராவும் செயல்படுவதற்கும் நாம் உறுதுணையாக இருக்கவேண்டும். அரிசன மக்களுக்கும், ஏழை எளிய மக்களுக்கும் நன்மை ஏற்படுகின்ற பல திட்டங்களை இந்த அரசு கொண்டு வந்ததற்காக நான் பாராட்டுகிறேன். கொண்டுவரப்பட்ட திட்டங்களிலே இந்த அரசு முனைந்து செயல்படவேண்டும். மேலும் சட்டமன்ற உறுப்பினர்களும் மற்றவர்களும் நல்ல காரியங்களுக்கு உறுதுணையாக இருந்து திட்டங்கள் வெற்றிபெற உதவ வேண்டும். குறைகள் சொல்வதற்கு உரிமை உண்டு. ஆனால் குறை சொல்வது சுலபம். காரியங்களை நிறைவேற்றுவதுதான் கடினம். ஆகவே ஏழை எளியவர்களுக்கு நன்மை அளிப்பதற்காக வருகின்ற இந்த நிதிநிலை அறிக்கைக்கு நாம் உறுதுணையாக இருக்கவேண்டும்.

தன்னிறைவுத் திட்டத்தினை நான் வாழ்த்தி வரவேற்கிறேன். அடுத்து இந்த நிதிநிலை அறிக்கையிலே 2 வயது முதல் 10 வயதுக்குட்பட்ட ஏழைக் குழந்தைகளுக்கு சத்துணவு அளிக்கின்ற வகையிலே 100 கோடி ரூபாய்த் திட்டம் கொண்டுவரப்பட்டிருப்பதை மனம் உவந்து வரவேற்று பாராட்டுகிறேன். நான் சிறியவனாக இருந்த நேரத்திலே 1953 ஆம் ஆண்டு என்று கருதுகிறேன், என்னுடைய பகுதியிலே பெரும் வறட்சி ஏற்பட்டது. அப்போது என்னுடைய பகுதியில் உள்ள கிராமத்தில் 45 குடும்பங்கள்





வாழ்ந்து கொண்டிருந்தன. அப்போது அந்த குடும்பத்தினர் பெரியவர்களையும், குழந்தைகளையும், வயதுக்கு வந்தவர்களையும் வீட்டிலே விட்டுவிட்டு தஞ்சை, மதுரை, திருநெல்வேலி போன்ற பகுதிகளுக்கு பிழைக்கச் சென்று விட்டார்கள். அங்கே உணவுக்கு கஷ்டப்பட்டுக்கொண்டு, சேரியில் வாழ்ந்த குழந்தைகளுக்கு என்னுடைய தாயார் உணவு சமைத்து வைத்திருந்தார்கள். நான் வெளியூருக்குச் சென்று வீட்டுக்கு திரும்பி வந்த போது, என்னுடைய தாயார் கம்பஞ் சாதத்தை உருண்டையாக உருட்டி பெட்டியில் வைத்து, அதற்குத் தகுந்த சாம்பார் போன்றவற்றை தனியாக ஒரு பாத்திரத்தில் எடுத்து வைத்திருந்தார்கள். அதைக்குறித்து என்ன என்று கேட்டபோது, அதற்கு என்னுடைய தயார் சொன்னார்கள், நம் ஊர் சேரியில் வாழ்ந்த 15 குடும்பங்களைச் சேர்ந்த பெரியவர்கள் எல்லாம் ஊரை விட்டுப் போய்விட்டார்கள். வயது முதிர்ந்தவர்கள் இரண்டொருவரும், 7, 8 குழந்தைகளும் தான் இருக்கின்றனர். நாம் அவர்களுக்குக் கொண்டு போய் இந்த உணவைக் கொடுத்துவிட்டு வரவேண்டும் என்றார்கள். நானும் என் தாயாரும் தூக்கிக்கொண்டு போய் அங்கே முடங்கிக் கிடந்த அந்த பச்சிளம் குழந்தைகளை எழுப்பி சோற்றைக் கொடுத்தவுடன், அதை அந்தக் குழந்தைகள் எவ்வளவு ஆவலோடும், பரபரப்போடும் சாப்பிட்டார்கள் என்பதை, அந்தக் கஷ்ட நிலைமையை நேரிலேயே பார்த்தவன் நான். ஆகையினால் தான் சொல்கிறேன், இந்த 100 கோடி ரூபாய் திட்டத்தை, இந்த நல்ல திட்டத்தை உண்மையாக உறுதியாக, இந்த தமிழகம் முழுவதிலும் உள்ள ஏழைக்குழந்தைகள் உண்மையாக பயன் பெறும் வகையில் அமைச்சர்கள் செயலாற்ற முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதிலே அவர்கள் மிக கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, முகவை மாவட்டத்திலே இருக்கிற முதுகுளத்தூர், கடலாடி ஆகிய இரு தொகுதிகளும் மிக மிக பின் தங்கிய தொகுதியாகும் என்பது எல்லோருக்கும் தெரியும். அங்கே இதுவரையில் நீர் வளமும் இல்லாமல், தொழில் வளமும் இல்லாமல் இயற்கையை நம்பியே மக்கள் வாழ்கின்ற நிலை தான் இருக்கிறது. ஆகவே, இந்தப் பட்ஜெட்டில் அந்தப் பகுதி மக்களுக்கு ஏதாவது நிவாரணம் கிடைக்குமா என்று நினைத்துப் பார்க்கிறபோது, எனக்குக் கொஞ்சம் வருத்தமாக உள்ளது. அதைக் குறித்து எடுத்துச் சொல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

சாலைகள் என்று எதுவும் அங்கே வாழ்கிற மக்களுக்கு இல்லை. அங்கே ஒரு ஆயிரம் பேருக்காவது, தொழில் செய்து சாப்பிடுவதற்கு வாய்ப்புத் தரும் வகையில் வழி வகைகளைச் செய்யவேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஆனால் அது குறித்தும் எதுவும் வரவில்லை. அங்கே வசிக்கக் கூடிய ஏழை எளிய மக்களில் 100க்கு 90 பேர்கள் உழைப்பைத் தவிர, வேறு வழியில்லாத நிலையில் வாழ்கின்றவர்கள். அவர்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு, அந்தப் பகுதியில் ஒரு தொழிற் சாலையை அமைத்து, அவர்கள் வாழ வழி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அது உங்களுடைய கடமையாகும் என்றும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்ததாக இந்த நிதிநிலை அறிக்கையில் சில கருத்தினை சொல்லி முடிக்கலாம் என்று நினைக்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கை என்பதே ஏழை எளியவர்களுக்குக் கிடைத்த ஒரு நல்ல வரப்பிரசாதம் ஆகும் என்பதை முதலிலே சொல்லிவிடுகிறேன். நம்முடைய முதல்வர் அவர்கள் போன கூட்டத்தில் பேசுகிறபோது சொன்னார்கள், வணிகத் துறையிலே உள்ளவர்களையும், உழவர்களையும் ஒரு இணைப்பாக இணைத்து இந்த உற்பத்தி பொருள்களுக்கு விலையை நிர்ணயம் செய்யலாம் என்று சொன்னார்கள். அதைப்பற்றி இங்கே கூறியிருப்பது கண்டு, நான் மகிழ்ச்சியடைகிறேன்.

என்னைப் பொறுத்தவரையில் நான் கூறிக்கொள்வது, நிலத்திற்கு உச்ச வரம்பு வைத்தது போல, நகர்ப்புறச் சொத்துக்களுக்கும் உச்ச வரம்பு கொண்டு வருவதற்கு நம்முடைய அரசு மத்திய அரசை வற்புறுத்தி அனுமதி வாங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேநேரத்தில் விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய உற்பத்தி பொருள்களுக்கு, அவனே விலை நிர்ணயம் செய்யக்கூடிய அளவுக்கு ஒரு நிலையை ஏற்படுத்த, மத்திய அரசுக்கு மாநில அரசு வற்புறுத்திக் கேட்டு அனுமதி பெறவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். காரணம் போன மாதம் 25 ஆம் தேதி வரையில் ரூ. 1,840 ஆக இருந்த பருத்தியின் விலை இன்றைக்கு ரூ. 750 ஆக குறைந்துவிட்டது. இப்படிப்பட்ட நிலைமைகளை போக்குவதற்கு, உண்டான வழிமுறைகளைக் குறித்து மத்திய சர்க்காருக்கு மாநில சர்க்கார் எழுதி கேட்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக மதுரை மாவட்டத்தில் திருமங்கலத்திற்கு பக்கமாக ஒரு அணையைக் கட்ட வேண்டும் என்று முடிவு செய்திருப்பதாக கேள்விப் பட்டேன். அந்த இடத்தில் அந்த அணையைக் கட்டினால் அந்தப் பகுதி அண்டையில் இருக்கின்ற முதுகுளத்தூர், கடலாடி ஆகிய தொகுதிகள்





அடங்கிய கிராமங்களில் மிகப் பெரிய அளவில் பாதிப்பு ஏற்படும் என்று சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து உற்பத்தியாகி வருகிற அந்த குண்டாறு மீது, திருமங்கலம் பக்கத்தில் அணை கட்டிவிட்டால், முதுகுளத்தூர், கடலாடி மக்களுக்கு குடி தண்ணீர் கூட கிடைக்காமல் போய் விடக் கூடும். ஆகையினால் அந்த அணையைக் கட்டுவது சம்பந்தமாக, மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கடைசியாக, இந்த 100 கோடி ரூபாய் திட்டத்தைப் பற்றி பலர் பலவிதமாக பேசியபோதிலும், நான் ஒன்றை உறுதியாகச் சொல்லிக் கொள்ளவிரும்புகிறேன்.

(பிற்பகல் 1-40)

இந்த 100 கோடி ரூபாய் திட்டத்திற்கு சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் உறுதுணையாக இருந்து, எல்லோருடைய ஒருமித்தக் கருத்தோடு, மக்களுக்கு நல்ல முறையில் பயன்படும் திட்டமாக அதை செயல்படுத்தவேண்டும். அப்படிச் செய்தால் ஏழை எளிய மக்களுக்கு ஒரு வேளை சோறாவது கிடைக்கும். (மணியடிக்கப்பட்டது.)

1971-72-ல் என்று நினைக்கிறேன். தமிழகத்தை திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுகிறபோது பசுமைப் புரட்சி என்ற திட்டத்தை கொண்டு வந்தார்கள். அப்போது நாங்கள் அக்கட்சியின் தோழமைக் கட்சியாக இருந்தோம். என் தொகுதியில் நடந்ததைச் சொல்லவிரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள்தான் அதில் முக்கிய பங்கு வகித்தார்களே தவிர மற்ற யாரும் அதில் கலந்து கொள்ள வாய்ப்பிருக்கவில்லை. ஆகவே அந்நிலைக்கு வராமல் இந்த நூறு கோடி ரூபாய் திட்டத்தை நல்லமுறையில் தமிழக மக்களுக்குப் பயன்படும் முறையில் புரட்சித் தலைவர் அவர்கள் அரசு நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டு விடை பெறுகிறேன். நன்றி. வணக்கம். ஜெயஹிந்த்.

* திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1982-83-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீது பேச வாய்ப்பளித்தமைக்கு முதலில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். பிறந்த குழந்தைகள் முதல், முதியோர், அனாதைகள், ஆதரவற்றோர் ஆகியோருக்கு உதவி செய்யக்கூடிய விதத்தில் இந்த நிதிநிலை அறிக்கை அமைந்துள்ளதற்காக புரட்சித் தலைவர் அவர்களை பாராட்டக் கடமைப் பட்டுள்ளேன். நீண்ட நெடுங்காலமாக கேட்கப்படும் யாருடைய காதிலும் விழாதிருந்த பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுகிற விதத்தில் இந்த பட்ஜெட் அமைக்கப்பட்டுள்ளதை பாராட்டாதவர்களை மக்கள் பார்த்துக் கொள்வார்கள் என்று கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. கா. கோபாலகிருஷ்ணன்] [1982 மார்ச் 4

பெரியகுளம் தொகுதி சோத்துப்பாறை, துப்பாம்பாறை அணைக்கட்டுகள் அந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாகும். அந்த இரண்டு அணைக்கட்டுத் திட்டங்களையும் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரியகுளம் நகராட்சியைப் பொறுத்தவரையில் அதன் விஸ்தீர்ணம் மிகக் குறுகலாக இருப்பதால் அதன் விஸ்தீர்ணத்தை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்தப் பழைமையான முனிசிப்பாலிட்டியைப் பொறுத்தவரையில் எந்த விதமான முன்னேற்றமும் அங்கு ஏற்படாமல் இருப்பதால் பற்றாக்குறை நிலை உள்ளது. எனவே அந்த முனிசிப்பாலிட்டிக்கு தனியாக பண உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கொடைக்கானலுக்கு செல்லக்கூடிய தம்தம்பாறை சாலை மிகக் குறுகலாக இருக்கிறது. அந்தப் பாதையை அகலப்படுத்திக் கொடுக்கவேண்டும். அந்தப் பாதை குறுகலாக இருப்பதால் ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கான பேர்கள் விபத்தில் மடிந்து போகிறார்கள். அதற்கு மாற்றுப் பாதையாக ஏற்கனவே போடப்பட்டு பாதியில் நிறுத்தப்பட்டிருக்கும் கும்பக்குண்டு பூலத்தூர் சாலையை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரியகுளத்தில் பாம்பாற்றின் குறுக்கே உள்ள பாலம் பழுதடைந்திருக்கிறது. அந்தப் பாலத்தின் வழி செல்லும் பஸ்கள், லாரிகள் ஆடிக்கொண்டே செல்லவேண்டியுள்ளது. மக்களும் ஆடவேண்டியிருக்கிறது. எனவே அந்தப் பாலத்தை அகற்றிவிட்டு புதிய ஒரு பாலத்தை அமைத்துத் தரவேண்டும்.

பெரியகுளத்தின் அருகிலுள்ள வடுகப்பட்டியில் வராக நதியின்மீது ஒரு பாலத்தை அமைத்துத்தரவேண்டும். பத்து கிராமங்களை இணைக்கக் கூடிய பாலமாக அது இருக்கிறது.

கொடைக்கானல் நகரில் ஒரு பஸ் ஸ்டான்ட், பாண்டியன் போக்குவரத்துக் கழக டிப்போ இவைகளை ஏற்படுத்தித் தரவேண்டும். அப்போதுதான் கிராம மக்களுக்கு பஸ்களில் போகக்கூடிய வசதிவாய்ப்பு ஏற்படும்.

வட புதுப்பட்டியைச் சார்ந்த கிராமங்களில் உள்ள மக்கள் விவசாயத்தை நம்பியிருப்பதால் அங்கே ஒரு கால்நடை மருத்துவமனை ஏற்படுத்தித் தரவேண்டும். அதேபோல் பெருமாமலையிலும், கவுஞ்சியிலும் கால்நடை மருத்துவமனைகள் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1982 மார்ச் 4] [திரு. கா. கோபாலகிருஷ்ணன்]

அடுத்து, அமையப் போகின்ற புது மாவட்டத்தைப் பற்றி ஒருசில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். மதுரையிலே இருந்து புது மாவட்டத்தைப் பிரிக்கின்றபோது, பெரியகுளம் தாலுகா, கொடைக்கானல் தாலுகா, உத்தமபாளையம் தாலுகா, வேடசந்தூர் தாலுகா, பழனி தாலுகா ஆகிய தாலுகாக்களை உள்ளடக்கிய ஒரு புது மாவட்டம் ஒன்று அமைக்கப் பட இருக்கிறது. அந்த மாவட்டத்திற்கு மையப் பகுதியாக பெரியகுளம் இருப்பதால், அங்கே தலைநகரத்தை ஏற்படுத்த வேண்டும், பெரியகுளத்தை தலைநகராகக் கொண்ட அந்த புதிய மாவட்டத்தை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 5—3—1982 ஆம் தேதி காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும். **நாளை மாலையிலும் சபை கூடும்.**

பின்னர் பேரவை பிற்பகல் 1.46 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

113. 23—5—1981 ஆம் தேதியிடப்பெற்ற மதுவிலக்கு—ஆயத்தீர்வைத் துறையின் எஸ்.ஆர்.ஓ.—ஏ. 159(எப்)/81 ஆம் எண் அறிவிக்கையுடன் வெளியான, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு இந்தியாவில் தயாரிக்கப்பெற்ற அயல் நாட்டு சாராவிகள் (உற்பத்தி செய்தல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 12—6—1981 ஆம் தேதியிடப் பெற்ற மதுவிலக்கு—ஆயத்தீர்வைத் துறையின் 56 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

114. 29—4—1981 ஆம் தேதியிடப் பெற்ற வணிக-வரிகள்-சமய அறக் கட்டளைகள் துறையின் /வ.வ & ச.அ./239(பி)/81 ஆம் எண் அறிவிக்கையில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 18—11—1981 ஆம் தேதியிடப்பெற்ற வணிகவரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 1282 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

115. தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு சாராய விதிகளில் (உற்பத்தி செய்தல்) சில திருத்தங்கள் செய்வது குறித்து 6—7—1981 ஆம் ஆண்டு மதுவிலக்கு—ஆயத்தீர்வைத் துறையின் 94ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

116. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வாகனங்கள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 4—8—1981 ஆம் தேதியிடப் பெற்ற உள் துறையின் 1834 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

62. தமிழ்நாடு 1982ஆம் ஆண்டு பொதுச் சொத்து (அழித்தல், இழப்பு ஆகியவற்றைத் தடுத்தல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 13/1982).

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

---

வெள்ளிக்கிழமை, 1982 மார்ச், 5.

மாசி 21, துன்மதி, திருவள்ளுவர் 2013.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :

> " அவையறியார் சொல்லல்மேற் கொள்பவர் சொல்லின்
> வகையறியார் வல்லதூஉம் இல் "

அவையின் தன்மையை அறியாமல் சொல்லுதலை மேற்கொள்கின்றவர் சொற்களின் வகை அறியாதவரே ; அவர் சொல்ல வல்லதும் இல்லை.

## 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

#### பின்தங்கியோர் பட்டியலில் இடம் பெற்றுள்ள சமூகத்தினர்.

* வினா எண். 361. திரு. மு. ஜான் வின்சென்ட் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு வெளியிட்டுள்ள பின்தங்கியோர் பட்டியலில் (Backward Community list) இடம் பெற்றுள்ள கஞ்சம்செட்டி என்ற சாதியை, தாசில்தார் சான்றிதழ் கொடுத்தும், தேர்வாணைக் குழு அதனை ஏற்க மறுப்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தமிழ்நாடு மாநில தேர்வாணைக் குழு சாதிச் சான்றிதழ் வழங்குவதற்கு அதிகாரம் பெற்றுள்ள அதிகாரிகளால் வழங்கப்படும் சாதி சான்றிதழ்களை நேரிடையாக ஏற்க மறுக்கிறது என்பது உண்மையல்ல. சில சாதி/சமூகத்தினைப் பொறுத்தவரை [முக்கியமாக கஞ்சம்செட்டி, காட்டு நாயக்கன் போன்ற] எழும் ஐயங்களுக்கு அவர்கள் சாதிபற்றிய உரிமை கோரிக்கை (claim) உண்மைதானா என்பதை

அறிய மாவட்ட ஆட்சியரின் விசாரணை அறிக்கை கோரப்பட்டு அந்த அறிக்கையின் அடிப்படையில் பணி வேட்பாளரின் உரிமை கோரிக்கையை ஏற்பதா அல்லது மறுப்பதா என்று தேர்வாணைக் குழு முடிவெடுக்கிறது.

**திரு. மு. ஜான் வின்சென்ட்** : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டம் நாங்குனேரி தாலுகாவில் ஏராளமான ரெட்டியார் வகுப்பைச் சார்ந்தவர்கள் வசிக்கின்றார்கள். அதில் பல பிரிவினர் இருக்கின்றார்கள். ஒரு பிரிவினர் கஞ்சம் ரெட்டி என்ற பிரிவைச் சார்ந்தவர்கள். இவர்கள் பின்தங்கியோர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்தும், தாசில்தார் சான்றிதழ் கொடுத்தும் தேர்வாணைக் குழு அதனை ஏற்க மறுப்பது குறித்து அரசுக்கு புகார்கள் செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்து தேவையான உத்தரவு பிறப்பிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கஞ்சம் ரெட்டி என்கிற வகுப்பினர் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் ரெட்டியார் என்பவர்கள் எல்லாம் பலபேர் கஞ்சம் ரெட்டி என்று போட்டுக்கொள்வதின் காரணமாக பல சமயங்களிலே தேர்வாணைக் குழு அதுபற்றி ஆராயும்படி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அவர்களிடம் சொல்கிறார்கள். அவ்வப்போது இதிலே சில மாற்றங்கள் செய்யப்பட்டதன் காரணமாக, கடுமையான நெருக்கடிகள் ஏற்பட்டதனுடைய விளைவாக கண்டிப்பாக அதிகமான அளவிற்கு தொந்தரவு ஏற்படக்கூடாது என்பதற்காக 24—7—1981-ல் ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், தேர்வாணைக் குழுவிற்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. கஞ்சம் ரெட்டி என்று சான்றிதழ் கோருபவர்களுக்கு வழக்கமாக நடத்தப்படும் விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென்று கீழ்க்கண்ட ஒன்றை ஆதாரமாகக் கொள்ளலாமென்றும் அந்த ஆணையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதாவது கஞ்சம் ரெட்டி என்று சந்தேகம் வருகிறபோது அந்த சந்தேகத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக ஆராயும்படி தேர்வாணைக் குழுவினர் குறிப்பிடுகிறார்கள். சான்றிதழ் கொடுப்பதிலே பல தகராறுகள் இருந்ததை அடிப்படையாக வைத்து (1) சொத்து விற்பனைப் பத்திரங்கள் இருப்பின் அவைகளைச் சான்றுகளாகக் காட்டலாம்; (2) தங்களிடம் அப்படி விற்பனை பத்திரங்கள் இல்லையெனில் தங்களது உறவினர் யாராவது பத்திரங்களைச் சான்றுகளை காட்டியிருந்தால் அவர்களது விபரங்களைக் குறிப்பிடலாம்; (3) அப்படி சொத்து விற்பனைப் பத்திரங்களைக் காட்ட முடியாமல் போனால் தாங்கள் கஞ்சம் ரெட்டி இனத்தைச் சார்ந்தவர்கள்தான் என்பதற்கு மனுதாரர், பெற்



ார், பாதுகாவலர்களாக இரண்டு மதிக்கத் தகுந்த சாட்சியங்களுடன் திரக் காகிதத்தில் கொடுக்கப்படும் ஒரு ஆணை உறுதிப் பத்திரம், அதாவது வ்ரன் அபிடவிட்' எடுத்துக்கொள்ளலாம் என்று இப்போது ஆணை றப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையிலே தேர்வாணைக் குழுவினர் னைப் பயன்படுத்தி வருகின்றார்கள்.

**திரு. ரா. கு. பெருமாள்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ட்டியார் சமூகத்தைச் சார்ந்தவர்கள் நம்முடைய மாநிலத்திலே பல ாவட்டங்களிலே இருக்கிறார்கள். குறிப்பாக நெல்லை, மதுரை, முகவை ாவட்டங்களிலே இருக்கிற ரெட்டியார்கள் அனைவருமே பின்தங்கிய பட்டிய லே சேர்க்கப்பட வேண்டுமென்று விடுத்த கோரிக்கைக்கு இணங்க 3-வது ாதம் 1981 ஆம் ஆண்டு ஆணை பிறப்பிக்கப்பட்டது. கல்விக் கூடங்களுக்குச் சல்கிற போது தாசில்தார் அவர்களிடம் சர்டிபிகேட் வழங்க வேண்டுமென்று கட்கும்போது, எஸ்.எஸ்.எல்.சி. புக்கிலே பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கப் ட்டு இருந்தாலும் அவர்கள் சர்டிபிகேட் கொடுக்க மறுக்கப்படுகிறார்கள். வற்றை கொடுப்பதற்கு அரசு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக உத்தரவு ளிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று 'ரெட்டியார்கள்' எல்லாம் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்படுவதில்லை. 'கஞ்சம்' பகுதியிலே இருந்து வந்த ரெட்டியார்கள் என்று கருதப்படுகின்ற 'கஞ்சம் ரெட்டியார்கள்' தான் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டு, பிறகு எடுக்கப்பட்டு, மறுபடியும் சேர்க்கப்பட்டு, கடைசியில் இப்பொழுது சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களைப்பற்றி வருகின்றபோதுதான் ரெட்டியார்கள் என்பவர்கள் 'கஞ்சம் ரெட்டியார்கள்' என்று போட்டு விடுகிறார்கள். இந்தச் சந்தேகத்தைப் போக்குவதற்காகத்தான் பல்வேறு ஆதாரங்கள் வேண்டியிருக்கின்றன. இப்பொழுது கஞ்சம் ரெட்டியார்கள்தான் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். மற்றவர்கள் சேர்க்கப்படவில்லை.

**திரு. மு. ஜான் வின்சென்ட்** : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, பத்திரங்கள் எழுதுவதில் கஞ்சம் ரெட்டி என்று குறிப்பிடப்பட வேண்டுமென்று சொன்னார். பொதுவாக, கிராமங்களில் பத்திரங்கள் எழுதும்போது, ரெட்டியார் இன்ன பிரிவைச் சேர்ந்தவர்கள் என்று

எழுதுவதில்லை. ரெட்டியார் என்றுதான் எழுதுவார்கள். ஆகவே, அது குறித்து, தாசில்தார் அவர்கள் பரிந்துரை செய்த பின்பு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அதற்குரிய குழுவை நியமித்து, அதை ஆராய்ந்தறிய அரசு வழிவகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** துணைத் தலைவர் அவர்களே, அதிலே சங்கடமே ஏற்படாமல் இருப்பதற்காகத்தான் மூன்று விதமான தன்மையிலே ஆதாரங்கள் தரலாம். ஒன்று, பத்திரங்கள் இருந்தால் தரலாம்; அல்லது சொந்தக்காரர்கள் பத்திரங்கள் இருந்தால் தரலாம். இல்லாவிட்டால், இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்கு மனுதாரர்/பெற்றோர்/பாதுகாவலர்களால் இரண்டு மதிக்கத் தகுந்த சாட்சியங்களுடன் பத்திரக் காகிதத்தில் கொடுக்கப்படும் ஒரு ஆணை உறுதிப் பத்திரம் மூலமாகச் சான்றுகளை வழங்கலாம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

*** வினா எண் 362. திரு. ஏ. டி. குலசேகர் :** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

**கம்மவார் நாயுடு சமூகத்தை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கும் உத்தேசம் ஏதேனும் அரசுக்கு உண்டா ?**

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பிற்பட்ட வகுப்பினர் பட்டியலில் தம்மையும் சேர்த்துக்கொள்ளக் கோரி வந்துள்ள கோரிக்கைகளில் கம்மவார் நாயுடு சமூகத்தினரிடமிருந்து வந்துள்ள கோரிக்கையும் அடங்கும். பிறவற்றுடன் இதனையும் ஆய்வு செய்து வரப்படுகிறது.

**திரு. ஏ. டி. குலசேகர் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கம்மவார் என்ற சமூகத்தினர் கோவை மாவட்டத்திலும் மதுரை மாவட்டத்திலும் குறிப்பிட்ட பகுதியினரே உள்ளனர். அதிலும் அந்தச் சமூகத்திலே ஐந்து சதவீதத்தினர்தான் பணக்காரர்களாக இருக்கின்ற ஒரே காரணத்திற்காக, இந்தச் சமூகத்தினரைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்காமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்கதாகும். அதைச் சேர்க்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** துணைத் தலைவர் அவர்களே இதுபோன்று 27 வகுப்பினர் தங்களைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று மனுக்கள் தந்திருக்கிறார்கள். இதுபற்றியெல்லாம் ஆராய்வதற்காகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையினுடைய இயக்குநர் அவர்களைத் தலைவராகக் கொண்ட குழு ஆராயக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்ப்பதற்கு நீண்ட நெடுங்காலமாக வைத்திருப்பது, அவர்கள், ஜாதியிலே மிக, மிகப் பின்தங்கியவர்களாகக் கருதப்பட்டு, பொருளாதாரத் துறையிலும், பின்தங்கியவராகக் கருதப்பட்டு, கல்வி வசதி பெற முடியாமல் தவிக்கிறவர்கள் என்ற அடிப்படைக் குறிப்புகள் அத்தனையும் பார்த்து, பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில், வெள்ளைக்காரர்கள் காலத்திலிருந்து சேர்க்கப்பட்டு வருகிறார்கள். அந்த வகையில் 27 வகுப்பினர்கள் தங்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதிலே கம்மவார் நாயுடு வகுப்பைச் சேர்ந்தவர்கள் அடங்குவார்கள். இதுபற்றி முழு விவரக் குறிப்புகளை ஆங்காங்கு மாவட்டப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலமாகக் கேட்கப்பட்டிருக்கிறது. அந்த ஆய்வினை மேலும் சிறப்பாக நடத்துவதற்கும் ஆங்காங்கு பரிசீலனை செய்வதற்கும் இதற்குத் தனிப் பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்று பிற்பட்டோர் நலத் துறை இயக்குநர் கேட்டிருக்கிறார். அரசு அதுபற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறது. இந்த விசாரணையால் மட்டுமல்ல, 1981 வது ஆண்டு எடுத்த சென்சஸ் கணக்குகளும் அதுபற்றிய முழு விவரங்களும் முழுவதும் வரவில்லை. வந்ததற்குப் பிறகு, பொருளாதார நிலை, கல்வி நிலை, மற்றைய சமூகச் சூழ்நிலை, ஆகியவற்றின் குறிப்புகளை அடிப்படையாக வைத்து, தக்க முடிவுகள் எடுக்கலாம்.

**திரு. ஏ. டி. குலசேகர் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கல்வி அடிப்படையிலாவது, கல்வி வசதி கொடுப்பதற்காவது, இந்தச் சமூகத்தினருக்கு முன்னுரிமை அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** துணைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே கூறியபடி இந்த விண்ணப்பம் உட்பட 27 வகுப்பினர் பற்றியும் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். அதிலேயேதான் நான் சொன்னேன், கல்வியில் பின்தங்கியவர்களாக இருந்தாலும், பொருளாதாரத் துறையிலும் பின்தங்கியவர்களாக இருந்து, சமூக அமைப்பிலும் அப்படி இருக்கிறார்கள் என்பதைக் கண்டறிந்து, எந்த அளவிற்குச் சேர்க்க முடியும், யாரைச் சேர்க்க முடியும் என்பதைப்பற்றி ஆராய்ந்து வருகிறார்கள். பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை இயக்குநர் அறிக்கை வந்த பிறகு, அரசு தக்க முடிவை எடுக்கும்.

திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தமிழ்நாட்டிலுள்ள நரிக்குறவர்கள் என்ற சமூகம் பிற்படுத்தப்பட்ட வகுப்பில் சேர்க்கப்பட்டும் அவர்கள் எந்தவிதமான சலுகையும் அடைய முடியாமல் இருக்கிறார்கள். அந்தச் சமூகத்தைத் தாழ்த்தப்பட்டோர், மலை ஜாதியினர் சமூகத்தில் சேர்த்து, அவர்களுக்கென்று ஒரு குறிப்பிட்ட சதவீதம் சலுகைகளை ஒதுக்கித் தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஒரு சமூகத்தினரை தாழ்த்தப்பட்ட வகுப்பினராகவோ அல்லது பழங்குடி மக்கள் பட்டியலிலோ சேர்க்க வேண்டும் என்றால் மத்திய அரசுதான் சேர்க்க வேண்டும். பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்ப்பதற்கு மாநில அரசு அறிந்து ஆராய்ந்து சேர்க்க உரிமை பெற்றிருக்கிறது. மத்திய அரசுக்கு இப்படிப் பல்வேறு கோரிக்கைகள் போயிருக்கின்றன. அதற்காக ஒரு குழு கூட மத்திய அரசு அமைத்து, அது எல்லா மாநிலங்களிலும் சுற்றுப்பயணம் செய்து, மத்திய அரசுக்கு அறிக்கை அளிக்கின்ற நிலையில் இருக்கிறார்கள். அதைப் பற்றி மத்திய அரசுதான் முடிவு செய்ய வேண்டும்.

திரு. மி. வின்சென்ட் : துணைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் உள்ள கிறித்துவர்கள் அத்தனை பேர்களும் பிற்படுத்தப்பட்ட பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று இருந்தாலும்கூட, அவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. சர்ட்டிபிகேட்டில் ரோமன் கத்தோலிக், லாட்டின் கத்தோலிக் என்று எழுதப்பட்டிருக்கிறது. அதிலே ரோமன் கத்தோலிக் பார்வார்டு என்றும் லாட்டின் கத்தோலிக் பேக்வர்டு என்றும் சொல்லப்படுகிறது. இத்தகைய தவறைத் திருத்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அது பற்றி குறிப்புகள் இல்லை. அதுபற்றி பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை இயக்குநர், நான் முதலிலே கூறியபடி, ஆய்வு நடத்திக் கொண்டு வருகிறார்கள் அந்த ஆய்விலே உண்மைகள் வெளிப்படுமானால் அதைப் பொறுத்து அரசு தக்க நடவடிக்கையை மேற்கொள்ளலாம்.



* வினா எண் 363 திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு நிதி அமைச்சர் ழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தங்களையும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கவேண்டும் என்று ன்னேறிய சமூகத்தைச் சேர்ந்த எந்த வகுப்பினராவது அரசுக்குக் காரிக்கை விடுத்துள்ளனரா ?

(ஆ) எத்தனை வகுப்பினர் அப்படி கோரிக்கை வைத்துள்ளனர் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(ஆ) இருபத்தேழு வகுப்பினர் கோரிக்கை வைத்துள்ளனர்.

திரு. ஏா. கு. பெருமாள் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த 7 பேர்கள் பட்டியலில் கம்மவார் நாயுடுபற்றிக் குறிப்பிட்டார்கள். எஸ்.எஸ். ால்.சி. புத்தகத்தில் வடுகன் என்று குறிப்பிட்டால்தான் பிற்படுத்தப்பட்ட பர்கள் பட்டியலில் சேர்க்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே ாயுடு சமூகத்தினர் அனைவரையும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அப்படி சேர்ப்பதற்கில்லை. நாயுடுகள் அனைவரையும் ரெட்டியார்கள் அனைவரையும் சேர்க்கும் நிலை இல்லை. அதிலே பிரிவு பிரிவாக இருக்கிறார்கள். மிகமிகப் பின்தங்கியவர்கள் பொருளாதாரத்திலே பின்தங்கியவர்கள், கல்வித் துறையிலே பின்தங்கியவர்கள் இவர்களை அடிக்கடி சேர்த்து வந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் இந்த 27 பேர்கள் என்று சொன்னேன்.

தொண்டைமண்டல ஆதிசைவ வெள்ளாளர்கள், ரோமன் கத்தோலிக், மலங்கார சிரியோ மலபார் ரைட்ஸ், லிங்காயத்துக்கள், கம்மவார் நாய்க்கர்/ ரெட்டியார், நாயர்கள், சைவ செட்டியார், சேரகுல வெள்ளாளர்கள், ஆரிய கொண்டா செட்டி, வெள்ளாளர் (கன்னியாகுமரி மாவட்டம்), வெள்ளாளர் (இதர மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்), புலவர் (கோயம்புத்தூர் மாவட்டம்), பாண்டியா வெள்ளாளர்கள், கொங்குநாயக்கர்கள், அரியூர் நகரத்தார், கோட்டைப்புர செட்டியார், ஒரு குண்டாரெட்டி, எழுத்தச்சர், மஞ்சபுத்தூர் செட்டி பார், தேசிகர், ஜெனோலா சால்வேஷன் சர்ச் மெம்பர்கள், வேலர், அனைத்து மதம் மாறிய கிறிஸ்துவர்கள் (பிற்பட்ட சாதிகளிலிருந்து மதம் மாறியவர்கள்), கோன கொல்லர்கள், மூப்பன், நாட்டுக்கோட்டை நகரத்தார், ராவுத்தர், மார்

காயர்—ஆகிய 27 வகுப்பினர்கள் தங்களைப் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பில் சேர்க்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். நான் முதலிலே கூறியபடி ஒரு தனி நபர் குழு இதுபற்றி ஆராய்ந்து வருகிறது.

**திரு. இரா. தாமரைக்கனி :** தலைவர் அவர்களே, ஓரே ஜாதியில் பல பிரிவுகள் இருக்கின்றன. அதில் ஒரு சிலர் சில சலுகைகளைப் பெற்றுக்கொள்கின்றனர். ஓரே ஜாதியில் உள்ள உயர்ந்த பிரிவினர், தங்களைத் தாழ்ந்த பிரிவினர் என்று அத்தாட்சி பெற்று, சலுகைகள் பெறுவது அரசுக்குத் தெரியுமா, அப்படியானால் அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட தவறுகள் ஆங்காங்கு சில சமயங்களில் நடைபெறுவதை ஒட்டித் தான் நாம் மறுபடியும் ஆய்வு செய்கிறோம். அந்த வகையிலேதான் தேர்வு ஆணைக் குழு அவ்வப்போது மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் ஆய்வு செய்து வருகிறது. தவறு என்று கண்டுபிடிக்கப்பட்டு அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கவும், கொடுக்கப்பட்ட சலுகைகளை திருப்பி வாங்கும் முயற்சியும் சில பல இடங்களில் நடைபெற்று இருக்கின்றது. அத்தகைய தவறுகள் நடைபெறாதவாறு பார்த்துக்கொள்வதற்காகத்தான் விதிமுறைகள் வகுக்கப்படுகின்றன.

**திரு. தி. கா. நல்லப்பன் :** மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, முஸ்லீம் சமூகத்தைச் சேர்ந்தவர்களில், தமிழ் பேசுகின்றவர்கள் பிற்படுத்தப்பட்ட பட்டியலிலும், உருது பேசுகின்றவர்கள் முன்னேறிய ஜாதியைச் சேர்ந்தவர்கள் என்றும் சொல்லுகின்ற நிலை இருக்கின்றது. எனவே உருது பேசும் முஸ்லீம்களையும் பிற்படுத்தப்பட்டவர்கள் பட்டியலில் சேர்க்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அவர்களும் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதுபற்றியும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை இயக்குநர் ஆராய்ந்து வருகிறார்.

**திரு. என். வரதராஜன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் எத்தனை சமூகப் பிரிவுகள் இருக்கின்றன. அமைச்சர் அவர்கள் சொல்லுகின்ற போது ஒரு 27 பிரிவினர் தங்களைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று கோரினார்கள் என்று கூறினார்கள். அதற்கு மாறாக, பொருளாதாரத் துறையிலே மிகவும் பின்தங்கி இருப்பவர்கள் யார் என்று பகுப்பாய்வு செய்து அவர்களைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்து அவர்களுக்கு உதவி செய்யும் நிலை அரசுக்கு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** துணைத் தலைவர் அவர்களே, பிற்பட்டோர் பட்டியல் என்று வருகின்றபோது சமுதாயத்தில் பின்தங்கியவர்கள், கல்வியில் பின்தங்கியவர்கள், பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள் என்கிற முறையில் அவர்களைச் சேர்த்து இருக்கிறார்கள். இந்த வேறுபாடுகள் நாளடைவில் மாறி, பொருளாதாரத்தில் மட்டும் யார் யார் பின்தங்கியிருக்கிறார்களோ அவர்களை அந்தப் பட்டியலில் வைத்து, அந்தச் சலுகைகளை அளிக்க வேண்டும் என்பது இறுதி முடிவாக இருக்கக்கூடும். அந்த முடிவை நாம் எட்டுகின்ற வரையில் இந்தச் சலுகைகளை சமூகத்தில் பின்தங்கியவர்களாக இருப்பவர்களுக்கு நாம் அளிக்க வேண்டியிருக்கிறது. ஆனால் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களாக இருப்பவர்களுக்கும்—குறிப்பாக இந்த அளவிற்குக் கீழே வருமானம் பெறுபவர்களுக்கு வேறு வகையில் அரசு ஸ்காலர்ஷிப்புகள் போன்ற சலுகைகள் மூலம் உதவிகளைச் செய்து வருகிறோம். இந்த பிற்பட்டோருக்கு அளிக்கப்படுகின்ற அத்தனை சலுகைகளையும் எல்லோருக்கும் தரும் நிலைமை இல்லை. அந்தப் பட்டியலில் யார் யார் சேர்க்கப்பட்டு இருக்கிறார்களோ அவர்களுக்கு மட்டுமே அந்தச் சலுகைகள் தரப்படுகின்றன.

## காரைப்பட்டி கிராமத்திலுள்ள குளத்தில் செய்யப்பட்ட ஆக்கிரமிப்பு.

* வினா எண். 364. **திரு. மே. அ. இராசகுமார் :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சி மாவட்டம் மணப்பாறை தாலுகா காரைப்பட்டி கிராமத்தில் ஊருக்கு கிழக்கே அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு குளத்தை தூர்த்து தனியார் ஒருவர் ஆக்ரமித்து தென்னம்பிள்ளை வளர்ப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதனை நிவர்த்திக்க அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) & (ஆ) துணைத் தலைவர் அவர்களே, ஆக்கிரமிப்பு நடந்து இருக்கிறது. ஆக்கிரமிப்பை அப்புறப்படுத்த திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர், மற்றும் மணப்பாறை வட்டாட்சித் தலைவர் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

திரு. மே. அ. இராசகுமார் : துணைத் தலைவர் அவர்களே, அந்த ஆக்கிரமிப்பு அகற்றப்பெற்ற பின் அந்த இடத்தை பொதுமக்களின் நலன் கருதி, பஞ்சாயத்திடம் ஒப்படைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, ஆக்கிரமிப்பு அகற்றப்பெற்ற பிறகு, அந்த நிலம் யாரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று பொதுமக்கள் விரும்புகிறார்களோ, அதற்கேற்றவகையில் வருவாய்த் துறை அதிகாரிகளைக் கலந்துகொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. என். பழனிவேல் : துணைத் தலைவர் அவர்களே, ஆக்கிரமிப்பு நடந்துள்ளது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். அது குளம் புறம்போக்கு என்று இருக்கிறது. அது எவ்வளவு ஏக்கர் ? அதிலே தென்னம்பிள்ளை போட்டு இருப்பதாகச் சொல்லப்படுகிறதே, எத்தனை தென்னம்பிள்ளைகள் போடப்பட்டுள்ளன, அவைகள் எந்த அளவிற்கு வளர்ந்து இருக்கின்றன ? இதை ஆரம்பத்திலேயே தடுக்காமல் அங்கேயிருக்கும் அதிகாரிகள் விட்டுவைத்ததற்கான நோக்கம் என்ன என்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, ஆக்கிரமிப்பு செய்ததில் சர்வே எண் 0.53-ல் எட்டு ஏக்கரும், 0.20 சர்வே எண்ணில் எட்டு ஏக்கரும் என்று இருக்கிறது. பல ஆண்டுகாலமாக அவர்கள் அங்கே இருந்துகொண்டு இருக்கிறார்கள். செடில்மென்ட் செய்கிற நோக்திலே எங்களுக்குச் சொந்தம் என்று வாதிட்டு இருக்கிறார்கள். செட்டில்மென்ட் அ காரிகள் அதை ஏற்கவில்லை. அதற்குப் பிறகு அவர்கள் சிவில் கோர்ட்டுக்கு போய் இருக்கிறார்கள். ஆகவே, ஆக்கிரமிப்பு பல ஆண்டு காலத்திற்கு முன்பே செட்டில்மென்ட் வருவதற்கு முன்பே ஏற்பட்டு இருக்கிறது என்பதை, தெரிவித்துக் கொள்கிறேன்.





### விற்பனை வரிச் சட்டத்தை மாற்றியமமக்கும் திட்டம்

* வினா எண் 365—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமி வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு வர்த்தகத் தொழில் துறை சங்கத்தில் இருந்து 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அரசுக்கு, விற்பனை வரி சட்டத்தை மாற்றியமைக்க வேண்டும் என கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் மாற்றும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

(இ) விவரம் யாது ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ, ஆ மற்றும் இ) துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வர்த்தகத் தொழிற்துறை சங்கத்தின் சார்பாக எந்த விதமான கோரிக்கையும் வரவில்லை. ஆனால், டெல்லியில் இருக்கிற இந்திய வர்த்தகத் தொழில் துறை சங்கத்தின் சார்பாக கோரிக்கை வந்து இருக்கிறது. அரசு அதைப் பரிசீலித்துக்கொண்டு இருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, என்னென்ன கோரிக்கைகள் அதிலே அடங்கியிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, இன்றைக்கு இருக்கின்ற வரி விகிதத்தில் சில மாற்றங்கள் செய்ய வேண்டும் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். உதாரணமாகச் சொல்லவேண்டுமானால், பலமுனை வரியை நீக்க வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். சர்சார்ஜை நீக்க வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். கூடுதல் வரியை நீக்க வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். இப்போது 50,000 ரூபாய் வரையில் விற்பனை செய்பவர்களுக்கு விற்பனை வரி இல்லை என்று உள்ளதை ஒரு லட்ச ரூபாய் என்கிற அளவிற்கு உயர்த்த வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படி பல கோரிக்கைகள் சொல்லியிருக்கிறார்கள். அவைகள் அரசின் பரிசீலனையில் இருக்கின்றன.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, ஏன் அந்தக் கோரிக்கைகளை உடனடியாகச் செயலுக்குக் கொண்டு வரக் கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, எவ்வளவோ கோரிக்கைகளை வைக்கிறார்கள். எல்லாக் கோரிக்கைகளையும் வந்தவுடனே நாம் நடைமுறைப்படுத்தினால் மக்களுக்கு எவ்வளவு நஷ்டம் அதனால் ஏற்படும் என்பதை எண்ணிப்பார்க்க முடியாமல் போய்விடும். மேலும், ஒரு கோரிக்கை வந்தவுடன் அதனால் சமுதாயத்திற்கு என்ன பலன் கிடைக்கும், அரசாங்கத்திற்கு என்ன சாதக, பாதகத்தை ஏற்படுத்தும் என்பதை ஆராய்ந்து பார்த்து, பின்னரே அதை நடைமுறைப் படுத்த வேண்டிய நிலையில் அரசு இருக்கிறது.

(முற்பகல் 9-20)

திரு. இரா. கருப்பையா : துணைத் தலைவரவர்களே, இம்மாதிரி விற்பனை வரி சம்பந்தமாக பல்வேறு கோரிக்கைகள் வந்திருக்கின்றன. இந்த விற்பனை வரியை முழுமையாக விதிக்கின்ற முறை. வசூல் செய்கின்ற முறை, மற்றும் பல்வேறு தன்மைகளை ஆராய்ந்து பயனுள்ள வகையில் அரசுக்கு ஆலோசனை கூறுவதற்கு அதிகாரிகள், வியாபாரிகளுடைய பிரதிநிதிகள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய ஒரு குழுவை அமைத்து, அதை பரிசீலிக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவரவர்களே, ஏற்கெனவே கெய்வார் தலைமையில் ஒரு கமிட்டி போடப்பட்டது. அதில் வர்த்தக பிரதிநிதிகள் இருந்தார்கள். அதனுடைய சிபாரிசுகளில் ஏறத்தாழ 90 சதவீதத்தை அரசு நிறைவேற்றியிருக்கிறது. அது மட்டுமல்லாமல் அவ்வப்போது ஏற்படும் நிலைமைகளை ஆராய்வதற்கு மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகக் கொண்டு, அங்கே இருக்கிற வர்த்தக பிரதிநிதிகள், சட்டமன்ற உறுப்பினர்களை உறுப்பினர்களாகக் கொண்டு கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. மாநிலத்திலும் அப்படிப்பட்ட ஒரு கமிட்டி மாநில அளவில் இருக்கிறது. அதிலே வருவாய்த் துறை அமைச்சர் தலைவராகவும், அரசு செயலாளர், மாவட்ட, மாநில அளவில் இருக்கிற வர்த்தகச் சங்கப் பிரதிநிதிகள், சில சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் உறுப்பினர்களாகவும் இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, விற்பனை வரியை அமுல்படுத்துவதுபற்றி அமைச்சரவர்கள் சொன்னார்கள். இன்றைக்கு சிறு தீப்பெட்டித் தொழிலை நம்பி இலட்சக்கணக்கான மக்கள் இருக்கிறார்கள். அந்தத் தொழிலுக்கு உரிய 'பேசிக் மெட்டீரியல்சு'-க்கு வரி



விலக்கு அளித்திருக்கிறார்கள். ஆனால் தீப்பெட்டி அட்டைகளில் ஒட்டுகிற 'ப்ளூ பேப்பருக்கு' சாத்தூர் தாலுகாவிலும் ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகாவிலும் வரி விலக்கு அளிக்கவில்லை. அந்த வரியை நீக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ. டி. சோமசுந்தரம் : துணைத் தலைவரவர்களே, அதுபற்றிய குறிப்பு தற்போது என்னிடம் இல்லை. அதுபற்றி அரசு ஆராயும்.

### அமராவதி நகரிலுள்ள "சைனிக்" பள்ளி

* வினா எண் 366—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

அமராவதி நகரில் உள்ள 'சைனிக்' பள்ளிக்கு நமது மாநில அரசு என்னென்ன உதவிகள் செய்கிறது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அமராவதி நகரிலுள்ள சைனிக் பள்ளியில் பயிலும் தமிழக மாணவர்களுக்கு மாநில அரசு, படிப்பு உதவித் தொகை (ஸ்காலர்ஷிப்) வழங்கி வருகிறது. தவிர, இப் பள்ளிக்குத் தேவையான நிலம், கட்டிடங்களையும் மற்றும் மூலதனப் பொருட்கள் முதலியவை வாங்குவதற்கு நிதியுதவியும் அளிக்கின்றது.

திரு. என். பழனிவேல் : துணைத் தலைவரவர்களே, கோவை மாவட்டத்தில் அமராவதியில் இருக்கிற இந்த சைனிக் பள்ளி பொதுவாக மேல்தட்டு மக்கள் படிக்கிற பள்ளியாக இருக்கிறது. சாதாரண ஏழை எளிய மக்கள், குறிப்பாக தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் அந்தப் பள்ளியில் தலைவைத்துப் பார்க்க முடியவில்லை. இம்மாதிரி உயர்ந்த வகுப்பு மக்கள் படிக்கின்ற அந்தப் பள்ளியில் சாதாரண ஏழை எளிய மக்கள், தாழ்த்தப்பட்ட மக்களுடைய குழந்தைகள் படிப்பதற்கு அரசு ஏதாவது தனி முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு துணைத் தலைவர்வர்களே, உயர்ந்த வகுப்பினருக்கு என்று ஆரம்பிக்கப்பட்ட பள்ளிக்கூடம் அல்ல அது. பாதுகாப்புத் துறையில் படைவீரர்கள், தளபதிகளாக மக்கள் வர வேண்டும். அதுவும் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் வர வேண்டும் என்பதற்காக அந்தப் பள்ளியிலே சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அங்கே படித்து, பயிற்சி பெற்றவர்கள் டிஃபன்ஸ் அக்கடமியில் தேர்ச்சி பெற்று, தளவாய்களாக வர வேண்டும்; தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் அதிலே ஒரு பங்கை பெற

வேண்டுமென்ற அடிப்படையில்தான் அந்த சைனிக் பள்ளி ஆரம்பிக்கப்
பட்டிருக்கிறதே அல்லாமல் வேறு அல்ல. அங்கே படிக்கின்ற ஒரு மாணவனுக்கு
4,000 ரூபாய் செலவு ஆகிறது. ஏழை எளிய குடும்பத்தைச் சேர்ந்த மாண
வர்கள் அங்கே படிப்பதாக இருந்தால் அந்த 4,000 ரூபாயை மாநில அரசு
தருகிறது.

ஆகவே 700 ரூபாய் வரை வருமானம் உள்ளவர்களுக்கு 4,000 ரூபாய் என்ற
அந்த முழுச்செலவையும் நாம் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் 1,000 ரூபாய்
வருமானம் உள்ளவர்களுக்கு 3,125 ரூபாயினை நாம் ஏற்றுக்கொள்கிறோம்.
1,200 ரூபாய் வரை வருமானம் வருகின்றவர்களுக்கு அவர்களுடைய செலவிலே
1,750 ரூபாயினை நாம் ஏற்றுக்கொள்கிறோம். 1,400 ரூபாய் வரை வருமானம்
உள்ளவர்களுக்கு அவர்களுடைய செலவிலே 875 ரூபாயினை நாம் ஏற்றுக்
கொள்கிறோம். இப்படி முழுப்பங்கு, அரைப்பங்கு, கால்பங்கு என்று அவரவர்
களுடைய வருமானத்திற்கேற்ப அவர்களுடைய செலவுகளை நாம் ஏற்றுக்
கொள்கிறோம். இப்படி எல்லாம் ஏற்றுக்கொள்வதன் காரணம் என்னவென்
றால் சாதாரணமானவர்களும் அந்தப் பள்ளியிலே சேர்ந்து படிப்பதற்கான
வாய்ப்பினை ஏற்படுத்துவதற்காகத்தான். ஆனால் அவர்கள் படைப் பயிற்சி
யிலே பாஸ் செய்ய வேண்டும் என்பது மிக முக்கியமாகும்.

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, போர் பயிற்சி தருவதற்காக
அந்தப் பள்ளி ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.
அது நல்ல ஒரு அம்சம்தான். ஆனால் சாதாரணமாக கிராமங்களிலே படிக்கக்
கூடிய மாணவர்களால் அந்தப் பள்ளியிலே சேர்ந்து படிக்கக்கூடிய வாய்ப்புக்கள்
இல்லை. மேல் மட்டத்திலே உள்ளவர்களால்தான் அங்கே சேர்ந்து படிக்கக்
கூடிய வாய்ப்பு இருக்கின்றது. அப்படியே கிராமத்திலே உள்ளவர்கள் சேர்ந்
தால்கூட அங்கே 2,000 ரூபாய் 3,000 ரூபாய் என்று செலவழிக்க வேண்டிய
நிலைமை இருக்கின்றது. ஆகவே இந்த நிலைமையினைத் தவிர்ப்பதற்குரிய
நல்லதொரு மார்க்கத்தை அமைச்சர் அவர்கள் சிந்தித்து ஒரு வழியினை
ஏற்படுத்திக் கொடுத்தால் மிகவும் உதவியாக இருக்கும். ஆகவே அந்த வகை
யிலே ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இந்தப் பள்ளி
யினைப் பொறுத்தவரையிலே குறிப்பிட்ட ஒரு துறைக்கு தயார் செய்கின்ற
பள்ளியாக அமைந்திருக்கின்ற காரணத்தால்தான் சில சிக்கல்கள் ஏற்படு
கின்றன. ஆனால் சாதாரணமானவர்களும் இதிலே பங்கெடுத்துக்கொள்ள
வேண்டும் அவர்களுக்கு அந்த வாய்ப்புக்கள் கிடைக்கவேண்டும் என்பதற்காகத்
தான் முடிந்த அளவுக்கு நாமும் செலவுகளை ஏற்றுக்கொண்டு இருக்கிறோம்.



ஆனால் அப்படிப் பயிற்சி பெறுவதற்கு போதிய திறமை உள்ளவர்களைத்தான்
எடுக்க வேண்டும் என்று சொல்கின்றபோது நாம் அதிலே குறுக்கிட்டால் பிறகு
அவர்கள் அங்கே போய் அதற்கான பரீட்சையிலே தேற முடியாது. இதுதான்
அதிலே இருக்கின்ற ஒரு சிக்கல். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்
களுடைய உணர்வுகளை நாம் மதிக்கிறோம். தேவையான முயற்சிகளை மேற்
கொண்டு செய்யலாம்.

திருமதி தா. இராசாம்பாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, சைனிக் பள்ளிக்கு மத்திய அரசினுடைய உதவித் தொகை
எவ்வளவு, மாநில அரசினுடைய உதவித் தொகை எவ்வளவு, ஒரு பையனுக்கு?
அடுத்து தேர்வு வைத்து அதன்மூலமாக மாணவர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள்.
ஆனால் கிராமங்களிலே பயிலுகின்ற மாணவர்களுக்கு அந்த அளவுக்குப் பயிற்சி
இல்லாமையினால் அவர்களால் அங்கே சென்று பயில்வதற்குரிய வாய்ப்பு
இல்லாமல் இருக்கின்றது. ஆகவே வசதி உள்ளவர்கள்தான் தங்களுடைய
பிள்ளைகளுக்கு அதற்கான பயிற்சியினை அளித்து அந்தப் பள்ளியிலே சேர்த்து
விடுகிறார்கள். ஆனால் உண்மையிலேயே படைபலம் மிக்க ஏழை எளிய
குழந்தைகள் அங்கே சென்று சேர்கின்ற வாய்ப்பு இல்லை. ஆகவே அவர்
களுக்கும் தனிப் பயிற்சி அளித்து அங்கே சேர்ப்பதற்கு இந்த அரசு முன்
வருமா ? மேலும் அந்தப் பள்ளிகளிலே பயிலுகின்ற மாணவர்கள் வசதி
படைத்தவர்களாக இருப்பதால் படைப்பயிற்சி பெற்ற பின்னரும்கூட அவர்கள்
அந்தத் துறைக்குச் செல்லாமல் வெளியே வந்து வேறு துறைகளில் செல்கின்ற
சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. ஆகவே அதைத் தடுத்து நிறுத்தி அந்தக்
கல்வியின் வெறுமான அடிப்படையை உயர்த்தி அவர்களுக்கு நல்ல முறையிலே
பயிற்சி அளிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அந்த வகையிலே எந்தக்
குறிக்கோளுக்காக பயிற்சி அளிக்கப்படுகின்றதோ அந்தத் துறைகளுக்கே
அந்தந்த மாணவர்களை அனுப்ப ஏற்பாடு செய்யப்படுமா ? என்னுடைய
பையன்கூட 5-லே இருந்து 12 வரை இருக்கின்ற பள்ளியிலே படிக்கின்றான்.
அந்தப் பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களில் பெரும்பாலோர் அந்தக் கல்வியை
முடித்துக்கொண்டபின் இன்ஜினியர், எம்.பி.பி.எஸ். போன்ற படிப்புகளுக்குச்
சென்றுவிடுகிறார்கள். ஆகவேதான் இந்த விளக்கத்தை நான் கூறுகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடத்திலிருந்து அறிய விரும்
புவதைவிடப் பன்மடங்கு அதுபற்றிய விவரங்களை இங்கே அளித்து அனை
வரும் அறிந்துகொள்வதற்குரிய வாய்ப்பினைத் தந்திருக்கிறார்கள். அவர்களே
நிறைய விளக்கங்களைச் சொல்லி இருக்கிறார்கள். இப்பள்ளியின் முதல்வர்,

தாளாளர் மற்றும் தலைமையாசிரியர் ஆகியோருக்கான செலவினை மட்டும்
மத்திய அரசினர் ஏற்றுக்கொள்கிறார்கள். மற்றபடி கட்டிடங்கள் போன்ற
செலவுகளை எல்லாம் மாநில அரசுதான் ஏற்றுக்கொள்கிறது. மாநில அரசின்
செலவினைப் பொறுத்தவரையில் சென்ற ஆண்டு மட்டும் அப்பள்ளியில் ஆய்வுக்
கூடம் கட்டுவதற்காக 5.5 இலட்சமும் பள்ளிக்குத் தேவையான தண்ணீர் வசதி
கள் செய்ய 7.5 இலட்சமும் ஓய்வு விடுதி ஒன்று கட்டுவதற்காக 2.15 இலட்சமும்
கிணறு தோண்டுதல் மற்றும் குழாய் அமைக்கும் பணிகளுக்காக 0.275 இலட்ச
மும் மாணவர்கள் தங்கும் இடங்களைச் சீர்படுத்துவதற்கு 10.5 இலட்சமும்
செலவழிப்பதற்காக நாம் அனுமதித்திருக்கிறோம். ஆகவே அந்தப் பள்ளிக்
கூடம் நல்ல முறையிலே இயங்குவதற்காக மாநில அரசு நல்ல உதவிகளைச்
செய்துகொண்டு வருகின்றது.

(முற்பகல் 9-30)

அதிலே சேர்ந்து படிக்க வேண்டிய மாணவர்கள் அப்படிப்பட்ட பரீட்சை
களிலே தேறி அதிலே சேர வேண்டும் என்ற ஒரு நிலைமை இருக்கிறது. கிராமப்
புறங்களிலேயிருந்து வருகிற மாணவர்களுக்கு அப்படிப்பட்ட பரீட்சைகளிலே
பங்குக் கொண்டு தேறி அந்தப் பள்ளியில் இடம் கொடுப்பதில், ஏதாவது
சலுகைகள் கொடுக்க வேண்டும் என்று சொல்வோமேயானால், அது நமது
நோக்கத்திற்கே தவறாகிவிடக்கூடும். நமது நோக்கம், அவர்கள் இந்தப் பள்ளி
யில் படித்து படையில் சேர்ந்து ஏதாவது வெளிநாடுகளுடன் சண்டைக்குப்
போகிற நேரத்தில், அவர்கள் சண்டைபோட்டு ஜெயிக்க வேண்டும் என்பது
தான். அப்படி அவர்கள் சண்டை போடுகிற நேரத்தில் நான் கிராமப்புறத்தி
லிருந்து வந்தவன், ஏழை எளிய வீட்டுப் பிள்ளை ஆகவே என்னால் சரிவர
சண்டைபோட இயலாது என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருக்க முடியாது.
அதுதான் மிக முக்கியமானது. அதை மனதில் வைத்துக்கொண்டுதான் இவை
களைச் செய்துக் கொண்டிருக்கிறோம்.

மற்றபடி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பல்வேறு குறைபாடுகள்
எல்லாம் இருக்கின்றன. அங்கே படித்து விட்டு பாதுகாப்பு படைக்குப் போய்
சேராமல் ஏமாற்றுகிற மாணவர்கள் இருக்கிறார்கள். அதைக் கண்டுபிடித்து
அவர்கள் மீது நடவடிக்கையும் எடுத்து வருகிறோம். மற்றபடி இங்கே படிக்க
வேண்டும் என்ற எண்ணத்தோடு வருகிற மாணவர்களுக்கு அந்த எண்ணத்தை
ஊக்குவிக்கும் வகையில் சில சலுகைகளை வேண்டுமானால் தரலாம். நல்ல
மாணவர்கள், நல்ல இளைஞர்கள் இந்தப் படிப்புக்காக கிடைக்க வேண்டுமே





தவிர, எந்த வகுப்பு எந்த இனம் என்ற வகையில் இந்தப் பள்ளியில் சேர்த்துக்
கொள்ளப்படுவதில்லை. கிராமங்களிலேயிருந்துகூட நல்ல இளைஞர்கள் வரக்
கூடிய வாய்ப்பு இருக்கிறது. அவர்களை நாம் இதிலே ஈடுபடுத்தி வருகிறோம்.

பஞ்சாயத்துக்களில் புதிய உயர் நிலைப்பள்ளிகள் தொடங்கும் திட்டம்.

* வினா எண். 367—திரு. ச. அங்குசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர்
கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 8-ம் வகுப்பை உயர் நிலைப்பள்ளியிடம் சேர்க்கும் திட்டம் எந்த
அளவில் உள்ளது ?

(ஆ) நான்கு பஞ்சாயத்துக்களுக்கு ஒரு உயர் நிலைப்பள்ளி ஆரம்
பிக்கும் திட்டம் உண்டா ?

(இ) ஆம் எனில் அதுபற்றிய அரசின் நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இது குறித்துப் பள்ளிக் கல்வி
இயக்குநர் அனுப்பிய கோரிக்கையை அரசு கருதிப் பார்த்தபின் இந்த யோச
னையை அடுத்த ஆண்டு பரிசீலிக்கலாம் என்று முடிவு செய்துள்ளது.

(ஆ) இல்லை. எனினும் தேவைக்கேற்பவும் அரசு நிதிநிலை இடம்
தரும் அளவுக்கும் ஆண்டுதோறும் குறிப்பிட்ட எண்ணிக்கையில் புதிய உயர்
நிலைப்பள்ளிகள் தொடங்க ஏற்பளிக்கப்பட்டு வருகிறது.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, புதிய
தாக உயர் நிலைப் பள்ளிகள் ஆரம்பிக்கும்போது, சில இடங்களில் அந்தப்
பகுதியிலுள்ள பழைய பள்ளிக்கூடங்களில் உள்ள மாணவர்கள் மிகவும் பாதிக்கப்
படுகின்ற நிலை ஏற்படுவதால், பழைய பள்ளிகள் பாதிக்கப்படாமல் இருக்க
வேண்டும் என்பதைக் கவனத்தில் கொண்டு அரசு புதிய பள்ளிகள் துவங்க
அனுமதி வழங்குமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, தேவையான இடங்களில் புதிய உயர்நிலைப் பள்ளிகள்
ஆரம்பிக்க வேண்டும் என்ற எண்ணத்தைக் கருத்தில் கொண்டுதான் இந்த
அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அதற்கு இருக்கிற ஒரே ஒரு
தடை அல்லது கட்டுப்பாடு என்னவென்றால், அந்தப் பகுதியிலே இருக்கிற
வேறு உயர்நிலைப் பள்ளிகள் பாதிக்கப்படக் கூடாது, அல்லது அப்படி இரண்டு

[1982 மார்ச்

உயர்நிலைப் பள்ளிகள் ஏற்படுத்தப்படுவதால், இரண்டுமே செலவுக்கு ஏற்ப பயன் தராத நிலைமை ஏற்பட்டுவிடக்கூடாது ; பொதுப்பணம் வீணாக விரய ஆகக் கூடாது என்ற அடிப்படை கருத்துதான் முக்கிய தடையாக உள்ளது அந்த அடிப்படையில் அனுமதி அளிக்கும்போது, சில இடங்களில் கொஞ்சப் அதிகக் கவனம் செலுத்தி அரசு அனுமதி அளித்து வருகிறது. மற்ற தேவை யான இடங்களில் எல்லாம் இரு உயர்நிலைப் பள்ளிகளும் இயங்கக்கூடிய வகை யில், எல்லா மாணவர்களுக்கும் உயர்நிலைப் பள்ளிக் கல்வி கிடைக்கக்கூடிய அளவில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

திரு. இரா. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர் களே, 8 ஆம வகுப்பை உயர்நிலைப் பள்ளியிடம் சேர்க்கும் திட்டம் குறித்து பரிசீலிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இருந்தாலும் அந்த வகுப்பை உயர்நிலைப் பள்ளியில் சேர்த்தால், விஞ்ஞான அறிவியல், ஆய்வுக்கூடங்கள் அங்கே இருப்பதால் 8 ஆம் வகுப்பு படிக்கிற மாணவர்களுக்கு பொருத்தமான அளவிலே புரிந்துகொள்ள வாய்ப்பாக இருக்கும். உயர்நிலைப் பள்ளியிலே இந்த வகுப்பைச் சேர்ப்பது பற்றி ஆலோசனை செய்துக் கொண் டிருந்தாலும், பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளை உயர்நிலை பள்ளிகளில் அதைச் சேர்க்க அரசு முயற்சி செய்யுமா ? பரிசீலிக்கப்படும் என்று அதையும் சொல்லிவிடாமல், அவசியம் அடுத்த ஆண்டிலே சேர்ப்பதற்கான வாய்ப்பை உண்டாக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே 11 ஆண்டுகள் படித்த எஸ்.எஸ்.எல்.சி. படிப்பை 10 ஆண்டுகளாக குறைத்ததற்குப் பிறகு, பழைய 8 ஆம் வகுப்பின் தரத்தைவிட இப்போது இருக்கிற 8 ஆம் வகுப்பின் தரம் மிக உயர்ந்து இருக்கிறது. தற்போது இருக்கிற கல்வி அமைப்பிலே 8 ஆம் வகுப்புக்கான பாட திட்டங்களை நடத்தக் கூடிய தகுதி பெற ஆசிரியர்கள் குறைந்தபட்சம் பி.டி. பட்டம் பெற்றவர்களாக இருக்க வேண்டும். மற்ற மாநிலங்களில் எல்லாம் 8 ஆம் வகுப்பை உயர்நிலைப் பள்ளி களிலேதான் சேர்த்திருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தில்தான் இந்த 8 ஆம் வகுப்பின் அமைப்பு முறை மிக பலவீனமான ஒரு இணைப்பாக இருக் கிறது. தொடக்கப்பள்ளியிலே இணைந்திருப்பதால். இது மாணவர்களின் முன்னேற்றத்தை பாதிக்கின்ற நிலைமையையும் ஏற்படுத்திக் கொண்டிருக் கிறது. அதை சரி செய்வதற்கான முறைகளிலேதான் சில கருத்துக்களைப் பரிசீலனை செய்துக் கொண்டிருக்கிறோம். அதைப் பரிசீலித்து முடித்தபின் அரசு தக்க நடவடிக்கையை எடுக்கும்.



1982 மார்ச் 5]

திரு. ஏ. சி. சண்முகம் : பல உயர்நிலைப் பள்ளிகளில் 1,500 அதற்கு மேலும் மாணவர்கள் படிக்கிறார்கள். அதில் 600, 700 மாணவிகள் மட்டும் படிக்கி றார்கள். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் எட்டயபுரத்தில் பாரதி விழாவில் சொன்னதுபோல் தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளில் 500-க்கு மேற் பட்ட மாணவிகள் படிக்கும் உயர்நிலைப் பள்ளியாக இருந்தால் அவர்களுக்காக தனியாக பெண்கள் உயர்நிலைப் பள்ளிகள் என்று அமைக்கும் திட்டம் எப்போது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் . புதிய உயர்நிலைப் பள்ளிக்கூடங்கள் ஆரம்பிக்க அந்தப் பகுதி மக்கள் ஒரு குழு அமைத்துக்கொண்டு அதற்கான பணத்தை வசூல் செய்து கட்டி, அதற்கான இடத்தையும் தேர்வு செய்து தாற்காலிக கட்டடம் தருவார்களானால் புதிய உயர்நிலைப் பள்ளிகளை ஆரம் பிக்க அனுமதிக்கிறோம். பெண்கள் உயர்நிலைப் பள்ளிகள் ஆரம்பிக்கவும் அது பொருந்தும். எனவே பெண்கள் உயர்நிலைப் பள்ளிகள் தேவை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுவார்களேயானால், அத்தகைய முயற்சி களை எடுப்பார்களானால் அதுகுறித்து அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

திரு. கே. ஆர். சுந்தரம் : பஞ்சாயத்துப் பகுதிகளில் ஆரம்பப் பள்ளிகள் ஆரம்பிக்கும்போது அந்தக் கிராம மக்கள் பணம் கட்ட வேண்டுமென்று கேட் கும்போது வசதி இல்லாத கிராமங்களில் உயர்நிலைப் பள்ளிகள் ஏற்பட முடி யாத நிலை ஏற்படுகிறது. எனவே அப்படிப்பட்ட இடங்களில் கட்டட வசதி யைப் பெற்றுக்கொண்டு பணம் கட்டாவிட்டால் பரவாயில்லை என்று அரசாங் கம் அனுமதி அளிக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மக்களுடைய கஷ்டங்கள் நமக்குத் தெரிகிறது. அதற்காகவே பல்வேறு சலுகைகளை செய்து வருகிறோம். பல் வேறு உதவிகளைச் செய்து வருகிறோம். ஆனால் அதுவே மக்களுக்கு தங்க ளுக்குத் தேவையான திட்டங்களில் ஆர்வம் இல்லாத ஒரு நிலையை உண்டாக்கி விடக்கூடாது என்ற எண்ணத்தினால்தான் மேல்நிலைப் பள்ளிகள் ஆரம்பிக்க ரூபாய் 25,000 கட்ட வேண்டும் என்று சொன்னோம். பல கருத்துக்கள் சொன் னார்கள். அப்படி ஒரு நிலைமை இருந்தால்தான் பொது மக்களை, பெற் றோர்களை தலைமை ஆசிரியர் அணுகுவார். அப்போதுதான் அந்தப் பள்ளிக் கூடத்திற்கும் மக்களுக்கும் இடையே ஒரு தொடர்பு ஏற்படும். அப்போதுதான் பெற்றோர்களுக்கும் ஒரு அக்கறை ஏற்படும். அந்த அடிப்படையில் வந்தால் தான் மேல்நிலைப் பள்ளிகள் நல்லபடியாக இயங்கும் என்று சொன்னோம். அப்படிச் சொன்னது, இன்றைக்கும் அதுதான் உண்மையாக இருக்கிறது.

ரூபாய் 25,000 என்பது பெரிய தடையாக இருக்கவில்லை. இன்று தலைமை ஆசிரியர் மக்களை மதிக்கிறார்கள். பெற்றோர்களை மதிக்கிறார்கள். பெற்றோர்களும் பள்ளிக்குப் போகிறார்கள். ரூபாய் 25,000 என்பது மட்டுமல்ல அதற்கு மேலும் பல்வேறு உதவிகளைச் செய்து வருகிறார்கள். பெற்றோர்களும் பள்ளியின்மீது அதிக அக்கறை எடுக்கிறார்கள். இது பள்ளியின் வளர்ச்சிக்கு நன்மை பயக்கறதே தவிர வேறு நிலை இல்லை. தலைமை ஆசிரியர்களும் இப்போது பெற்றோர்களை மதிக்கிறார்கள். எம்.எல்.ஏ., எம்.பி.-க்களிடம் போகிறார்கள். ஆதரவு கேட்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்படுவதற்கு இந்த நிபந்தனை நமக்குப் பயன்படுகிறது. அது நல்லதாக இருப்பதால் அதை நாம் எடுக்க வேண்டாம் என்று கருதுகிறோம்.

திரு. செ. சிவசாமி : பணம் கொடுத்து, இடம் கொடுத்து நான்கு ஆண்டுகளாகியும் திருப்பாலைக்குடியில் புதிதாக பள்ளி ஆரம்பிக்கப்படாமல் இருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதுகுறித்து பரிசீலிக்கும்.

## *Pay scales in the Polytechnics.*

* 368 Q.—THIRU R. UMANATH : Will the Hon. the Minister for Education be pleased to state :

(a) whether the G.O. Ms. No. 1626 of 30th August 1979 of the Education Department removing the anomolies and refixing the payscale of lecturers of Polytechnics both Government and Private on par with the Engineering Colleges has been implemented in all the Polytechnic Colleges ;

(b) whether the Government have received any complaint or representations from any of the Technical Colleges for non-implementation of the above order ;

(c) if so, the details thereof ; and

(d) the action taken thereon ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) இல்லை.

(இ) மற்றும் (ஈ). கேள்விக்கு இடமில்லை.



திரு. ரா. கிருஷ்ணன் : யூ.ஜி.சி. பரிந்துரைப்படி என்ஜினியரிங் கல்லூரி விரிவுரையாளர்களுக்கு அல்லது கலைக் கல்லூரி பேராசிரியர்களுக்கு குறைந்த பட்சம் ரூபாய் 1,100 பேசிக் பே என்றிருக்கிறது. 1—1—1974-க்கு முன்னாலும்சரி அல்லது அதற்குப் பிறகு வந்தவர்களுக்கும் அதே ஸ்கேல் கொடுக்கப்படுகிறது. ஆனால் பாலிடெக்னிக்களில் அப்படிக் கொடுக்கப்படாமல் பாகுபாடு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. சென்னை அடையாறு பாலிடெக்னிக், திருச்சி, மதுரையில் உள்ள பாலிடெக்னிக்களில் கொடுக்கிறார்கள். ஆனால் டைரக்டர் ஆப் டெக்னிக்கல் எட்யுகேஷன் உத்தரவுப்படி, மற்ற லெக்சரேர்ஸ்க்கு அப்படிப்பட்ட ஒரு ஏற்பாடு செய்யாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? எனவே அப்படி பாகுபடுத்தக்கூடிய நிலையை மாற்றி இவர்களுக்கும் அப்படிப் பட்டதொரு வாய்ப்பு, 1—1—1978-க்குப் பிறகு ப்ரமோஷன் வந்தால் அப்படிப் பட்டதொரு வாய்ப்பு கொடுக்க அரசு மறுபரிசீலனை செய்து ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : 1—1—1974 என்றிருந்தது 1—1—1975 வரை விரிவுரையாளர்களாக நியமனம் செய்யப்பட்டவர்களுக்கு ரூபாய் 1,100 அடிப்படைச் சம்பளம் கொடுக்கலாம் என்று ஒரு நபர் குழு பரிந்துரைத்துள்ளது. இது அரசாங்கத்தின் ஆய்வில் உள்ளது.

(முற்பகல் 9-40)

திரு. சல்வாமூர்த்தி என்கிற பி. சொரணம் . பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதேபோல் கலைக் கல்லூரியில் பதவி உயர்வை 1978-லே அமுலுக்கு கொண்டு வந்தீர்கள். ஆனால், அதே தகுதியுள்ள டெக்னிகல் கல்லூரியில் வேலை செய்கிற ஆசிரியர்களுக்கு 1980-லே பதவி உயர்வு அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த பாகுபாட்டை அகற்ற அரசு முன்வருமா என்று கேட்பதோடு, இன்கிரிமெண்டில்கூட பாகுபாடு இருக்கிறதே, அந்தப் பாகுபாட்டையும் அகற்றுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது இவைகள் ஆய்விலே இருக்கின்ற காரணத்தால், அப்போது இந்தப் பிரச்சினைகளையெல்லாம் சேர்த்து ஆராயப்படும்.

[1982 மார்ச் 5

குற்றவியல் நீதிமன்றங்களில் பின்பற்றப்பெறும் நடைமுறைகள்.

* வினா எண் 369—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் குற்றவியல் வழக்குகளில் குற்றவாளிக்கு தண்டனையுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு கொடுக்கக் கோரும் நடைமுறை விசாரணை குற்றவியல் நீதிமன்றங்களிலேயே வழங்கும் முறை நடைமுறையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) குற்றவியல் குற்றங்களில் பாதிக்கப்பட்டுள்ளோருக்கு நீதிமன்றம், தன் விருப்பப்படி, நஷ்ட ஈடு கொடுக்கவும், நஷ்ட ஈடாக கொடுக்கப்பட வேண்டுமென்ற தொகை, நீதிமன்றங்களிலேயே பாதிக்கப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது என்று குற்றவியல் நடைமுறைக்கோவையின் பிரிவு 357 வழிவகை செய்கிறது. இம்முறை தமிழகமெங்குமுள்ள அனைத்து குற்றவியல் நீதிமன்றங்களாலும் பின்பற்றப்படுகிறது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டத்தில் வழிவகை இருப்பதாக அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அப்படி வழிவகைகள் இருந்தாலும், அவைகள் நடைமுறையில் சாத்தியமில்லை. காரணம், தண்டனை மற்றும் நஷ்ட ஈடு, அபராதம் விதிக்கப்பட்டால், குற்றவாளிகள் நஷ்ட ஈட்டைக் கொடுக்காமல், அதற்காக விதிக்கப்படும் கூடுதல் தண்டனையை தண்டனையோடு சேர்த்து அனுபவிக்கின்ற காரணத்தினால், பாதிக்கப்படுகின்றவர்களுக்கு நேரடியாக பலன் கிடைப்பதில்லை. ஆகவே, பாதிக்கப்பட்டவர்களுக்கு நேரடியாக நஷ்ட ஈடு அல்லது உதவித் தொகை பெறுவதற்கு சட்டமாற்றத்திற்கான வழிவகை செய்யப்படுமா என்பதோடு, இதுவரை அப்படி பாதிக்கப்பட்டவர்களுக்கு வழக்கு மன்றங்களில் நஷ்ட ஈடாக எத்தனை பேர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் தண்டனை என்றும், அபராதம் என்றும் இரண்டும் இருக்கும்போது, பெரும்பாலோர் அபராதத்தைக் கட்டி விடுகிறார்கள் ; தண்டனையை அனுபவிப்ப



1982 மார்ச் 5]

தில்லை. சில குற்றவாளிகள் சில சிறு குற்றங்களுக்காக, நியூசென்ஸ் கேஸ் போன்றவற்றிற்கு, ஏழைகளாக இருந்து பாதிக்கப்பட்டால், 5, 10 அல்லது 15 தினங்கள் அபராதம் கட்டாமல், சிறையிலே இருந்துவிடுகிறார்கள். நீதிமன்றங்களில் பல கட்டங்களில் இழப்பைத் தராமல் நஷ்ட ஈட்டைத் தராமல் இருக்கிறார்கள். அது மிகவும் நீண்ட பட்டியலாக இருக்கிறது. வழக்கு மன்றங்களில் செலவிட்ட தொகையைக் கொடுக்க வேண்டும் என்றும், குற்றவாளிகளுக்கு இழப்பு ஏற்பட்டால், அதையும் கொடுக்க வேண்டுமென்றும் சிவில் நீதிமன்றத்தில் கிட்டத்தட்ட 7, 8 விதிகளின் அடிப்படையில் இழப்பீட்டுத் தொகை தரப்படுகிறது ; தரப்பட்டும் வருகிறது. எத்தனை பேர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற விவரம் தற்போது இல்லை. உயர்நீதிமன்றத்தில் கேட்டபோது, உடனடியாக தர இயலாது, சற்று அவகாசம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஆனால், யாருக்கு அப்படி இழப்பீடு கொடுக்கவில்லையோ, அவர்கள் எந்த நேரத்தில் மனு செய்தாலும் கொடுப்பதற்கு வழிவகை இருக்கிறது.

அரசு அறிவித்த கூட்டுறவுக் கடன் சலுகைகள்.

*வினா எண் 370—திருமதி தா. இராசாம்பாள் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழ்நாடு அரசு அறிவித்த கூட்டுறவுக்கடன் சலுகைகளைப் பெற்ற விவசாயிகளின் எண்ணிக்கை அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் கடன் வகை வாரியாக விவசாயிகளின் எண்ணிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) ஒரு விவர அறிக்கை * அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திருமதி தா. இராசாம்பாள் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கடன் நிவாரணம் என்பது கடன் பெற்ற காலத்திலிருந்து நில அளவை வைத்துக்கொண்டு, கடன் நிவாரணம் அளிக்கப்பட்டுள்ளதா ? அல்லது தற்போதுள்ள நிலையில் கடன் அளிக்கப்படுகிறதா ?

* 362—363ஆம் பக்கங்களில் இணைப்பு Iஆக அச்சிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அவர்கள் கடனை தள்ளுபடி செய்கின்றபோது, அவர்களைப் பற்றிய விவரங்கள் கேட்கப்பட்டு, அவர்கள் சிறு விவசாயிகள் என்ற நிலையில் இருப்பார்களானால், அவர்களுக்கு கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

**திரு. கி. அன்பழகன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுக் கடனை ஒழுங்காகத் திருப்பிச் செலுத்துகிற விவசாயிகளுக்கு மீண்டும் கடன் வழங்குவதில் முன்னுரிமை அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ரிசர்வ் வங்கி விதிப் பிரகாரம், அந்த வங்கி மீண்டும் கடன் வழங்க வேண்டுமென்றால், பைனான்சியல் வையபிலிடி அதாவது டென்டிங் எலிஜிபிலிடி இருந்தால், அவைகளுக்கு கடன் கொடுக்க முடியும் என்ற விதிமுறை இருக்கிறது. அப்படி இருந்தபோதிலும், கடன் முறையாகத் திருப்பிக் கொடுக்கின்ற விவசாயிகளுக்கு, அடுத்த பயிர்க் கடன்பெற வழிவகை செய்ய வேண்டுமென்ற முறையில், அந்த வங்கியின் லென்டிங் எலிஜிபிலிடி இழந்த போதிலுங்கூட, கடன் தரவேண்டுமென்று நாங்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். பாரதத்தில் தமிழகத்தில்தான் இது நடைமுறைப்படுத்தப்படுகிறது.

**திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது தமிழக அரசு சிறு விவசாயிகளுடைய கடன்களைச் சென்ற ஆண்டு கொஞ்சம் ரத்து செய்தது வரவேற்கத்தக்கது. ஆனால், இன்னும்கூட 1 ஏக்கர், 2 ஏக்கர்கள் வைத்திருக்கக் கூடியவர்கள் அந்தச் சலுகையைப் பெறமுடியாத நிலையில், அவர்கள் காலம் கடந்து, விவரம் தெரியாமல் இருந்துவிட்டார்கள். அதை மீண்டும் பரிசீலனை செய்து, அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா? அதோடு, மத்திய அரசு தமிழ்நாடு அரசு கடனைத் தள்ளுபடி செய்ததை, யாரைக்கேட்டு தள்ளுபடி செய்தீர்கள் என்று இந்திரா காங்கிரஸ் அமைச்சர்கள் பேசியது பத்திரிகைகளிலே வந்தது. அது சம்பந்தமாக மத்திய அரசிடமிருந்து மாநில அரசுக்கு உத்தரவு வந்ததா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, பாதிக்கப்பட்ட விவசாயிகள் அந்த சலுகை தொடர்ந்து பெறவேண்டுமென்ற நோக்கோடு அந்த காலம் நீட்டிக்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல மைய அரசிடமிருந்து மாநில அரசிற்கு தாக்கீது





வந்திருக்கிறது. ரிசர்வ் வங்கியிடமிருந்து தாக்கீது வந்திருக்கிறது. கடனை ரத்து செய்யக் கூடாது என்றும், ஜப்தி மூலம் கடனை வசூல் செய்ய வேண்டுமென்றும் மைய அரசிடமிருந்து மாநில அரசிற்கு தாக்கீது வந்திருக்கிறது.

**திரு. பி. எம். தங்கவேல் ராஜ் :** மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, தேர்தல் சமயத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையிலே அனைத்து கடனையும் நாங்கள் ரத்து செய்வோம் என்று சொல்லப்பட்டது. அந்த நேரத்தில் தமிழகம் வந்த மத்திய நிதியமைச்சர் மாண்புமிகு வெங்கட்டராமன் அவர்கள் ரிசர்வ் பாங்கிலே கடனை ரத்து செய்வதற்கு அதிகாரம் கிடையாது, மைய அரசு எதுவும் செய்ய முடியாது என்று திட்டவட்டமாக அறிவித்திருக்கிறார்கள். அப்படியிருந்தும் மைய அரசின் மீது குறை போடுவது சாலச்சிறந்தது தானா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வெங்கட்ராமன், மைய அமைச்சர் அவர்கள் கூட தமிழகம் வந்திருந்த போது கடனை ரத்து செய்வதற்கு ஆயப்படும் என்று சொன்னார்கள். மாண்புமிகு ஆர். வி. சுவாமிநாதன் அவர்கள் ரத்து செய்ய முயற்சி எடுக்கப்படும் என்று கூட சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பத்திரிகையை புரட்டி பார்த்தால் தெரியும் என்று கருதுகிறேன். மாநில அரசு விவசாயிகளுடைய நலன் கருதி கடனை ரத்து செய்யவேண்டுமென்று முடிவை எடுத்தாலும் கூட அத்தகைய முடிவை எடுக்கக் கூடாது என்று மைய அரசு சொல்கிறது. பாரதத்திலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு தமிழகத்திலே தான் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உதவி செய்யவேண்டுமென்ற முறையில் இதுகாறும் 192 கோடி ரூபாய் அளவிற்கு சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது. எந்த மாநிலத்திலும் செய்யாத இந்த காரியத்தை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தமிழக விவசாயிகளின் நலன் கருதி செய்திருக்கிறார்கள். ஆனாலும் கூட மாநில அரசுக்கு மைய அரசு சொல்கிறது. நீங்கள் ரத்து செய்யக் கூடாது, பாரதத்தின் ஒட்டுமொத்த 'பினான்சியல் சிஸ்டமே' 'கொலாப்ஸ்' ஆகிவிடும் எனவே நீங்கள் ரத்து செய்யக் கூடாது என்று சொல்கிறார்கள். அதோடு மட்டுமல்ல நீங்கள் அப்படி ரத்து செய்வீர்களானால் உலக வங்கியிடமிருந்து கடன் பெறக் கூடிய தகுதியை தமிழகம் இழந்து விடும்; உங்களுடைய வருவாயிலேயிருந்து ரத்து செய்தீர்களானால் மைய அரசு மாநில அரசிற்கு கொடுக்கும் உதவிகளை குறைத்து விடும் என்று கூட சொல்கிறார்கள். இதுதான் நிலை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மத்தியிலே இருக்கிற இயக்கத்தைச் சார்ந்தவராக இருக்கிற காரணத்தால் நீங்கள் அங்கே சொல்ல வேண்டும்.

**திரு. இரா. கருப்பையா :** மாண்புமிகு தலைவர் அவர்களே, கடனை திருப்பிச் செலுத்திய விவசாயிகள் அனைவருக்கும் கடனை திருப்பி கொடுப்ப தற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும், வழங்கப்படுவதாகவும் மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். என்னுடைய குளித்தலை தொகுதியில் நச்சலூர் எம்.எம். 284 விவசாய சேவை கூட்டுறவுச் சங்கம். அதிலே கடனை திருப்பிச் செலுத்திய விவசாயிகளுக்கு உரம் மட்டும் கொடுத்திருக்கிறார்கள். கேஷ் போர்ஷன் இரண்டு மாதங்களுக்கு மேலாகியும் கொடுக்கபபடவில்லை. அம்மாதிரியான நிலை அந்த கிராமத்தில் மட்டுமல்ல, திருச்சி மாவட்டம் முழுவதும் இருப்பதாகத் தெரிகிறது. இந்த நிலைமையைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, உரம் கொடுப்பதிலிருந்து கடன் வழங்குவது வரை அங்கங்கே இருக்கும் சங்கங்கள் ஏற்பாடுகளை செய்து வருகிறார்கள். கடனை திருப்பித் தராத நிலையில் சங்கங்களின் 'பினான்சியல் வையபிலிட்டி', இருந்து, அவற்றிற்கு 'லெண்டிங் எலிஜிபிலிட்டி' இருந்தால் தான் கொடுக்கக் கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அவ்வப்போது எடுக்கப்படும் நடவடிக்கைகளினால் நல்ல முறையில் இப்படிப்பட்ட பிரச்னைகள் தீர்ந்து வருகிறது.

**திரு. கே. உசி :** மாண்புமிகு தலைவர் அவர்களே. தமிழகத்தில் தள்ளுபடி செய்யப்பட்ட கூட்டுறவு கடன்களில் 'ஹில் ஏரியா டெவலப்மென்ட்' கீழ் கொடுக்கப்பட்ட கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதா என்பதை அறிவிக்க இயலுமா ?

(முற்பகல் 9-50)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஹில் ஏரியா டெவலப்மென்ட் என்ற முறையிலே மண் வளப் பாதுகாப்புக்காக கொடுக்கப்பட்ட கடன் ரத்து செய்யப்படுமா என்ற விவரம் என்னிடத்தில் இல்லை. சிறு விவசாயிகளாக இருந்து அவர்கள் பாதிக்கப்பட்டிருப்பார்களானால், வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்காத நிலையிலிருந்தால் அது அவர்களுக்கு ரத்து செய்யப்படும்.

**திருமதி தா. இராசாம்பாள் :** துணைத் தலைவர் அவர்களே, நான் கேள்வி கேட்டபோது கடன் பெற்ற அந்தக் கால அளவை இந்த அரசு கணக்கில் எடுத்துக்கொண்டுள்ளதா அல்லது தற்போதுள்ள அளவை கணக்கில் எடுத்துக் கொண்டுள்ளதா என்பதற்கு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கவில்லை பாதிக்கப் பட்ட விவசாயிகளுக்கு உதவ வேண்டுமென்ற எண்ணத்தை நான் கூடப்



பாராட்டுகிறேன். ஆனால், உண்மையிலேயே பாதிக்கப்பட்ட விவசாயிகள் இதில் நிவாரணம் பெறவில்லை என்ற செய்தியை நான் சொல்வதோடு உண்மையிலேயே பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு எக்கருக்குக் குறைவாக உள்ள விவசாயிகளுக்கு இந்தச் சட்டத்திலே இடம் உண்டா ? ஐந்து ஏக்கர் நஞ்சை புஞ்சை என்பதை மாற்றியமைக்கப்படும் என்று தெரிவிக்கப் பட்டதே, அது இதுவரை வெளியிடப்படவில்லை. அது எப்போது அறிவிக்கப்படும் ?

அதோடு அந்த விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்க நடவடிக்கை எடுக்கப் படுமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** கடன் பெறுகிறபோது மீடியம் பார்மர், மார்ஜினல் பார்மரர், ஸ்மால் பார்மரர், பிக் பார்மரர் என்று பார்த்து அந்த அடிப்படையில் கடன் தரப்படுகிறது. சில கடன்கள் 3, 4, 5 ஆண்டுகள் என்று பலவகைக் கடன்களாக இருக்கிறபோது பாகப் பிரிவினை ஏற்பட்டு விடுகின்ற காரணத்தினால் சிலர் சிறு விவசாயிகளாகக் கருதப்பட்டு, அப்போது அவர்களுக்கு சிறு விவசாயி, அல்லது மார்ஜினல் விவசாயி ஸ்திகேலமே பி எந்த வகையில் வருகிறார்கள் என்று பார்த்து அந்த வகையில் ட்ரீட் செய்யப் படுகிறார்கள். ஸ்மால் பார்மர் என்கிறபோது ஐந்து ஏக்கர் $2\frac{1}{2}$ ஏக்கர் என்பதைப் பொறுத்தவரைக்கும் நாம் ஆராய்ந்து வருகிறோம். பல்வேறு கைட் லைன்ஸ் இருக்கின்றன. $2\frac{1}{2}$ ஏக்கர் நஞ்சை அல்லது 5 ஏக்கர் புஞ்சை இருந் தால் ஸ்மால் பார்மர்ஸ் என்று இருக்கிறது. அது ஸ்டாண்டர்டு ஏக்கர் என்ற அளவில் இல்லை. $2\frac{1}{2}$ ஏக்கர் நஞ்சை என்பதைப் பொறுத்தவரைக்கும் வருமானத்தின் அடிப்படையிலே மாவட்டத்திற்கு மாவட்டம், வட்டத்திற்கு வட்டம், பகுதிக்குப் பகுதி மாறுபடுகிறது. எனவே வருமானத்தின் அடிப் படையில் சிறு விவசாயிகள், மார்ஜினல் விவசாயிகள் என்பதை எப்படி லேண்ட் ரெவின்யூ பிக்ஸ் செய்கிறார்களோ அந்த அடிப்படையில் பிக்ஸ் செய்வது உண்மையிலேயே அவர்களுடைய பாதிப்புக்கேற்ப பிரச்சினைகள் தீர்க்கப் படலாம் என்ற காரணத்தினால் அதை தற்போது அரசு ஆராய்ந்து வருகிறது. அரசு அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கும்.

**திரு. பொ. உத்திராபதி :** துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநில அரசு சென்ற ஆண்டு விவசாயிகளுக்குக் கடன் தள்ளுபடி செய்ததை வரவேற்கிறோம். 5 ஏக்கருக்குக் குறைந்த அளவுக்கு உள்ளவர்களுக்கு என்று சொன்னார்கள். ஆனால் மாவட்டத்திற்கு மாவட்டம் மண்ணின் தன்மை மாறுபடுகின்ற காரணத்தினால் அந்த சலுகை பெரும்பான்மையோருக்குக் கிடைக்காத நிலை இருக்கிறது. ஆகவே ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று ஆக்குவ தற்கு அரசு பரிசீலனை செய்யுமா ? நாடாளுமன்றத்தில் விவாதம் நடை

பெற்றபோது இன்றைய தினம் மத்திய துணை வேளாண்மைத் துை
அமைச்சராக இருக்கின்ற திரு. ஆர். வி, சுவாமிநாதன் அவர்கள் விவசாயிக
கடன் தள்ளுபடி செய்யப்படும் என்று வாக்குறுதி கொடுத்தார்கள். அந்
வாக்குறுதியை நிறைவேற்றவேண்டுமென்றும் அந்த முறையில் அந்தக் கட
களைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசை
வற்புறுத்துமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்.** மாண்புமிகு துணைத் தலைவ
அவர்களே, நிலத்தினுடைய **தன்மைக்கேற்ப நிலத்தினுடைய** அளவு நிர்ண
யிக்கப்பட வேண்டும் என்பது நல்ல ஆலோசனையை அரசும் ஆராய்ந்
வருகிறது. விரைவில் நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ள
படும். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல் மாண்புமிகு மத்தி
அமைச்சர் திரு. ஆர். வி. சுவாமிநாதன் விவசாயக் கடனை ரத்து செய்
நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்ன நேரத்திலே எந்த மாநில அரசு
விவசாயக் கடனை ரத்து செய்யக்கூடாது, விவசாயக் கடனை மாநில அரசி
வருவாயிலிருந்து ரத்து செய்தால்கூட நாங்கள் மாநில அரசுக்குத் தருவோ
என்று சொல்கிறோமோ அதிலிருந்து குறைத்துவிடுவோம் என்று சொல்கிற
கள். மாநில அரசு ரத்துசெய்ய முடியாத நிலையை உருவாக்கி இருக்கிற
கள். மாநில அரசு தொடர்ந்து மைய அரசை பாதிக்கப்பட்டுள்ள விவசா
களுடைய கடனை பரிவோடு பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்கு

**பீடி, சுருட்டு தொழிலாளர்களுக்கான வைப்பு நிதி சட்டத்தினை அமுல்படுத்தும் திட்டம்.**

* **வினா எண் 371—திரு. கே. ஆர். சுந்தரம்.** மாண்புமிகு தொழிலாள **நலத்துறை** அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு **விடையளிப்பாரா—**

**(அ)** பீடி, சுருட்டு தொழிலாளருக்கு பிராவிடெண்டு **பண்** **சட்டத்தை** அமுல் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

**(ஆ)** ஆம் எனில், எப்பொழுது முதல் அமுல்படுத்தப்படும் ?





**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** (அ) மற்றும் (ஆ) தொழிலாளர் வைப்பு நிதி சட்டத்தை 31—5—1977 முதல் பீடி சுருட்டு தொழிலாளருக்கு அமுல் நடத்துவதற்கான அறிக்கையினை மைய அரசு வெளியிட்டுள்ளது. ஆனால் சில பீடி நிறுவனங்களின் மேல் முறையீட்டின் பேரில் இச்சட்டம் அமுல்படுத்துவதை சென்னை உயர் நீதிமன்றமும் உச்ச நீதி மன்றமும் தற்காலிகமாக நிறுத்தி வைத்து ஆணையிட்டுள்ளன. மேற்கண்ட நீதி மன்றங்களின் தீர்ப்புகள் கிடைத்ததும் இது குறித்து மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. கே. ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பீடி சுருட்டுத் தொழிலாளர்களுக்கு 1977 ஆம் ஆண்டு முதல் வைப்பு நிதி வைப்பதற்கு மத்திய அரசு அனுமதி அளித்தும் சென்னை உயர் நீதி மன்றத்திலும், சுப்ரீம் கோர்ட்டிலும் தடை விதிக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அந்தத் தடை விதிக்கப்பட்டு ஐந்தாண்டுகள் ஆகின்றன. ஆண்டு ஒன்றுக்கு தமிழகத்திலே இலட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு ஒரு கோடி ரூபாய் வரையில் இழப்பு ஏற்படுகிறது. எனவே, இந்தச் சட்டத்தை உடனடியாக அமலாக்கவும், தடையை நீக்கவும் மத்திய அரசுக்கு மாநில அரசு கூறி சீக்கிரம் வழிவகை செய்ய ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன கருத்தை மனத்திற்கொண்டு, இந்த வழக்கை விரைவிலே முடிக்க (Expedite Petition) போட்டு அதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று மத்திய அரசுக்கு மாநில அரசு கடிதம் எழுதும்.

**திரு. கே. ஆர். சுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதை விரைவாக நடத்துவதற்கு ஆவன செய்யப்படப் போவதாக அமைச்சரவர்கள் கூறியதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் இடைப்பட்ட காலத்தில் உரிமையாளர்கள் தாங்கள் கட்ட வேண்டிய பணத்தை முன்பணமாக உயர்நீதிமன்றத்திலே கட்டுவதற்கான வழிவகை உண்டா என்று ஆராய்ந்து செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இது பற்றிய சட்டப் பிரச்சினையை ஆராய வேண்டும். அதைப்பற்றி ஆராயலாம்.

திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவ ரவர்களே, பீடித் தொழிலாளர்களுக்கு வைப்பு நிதி என்ற பிரச்னை நீண்ட காலப் பிரச்னையாக இருந்து 1977 ஆம் ஆண்டில் அதற்குத் தீர்வு ஏற்பட்ட டன் நிர்வாகத்தைச் சேர்ந்தவர்கள் தடை பெற்றிருந்தாலும் நம்முடைய மாநில அரசு எத்தனை முறை முதலாளிகளை அழைத்துப் பேச்சு வார்த்தை நடத்தியிருக்கிறது? சில முதலாளிகள் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காண விரும்புவது அரசுக்குத் தெரியுமா? அப்படியிருந்தால் அவர்களையும், தொழிற்சங்கத்தைச் சார்ந்தவர்களையும் கலந்து பேசி தடையை அகற்ற உரிய நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, உயர்நீதிமன்றமும், டெல்லியிலே உள்ள உச்ச நீதிமன்றம் தடை விதித்திருக்கின்றன என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். தடை உத்தரவை வாங்கிய முதலாளிகளே கொடுக்க முன்வருகிறார்கள் என்றால் இந்த அரசை விட மகிழ்ச்சியடையக் கூடிய அரசு வேறொன்றும் இருக்க முடியாது. இருந்தாலும் அப்படியொரு (consenses) இருக் கிறதா என்று இந்த அரசு பரிசீலனை செய்யும்.

### பெரம்பூர் தொகுதியிலுள்ள குடிசை மாற்று வாரியத்திற்குச் சொந்தமான இடங்களில் குடியிருப்பவர்களுக்கு பட்டா வழங்கும் திட்டம்.

*வினா எண் 372.—திரு. சு. பாலன் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போது பெரம்பூர் தொகுதியில் குடிசை மாற்று வாரியத்திற்கு சொந்தமான இடங்களில் குடியிருப்பவர்களுக்கு அந்த இடத்தைச் சொந்த மாக்கி பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில் அந்த நிலம் அவர்களுக்கு இனாமாக கொடுக்கப் படுகிறதா அல்லது கிரயத்திற்கு கொடுக்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) அரசு நிர்ணயித்துள்ள நிலத்தின் மதிப்பீட்டுத் தொகையை பெற்றுக்கொண்ட பிறகே பட்டா வழங்கப்பட வேண்டும் என ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.





திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவ ரவர்களே, பெரம்பூர் தொகுதியில் உள்ள சில பகுதிகளில் குடியிருக்கின்ற அந்தக் குடியிருப்பாளர்கள் சுமார் இருபது, இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னதாகவே அந்த இடத்திற்கு வந்து தொடர்ந்து குடியிருந்து வருவ தாகவும், அவர்கள் பக்கத்தில் உள்ள தொழிற்சாலைகளில் பணிபுரிந்து வருவ தாகவும் தெரிகிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லும்பொழுது அவர்களிடத்திலேயிருந்து பணத்தைப் பெற்றுக்கொண்ட பிறகு பட்டா கொடுப்பதாகச் சொன்னார்கள். ஆனால் அவர்கள் தொழிலாளர்களாக இருப்பதால் அவர்களுக்குத் தவணை மூலம் பணத்தைப் பெற்றுக்கொண்டு பட்டா வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தவணை முறையிலேதான் பத்தாண்டுக் காலம் வரையில் நீடிக்கப்பட்ட தவணை முறையில்தான் அந்தப் பணம் பெறப்படுகிறது.

### போடிக்கு வரும் குடிநீரை விவசாயத்திற்குப் பயன்படுத்துவதற்குத் தடுக்கும் திட்டம்.

*வினா எண் 373.—திரு. கே. எம். எஸ் சுப்பிரமணியன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) போடிக்குவரும் குடிநீரை குடிநீர் தேக்கத்திற்கு மேல் விவசாயி கள் பிரித்து எடுத்து விவசாயம் செய்வது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அப்படி விவசாயம் செய்ய தண்ணீரை எடுக்கும் நபர்கள் மேல் அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம். கோட்டாக்குடி ஆற்றிலிருந்து ஒரு சில பட்டதாரிகள் நீர் எடுத்து விவசாயத்திற்குப் பயன் படுத்தியுள்ளார்கள்.

(ஆ) அவர்கள் மீது 6 நீர் தண்டத் தீர்வை போடப்பட்டுள்ளது.

**காட்பாடி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள காந்தி நகர் பேரூராட்சிப் பகுதியிலுள்ள பொதுக் குழாய்கள்.**

***வினா எண் 374. திரு. என் ஏ. பூங்காவனம் :**

**திரு. கே. ஆர். சுந்தரம் :** மாண்புமிகு தொழிலாளர்
நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்பாடி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள காந்திநகர் பேரூராட்சியில்
உள்ள பொதுக்குழாய்கள் அனைத்தையும் குடிநீர்-வடிகால் வாரிய தலைமைப்
பொறியாளர், வேலூர் அவர்கள் உத்தரவின்படி அப்புறப்படுத்தியுள்ளது
அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** (அ) ஆம்.

(ஆ) காந்தி நகர் பேரூராட்சியில் தேவைக்கு அதிகமான பொதுக்
குழாய்கள் போடப்பட்டுத் தண்ணீர் வீணாக்கப்படுவதைத் தவிர்க்க, காட்
பாடி குடிநீர்த் திட்டத்தினால் பயன்பெறும் காந்திநகர் மற்றும் சம்பந்தப்பட்ட
ஊராட்சிகளின் நிர்வாக அதிகாரிகள் காட்பாடி ஒன்றிய ஆணையர், தமிழ்நாடு
குடிநீர்-வடிகால் வாரிய மேற்பார்வைப் பொறியாளர் ஆகியோர் கூடி
ஆலோசித்துத் தேவைக்கு அதிகமாக இருந்த 40 குழாய்களை எடுக்க முடிவு
செய்து மேற்படி நிர்வாக அதிகாரிகள் ஒப்புக்கொண்டதின் பேரில் அந்த 40
குழாய்கள் எடுக்கப்பட்டன. தற்போது இங்கு 31 குழாய்கள் பயனுள்ள
வகையில் இயங்கி வருகின்றன.

(முற்பகல் 10.00)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவையின் அனுமதியுடன்
வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. என். ஏ. பூங்காவனம் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,
காட்பாடி ஒன்றியத்தைச் சேர்ந்த காந்திநகர் என்பது என்னுடைய தொகுதி
யைச் சேர்ந்த பகுதி, சென்ற ஆண்டு வறட்சி நிலை ஏற்பட்டபொழுது, குடிநீர்-
வடிகால் வாரியத்தின் தலைமைப் பொறியாளர் திரு. நாராயண ராவ் அவர்கள்
—இங்கே அமைச்சர் சொன்ன தகவல் நான் அவர் தவறாகச் சொல்வதாகச்
சொல்லவில்லை, கொடுத்த தகவலை மட்டும்தான் சொல்கிறார் என்று நினைக்
கிறேன்—இந்தப் பேரூராட்சி ஒன்றியத்தினுடைய ஈ.ஓ. ஒருவர் இருக்கிறாரே,
தலைமை அலுவலர், அவரையும் கேட்காமல், இவரே உத்தரவிட்டு, 23 குழாய்
களைப் பஞ்ச நேரத்தில், வறட்சி நேரத்தில், தண்ணீர் இல்லாத நேரத்தில் மூடி





விட்டார்கள். அப்பொழுது முறையீடு செய்த பிறகு சிலவற்றை நிறுத்தினார்கள். ஆகவே, இதனைக் கலந்து செய்தார் என்று சொல்வது சரியல்ல. ஆகவே, அரசு—மாண்புமிகு அமைச்சர் அவர்கள்—மூடிய குழாய்களை மீண்டும் திறப்பதற்கு ஆணைகள் பிறப்பிக்க முன்வருவார்களா ? அதை அமுலாக்க முன்வருவார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த ஊருக்குச் சாதாரணமாக, பப்ளிக் பவுன்டன் என்று சொல்லக்கூடிய, பொதுக்குழாய்கள், எவ்வளவு இருக்க வேண்டுமென்று, அதிகாரிகள் பரிசோதனை செய்திருக்கிறார்கள். 71 குழாய்கள் இருப்பதால் தண்ணீர் தான் வீணாகிறது, தண்ணீர் வீணாவதால், மக்களுக்குத் தண்ணீர் ஒழுங்காகக் கிடைக்கவில்லையென்று சொல்லி, 40 குழாய்களை மூடிவிட்டு, இப்பொழுது 31 குழாய்கள்—பயனுள்ள வகையில்—அதைத்தான் கவனிக்க வேண்டும் தற்போது 31 குழாய்கள் பயனுள்ள வகையில்—இயங்கி வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. என். ஏ. பூங்காவனம் :** துணைத் தலைவர் அவர்களே, முன்னால் அந்தக் குழாய்களை அமைக்கிறபொழுது, ஊராட்சி ஒன்றியமும், ஊராட்சி மன்றமும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளை வைத்தில்லாத நிலையில், தேவை என்ற நிலைமையில்தான் போடப்பட்டன. காசு கொடுப்பவர்கள் மட்டும்தான் தண்ணீர் பயன்படுத்த வேண்டுமென்ற நிலைமைக்குக் குடிநீர்-வடிகால் வாரியத் தலைமைப் பொறியாளர் சென்றதால்தான் மூடினார்கள். ஆகவே, அது உண்மையான தகவல் அல்ல—ஆகவே, மூடியகுழாய்களை மீண்டும் திறக்க ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற தகவல் உண்மையான தகவல் இல்லை, மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று ஒரு மனுவை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தருவார்களானால், அதை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி, அது உண்மையான தகவலா என்பதைப் பரிசீலனை செய்ய அரசு தயாராக இருக்கிறது.

**திரு. கே. ஆர். சுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 71 புதுக் குழாய்கள் அமைத்ததாகவும், பயனுள்ள வகையில், 40-ஐ விட்டுவிட்டு, 31-ஐ அங்கு வைத்திருப்பதாகச் சொன்னார்கள். 71-ஐ அமைக்க யார் அனுமதித்தார்கள் எப்படி அனுமதி அளித்தார்கள் ? அங்கே பொது மக்களுக்குச் சரியாகத் தண்ணீர் கிடைக்கவில்லையென்ற காரணத்தினாலே, குடி

நீர்-வடிகால் வாரிய அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் செய்ததால், அந்த விரோதத்தின் காரணமாக, அந்தக் குழாய்கள் எடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறதே, அதுபற்றி அரசு ஆராய்ந்து ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** துணைத் தலைவர் அவர்களே, எனக்குக் கொடுத்திருக்கிற தகவலின்படி 71 குழாய்கள் தற்காலிகமாகத்தான் பொருத்தப்பட்டன. உறுப்பினர் சொன்னமாதிரி அஜிடேஷன் பிரஷருக்காகத் தற்காலிகமாகக் குழாய்களை வைத்திருக்கலாம். பிறகு, தீர ஆலோசித்து பயன் உள்ள தண்ணீரை கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில் 31 குழாய்கள் போதும் என்று அதிகாரிகள் முடிவெடுத்திருக்கிறார்கள். இருந்தாலும் நான் மறுபரிசிலனை செய்கிறேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவு நீரகற்று வாரியம் கடன் பத்திரம் வெளியிட்டுப் பணம் திரட்டுவதற்கான அரசின் அனுமதி.**

* வினா எண் 375—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றும் வாரியம் கடன் பத்திரம் வெளியிட்டு அதன் மூலம் கடன் திரட்ட அரசு அனுமதி அளித்துள்ளதா ?

(அ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

(இ) தொகை எதற்கு செலவழிக்க உத்தேசம் ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** (அ) சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவு நீரகற்று வாரியம் பொதுச் சந்தையில் (open market) கடன் வாங்கவும் அதற்கான பத்திரங்கள் வழங்கவும் தமிழக அரசு அனுமதி வழங்கியுள்ளது.

(ஆ) நடப்பு ஆண்டில், அதாவது 1981-82-ல், தமிழக அரசு தனது ஆணை எண் 1862, ஊர் வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, நாள் 9-11-81 ல் இவ்வாரியம் பொதுச் சந்தையில் கடன் எழுப்பிய ரூபாய் 110.00 இலட்சங்களுக்கு உத்திரவாதம் அளித்துள்ளது.

(இ) இவ்வாறு பொதுச் சந்தையில் எழுப்பிய கடன் தொகையை இவ்வாரியம் நீர் வழங்கல், கழிவு நீரகற்றல் ஆகியவற்றின் முதலீட்டுப் பணிக்காக செலவழிக்க உத்தேசம் செய்துள்ளது.



**981 ஜூனில் கோவையில் நடைபெற்ற தமிழ்நாடு நீர்ப்பாசன ஆலோசனைக் குழுக்கூட்டம்.**

* வினா எண் 376.—திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1981 ஜூனில் கோவையில் தமிழக நீர்ப்பாசன ஆலோசனைக்குழு கூட்டம் நடைபெற்றுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் முடிவுகள் என்ன ?

(இ) உறுப்பினர்கள் யார், யார் ?

**மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது :** (அ) (ஆ) & (இ). விவர அறிக்கை @ பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்.** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே வைக்கப்பட்டிருக்கின்ற விவர அறிக்கையிலே, 5-ஆம், 6-ஆம் தீர்மானத்திலே தொழில்நுட்ப சாத்தியக் கூறுகள், நிதி வசதி இவற்றைக் கருத்திலே கொண்டு பின்தங்கிய பகுதிகளில் சில கோடி ரூபாய் மதிப்புள்ள பாசனத் திட்டங்களை எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும், 7-ஆவது தீர்மானத்திலே மேற்கு நோக்கி பாயும் ஆறுகளில் உள்ள உபரி நீரை, நாட்டில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு திருப்பிவிட வேண்டும் என்றும் கூறப்பட்டிருக்கிறது. அந்த வேலை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்வதோடு, இந்த ஜூன் மாதம் நடைபெற்ற அந்தக் கூட்டத்திற்குப் பிறகு அடுத்த கூட்டம் இதுவரையிலே நடைபெறவில்லை என்பது உண்மையா ? அப்படியானால் அதற்கான காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** தலைவர் அவர்களே, பொதுவாக ஒரு ஆலோசனைக் குழுக் கூட்டம் நடந்து அங்கே விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பொருள் பற்றி அரசு நடவடிக்கை எடுப்பதற்குக் கொஞ்சம் காலம் தேவைப்படுகிறது. ஆலோசனைக் கூட்டத்தையே தொடர்ந்து நடத்திக் கொண்டிருப்பதைவிட ஒரு 6 மாத இடைவெளி கொடுத்து நடத்தினால் முந்தைய கூட்டத்திலே எடுக்கப்பட்ட முடிவுக்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை தெரிந்து கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று கருதி இடையிலே கொஞ்சம் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது, வேறு காரணம் அல்ல.

---

@ 364—365 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

தொழில் நுட்ப சாத்தியக் கூறுகள் நிதி வசதி இவற்றைக் கருத்தில் கொண்டு பின்தங்கிய பகுதிகளில் சில கோடி ரூபாய் மதிப்புள்ள பாசனத் திட்டங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நாம் இதிலே தெளிவாக விவாதித்தபோது Benefit cost rates மனதில் கொண்டு சில திட்டங்களை நாம் நிறுத்திவிடக் கூடாது. பின்தங்கிய பகுதி என்று வருகிறபோது கூடுமானவரை அந்தத் திட்டங்களை எடுத்துச் செயல்படுத்த வேண்டும் என்ற ஒரு கருத்து சொல்லப்பட்டது. அது குறித்து ஏற்கெனவே சில கேள்விகளுக்கு பதில் சொல்லும்போது பின்தங்கிய பகுதிகளாக இருக்கின்ற பட்சத்தில் பொருளாதார ரீதியாக லாப நட்டக் கணக்குப் பார்க்காமல் அந்த திட்டத்தை எடுக்க வேண்டும் என்று அரசு ஏற்கெனவே ஒரு கருத்தை வழங்கி இருக்கிறது. அந்தக் கருத்தின் அடிப்படையில் நாம் இப்போது நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :** தலைவர் அவர்களே, இதிலே ஏழாவது தீர்மானமாக, மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளில் உள்ள உபரி நீரை தமிழ் நாட்டில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு திருப்பிவிட வேண்டும் என்ற முறையிலே தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே அந்த நதிகள் பொறுப்பிலே இருக்கின்ற கேரள அரசோடு, அவர்களுடைய மக்களுடைய நலனுக்குப் பாதகம் இல்லாமல், நமக்குக் கிடைக்கும் முறையிலே, சீக்கிரமாக தொடர்ந்து பேசி அதன் காரணமாக ஏதாவது பலன் நமக்குக் கிடைப்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறதா ? அந்த வாய்ப்பின் அடிப்படையிலே எந்த எந்த மாவட்டங்களுக்கு அவைகள் உபயோகிக்கப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது :** தலைவர் அவர்களே, மேற்கு நோக்கிப் பாயும் நதியைத் தமிழகத்திற்கு திருப்பி விடுவது குறித்து தமிழக அரசு எவ்வளவு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். இதற்கு முந்தைய கேரள அரசு, இடதுசாரி கூட்டணி ஆட்சியாக இருந்தபோது கூட, பல்வேறு கட்டங்களிலே நாம் பேச்சுவார்த்தை நடத்தி இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே காட்டுகின்ற அதே அக்கறையை அங்கே இருக்கின்ற மன்னிக்க வேண்டுகிறேன். எல்லாம் அந்தந்த மாநிலம் என்று வருகிறபோது, அவர்களுடைய இயக்கத்தோடு அந்த நேரத்தில் காட்டி (குறுக்கீடு) சர்வதேசியம், தேசியங்கள் எல்லாம் அடிபட்டுப் போகின்றன. அங்கங்கே அவர்கள் அதிகாரத்தில் இருப்பதற்கு என்ன வழி என்று பார்க்கிறார்களே



தவிர, மக்களுடைய நன்மை என்ன என்று நாம் பொதுவாக சில நேரங்களிலே கவனிக்கத் தவறி விடுகிறோம். இவைகளை எல்லாம் பிரச்சினையாகக் கொண்டுவர நான் விரும்பவில்லை. ஏனென்றால் இது பெரிய சர்ச்சைக்குரிய விஷயம். ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரையில் நாம் இப்போது உள்ள அரசோடு தொடர்பு கொண்டு இருக்கிறோம். தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். மத்திய அரசே கூறியதைப்போல பேச்சுவார்த்தை மூலமாக நீர் கிடைத்துவிடும் என்று நாம் இன்னும் நம்பிக் கொண்டு இருக்க வேண்டுமா என்பது கூட இப்போது நமக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்த பேச்சுவார்த்தைகளை நடத்த ஏற்பட்ட செலவுகளை கூட்டிக் கழித்துப் பார்த்தால் இதிலேயே 2, 3 அணைகளை கட்டி இருக்கலாம் போல் தெரிகிறது. எனவே நாம் கூடுமானவரை மத்திய அரசிடம் சொல்லி, எங்கெங்கு உபரி நீர் இருக்கிறதோ அதை எல்லாம் பற்றாக்குறை மாநிலங்களுக்குத் திருப்புவதற்கு அவர்கள் ஒரு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். தேசிய சொத்தை வீணாக்குவதற்கு எந்த மாநிலத்திற்கும் அதிகாரம் கிடையாது. நதி நீர் என்பது பொதுச் சொத்து. அதை வீணாக்குவதற்கு நாம் அனுமதிக்கக் கூடாது என்று சொல்லி மத்திய அரசை நாம் கேட்டிருக்கிறோம்.

## 1975-76 ஆம் ஆண்டில் நீர்த் தேக்கங்களிலுள்ள வண்டல் படிவுகளை ஆய்வு செய்யும் திட்டம்.

*** வினா எண் 377.—திரு. ஏ. சி. சண்முகம் :** மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1975-76 ஆம் ஆண்டில் நீர்த் தேக்கங்களில் உள்ள வண்டல் படிவுகளை ஆய்வு செய்ய திட்ட பணி மேற்கொள்ளப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், எந்த நிலையில் உள்ளது ?

**மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது :** (அ) ஆம்.

(ஆ) கிருஷ்ணகிரி, சாத்தனூர் ஆகிய நீர்த் தேக்கங்களில் உள்ள வண்டல் படிவுகளை ஆய்வு செய்வதற்கு திட்டப் பணி மேற்கொள்ளப் பட்டுள்ளது.

[1982 மார்ச் 5

**திரு. ஏ. சி. சண்முகம் :** தலைவர் அவர்களே, நீர்த் தேக்கங்களில் உள்ள வண்டல் படிவுகளை விவசாயிகளுக்கு ஏலம் விடும் முறை பயன்படுத்தப்படுகிறதா? இல்லை என்றால் வருங்காலத்தில் இதுபோன்று பல ஆண்டுகளாக படிகின்ற வண்டல் படிவுகளை விவசாயிகள் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது :** தலைவர் அவர்களே, பொதுவாக ஆய்வு செய்யப்பட்டதில் 19 ஆண்டு காலம் கிருஷ்ணகிரி நீர்த் தேக்கத்தில் ஏற்படக் கூடிய படிவின் அளவு என்ன என்பதைக் கணக்கில் எடுத்துக் கொண்டோம். அதிலே கிட்டத்தட்ட ஆண்டு ஒன்றுக்கு 1.24 சதம் மண் மேடிட்டுக் கொண்டே வருகிறது. அவைகளை நாமே வெளியேற்ற வேண்டுமென்று சொன்னால், அதற்கு ஆகக் கூடிய செலவை விட, ஒரு அணையை புதிதாகக் கட்டுகின்ற செலவு குறைவாக இருக்கிறது. எனவே, கூடுமானவரையில் கொள் அளவைப் பாதிக்காத அளவுக்கு நாம் இப்போது நடவடிக்கை எடுத்து வருகிறோம். அதற்கு மேலும் அங்கே உள்ள மண்ணை அப்புறப்படுத்த வேண்டும் என்றால் விவசாயிகள் அவர்களாகவே வந்து எடுத்துக் கொண்டு சென்றால் கூட போதுமானது. நாம் அதற்காக கட்டணம் வசூலிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பது தான் இன்றுள்ள நிலை.

(முற்பகல் 10.10)

**திரு. ஏ. சி. சண்முகம் :** துணைத் தலைவர் அவர்களே, ஆய்வு செய்யும்போது சில தாதுப் பொருள்கள் கிடைத்ததாகச் சொல்கிறார்கள். அந்தத் தகவல் உண்மையா?

**மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது :** துணைத் தலைவர் அவர்களே, அப்படி இதிலே குறிப்பு இல்லை. அது குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தகவல் இருந்தால் கொடுக்கலாம். நானும் விசாரிக்கிறேன்.

**டாக்டர் கே. சமரசம் :** துணைத் தலைவர் அவர்களே, அங்கே வண்டல் மண் படிந்து இருக்கிற காரணத்தால் ஏற்கனவே அந்த அணையில் எவ்வளவு தண்ணீர் கொள்ளளவு இருக்க வேண்டுமோ அது மிகவும் குறைந்து இருக்கிறது என்பதை அரசு அறியுமா? அண்மையில் அதை ஆழப்படுத்தச் செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா? இதுவரையில் அதற்காக எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது? அப்படி ஏதேனும் விவரங்கள் இருந்தால், அதைப் பற்றிய விவரங்களை முழுமையாக விளக்க வேண்டுகிறேன்.



1982 மார்ச் 5]

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** துணைத் தலைவர் அவர்களே, பதிலிலேயே சொல்லியிருக்கிறேன். 19 ஆண்டு காலம் எடுத்துப் பார்த்ததில் கூட ஆண்டு ஒன்றுக்கு 1.24 சதவிகிதம் தான் அந்தக் கொள்ளளவு பாதிக்கப்படுகிற அளவிற்கு வண்டல் மண் வந்து கொண்டு இருக்கிறது. ஆகவே, அது அணைத் திட்டத்தை இதுவரையில் பாதிக்கவில்லை. பாதகம் ஆகும் சூழ்நிலை வருகிறபோது, ஏற்கனவே மாண்புமிகு ஏ. சி. சண்முகம் அவர்கள் கேட்டபோது தெரிவித்தது போல், விவசாயிகள் அந்த வண்டல் மண் தேவைப்படுகிறது என்று சொன்னாலும் எடுத்துக் கொள்ள அனுமதிக்கலாம். அல்லது ஓரளவு கொள்ளளவை பாதிக்கும் அளவிற்கு அந்த வண்டல் மண் இருக்குமானால், அதை அரசே வெளியே எடுப்பதற்கு முயற்சிக்கலாம்.

### வீராணம் ஏரி வடிகால் வாய்க்காலில் பருவ மழைக் காலங்களில் ஏற்படும் வெள்ளம்.

*** வினா எண் 378.—திரு. ஏ. தங்கராசு :** மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தென்னாற்காடு மாவட்டம் வீராணம் ஏரியிலிருந்து வடிகால் வாய்க்காலில் (வாலாஜா வாய்க்கால்) பருவ மழை காலங்களில் வெள்ளம் வந்து பயிர்களையும், குடிசைகளையும் சேதப்படுத்துவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் அதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** (அ) 1977 மற்றும் 1979 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட வெள்ளங்களால் இப்பகுதிகளில் பயிர் சேதம் ஏற்பட்டது.

(ஆ) உடனடியாக நிவாரணம் அளிக்க 1977 ஆம் ஆண்டில் ரூ. 5.26 இலட்சம் செலவிலும், 1979 ஆம் ஆண்டில் ரூபாய் 2.74 இலட்சம் செலவிலும், வெள்ளத் தடுப்புப் பணிகள் நிறைவேற்றப்பட்டன. இப்பகுதிகளுக்கு வெள்ளத்திலிருந்து நிரந்தரமான பாதுகாப்பு அளிப்பதற்கான திட்டம் ஆய்வில் உள்ளது.

**திரு. ஏ. தங்கராசு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1977 ஆம் ஆண்டிலும், 1979 ஆம் ஆண்டிலும் அந்த வாய்க்கால்கள் செப்பனிடப்பட்டன என்று

தெரிவித்து இருக்கிறார்கள். ஆனால் நான் கேட்பது வீராணம் ஏரியில் இருந்து வாலாஜா ஏரிக்கு ஒரு வாய்க்கால் மூலமாக வரும் நீரால் அந்தப் பகுதியில் உள்ள நிலங்கள்—குறிப்பாக நெய்வேலிக்குப் பக்கத்தில் இருந்து வரும் தண்ணீரால்—குறிப்பாக 10 கிராமங்களில்—பாதிக்கப்பட்டு இருக்கின்றன. ஒவ்வொரு ஆண்டும் அந்த கிராமத்தில் உள்ள ஜனங்கள் இந்த வெள்ளக் காலங்களில் இடம் மாற்றம் செய்யவேண்டி இருக்கிறது. ஆகவே, அதைத் தடுப்பதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா, அந்த வாய்க்காலை நல்ல முறையில் சீரமைக்க முன்வருமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் இருக்கும் நிலங்களுக்கு நிரந்தர நிவாரணம் அளிக்க வேண்டும் என்ற அடிப்படையில் சேத்தியாத்தோப்பு அணையில் இருந்து கடல் வரையில் வெள்ளாற்றுக்கு ரூ. 260.50 லட்சம் செலவில் கரைகள் அமைக்க தலைமைப் பொறியாளர் ஒரு கருத்துருவை அரசுக்கு அனுப்பியுள்ளார். மேலும், கீழ்கொள்ளிட அணைத் திட்டத்தின் கீழ் வரும் ஆறுகள், கால்வாய்கள் நவீனப்படுத்தும் திட்டத்திற்கு 80 லட்ச ரூபாய் செலவில் வடிகால் அமைக்கச் செய்யும் திட்டத்தையும் சேர்த்து தலைமைப் பொறியாளர் அனுப்பியுள்ளார். குறிப்பாக இந்த வாலாஜா ஏரிக்கு வரக்கூடிய வெள்ளாறு ராஜன் கால்வாயை நாம் ஏற்கனவே இரண்டு முறை சீர்செய்து இருக்கிறோம். அது போக வேறு ஏதாவது பகுதியில் வெள்ளத் தடுப்பு பாதுகாக்கப்பட வேண்டும் என்று சொன்னால், மாண்புமிகு உறுப்பினர் அதைக் குறிப்பிட்டுச் சொன்னால், அது குறித்து உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஏ. தங்கராசு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வாலாஜா ஏரியில் இருந்து வருகின்ற சர்ப்ளஸ் வாட்டர் பெருமாள் ஏரிக்கு வருகிறது. அந்தப் பெருமாள் ஏரிக்கு செல்கிற வாய்க்காலின் இரு பக்கமும் புதிய கரை பெருமாள் ஏரி வரை வாத்தாலுக்கு வட புறமும், தென் புறமும் கிட்டத்தட்ட 10 கிராமங்கள் அவ்வப்போது பாதிக்கப்படுகின்றன. அதைத் தவிர்ப்பதற்காக வருகின்ற நிதி ஆண்டிலாவது இரண்டு பகுதிகளிலும் புதிய கரை அமைத்துச் செப்பனிடுவதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** துணைத் தலைவர் அவர்களே, இது குறித்து அரசு விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.



### தமிழ் நாட்டில் மதம் மாறி வரும் ஆதி திராவிடர்கள்.

*வினா எண் 379—திரு. எம். சின்னசாமி :
திரு. இரா. தாமரைக்கனி :
திரு. எல். இளையபெருமாள் :

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் ஆதி திராவிடர்கள் முஸ்லீம் மதத்திற்கு மாறி வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** (அ) ஆம்.

(ஆ) ஆதி திராவிடர்கள் இஸ்லாமிய மதத்தைத் தழுவியதற்கு காரணம் அவர்களுக்கு சாதி இந்துக்கள் சமூகத்தில் தங்களுக்கு இணையாக அந்தஸ்து கொடுக்க மறுத்ததும், மற்றும் இப்போது படித்து பொருளாதார வகையில் மேம்பாடு அடையத் தொடங்கியுள்ள ஆதி திராவிட இளைஞர்கள், அரசுப் பணிகளில் இருக்கும் ஆதி திராவிட இளைஞர்கள் தங்கள் மூதாதையர்கள் சாதி இந்துக்களிடம் வழிவழியாக அடங்கி ஒடுங்கி வாழ்ந்து வந்த பழக்க வழக்கங்களையும் அவர்களது வாழ்விற்கு சாதி இந்துக்களையே இன்னும் நம்பிக் கொண்டிருக்கும் தாழ்வு உணர்வுகளைக் கண்டு மனம் கொதித்து இருப்பதும் ஆகும். மேலும் அரசு அவர்களுக்கு அளித்த பல சலுகைகளினால் பொருளாதார நிலை உயர்ந்திருந்தாலும் அவர்களுக்கு சமூக அந்தஸ்து, சம அந்தஸ்து கொடுக்கப்படாததால் ஆதி திராவிட இளைஞர்களிடையே சாதி சமயத்திற்கு எதிரான உணர்வு உருவாகி உள்ளது.

**திரு. பி. எம். தங்கவேல்ராஜ் :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, ஆதி திராவிட மக்களுக்கு அரசு போதிய பாதுகாப்பு கொடுக்கவில்லை என்பதால்தான் இந்த மத மாற்றம் என்பது அரசுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** துணைத் தலைவரவர்களே, என்னுடைய விடையிலே விளக்கமாகத் தெரிவித்திருக்கிறேன். போதிய பாதுகாப்பு இல்லாததன் காரணமாக மதம் மாறினார்கள் என்பது தவறு. அந்த அடிப்படையிலே அவர்கள் மதம் மாறவில்லை.

**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டில் ஆதி திராவிட மக்கள் மதம் மாறுவதை தடுப்பதற்கு தடைச்சட்டம் கொண்டுவரப்படுமா? அப்படி தடைச்சட்டம் கொண்டுவரும் போது அரபிக் நாட்டில் இருப்பதைபோல கட்டாயமாக மதம் மாற தூண்டுகிறவர்களுக்கும் மாறுகிறவர்களுக்கும் மாறுகால், மாறு கை வாங்குதல், உறுப்புகளைத் துண்டித்தல், சிறையில் அடைத்தல், சிரச்சேதம் செய்தல், தூக்கிவிடுதல் போன்ற தண்டனைகளை விதிக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** துணைத் தலைவரவர்களே, மதம் மாறுவது என்பது அவரவர்களுடைய சொந்த விருப்பமாகும். அதைத் தடை செய்ய அரசியல் சட்டத்திலும் இடமில்லை ; அதை யாரும் தடுக்க முடியாது. அதனால் தமிழக அரசால் மதம் மாறுவதைத் தடுக்க தடைச் சட்டம் கொண்டுவர சாத்தியம் இல்லை. கட்டாயமாக மதம் மாற தூண்டுகிறவர்களுக்கு என்ன தண்டனை என்று கேட்கிறார்கள். தற்போது இருக்கிற அரசியல் சட்டத்தில் இருக்கிற வழிவகைகளை ஆராய்ந்து அரசு அதற்கான நடவடிக்கைகளை எடுக்கும்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, உலகத்திலே பழமையான மதமாகவும் இந்தியாவிலேயே தோன்றிய மதமாகவும் இருக்கிற இந்து மதத்திலிருந்து வேறு மதத்திற்கு மாறுவதைத் தடுக்க சர்க்காரில் இருக்கிற அறநிலையத் துறையால் என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது? இந்து சமயத் தலைவர் காஞ்சி சங்கராச்சாரியார் அவர்களைச் சந்தித்து இந்த மாறுதலைத் தடுக்க அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்ததா? அதுபற்றி அரசு யோசனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** துணைத் தலைவரவர்களே, இந்த அரசைப் பொறுத்தவரை மதங்கள்மீது பூரண நம்பிக்கை கொண்டு, 'எல்லா மதமும் சம்மதம்' என்ற வகையில் செயல்பட்டு வருகிறது. சில இடங்களில் மதமாற்றம் ஏற்பட்டபிறகு காஞ்சி பெரியவர் போன்றவர்கள் தற்போது ஆதி திராவிடர்கள் பெரும்பாலாக வாழ்கின்ற பகுதிகளுக்கு சென்று நற்பணியாற்றி வருகிறார்கள். அரசைப் பொறுத்தவரையில் எம்மதமும் சம்மதம் என்று செயல்படும்போது அவர்களைச் சென்று பணியாற்ற வேண்டுமென்று சொல்லவில்லை, அறிவுறுத்தவும் இல்லை. ஆனால் அவர்களாகச் சென்று பணியாற்றுவதற்கு எந்தத் தடையும் இல்லை.



**திரு. இல. பலராமன் :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, எந்த எந்த மாவட்டத்தில் எவ்வளவு ஆதி திராவிடர்கள் முஸ்லீம்களாக மாறியிருக்கிறார்கள் அல்லது முஸ்லீம்கள் இந்துக்களாக மாறியிருக்கிறார்கள்? எனக்கு முன்னால் சில உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போன்று காஞ்சி பெரியர் சங்கராச்சாரியார் போன்றவர்கள் மட்டுமல்லாமல் அரசுத் துறையைச் சேர்ந்தவர்கள் என்ன நடவடிக்கை இதிலே எடுத்திருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** துணைத் தலைவரவர்களே, மாநிலம் முழுவதும் எவ்வளவு பேர் மதம் மாறியிருக்கிறார்கள் என்ற விவரம் தற்போது என்னிடம் இல்லை. தனிக்கேள்வி போட்டால் பதில் அளிக்கிறேன். ஆதி திராவிட மக்களைப் பொறுத்தவரை மதமாற்றங்கள் பற்றி இந்த அரசு கவலை கொண்டிருந்ததாலும், மதமாற்றத்தைத் தவிர்க்கின்ற வகையில் ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்ற பல்வேறு சலுகைகளை துரிதமாக அவர்களுக்கு வழங்க, விரைவில் அவர்ளைச் சென்றடைய, எந்தெந்த வகையில் ஆவன செய்யலாம் என்று அமைச்சரவையில் விவாதிக்கப்பட்டு, சில பில் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. தற்போது அவை அரசின் பரிசீலனையில் உள்ளன.

(முற்பகல் 10-20)

**திரு. ஜி. மூர்த்தி :** துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்கள் மதம் மாறுவதற்கு தங்களுடைய சமுதாய சூழ்நிலைதான் மிகப்பெரிய காரணம் என்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா? அப்படி ஆதி திராவிட சமுதாயத்திலிருந்தவர்கள் வேறு மதத்திற்கு மாறி அதற்குப் பிறகு மீண்டும் இந்து மதத்திற்கே வருவார்களானால் அவர்களை எந்தச் சமுதாயத்திலே சேர்த்துக்கொள்வது என்பது பற்றிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** தலைவரவர்களே, ஆதி திராவிடர்கள் மதம் மாறுவதற்குரிய காரணம் என்ன என்பது பற்றி முன்பே நான் தெரிவித்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கக்கூடிய இன்னொரு கருத்தைப் பற்றி விரிவான பதிலைப் பெறவேண்டும் என்றால் தனியாகக் கேள்வி போட வேண்டும்.

[1982 மார்ச் 5

**ஆதி திராவிடர் நல மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் தேர்ச்சி விகிதம்**

* வினா எண் 380—திரு. மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆதிதிராவிட நலத்துறை மேல்நிலைப் பள்ளிகளில் மாணவர்களின் தேர்ச்சி சதவிகிதம் குறைந்து காணப்படுவதை தவிர்க்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

(ஆ) தேர்ச்சி சதவிகிதத்தை அதிகரிக்க தனி வகுப்பு பயிற்சிகள் அளிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** (அ) ஆதிதிராவிடர் மற்றும் பழங் குடியினர் நல மேல்நிலைப்பள்ளி மாணவர்களின் தேர்ச்சி விகிதம் குறைந்து காணப்படுவதைத் தவிர்க்க என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதை விளக்கி எல்லா தலைமை ஆசிரியர்களுக்கும் 17—8—1981 அன்று இயக்குநர் தக்க அறிவுரைகள் வழங்கியுள்ளார்.

(ஆ) பாடங்களைக் குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்தல், எல்லாப் பாடங்களிலும் வார மாதாந்திரத் தேர்வுகள் நடத்துதல், தனிப் பயிற்சி வகுப்புகள் நடத்துதல், காலாண்டு அரையாண்டு தேர்வுகளில் மாணவர்கள் பெற்ற மதிப்பெண்களைச் சீராய்வு செய்து, பொதுத் தேர்வில் அதிக மதிப் பெண்களைப் பெறும் வகையில் உரிய முயற்சி மேற்கொள்ளல் போன்ற நடவடிக்கைகள் எடுக்குமாறு தலைமையாசிரியர்கள் அறிவுறுத்தப்பட்டிருக் கின்றனர். தலைமை ஆசிரியர்கள் இவற்றைச் சரிவரப் பின்பற்றுகிறார்களா என்பதைக் கண்காணிக்குமாறு மாவட்ட ஆதிதிராவிடர் நல அதிகாரிகளுக்கும் உத்திரவிடப்பட்டுள்ளது.

**திரு. மா. சுப்பிரமணியன் :** துணைத் தலைவரவர்களே, ஆதி திராவிடர் நலத்துறையின் மேல்நிலைப் பள்ளியின் தேர்வு சதவீதம் குறைவாக இருக் கின்றது என்றால் அதற்குக் காரணம் அப்பள்ளியின் தலைமையாசிரியரின் நிர் வாகக் குறைபாடுதான் என்ற முறையிலே அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா ? அப்படி என்றால் எந்தத் தலைமை ஆசிரியர் மீதாவது இது வரை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா ? அப்படி இல்லை என்றால் அவ் வாறு நடவடிக்கை எடுக்கப்படுமா ?



**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** தலைவாவர்களே, ஏற்கெனவே நான் அளித்த விடையிலேயே இதற்கெல்லாம் விளக்கமாகப் பதில் அளித்து இருக் கிறேன். இருந்தாலும் மீண்டும் சொல்கிறேன். குறைவான தேர்ச்சி ஏற் பட்டதற்குக் காரணமான தலைமை மற்றும் உதவி ஆசிரியர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி ஆதி திராவிடர் நல அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப் பட்டிருக்கின்றது.

**திரு. மா. சுப்பிரமணியன் :** தலைவரவர்களே, ஆதி திராவிடர் நலத்துறை மேல்நிலைப் பள்ளியிலே படிக்கும் மாணவர்களுக்கு வேலைக்கு உத்தரவாதம் என்ற அடிப்படையிலே அரசு அவர்களுக்கு உதவி செய்ய முன்வருமா ?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** தலைவரவர்களே, ஆதி திராவிட மக்களுக்கு வேலை வாய்ப்புக்களை அளிப்பதில் அரசைப் பொறுத்தவரையிலே பல்வேறு சலுகைகளைக் கொடுத்து வருகின்றது. ஆனால் ஆதி திராவிடர் நலத்துறையின் மேல்நிலைப் பள்ளியிலே படிக்கக்கூடிய மாணவர்களுக்கு என்று தனியாக வேலைக்கு உத்தரவாதம் அளிக்கக்கூடிய சூழ்நிலை தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. என். பழனிவேல் :** தலைவரவர்களே, இந்த ஆண்டு கல்வித்துறையில் மாணவர்களின் தேர்ச்சி 30 சதவீதம்தான் என்று அறிக்கையிலே சொல்லப் பட்டு இருக்கின்றது. அவர்களிலே ஆதி திராவிட மாணவர்களின் விழுக்காடு எத்தனை ? அதோடு ஆதி திராவிட மாணவர்களுக்கு ட்யூஷன் வைத்துக் கொள்வதற்காக தற்போது தனித் தொகை ஒதுக்கிக் கொடுத்திருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் அதுபற்றி பிறப்பிக்கப்படுகின்ற உத்தரவுகளை தலைமை ஆசிரியரே வைத்துக் கொண்டு அதைச் செயல்படுத்தாத சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே அம்மாதிரி உத்தரவுகள் போடுகின்றபோது அந்தத் தகவலை மாணவர்களுக்கும் தெரிவிக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** ஆதித் திராவிட நலத்துறையைப் பொறுத்தவரையில் 7 மேல்நிலைப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. கன்னிகா புரத்திலே இருக்கக்கூடிய மேல்நிலைப் பள்ளியில்—1980-81 வரையில் 84 சத வீதம் தேர்வு அடைந்திருக்கிறார்கள். அரிசனர் நந்தனார் ஆண்கள் மேல் நிலைப் பள்ளியில் 60 சதவீதம் தேர்ச்சி சதவீதமாகும். அரிசனர் நந்தனார் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 35 சதவீதம் தேர்ச்சி சதவீதமாகும் ; வாழ வந்திநாடு மேல்நிலைப் பள்ளியில் 41 சதவீதம் தேர்ச்சி சதவீதமாகும், நெல்லை மாவட்டத்தில் இருக்கக்கூடிய நல்லம்மாள்புரம் மேல்நிலைப் பள்ளி யில் 15 சதவீதம் தேர்ச்சி சதவீதமாகும். பேச்சிப் பாறையிலுள்ள பழங்குடி

யினர் உறைவிட மேல்நிலைப் பள்ளியில் 95 சதவீதம் தேர்ச்சி சதவீதமாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப்போன்ற பயிற்சி வகுப்புகள் தற்போது மேல்நிலைப் பள்ளிகூடங்களுக்கு மட்டுமின்றி, உயர் நிலைப் பள்ளிக்கூடங்களுக்கும் நடத்தப்படுகிறது. அது தொடர்ந்து செயல் படுத்தப்படும்.

**திரு. பொ. உத்திராபதி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர் களே, ஆதித் திராவிடர்களுடைய மதம் மாற்றம் சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் சில விவரங்களை இங்கே சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் கேட்டுக் கொள்வதெல்லாம்—சமீபத்திலே கூட வட ஆற்காடு மாவட்டத்தில் என்று நினைக்கிறேன் 22 குடும்பங்கள் ஊர் ஊராகப் போய் ஊர்வலம் வந்து, மந்திரி யையும் சந்தித்து பேசியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஆனால் பிரச்னைகள் வருகிறபோது, சுடுகாட்டுக்குப் போக பாதை கொடுப்பதில்லை, குடி-தண்ணீர் பிரச்னை போன்றவைகள் எல்லாம் வருகிறபோது கோர்ட்டுக்குப் போய் ஸ்டே ஆர்டர் வாங்கி விடுகிறார்கள். இவைகளையெல்லாம் தடுக்கிற வகையில் சட்டத்தை திருத்தியாவது சிறந்த முறையில் நடவடிக்கை எடுக்க அமைச்சர் அவர்கள் முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும், இதற்கும் சம்பந்தம் இல்லை.

**திரு. உ. சுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதித் திராவிடர் நலத் துறை மாணவர்களின் மத்தியில் அவர்களின் தேர்வு சதவீதம் குறைந்திருந்தாலும், அல்லது அவர்களுடைய மார்க் வீதம் குறைந்திருந்தாலும், அவர்களை ஊக்குவிக்கின்ற முறையில், மதிப்பு எண் களை அதிகமாகப் பெற்றவர்களுக்கு, இன்சென்டிவ் போனஸ் என்று சொல்வார் களே அந்த முறையில் ஊக்கத் தொகை வழங்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு மட்டும் இன்றி, ஆதித்திராவிட நலத்துறையின் கீழ் இயங்குகின்ற உயர்நிலைப் பள்ளிகளிலும் கூட, 10-வது வகுப்பு பாஸ் செய்கிறவர்களில் 60 சதவீதத்திற்கு மேல் மார்க் வாங்கியிருப்பவர்களுக்கும், அதேபோல பிளஸ் 2 மாணவர்களில் 60 க்கும் மேற்பட்ட மார்க்குகள் வாங்குகிற மாணவர்களுக்கும், ரூபாய் 300 உதவித் தொகை அளிக்கின்ற ஒரு திட்டத்தை அரசு ஏற்கெனவே செயல்படுத்தி வரு கிறது. இதனை அரசு தொடர்ந்து செயல்படுத்தும்.



**திரு. ஜி. மூர்த்தி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படி குறைந்த சதவீத அளவிலே மார்க் அவர்கள் வாங்குவதற்கான காரணங்களில், அவர்கள் விடுதியிலே வந்து தங்கி படிக்க இயலாத நிலை இருப்பதும் ஒரு காரணமாகும். ஆகவே அரசு எல்லோருக்கும் பயன்படுகிற அளவுக்கு விடுதிகளை ஏற்படுத்த முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** ஏற்கெனவே தமிழகத்தில் பல்வேறு இடங்களில் ஆங்காங்கே இருக்கக்கூடிய தனியார் கட்டிடங்களிலும், அரசின் சொந்தக் கட்டிடங்களிலும் விடுதிகள் ஏற்படுத்தப்பட்டு, அதில் மாணவர்கள் சேர்ந்து பயன் அடைந்து வருகிறார்கள். அரசு இவைகளைப் பார்த்து, எங்கெங்கே விடுதிக் கட்டிடங்களை இன்னும் அதிகமாக சொந்தத்தில் கட்ட முடியும் என்று பார்த்து, அதற்கான வாய்ப்பினை கண்டு ஆராய்ந்து செய்து வருகிறது. ஆகவே, அத்தகைய சலுகைகளை இந்த இனத்தைச் சேர்ந்த மாணவர்கள் தொடர்ந்து பயன்படுத்திக் கொள்ளலாம்.

**திருமதி தா. இராசாம்பாள் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பத்தாம் வகுப்பில் 60 சதவீதத்திற்கு மேல் மதிப்பெண்கள் வாங்கிய ஆதி திராவிட மாணவர்களுக்கு 300 ரூபாய் உதவித் தொகையாக கொடுக்கப் படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் மேல்படிப்புக்குச் சேர்ந்து, அந்தப் படிப்பை அவர்கள் படிக்கின்ற நேரத்திலும், அந்தத் தொகையைத் தொடர்ந்து தருவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன் ?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் எடுத்துச் சொன்ன அந்த உதவித் தொகையானது, அந்த மாணவர்கள் எந்த மேல்படிப்புக்காக சென்றாலும் கூட, அந்தப் படிப்பை அவர்கள் முடிக்கின்ற வரையிலே தொடர்ந்து அளிக்கப்பட்டு வரு கிறது. அதைத் தொடர்ந்து அரசு செயல்படுத்தும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடி வுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் ( * ) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

**வடாற்காடு மாவட்டம் கோனாலம் அரிசனங்கள் கொடுமைப்படுத்தப் பெற்றது.**

(முற்பகல் 10-30)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திருவாளர்கள் சு. பாலன், என். பழனிவேல், பாபு ஜனார்த்தனன், கே. ஆர். சுந்தரம், ஜே. ஹேமச் சந்திரன், என். வரதராஜன், டி. மணி, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், பெ. சு. திருவேங்கடம், த. வேணுகோபால், ரா. கிருஷ்ணன், அ. ரகுமான்கான், ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன், என். என். இராமசாமி, இ. முத்துராம லிங்கம், திருமதி தா. இராசாம்பாள், திரு. இல. பலராமன், திரு. கே. எம். தங்க மணி ஆகியோர் வடாற்காடு மாவட்டம் கோனலம் என்ற கிராமத்தில் பிணத்தை எடுத்துச் சுடுகாட்டிற்குப் புதைக்கச் சென்ற அரிசனங்கள் அங்கு புதைக்க விடாமல் தடுக்கப்பட்டு, 13 குடும்பங்கள் ஊரை விட்டே மேல் ஜாதிக் காரர்களால் விரட்டப்பட்டுள்ளதால் ஏற்பட்ட பதட்ட நிலை குறித்து விவாதிக் கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும்" என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி திரு. சு. பாலன் அவர்களைக் கேட்டுக்கொள் கிறேன்.

**திரு. சு. பாலன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம், கோனலம் கிராமத்தில் 15, 16 குடும்பங்கள் வசித்து வருகிறார்கள். அந்தக் கிராமத்தில் உள்ளவர்கள் அங்கே ஒரு சுடுகாட்டைப் பயன்படுத்தி வந்தார்கள். அந்தக் சுடுகாட்டில் அங்கிருக்கிற ஹரிஜனங்கள் பிணங்களைப் புதைக்கிறார்கள் என்று அறிந்து அதன் சொந்தக்காரர் அந்தச் சுடுகாட்டை ஆக்கிரமித்துக்கொண்டார். அதன் பிறகு ஹரிஜனங்கள் வேறு ஒரு இடத்தை தேர்ந்தெடுத்து அந்த இடத்தில், இந்தச் சம்பவம் நடந்ததற் குப் பின்னால், பல பிணங்களைப் புதைத்திருக்கிறார்கள். கடந்த செப்டம்பர் மாதம் ஒரு வயோதிக அம்மாள் இறந்திருக்கிறார்கள். அந்த அம்மையாரு டைய பிணத்தை எடுத்துக்கொண்டு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட சுடுகாட் டில் குழி தோண்டி பிணத்தைத் புதைத்த நேரத்தில் அங்கிருக்கிற மேல் ஜாதிக்காரர்கள் அந்தப் பிணத்தை அங்கே புதைக்கக் கூடாது என்று தகாறு செய்திருக்கிறார்கள். அப்போது ஹரிஜனங்கள் சொல்லியிருக்கிறார்கள், ஏற்கனவே உள்ள இடத்தை நீங்கள் ஆக்கிரமித்து விட்டீர்கள், இந்த இடத்தில் நாங்கள் எட்டு பிணங்களைப் புதைத்து விட்டோம், அப்படியிருக்க இப்



போது ஏன் தடுக்கிறீர்கள் என்று கேட்டதற்கு மோதுகிற நிலைக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு போலீஸ் அதிகாரிகளிடம் தெரிவிக்கப் பட்டு அவர்கள் வந்து மேல் ஜாதிக்காரர்களை சமாதானம் செய்து அதன் பிறகு அந்தப் பிணத்தை புதைத்திருக்கிறார்கள். அதன் பிறகு அந்த ஹரி ஜன மக்களுக்கு அங்கிருக்கிற மேல் ஜாதிக்காரர்கள் வேலை கொடுப்பதில்லை. மற்ற எந்தவிதமான உதவியையும் செய்வதற்கு முன்வரவில்லை. குடிக்கக் கூட தண்ணீர் கிடைக்காத நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். அங்கிருக்கிற பாழடைந்த ஒரு குட்டையில் அவர்கள் தண்ணீர் எடுத்துக்கொண்டிருக்கிறார் கள். அந்தக் குட்டைச் சொந்தக்காரர் கூட அதைச் சுற்றி வேலி அமைத்து விட்டார். அவர்களுக்கு தண்ணீர் கொடுக்க மறுக்கிறார்கள். இது சம்பந்த மாக நம்முடைய மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் அவர் களிடம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் அங்கு வந்து பார்த்திருக் கிறார்கள். ஆனால் சம்பவம் நடந்த இடத்திற்கு சென்று பார்க்க அவர்கள் மறுத்துவிட்டார் என்று சொல்லும்போது அது வேதனையாக இருக்கிறது.

அதுமட்டுமல்ல. இந்தச் சம்பவம் நடந்த பிறகு அங்கிருக்கிற ஹரிஜனங் களுக்கு வேலை கொடுக்க மறுத்திருப்பதால் வேறு பகுதிகளில் உள்ள ஹரி ஜனங்களைக் கொண்டு வந்து வேலை வாங்கும் ஒரு நிலை ஏற்பட்டது. அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டபோது அங்கு வசிக்கிற ஹரிஜனங்கள் எங் களைவிட்டு மற்றவர்களை வைத்து வேலைகள் வாங்குவதன் மூலம் தகராறு ஏற்படும் என்று சொன்ன நேரத்தில் அதற்குப் பிறகு அந்த ஹரிஜனக் குடும்பங்களை அகற்றும் ஒரு நிலை ஏற்பட்டது. அங்கே நிலைமை மோச மடைந்திருக்கிறது. அவர்களுடைய கூரைகளையெல்லாம் தாக்கியிருக் கிறார்கள். ஆக்வே, அதற்குப் பிறகு அங்கே இருக்கக்கூடிய 13 குடும்பங்கள் பக்கத்திலுள்ள கிராமத்திற்குப் போயிருக்கிறார்கள். கடந்த ஜனவரி 15ஆம் தேதிகூட, அங்கிருக்கக்கூடிய ஒரு அம்மையாரை, 3 வயது குழந்தைகளுக்கு தாயாக உள்ளவரை இழுத்துக்கொண்டு போய், கற்பழித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட சம்பவங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால், நம் முடைய ஆதி திராவிட நல அமைச்சர் இந்த நிலைமையை அரசுக்கு தெரிவிக்க வில்லை ; எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. இப்போது அவர்கள் தாங்கள் வாழும் இடத்தைவிட்டு, 6 கிலோ, 7 கிலோ தூரத்திலுள்ள ஒரு இடத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எந்தவிதமான உணவும், குடிப்பதற்குகூட தண்ணீரும் இல்லாமல் அங்கே அந்த மக்கள் பரிதாபகரமான நிலைமையிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் பாதுகாக்க வேண்டி, அவர்களுக்கு நல்ல நிலைமையை உண்டாக்க வழிவகைகள் செய் வதற்கான நடவடிக்கைகள் எடுப்பதற்கு, இந்த அவையை ஒத்திவைத்து, இது குறித்து விவாதிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அரக்கோணம் தாலுகா, கோனலம் என்ற கிராமத்தில் 81 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திலே ஒரு தாய் இறந்து, புதைக்கச் சென்றபோது தகராறு ஏற்பட்டு, அருகிலுள்ள தாசில்தாருக்கு அதைப்பற்றி புகார் செய்து, மறுநாள் தாசில்தார், போலீஸ் எல்லாம் பார்த்து, புதைக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதுமுதல் அந்தக் கிராமத்தில் பதட்ட நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. அதன்காரணமாக, உள்ளூரில் அரிசன மக்களுக்கு வேலை கொடுக்காமலும், குடிப்பதற்கு பொதுக் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுக்கவும் அனுமதிப்பதில்லை. அங்குள்ள பாழடைந்த கிணற்றிலிருந்து தண்ணீர் சாப்பிட வேண்டுமென்று ஒரு பகுதியினர், ஜாதி இந்துக்கள் வற்புறுத்தியிருக்கிறார்கள். ஜாதி இந்துக்களில் ஒரு குடும்பத்தில் ஒருவர் இறந்துவிட்ட நேரத்திலே, அங்குள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் மேளமடிக்க மறுத்து விட்டார்கள். எனவே வெளி கிராமத்திலிருந்து ஆட்களை மேளமடிக்க கொண்டு வந்த நேரத்தில், அங்குள்ள நிலைமையைப் பார்த்து அவர்கள் திரும்பி சென்று விட்டார்கள். அதனால் ஆத்திரமடைந்த ஒரு பகுதியினர், ஜாதி இந்துக்கள், அரிசன மக்களுக்கு வேலை கொடுக்க மறுத்து விட்டார்கள். அந்தக் கிராமத்தில் மட்டுமல்ல ; அந்தக் கிராமத்தைச் சுற்றியுள்ள பல்வேறு கிராமங்களிலேகூட அவர்களுக்கு வேலைகொடுக்க மறுத்து விட்டார்கள். இதனால், 13, 15 குடும்பங்கள் அந்தக் கிராமத்தைவிட்டு, வெளியேறி நடுத் தெருவிலே, மரத்தடியிலே வாழ்கின்ற நிலைமை இருக்கிறது. அது மட்டுமல்ல. அந்தப் பகுதி மக்கள் இன்றைக்கு கிராமத்திற்கு திரும்பி வந்து வாழக்கூடிய நிலைமை இல்லை. அதற்காக தக்க போலீஸ் பாதுகாப்பு கொடுத்திருப்பதாக பத்திரிகையிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இதுபோன்ற நிலைமை, அங்கு மட்டுமல்ல. வட ஆற்காடு மாவட்டத்தில், வேலூரிலும் இருக்கிறது. விருபாட்சிபுரம் கிராமத்தில் 30 ஆண்டு காலமாக தாழ்த்தப்பட்ட மக்கள் அனுபவித்து வந்த நிலத்தை ஆக்கிரமிப்பதற்கான முயற்சிகள் செய்யப்படுகிறது. அதனால், அங்கும் பதட்ட நிலை இருக்கிறது. ஆகவே, இத்தகைய பிரச்னைகளைப் பற்றியெல்லாம் பேசி, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பாதுகாப்பு கொடுக்கின்ற முறையில், அவர்கள் அந்தக் கிராமத்தை விட்டு வெளியேறாத வகையில் முயற்சிகள் மேற்கொள்வதற்கு வேண்டி, இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



திருமதி தா. இராசாம்பாள் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேச அனுமதித்தமைக்கு நன்றி. வட ஆற்காடு மாவட்டம், அரக்கோணம் பக்கத்திலேயுள்ள கோனலம் என்ற கிராமத்தில், அங்கே வாழும் 14, 15 ஆதித் திராவிட இனத்தைச் சார்ந்த மக்கள் ஏற்கனவே பிணங்களைப் புதைத்துக் கொண்டிருந்த அந்தச் சுடுகாட்டிற்குச் சென்றார்கள். எடுத்துக் கொண்டு போவதற்கான சாலை சரியாக இல்லாமல், அங்கே அந்த சுடுகாடு நீர்ப் பிடிப்பு உள்ளதாக இருப்பதால், ஓடையைத் தாண்டி போகின்ற சூழ்நிலை இருப்பதால் ஏறத்தாழ 11 ஆண்டுகளாக அவர்கள், அந்த அரிசன மக்கள் வாழ்கின்ற பகுதிக்கு அருகில் பிணங்களைப் புதைத்துக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத்தலைவர்—தலைமை)

(முற்பகல் 10-40)

அப்படியிருந்த ஒரு சூழ்நிலையில் கடைசியாக 13-வது பிணத்தை புதைக்க அவர்கள் எத்தனிக்கையில் ஜாதி இந்துக்களுக்கும் அவர்களுக்கும் தகராறு மூண்டுவிட்டது. ஏறத்தாழ ஜனவரி 13-ம் தேதி என்று நினைக்கிறேன். அங்கே இரு சாராருக்கும் தகராறு நடந்து பக்கத்திலுள்ள நான்கைந்து ஊர்களிலிருந்து இந்துக்கள் அங்கே வந்து அவர்களை தாக்கியிருக்கிறார்கள். மூன்று நாட்களுக்கு முன்தினம் வரை அந்த ஊருக்கு பக்கத்திலுள்ள உள்வா என்ற ஊருக்கு போய் தங்கியிருந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலை ஏன் உருவாகிறது என்று சொன்னால் முதல் காரணம் அங்கே அவர்களுக்கு நியாயமான கூலி கிடைக்க வில்லை. அவர்களுக்கு நியாக்கூலி கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அவர்கள் வாழும் போது இல்லாத சமத்துவம் இறந்த போதாவது கிடைக்க வேண்டும். தன்னிறைவு திட்டத்தின் கீழ் அரிசன மக்கள் வாழும் பகுதிகளில் அவர்களுக்கு சுடுகாடு ஏற்படுத்தித் தரவேண்டும். நான் இதுபற்றி பலமுறை கூறியிருக்கிறேன். ஏனென்றால் சுடுகாட்டு பிரச்சினையிலே தான் பல இடங்களிலே ஜாதி இந்துக்களுக்கும், அரிசனங்களுக்குமிடையே தகராறு வருகின்றன. அங்கே உள்ள குளத்தில் தண்ணீர் எடுக்க விடாமல் தடுத்து விட்டார்கள். மனிதனுக்கு மிக முக்கியமானது தண்ணீர், அதுவும் அவர்களுக்கு கிடைக்கவில்லை என்றால் இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்தது ? ஏன் நடவடிக்கை எடுக்க தவறி

விட்டது என்பதை அறிய விரும்புகிறேன். ஆதி திராவிட நல அமைச்சர் அவர்கள் கேள்வி நேரத்தில் கூறியபோது கூட ஏராளமான செலவுகளை இந்த மக்களுக்கு செய்திருக்கிறோம். அதன் காரணமாக இளைஞர்கள் தங்களுடைய உரிமை பாதிக்கப்படுகிறது என்று எழுச்சியுறுகிறார்கள் என்ற பொருள்பட கூறினார்கள். நாம் இங்கே திட்டம் போடுகிறோம், ஆனால் அது சரியான முறையில் அவர்களுக்குப் போய் சேருவதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிப்பட்ட சூழ்நிலைகள் கோனலத்தில் மட்டுமல்ல மற்ற பல இடங்களிலும், என்னுடைய தொகுதியிலும் கூட ஏற்பட்டுள்ளன.

சுடுகாட்டிற்குச் செல்லும் பாதை சரியாக இல்லை: அங்கே விளக்குகளும் சரியாக எரிவதில்லை. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கூறும்போது அரிசன மக்கள் வாழும் பகுதிகளிலே எல்லாம் விளக்குகள் எரிகின்றன என்று கூறினார். தவறான தகவலை கொடுத்து விட்டு செய்யப்பட்டதாக கணக்கில் எடுத்துக் கொள்வது சரியாக இருக்காது ; நான் இதை குற்றச்சாட்டாக கூறவில்லை என்றாலும் கூட அங்கே இருக்கும் மக்களுக்கு பள்ளிக் கட்டிடங்கள் இல்லை, விளக்குகள் எரிவதில்லை, அவர்களுக்கு நியாயக் கூலி கிடைப்பதில்லை என்ற நிலைமைகள் இருந்து வருகின்றன. இவற்றை உணர்ந்து பலநாட்கள் அவர்கள் படும் கஷ்டங்களில் ஏதாவது ஒரு சிறு தவறு செய்துவிட்டால் கூட பிரச்சினை எரிமலையாக மூண்டு அது அரிசன மக்களுக்கு பெரிய தொல்லை ஏற்படுத்தி விடுகிறது. இதற்கு சரியான பரிகாரம் தேட வேண்டியிருப்பதால் இந்த அவையை ஒத்தி வைத்து நல்ல முடிவை எடுக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம், அரக்கோணம் வட்டத்திலுள்ள கோனலம் கிராமத்தில் ஏறத்தாழ 300 வன்னிய ரெட்டியார்கள் பெரும்பாலும் வாழ்ந்து வருகிறார்கள். விவசாயம் அவர்களுடைய முக்கியத் தொழில். அந்த கிராமத்தில் ஆதி திராவிட குடியிருப்பு கிராமத்திலிருந்து ஏறத்தாழ 150 கெஜ தூரத்தில் இருக்கிறது. அதிலே ஏறத்தாழ 13 வீடுகள் இருக்கின்றன. 4—10—1981 அன்று சுமார் 80 வயதுடைய நாகம்மாள் என்ற மூதாட்டி நோய்வாய்ப் பட்டு இறந்து விட்டார். வழக்கமாக பிணங்களை புதைக்கும் இடத்திலே எங்கே பார்த்தாலும் முட்புதர்கள் இருந்ததால், அவ்வூர் தலைவர் அங்கேயுள்ள ஓடை புறம்போக்கில் புதைப்பதற்கு உறுதிமொழி அளித்திருந்தாலும், அங்கே அவரது சடலத்தைப் புதைப்பதற்கு மறுத்து விட்டனர் அதற்கு அருகில் உள்ள சிற்றூரை சேர்ந்த ஜாதி இந்துக்கள் ஆட்சேபனை தெரிவித்தனர். அரக்கோணம் தாசில்தார் கிராமத்திற்குச் சென்று இருதரப்பினரையும் சமரசம் செய்தார். அவரது கட்டளையின் பேரில் சடலம் புறம்போக்கு நிலத்தில் புதைக்கப்பட்டது. மேலும் ஆதி திராவிடர்களுக்கு என்று தனி இடுகாடும் ஒதுக்கப்படும் என்ற உறுதிமொழி அளிக்கப்பட்டது. புதிதாக ஏற்படுத்தப்பட்ட இடுகாடு கஞ்சமேட்டிற்கு அருகிலே இருப்பதாலும், அவ்வழியாக கோனலத்திலேயுள்ள பள்ளிக்கு குழந்தைகள் செல்ல வேண்டி இருப்பதாலும் கோனலம் கிராமத்தைச் சார்ந்த சில வன்னிய ரெட்டியார்களும், கஞ்சமேட்டைச் சேர்ந்த தேவஸ்வ ரெட்டியார்களும் அந்த முடிவிற்கு உடன்படவில்லை. இந்தச் சம்பவம் கோனலத்தைச் சேர்ந்த ஆதிதிராவிடர்களுக்கும் ரெட்டியார்களுக்குமிடையே கசப்புணர்வை ஏற்படுத்தியது. இந்தச் சம்பவத்திற்குப் பிறகு தங்களுக்கு வழக்கமாகத் தரப்படும் வேலைகள் தரப்படுவதில்லையென்றும், தாங்கள் தரக்குறைவாக நடத்தப்படுவதாகவும் ஆதி திராவிடர்கள் முறையிட்டனர்.





15—1—1982 அன்று கோனலம் கிராமத்தைச் சேர்ந்த செல்லப்ப ரெட்டியார் என்பவர் இறந்துவிட்டார். மேளம் அடிப்பதற்கு காலனி ஆட்கள் அழைக்கப்பட்டனர். தங்களுக்கு வேலை தர ரெட்டியார்கள் மறுத்ததை மனதில் கொண்டு ஆதி திராவிடர்கள் இதைச் செய்ய மறுத்துவிட்டனர். ஒரே ஒரு ஆதி திராவிடர் மட்டும் இறந்தவருக்கு மாலையணிவித்து மரியாதை செய்தார். இது காலனி மக்களின் எதிர்ப்புக்கு உள்ளானது. இது ரெட்டியார்களுக்குத் தெரியவரவே, அவர்கள் குப்புசாமி ரெட்டி என்பவரின் கீழ் ஒரு கூட்டமாகக் கூடிக்கொண்டு கிராமத்திற்கு வந்து ஆதி திராவிடர்களை வினவினார்கள். அதன் பிறகு அவர்கள் காலனியிலுள்ள ஆதி திராவிடர்களை குழாய்கள், கற்கள் முதலியவற்றைக் கொண்டு தாக்கி இதனால் 5 ஆதி திராவிடர்களுக்கு சிறு காயங்கள் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. இதற்கு எதிர் நடவடிக்கை ஏதும் இல்லை. இருப்பினும் அரக்கோணம் புறக்காவல் நிலைய குற்ற எண் 11/82-இல் இ.பி.கோ. பிரிவுகள் 147, 324 மற்றும் 323-இன் கீழ் 16—1—1982 அன்று வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது.

அரக்கோணம் வட்டாட்சியர், துணைக் காவல் ஆய்வாளருடன் கிராமத்திற்கு உடனே சென்று ஏற்பாடு செய்து வைத்தார். 17—1—1982 அன்று கோனலம் ஆதி திராவிடர்கள் அரக்கோணம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு

வந்து மாலை ஐந்து மணி வரை அதன் முன்பு அமர்ந்திருந்தனர். அவர்களைச் சமாதானப்படுத்த வட்டாட்சியர் எடுத்துக்கொண்ட முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. 20—1—1982 அன்று இராணிப்பேட்டை கோட்டாட்சியர் அரக்கோணம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வந்து ஆதி திராவிடர்களைச் சந்தித்திருந்தார். ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. இதில் காலனியைச் சேர்ந்த முப்பது பேர் கலந்து கொண்டனர். குற்றவாளிகள்மீது அரசு தகுந்த நடவடிக்கைகள் எடுக்கும் என்று ஆதி திராவிடர்களுக்குக் கோட்டாட்சியர் அறிவுரை வழங்கியதுமின்றி, ஆதி திராவிடர்களுக்குத் தேவைப்படுகின்ற அடிப்படை வசதிகள் செய்து தரப்படும் என்றும் உறுதி அளித்தார். இருப்பினும் ஆதி திராவிடர்கள் தங்கள் கிராமத்திற்கு அவர்கள் திரும்பிச் செல்லப்போவதில்லையென்றும், அருகில் உள்ள முள்வாய் என்ற கிராமத்தில் குடியேறப் போவதாகத் தெரிவித்தனர். மேலும் அவர்கள் முள்வாயில் தங்களுக்கு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட வேண்டுமென்றும் வீடுகள் மற்றும் அடிப்படை வசதிகள் செய்து தரப்பட வேண்டும் என்றும் விருப்பம் தெரிவித்தனர். கோட்டாட்சியர் மீண்டும் கிராமத்திற்கு சென்று இரண்டு பிரிவினரையும் சமாதானக் கூட்டம் ஒன்றிற்கு 21—1—1982 அன்று வருமாறு அறிவுறுத்தினார். இக்கூட்டத்திற்கு சாதி இந்துக்கள் மட்டுமே வந்திருந்தனர்.

இக்கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது முருகேசன் என்பவரின் மனைவி மல்லிகா, 23 வயதுள்ளவர் 16—1—1982 அன்று நான்கு பேர்கள் தன்னைக் கற்பழித்து விட்டதாக முறையிட்டார். அவரிடமிருந்து காவல் துறையினர் அறிக்கை பெற்று, அரக்கோணம் புறக் காவல் நிலைய குற்ற எண் 15/82-இல் இ.பி.கோ. பிரிவுகள் 448 மற்றும் 476-ன் கீழ் வழக்கு பதிவு செய்தனர். கற்பழித்ததாகக் கூறப்பட்ட நான்கு பேர்களில் மூவரை 21—1—1982 அன்று அரக்கோணம் புறக் காவல் நிலைய ஆய்வாளர் கைது செய்து, காவலில் வைத்துள்ளார்.

22—1—1982லிருந்து 25—1—1982 வரை கோணலம் ஆதி திராவிடர்கள் அரக்கோணம் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு தொடர்உண்ணா விரதம் இருந்தனர். 26—1—1982 அவர்கள் தங்கள் உடைமைகளுடன் முள்வாய்க்குச்



சென்றுவிட்டனர். ஆதி திராவிடர்களுக்கும் அவர்களது அனுதாபிகளுக்கும் புதிய காலனி குடியமர்த்துவது என்பது சாத்தியமல்ல என்பதால் ஆதி திராவிடர்களுக்குத் தேவையான எல்லா உதவிகளையும் பாதுகாப்பையும் அவர்கள் கோணலத்திற்கு மீண்டும் திரும்பி வந்தால் அரசு அளிக்கும் என்று தம்மை வேலூரில் சந்தித்த ஆதி திராவிடர்களுக்கும் அவர்களது அனுதாபிகளுக்கும் மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார்.

25—2—1982 அன்று மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தியபடி, கோட்டாட்சியர் மீண்டும் முள்வாய்க்குச் சென்றார். நீண்டதொரு விவாதத்திற்குப் பின் ஆதி திராவிடர்கள் தாங்கள் இன்னும் நாட்களுக்குள் கோணலத்திற்கு திரும்பி செல்வதற்கு உடன்பட்டனர். எனினும் அவர்கள் தங்களது உறுதி மொழியை நிறைவேற்றவில்லை.

2—3—1982 அன்று கோணலம் மற்றும் முள்வாய் கிராமங்களுக்கு மாவட்ட ஆட்சியர் தாமே நேரில் சென்றிருந்து கோணலம் கிராமத்திற்குத் திரும்பிச் செல்லுமாறு அவர்களை உணர்த்துவித்தார். மேலும் அனைத்துக் கட்சியினரின் கூட்டம் ஒன்றையும் அவர் கூட்டி அவர்களது இடுகாடு பற்றிய முக்கிய முறையீட்டினை உடனடியாக கவனிக்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

3—3—1982 அன்று நான் மாவட்ட ஆட்சியருடனும், மாவட்டக் காவல் துறைத் தலைவருடனும் கோனலம் கிராமத்திற்கு சென்றிருந்தேன். ஆதி திராவிடர்களுடனும் ரெட்டிமார்களுடனும் பேச்சு வார்த்தைகள் நடத்தி ஒரு உடன்பாட்டினை ஏற்படுத்தினேன். ஆதி திராவிடர்களுக்கு ரெட்டியார்களின்கீழ் வேலை செய்யும் உறுதியான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் வேலையும், ஒருங்கிணைந்த ஊரக மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கடன்களும் ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. ஆதி திராவிடர்கள் இவற்றிற்கெல்லாம் உடன்படவே இவ்விஷயம் இறுதியில் முடித்து வைக்கப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 10-50)

இது மட்டுமன்றி அங்கே அவர்கள் தெரிவித்திருக்கக்கூடிய இடுகாடு பிரச்சினையும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கிறது. மேலும் அவர்களது குறை பாடுகள் ஏதாவது இருக்குமேயானால் அவற்றினை உடனடியாகக் களைய வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவரும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக் கின்றார்.

ஆதி திராவிடர்கள் தற்போது கோணலம் கிராமத்திலேயே வசித்து வருகிறார்கள். நிலைமை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. கிராமத்தில் அமைதி நிலவுகிறது.

மேற்கூறிய காரணங்களினால் இப்பிரச்சினை குறித்து விவாதிக்க சட்ட மன்றப் பேரவையின் ஏனைய அலுவல்களை ஒத்திவைக்க வேண்டிய அவசிய மில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. இல. பலராமன் அவர்களுடைய பெயரும், திரு. கே. எம். தங்கமணி அவர்களுடைய பெயரும் விடுபட்டுப் போயிருக்கின்றன. அவர்களுடைய பெயர்களும் இந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்தவர்களின் பெயர்களோடு சேர்த்துக் கொள்ளப் படுகின்றன.

**திரு. இல. பலராமன் :** இந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் எங்களுடைய ஜில்லாவைப் பற்றியது. என்னுடைய பெயர் முதலில் விடுபட்டுப் போயிருப் பதற்காக நான் வருந்துகிறேன். தலைவர்கள் பிறகு சேர்த்துக் கொண் டார்கள். ஒரு பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் உங்களுடைய கட்சியின் முக்கிய உறுப்பினர் ; வட. ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவர் ; உங்கள் பெயர் இருக்கவேண்டுமென்று நான் விரும்பியதால்தான் சேர்த்துக் கொண்டு விட்டேன். இனிமேல் கிளாரிபிகேஷன் கிடையாது.



இவ்வளவு நேரம் அமைச்சரவர்கள் அந்தக் கிராமத்திலே உள்ள மக்கள் நிம்மதியாக செட்டிலாகிவிட்டார்கள் என்று சொன்னார். நாம் சண்டையை வளர்க்கக் கூடாது.

மாண்புமிகு அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

## (3) கவன ஈர்ப்பு.

### மதுரை மாவட்டம் தேவாரத்தில் துப்பாக்கிச் சூடு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. துரைமுருகன் அவர்கள் ஒரு பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார். திரு. துரை முருகன் அவர்கள் இருக்கையில் இல்லை.

**திரு. சு. பாலன் :** தலைவரவர்களே, திரு. துரைமுருகன் சார்பில் நான் இதைக் கொண்டுவருகிறேன்.

"மதுரை மாவட்டம் தேவாரம் என்ற கிராமத்தில் 5—1—1982 அன்று நடந்த துப்பாக்கிச் சூடு சம்பவம் குறித்த"

அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, பேரவை முன் விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன். அதிலே முப்பது பேர் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று கூறப்பட் டுள்ளது. மொத்தம் கைது செய்யப்பட்டவர்கள் முப்பத்தி மூன்று பேர். அதிலே முப்பது பேர் பிரிவின்டெவ் அரஸ்ட் என்றும், மூன்று பேர் வேறு பல தனி வழக்குகளின் சார்பாகக் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆகவே முப்பத்தி மூன்று பேர் என்று திருத்திக் கொள்ளும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

## அறிக்கை

அரசுக்குக் கிடைத்தத் தகவலின்படி மதுரை மாவட்டம், உத்தமபாளையம் தாலுக்கா தேவாரம் கிராமத்தில் 15—1—1982 அன்று பிற்பகல் மூன்று மணி அளவில் மாட்டுப் பொங்கலையொட்டி மஞ்சு விரட்டு விழா நடைபெற்றதைத் தொடர்ந்து தேவர் மற்றும் நாடார் இனத்தவருக்கிடையே மோதல் ஏற்பட்டது. நாடார் இனத்தவருக்குச் சேர்ந்த ஒருவருக்குச் சொந்தமான காளையை தேவர் ஒருவர் அடக்கினார்: இதனால் கோபம் அடைந்த அக்காளையின் சொந்தக்காரர் காளையை அடக்கியவரை ஒரு கழியால் அடித்தார்: இதையொட்டி இவ்விரு இனத்தவரிடையே மாலை ஐந்து மணியளவில் பெருத்த கலவரம் மீண்டும் மூண்டது: இரு சாராரும் ஒருவர் மீது ஒருவர் கற்களால் தாக்கிக்கொண்டனர்: பந்தோபஸ்து பணியில் ஈடுபட்டிருந்த காவலர்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்த முயற்சித்தனர்: காவலர் ஒருவர் கூட்டத்தினரால் தாக்கப்பட்டார். கூட்டத்தைக் கட்டுப்படுத்தக் காவலர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் எதுவும் தக்க பலனை அளிக்கவில்லை. அவர்கள் முதலில் செய்த பிரம்படி பிரயோகம் கூட்டத்தைக் கலைக்கப் பயன்படவில்லை: எனவேத் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. ஒன்பது தடவை ரப்பர் தோட்டா (Buck Shots) பிரயோகமும் மூன்று தடவை தோட்டா (Ball Ammunition) பிரயோகம் செய்யப்பட்டது. காவலர் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டிருக்கும் சமயத்தில் நாடார் பக்கத்திலிருந்து யாரோ துப்பாக்கியால் சுட்டதாகத் தெரிகிறது. இதனால் முத்துக்கருப்ப தேவரின் மகனான சந்திரன் என்பவருக்கு பலத்த காயம் ஏற்பட்டு அவர் உத்தமபாளையம் அரசு மருத்துவ மனைக்கு கொண்டு செல்லும் வழியில் மரணமடைந்தார். காயமடைந்த இருபத்தியிரண்டு பேர்களும் உத்தமபாளையம் அரசினர் மருத்துவ மனையில் சிகிச்சைக்காக அனுப்பப்பட்டனர். இந்நிகழ்ச்சி தொடர்பாக முப்பது பேர் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

2. இறந்த சந்திரன் காவலரின் துப்பாக்கிப் பிரயோகத்தால் இறந்தாரா அல்லது நாடார் பக்கமிருந்து செய்யப்பட்ட துப்பாக்கிச் சூட்டினால் மரணமடைந்தாரா என்பது தெரியவில்லை: இது சம்பந்தமாக இரு வழக்குகள்



பதிவு செய்யப்பட்டுள்ளன. உத்தமபாளையம் தாசில்தார் தலைமையில் ஒரு சமாதானக் குழு அமைக்கப்பட்டுள்ளது: தேவாரம் பகுதியில் தனியார் கைவசமுள்ள லைசென்ஸ் பெற்ற அல்லது லைசென்ஸ் பெறாத துப்பாக்கிகளை கைப்பற்றும் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

3. இந்நிகழ்ச்சி குறித்து கூடுதல் மாவட்ட மாஜிஸ்ட்ரேட் மற்றும் மதுரை டி. ஆர். ஓ. மூலம் மாஜிஸ்ட்ரேட் விசாரணைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் ஆணையிட்டுள்ளார். நிலைமை தற்போது கட்டுக்குள் அடங்கியுள்ளது.

## 4. அறிக்கை அளித்தல்.

### விதி 106-ன் கீழ் ஹஜ் யாத்திரிகர்கள் பற்றிய நீர்ப்பாசனத்துறை அமைச்சரின் அறிக்கை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் 106-வது விதியின்கீழ் மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சரவர்கள் பேரவைக்கு ஒரு அறிக்கையை அளிப்பார்கள்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை ஹஜ் பயணம் மேற்கொள்ளக் கூடிய புனித யாத்திரிகர் கள் பம்பாயிலே இருக்கக்கூடிய மத்திய ஹஜ் குழுவிலிடம் அனுமதி பெற்று அவர்கள் தேர்வு செய்ததற்குப் பிறகுதான் அந்தப் பயணத்தை மேற்கொள் ளக் கூடிய ஒரு சூழ்நிலை இருந்தது. ஆனால் இன்றைக்கு மேற்கு வங்காளம், காஷ்மீர், உத்தரப்பிரதேசத்திலேயிருப்பதைப் போல தமிழகத்திலேயும் இங்கே இருக்கக்கூடிய ஹஜ் குழுவே மேற்படி புனித பயணத்திற்குச் செல்லக் கூடிய வர்களுக்கு அனுமதி வழங்குவதற்கான பணிகளை மேற்கொள்ளவிருக்கிறது என்பதை இந்த மன்றத்திலே நான் இந்த அறிக்கையின் மூலம் தெரியப் படுத்திக் கொள்கிறேன்.

5. வரவு-செலவுத்திட்டம், 1982-83—பொது விவாதம் (தொடர்ச்சி)

* திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவருடைய திட்டங்களை 1982-83-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையாகச் சமர்ப்பித்த மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்களுக்கு என் நன்றியினை உரித்தாக்கி, இந்த அறிக்கையினை வரவேற்று, என் விளாத்திகுளம் தொகுதி மக்களின் சார்பாக நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாக, இந்த நிதிநிலை அறிக்கையிலே காணப்படுகிற அனைத்துத் திட்டங்களையும் இங்கேயிருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் எதிர்த்தாலுங்கூட, தமிழகத்திலே வாழ்கின்ற ஏழை எளிய பொதுமக்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கின்ற அனைவரும் வரவேற்கிறார்கள். இந்த பட்ஜெட் பற்றாக்குறை பட்ஜெட்டாக இருக்கும் என்பதற்குப் பல உதாரணங்கள் இங்கே சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன. அவ்வாறிருந்தாலுங்கூட எதிர்க்கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும், எதை எடுத்தாலும் குறை கூறிக்கொண்டு வருகின்ற தன்மையை நாம் காண்கிறோம். ஏனென்றால், இங்கே இருக்கின்ற புரட்சித் திட்டங்களை, எதிர்க்க வேண்டுமென்பதற்காக, பொதுமக்களுக்கு இந்த மன்றத்தின் வாயிலாகக் கூறுகின்றார்களே தவிர, திட்டங்களை உண்மையிலே ஆதரிக்கின்ற மனப்போக்கு உள்ளத்திலே இருந்தாலுங்கூட, அவர்களுடைய கட்சியின் கருத்தைப் பொதுமக்களுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று இங்கே இப்படி கூறுகின்றார்கள் என்று கருதுகிறேன். பல விளக்கங்களை, ஆளுங்கட்சியின் பல சட்டமன்ற உறுப்பினர்கள். அதையே நான், திரும்பத் திரும்பக் கூற விரும்பவில்லை. பொதுவாக, குடிசைகளுக்கு மின் இணைப்புத் திட்டம், விவசாயப் பெருங்குடி மக்களுக்குத் தனி திட்டம், தவிர, ஏழை, எளிய மக்களுக்கு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாகச் சில பொருள்களைச் சலுகை விலையில், குறைந்த விலையில் கொடுக்க வேண்டுமென்பதற்காகப் பொருள் இழப்பீடு, கிராமத்திலே உள்ள ஏழை, எளிய மக்களுக்குக் குடிக்கத் தண்ணீர் வழங்கவேண்டுமென்பதற்காக, ஏழை எளிய மக்கள் வாழ்கின்ற கிராமப் புறங்களிலே, குளங்களை வெட்டுதல், அதன் மூலமாகப் பொருளா



தார மேம்பாடு அடைவதற்காக, சில டிரெயினிங் சென்டர் பயிற்சி ஆரம்பிப்பது, போன்ற காரணங்களினால், இதிலே பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் மெத்தப் பணிவோடு கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில், குழந்தைகளுக்குப் பகல் உணவுத் திட்டம் கொடுத்திருக்கிறார் புரட்சித் தலைவர் அவர்கள். இந்த ரூ. 100 கோடி திட்டம் கொண்டுவந்ததைப்பற்றி, எதிர்க்கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் நிரம்ப காரசாரமாகப் பேசுவதோடு மட்டுமல்லாமல், குறைபல கூறினார்கள். இது போன்றுதான் போன ஆண்டிற்கு முந்தைய ஆண்டு, இங்கே பட்ஜெட் தாக்கல் செய்யும் பொழுது, தன்னிறைவுத் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியபொழுது, நம்முடைய பிரதான எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்கள் கூடப் பேசினார்கள், இந்தத் திட்டத்தை நாங்கள் கொண்டு வந்தோம். செயல்படுத்தினோம் என்றார்கள். முன்னாள் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த அருமை அண்ணன் தர்மலிங்கம் அவர்களும் அதே மாதிரி குறிப்பிட்டார்கள். இதே சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதிகளிலே, என்ன, என்ன செய்ய வேண்டுமென்பதைப் பற்றி பலமுறை பல கூட்டங்களிலே எடுத்துக் கூறியதோடு மாத்திரமல்லாமல், அந்தச் சலுகைகளைப் பெற்றும் வந்தார்கள். பொதுவாக, இந்த அரசு, எந்தச் சட்டமன்ற உறுப்பினர், எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்று பார்க்காமல், அந்த ஊராட்சி ஒன்றியங்கள் அனைத்திலுமே தன்னிறைவுத் திட்டங்களை எடுத்து, பல சலுகைகளை அளித்திருப்பதை நீங்கள் கண்கூடாகக் கண்டிருக்கிறீர்கள். அதன் வாயிலாக, சுதந்திரம் பெற்று, 33 ஆண்டுகளாக, கிராமப்புறங்களிலே, செயல்படாத திட்டங்கள், இன்று செயல்படுவதால்; ஏழை, எளிய மக்கள், தங்களுக்குக் கிடைத்திருக்கக்கூடிய சலுகைகளைக் கண்டு அவற்றை வரவேற்கிறார்கள்.

அதைப் போலத்தான் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள ஏழைக் குழந்தைகளுக்கு உணவு அளிப்பதற்காக, ரூ. 100 கோடிக்குத் திட்டத்தைக் கொண்டு வருகிறபொழுது, இங்கே இருக்கிற உறுப்பினர்கள் அதை எதிர்க்கிறார்கள் என்பதை நாம் அறிவோம். இருந்தாலும், ஏழை எளிய மக்கள் அதை வரவேற்பார்கள் என்பதை நான் மெத்தப் பணிவோடு தெரிவித்துக்

கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சுதந்திரம் பெற்ற 33 ஆண்டுகளாகியும் பெற முடியாத, சாலை வேலைகள், பால வேலைகள், பள்ளிக் கட்டிடங்கள், தாய்-சேய் நல விடுதிகள், குடிக்கத் தண்ணீர் பேரூராட்சிக்குள் பெருந்து போன்ற பல திட்டங்கள் செயல்படுவதால், ஏழை, எளிய மக்கள் இதனைப் பாராட்டுகிறார்கள் என்பதை மெத்தப் பணிவோடு கூறிக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். இதே வேளையில் பாரதியாருக்கு நூற்றாண்டு விழா எடுத்ததைப் பாராட்டுகிறேன். அதோடு மட்டுமல்லாமல், பாரதியார் நூற்றாண்டு விழாவை ஒட்டி, பெண்களுக்கென்று தனிப் பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்ததை, கல்வி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்தார்கள். அதற்காக, என் தொகுதி மக்கள் சார்பாகவும், நெல்லை மாவட்ட மக்கள் சார்பாகவும் நன்றி கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். விவசாயத்தையே நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிற என்னுடைய விளாத்திக்குளம் தொகுதியிலே பெண் களுக்கான ஒரு தொழிற்பயிற்சிக் கல்லூரி ஆரம்பிக்குமாறு நான் பணிவன் போடு கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசு பல மாநிலங்களிலே பல மாவட்டங்களை பிற்பட்ட பகுதி களாக அறிவித்தும், நம்முடைய தமிழகத்தில் எந்தப் பகுதியும் பிற்பட்ட பகுதி யாக அறிவிக்கப்படவில்லை என்பதைப் பத்திரிகையிலே பார்த்தேன். ஆகவே, அவ்வாறு மத்திய அரசால் புறக்கணிக்கப்பட்டாலுங்கூட, தமிழகத்திலே உள்ள பல தாலுக்காக்களை பிற்பட்ட பகுதிகளாக அறிவித்து, சலுகைகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அவ்வாறு அறிவிக்கப்பட்ட பகுதியிலே ஒன்று என்னுடைய தொகுதியாகும். அப்படி அறிவிக்கப்பட்டு, இரண்டு ஆண்டுகளாகி யும்கூட, தொழில் துறையில் அங்கு ஒன்றும் ஏற்படவில்லை. எனவே, அங்கு கூட்டுறவு நூற்பாலை ஒன்றும், டெக்ஸ்டைல் மில் ஒன்றும் ஆரம்பிக்குமாறு தமிழக அரசைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே போன்று தாழ்த்தப்பட்ட மக்கள், அரிஜனங்கள் அதிகமாக வாழ்கின்ற என்னுடைய பகுதியிலே, கூலி விவசாயப் பெருங்குடிமக்கள் அதிகமாக இருக்கிறார்கள்.



அவர்களுக்காக ஒரு முழு மானியமாக கூட்டுறவு மில் உண்டாக்கவேண்டும் என்று மெத்தப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-00)

அதேவேளையில், நீர்ப்பாசனத் திட்டம். தயாரிக்கப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டு இரண்டு ஆண்டுகள் ஆகியும் அது என்ன ஆகியது என்பதே தெரியவில்லை. அதன் மூலம் டி. புதுப்பட்டி, பூதலாபுரம், கருப்பூர், குமாரசக்கனாபுரம், முத்துக்குமாரபுரம் சின்னூர், சுப்லாபுரம் திட்டங்களை எடுத்தால் பகுதிகள் பயனடையும். இதை விரைவுபடுத்த நான் மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களையும், முதலமைச்சர் அவர்களையும் என் தொகுதி மக்கள் சார்பாக வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். இருக்கன்குடி அணைக்கட்டு திட்டத்தை 5 ஆண்டு காலம் ஆய்வு செய்து, 6 கோடி ரூபாய் செலவில் தயாரித்தார்கள். அரசுக்கு வந்திருக்கிறது. அதை கூடிய விரைவில் முடித்துக் கொடுக்கும்படி நான் நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நேற்றையதினம் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் மேலவை யிலே ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்போது முகவை மாவட்டம் இரண் டாக பிரிக்கப்படும் என்று சொல்லி இருக்கிறார்கள். நான் பிறந்த மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கவிருப்பதற்காக என்னுடைய மாவட்ட மக்களின் சார்பில் அவருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் ஒன்றை நான் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். பிரிக்கப் படவிருக்கும் கிழக்கு முகவை மாவட்டத்திற்கு முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் என்றும் மேற்கு முகவை மாவட்டத்திற்கு பெருந் தலைவர் காமராஜ் மாவட்டம் என்றும் பெயர் வைக்கும்படி கேட்டுக் கொள்ளவிரும்பு கிறேன்.

இந்த மன்றத்திலே நான் முதன்முதலாக சட்டமன்ற உறுப்பினராக வந்த போது பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களுடைய உருவப் படத்தை இந்த மன்றத்திலே வைக்கவேண்டும் என்று நான் முதலிலே பேசி னேன். பேசி அமர்ந்தபோது அன்றைக்குத் துணை சபாநாயகராக இருந்த திரு. திருநாவுக்கரசு அவர்கள் மீண்டும் பேசுங்கள் என்று சொல்லி, பின்னர் நான் பேசினேன் என்னுடைய கோரிக்கை எல்லாம் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களுடைய திருவுருவப்படம் இந்த மன்றத்திலே வைக் கப்பட வேண்டும் என்று என்னுடைய குறிக்கோளை சொல்லி அமர்ந்து விட் டேன். அதற்குப் பிறகு பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்

[திரு. ரா. கு. பெருமாள்] [1982 மார்ச் 5

களுடைய படமும், டாக்டர் அம்பேத்கார் அவர்களுடைய படமும், காயிதே
மில்லத் அவர்களுடைய படங்களையும் வைத்திருக்கிறார்கள். அதைப்
போலவே மறைந்த முதலமைச்சர்கள் பேறிஞர் அண்ணா அவர்கள்,
முதறிஞர் இராஜாஜி அவர்கள், பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் போன்ற
முன்னாள் முதல்வர்களின் திருவுருவப் படங்கள் இங்கே இருக்கின்றன.
அதைப்போலவே முன்னாள் முதல்வர்களான ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார்,
இராஜபாளையம் குமாரசாமி ராஜா ஆகியோரின் திருவுருவப் படங்களையும்
இந்த மன்றத்தில் வைக்குமாறு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.
ஏனென்றால் வருங்காலத்தில் வருகின்ற சட்ட மன்ற உறுப்பினர்கள், இளைய
தலைமுறையினர் இங்கே முன்னாள் முதல்வர்களாக யார் இருந்தார்கள்
என்பதைத் தெரிந்து கொள்வதற்காக அந்தப் பெரிய தலைவர்களுடைய படங்
களை இங்கே வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அத்துடன், இந்த மன்றத்தின் வாயிலாக என்னுடைய கருத்தைச் சொல்
லக் கடமைப் பட்டுள்ளேன். பொதுவாக நெல்லை மாவட்டத்திலே இந்த
ஆண்டு மழை பொய்த்துவிட்டதால் பெரும்பகுதி வறட்சியாக இருக்கிறது.
குறிப்பாக விளாத்திக்குளம், ஒட்டப்பிடாரம், கோவில்பட்டி, சங்கரன்கோவில்
பகுதிகளை வறட்சிப் பகுதிகளாக அறிவித்து அங்கே தொழிற்சாலைகளை
ஆரம்பிப்பதற்கும், வேலை வாய்ப்புக் கொடுப்பதற்கும் அரசு முயற்சி செய்ய
வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அந்தப் பகுதியிலே வாழ்கின்ற மக்கள் பெரும்பாலும் வானத்தைப்
பார்த்து வாழ்கின்ற மக்களாக இருக்கிறார்கள். வானம் பார்த்த பூமியிலே
உள்ள அந்த மக்கள் வாழ்வதற்காக அங்கே தொழில் மையங்கள் துவங்கிருப்
பதாகச் சொல்லுகிறார்கள். விளாத்திக்குளம் தொகுதியிலே ஒரு தொழில்
மையத்தைத் தொடங்க முழு முயற்சி மேற்கொள்ளுமாறு தமிழக அரசை
கேட்டுக் கொண்டு இந்த வாய்ப்பை அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி
கூறி அமர்கிறேன். நன்றி வணக்கம்.

*திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்
களே 1982-83 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கைமீது காங்கிரஸ் பேரியக்கத்தின்
சார்பிலே என்னுடைய சில கருத்துக்களை இம்மாமன்றத்தின் முன் வைக்க
விரும்புகிறேன். பாரதப் பிரதமர் அன்னை மாண்புமிகு இந்திரா காந்தி அவர்
கள் இந்த நாட்டிற்கு மீண்டும் புதுப்பித்து அறிவித்துள்ள 20 அம்சத் திட்டத்தை
இந்த அரசு முழுமையாக வரவேற்று இருக்கிறது என்பதற்காக என்னுடைய
பாராட்டுதலைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தத் திட்டத்தை



1982 மார்ச் 5] (திரு. என். எஸ். வி. சித்தன்)

நல்ல வகையில் செயல்படுத்தவேண்டுமென்றும் தமிழக அரசை நான் கேட்டுக்
கொள்கிறேன். வருகின்ற மாதங்களில் உளப்பூர்வமாக தமிழக அரசு இந்த
இருபது அம்சத் திட்டத்தை செயல்படுத்தி, சமுதாயத்திலே, பொருளாதாரத்
திலே அடித்தளத்திலே இருக்கும் மக்களுக்கு அதனுடைய விழுமிய பயன்கள்
போய்ச்சேரும் அளவிற்கு முனைப்பாகச் செயல்படுத்த வேண்டும் என்று
மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிதி நிலை அறிக்கை, சுருக்கமாகச் சொல்லப்போனால் கடந்த
ஆண்டு நிதி நிலை அறிக்கையின் தொடர்ச்சியாகத்தான் இருக்கிறதே தவிர,
தமிழ் நாட்டை வளமாக்க, தொலைதூர நோக்கத்தோடு, நல்ல பல திட்டங்
களை, உருப்படியான திட்டங்களை, தொழில் மயமாக்கும் திட்டங்களை
உள்ளடக்கியதாக இல்லை என்பதை நான் வேதனையோடு குறிப்பிட விரும்பு
கிறேன்.

இந்த மாமன்றத்திலே நிதி நிலை அறிக்கை சமர்ப்பிக்கப்படுகிற நேரத்தி
லும் சரி, பின்னாலே பல்வேறு மானியங்களிலே ஒதுக்குகின்ற தொகைகளுக்கும்
சரி, சட்டமன்றத்தின் அனுமதி கேட்கின்ற நேரத்தில் கோடிக்கணக்கான
ரூபாய்களுக்கான அனுமதியைப் பெற்று விட்டு, அப்படி பல்வேறு இனங்களுக்
காக ஒதுக்கப்பட்ட தொகை செலவு செய்யப்படாத நிலை கடந்த சில ஆண்டு
களாகத் தொடர்ந்து இருந்து வருகிறது என்பதை நான் சுட்டிக்காட்ட
விரும்புகிறேன். இந்தியத் தணிக்கைத் துறை தலைவரின் அறிக்கையைக்
கடந்த 3 ஆண்டுகால நிதி ஒதுக்கக் கணக்குகளை ஒப்பிட்டுப் பார்க்கின்ற
போது, பல்வேறு மானியங்களிலே ஒதுக்கப்பட்ட தொகைகள் கணிசமான
அளவிற்குச் செலவு செய்யப்படாமலேயே மிச்சமாகி இருக்கிறது என்பதை
நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், 1977—78 ஆம் ஆண்டிலே பல்வேறு
மானியங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி 1,217 கோடி ரூபாய். ஆனால் செல
விடப்படாமல் சேமித்த தொகை 199.74 கோடி ரூபாய். 1978—79-ல்
ஒதுக்கப்பட்ட தொகை 1,317 கோடி ரூபாய். அதிலே சேமிக்கப்பட்ட
தொகை 142.52 கோடி ரூபாய். 1979—80-லே ஒதுக்கப்பட்ட தொகை 1,482
கோடி ரூபாய். அதிலே மீதப்பட்ட தொகை 188 கோடி ரூபாய். மேலும்
குறிப்பாக 1979—80-ல் தணிக்கை அறிக்கை இணைப்பு 6-ல் கொடுத்துள்ள
விவரங்களின்படி பார்த்தால், பல்வேறு மானியங்களுக்காக ஒதுக்கப்பட்ட
தொகையில் பெரும்பாலான தொகை செலவிடப்படாமல் இருக்கின்றது.

(திரு. என். எஸ். வி. சித்தன்) [1982 மார்ச் 5

உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால், பொதுத் சுகாதாரத்திலே 4,210 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டதில் 21 சதவிகிதம் திரும்பக்கொடுக்கப்பட்டு இருக்கிறது. வேளாண்மைத்துறையில் 12 சதவிகிதம் திரும்பக் கொடுக்கப் பட்டிருக்கிறது. தொழில் துறையில் 17 சதவிகிதம் திரும்பக் கொடுக்கப் பட்டு இருக்கிறது. சமுதாய வளர்ச்சிப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகையில் 19 சதவிகிதம் திரும்பக்கொடுக்கப்பட்டுள்ளது. அதைப் போலவே, பழங்குடியினர், ஆதித் திராவிடர் நலன் குறித்த செலவுகள் ஆகிய வற்றிற்கு ஒதுக்கப்பட்ட 1,958 லட்ச ரூபாயில் 21 சதவிகிதம் திரும்பக்கொடுக் கப்பட்டுள்ளது. பிற்பட்டோர் நலனுக்காக ஒதுக்கப்பட்டுள்ள 704 லட்சத் தில் 22 சதவிகிதம் திரும்பக்கொடுக்கப்பட்டுள்ளது. வேளாண்மை குறித்த மூலதனச் செலவிற்காக 1,112 லட்சம் கொடுக்கப்பட்டதில் 371 லட்சம் செலவு செய்யப்பட்டு, கிட்டத்தட்ட 740 லட்சம் திரும்பக்கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் கிட்டத்தட்ட 67 சதவிகிதம் செலவழிக்கப்படவில்லை. அதே மாதிரி தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச்செலவு என்பதில் ரூ. 852 லட்சம் ஒதுக்கப்பட்டதில் 21 சதவிகிதம் திரும்பக்கொடுக்கப்பட்டு இருக்கிறது. பாசனம் குறித்த மூலதனச் செலவில் ஒதுக்கப்பட்ட 3,154 லட்சத்தில் 37 சத விதம் திரும்பக் கொடுக்கப்பட்டுள்ளது.

இன்னும் சொல்ல வேண்டுமானால், பொதுப்பணிகள், கட்டிடங்கள் குறித்த செலவுகளுக்காக 1,296 லட்சம் ஒதுக்கப்பட்டதில் 17 சதவீதம் செலவழிக்கப் படாமல் திரும்பக்கொடுக்கப்பட்டு இருக்கிறது. சாலைகள் பாலங்கள் குறித்த செலவுகளுக்காக 1,084 லட்சம் ஒதுக்கப்பட்டத்தில் 14 சதவீதம் திரும் பக்கொடுக்கப்பட்டு இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் சாலை போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்துப் பணிகள் என்பதற்காக ஒதுக்கப்பட்ட தொகையில் 42 சதவீதம் திரும்பக்கொடுக்கப்பட்டு இருக்கிறது. இப்படி பல்வேறு மானியங்கள் குறித்துச் சொல்ல முடியும். சட்டமன்றத்திலே நிதி ஒதுக்கம் செய்வதற்காக ஒப்புதல் பெற்று, பின்னர் அதற்கான முறை யான திட்டங்கள் இல்லாத காரணத்தால் பொதுமக்களுடைய வரிப்பணங்கள் பல்வேறு நல்ல பணிகளுக்குச் செலவழிக்கப்படாமல் மீந்து போய் இருக்கின்ற அவல நிலை இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். இந்த நிலை தொடராமல் வருகின்ற காலங்களில் முறையாக திட்டமிட்டு அந்தந்தப் பணி களுக்குச் செலவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



(திரு. என். எஸ். வி. சித்தன்)
1982 மார்ச் 5 ]

இந்த நிதி நிலை அறிக்கையில் ஆளும் கட்சி பெரிதும் பாராட்டக்கூடிய
இரண்டு அம்சங்கள் இருக்கின்றன. சமுதாயத்தில் நலிந்த நிலையில் உள்ள
ஏழைக் குழந்தைகளுக்கு உணவு அளிப்பதற்காக 100 கோடி ரூபாய் திட்டம்,
மற்றும் கிராம மக்களுக்கு இலவசமாகப் பல்பொடி வழங்குவதற்காகவுமான
திட்டம் ஆகியவை பெரிதும் ஆளும்கட்சியினரால் பாராட்டப்படுகின்றன.
மன்னிடத்தில் இந்த 1982—83-ம் ஆண்டுக்கான புதிய திட்டங்களுக்காக
அரசாங்கம் வைத்து இருக்கும் பட்டியல் கையில் இருக்கிறது. அந்தப் பட்டி
யலை நான் துருவித்துருவிப் பார்த்தேன். ஆளும்கட்சியினரால் உயர்வாகப்
பேசப்பட்ட அந்த இரண்டு திட்டங்களுக்கும் எந்த இடத்திலாவது நிதி
ஒதுக்கம் செய்யப்பட்டு இருக்கிறதா என்று பார்த்தேன். எங்கேயும் ஒதுக்கப்
இல்லை. இரண்டு பெரிய திட்டங்களை அரசு அறிவித்து இருக்கிறது. 100
கோடி ரூபாய் திட்டம் என்று சொல்லிவிட்டு, அதற்காக நிதி ஒதுக்கம்
செய்யப்படவில்லை. ஏதோ பட்ஜெட் தயாரித்து படித்து சமர்ப்பிக்கின்ற
நேரத்தில் இப்படிப்பட்ட கவர்ச்சிகரமான திட்டத்தைப் போட்டு, விளம்பரத்
திற்காக இதை உருவாக்கியிருக்கிறார்களோ என்கிற ஐயம் ஏற்படுகிறது.
மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது இந்த இரண்டுத்
திட்டங்களுக்கும் எந்த இனத்திலே எந்தப் பக்கத்திலே நிதி ஒதுக்கம் செய்
யப்பட்டிருக்கிறது என்று சொன்னால் நான் அவர்களுக்கு நன்றியுடையவ
னாக இருப்பேன்.

(முற்பகல் 11-10)

அடுத்தபடியாக இந்த 100 கோடி ரூபாய் திட்டத்தைப்பற்றிச் சொல்லும
போது, தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்தபோது, கல்விக் கண்
திறந்த பெரும் தலைவர் கர்மவீரர் காமராஜ் அவர்கள் முதலமைச்சராக
இருந்தபோது, பள்ளிக்கூடத்திலே படிக்கும் குழந்தைகள் வறுமையால் வாடக்
கூடாது, வறுமையால் படிப்பை விட்டுவிடக்கூடாது, பசியால் பள்ளிக்கூடத்
திற்கு போகாமல் இருக்கக்கூடாது என்பதற்காக 1955 ஆம் ஆண்டில் இலவச
மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். அதற்காக ஆரம்பத்தில்
5 கோடி ரூபாய் செலவிடப்பட்டாலும் படிப்படியாக 20 கோடி ரூபாய் என்ற
அளவுக்கு அது உயர்ந்தது. ஆசிய ஜோதி பண்டித ஜவகர்லால் நேரு அவர்
களால் கூட பல்வேறு இடங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் அது பாராட்டப்

(திரு. என். எஸ். வி. சித்தன்) [1982 மார்ச் 5

அந்தக் காலத்தில் இலவச மதிய உணவு மட்டும் அல்லாமல் இலவசப் புத்தகம், இலவச உடை போன்றவைகளும் அளிக்கப்பட்டன. பள்ளிச் சீரமைப்பு மாநாடு மூலமும், தர்மசிந்தனை உடையவர்கள், செல்வந்தர்கள் உதவியுடனும் இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டு, சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டது. ஆனால் இந்த அரசால் அறிவிக்கப்பட்டிருக்கிற இந்த 100 கோடி ரூபாய்த் திட்டத்திற்கு எப்படி நிதி ஒதுக்கப் போகிறார்கள் என்று தெரியவில்லை. அறிவித்ததோடு விட்டுவிடப்போகிறார்களோ என்ற ஐயப்பாடு எனக்கு ஏற்படுகிறது. காரணம் இதை எந்த வகையில் செலவிடப் போகிறார்கள், இதன் அளவுகோல் என்ன, ஏழைக் குழந்தைகளை எப்படித் தேர்ந்தெடுக்கப்போகிறார்கள், தேர்வு செய்கின்ற அதிகாரி யார், வருஷம் முழுவதும் இந்தத் தொகையை எப்படிச் செலவு செய்யப்போகிறார்கள் என்பதை எல்லாம் பார்க்கும்போது இதிலே சந்தேகம் ஏற்படுகிறது. ஏழைக் குழந்தைகள் என்பதற்கு சர்டிபிகேட் வாங்க வருவாய்த் துறைக்குப் போய் தாசில்தார், ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களை கெஞ்சும் நிலை வரக் கூடாது என்பதையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த அரசு பல்வேறு திட்டங்களை அறிவிக்கிறது, இந்தத் திட்டங்களை மேடைகளிலே அல்ல, நிதிநிலை அறிக்கையிலே அறிவித்த பின்னால் கூட பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

உதாரணத்திற்குச் சொல்ல விரும்புகிறேன். ஏழைப் பெண்கள் திருமணத்திற்கு தாலிக்கு தங்கம் வழங்க என்று ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு தாலிக்கு தங்கம் வழங்கமாட்டோம்; அதற்குப் பதிலாக ஆயிரம் ரூபாய் கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். அப்படியானால் ஏற்கெனவே இந்தத் திட்டத்தை அறிவிக்கும்போது இது முடியுமா, என்று பரிசீலிக்கவில்லையா? அதிகாரிகளை நீங்கள் கேட்கவில்லையா? தாலிக்குத் தங்கம் வழங்க முடியாமல் போனதைப்போல இப்போது அறிவிக்கிற ஆயிரம் ரூபாயும் வழங்கப்படாமல் போய்விடுமோ என்ற ஐயப்பாடு எனக்கு எழுகிறது. அதையும் இங்கே நினைவுபடுத்துவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

இன்னொன்றையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். கழிந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மதுவிலக்கு தளர்த்தப்பட்டது. அப்போது தளர்த்தக் கூடாது என்று நாங்கள் கடுமையான ஆட்சேபணைகளைத் தெரிவித்தோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மதுவின் கொடுமையை எடுத்துச் சொல்ல



1982 மார்ச் 5] (திரு. என். எஸ். வி. சித்தன்)

ஒதுக்கியிருக்கிறோம் என்று வும், பிரச்சாரம் செய்யவும் ஒரு கோடி ரூபாய் எப்படி செலவழிக்கப் சொன்னார்கள். ஆனால் அந்த ஒரு கோடி ரூபாய் எப்படி செய்தார்கள் விளைவு பட்டது? யார், யார் எல்லாம் பிரச்சாரம் குடித்து 4 பேர் என்ன என்று பார்க்கிறபோது, ஆங்காங்கே விஷச்சாராயம் வந்துகொண்டிருக் இறந்தார்கள், 5 பேர் இறந்தார்கள் என்ற செய்திதான் செலவழித்தார் கிறது. அது அல்லாமல் அந்த ஒரு கோடி ரூபாயை எப்படிச் கள் என்ற விவரம் இல்லை.

அதைப்போல இந்த நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டிருக்கிற பல் பொடித் திட்டமும் செயல்படுத்த முடியாமல் போய்விடுமோ என்ற கவலை யால் நான் சொல்கிறேன். மேலும், ஊரகத் தொழில் துறை அமைச்சகத்தின் மூலம் கூட்டுறவு அமைப்பிலே பல்பொடி தயாரிப்புத் தொழில் நடைபெறப் போவதாக அறிகிறேன். அதற்குக் கடனாகப் பணம் கொடுக்கப் போவ தாகவும் சொல்லப்படுகிறது. அங்கே தயாரித்து, பல்பொடியை எப்படி ஏழை எளிய மக்களுக்கு வழங்கப்போகிறார்கள்? வீடுதோறும் சென்று கொடுப்பார்களா? அல்லது அவர்கள் ஒரு குறிப்பிட்ட இடத்திலே வந்து வாங்க வேண்டுமா? இதை முறையாக அரசால் வெற்றிகரமாகச் செயல் படுத்த முடியுமா? செயல்படுத்தப் போகிறார்களா என்ற வினாக்களை எழுப்ப வேண்டியவனாக இருக்கிறேன்.

அரசால் அறிவிக்கப்பட்டிருக்கிற இந்த பல்பொடித் திட்டத்தைப் பார்க் கிறபோது இது ஆளும் கட்சியிலே இருக்கிற வேலையில்லாதவர்களுக்காகப் போடப்பட்ட திட்டம்போல் இருக்கிறது. அவர்களுக்கு வேலை கொடுப் பதற்காகப் போட்ட திட்டமாக இது அமைந்துவிடக்கூடாது என்பது என்னுடைய விருப்பம். ஆளும் கட்சியிலே இருக்கிற வேலையில்லாத சிலருக்கு வாழ்வளிக்கிற திட்டமாக இது இருக்கக்கூடாது என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பொருளாதார அடிப்படையில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிற மக்களுக்கு இந்த பட்ஜெட்டில் இந்தப் பல்பொடி திட்டம் அறிவிக்கப்பட்டிருக் கிறது. இதை ஒரு பல்பொடி பட்ஜெட் என்று நான் சொல்லமாட்டேன். ஆனால் இந்த 'பட்ஜெட்' பல்பொடி மடிக்கிற பேப்பராக ஆகிவிடக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அரசை நாம் ஏதாவது கேட்டால், அப்படிக் கேட்கும்போதெல்லாம் மத்திய அரசை கைகாட்டிக்கொண்டிருக்கிறார்கள். பல் கட்டணத்தை ஏன் உயர்த்தினீர்கள் என்று கேட்டால் பெட்ரோல், டீசல் விலையை ஏற்றிவிட்

டார்கள் மத்திய அரசில் என்று சொல்கிறார்கள். அவர்கள் பெட்ரோல் விலையை உயர்த்திவிட்டதால் நாங்கள் கட்டுப்படி ஆகாமல் கட்டணத்தை உயர்த்துகிறோம் என்று சொல்கிறார்கள். இந்த அரசு தன் கையிலே இருக்கிற அதிகாரத்தை வைத்து வணிக வரியை உயர்த்தியிருக்கிறது. டயர், டியூப் போன்றவைகளுக்கு வரியை உயர்த்தியிருக்கிறார்கள். அரசாங்கம் இந்த வரியை உயர்த்தியிருப்பதால் போக்குவரத்துக்குப் பயன்படுகிற பஸ், டாக்சி, ஆட்டோ கட்டணம் உயராது என்ற உறுதியை இங்கே அளிப்பார்களா ? இங்கே போக்குவரத்து அமைச்சர் இல்லை என்றாலும் இந்த உறுதி மொழியை அரசுகொடுக்க முடியுமா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

தமிழக அரசால் பல்வேறு சந்தர்ப்பங்களில் கொண்டுவரப்பட்ட சட்டங்கள், பல்வேறு சட்டங்கள் வழக்கு மன்றத்திற்குச் சென்று, அங்கே தவிடுபொடி ஆகியிருக்கின்றன. சென்னை உயர்நீதி மன்றத்திலும், உச்ச நீதிமன்றத்திலும் தமிழக அரசால் கொண்டுவரப்பட்ட பல சட்டங்கள், திட்டங்கள் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கின்றன. அதைப்போலவே இப்போது அறிவிக்கப்பட்டிருக்கிற பல்வேறு திட்டங்களும் அமைத்துவிடுமோ என்று எண்ணிப்பார்க்கிறேன். ஒரு காலத்திலே தமிழகம் காங்கிரஸ் ஆட்சியில் இருந்தபோது எத்தனையோ புரட்சிகரமான திட்டங்களை, சட்டங்களைக் கொண்டுவந்து, அவை எல்லாம் எந்த வழக்கு மன்றத்திற்குச் சென்றாலும் நின்று நிலைத்தக் காட்சியை இன்றைக்கு என்னால் எண்ணிப்பார்க்க முடிகிறது.

காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே தஞ்சாவூர் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம், ஜமீன்தாரி ஒழிப்புச் சட்டம் போன்ற பல சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. அவைகள் எல்லா நீதிமன்றங்களிலேயும் செல்லத்தக்க சட்டங்களாகத்தான் இருந்தன. ஆனால் இன்றைய அரசாலே கொண்டுவரப்படுகின்ற பல்வேறு சட்டங்கள் சரியான அஸ்திவாரம் இல்லாமல் தொப், தொப் என்று விழுகின்ற கட்டிடங்களைப் போல, வழக்கு மன்றங்களிலே தோற்றுக் கொண்டிருக்கின்ற காட்சியினை நாம் பார்த்துக்கொண்டிருக்கின்ற காட்சி தொடர்ந்துகொண்டிருக்கின்றது என்பதை வேதனையோடு சொல்லிக்கொள்கிறேன்.

இந்த அரசு ஓர் இரவு உத்தரவின் மூலமாக கிராம அதிகாரியை பதவி நீக்கம் செய்து சட்டம் இயற்றியது. அதை எதிர்த்து அந்தக் கிராம அதிகாரிகள் நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். தற்போது அந்த வழக்கு உச்ச நீதிமன்றத்திலே இருந்துகொண்டிருக்கின்றது. இதன் விளைவு என்ன ? ஒரு துரும்பினை அசைக்கின்ற பணியைக்கூடச் செய்யாமல் இன்றையதினம் கிராம அதிகாரிகளுடைய வரிப்பணத்திலே இருந்து பல [illegible]





ரூபாயினைச் சம்பளமாகப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். இதைப்போல மதுவிலக்கு தளர்த்தப்பட்ட பின்பு நீதிமன்றத்திற்கு போன வழக்குகள் எத்தனை எத்தனை என்பதை இந்த நேரத்திலே நான் எண்ணிப் பார்க்கிறேன். எல்லாவற்றுக்கும் மேலாக 25 வயதுக்கு மேற்பட்டவர்கள் 25 ரூபாயிலே குடிக்கலாம் என்று சட்டத்திலே ஒரு சலுகையைச் செய்திருப்பது பற்றி உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி அவர்கள் இது ஒரு அரசியல் மோசடி என்ற கருத்தினைச் சொல்லி இருக்கிறார்கள். அதை இந்த நேரத்திலே சொல்லாமல் இருக்க முடியவில்லை.

ஊராட்சி ஒன்றியங்களுக்கு தேர்தல் நடத்துவதற்காக நாள் நிர்ணயிக்கப்பட்டு இன்றையதினம் அதற்கு கோர்ட்டிலே தடை போடப்பட்டிருக்கின்றது. இவைகளை எல்லாம் பார்க்கின்றபோது இந்த அரசின் சட்டத்துறை பலவீனமாக இருக்கின்றதா அல்லது அவசர கோலத்திலே அள்ளித் தெளித்தது போன்று இந்த அரசின் மூலம் முடிவுகள் எடுக்கப்படுகின்றதா ?

மதுவிலக்கினைத் தளர்த்தியபோது 100 கோடி ரூபாய் அரசுக்குக் கிடைக்கும் என்று அறிவித்தார்கள். ஆனால் தற்போது 140 கோடி ரூபாய் அரசுக்கு வருவாய் வந்திருக்கின்றது. சாயாக்கடை இருந்த இடங்களில் எல்லாம் சாராயக் கடைகள் இன்றையதினம் இருக்கின்றன. என்றாலும்கூட இந்த 140 கோடி ரூபாயினைக் கொண்டு ஏதாவது நல்ல உருப்படியான திட்டங்களை அரசு தொடங்கி இருக்கின்றதா என்ற கேள்வியினை என்னாலே எழுப்பாமல் இருக்க முடியவில்லை. அதுமட்டுமல்ல 140 கோடி ரூபாய் வந்ததற்குப் பின்னாலும் கூட பொது வணிக வரியினை 4 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக இந்த அரசு உயர்த்தி இருக்கின்றது. பட்டுத் துணிகளுக்கு 5 சதவீதம் வணிக வரியினைப் புகுத்தி இருக்கிறார்கள். இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் பட்டுத் துணிகளுக்கு வணிக வரி கிடையாது. தமிழகத்தைப் பொறுத்தவரையிலே மதுரை, கும்பகோணம் பகுதியிலே உள்ள பல இலட்சக்கணக்கான பட்டுத் தொழிலாளர்கள் இப்போது நசிந்துகொண்டிருக்கின்ற நிலைமை இருக்கின்றது. அரசாங்கம் கொண்டுவந்திருக்கின்ற 5 சதவீத வரி விதிப்பினால் ஏழைத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே இதுபற்றி மறுபரிசீலனை செய்து வரியினை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். . .

(மணியடிக்கப்பெற்றது). நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் மத்திய அரசினுடைய வலிமையை நன்றாக உணர்ந்தவர்கள். மத்திய

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1982 மார்ச் 5

அரசுக்கும் தமிழக அரசுக்கும் நல்ல உறவு இருக்கவேண்டும் என்று எப்போதும் விரும்புகின்றவர்கள். ஆனால் என்ன காரணத்தாலோ இந்த நாட்டின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட எங்களையும் 1967 ஆம் ஆண்டு வரையிலே அரசுக்கட்டிலிலே இருந்த எங்கள் கட்சியினரையும், இன்னும் சொல்லப் போனால் உலகத்திலேயே பெரிய ஜனநாயக நாடு என்று சொல்கின்ற இந்தியாவினை ஆள்கின்ற காங்கிரஸ் கட்சியினுடைய பிரதிநிதிகளான எங்களைப் பார்த்து பிச்சைக்காரர்கள் என்றும் மத்திய அரசைப்பார்த்து "எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்" என்று சொல்வதும் அதுவும் அமைச்சரவையிலே இருக்கின்ற பொறுப்புள்ள அமைச்சர்கள் சொல்வார்களானால், அது அந்த உறவு இருக்கவேண்டும் என்று விரும்பினால் பொறுப்பிலே இருப்பவர்கள் இனி மேலாவது இந்தமாதிரி பேசாமல் இருப்பதற்கான ஏற்பாடுகளை முதல்வர் அவர்கள் செய்யவேண்டும் இவை கூறி என்னுடைய உரையினை நிறைவாக்கிக் கொள்கிறேன்..

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அப்படி அமைச்சர்கள் யாரும் இங்கே பேசியதாக எனக்குத் தெரியவில்லை. ஆகவே அமைச்சர்கள் இப்படிப் பேசலாமா என்று எவ்வாறு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்புகிறார்கள் என்பது தெரியவில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டதற்கு நன்றி. நான் அதுபற்றி இன்னும் கொஞ்சம் விளக்கமாகச் சொல்வதற்குரிய வாய்ப்பு கிடைத்திருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர்கள் யாரும் இங்கே பேசியதாக நான் சொல்லவில்லை. . .

மாண்புமிகு போரவைத் தலைவர் : அப்படியானால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதை உறுப்பினர் அவர்கள் இதன்மூலம் உறுதிப்படுத்துவதாக ஆகின்றது. எனவே அவைக்கு வெளியே பேசியதைப்பற்றி எல்லாம் இங்கே வந்து சொல்ல வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11.20)

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. சித்தன் பேசிய அந்த வாசகங்கள் குறிப்பேட்டில் இடம் பெறவேண்டுமா என்று கேட்கவிரும்புகிறேன் ?

மாண்புமிகு போரவைத் தலைவர் : அவருக்கு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். இரண்டுமே குறிப்பேட்டில் இருப்பது நல்லது. திரு. என். சங்கரய்யா.



1982 மார்ச் 5]

* திரு. என். சங்கரய்யா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
1982-83 ஆம் ஆண்டின் வரவு-செலவு திட்டத்தின்கீழ் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்
கட்சியின் சார்பிலே பின்வரும் கருத்துக்களை நான் தெரிவிக்க விரும்பு
கிறேன்.

தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையிலே கொடுக்கப்பட்டிருக்
கிற திட்டங்களின் பிரச்னைகளைப் பற்றி சொல்வதற்கு முன்னால், தமிழகத்
திலே சமய ரீதியிலே இப்பொழுது பெரும் கவலை அளிக்கக்கூடிய நிகழ்ச்சி
யாகிய குமரி மாவட்டத்தின் நிலைமை பற்றி மாண்புமிகு முதல்வர் அவர்கள்,
இந்தச் சட்டமன்றத்தில் இருக்கக்கூடிய கட்சிகளின் பிரதிநிதிகளின் கூட்டத்
தைக் கூட்டவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதிலே குமரி
மாவட்டத்தில் இன்றைக்கு இருக்கிற அந்த இரண்டு மதங்களும் சம்பந்தப்
பட்ட பிரச்னைகளைப் பற்றி பேசி, முதலிலே அங்கே ஒரு வகையான அமை
தியை ஏற்படுத்துவதற்கான முறையிலே ஒரு வேண்டுகோள் விடுக்க வேண்டும்
என்றும், அதைத் தொடர்ந்து அந்த மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு
இந்த சட்டமன்றத்திலும், நாடாளுமன்றத்திலும் இருக்கக்கூடிய உறுப்பினர்கள்
அனைவரையும் சேர்த்து, அந்த மக்கள் மத்தியிலே ஒரு அமைதியை ஏற்படுத்த
முதலிலே ஒரு நடவடிக்கை எடுக்க வேண்டும், என்று வற்புறுத்த விரும்பு
கிறேன்.

ஜனநாயக ரீதியான சர்வ சக்திகளும் ஒன்றுபட்டு, பொருளாதார ரீதியிலே
தங்களுடைய உரிமைகளையும், ஜனநாயக உரிமைகளையும் பாதுகாக்க வேண்
டிய நேரத்தில் மதத்தின் பெயராலே இப்படிப்பட்ட சம்பவங்கள் ஏற்படுவது,
தமிழக மக்களுடைய அமைதிக்கு, இந்திய மக்களுடைய அமைதிக்கு,
பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய ஒன்றாகும் என்பதால் அதை முதலிலே கூறிவிட
விரும்பினேன்.

அடுத்தபடியாக, இங்கே நமது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்
கொண்டுவந்திருக்கக்கூடிய அந்த நிதிநிலை அறிக்கையிலே 3-வது பாராவிலே
அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதிலே "பணவீக்கம் இன்றியமையாப் பண்
டங்களின் பற்றாக்குறை, விலைவாசி ஏற்றம், வேலையில்லாத் திண்டாட்டம்,
ஏழ்மை நிலை, எரி பொருள்கள், விவசாய இடு பொருள்கள் ஆகியவற்றின்
விலை உயர்வு, இரயில்வே போக்குவரத்துக் கட்டணங்களில் உயர்வு போன்ற
வைகள் அகில இந்தியாவை எந்த அளவுக்கு பாதிக்கின்றனவோ, அந்த அளவுக்
குத் தமிழகத்தையும் பாதிக்கவே செய்கின்றன." என்று கூறியிருக்கிறார்கள்.
ஆனால் அந்தப் பணவீக்கத்திற்கும், விலைவாசி ஏற்றத்திற்கும், வேலையில்லாத்
திண்டாட்டங்கள் அதிகரித்திருப்பதற்கும், ரெயில்வே கட்டணங்கள் உயர்

(திரு. என். சங்கரய்யா) [1982 மார்ச் 5

திருப்பதற்கும் மத்திய அரசினுடைய கொள்கைகள் தான் காரணம் என்பதை மிகத் தெளிவாக இந்த அறிக்கையிலே கூறப்படவில்லை என்பதே ஒரு பல வீனம் என்று நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

காரணம் என்னவென்றால், இந்த நாட்டிலே மத்திய அரசினுடைய 20 அம்சத் திட்டத்திற்கு ஆதரவு அளிக்கும் வகையில், இந்த நிதிநிலை அறிக்கையிலே கருத்துக்கள் தரப்பட்டிருக்கிறது. அந்த 20 அம்சத் திட்டத்தைக் கொண்டு வந்தவர்கள்தான் இந்தப் பண வீக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள், விலைவாசி உயர்வை ஏற்படுத்தியிருக்கிறார்கள், வேலையில்லாத் திண்டாட்டத்தை அதிகமாக்கியிருக்கிறார்கள், ஏழ்மை நிலையையும் உண்டாக்கியிருக்கிறார்கள். அதற்கு மாற்றுக் கருத்தாக இந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசின் கருத்துக்கள் என்ன, கொள்கைகள் என்ன என்பதைப்பற்றி இந்த நிதிநிலை அறிக்கையிலே எதுவுமே கூறவில்லை என்பதைப் பார்க்கிற போது, அது மிக வருந்தத்தக்க விஷயமாகும் என்று கூறிக் கொள்கிறேன்.

காரணம் என்னவென்றால் இன்றைக்கும், அதுவும் சமீபத்தில் சர்வதேச நிதி நிறுவனத்துடன் ஒரு கடன் ஏற்பாடு செய்துக் கொண்ட காரணத்தால், இந்திய அரசினுடைய மொத்தப் பொருளாதார கொள்கைக்குமே, அந்த சர்வதேச நிதிநிறுவனம் விதித்திருக்கக்கூடிய நிபந்தனைகள், மத்திய அரசுக்கு, சாதாரண மக்கள் மீது வரிப் பளுவைச் சுமத்தி நிர்ப்பந்திக்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எனவேதான் இன்றைக்கு இந்தியாவிலே இருக்கிற பல்வேறு ஜனநாயக சக்திகள், அந்த சர்வதேச நிறுவனத்தினுடைய மிக மோசமான நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளக்கூடாது என்று வற்புறுத்தி வரக்கூடிய நிலைமைகளைப் பற்றி குறிப்பிடுகிறேன். இந்த நாட்டிலே . . . . (குறுக்கீடு)

Thiru K. S. G. HAJA SHAREEF : Mr. Speaker Sir, it has been said on many occasions on the floor of Parliament that the country has not concluded any terms with the I.M.F. in a derogatory manner. I do not think the Hon. Member can go on dilating on this. I wish he will not do it.

**திரு. என். சங்கரய்யா :** பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியினுடைய தலைவருடைய குறுக்கீட்டிலே எந்தவிதமான அரசியல் பதிலையும் அவர் கூறவில்லை. இந்த நாட்டிலே மேற்கு வங்காள அரசாங்கமே அந்த சர்வதேச நிதி நிறுவனத்தினுடைய நிபந்தனைகள் என்னென்ன என்பதைப் பற்றி விரிவாக புஸ்தமாகத் தயாரித்து வெளியிட்டது. அதைப்பற்றி இந்தியப்



(திரு. என். சங்கரய்யா)

1982 மார்ச் 5]

பொருளாதார நிபுணர்கள் சேர்ந்த மாநாடுகள் ஒன்று கூடி அந்த சர்வதேச நிதி நிறுவனத்தினுடைய நிபந்தனைகளை ஆராய்ந்து, அவைகள் எந்த அள வுக்கு இந்தியாவைப் பாதிக்கின்றன என்றும் எடுத்துக்காட்டி விவாதித்திருக் கிறார்கள்.

உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்று சொன்னால் அமெரிக்க பெரு முதலாளிகளும் ஏனைய வெளிநாட்டு பெரு முதலாளிகளும் இந்தியாவிலே இன்றைக்கு இருப்பதை விட இந்தியப் பொருளாதாரத்தில் முதலீடு செய்ய மேலும் கூடுதலான வாய்ப்புகள் அளிக்கப்படவேண்டுமென்று சர்வதேச நிதி நிறுவனம் வலியுறுத்தியிருக்கிறது. அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் வெளி நாடுகளிலுள்ள பெரு முதலாளிகளை வரவழைத்து அவர்கள் மூலம் உங்கள் கடன்களைப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்று கூறியிருக் கிறார்கள், அந்த வெளிநாட்டுப் பெரு முதலாளிகள் இந்தியாவிலே முதலீடு செய்து அடிக்கக் கூடிய கொள்ளை இலாபத்தை அவர்கள் தங்கள் நாடுகளுக்குக் கொண்டு செல்ல அனுமதிக்கவேண்டும் என்ற நிபந்தனையையும் விதித்திருக் கிறார்கள். இந்தியாவிலே இம்போர்ட் ஸப்ஸ்டிட்யூஷன், வெளிநாடுகளை எதிர்பார்க்காமல் இந்தியாவிற்குத் தேவையான எல்லாப் பொருள்களையும் இந்தியாவிலேயே உற்பத்தி செய்துகொள்ளும் அந்தக் கொள்கையைக் கண்டித் திருக்கிறார்கள். அப்படி இந்தியாவிலேயே உற்பத்தி செய்தால் வெளிநாடு களில் தாங்கள் உற்பத்தி செய்கிற பண்டங்களை உங்கள் நாட்டில் வாங்க இடமில்லாமல் போய்விடும், எங்களுக்கு ஒரு வேட்டையாக உங்கள் நாடு இருக்காது, ஆகவே எல்லாப் பொருள்களையும் நீங்களே உற்பத்தி செய்வது, உங்கள் சொந்தக் கால்களில் நிற்பது என்ற கொள்கையை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆகவே நான் கூறுகிறேன். நம் தேச நலன்களுக்கு பாதகமான முறையில் இங்கு அயல் நாட்டுப் பெரு முதலாளிகளின் ஆதிக்கம் ஏற்படும் வகையில் அவர்களின் அந்த நிபந்தனைகள் இருக்கின்றன என்பதை நான் மீண்டும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ப்ரணாப் முகர்ஜி அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள், இந்தப் பணவீக்கம் பற்றி. இன்றிருக்கக்கூடிய ரூபாயின் மதிப்பு 20, 25 பைசா என்றிருக்கிறது என்று அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலிருந்தே தெரியவில்லையா ? இந்த நிலைக்குக் கொண்டு வந்ததற்கு மத்திய அரசு தான் காரணம், ஒரு ரூபாய்க்கு 25 காசுதான் . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது இவற்றிற்குப் பதில் சொல்லலாம்.

எடுத்துவிட வேண்டும் என்பதைப் பரிசீலிப்பதற்காக முதலில் மோகன்லால் சுகாதியா தலைமையில் போடப்பட்டு, அவர் இறந்த பிறகு, திரிபாதி தலைமையில் ஒரு கமிட்டி போடப்பட்டிருக்கிறது. இந்தத் தீர்மானம் அந்தக் கூட்டத்திலே வந்தபோது, இப்படி செய்யக் கூடாது இந்த 5 பொருள்களின் மேல் விற்பனை வரி மாநில அரசுகளிடம் இருக்க வேண்டுமென்று கூறி, மேற்கு வங்காளம், கேரளம், ஜம்மு அண்டு காஷ்மீர் ஆகிய 3 மாநிலங்கள் இந்தத் தீர்மானத்தை எதிர்த்தன. நான் கேட்க விரும்புகிறேன், இந்த விற்பனை வரியை, மாநில சர்க்காருக்கு இருக்கக்கூடிய இந்த 5 பண்டங்களின் மீது விற்பனை வரியைப் போடக்கூடிய அதிகாரத்தை மத்திய சர்க்கார் ரத்து செய்து, சுங்க வரி போடும் தீர்மானத்தை தமிழ்நாடு சர்க்கார் ஏன் எதிர்க்கவில்லை? அரசியல் காரணங்களா? மத்திய சர்க்காருடன் இருக்கக்கூடிய உறவு காரணமா? தமிழ்நாட்டிலே உள்ள மக்களுக்கு உதவக்கூடிய இந்த விற்பனை வரி உரிமையை நீங்கள் இழக்கத் தயாரா? ஏன் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை? . . . .

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இந்த மாநாட்டிலே கலந்து கொண்டார்கள். இந்த விற்பனை வரி உரிமையை மத்திய சர்க்கார் எடுத்துக்கொண்டபோது, அதை எதிர்த்துப் பேசியதாகத் தான் எனக்கு நினைவு. ஒருவேளை மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்கள் வெளிநடப்புச் செய்திருந்தால், அதிலே ஈடுபட்டிருக்க மாட்டோமே தவிர, கொள்கை ரீதியாக அதை எதிர்த்துப் பேசியிருக்கிறோம் என்பதைத் தெளிவுபடுத்துகிறேன்.

**திரு. என். சங்கரய்யா** : இதற்குத் தான், நீங்கள் கேட்பீர்கள் என்று தெரிந்து, இந்து பத்திரிகையிலே மார்ச் 2, 1982 பக்கம் 9-லே முதலாவது காலத்திலே விசேஷ காஸ்பான்டென்ட் எழுதியுள்ளதை வாசிக்கிறேன் :

"West Bengal, Kerala and Jammu and Kashmir did not agree with the resolution adopted by the Chief Ministers' Conference"

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அங்கே போயிருக்கிறார்கள். ஆனால், இந்தத் தீர்மானம் அங்கே ஓட்டுக்கு வந்தபோது, இந்த 3 மாநிலங்களின் முதல் மந்திரிகள் தான் அதை எதிர்த்திருக்கிறார்கள். ஆகவேதான் நான் கேட்க விரும்புகிறேன்—இப்படிப்பட்ட ஒரு முக்கியமான பிரச்சனையில், மாநிலத்தினுடைய. . . .



**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்** : மாண்புமிகு பேரவைத் தலைவ
அவர்களே, 'இந்து' பத்திரிகையை அவர்கள் நம்புவதை நான் ஆட்சேபிக்க
வில்லை. ஆனால், வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இங்கே வந்தால்
அதற்கான விவரங்கள் தெரியும்.

**திரு. என். சங்கரய்யா** : நிதி அமைச்சர் அவர்கள் பதிலுரையிலே இந்த
பற்றிச் சொல்லலாம். உண்மையிலேயே தமிழ்நாடு எதிர்த்தது என்
கூறினால், மிக்க மகிழ்ச்சி. 3 மாநிலங்களோடு, 4-வதாக இந்தச் சர்க்காரு
அதைப் பலப்படுத்தியிருப்பது கண்டு மகிழ்ச்சியடைவேன்.

அடுத்தபடியாக நான் கூற விரும்புவது, இங்கே தன்னிறைவுத் திட்டம்
தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் என்றெல்லாம் சொல்லப்படு
கிறது. அதனுடைய வரம்பிற்குள் கிடைக்கக்கூடிய சலுகைகள், வளர்ச்சி
களைக் கண்டு மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சி அதை ஏற்றுக் கொள்கிறது
ஆனால், நாங்கள் கூறுகிறோம், இந்த அரசும் கூறுகிறது. கிராமப்புற
மக்களுக்கு நன்மை செய்வதிலே தான் இந்த அரசு கவலைப்படுகிறது என்று
தமிழகத்திலே முக்கால்வாசிப் பேர்கள் கிராமப்புறங்களிலே வாழ்கிறார்கள்
ஆனால், இந்த தன்னிறைவுத் திட்டத்தால் மட்டும் இன்றைக்கு இந்தப்
பிரச்னைகள் தீர்ந்து விடாது. பள்ளிக்கூடங்களைக் கட்டுதல், ரோடுகள்
போடுதல் போன்றவைகளால் மட்டும் மக்களுக்கு வாழ்க்கை கொடுக்க முடி
யாது ; வருமானம் கொடுக்க முடியாது : தொழில் கொடுக்க முடியாது. ஆகவே,
இந்தப் பிரச்னையை மேலெழுந்தவாரியாகப் பார்க்காமல், சற்று ஆழ்ந்த
பார்க்கும்படி கேட்டுக் கொள்கிறேன். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல
விரும்புகிறேன். நீண்டகாலமாக ஒப்புக்கொள்ளப்பட்ட தேசியக் கொள்கை,
தீவிரமாக நிலச் சீர்திருத்தத்தைக் கொண்டுவந்து. விவசாயிகளுக்கு அந்த
நிலங்களைக் கொடுப்பதன் மூலம்தான் அவர்களுக்கு வாழ்க்கை கொடுக்க
முடியும், வருமானம் கொடுக்க முடியும், வறுமையை ஒழிக்க முடியும் என்பது.
ஆனால், அது இன்றைக்கு எப்படியிருக்கிறது என்பதைப் பாருங்கள்:

தமிழ்நாட்டிலே 1½ கோடி ஏக்கர் நிலமிருப்பதாகச் சொல்லப்படுகிறது.
கடந்த காலத்தில், காங்கிரஸ் கட்சி ஆட்சிக் காலத்திலே இருந்து இதற்கு
சட்டம் கொண்டு வரப்பட்டது. அப்படிப்பட்ட சட்டம் 1956 ஆம் ஆண்டு
[illegible] வரப்பட்டு, அப்படிப்பட்ட நிலச் சீர்திருத்தத்தின் விளைவாக 1981
ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதிவரை மொத்தத்திலே 1,36,647 ஏக்கர்
நிலங்களிலேதான் அரசாங்கம் கை வைத்தார்கள். ஆயினும் உபரி என்று
அறிவித்தது 88,907 ஏக்கர். 150 லட்சம் ஏக்கர் எங்கே 88 ஆயிரம் ஏக்கர்
எங்கே. இன்றைக்கு தமிழகத்திலே இருக்கிற கோடிக்கணக்கான விவசாயத்

**திரு. என். சங்கரய்யா :** இந்த நிலைக்குக் காரணம் என்ன என்பதைப் பற்றி அவர்கள் பரிசீலனை செய்தாலே உண்மை தெரியும். திரு. ஹாஜா செரீப் அவர்கள் குறிப்பிட்டதால் நானும் குறிப்பிட விரும்புகிறேன். அந்த சர்வதேச நிறுவனம் வெளிநாட்டுப் பெரு முதலாளிகளுக்காக மட்டும் சொல்ல வில்லை. இந்த நாட்டிலுள்ள ஏகபோக முதலாளிகளுக்கும் அதிகப்படியான சலுகைகள் வழங்கவேண்டும், அவர்கள் லாபத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய எந்தவிதமான திட்டங்களையும் கூட ஏற்படுத்தக்கூடாது என்ற நிபந்தனை யும் அவர்கள் விதிக்கிறார்கள். பெரு முதலாளிகளை சில கேந்திரத் தொழில் களில் நுழைய விடக்கூடாது என்று இந்திய சர்க்காரால் வரையறுக்கப்பட்ட கொள்கையை தளர்த்தவேண்டும் என்றும் அவர்கள் அந்தத் கேந்திரத் தொழில்களில் முதலீடு செய்ய அனுமதிக்கவேண்டும் என்றும் அந்த ஸ்தபானத் தினர் வற்புறுத்தியிருக்கிறார்கள்.

அவர்கள் மேலும் என்ன கூறுகிறார்கள் என்றால், உங்கள் நாட்டில் ரெயில்வேயை உபயோகிப்போருக்கு அதிகக் கட்டணம் போடவேண்டும், பெட்ரோல் உபயோகிப்போருக்கு அதிகக் கட்டணம் போடவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே மத்திய சர்க்கார் அந்த நிபந்தனையை ஏற்றுக்கொண்டிருக்கிறது. பேய்க்கு வாழ்க்கைப்பட்டால் என்ன செய்வது? அதன் விளைவாக இன்று ரெயில்வே கட்டணத்தை உயர்த்தினோம், பெட் ரோல் கட்டணத்தை உயர்த்தினோம். நிதி அமைச்சர் அவர்களைப் பார்த் தால் ஒருவிதத்தில் வருத்தமாக இருக்கிறது. இவர் ஒரு பட்ஜெட் போடு வார், அதில் அரசுச் செலவு ரெயில்வே கட்டணம் வகையில் இவ்வளவு என்று போட்டால் மத்திய அரசு கட்டண உயர்வு அதை ரத்து செய்து விடுகிறது. டெலிபோனுக்கு இவ்வளவு செலவு என்று கணக்குப் போட்டால் டெலிபோன் கட்டண உயர்வு அதை ரத்து செய்துவிடுகிறது. இந்தளவிற்கு மாநில சர்க்கார்களுடைய வருமானம் பாதிக்கப்படுகிறது என்பதால் நான் கூற விரும்புகிறேன். வெளிநாட்டு முதலாளித்துவ ஆதிக்கத்தை அகற்றினால் ஒழிய பாரதியின் அடிப்படைக் கொள்கையான சுதேசிக் கொள்கை வளராது. இந்தியா சுதந்திரமடைந்து இவ்வளவு ஆண்டுகளாகியும் கூட வெளிநாட்டு முதலாளிகளின் ஆதிக்கம் அதிகரித்துக் கொண்டிருக்கும்போது எவ்வாறு இந்தியாவின், தமிழ்நாட்டின் பொருளாதாரத்தைப் பாதுகாக்க முடியும்? அரசு ஏகபோக முதலாளிகளின் தொழில்களை எடுத்துக்கொண்டாலொழிய எப்படி வருமானம் கிடைக்கும்? அதைச் செய்யாவிட்டால் மக்கள்மீது வரி போடுவது, சுங்க வரி அதிகரிப்பது இதைத் தவிர வேறு வழியிருக்காது, இந்திய அரசுக்கு. ஆகவே சொல்கிறேன், இன்று ஏகபோக முதலாளிகள் நடத்தி வரும் தொழில்களை மத்திய அரசு எடுத்துக் கொண்



வரி போடாமல் பல நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் வருமானம் பெற முடியும். அதை வைத்து மாநிலங்களுக்குக் கொடுக்கமுடியும். ஆகவே இந்தக் கொள்கை மாற்றத்தை இந்த அரசாங்கம் வற்புறுத்தவேண்டும். பண வீக்கத்தால் விலைவாசி உயர்வு ஏற்படுகிறது என்று சொன்னால் போதாது, இதற்கான மாற்றுக் கொள்கையை இந்த அரசு தேசிய வளர்ச்சிக் கவுன்ஸிலி லும் திட்டக் குழுக் கூட்டத்திலும் வலியுறுத்த வேண்டும்.

(முற்பகல் 11-30)

அடுத்தாற்போல் மத்திய அரசின் இன்றைய நடவடிக்கைகளில் ஒன்று. தமிழ்நாடு உயர்நீதிமன்றத்திற்கு பீகார் மாநிலத்தைச் சேர்ந்த ஒருவர் இப் போது பிரதான நீதிபதியாக வந்திருக்கிறார். இதில் பிரச்னை என்ன வென்றால், இன்று தமிழ்நாடு அரசாங்கம் நீதிமன்றங்கள் அனைத்திலும் நட வடிக்கைகள் தமிழிலே நடைபெறவேண்டும் என்று தீர்மானித்திருக்கிறது. அப்படி நாம் தீர்மானித்திருக்கிறபோது தமிழ்நாட்டிலுள்ள உயர்நீதிமன்றத் தின் பிரதம நீதிபதியாக தமிழ்மொழி தெரியாதவர் இருந்தால், நான் கேட்க விரும்புகிறேன், இன்றைக்கு நீதிமன்றத்தில் தமிழ் மொழி மூலம் நடைபெறு வது என்பது பாதிக்கப்படாதா? அதைப்பற்றி இந்த அரசாங்கம் என்ன கருது கிறது? அதை மாற்றுவதற்கு என்ன நடவடிக்கைகளை எடுத்தது? அப்படி நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறதா? அதற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, ஜனநாயக சக்திகள் ஒத்துழைக்கத் தயாராக இருக்கின்றன. இந்தியாவி லுள்ள எல்லா நீதி மன்றங்களிலும், அந்தந்தப் பிரதேச மொழி தெரிந்தவர்கள் தான் பிரதம நீதிபதியாக இருக்க வேண்டும், அப்படி இருந்தால் தான் அந்தந்த மாநில மொழிகளிலே நீதி வழங்கப்படும் என்ற உன்னதமான கொள்கை யைப் பின்பற்ற முடியும். ஆகவே, இதைப்பற்றியும் இந்த அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

அடுத்தபடியாக நான் இங்கே குறிப்பிட விரும்புவது, மாநில அரசாங்கத் தைப் பற்றிய ஒரு விமர்சனம் இருக்கிறது, அதைக் கூற விரும்புகிறேன். ஏற்கனவே நான் குறிப்பிட்டிருக்கிறேன். மாநில அரசாங்கத்திற்கு வாய்ப்பு கம்மி; வருமானம் கம்மியாக இருக்கிறது. இந்த இழப்பை இந்த அரசாங்கம் ஈத்துக்கொள்கிறதா? உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15 ஆம் தேதி, புதுடெல்லியில் முதலமைச் சர்கள் மாநாடு நடந்தது. அந்த மாநாட்டிலே ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டிருக்கிறது. அதாவது, வனஸ்பதி, மருந்து பொருள்கள், சிமெண்ட், பத்திரிகை காகிதம், பெட்ரோலியம் ஆகிய பொருள்களின்மீது கூடுதலான சுங்க வரி விதிக்கப்படும்; அதன்மூலம் மாநில சர்க்கார் விற்பனை வரியை

[திரு. என். சங்கரய்யா] [1982 மார்ச் 5

தொழிலாளர்கள் கையகல நிலம் கூட இல்லாமல் கஷ்டப்படுகிற காலத்திலே 8
ஆயிரம் ஏக்கர் நிலங்களை அரசாங்கம் கொடுத்து விட்டு பிரச்னை தீர்ந்
விட்டது என்று சொன்னால் கிராமப்புற மக்களின் பிரச்சினையை எப்படி
தீர்க்க முடியும். பினாமி நிலச் சட்டத்தினை கொண்டு வந்தோம்
மாண்புமிகு சித்தன் அவர்கள் 20 அம்ச திட்டத்தைப் பற்றி குறிப்பிட்டார்கள்
அந்த 20 அம்ச திட்டத்தில் ஒன்று நிலசீர்திருத்தம். நான் கேட்க விரும்
கிறேன், ஏன் மத்திய சர்க்கார் தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஏகமனதாக நிறை
வேற்றப்பட்ட இந்த பினாமி நிலச் சீர்திருத்த சட்டத்தை அங்கீகரிக்க மறு
கிறது. தஞ்சை மாவட்டத்திலே உள்ள சில பெரிய நிலப்பிரபுக்களுடைய
நிலம் அவர்களுடைய கையிலேயிருந்து பறி போய்விடும் என்ற ஒரே காரண
தினால் தான் இதை மத்திய சர்க்கார் மறுத்தது. அதை யாரும் மறுக்க
முடியுமா. (குறுக்கீடு) (கூச்சல் குழப்பம்).

**திரு. இல. பலராமன் :** தலைவர் அவர்களே, தஞ்சை ஜில்லாவிலே இருக்
கிற ஒருசில நிலபிரபுக்களின் நிலம் பறிபோய் விடும் என்று சொல்கிறார்
அப்படி சொல்லியது. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தஞ்சை ஜில்லாவிலே நிலப்பிரபுக்கள்
இருப்பது நாடு முழுவதும் அறிந்த ஒன்று. இதில் ஒன்றும் பிரச்னை
இல்லை. அவர்களது கட்சிக் கொள்கையை சொல்லிக் கொண்டிருக்கிறார்
உங்கள் கொள்கையை நீங்கள் சொல்லுங்கள். இதைப் பிரச்னை ஆக்காதீர்கள்
திரு. சித்தன் அவர்கள் உட்கார வேண்டும், நாளை திரு. ஹாஜா ஷெரீ
அவர்கள் பதில் சொல்வார், உட்காருங்கள்.

**திரு. என். சங்கரய்யா :** தலைவர் அவர்களே, நான் யாரையும் பெய
சொல்லவில்லை. தஞ்சை மாவட்டத்திலேயுள்ள சில நிலப்பிரபுக்கள் என்
நான் குறிப்பிட்டேன். தஞ்சை மாவட்டத்தில் நிலப்பிரபுக்கள் இல்லைய
ஆகவே நிலப்பிரபுக்கள் வைத்திருக்கிறார்கள் என்று சொன்னால் இவர்களுக்
ஏன் கோபம் வரவேண்டும். ஆகவே இன்றைக்கு அரசாங்கத்தை வற்புறுத்
விரும்புவது அந்த பினாமி நிலச் சட்டத்தை மறுபடியும் இங்கே கொண்டு வந்
அது சட்ட மன்றத்திலே நிறைவேற்றப்பட்டு, அதன் மூலம் கிடைக்கக்கூடி
இரண்டு லட்சம் ஏக்கரோ, அல்லது மூன்று லட்சம் ஏக்கரோ, அதை பெற்
ஏழை மக்களுக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். ஏற்கனவே
அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். 4,39,9
ஏக்கர் நிலம் இன்றைக்கு கோவில் மடங்களிலே இருக்கின்றன. நீண்டகா
மாக ஜனநாயக சக்திகள் இதைக் கேட்டு வருகிறார்கள், இந்தக் கோவில் நில



1982 மார்ச் 5] (திரு. என். சங்கரய்யா)

களை அங்கே உழக்கூடிய விவசாயிகளுக்கு கொடுங்கள் என்று ; மாண்புமிகு
அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்கனவே ஒரு கமிட்டியைப் போட்
டிருக்கிறோம் என்று குறிப்பிட்டார்கள். அவர்கள் பரிசீலனையில் இருப்பது
அந்த நிலங்களை குத்தகை விவசாயிகளுக்கு கொடுப்பதா, அல்லது அரசாங்
கமே அந்த நிலங்களை எடுத்துக்கொள்வதா என்று இருக்கிறது. அரசாங்கமே
எடுத்துக் கொள்ளவேண்டிய அவசியம் இல்லை. நீண்டகாலமாக சாகுபடி
செய்து வருகிற குத்தகைதாரர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு அதை
விநியோகித்து விவசாய உற்பத்தியை பெருக்குவதற்கு அரசாங்கம் ஏற்பாடு
செய்யவேண்டும். இதுவரை விவசாய குத்தகைதாரர்கள் 4,37,138 பேர்கள்
தான் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். எங்களுடைய கணக்குப்படி 30
லட்சம் குத்தகைதாரர்கள் தமிழ் நாட்டிலே இருக்கிறார்கள். ஆகவே 26
லட்சம் பேர்கள் இதிலே பதிவு செய்யப்படவில்லை. அவர்களுக்கு இந்த
75—25 என்ற பங்கு கொடுக்கப்படவில்லை. ஆகவே 15 ஸ்டாண்டர்ட்
ஏக்கர் நிலத்திற்கு மேலே இருக்கிற நிலங்களை எடுத்து ஏழை விவசாயி
களுக்கு கொடுக்க வேண்டும்.

அரிசனங்கள் பிரச்னைகள் பற்றி பேசினார்கள். அரிசனங்களை
கோவிலிலே வரவிட்டால் போதுமா? அவர்களுக்கு சமத்துவம் என்று
சொன்னால் போதுமா? அல்லது சமபந்தி போஜனம் நடத்தினால் போதுமா.
அல்லது அரை ஏக்கர் நிலத்தை அவர்கள் கையிலே கொடுத்தால் சரியாகுமா?
ஆகவே தீவிரமான நிலச் சீர்திருத்தத்தை செய்தாலொழிய, குத்தகைதாரர்
களின் நலன்களை பாதுகாத்தாலொழிய கிராமப்புற அரிசன மக்களின்
பிரச்னையைத் தீர்க்கமுடியாது.

(முற்பகல் 11-40)

இந்த அறிக்கையிலே விவசாயத் தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்ச
கூலியத்தை அதிகப்படுத்துவதற்கு யோசிக்கிறோம் என்று கூறியிருக்கிறீர்கள்.
அதை அதிகப்பத்தியாக வேண்டும். ஆனால் இருக்கக்கூடிய கூலி அமல்
படுத்தப்படுகிறதா? தஞ்சாவூர் மாவட்டத்திலேயும் மற்ற மாவட்டங்களிலேயும்
குறைந்த பட்சக் கூலியைத் தரவேண்டுமென்று கேட்டால் நிலப்பிரபுக்கள்
தகராறு செய்கிறார்கள். காலையிலேகூட காங்கிரஸ் கட்சி உறுப்பினர்
கேட்ட பிரச்சினை, வட ஆற்காடு மாவட்டத்திலே ஏற்பட்ட பிரச்சினை
என்ன? கூலி கேட்டார்கள் அரிசனங்கள். கொடுக்க முடியாது என்று
சொல்லி நிலப்பிரபுக்கள் எதிர்க்கிறார்கள். ஆனால் அது அரிசனங்கள்,
ஜாதி இந்துக்கள் தகராறு என்ற முறையிலே வர்ணம் மாறிவிடுகிறது. தமிழ்
நாட்டிலே உள்ள ஒவ்வொரு கிராமத்திலேயும் இந்தக் குறைந்த பட்சக் கூலிச்

(திரு. என். சங்கரய்யா) [1982 மார்ச் 5

சட்டம் அமல் ஆகிறதா இல்லையா என்பதை அரசாங்கம் உத்திரவாதப் படுத்தவேண்டாமா ? உங்களுடைய போலீஸ் என்ன நடவடிக்கை எடுத்தது ? செம்பனார்கோயிலே, மாயூரம் தாலுகாவிலே நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்திற்கு என்ன காரணம் ? குறைந்த பட்சக் கூலிச் சட்டத்தின் அடிப் படையிலே இத்தனை மணி நேரம் தான் வேலை செய்வோம் என்று சொன் னார்கள். கூடாது, பழைய முறைப்படி அதிகப்படியான நேரம் வேலை செய்யவேண்டுமென்று தகராறு செய்தார்கள். அதையொட்டித் தான் ஜனவரி 19-ஐப் பயன்படுத்தி துப்பாக்கிசூடு நடைபெறுகின்ற அளவுக்கு வந்தது. ஏழை எளிய மக்களின் மீது சரியான பார்வை படவேண்டும். அந்த முறை யிலே மாவட்ட ஆட்சித் தலைவரும், ரெவின்யூ அதிகாரிகளும் இதை அமல் படுத்தவேண்டும். இதை அமல்நடத்தவேண்டிய பொறுப்பு அவர்களுக்கு இருக்கிறது, இதை அமல் நடத்தாத மாவட்ட ஆட்சித் தலைவர், ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர், மற்ற அதிகாரிகள் தண்டக்கப்படவேண்டும். அதற்காக ஆங்காங்கே கண்காணிப்புக் குழுக்களை ஏற்படுத்துங்கள். விவசாயிகளுக்கு ஒரு நாளைக்கு நியாயமான கூலி கிடைத்தால் தான் அவர்கள் அரிசி வாங்கிச் சாப்பிட முடியும். அப்போதுதான் வறுமையைப் போக்க முடியும். இதைத் தான் வழியே தவிர வேறு இல்லை.

நேற்றைய முன்தினம் மாண்புமிகு முதலமைச்சரை தமிழ்நாடு விவசாயச் சங்கங்களின் தூதுக்குழு—பல்வேறு இயக்கங்களைச் சேர்ந்தவர்கள்—சந்தித் துப் பேசியிருக்கிறார்கள். அந்தக் கோரிக்கைகளை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதிலே ஒன்று, நிலவரி பாக்கிகளுக்காக ஜப்தி நடவடிக்கைகளை எடுக்கக்கூடாது என்பது. கடந்த காலத்திலே ஏற்பட்ட வறட்சியினாலே தான் அந்த பாக்கிகள் ஏற்பட்டன. அவர்கள் ஒன் ப்ளஸ் ஒன் என்று கட்டுவதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார் கள். இந்த ஆண்டு நிலவரியும், ஏற்கனவே இருக்கின்ற பாக்கியில் ஒன்றும் கட்டுவோம் என்று சொல்லி வருகிறார்கள். அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் பல மாவட்டங்களிலே இன்றைக்கு ஜப்தி நடவடிக்கை எடுப்பதற்கான முஸ்தீபுகள் இருக்கின்றன, அவைகளைச் செய்யக் கூடாது. அவர்களுடைய கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

கூட்டுறவுத் துறையிலே கடன் சம்பந்தமாக சில சலுகைகளைக் கேட்டிருக் கிறார்கள். வட்டியை ரத்து செய்துவிட்டு அசலை தவணைகளிலே செலுத்து கிறோம் என்று சொல்கிறார்கள். அன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், ரிசர்வ் பாங்க் இடைஞ்சலாக இருக்கிறது என்று சொன் னார்கள். தமிழ்நாடு அரசாங்கம் கூட்டுறவுக் கடன்...



1982 மார்ச் 5] (திரு. என். சங்கரய்யா)

வேண்டுமென்று நடவடிக்கை எடுத்தால் மத்திய சர்க்கார் எதற்காக தடை செய்யவேண்டும் ? நல்லதைத் தானும் செய்யாமல் செய்கிறவர்களையும் நந்தி போல் நின்று ஏன் தடுக்க வேண்டும் ? மாநில சர்க்கார் குறைக்கிறோம் என்றால் மத்திய அரசு அதற்கு ஏன் தடையாக இருக்கவேண்டும். மாநில அரசு கூட்டுறவுக் கடனை ரத்து செய்தால், குறைந்தால் அதை மறுப்பேன் பிளாக் லிஸ்டிலே சேர்ப்பேன், எந்தவிதமான நிதியுதவியும் கொடுக்கமாட்டேன் என்று மத்திய அரசு பயமுறுத்துவது ஏழை எளியவர்களுக்கு சாதகமான மத்திய ஆட்சியாக எப்படி இருக்கமுடியும் ?

அவர்களுடைய மூன்றாவது கோரிக்கை பற்றி நேற்றைக்குக் கூட இங்கே நிதியமைச்சர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். ஒரு குவிண்டால் நெல்லுக்கு 147 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று தமிழ்நாடு சர்க்கார் மத்திய சர்க்காருக்கு சிபாரிசு செய்திருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் தஞ்சை மாவட்டம் போன்ற மாவட்டங்களிலே செக்போஸ்ட் காரண மாக நெல்விலை விழுந்து கொண்டிருக்கிறது. வியாபாரிகள் வாங்க மறுக் கிறார்கள். நீங்கள் சொல்கிற விலையைக் கொடுத்து வாங்கச் செய்வதற்கு ஏற்பாடுகளை அரசு செய்யவேண்டும். இன்னொரு வழியையும் நான் சொல்லவிரும்புகிறேன். நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு நீங்கள் செய் திருக்கக்கூடிய செலவைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். 68 லட்சம் டன் அரிசி உற்பத்தியாகக்கூடிய—1982-83 இல்—நிலையில் எவ்வளவு டன்களை வாங்கப்போகிறீர்கள். 6.7 லட்சம் டன் அரிசி குடும்பக் கார்டுகள் மூலமாக விநியோகம் செய்யப்போகிறோம் என்று சொல்கிறீர்கள். கோடிக்கணக்கான குடும்பக் கார்டுகள் இருக்கிறபோது இந்த 6.7 லட்சம் என்பதை இரட்டிப் பாக்கி 12 லட்சம் டன் அளவுக்கு அரிசி குடும்பக் கார்டுகளுக்கு விநியோகி யுங்கள். அப்படிச் செய்தால் தான் குறைந்த விலையில் தமிழகத்திலே உள்ள எல்லா மக்களுக்கும் அரிசி கிடைக்கும். அரிசி வினியோகத்தில் 35 கோடி ரூபாயில் நட்டம் என்றும் ஒரு டன் அரிசி விநியோகத்தால் 500 ரூபாய் நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்கு இழப்பு ஏற்படும் என்று சொல்லியிருக் கிறீர்கள். நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு இழப்பு என்று குறிப்பிட்டி ருக்கிறார்கள். 6.7 இலட்சம் டன் வழங்கியதில் 35 கோடி இழப்பு என்று சொல்கிறார்கள். இன்னும் 35 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டாலும் சரி, தமிழ்நாட்டு மக்களுக்கு இன்றைக்குக் கொடுக்கப்படும் அளவை இரட்டிப் பாக்கி புழுங்கல் அரிசியும், பச்சையரிசியும் கொடுத்தால் மார்க்கெட்டில் உள்ள

அதிக விலைவாசியின் காரணமாகப் பாதிக்கப்படுகின்ற மக்களுக்குப் பாதுகாப்பு கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தேவைப் பட்டால் குழந்தைகளுக்கு ஒருவேளை இலவச உணவு வழங்குவதற்காக ஒதுக் கப்படுகின்ற 100 கோடி ரூபாயிலிருந்தாவது 35 கோடி ரூபாயை ஒதுக்கி நான் சொன்ன திட்டத்திற்காகச் செலவழித்தால் அந்தக் குடும்பத்தில் உள்ளவர்கள் உட்பட குழந்தைகளுக்கும் பயன் கிடைக்கும்.

குழந்தைகளுக்கு ஒருவேளை இலவச உணவு அளிக்கப்போவதைப்பற்றி சில விவரங்களைக் கூற விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஜில்லாக் கலெக்டர்களுடன் கலந்தாலோசித்திருக்கிறார்கள். நான் குறிப்பிட விரும்புவது என்னவென்றால், இப்பொழுது பள்ளிக்கூடத்தில் படிக்கின்ற பிள்ளைகளுக்கு அளிக்கப்படும் மதிய உணவே போதுமான அளவிற்கு இல்லை. மாணவர்களுக்கு மதிய உணவு அளிப்பதற்காகச் செலவிடப் பட்ட தொகை மிகவும் சொற்பமானதாகும். அதற்கு இன்னும் அதிகமாகச் செலவழித்தால் பள்ளிகளில் படிக்கின்ற சிறுவர்களும், சிறுமியர்களும் மதிய உணவு பெறுவதற்குப் பயனுள்ளதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு என்ன சந்தேகம் என்றால், 2 வயதுக் குழந்தைகளுக்குக் கொடுக் கப்படும் உணவை யார் வந்து வாங்குவார்கள்? அந்தக் குழந்தையே நேரிடை யாக வந்து வாங்க முடியாது. அதனுடைய தாய் மூலம்தான் கொடுக்க வேண்டும். அந்தத் தாயே வறுமையிலே வாடும்பொழுது அது குழந்தை களுக்குப் போய்ச் சேருமா? இது யதார்த்த மனிதப் பிரச்னை அல்லவா? குடும்பமே வறுமையிலே வாடும்பொழுது அது இந்தக் குழந்தைகளுக்குச் சரியாகக் கொடுக்கப்படுமா? ஆகவே, இதிலே மிகுந்த சிரமங்கள் இருக் கின்றன. அதற்குப் பதிலாக நான் மேலே கூறியிருக்கின்ற முறையில் செய் வதற்கு யோசிக்க வேண்டும். பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களுக்கு அளிக்கப்படும் உணவை அதிகப்படுத்துவதோடு, பொது விநியோகத்தில் அளிக்கப்படும் உணவுப்பொருளின் அளவையும் அதிகப்படுத்த வேண்டும், அதற்கு இந்த 100 கோடி ரூபாயைப் பயன்படுத்துவது பொருத்தமாக இருக்கும் என்ற முறையில் யோசனைகளைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக நான் ஒரு பெரிய பிரச்னையைப் பற்றிச் சொல்ல விரும்பு கிறேன். அரிசனங்களைப் பற்றிய பிரச்னை காலையிலே வந்தது. எத்தனை காலங்களாக இப்படியே போவது? தமிழ்நாட்டில் உள்ள எல்லாக் கட்சி களுக்கும் பொறுப்பு இருக்கிறது. ஜாதி இந்துக்கள் என்று சொல்லப்படு



கிறது. அப்படியென்றால் மற்றவர்களெல்லாம் ஜாதி அற்ற இந்துக்களா? இதிலே என்ன பிரச்னை என்றால் நாமே எங்கே கொண்டு போய் இருக் கிறோம் என்பதைப் பார்க்க வேண்டும். ஆகவே, இந்தப் பிரச்னையிலே, சுடுகாட்டுக்குப் போக. . .

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலை வரவர்களே, நாங்கள் விளக்கமாகத் தெரிவித்திருக்கிறோம், ஜாதி இந்துக்கள், ஜாதி இல்லாத இந்துக்கள் என்று சொல்லக்கூடாது என்று. தங்களை உயர்ந்த ஜாதி என்று கற்பனை செய்து கொண்டு சொல்லிக்கொண்டிருப்பவர்கள், தங்களை ஜாதி இந்துக்கள் என்றும், மற்றவர்களை ஜாதி இல்லாத இந்துக்கள் என்றும் ஆக்கி விடுகிறார்கள். அதை இந்த அரசு ஏற்றுக்கொள்ளவில்லை.

திரு. என். சங்கரய்யா : தலைவரவர்களே, இந்த அரசு ஏற்றுக்கொள்ள வில்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறுகிறார்கள். மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சரவர்கள் சொன்ன பதிலில்கூட இந்த வார்த்தை தான் வந்தது, வடார்க்காடு மாவட்டத்தில் இருந்த பிரச்னைபற்றி வந்த பொழுது இந்த வார்த்தைதான் வந்தது.

திரு. எல். இளையபெருமாள் : தலைவரவர்களே, இங்கே அமைச்சரவர்கள் சொன்னார்கள், ஜாதி இந்துக்கள் என்று சொல்வதை நாங்கள் யாரும் ஒத்துக் கொள்ளவில்லை என்றும், அவர்களாகச் சொல்வதாகவும் சொன்னார்கள். அது நல்ல கருத்துதான். ஆனால் அரசாங்கத்திலிருந்து தெரிவிக்கப்படும் ஒவ்வொரு அறிவிப்பிலும் ஜாதி இந்துக்களுக்கும் ஆதி திராவிடர்களுக்கும் என்றோ அல்லது அரிசனங்களுக்கும் என்றோ வருகிறது. எனவே, அமைச் சரவர்கள் நிச்சயமாகத் தங்களுடைய அலுவலகத்தின் மூலமாகக் கொடுக்கும் அறிவிப்பின் மூலமாக ஜாதி இந்துக்கள் என்ற வார்த்தை வரவில்லை என்று சொல்வார்களா அல்லது வருங்காலத்திலாவது இம்மாதிரி வராது என்று அறிவிப்புச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, நாம் எவ்வளவு சொன்னாலும் பழகிப் போனவர்கள் அதையே பின்பற்று கிறார்கள். பேசும்பொழுதுகூட ஆதிதிராவிடர்கள் என்று சொல்லாமல் அரிசனங்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதைப்போலவே

அதிக விலைவாசியின் காரணமாகப் பாதிக்கப்படுகின்ற மக்களுக்குப் பாதுகாப்பு கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தேவைப் பட்டால் குழந்தைகளுக்கு ஒருவேளை இலவச உணவு வழங்குவதற்காக ஒதுக் கப்படுகின்ற 100 கோடி ரூபாயிலிருந்தாவது 35 கோடி ரூபாயை ஒதுக்கி நான் சொன்ன திட்டத்திற்காகச் செலவழித்தால் அந்தக் குடும்பத்தில் உள்ளவர்கள் உட்படக் குழந்தைகளுக்கும் பயன் கிடைக்கும்.

குழந்தைகளுக்கு ஒருவேளை இலவச உணவு அளிக்கப்போவதைப்பற்றி சில விவரங்களைக் கூற விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஜில்லாக் கலெக்டர்களுடன் கலந்தாலோசித்திருக்கிறார்கள். நான் குறிப்பிட விரும்புவது என்னவென்றால், இப்பொழுது பள்ளிக்கூடத்தில் படிக்கின்ற பிள்ளைகளுக்கு அளிக்கப்படும் மதிய உணவே போதுமான அளவிற்கு இல்லை. மாணவர்களுக்கு மதிய உணவு அளிப்பதற்காகச் செலவிடப் பட்ட தொகை மிகவும் சொற்பமானதாகும். அதற்கு இன்னும் அதிகமாகச் செலவழித்தால் பள்ளிகளில் படிக்கின்ற சிறுவர்களும், சிறுமியர்களும் மதிய உணவு பெறுவதற்குப் பயனுள்ளதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு என்ன சந்தேகம் என்றால், 2 வயதுக் குழந்தைகளுக்குக் கொடுக் கப்படும் உணவை யார் வந்து வாங்குவார்கள்? அந்தக் குழந்தையே நேரிடை யாக வந்து வாங்க முடியாது. அதனுடைய தாய் மூலம்தான் கொடுக்க வேண்டும். அந்தத் தாயே வறுமையிலே வாடும்பொழுது அது குழந்தை களுக்குப் போய்ச் சேருமா? இது யதார்த்த மனிதப் பிரச்னை அல்லவா? குடும்பமே வறுமையிலே வாடும்பொழுது அது இந்தக் குழந்தைகளுக்குச் சரியாகக் கொடுக்கப்படுமா? ஆகவே, இதிலே பிருந்த சிரமங்கள் இருக் கின்றன. அதற்குப் பதிலாக நான் மேலே கூறியிருக்கின்ற முறையில் செய் வதற்கு யோசிக்க வேண்டும். பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களுக்கு அளிக்கப்படும் உணவை அதிகப்படுத்துவதோடு, பொது விநியோகத்தில் அளிக்கப்படும் உணவுப்பொருளின் அளவையும் அதிகப்படுத்த வேண்டும், அதற்கு இந்த 100 கோடி ரூபாயைப் பயன்படுத்துவது பொருத்தமாக இருக்கும் என்ற முறையில் யோசனைகளைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக நான் ஒரு பெரிய பிரச்னையைப் பற்றிச் சொல்ல விரும்பு கிறேன். அரிசனங்களைப் பற்றிய பிரச்னை காலையிலே வந்தது. எத்தனை காலங்களாக இப்படியே போவது? தமிழ்நாட்டில் உள்ள எல்லாக் கட்சி களுக்கும் பொறுப்பு இருக்கிறது. ஜாதி இந்துக்கள் என்று சொல்லப்படு



கிறது. அப்படியென்றால் மற்றவர்களெல்லாம் ஜாதி அற்ற இந்துக்களா? இதிலே என்ன பிரச்னை என்றால் நாமே எங்கே கொண்டு போய் இருக் கிறோம் என்பதைப் பார்க்க வேண்டும். ஆகவே, இந்தப் பிரச்னையிலே, சுடுகாட்டுக்குப் போக. . .

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலை வரவர்களே, நாங்கள் விளக்கமாகத் தெரிவித்திருக்கிறோம், ஜாதி இந்துக்கள் ஜாதி இல்லாத இந்துக்கள் என்று சொல்லக்கூடாது என்று. தங்களை உயர்ந் ஜாதி என்று கற்பனை செய்து கொண்டு சொல்லிக்கொண்டிருப்பவர்கள் தங்களை ஜாதி இந்துக்கள் என்றும், மற்றவர்களை ஜாதி இல்லாத இந்துக்கள் என்றும் ஆக்கி விடுகிறார்கள். அதை இந்த அரசு ஏற்றுக்கொள்ளவில்லை.

திரு. என். சங்கரய்யா : தலைவரவர்களே, இந்த அரசு ஏற்றுக்கொள்ள வில்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறுகிறார்கள். மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சரவர்கள் சொன்ன பதிலில்கூட இந்த வார்த்தை தான் வந்தது, வடார்க்காடு மாவட்டத்தில் இருந்த பிரச்னைபற்றி வந் பொழுது இந்த வார்த்தைதான் வந்தது.

திரு. எல். இளையபெருமாள் : தலைவரவர்களே, இங்கே அமைச்சரவர்கள் சொன்னார்கள், ஜாதி இந்துக்கள் என்று சொல்வதை நாங்கள் யாரும் ஒத்துக் கொள்ளவில்லை என்றும், அவர்களாகச் சொல்வதாகவும் சொன்னார்கள். அது நல்ல கருத்துதான். ஆனால் அரசாங்கத்திலிருந்து தெரிவிக்கப்படும் ஒவ்வொரு அறிவிப்பிலும் ஜாதி இந்துக்களுக்கும் ஆதி திராவிடர்களுக்கு என்றோ அல்லது அரிசனங்களுக்கும் என்றோ வருகிறது. எனவே, அமை சரவர்கள் நிச்சயமாகத் தங்களுடைய அலுவலகத்தின் மூலமாகக் கொடுக்கு அறிவிப்பின் மூலமாக ஜாதி இந்துக்கள் என்ற வார்த்தை வரவில்லை என் சொல்வார்களா அல்லது வருங்காலத்திலாவது இம்மாதிரி வராது என் அறிவிப்புச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே நாம் எவ்வளவு சொன்னாலும் பழகிப் போனவர்கள் அதையே பின்பற் கிறார்கள். பேசும்பொழுதுகூட ஆதிதிராவிடர்கள் என்று சொல்லாம அரிசனங்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதைப்போலவே

ஜாதி இந்துக்கள், ஜாதி இல்லாத இந்துக்கள் என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஜாதி இந்துக்கள், ஜாதி இல்லாத இந்துக்கள் என்பதை இந்த அரசு ஏற்றுக்கொள்ளாது. அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை நிச்சயமாக எடுக்கும்.

**திரு. இல. பலராமன் :** பாயின்ட் ஆப் ஆர்டர் சார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினருடைய கட்சியைச் சார்ந்தவர்கள்—அவர்களுடைய கட்சியின் துணைத் தலைவர் திரு. சுந்தரராஜ் அவர்கள் மாலையில் பேசவிருக்கிறார்கள். அவரிடத்தில் உறுப்பினரவர்கள் சொல்ல வேண்டிய கருத்துக்களைக் கூறி பேசும்படி சொல்லலாம்.

(முற்பகல் 11-50)

**திரு. என். சங்கரய்யா :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரிசனங்கள் பற்றிய இந்தப் பிரச்னையை நான் எப்படிப் பார்க்கிறேன் என்றால் அவர்கள் உழைப்பாளி மக்கள். சகல மதங்களையும், ஜாதிகளையும் சேர்ந்த, உழைப்பாளி மக்களுடைய பொருளாதாரப் பிரச்னைகளைத் தீர்ப்பதன் மூலம், அவர்களுக்குச் சமத்துவ உரிமை அளிப்பதன் மூலம்தான் அவர்களை உயர்த்த முடியும். உதாரணமாக, 10 சென்ட் மனைக்கட்டுகளை இந்த மாநிலத்திலே இருக்கக்கூடிய எல்லா விவசாயக் குடும்பங்களுக்கும், தொழிலாளர்களுக்கும் கொடுத்தால், அது அவர்களைத் தலைநிமிர்ந்து நிற்கச் செய்யும். இன்றைக்குச் சில மாநிலங்களிலே செய்யப்பட்டிருக்கிறது. அவர்களுக்குக் குடியிருப்பு, மாடு, அல்லது ஆடு கட்டிக்கொள்ள, மரங்களை வைத்துக்கொள்ள, 10 சென்ட் அவர்களுக்குக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்தால், 1½ கோடி ஏக்கர் நிலம் இருக்கக்கூடிய தமிழ்நாட்டிலே இது அவர்களைத் தலை நிமிர்ந்து நிற்கச் செய்யும். இன்றைக்கு அவர்களுடைய வறுமைதான் இந்த ஏற்றத்தாழ்வுகளுக்குக் காரணம் என்பதை நாம் அடிப்படையிலே உணர வேண்டும்.

மற்றுமொன்று. இந்தக் காடு வளர்ப்புத் திட்டம் என்ற பெயரால், ஒரு திட்டம் கொண்டு வரப்படுகிறது. சமீபத்திலே—சமுதாயக் காடுகளோ, அல்லது வேறு காடுகளா என்ற பெயருக்குள்ளே நான் போகவில்லை—ரிசர்வ் பாரஸ்ட்டைப் புலப்படுத்த வேண்டும். ஆனால் சமீபகாலத்திலே ஏழைக் [illegible] புறம்போக்கு நிலங்களிலே, அரசாங்கத்திற்குச் சொந்தமான





பல நிலங்களிலே, நீண்ட நெடுங்காலமாக, சாகுபடி செய்து வருபவர்கள், வெளியேற்றப்படுவதற்கான பெரு முயற்சி நடைபெறுகின்றன. இது ஒரு தவறான முயற்சி. காடு வளர்ப்பு என்ற பெயரால், அங்கே இன்றைக்குப் பயிர்த் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடிய இலட்சக்கணக்கான விவசாயிகளை எக்காரணத்தைக் கொண்டும் நிலத்தைவிட்டு வெளியேற்றக் கூடாது என்று நான் மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பிலே கடுமையாகக் கூற விரும்புகிறேன். அப்படிப்பட்ட வெளியேற்ற முயற்சிகள் தென்னாற்காடு மாவட்டத்தில் நடந்து கொண்டிருக்கின்றன இப்போது. வேறு சில மாவட்டங்களிலே கூடத் தொடங்கியிருக்கின்றன. இது மிகத் தவறானது.

இங்கே ஒன்றைக் கூற விரும்புகிறேன். பல நிலப் பிரபுக்களே முன் வந்து, அந்த ஊரிலே இருக்கக்கூடிய விவசாயத் தொழிலாளர்கள், ஏழைகளை, அப்படி சாகுபடி செய்வதிலிருந்து வெளியேற்ற வேண்டுமென்று கேட்கிறார்கள். என்ன காரணம் தெரியுமா. இந்தச் சிறிய துண்டு, காணி, நிலத்தை அவர்கள் சாகுபடி செய்தால், அவர்களுக்கென்று வருமானம் வரும். அப்படி வருமானம் வந்தால், அவர்கள் நம் இஷ்டப்படியான கூலிக்கு வேலை செய்ய வரமாட்டார்கள். அந்த நிலங்களிலேயிருந்து அவர்களை வெளியேற்றி விட்டால், தாங்கள் கொடுக்கக்கூடிய கூலிக்கு அவர்களை வேலை செய்ய வைக்கலாம் என்று கருதுகிறார்கள். இந்தச் சுரண்டலின் அடிப்படையில், இந்தச் சிறு விவசாயிகளை, அப்படிப்பட்ட நிலங்களிலிருந்து வெளியேற்ற முயற்சி செய்கிறார்கள். அரசாங்கம் காடு வளர்ப்பது என்ற பெயரால், அப்படிப்பட்ட காரியங்களைச் செய்வதற்கு உடந்தையாக இருக்கக் கூடாது என்று நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நான் குறிப்பிட விரும்புவது, அரசாங்கத்தினுடைய தொழில் கொள்கையிலே ஒரு சறுக்கல். அந்தச் சறுக்கலைப்பற்றி ஏற்கனவே குறிப்பிட்டோம். மின்சாரத் துறையிலே, தனியார்கள் உற்பத்தி செய்வதை ஏன் அனுமதிக்க வேண்டும் ? கேந்திரத் தொழில் மின்சாரம். நீண்டகாலமாக இந்தியாவிலே இருக்கக்கூடிய கண்ணோட்டம் அது. அதிலே தனியாரை ஏன் அனுமதிக்கவேண்டும் ? இன்றைக்குப் பெரிய அளவிலே இருக்கின்ற மின்சாரத்துறையிலே நாம் உற்பத்தி செய்ய முடியாதா ? ஒரு பெரிய சர்க்காரே அதற்கான நிதியைத் திரட்ட முடியாதா ? இந்தச் சர்க்காரே திரட்ட முடியாது என்றால், தனிப்பட்ட முதலாளிகளால் திரட்ட முடியுமா ?

(திரு. என். சங்கரய்யா) [1982 மார்ச் 5

ஆகவே, யோசனை செய்யுங்கள். ஒட்டகத்திற்கு இடம் கொடுத்த கதையாக ஆகிவிடக் கூடாது. கடைசியிலே, மின்சாரத் துறைகூட தனியார் துறையாக ஆக வேண்டாம். தனியாரிடம் இருந்ததைத்தான் பொதுத் துறைக்கு மாற்றியிருக்கிறோம்.

அதேபோல், இன்றைக்கு இன்னொரு வருத்தம் என்னவென்றால், சர்க்கரை ஆலைத்தொழிலில், இனிமேல் தனியாரை அனுமதிப்பது என்ற கொள்கை அரசாங்கம் செய்திருப்பது. சங்கரன்கோயிலில் கூட்டுறவுத் துறையிலே ஒரு சர்க்கரை ஆலை நிறுவ திட்டம் இருந்தது. அதற்காக ஏற்பாடு செய்யப் பட்டது. அதற்காக, ஷேர்கள் வசூல் செய்யப்பட்டன. அப்படி இருக்கும் போது, கூட்டுறவுத் துறையிலே சர்க்கரை ஆலையை வைப்பதற்கு பதிலாக, ஏன் தனியார் முதலாளிகளை இதில் அனுமதிக்க வேண்டும்? இந்த இரண்டு அம்சங்களும், இந்த மாநில அரசாங்கத்தினுடைய கொள்கையிலே ஒரு சருக் கல் ஏற்பட்டிருக்கிறது என்பதைக் காட்டுகிறது. இது நல்லதல்ல, இதைப் பின் வாங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நான் கூற விரும்புவது, இந்த ஊனமுற்றோர்பற்றி. ஊன முற்றோர் என்பதில் வயது என்ன? ஊனமுற்றோர் என்றால், ஊனமுற்றோர் தான். அதிலே வயதிருக்கிறதா? அவர்களெல்லாம், 42 வயதிற்கு மேற்பட்டு, ஆதரவற்றவர்களாக இருக்க வேண்டுமென்றுள்ளது. ஆதரவற்றவர்களாக இருக்க வேண்டுமென்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆதரவு இருக்கக் கூடிய வர்களுக்கு நாம் உதவி செய்ய வேண்டியதில்லை. ஆனால், ஆதரவு இல்லாத எல்லா ஊனமுற்றோர்களுக்கும் உதவி செய்வதுதானே ஒரு அரசாங்கத்தின் கடமை.

அதே போல், இன்றைக்கு இந்த உதவித் தொகை ரூ. 35 லிருந்து, ரூ. 50 ஆக்குங்கள் என்று நான் கூற விரும்புகிறேன். இது மிகவும் குறைவான தொகை. அது மட்டுமல்ல, இன்றைக்குத் தேவையான அளவு கொடுக்க வேண்டும், மாவட்டங்களிலே ஒரு கோட்டா வைத்திருக்கிறார்கள். ஒருவர் செத்தால்தான் இன்னொருவருக்கு அந்த முதியோர் உதவித் தொகை கொடுக் கப்படும் என்று இருக்கிறது. 10 பேர் செத்தால், 10 பேர் புதிதாகச் சேர்க்கப் படும் என்றுள்ளது. அது எப்படிச் சரியாகும்? ஆகவே, அதற்காகத் தேவை யான நிதியை ஒதுக்கினால்தான் அது ஒரு சமுதாயத் தேவையை பூர்த்தி செய்யும் என்று நான் சொல்ல விரும்புகிறேன்.



1982 மார்ச் 5] (திரு. என். சங்கரய்யா)

அடுத்து ஒரு பிரச்னை, நீங்கள், சென்னையிலே விரைவுரெயில் போக்கு வரத்து ஒன்றை மத்திய அரசு விரைவில் செயல்படுத்தும் என்று அரசு நம்புகிறது என்று சொல்லியிருக்கிறீர்கள். நல்லதுதான். பீச் ஸ்டேஷனி லிருந்து, மைலாப்பூர் வரைக்கும் அந்த விரைவு ரெயில் பாதைத் திட்டம் வரும். ஆனால், இப்பொழுது என்ன நிலைமை தெரியுமா? தாம்பரத்தி லிருந்து சென்னை பீச்சுக்கு மின்சார ரெயிலில் வரக்கூடிய இலட்சக்கணக் கான பயணிகள் படக்கூடிய அவதியை இந்த அரசாங்கம் அறிந்திருக்கும் என்று நம்புகிறேன். அவர்கள் அவதியை நீக்க, நிச்சயமாக இன்றிருக்கக் கூடிய மின்சார ரெயில்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும். அதற்காக ரெயில்வே இலாகாவோடு தொடர்புகொள்ள வேண்டும். இது ஒரு பெரிய பிரச்னை, சென்னை மாநகராட்சியினுடைய வளர்ச்சியைப் பாதிக்கக் கூடிய பிரச்னை. இலட்சக்கணக்கானவர்கள் தொங்கிக்கொண்டு வருகிறார்கள், தாய்மார்கள் தொங்கிக்கொண்டு வருகிறார்கள். ஆகவே, நமது அரசாங்க மும், போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும் மத்திய அரசாங்கத் தோடு தொடர்புகொண்டு, இப் பிரச்னையைத் தீர்க்க முயற்சி எடுத்தால், இந்தப் பெரு நகரத்து மக்கள், பெரிதும் மகிழ்ச்சியோடு பாராட்டுவார்கள். அதிலே ஒரு காரணம் சொல்லப்படுகிறது, பல இடங்களிலே கேட்கப்படுகிறது. ஆகவே, இன்னும் அதிகப்படியான ரெயில்களை விட்டால், இந்த கேட்களை மூட வேண்டுமென்று சொல்கிறார்கள். இப்பொழுது, நுங்கம்பாக்கத்திலே கீழ்ப்பாலம் அமைக்கப்பட்டிருப்பதைப் போல, மின்சாரப் பாதை இருக்கக் கூடிய எல்லா கேட்களிலும் மேம்பாலம் அல்லது கீழ்ப்பாலம் அமைத்தால், கூடுதலான மின்சார ரெயில்கள் விடமுடியும், அதன் மூலமாக அதிகமான பயணிகள் செல்லமுடியும். இன்றைக்கிருக்கக்கூடிய நிலைமை மிகவும் அதிருப்தியானது. இது நகரத்தினுடைய வளர்ச்சியைப் பாதிக்கும் என் பதை நான் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

அடுத்து வரிகளுக்கு வருகிறேன். எல்லோரும் குறிப்பிட்டதைப் போல கைத்தறிப் பட்டுக்குப் போடப்பட்டுள்ள வரி மிகவும் தவறானது. அந்த பல முனை விற்பனை வரி உண்மையிலேயே குடிசைத் தொழிலைப் பாதிக்கும்.

(திரு. என். சங்கரய்யா) [1982 மார்ச் 5

இத்தனை நாட்களும் நாம் கைத்தறியைத் தொடாமல் இருந்தோம். இப்
போது அதைத் தொட வேண்டிய நிலைக்கு நாம் வருவது சரியில்லை. அது
ஏற்றுமதியாகக் கூடியது, உள்நாட்டிலே விற்பனை ஆகக்கூடியது. குடிசைத்
தொழிலாக நடைபெறக்கூடியது. அது பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்
களுடைய வேலையைப் பாதிக்கும். ஏற்கனவே கோரா விலை ஏறியது,
பட்டு விலை உயர்ந்து விட்டது. இன்றைக்குப் பெரிய சிக்கலிலே அந்தத்
தொழில் நடந்து கொண்டிருக்கும்போது இந்த ஒரு முனை வரியும் சேர்ந்தால்
லட்சக்கணக்கான பேர்கள் பாதிக்கப்படுவார்கள் என்ற காரணத்தினால்
இதை ரத்து செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். போடப்பட்
டுள்ள வரிகளே தவறு. தமிழ்நாடு சர்க்கார் விற்பனை வரிதான் 600
கோடிக்கும் மேலே போகிறது. ஆகவே விற்பனை வரியை அரசு மேலும்
அதிகரித்தால் மக்களுடைய வாழ்க்கைத் தரம் பாதிக்கப்படும். எனவே
எல்லாப் புதிய வரிகளுமே நீக்கப்படவேண்டும். சிமெண்ட் மேல் வரிபோடு
கிறோம். இப்போது வீடு கட்டுவதற்கு முடியவில்லை.

இன்றைக்கு குழந்தைகளுக்காக 100 கோடி ரூபாயில் திட்டம் போட்டிருக்
கிறீர்கள். ஆனால் அதே நேரத்தில் குழந்தைகள் சாப்பிடுகின்ற பிஸ்கட்,
சாக்லெட்டுக்கும் வரிபோட்டால் என்ன அர்த்தம். இரண்டுக்கும் முரண்பாடு
இருக்கின்றது. டிரேட் மார்க் போட்டால் அதற்கு வரி; டிரேட் மார்க்
போட்டால் போட்டுவிட்டுப் போகிறான். அது யாருக்குப் பயன்படுகிறது
என்பதைப் பார்க்க வேண்டும். எனவே இந்த அரசாங்கம் இந்த வரிகளைக்
கைவிடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மோட்டார் டயர், டியூப்
போன்றவர்களுக்கு வரி போட்டிருக்கிறார்கள். அடுத்தபடி என்ன நடக்கும்.
அதன் காரணமாக பயணிகள் கட்டணத்தை உயர்த்தவேண்டும் என்று சொல்
லுவீர்கள். அரசாங்கத்திலுடைய ஒரு இலாகா வரி போட்டு, இன்னொரு
இலாகாவில் பயணிகள் கட்டணத்தை உயர்த்துவது என்றால் என்ன அர்த்தம்.
ஆகவே இது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து ஓய்வுபெற்ற அலுவலர்களுக்கு 43,500 பேர்களுக்கு, 25 ரூபாய்
உயர்வு கொடுக்கப்பட்டிருக்கிறது. அது மிகவும் குறைவு என்று கூறு
கிறார்கள். அதுமட்டுமல்ல இந்த என்.ஜி.ஓ.-க்களுக்கு எதுவுமே இதிலே
இல்லை. பல லட்சக்கணக்கான அரசு ஊழியர்களுக்கு ஒன்றுமே இல்லை
நான் கேள்விப் படுகிறேன் இன்னும் 4 தவணைகள் பஞ்சப்படி அவர்களுக்
குப் பாக்கி உள்ளதாகக் கேள்விப் படுகிறேன். அவர்கள் எப்படி இதைத்
தாங்குவார்கள். நிதி அமைச்சர் அவர்கள் அறிக்கையிலே குறிப்பிட்டிருக்



1982 மார்ச் 5] (திரு. என். சங்கரய்யா)

கிறார்கள். காலம் வரும் பொறுத்து இருங்கள் என்று. எப்போது கால
வருவது, எப்போது அவர்கள் வாழ்வது? இருக்கிற காலத்திலேயே அ
களுக்கும் சேர்த்து அவர்களுடைய பிரச்சினைக்கும் ஓரளவு பரிகாரம் கான்
பதற்கான ஒரு ஏற்பாட்டை இந்த அரசு கண்டிப்பாகச் செய்யவேண்டும் என்
கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து வருமானக் கணக்கில் செலவினம் என்ற பெரும் தலைப்பில்
வட்டி கொடுத்தால் என்பதற்கு நீங்கள் ஆட்சிக்கு வந்தபோது 1977-7
கணக்கிலே ஒதுக்கிய தொகை 53,38,77,000 ஆகும். ஆனால் இன்றைக்கு
1982-83 மதிப்பீட்டிலே நீங்கள் வட்டி கொடுப்பதற்கு 100,99,75,000 ஒதுக்கி
இருக்கிறீர்கள். இவ்வளவு பெரிய தொகை வட்டிக்காகக் கொடுப்பது ஏன்
ஏற்பட்டது? உலக வங்கியிடம் இருந்து வாங்கிய கடனுக்காக கொடுக்கக்
கூடிய வட்டியா என்பது புரியவில்லை. அதே நேரத்தில் உங்களுக்கு அர
சாங்கத்திற்கு வட்டியாக வந்தது அவ்வளவு உயரவில்லை. காரணம் 1977-78
ஆம் ஆண்டிலே 28,82,66,000 வட்டியாக வரவு வந்தது. இப்போது 40,11,96,000
ஆகவே 28 கோடியில் இருந்து 40 கோடியாகத்தான் வட்டியிலே வருகின்றது.
ஆனால் வட்டி மூலமாக அரசாங்கம் செலவழிப்பது இந்த பட்ஜட்டிலே 100
கோடி ரூபாய். ஏன் இந்த வட்டி இவ்வளவு அதிகமாக இருக்கிறது என்று
மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன்.

கடைசியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். குமரி மாவட்டத்தைப்
பற்றிக் குறிப்பிட்டேன். இப்போது சேலம் மாவட்டம் மேட்டூரிலே பிராமணர்
எதிர்ப்பு மாநாடு என்று ஒன்று நடந்தது. அதிலே பல பேர்கள் பிராமணர்கள்
தாக்கப்பட்டு இருக்கிறார்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக
மீண்டும் எடுத்துக் கூற விரும்புகிறேன். தமிழ்நாட்டிலே ஜாதிச் சங்கங்கள்
இருப்பதே போதாதா? அவரவர்கள் ஜாதியைப் பாதுகாப்பதற்குச் சங்கங்கள்
இருக்கின்றன. ஆனால் பிராமணர் ஜாதியை எதிர்ப்பதற்காக என்று ஒரு
மாநாடு நடத்துவது எப்படி அனுமதிக்க முடியும்? அப்படி ஒவ்வொருவரும்
மற்ற ஜாதியினரை எதிர்த்து மாநாடு நடத்தினால் அது எங்கே போய்
முடியும்? இந்த தமிழ்நாடு அரசாங்கத்திற்கு முன்னாலே ஒரு ஜாதியை
எதிர்த்து ஒரு மாநாட்டை நடத்த அனுமதித்தால் அப்படி மற்றவர்களும் மற்ற
ஜாதியினரை எதிர்ப்பதற்கு மாநாடு நடத்தினால் தமிழ்நாட்டினுடைய சமூக
நிலை என்ன ஆகும்? இனக்கலவரங்கள் ஏற்பட்டால் என்னவாகும்? நாம்

(திரு. என். சங்கரய்யா) [1982 மார்ச் 5

ஜாதிகளுக்கும், மதங்களுக்கும் பொதுவான அரசு என்று சொல்லுகிறோம். எனவே இந்த வகுப்பு வெறிகள், மத வெறிகள் மீண்டும் தலை தூக்கவிடாமல் செய்வதில் இந்த அரசாங்கத்திற்குப் பங்கு உண்டு. இப்படிப்பட்ட நிலையை ஏற்படுத்துவதற்கு நம்முடைய அரசாங்கம் அனுமதிக்கக்கூடாது என்பதைக் கூறிக்கொள்கிறேன். நாம் மதசார்பற்ற அரசு என்று சொல்வதால், இந்த அறநிலையத் துறை அதிகாரிகள், இந்து மத மாநாட்டில் கலந்து கொள்ளக் கூடாது. இந்த அறநிலையத் துறை அதிகாரிகளே இந்துக்கள் நடத்தும் மாநாட்டில், ஆர்.எஸ்.எஸ். நடத்தும் மாநாட்டில் கலந்து கொண்டால், வக்ப் போர்டில் இருக்கின்ற அதிகாரிகள் பின்னர் முஸ்லீம்கள் நடத்தும் மாநாட்டில் வக் போர்ட் அதிகாரிகள் கலந்து கொள்ளும் சூழ்நிலை ஏற்படலாம். ஆகவே, இப்படிப்பட்ட மதப் பிரசாரங்களில் அதிகாரிகள் கலந்து கொள்ளக் கூடாது. இப்படி அவர்கள் கலந்து கொள்கிற நிலைமை ஏற்பட்டால் அது பெரிய குழப்பங்களை ஏற்படுத்தக் கூடும் என்பதைக் கூறி, தமிழ் நாடு அரசாங்கம் அதைத் தவிர்க்க வேண்டும் என்று கூறி, என்னுடைய உரையை முடிக்கிறேன்.

(நண்பகல் 12-00)

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, ஒரு சின்ன விளக்கம் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கருத்துக்குக் கருத்து விவாதம் வைத்துக்கொள்வது சரியல்ல. அப்படி விவாதங்கள் நடத்த வேண்டும் என்று விரும்பினால் அதைத் தனியே பேசிக்கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா அவர்கள் பேசுகின்ற நேரத்தில் விற்பனை வரி பற்றி சிலவற்றைச்சொல்லி இருக்கிறார்கள். அப்போது நான் அவையில் இல்லாவிட்டாலும், அது குறித்து ஒரு விளக்கத்தைச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். இருமுறை விற்பனை வரி பற்றி முதலமைச்சர்கள் மாநாடு டெல்லியில் நடைபெற்றது. இருமுறையும் முதலமைச்சர் சார்பில், சம்பந்தப்பட்ட அமைச்சர் என்ற முறையில் நான் கலந்து கொண்டு இருக்கிறேன். அதிலே பேசுகின்ற நேரத்தில் நம்முடைய அரசின் கொள்கையை மிக விளக்கமாகச் சொல்லி இருக்கிறேன். முதலில் 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16-ல் நடைபெற்ற மாநாட்டில் கலந்து கொண்டு எங்களுடைய எண்ணங்களை, இந்த அரசின் எண்ணங்களைச் சொன்னேன். அதில்



1982 மார்ச் 5] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

இருந்து இரண்டு வரிகளை மட்டும் சொல்கிறேன். அதுவே இந்த அரசின் எண்ணங்களைத் தெளிவாக்கும் என்று கருதுகிறேன் :—

"If any further in roads are made, the State would be reduced to the status of the local bodies or to the administrative unit of the Government of India."

இந்த மாதிரியெல்லாம் செய்துவிட்டால், மாநில சர்க்கார், மாநில சர்க்கார் என்ற அந்தஸ்தை இழந்து சாதாரணமாக ஒரு மதிப்புள்ள ஒரு முனிசிபாலிடி லெவலுக்கு வந்து விடும் என்பதை எவ்வளவு கடுமையாகச் சொல்லியிருக்கிறோம் என்பதை இங்கே சொல்லிக்கொள்கிறேன். அதற்குப் பிறகு நடைபெற்ற மாநாடு 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி 15 ஆம் தேதி. அதில் நான் கீழ்க் கண்டவாறு சொல்லியிருக்கிறேன் :—

"In conclusion, I would request the Government of India to drop the proposal to extend the scheme of additional excise duty to any further return and also extending of the list of declared goods."

திரு. என். சங்கரய்யா : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. அப்படியானால் இந்த அரசாங்கம் தன்னுடைய நிலையைத் தெளிவுபடுத்தவேண்டும். 3 மாநிலங்கள் தான் அந்தத் தீர்மானத்தை எதிர்த்தார்கள் என்று அங்கே ரிக்கார்ட் ஆகியிருக்கிறது. அதைத்தான் நான் இங்கே சொன்னேன். ஆகவே, அந்தத் தீர்மானத்தை தமிழக அரசின் சார்பிலும் ஆதரிக்கவில்லை என்பதைப் பதிவு செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, 1982-83 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையை புரட்சித் தலைவர் அவர்களின் சார்பாக மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் சமர்ப்பித்துள்ளதற்கு என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்து, அதை வரவேற்றுப் பேச விழைகிறேன். இன்றைக்கு இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டுள்ள அத்தனை அம்சங்களிலும் மிகத்தலை சிறந்த அம்சமாக விளங்குவது ரூ. 100 கோடி செலவில் இலவசமாக மதிய உணவு குழந்தைகளுக்கு, தமிழகத்திலே வறுமைக்கோட்டிற்குக் கீழே வாடுகின்ற அந்தக் குழந்தைகளுக்கு உணவு அளிக்கும் திட்டமாகும். ஆனால் இந்தத் திட்டத்தைப்பற்றி மாற்றுக் கட்சி நண்பர்கள், மாமன்ற உறுப்பினர்கள் பேசுகின்ற நேரத்தில் இது நடக்குமா, இந்தத் திட்டத்தை அமல்படுத்த முடியுமா, இதைச் செயல்படுத்த முடியுமா

என்று கேள்விக் கணைகளையெல்லாம் இங்கே வைத்து இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் மிகச் சிறந்த விளையாட்டு வீரர் மட்டுமல்ல, மிகச் சிறந்த நேர்த்தியான நீச்சல் வீரர். நீச்சல் தெரிந்த அவர் நிச்சயமாக கடலையும் கடந்து விடுவார், கங்கையின் குறுக்கேயும் நீந்தி கரையை அடைவார். அந்த வகையில் இந்த ஆட்சியின் திட்டத்தைப் போடத் தெரிந்தவர், இந்தத் திட்டத்தை அமல்படுத்துவதிலும் தன்னைவிட நிகர் வேறு ஒருவரும் இருக்க மாட்டார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக இந்தத் திட்டத்தை நேர்த்தியாகச் செயல்படுத்துவார் என்பதை உங்களுக்கு உணர்த்த விரும்புகிறேன். நீந்தத் தெரியாதவர்கள், திட்டத்தை இத்தனை ஆண்டுகாலமாகப் போடாதவர்கள் பல்வேறு கட்சிகள் அரசாங்கத்திலே வந்து இருந்தும்கூட இப்படிப்பட்ட நல்லதொரு திட்டத்தை கொண்டு வர முடியாதவர்கள், எப்படி நீந்தத் தெரியாதவர்கள் நீச்சலுக்கு அச்சப்பட்டு ஒரு சிறிய டம்ளரில் தண்ணீரைப் பார்த்தால்கூட அதைப்பார்த்து பயப்படுவார்களோ அதைப்போ[illegible] பயப்படத்தான் செய்வார்கள். அந்த நிலைதான் அவர்களுக்கு இருக்கிறது என்று சொல்லி, இந்த மாபெரும் திட்டத்தை வரவேற்கிறேன்.

அதே நேரத்தில் புரட்சித் தலைவர் அவர்கள் இன்றைக்கு மிக நேர்த்தியான, உன்னதமான சலுகைகளை, பல்வேறு திட்டங்களை அறிவித்து இருந்த போதிலும் மாண்புமிகு உறுப்பினர், கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. சங்கரய்யா அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். என்.ஜி.ஓ.-க்களுக்கு அதிகமான சலுகை அளிக்கப்படவில்லை என்று சொன்னார்கள். சங்கம் வைத்திருப்பவர்கள், உரிமைகளைக் கேட்டுப்பெற உரிமை படைத்தவர்கள், அதிகார வர்க்கத்தில் இருப்பவர்கள் தங்கள் குறைகளை எடுத்துச் சொல்லி, சங்கங்கள் மூலம் தங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்கிறார்கள். ஆனால் வாழ வழியின்றி, வக்கின்றி, வறுமைக்கோட்டிற்கு கீழே இருக்கிற முதியோர்களுக்கு, ஊனமுற்றவர்களுக்கு அவர்கள் கேட்காமலேயே அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அவர்களுக்கு அளித்துவந்த உதவித் தொகையை 25 ரூபாயிலிருந்து 35 ரூபாயாக உயர்த்திக் கொடுத்தது புரட்சித் தலைவரின் தாராள மனதைக் காட்டுகிறது என்று கூறி, பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல விவசாயத்தைப் பொறுத்தவரையில் கிராம கிடங்குகளை ஏற்படுத்தி, நியாயவிலைக் கடைகளை ஏற்படுத்தி, அவர்களுடைய விளை பொருட்களை விற்பனை செய்ய உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தை அமைத்திருப்பது விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அடிகோலாக அமையும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.



நீர்ப்பாசனத்தைப் பொறுத்தவரையில் இன்றைக்கு 22.5 கோடி ரூபாயி
பல்வேறு திட்டங்களை இந்த ஆட்சி நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. வி
சாயப் பெருங்குடி மக்களின் பொருளாதாரத்தை அதிகப்படுத்தவும் நாளை
தமிழகத்திலே விவசாய வளர்ச்சிக்கு அடிகோலாகவும் அமையும் திட்டங்களா
அவை அமைந்திருக்கின்றன என்று குறிப்பிட விரும்புகிறேன்.

காட்டு வளத்தைப் பொறுத்தவரையில், இன்றைக்கு சுவீடன் நாட்டிலிருந்
நமக்கு தரப்பட்ட உதவியோடு 'சுபாபுல்' போன்ற பயன்மிக்க மரங்களை
வளர்த்து, காட்டு வளத்தைப் பெருக்க திட்டமிட்டிருக்கிறார்கள். வடபுல
திலே ஆண்டுகொண்டிருந்த அசோக சக்கரவர்த்தி அவர்கள் சாலை ஓரங்கள்
லும் வீணாகக் கிடந்த காட்டுப்பகுதிகளிலும் மரங்களை வளர்த்து இயற்கை
வளத்தை எப்படி பெருக்கினார்களோ அப்படி புரட்சித் தலைவர் அவர்கள்
இன்றைக்கு தமிழ்நாட்டிலே காட்டு வளத்திலே அதிக அக்கரை காட்டி, அ
[illegible]இயற்கை வளத்தைப் பெருக்குகிற நடவடிக்கைகளை மேற்கொண்டிரு
கிறார்கள். இதைப் பார்க்கிறபோது, இங்கே என்னுடைய ஒரு கருத்தை வேண்டு
கோளாக வைக்க விரும்புகிறேன். மாண்புமிகு மாமன்ற உறுப்பினர்களும்
மாண்புமிகு அமைச்சர்களும் தாங்கள் கலந்துகொள்கின்ற விழாக்களிலே ஒவ்
வொரு ஆண்டும் குறைந்தது ஒவ்வொரு ஊரிலும் ஆயிரம் மரங்களையாவது
நட்டு, வளர்க்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதை என்னுடைய வேண்டு
கோளாக அவைமுன் வைக்கிறேன்.

அதே நேரத்தில், இங்கே தமிழக அரசைப் பொறுத்தவரையில் பல்லாண்டு
காலமாக தொழில் துறையில் வளர்ச்சி பெறவில்லை என்று காங்கிரஸ் பேரியக்க
அருமை சட்டமன்ற உறுப்பினர் திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் குறிப்
பிட்டார்கள். இந்த மாநில சர்க்கார் கொடுத்திருக்கிற நிதிநிலை அறிக்கை
யிலே, கொண்டு வந்திருக்கிற பட்ஜெட்டிலே எதிர்கால தொலைநோக்கு
இல்லை; வளர்ச்சிக்குத் திட்டங்கள் இல்லை என்ற ஒரு பெரிய குற்றச்
சாட்டை திரு. சித்தன் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் சொல்லி,
அதன் காரணமாக எனக்கு விரிவாக விளக்கம் அளிக்க ஒரு வாய்ப்பை அளித்த
தற்காக நான் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்; நன்றி தெரிவிக்க
கடமைப்பட்டிருக்கிறேன்.

காரணம் என்னவென்றால், நேற்றைக்கு முன்தினம் அல்லது இரண்டு நாட்
களுக்கு முன்னால் என்று கருதுகிறேன். மத்திய அரசு ஒரு மிகப் பெரிய
அநீதியை தமிழகத்திற்கு இழைத்திருக்கிறது. தமிழகத்திற்கு மட்டுமல்ல.
விந்திய மலைக்குத் தெற்கே இருக்கிற தென்புல மாநிலங்களுக்கு, திராவிடப்

பேரியக்கம் வளர்ந்த தென்புல மாநிலங்களுக்கு இன்றைக்கு அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது. தென்புலம் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. வடபுலத்திலே இருக்கிற 88 மாவட்டங்களை இன்றைக்கு பிற்பட்ட மாவட்டங்கள், தொழில் துறையில் பிற்பட்ட மாவட்டங்கள் என்று அறிவித்திருக்கிறார்கள். அந்த அறிவிப்பிலே ஆந்திரமும், பாண்டிச்சேரி உட்பட தமிழ்நாடும் இதர தென்புல மாநிலங்களும் இடம்பெறவில்லை; புறக்கணித்திருக்கிறார்கள். இதை தட்டிக் கேட்க யாரும் இல்லை. தேசிய பேரியக்கம், தேசிய ஒருமைப்பாடு வேண்டுமென்று நாம் சொல்லுகிறோம். ஆனால் என்னைப் போன்ற இளைஞர்களுக்கு இருக்கிற குறை—ஒருமைப்பாட்டைப்பற்றி பேசியே தமிழகம் தொழில் துறையில் பின்தங்கிவிடுமோ; தமிழகம் புறக்கணிக்கப்பட்டுவிடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது. ஒருமைப்பாட்டை விட்டுவிட நாங்கள் தயாராக இல்லை. ஆனால் தொழில் துறையில் வளர்ந்த தமிழகம், தொழில் துறையில் மேலும் வளம்பெற வேண்டும் என்ற வகையிலே பல்வேறு திட்டங்களை ஆணித்தரமாக அடித்துக்கேட்டு, கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டாமா என்று எண்ணுகிற போதுதான் இந்த மாமன்றத்திலே மாண்புமிகு உறுப்பினர்களுக்கு சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதுமட்டுமல்ல. சொல்லப்போனால் ஆயிரக் கணக்கான கோடி ரூபாய்களை . . .

**திரு. நா. சுந்தரராஜ்** : தலைவரவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

(பிற்பகல் 12-10)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரராஜன் அவர்கள் பேசுகின்றபோது பதில் சொல்லிக்கொள்ளலாம் . . (குறுக்கீடு) . . . ஒருமைப்பாட்டினை நான் ஏற்றுக்கொள்கிறேன் என்ற ஒரு வார்த்தையினைச் சொல்லிவிட்டதற்குப் பிறகுதான் கருத்துக்களைச் சொல்லிக் கொண்டு வருகிறார். அப்படி ஒருமைப்பாட்டினை ஏற்றுக்கொண்டு தங்களுக்கு வேண்டியவற்றைக் கேட்பது எல்லா மாநிலங்களுக்கும் உள்ள உரிமைதான்.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம்** : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் என்னுடைய பேச்சிலே குறுக்கிட்டதன் காரணமாக நான்கு நிமிடங்கள் கடந்துவிட்டன. எனவே எனக்கு அதிகமாக நேரம் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வட புலத்திலே உள்ள 88 மாவட்டங்களைத் தொழிற் துறையிலே பிற்படுத்தப்பட்ட மாவட்டங்களாக அறிவித்திருப்பதைப்பற்றி பத்திரிகையிலே பார்க்கின்றபோது கிராமப்புறத்திலே இருக்கின்ற மக்கள் வேண்டுமானால் அதை



சாதாரணமாக எடுத்துக்கொள்ளலாம். ஆனால் படித்தவர்களும், அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் இதுபற்றி உணர வேண்டிய நிலையிலேயே இருக்கிறார்கள். அந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையிலே ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. கொஞ்சநஞ்சமல்ல. இந்தியத் துணைக் கண்டத்தின் நிதிநிலை அறிக்கையிலே 25 சதவீதம் இதற்காகச் செலவழிக்கப்படுகின்றது. ஆனால் அதிலேயிருந்து சல்லிக்காசுகூட தமிழகத்திற்கு இல்லை. விந்தியமலைக்குப் பின்னாலே இருக்கின்ற தென்புலம் புறக்கணிக்கப்படுகின்ற இந்தச் சூழ்நிலையிலே எல்லா கட்சியினரும் ஏகோபித்து குரல் கொடுத்தாகவேண்டும். ஏதோ இந்திய தேசிய இயக்கத்திலே சேர்ந்திருப்பவர்களானாலும்கூட தமிழக மக்களுடைய வாக்குகளைப் பெற்றுத்தான் அவர்கள் சட்ட மன்றத்திலே அமர்ந்திருக்கிறார்கள். ஆகவே அவர்கள் தமிழக மக்களுக்காகப் பணியாற்றுவது என்பது உண்மையாக இருக்குமேயானால், தமிழகத்தின் வளர்ச்சியினை எதிர்பார்ப்பது உண்மையானால் தேசிய இயக்கத்திலே இருப்பவர்களும் எங்களோடு சேர்ந்து குரல் கொடுக்க வேண்டும். இதற்கான தீர்மானத்தை அவர்களே இந்த மாமன்றத்திலே கொண்டு வர வேண்டும். அந்த வகையிலே நான் சொல்லி வருகின்ற அத்தனை பிரச்சினைகளைப் பற்றியும் தீர்வு காண்பதற்கான வகையிலே இந்த மாமன்றம் பல தீர்மானங்களை இயற்றி வலியுறுத்த வேண்டும்.

இந்தியப் பேரரசு வட புலத்திலே இருக்கின்ற 88 மாவட்டங்களைத் தொழில் துறையிலே பின்தங்கிய மாவட்டங்களாக அறிவித்துவிட்டு தமிழகம் முழுவதையும் புறக்கணித்திருப்பது மிகவும் வருந்தத்தக்கது. இது கண்டிக்கத் தக்கது. ஆகவே உடனடியாக தமிழகத்திலே உள்ள குறைந்தது 10 மாவட்டங்களையாவது தொழில் துறையிலே பின்தங்கிய மாவட்டங்களாக அறிவித்தாக வேண்டும் என்ற தீர்மானத்தினை காங்கிரஸ் கட்சி முன்மொழிந்தாக வேண்டும்.

அடுத்து தமிழகத்திலே தற்போது கண்டுபிடிக்கப்பட்டு எடுக்கப்படுகின்ற கச்சா எண்ணெயினை சுத்திகரிக்கும் ஆலையினை தமிழகத்திலே குறிப்பாக தஞ்சை, திருச்சி மாவட்டங்களிலே உள்ள பகுதியிலே ஆரம்பிக்க வேண்டும் என்ற வேண்டுகோளை விடுத்து, அதை ஒரு தீர்மானமாக இந்த மாமன்றம் நிறைவேற்ற வேண்டும். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஏற்கெனவே வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். அது நிறைவேறுகின்ற வகையிலே இந்த மாமன்றத்திலே இருக்கின்ற அத்தனைபேரும் ஆதரவு தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஒகனேக்கல் மின் திட்டத்தைப் பொறுத்தவரையிலே இருக்கின்ற சிக்கல்களை எல்லாம் போக்கி இந்தத் திட்டத்தினை விரைவிலே இரண்டாண்டு களுக்குள் செயல்படுத்துகின்ற வகையிலே அதற்கான வழிவகைகளைச் செய் வதற்கு மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய அரசிற்கு வேண்டுகோள் விடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று நில உடைமைச் சட்டத்திற்கு மத்திய அரசு அனுமதி அளிப் பதன் மூலம் உடனடியாக அதனை அமலுக்குக் கொண்டுவருவதற்குரிய வழி வகைகளைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இந்தியப் பேரரசினுடைய நிதிநிலை அறிக்கையிலே தமிழகத்தைப் புறக்கணிக்கின்ற வகையிலே வாழ்ந்த தமிழகத்தை தாழ்ந்த தமிழகமாக ஆக்கு கின்ற சூழ்நிலையினை நீக்கிவிட்டு வாழ்ந்த தமிழகம் மேலும் வாழ்வதற்குரிய வகையிலே நிதிநிலை அறிக்கையிலே தமிழகத்திற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசு நமக்கு நியாய மாக அளிக்க வேண்டிய சலுகைகளை அளிக்காமல் மறுக்கின்றபோது அதைத் தட்டிக் கேட்கவேண்டிய நியாயமான உணர்வு உடையவர்கள் தட்டிக்கேட்பதை விட்டுவிட்டு ஏதோ அரசியல் விளம்பரத்திற்காக பயணம் போனால் தமிழக மக்கள் உங்களை அரசியலிலே இருந்து பெரும் பயணம் அனுப்பிவிடுவார்கள் என்று சுட்டிக்காட்டி, எனக்கு பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர், நம் முடைய அவையிலே 18 அமைச்சர்கள் இருக்கிறார்கள். அவை நடக்கும் காலக் கட்டத்திலே அமைச்சர்களின் இருக்கைகள் காலியாகிக் கொண்டே வருகின்றன. இங்கே இப்போது இந்த அவை நடந்துக்கொண்டிருக்கிறது. நான்கு அமைச் சர்கள்தான் இருக்கிறார்கள். மற்ற அமைச்சர்கள் எல்லாம் எங்கே என்று தெரியவில்லை. அமைச்சர்கள் வந்து முழுமையாகக் கலந்துக் கொண்டால் தான் பதிலளிக்க வசதியாக இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா அவர்கள் பேசும்போதுகூட ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் இருந்திருந்தால் பதில் அளித்திருக்க முடியும். அமைச்சர்கள் இந்த அவையை நிராகரிக்கிறார்களா ? என்ன விஷயம் என்று உங்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்ததற்கு நன்றி. அமைச்சர்கள் இங்கேயும் மேலவையிலுமாக மாறி மாறி வருகை தருகிறார்கள். இங்கேயும் தற்போது நான்கு அமைச்சர்கள் இருக் கிறார்கள். தேவை ஏற்பட்டால் அவர்கள் விடையளிப்பார்கள்.

திரு. ப. தனபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1982-83 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது, அதனை வரவேற்று என் னுடைய கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பளித்தமைக்காக முதலிலே என் னுடைய நன்றியைத் தெரிவித்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மாமன்றத்திலே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களுடைய சார்பாக வைத்திருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையினை நான் மனதாரப் பாராட்டுகிறேன். இந்த நிதிநிலை அறிக்கை யிலே, இந்தியத் துணைக் கண்டத்திலே இன்றைக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய சூழ் நிலை குறித்து, மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் மிகத் தெளிவாகவே குறிப்பிட்டிருக்கிறார்கள். "பணவீக்கம், இன்றியமையாப் பண்டங்களின் பற்றாக்குறை, விலைவாசி ஏற்றம், வேலையில்லாத் திண்டாட்டம், ஏழ்மை நிலை, எரி பொருள்கள், விவசாய இடு பொருள்கள் ஆகியவற்றின் விலை உயர்வு, இரயில்வே கட்டண உயர்வு" ஆகியவை எல்லாம் இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்தினை எப்படியெல்லாம் வாட்டி வதைக்கின்றன என்பதை மிகத் தெளிவாகவே குறிப்பிட்டுவிட்டு, அப்படி இந்தியத் துணைக் கண்டத் தினை பாதித்திருக்கக் கூடிய அத்தனை பிரச்னைகளும் தமிழகத்தையும் பாதித்திருக்கின்றன என்று தெள்ளத் தெளிவாகவே நம்முடைய அரசின் நிலையை ஆணித்தரமாக எடுத்து வைத்திருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட பாதிப்புகளுக்கு இடையிலே, தமிழகத்தைச் சுற்றி பல்வேறு பிரச்னைகள் வாட்டுகிற நிலைமையிலே, குறைந்த நிதி ஆதாரங்களை வைத்துக்கொண்டு, நம்முடைய தமிழக அரசானது, புரட்சித் தலைவர் அவர் களின் தலைமையில், டாக்டர் நாவலர் அவர்களின் துணை கொண்டு, அண்ணா வின் வழியிலே, நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களுடைய லட்சியங்களை நிறைவேற்றுகிற வகையிலே, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் வாக்குறுதிகளை படிப்படியாக நிறைவேற்றுகிற வகை யிலே, மக்களுக்கு நல்ல பயன் தரக்கூடிய வகையிலே, இன்றைக்கு இந்த நிதி நிலை அறிக்கையினை தாக்கல் செய்திருக்கிறது. பல்வேறு கருத்துக்களை மனத்திலே வைத்து, வசதியற்ற மக்களுடைய வாழ்க்கையை பாதுகாக்கிற முறையிலே, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுகின்ற நிலைமை

ப்யும் கருத்தில் வைத்து இந்த நிதிநிலை அறிக்கையினை நம்முடைய நாவலர்
யவர்கள் கொண்டு வந்திருப்பதை பார்த்து அதை நாம் அனைவருமே மனதார
ரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன் . . .
குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, பாயின்ட்
ஆஃப் ஆர்டர். எதிர்க்கட்சி வரிசையிலே யாருமே இல்லையே. ஒண்ணே
ண்ணு கண்ணே கண்ணு என்று அருமை நண்பர் மாண்புமிகு நெடுமாறன்
யவர்கள் மட்டும்தான் இருக்கிறார்கள். இதற்கு தங்களுடைய தீர்ப்பு என்ன ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பின் வரிசையிலே இரண்டு அணைத்
லைவர்கள் இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் தனபால் அவர்கள்
தாடர்ந்து பேசட்டும்.

**திரு. ப. தனபால் :** தலைவர் அவர்களே, எனக்கு முன்னாலே பேசிய
ண்பர்கள் பலர் இங்கே தெளிவாக எடுத்துச் சொன்னதைப்போல குறைந்த
ளவு நிதி ஆதாரங்களை மட்டுமே நம்முடைய அரசு வைத்துக்கொண்டு, இது
பான்ற பல திட்டங்களை இன்றைக்கு நாட்டு மக்களுக்காக நிறைவேற்ற முன்
ந்திருக்கிறது என்கிறபோது மத்திய அரசின் நிதி ஆதாரங்களையும் வாய்ப்பு
சதிகளையும் பார்த்தால், பன்மடங்கு அது பெரிதாகயிருக்கிறது. அப்படி
அதிக அளவில் இருக்கக்கூடிய அதிகாரங்களை அவர்கள் பரவலாக மாநிலங்
ளுக்கு பிரித்துக் கொடுப்பார்களேயானால், மக்களுக்குத் தேவையான
பல்வேறு நன்மைகளையெல்லாம் மாநில அரசுகள் செய்துக் கொடுக்க முடியும்.
அப்போதுதான் அதற்குத் தேவையான அதிகாரமும் வாய்ப்பும் வசதியும் அவர்
ளுக்கு இருக்க முடியும் என்பதையும் இந்த நேரத்தில் வலியுறுத்திக் கூறக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12-20)

அதுமட்டுமல்ல. மாநில அரசுகள்தான் மாநில மக்களின் அன்றாடப்
பிரச்னைகளை, அவர்களின் தேவைகளை, அவர்களின் அன்றாடத் தேவைகளை
அறியத்தக்க விதத்தில் தொடர்பு வைத்துக்கொண்டுள்ளது. ஆகவே மத்திய
அரசு தன்னிடத்திலுள்ள நிதி ஆதாரங்களை அதிகப்படியான அளவிற்கு
மாநில அரசுகளுக்கு வழங்குவதன் மூலமாகத்தான் மாநில அரசுகள் மக்களுக்கு
பல்வேறு நல்ல காரியங்களைச் செய்வதற்கு வாய்ப்பு வசதி ஏற்படும். ஆகவே
மாநில அரசுகளுக்கு அதிகப்படியான நிதி ஆதாரங்களைக் கொடுப்பதற்கான
சட்டத் திருத்தங்களை மத்திய அரசு கொண்டு வர வேண்டும். இப்படி அதிகப்



படியான அதிகாரங்களை மத்திய அரசு மாநில அரசுகளுக்கு கொடுக்க
வேண்டும் என்று சொல்லும்போது மத்திய அரசை பலகீனப்படுத்துவதாக
யாரும் தயவுசெய்து எண்ணக் கூடாது. மாறாக மாநில அரசுகள் அதிகமாக
பணியாற்றக்கூடிய வாய்ப்பு வசதிகள் செய்து தருவதால் சமுதாயத்தில் வாழ
வழியின்றி தவிக்கிற மக்களுக்கு நல்ல வாழ்வளிக்க, அவர்களை வாழ வைக்கும்
வகையில்தான் அது அமையும். எனவே மாநில அரசுகளுக்கு அதிகப்படியான
நிதி ஆதாரங்களை மத்திய அரசு தருகிற நல்ல முயற்சியில் அத்தனை பேர்களும்
துணை நிற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த நிதிநிலை அறிக்கைமீது பேசுகிறபோது சில எதிர்க்
கட்சி உறுப்பினர்கள் சொன்னார்கள். இந்த நிதிநிலை அறிக்கையில் பக்கங்கள்
தான் அதிகமாக இருக்கிறதே தவிர திட்டங்கள் இல்லை என்று சொன்னார்கள்.
நான் அவர்களுக்கு பணிவன்போடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்
கிறேன். 1977-78-ம் ஆண்டில், புரட்சித் தலைவர் அவர்கள் அரசு அமைந்த
தற்குப் பின்னால் அமைக்கப்பட்ட முதல் நிதிநிலை அறிக்கையில் ரூபாய் 982.14
கோடிக்கு திட்டம் போடப்பட்டது. அதற்குப் பின்னர் 1,142.60 கோடிக்கு
திட்டம் கொண்டுவரப்பட்டது. 1981-82-ல் திருத்திய மதிப்பீட்டின்படி 1,883.27
கோடிக்கு திட்டம் கொண்டுவரப்பட்டது. இந்த ஆண்டு 2,081.92 கோடிக்கான
நிதிநிலை அறிக்கையை புரட்சித் தலைவர் அவர்கள் அரசு வைத்திருக்கிறது
என்பதைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படி ஒதுக்கி படிப்படியாக,
அதிகப்படியாக ஒதுக்கி இந்த மாநில மக்களைப் பாதுகாக்கும் வகையில்
கோடிக்கான ரூபாய் அளவிலான திட்டங்களைத் தீட்டியுள்ளது நம் அரசு
என்பதைச் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே திட்டங்கள்
அதிகமாக அதிகமாக பக்கங்களும் அதிகமாகிக்கொண்டு வருகின்றன என்ப
தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல. நிதிநிலை அறிக்கைமீது பேசும்போது சொன்னார்கள்,
இந்த நிதிநிலை அறிக்கையில் வேலைவாய்ப்புக்கான திட்டங்கள் உருவாக்கப்
படவில்லை என்று. தொழில் வளர்ச்சிக்கான திட்டங்கள் இல்லை என்று
சிலர் சொல்லியிருக்கிறார்கள். அந்த எதிர்க் கட்சி நண்பர்களுக்கெல்லாம் நான்
தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் கிராமப்
புறங்களில் பசுமைப்புரட்சி ஏற்படும் வகையில் கிராம வளர்ச்சி ஒருங்கிணைப்புத்
திட்டத்திற்காக ரூபாய் 22.56 கோடி ஒதுக்கியிருப்பது திட்டமாக உங்கள் கண்
களுக்குப் படவில்லையா ? பால் பெருக்கத் திட்டத்தின்கீழ் குளிரூட்டு நிலை

(திரு. ப. தனபால்) [1982 மார்ச் 5

ஐயும் கருத்தில் வைத்து இந்த நிதிநிலை அறிக்கையினை நம்முடைய நாவலர்
அவர்கள் கொண்டு வந்திருப்பதை பார்த்து அதை நாம் அனைவருமே மனதார
வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன் . . .
(குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, பாயின்ட்
ஆஃப் ஆர்டர். எதிர்க்கட்சி வரிசையிலே யாருமே இல்லையே. ஒண்ணே
ஒண்ணு கண்ணே கண்ணு என்று அருமை நண்பர் மாண்புமிகு நெடுமாறன்
அவர்கள் மட்டும்தான் இருக்கிறார்கள். இதற்கு தங்களுடைய தீர்ப்பு என்ன ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பின் வரிசையிலே இரண்டு துணைத்
தலைவர்கள் இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் தனபால் அவர்கள்
தொடர்ந்து பேசட்டும்.

**திரு. ப. தனபால் :** தலைவர் அவர்களே, எனக்கு முன்னாலே பேசிய
நண்பர்கள் பலர் இங்கே தெளிவாக எடுத்துச் சொன்னதைப்போல குறைந்த
அளவு நிதி ஆதாரங்களை மட்டுமே நம்முடைய அரசு வைத்துக்கொண்டு, இது
போன்ற பல திட்டங்களை இன்றைக்கு நாட்டு மக்களுக்காக நிறைவேற்ற முன்
வந்திருக்கிறது என்கிறபோது மத்திய அரசின் நிதி ஆதாரங்களையும் வாய்ப்பு
வசதிகளையும் பார்த்தால், பன்மடங்கு அது பெரிதாகயிருக்கிறது. அப்படி
அதிக அளவில் இருக்கக்கூடிய அதிகாரங்களை அவர்கள் பரவலாக மாநிலங்
களுக்கு பிரித்துக் கொடுப்பார்களேயானால், மக்களுக்குத் தேவையான
பல்வேறு நன்மைகளையெல்லாம் மாநில அரசுகள் செய்துக் கொடுக்க முடியும்.
அப்போதுதான் அதற்குத் தேவையான அதிகாரமும் வாய்ப்பும் வசதியும் அவர்
களுக்கு இருக்க முடியும் என்பதையும் இந்த நேரத்தில் வலியுறுத்திக் கூறக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12-20)

அதுமட்டுமல்ல. மாநில அரசுகள்தான் மாநில மக்களின் அன்றாடப்
பிரச்னைகளை, அவர்களின் தேவைகளை, அவர்களின் அன்றாடத் தேவைகளை
அறியத்தக்க விதத்தில் தொடர்பு வைத்துக்கொண்டுள்ளது. ஆகவே மத்திய
அரசு தன்னிடத்திலுள்ள நிதி ஆதாரங்களை அதிகப்படியான அளவிற்கு
மாநில அரசுகளுக்கு வழங்குவதன் மூலமாகத்தான் மாநில அரசுகள் மக்களுக்கு
பல்வேறு நல்ல காரியங்களைச் செய்வதற்கு வாய்ப்பு வசதி ஏற்படும். ஆகவே
மாநில அரசுகளுக்கு அதிகப்படியான நிதி ஆதாரங்களைக் கொடுப்பதற்கான
சட்டத் திருத்தங்களை மத்திய அரசு கொண்டு வர வேண்டும். இப்படி அதிகப்



1982 மார்ச் 5] (திரு. ப. தனபால்)

படியான அதிகாரங்களை மத்திய அரசு மாநில அரசுகளுக்கு கொடுக்க
வேண்டும் என்று சொல்லும்போது மத்திய அரசை பலவீனப்படுத்துவதாக
யாரும் தயவுசெய்து எண்ணக் கூடாது. மாறாக மாநில அரசுகள் அதிகமாக
பணியாற்றக்கூடிய வாய்ப்பு வசதிகள் செய்து தருவதால் சமுதாயத்தில் வாழ
வழியின்றி தவிக்கிற மக்களுக்கு நல்ல வாழ்வளிக்க, அவர்களை வாழ வைக்கும்
வகையில்தான் அது அமையும். எனவே மாநில அரசுகளுக்கு அதிகப்படியான
நிதி ஆதாரங்களை மத்திய அரசு தருகிற நல்ல முயற்சியில் அத்தனை பேர்களும்
துணை நிற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த நிதிநிலை அறிக்கைமீது பேசுகிறபோது சில எதிர்க்
கட்சி உறுப்பினர்கள் சொன்னார்கள். இந்த நிதிநிலை அறிக்கையில் பக்கங்கள்
தான் அதிகமாக இருக்கிறதே தவிர திட்டங்கள் இல்லை என்று சொன்னார்கள்.
நான் அவர்களுக்கு பணிவன்போடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்
கிறேன். 1977-78-ம் ஆண்டில், புரட்சித் தலைவர் அவர்கள் அரசு அமைந்த
தற்குப் பின்னால் அமைக்கப்பட்ட முதல் நிதிநிலை அறிக்கையில் ரூபாய் 982.14
கோடிக்கு திட்டம் போடப்பட்டது. அதற்குப் பின்னர் 1,142.60 கோடிக்கு
திட்டம் கொண்டுவரப்பட்டது. 1981-82-ல் திருத்திய மதிப்பீட்டின்படி 1,883.27
கோடிக்கு திட்டம் கொண்டுவரப்பட்டது. இந்த ஆண்டு 2,081.92 கோடிக்கான
நிதிநிலை அறிக்கையை புரட்சித் தலைவர் அவர்கள் அரசு வைத்திருக்கிறது
என்பதைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படி ஒதுக்கி படிப்படியாக,
அதிகப்படியாக ஒதுக்கி இந்த மாநில மக்களைப் பாதுகாக்கும் வகையில்
கோடிக்கான ரூபாய் அளவிலான திட்டங்களைத் தீட்டியுள்ளது நம் அரசு
என்பதைச் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே திட்டங்கள்
அதிகமாக அதிகமாக பக்கங்களும் அதிகமாகிக்கொண்டு வருகின்றன என்ப
தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல. நிதிநிலை அறிக்கைமீது பேசும்போது சொன்னார்கள்,
இந்த நிதிநிலை அறிக்கையில் வேலைவாய்ப்புக்கான திட்டங்கள் உருவாக்கப்
படவில்லை என்று. தொழில் வளர்ச்சிக்கான திட்டங்கள் இல்லை என்று
சிலர் சொல்லியிருக்கிறார்கள். அந்த எதிர்க் கட்சி நண்பர்களுக்கெல்லாம் நான்
தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் கிராமப்
புறங்களில் பசுமைப்புரட்சி ஏற்படும் வகையில் கிராம வளர்ச்சி ஒருங்கிணைப்புத்
திட்டத்திற்காக ரூபாய் 22.56 கோடி ஒதுக்கியிருப்பது திட்டமாக உங்கள் கண்
களுக்குப் படவில்லையா ? பால் பெருக்கத் திட்டத்தின்கீழ் குளிரூட்டு நிலை

(திரு. ப. தனபால்) [1982 மார்ச் 5

யங்கள் திருநெல்வேலியிலும் புதுக்கோட்டையிலும் அமைக்கப்படுவது வேலை
யில்லாத் திண்டாட்டத்தைப் போக்கக்கூடிய திட்டமாக உங்க கண்களுக்குப்
படவில்லையா? பாசன வசதிக்காக 23 கோடி ரூபாய் ஒதுக்கி பெரிய பாசனத்
திட்டங்களை இந்த அரசு உருவாக்கி இருப்பது வேலை வாய்ப்பை உருவாக்கு
கிறத் திட்டமாக உங்கள் கண்களுக்குப் படவில்லையா? இதுமாதிரி பல்வேறு
திட்டங்களை, சலுகைகளை புரட்சித் தலைவர் அவர்கள் அரசு அளித்திருக்
கிறது. கருப்பஞ்சக்கையிலிருந்து பேப்பர் தயாரிக்கும் தொழிற்சாலைக்காக
நிதி ஒதுக்கியிருப்பது இந்த அரசு எந்தளவிற்கு தொழில் வளர்ச்சியில் அக்கறை
கொண்டுள்ளது என்பது உங்கள் கண்களுக்குப் படவில்லையா? அது மட்டு
மல்ல. ஐந்து கோடி ரூபாய் செலவில் சுழற்காளவாய் ஏற்படுத்தப்படும்
திட்டம் உங்கள் கண்களுக்குப் படவில்லையா என்று பணிவோடு கேட்டுக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மூன்று சிமெண்ட் ஆலைகளை அரசுத் துறையில் நிறுவவும், திருத்தணியில்
அன்றாடம் 1,250 டன் கரும்பு பிழியும் திறனுள்ள சர்க்கரை ஆலை ஒன்றைத்
தொடங்குவதற்கு உரிமம் வழங்குமாறு மத்திய அரசை இம் மாநில அ[illegible]
வேண்டியுள்ளது என்பதும் உங்கள் கண்களுக்குப் படவில்லையா என்று கேட்[illegible]
கடமைப்பட்டிருக்கிறேன். இவையெல்லாம் உங்கள் கண்களுக்குப் ப[illegible]
வில்லையா, புரியவில்லையா என்பதை கேள்விக்குறியாக வைக்கிறேன்.

மேலும் நான்கு புதிய போக்குவரத்துக் கழகங்களை உருவாக்குவதன் மூலம்
மக்களுக்கு நல்ல முறையில் போக்குவரத்து வசதி ஏற்படுத்திக் கொடுப்பதோடு
கூட, வேலைவாய்ப்பும் தருகிற திட்டமாக அது உங்கள் கண்களுக்குப் பட
வில்லையா?

கல்வித் துறையை எடுத்துக்கொண்டால், ஆயிரம் இடைநிலை ஆசிரியர்கள்
பதவிகள் உருவாக்க இருப்பதால் ஆசிரியப் பெருமக்களுக்கு வேலைவாய்ப்பு
உருவாக்கப்பட்டிருப்பது வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கும் திட்ட
மாக உங்கள் கண்களுக்குப் படவில்லையா என்று கேட்க விரும்புகிறேன்.

இந்த மாநிலத்தினுடைய தொழில் வளர்ச்சியிலே இந்த அரசு பல்வேறு
நல்ல காரியங்களைச் செய்துகொண்டு வருகிறது. ஆனால், அதே சமயத்தில்
ஒரு திட்டத்தைப் பற்றி நான் இந்த நேரத்திலே வலியுறுத்திக் கூறுவது என்
கடமை என்று கருதுகிறேன்.



1982 மார்ச் 5] [திரு. ப. தனபால்]

சேலம் இரும்பாலைத் திட்டத்திற்காக நாம் எவ்வளவு பெரிய போராட்டங்
களையெல்லாம், இந்த மாநிலத்திலே நடத்தி, இந்த சேலம் இரும்பாலைத்
திட்டம் நிறைவேற்றப்படுவதற்கான கோரிக்கைகளையெல்லாம் அன்றைக்கு
வைத்தோம். அப்படிப்பட்ட கோரிக்கைகளையெல்லாம் இந்த இந்தியத்
துணைக் கண்டத்திலே வைத்து, இறுதியிலே இந்தத் திட்டம் நிறைவேற்றப்
படும் என்று சொல்லி, அதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. அதற்காக
மாநில அரசாங்கம் பல்லாயிரக்கணக்கான நிலங்களை ஆர்ஜிதம் செய்து,
அந்தத் திட்டத்திற்காக ஒதுக்கியது. அப்படி ஒதுக்கியதற்குப் பிறகு, இந்தத்
திட்டம் நிறைவேற்றப்பட்டு, கஞ்சமலையிலே இருக்கின்ற இரும்புத் தாதுக்
களை எடுத்து, அங்கே ஒரு இரும்பு உருக்காலை உருவாகும் என்று எண்ணிக்
கொண்டிருந்தோம். ஆனால், மத்திய அரசு என்ன காரணத்தினாலே அப்
போப்பட்ட இரும்பாலையை, அதற்கான திட்டத்தை கை விட்டுவிட்டு,
இன்றைக்கு அவர்கள் அங்கே ஒரு ரோலிங் மில் அளவுக்கு ஒரு திட்டமாக
மாற்றியிருக்கிறார்கள்? இந்தத் திட்டத்திற்காக பல்லாயிரக்கணக்கான
மக்களின் நிலத்தை எடுத்து, அப்படி எடுப்பதன் விளைவாக அங்கே இரும்
பாலை உருவாகின்ற நிலைமை ஏற்படும், அதனால் அங்குள்ள பல்லாயிரக்
[illegible]க்கான மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும். இந்தத் திட்டத்தின்
மூ[illegible]ம் யார் யார் எல்லாம் நிலம் கொடுத்திருக்கிறார்களோ, யார் யாருடைய
நிலங்கள் எல்லாம் எடுக்கப்பட்டிருக்கிறதோ அவர்களுக்கெல்லாம் வேலை
வாய்ப்பு கொடுப்பதிலே முன்னுரிமை தரப்படும் என்றெல்லாம் சொல்லப்
பட்டது. ஆனால், அப்போப்பட்ட ஒரு பெரிய இரும்பாலை உருவாகும் என்ற
நிலைமை மாறி, இன்றையதினம் ஒரு சிறு மில்லாக அது உருவாகியிருக்கிறது.

அது மட்டுமல்ல. இரும்புத் தாதுவை எடுக்கின்ற திட்டத்தை விட்டுவிட்டு,
இரும்புத் தகடுகளைக் கொண்டுவந்து, எவர்சில்வர் தகடுகளாக மாற்றும்
திட்டத்தை அமைத்திருக்கிறார்கள். ஆகவே, இன்றையதினம் இந்திரா
காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களுக்கு சொல்ல விரும்புகிறேன். ஏற்கனவே,
அங்கே பல்லாயிரக்கணக்கான மக்களிடமிருந்து பல்லாயிரக்கணக்கான ஏக்கர்
நிலங்களை ஆர்ஜிதம் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, உங்களுடைய
செல்வாக்கைப் பயன்படுத்தி, மத்திய அரசாங்கத்திற்குச் சொல்லி, இந்தத்
திட்டத்தை முழுத் திட்டமாக வருகிற அளவுக்கு நீங்கள் வாதாடி, அங்கே
பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு வேலை கிடைப்பதற்கான உத்திரவாதத்தை
வாங்கித் தாருங்கள். இந்தத் திட்டத்திலே இன்றையதினம் ஆயிரம் பேர்
களுக்கு மட்டும்தான் வேலை கிடைக்கின்ற நிலைமை இருக்கிறது. ஆகவே,
அப்போப்பட்ட நிலைமைகளை உருவாக்குவதற்கு, இந்தத் திட்டத்தை முழுத்

[திரு. ப. தனபால்] [1982 மார்ச் (

திட்டமாக உருவாக்குவதற்கு உங்களுடைய செல்வாக்கை மத்திய அரசாங்கத்
தில் பயன்படுத்தி, இந்தத் திட்டம் முழுமையாக வருவதற்கு தமிழக அரசு
எடுத்துக்கொள்ளும் முயற்சிக்கு, உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
இன்றைக்கு புரட்சித் தலைவர் அவர்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 13 நிமிஷங்கள் ஆகிவிட்டன. அதோடு
முடித்துக்கொள்ளுங்கள். திரு. ப. சுந்தரம்.

* **திரு. ப. சுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1982-83
ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கைமீது பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரி
வித்து, இந்த நிதிநிலை அறிக்கை ஒரு குழப்பமான அறிக்கை, ஏழை எளிய
மக்களுக்கு உதவாத அறிக்கை என்பதையும், இந்த அரசு போடும் எந்தத்
திட்டமும், திட்டமாக அது அறிவிக்கப்படுகிறதே தவிர, அது செயல்படுத்தப்
படுவதில்லை என்பதற்கு உதாரணமாக, என்னுடைய தொகுதியில் உள்ள
ஒன்றை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-30)

என்னுடைய தொகுதி, திருப்பத்தூர் தொகுதி. நிலத்தடி நீரையே நம்பி
யிருக்கின்ற தொகுதி. 1974 ஆம் ஆண்டு ஆண்டியப்பனூரில் அணை கட்ட
வேண்டுமென்று, கலைஞர் அவர்கள், தி.மு.க. ஆட்சியிருந்த காலத்தில், திட்ட
மிட்டு பொறியாளர்களைப் பார்த்து, அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்
பட்டது. அதற்குப் பின்னர், இங்கே பலமுறை சட்ட மன்றத்திலே இதைப்
பற்றி பேசியும், அங்கே வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே எடுத்துச் சொல்லியும்,
சென்ற ஆண்டு பட்ஜெட் புத்தகத்திலே 1981-82 ஆம் ஆண்டிலே ஆண்டியப்ப
னூரிலே உள்ள இந்த அணை எடுத்துக் கொள்ளப்படும் என்று சொல்லப்
பட்டது: ஆனால் அது ஏற்றுக்கொள்ளப்பட்டதா என்றால், இல்லை. அதற்
குண்டான ஆக்க வேலை ஏதாவது செய்யப்பட்டதா என்றால் நிச்சயமாக அதுவு
மில்லை. ஏன் அதை செய்யவில்லை என்றால் கலைஞர் அவர்கள் போட்ட
திட்டம், அந்தத் திட்டத்தை செயல்படுத்தக் கூடாது என்று நினைக்கிறோம்
என்று என்னுடைய தொகுதியிலே மக்கள் எண்ணுகிறார்கள். அதேபோல
சந்தனத் தொழிற்சாலை ஏற்படுத்துகிறோம் என்று சொன்னார்கள். அதற்கான
வேலை ஏதாவது நடந்திருக்கிறதா என்றால் நடைபெறவில்லை. திருப்பத்தூரி
லே படித்த வேலைவாய்ப்பு கிடைக்காத இளைஞர்கள் பலபேர் இருக்கிறார்கள்.
அவர்கள் வேலையற்று இருப்பதினால் விபரீத எண்ணங்கள் தோன்றி விரும்பத்



1982 மார்ச் 5] [திரு. ப. சுந்தரம்]

தகாத நிகழ்ச்சிகள் ஏற்பட்டு விடுகின்றன. இவற்றை போக்குவதற்கு அரசு
தொழில்பேட்டை ஒன்று ஏற்படுத்தித் தரவேண்டுமென்று வேண்டி விரும்பி
கேட்டுக்கொள்கிறேன். சிட்கோ மூலம் தொழில்பேட்டை ஏற்படுத்தப்படும்
என்று அங்கேயுள்ள அதிகாரிகள் சொன்னார்கள். ஏன் இன்னும் நிறைவேற்றப்
படவில்லை என்று தெரியவில்லை. திருப்பத்தூர் வறட்சிப் பகுதியாக இருப்
பதாலும், இதுவரை தொழில்பேட்டை எதுவும் அங்கே இல்லையென்பதாலும்
அரசு உடனடியாக இதை செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நேற்றைக்குகூட ஒத்திவைப்புத் தீர்மானம் வந்து மின்சாரத் துறை அமைச்
சர் அவர்கள் பதிலளித்தார்கள். என்னுடைய தொகுதியில் அகரம் என்ற
ஊரில் மின்சாரம் இல்லாத காரணத்தால் கிருஷ்ணாயில் எண்ணெய்க்குப்
பதிலாக பெட்ரோலை உபயோகித்ததால் இரண்டு பேர் சாக வேண்டிய நிலை
ஏற்பட்டிருக்கிறது. அங்கே தேவையான அளவு மின்சாரத்தை வழங்க
வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மின்சாரம் இல்லாததால்
அங்கே சிறு தொழில்கள் பாதிக்கப்பட்டு வருகின்றன.

என்னுடைய தொகுதியிலே பல கூட்டுறவு நியாய விலைக் கடைகள் இருக்
கின்றன. ஆனால் அந்த நியாய விலைக் கடைகளிலே சரியாக உணவுப்
பொருள்கள் சரியாக விநியோகிக்கப்படுவதில்லை என்பதை அரசின் கவனத்
திற்கு கொண்டு வர விரும்புகிறேன். குரிசிலாபட்டு என்ற கிராமத்தில் சர்க்கரை,
மண்ணெண்ணெய், துணி முதலிய பொருள்கள் நியாயமான விலைக்கு மக்க
ளுக்கு விநியோகிக்கப்படுவதில்லை என்று நோட்டீசாக அச்சடித்து மக்களால்
மனுவாக கொடுக்கப்பட்டிருக்கிறது: அங்கே இருக்கிற நிர்வாகிகள் சர்க்கரை
மூட்டையை களவாடி, அதை மக்களே பிடித்துக் கொடுத்திருக்கிறார்கள்.
அதன் மேல் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதுபோன்று
நிர்வாகிகள் களவாடுகிற போக்கிலே இருக்கிறார்கள். அவர்களை நீக்கி அரசு
கொடுக்கிற சர்க்கரை, மண்ணெண்ணெய், துணி போன்றவை ஏழை எளிய
மக்களுக்கு கிடைக்கிற வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று வேண்டி
விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பத்தூரிலே கலைஞர் நகர், அண்ணா நகர், பெரியார் நகர் என்று
இருக்கின்றன. அந்த நகர்களில் ஏறக்குறைய 400 வீடுகள் இருக்கின்றன.
15 ஆண்டு காலமாக அங்கே அவர்கள் வசித்து வருகிறார்கள். அவர்களுக்கு
பட்டா கொடுக்க வேண்டுமென்று சட்ட மன்றத்திலே பலமுறை எடுத்துச்

சொல்லி, கொடுப்பதாகச் சொன்னார்கள். இதுவரை பட்டா கொடுக்கப்படவில்லை. அரசு அவர்களுக்கு பட்டா கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல திருப்பத்தூரிலே ஒரு சங்கடமான நிலை இப்போது ஏற்பட்டிருக்கிறது. 27-ம் தேதி முதல் அரிசி வியாபாரிகள் திருப்பத்தூர், வாணியம்பாடி, ஆம்பூர், வேலூர் போன்ற ஊர்களிலே கடைகளை மூடி, ஏழை எளிய மக்களுக்கு அரிசி கிடைக்கவில்லை என்று புகார்கள் வருகின்றன. அங்கே இருக்கிற அதிகாரிகள் மீண்டும் மீண்டும் லெவி கேட்கிற காரணத்தாலே இந்த நான்கு நாட்களாக கடைகளை அவர்கள் மூடிவிட்டார்கள். நான் இதை குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம்கூட கொடுத்திருக்கிறேன். பேச வாய்ப்பு கிடைத்த காரணத்தால் இங்கே பேசினேன். உடனடியாக அதிகாரிகளை அழைத்து, வியாபாரிகளிடத்தில் சுமூகத்தை ஏற்படுத்தி உடனடியாக கடைகளைத் திறப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல அங்கே திருப்பத்தூரில் பெண்கள் கல்லூரி இல்லை. நாங்கள் நீண்டகாலமாக இதைக் கேட்டு வருகிறோம். அங்கு அரசு கல்லூரி எதுவுமே இல்லை. மேல்நிலைப் பள்ளிகளில் படிக்கும் பெண்கள் மேல்படிப்பு படிப்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கிற முறையிலே பெண்கள் கல்லூரி அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த பெண்கள் கல்லூரியில் படிக்க வேண்டுமென்றால் இப்போது வேலூருக்கோ அல்லது சேலத்திற்கோ சென்று படிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. அங்கே மேல்நிலைப் பள்ளியை அமைத்தால் போதாது, அங்கே இருக்கின்ற ஏழை மாணவிகள் பட்டப் படிப்பு படிப்பதற்காக ஒரு பெண்கள் கல்லூரி ஏற்படுத்த வேண்டும்; ஏற்படுத்தாவிட்டாலும் அங்கே இருக்கின்ற மேல்நிலைப் பள்ளியில் பட்டப் படிப்பு படிக்க வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜோலார்பேட்டையிலே தண்ணீர் இல்லை என்று பலமுறை சொன்னோம். அமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு பாலாற்றிலிருந்து ஜோலார்பேட்டைக்கு ஒரு ஆண்டில் தண்ணீர் வரும் என்று சொன்னார்கள். ஆண்டு 2 ஓடிவிட்டது. தண்ணீர் வந்ததா என்றால் வரவில்லை. சொல்வது ஒன்று, செய்வது ஒன்றாக இருக்கிறது. எங்கள் பகுதியிலே திராவிட முன்னேற்றக் கழகம் நீண்ட நாட்களாக வெற்றி பெறும் காரணத்தினால் அந்தத் தொகுதி புறக்கணிக்கப்படுகிறதோ என்று மக்கள் சந்தேகப்படுகிறார்கள். அந்த சந்தேகத்தை நிவர்த்தி செய்வதற்காக அரசு நடவடிக்கை எடுத்து திருப்பத்தூரைத் திரும்பிப் பார்க்க வேண்டும். திருப்பத்தூரிலே தி.மு.க. பொதுக் கூட்டத்தை நடத்திவிட்டார்கள்



என்றவுடனே முதலமைச்சர் அவர்கள் உடனடியாக அங்கே பொதுக்கூட்டம் நடத்த வேண்டுமென்று ஏற்பாடு செய்தார்கள். அதற்கு மட்டும் திருப்பத்தூரைத் திரும்பிப் பார்க்கிறார்கள். ஏழை எளிய மக்களை வாழவைப்பதற்காக, அங்கே இருக்கின்ற கஷ்டங்களைப் போக்குவதற்காக திருப்பத்தூரைத் திரும்பிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பத்தூர் யூனியனை சேர்ந்த ஆண்டியப்பனூர், பூங்குளம், குரிசிலாபட்டு, பெருமாபட்டு, இருணப்பட்டு, மிட்டூர் போன்ற இடங்கள் வாணியம்பாடி தாலுகாவிலே சேர்க்கப்பட்டிருக்கின்ற காரணத்தினால் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அவற்றையெல்லாம் திருப்பத்தூர் தாலுகாவிலே சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருப்பத்தூர் நகரத்திலே சி.கே.சி. நகர் இருக்கிறது, அங்கே வாழ்கின்ற பொற்கொல்லர்களுக்கு—பல ஏழை குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் வாழ்கிறார்கள், டி.சி. லேண்டாக இருப்பதை மாற்றி —பட்டா கொடுக்க வேண்டுமென்று பல மனு செய்திருக்கிறார்கள். அரசு நடவடிக்கை எடுத்து அந்த ஏழை பொற்கொல்லர்களை வாழவைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பத்தூரிலே கிராம வீட்டு வசதி சங்கம் இருக்கிறது. அங்கே திருப்பத்தூர் ஒன்றியத்திலிருந்து மட்டும் இரண்டு ஆயிரம் மனுக்கள் வந்திருக்கின்றன. திருப்பத்தூர் யூனியனில் இருந்து வந்த மனுக்கள் புறக்கணிக்கப்படுகின்றன. திருப்பத்தூருக்குக் கொடுக்காமல் நாட்டறாம்பள்ளி, அந்துலிக்கு கொடுக்கப்படுகிறது. ஓர் இரு வீடுகளுக்குக் கொடுக்கப்பட்டாலும் குரிசிலாபட்டு போன்ற பல கிராமங்களில் முதல் தவணை கொடுக்கப்பட்டு மீண்டும் கொடுக்கப்படாததால் திருப்பி மழை நேரத்தில் இடிந்து விட்டது. அந்த மக்கள் எப்படி மீண்டும் கடனை செலுத்துவார்கள் என்பதை அரசு ஆலோசித்து திருப்பத்தூரில் உள்ளவர்களுக்கு கடன் உடன் வழங்க வேண்டும். சில நேரங்களிலே செக்கைக் கொடுத்து விடுகிறார்கள், ஆனால் வங்கியிலே பணம் இருப்பதில்லை. வங்கியிலே பணம் இல்லாமல் செக்கைக் கொடுத்துவிடக்கூடிய நிலைமை இருக்கிறது. இதைப்பற்றி நான் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலேகூட மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே முறையிட்டேன். இந்த நிலைமைகளை மாற்ற வேண்டும்.

வட ஆர்காடு மாவட்டத்திலே மின்சாரம் இல்லை. உடனடியாக மின்சாரம் வழங்க அரசு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த அளவுக்குப் பேச வாய்ப்பு அளித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடிக்கிறேன். வணக்கம்.

[1982 மார்ச் 5

(பிற்பகல் 12-40)

* திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1982-83 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை சம்பந்தமாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த ஆண்டு மொத்த வருமானம், செலவு இவை நீக்கி இறுதியாகத் துண்டு விழக்கூடிய தொகை 135 கோடியே 47 இலட்சம் ரூபாய் என்று கூறப்பட்டிருக்கிறது. இந்தப் பற்றாக் குறைக்கான காரணத்தைப் பற்றியும் இந்த நிதிநிலை அறிக்கையிலேயே மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். மின்சார வாரியம் சம்பந்தமான செலவுகளையும், அதற்கான திட்டங்களை ஏற்பதன் காரண மாகவும், நுகர்பொருள் வாணிபக் கழகம் பொதுப் பங்கீட்டு ஏற்பாட்டை நிறை வேற்றுவதன் காரணமாகவும், மற்றும் பேருந்துக் கழகங்களுக்கு அதிகமான தொகையைக் கொடுத்து உதவ வேண்டிய அவசியம் இருக்கின்ற காரணத்தா லும், தன்னிறைவுத் திட்டம் போன்றவைகளை நிறைவேற்றுவதற்கு அதிகச் செலவு ஏற்படுகிறது என்ற காரணத்தாலும் என்று இப்படிப்பட்ட காரணங் களைக் காட்டிப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டு, அப்படிப் பற்றாக்குறை என்பதோடு அதற்கு உபரியாக அதிகமான வரிகளை, 38 கோடி ரூபாய்க்கான வரிகளை விதிப்பதற்கான நடவடிக்கைகளையும் இதிலே குறிப் பிட்டிருக்கிறார்கள்.

இதே அடிப்படையிலேதான் நாம் பார்க்கின்ற நேரத்தில் மத்திய அரசு எந்தக் கொள்கையின் அடிப்படையிலே ஒரு நிதிநிலை அறிக்கையைத் தயா ரித்திருக்கிறார்கள் என்று பார்க்கும் நேரத்தில், அந்தப் பின்னணியிலே அதன் தொடர்ச்சியாகவே இது இருக்கிறது ; அந்தப் பாதையிலே இது செல்லக்கூடிய நிலைமையிருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

மத்திய அரசாங்கம் 2,000 கோடி ரூபாய் துண்டு விழும் பட்ஜெட்டை வைத் திருக்கிறார்கள். தபால் கட்டணத்தை உயர்த்தியிருக்கிறார்கள் ; தந்திக் கட்டணத்தை உயர்த்தியிருக்கிறார்கள், இரயில்வேக் கட்டணத்தை உயர்த்தி யிருக்கிறார்கள் ; மற்றும் பல்வேறு பொருட்களுக்கான வரிகளை உயர்த்துகின்ற முறையிலே கிட்டத்தட்ட 3,000 கோடி ரூபாய்க்கும் அதிகமான வரிகளை மக்கள் தலையிலே சுமையாகச் சுமத்தும் அளவிற்கு அந்த மத்திய அரசாங் கத்தின் நிதிநிலை இருக்கிறது. அதையொட்டிப் பார்க்கும் நேரத்தில் நம் முடைய மாநிலத்திலேயும், இதேமாதிரி மற்ற மாநிலங்களிலேயும் வரும் நிதி நிலை அறிக்கைகளை மொத்தமாகப் பார்க்கின்ற நேரத்தில் இந்திய மக்களின் தமிழக மக்களின் மீது அதிகமான சுமை ஏற்படும் அளவிற்கு நிலைமை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்



1982 மார்ச் 5] [திரு. இரா. கருப்பையா]

இதன் காரணமாக மேலும் விலைவாசி உயர்ந்து, மேலும் சாமான்ய மக்கள், நடுத்தர மக்கள் வாழ்க்கை பாதிக்கப்படுவது என்பது தவிர்க்க முடியாத உண்மையாக அமைகிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இதன் ஒட்டு மொத்தமான விளைவுகளைப் பார்க்கின்ற நேரத்தில் இந்திய நாட்டில் மொத்த மாக வறுமையிலே இருக்கும் எண்ணிக்கை, அரசாங்கம், அமைச்சர்கள், நாடாளுமன்றத்தில் அறிவித்த கணக்குப்படி 52.5 சதவீதம். இது நாளுக்கு நாள் உயர்ந்துகொண்டு போகிறது என்று ஒப்புக்கொள்கிறார்கள்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

இதுபோன்று தமிழகத்திலேயும் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்களின் எண்ணிக்கை 60 சதவீதத்தைத் தாண்டியிருக்கிறது. மேலும் இந்த நிலையின் காரணமாக இந்த எண்ணிக்கை உயரக் கூடிய நிலைமைதான் ஏற்படும்.

இந்தப் பின்னணியிலே பார்க்கும்பொழுது தமிழகத்திலே இப்படி வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்ற மக்களின் நிலையை உயர்த்தவும் தமிழகத்தை வளம் பொருந்தியதாக ஆக்கும் முறையிலேயும் இந்த நிதிநிலை அறிக்கையில் மிகவும் பலகீனமான அம்சங்கள்தான் இருக்கின்றன என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

தொழில் வளர்ச்சிக்கான திட்டங்கள் இதிலே குறிப்பிடப்பட்டிருக் கின்றனவா என்றால், புகழுரில் அமைக்க விருக்கின்ற கருப்பஞ்சக்கையிலிருந்து ஏற்பட இருக்கின்ற காகிதத் தொழிற்சாலை பற்றி மட்டும் குறிப்பிடப்பட்டிருக் கிறது. 1982-83 ஆம் ஆண்டுக்கான திட்டத்திலே தொழில் வளர்ச்சிக்காக 42.70 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதே பின்னணியிலே பார்த் தால் சென்ற 1981-82 ஆம் ஆண்டிலேயும் தொழில் வளர்ச்சிக்காக ஐந்தாவது ஆண்டுத் திட்டத்திலே ஒதுக்கப்பட்ட தொகை 55.61 கோடி ரூபாயாகும். ஆகவே, அடிப்படையாகத் தமிழகத்திலே தொழில் வளர்ச்சியை உருவாக்குவ தற்கு அடிப்படையான பல்வேறு திட்டங்களை, இன்றையதினம் அமல் செய்யப் பட வேண்டிய திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்த வேண்டியது மிகவும் அவசியம். அதுதான் தமிழகத்தின் வறுமை நிலையை மாற்றும் என்பதை அனைவரும் ஒத்துக்கொள்கிறார்கள். ஆனால் அம்மாதிரி திட்டங்கள் எதுவும் அறிவிக்கப்படாதது, தொழில் வளர்ச்சிக்குப் புதிய திட்டங்கள் அறிவிக்கப் படாதது வருத்தத்தக்கது.

[திரு. இரா. கருப்பையா] [1982 மார்ச் 5

அதுமட்டுமல்லாமல், மத்திய அசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கின்ற பல திட்டங்கள் இருக்கின்றன. கரூர்-திண்டுக்கல் அகல இரயில் பாதை பற்றி ஏற்கனவே அறிவித்தார்கள். வேலை துவங்கப்பட்டது என்றுகூட அறிவித் தார்கள். ஆனால் நடைமுறையிலே எந்த வேலையும் துவங்கப்படாமல் நிதி ஒதுக்கீடு இல்லாததால் 70 இலட்சம் ரூபாய்க்கு ஒதுக்கப்பட்ட வேலை இன்றையதினம் நிறுத்தப்பட்டிருக்கிறது.

சேதுசமுத்திர திட்டம்—எப்பொழுது அது உருவாகும்? எப்பொழுது அது நடைபெறும் என்பதற்கான ஒரு உத்தரவாதம் இல்லாத நிலைமையிலே இருக்கிறது. ஆகவே, மத்திய அரசாங்கம் சம்பந்தப்பட்ட மட்டிலே எடுத்துக் கொண்டால், தமிழகத்தின் தொழில் வளர்ச்சி என்பது புறக்கணிக்கப்படுகின்ற நிலையில் இருக்கிறது என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே, இந்நிலையிலே நமக்கிருக்கின்ற, கிடைக்கின்ற நிதி ஆதாரங்களை வைத்து, மேலும் தொழில் வளர்ச்சிக்கான திட்டங்களை உருவாக்க வேண்டியது அவ சியம் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதேமாதிரிதான் சென்னைப் பெரு நகரத்திலே விரைவுப் போக்குவரத் துக்கான ரெயில் பாதை அமைக்கக்கூடிய திட்டம். அது எங்கே இருக்கிறது என்று இன்றையதினம் தேடிக் கண்டுபிடிக்க வேண்டிய நிலைமையிலே இருக் கிறது. ஆகவே, இந்த நிலைமையிலே திட்டங்கள் தொழில் வளர்ச்சிக்கும் தொழில் வாய்ப்பை உருவாக்கிக் கொடுப்பதற்கும் என்பது மிகவும் குறைவாக, இல்லாத நிலைமையிலேதானிருக்கின்றன என்பதைக் குறிப்பிட்டு, அம்மாதிரித் திட்டங்களை உருவாக்க, சயல்படுத்த இத்திட்டத்திலே வழிவகை செய்யப்பட் டிருக்குமானால் அது மிகவும் பாராட்டுக்குரியதாக இருந்திருக்கும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

மேலும் தொழில்கள் சம்பந்தமாக, ஏற்கடவே தமிழ்நாட்டிலே சில சர்க்கரை ஆலைகள் அமைக்கப்படும் என குறிப்பிடப்பட்டது. அது இன்னும் அமைய வில்லை. தஞ்சாவூரிலே அமைப்போம் என்றும், புதுக்கோட்டையிலே அமைப் போம் என்றும் இன்றையதினம் திருத்தணியிலே அமைக்கப்படும் என்றும் குறிப்பிடப்படுகிறது. இவை அனைத்தும் இப்பொழுது அமையுமா? ஏனென் றால், அவற்றிற்கு மத்திய அரசாங்கத்தினுடைய அனுமதி தேவை. சென்ற நிதிநிலை அறிக்கையின்பொழுது, மதுரை மாவட்டத்திலே அமைய இருக்கிற சிமெண்ட் தொழிற்சாலைக்கு மத்திய அரசின் அனுமதியைக் கேட்டிருக்கிறோம் என்று குறிப்பிடப்பட்டது. அந்த ஆண்டு முடிந்து விட்டது. இந்த ஆண்டு துவங்கிவிட்டது. இதற்கான அனுமதி இன்னும் மத்திய அரசாங்கத்திட



1982 மார்ச் 5] [திரு. இரா. கருப்பையா]

மிருந்து கிடைக்கவில்லை. ஆகவே, இந்நிலையில் தொழில் வளர்ச்சிக்கு உரிய கவனம் தக்க முறையிலே எடுக்கப்பட வேண்டும். இதிலே மற்றொரு ஆபத்தான அம்சம், தமிழகத்திலே சர்க்கரைத் தொழிலில் ஈடுபட தனியார் களுக்கும் அனுமதி கொடுக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மிகவும் ஆபத்தான ஒரு கொள்கையை இந்த அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். சர்க்கரைத் தொழிலிலே தனியார்கள் ஆதிக்கம் மிகுந்து, கரும்பு உற்பத்தி யாளர்கள், தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டார்கள் என்கின்ற காரணத்தினாலே, கூட்டுறவுத் துறையிலும், அரசுத் துறையிலும் சர்க்கரை ஆலைகள் உருவாக்கப் பட்டு செயல்பட்டு வருகின்றன. ஆகவே, இந்தக் கொள்கையிலே தடுமாற்றம் தேவையில்லை, கூடாது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, நான் குறிப்பிட விரும்புவது, விவசாய உற்பத்திக்குத் தேவை யான திட்டங்கள் எந்த அளவுக்கு இதிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றன? நல்ல தரமான விதைகள், நீர் ஆதாரங்கள், மாவட்டத்திற்கு ஒரு அரசுத் தோட்டப் பண்ணை, இம்மாதிரியான விவசாய சம்பந்தமான காரியங்கள் இதிலே குறிப் பிடப்பட்டிருக்கின்றன. இவை அனைத்தும் தேவையா என்றால், தேவை தான். நல்ல நிலம் இருக்கிறது, நீர் வளம் இருக்கிறது, நல்ல தரமான விதை கள் கொடுக்கின்றோம். ஆனால், இவை அனைத்தையும் பயன்படுத்தி உற்பத்தி செய்கின்ற விவசாயிகள் நல்ல முறையிலே விவசாயம் செய்வார்களா? அந்த விவசாயிகள் எந்நிலையில் இருக்கிறார்கள்? அவர்கள் உற்பத்தியைச் சரிவர செய்ய, ஊக்கத்தோடு செய்ய, ஊக்கம் தர என்ன நடவடிக்கைகள் இதிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றன என்றால், எதுவும் குறிப்பிடப்படவில்லை. சென்ற ஆண்டு ஓரளவுக்குக் கடனைத் தள்ளுபடி செய்கின்ற சலுகைகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அந்தப் பிரச்னை இன்றைக்கு முழுமை யாகத் தீர்க்கப்படவில்லை என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்தப் பிரச்னை சம்பந்தமாக சென்ற மூன்று தினங்களுக்கு முன்பு அனைத்து விவ சாயச் சங்கங்கள் கூட்டமைப்புக்களைச் சேர்ந்த தலைவர்கள், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சந்தித்து, இந்தப் பிரச்னை சம்பந்தமாக, கடன் பிரச்னை சம்பந்தமாக, முழுமையாகத் தீர்வு காண்பதற்கு ரூபாய் 98 கோடி பெறுமானமுள்ள சலுகைகளை மாநில அரசு அளிக்குமேயானால், இந்தப் பிரச்னை முழுமையாகத் தீர்வடையும் என்ற முறையிலே குறிப்பிட் டார்கள். ஆகவே, இந்த அடிப்படையில், ஏற்கனவே நாம் கொடுத்திருக்கின்ற வாக்குறுதி இருக்கிறது. இந்த மன்றத்திலே நாம் தெளிவாகக் கூறியிருக் கிறோம். படிப்படியாக, இந்தக் கடன்களை அரசு தள்ளுபடி செய்யும் என்ற திட்டத்தை மாநில அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே, அந்த

அடிப்படையிலே, விவசாயிகள் கடன் பிரச்னைகளைத் தீர்க்க தகுந்த நடவடி
கைகளை எடுக்க வேண்டும். ஏனென்றால், இன்றையதினம் விதைகளின் விலை
ஏறியிருக்கிறது ; உரத்தின் விலைகள் ஏறியிருக்கின்றன ; பூச்சி மருந்தின்
விலை ஏறியிருக்கிறது. மற்ற எல்லா பொருள்களின் விலையும் உயர்ந்திரு
கின்றன. இந்த நிலையிலே மிகுந்த சுமையுடன், தாங்க முடியாத நிலை
யில் இருக்கிற விவசாயிகளின் நிலையை உயர்த்த, அவர்களின் கடன்
பளுவைக் குறைத்து, உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களின், நெல்லின்
கரும்பின் விலையைக் கட்டுப்படியாகக்கூடிய, நியாயமான அளவுக்குக் கொடு
கத்தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அதுதான், விவசாய உற்பத்தி
ஊக்குவிக்க, உற்பத்தியைப் பெருக்க உதவி செய்யும் என்று நான் குறிப்பிட
விரும்புகிறேன். அதே நேரத்திலே, அந்த விவசாயிகள் கடந்த நான்கு
ஐந்து வருஷங்களுக்கு முன்னாலே வறட்சியின் காரணமாகப் பாதிக்கப்பட்ட
தனால், அவர்களது கடன்கள் ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றன.

(பிற்பகல் 12-50)

இன்றைக்கு மீண்டும் கெடுபிடி வசூல் நடவடிக்கை எடுக்கப்படுவதை
நிறுத்தி வைக்கவேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதன்மீது
நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல,
இன்றையதினம் நிலவரி பாக்கியையும், தண்டத் தீர்வை பாக்கியையும், ஒரே
தவணையில் கட்ட வேண்டும் என்று நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
அனைத்து மாவட்டங்களிலும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்
கிறது. வறட்சியால் பாதிக்கப்பட்ட திருச்சி மாவட்டத்திலும், மணப்பாறைப்
பகுதியிலேயும் விவசாயிகள் நான்கு ஆண்டுகளாக செலுத்த வேண்டிய வரியை
ஒரே தவணையில்—விளைச்சல் இல்லாத இந்த நேரத்தில்—கொடுக்கவேண்டும்
என்று அவர்களை நிர்ப்பந்தப்படுத்தி, ஜப்தி நடவடிக்கை எடுத்து வருகிறார்
கள். அவர்கள் மறுக்கிறார்கள் என்ற காரணத்தால், அவர்கள்மீது வழக்கு
போடப்பட்டு, வரி வசூல் செய்ய வருபவர்களைத் தடுக்கிறார்கள் என்று அவர்
கள் மீது வழக்குப் போடப்படும் நிலை இருக்கிறது. இந்தப் பிரச்சினை
சம்பந்தமாக விவசாயச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள், குறிப்பிட்ட நிலையை
எடுத்திருக்கிறார்கள். மின்சாரக் கட்டணத்தை வசூல் செய்வதுபோல 1 பிளஸ்
1 என்ற முறையில், நடப்பாண்டிற்கான வரியும், சென்ற பாக்கியிலே ஒரு
பகுதியையும் வசூலிக்கலாம் என்று சொல்லி இருக்கிறார்கள். அந்த அடிப்
படையிலே இந்தப் பிரச்சினையில் தீர்வு காண வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.



தமிழ் நாட்டில் உள்ள சர்க்கரை ஆலைகளில், இன்றையதினம் விவசாயிகள்
போட்டிருக்கின்ற கரும்புகள் முழுமையையும் அரவை செய்வதற்கான வாய்ப்பு
இல்லை. பல ஆலைகளில் இன்றைக்கு விவசாயிகளின் கரும்பை ஏற்றுக்
கொள்ள முடியாது என்று திருப்பி அனுப்பி விட்டார்கள். அதன் காரணமாக
விவசாயிகள் அந்தக் கரும்புகளை விறகாகப் பயன்படுத்தலாமா என்றுகூட
யோசிக்கிறார்கள். எனவே இன்றையதினம் இருக்கின்ற மெயின் சீசனை
மேலும் நீடித்தோ அல்லது அடுத்து வரக்கூடிய ஸ்பெசல் சீசனை அட்வான்ஸ்
செய்தோ, அரவை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்
கொள்ளுகிறேன். இதன் காரணமாக வெல்லத்தின் விலை மிகவும் தாழ்ந்து
போகிறது. ஆகவே அரசு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக ஒரு
குறிப்பிட்ட அளவு வெல்லத்தை கொள்முதல் செய்து அந்த விவசாயிகளைப்
பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மாநில அரசு தொழில் வளர்ச்சிக்
காகவும், விவசாய வளர்ச்சிக்காகவும் திட்டங்களை வகுக்க வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

இந்த வரவு செலவுத் திட்டத்தில் ஏழைகளுக்கு நிவாரணம் என்ற முறையில்
குறிப்பிடப்பட்டுள்ளது. ஏழைக் குழந்தைகள்—பட்டினி கிடக்கும் ஏழைக்
குழந்தைகளுக்கு ஒரு வேளை உணவு, 2 வயது முதல் 10 வயது வரை உள்ள
குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டும் என்று குழந்தைப் பாசத்தோடு, அவர்
களுடைய பசியைத் தணிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு 100 கோடி
ரூபாயை ஒதுக்கி திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு நல்ல மனிதாபி
மானத்தோடு உருவாக்கப்பட்ட திட்டம். ஆனால் இந்தத் திட்டத்தை நிறை
வேற்றுவதன் மூலமாக தமிழகத்திலே உள்ள வறுமைக் கோட்டுக்குக் கீழே
இருக்கின்ற மக்களுடைய நிலையை மாற்றிவிட முடியுமா என்பதைச் சிந்திக்க
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் வறுமைக் கோட்டுக்குக்
கீழே உள்ள மக்களின் நிலைமை உயர்ந்தால்தான், அவர்களுடைய நிலையை
உயர்த்துவதன் மூலமாகத்தான் நிரந்தரமாக இந்தக் குழந்தைகளுக்கு வாழ்
வளிக்க முடியும். அப்படிப்பட்ட வாழ்வை அளிப்பதற்கான திட்டத்தை
உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நமக்கு ஏற்கனவே அனுபவம் இருக்கிறது. பள்ளிக் குழந்தைகளுக்கு
மத்திய உணவு போடுகிறோம். அந்த அனுபவத்தை வைத்துக்கொண்டு இந்தத்
திட்டத்தை எந்த அளவுக்கு காரியாம்சத்திலே முழுமையாக நிறைவேற்ற
முடியும் என்பதைப் பார்த்து அதற்கான முறையிலே முழுமையாகப் பரிசீலனை
செய்து அறிவித்திருந்தால்கூட அது பயனுள்ளதாக இருக்கும். குழந்தைப்

[திரு. இரா. கருப்பையா] [1982 மார்ச் 5

பாசத்திற்கு யாரும் தடைபோட முடியாது. ஆனால் அதேநேரத்தில் இந்த நிலைமையை மாற்றி அமைப்பதற்கான நடவடிக்கையை மாநில அரசு எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக் கின்ற மக்களுடைய ஏழ்மையான உள்ள நிலையை மாற்றுவதற்காக, கிராமப் புறங்களிலே உள்ள அந்த கிராமங்களை வளமான கிராமங்களாக, செழிப்பான கிராமங்களாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதை நிறைவேற்றுவதற்காக 38 கோடி ரூபாய்க்கு வரி போடப்பட்டிருக் கிறது. இந்த வரியில் மண்ணெண்ணெய்க்காக 8 சதவீதத்திலிருந்து 4 சத விகிதமாக குறைக்கப்பட்டிருந்தாலும், கிராமப் புறங்களில் உள்ள மக்களுக்கு முழுமையான நிவாரணமாக இல்லை. கிராமப்புறங்களிலே உள்ள யாரும் அரசு நிர்ணயித்த விலையில் மண்ணெண்ணெய் வாங்குவது கிடையாது. நகரங்களிலே ஒரு விலை விற்கும், கிராமங்களிலே ஒரு விலை விற்கும். அவர்கள் 1 லிட்டர், 2 லிட்டர் தங்களுடைய அன்றாடத் தேவைக்கு வாங்குகிற நிலைதான் இருக்கிறது. ஆகவே மண்ணெண்ணெய்க்கு முழுமையாக விலக்குக் கொடுப்பதுதான் பயனுள்ளதாக இருக்கும்.

புதிதாக வரிகள் விதிக்கப்பட்டு இருக்கின்றன. கைத்தறிப் பட்டுக்கு வரி விதிக்கப்பட்டு இருக்கிறது. இது யாரைப் பாதிக்கும், யாரை பாதிக்காது என்ற பிரத்யட்ச உணர்வோடு இந்தப் பிரச்னையைப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்றையதினம் கைத்தறித் துறையில் பட்டு உற்பத்தி செய்யும் லட்சக்கணக்கான பட்டு நெசவுத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இதன் காரணமாக கைத்தறிப் பட்டின் விலை உயரும். கைத்தறிப் பட்டை சாமான்ய மக்களும் பயன்படுத்துகிறார்கள். நடுத்தர மக்களும் உபயோகப் படுத்துகிறார்கள். இதன் காரணமாக விலை உயர்கின்ற நேரத்தில், நூல் விலை உயரும். அப்படி நூல் விலை உயர்ந்தால் அந்த விலையேற்றத்தை உற்பத்தியாளர்கள் அந்தப் பட்டு நெசவுத் தொழிலாளியின் தலையில் வைத்து, 'நீ கூலியை குறைத்து வாங்கிக்கொள்' என்று சொல்லும் நிலையேற்படும். ஆகவே, இந்த வரி விதிப்பின் மூலமாக சாமான்ய மக்களும், நடுத்தர மக்களும் கைத்தறித் தொழிலாளர்களும் பாதிக்கப்படுவார்கள். ஆகவே, அரசு இதைப் பரிசீலித்து, இந்தக் கைத்தறி பட்டுக்கு விதித்து இருக்கும் வரியை ரத்து செய்ய முன் வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1982 மார்ச் 5] [திரு. இரா. கருப்பையா]

விசைத்தறியில் பயன்படுத்தப்படும் நூலுக்கும் இப்போது வரி விதிக்கப் பட்டுள்ளது. இந்த விசைத்தறியை வைத்து இருப்பவர்கள் பெரிய முதலா ளிகள் அல்ல. சாதாரணமானவர்கள்தான் வைத்து இருக்கிறார்கள். விசைத் தறியில் பயன்படுத்தக்கூடிய இந்த நூலுக்கு போட்டுள்ள வரி தேவையற்றது. ஆகவே, அதைக் கைவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மோட்டார் வாகனங்களுக்கு பயன்படுத்தக்கூடிய துணை உறுப்பு களுக்கான வரியை 13 சதவிகிதத்திலிருந்து 15 சதவிகிதம் என்று உயர்த்தி இருக்கிறீர்கள். மேலும் டயர், ட்யூப் போன்றவற்றிற்கும் வரி உயர்த்தி இருக் கிறீர்கள். இதன் காரணமாக நிச்சயமாக பஸ் கட்டணம் உயரும். இந்த பட்ஜெட் கூட்டத் தொடர் முடிந்தவுடனே பஸ் அதிபர்கள் சேர்ந்து கொண்டு, இந்தச் சாமான்களின் விலை உயர்ந்து விட்டது என்று கூக்குரல் போடு வார்கள். அரசும் பஸ் ஓட்டுகிறது. ஆகவே, அவர்களும் தற்போதுள்ள கட்டணம் கட்டுப்படியாகவில்லை என்று பேருந்துக் கட்டணங்களை உயர்த்தப் போகிறார்கள். அதற்கு இந்த பட்ஜெட் வழிவகுத்துக் கொடுத்து இருக்கிறது. ஆகவே, இந்த வரி உயர்வை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

மின்சாரம் சம்பந்தமாக இருக்கக்கூடிய பொருள்கள், அதேமாதிரி பிஸ்கேட், சாக்லேட் போன்ற பொருள்கள் ஆகியவற்றிற்கு விதிக்கப்பட்டுள்ள வரி தேவை யற்றது. ஒரு இடத்தில் குழந்தைகளிடத்தில் பாசத்தைப் பற்றிப் பேசி விட்டு, மற்றொரு இடத்தில் இந்தக் குழந்தைகள் சாப்பிடும் பிஸ்கெட், சாக்லெட் போன்றவற்றிற்கு வரி போட்டு இருப்பது சரியல்ல. இதன் மூலமாக அரசுக்கு எவ்வளவு ரூபாய் வரி வந்து விடப்போகிறது. ஆகவே, அதைக் கைவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முதியோர் உதவித் தொகையை ரூபாய் 25-லிருந்து ரூபாய் 35 என்று உயர்த்தியிருக்கிறீர்கள். வரவேற்கிறோம். ஆனால் அதே நேரத்தில் மாநிலம் பூராவிலும் இரண்டு லட்சம் பேர்களுக்குத்தான் இப்போது கொடுக்கப்படுகிறது. இன்றைக்கு நம்முடைய மாநிலத்தில் 60 வயது அடைந்தவர்கள் 1971 சென்சஸ் படி பார்த்தால் 20 லட்சம் பேர் இருக்கிறார்கள். ஆனால் தற்போது 20 ஆயிரம் பேருக்கு கொடுப்பது என்ற காரணத்தினால் யாராவது இறந்தால்தான் வேறு ஒருவர் வாங்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அனைவருக்கும் முதி யோர் பென்ஷன் கிடைக்கிற வகையிலும் ஆதரவற்ற விதவைகளுக்கும் அந்த உதவித் தொகை கிடைக்கிற வகையிலும் முழுமையாக இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வர வேண்டும்.

[திரு. இரா. கருப்பையா] [1982 மார்ச் 5

அடுத்து அரசு ஊழியர்கள் சம்பந்தமாக சில பிரச்சினைகளைச் சொல்ல விரும்புகிறேன். அரசாங்கத் திட்டங்களைச் செயல்படுத்துகிறவர்கள் அரசுக்கு அஸ்திவாரமாக இருக்கக்கூடியவர்கள் அரசு ஊழியர்கள். அவர்களுக்கு பாராட்டினை நிதியமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். அவர் களுக்கு பாராட்டுதலையும் ஆறுதலையும் மட்டும் தெரிவித்திருப்பதால் திருப்தி ஏற்படாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய பஞ்சப்படி சென்ற ஆண்டு ஆகஸ்டு மாதம் கொடுக்கப்பட்டது. அதன் பிறகு உயர்ந்திருக்கின்ற விலைவாசிப் புள்ளி 403-லிருந்து 462 ஆகியிருக்கிறது. ஆகவே நான்கு பஞ்சப்படி தவணைகள் கொடுக்கப்பட வேண்டும். இடையில் மத்திய அரசு இரண்டு பஞ்சப்படி தவணைகளைக் கொடுத்துவிட்டது. ஆனால் தமிழக அரசு அவர்களுக்கு பஞ்சப்படி கொடுக்காமல் இருக்கிறது. அரசு ஊழியர்கள் பஞ்சப்படி கேட்பது என்பது நியாயமாகும். அதைக் கொடுக் காமல் மேன்லக்கு கால்யாணம், கழுத்தே சுகமாக இரு என்று சொல்வது சரி யாக இருக்காது. அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய நான்கு தவணைகள் பஞ்சப்படியை கொடுக்க அரசு முன்வர வேண்டும்.

ஓய்வு பெறும் அரசு ஊழியர்களுக்கு பத்தாயிரம் ரூபாய் கொடுக்கும் திட்டம் உடனடியாகக் கொண்டுவரப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். அரசு ஊழியர்களுக்கு போனஸ் என்ற முறையிலே எக்ஸ்-கிரேஷியோ போனஸ் என்றோ மேற்கு வங்காளம், திரிபுரா, பீகார், கேரளம், ஆந்திரா, கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் ஒரு மாத சம்பளம் கொடுக்கிறார்கள். அதைக் கொடுப்பதற்கான முறையில் நடவடிக்கை எடுத்து அரசு ஊழியர்களின் நம்பிக்கையைப் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பழிவாங்கும் நடவடிக்கைகள் வேளாண்மைத் துறை, கால்நடைத் துறை, கருவூலத் துறைகளில் இருக்கின்றன. அதன் காரணமாக ஆயிரக்கணக்கான ஊழியர்கள் வெளியே இருக்கிறார்கள். இந்தக் கொள்கையைக் கைவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-00)

இன்றையதினம் தொழிலாளர்கள் நலம் சம்பந்தமாக நாம் ஒரு சீரிய கொள்கையை அமுல்படுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். பீடித் தொழி லாளர்களுக்கு குறைந்தபட்ச சம்பளம் 1968 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப் பட்டது. இன்றுவரையில் அந்த அடிப்படையில்தான் கொடுக்கப்பட்டு வரு



1982 மார்ச் 5] [திரு. இரா. கருப்பையா]

கிறது. 1968-ல் நிர்ணயிக்கப்பட்டது, இன்றைக்கு ஆண்டு 1982. விலைவாசி விஷம்போல் ஏறியிருக்கிறது. இந்த நேரத்திலும் அதே சம்பளம்தான், மாற்றம் இல்லை.

அதைப்போல பல்வேறு வகைப்பட்ட தொழிலாளர்கள் இருக்கிறார்கள். கைத்தறித் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச சம்பளம் இன்றைக்கும் நிர்ணயம் செய்யப்படவில்லை. அதைப்போல அச்சுத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். ‘அன் ஆர்கனைஸ்டு லேபர்’ என்று சொல்லப்படுகின்ற தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் இருக்கின்ற விலை வாசிகள் அடிப்படையில் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை குறைந்தபட்ச சம்பளம் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சாலைப் போக்குவரத்துக் கழகங்கள் பற்றி ஒரு கருத்தைக் குறிப் பிட விரும்புகிறேன். பல்வேறு புதிய போக்குவரத்துக் கழகங்களை உருவாக்கப் போவதாகச் சொன்னார்கள், 1982-83 ஆம் ஆண்டில் அறிவிப்போம் என் றார்கள். இங்கே அதுபற்றி கூறப்பட்டிருக்கிறது. பல கழகங்களைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பெயர்களை நான் குறிப்பிட விரும்பவில்லை. ஆனால் கும்பகோணத்தில் இருக்கிற சோழன் போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரித்து, திருச்சியை மையமாக வைத்து மலைக்கோட்டை போக்குவரத்துக் கழகம் ஒன்றை அமைப்பதாகச் சொன்னார்கள்; அது இந்தத் திட்டத்திலே இல்லை. அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இன்றையதினம் மைய அரசின் நிதிக் கொள்கையின் காரணமாக மாநில மக்கள் நலன் பாதிக்கப்படு கிறது. இதைச் சுட்டிக்காட்ட மாநில அரசு தவறக்கூடாது. மத்திய அரசின் இத்தகைய போக்கைத் தட்டிக்கேட்க மாநில அரசு தலைமை தாங்கி, நிர்ப்பந் திப்பதன் மூலம்தான் மாற்றம் காண முடியும்; மாநில மக்கள் உரிமையைப் பாதுகாக்க முடியும். அப்படியானால்தான் மாநிலத்தில் ஏற்படுகிற சீரழிவு களிலிருந்து மக்களை பாதுகாக்க முடியும் என்ற உணர்வோடு மாநில அரசு செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, இன்றைக்கு இந்த நிதிநிலை அறிக்கை வாயிலாக நீங்கள் பட்டுத் துணி, விசைத்தறி துணிகளுக்கு விதித்திருக்கிற வரிகளை கைவிட்டுவிட்டு, ஏழை எளிய கைத்தறி நெசவாளர்களுக்கு பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

**டாக்டர் கே. சௌரிராஜன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே,
1982-83 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கைமீது இங்கே நடைபெறுகின்ற விவா
தத்தில் பங்கேற்று என்னை கருத்து சொல்வதற்கு அனுமதித்ததற்காக நன்றி
நவில்கின்றேன்.

இந்த நிதிநிலை அறிக்கை ஒரு புரட்சிகரமாக அமைந்திருக்கிறது என்று
சொல்ல வேண்டும். எதற்காக இப்படிச் சொல்கிறேன் என்றால் வாலாயமாக
மத்திய அரசு தன்னுடைய வரவு-செலவுத் திட்டத்தை அறிவித்த பிறகுதான்
மாநிலங்களில் உள்ள அரசாங்கங்கள் தங்களுடைய வரவு-செலவுத் திட்டங்
களை சமர்ப்பிப்பது வழக்கம். ஆனால் நம்முடைய அண்ணா திராவிட
முன்னேற்றக் கழக அரசு மத்திய அரசு அதை அறிவித்தாலும் சரி, அறிவிக்கா
விட்டாலும் சரி, அவர்கள் எப்படி வரவு-செலவுத் திட்டத்தை அளித்தாலும்
சரி, அதைப்பற்றி எங்களுக்கு அக்கறை இல்லை நாங்கள் தயாராக இருக்
கிறோம் என்று சொல்லி ஒரு நாள் முன்னதாக இந்த வரவு-செலவுத் திட்டத்தை
அறிவித்திருக்கிறார்கள் என்று இங்கே நான் கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

மத்திய அரசு வரவு-செலவுத் திட்டத்தை அறிவித்த பிறகுதான் மாநில
அரசு அறிவிக்க வேண்டுமென்று சொல்வதற்குக் காரணம் மத்திய அரசு அறி
விக்கின்ற திட்டத்தில் எந்த அளவுக்கு மாநிலத்திற்கு அதிகமாக நிதி ஒதுக்கீடு
கிடைக்கும் ; அவர்கள் எந்தெந்த பொருள்கள்மீது எக்சைஸ் வரி, மற்ற வரி
களை விதிக்கிறார்கள் என்று தெரிந்து, அவைகள் மேல் கை வைக்காமல் மற்ற
பொருள்கள்மீது, மாநில அரசின் அதிகாரத்திற்குள் வருகின்ற பொருள்கள்
மீது வரி போட்டால் நம்முடைய திட்டத்தை சரிவர செய்யலாம் என்ற அடிப்
படையில்தான் இது பழக்கவழக்கமாக இருந்து வருகிறது. ஆனால் இந்த
ஆண்டில் வரலாறு காணாத வகையில் ஒருநாள் முன்னதாக மாநில அரசு
வரவு-செலவுத் திட்டத்தை அறிவித்தது என்றால் நம்முடைய மாநில அரசு
நிதிச் செயலாளரும் அங்கே மத்தியில் இருக்கிற நிதிச் செயலாளரும் கலந்து
பேசி, அவர்கள் முடிவு செய்து அறிவித்து விட்டார்கள் என்றுதான் தோன்று
கிறது. அதை வைத்துக்கொண்டு நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் ஏதோ
வெளியே 'மேக் அப்' போட்டு கொண்டுவந்து நிறுத்துவதுபோல நிறுத்தி
யிருக்கிறார்கள். புதிதாக அவர்களால் ஒன்றும் செய்ய இயலாது ; முடியாது
என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாற்றுத் தலைவரவர்களே,
மத்திய அரசினுடைய நிதிநிலை அறிக்கையினை வெளியிடுவது பிப்ரவரித்
திங்கள் கடைசி நாளிலேதான் என்பது தொடர்ந்து இருந்து வருகின்ற



ஒன்றாகும். பிப்ரவரித் திங்களின் கடைசி நாள் 28 ஆம் தேதியாக இருந்தால் 28 ஆம் தேதியும், பிப்ரவரித் திங்கள் கடைசி நாள் 29 ஆம் தேதியாக இருந்தால் 29 ஆம் தேதியும் மாலை 5 மணிக்கு மத்திய அரசினுடைய நிதிநிலை அறிக்கையினை வைப்பது என்பது தொடர்ந்து இருக்கின்ற முறை.

ஆனால் நம்மைப் பொறுத்தவரையிலே சென்ற ஆண்டு கொஞ்சம் கால தாமதம் ஆகிவிட்டது. அப்போது மார்ச் திங்களிலேதான் நாம் நிதிநிலை அறிக்கையினை வைத்தோம். ஆனால் அதற்கு முன்பாகவே எப்போதும் போல பிப்ரவரித் திங்கள் கடைசி நாளிலே மத்திய அரசினர் நிதிநிலை அறிக்கையினை வைத்துவிட்டனர். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையிலே காங்கிரஸ் கட்சியினர் ஆண்டு வருகின்ற காலத்திலே இருந்து பார்த்தால் பிப்ரவரித் திங்கள் 22, 23, 24 போன்ற தேதிகளுக்கு முன்புகூட நிதிநிலை அறிக்கை வைக்கப்பட்டிருக்கின்றது. இரயில்வே அறிக்கை மட்டும் தான் மாநில நிதிநிலை அறிக்கைக்கு முன்பு வரும். மத்திய அரசின் நிதி நிலை அறிக்கை மாநில நிதிநிலை அறிக்கைக்கு பிறகுதான் வரும். ஆனால் வேறு சில மாநிலங்களிலே மார்ச் திங்கள் 15, 16, 17 தேதிகளில்கூட வோட் ஆன் அக்கவுன்ட் எடுத்துக்கொண்டு ஏப்ரல் மாதம் வரை போவார்கள். ஆகவே நம்முடைய மாநிலத்திலேயும் அந்த நிலை எப்போதுமே இருக்கும் என்று யாரும் கருத வேண்டாம் என்பதற்காகத்தான், அந்த நிலைமையினைத் தெளிவு படுத்துவதற்காகத்தான் நான் இந்த விளக்கத்தை அளித்தேனே அல்லாமல் மறுக்கவேண்டும் என்பதற்காக அல்ல.

**டாக்டர் கே. சௌரிராஜன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, நாவலர் அவர்கள் அளித்த விளக்கத்திற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நான் எதற்காகச் சொன்னேன் என்றால் மத்திய அரசு அறிவித்த திட்டங்களின்படி பார்த்தால் மாநில அரசுக்கு வரக்கூடிய வருவாயிலே ப்ரப்போர்ஷனேட் ஷேர் இன்னும் ஐந்து கோடி ரூபாய் அதிகமாகக் கிடைத்திருக்கும். ஆகவே அதையும் கணக்கிலே எடுத்துக்கொண்டு நல்ல முறையிலே திட்டங்களை அறிவித்திருக்கலாம்.

அடுத்துப் புதிதாக உயர்ந்தரகத் துணிகளுக்கும், பட்டுத் துணிகளுக்கும் வரி விதிக்கப்பட்டிருக்கின்றது. டயர், ட்யூப் போன்ற இவைகளுக்கெல்லாம் வரியினை விதித்திருக்கிறார்கள்; இவைகளை எல்லாம் தவிர்க்கின்ற வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். மற்ற பொருட்களின்மீது வரி விதித்திருக்கலாம் என்பதற்காகத்தான் நான் அதைக் குறிப்பிட்டுக் காட்ட ஆசைப்படுகிறேன்.

[டாக்டர் கே. சௌரிராஜன்] [1982 மார்ச்

அடுத்தபடியாக மத்திய அரசினுடைய திட்டத்தைப் பார்க்கின்ற நேர
திலே பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் 1981 ஆம் ஆண்டை இய
ஆஃப் கன்சாலிடேஷன் என்றும் 1982 ஆம் ஆண்டை இயர் ஆஃப் ப்ரடக்
விட்டி என்றும் அதாவது உற்பத்தி பெறுகின்ற வருஷமாக இருக்க வேண்டு
என்றும் கோடிட்டுக் காட்டி இருக்கிறார்கள். மாநிலங்களிலே உள்ள செ
லாளர்கள் அனைவரையும்கூட அவர்கள் அங்கே ஒரு மாநாட்டிலே கூட்
வைத்து இந்தத் திட்டங்களை நீங்கள் நிச்சயமாக அமல்படுத்த வேண்டு
என்றும் ஆப்பரேஷன் ஃபார்வர்ட் என்றும் வேகமாகச் செயல்படுத்த வேண்டு
என்றும் ஏற்கெனவே அறிவித்திருக்கிறார்கள். இதை எதற்காகச் சொல்
றேன் என்று சொன்னால் இந்த ஆண்டின் மத்திய அரசு வரவு-செலவுத்
திட்டத்தைப் பார்க்கின்றபோது ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் மற்றும் பிர
திட்டங்களுக்காக 58 சதவீதத்தை மத்திய அரசு ஒதுக்கி இருக்கின்றது. நமது
அரசு 20 அம்சத் திட்டத்தை வரவேற்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால்
அப்படி வரவேற்றால் மட்டும் போதாது. நம்முடைய நிதிநிலை அறிக்கை
யினைப் பார்த்தால் ரிசிப்ரோகேட் என்ற அந்த அளவிலே மாநிலத்திலே
போதிய திட்டங்களை நாம் வகுத்துக் கொண்டு இருக்கிறோமா என்று பார்த்
தால் உள்ளபடியே எனக்கு மெத்த டிஸ அப்பாயின்ட்மென்டாக, ஏமாற்றமாகத்
தான் இருக்கின்றது. எந்தவிதமான வரவு-செலவுத் திட்டத்தையும் நாம்
அறிமுகப்படுத்துகின்ற நேரத்திலே உள்ளபடியே இன்று இருக்கின்ற சூழ்நிலை
யிலே Transfer of population from villages to urban area கிராமப்
புறத்திலே வசிக்கின்ற மக்கள் மிக வேகமாக நகரங்களை நோக்கி வருகின்ற
சூழ்நிலைதான் உருவாகிக்கொண்டிருக்கின்றது. ஏனென்றால் கிராமப்புறத்
திலே இருக்கின்ற மக்களுக்கு வாழ்வு இல்லை, வாழ்வதற்கு வழி இல்லை. அவர்
களுக்கு வேலைவாய்ப்பு இல்லை. அவர்கள் அரைப்பட்டினியும், கால்
பட்டினியுமாக பொழுதைக் கழிக்க வேண்டி இருக்கிறது. ஆகவேதான் கெட்டும்
பட்டணம் சேர் என்ற வகையில் ஏராளமான மக்கள் நகரங்களை நோக்கி
வந்துகொண்டிருக்கின்ற நிலைமையிலே எக்மோர் ஸ்டேஷனிலும் மற்ற பகுதி
களிலும் பார்க்க முடிகின்றது. அதைத் தடுத்து நிறுத்த வேண்டியது அரசி
னும் பார்க்க முடிகின்றது. அதைத் தடுத்து நிறுத்த வேண்டியது அரசி
னுடைய கடமை. அதற்காக நல்ல முறையிலே திட்டங்களை உருவாக்கி
கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதற்கு வழிவகை செய்ய
வேண்டும் என்பதை நான் இங்கே ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.



1982 மார்ச் 5] [டாக்டர் கே. சௌரிராஜன்]

வரவு-செலவுத் திட்டத்திற்கு முன்பும், தேர்தல் காலங்களிலும் நாம் வாக்
குறுதிகளை அள்ளி வீசிக்கொண்டிருக்கிறோம். அப்படி அள்ளி வீசிய வாக்
குறுதிகளை போன ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தை எடுத்துக்கொண்ட
நேரத்திலே எந்த அளவுக்கு இந்த அரசு செயல்படுத்தியது என்பதைப்பற்றி
கேட்பதற்கு எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு உரிமை இருக்கின்றது. மக்களும்
அதைக் கேட்பார்கள் என்பதை நீங்கள் மனதிலே கொள்ளவேண்டும் என்று
நினைவுபடுத்த வேண்டியது என்னுடைய கடமை. பிள்ளைத் தாய்ச்சிகளா
பிடியுங்கள் 150 ரூபாய், வேலை இல்லாப் பட்டதாரிகளா இந்தாப் பிடியுங்கள்
50 ரூபாய் என்று வாக்குறுதிகளை அள்ளி வீசினீர்களே, அதை எந்த அள
வுக்குப் போன ஆண்டு வரவுசெலவுத் திட்டத்திலே செய்து வந்திருக்கிறீர்கள்
என்பதில் மக்களுக்கு நீங்கள் பதில் சொல்லியாக வேண்டும். அதை உங்களுக்கு
நினைவுபடுத்த வேண்டியது என்னுடைய கடமையாகும் என்றும் கருதுகிறேன்.

(பிற்பகல் 1.10)

அதற்கு குறிப்பாக மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் அவர்கள்
சொன்னார்கள், எல்லோருக்கும் நிறைய செய்ய வேண்டும் என்பதுதான் எங்க
ளுடைய ஆசை. ஆனால் செய்யத்தான் முடியவில்லை. எங்களுடைய அந்த
உணர்வை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று நைசாக சொல்லி
தப்பித்துக் கொண்டுள்ளார்கள். உள்ளத்திலே உண்மையாக அந்த உணர்வுகள்
இருக்கிறபோது அதை உறுதிப்படுத்தி வெளிக்கொண்டுவந்து செயலிலே
காட்டுவதில் என்ன முயற்சிகளை நீங்கள் எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள்
என்பதைச் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன். ஏனென்றால் இப்படியே போய்க்கொண்டிருந்தீர்களானால்
நிச்சயமாகப் பொதுமக்கள் அதை விரும்பமாட்டார்கள்.

எனக்குக்கூட ஒரு ஆசை வந்துவிட்டது. தேர்தல் காலத்திலே ஒரு
பத்துப் பேர்களைக் கூட்டு சேர்த்துக்கொண்டு, காலையில் இட்லி வடை
சாம்பார் 2 பிளேட்டுகள், மத்தியானமானால் அரை பிளேட் பிரியாணி, சாயந்
திரத்தில் சப்பாத்தி குருமா, அல்லது டீயும் பன்னும் என்று வாங்கிக் கொடுத்து
கொண்டிருந்தால், மக்கள் எனக்குக்கூட அதிகமாக வாக்களித்து, என்னைக்
கூட அமைச்சராக ஆக்கிவிடுவார்கள் என்னும் ஆசை வந்துவிட்டது. அந்த
அளவுக்கு மக்களும் போய் விட்டார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்
படுகிறேன். (குறுக்கீடு)

திரு. ஏ. சி. சண்முகம் : மாற்றுத் தலைவர் அவர்களே, மக்களின் வாக்கு [1982 மார்ச் 5
களைப் பெற்றுத்தான் அவரும் இங்கே வந்திருக்கிறார்.
சின்னத்திலே நின்று வெற்றி பெற்றார். அப்போது எந்தக் கட்சியில் அவர் அவர் எந்தச்
இருந்தார் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சௌரிராஜன்
அவர்கள் விளக்குவார்களா ?

டாக்டர் கே. சௌரிராஜன் : மாற்றுத் தலைவர் அவர்களே, மக்கள்
எனக்கு வாக்களித்த நேரத்தில் ரோஜா சின்னத்தில் நின்றேன். அந்தச் சின்னம்
அப்போது தனியாகத்தான் இருந்தது. அதற்குப் பின்னால் உங்களுடைய
புரட்சித் தலைவர் அவர்களே சொல்லி விட்டார்கள், தேர்தல் காலத்திலே
கொடுக்கப்பட்ட உடன்பாடுகள், கூட்டுக்கள், கட்டுப்படுத்தப்பட மாட்டாது
என்று சொல்லி விடுவித்து விட்டார்கள்: அதிலே என்னையும் அவர்கள் விடு
வித்திருக்கிறார்கள். ஆகவே என்னைப்பற்றி ஆராய உரிமை இல்லை என்
பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்தபடியாக சென்ற ஆண்டு நாம் மதுவிலக்கைத் தளர்த்திய போது,
ரத்து செய்த போது, எங்களுக்கெல்லாம் வருத்தமாக இருந்தாலுங்கூட, இந்தத்
தமிழகத்திலே மற்ற மாநிலங்களைவிட அதிகமான அளவு இதன்மூலம்
வருமானம் கிடைக்கும், "Excise revenue due to the lifting of
prohibition will be more" என்று நினைத்து, அந்த வருமானத்தை
வைத்துப் பல திட்டங்களை நம்முடைய தமிழகத்திற்கு உருவாக்க முடியும்
என்று எங்களைப் போன்றவர்கள் நம்பினோம்; ஆனால் அதிலிருந்து 146
கோடி ரூபாய் வருமானம் வந்த போதும் கூட, அது எந்த அளவுக்கு நாட்டு
நன்மைக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்று சொன்னால், மூழ்கிக்
கொண்டிருக்கிற எலக்ட்ரிசிடி போர்டை காப்பாற்றத்தான் பயன்பட்டிருக்
கிறதே ஒழிய, வேறு எந்தவிதமான உருப்படியான நன்மையும் மக்களுக்கு
ஏற்படவில்லை என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதே மின்துறை பல ஆண்டுகளுக்கு முன்னால், பல பேர்களின்
கையினால் நிர்வகிக்கப்பட்டு வந்திருக்கிறது. காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே
யும் சரி, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலேயும் சரி, பல
பேர்களால் நிர்வாகம் செய்யப்பட்டு வந்திருக்கிறது. நம்முடைய மின்துறை
அமைச்சர் மின்துறையில் ஒரு பொறியியல் பட்டதாரி. அப்படிப்பட்ட அவர்
களுடைய காலத்திலாவது இந்த மின்துறை அதிகமாகச் செயல்பட்டு, லாபகர



மான லட்சியத்தைக் கடைப்பிடிக்கும் என்று நினைத்த நேரத்தில், அது மூழ்கிக் கொண்டிருக்கிறது என்று சொன்னால், படித்தவர்கள் எல்லாம் வியாபாரம் செய்தால், அந்த வியாபாரம் உருப்படாது என்று சொல்வார்களே, அதற்கு எடுத்துக் காட்டாக இருக்கிறது என்றுதான் கூற வேண்டும்.

நம்முடைய மின்துறை அமைச்சர் அவர்களே ஒருமுறை கூறியிருக்கிறார்கள். மின்துறைப் பொறியியல் பட்டம்பெற்ற என்ஜினியர்கள் எல்லாம் தனியாகத் தொழில் செய்வது என்றும் அப்படி அது லாபமாக நடக்கவில்லை என்றால், சேர்த்துக் கொள்ளலாம் என்றும் ஒரு புதிய திட்டத்தைச் சொன்னார்கள். ஆகவே, வியாபாரம் செய்வது என்பது வேறு. நிர்வாகம் செய்வது என்பது வேறு என்பதை எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய நிதிநிலை அறிக்கையில் வேறு என்னென்ன வரிகள் போட்டிருக்கிறார்கள் என்று விவாதிப்பதற்கு முன்னாலே, நீங்கள் அறிவித்திருக்கிற திட்டங்களைப்பற்றி நான் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். ஏதோ குறை சொல்ல வேண்டும் என்ற காரணத்தால் சொல்லவில்லை. கேலி செய்ய வேண்டும் என்ற எண்ணத்திலும் சொல்லவில்லை.

அதற்குப் பதிலாக நான் எதைச் சொல்ல விரும்புகிறேன் என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். உதாரணமாக, பற்பொடி இலவசமாகக் கொடுக்கப்படும் என்று ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறீர்கள். உள்ளபடியே அது வரவேற்கத்தக்கதுதான். கிராமப்புற மக்களின் பற்கள் சுகாதாரமான முறையில் பாதுகாக்கப்பட வேண்டியதுதான். அப்படிப் பாதுகாக்க வேண்டியது அரசின் கடமை. புரட்சித் தலைவர் அவர்கள்கூட சொல்லியிருக்கிறார்கள், கிராம மக்கள் செங்கற் பொடி, கரிப் பொடி இவற்றை உபயோகிப்பதால், புற்று நோய் வருகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். எந்த மருத்துவ சாஸ்திரத்தில் அதற்கு ஆதாரம் இருக்கிறது என்று தெரியவில்லை. நான் படித்த வரையில், கடுமையான சில பொருள்களைவைத்துப் பல் தேய்ப்பதால் பல்லின் இனாமல் போய்விடும், அப்படிப் இனாமல் போய்விட்டால் பல் சொத்தையாகும். அப்படிப் பற்கள் சொத்தையாகிப் போகும்போது நாக்கில் புண் வரும். அந்தப் புண் வெகுகாலமாக இருக்குமானால் அது புற்றுநோயாக வாக்கூடிய வாய்ப்புள்ளது என்பதுதான் மருத்துவ சாஸ்திரம் கண்டு வந்துள்ள உண்மை நிலை. ஆகவே இதற்கும் அதற்கும் முடிச்சுப் போடுவது சரியான

தல்ல: இன்றைக்கு இலவசமாக பல்பொடி வழங்குவதால் கிராம மக்களின் பற்கள் சுத்தமாக இருக்கும். அவை வெண்மையாக இருக்கும்; அவ்வளவுதான். அதனால் புன்னகை அரசர்களாக, புன்னகை அரசிகளாக மாறுவார்கள். எப்போதும் நம்மைப் பார்த்து நாங்கள் * * என்று சொல்வார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள்.

**டாக்டர் கே. சௌரிராஜன் :** நான்தான் ஒரேஒரு சுயேச்சை உறுப்பினர். எனக்கு சிறிது அதிக நேரம் கொடுக்க வேண்டும்.

கிராம மக்கள் எப்போதும் * * *

வைத்துக்கொள்வதற்கு இந்த அரசு விரும்பக்கூடாது. அதற்குப் பதிலாக நான் ஒரு மாற்றுத் திட்டத்தைக் கூற விரும்புகிறேன். கிராம மக்கள் பற்கள் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியந்தான்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** * * என்ற வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடும்படி ஆணையிடுகிறேன்.

**டாக்டர் கே. சௌரிராஜன் :** நாம் இலவசக் கண் சிகிச்சை முகாம் நடத்துகிறோம். இலவச மருத்துவ சோதனை முகாம்கள் நடத்துகிறோம். அதே போல் கிராமங்களில் உள்ள மக்களுக்காக என்று இலவச பல் வைத்திய முகாம் வைத்து சொத்தைப் பற்களைப் பிடுங்க வேண்டும். அதுதான் உண்மையான பரிகாரம் என்று சொல்லி அதில் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.)

வரி விதிப்புபற்றி குறிப்பாக அர்பன் லான்ட் டாக்ஸ் பற்றி சொல்ல விரும்புகிறேன். அர்பன் லான்ட் டாக்ஸை உயர்த்தியிருக்கிறார்கள். அது தவறான கொள்கை என்பதைச் சொல்ல விரும்புகிறேன். அர்பன் லான்ட் டாக்ஸ் 1971-ல் இருந்த அடிப்படையில் போட்டிருக்கிறோம்: இப்போது விலை வாசி ஏறிவிட்டது என்பதால் 1981 அடிப்படையில் போடவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இதனால் அதிகமாக பணம் வரப் போவதில்லை. ஆனால் 1971ல் நான்கு கிரவுன்ட்ஸ் வாங்கியவர்கள் நகரத்தை விட்டே ஓட வேண்டிய நிலைமை உருவாகிவிடும் என்பதால் அந்த எண்ணத்தையே

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



கைவிட வேண்டும். புதிதாக நகரத்திற்குள்ளே நிலம் வாங்குகிறவர்களுக்கு அந்த அடிப்படையில் வரி விதிப்பு செய்ய வேண்டும் என்ற முறையில் மாற்றி அமைக்க வேண்டும்.

அடுத்தபடியாக: மின்சாரப் பற்றாக்குறை இருப்பதால் மின்சக்தியை அதிகப் படுத்த என்ன யோசனைகள் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மின் சாரத் துறை அமைச்சர் அவர்களை எனெர்ஜி மினிஸ்ட்டர் என்று சொல்லி விட்டு, ஆல்டர்னேட்டிவ் சோர்ஸ் ஆஃப் எனெர்ஜி தமிழ்நாட்டில் உருவாக்க முடியும் என்று சொன்னால் சாணத்திலிருந்து எரிவாயு, கோபர்காஸ் தயாரிக் கலாம். தமிழ்நாட்டில் உருவாக்கிய திட்டம்தான் இந்த கோபர்காஸ் திட்டம். இங்கே உருவாகிய இந்தத் திட்டத்தைச் சைனாவில் நல்ல முறையில் அமலாக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டில் மட்டும் ஏன் அந்தத் திட்டம் விரிவான முறையில் பயன்படுத்தப்படவில்லை என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

கடைசியாக, சென்னை நகர மேம்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள பணம் நிச்சயமாகக் குறைவாகும். சாலைகள் மட்டும் போடுவதற்கே 35 கோடி ரூபாய் தேவைப்படும்.

நூறு கோடி ரூபாய் திட்டம் என்ற ஒரு திட்டத்தை உருவாக்கி இருக் கிறோம், ஏழைக் குழந்தைகளுக்கு இலவசமாக ஒருவேளை உணவு அளிக்க வேண்டும் என்று. அதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களை நான் நிச்சயமாக பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் என்னவென்று சொன்னால், பசி யாருக்கு இருக்கிறது என்பதை முகத்திலிருந்து கண்டு பிடிக்கக்கூடிய திறமை படைத்தவர் புரட்சித் தலைவர் அவர்கள். அதில் ஒரு சிறிய கோளாறு இருக்கிறது. ஏழைக் குழந்தைகள் பட்டினி கிடக்கிறார்கள் என்று சொன்னால் ஏன் அவர்கள் பட்டினி கிடக்கிறார்கள்? தகப்பன் வாயில் சாராயத்தை ஊற்றிவிட்டு தாயாரை வேலையில்லாமல் கிராமத்தில் திண்டாட விட்டு குழந்தைகள் அழுகின்றன, பட்டினி பசியாக இருக்கின்றார்கள் என்றால் இதில் என்ன நியாயம்

(பிற்பகல் 1-20)

ஆகவே, இந்தத் திட்டத்தை வெறும் காசு கொடுப்பதால், உணவு கொடுப் பதால் மாத்திரம் நிறைவேற்றிவிட முடியாது. நல்ல முறையில் அந்தப் பணத்தைச் செலவழித்து, அதற்கு ஆக்கபூர்வமான ஒரு திட்டத்தை உரு வாக்கி, ஜாதியற்ற சமுதாயத்தை உருவாக்கப் போகிறோம் என்று சொல்ல

[டாக்டர் கே. சௌரிராஜன்] [1982 மார்ச் 5

தோடு, எல்லாக் குழந்தைகளுக்கும் இலவச போர்டிங் ஸ்கூல் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1982-83 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக் களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

உணவு நிலைமை சென்ற ஆண்டு வறட்சியால் பாதிக்கப்பட்டு, குடி தண்ணீரும் இன்றி அவதிக்குள்ளாகி இருந்து வந்தது. ஆனால், இந்த ஆண்டு 1982-83-ல் நெல் உற்பத்தி 68 இலட்சம் டன் என்றும், சிறு தானியங்கள் உற்பத்தி 23.50 இலட்சம் டன் என்றும், பயிர் வகை உற்பத்தி 4.80 இலட்சம் டன் என்றும் உயர்ந்திருப்பது, இந்த அரசு எடுத்துக்கொண்ட முயற்சியின் விளைவாக ஏற்பட்டிருக்கிறது என்பதை பெருமையோடு சொல்லக் கடமைப் பட்டுள்ளேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

இன்றியமையாப் பொருள்களை மக்கள் வாங்குவதற்காக, பல்வேறு நியாய விலைக் கடைகளை ஏற்படுத்தி உணவு பங்கீட்டுக் குடும்ப அட்டைகள் 75 ஆம் ஆண்டு வழங்கியுள்ளார்கள். ஆனால், நமது அரசு இந்த நிலைமையை மாற்றி தற்சமயம் உள்ள குடும்ப விகிதாச்சாரத்தின் அடிப்படையில் புதிய குடும்ப அட்டைகள் விநியோகம் செய்ய வகை செய்திருப்பதைப் பாராட்டியும், இந்த புதிய அட்டைகளை விரைவிலேயே எல்லாத் தரப்பு மக்களுக்கும் கிடைக்க ஆவன செய்யும்படியும் கேட்டுக்கொள்கிறேன்.

சிறு உழவர்கள், சொற்ப நில உழவர்கள் கிராமங்களில் பங்கு முறையில் பயிர் செய்பவர்கள், வேளாண்மைத் தொழிலாளர்கள், ஆதி திராவிடர்கள், பழங் குடியினர் முதலியோரின் குடும்பங்கள் அடங்கிய சமுதாயத்தின் நலிந்த பிரிவி னர்களின் நலனுக்காக இந்த அரசு கிராம வளர்ச்சி ஒருங்கிணைந்த திட்டத்தில் சிறப்பு நாட்டம் செலுத்தி, நடப்பு ஆண்டில் இதற்காக ரூபாய் 22.56 கோடி என்றும், வருகின்ற ஆண்டில் அது 30 கோடியாக அதிகப்படியாக்கி இருப்ப தைப் பார்க்கிறபோது, ஏழை எளியவர்கள்மீது இந்த அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளதைக் காட்டுகின்றது.



1982 மார்ச் 5] [திரு. ஏ. தங்கராசு]

ஏழை எளிய பாமர மக்களுக்கு என்று வாழ்க்கையில் நலிவுற்றிருக்கின்ற சமுதாயம் ஏற்றம் பெறுவதற்காக ஆனந் பால் பண்ணை வளர்ச்சிக் கூட்டுறவு சங்கங்களை ஏற்படுத்துவது என்று இந்த அரசு கொள்கை முடிவு செய்திருப்பதை பாராட்டி வரவேற்கிறேன். கூட்டுறவுச் சங்கங்களில் ஆதி திராவிடர் வகுப்பைச் சார்ந்த ஒரு இலட்சம் குடும்பங்களில் ஒவ்வொருவரை வேளாண்மை பணி கூட்டுறவு சங்கங்களில் கூட்டுறவு உறுப்பினராகச் சேர்த்து அவர்களுக்கு வங்கியின் மூலமாகப் பல சலுகைகளை அளிக்க வகை செய்திருப் பதைக் கண்டு இந்த அரசைப் பாராட்டுகிறேன்.

இம்மாநிலத்தில் மின்சாரத் துறைதான் நிதி ஆதாரங்களைப் பாதிக்கும் துறையாக அமைந்திருக்கிறது. ஆனாலும், இந்த அரசு ஏழை எளிய தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்காகவும், ஏழை சிறு விவசாயிகளுக்காகவும் இந்தச் சுமையை ஏற்றுக்கொண்டு மின் உற்பத்திக்காக அடுத்த ஆண்டு 220 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது, இந்த அரசு வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கும் பாமர மக்கள் ஏற்றம் பெறுவதற்காக என்று செய்திருப்பதற்காக இந்த அரசைப் பாராட்டுகிறேன்.

இந்த அரசு வேலை வாய்ப்பை அதிகப்படுத்த வேண்டும் என்ற அடிப் படையில், கரும்புச் சக்கையிலிருந்து செய்தித் தாள், எழுதும் தாள் தயா ரிக்கும் தொழிற்சாலையை ரூ. 190 கோடி மதிப்பீட்டுச் செலவில் செயல்படுத்த முன்வந்திருப்பது, இந்த அரசு தொழிலாளர்களுக்காக செயல்படுகின்ற அரசு என்பதைத் தெளிவுபடுத்துகின்றது. சிறு தொழில்கள் வளர்ச்சிக்காக இந்த அரசு நடப்பாண்டில் 45 கோடி ரூபாய் ஒதுக்கியும், வருகின்ற ஆண்டில் 60 கோடி ரூபாயாக உயர்த்தியிருப்பதும், இந்த அரசு சிறு தொழில்கள் வளர்ச்சி யிலே எவ்வளவு அக்கறை, ஆர்வம் காட்டுகின்றது என்பதைத் தெளிவுபடுத்து கின்றது.

கைத்தறித் துணிக்காக இந்த மாநிலத்தில் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 27.32 கோடி ஒதுக்கியிருக்க, ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 84.58 கோடியாக அதிகப்படுத்தப்பட்டு உள்ளதிலிருந்து இந்தத் தொழில் குறித்து மாநில அரசுக்கு எவ்வளவு அக்கறை இருக்கிறது என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. நெசவாளர்களை கைத்தறி முதலாளிகளின் பிடியிலிருந்து விடுவிக்க, நெசவாளர் கூட்டுறவு சங்கம் அமைத்து, அந்த அமைப்பின்கீழ் கொண்டுவர ஏற்பாடுசெய்துள்ள இந்த அரசைப் பாராட்டிப் போற்றுகிறேன்.

[திரு. வ. தங்கராசு] [1982 மார்ச் 5

பல்வேறு திட்டங்கள் மூலம் கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதே தன்னிறைவுத் திட்டத்தின் நோக்கமாகும். 1980-81ல் 69 வளர்ச்சி வட்டாரங்களும், அதற்கடுத்து 150 வளர்ச்சி வட்டாரங்களும் படிப்படியாக மீதமுள்ள வளர்ச்சி வட்டாரங்களை எடுப்பது என்றும், இந்த முடிவெடுத்து பல நல்ல காரியங்களுக்காக கிராமப்புறங்களில் பலகோடி ரூபாய் திட்டங்களின் மூலமாக செலவு செய்து, பயனுள்ள வகையில் வேலைகள் நடைபெற்று வருகின்றது. ஆனால் கிராமப்புறங்கள் மட்டும் போதாது என்று சொல்லி, வருகின்ற நிதி ஆண்டில் நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் அரசு பேரூர் ஆட்சிகளிலும் இந்தத் தன்னிறைவுத் திட்டத்தைத் நீட்டி, அதற்காக ரூபாய் 10 கோடி ஒதுக்கியுள்ளதை நான் வரவேற்றுப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் தகுதி அடிப்படையில் 1,000 கூடுதல் ஆசிரியர்களை ஏற்படுத்தியும் அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு இட வசதி ஏற்படுத்துவதற்காக இந்த அரசு ரூ. 167.50 இலட்சம் வருகின்ற ஆண்டில் நிதி ஒதுக்கியுள்ளது பற்றியும், அதற்கடுத்து முதியோர் கல்வித் திட்டம் என்ற பெயரில் 61 வளர்ச்சி வட்டாரங்களில் செயல்படுத்தப் படும். 50 ஊராட்சி ஒன்றியங்களில் முறைசாராக் கல்வி நிலையங்களும், எழுதப்படிக்கத் தெரியாதவர்களுக்காக 122 தொடக்கக் கல்வி நிலையங்களும் வருகின்ற ஆண்டில் ஏற்படுத்தியிருப்பதைப் பாராட்டி வரவேற்கிறேன்.

வருவாய்த் துறை நிர்வாகத்திலே நிலச் சொந்தக்காரர்களுக்குச் சொந்தமான நிலங்களை நிலப் பதிவேடுகளில் நில உரிமையாளர் பற்றிய விபரங்கள் எழுதி வைக்கும் திட்டம் தமிழ்நாட்டில் மட்டும்தான் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு இந்த முறையைச் செயல்படுத்தி வருகின்றது. ஆனால் சில மாவட்டங்களில் மட்டும் இந்த வேலை நடைபெறுகின்றது. இருந்தும் இந்தப் பணியைத் துரிதப்படுத்தி எல்லா மாவட்டங்களிலும் செயல்படுத்திட 8 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதைப் பாராட்டுகின்றேன்.

தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள வடலூரில் வள்ளல் பெருமான் அவர்கள் பல சீர்திருத்தக் கருத்துக்களை பேரறிஞர் அண்ணா அவர்களும், தந்தை பெரியார் அவர்களும் ஏற்றுக் கொண்டிருந்த கருத்திற்கிணங்க பல நூல்களின் மூலமாகத் தெளிவுபடுத்தி வடலூரில் தர்மசாலை ஏற்படுத்தி அன்னதானம் மூன்று வேளையும் உணவளிப்பதற்குத் தொடங்கி தொடர்ந்து வடலூரில் நடைபெற்று வருகின்றது. வள்ளல் பெருமான் மூன்று வேளை உணவு அளிப்பதற்கு வகை செய்தார். ஆனால் நமது வள்ளல் தமிழக முதல்வர்



1982 மார்ச் 5] [திரு. வ. தங்கராசு]

புரட்சித் தலைவர் அவர்கள் கேட்பாரற்றுக் கிடக்கின்ற ஏழை எளிய குழந்தைகளுக்கு ஒருவேளை உணவு அளிப்பதற்குத் தமிழகம் பூராவும் திட்டத்தைத் தீட்டி இருக்கின்றார்; உணவு அளிக்க முன்வந்திருக்கின்றார். இதையெல்லாம் பார்க்கின்றபோது, வள்ளல் பெருமானுடைய கொள்கைகள் பின்பற்றப்படுகின்றது. அந்த வள்வல் பெருமானுடைய புகழும் பெயரும் தமிழகத்திலும் மற்றும் அண்டை நாடுகளிலும் பயன்படுகின்ற வகையில் தென்னார்க்காடு மாவட்டத்தை வள்ளலார் மாவட்டமாக ஏற்படுத்தித் தரவேண்டுமென நம்முடைய வள்ளல் பெருமான் இதய தெய்வம் தமிழக முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

வடலூர் இராமலிங்க சுவாமிகள் ஜோதியாய் மறைந்த சத்திய ஞான சபையைச் சுற்றி சுமார் 80 ஏக்கர் இடங்கள் உள்ளன. அதில் நிர்வாகத்தில் உள்ளவர் ஒருவர் தனக்குச் சொந்தமான, ஆலயத்தைச் சுற்றியுள்ள இடத்தை ஏற்படுத்தி வைத்துள்ளார். அந்த இடத்தை இந்த அரசு நில ஆர்ஜிதம் செய்து வடலூர் வள்ளல் பெருமான் சத்திய ஞான சபைக்கு ஒப்படைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நெய்வேலியில் இலங்கைத் தமிழர்கள் 4,000 பேர்கள் குடியேற்றப்பட்டு அவர்கள் வாழ்வதற்கு வேளாண்மைப் பண்ணை ஏற்படுத்தி பயிர் செய்து வந்தார்கள். அந்தப் பண்ணையில் உள்ள அதிகாரிகளின் திறமைக் குறைவால் அந்தப் பண்ணை நஷ்டத்தில் இயங்குவதாகச் சொல்லி அங்கு உள்ள இலங்கை தமிழர்களுக்குச் சரிவர வேலை தராததினால் அவர்கள் இன்று வறுமையால் பாதிக்கப்பட்டு உள்ளார்கள். நெய்வேலியில் உள்ள அந்த இலங்கைத் தமிழர்களுக்கு உடனடியாக வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எப்படி ஒரு விவசாயி தன்னுடைய குடும்பத்தை வளப்படுத்துவதற்கு பாடுபடுகிறானோ அதே அடிப்படையில், நம்முடைய மாண்புமிகு நாவலர் அவர்கள் இந்த வரவு-செலவுத் திட்ட அறிக்கையை ஏற்படுத்தித் தந்தமைக்கு நன்றி கூறி, நிதிநிலை அறிக்கையைப் பாராட்டி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று மாலை 4.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.28 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.

[1982 மார்ச் 5

மாலை 4 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு.
பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, 1982-83 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய
கருத்தையும் கூற விரும்புகின்றேன். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்
சமர்ப்பித்திருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையில் முற்போக்கான திட்டம்
எதுவும் இல்லாதது உள்ளபடியே வருத்தத்துக்குரியது. ஏழை, நடுத்தர மக்களை
பாதிக்கக்கூடிய வகையில் இந்த நிதிநிலை அறிக்கை இருக்கிறது என்பதைச்
சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் இந்த
நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட பிறகு தமிழ்நாட்டில் இருக்கின்ற
விவசாயிகளுக்கு அடுத்தபடியாக பெருவாரியாக இருக்கின்ற நெசவாளப்
பெருங்குடி மக்களிடையே ஒரு அசாதாரண நிலை அமைதியற்ற சூழ்நிலை
காணப்படுவதை நாம் எல்லோரும் உணர்ந்திருக்கிறோம். இன்றைய தினம்
மாநிலத்திற்குத் தேவையான அளவுக்கு வருவாய் இல்லை என்று இங்கே
பேசிய ஆளுங்கட்சியினர் சுட்டிக்காட்டினர். மதுவிலக்கைத் தளர்த்திய
பிறகுங்கூட 147 கோடி ரூபாய்தான் வருவாய் அதிகரித்திருக்கிறது என்ற
தகவலை நிதியமைச்சர் சொல்லியிருக்கிறார். இருப்பினும் 204.44 கோடி
ரூபாய் பற்றாக்குறையாக இருக்கிறது என்பது உள்ளபடியே உங்களுடைய
திறமையின்மையைத்தான் சுட்டிக்காட்டுகிறது. இந்தப் பற்றாக்குறை நிதி
நிலை அறிக்கைக்குக் காரணம் மின்சார வாரியத்திலே ஆண்டுதோறும் சுமார்
100 கோடி ரூபாய்க்கு மேல் இழப்பு ஏற்படுகிறது என்று சொல்கிறார்கள். இந்த
நட்டத்தைத் தவிர்த்து நீங்கள் திறமையான நிர்வாகிகளாக இருந்தால்—லாப
கரமாக நடத்திக் காட்ட முடியும். அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்ச
ராக இருந்தபோது மாநிலத்தின் போக்குவரத்துத் துறை நட்டத்திலே இயங்கி
வந்தது. எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றுக்
கொண்டதற்குப் பிறகு போக்குவரத்துக் கழகங்கள் அமைக்கப்பட்டன.
அதற்குப் பிறகு போக்குவரத்துக் கழகங்கள் லாபகரமாக இயங்கிக் கொண்
டிருக்கின்றன. அதேபோன்று நீங்கள்கூட இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு
தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணத்தில் கிராமிய கூட்டுறவு மின்சார
சங்கத்தைத் துவக்கியிருக்கிறீர்கள். கடந்த இரண்டு ஆண்டு காலமாக அது
திறமையாக இலாபகரமாக இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்த அடிப்
படையில் இந்தத் திட்டத்தை நாடு முழுவதும் விஸ்தரிப்பீர்களானால் இந்த
அரசாங்கம் மின்சார வாரியத்திலே ஏற்படுகிற இந்த இழப்பீட்டைச் சரிக்கட்டி
விட முடியும். ஏதோ காரணத்தாலே உங்களுக்கு நெசவாளர்கள் மீ



வெறுப்பு என்றுகூட என்னால் சொல்ல முடியும். அவர்கள் எல்லாம் பாதிக்கப்
படுகிற அளவுக்குக் கைத்தறிப் பட்டிற்கு 5 பைசா வரி விதித்திருக்கிறீர்கள்.
சென்ற ஆண்டு 1981-82 ஆம் ஆண்டில் 4 சதவீதம் பலமுனை விற்பனை
வரியாக இருந்தபோது மாநிலத்தின் வருவாய் 552.23 கோடியாக இருந்தது.

ஆனால் ஐந்து சதவீதமாக உயர்த்தியதற்குப் பிறகு வரவேண்டிய தொகை
690.29 கோடி ரூபாயாக இருக்க வேண்டும். ஆனால் நமது நிதியமைச்சர்
அவர்கள் அறிவித்துள்ளபடி 620.10 கோடி ரூபாய் என்று இருக்கிறது. இதனால்
அதிகமாகக் கிடைப்பது 68.13 கோடி ரூபாய் மட்டுமே என்று கூறுகிறார்கள்.
மீதி 70.19 கோடி ரூபாய் எங்கே போயிற்று என்று தெரியவில்லை.

இங்கே பேசிய ஆளுங்கட்சி உறுப்பினர்கள், மத்தியிலே நம்மிடத்திலே
யிருந்து வசூலிக்கின்ற வரிகளில் நமக்குப் பங்குத் தொகையை அதிகமாகக்
கொடுக்க வேண்டுமெனக் கோரினார்கள். நான் ஒன்றை ஞாபகப்படுத்த
விரும்புகிறேன். சென்ற பாராளுமன்றக் கூட்டத் தொடரில் மாநிலங்கள்
வசூல் செய்து கொண்டிருக்கின்ற மருந்துப் பொருள்களின் மீதான விற்பனை
வரி, மின்சாரப் பொருட்கள் மீது விதிக்கப்படுகின்ற விற்பனை வரி ஆகிய
இதுபோன்ற ஒரு சில வரிகளையெல்லாங்கூட மத்திய அரசு எடுத்துக்கொள்ளப்
போவதாக ஒரு அறிவிப்பு அங்கே வந்தது. ஆனால் அங்கே திராவிட
முன்னேற்றக் கழக இராஜ்ய சபா உறுப்பினர் திரு. வை. கோபால்சாமி
அவர்கள் அதை எதிர்த்து அங்கே பேசியிருக்கிறார்கள். அதைக் கண்டித்துப்
பேசியிருக்கிறார்கள். இது மாநிலத்திற்கு உரிய உரிமை. இதில் மத்திய
அரசாங்கம் கைவைத்தால் நாட்டிலே பிரிவினைக் கோஷம் எழுவதற்குக்கூட
வழி வகுக்கும் என்று அந்த அறிவிப்பைக் கண்டித்துப் பேசியிருக்கிறார்கள்.
ஆனால் அங்கே உள்ள ஆளுங்கட்சி உறுப்பினர்கள் வாய் திறக்கவில்லை.
ஆனால் இங்கே மாநில சுயாட்சியைப்பற்றி வெகு வேகமாகப் பேசிக்கொண்
டிருக்கிறார்கள். ஆனாலும் ஆளும் கட்சிக்காரர்கள் எப்பொழுது மாநில
சுயாட்சிபற்றிக் கேட்கிறார்கள் என்றால், எரிசாராய ஊழலுக்கு மத்திய
அரசாங்கம் ரே கமிஷனை அமைக்கின்ற நேரத்திலேயும், திருச்செந்தூரில்
கொலை நடைபெற்றதைக் கண்டுபிடிக்க சி.பி.ஐ. விசாரணை வேண்டுமென்றும்,
இதில் உண்மையான குற்றவாளியைக் கண்டுபிடிக்க சி.பி.ஐ. விசாரணை
கேளுங்கள் என்று சொல்லும்பொழுதும் மாநில சுயாட்சி கேட்பார்கள்.
ளுக்கு மறந்து போய்விடுகிறது.

நான் இன்றைய தினம் உங்களிடம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதிக
வரிகளைப் போடாமலேயே இந்த இழப்பை நம்மால் சரி செய்துகொள்ள
முடியும். இன்றைய தினம் இந்தப் பற்றாக்குறையை ஈடு செய்ய, பாட்டியின்,

ப்ரண்டிங் ஹோல்சேல் ஆகிய இவை அனைத்தையும் வெளிப்படையாக டெண்டர் மூலமாகவோ அல்லது ஏலம் மூலமாகவோ நீங்கள் விட்டால் நிச்சயமாக 147 கோடி ரூபாய் மட்டுமல்ல கிட்டத்தட்ட 300 கோடி ரூபாய்க்கு மேலே மாநில அரசுக்கு வரும். ஏன் அதைச் செய்ய மறுக்கிறீர்கள் என்பது உங்களுக்கேத் தெரியும். வேறு வகையில்லை அந்தப் பணம் யார் யாருக்குப் போக வேண்டுமோ அங்கேப் போய்க் கொண்டிருக்கிறது. வேண்டுமென்று அதை நீங்கள் அனுமதிக்கிறீர்கள் என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இங்கே ஏதோ மிகச்சிறந்த திட்டமாக இரண்டு முதல் பத்து வயது வரை உள்ள குழந்தைகளுக்கு ஒருவேளை உணவளிக்கப் போகிறோம், அது மிகச் சிறந்தத் திட்டம் என்று இங்கே ஏபேசிய ஆளும் கட்சி உறுப்பினர்கள் சொன்னார்கள். நான்கூட ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் இன்றைய தினம் எத்தனைக் குழந்தைகள் தமிழ்நாட்டிலே இருக்கிறார்கள் என்றால், உறுதி யிட்டு இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்ல முடியவில்லை. இந்த நிதி நிலை அறிக்கையைப் பார்த்தால் இது ஏதோ ஒரு நிர்வாக அறிக்கையாகத் தெரிகிறதேத் தவிர, இந்தத் திட்டத்திற்காக இவ்வளவு தொகை தான் ஆகும் என்று உறுதியிட்டுச் சொல்ல முடியாத நிதிநிலை அறிக்கையாகத் தான் இந்த அறிக்கை காணப்படுகிறது.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமேயானால், இன்றைய தினம் தமிழகத் திலே இருக்கின்ற இரண்டு முதல் பத்து வயது வரையுள்ள குழந்தைகள் சுமார் 20 லட்சம் பேர்கள் இருந்தாலுங்கூட, ஒரு குழந்தைக்கு ஒருவேளை உணவுக்கு 50 பைசா என்று கொடுத்தாங்கூட மாதம் ஒன்றுக்கு 10 இலட்சம் ரூபாய் தான் ஆகும். ஆண்டு ஒன்றுக்கு ஒரு கோடியே இரண்டு இலட்சம் ரூபாய் தான் ஆகும். 9 மாத காலத்திற்கு, ஏனென்றால் ஜூலை மாதம் முதல்தான் இந்தத் திட்டத்தை அமல்படுத்தப் போவதாகச் சொல்லியிருக்கிறீர்கள் அப்படிப்பார்த்தால் 9 மாத காலத்திற்கு 10 கோடி அல்லது 11 கோடி ரூபாய்க் குள்ளாகத்தான் இந்தச் செலவே வரும். மீதியுள்ள 90 கோடி இருக்கிறதே, அவ்வளவுக்கும் பற்பொடி வாங்கப் போகிறீர்களா. நான் சொல்ல விரும்பு கிறேன். இன்றையதினம், தாறுமாறாக, முன்னுக்குப் பின் முரணாக நீங்கள் போட்டிருக்கின்ற வரிகளும், சொல்லியிருக்கின்ற திட்டங்களும் இருக் கின்றன ; ஒன்றுக்கொன்று பொருத்தமில்லாத நிலையில் இந்த நிதிநிலை அறிக்கை காணப்படுகிறது என்பதைக் கண்டு உண்மையிலேயே வருந்து கிறேன்.



கைத்தறி நெசவாளர் நேற்றைய தினமும், இன்றைய தினமும் தஞ்சை மாவட்டத்திலே பூரண ஹர்த்தால் அனுஷ்டித்திருக்கிறார்கள். குடந்தை யிலிருந்து நெசவாளர்களெல்லாம் உண்ணாவிரதம் இருந்து நடைப்பயணமாக மாவட்ட ஆட்சித் தலைவரைச் சந்தித்து மகஜர் கொடுத்திருக்கிறார்கள்.

(மாலை 4.10)

இங்கே கூடச் சட்டமன்ற உறுப்பினர்களை எல்லாம் சந்தித்துத் தங்கள் குறை களைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். நான் இந்த ஆட்சியாளர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், நீங்கள் போட்டிருக்கிற 5 சதவீத வரி விதிப்பினாலே மத்திய அரசு நமக்குத் தருகின்ற 10 சதவீத மானியத்தை இழக்க வேண்டிவரும். எனவே தயவு செய்து, வரி விதிப்பினை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். போட்டிருக்கிற 5 சதவீதம் வரியினை உடனடியாக ரத்து செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

எனது திருபுவனம் பகுதியில் ஏராளமான பட்டு நெசவாளர்கள் இருக்கிறார்கள். அங்கு 1976 ஆம் ஆண்டு சமஷ்டிகால நிதித் திட்டம் (சி.டி.எப்.) என்ற ஒன்றிருந்தது. இந்தத் திட்டத்தின் வாயிலாக நெசவாளர் களிடமிருந்து பிடித்தம் செய்த தொகை ஏறத்தாழ ரூ. 2½ இலட்சம். அந்த ரூ. 2½ இலட்சம் நெசவாளர்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்படவில்லை. நான்கூட சென்ற கூட்டத் தொடரில் இங்கே குறுகிய கால வினாவாகக் கேட்ட நேரத்தில், கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள், வெகு விரைவிலே அந்த சி.டி.எப். நெசவாளர்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்படும் என்று குறிப் பிட்டார்கள். ஆனால், இன்று வரை அந்த சி.டி.எப். நிதி அவர்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்படவில்லை. அதைக் கண்டித்து, 21-12-1981 அன்று கூட விட்ட ஆட்சியாளர் அலுவலகம் முன்பு 500 நெசவாளர்கள் உண்ணாவிரதம் இருந்தோம். இந்த அவையில் அமைச்சர் அவர்கள் உறுதி அளித்தார்கள். ஆனால், இந்த உறுதிமொழி இன்றையதினம் காற்றிலே பறக்கவிடப் பட்டிருக்கிறது என்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அந்தச் சுமார் ரூ.2½ இலட்சம் இன்றைய தினம் கூட்டுறவு மத்திய வங்கியில் அப்படியே இருக்கிறது. அது நெசவாளர்களுக்குச் சேர வேண்டிய தொகை என்பதால், அதை உடனடியாக நெசவாளர்களுக்குத் திருப்பித்தர வேண்டு மென்று இந்த நேரத்திலேக் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்திலே இருக்கிற விவசாயிகள் பரிதாபகரமான நிலையிலே - இருக் கிறார்கள். அந்தப் பரிதாபகரமான விவசாயிகளைப்பற்றி ஒரு வார்த்தை யாவது இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறதா என்றால்,

இல்லை. இன்றையதினம் அவர்களுக்கு ஏராளமான கடன் சுமைகள் உள்ளன. நில வரி, கூட்டுறவுக் கடன், குத்தகை பாக்கி, மின்சாரக் கட்டண உயர்வு; இத்தனை சுமைகளையும் தாங்கிக்கொண்டு இருக்கிறார்கள் விவசாயிகள். இப்படிப்பட்ட சுமைகளிலிருந்து அவர்களுக்கு நிவாரணம் தரத்தக்க அளவுக்கு ஏதாவது ஒரு சலுகையாவது இந்த நிதிநிலை அறிக்கையிலே இருக்கிறதா என்று, தேடித் தேடிப் பார்க்கிறேன். எந்த ஒரு சலுகையும் பார்க்க முடியவில்லை. அருள்கூர்ந்து உங்களைக் கேட்கிறேன். இந்த நாட்டின் நாடி நரம்பாக முதுகெலும்பாக விளங்குகிற விவசாயிகளை ஒவ்வொரு பட்ஜெட்டிலும் புறக்கணிப்பது வருத்தத்தக்கது என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கடந்த மூன்று ஆண்டுகளாக தஞ்சை மாவட்டத்திலே நிலவரி வசூல் செய்யப்படாமல் இருக்கிறது. இனாம்தாரர் நிலங்களையெல்லாம் இரயத்துவாரிகளாக மாற்றப்பட்ட பிறகுங்கூட, பட்டாதாரர்கள் பெயரில் நிலவரி வசூலிக்கப்படவில்லை. நிலவரிகள் தாக்கீதுகள் பழைய இனாம்தாரர்களுக்கே அனுப்பப்படுவதால், கடந்த மூன்று ஆண்டுகளாக யாரும் நிலவரி செலுத்தவேயில்லை. அப்படிப்பட்ட நிலைமை அங்கே வருவாய்த் துறையில் நிலவிக்கொண்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் ஏறத்தாழ 75 விழுக்காடு குத்தகை சாகுபடியாளர்கள் இருக்கிறார்கள். இன்றையதினம் அந்தக் குத்தகை சாகுபடியாளர்கள் நிலத்தை விட்டு வெளியேற்றப்படுகின்ற நிலைமையிருக்கிறது. ரெவின்யூ கோர்ட்டுகள் மிராசுதாரர்களின் ஏஜண்டுகளாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, உடனடியாக ரெவின்யூ கோர்ட்டுகளை ஒழிக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

மிகவும் சிரமப்பட்டு சாகுபடி செய்யப்பட்ட சம்பா தாளடி கொள்முதல் செய்யப்படுவதில், தஞ்சை மாவட்டத்தில் பாரபட்சமான கொள்கை கடைபிடிக்கப்படுகிறது. தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற மானேஜர், குவாலிட்டி கண்ட்ரோல் அவர்கள், கொண்டு செல்லப்படுகின்ற நெல்லை எல்லாம், இந்தக் கோடை காலத்திலேகூட ஈரமான நெல் என்று திருப்பி விடுகிற அவல நிலை இருக்கிறது. எனவே, ஏழை, விவசாயிகள் விளைவிக்கின்ற அவர்களுடைய உற்பத்தியை உடனடியாகக் கொள்முதல் செய்கின்ற அளவுக்கு அங்கே இருக்கிற சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் அதிகாரிகள் பணியாற்ற ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன்.



கிராம கூட்டுறவு வீடுகட்டும் திட்டத்தின்கீழ் முதல் தடவை கடன் பெற்று இரண்டாவது தடவை கேட்டால் கிடையாது. இரண்டாவது முறை கடன் பெற்றவர்களுக்கு மூன்றாவது தடவை கிடையாது. ஏன் கிடையாது என்று கேட்டால் பணம் இல்லை என்று சொல்லுகிறார்கள். எனவே நீங்கள் அறிவித்திருக்கின்ற இந்த வீடு கட்டும் திட்டம் வெறும் ஏட்டுச் சுரக்காயைப் போல கிராமங்களிலே உள்ள ஏழை எளிய மக்களுக்குப் பலன் தருகிற திட்டமாக இல்லை என்பதை சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பல்வேறு போக்குவரத்துக் கழகங்களைப் பிரித்திருக்கிறார்கள். சோழன் போக்குவரத்துக் கழகத்தில் 600 பேருந்துக்கு மேல் இருக்கின்றன. அதையும் பிரித்தால், அந்த நிர்வாகம் திறமையாக நடைபெற வசதியாக இருக்கும். சோழன் போக்குவரத்துக் கழகத்தில் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பேரிங்குகள் களவாடப்பட்டு ஓராண்டுக்கு மேல் ஆகியும் இன்னும் அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அவர் நிர்வாக இயக்குநருக்கு வேண்டியவர்கள் என்பதற்காக எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை என்பதை இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், திருவிடைமருதூர் தாலுகா அண்மையில் தனித் தாலுகாவாக பிரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதற்குத் தாலுகா அலுவலகம் கிடையாது. வருவாய்த்துறையைச் சேர்ந்த மற்ற அலுவலகங்களும் கிடையாது. எனவே அங்கே புதிய அலுவலகங்களை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் உள்ள பந்தநல்லூரில் உள்ள கால்நடை மருத்துவ மனையில் டாக்டரே இல்லை. ஓராண்டுக்கு மேலாக எந்த சிப்பந்திகளும் இல்லாமல் பூட்டப்பட்டிருக்கின்றது. அங்கே கோமாரி நோய் ஏற்பட்டு கால்நடைகள் அழிந்து கொண்டிருக்கின்றன. எனவே உடனடியாக அதைத் திறக்க வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்ற ஆண்டு நீங்கள் அறிவித்த 5 படி அரிசி வாங்கினால் 1 படி அரிசி இலவசம்; 7 மாத கர்ப்பிணிப் பெண்களுக்கு அடுத்த 8 மாத காலத்திற்கு ரூ. 150 சத்துணவுத் தொகை; வீட்டுக்கு ஒருவருக்கு வேலை; வேலையில்லா பட்டதாரிகள் அனைவருக்கும் உதவித் தொகை; வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள அனைவருக்கும் நாளொன்றுக்கு ஒரு ரூபாய் வழங்கும் திட்டம்; தாலிக்குத் தங்கம், பட்டினிச் சாவு ஏற்படாமல் இருக்க 200 ரூபாய் உதவித் தொகை இவைகள் எல்லாம் ஏட்டுச் சுரக்காயாக ஆகியதைப்போல இந்தக் குழந்தைகளுக்குச் சத்துணவுத் திட்டமும் . . . .

[1982 மார்ச் 5

திரு. ஏ. சி. சண்முகம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது சில தவறான தகவலைச் சொல்லி இருக்கிறார்கள். ஆளும்கட்சி அடிக்கடி மாநில சுயாட்சி கேட்கிறது என்று சொன்னார். ஆனால் மு.க. தான் மாநில சுயாட்சி கேட்டது . . .

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: உங்கள் தாப்பிலிருந்து பேசும் போது குறிப்பிடுங்கள்.

திரு. மி. வின்செண்ட்: துணைத் தலைவர் அவர்களே, ஒரு குழந்தைக்கு ஒரு நாளைக்கு 50 பைசா விதம் கொடுத்தால் அவருடைய கணக்குப்படியே 90 கோடி ரூபாய் வருகிறது. ஆனால் அவர் 10 கோடி என்றுதான் சொல்கிறார். அந்தக் கணக்குத் தவறாக இருக்கிறது. பொடி வைத்துப் பேசினாலும் பொறுத்தமாக பேசவேண்டாமா ?

திரு. செ. இராமலிங்கம்: நான் சொல்லியது 2 வயது முதல் 10 வயது வரை உள்ள குழந்தைகள் எத்தனை என்று கணக்கு தாப்படவில்லை. உதாரணமாக 20 லட்சம் குழந்தைகள் என்று வைத்துக் கொண்டால் நான் ஒன்றுக்கு 50 பைசா செலவு செய்தால் 10 லட்சம் ரூபாய் வரும். அந்தக் கணக்கைத்தான் நான் சொன்னேன். (மணி அடிக்கப்பெற்றது)

திரு. கே. சௌந்திராசன்: மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தமிழகத்தினுடைய நிதி அமைச்சர் மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் இந்த 1982-83 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை சமர்ப்பித்ததன் மூலமாக பெரிய திட்டங்களை நிறைவேற்றி இருக்கிறார் என்பதை இந்த நேரத்தில் எடுத்துக் கூறவும், அதனை வரவேற்கவும் கடமைப்பட்டிருக்கிறேன். நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்த நேரத்தில்—

“ வாரிபெருக்கி வளம்படுத்து உற்றவை
ஆராய்வான் செய்க வினை ”

என்ற குறளை வைத்து, நம்முடைய டாக்டர் நாவலர் அவர்கள் இன்றைய தினம் இந்த நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்து இருக்கிறார்கள். ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், ஒரு அரசாங்கம் நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்கிறபோது உபரியாகத் தயாரிக்கிறதா அல்லது துண்டு விழுகின்ற பட்ஜெட்டாக தயாரிக்கிறதா என்பதல்ல பிரச்சினை. அந்த நிதிநிலை அறிக்கையில் நாட்டுக்கு வேண்டிய திட்டங்கள் எந்த அளவிற்கு இருக்கிறது, அப்படி தீட்டப்படுகிற திட்டங்கள் எந்த அளவிற்கு சமுதாயத்தின் அடித்தளத்திலே இருக்கிறவர்களுக்குப் போய்ச் சேருகிறது, அப்படி தீட்டப்படுகிற



1982 மார்ச் 5] [திரு. கே. சௌந்திராசன்]

திட்டங்கள் ஏழை எளியவர்களுக்கு எந்த அளவிற்கு வாழவைப்பதாக அமைந்து இருக்கிறது, அப்படி தீட்டப்படுகின்ற திட்டங்கள் கிராமப்புறங்களில் இருப்பவர்களை வாழ வைப்பதாக இருக்கிறது என்பதில் தான் ஒரு நாட்டினுடைய நிதி நிலை அறிக்கையின் சிறப்பு இருக்கிறது என்பதை நான் இங்கே கூறியாக வேண்டும்.

(மாலை 4-20)

ஒரு முறை நம்முடைய தமிழகத்தின் முதலமைச்சர் அவர்கள் ஒரு திரைப்
படத்திலே சொன்னார்கள்: என்ன சொன்னார்கள் என்றால், ‘ நீங்கள்
மாளிகையில் இருந்து மண் குடிசையைப் பார்க்கிறீர்கள், நான் மக்களிட
மிருந்து மாளிகையைப் பார்க்கிறேன்: நான் இருக்கும் இடம் மாறியிருக்
கலாம். ஆனால் என் உள்ளம் மாறவில்லை ’ என்பதை அந்தத் திரைப்படத்
திலே அரசியல் கருத்தாக நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் வைத்
தார்கள். அதைத்தான் தமிழக அரசின் வரவு செலவுத் திட்டங்கள்
தயாரிக்கின்ற நேரத்திலும், வேறு பல சட்டங்கள் கொண்டு வருகின்ற நேரத்
திலும், தமிழக அரசு அந்த லட்சியத்தின் அடிப்படையிலே தான் காரியங்
களை ஆற்றி வருகிறது என்பதை இந்த நிதிநிலை அறிக்கை தெளிவாக
எடுத்துக் காட்டுகிறது என்பதை எடுத்துக் கூறியாக வேண்டும்.

இந்த நிதிநிலை அறிக்கை மீது பேசுகிறபோது ஆகட்டும், அல்லது மற்ற
வேறு பிரச்னைகளைப் பற்றிப் பேசுகிறபோது ஆகட்டும், எவ்வளவு கண்
ணியம்மிக்க மாமன்றமாக இருந்து இருக்கிறது என்பதை இந்த நாட்டு
மக்கள் அறிவார்கள். ஆனால் நேற்றையதினம் நான்கு எதிர்க்கட்சியைச்
சேர்ந்தவர்கள் இங்கே பிரச்னைகளைப் பற்றி சரியாக சிந்தித்துப்பேசமுடிய
வில்லை என்று காரணம் காட்டி வெளிநடப்புச் செய்து இருக்கிறார்கள்.
இந்தச் சூழ்நிலைகளை இன்றையதினம் யார் உருவாக்கிக்கொண்டு இருக்
கிறார்கள் என்பதை நான் எடுத்துச் சொல்லியாக வேண்டும். எதிர்க்கட்சி
யில் இருக்கிறவர்கள் ஆளும் கட்சியைப் பற்றி விமர்சிக்கின்றபோது, அது
இந்த நாட்டு மக்களுக்கு எந்த அளவிற்குப் பயன்படக்கூடியதாக இருக்க
வேண்டும் என்கிற அடிப்படையில் பேசவேண்டும். அதைவிடுத்து கிண்டலும்
கேலியுமாக பேசுவது, எரிச்சல் ஏற்படுத்தும்படி பேசுவது சரியல்ல. இந்த
நாட்டிலே இருக்கும் மக்கள் நமக்கெல்லாம் வாக்களித்து சட்டமன்றத்திற்கு
உறுப்பினர்களாகவும், அமைச்சர்களாகவும் அனுப்பியிருக்கிறார்கள். இங்கே
இப்படிப்பட்ட முறையில் நித்தநித்தம் நடைபெற்று அது பத்திரிகைகளில்
வருமானால் மக்கள் அதைப் பார்க்கின்ற நேரத்தில் வேறு விதமான உணர்வு

களுக்கு ஆட்படநேரிடும். இங்கே நல்லவகையில் பணியாற்றினால் தான் அதைப் பார்க்கிற நேரத்தில் மக்களும் இவர்கள் தங்கள் கடமைகளை நல்ல விதத்தில் செய்கிறார்கள் என்பதை உணரமுடியும். ஆகவே, அப்படிப்பட்ட நல்ல உணர்வுகள் மக்கள் மனதில் ஏற்படுகின்ற வகையில் இந்த மாமன்றத்தில் இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் செயல்படவேண்டும் என்று அருள் கூர்ந்து கேட்டுக்கொள்கிறேன். இந்த மன்றத்தில் உள்ள உறுப்பினர்கள் எந்தப் புறத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் கடந்த கால வரலாற்றை தெரிந்து கொண்டு அதற்கேற்ற வகையில் செயலாற்றி, அந்த நல்ல மரபை கட்டிக்காப்பாற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் நிதிநிலை அறிக்கையில் எப்படிப்பட்ட சூழ்நிலையில் நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் சமர்ப்பித்து இருக்கிறார்கள் என்பதை இங்கே மதிப்பிற்குரிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் மிகத் தெளிவாக எடுத்துக்கூறியிருக்கிறார்கள். மாநில அரசின் முன்னேற்றத்தைச் சீர்குலைக்கும் வகையில் மத்திய அரசின் நிதிநிலை அறிக்கை அமைந்து இருக்கிறது என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பொறுப்பாக இன்றையதினம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, இன்றையதினம் நாட்டிலே இருக்கும் பண வீக்கம், இன்றியமையாப் பொருள்களின் விலை உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம், எரிபொருள்கள், இடுபொருள்கள் விலை உயர்வு, ரயில் போக்குவரத்துக் கட்டணங்கள் உயர்வு இப்படி ஒரு புறத்திலே நம்மை மிரட்டிக்கொண்டு இருக்கின்றன. வேறுபுறத்தில் மத்திய சர்க்கார் 530 கோடி அளவிற்கு வரியை உயர்த்தியிருக்கிறார்கள். ஏறத்தாழ 1365 கோடி ரூபாய் துண்டுவிழும் பட்ஜெட் தாக்கல்செய்து இருக்கிறார்கள். இதனுடைய விளைவுகள் எல்லாம் இந்தியத் திருநாட்டில் உள்ள ஏழை எளிய மக்களின் தலையில் விழுந்து, அவர்கள் தான் அதனால் பாதகம் அடையப்போகிறார்கள் என்பதை எடுத்துச்சொன்னால், இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அருமை நண்பர்கள் கோபம் அடைகிறார்கள்.

நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்டமன்றத்தில் பேசுகிறபோது, ஏதோ நாம் சார்ந்து இருக்கிற கட்சிக்கு ஜால்ரா பாடிவிட்டுப்போய் விட்டால் நம்முடைய கடமைகளை தீர்ந்து விட்டது என்று யாரேனும் கருது வார்களானால், இந்த நாட்டுமக்கள் அவர்களுடைய நடவடிக்கைகளை தீர்க்கமாகக் கூர்ந்து கவனித்துக் கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் இவர்களைப் பற்றி என்ன கருதுவார்கள் என்பதை நான் இங்கே எடுத்துக்காட்டியாக வேண்டும்.



கடந்த சில நாட்களுக்கு முன்னால் டெல்லி ராஜ்யசபாவில் மதிப்பிற் குரிய இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. பி. என். சுகுல் என்பவர் அங்கே லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் பெயரால் அமைந்திருக்கிற தேசிய நிர்வாக பயிற்சி இயக்குநர் அலுவலகத்தி லிருந்து, அந்த இயக்குநர் இராஜிநாமா செய்ததுபற்றி குறிப்பிடும்போது, அங்கே பயிற்சிக்காகச் சென்றிருந்த சக அதிகாரி என்றுகூட பார்க்காமல் ஒரு பெண் அதிகாரியை ரிவால்வரைக்காட்டி பயமுறுத்தி கற்பழித்துவிட்ட சம்பவத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது, தன்னுடைய கட்சிக்காரர் சம்பந்தப் பட்டிருக்கிறார் என்றாலும்கூட அங்கே ராஜ்யசபாவில் அதுபற்றி கண்டித்துப் பேசியிருக்கிறார். அந்த நிலையை இங்கே இருக்கிறவர்களும் எண்ணிப் பார்க்க வேண்டும். தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் கண்டிக்கப்பட வேண்டும்.

இங்கே இருக்கிற இந்திய தேசிய காங்கிரஸ் கடந்த காலத்தில் எந்த அளவுக்கு வளமோடு இருந்து. இன்றைக்கு எந்த அளவுக்கு சரிந்திருக்கிறது என்பதை உணர்ந்து அவர்கள் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். இன்றைக்கு மத்திய சர்க்கார் எந்த அளவுக்கு நம்மை புறக்கணிக் கிறது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். அதை எல்லாம் நான் சொல் லும்போது நமக்கு இருக்கிற கடமையை நாம் உணர்ந்து செயல்பட வேண்டும். அவர்களுடைய திட்டங்களால் தமிழக மக்கள் எந்த அளவுக்கு பாதிக்கப்படு கிறார்கள், அதனால் எந்த அளவுக்கு ஏழை எளிய மக்கள் வாழ்க்கையோடு விளையாடுகிறார்கள் என்பதை தமிழக மக்கள் கூர்ந்து கவனித்துக்கொண்டி ருக்கிறார்கள் என்பதை நான் இங்கே கூற ஆசைப்படுகிறேன்.

அது மட்டுமல்ல, கிராமப்புறத்திலே ஒரு பழமொழி சொல்வார்கள். "குதிரை கீழே விழுந்தது மட்டுமல்ல, குழியும் தோண்டியது" என்று சொல்வார்கள். அதைப்போன்று தமிழக சர்க்கார் நல்ல பல திட்டங்களை எல்லாம் உருவாக்கும்போது, சட்டங்களைப் போடும்போது அந்தச் சட்டங் களைக் காலடியிலே தள்ளி மிதிப்பதைப்போல மிதித்து, தூக்கி எறிகின்ற போக்கை மத்திய சர்க்கார் கடைபிடிப்பதை எண்ணிப்பார்க்கிறபோது, இன்றைக்கு மத்திய சர்க்கார் எந்த அளவுக்கு செயல்படுகிறது என்பதை நம் மால் உணரமுடிகிறது. நான் இதைச் சொல்வதற்குக் காரணம் தமிழக அரசு இயற்றிய நிலச்சீர்திருத்தச் சட்டத்திற்கு அவர்கள் அங்கீகாரம் தரவில்லை. பினாமியாக இருக்கிற நிலத்தைக் கண்டுபிடித்து, யார், யாரிடம் பினாமியாக நிலம் இருந்தாலும் அதை எல்லாம் கண்டுபிடித்து, எடுத்து, ஏழை எளிய மக்களுக்குத் தரவேண்டும்; அவர்களுக்கு வாழ்வளிக்க வேண்டும்; அவர்

[திரு. கே. சௌந்திரராஜன்] [1982 மார்ச் 5

களுடைய வாழ்க்கை மலர வேண்டுமென்று இந்த அரசு போட்ட சட்டத்தை,
புரட்சித் தலைவர் ஆட்சியில் உருவாக்கி அனுப்பிய சட்டத்தை அவர்கள்
அங்கீகரிக்க மறுக்கிறார்கள் என்றால் அவர்கள் எந்த நோக்கில் இருக்கிறார்கள்
என்பதை என்னால் எண்ணிப் பார்க்க முடியவில்லை என்பதைத் தெரிவித்துக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் 1961 ஆம் ஆண்டு நிலச்சீர்
திருத்தச் சட்டம் இந்த மாமன்றத்திலே வந்தபோது நாம் எல்லாம் பெருமையாக
வணங்குகின்ற பெரும் தலைவர் காமராஜ் அவர்கள் அன்றையதினம்
தமிழக முதலமைச்சராக இருந்தார்கள். அவர் முதலமைச்சராக இருக்கும்
போதுதான் இதே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாயூரம் நாராயணசாமி
அவர்கள் காங்கிரஸ் கட்சி உறுப்பினராக இங்கே இருந்தார்கள். காங்கிரஸ்
கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் இந்தச் சட்டத்தை எதிர்த்தார்கள்.
நிலச்சீர்திருத்தச் சட்டம் வரும், வரும் என்று நாங்கள் எல்லாம் எதிர்பார்த்
தோம், இந்தச் சட்டம் இந்த நாட்டிலே வரும்போது மகோன்னதமாக
இருக்கும் என்று எதிர்பார்த்தோம்; பல ஆண்டுகளாக கருவுற்றிருந்த இந்தச்
சட்டம், எப்போது நல்லதொரு குழந்தையாக பிறக்கும் என்று பார்த்துக்
கொண்டிருந்தோம்; ஆனால் பிறந்தது பெண்ணாகவும் இல்லை, ஆணாகவும்
இல்லை; ஏதோ அலியாக இருக்கிறது என்று கடுமையாக விமர்சித்தார்கள்.
ஆக, ஒரே கட்சியில் இருந்தாலும் தவறுகள் நடக்கும்போது அதைச் சுட்டிக்
காட்ட வேண்டும். இன்றைக்கு இருக்கின்றவர்களுக்கு அன்றைக்கு இருந்த
அந்தத் திராணி எங்கே போய்விட்டது என்று தெரியவில்லை.

நாம் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் இந்த நாட்டு
மக்கள் நம்மை எல்லாம் பொறுப்பாக கடமையாற்ற அனுப்பி வைத்திருக்
கிறார்கள். அவர்களுடைய எண்ணம் ஈடேறுகின்ற வகையில், அவர்களுடைய
வாழ்க்கை வளம்பெறுகின்ற வகையில் காரியங்களை ஆற்ற நம்மை
இங்கே அனுப்பி வைத்திருக்கிறார்கள். அப்படி கடமை செய்வதை விட்டு
விட்டு, இன்றைக்கு என்னென்ன பேசிக் கொண்டிருக்கிறோம் என்பதை
எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் புரட்சித் தலைவர் அரசு பல நல்ல காரியங்களைச் செய்
யும்போது ரிசர்வ் வங்கி அதைக் கட்டுப்படுத்துகிறது என்பதை நான் இங்கே
குறிப்பிட்டாக வேண்டும். காரணம் இங்கே பலர் சொன்னார்கள்.
விவசாயிகள் கடனை நீங்கள் தள்ளிவிடுவோம் என்று தேர்தலிலே சொன்
னீர்களே தள்ளினீர்களா என்று கேட்டார்கள். கடனைத் தள்ளுபடி செய்ய



1982 மார்ச் 5] [திரு. கே. சௌந்திரராசன்]

புரட்சித் தலைவர் தயார். அதனால்தான் 192 கோடி ரூபாய் கடனைத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். ஆனால் ரிசர்வ் வங்கி இந்த அரசை எச்சரித்துக்கொண்டே இருக்கிறது. இதை எல்லாம் எண்ணிப்பார்க்கும் போது நாம் எப்படிப்பட்ட சூழ்நிலையில் இருக்கிறோம் என்பதை நான் இங்கே எடுத்துச்சொல்லியாக வேண்டுமென்று விரும்புகிறேன். இன்றைய தினம் புரட்சித் தலைவர் அவர்கள் நம்முடைய சுயமரியாதை இயக்கத்தினுடைய ஆணிவேராகவும், அச்சாகவும் இருந்த அருமை நண்பர் பட்டுக் கோட்டை அழகிரி அவர்கள் பெயரால் ஒரு போக்குவரத்துக் கழகத்தை உருவாக்கி இருப்பதை நான் பாராட்டுகிறேன். அவர் மறைந்து சுமார் 30 ஆண்டுக் காலத்திற்கு மேலாகி இருந்தாலும் இன்றையதினம் அந்த நல்லவருடைய பெயர் என்றென்றும் நிலைத்து நிற்கின்ற வகையில் அவருடைய பெயரால் ஒரு போக்குவரத்துக் கழகத்தை உருவாக்கியிருப்பதை நன்றி உணர்வோடு நான் வரவேற்கிறேன்.

அதைப்போல மதிப்பிற்குரிய ஜீவா அவர்கள் பெயரால் ஒரு போக்குவரத்துக் கழகத்தையும், நேசமணி அவர்கள் பெயரால் ஒரு போக்குவரத்துக் கழகத்தையும் உருவாக்கியிருப்பதை மனதார வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாலை 4-30)

நம்முடைய அரசு குழந்தைகளுக்கு உணவளிக்கின்ற திட்டத்தைக் கொண்டு வருவது பற்றி இன்று காலையிலே கூடச் சொன்னார்கள். அப்படிச் சொல்கின்றபோது குழந்தைகளுக்கு உணவளித்தால் போதுமா, சாலைகள் அமைத்தால் போதுமா அந்த மக்களுக்கு வாழ வழி வேண்டாமா என்று பல்வேறு கருத்துக்களை பல்வேறு உறுப்பினர்கள் கூறினார்கள். அவர்களுக்கு வாழ வசதி செய்து கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான், வேலைவாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும் என்பதற்காகத்தான் தொழிற் கூடங்களை ஏற்படுத்துவது நமது கடமையாக இருக்கும் என்ற வகையிலேதான் இன்றையதினம் தமிழக அரசு பல்வேறு தொழிற் வளர்ச்சிக்கான திட்டங்களைத் தீட்டி இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியைப்பற்றி இன்னும் ஓரிரு வார்த்தைகளைக்கூறி முடித்து விடுகிறேன் . . . (மணியடிக்கப்பெற்றது).

துணைத் தலைவரவர்களே, எங்களுடைய திருச்சியைப் பொறுத்தவரையிலே அங்குள்ள குடிசைப்பகுதிகள் புறக்கணிக்கப்பட்டு இருக்கின்றன என்பதை நான் மிகுந்த வருத்தத்தோடு குறிப்பிடு

கிறேன். அங்கே இருக்கின்ற மக்கள் குடிநீருக்கு அவதிப்படுகிறார்கள். அங்கே சுகாதாரக் கேடும் மிகுதியாகிவிட்டது என்பதை நான் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். திருச்சியிலே இருக்கின்ற கொசுக்கள் கொசுக்களாக இல்லை, அவை யானைகளாக மாறி இருக்கின்றது என்பதை வேதனையோடு குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏழைகளுக்கு வாழ்வளிக்கின்ற நேரத்திலே சுகாதாரக் கேடுகள் அவர்களிடத்திலே உருவாகுமானால் யானைக்கால் போன்ற வியாதிகள் ஏற்படுமானால் அவர்களுடைய வாழ்க்கை கெட்டுவிடும். ஆகவே சுகாதாரத் துறையும், குடிநீர்த் துறையும் நல்ல வகையிலே செயலாற்றி அங்கே இருக்கின்ற மக்களுக்கான வசதிகளைச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்களுக்குக் கொஞ்சம் வருத்தம் ஏற்படலாம். இருந்தாலும் இந்த காரியங்களைச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்த மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

* திரு. ப. நெடுமாறன் : மதிப்பிற்குரிய துணைத் தலைவரவர்களே, 1982-83ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கட்சியின் சார்பிலே சில கருத்துக்களை வைப்பதற்கு முன்பு ஒரு விஷயத்தை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆளுநர் அவர்களுடைய உரையிலே பிப்ரவரி ஒன்றாம் தேதி முதல் தமிழகத்திலுள்ள சிவில் நீதிமன்றங்களில் தமிழே நீதிமன்ற மொழியாக இருக்கும் என்ற மகிழ்ச்சிகரமான செய்தி அறிவிக்கப்பட்டது. போதுமான சட்டங்கள் தமிழிலே இன்னும் மொழி பெயர்க்கப்படாமல் இருக்கின்ற சூழ்நிலையிலே இந்த அறிவிப்பு வந்திருந்தாலும் கூட இது ஒரு நல்ல காரியம் என்பதால் என்னைப் போன்றவர்கள் மகிழ்ச்சி அடைந்தோம். ஆனால் அதற்குப் பிறகு ஒரு மாத காலம் ஆவதற்கு முன்பாக இடி போன்று இன்னொரு செய்தியும் வந்திருக்கின்றது. சென்னை உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக பீகார் மாநிலத்தைச் சேர்ந்த மதிப்பிற்குரிய கே.பி.என். சிங் அவர்கள் இந்த மாதம் 12 ஆம் தேதி பதவி ஏற்கிறார் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இதை ஒட்டிய சர்ச்சையிலே நம்முடைய முதல்வர் அவர்கள் மத்திய அரசுக்கு இந்த அரசாங்கத்தின் எதிர்ப்பைத் தெரிவித்து இருக்கிறார்கள். இந்த மாநிலத்தைச் சேர்ந்தவர் குறிப்பாக தமிழ் ஆய்ந்த தமிழ் நீதிபதிதான் உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக இருக்கவேண்டும் என்று அந்தக் கடிதத்திலே வற்புறுத்தி இருந்தார்கள். தமிழகத்தின் தலைமை நீதிபதியாக இருந்த மதிப்பிற்குரிய இஸ்மாயில் அவர்கள் இதன் காரணமாக இராஜினாமா செய்தார். அதன் விளைவாக சர்ச்சைகள் எழுந்த பின்னரும்கூட மத்திய



அரசு பிடிவாதமாக தமிழ் தெரியாத ஒருவரை தலைமைநீதிபதிப் பதவி வகிக்க அனுப்பி இருப்பதும் அவர்கள் இந்த மாதம் 12 ஆம் தேதி பதவி ஏற்க இருப்பதும் பற்றி தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. இது நமது கொள்கைக்கு முரணானது மட்டுமல்ல, அந்தக் கொள்கைக்கு வெடி வைக்கின்ற ஒரு காரியம். இதை எந்த அளவுக்கு நீங்கள் ஏற்கிறீர்கள் என்பதுபற்றித் தெளிவாக்க வேண்டும் என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த பட்ஜெட்டிலே நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தன்னுடைய சாமர்த்தியம், திறமை பூராவையும் காட்டி இருக்கிறார்கள். ஆனாலும் கூட சட்டியில் இருந்தால்தானே அகப்பையிலே வரும் என்று சொல்வதைப்போன்று மாநில அரசினிடத்திலே நிதியாதாரங்கள் எதுவும் இல்லாத நிலைமையிலே இந்த பட்ஜெட்டிலே எவ்வளவு சாமர்த்தியத்தைக் காட்டி இருந்தாலும், திறமையினை வெளிப்படுத்தி இருந்தாலும் கூட மக்களுக்கான பல்வேறு நல்ல காரியங்களையும் திட்டங்களையும் அறிவிக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருப்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். விவசாயம், கிராமப்புற வளர்ச்சி, கல்வி, சுகாதாரம் போன்ற மக்களுக்கு இன்றியமையாத துறைகளில் மாநில அரசுகள்தான் செயல்பட வேண்டிய நிலை இருக்கிறது. இந்தத் துறைகளிலே மத்திய அரசு நேரிடையாகச் செயல்படமுடியாது. இந்த துறைகளிலும் இது போன்ற மற்ற துறைகளிலும் மக்களோடு நேரிடையாக தொடர்பு கொண்டு மாநில அரசுகள்தான் வேலை செய்ய வேண்டிய நிலை இருக்கிறது. இந்தத் துறைகளைப் பொறுத்தவரையில் மக்களின் தேவை என்பது ஒவ்வொரு நாளும் வளர்ந்து கொண்டே போகிறது. ஆனால் மக்களின் தேவைகள் இந்தத் துறையிலே வளரக்கூடிய அளவுக்கு, மாநிலங்களுக்கு வருமானம் தரும் வரிகள் இல்லை. இந்தப் பற்றாக்குறையைப் போக்குவதற்கு, அவ்வப்போது மத்திய அரசிடமிருந்து வரிகளில் பங்கு, மானியம், கடன் போன்றவைகளை மாநில அரசுகள் பெறுகின்றன.

ஆனால், மத்திய அரசு வசூலிக்கிற நல்ல கொழுத்த வரிகளில் பங்குத் தொகை மாநிலங்களுக்கு கொடுக்க வேண்டும் என்று அரசியல் சட்டத்திலே சொல்லப்பட்டிருந்தாலும் அந்தச் சட்டங்களிலே சில திருத்தங்களை தொடர்ந்து மத்திய அரசு கொண்டு வந்ததன் விளைவாக மாநில அரசுகள் கெஞ்சிக்கேட்கின்ற நிலைமை இருந்திருப்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்றைக்கு டெல்லியிலே இருப்பவர்களின் அரசியல் சிந்தனை எப்படியிருக்கிறது என்றால், Political control can be effective only if it is adequately supplemented by financial control. என்ற முறையிலே அரசியல் அதிகாரம், அரசியல் கண்காணிப்பு, மாநிலங்களின்

[திரு. ப. நெடுமாறன்] [1982 மார்ச் 5]

மேல் தனக்கு இருக்கும் பிடி ஆகியவை தளராமல் இருக்க வேண்டும் என்றால் நிதி விஷயங்களில் கண்காணிப்பும், ஆளுமையும் இருந்தால்தான் அதைச் செய்ய முடியும் என்று, இன்றைக்கு டெல்லியிலே இருக்கிறவர்கள் சிந்திக்கிறார்கள். மத்திய அரசாங்கத்தின் வரிகள் என்பது, Taxes are highly elastic with respect to revenue yield என்று இருக்கிறது. ஆனால் மாநில அரசுகளின் வரிகள் என்பது assigned with inelastic financial sources என்ற அளவிலே இருக்கின்றன. மத்திய அரசாங்கம் அண்மைக் காலத்திலும் சரி, அதற்குக் கொஞ்சம் முன்னாலேயும் சரி, அரசியல் சட்டத்திலே கொஞ்சம் கொஞ்சமாக திருத்தங்கள் கொண்டு வந்ததின் மூலம் எந்தெந்த வகையிலே மாநில அரசுகளுக்கு நியாயமாக கொடுக்க வேண்டிய வரிகள் கிட்டாமல் போய்க் கொண்டிருக்கிறது என்பதற்கு, சிலவற்றை நான் இந்த அவையின் கவனதிற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

1. Exclusion of Corporation tax from the divisible pool.

2. Resort to the levy of non-shareable surcharge on Income-tax;

3. Special Cesses and Excise Duties,

4. Pegging the divisible pool of the most elastic source of revenue, that is the Central Excise Duties at 40 per cent.

5. Curbs are being imposed on the already existing resource raising the capacity of the States by frequent intrusion of the Centre into the State resource periphery,

6. Sixth amendment of the Constitution whereby Union Government is empowered to fix the rate of any State tax by declaring the item as of special importance in inter-state trade and commerce. The coverage of declared goods is unduly increasing, it is alleged, thus acting as a major stumbling block in the State's resource raising efforts.

7. Another such act of mischief by the Centre has been the attempt to centralise important State items by bringing them under the Additional Excise Duties Act.

என்று பலவிதத்திலே இப்படி 7 வகைகளிலே மாநிலங்களுக்கு மத்திய அரசு அளிக்க வேண்டிய வருமானத்தைக் கொடுக்காமல் நியாயமாக இருப்பதற்கு, அரசியல் சட்டத்திலே 6-வது திருத்தத்தைக் கொண்டு வந்து மேலும் அவ்வப்



1982 மார்ச் 5] [திரு. ப. நெடுமாறன்]

போது திருத்தங்களைக் கொண்டு வந்து, அதன் மூலம் மாநிலங்களுக்கு மத்திய அரசு அளிக்க வேண்டிய பங்கு என்பது ஆண்டுக்கு ஆண்டு குறைந்துக் கொண்டே போகிறது.

இந்தக் குறைந்த நிதி ஆதாரத்தை வைத்து எந்த மாநில அரசாக இருந்தாலும், எவ்வளவு திறமையான நிதியமைச்சராக இருந்தாலும் அவர்களால் மக்களுக்குத் தேவையான பல திட்டங்களை நிறைவேற்ற முடியாத நிலைமை இருக்கிறது. இது துரதிருஷ்டவசமானதாகும். அது மட்டுமல்ல; நம்முடைய ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றியும், இந்த நிதிநிலை அறிக்கையிலே ரொம்பப் பெருமையோடு கூறியிருக்கிறார்கள். அந்த ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே தமிழக அரசின் பங்கு என்பது 3,150 கோடி ரூபாய்தான்—அது 1980-81-லேயிருந்து 1984-85 ஆகிய இந்த 5 ஆண்டுகளுக்கும் சேர்த்து.

மத்திய அரசின் 'ஓவர்ஆல் இன்வெஸ்ட்மென்ட் அவுட்டே'—7,875 கோடி ரூபாய் மொத்தத்தில் செலவழிக்கப்படும். ஆகவே கிட்டத்தட்ட சுமார் 8,000 கோடி ரூபாய் அளவிற்கு செலவழிக்கப்படுவதால் ஐந்து கோடி மக்கள் வாழக் கூடிய இந்தத் தமிழ் நாட்டிற்குக் கிடைக்கக் கூடிய ஆதாயங்கள் என்ன? தமிழ்நாட்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கும் மக்கள், நகரப்புறத்திலாகட்டும், கிராமப்புறத்திலாகட்டும், 52.12 சதவீதம் வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழ்கிறார்கள். இந்த 8,000 கோடி ரூபாய் இந்த ஐந்தாண்டுகளில் செலவழித்து, ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேறிய பிறகு தமிழ்நாட்டின் நிலைமை என்ன? தமிழ்நாட்டில் தனி நபர் வருமானம் இப்போது ரூ. 1,076 ஆக இருக்கிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முடிவில், 8,000 கோடி ரூபாய் செலவழித்ததற்குப் பின்னால் அது ரூ. 1,500 ஆக மட்டும்தான் உயரும்.

(மாலை 4-40)

அதேபோல் தமிழ்நாட்டில் இப்போதுள்ள வேலையில்லாத் திண்டாட்டம் 16 சதவீதம் என்றளவில் இருக்கிறது. அது 12 சதவீதம் ஆகமட்டுந்தான் குறையும். விவசாய வருமானம், தொழில் வருமானம் என்பது 70:100 என்றிருப்பது 80:100 என்றுதான் மாறும்.

மக்கள் தொகைப் பெருக்கத்தை எடுத்துக்கொண்டால் 1.73 சதவீதம் என்பது 1.5 சதவீதம் என்றளவிற்குத்தான் குறையும்.

அதேபோல் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்கள், 8,000 கோடி ரூபாய் செலவழித்ததற்குப் பின்னர், இப்போது 52 சதவீதம் என்று இருப்பது 46 சதவீதம் ஆக மட்டுந்தான் குறைவார்கள். ஆனால் ஆறாவது ஐந்தாண்டுத்

திட்டத்தின் முடிவிலே பணவீக்கம், விலைவாசியுயர்வு இவை பெருகுகிற வேகத்தைப் பார்க்கிறபோது அந்த வேகத்தின் முன்னால் இந்த முன்னேற்றம் சிதறி அழிந்துவிடும். 8,000 கோடி ரூபாய் செலவு செய்தும் அதற்கான திட்டங்கள் தீட்டியும் எந்தப் பயனும் இல்லை என்ற நிலைதான் ஏற்படப்போகிறது. ஆகவே இந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழகத்தில் முன்னேற்றம் என்பது நாம் எதிர்பார்க்கிற அளவிற்கு நிச்சயமாக இருக்கப் போவதில்லை என்பதை நான் அளித்த புள்ளிவிவரங்கள் தெளிவாக எடுத்துக்காட்டும்.

அதேபோல் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி பற்றியும் நம் நிதி அமைச்சர் அவர்கள் தமது நிதிநிலை அறிக்கையில் சொல்லி இருக்கிறார்கள். 'மத்திய அரசுத் துறைத் திட்டங்களில் மாநிலத்தில் மத்திய அரசு செய்கிற முதலீடுகளைப் பொறுத்தே, ஒரு மாநிலத்தின் தொழில் முன்னேற்றம் அமைந்திருக்கும். இம் மாநிலத்தில் மத்திய அரசுத் துறைத் திட்டங்கள் மேலும் பலவற்றை நிறுவ வேண்டுமென மத்திய அரசிடம் இம்மாநில அரசு வலியுறுத்தி வருகிறது. இத் திட்டங்களுக்கு மத்திய அரசு உரிய ஏற்பு அளிக்குமென நம்புகிறோம்' என்று சொல்லியிருக்கிறார்கள். இது நல்ல நம்பிக்கை; ஆனால் அனுபவரீதியாக என்ன நடந்துகொண்டிருக்கிறது. நான் யாரையும் குற்றஞ்சாட்டுவதற்காகச் சொல்லவில்லை. யதார்த்த உண்மை நிலையை அவையின் முன்னால் வைக்க விரும்புகிறேன்.

ஒரு மாநிலத்தின் தொழில் வளர்ச்சி என்பது மத்திய அரசு அந்த மாநிலத்தில் அமல்படுத்துகிற மையத் திட்டங்களைப் பொறுத்துத்தான் இருக்கும். அதைத்தான் நம் நிதி அமைச்சர் அவர்களும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் 1966-க்குப் பின்னால் இன்றுவரை 16 ஆண்டுகளாக மத்திய அரசு இங்கே முதலீடு செய்துள்ள மூலதனம் எவ்வளவு, எவ்வளவு தொழில்கள் மத்திய அரசுத் துறையில் இங்கே ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது என்று பார்த்தால் நான் வருத்தத்துடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒரு தொழில்கூட அமைக்கப்படவில்லை. 1955-ல் இருந்து 1966 வரை மறைந்த பெருந்தலைவர் திரு. காமராஜ் அவர்கள் இந்த மாநிலத்தின் முதலமைச்சராக இருந்தபோது வரிசை வரிசையாக மத்திய அரசு திட்டங்கள் இங்கே வந்த வேகம், இன்று அப்படி திட்டங்கள் வராத நிலை இவற்றை நாம் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

1955-ல் பெரம்பூரில் ரெயில்வே பெட்டித் தொழிற்சாலை வந்தது. 1956-ல் நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் வந்தது. 1960-ல் ஹிந்துஸ்தான் டெலிபிரின்டர்ஸ் வந்தது. 1960-ல் ஹிந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலை மத்திய அரசுச் சார்பில் ஆரம்பிக்கப்பட்டது. 1963-ல் திருச்சியில் ஹெவி பாயிலேர்ஸ் ஆரம்பிக்கப்பட்டது. 1965-ல் சென்னை ஆயில் ரிபைனரீஸ் ஆரம்பிக்கப்பட்டது. 1965-ல் இந்திய மருந்துப் பொருள்கள் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டது. 1966-ல் உரத் தொழிற்சாலை சென்னையில் ஆரம்பிக்கப்பட்டது. 1966-ல் திருச்சியில் படைக்கலன் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டது. இப்படி வரிசை வரிசையாக திட்டங்கள் வந்து கொண்டேயிருந்தன. 1966-க்குப் பின்னால் 1977-ல்—இந்த மாநிலம் குடியரசுத் தலைவர் அவர்கள் ஆட்சியின் கீழ் இருந்தபோது சேலம் இரும்புத் தொழிற்சாலை வந்தது. அதற்கு முன்னால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இந்த மாநிலம் இருந்த காலத்திலும் அதற்குப் பின் அ.தி.மு.க. ஆட்சி இருக்கிற காலத்திலும் மத்திய அரசு ஒரு தொழிற்சாலை கூட இந்த மாநிலத்திற்கு அளிக்காததற்கு எது அடிப்படை என்ன என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.



இந்தியா போன்ற கூட்டாட்சி அமைப்பிற்குள் இருக்கும் நாடுகளில், அழுத பிள்ளைக்குத்தான் வாழைப்பழம் தரப்படும் என்று சொல்வார்களே, அதே போல், யார் ஓங்கி கூச்சல் போடுகிறார்களோ, யார் தங்களுக்குத் தொழிற்சாலைகள் வேண்டுமென்று கூச்சல் போட்டு, மத்திய அரசாங்கத்தோடு போராடுகிறார்களோ, யார் மத்திய அரசாங்கத்தில் தங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்துகிறார்களோ, அவர்கள்தான் பெற்றுத் தர முடியும். அப்படித்தான் இங்கே தொழிற்சாலைகள் வந்திருக்கின்றன. ஆனால், மத்திய அரசாங்கம், தமிழகத்தை ஒதுக்கி வைத்திருக்கிறது.

**திரு. செ. சிவசாமி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது காங்கிரஸ்காரர்கள் காட்டும் பாரபட்சம் என்று ஏன் எடுத்துக் கொள்ளக் கூடாது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** யார் யார் போராடுகிறார்களோ, அவர்களுக்குத்தான் கிடைக்கும் என்று ஏற்கெனவே அவர் சொல்லியிருக்கிறார்.

**திரு. ப. நெடுமாறன் :** தமிழகத்திலே இன்றைக்கு தொழிற்சாலைகள் மத்திய அரசாங்கத்தின் சார்பிலே அமைக்காததன் காரணமாக, தொழிற் துறையிலே தமிழ்நாடு பின்தங்கியிருக்கக்கூடிய நிலைமை உருவாகி இருக்கிறது என்பதை நம் நிதி நிலை அறிக்கையிலே அமைச்சர் அவர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அதற்காக நான் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், அது மட்டும் போதாது. நாம் தொடர்ந்து போராடி, இந்த அவை

யிலே இருக்கக்கூடிய எல்லாக் கட்சியினரும், இந்திரா காங்கிரஸ் கட்சியினரும் கூட ஒன்றுபட்டு, போராடினால் தான் நம்முடைய தமிழகத்திலே தொழிற்துறையிலே முன்னேற்றம் அடைய முடியும். அரசியல் பேதமில்லாமல், அத்தனை பேரும் ஒன்றுபட்டு போராட வேண்டுமென்று தான் இந்த நேரத்திலே வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் பல புதிய விற்பனை வரிகளை அறிவித்திருக்கிறார்கள். விற்பனை வரி பல்விதத்திலே உயர்த்தப்பட்டிருக்கிறது. எனக்கு ஒரு சந்தேகம். விற்பனை வரியை மத்திய அரசு எடுத்துக் கொள்ளப்போகிறது என்ற நிலைமையின் காரணமாக, கடைசி கடைசியாக ஏதோ வரக்கூடிய வருவாய் வரட்டும் என்று நீங்கள் இந்த வரியைப் போட்டிருக்கிறீர்களா என்று அறிய விரும்புகிறேன். அதிலும் குறிப்பாக, கைத்தறிப் பட்டுக்கு 5 சதவீதம் விற்பனை வரி என்று போட்டிருக்கிறீர்கள். அதனால் அந்தத் தொழிலே அழிந்துவிடும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மதிப்பிற்குரிய இராஜாஜி அவர்கள் இந்த மாநிலத்தின் முதல் மந்திரியாக 1952-லே இருந்தபோது, கைத்தறிப் பட்டிற்கான விற்பனை வரியை ரத்து செய்தார்கள். அதற்குப் பின்னால் 1957-லே பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் முதல் அமைச்சராக இருந்தபோது வெளி மாநிலங்களுக்கு கைத்தறிப் பட்டு ஏற்றுமதி செய்தால் அதற்கு விற்பனை வரி என்றிருந்ததை ரத்து செய்தார்கள். ஆக, அன்றிலிருந்து இன்றுவரை, இந்தக் கைத்தறிப் பட்டுக்கு விற்பனை வரி இல்லாமல் இருந்தது. அது ஒரு குடிசைத் தொழில், ஏழை நெசவாளர்கள் அதை நடத்தி வருகிறார்கள். அதற்கு நீங்கள் விற்பனை வரி விதித்தால், இன்னொரு அபாயம் இருக்கிறது. மத்திய அரசாங்கம் 10 சதவீதம் உதவித்தொகை கைத்தறிப் பட்டுக்கு அளித்து வருகிறார்கள். நீங்கள் விற்பனை வரி போடுவதால், அவர்களுடைய பத்து சதவீதம் உதவித் தொகை இல்லாமல் போய்விடும், நமக்கு வராது. எனவே ஐந்து சதவீதம் விற்பனை வரியை நம்பி, நீங்கள் 10 சதவீதம் உதவித் தொகையை இழக்க இஷ்டமா என்பதைத்தான் நான் அறிய விரும்புகிறேன்.

அதேபோல் இன்னொன்று. 4 சதவீதம் என்று மூன்று பல முறை விற்பனை வரி இருந்ததை, 5 சதவீதம் என்று ஆக்கியிருக்கிறீர்கள். அதனால் சிறு வியாபாரிகள் மட்டுமல்ல; எல்லோருமே பாதிக்கப்படுவார்கள். அதிலும் சாக்கு விற்பனைத் தொழிலில் பல இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம், இந்தத் தொழில் நசிக்குமானால், அவர்கள் தெருவிலே நிற்கவேண்டிய அபாயம் இருக்கிறது. சாக்கை பேக்கிங் பொருளாகக் கருதி விற்பனை வரியில் இருந்து விலக்களிக்க வேண்டும்.



அண்டை மாநிலமான பாண்டிச்சேரியிலே ஹெவி இன்டஸ்ட்ரிஸ் ஆரம்பிக்கப்படுமானால், மூன்று வருஷங்களுக்கு சேல்ஸ் டாக்ஸ் இல்லை என்று அறிவித்திருக்கிறார்கள். அதன் விளைவாக அங்கே பல தொழில்கள் புதிதாக வந்திருக்கின்றன. சிவகாசியிலே இருக்கக்கூடிய பெரிய தொழிலதிபர்கள் ஒன்றுகூடி, பாண்டிச்சேரியிலே போய் பேப்பர் தொழிற்சாலையை வைக்கிறார்கள். காரணம், அங்கே முதல் மூன்று வருஷங்களுக்கு சேல்ஸ் டாக்ஸ் இல்லை. இதனால், அந்தத் தொழில் அந்த மாநிலத்திற்குப் போய் இருக்கிறது. அந்த நிலையை எண்ணிப்பார்த்து நீங்கள் தமிழகத்திலே 'ஹெவி இண்டஸ்ட்ரீஸ்' ஆரம்பித்தால் முதல் மூன்று ஆண்டுகளுக்கு விற்பனை வரி இல்லை என்று அறிவிக்க வேண்டுமென்று வற்புறுத்தி கேட்டுக் கொள்கிறேன்.

(மாலை 4.50)

அடுத்து விவசாயத்தைப் பற்றி சில வார்த்தைகளை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். தமிழகத்திலே விவசாயிகள் மிகவும் பரிதவிக்கக் கூடிய நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். நெல்லுக்கு ஒரு குவிண்டாலுக்கு குறைந்த பட்சம் 150 ரூபாய் தரவேண்டுமென்று விவசாயிகள் போராடுகிறார்கள். மாநில அரசு 147 ரூபாயை கொடுக்கவேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்தி வருகிறது. ஆனால் மத்திய அரசு நெல்லுக்கு விலையை உயர்த்துவதற்கு மறுக்கிறது. நெல்லுக்கு ஆகக்கூடிய சாகுபடிச் செலவை விட கோதுமைக்கு சாகுபடி செலவு மிகவும் குறைவு. அதற்கு விலையை உயர்த்திக்கொண்டே போகிறார்கள். நெல்லுக்கு நியாயமான விலையை கொடுக்க மத்திய அரசு மறுக்கிறது. அவர்கள் சொல்கிற ஒரே காரணம் நெல்லுக்கு அதிக விலை கொடுத்தால் பணப்பெருக்கம் ஏற்படும் என்று சொல்கிறார்கள். நியாயமான விலை கிடைப்பதற்கு மாநில அரசு இன்னும் அதிகமான அளவிற்கு முயற்சிகள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் குறுவை வசூல் ஒரு குவிண்டாலுக்கு 2 ரூபாய் 'ஹேண்டலிங் சார்ஜ்' அளிக்கப்பட்டது. இந்த ஆண்டு அது அளிக்கப்படவில்லை. அதன் காரணமாக விவசாயிகளிடத்தில் மேலும் அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து மதுரை நகரைப் பற்றி எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். மதுரை நகரம் நம்முடைய தமிழகத்திலே இரண்டாவது பெரிய நகரம். மதுரை, இராமநாதபுரம் மாவட்டத்தின் தலைநகராகவும் இருந்து வருகிறது.

[திரு. ப. நெடுமாறன்] [1982 மார்ச் 5

இந்நகரில் ஒரு சர்க்குலர் எலெக்ட்ரிக் ட்ரெயின் அமைக்க மத்திய அரசு
நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று வற்புறுத்த வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன். மதுரை நகரிலே ஒரு 'வெட்டர்னரி
காலேஜ்' அமைக்க வேண்டும். அது தென் மாவட்டங்களுக்கு மிகவும்
உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 'கேட்டரிங்
காலேஜ்' டெல்லி, பம்பாய், கல்கத்தா, சென்னை போன்ற நகரங்களிலே
மட்டும் இருக்கின்றன. மதுரையில் ஒன்றையும் அமைக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன் ஐ.டி.ஐ. பள்ளிகளைப் பொறுத்தவரையில்
நம்முடைய அரசு கொள்கை ரீதியாக ஒரு முடிவு செய்ய வேண்டும். இனி
மேல் அமைக்கக்கூடிய பள்ளிகளை தாலுகா தலைநகரங்களில் அமைக்க
வேண்டும். எல்லா தாலுக்காவிலும் ஒரு ஐ.டி.ஐ. பள்ளி இருக்கக்கூடிய
ஒரு நிலையை உருவாக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று வேளாண்மைத் துறையிலும், வனத்துறையிலும் "கூபாபுல்"
மரங்களை வளர்ப்பதற்கான திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. பிலிப்
பைன்ஸ் நாட்டில் இந்தத் திட்டத்தை அமல் நடத்தியதன் காரணமாக அந்த
நாட்டின் பொருளாதார வளம் செழித்து இருக்கிறது. அந்த திட்டத்தை
மதுரை மாவட்டத்திலே 2 கோடி ரூபாய் செலவிலே அமல் நடத்திக்கொண்
டிருக்கிறார்கள். அந்த மரங்களைப்பற்றி எல்லா விவரங்களையும் மக்களுக்கு
அறிவித்து அதை எல்லா மாவட்டங்களுக்கும் விஸ்தரித்தால் கிராமப் பொரு
ளாதாரம் வளரும். அதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துக்
கொள்ளவேண்டுமென்று வற்புறுத்த விரும்புகிறேன்.

இரண்டு வயது முதல் 10 வயது வரை உள்ள ஏழைக் குழந்தைகளுக்கு,
வறுமைக்கோட்டிற்கு கீழே இருக்கக்கூடிய அவர்களுக்கு இலவச உணவு அளிப்
பதற்கான திட்டத்தை அரசு அறிவித்திருக்கிறது. நோக்கம் நல்ல நோக்க
மாக இருந்தாலும் எப்படி செயல் முறை சாத்தியம் என்பதை அரசு அறிவிக்க
வில்லை. நீங்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே என்று சொல்கிறீர்கள்
அதை யார் நிர்ணயம் செய்வது, யார் யாருக்கு உணவு கொடுப்பது என்பன
போன்ற பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. ஏற்கெனவே மதிய
உணவுத் திட்டம் அமலில் இருக்கிறது. அந்தத் திட்டத்தை சரியான
முறையிலே அமல் நடத்தவேண்டும். இது சரியான முறையிலே அமல் நடத்தப்
படவில்லை. அதற்கென்று ஒரு குழந்தைக்கு 10 காசு கொடுக்கப்படு
கிறது. அந்த பத்து காசுக்கு மேல் ஆசிரியர்கள் நிதி சேகரித்து பிச்சை
எடுத்து எப்படியோ அளித்துக்கொண்டு இருக்கிறார்கள். அதுவே முறை
யாகச் செயல்படவில்லை. அந்தத் திட்டத்தை முறையாகச் செயல்படுத்து



1982 மார்ச் 5] [திரு. ந. குலசேகர பாண்டியன்]

வதன் மூலம் நாட்டு மக்களுக்கு நன்மை செய்யமுடியும். அதை விட்டுவிட்டு
புதியதாக ஒரு திட்டத்தை அறிவித்து அதன் மூலம் ஏதாவது செய்யலாம்
என்று நினைப்பீர்களானால் இந்தத் திட்டம் காரிய சாத்தியமா என்ற ஐயம்
எல்லோருக்கும் ஏற்பட்டிருக்கிறது. அதையும் நிதியமைச்சர் அவர்கள்
விளக்க வேண்டுமென்று வற்புறுத்தி இந்த வாய்ப்பினை நல்கிய துணைத்
தலைவர் அவர்களுக்கு நன்றிகூறி முடிக்கிறேன்.

திரு. ந. குலசேகர பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, 1982-83 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது பேச
வாய்ப்பு அளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்து நிதிநிலை அறிக்கையை வர
வேற்று என்னுடைய கருத்துக்களை எடுத்துரைக்க விழைகிறேன். இருக்கக்
கூடிய நிதியாதாரங்களை வைத்துக்கொண்டு இதை விட ஒரு சிறப்பான நிதி
நிலை அறிக்கையினை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர்
ஆலோசனைக்கிணங்க மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்களைத் தவிர வேறு
எவராலும் வெளியிட இயலாது என்பதை துணிவோடும் தைரியத்தோடும்
இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர்
புரட்சித் தலைவர் அவர்கள் தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்
கொண்ட பிறகு தமிழ் மொழிக்கும் தமிழர்களுக்கும் ஒரு பெருமையை
அவர்கள் புரிப்புக் கொள்ளத் தக்கவகையில் மொழியினுடைய வளர்ச்சிக்கு
மொழிக்காகப் பாடுபட்டவர்களுக்கும் அவர்கள் செயலாற்றி வருகிறார்கள்
என்பதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். உலகத் தமிழ் மாநாடு
கண்டு தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைத்து இன்றைக்கு முதல்வர் புரட்சித்
தலைவர் அவர்கள் பாரதிக்கு நூற்றாண்டு விழாவை நடத்திக்கொண்டு இருக்
கிறார்கள். எவ்வளவோ பேர் கேலியாகப் பேசினாலும்கூட இந்த விழாக்கள்
எடுப்பதை நாம் பாராட்டாமல் வேறு யார் பாராட்டமுடியும். பாரதி
பாரதியாகப் பரிமளித்தது. தன்னுடைய செந்தமிழால் செந்தீ தமிழாகச்
சிதறியது. அவனது கவிதை அரங்கு நமக்கு ஒரு ஆயுதக் கிடங்கு. இன்று
கூட எதிரிகள் வந்தால் நாம் எடுத்து எறிவது அவனது ஈட்டி வரிகள்தான்.
அவனுக்கு விழா எடுத்த புரட்சித் தலைவர் அவர்களை தமிழ்ப் பல்கலைக்
கழகம் கண்ட புரட்சித் தலைவர் அவர்களை பாராட்ட மனம் இல்லாதவர்களை
தமிழர்கள் என்றோ தமிழினத் தலைவர்கள் என்றோ சொல்லிக்கொள்வதிலே
நியாயமும் அர்த்தமும் இருக்கமுடியாது. இந்த நிதிநிலை அறிக்கையிலே
ஒன்றுமே இல்லை என்றெல்லாம் எடுத்துச்சொன்னார்கள். பள்ளியில் படிக்
கும் குழந்தைகளுக்கு ஒரு வேளை உணவுத் திட்டம் என்பது அனைத்து
இந்தியாவிலேயும் ஒரு முன் உதாரணமாக எடுத்துச் செயல்படவேண்டிய

[திரு. ந. குலசேகர பாண்டியன்] [1982 மார்ச் 5

திட்டம் என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நெய்
துளிவிழுந்தால்தான் நெருப்புக்கூட நிமிரும். லட்சக்கணக்கான குழந்தைகள்
தமிழகத்திலே ஒரு வேளை உணவு இன்றி வாடிக்கொண்டிருக்கின்றன. அந்தக்
குழந்தைகளின் எதிர்காலம் தமிழகத்தின் எதிர்காலம் என்பதை உணர்ந்து
மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் குழந்தைகளுக்கு ஒரு வேளை
இலவச உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். அதனைப்
புரிந்துகொள்ளாத சிலர் அடிமைத் தொடர்கதைக்கு அணிந்துரை எழுதிக்
கொண்டிருந்தபோது இவர்கள்தான் உரிமைப் பாடல்களை உச்சரித்துக்
கொண்டிருந்தார்கள் உரிமைக்குரலிலே. அந்த புரட்சித் தலைவரைப்
புரிந்துகொள்ளுங்கள். அவர் தமிழின் எல்லாத் திசைகளிலும் முளைத்திட்ட
இரட்டை இலை. சிலர் புளியேப்பங்களுக்கு கானம் பாடுகையிலே பசியேப்
பங்களுக்குப் பரணி பாடியவர் புரட்சித் தலைவர், புரட்சித் தலைவர், புரிந்து
கொள்ளுங்கள். திறம்பட வந்த மறவர், புதிய அறம்பாட வந்த அறிஞர்
புரட்சித் தலைவர் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள் என்பதை நான்
சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கை

(மாலை 5-00)

யிலே திட்டங்களே ஏதுமில்லை; எல்லாமே பற்பொடி, காகிதம் என்றெல்லாம்
கேலி பேசிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் நான் சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன். சமுதாயத்தில் மறுமலர்ச்சி ஏற்பட வேண்டுமென்
றால் கிராமப்புறங்கள் வளர்ச்சியடைய வேண்டியது மிகவும் இன்றியமையாத
தாகும். கிராமப்புறங்களுக்கான தன்நிறைவுத் திட்டங்களை இன்றைக்குத்
தமிழக அரசு அமுல்படுத்தி வருகிறது. கால்நடைப் பராமரிப்பு என்பது
வளமான எதிர்காலத்திற்கு இன்றியமையாத தேவை என்பதை புரட்சித்
தலைவரவர்கள் கருத்தில் கொண்டுதான் இந்த நிதிநிலை அறிக்கையில், கால்
நடைச் செல்வங்கள் பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்று என்பதால் கால்நடை
மருந்தகங்களுக்கு 5 புதிய சொந்தக் கட்டிடங்களைக் கட்டுவதற்கு இந்த
நிதி நிலை அறிக்கையில் வழி செய்திருக்கிறார்கள். புதிதாகக் கால்நடை
மருந்தகங்கள் 25 தொடங்குவதைப்பற்றியும், கால்நடை மருந்தகங்கள் ஐந்
தினைக் கால்நடை மருத்துவமனைகளாக மாற்றுவதைப்பற்றியும், கோமாரி
நோயை ஒழிக்கும் பொருட்டு கண்காணிப்புச் சாவடிகள் மூன்றைத் தொடங்கு
வதைப்பற்றியும் நிதி நிலை அறிக்கையிலே வழிவகை செய்திருக்கிறார்கள்.
இவைகளெல்லாம் நாட்டின் வளமான திட்டத்திற்கு ஒரு .காண்டுகோளாக
இல்லையா என்பதை நான் அவர்களுக்குக் கேள்வியாக வைக்க விரும்பு
கிறேன்.



1982 மார்ச் 5] [திரு. ந. குலசேகர பாண்டியன்]

நீலகிரி மாவட்டத்தில் மத்திய அரசின் உதவியுடனும் இங்கிலாந்து நாட்டின்
கூட்டு முயற்சியிலும் ரூபாய் 3 கோடிக்கும் அதிகமான செலவில் வெக்கை
நோய் ஆய்வு-கட்டுப்பாட்டிற்கான முன்னோடித் திட்டம் கொண்டு வரப்பட
டிருப்பது நிச்சயமாகப் பாராட்டுக்குரியது. இந்தத் திட்டங்களின் மூலம்
தமிழகத்திலே கால்நடைத் துறையிலே மிகப்பெரிய மறுமலர்ச்சியும், கால்
நடைகளுக்கு நல்லதொரு பாதுகாப்பையும் அரசாங்கம் செய்து கொடுக்கும்
என்பதில் எந்தவிதமான கருத்து மாறுபாடும் இருக்க முடியாது என்று நம்பு
கிறேன்.

கிராமப்புற பொருளாதாரத்தைப் பொறுத்தவரையிலே இன்றைக்குப் பால்
பெருக்கத் திட்டம் என்பது மிகப்பெரிய மறுமலர்ச்சியைக் கிராமப் புறங்
களிலே ஏற்படுத்தி வருகிறது. இதுவரையிலே 3,708 பால் வழங்கு தொடக்
கக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு ஒவ்வொரு மாவட்டத்திலேயும்
இன்றைக்கு அது பால் உற்பத்தியாளர்கள் சங்கமாக மாற்றப்பட்டு தனி
அமைப்புகளைப்போல் இயங்கி வருவதோடு, தமிழ்நாடு முழுவதும் பால்
உற்பத்தியாளர்கள் இணையமாக மாற்றப்பட்டிருப்பதை நாடு நன்கு அறியும்.
அதன்காரணமாகக் கிராமப்புறங்களில் பொருளாதார மறுமலர்ச்சி ஏற்படுவது
மட்டுமல்ல, தமிழகம் எங்குமுள்ள மக்களுக்குத் தூய்மையான பால் கொடுக்
கவும் அது வழிவகை செய்கிறது. இந்தப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியச்
சங்கங்களுக்கு அதிகாரப் பற்றற்றவர்களை நியமனம் செய்ய வேண்டும்
அல்லது தேர்தலைக் கொண்டு வந்து அவைகளை நிர்வகிப்பதிலே மிகச்சிறந்த
ஒரு முன்னுதாரணத்தை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று இந்த நேரத்திலே
நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

ஏழை மக்கள் பயன்படுத்தும் மண்ணெண்ணெய்க்கு இருந்த விற்பனை
வரியை 8 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைத்திருப்பதை இன்றைக்
குக் கிராமப்புறங்களில் இருப்பவர்கள் மட்டுமல்ல, நகர்ப்புறங்களில் உள்ள
ஏழை எளிய மக்களும் புரட்சித் தலைவரவர்களை மனந்திறந்து பாராட்டிக்
கொண்டிருக்கிறார்கள்.

இந்தியாவிலேயே எங்கும் இல்லாத அளவிற்கு தமிழ்நாட்டிலே முதியோர்
உதவித் தொகையை 25 ரூபாயிலிருந்து 35 ரூபாயாக உயர்த்தியிருப்பதையும்
மக்கள் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

குறைந்த ஓய்வூதியமாக இருந்த 100 ரூபாயை, குறைந்தபட்ச
ஓய்வூதியத் தொகையை 125 ரூபாயாக உயர்த்த அரசு முடிவு செய்திருப்பதை
மக்கள் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

(திரு. குலசேகபாண்டியன்) [1982 மார்ச் 5

இவைகளைப்பற்றி யெல்லாம் இங்கே சிலர் பெரிய உணர்வுகளோடு எடுத்துச் சொல்லவில்லை என்றாலும்கூட, ஏழைகளின் இதயங்களிலேயெல்லாம் மிகப்பெரிய நிறைவை ஏற்படுத்தியிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் ஆம்பூர், வாணியம்பாடி பகுதிகளையும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பேருந்து நிலையத்தை விரிவுபடுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தோல் பதனிடும் தொழிற்சாலை, காலணி தோல் தொழிற்சாலை, கம்பளி தயாரிக்கும் தொழிற்சாலை, தோல் தொழிற்சாலைக்குத் தேவையான இயந்திரங்களைத் தயாரிக்கின்ற பொறியியல் தொழிற்சாலைகள் ஆகியவைகள் ஆம்பூர், வாணியம்பாடி பகுதிகளில் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் இவைகளுக்கு ஒரு தொழிற்பேட்டை அமைத்துத் தரவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கருப்பஞ்சக்கையிலிருந்து செய்தித்தாள், எழுதும்தாள் ஆகியவற்றைத் தயாரிக்கும் தொழிற்சாலையை 190 கோடி மதிப்பீட்டுச் செலவில் அமைக்க இருப்பதை நான் வரவேற்கிறேன். ஆம்பூர், வாணியம்பாடி பகுதிகளில் 3 சர்க்கரை ஆலைகள் 50 மைல்கள் இடைவெளிக்குள்ளாக இருப்பதால் அந்தத் தொழிற்சாலையை ஆம்பூர் பகுதியில் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

* திரு. ஏ. சாகுல் ஹமீது : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையின்மீது இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கின் சார்பாகப் பேச வாய்ப்பளித்தமைக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். என்னை—எங்களைப் பொறுத்தவரையில், நான் தொகுதி பிரச்னையும், அதே நேரத்தில், மைனாரிட்டியைச் சேர்ந்தவனாக இருப்பதால், எங்களுடைய சமுதாயம் சார்பாகவும் பேசமுற்படுகிறேன்.

முதலில், இந்தப் பட்ஜெட்டைப் பற்றி பேசுகின்ற நேரத்திலே, இதிலே, பிஸ்கெட், சாக்லேட், மிட்டாய் வகைகள், மின்சாரச் சாதனங்கள், கருவிகள், பட்டுத் துணிகள் போன்றவைகளுக்கு வரி விதிக்கப்பட்டிருக்கிறது. இந்த பிஸ்கெட், சாக்லேட், மிட்டாய் வகைகள் ஏழைக் குழந்தைகள் சாப்பிடுகின்ற உணவாக இருக்கின்ற காரணத்தால், அப்பொருள்களின்மீது வரி விதிப்பது, ஏழைகளை நிச்சயமாகப் பாதிக்கும். ஆகவே, இது ஏழைகளைப் பாதிக்காத பட்ஜெட் என்று சொல்வதற்கில்லை. அதே நேரத்திலே,



1982 மார்ச் 5] (திரு. ஏ. சாகுல் ஹமீது)

மோட்டார் வாகன உறுப்புகளுக்கும், மின்சார சாதனங்களுக்கும் வரி விதிக்கப்பட்டிருக்கிறது. மின்சார சாதனங்களை உபயோகிக்காத ஏழை மக்களே இல்லை. ஆகவே, அந்த வரிகள் காரணமாக, ஏழை மக்கள் நிச்சயமாகப் பாதிக்கப்படுவார்கள்.

மின்சாரத்தைப் பொறுத்தவரையில், மின்சாரம் நாட்டின் கண் போன்றது. அந்தக் கண் இன்றைக்கு ஒளி இழந்து குருடாகி வருகின்ற நிலை வந்தால், அதன் விளைவாக இந்த நாடே இருளாகி விடும் என்ற என்னுடைய எண்ணத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். கிராமப்புறத்திலே விவசாய மக்கள் எல்லாம் தண்ணீர் இல்லாத நிலைமையில், தங்களுடைய மோட்டாருக்கு மின் இணைப்பு கிடைக்காமல், அல்லல் படுகிற அதே நேரத்தில், மின்வெட்டின் விளைவாக, நகரங்களிலே இருக்கிற தொழிற்சாலைகளில் உற்பத்தி குறைகின்றது, வேலை வாய்ப்புகள் குறைகின்றன. தமிழகத்திலே ஏற்பட்டிருக்கின்ற மின்சார பற்றாக்குறை நிலை காரணமாக, ஒரு புரட்சி உருவாகும் நிலையிருக்கிறது.

குழந்தைகளுக்கு உணவு அளிப்பதற்காக, ரூ. 100 கோடி ஒதுக்கப்படுகிறது. அது முறையாக செலவு செய்யப்பட வேண்டுமானால், ஏற்கனவே குழந்தைகளுக்கு வழங்கப்படுகிற மதிய உணவுத் திட்டத்தோடு இதையும் சேர்த்து அமைத்தால்தான் பள்ளிச் சிறுவர்களுக்கு முறையாகக் கொடுக்க வாய்ப்பிருக்கும். இப்பொழுது மதிய உணவிற்காக 10 பைசா, 5 பைசா என 15 பைசா கொடுக்கிறார்கள். ஆனால், மதிய உணவு குழந்தைகளுக்கு முறையாகப் போய்ச் சேரவில்லை.

என் தொகுதி கைத்தறி நெசவாளர் நிறைந்த பகுதி. அங்கே அரசு மருத்துவ மனையில் ஒரு காச நோய் பிரிவு வேண்டுமென்று 1½ ஆண்டுக் காலமாக இங்கே முறையிட்டுக் கொண்டிருக்கிறோம். அதனை அங்கே அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். கடையநல்லூர் தொகுதியைத் தனித் தாலுகாவாக ஆக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கடையநல்லூர் பகுதியைத் தொழிலில் பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட பகுதியாக அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பட்டோர் சமுதாயம் மேம்பாடடைய இன்று பிற்பட்டோர் மேம்பாட்டுக் கழகம் ஒன்று அமைக்கவிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அது வரவேற்க வேண்டிய ஒன்று. இன்றைக்குப் பிற்பட்டோர் சமுதாயம் எந்த அளவிலே தமிழகத்திலே இருக்கிறது என்பதைச் சொல்லிக் காட்ட வேண்டிய கடமையும் பொறுப்பும் எனக்கு இருக்கிறது. பிற்பட்டோர் என்று குறிப்

(திரு. ஏ. சாகுல் ஹமீது) [1982 மார்ச் 5

பிட்டால், கிறிஸ்தவ சமுதாயமும், முஸ்லிம் சமுதாயத்தினரும்தான் இந்த நாட்டிலே மைனாரிட்டிகளாக இருக்கின்றனர். இந்த கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிம் சமுதாயத்தினருக்கும் பாடுபடுவதில் முஸ்லிம் லீக் முன்னணியில் இருக்கிறது. இந்தச் சட்டமன்றத்தில் 234 உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்றால், அவர்களில் பெரும்பகுதியினர் முஸ்லிம்களுடைய வாக்குகளைப் பெற்றுத்தான் வந்திருக்கிறார்கள். ஆனால், முஸ்லிம் சமுதாயத்தினருக்கும் கிறிஸ்தவ, முஸ்லிம் சமுதாயத்திற்காக வாதாடுகின்ற வாய்ப்பும் தருணமும் இந்த அவையில் அனைவருக்கும் இல்லை. ஆனால், முஸ்லிம் லீக் வாதாடு கின்றது. 125 ஆண்டு கால வரலாற்றையுடைய கதீட்ரல் சாலையின் பெயர் மாற்றப்பட்டு, அதற்கு கிறிஸ்தவ சமுதாயத்தைச் சேர்ந்த பாதிரிமார்கள் ஊர்வலம் சென்று வெளியுலகத்திற்குக் காட்டியதன் காரணமாக, இன்றைக்கு அந்த கதீட்ரல் சாலை என்ற பெயர் நீட்டிக்கப்பட்டிருக்கிறது. அதற்காக நான் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு நம்முடைய அரசு வழங்குகின்ற நிலப்பட்டா, வீட்டு மனைப் பட்டா, கறவை மாடுகள், உழவு மாடுகள், ஊனமுற்றோர் உதவி, விதவைகளின் உதவி இவையெல்லாம் மைனாரிட்டி சமுதாயத்திற்குக் கிடைக்கவில்லை. அவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள். இன்றைக்குத் தமிழகத்தில் பரவ லாக கொடுக்கப்பட்டுள்ள பட்டியலை எடுத்துப் பார்த்தால், இந்த கிறிஸ்தவ சமுதாயத்தினரும், முஸ்லிம் சமுதாயத்தினரும் இதில் பாதிக்கப்படுகின்றனர் என்பதற்காகன கணக்கைப் பார்க்க முடியும்.

(மாலை 5-10)

இன்றைக்கு தமிழகத்திலே இந்த மைனாரிட்டி சமுதாயம் தங்களுடைய உரிமைகளை இழந்த சமுதாயமாக தமிழகத்தில் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் இன்றைக்குக் கன்னியாகுமரி மாவட்டத்திலே மண்டைக் காட்டிலே 6 பேர்கள் உயிரிழப்பு நடந்திருக்கிறது. எங்களுடைய இயக்கத்தின் சார்பில் அந்த குடும்பத் தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த ஆண்டு வக்ப்போர்டு உலமாக்கள், அலிம்களுக்குப் பென்சன் தரப் படும் என்று அறிவிக்கப்பட்டது. அதனால் நிறைய மனுக்கள் அனுப்பப் பட்டு அவைகள் மலைபோல் குவிந்து கிடக்கின்றன. ஆனால் பென்சன் இன்னும் கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கு பென்சனை வழங்கவேண்டும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். வக்ப் போர்டு



1982 மார்ச் 5] [திரு. ஏ. சாகுல் ஹமீது]

இன்றைக்கு தனியாருடைய நிறுவனம்போல செயல்பட்டுக் கொண்டு வரு கிறது. அப்படி தனியார் நிறுவனம் போல் செயல்பட்டு, அந்தச் சமுதாயத் தின் மனக்கசப்பை பெற்றுக் கொண்டிருக்கிறது.

குறிப்பாக இன்றைக்குத் தமிழகத்திலே முஸ்லிம்களின் வணக்கஸ்தலங்கள், அடக்கஸ்தலங்கள் இவைகள் எல்லாம் தாக்கப்பட்டு அவர்கள் உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்பு இல்லை. திருச்சி தென்னூர் நெடுஞ்சாலையில் பள்ளிவாசலுக்குச் சொந்தமான ஆட்டுமந்தை என்னும் இடத்தில், அங்கே உள்ள கோவிலின் அறங்காவலர் ஆக்கிரமித்து இருக்கிறார். அதன் காரண மாக அங்கே கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது. வந்தவாசி பகுதியிலே தவாப் காலத்து பள்ளியிலே இருக்கின்ற குடிசைகளை அப்புறப்படுத்த வேண்டும் என்று அதிகாரிகளும் காவல் துறையின் தலையீடு இருக்கின்றது. அங்கே குடிசைகள் அமைத்துக்கொள்ள ஏற்கனவே ஜமாத்துகளின் அனுமதி இருக்கின்றது. ஆனால் காவல் துறை அதிகாரிகள் அவைகளை அப்புறப் படுத்த வேண்டும் என்று சிறுபான்மையினருடைய உரிமையில் தலையிடுகின்ற நிலையை மாற்றி அமைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். புதுக் கோட்டை மாவட்டத்தில் காட்டுபாவா பள்ளிவாசல் புனிதமான அடக்கஸ்தலம் இருக்கிறது. அது தாக்கப்பட்டிருக்கிறது. நிர்வாகிகள், சொத்துக்களுக் குச் சேதப்படுத்தப்பட்டிருக்கின்றது என்பதை சுட்டிக்காட்ட கடமைப்பட்டி ருக்கிறேன்.

பொதுவாக மைனாரிட்டிகள் இன்றைக்கு எளியவர்கள், வலிமை இல்லாத வர்கள் என்று எண்ணுகிறீர்கள். ஆனால் மேகம் இலேசானதுதான். அந்த மேகம் தன்னுள்ளே கனத்த தண்ணீரை சுமந்து கொண்டிருக்கிறது. அந்த மேகம் தண்ணீரை பொழிகின்றபோது இறந்துபோன பூமி உயிர்பிழைக்கும் அதே நேரத்தில் வெள்ளமாகப் பொழிந்து வெள்ளத்தைப் பொழிய முடியும். மைனாரிட்டி என்றால் கிள்ளுக்கீரையாக நினைக்கக் கூடிய நிலை இருக்கிறது. நிச்சயமாக மைனாரிட்டி மக்கள் வலிமை வாய்ந்த மக்கள் என்பதை காலம் நிரூபிக்கும் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதே நேரத்தில் முஸ்லிம்களுக்கும் இன்றைக்கு தமிழகத்தில் பரவலாக எடுத்துக் கொண்டால், கிறித்தவ சமுதாயத்திற்கும் ஆர்.எஸ்.எஸ்.-ம் இந்து பரிஷத் தும், முஸ்லீம்களே நீங்கள் மெக்காவுக்குப் போங்கள், முஸ்லீம்களே நீங்கள் பாகிஸ்தானுக்குப் போங்கள், கிறித்துவர்களே நீங்கள் ரோமுக்குப் போங்கள் என்ற கூக்குரல் இன்றைக்குத் தமிழகத்தில் இருக்கின்றது. இந்த நாட்டிலே ஒரு சு, எறும்பைக்கூட, கொசுவைக்கூட வெளிநாட்டுக்குப் போ என்று சொல்ல எவனுக்கும் உரிமை இல்லை. நாங்கள் இந்த நாட்டிலே பிறந்த

[திரு. ஏ. சாகுல் ஹமீது] [1982 மார்ச் 5

மக்கள், மைனாரிட்டி மக்கள், இந்த நாட்டிலே பிறந்த மக்கள், இந்த நாட்
டிலே பிறந்து இந்த நாட்டிலே மடியப்போகிற மக்கள். இன்றைக்கு
தமிழகத்திலே சிறுபான்மை சமுதாயத்தினர் கடைகளிலே பொருட்களை
வாங்காதீர்கள், சாமான்கள் வாங்காதீர்கள் என்று பகிஷ்காரம் செய்யப்படு
கிறது. அதையெல்லாம் இந்த அரசு பார்த்துக்கொண்டு கண்டும் காணாமல்
இருப்பது மாதிரி இருக்கிறது என்றால் இந்த ஆர். எஸ். எஸ். இயக்கத்திற்கு
ஊக்கம் தருகிறது என்றால் இந்த சர்க்கார் பற்றி முஸ்லீம் சமுதாயம் என்ன
கருதும். நாங்கள் என்ன இந்த நாட்டு மக்கள் இல்லையா? பாஸ்தான் போரின்
போதும் சீனா போரின்போதும் இந்த நாட்டிற்காக எங்களுடைய உயிரையே
நாங்கள் அர்ப்பணித்து இருக்கிறோம். இந்த நாடு இந்திய நாடு, வளமாக
வும் மரியாதையாகவும் மானத்தோடும் வாழவேண்டும் என்பதிலே இன்று சிறு
பான்மை சமுதாய மக்கள் தங்களுடைய உயிரையே கொடுத்து இருக்கி
றார்கள். கொடுப்பதற்குத் தயாராகவும் இருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல, இந்த பாகிஸ்தான் போரின்போது நாட்டின் பாதுகாப்பு
ரகசியங்கள் விற்கப்பட்டன என்று பிடிக்கப்பட்டது. அப்படி பிடிக்கப்பட்ட
பட்டியலிலே எந்த முஸ்லீம் பெயராவது இருக்கிறது என்று நிரூபிக்க முடிந்
ததா என்று சவால் விட்டுக் கேட்க விரும்புகிறேன். ஆனால் கேட்கிறார்கள்
இன்றைக்கு. நீங்கள் ரோமுக்குப் போ என்று சொல்லுகிறார்கள், பாகிஸ்
தானுக்கு செல்லுங்கள் என்று சொல்கிறார்கள். யார் இவர்கள்?
(குறுக்கீடு).

ஆர். எஸ். எஸ். இந்து பரிஷத் தூத்துக்குடியிலே, நாகர்கோவிலிலே
இப்படிச் சொல்கிறார்கள். அதற்கு ஆதாரங்கள் இருக்கின்றன. தயவு
செய்து என்னுடைய பேச்சிலே குறுக்கிடவேண்டாம். எனக்குக்கிடைக்கிற
நேரம் குறைவு. நான் ஒருவன் தான் இங்கே இந்த சமுதாயத்தினைப்பற்றிப்
பேசுகிறேன். அன்போடு எனக்கு இடம் கொடுக்குமாறு சகோதரர்களை
மெத்தப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

டாக்டர் அப்சல்கான் லஞ்சம் வாங்கினார் என்று சொல்லப்பட்டு அதற்காக
திரவியம் கமிஷன் அமைக்கப்பட்டது. இதுவரையில் அந்த அறிக்கை வெளி
யிடப்படவில்லை. பால் கமிஷனில் அக்கறை காட்டும் நேரத்தில் அதே
போன்று திரவியம் கமிஷன் அறிக்கையிலும் அக்கறை காட்டி அந்த அறிக்கை
யின்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரிசனங்களைப் பொறுத்தவரையில், அவர்களுடைய நலனுக்காகவும்,
ஏற்றத்திற்காகவும் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் அவ்வப்போது தன்னுடைய
கடமையை ஆற்றிக்கொண்டு இருக்கிறது. அரிசன சமுதாயம் ஒடுக்கப்பட்ட



1982 மார்ச் 5] [திரு. ஏ. சாகுல்ஹமீது]

சமுதாயம், தாழ்த்தப்பட்ட சமுதாயம், அவர்களை கவனிக்க யாரும் வர வில்லை என்ற காரணத்தால் அல்லாவைக் கூப்பிட்டார்கள். அல்லாவை கூப்பிட்ட உடனே அதிகாரிகள் ஜீப்பைப் போட்டுக்கொண்டு வருகிறார்கள். உங்களுக்கு என்ன வேண்டும் என்று கேட்கிறார்கள். அவர்கள் பல ஆண்டு காலம் தங்களுடைய கோரிக்கைகளைத் தீர்ப்பதற்காக அதிகாரிகளை அணுகிக் கேட்டார்கள், மனு போட்டார்கள், போராட்டம் நடத்திப் பார்த்தார்கள், வேறு கடவுள்களையெல்லாம் கூப்பிட்டுப் பார்த்தார்கள், அப்போது எல்லாம் வராத அதிகாரிகள் 'அல்லா' என்று கூப்பிட்ட உடனே ஓடிவருகிறார்கள், ஏன் இந்த நிலைமை என்று கேட்க விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியில் உள்ள அந்த தாழ்த்தப்பட்ட மக்கள், புறக் கணிக்கப்பட்ட மக்கள், முஸ்லீம்களோடு சேர்ந்து சகோதர சமத்துவ சங்கம் என்று அமைத்து, அதன் மூலம் தங்கள் பிரச்னைகளைத் தீர்த்துக் கொண்டு வருகிறார்கள். இப்படிப்பட்ட ஒரு நிலைமைக்கு அந்த அரிசன மக்கள் தள்ளப்பட்டதற்கான காரணம் அங்கே இருக்கின்ற குறைபாடுகள் நீக்கப்படாததும், ஆர்.எஸ்.எஸ். கொடுமையும்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு அங்கே ஏற்படுத்தப்பட்டு இருக்கும் அமைப்பு நல்ல முறையில் அந்த மக்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்துக் கொண்டு இருக்கிறது. இன்றைக்குக் காலையில் கேள்வி நேரத்தின்போது இங்கே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் மதமாற்றம் சம்பந்தமான கேள்வி கேட்கின்ற நேரத்தில், மதமாற்றம் செய்ய முன்வருபவர்களை அல்லது அதற்கு ஊக்கம் அளிப்பவர்களை, மாறுகால் மாறுகை வாங்க வேண்டும் என்று கேட்டதாகக் கேள்விப்படுகிறேன் * * *

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்கள், மதம் மாறிய பிரச்னை இப்போதுதான் ஓரளவிற்கு அடங்கி, நாட்டிலே ஒரு சுமுக சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே, மறுபடியும் அதைப் பற்றி இங்கே விவாதம் நடத்தி, அந்த சுமுக சூழ்நிலையைப் பாதிக்கும் வகையில் இருக்கும் கருத்துக்களைத் தவிர்ப்பது நல்லது. ஆகவே, அந்தப் பிரச்னை குறித்து இங்கே இப்போது பேசப்பட்ட கருத்துக்கள் குறிப்பேட்டில் இருந்து எடுத்துவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்தப் பகுதிகள் அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்பெறுகின்றன.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1982 மார்ச் 5

[பிற்பகல் 5-20]

திரு. ஏ. சாகுல் ஹமீது : ஆக இன்றைக்கு இந்த அரசை நான் கேட்டுக் கொள்வதெல்லாம் மைனாரிட்டி சமூகத்திற்கு இருக்கிற உரிமையைத் தாருங்கள். மைனாரிட்டி சமூகத்திற்கு ஏற்படுகின்ற குறைபாடுகளைப் போக்க வேண்டும், அவர்களுக்கு ஏற்படுகின்ற குறைகளை நிவர்த்தி செய்வதற்கு சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேநேரத்தில் அந்த சகோதரத்துவ சமத்துவ சங்கத்தின் சார்பாக பல காரியங்கள் நடைபெறுகின்றன. 'நாம் பலத்துடன் இருந்தால் தான் நம்மை தாக்குகின்றவர்களிடமிருந்து நம்மை காத்துக்கொள்ள முடியும்' என்று இந்தியப் பிரதமர் அன்னை இந்திரா காந்தி அவர்கள் கூறியதை நினைவுபடுத்தி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வந்தனம்.

* திரு. இரா. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொருளாதார நெருக்கடி மிக்க இந்த சூழ்நிலையில் பாமர மக்கள் பயன்பெறத்தக்க வகையில் மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்திருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மத்திய அரசு அதிகாரங்களைக் குவித்து வைத்துக்கொண்டு இருப்பதால் மாநில அரசுகள் வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்ற மத்திய அரசை எதிர் பார்க்க வேண்டியுள்ளது. இதனால் காலவிரயம், திட்ட மதிப்பீட்டுக் கூடு தல் நிலை ஏற்பட்டு வீணாக பண இழப்புதான் ஏற்படுகிறது. இந்த நிலை யில் மேலும் பல அதிகாரங்களை மத்திய அரசு எடுத்துக்கொண்டு வருவது வருந்தத்தக்கதாகும். மாநில அரசுகளுக்கு அதிக அதிகாரம் கொடுப்பதன் மூலம்தான் திட்டங்களை நல்லமுறையில் நிறைவேற்ற முடியும் என்பதை மத்திய அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

தமிழக சட்டமன்றத்தில் பினாமி நில சீர்திருத்தச் சட்டம் எல்லாக் கட்சியினராலும் ஒருமனதாக ஏற்கப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. இதற்கு மத்திய அரசு அனுமதி தர மறுத்துவிட்டதாக தகவல் வந்திருக்கிறது. ஒரு முற்போக்கான சட்டம், நிலமற்ற ஏழை மக்களுக்கு இலவசமாக பட்டா போட்டுத்தர ஏற்படுத்தப்பட்ட சட்டம், விவசாயத்திற்கு நிலமில்லாமல் குறைந்த பட்ச கூலியுடன் வறுமையில் வாடுகின்ற ஏழை எளிய விவசாயிக்கு உழுவதற்கு நிலம் தருவதற்கு கொண்டுவரப்பட்ட சட்டம் மத்திய அரசினால் நிராகரிக்கப்பட்டிருப்பது உண்மையிலேயே வேதனைப்பட வேண்டிய ஒன்



1982 மார்ச் 5] [திரு. இரா. அருணாசலம்]

றாகும். மத்திய அரசு சக்தி வாய்ந்ததாக இருக்க வேண்டுமானால் மாநில அரசுகளின் புரட்சிகரத் திட்டங்களை, முற்போக்கான கருத்துக்களை இரு காம் கூப்பி வரவேற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ரேஷன் கார்டுகளை வழங்க வீடுகளுக்குச் செல்லும் முன்பாக தக்க அறிவிப்புக் கொடுத்துவிட்டுச் செல்ல வேண்டும். இதனால் வீட்டினர் வெளியே சென்றுவிடாமல் எதிர்பார்த்துக்கொண்டு இருக்க வசதி ஏற்படும். பின்னால் வரும் நிர்வாகச் சங்கடங்களைத் தீர்க்க இந்த முடிவு பயன்படும்.

உற்பத்தியாளர்-நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம் அமைப்பதன் மூலமாக இடைத் தரகர்களை ஒழிக்க தமிழக அரசு எடுத்துள்ள முயற்சி பாராட்டுக் குரியது ; போற்றத்தக்கது. இந்தத் திட்டதை விரைவில் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மண்ணெண்ணெய்க்கு உரிய வரியை 8 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைத்தது, ஏழை எளியவர்களின் வாழ்வில் ஒளி விளக்கு ஏற்றும் புரட்சித் தலைவரின் சீரிய திட்டமாகும்.

மின்சாரத்தைப் பொறுத்தவரையில், சம்சாரம் இல்லாமல் கூட வாழ்ந்து விடலாம் ; ஆனால் மின்சாரம் இல்லாமல் வாழவே முடியாது என்று கூறத்தக்க சூழ்நிலை இன்றைக்கு இருக்கிறது. இதனை உணர்ந்த அரசு மின்சாரத் துறைக்கு 220 கோடி ரூபாய் ஒதுக்கி இருப்பது வரவேற்கத்தக்க திட்ட மாகும்.

ஆதிதிராவிட மாணவர்களுக்கு விசேஷ பயிற்சி அளித்து, படிப்பில் ஊக்கம் கொள்ளச் செய்யும் திட்டம் இருக்கிறது. இதனை அனைத்து கல்விக் கூடங்களிலும் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்த்தைச் சேர்ந்த பழம்பெரும் கல்வெட்டுக்கள் 20,000-க்கும் மேற்பட் டவை மைசூர் எபிகிராபிக்ஸ் அலுவலகத்தில் உள்ளன. ஆராய்ச்சி செய்யும் மாணவர்கள் மைசூருக்குச் சென்று அவற்றைப் பார்வையிட்டு வரும் நிலை இருக்கிறது. எனவே, அவற்றை படியெடுத்து பதிப்பித்து, வெளியிட அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு பழம்பெரும் கோயிலைப் பற்றியும் கல்வெட்டுக்கள், ஓலைச் சுவடிகள், பட்டயங்கள் இருக்கின்றன. இவற்றைக் கண்டுபிடித்து திரட்டி பதிப்பித்தால் கோயில்களின் பழைய வரலாறு தெரியும். இவையே பழந் தமிழ் நாட்டின் வரலாற்று அங்கமாகவும் இருக்கின்றன என்பது அதில் புல னாகும்.

[திரு. இரா. அருணாசலம்] [1982 மார்ச் 5

பட்டினி கிடக்கும் குழந்தைகளுக்கு ஒருவேளை இலவச உணவுத் திட்டம் புரட்சித் தலைவரின் தாயுள்ளம், 'பொன்மனச் செம்மல்' என்ற பட்டத்திற்கு மேலும் புகழாரம் சூட்டுவதாகும். "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்று மணிமேகலையில் சீத்தலைச்சாத்தனார் கூறி இருக்கிறார். எனவே புரட்சித் தலைவர் ஏழைக் குழந்தைகளுக்கு உணவை மட்டுமல்ல; உயிரையே கொடுத்துள்ளார்கள் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

தன்னிறைவுத் திட்டம் என்பது புரட்சித் தலைவரின் புகழ் கிரீடத்தின் மகுடம் போன்றது. தமிழ் சமுதாயத்தின் சந்ததிகள் காலமெல்லாம் தலை வணங்கிப் போற்றும் பெரும் பயன்களை இத்திட்டம் தருகிறது. அனைத்து கிராமங்களுக்கும் குடிநீர் வசதி, சாலை வசதி, ஆதி திராவிட மக்களுக்கு மயானத்திற்குச் செல்ல, சாலை வசதி, பள்ளிக் கட்டிடம், பாலங்கள் கட்டுதல், தாய் சேய் நலவிடுதி, இதுபோன்று மேலும் பல பயன்களை தன்னிறைவுத் திட்டத்தின் வாயிலாக மக்கள் பெறுகின்றார்கள்.

பசித்துக் கிடந்த பாமரன் வேலைக்கு உணவு பெற்று, நிறைந்த வயிற்றுடன், கனிந்த முகத்துடன், புரட்சித் தலைவர் இருக்கும் திசை நோக்கி துதித்துக் கொண்டிருக்கும் காட்சியினை தமிழகத்தின் அனைத்து கிராமங்களிலும் காணலாம்.

அகில இந்தியாவிற்கே அரிய திட்டங்களை அடையாளம் காட்டுவது தன்னிறைவுத் திட்டம். எல்லார்க்கும் எல்லாம் என்றும் கடையனுக்கும் கடைத் தேற்றம் என்றும் சரித்திர நாயகர்கள் கண்ட இலட்சியக் கனவுகளுக்குத் திட்ட வடிவம் தந்த புதுமைத் திட்டம்தான் புரட்சித் தலைவரின் தன்னிறைவுத் திட்டமாகும். இயந்திரங்களில் தமிழ் மொழியைப் புகுத்தி வளர்க்கத் தக்கதாக தமிழ் எழுத்துக்களின் வரிவடிவங்கள் சிலவற்றை சீர்திருத்தி அமைக்கவும், இது குறித்து தமிழ் எழுத்துச் சீர்திருத்த இயக்கம் அளித்துள்ள பரிந்துரைகளை அரசு பரிசீலனை செய்து நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நாமக்கல் தொகுதியைப் பொறுத்தவரையில் குடிநீர் பிரச்சினை பெரும் பிரச்சினையாக இருக்கின்றது. முன்பு அமைக்கப்பட்ட அந்த குடிநீர் திட்டம் இன்றையதினம் போதுமானதாக இல்லை. எனவே மோகனூரிலிருந்து காவிரி ஆற்றிலிருந்து நாமக்கல் நகருக்கு தண்ணீர் கொண்டு வர வேண்டியது இன்றியமையாதது. அதுபற்றி ஆய்வு செய்யப்பட்டு முடிவடைந்துவிட்டது. ஆனால் அந்தத் திட்டத்தின் வேலைகள் துவங்கப்பட



1982 மார்ச் 5] [திரு. இரா. அருணாசலம்]

வில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வெகு விரைவிலே அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அந்தத் திட்டத்தினைப் பொறுத்தவரையிலே 3 கட்ட அளவிலே ஆய்வு செய்யப்பட்டிருக்கின்றது. காவிரி நீரை நாமக்கல் நகருக்கும், மோகனூரிலே இருந்து எருமைப்பட்டி ஒன்றியத்திற்கும், கொல்லிமலை அடிவாரம் நடுக்கோம்பையிலிருந்து முத்துகாபட்டிக்கும் உடனடியாக நீரைக் கொண்டுவர இந்த அரசு முன்வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு தரிசு நிலங்களை நிலம் உள்ளவர்கள் ஆக்கிரமிப்புச் செய்திருந்தால் அவற்றின் மீது நடவடிக்கை எடுத்து நிலமற்ற ஏழைகளுக்கு, ஆதி திராவிட மக்களுக்கு அந்த நிலங்களை வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இந்தியாவிலேயே மூன்றாவது இடத்தைப் பெற்றிருக்கின்ற கோழிப்பண்ணை விஷயத்திலே நாமக்கல் நகரம் முக்கியமான இடமாகும். அது இந்தியாவிலேயே மூன்றாவது இடமாக இருந்தாலும் கூட அந்தக் கோழிப் பண்ணைகள் எல்லாம் நசிந்துவிடக்கூடிய நிலைமை இருக்கின்றது. மின்சாரக் கட்டணமும், வரியும் அதிகமாக இருப்பதால் கோழிப்பண்ணைகளை நடத்த முடியாமல் அங்கே விவசாயிகள் எல்லாம் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனவே கோழித்தீவனத்தைப் பொறுத்தவரையிலே சில மாநிலங்கள் 2 சதவீதம் வரி விதித்திருக்கின்றது. இன்னும் சில மாநிலங்கள் எந்தவிதமான வரியும் அதற்கு விதிக்காமல் இருக்கின்றன. அந்த மாதிரி நிலைமையினை தமிழகத்திலும் ஏற்படுத்த வேண்டும். மின் கட்டணம் யூனிட் ஒன்றுக்கு 75 பைசா வசூலிக்கப்படுகிறது. சாதாரணமாக நாம் வீடுகளுக்கு எந்த அளவுக்கு வசூலிக்கிறோமோ அதே அளவுக்கு கோழிப் பண்ணைகளுக்கும் மின் கட்டணம் வசூலிக்க வேண்டும். இந்த இரண்டு சலுகைகளையும் அளித்தால் உண்மையிலேயே இந்தியாவிலேயே முதலிடத்தை அடையக்கூடிய அளவுக்கு நாமக்கல் நகரம் சிறப்படையும்.

நாமக்கல் நகரத்திலே 50 இலட்சத்திற்கும் மேற்பட்ட கோழிகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. வெளி மாநிலங்களிலிருந்து கூட நாமக்கல் நகருக்கு வந்து கோழிக்குஞ்சுகளை உற்பத்தி செய்யக்கூடிய இயந்திரங்களை வைத்து மிகச் சிறப்பாகச் செய்துகொண்டிருக்கிறார்கள். 30, 35 இலட்சம் முட்டைகளுக்கு மேலாக வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. ஆகவே சலுகைகளை அளித்து கோழிப்பண்ணை சிறப்படைய உதவ வேண்டும். (மணியடிக்கப்பெற்றது).

[திரு. இரா. அருணாசலம்] [1982 மார்ச் 5

அடுத்து நாமக்கல் நகரத்திலே பாலிடெக்னிக் ஆரம்பிப்பது பற்றி அரசின் பரிசிலனையில் இருக்கின்றது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் அதற்கான பரிந்துரையினைச் செய்து அரசுக்கு அனுப்பி இருக்கிறார்கள். ஆகவே உடனடியாக அந்தக் கோரிக்கையினை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1982-83 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை உண்மையிலேயே புரட்சிகரமான மறுமலர்ச்சியினை ஏற்படுத்தக்கூடிய அளவுக்கு சிறந்த திட்டங்களைக் கொண்டிருக்கின்றது என்று கூறி வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

(மாலை 5-30)

*திரு. பு. கோ. ஆனூர் ஜகதீசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1982-83 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய தாழ்மையான கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். ஏழை எளிய மக்களுக்காகவும், வாழ்க்கையில் மிக நலிந்த நிலையில் உள்ள மக்களுக்காகவும், புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில் நிரந்தரமாக நிறைவு காண்பதற்கு என்றே தயார செய்யப்பட்ட ஒரு நிதிநிலை அறிக்கையாக நான் இதைக் கருதுகிறேன்.

புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களைப் பொறுத்த மட்டில் சிறு வயதில் பசியினுடைய கொடுமையை நன்றாக உணர்ந்தவர். குழந்தைகளுக்குப் பசி எடுக்கிறபோது, அந்தத் தாய் எப்படி வருந்துவார், எப்படி வேதனைப் படுவார் என்பதை தன்னுடைய தாயின் உருவிலே ஒவ்வொரு தாயையும் கண் முன்னாலே கண்டு வந்து, அதன்விளைவாக இந்த நிதிநிலை அறிக்கையினை தயார் செய்ததாகவே நான் கருதுகிறேன். இதிலே போடப்பட்டிருக்கிற வரிகளைப் பற்றியும், குறைக்கப்பட்ட வரிகளைப் பற்றியும் மிகச் சுருக்கமாக பலர் இங்கே எடுத்துப் பேசினார்கள். மண்ணெண்ணெய்க்கு [illegible] சதவீதத்திலிருந்து, 4 சதவீத அளவுக்கு வரி குறைக்கப்பட்டதையும், வயது முதிர்ந்து, ஓய்வு பெற்ற வயதானவர்களுக்கு குறைந்தபட்ச ஓய்வு ஊதியத்தை 100 லிருந்து 125 ஆக உயர்த்தி அறிவிக்கப்பட்டிருப்பதையும், அதன் மூலமாக ஏறக்குறைய 43 ஆயிரம் பேர்களுக்கு மேல் பயன் பெறுவார்கள் என்பதைப் பற்றியும், இங்கே ஆளும் கட்சியைச் சேர்ந்த அத்துணை உறுப்பினர்களும் பெரிதும் பாராட்டிப் பேசியிருக்கிறார்கள்.



1982 மார்ச் 5] [திரு. பு. கோ. ஆனூர் ஜகதீசன்]

அதேபோல, 2 வயதிலிருந்து 10 வயது வரையில் உள்ள குழந்தைகள் எந்தக் காரணத்தைக் கொண்டும், பசியால் வருந்தக்கூடாது என்ற நிலையை எண்ணித்தான், ஒரு வேளை (பகல்) உணவாவது அந்த ஏழை எளிய குழந்தைகள் அத்துணை பேருக்கும் ஒரு வேளை பசியாற்றுகிற திட்டத்தின் அடிப்படையில், ஏறக்குறைய மிகப் பெரிய தொகையான 100 கோடி ரூபாய்க்கு ஒரு திட்டத்தை தீட்டி, இந்த நிதிநிலை அறிக்கையின் மூலமாக அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

கர்மவீரர் காமராசர் அவர்கள் பள்ளிக் குழந்தைகள் அத்துணை பேருக்கும் இலவசமாக பகல் உணவு தரவேண்டும் என்ற ஒரு சீரிய திட்டத்தை கொண்டு வந்து அதற்கு காமராசர் திட்டம் என்றே அப்போது பெயர் சூட்டப்பட்டதைப் போல, புரட்சித் தலைவர் அவர்கள், ஏழை எளிய குழந்தைகள் அத்துணை பேருக்கும் ஒரு வேளை பசியாற்றுகிற திட்டத்தைக் கொண்டு வந்தமையால், அதற்கு புரட்சித் தலைவர் அவர்களின் திட்டம் என்றே பெயரிட்டு, அதனை நாட்டிலே உள்ள அத்துணை பேர்களும் வரவேற்று பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

அதைப்போலவே முதியவர்கள், ஊனம் உற்றவர்கள், விதவைகள், வாழ்க்கையிலே நலிவுற்றவர்கள் பார்வையற்றவர்கள், விவசாயத்திலே ஈடுபட்டிருக்கும் ஏழைத் தொழிலாளிகள் ஆகியோர்களுக்கு, அரசு உதவித் தொகையாக கொடுத்து வந்த 25 ரூபாயை 35 ரூபாயாக அதிகரித்துக் கொடுத்திருப்பதும் ஏழை எளிய மக்கள் பால் இந்த அரசு எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறது என்பது புலனாகிறது.

அதேபோல் மின்சாரத்தைப் பொறுத்தமட்டில் நம்முடைய தமிழகத்திற்கு எந்த அளவுக்கு தேவையிருக்கிறதோ, அந்த அளவுக்கு உற்பத்தியிருக்கிறது அல்லது இருக்க வேண்டும் என்று சொன்னால், நம்முடைய மின்சாரப் பற்றாக்குறை ஓரளவு தவிர்க்கப்பட்டிருக்கும். ஆனால் அப்படியில்லாத நிலைமையே இருப்பதால், தமிழகத்தைப் போல மின்சாரத்தில் பற்றாக்குறை உள்ள மாநிலம் எதுவுமே இருக்க முடியாது என்ற நிலைமையில் இருக்கிறது. தமிழகத்திலே தற்போதுள்ள நிலைமை, மின்சாரத்தை ஏழை விவசாயிகளும் பயன்படுத்த வேண்டும், உற்பத்தியையும் பெருக்க வேண்டும், அதேபோன்று எல்லாவிதமான வேலை வாய்ப்புகளுக்கும் இதை பயன்படுத்தவேண்டும் என்று சொன்னால், மின்சாரம் என்பது எவ்வளவு அத்தியாவசியமானப் பொருள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அப்படிப்பட்ட இந்த அத்தியாவசியப் பொருளுக்காக, வேறு ஐந்தாண்டு திட்டக் காலத்தில் ஒதுக்கப்பெற்ற

[திரு. பு. கோ. ஆனூர் ஜகதீசன்] [1982 மார்ச் 5

மொத்த ஒதுக்கீடான, 3,150 கோடியில், கிட்டத்தட்ட 1,023 கோடி அளவில் மின்சாரத்திற்கு ஒதுக்கியிருப்பதும், அடுத்த நிதி ஆண்டின் உபயோகத்திற்காக 220 கோடி ரூபாய் வரையில் ஒதுக்கியிருப்பதையும் பார்க்கும்போது, மின்சாரத்தின் மூலமாகத் தமிழகம் முன்னுக்கு வந்து கொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டும் செய்தியாக இது இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து நம்முடைய ஆட்சியிலேதான் தன்னிறைவுத் திட்டம் எனப்படும் மிகச் சீரிய திட்டத்தை 69 ஊராட்சி ஒன்றியங்களிலே அரசு நிறைவேற்றியிருக்கிறது. இந்த ஆண்டு 150 ஊராட்சி ஒன்றியங்கள் இதில் எடுக்கப்பட்டிருக்கின்றன. 150 ஊராட்சி ஒன்றியங்களிலே, ஒன்றியங்களின் மேம்பாட்டிற்காக இந்தத் திட்டம் தீட்டப்பட்டு, நாட்டு மக்களால், கிராமப்புற மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அமுலாக்கப்பட்டு வருகிறது. ஆனாலும்கூட, இன்று மார்ச் 5 ஆம் தேதி வரையில் 50 விழுக்காடு அளவில்தான் வேலைகள் நடைபெற்றிருக்கின்றன. இத்தகைய கால தாமதத்திற்குக் காரணம் தேவையான அளவு சிமெண்ட் கிடைக்கவில்லை; சிமெண்ட் பற்றாக்குறை இருக்கிறது. அதேபோல ரோடு ரோலர்கள் தேவையான அளவு கிடைக்கவில்லை. லாரிகளில் கருங்கல் ஜல்லிகள் எடுத்துக் கொண்டு வந்து போடுவதற்குத் தேவையான லாரிகள் கிடைக்கவில்லை. சிமெண்ட் பைப்புகள் போட்டு பாலங்கள் கட்ட தேவையான சிமெண்ட் பைப்புகள் கிடைக்கவில்லை. இப்படிப்பட்ட குறைபாடுகளின் காரணமாகவே, 50 விழுக்காடு அளவில்தான் இப்பணிகள் நடைபெற்று வந்திருக்கின்றன. கட்டிட வேலைகளுக்கும், கால்வாய் வேலைகளுக்கும், இம்மாதிரியான பல முன்னேற்ற வேலைகளுக்கும் உரிய காலத்தில் அவைகள் செயல்படுத்தப்படவேண்டும் என்று சொன்னால், போதுமான அளவு சிமெண்டைக் கொடுத்தால்தான், இந்த மாதத்திற்குள்ளாவது வேலைகள் முடிவு அடையும் நிலையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இருந்தாலும்கூட அதிகாரிகள் ஆஸ்பெஸ்டாஸ் ஷீட்ஸ், ஜன்னல்கள், கதவுகள் போன்றவற்றையெல்லாம் முதலிலேயே வாங்கிவிட்டு 80 சதவீதம், 90 சதவீதம் வேலைகளை முடித்துவிட்டோம் என்று சொல்கிறார்கள். ஆனால் 50 சதவீதம் வேலைகள்தான் நடைபெற்றிருக்கிறது. எனவே முப்பது தினங்களுக்குள்ளே இந்த வேலைகளை முடிக்கமுடியுமா என்ற அச்சம் எல்லோருக்கும் ஏற்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள்



1982 மார்ச் 5] [திரு. பு. கோ. ஆனூர் ஜகதீசன்]

உணரவேண்டும். ஆகவே அதுகுறித்து உறுதியாக என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ அந்த நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் இங்கே பேசிய பல உறுப்பினர்கள் இந்த வேலைகள் டெண்டர்கள் கோரப்படாமல் தனிப்பட்ட முறையில் கொடுக்கப்படுகிறது என்ற குற்றச்சாட்டைச் சொன்னார்கள். ஆனால் எனது ஒன்றியத்தில் மட்டுமல்ல, பல்வேறு ஒன்றியங்களைப் பார்க்கிறபோது ஒரு வேலை கூட டெண்டர் அல்லாத முறையில் கொடுக்கப்படவில்லை. வேண்டுமானால் ஒப்பந்தக்காரர்கள் தங்களுக்குள்ளே பேசிக் கொண்டு, காம்ப்ரமைஸ் செய்து கொண்டு, இந்த வேலையை நீ எடுத்துக்கொள் அந்த வேலையை நான் எடுத்துக்கொள்கிறேன் என்று ஒருவருக்கொருவர் பேசி அந்த வேலையை செய்யலாமே தவிர முறைப்படி டெண்டர்கள் கோரப்பட்டுத்தான் காண்ட்ராக்ட் முறையில்தான் செய்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

அதேபோல் என்.ஆர்.இ.பி. வேலைகள் மூலம் சிறுபாசன ஏரிகள் எல்லாம் நீர் நிரம்பி இருப்பதைப் பார்க்கிறோம். குடிமராமத்து மூலம் செய்யப்பட்டு வந்தபோது நீர் வரத்துக் கால்வாய்கள், குளம் குட்டைகள் எல்லாம் அந்த வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மிகச் சிறப்பாக மராமத்து செய்யப்பட்டு வந்ததை மறந்து விடமுடியாது. தன்னிறைவுத் திட்டத்தை நகர்ப்புறத்திற்கும் பேரூராட்சிகளுக்கும் இப்போது அரசாங்கம் விஸ்தரித்திருக்கிறது.

எங்கள் செங்கல்பட்டு நகரம் மிகவும் பின்தங்கிய நகராகும். அதற்குப் போதுமான அளவிற்கு நிதி வசதி இல்லாததால் பல்வேறு வேலைகள் தடைப்பட்டு இருக்கின்றன. எனவே அந்நிலையை மாற்றியமைத்து எங்கள் செங்கல்பட்டு நகரத்திற்கு முன் உரிமை கொடுத்து முதல் கட்டத்திலே போன திட்டத்திலேயே அந்த நகரத்தை சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டு பூராவும் வறட்சியால் மிகவும் வேதனைப்பட்டோம். அதற்காக பல கோடி ரூபாய் செலவழித்தோம். இருந்தபோதிலும் அந்தப் பகுதிகளில் அரிசிப் பஞ்சம் இருந்தது என்றால் அரிசிப் பஞ்சம் இல்லவே இல்லை என்றளவிற்கு அரிசி விலையேற்றத்தைக் கட்டுப்படுத்துகிற அளவிற்கு உணவு அமைச்சர் அவர்கள் ஒரு பெரிய திட்டத்தைச் செயல்படுத்தி அதன் மூலம் உணவுப் பஞ்சத்தைத் தீர்த்தார்கள். உணவுப் பஞ்சம் என்ற பேச்சுக்கே இடமில்லாமல் செய்தார்கள் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[திரு. பு. கோ. ஆனூர் ஜகதீசன்] [1982 மார்ச் 5

எங்கள் செங்கல்பட்டு நகரத்தைப் பொறுத்தவரையில் பல்வேறு குறை
பாடுகள் உள்ளன. சுருக்கமாகச் சொல்லவேண்டுமென்றால் நீதியை நிலை
நாட்ட தீர்ப்புகள் தடையின்றி குறைவின்றி கொடுக்க நீதித் துறைக்கு பல்
வேறு உதவிகளை இந்த அரசு செய்திருக்கிறது. அது வரவேற்கத்தக்க
ஒன்றாகும். மாவட்ட செஷன்ஸ் நீதிபதிக்கும் தலைமை மாஜிஸ்ட்ரேட்டுக்
கும் மோட்டார் வண்டிகள் 30 கொடுத்திருப்பதும், அதேபோல் படி எடுக்க
'ஜெராக்ஸ்' என்றும், கருவூலம், நீதித்துறை அதிகாரிகளுக்கு 464 பேர்களுக்கு
டேப் ரிக்கார்டர்கள் வழங்கியிருப்பதும் நீதித்துறைக்கு நாம் நல்ல வணங்கு
கிறோம் என்பதை சுட்டிக்காட்டும் ஒன்றாகும். அதேபோல் தண்டனைக்
குரிய குற்றவாளிகளை கொண்டு செல்லும் பேருந்துகளில் சப் மாஜிஸ்ட்ரேட்
டும் செல்கிறார், வாதி பிரதிவாதி செல்லும் அதே பேருந்தில் டிஸ்ட்ரிக்ட்
முன்சீப்பும் செல்கிறார். ஆகவே மாவட்ட நீதிபதிகளுக்கு கொடுப்பதுபோல்
கார் வசதி அவர்களுக்கு செய்து கொடுக்கப்படாவிட்டாலும் கூட குறைந்த
பட்சம் ஸ்கூட்டர் வசதியாவது அவர்களுக்கு செய்து கொடுக்கவேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

நீதிமன்றங்களைப் பொறுத்தவரையில் செங்கல்பட்டில் மாவட்ட நீதி
மன்றம் இருக்கிறது. அந்த நீதிமன்றக் கட்டடம் கட்டப்பட்டு 104 ஆண்டு
களுக்கு மேலாகிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் வாழ்க்கையில் அவ்வப்
போது ஒளிவிட்ட அந்த நீதிமன்றம் மிக முக்கியமான ஒரு இடத்தைப்
பெற்றிருக்கிறது. அந்த நீதிமன்றத்திற்கு புதிய கட்டடம் கட்டவேண்டும்
என்று 47 இலட்சம் ரூபாய்க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு இடத்தையும்
சர்வே செய்திருக்கிறார்கள். அந்தக் கட்டடத்தை இடித்துவிட்டு புதிதாக
கட்டடம் கட்டவேண்டும் என்று பொறியியல் நிபுணர்கள் கூட எச்சரிக்கை
விடுத்திருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் செங்கல்பட்டு மாவட்ட
நீதிமன்றம் செங்கல்பட்டை விட்டு அகற்றப்படமாட்டாது என்ற உறுதியை
அளித்திருக்கிறார்கள். சைதாப்பேட்டையிலிருந்து செங்கல்பட்டு மாவட்ட
தலைநகர் காஞ்சிபுரத்திற்கு மாற்றப்பட்டபோது அந்தத் தொடக்க விழாவில்
ஒரு உறுதி கொடுத்தார்கள். செங்கல்பட்டு மாவட்டம் என்பதில் பெயர் மாற்ற
மிருக்காது, அதேபோல் மாவட்ட நீதிமன்றம் செங்கற்பட்டில்தான் இருக்கும்
என்ற உறுதியையும் அளித்தார்கள். அந்த உறுதிமொழிக்கேற்ப புரட்சித்
தலைவர் அவர்கள் ஆட்சியில் அந்த மாவட்ட நீதிமன்றத்திற்கு ஒரு புதுக்
கட்டடம் கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1982 மார்ச் 5] [திரு. பு. கோ. ஆனூர் ஜகதீசன்]

(பிற்பகல் 5.40)

அடுத்து, செங்கற்பட்டு நகரத்திற்கும், காஞ்சிபுரம் நகரத்திற்கும்
இன்றைக்கு எச்.ஆர்.ஏ., சி.சி.ஏ. தரப்படுவதில்லை. அது ஒரு பெருங்
குறையாக இருக்கிறது. எங்கள் பகுதியில் காட்டாங்குளம் ஊராட்சி ஒன்றியத்
திலும், திருப்போரூர் ஊராட்சி ஒன்றியத்திலும் உள்ள பல கிராமங்களுக்கு,
பல பஞ்சாயத்துக்களுக்கு இன்றைக்கு எச்.ஆர்.ஏ., சி.சி.ஏ. வழங்கப்பட
வில்லை. அதனால் ஆசிரியர்கள் வேலைமாற்றம், அதேபோல் பல்வேறு
அதிகாரிகள் வேலைமாற்றம் ஒரு ஊரிலேயிருந்து மற்றொரு ஊருக்கு மாற்றப்
படுகின்றபோது, பெரிய சிக்கல்கள் ஏற்படுகின்றன. ஆகவே, இதைத் தவிர்க்
கின்ற வகையில் காஞ்சிபுரம், செங்கற்பட்டு போன்ற நகரப் பகுதிகளை
உள்ளடக்கிய செங்கற்பட்டு மாவட்டம் பூராவுக்கும் எச்.ஆர்.ஏ., சி.சி.ஏ. தர
வேண்டும் என்று நிதியமைச்சர் அவர்களை விரும்பி வேண்டி இந்த நேரத்தில்
பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

செங்கற்பட்டு தாலுகாவும், மதுராந்தகம் தாலுகாவும் மிகப் பெரிய
தாலுக்காக்களாக இருக்கிறது. ஏறத்தாழ 6, 7 ஆண்டுகளுக்கு முன்பு செங்கற்
பட்டு தாலுகாவை, செங்கற்பட்டு வட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம் என்றும்,
மதுராந்தகம் தாலுகாவை, மதுராந்தகம் வட்டம், செய்யூர் வட்டம் என்றும்
பிரிப்பதற்கான முயற்சிகளை இந்த அரசு எடுத்துக் கொண்டது. ஆனால்,
இப்போது அது எந்த நிலையில் இருக்கிறது என்பது தெரியவில்லை. ஆகவே,
உடனடியாக அப்பேர்ப்பட்ட மாற்றத்தைச் செய்து, பிற வட்டங்களைப்
பிரித்துத் தரவேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

திருக்கழுக்குன்றம் பகுதியில் இருக்கிற இடையாத்தூர் கிராமத்தில் ஏறத்
தாழ 6,000 மக்கள் வசிக்கிறார்கள். அந்த ஊர் ஒரு தீவுபோல் பாலாற்றின்
நடுவில், நான்கு புறங்களிலும் மணலால் சூழப்பட்டிருக்கிறது. அந்த
ஊருக்கு ஒரு தரைப்பாலம் வேண்டுமென்று பல்வேறு அளவிலே மாண்புமிகு
அமைச்சர் அவர்களை விரும்பி வேண்டிக் கேட்டுக்கொண்டோம். அப்பேர்ப்
பட்ட இந்த ஊரிலேயிருந்து வெளியே வருவதற்கு எந்தவிதமான வாகன
வசதியும், எந்தவிதமான வழித்தடமும் இல்லாமல் இருக்கிறது. எனவே,
அருள்கூர்ந்து அங்கே ஒரு தரைப்பாலம் அமைத்துத் தரவேண்டும் என்று
விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், எங்கள் பகுதியிலே எம்.எம்.டி.ஏ. திட்டத்தின்கீழ் மறை
மலை நகர் உருவாகிக் கொண்டிருக்கிறது. அது இன்றைக்கு பல்வேறு
கிராமங்களை விழுங்கிக் கொண்டிருக்கிறது. திண்ணதாரை என்பது 6000

ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டது. நீர்வளம், நில வளம் கொண்டது; 3 ஏரிகளைக் கொண்டது. ஏறக்குறைய 320 பம்பு செட்டுகள் கொண்ட மிகப் பெரிய நிலப்பரப்பு. நகருக்குத் தேவையான காய்கறிகளை இன்றைக்கு கொடுத்துக் கொண்டு வருகிறது. அப்பேர்ப்பட்ட இடத்தை விட்டுக் கொடுக்க வேண்டும் என்று, அதற்கு விதி விலக்கு கொடுத்து, அந்த ஊரைக் காப்பாற்ற வேண்டுமென்று, அந்த கிராம மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்று, அங்குள்ள விவசாய மக்களைப் காப்பாற்ற வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன் . . .

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேரிலேயே பேசியிருக்கிறார்கள். எம்.எம்.டி.ஏ. அதிகாரிகளை அழைத்து. அதை எடுத்துக் கொள்ளத்தான் வேண்டுமா, அதற்கு விதிவிலக்கு கொடுக்கலாமா என்பதைப் பற்றிய பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பு. கோ. ஆனூர் ஜகதீசன் :** மிக்க நன்றி. அடுத்து, குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை மத்திய அரசு, மாநில அரசுகள் சார்பாக செயல் படுத்த நினைக்கிறார்கள். செங்கல்பட்டு மருத்துவமனையில் ஏறத்தாழ 200 பேர்கள் நாள் ஒன்றுக்கு வருகிறார்கள். ஆனாலும்கூட 40 படுக்கைகள் தான் அங்கேயிருக்கிறது. 100-க்கு மேற்பட்டவர்கள் கீழே படுக்கக்கூடிய அவல நிலை இருந்து வருகிறது. ஆகவே, அதை மாற்றித் தரவேண்டும் என்று மிகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

காட்டாங்கொளத்தூர், திருப்போரூர், திருக்கழுக்குன்றம் பகுதிகளில் அரிசன மாணவர்கள் நிரம்பப் படிக்கிறார்கள். அவர்களுக்கு விடுதிகள் கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு நகராட்சியிலும், ஊராட்சி ஒன்றியங்களிலும் ஆலோசனைக் குழுக்களைப் போட வேண்டும் என்று எதிர்க் கட்சிகள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், ஆலோசனைக் குழுக் கூட்டங்களுக்கு வருகிறார்களா என்றால், பல காலமாக தொடர்ந்து வருவதில்லை. அப்பேர்ப்பட்ட ஒரு குறையைப் போக்குகின்ற வகையில், அப்படி தொடர்ந்து வாராதவர்களை நீக்கிவிட்டு, அந்த இடத்தை உடனடியாக அமைச்சர் அவர்கள் பூர்த்தி செய்யவேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அதற்கான ஆணையைப் பிறப்பிக்க வேண்டும் என்றும் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.



அதற்கடுத்து, என்னுடைய ஊராட்சி ஒன்றியத்தைப் பொறுத்தவரையில் தன்னிறைவுத் திட்ட வேலைகள் சீரான முறையில் நடைபெறுவதற்கான எல்லாவிதமான உதவிகளையும் புரிய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*** திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1982-83 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் நல்ல பல திட்டங்களை நம்முடைய அரசு அறிவித்துள்ளது.

"கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு"

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களும், டாக்டர் நாவலர் அவர்களும் நிதிநிலை அறிக்கையை நல்ல முறையில் அளித்திருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்களின் வழியிலே நிதி ஆதாரங்களைப் பெருக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்தின் அடிப்படையிலே இந்த நிதிநிலை அறிக்கை அளிக்கப்பட்டிருப்பதை மனமார பாராட்டுகிறேன். இந்த அறிக்கை பாமர மக்கள் நிலையை உயர்த்த இந்த அரசு பாடுபட்டு வருகிறது என்பதைக் காட்டுகிறது. நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்ற பின் உணவு பஞ்சம் இல்லாத நிலை தமிழகத்திலே நிலவி வருகிறது. இந்த நேரத்தில் ஒரே ஒரு வேண்டுகோளை மட்டும் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களிடத்திலே வைக்கலாம் என்று நினைக்கிறேன். நியாயவிலை கடைகளில் அதிகமான குடும்ப கார்டுகள் வைக்கப்பட்டிருக்கிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. இன்னும் அதிகமான கடைகளை திறந்து ஒரு கடைக்கு ஒதுக்கப்பட்டுள்ள குடும்ப கார்டுகள் எண்ணிக்கையை குறைக்கவேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

பால்பண்ணை வளர்ச்சிக்கு நல்ல திட்டத்தை மாண்புமிகு ஊரக வளர்ச்சி அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். பால் பண்ணை திட்டம் வட இந்தியாவில் ஆனந்த் திட்டத்தைப் போன்று தமிழகத்திலே அமைய அமைச்சர் அவர்கள் எடுத்திருக்கும் முயற்சிகளை வரவேற்கிறேன். கிராமத்தில் இருக்கிற பலர் இதில் வேலை வாய்ப்பினை பெறுகின்ற சூழ்நிலை இருக்கிறது.

அடுத்து நம்முடைய மாநிலத்தில் போதுமான தொழில் வளர்ச்சி பெறுவதற்கான ஏற்பாட்டை மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் சிறப்பான முறையில் செய்திருக்கிறார்கள். வட இந்தியாவில் ஹரியானாவிலும், பஞ்சாபிலும் தொழிற்பேட்டைகள் அமைந்து அதிகமாக வளர்ச்சியுறுவதற்

[திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்] [1982 மார்ச் 5

கான வாய்ப்புகள் இருக்கின்றன. அவற்றை கண்காணித்து அமைச்சர்
அவர்கள் நம்முடைய மாநிலத்திலும் அதுபோன்ற வசதிகளை ஏற்படுத்தித்
தரவேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். காஞ்சிபுரத்தில் ஓரிகையில்
தொழிற்பேட்டை அமைக்கப்பட்டிருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள்
காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட அந்த தொழிற்பேட்டை வளரமுடியாத சூழ்நிலை
இருக்கிறது. மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் அவர்கள் காஞ்சி
மாநகருக்கு வருகை தந்திருந்தபோது அவர்களை அந்த பகுதிக்கு அழைத்
துச் சென்று காண்பித்திருக்கிறேன். அது வளர்ச்சி பெறுவதற்கான சூழ்
நிலையை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் அதிகமான தொழிலாளர்கள் பட்டு நெசவு
தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்த பட்டு நெசவுத் தொழிலுக்கு
தேவைப்படுகிற 'ரா மெட்டீரியல்ஸ் (Raw-materials Bank) அமைப்பதை
வரவேற்கிறேன். கூட்டுறவு கைத்தறி நெசவாளர்களின் நலன் கருதி சேமிப்பு
காப்புறுதித் திட்டம், வீட்டு வசதித் திட்டம், நெசவுத் தொழில் பாதுகாப்புச்
சட்டம் போன்ற நல்ல பல திட்டங்களை செயல்படுத்தும் இவ்வரசை நெச
வாளர்கள் சார்பில் பாராட்டுகிறேன். மாநில கைத்தறி வாரியம் அமைப்
பதை வரவேற்கிறேன். கோரா பட்டு போன்றவைகள் தமிழகத்திலே
குறைந்த அளவிலே தான் இருக்கிறது. இந்த திட்டத்தில் பட்டுப்பூழு
வளர்ப்புத் தொழில் 48 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் பயிரிடுவதற்கான ஏற்பாடு
களை செய்திருக்கிறார்கள். இதற்காக அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய
நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பட்டுத் துறையில் ஓரிகையிலே
ஜரிகை தொழிற்சாலை நடந்து வருகிறது. அதில் வெள்ளி இழை எடுப்
பதற்கு ஒரு மெஷின் இருக்கிறது. கடந்த 10 ஆண்டுகளாக அதை இயக்கு
வதற்கான ஆள் இல்லாமல் இருக்கிறது. மாண்புமிகு ஊரக தொழிலமைச்சர்
அவர்கள் நேரில் வருகை தந்தபோது இதுகுறித்து வேண்டுகோளை விடுத்
திருக்கிறேன். அதற்கான ஏற்பாட்டினை செய்து தரவேண்டுமென்று
காஞ்சிபுர நகர மக்களின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறி இலாக்காவில் 67 சதவீதத்திற்கு நதிகளை கூட்டுறவு அமைப்
பிற்குள் கொண்டுவருவதென ஏற்பாட்டினை நம்முடைய அரசு செய்துள்ளது.
ரா-மெட்டீரியல்ஸ் பேங்க் ஒன்றினை அமைப்பதற்கான ஏற்பாட்டை நம்
முடைய அரசு செய்துள்ளது. நெசவாளர்களுக்காக நல்ல பல திட்டங்களை
செய்திருக்கிற இந்த அரசு இந்த நேரத்திலே நெசவாளர்களுக்கு எப்போதுமே
ஏற்படாத ஒரு நிலையை பட்டிற்கு வரி விதித்ததன் மூலம் ஏற்பட்டிருப்பதாக
நெசவாளர்கள் கருதக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அந்த வரியை



1982 மார்ச் 5] [திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்]

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு வரி விதிப்பதன் மூலம் மத்திய அரசு வழங்குகின்ற ரிபேட் போன்ற சலுகையை வாங்கமுடியாத சூழ்நிலை இருக்கிறது. ரிசர்வ் வங்கி சட்டதிட்டத்திலே கூறப்பட்டுள்ளபடி லக்சுரி அயிட்டங்களுக்கு ரிபேட் வழங்கமுடியாத சூழ்நிலை ஏற்படலாம். அது போன்ற சங்கடங்கள் கைத்தறி நெசவாளர்களுக்கு ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று அரசை நான் கேட்டுக் கொள்கிறேன்.

(மாலை 5-50)

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனித்தனியாக ஒரு போக்குவரத்துக் கழகம் அமைக்கப்பட்டிருந்தாலும் செங்கற்பட்டு மாவட்டத்திற்கு அமைக்கப் படவில்லை. இருக்கின்ற ஒரு போக்குவரத்துக் கழகத்தையும்கூட வேலூருக்குக் கொண்டு செல்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுவதாக அறி கிறேன். அதுபோன்ற திட்டத்தை அரசு மறுபரிசீலனை செய்து காஞ்சிபுரத் திற்கும் செங்கற்பட்டு மாவட்டத்திற்கும் ஒரு போக்குவரத்துக் கழகத்தை ஆரம்பிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களின் ஆட்சியில் தண்ணிறைவுத் திட்டம் தமிழகத்திலே சிறப்பாக நிறைவேறி வருகிறது. எங்களுடைய கிராமங்களில் பலவற்றில் நல்ல பலன்கள் ஏற்பட்டிருக்கின்றன.

காஞ்சீபுரம் பச்சையப்பன் கல்லூரியில் பி.காம்., எம்.காம்., எம்.ஏ., எம்.எஸ்ஸி., போன்ற படிப்புகள் இல்லை, மாலைநேரக் கல்வியும் இல்லை. ஆகவே அங்கே அந்தப் படிப்புகளை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோன்று பாலாறு, வேகவதி ஆறுகளை இணைத்தால் ஆயிரக்கணக் கான ஏக்கர் நிலங்கள் பயிரிடுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்தத் திட்டத் தையும் நம்முடைய அரசு ஏற்றுச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கெனவே பேசிய செங்கற்பட்டு சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு ஆலூர் ஜகதீசன் அவர்கள் கூறியதைப்போல் செங்கற்பட்டு மாவட்டத்திலே உள்ள அரசு ஊழியர்களுக்கு நகர ஈட்டுப்படி வழங்கப்படாத சூழ்நிலை இருக் கிறது. அந்த மாவட்டத்திலே அவர்கள் பாதிக்கப்படக்கூடிய நிலை இருக் கிறது. அவர்களுக்கும் நகர ஈட்டுப்படி வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

"முகம்நோக்கி நிற்க அமையும் அகம்நோக்கி
உற்ற துணர்வார்ப் பெறின்"

என்ற வள்ளுவர் வாக்கிற்கு ஏற்ப நம்முடைய தமிழகம் புரட்சித் தலைவர் வழிநின்று செயலாற்றத் தயாராக இருக்கிறது என்று கூறி முடிக்கிறேன், வணக்கம்.

* திரு. பம்மல் நல்லம்பி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே பேசுகின்ற வாய்ப்பை நல்கியமைக்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அ.தி.மு.க. அரசு ஒவ்வொரு முறையும் நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்கிற சமயத்தில் ஏழைகளின் வாழ்வில் இன்பத்தை ஏற்படுத்துவோம் என்று சொல்வது வாடிக்கையாகும். இதேபோன்று இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே ஏழைகளுக்காக கண்ணீர் வடிக்கிற ஒரு அறிக்கையை நாம் எல்லாம் விவாதிக்கின்ற வகையில் தாக்கல் செய்திருக்கிறார்கள். இந்த நிலை அறிக்கையில் பல்வேறு பிரச்சினைகள் பேசுவதற்கு வாய்ப்பு இல்லாவிட்டாலும் பாமர மக்கள், ஏழை எளிய மக்கள் இவர்களின் முன்னேற்றத்திற்காக நாங்கள் காகித ஆலையைத் துவங்க இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இது எப்போதும் வாடிக்கை. பட்டதாரிகள், ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள், புலவர்கள், பொறியியல் பட்டதாரிகள் இப்படிப் பல்வேறு துறையினர் லட்சக்கணக்கானவர்கள் வேலைவாய்ப்பின்றி வேலை தேடும் அலுவலகத்திலே பதிவு செய்துகொண்டு அந்த அலுவலகங்களுக்கு முன்னால் வரிசைவரிசையாக ஆண்களும் பெண்களுமாக நின்று கொண்டிருக்கின்ற காட்சியை சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாம் பார்க்கிறோம். அதற்காக இந்த நிதிநிலை அறிக்கையிலே ஏதாவது உருப்படியான திட்டங்கள் இருக்கின்றனவா என்று பார்த்தால் இல்லை. அதற்கு மாறாக காகித ஆலை தொடங்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அடுத்து 100 கோடி ரூபாய் திட்டத்திலே 2 முதல் 10 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு ஒரு வேளை சத்துணவு வழங்கப்படும் என்று சொல்லப்படுகிறது. இந்த 100 கோடி ரூபாயைப் பற்றி நான் இங்கே அதிகம் பேசுவதைவிட அது எப்படியிருக்கிறது என்றால், அதிகாரிகளைக் கலந்தாலோசித்துத் திட்டமிட்டு இதை எப்படியெல்லாம் செயல்படுத்த முடியும் என்பதற்கான ஆலோசனைகளை அதிகாரிகளிடத்தில் அவர்கள் கேட்டிருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே, தெருக்களிலே வித்தை காட்டுவானே வித்தைக்காரன், ஒரு மாங்கொட்டையைக் காண்பித்து மாமரத்தையே இங்கே உண்டாக்கப் போகிறேன் என்று சொல்லிக்கொண்டு கடைசி நேரத்தில் பல்பொடியைக் காண்பித்து விற்றுவிட்டுப் போய்விடுவான்.



அந்த வித்தைதான் இந்த நிதிநிலை அறிக்கையிலேயும் தெளிவாகத் தெரிகிறது. மாமரக் கொட்டையைக் காண்பித்து மாமரத்தைக் காட்டப்போகிறோம் என்று சொல்லி கடைசியிலே பல்பொடியை விற்பான். நம்முடைய நிதிநிலை அறிக்கையிலேயும் மாண்புமிகு நாவலர் அவர்கள் அந்தச் சாமர்த்தியத்தை இங்கே காட்டியிருக்கிறார்கள். எனக்குத் தெரியும், இல்லாததை, நடக்க முடியாததைத் தெளிவாகச் சொல்லும் ஆற்றல் படைத்தவர்கள்; அந்த வகையிலே இன்றையதினம் அவர் இந்த அறிக்கையைத் தந்தவர்களிடத்திலே இருக்கிறது என்பதை நான் உணர்ந்திருக்கிறேன்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் பல்வேறு காரியங்களைப் பற்றிச் சொல்லலாம். இன்றைக்குக் கடப் பேசுகின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் பட்டியலையைப்பற்றி எடுத்துச் சொன்னால் அவர்களுக்குப் பெரியதாகவே நினைவு வராது. என் அதை அவர்கள் சொல்கிறார்கள் என்று எண்ணிப் பார்க்கிறேன். அவர்கள் பக்கத்தில் வந்து உட்கார்ந்திருக்கின்ற மாண்புமிகு நாவலர் அவர்களை மறந்து விட்டு அந்தப் பக்கத்திலே இருக்கின்றவர்கள் கட்டிக்காட்டுகிறார்கள் என்றால் எதையும் மறைத்துப் பேசுகின்ற திறமை அவர்களுக்கு உண்டு; அந்தத் தைரியம் அவர்களுக்கு உண்டு என்பதை நான் உணர்கிறேன்; அதைத் தெரிந்துகொண்டிருக்கிறேன். ஆகவே, அப்படிச் சொல்லுகின்றவர் எங்கள் தலைவரையோ, எங்கள் கட்சியையோ, தொடர்ந்து எங்களையோ அவமானப்படுத்துவதாகவோ, கேலி செய்வதாகவோ நினைப்பார்களேயானால் அங்கே போடப்பட்டிருக்கின்ற வழக்குகளை உணர்ந்து பார்க்க வேண்டுமென்று அந்த வகையிலே நினைத்துக் கொள்கிறேன்.

நம்முடைய நிதிநிலை அறிக்கையில் ஏழைகளின் முன்னேற்றத்திற்கு எதுவும் இல்லை. அதேசமயத்தில் பட்டு துணிக்கு 5 சதவீதம் வரி போட்டு இன்றையதினம் அந்த வரியைத் தள்ளுபடி செய்வதற்காகப் பல்வேறு பிரச்சினைகள் நடந்து கொண்டிருப்பதாக நான் அறிகிறேன். இதுபோன்ற காரியங்களை இந்த அறிக்கையில் வெளிப்படுத்தி மக்களிடத்திலே ஒரு குழப்பமான நிலைமையை உருவாக்கிக் கொண்டிருக்கின்ற இந்த அறிக்கையிலே நான் பேசுவதற்கு ஒன்றுமில்லை என்பதைத்தான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப்பற்றி நான் பேசலாம் என்று கருதுகிறேன். தாம்பரம் நகராட்சி—பரங்கிமலை ஒன்றியம்—என்னுடைய தொகுதிதான் தாம்பரம். இதில் நீண்ட நெடுங்காலமாக அடையாற்றின் குறுக்கே அனகாப்புத்தூருக்கும், குன்றத்தூருக்கும் இடையிலே ஒரு மேம்பாலம் கட்ட வேண்டு

மென்று இன்றைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பரங்கிமலை சட்டமன்ற உறுப்பினராக இருந்த காலத்திலேயிருந்து இன்றுவரையில் அது செய்ய முடியாத சூழ்நிலை இருக்கிறது. அந்தப் பிரச்னையைப்பற்றி மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரைப் பார்த்து நான் கேட்ட நேரத்தில் இரண்டாண்டுக் காலத்தில் கட்டித் தருகிறேன் என்று அவர்கள் என்னிடத்திலே சொன்னார்கள். இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளப்படும்; நிச்சயம் நடந்தேறும் என்று தெரிவித்தார்கள். அதற்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைக் கொஞ்சம் வேகமாகத் துரிதப்படுத்தி அந்த மேம்பாலத்தைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தாம்பரம் தொகுதியில் உத்தண்டி வரை என்னுடைய தொகுதி. தாம்பரத்திலிருந்து உத்தண்டிக்குச் செல்ல வேண்டுமானால் கிண்டிக்கு வந்து, அடையாறுக்கு வந்து, கடற்கரை ஓரமாக வந்து உத்தண்டிக்குச் செல்ல வேண்டும். பலமுறை அமைச்சரிடத்தில் சொல்லியிருக்கிறேன். உத்தண்டியிலிருந்து அக்கரையில் இருக்கின்ற சோழிங்கநல்லூருக்கு ஒரு மேம்பாலம் இருக்கிறது அதன் வழியை அகலப்படுத்தி, சீர்படுத்திச் செய்தால் சோழிங்கநல்லூருக்கு, அங்கு பெரிய கெனால் இருக்கிறது; ஏறத்தாழ இரண்டு மைல் உள்ள கெனால், அதில் இரண்டு பெரிய கல்வர்ட்டுகளைக் கட்டி அந்தப் பாதையைச் சீர்படுத்தினால் உத்தண்டியிலிருந்து தாம்பரத்திற்குக் குறுக்கே வெகு சீக்கிரமாக வருவதற்கு மிகவும் துணையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக மீனவக் குடிமக்கள், கடலோரத்திலிருக்கும் உத்தண்டி, உத்தண்டிக் குப்பம், நயினாங்குப்பம், குடுமியாண்டித் தோப்பு, பனையூர்க்குப்பம், ஈச்சம்பாக்கம், ஈச்சம்பாக்கம் குப்பம், பெரிய நீலங்கரை, சின்ன நீலங்கரை, பாலவாக்கம், பாலவாக்கம் குப்பம், கொட்டிவாக்கம், கொட்டிவாக்கம் குப்பம் போன்ற இடங்களில் உள்ள மீனவ மக்கள் பரங்கிமலை ஒன்றிய அலுவலகத்திற்கு குறுக்கு வழியாக வர பயன்படும்.

அதற்கடுத்து ஓல்ட் மகாபலிபுரம் ரோட்டிலே இருக்கிற செம்மஞ்சேரி, சோளிங்கநல்லூர், காரப்பாக்கம், துரைப்பாக்கம், பேட்டை இதுபோன்ற கிராமங்களிலே இருப்பவர்கள் ஒன்றிய அலுவலகத்திற்கு வரப் பெரிய பயணமே செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே, அந்தப் பாதையைச் சீர்படுத்தி, பேருந்து விட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.



(மாலை 6-00)

அதோடு என்னுடைய பம்மல் பேரூராட்சியில் 60-லிருந்து 100 தோல் பதனிடும் தொழிற்சாலைகள் இருக்கின்றன. அத்தொழிற்சாலைகள் கழிவு நீரை அங்கே குடியிருக்கிற பகுதிகளில் வெளியேற்றுகின்றன. ஏறத்தாழ 25 குடியிருப்புகள் அங்கே உள்ளன. நடுத்தர குடும்பத்தினரும், தொழிலாளர் மக்களும் வாழ்ந்து கொண்டிருக்கிற பகுதிகளுக்குக் கழிவுநீர் செல்வதால், அது ஒவ்வொரு குடிநீர் கிணற்றையும் அசுத்தப்படுத்தி, அந்தக் கிணறுகளிலிருந்து குடிநீர் குடிக்கமுடியாத அளவு இருப்பதால் மாவட்ட ஆட்சித் தலைவரிடமும், அமைச்சர்களிடமும் வாரத்திற்கு ஒரு முறை அவர்கள் வந்து பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். சைதாப்பேட்டையிலே இருக்கின்ற ஆட்சித் தலைவரை அடிக்கடி சந்திக்கின்ற ஒரு இக்கட்டான நிலை அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. அதற்காக அன்றிலிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ரூ. 16 இலட்சத்திலே ஒரு திட்டத்தைத் தயாரித்து, அத்திட்டத்தை அரசுக்கு அனுப்பி வைத்தார்கள். அது எங்கே இருக்கிறது என்று தெரியவில்லை. ஆகவே, அந்தக் கழிவு நீரை அப்புறப்படுத்தி சுத்தப்படுத்திவிடவும் அந்தப் பகுதிகளில் கழிவு நீர் செல்லாமல் வேறு பகுதிகளில் செல்கின்ற வகையில் திருப்பி விடுவதற்கு ஏற்பாடு செய்வதற்கு அந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

தாம்பரம் தொகுதியில் 3 முக்கிய இடங்களில் காவல் நிலையங்கள் மிகவும் அவசியமாகத் தேவைப்படுகின்றன. ஒன்று பம்மல் பேரூராட்சிக்குத் தேவை. ஏறத்தாழ 80,000 ஜனத்தொகை உள்ள அந்த ஊருக்குக் காவல் நிலையம் இல்லை. அடுத்து, மேடவாக்கம். பரங்கிமலை ஊராட்சி ஒன்றியத்திலே முக்கிய பகுதி மேடவாக்கம். அது ஒரு கிராமம். அதைச் சுற்றி 15 கிராமங்கள் இருக்கின்றன. ஆகவே, 15 கிராமங்களுக்கு நடுவிலே இருக்கிற மேடவாக்கத்திலே ஒரு காவல் நிலையம் அவசியம் தேவை, அடுத்து, கடற்கரையிலே இருக்கிற குப்பங்களுக்கு ஒரு காவல் நிலையம் தேவை. ஆகவே, பாலவாக்கத்திலேயும் ஒரு காவல் நிலையம் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பம்மலிலே 80,000 ஜனத்தொகை இருந்தாலும் அங்கே ஒரு உயர்நிலைப் பள்ளி இல்லை. ஆகவே, ஒரு உயர்நிலைப் பள்ளி ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தாம்பரத்தில் ஏறத்தாழ 25 குடியிருப்புகள் நகராட்சியிலே சேர்க்கப்பட்டிருக்கின்றன 1963-லே குடிநீர் திட்டம் தயாரிக்கப்பட்டு, இன்றைக்கு 1982-ல் 1 இலட்சம் மக்களுக்குத் தண்ணீர் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், அங்கு குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், 130 தெருக்களில் குழாய்கள் இல்லாத காரணத்தினால், மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தமிழகத்திலேயே குடியிருப்புக்கான வரியிலேயே நடைபெறுகின்ற ஒரே நகராட்சி தாம்பரம் நகராட்சிதான். அங்கே ஒரு தொழிற்சாலை கூட கிடையாது. அங்கேயிருக்கின்ற நகராட்சி அதிகாரிகள் ஒன்று சேர்ந்து, நிதியை அதிகப்படுத்த, அங்கே கடப்பேரியில் ஆட்டுச் சந்தைக்காக, நிலம் கேட்டிருக்கிறார்கள். டி.பி. சானட்டோரியம் பக்கத்திலே மேட்டுப் பகுதியிலேதான் 10 ஏக்கர் நிலத்தில் இலட்சக்கணக்கான ஆடுகளைக் கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர். அங்கு 5 ஏக்கர் இடம் கொடுத்தால், நகராட்சிக்கு வருமானம் வரும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோன்று தாம்பரம் நகராட்சியில் ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளி—மேற்கு தாம்பரத்தில் வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோன்று மேடவாக்கத்தில் ஒரு உயர்நிலைப் பள்ளியும், பால்வாக்கத்தில் ஒரு உயர்நிலைப் பள்ளியும் வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, போக்குவரத்துப் பேருந்துகள் பல இடங்களுக்கு விடப்படுகின்றன. என்னுடைய தொகுதியிலே போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இரண்டு சிறிய பேருந்துகளை விட்டிருக்கிறார்கள். எம். 18 என்ற பேருந்து. அது இன்றைக்கு மக்களுக்குப் பயன்படுகின்றது. அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், அதே சமயத்தில், பல்வேறு இடங்களுக்குச் சிறிய பேருந்துகள் விடப்பட வேண்டுமென்று அமைச்சரிடத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். அதிலே முக்கியமாக பல்லாவரத்திலேயிருந்து பாலவாக்கத்தைச் சுற்றி ஒரு சிறிய மினி பேருந்து விட வேண்டுமென்று பலமுறை நான் கேட்டிருக்கிறேன். அதையும் இப்பொழுது விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, குடிநீர்ப் பிரச்சினையில் நம்முடைய அமைச்சர் அவர்கள் 1981 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31 ஆம் தேதிக்குள் பாலாறு திட்டத்தின் கீழ் அமைந்து வருகின்ற ஆலந்தூர் பல்லவபுரம் திட்டம் மூலம் பம்மல், சிட்லபாக்கம், அனகாபுத்தூர் ஆகிய இடங்களுக்கு தண்ணீர் வந்துவிடும் என்று வாக்குறுதி கொடுத்தீர்கள், அதிகாரிகளும் அதைச் சொன்னார்கள். இப்போது 82 கடந்து கொண்டிருக்கிறது. அந்தத் திட்டம் என்னவாயிற்று என்று தெரிய





வில்லை. அங்கே பதட்ட நிலை இருக்கிறது. அனகாபுத்தூர் நெசவாளர் நிறைந்த பகுதி, பம்மல் ஏறத்தாழ 100 டேனரிஸ் நிறைந்த பகுதியாகும். இந்தப் பகுதிகளில் உப்புத் தண்ணீர் இருக்கிறது. ஆகவே குடிநீர்ப் பிரச்சினை பதட்டமாக இருக்கிறது என்பதால் அதற்குத் தற்காலிகமாக குன்றத்தூரிலிருந்து பல்லவபுரத்திற்கு மட்டும்—பம்மலைத் தாண்டி தண்ணீர் போகிறது. அதை பம்மலுக்கும் விஸ்தரிக்கவேண்டுமென்று அதிகாரிகளிடம் கேட்டேன். பம்மலிலே மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இருக்கிறது. அந்தத் தொட்டியிலே ஏற்றி நல்ல தண்ணீரை கொடுக்க வேண்டுமென்று கேட்டேன். அதிகாரிகளும் கேட்கிறார்கள், மனுக்களைப் பெறுகிறார்கள், ஆனால் அது நிறைவேற்றித் தரப்படுவதில்லை.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** துணைத் தலைவர் அவர்களே, அந்தக் குடிநீர்த் திட்டம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது, அதனுடைய நிலைமைகள் எப்படி மாறியது என்பதை உறுப்பினர் நன்றாக அறிவார்கள். என்னுடைய ஞாபகம் சரியாக இருக்குமானால் ஒன்றரை கோடி செலவிலே முடியவேண்டிய அந்தத் திட்டம் இப்போது 708 லட்சம் செலவில் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டதற்கு யார் காரணம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அறிவார். அந்தப் பணி சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அநேகமாக செப்டம்பர் அக்டோபர் மாதத்திற்குள் முடிந்துவிடும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பம்மல் நல்லதம்பி :** அமைச்சர் அவர்கள் அந்தக் காரியத்திலே தலையிட வேண்டுமென்று விரும்பினால் நான் பேச விரும்புகிறேன். அந்தத் திட்டம் தவறான திட்டமல்ல. அதிகாரிகளுக்குத் தெரியும். ஒரே ஒரு இடத்தில் போடப்பட்ட பைப் வெடித்திருக்கிறது, அதை வைத்துக் கொண்டு. . .

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவர் அவர்களே, நான் அதிலே ஆழமாகப் போக வேண்டாம் என்று கருதி ஜாடையாக விட்டு விட்டேன். 58 கிலோ மீட்டர் குழாய் போடப்பட்டது, தண்ணீர் கொண்டு போகத்தான். 'வாட்டர் இஸ் லீகிங் ப்ரம் அவுட் ஆப் தி மெயின் லைன்' அந்த மெயின் பைப்பிலே இருந்து தண்ணீர் நேராகப் போகாமல் பக்கத்திலே இருக்கின்ற கிளைகளுக்கெல்லாம் போய்விட்டது. அந்தத் திட்டம் பாழாகப் போய் விட்ட காரணத்தால் 2½ கோடியிலிருந்து 7 கோடி ரூபாய் செலவு செய்ய வேண்டிய சுமையை மக்களும் இந்த அரசும் ஏற்றிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பம்மல் நல்லதம்பி :** அந்தத் திட்டம் 1981 அக்டோபர் மாதத்தில் முடிந்துவிடும் என்று சொன்னார்கள். அது என்ன ஆனது என்பதைத்தான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இப்போது சொல்கிற தேதி தாண்டிப் போகுமா ? அல்லது, அதே தேதியில் நடைபெறுமா என்பது கேள்விக்குறி. அதிகாரிகளை அனுப்பிக் கேட்டால், இரும்பு பைப் வரவில்லை என்ற காரணத்தைச் சொல்கிறார்கள். சொல்லிவிட்டு சிமிண்ட் பைப்பைப் புதைத்துக் கொண்டு வருகிறீர்கள். அதைப் பற்றி நான் தெரிவிப்பதற்குக் காரணம், குடிநீர் பிரச்சினையிலே என்னுடைய ஊர் அவ்வளவு பதட்ட நிலையிலே இருக்கிறது. முழுமையான பகுதியும் உப்புத் தண்ணீராக இருக்கிறது. குன்றத்தூரிலிருந்து வருகின்ற தண்ணீரை இடையிலே பம்மலுக்குத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தாம்பரத்திலே தாலுகா தலைமை அலுவகம் நிறுவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நாங்கள் சென்னைக்கு வர வேண்டியிருக்கிறது. தாம்பரத்தில் ஒரு சப் கோர்ட் நீண்ட காலமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தண்ணிறைவுத் திட்டத்தின்கீழ் தாம்பரம் நகராட்சியையும் பரங்கிமலை ஒன்றியத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

(இரவு 6.10)

* **திரு. வே. இரா. ஜெயராமன் :** துணைத் தலைவர் அவர்களே, 1982-83 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீது என்து கருத்துக்களை எடுத்துரைக்க விழைகிறேன். மாநில மக்களின் எதிர்பார்ப்புகளையும், நல்வாழ்வு வாழ வைப்பதற்கான திட்டங்களையும் சீராகவும், சிறப்பாகவும் நிறைவேற்றுவதற்கான பொருளாதார வசதி வாய்ப்புகள் குறைவாக இருந்த போதிலும், இந்த மாநிலத்தின் தேசிய வளர்ச்சியைப் பின்னணியாகக் கொண்டு நல்ல முறையில் திட்டமிட்டு இன்றையதினம் மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்களால் இந்த நிதிநிலை அறிக்கை இங்கே வைக்கப்பட்டு இருக்கிறது. இந்தியாவின் குடியாட்சித் தத்துவம் தற்சமயம் மாநிலங்களின் உரிமைகள் பறிக்கப்படுகின்ற வகையில் ஒரு இக்கட்டான சூழ்நிலையில் மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கைகளின் விளைவாகவும், கடந்த கால கொள்கைகளின் விளைவாகவும், மாநில அரசின் பொருளாதாரம் நொறுக்கப்படுகின்ற நிலையில் இருந்த போதிலும் தமிழக அரசு வைத்துள்ள நிதிநிலை அறிக்கையானது சீரான முறையில் தயாரிக்கப்பட்டு, ஏழை எளிய பாமர மக்களுக்காகவும், வறுமைக்



கோட்டிற்கு கீழே வாழும் மக்களுக்காகவும் தன்னாலான உதவிகளைச் செய்யவும், பிரதம அமைச்சர் அவர்கள் அறிவித்துள்ள 20 அம்ச திட்டத்தை உள்ளடக்கியும் இங்கே கொண்டு வந்துள்ளதற்காக நான் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உணவு நிலையைப் பொறுத்தவரையிலும் தமிழக அரசு 1982-83-ல் நெல் உற்பத்தி 68 இலட்சம் டன்னாகவும், சிறு தானியங்களின் உற்பத்தி 23 லட்சம் டன்னாகவும், பயிர் வகைகள் 4.80 லட்சம் டன்னாகவும் உற்பத்திப் பட்டியலில் இருந்தபோதிலும், பொது வினியோக முறையில் சீராக அதை வினியோகம் செய்ததன் காரணமாக திறமையாக செய்ததன் காரணமாக அது சமாளிக்கப்பட்டு இருக்கிறது. வேளாண்மைத் துறையிலே 80 லட்சம் செலவில் 200 ஏக்கர் பரப்பில் இரண்டு விதைப் பண்ணை அமைப்பதும், தரமான விதைகளை உற்பத்தி செய்து, தரமான விளைச்சலைப் பெருக்கும் வகையிலும் புதிய திட்டங்களுக்காக 60 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதும் பாராட்டுக்குரியதாகும்.

பண்ணை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைப்பதும், உற்பத்தி செய்த தானியங்களை சேமித்து வைக்க சேமிப்புக் கூடங்கள் அமைக்கவும் 62 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தென்னை வித்துக்களை ஊக்குவிக்கும் பொருட்டு, குமரி, தஞ்சை, கோவை ஆகிய மாவட்டங்களில் தேங்காய் உற்பத்தி செய்ய ரூ. 40 கோடி தேங்காய் உற்பத்தியை அதிகப்படுத்தும் முயற்சியை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் 30 கோடி ரூபாய் செலவில் விவசாயத்தை நம்பியிருக்கும் ஏழை எளியவர்களுக்கு உதவி செய்வதற்காக பலதரப்பட்ட வகையில் தமிழக அரசு திட்டமிட்டிருப்பதை நான் வரவேற்கிறேன்.

பாசன திட்டங்களைப் பொறுத்துத்தான் நாட்டின் அடிப்படை வசதிகள் அமையும் என்பதற்கு இணங்க பெரும்பாசனம் மற்றும் நடுத்தரப் பாசனத் திட்டங்களுக்காக 22.23 கோடியும், சிறப்புப் பாசனத் திட்டங்களுக்காக 2.23 கோடியும் சிறுபாசன சிறப்புத் திட்டத்திற்கு 2 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டிருப்பதை நான் பாராட்டுகிறேன்.

பெரியகுளம் கோட்டத்தைப் பொறுத்தவரையில் பெரியாற்றில் வயிரவன் அணையிலிருந்து பெரியகுளம் வரையில், மேற்குமலை அடிவாரத்தின் பல்லாயிரக்கணக்கான புஞ்சை நிலங்கள் பாசனம் பெறும் வகையில்,

பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம் போன்று ஒரு தரைமட்டக் கால்வாய் அமைத்து, 18 ஆம் கால்வாய்த் திட்டம் என்று பிரிட்டிஷ் ஆட்சியிலே ஆய்வு செய்யப்பட்ட அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டும் என்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

6-வது திட்ட மொத்த நிதி ஒதுக்கீடான ரூ. 3,150 கோடியில் மின் வசதிக்காக மட்டும் 1,023 கோடி ஒதுக்கியிருப்பது, எதிர்காலத்தில் ஏற்படவிருக்கின்ற மின்சாரத் தேவையைக் கருத்தில் கொண்டு புதிய திட்டங்கள் துவங்குவதற்காக ஒதுக்கியிருப்பது என்கிற அடிப்படையில் வழிவகை இருப்பதைப் பாராட்டுகிறேன்.

இவ்வாறாக மின் உற்பத்தியில், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கேற்ப மின்சார வாரியத்தைச் செயல்படச் செய்கின்ற இந்த அரசை நான் பாராட்டு கிறேன்.

தொழில் துறையைப் பொறுத்த வரையில், இன்றைய தினம் மத்திய அரசு 89 மாவட்டங்களை—பல்வேறு மாநிலங்களில் உள்ளவற்றைத் தேர்ந்தெடுத்து தொழிலில் பின்தங்கிய பகுதிகளாக அறிவித்து இருக்கிறது. அந்த 89 மாவட்டங்களில் தமிழகத்திலே உள்ள மாவட்டம் ஒன்றுமேயில்லை என்பதை மிக வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, அதற்காக மத்திய அரசைத் தமிழக அரசு அணுகி, தமிழகத்திலும் உள்ள தொழிலில் பின் தங்கிய மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்து அறிவிக்கச் செய்யவேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் துறையிலே இன்றைக்குப் பல புதிய சலுகைகளை அளித்தது மட்டுமல்லாமல் மேலும் 6 வட்டங்களைத் தொழில் துறையில் பின்தங்கிய வட்டங்களாக அறிவித்திருப்பதைப் பாராட்டுகிறேன். அதைப்போல 190 கோடி செலவில் செய்தித் தாள், எழுதும்தாள், ஆகியவற்றை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை ஏற்படுத்த இருப்பதையும் பாராட்டுகிறேன்.

பொதுத் துறையைப் பொறுத்த வரையில், பொதுத்துறை நிறுவனங்கள் அதிகமாக லாபத்தை ஈட்டுகின்ற நிலையிலே இல்லாவிட்டாலும், நஷ்டத்திலே செயல்படுகின்ற நிலையைப் போக்கி வருவது மட்டுமல்ல, இன்றையதினம் தமிழ்நாடு மாக்னசட் நிறுவனம் கனிம நிறுவனம், ஆகியவை சிறந்த முறையில் செயலாற்றி இலட்சக்கணக்கான ரூபாய் இலாபம் அடைந்திருப்பது தமிழ்



நாட்டில் பொதுத் துறையில் நிறுவனங்கள் நல்லமுறையில் முன்னேறி வருகின்றன என்பதை எடுத்துக் காட்டுகின்றன. அதற்காக இந்த நேரத்தில் அரசுக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தேனியில் கூட்டுறவு நூற்பாலை அமைக்க மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அனுமதி அளித்திருப்பதற்காக புரட்சித் தலைவர் அவர்களுக்கும் தொழில் அமைச்சர் அவர்களுக்கும் என் சார்பிலும் தொகுதி மக்கள் சார்பாகவும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து திருத்தணி, புதுக்கோட்டை ஆகிய இடங்களில் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை அமைக்க இருப்பது அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். தொழில் துறையில் மேலும் மேலும் கொடுக்கப்படுகின்ற புதிய சலுகைகள் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் இங்கே நல்லமுறையில் தொழில்கள் வளர்ச்சிபெற வாய்ப்புகள் உருவாகின்றன.

கிராமப்புறங்களில் தன்னிறைவுத் திட்டத்தை ஏற்படுத்தி, அதன்மூலம் இன்றையதினம் கிராம மக்களுடைய அடிப்படைப் பொருளாதாரத்தில் முன்னேற்றம் காண்கின்ற தமிழக அரசு அந்தத் தன்னிறைவுத் திட்டத்தைப் பேரூராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும் விஸ்தரிக்க இருப்பதைப் பாராட்டுகிறேன் அப்படி விஸ்தரிக்கின்றபோது, தேனி, ஓடைப்பட்டி, மார்க்கயன் கோட்டை வீரபாண்டி பேரூராட்சிகளை தன்னிறைவுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப்போல நகராட்சிகளுக்கு இத்திட்டத்தை விஸ்தரிக்கும்போது சின்னமனூர் நகராட்சியைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்பதற்கு ஒப்ப 2 வயது முதல் 10 வயதுவரை உள்ள ஏழை குழந்தைச் செல்வங்களுக்கு 100 கோடி ரூபாய் செலவில் உணவு திட்டம் அனைவராலும் பாராட்டப்பட வேண்டிய ஒரு நல்ல திட்டமாகும். தங்களுடைய ஆட்சிக் காலத்தில் செய்ய முடியாத ஒரு காரியத்தை புரட்சித் தலைவர் ஆட்சியில் செய்கிறோம் என்ற பொறாமையால் இந்த 100 கோடி ரூபாய்த் திட்டத்தை ஊழல் திட்டம் என்று வர்ணிக்கிறார்கள். இந்தத் திட்டம் ஒரு ஊழல் திட்டம் என்றால் அவர்கள் ஆட்சியிலே போடப்பட்ட வீராணம் திட்டத்திற்கு என்ன பெயர் சூட்டுவது என்று தெரியவில்லை. அந்த அடிப்படையிலேதான் அவர்கள் வீராணம் திட்டத்தைப் போட்டார்களா என்று கேட்க நான் ஆசைப்படுகிறேன், ஏழை எளிய மக்களுக்கு ஒரு வேளை

யேனும் இலவச உணவு அளித்து, அவர்களுடைய பசியைப் போக்கும் இந்த முயற்சியினால் அவர்களுடைய முழு பசி குறையும் என்பதில் சந்தேகம் இல்லை. அதை பாராட்ட வேண்டாமா ?

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் அங்கே அதிகமாக கரும்பு உற்பத்தியாகிறது. ஆகையால் கூட்டுறவு சர்க்கரை ஆலை ஒன்றை அங்கே ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது) காமாட்சிபுரத்தில் ஒரு துணை மின் நிலையத்தை ஏற்படுத்த வேண்டும். தேனி யில் இருக்கிற சிறிய மின் நிலையத்தை 230 கே.வி.ஏ. திறன் கொண்டதாக மாற்றியமைக்க வேண்டும். வாழை, திராட்சை, பருத்தி, மிளகாய் போன்ற பணப்பயிர்களுக்கு பயிர் பாதுகாப்புத் திட்டத்தை அந்தப் பகுதிக்கு விஸ்த ரிக்க வேண்டும். தேனியில் ஒரு பாலிடெக்னிக் பள்ளியை ஏற்படுத்த வேண்டும். மதுரையை இரண்டாகப் பிரிக்கும்போது பெரியகுளத்தை தலை மையிடமாகக் கொண்டு ஒரு புதிய மாவட்டத்தை உருவாக்கி, அதை மதுரை மேற்கு மாவட்டமாக அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டு, நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர் களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற நிதி நிலை அறிக்கையின்மீது ஒன்றிரண்டு கருத்துக்களைக் கூற வாய்ப்பளித்ததற் காக என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

முதலிலே என்னுடைய 'தொகுதியின் தேவைகளைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். என்னுடைய ஆரணி தொகுதியானது மிகவும் பின்தங்கியத் தொகுதியாக இருக்கிறது. ஆகையால் அதை பின்தங்கிய தொகுதியாக அறிவிக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைக்க விரும்புகிறேன். அதைப் போல ஆரணியில் ஒரு தொழிற் பயிற்சிப் பள்ளியையோ அல்லது ஒரு பாலி டெக்னிக் பயிற்சி பள்ளியையோ ஏற்படுத்தித் தரவேண்டுமென்று என் தொகுதி மக்கள் பல ஆண்டுகளாக கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதை யும் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்ற பிறகு செண்பகத்தோப்பு அணையை கட்டி முடிப்பதாக பட்ஜெட்டிலே அறிவிக்கப்பட்டிருந்தும் அது சற்று காலதாமதமாக சென்று கொண்டிருக்கிறது மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு அந்த அணையை விரைவிலே கட்டி முடிக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைக்கிறேன்.



அதைப்போல வடாற்காடு மாவட்டத்தில் வேலூரை தலைநகராகக் கொண்டு அங்கே பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தை ஆரம்பிப்பதற் கான வழிவகைகளை செய்து தந்த இந்த அரசுக்கு என்னுடைய நன்றியை காணிக்கையாக்குகிறேன்.

அதைப்போல 20 கோடி ரூபாய் செலவில் வெடிமருந்து தொழிற்சாலை ஒன்றை இராணிப்பேட்டையில் ஆரம்பிக்க அனுமதி அளித்த புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசுக்கு என்னுடைய நன்றியை காணிக்கையாக்கிக்கொள் கிறேன்.

(இரவு 6-20)

பன்னீரிலே குளிப்பவர்களுக்காக தயாரிக்கப்பட்ட பட்ஜட் அல்ல இது நாளும் கண்ணீரில் குளித்துக் கொண்டிருக்கும் பாமர மக்களின் காலடியிலே காணிக்கையாக்கப்படுவதுதான் இந்த நிதிநிலை அறிக்கை. பளிங்கு மாளிகையில் பட்டாடை உடுத்தி நாளும் பஞ்சணை சுகம் பெற்று வருகிறார்களே, அந்த பகட்டுக்காரர்களுக்காகத் தயாரிக்கப்பட்ட பட்ஜட் அல்ல இது. ஒட்டிய வயிறோடு கட்டிய கந்தல் துணியோடு பஞ்சத்தாலும், பட்டினியாலும் வாடிக் கொண்டிருக்கிறானே அந்தப் பாட்டாளி குடிமக்களுக்காகத் தயாரிக்கப்பட்ட பட்ஜெட் இது என்பதை நான் பெருமையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தன்னிறைவுத் திட்டம் தன்னிகரில்லாத திட்டம், அனைத்து மாநிலங் களும் பாராட்டிக்கொண்டிருக்கின்ற இந்தத் திட்டம் இந்த ஆண்டு முடிவடையக் கூடிய நிலைமையிலே இருக்கின்றது. இந்தத் திட்டத்தினைப் பல மாநில அமைச்சர்கள் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

இந்தத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் இணைப்புச் சாலைகள் போடு கின்ற நேரத்திலே ஒரு சிறிய பிரச்சினை இருக்கின்றது. 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கினை வைத்துக்கொண்டுதான் இணைப்புச் சாலைகள் போட வேண்டும் என்ற வகையிலே இந்தத் திட்டம் செயல்பட்டுக்கொண்டிருக் கின்றது. ஆனால் 1981 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி இந்தத் திட்டம் செய்து முடிக்கப்பட்டால் ஒவ்வொரு பகுதிக்கும் எட்டு இலட்சம் ரூபாயிலே இருந்து ஒன்பது இலட்சம் ரூபாய் வரை செலவழித்து சாலைகள். அதிகமாகப் போட வேண்டிய நிலைமை ஏற்படும். அப்படிப் போட வேண்டிய நிலைமை இருப்பதால் தன்னிறைவுத் திட்டம் முடிந்து விட்டாலும்கூட அப்படிப்பட்ட இணைப்புச் சாலைகளைப் போடுவதற்குரிய வழிவகையினைச் செய்து அதற் கான திட்டங்களை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஏ. சி. சண்முகம்] [1982 மார்ச் 5

அடுத்து குடிசைகளுக்கு மின்சாரம் வழங்கும் திட்டம் என்பது இந்தியாவிலேயே இல்லாத ஒரு மிகப்பெரிய சாதனை என்பதால் அந்தத் திட்டத்தினை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அடுத்து முதியோர்களுக்கும், விதவைகளுக்கும், உடல் ஊனமுற்றவர்களுக்கும் 10 ரூபாய் உதவித் தொகையிலே அதிகமாக இந்த அரசு கொடுத்து இருப்பதற்காக இந்த அரசுக்கு முதியவர்கள் எல்லோரும் நன்றிக்கடன் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் இந்த அரசினை வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

அடுத்து 100 கோடி ரூபாயிலே ஏழைக் குழந்தைகளுக்கு இலவச உணவு வழங்குகின்ற திட்டத்தினைப்பற்றி எதிர்க்கட்சியிலே இருக்கின்ற நண்பர்கள் குறை கூறினார்கள். கிண்டல் செய்தார்கள். தன்னிறைவுத் திட்டம் இந்த மன்றத்திலே புரட்சித் தலைவர் அவர்களாலே அறிவிக்கப்பட்டபோதும்கூட ஓரே ஆண்டிலே எப்படி எல்லா ஒன்றியங்களுக்கும் எல்லா வேலைகளையும் செய்து முடிக்க முடியும் என்றெல்லாம் கிண்டல் செய்தார்கள். அது நடைமுறைக்கு ஒத்துவருமா என்றெல்லாம்கூட கேலி செய்தார்கள். இப்படி நடைமுறைக்கு ஒத்துவராத திட்டத்தை எப்படிக் கொண்டுவரலாம் என்று கேலியும் கிண்டலும் செய்து பேசினார்கள். அப்படிப் பேசியவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நண்பர்களாக இருந்தாலும் சரி, அல்லது மற்ற கட்சி நண்பர்களாக இருந்தாலும் சரி எல்லோரும் ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் அந்த தன்னிறைவுத் திட்டம் வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் விண்ணப்பம் கொடுத்த நிலைமையினைப் பார்த்தோம். ஆகவே இப்போது தன்னிறைவுத் திட்டம் வெற்றிகரமாக முடிக்கப்பட்டிருக்கிறது. அதே போன்றுதான் இந்த 100 கோடி ரூபாய்த் திட்டமும் இங்கே அறிவிக்கப்படுகின்றபோது கேலி செய்தாலும்கூட நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டபின் அவர்கள் தங்களது நன்றியினை இந்த அரசுக்குக் காணிக்கையாக்க வேண்டும் என்று அந்த மாற்றுக் கட்சி உறுப்பினர்களைப் பார்த்து நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பட்டுக்கு 5 சதவீதம் வரி உயர்வினை இந்த அரசு ஏற்படுத்தி இருக்கின்றது. அதனை மறுபரிசீலனை செய்ய வேண்டும். இதனை ஆரணித் தொகுதி மக்களின் சார்பிலே நான் கேட்டுக்கொள்கிறேன். பட்டுக்கு மாநில அரசு 10 சதவீதம் மானியம் தருகின்றது. மத்திய அரசு 10 சதவீதம் மானி-



1982 மார்ச் 5] [திரு. ஏ. சி. சண்முகம்]

யம் தருகின்றது. இந்த மானியம் கொடுக்கப்படுவது நலிந்த தொழிலைக் காப்பாற்றுவதற்கும், ஏழை நெசவாளர்களை வாழ வைப்பதற்கும்தான். ஆகவே இதிலே 5 சதவீதம் வரி விதித்தால் மத்திய அரசு நமக்குக் கொடுக்கக்கூடிய

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

10 சதவீதம் மானியம் நமக்கு இல்லாமல் போகக்கூடிய நிலைமை இருக்கின்றது. ஆகவே இந்த அரசு பட்டுக்கு விதித்த வரியினைப்பற்றி மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று அனைவரையும் அதாவது அரிஜன மக்களுக்கும் கூட்டுறவுச் சங்கங்களைக் கொண்டு வரவேண்டும் என்ற வகையிலே கூட்டுறவு இயக்கத்தைக் கொண்டுவரக்கூடிய நல்ல திட்டத்தினை இந்த அரசு கொண்டு வந்ததற்காக நான் என்று நன்றியினைக் காணிக்கையாக்குகிறேன்.

அடுத்து கல்வியிலே இந்த அரசு பெரிய பொற்காலத்தை ஏற்படுத்தி இருக்கின்றது. பாரதியார் பல்கலைக் கழகம், பாரதிதாசன் பல்கலைக் கழகம் ஏற்படுத்தி, இந்த மாநிலத்திலே இதுவரை ஆண்டவர்கள் ஏற்படுத்தாத நிலைமையில் தமிழ் பல்கலைக் கழகத்தையும் ஆரம்பித்திருக்கின்ற புரட்சித் தலைவர் அவர்களுக்கு தமிழக மக்கள் என்றென்றும் நன்றிக்கடன் பட்டிருக்கிறார்கள்.

அடுத்து பல ஆண்டுகளாக பாதாள இரயில் திட்டம் கிடப்பிலே போடப்பட்டிருக்கின்றது. மத்திய அரசினை இதுகுறித்து வலியுறுத்துவதற்கு அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் கட்சி வேறுபாடு இன்றி குரல் கொடுக்க முன் வரவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

சட்ட மன்றத்திற்கு புதிதாக கட்டிடம் கட்ட வேண்டும் என்பதற்கான ஒரு திட்டமும் இருக்கின்றது. அதையும் விரைவிலே செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கோதுமைக்கு மானியம் கொடுக்கின்றது மத்திய அரசு. கோதுமைக்கு கொள்முதல் விலையினை உயர்த்திக் கொடுக்கின்றது மத்திய அரசு. ஆனால் நெல்லுக்கு மட்டும் ஓரவஞ்சனை செய்கின்றது. ஆகவே நெல்லுக்கு அதிகமாக விலை கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசினை வலியுறுத்துவதற்கு அனைத்து உறுப்பினர்களும் சேர்ந்து குரல் கொடுக்க வேண்டும்.

[திரு. ஏ. சி. சண்முகம்] [1982 மார்ச் 5

பினாமி நிலங்கள் ஒழிப்புச் சட்டத்தைப்பற்றி இங்கே பேசியபோது மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களுக்கு கோபம் வந்தது. இங்கே கோபப்பட்டு பயன் இல்லை. நீங்கள் வேண்டுமானால் மத்திய அரசாங்கத்திடம் அந்த வேகத்தைக் காட்டி, அந்த பினாமி நிலங்கள் ஒழிப்புச் சட்டத்தினை சட்டமாக இயற்றுவதற்கு, உதவி செய்ய வேண்டும். அதைக் கடமையாக அவர்கள் கருத வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, தமிழ் தெரிந்த நீதிபதிதான் உயர் நீதிமன்றத்தில் தலைமை நீதிபதி பதவியில் இருக்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்தார்கள். ஆனால் இன்று நடைமுறையில் அதற்கு மாறாக நிலைமை ஏற்படுத்தப்பட்டிருப்பதை அறிகிறோம். அதை அவசியம் மத்திய அரசு மறுமுறை பரிசீலிக்க வேண்டும். அதற்கு நம்முடைய அரசு அவர்களை வற்புறுத்திக் கேட்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நீதிமன்றம் முழுவதிலும், தமிழிலேயே அனைத்து நிகழ்ச்சிகளும் நடக்க வேண்டும் என்ற வகையில் ஒரு நல்ல திட்டத்தைக் கொண்டு வந்திருக்கும் இந்த அரசை நான் மனதார பாராட்டி வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கொள்ளை அடிப்பதற்காகத்தான் 100 கோடி ரூபாய் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள் என்று எதிர்க் கட்சி உறுப்பினர்கள் பேசும்போது சொன்னார்கள். தமிழகத்திலே வறட்சி ஏற்பட்டபோது, வறட்சி நிவாரண தொகையாக மத்திய அரசிடமிருந்து கொடுக்கப்பட்ட தொகையை மிக நல்ல முறையிலே இந்த அரசு செலவு செய்தது. அதேபோல தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் பல முக்கியப் பணிகளைச் செய்துக் கொண்டிருக்கிறோம் இதுவரையில் அந்தப் பணிகளில் எந்தக் குற்றம் குறைகளோ அல்லது ஊழல் புகார்களோ இருப்பதாக பகிரங்கமாக ஆதாரத்தோடு யாரும் எந்தவித குற்றச்சாட்டையும் சொல்ல முடியாத நிலையில் இருக்கிறது. வேண்டும் என்றால், வெளியிலே மேடையிலே பேசுகிறபோது, பொதுமக்களை நம்பச் செய்ய வேண்டும் என்பதற்காக எதையாவது பேசலாமே தவிர, உண்மையாகவே இதுபோன்ற பணிகளை இந்த அரசு செயல்படுத்தும்போது எந்தக் குற்றத்தையும் ஆதாரத்தோடு சொல்ல முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல சர்க்காரியா கமிஷனைப்பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் பேசியபோது, அதைப்பற்றி பேசியபோதே, எதிர்க் கட்சி உறுப்பினர்களுக்கு கோபம் வந்தது . . (மணியடிக்கப்பெற்றது).



1982 மார்ச் 5]

* திரு. இரா. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி எனது கருத்துக்களைக் கூற விழைகின்றேன்.

சென்ற ஆண்டு, 1981-82 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்தபோது, தமிழ்நாட்டிலே வறட்சி நிலையினால் அதிகமாக பாதிக்கப்பட்டிருந்த சூழ்நிலை நிலவி இருந்தது. அப்போது இந்தச் சட்ட மன்றத்திலே நிதிநிலை அறிக்கையை வைக்கிறபோது, விவசாயத்திற்காக 192 கோடி ரூபாய்களை தனியாக ஒதுக்கி, விவசாயிகளுக்கு என்று கொடுக்கப்பட்டிருந்த கடனுக்கான வட்டிகளை இந்த அரசு தள்ளுபடி செய்து, ஏழை எளிய மக்களுடைய நல்வாழ்த்துக்களை பெற்றதுபோல, 1982-83 ஆம் ஆண்டு, புரட்சித் தலைவர் அவர்களுடைய அமைச்சரவையின் சார்பாக இந்த நிதிநிலை அறிக்கை வைக்கப்பட்டிருப்பதில், ஏழை எளிய மக்களின் குழந்தைகளுக்கு ஒரு வேளைப் பசியைப் போக்குவதற்காக 100 கோடி ரூபாயை ஒதுக்கி, ஏழ்மையை நீக்க செய்திருக்கும் முயற்சிகளை பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம்.

அதே நோத்தில் ஒன்றிரண்டு சதவித வரிகளை, சிலவற்றிற்கு இந்த அரசு போட்டிருப்பதை, சிலர் முக்கியமாக எண்ணி சுட்டிக்காட்டிப் பேசினார்கள். மிகக் குறைந்த அளவில் 1 சதவீதம், 2 சதவீதம் என்ற அளவிலே போடப்பட்டிருக்கும் அந்த வரிக் கட்டணத்தைப் பற்றி பெரிதாகக் கருதாமல், அதிக அளவில் ஏழை எளிய மக்களுக்குப் பயன்படுகின்ற மண்ணெண்ணெய்க்கு போடப்பட்டிருந்த வரியில் 8 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாக குறைத்திருப்பதற்கு, நாம் நன்றி தெரிவித்து, அரசைப் பாராட்டியே ஆக வேண்டும்.

அதைவிட முக்கியமாக பாமர மக்களுக்கு, வயது முதிர்ந்தோர்களுக்கும், அநாதைகளுக்கும் உதவித் தொகையாகக் கொடுத்து வந்த 25 ரூபாயை 35 ரூபாயாக கூட்டிக் கொடுத்திருப்பதன் காரணமாக இரண்டு லட்சம் மக்களுக்கும் அதிகமாக பயன் பெற்றிருக்கிறார்கள் என்பதை எண்ணி நாம் இந்த அரசை கண்டிப்பாக பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். மேலும், ஓய்வு பெற்றவர்களின் ஓய்வு ஊதியத் தொகையை 100-லிருந்து 125 ஆக கூட்டியிருக்கிறார்கள். அதன் மூலமாக 43,500 பேர்கள் பயன் அடையப் போகிறார்கள் என்பதை எண்ணும்போதும் இந்த அரசை பாராட்டாமல் என்னால் இருக்க முடியவில்லை. அதோடு மட்டுமல்ல, கண்பார்வை இழந்தோர்களுக்கும்

ஊனம் உற்றவர்களுக்கும் உதவித் தொகையை அளிக்கிறார்கள். அதை வயது வரம்பு என்று வைத்துக் கொடுக்காமல், ஊனம் உற்ற அனைவருக்கும் அந்த உதவித் தொகை போய்ச் சேரும் வகையில், இந்த அரசு வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும் என்று நான் இந்த அரசை கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

ஐந்து முதல் 11 வயது வரை உள்ள அநாதைக் குழந்தைகளுக்கு அனைத்துத் தகவல்களும் அடங்கப்பெற்ற ஒரு அட்டையை—மருத்துவம் போன்ற எல்லாத் துறைகளும் அடங்கிய விதத்தில் அட்டை வழங்குவதற்கு, வாய்ப்பு ஏற்பாடு செய்து தரப்பட்டிருக்கிறது. அதை வாழ்த்த கடமைப் பட்டிருக்கிறேன்.

(இரவு 6-30)

1982-83-ம் ஆண்டில் ஏழை மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்காக, சுமார் 40,000 வீடுகள் கட்டுவதற்காக, பணம் ஒதுக்கப்பட்டிருப்பதற்காக அரசைப் பாராட்டுகிறேன்.

மேலும் நீர்ப்பாசன வசதிக்காக திருத்தணித் தொகுதியிலிருந்து திருவள்ளூர், கும்முடிப்பூண்டி, பொன்னேரி இணைந்த திட்டத்தை ஏற்படுத்தி விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அதை ஒரு வாய்ப்பாக அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த பத்து நாட்களாக கிராமப்புறங்களில் மின்சாரம் அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கிறது. மின்சாரத்திற்காக என்று இந்த பட்ஜெட்டில் 26 சதவித தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் இதைவிட அதிகமாக நிதி ஒதுக்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்து விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அதிகப்படியான மின்சாரம் கிடைக்க வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக திருத்தணி தொகுதியில் கடம்பத்தூர், திருவள்ளூர் பகுதிகளில் உள்ள விவசாய பெருங்குடி மக்கள் 12 நாட்களாக மின்சாரம் இல்லாமல் பாதிக்கப் பட்ட நிலையில் இருக்கிறார்கள். அதை கருத்தில்கொண்டு இரண்டு மூன்று நாட்களுக்குள்ளாக அந்தப் பகுதி மக்கள் மின்சாரம் பெறுவதற்கான வாய்ப்பு பெறவில்லை என்று சொன்னால் கோடிக்கணக்கில் நஷ்டம் ஏற்படும் நிலை உள்ளது. அங்குள்ள விவசாயப் பெருங்குடி மக்கள், விவசாயத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் அந்த நிலையை அடைந்திருப்பதை இந்த அரசு கவனத்தில்



கொண்டு தொழிற்சாலைகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதை சிறிது குறைத்தாவது விவசாயத்திற்காக கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த 100 கோடி ரூபாய் திட்டத்தைப்பற்றிச் சொல்லும்போது, ஒதுக்கியுள்ள அந்தப் பணத்தை நல்ல வழியில் செலவு செய்ய வேண்டுமென்றும், அதைக் கொண்டு எல்லா ஏழைக் குழந்தைகளுக்கும் உணவு அளிக்க முடியாது என்ற கருத்தை சிலர் சொன்னார்கள். தன்னிறைவுத் திட்டத்தை நாம் நிறைவேற்றும்போதும் இப்படிப்பட்ட குறைகளைத்தான் சொல்லிக் கொண்டு இருந்தார்கள். ஆனால் கிராமங்களில் உள்ள மக்கள் எல்லோரும் என்ன சொல்கிறார்கள் என்றால், சுதந்திரம் பெற்று 34 ஆண்டுகளாகியும் இப்படிப்பட்ட வேலைகள், சாலைகள் மேம்பாடு திட்டம், பள்ளிகள் அமைத்தல், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து கொடுத்தல், மருந்தகங்கள் அமைத்தல் போன்ற வேலைகளை கிராமங்களில் இதற்குமுன் இப்படி எந்த ஆட்சிக் காலத்திலும் செய்ததில்லை என்றும், இதற்கு முன்னால் மக்கள் வரிப் பணத்தை என்ன செய்தார்கள் என்றும் நினைக்கிற அளவிற்கு மக்கள் பேசிக்கொள்வதைக் கேட்கிறோம். இருந்தும் இப்போதும் கிராமங்களில் மின்விளக்குகள் இல்லை; பள்ளிக்கூடங்கள் இல்லை, போக்குவரத்து வசதி இல்லை என்று சொல்கிறார்களே, மனதார இதைச் சொல்கிறார்களா என்று நான் கேட்கிறேன்.

தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் பள்ளிகள் எல்லாக் கிராமங்களிலும் கட்டி முடித்துவிட்டாலும்கூட உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் கட்டிட வசதி இல்லாத இடங்கள் இருக்கின்றன. ஆகவே தனியாக ஒரு திட்டத்தைத் தீட்டி மேல்நிலைப் பள்ளிகளும் உயர்நிலைப் பள்ளிகளும் ஏற்படுத்துவதற்கான வகையில் கட்டடங்கள் கட்டித் தரவேண்டிய வாய்ப்பை அரசு ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேல்நிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் இவற்றிற்கு காம்பவுண்ட் சுவர்கள் நிச்சயமாக அமைக்கப்பட வேண்டும். அப்படி அமைப்பதற்கு தனியாக ஒரு திட்டத்தை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகள் உற்பத்தி செய்கிற நெல்லுக்கு—காலம் காலமாக விவசாயிகள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்த மன்றத்தில் தொன்றுதொட்டே எல்லா உறுப்பினர்களும் வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். இன்று விவசாயிகள் உற்பத்தி செய்யும் நெல்லுக்கு செலவு அதிகமாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே

ஒரு க்விண்டால் நெல்லுக்கு குறைந்தது ரூபாய் 150 ஆவது கொடுப்பதற்கான வகையில் வலியுறுத்த வேண்டும், அப்படிக் கொடுப்பதற்கு நாம் மத்திய அரசை வலியுறுத்த வேண்டும்.

திருத்தணித் தொகுதியில் சர்க்கரை ஆலை ஒன்றை திருவாலங்குடி ஒன்றியத்தில் துவக்க ஏற்பாடு செய்ய வேண்டும். திருத்தணியில் முருகன் கோவில் இருக்கிறது. அங்கே தீ அணைப்பு நிலையம் ஒன்று அவசியம் வேண்டும். அதோடு கடம்பத்தூரில் ஒரு புறக்காவல் நிலையம் ஒன்றை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புறநகரங்களில் மினி பஸ்கள் அதிகமாக ஓடிக்கொண்டிருக்கின்றன. திருவள்ளூர் பணிமனையிலிருந்து சுங்குவார்சத்திரம் செல்ல பேருந்து ஒன்றை, பேரம்பாக்கம் பூந்தமல்லி செல்ல பேருந்து ஒன்றை விட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கிராமப் பகுதிகளுக்கு செல்ல பாதிக் கட்டணம் விதிக்கும் வகையில் உள்ள மினி பஸ்களை எல்லா பஸ்களும் செல்லும் பாதையில் விடாமல் பத்து பதினைந்து கிராமங்கள் உள்ளடக்கிய விதத்தில் செல்லத் தக்க வகையில் மினி பஸ்கள் விட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். பேரம்பாக்கத்தில் இருக்கும் ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்பாடு அடைய செய்து, 25 படுக்கைகள் கொண்ட ஒரு அரசு மருத்துவ மனையாக உயர்த்தித்தர வேண்டும் என்று இத்தருணத்தில் நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

வேளாண்மையிலே இடுபொருள்களுக்குக் கொடுக்கின்ற மானியங்கள் சரியாகக் கிடைக்க முடியாமல் போய்விடுகிறது. அதற்காக அந்த மானியத்தை எந்தப் பொருள்களுக்கு ஒதுக்கப்பட்டாலும், அந்த மானியங்கள் எல்லோருக்கும் கிடைக்கின்ற வகையில், வழங்கப்படுகின்ற அந்தப் பொருள் களின் பெயர்களை, எவ்வளவு மானியம் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிந்துகொள்ளும் வகையில் பட்டியல் போட்டு, மானியத் தொகையைக் கழித்து விலைப் பட்டியலை அங்கே ஒரு போர்டிலே ஒட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி ஒட்டும்போது, டிப்போக்களிலும், மானியம் வழங்குகின்ற அலுவலகத்திலேயும் ஒரு பெரிய போர்டை வைத்து, பொதுமக்களுக்கு விளம்பரம் செய்கின்ற வகையிலே ஏற்பாடு செய்தால், நிச்சயமாக அந்த மானியம் எல்லோருக்கும் பயன்படும். அந்த வகையில்





ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று, பேச வாய்ப்பளித்தமைக்கு மன்றத் தலைவருக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு விடை பெறுகிறேன். நன்றி. வணக்கம்.

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1982-83ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது நான் சார்ந்துள்ள காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் எனக்கு பேசுவதற்கு வாய்ப் பளித்தமைக்கு மிக்க மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அரசு நலிவுற்ற மக்கள் நலன் காக்க பல நல்ல திட்டங்களைச் செய்து வருகிறது. விவசாயிகளுக்குப் பல வசதிகள் கோரி அவர்கள் நலன் காக்க வித்துப் பண்ணைகளை ஆரம்பிக்க பல இலட்சக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கீடு செய்திருப்பது கண்டு மகிழ்ச்சி. அதே நேரத்தில் விவசாயிகள் உற்பத்தி செய்யும் நெல், கரும்பு, இதர பொருள்களுக்கு விலையை அதிகரித்து கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தன்னிறைவுத் திட்டம் ஒரு நல்ல முறையான திட்டம். அந்தத் திட்டம் நல்லபடி செயல்பட அங்குள்ள ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர்களும் அதில் கலந்து, மக்களின் வேண்டுகோள்களை, கோரிக்கைகளை ஏற்று, அவர்கள் சிபாரிசு செய்து, தன்னிறைவுத் திட்டத்தை நல்லமுறையில் செயல்படுத்த முற் பட்டால், எதிர்பார்த்த இந்தத் திட்டம் நல்லமுறையில் அமையும் என்று கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஏழை மக்கள் உபயோகப்படுத்தும் மண்ணெண்ணெய்க்கு வரியை இந்த அரசு 4 சதவீதமாகக் குறைத்திருப்பது கண்டு மகிழ்ச்சி. அதே நேரத்தில் பிஸ்கட், மிட்டாய் போன்றவற்றிற்குப் போடப்பட்டுள்ள வரியைக் குறைத்து, ஏழை மக்களின் துயரத்தைக் குறைக்க வேண்டும் என்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

சாத்தான்குளம் தொகுதி நிலத்தடி நீரை நம்பி வாழக்கூடிய ஒரு தொகுதி யாக அமைந்திருப்பதால், அங்கே உள்ள 25 பஞ்சாயத்துகளிலும், ஆழ்வார் திருநகரிலுள்ள 15 பஞ்சாயத்துகளிலும், கருங்குளம் யூனியனைச் சார்ந்த 11 பஞ்சாயத்துகளிலும் குடிநீர் இல்லாமல் மிகவும் அவதிக்குள்ளாகி இருக்கிறது. ஆகவே, தாமிரபரணி நதியிலிருந்து அங்கே ஒரு பாசனக் கால்வாய் ஏற்பாடு செய்து, பக்கத்திலே இருக்கின்ற கருமேனி ஆற்றில் கொண்டுபோய்ச் சேர்த்தால், அங்குள்ள மக்கள் குடிநீர் பெறுவதற்கு வசதியாக இருக்கும்.

[திரு. எஸ். என். இராமசாமி] [1982 மார்ச் 5

அங்கே மழைக் காலங்களிலே உபரி நீர் கடலில் போய் வீணாகக் கலப்பதை, புதிதாக வெட்டப்பட்ட கால்வாய் மூலம் தண்ணீரைக் கொண்டு சென்று, 4, 5 மைல்களுக்கு அப்பால் இருக்கும் கருமேனி ஆற்றில் விட்டால், மானாவாரி குளங்கள் பெருகும். அதனால் அந்தப் பகுதிகளுக்குக் குடிநீர் வசதியும், பாசன வசதியும் கிடைக்கும்.

அங்குள்ள மக்கள் குடிநீருக்காக அவதிப்படுகின்ற நிலைமையைப் பார்த்தால், மிகவும் பரிதாபமாக இருக்கிறது. மழையில்லாத காலங்களில் அதிகமாக கிணறுகளில் ஆழத்தில் இருக்கக்கூடிய தண்ணீரை அவர்கள் எடுத்து வரக்கூடிய கஷ்டமான நிலைமை இருக்கின்ற காரணத்தால், இதைப் பற்றி நான் வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே முக்கியமான நேரங்களிலே சொல்லியிருக்கிறேன். எனவே, உடனடியாக அந்த மக்கள் நலனைக் காக்க இந்த அரசு அங்கே இருக்கக்கூடிய பாசனக் கால்வாய்க்கான ஏற்பாட்டைச் செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பினாமி நிலம் மற்றும் கறுப்புப் பணம் முதலியவற்றை ஒழிப்பதற்காகச் சிறந்த அணுகுமுறையைக் கையாள வேண்டும். பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் சொல்லியதைப் போல ஏழை உயர வேண்டுமென்றால் சான்றிதழ் பெறத்தான் வேண்டும். இதற்கு ஒரே வழி பட்டாப் புத்தகம். பினாமிதாரர்கள் ஒழிய இதில் குடும்பத் தலைவர், குடும்ப அங்கத்தினர்கள் பெயரும், பிறந்த தேதியும் குறிப்பிடப்பட வேண்டும். ஒவ்வொருவர் பெயரிலுள்ள சொத்தின் மதிப்பு, சர்வே நம்பர், விஸ்தீரணம் ஆகியவைகளும் குறிப்பிடப்பட வேண்டும். கடன்கள் அனைத்தும் இதிலே இருக்க வேண்டும். வேறு கிராமத்தில் இருக்கும் சொத்துக்களும் இதேப் பட்டாப் புத்தகத்திலே தான் இடம் பெற வேண்டும். வீடு இல்லாதவர்கள், வாடகை வீடு அல்லது புறம்போக்கில் குடியிருப்பவர்களும் இதில் இடம் பெற வேண்டும். மேலும்பார்க்கும் தொழில் மற்றவையும் விலாசத்துடன் குறிப்பிடப்பட வேண்டும். அம்முறை அமுலுக்கு வந்தால் பினாமிதாரர்கள் ஒழிந்து விடுவார்கள். இலவச நிலம் பெற்று விற்றுவிட்டு மீண்டும் நிலம் தேடி அலைபவர்கள் இருக்க மாட்டார்கள். எந்தச் சான்றிதழும் பட்டாப் புத்தகத்தைப் பார்த்தே முடிவு செய்யலாம். இதனால் இலஞ்சம் ஒழியும். எனவேப் பட்டாப் புத்தக முறையை இந்த அரசு அமுல்படுத்த வேண்டும்.



1982 மார்ச் 5] [திரு. எஸ். என். இராமசாமி]

(இரவு 6.40)

இன்று பட்டினி கிடக்கும் ஏழைக் குழந்தைகளுக்கு இலவச உணவு வழங்கும் திட்டம் நல்ல திட்டம் என்றாலும், அந்தத் திட்டத்திற்கு ஒதுக்கப்படுகிற 100 கோடி ரூபாய் சரியான முறையிலே செயல்படுத்துவதற்கு அதிகாரிகள் தயாராக இருக்கிறார்களா என்பதை அரசு அவ்வப்போது கண்காணித்து இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தினால், ஏழை மக்கள் மகிழ்ச்சி அடைவார்கள் என்று தெரிவித்து வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

* திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, 1982-83 நிதிநிலை அறிக்கைமீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த ஆண்டு தமிழகம் எப்போதும் காணாத வறட்சி நிலையைக் கண்டபோது போர்க்கால நடவடிக்கைப் போல் துரித நடவடிக்கை எடுத்த இந்த அரசுக்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல இந்த வறட்சி நிலை ஏற்பட்ட காலத்திலும் உணவுப் பொருள்கள் விலை ஏற்றமடையாமல் பார்த்துக் கொண்டதற்காகவும் இந்த அரசைப் பாராட்டுகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே செம்மறி ஆடுகள் வளர்க்கிற கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கால்நடைகள் சுகாதார வசதியும், சிகிச்சையும் அளிக்கும் பொருட்டு 25 கால்நடை மருந்தகங்கள் துவங்க உள்ளதை உழவர்கள் வரவேற்கிறார்கள். சிறு பாசனத் திட்டத்திற்காக 2 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதை விவசாயிகள் மனநிறைவோடு பாராட்டுகிறார்கள். இந்த மாநிலத்தில் ஆறாவது திட்டம் மொத்த நிதி ஒதுக்கீடான 3,150 கோடியிலே மின்சாரத்திற்காக ஏறத்தாழ 1,023 கோடி ஒதுக்கப்பட்டிருப்பதை தொழில் துறையும், வேளாண் பெருமக்களும் மனநிறைவோடு பாராட்டுகிறார்கள். வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்ந்து கொண்டிருக்கிற நெசவாளிகள் துயர் துடைத்திட 27.82 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதை, முதலாளிகள் பிடியிலிருந்து விடுதலை பெறும் வழியாக நெசவாளிகள் எண்ணுகிறார்கள். சிறுதொழில்கள் உருவாவதற்கு நடப்பாண்டிலே 60 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதன் மூலம் வேலைவாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கிற இது ஒரு நல்ல திட்டம். பட்டுப் புழு வளர்ப்புத் தொழிலிலே ஈடுபடுகிற உழவர் பெருமக்களுக்கு சிறந்த முறையிலே பணியாற்ற செங்கல்பட்டு, பெரியார் மாவட்டங்களிலே அலுவலகம் திறப்பதற்குள்ள இந்தத் திட்டம் அந்தத் துறையிலே உள்ளவர்களுக்கு மிகவும் பயனுள்ள திட்டமாகும்.

[திரு ச. பாலகிருஷ்ணன்] [1982 மார்ச் 5

என்னுடைய தொகுதியிலே ஒரு சில திட்டங்களை ஏற்படுத்த இந்த அரசை வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே காலிங்கராயன் கால்வாய் பாசனம், கீழ்பவானி வாய்க்கால் பாசனம் ஏறத்தாழ முழுமையாக இருந்து வருகிறது. இந்தப் பகுதியிலே மக்கள் கரும்புச் சாகுபடி செய்கிறார்கள். அந்தக் கரும்பினை நீண்ட தூரத்திற்கு அறவை செய்வதற்காக எடுத்துச் செல்ல வேண்டியிருக்கிறது. அந்தப் பகுதியிலே கொடுமுடி ஒன்றியத்திலே இருக்கிற சிவகிரி நகரிலே ஒரு சர்க்கரை ஆலை அமைத்திட இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன். சிவகிரியிலே ஒரு கல்லூரி ஏற்படுத்தித் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். அவல்பூந்துறையிலே ஒழுங்குமுறை விற்பனை நிலையத்திற்கு உடனடியாக ஒரு அலுவலகம் அமைத்துக் கொடுக்கவும், நிலம் வாங்கி ஒரு கட்டிடம் கட்டவும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவல்பூந்துறையிலேயுள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கொடுமுடி நகரினுள் செல்ல வேண்டுமென்றால் புகை வண்டிப் பாதையைக் கடந்து செல்ல வேண்டியிருக்கிறது. அந்த நகருக்குள் சென்றுவிட்டால் புகை வண்டிக் கேட்டை அடைத்து விடுவார்கள். பிறகு உள்ளே செல்ல முடியாது என்ற நிலை இருக்கிறது. ஆகவே அந்தப் புகை வண்டிப் பாதையிலே ஒரு மேம்பாலத்தை அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்தப் பகுதியிலே மஞ்சள் அதிகமாக விளைந்து கொண்டிருக்கிறது. அந்தப் பகுதியிலே உள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் விளைவிக்கின்ற மஞ்சளுக்கு நல்ல மார்க்கெட்டை ஏற்படுத்தித் தருகிற வகையில் ஈரோட்டுப் பகுதியிலே மஞ்சள் சம்பந்தப்பட்ட தொழிற்சாலை ஒன்றை ஆரம்பித்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மின்னப்பாளையத்திலே நடுநிலைப் பள்ளி இருக்கிறது. அதை உயர் நிலைப் பள்ளியாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே மக்கள் இந்த வேண்டுகோளை நீண்ட நெடுநாட்களாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள், ஆகவே இதைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கொடுமுடி ஒன்றியத்திலே கொளத்துப்பாளையம் ஊராட்சி, கொம்பனை புதூரில் அரசு மருந்தகமும், கால்நடை மருந்தகமும் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே விளக்கேத்தி என்ற



1982 மார்ச் 5] [திரு ச. பாலகிருஷ்ணன்]

இடத்திலே ஒரு கால்நடை மருந்தகம் இருந்தது. என்ன காரணத்தினாலோ அந்த மருத்துவமனையை 4 ஆண்டுகளுக்கு முன்னாலேயே எடுத்துவிட்டார்கள். அந்தப் பகுதியிலே கால்நடைகளுக்குச் சிகிச்சை செய்ய வேண்டுமென்றால் நீண்ட தூரத்திற்குச் சென்றுவர வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே அவர்களுடைய தொல்லையைப் போக்குவதற்கு விளக்கேற்றி என்ற இடத்திலே அந்த மருத்துவ மனையை அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கொடுமுடிப் பகுதியிலே நெல், மஞ்சள் அதிகமாக விளைகிறது. அவற்றை விற்பனை செய்வதற்கு நீண்ட தூரம் எடுத்துச் செல்ல வேண்டியிருக்கிறது. அவற்றை அங்கேயே விற்பதற்கு ஏற்ற முறையிலே அங்கே ஒரு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தை ஏற்படுத்திக் கொடுத்து அந்த விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நல்ல நிலையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மொடக்குறிச்சி, அவல்பூந்துறை, அரச்சலூர், வடுகப்பட்டி பேரூராட்சிகளை உள்ளிட்டக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் அரசிடம் இருக்கிறது. அதை உடனடியாகச் செயல்படுத்த நடவடிக்கை எடுத்து அந்தப் பகுதி மக்களின் குடிநீர் வாட்டத்தைப் போக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சிவகிரி நகரத்திலே பல பேருந்துகள் வந்து கொண்டிருக்கின்றன. அங்கே வந்து செல்கின்ற பேருந்துகள் நிற்பதற்கும், மக்கள் தங்குவதற்கும் பேருந்து நிலையம் இல்லாமல் இருக்கிறது. ஆகவே அங்கே ஒரு பேருந்து நிலையத்தைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பெரியார் மாவட்டம் கோவை மாவட்டத்திலிருந்து பிரிந்ததற்கு பின்னால் அந்த மாவட்டத்திலே எந்தப் பெரிய தொழிலும் இல்லாமல் இருக்கிறது. படித்த இளைஞர்கள் வேலை தேடி வெளி மாவட்டங்களுக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. படித்த இளைஞர்களுக்கும், வேலையற்ற இளைஞர்களுக்கும், வேலை வாய்ப்பு கொடுக்கின்ற முறையிலே பெரியார் மாவட்டத்தைத் தொழில் துறையில் பின்தங்கிய மாவட்டம் என்று அறிவித்து தொழில்களைத் துவங்குவதற்கு வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது ஒன்றியங்களுக்கு ஒதுக்கப்படுகின்ற சிமிண்ட் போதாது. இதனால் வேலை காலதாமதமாகிறது. அதைப் போக்குகின்ற வகையிலே அந்தப் பகுதி மக்களின் தேவைக்கேற்ற அளவு சிமிண்ட் கிடைக்கச் செய்ய

[திரு. சு. பாலகிருஷ்ணன்] [1982 மார்ச் 5

ஒன்றியங்களுக்கும் கூடுதலாக சிமிண்ட் ஒதுக்கிக் கொடுக்க வேண்டுமென்று
கேட்டுக்கொண்டு, இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று முடிக்கிறேன்,
நன்றி. வணக்கம்.

(இரவு 6-50)

திரு. மு. அரங்கநாதன் : மாண்புமிகு பேரவையின் தலைவர் அவர்களே,
1982-83ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களைச்
சொல்வதற்கு வாய்ப்பளித்தத் தங்களுக்கு முதலில் என்னுடைய நன்றியைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த 1982-83 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை வருவதற்கு முன்னால்
ஆங்காங்கு நாட்டில் பல பகுதிகளில் சாராயக் கடைகளைத் திறந்த பிறகு
கள் சாராயத்தின் மூலம் நிறைய வருமானம் வரும் என்று எதிர்பார்த்
திருந்த நேரத்தில் இலட்சக்கணக்கான பணத்திற்கு லைசென்சிற்குப்
போனது. பர்மிட் வாங்க வேண்டுமென்றால் கள் குடிப்பவர்கள் 2 ரூபாயும்,
சாராயம் குடிப்பவர்கள் 5 ரூபாயும், அயல்நாட்டு மதுவகைகளை குடிப்பவர்கள்
25 ரூபாயும் கொடுக்க வேண்டும் என்று செய்ததன் மூலமாக நிறைய வருமானம்
வரும் என்று எதிர்பார்த்த காரணத்தால் இந்த நிதிநிலை அறிக்கையில்
வரிகள் இருக்காது என்று நினைத்திருந்தார்கள். ஆனால் அவர்களுக்கு
ஏமாற்றத்தை அளிக்கும் விதத்தில் 38 கோடி ரூபாய்க்குப் புதிய வரிகளை,
உயர்த்தி போடப்பட்ட வரிகளைப் பார்த்து ஏமாற்றம் அடைந்திருக்கிறார்கள்.
அப்படிப் போடப்பட்டுங்கூட பத்தும் பத்தாமலும் துண்டு விழும் பட்ஜெட்
டாக இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது.

இந்த வரிகளால் ஏழை எளிய சாதாரண மக்களுக்குப் பாதுகாப்பு
அளிக்கும் திட்டங்கள் அமைந்திருக்கின்றனவா என்றால், ஏழை எளியவர்
களையே பாதிக்கும் வரிகளாக இவைகள் அமைந்திருக்கின்றன. வசதி
படைத்தவர்களையும், பெரிய செல்வந்தர்களையும் எந்த விதத்திலேயும் இது
பாதிப்பதாகத் தெரியவில்லை.

பருத்தி நூலுக்கும், கலவைப் பருத்தி நூலுக்கும் உயர்த்தப்பட்டிருக்கும்
வரியானது பருத்தித் துணி அணிகின்ற அத்தனை பேரையும் பாதிக்கும்.
மோட்டார் வண்டிகளுக்குப் பயன்படுத்துகிற டயர்களுக்கும் டியூப்களுக்கும்
விற்பனை வரி உயர்த்தப்பட்டிருப்பது போக்கு வரத்துச் செலவைத்தான்
அதிகப்படுத்தும். இப்பொழுதே பெட்ரோல் விலையின் காரணமாகப் போக்கு
வரத்துச் செலவு அதிகமாக இருக்கிறது. பொருள் போக்குவரத்து லாரிகள்



1982 மார்ச் 5] [திரு. மு. அரங்கநாதன்]

மூலமாக ஆங்காங்கு சென்று கொண்டிருக்கின்றன. இப்பொழுது இப்படிப் பட்ட பொருட்களின்மேல் வரிகளை உயர்த்தினால் மற்றப் பொருட்களின் விலை கூடி மக்களைப் பாதிக்கும் அளவிற்கு நிலைமைகளை உண்டாக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒருமுனை விற்பனை வரியாக ஆக்க வேண்டுமென்று பலகாலும் வியா பாரிகள் கேட்டு வந்திருக்கிறார்கள். ஆனால் இப்போதுள்ள 4 சதவீத பலமுனை விற்பனை வரி 5 சதவீதமாக உயர்த்தப் போவது பொது மக்களைத் தான் பாதிக்கும் ; பொது மக்கள் தலையிலே அந்த வரிகள் விழுகின்ற அள விற்கு இந்த வரிவிதிப்பு இருக்கிறதே தவிர இந்த வரியால் ஏழை எளியவர் களின் குறைகள் தீர்வதாகத் தெரியவில்லை.

நாட்டிலே வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குகின்ற அளவிற்கு ஏதாவது முறை இருக்கிறதா என்றால், இல்லை. தொழிற்சாலைகள் அதிக மாக வருகின்ற நிலைமை இருக்கின்றதா என்று பார்த்தால் அதுவும் இல்லை. நீலகிரி மாவட்டம் சிறிய மாவட்டம். 5 இலட்சம் மக்கள் வசிக்கின்ற மாவட்டம். அதிலேயே 34,000 பேர்கள் வேலைத் தேடித்தரும் நிலையத் திற்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். ஆனால் வேலை தேடித் தரும் நிலையத்திற்கும் போகாதவர்கள் எத்தனையோ பேர்கள் வேலை வேலை என்று வெளியிலேக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு என்ன செய்யப் போகிறீர்கள் ? எப்பொழுது அவர்களுக்கு வேலை அளிக்கப் போகிறீர்கள் ? எப்பொழுது அவர்களது கண்ணீரைத் துடைக்கப் போகிறீர்கள் ? அந்தச் சிறு மாவட்டத்திலேயே 34,000 பேர்கள் வேலைக்காக காத்துக் கொண்டிருக்கி றார்கள் என்றால், தமிழகம் முழுவதும் எவ்வளவு பேர்கள் வேலை இல்லாமல் இருப்பார்கள் ? அவர்களுக்கெல்லாம் எந்த நேரத்திலே எந்த வேலைகளைத் தரப் போகிறீர்கள் ? புதிய தொழிற்சாலைகளைத் துவங்கி வேலை அளிக்கப் போகிறீர்களா என்பது அறிவிக்கப்படவில்லை.

நீலகிரி மாவட்டத்திலே முன்பு ஆண்டுக்கு ஒருமுறைதான் குதிரைப் பந்தயம் நடந்து வந்தது. ஆனால் இப்பொழுது கிட்டத்தட்ட தினசரி குதிரைப் பந்தயம் நடக்கிறது. அன்று திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் இந்தக் குதிரைப் பந்தயத்தையே தடை செய்ய வேண்டுமென்று சட்டம் இயற்றப்பட்டு அது வழக்குமன்றத்திலே இருக்கிறது. அந்த வழக்கை ஒரு முடிவிற்குக் கொண்டுவருவதற்கு கவனம் செலுத்தவில்லை என்றாலும், இப்பொழுது நீலகிரி மாவட்டத்தில் வருஷம் முழுவதும் ஏறத்தாழ 26 நாட்கள் ஜிம் கோர்ஸ் என்ற பெயரில் குதிரைப் பந்தயம் ஒரு விளையாட்டாக நடந்து

வருகிறது. ஹைதராபாத், பெங்களூர் போன்ற பல பகுதிகளில் நடந்தாலும் நீலகிரி, உதகையிலே குதிரைப் பந்தயத்திற்குப் பணத்தைக் கட்டிக் கொடுக்கின்ற முறை இருப்பதால், அங்குள்ள ஏழை எளிய மக்கள், தோட்டத் தொழிலாளர்கள், மற்றும் சிறு சிறு வியாபாரிகள் தினசரி குதிரைப் பந்தயத் திற்கு செல்வதை வழக்கமாகக் கொண்டு தங்களுடைய பொருளாதாரத்தை இன்னும் இழந்து கொண்டிருக்கிறார்கள். ஆகையால் ஆஃப் கோர்ஸ் பெட்டிங் என்ற பெயரில் நடக்கின்ற இந்தக் குதிரைப் பந்தயத்தைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று நீலகிரிவாழ் பொது மக்களின் சார்பாக நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நீலகிரியிலே தொழில் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் 12 உள்ளன. அவைகள் பெரும் நஷ்டத்தில் நடந்து வருகின்றன. ஒவ்வொரு தொழிற்சாலையும் கிட்டத்தட்ட இலட்சக்கணக்கில் நஷ்டத்தில் நடக்கின்றன. சிறுசிறு விவசாயிகள் தனியார்களிடம் தங்களுடைய பொருளாதாரத்தை இழக்க வேண்டாமென்று கருதி காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் தொழிற் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் துவக்கப்பட்டன. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே அது பேணிகாக்கப்பட்டு, இன்று பெரும் நஷ்டத்தில், இலட்சக்கணக்கான ரூபாய் நஷ்டத்தில் ஒவ்வொரு தொழிற் சாலையும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதனால் பொதுமக்களுக்குக் கூட்டுறவுத் துறையிலேயே நம்பிக்கையின்மை ஏற்படுமோ என்ற வகையிலே இந்தக் கூட்டுறவுத் தொழிற்சாலைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆங் காங்கு தேர்தல்கள் நடத்தி, மக்களை ஒன்று திரட்டி, அனுபவம் வாய்ந்தவர் களைக் கொண்ட ஒரு புதிய நிர்வாகத்தின்கீழ் தொழிற்சாலைகளை நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, இண்ட்கோ 1973-ல் அங்கு ஆரம்பிக்கப்பட்டது. அங்கு வாகனங்கள் ரிப்பேர் செய்து கொண்டு வந்தார்கள். கூட்டுறவுத் துறையிலே வேலை இழந்தவர்கள் 40 பேர்கள் அங்கு வேலை செய்து கொண்டிருந்தார்கள். அதில் ஒருசில நஷ்டங்கள் என்று காரணங்காட்டி, அது அடைக்கப்பட்டிருக் கிறது. ஆனால் கூட்டுறவுத் துறையில் வேறு இடங்களில் பல இலட்சங்கள் நஷ்டம் ஏற்பட்டும் அவை தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன. கூட்டுறவுத் துறை வாகனங்கள் எவ்வளவோ உள்ளன அங்கு. அத்தனை வாகனங்களும், கோவை, மேட்டுபாளையம் பகுதிகளுக்குத்தான் போகின்றன, பழுது பார்ப்பதற்கு. அவற்றை, இண்ட்கோவிடம் ஒப்படைத்தால், கூட்டுறவுத்



துறையும் சிறப்பாக இருக்கும். அந்த இண்ட்கோவில் 100 பேர்களுக்கு மேல் பணியில் இருப்பார்கள். அதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்திலே உயர்நிலைப் பள்ளிகளில், சில இடங்களில் ஆசிரியர்களே இல்லையென்ற நிலையிருக்கிறது. கோத்தகிரி உயர்நிலைப் பள்ளியிலே கடந்த ஆண்டு ஆங்கிலம், கணக்கு போன்ற பாடத் திட்டங்களுக்கு ஆசிரியர்களே இல்லை. அதேபோன்று ஆங்கரை, ஜூனர்மட்டம், நடுவட்டம் பகுதிகளில் உள்ள பள்ளிகளில் ஆசிரியர்கள் போதுமான அளவு இல்லை என்ற நிலை இருக்கின்றது. ஆகவே உயர்நிலைப்பள்ளிகளை மேல் நிலைப்பள்ளி களாக மாற்றினால் மட்டும் போதாது. ஆங்காங்கு போதுமான ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்திலே வீட்டு வசதி மிகமிகக் குறைவு. அதுபற்றி பல முறை இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. குடிசை மாற்று வாரியமும், வீட்டு வசதி வாரியமும் நீலகிரி மாவட்ட மக்களுக்குத் தெரியவே தெரியாது. ஒவ்வொரு மாவட்டத்திலும் அவை பணி புரிகின்றன என்பதைப் பத்திரிக்கைகளில் பார்த்துத் தெரிந்துகொள்ளக் கூடிய நிலையிலே தான் அந்தத் திட்டம் அங்கு செயல்படுகிறது. ஆகவே அங்கும் அந்த திட் டத்தை விஸ்தரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆசிரியர்களோ, என்.ஜி. வோக்களோ, அங்கு தங்குவதற்கு வீட்டு வசதி இல்லையென்ற நிலைமையிருக் நிலைமையிருக்கிறது: வீட்டு வாடகை மிகமிக உயர்ந்துள்ள நிலைமையிருக்கிறது. கிறது, அங்குள்ள சீதோஷ்ண நிலைமை காரணமாக, அந்நிலைமையிருக்கிறது. ஆகவே, அரசு அங்கு வீட்டு வசதி வாரியமும், குடிசை மாற்று வாரியமும் ஏற்படுத்தி அங்குள்ளவர்களின் வீட்டுப் பசியைத் தீர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த வருடம் ஆதி திராவிடர்களுக்கு அங்கு வீடு கட்ட எந்தவிதமான கடனும் கொடுக்கவில்லை. காரணம் கேட்டால், பணம் போதவில்லை என்ற பல்லவிதான் பாடுகிறார்கள். ஆகவே பாதியும், கால்பாகமும் கட்டப்பட்ட நிலையில் வீடுகள் உள்ளன. அதன் காரணமாக மழையிலும் காற்றிலும் அவைகள் பாதிக்கப்படுகின்றன. ஆகவே, வீடு கட்டக் கொடுக்கும் கடனை அதிகப்படுத்த வேண்டும். கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தில் ஒரு வீட்டிற்கு ரூபாய் 4,000 கொடுக்கப்படுகிறது. அந்த ரூபாய் 4,000 போதுமானதாக இல்லை. ஏனென்றால் மணல், செங்கல் போன்றவைகள் ஊட்டிக்குவர வேண்டுமென்றால், வெளிப் பகுதிகளிலிருந்துதான் வர வேண்டும். அதனால்,

போக்குவரத்துச் செலவு அதிகமாகிறது. ஆகவே, ரூபாய் 4,000 என்று இருப்பதை ரூபாய் 6,000 என்று உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நீலகிரியிலே, யானைக் கொம்பை, குதிரைக் கொம்பை, சடயக் கொம்பை போன்ற பள்ளத்தாக்கு பகுதிகளில், குரும்பர்கள், இருளர்கள் வசிக்கிறார்கள். அவர்கள் மிகவும் மோசமான, செங்குத்தான பள்ளத்தாக்குகளில் வாழ்கிறார்கள். அவர்களுக்கு மருத்துவ வசதி கிடையாது. நோயாளிகளைத் தோளில் தூக்கிக் கொண்டு போகிற நிலைமைதான் இருக்கிறது. ஆகவே, அவர்கள் வசிக்கிற பகுதிகளுக்குப் பாதை வசதி செய்துதர வேண்டும். மருத்துவ வசதி செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(இரவு 7-00)

அடுத்து, சுற்றுலா நலனைப் பொறுத்த வரையில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சுற்றுலா என்றால் உதகை மட்டுமல்ல, நீலகிரி மாவட்டம் முழுவதுமே சுற்றுலாவுக்குப் பொருத்தமான இடம் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் அந்த மாவட்டத்திற்கு வந்து தங்குகின்றவர்களுக்கு தங்கும் விடுதிகள் போதுமான அளவுக்கு இருக்கின்றதா என்றால் இல்லை. கோத்தகிரி, குன்னூர், முதுமலை, கூடலூர் பகுதியிலே தங்கும் விடுதிகள் இல்லாத காரணத்தால், அங்கே சுற்றுலா நிமித்தம் வந்து போகின்ற மக்கள் தங்காமல் போய்விடுகிறார்கள். அவர்கள் அங்கே தங்கிப் போவதற்காக சுற்றுலா விடுதிகள் கட்டித்தரப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். முக்கியமாக குன்னூர், கோத்தகிரி பகுதிகள் இயற்கை காட்சிகள் நிறைந்த பகுதியாக இருக்கின்ற காரணத்தால் அங்கே தங்கும் விடுதிகளைக் கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக நீலகிரி இரயிலைப்பற்றி ஒரு வார்த்தை சொல்ல ஆசைப்படுகிறேன். அந்த ரயில் 100 ஆண்டுகளாக ஓடிக்கொண்டிருக்கிறது. அது அடிக்கடி நிற்பதும் ஓடுவதுமாக இருந்தது. இதை உயிரோட்டமாக ஓடுகின்ற அளவுக்கு ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை நிறுத்தி விடுவதாக இருந்தது. அப்போது ஆட்சியில் இருந்த கலைஞர் அவர்கள் அந்த ரயிலை நாங்களே எடுத்து நடத்துகிறோம் என்று சொன்னார். அதேபோல சென்ற ஆண்டு நிறுத்துவதாக இருந்தார்கள். அங்கே உள்ள மக்கள் எதிர்த்ததன் காரணமாக, மீண்டும் ஓடிக் கொண்டிருக்கிறது. தற்போது அங்கே ஒரு விபத்து ஏற்பட்டு,



அதன் காரணமாக அந்த இரயில் ஓடுமா ஓடாதா என்ற நிலை இருக்கிறது. அது மத்திய சர்க்கார் விவகாரமாக இருந்தாலும், இதை நமது அரசு கவனித்து உதவி செய்ய வேண்டும். இந்தியாவிலேயே ஒரு சிறந்த ரயில் பாதை அதுதான் என்பது நமது அவை முன்னவர் அவர்களுக்குத் தெரியும். அவர் ஒரு 10, 20 ஆண்டுகளுக்கு அந்த ரயிலிலே வந்துள்ளார். அந்தப் பாதையிலே 16 சுரங்கங்கள் உள்ளன. 250 அழகான பாலங்கள் உள்ளன, 100 ஆண்டுகள் ஆகியும் அது சேதமாகாமல் இருக்கின்றது.

அந்த இன்ஜினை நவீனப்படுத்தி விட்டால், சிறந்த போக்குவரத்துச் சாதனமாக இருக்கும். பஸ்கள் அதிகமாக இல்லாத காரணத்தால், அந்த ரயில் பயணிகளுக்கு ஒரு சலுகையாக அமைந்து இருக்கின்றது. நேரம் அதிகமாகிறதே ஒழிய, அதற்கு 2½ மணி நேரம் ஆகின்றது. பஸ்சிலே ஒரு மணி நேரம் ஆகின்றது வேறு காரணம் இல்லை. ஆகவே மத்திய அரசிடம் வாதாடி அதை நவீனப்படுத்தித் தருவதற்கு நடவடிக்கை எடுக்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. ந. சிவஞானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1982-83ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைமீது காங்கிரஸ் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

நம்முடைய மாண்புமிகு நாவலர் அவர்கள் தங்களுடைய நிதிநிலை அறிக்கையில் 100 கோடி திட்டத்தில் ஏழைகளுக்கு நல்ல திட்டத்தை ஏற்படுத்தி இருக்கிறார்கள். அதிலே சில மாற்றங்களைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வளர்ந்து வரும் குழந்தைகள் அத்தனை பேர்களையும், அயல் நாடுகளில் இருப்பதைப் போல, பள்ளிகளிலேயே ஹாஸ்டல் ஏற்படுத்தி, அவர்களுக்கு எல்லாவிதமான சலுகைகளையும் அளிக்கும் பொறுப்பை ஏற்று உணவு கல்வி வசதி போன்றவைகளை அரசே அளிக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, மின்சாரத்தைப் பொறுத்த வரையில், நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் மின்சாரம் எப்போது நிற்குமோ என்ற நிலையில் இருக்கிறோம் என்று கருதுகிறோம். அதனால்தான் இயற்கையிலிருந்து குறிப்பாகக் கடலிலிருந்தும், காற்றிலிருந்தும், குப்பையிலிருந்தும் இந்த மின்சாரத்தை எடுப்பதற்கு இந்த அரசு முனைப்பாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள், மேதகு ஆளுநர் அவர்கள் உரையில் தமிழ்நாட்டு மக்கள் கவலைப்படத்தக்க செய்தி குறிப்பிடப்

[திரு. ந. சிவஞானம்] [1982 மார்ச் 5

பட்டிருக்கிறது. 1924ஆம் ஆண்டு காவிரி நீர் ஒப்பந்தம், இந்த 2 மாநிலங்களில் நடைபெறாத சூழ்நிலையை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அதை இந்த அரசு மத்திய அரசுக்கு இந்தியப் பேரரசுக்கு நம்முடைய சூழ்நிலையை விளக்கிக் கூறி தமிழ்நாட்டு நலன் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை கூறிக் கொள்கிறேன்.

இன்றைக்கு ஆறுகளை ஒன்றாக இணைப்பதற்கு, குறிப்பாக கோதாவரி, கிருஷ்ணா, பெண்ணையாறு போன்றவைகளைக் காவிரியுடன் இணைத்து, தமிழ்நாட்டு மக்களுக்கு நல்ல பல ஆக்கப்பூர்வமான காரியங்களைச் செய்து கொடுக்க, நதிநீர் வாரியம் ஒன்றை இந்தியப் பேரரசு ஏற்படுத்துவதற்கு இந்த அரசு வலியுறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தது, சென்றாண்டு ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளை எல்லாம் அரசே தன்பொறுப்பில் எடுத்துக் கொண்டது. அதன் காரணமாக ஆசிரியர்கள் சரியாக அந்தப் பள்ளிகளில் போய்ச் சேரவில்லை; அதனால் கல்வியின் தரம் மிகமிகக் குறைவாக இருக்கின்றது. அதற்கு நான் ஒரு ஆலோசனை சொல்ல விரும்புகிறேன். ஒன்றியக் குழுவைக் கண்காணிப்புக் குழுவாக நிச்சயம் ஏற்படுத்த வேண்டும். அப்படி ஏற்படுத்தப்பட்டால் தமிழ்நாட்டின் தொடக்கக் கல்வி காப்பாற்றப்படும். இல்லையென்றால் தமிழ் நாட்டின் அதன் நிலைமை மிகவும் மோசமான சூழ்நிலைக்குப் போய்விடும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு நம்முடைய நாவலர் அவர்கள் சென்ற கூட்டத் தொடரில் கூறியிருக்கிறார்கள். இந்த சட்டமன்ற மண்டபம் புதிய இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு புதியமுறையில் நவீன வசதிகளோடு கட்டப்படும் என்றும், தலைமைச் செயலக வளாகத்திற்குள்ளேயே இருக்கும் என்று கூறியிருக்கிறார்கள். ஆனால் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலோ, அல்லது நம்முடைய ஆளுநர் உரையிலேயோ அதைப்பற்றிய குறிப்புகள் இல்லை. ஆகவே ஒரு சந்தேகம் ஏற்படுகிறது. இந்த நாட்டின் தலைநகரம் தஞ்சைக்கும் திருச்சிக்கும் இடையேயுள்ள ஒரு இடத்திற்குச் செல்லும் என்று மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் பொதுக் கூட்டங்களில் பேசுகின்றபோது சொல்லிக் கொண்டு வருகிறார்கள். அதைப் போலவே முதலமைச்சர் அவர்களும் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். ஆகவே அந்த இடத்தில் ஒருவேளை அமைக்கப்பட்டு விடுமோ என்ற சந்தேகம் வருகின்றது. ஆகவே அதைத் தெளிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1982 மார்ச் 5] [திரு. ந. சிவஞானம்]

அன்னை இந்திரா காந்தி அவர்களின் 20-அம்சத் திட்டத்தை இந்த அரசு நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். இந்த ஆண்டு உற்பத்தி ஆண்டாக இருப்பதால் அதை இந்த ஆட்சி நல்லமுறையில் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கையில் வரிப் பிரேரணைகள் சொல்லி இருக்கிறார்கள். குறிப்பாக பட்டுத் தொழிலாளர்களை இந்த வரி பாதிப்பு ஏற்படுத்தும் என்பதால் அதைக் கைவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் உள்ள போக்குவரத்துக் கழகங்களுக்கு தமிழ் நாட்டிற்காக சேவை செய்தவர்களின் பெயர்கள் வைக்கப்பட்டுள்ளன. ஆனால் தமிழ் நாட்டின் பொற்காலத் தலைவராக விளங்கிய காமராஜர் அவர்களின் பெயர் எந்தப் போக்குவரத்துக் கழகத்திற்கும் வைக்கவில்லை. ஆகவே, ஏதாவது ஒரு போக்குவரத்துக் கழகத்திற்கு காமராஜர் போக்குவரத்துக் கழகம் என்று பெயர் வைக்க வேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீர்-வடிகால் வாரியத்தைப் பொறுத்த வரையில் நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது. இருப்பினும் மத்திய அரசு தரும் மானியங்கள் சரியாகச் செலவு செய்யப்படவில்லை என்கிற குறை இருக்கிறது. அதற்குக் காரணம் ரிக்குகள் பணிமனைகளில் ஆழ்துளைக் கிணறுகள் போடுவதற்கு தேவையான இல்லை என்று கூறப்படுகிறது. ஆகவே, அந்தப் பணிகள் சரிவர செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திருவோணம் தொகுதியிலுள்ள சில பிரச்சினைகள்பற்றி எடுத்துக் கூற விரும்புகிறேன். வெள்ளக் காலத்தில் கடலில் போய் கலந்து வீணாகும் தண்ணீரைத் தேக்கி அங்கே வறட்சியால் வாடும் பகுதிகளுக்கு அளிக்கும் திட்டத்தை அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். நஞ்சநாடு ஏரி, வழுதாம்பட்டு ஏரி, மாமண்டூர் ஏரி போன்றவைகளில் வீணாகிப் போகும் தண்ணீரைத் தேக்கி அதை நீர்ப்பாசனத்திற்கு உபயோகிக்க வழிவகை செய்ய வேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். மேலும் அந்தப் பகுதிகளில் உள்ள ஏரிகளை ஆழப்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். கூரைப் பட்டில் ஒரு காகித ஆலை அமைக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். மேல்வழூரில் ஒரு கால்நடை ஆஸ்பத்திரியும், ஒரத்தநாட்டில் இரண்டாம் வகுப்பு நீதிமன்றம் ஒன்றையும், ஏற்படுத்தித் தர வேண்டு

[திரு. ந. சிவஞானம்] [1982 மார்ச் 5

என்று கேட்டு திருவோணம் தொகுதியில் சர்க்கரை ஆலை ஒன்றை நிறுவி
அந்தப் பகுதி மக்களுடைய வாழ்க்கையை மேம்படச் செய்ய வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன். மேலும், ஒரத்தநாட்டில் ஒரு தொழில் பேட்டையும்
ஏற்படுத்த வேண்டும். இந்த நிதிநிலை அறிக்கை ஏழை எளியவர்களுக்கு
ஏமாற்றத்தை அளித்துள்ளது. யானைப் பசிக்கு சோளப்பொறி போட்டது
போல் இருக்கிறது என்று கூறி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. சா. முனிரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களால் கொண்டு வரப்பட்டு
இருக்கிற 1982-83ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை வரவேற்று நான்
சார்ந்திருக்கிற கும்மிடிப்பூண்டி தொகுதியின் சார்பாக சில கருத்துக்களைச்
சொல்ல முன்வருகிறேன்.

வெறும் வரவு-செலவு திட்டங்களை மட்டும்தான் தருவது நமது நோக்கம்
என்று இல்லாமல், ஒரு தொலை நோக்குப் பார்வையில் இந்த அறிக்கையை
அமைத்து இருப்பது உள்ளபடியே பாராட்டத்தக்கதாகும் என்பதை நான் தெரி
வித்துக் கொள்கிறேன். கிராமப்புற பொருளாதாரத்தை நம்பித்தான் இந்த
இந்தியத் திருநாடு இருக்கிறது என்பதை நாம் நன்றாக அறிவோம். வறுமைக்
கோட்டின் எல்லைக்குள்ளே, அல்லது எல்லைக்குக் கீழ் வாழும் மக்களுக்கு
உதவி செய்யவும், அவர்கள் வாழ்வு முன்னேற்றம் அடையச் செய்யவும் என்கிற
வகையில் நமது அரசு தொடர்ந்து செயலாற்றி வருவதை நான் வரவேற்கிறேன்.

இல்லாதவர்களுக்கு சத்துணவு அளிக்கவும், பட்டினியால் வாடும் குழந்
தைகளுக்கு சத்துணவு அளிக்கவும் அரசு திட்டத்தை அறிவித்துள்ளதை நான்
வரவேற்கிறேன்.

(இரவு 7-10)

1982 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் இந்தத் திட்டம் நடைமுறைப்
படுத்தப்பட இருக்கிறது என்பது மகிழ்ச்சி அளிக்கக்கூடிய ஒன்றாகும்.
இந்தத் திட்டத்திற்கு 100 கோடி ரூபாய் செலவு என்பது வரவேற்கத்தக்க
ஒன்று என்பதை இந்த நேரத்திலே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

ஒருவேளை சாப்பாட்டிற்கும் வழியில்லாமல் வாழ்கின்ற குழந்தைகள்,
குறிப்பாக கிராமப்புறங்களில் இருக்கிற விவசாயத் தொழிலாளர்களுடைய
குழந்தைகள் இந்தத் திட்டத்தினால் நிச்சயமாக பயனடைவார்கள் என்பதில்
சந்தேகமில்லை. உழுது உழுது ஓடாகி இருக்கிற அந்த மக்கள் இந்தத்



1982 மார்ச் 5] (திரு. இரா. சா. முனிரத்தினம்)

திட்டத்தை பெரிதும் வரவேற்கின்றார்கள். கால் வயிற்றுக் கஞ்சிக்கும்
வழியில்லாமல் வாழ்கின்ற மக்கள் இந்தத் திட்டத்தை வரவேற்று வாழ்த்து
கிறார்கள் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல இன்றைக்கு விதவைகள், முதியோர்கள், உடல் ஊனமுற்ற
வர்கள் ஆகியோருக்குத் தரப்படும் உதவித் தொகையை 25 ரூபாயிலிருந்து
35 ரூபாயாக உயர்த்தியிருப்பதை இந்த நேரத்தில் நான் வரவேற்கக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

அதைப்போன்று 45 வயதுக்கு மேற்பட்ட உடல் ஊனமுற்றவர்களுக்கு
உதவித் தொகை வழங்கப்படும் என்று தற்போது இருக்கிற விதிமுறைகளைத்
தளர்த்தி உடல் ஊனமுற்றவர்கள் 10 வயது உடையவர்களாக இருந்தாலும்,
வயது வரம்பைப் பார்க்காமல் அனைவருக்கும் இந்த உதவித் தொகையை
வழங்க அரசு மறுபரிசிலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல இன்றைக்கு நம்முடைய அரசு தொழில் வளர்ச்சியில் சிறந்த
அக்கறை காட்டி வருவதை நான் பாராட்டுகிறேன். நம்முடைய தமிழ்
நாட்டில் 6 வட்டங்களை பின்தங்கிய வட்டங்களாக அறிவித்திருப்பதை வர
வேற்கிறேன்.

வெளிநாடுகளில் இருக்கிற இந்திய மக்களிடம் குவிந்திருக்கிற மூலதனத்
தைத் திரட்டி தொழில் துறையில் மேம்பாடு செய்ய தமிழ்நாடு தொழில் மேம்
பாட்டுக் கழகத்தில் தனிப்பிரிவு தொடங்க இருப்பதை வரவேற்கிறேன்.

என்னுடைய கும்மிடிப்பூண்டி தொகுதியில் ஒரு "தொழில்கூடம்" ஏற்பட
இருப்பதை அறிந்து, என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நான் இந்த
அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல திருத்தணியில் 1,250 டன் கரும்பு பிழியும் சர்க்கரை ஆலை
தொடங்க உரிமம் வழங்க வேண்டுமென்று நம்முடைய அரசு மத்திய அரசைக்
கேட்டிருப்பது அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். செங்கற்பட்டு மாவட்டக்
கரும்பு உற்பத்தியாளர்கள் இதைப் பெரிதும் வரவேற்கிறார்கள். சர்க்கரை
ஆலை தொடங்கும் உரிமம் எப்போது வரும் என்று எதிர்பார்த்துக் கொண்
டிருக்கிறார்கள். ஆகவே, நம்முடைய அரசு மத்திய அரசை வற்புறுத்தி
சீக்கிரத்தில் அங்கே அந்த சர்க்கரை ஆலையை அமைக்க ஏற்பாடு செய்ய
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(திரு. இரா. சா. முனிரத்தினம்) [1982 மார்ச் 5

அதைப்போன்று இன்றைக்கு கிராமப்புறங்களிலே தன்னிறைவுத் திட்டத்தை நம்முடைய அரசு வெற்றிகரமாக நடத்தி வருகிறது. இந்தத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் இன்றைக்குக் கிராமங்கள் நகர்ப்புறங்கள் போல் காட்சி அளிக்கின்றன. அப்படிப்பட்ட இந்த நல்ல திட்டத்தை வசதியற்ற நகராட்சிகளுக்கும் விஸ்தரிக்கப் போகிறோம் என்பதை அறிந்து நகர மக்கள் எல்லாம் மகிழ்ச்சியடைகிறார்கள், இந்தத் திட்டத்தை வரவேற்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக 8,830 குடும்பங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தை இந்த நிதிநிலை அறிக்கையிலே அறிவித்திருக்கிறார்கள். இன்றையதினம் கும்மிடிப்பூண்டி தொகுதியில் தொழில்கூடம் அமைக்கும் திட்டம் இருப்பதால், அந்தத் திட்டத்தை அங்கே செயல்படுத்தும்போது அங்கே பணியாற்றும் தொழிலாளர்களுக்கும் வீட்டு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்றும், இந்த வீட்டுவசதித் திட்டத்தை அங்கே செயல்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, அடுத்த நிதியாண்டிலிருந்து பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் உடல் நிலையைப் பரிசோதனை செய்யும் முற்போக்கானத் திட்டத்தை நான் வரவேற்கிறேன்.

நான் சார்ந்திருக்கிற கும்மிடிப்பூண்டி தொகுதியில் இருக்கிற பாதிக் கிராமங்களில் பணி புரிகிறவர்களுக்கு இன்றைக்கு நகர ஈட்டுப்படி, வீட்டு வாடகைப்படி கிடைக்கிறது; பாதி கிராமங்களுக்குக் கிடைப்பதில்லை. அப்படி இருக்கிறபோது, பள்ளி ஆசிரியர்களை மாற்றும்போது, இந்த படிகள் கிடைக்காத இடத்திற்குச் செல்ல ஆசிரியர்கள் தயக்கம் காட்டுகிறார்கள், அதிலே பல சிரமங்கள் இருக்கின்றன. அதையெல்லாம் பரிசீலனை செய்து செங்கற்பட்டு மாவட்டம் முழுவதற்கும் நகர ஈட்டுப்படி, வீட்டு வாடகைப்படி ஆகியவைகளைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல திருவள்ளூர், கும்மிடிப்பூண்டி ஆகிய இடங்களை மையமாகக் கொண்டு ஒரு கல்லூரியை அமைக்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல பெரியபாளையம் என்ற கிராமத்தில் பவானி அம்மன் கோவில் இருக்கிறது. அந்தக் கோவிலுக்கு சென்னை நகரில் இருந்து சுமார் 10 இலட்சம் பக்தர்கள் வருகிறார்கள். அத்தகைய ஒரு முக்கிய இட-



1982 மார்ச் 5] [திரு. இரா. சா. முனிரத்தினம்]

மாக அந்தக் கிராமம் இருக்கிறது. அந்தக் கோவிலுக்குச் செல்வதற்கு மழைக் காலத்தில் முடியாமல் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். அங்கே ஒரு பாலம் கட்டினால் இந்தக் குறை தீரும். அந்தப் பாலம் இல்லாத காரணத்தால், மழைக் காலத்தில் இந்தப் பக்கம் இருக்கிற மக்கள் அந்தப் பக்கம் செல்ல முடியாத நிலை ஏற்படுகிறது. அதனால் கோவிலுக்கு வருகிற வருமானம் கிடைக்காமல் போகிற சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே நம்முடைய அரசு அந்த பெரிய பாளையம் கிராமத்தில் ஒரு பாலத்தை உடனடியாகக் கட்டுவதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று, என்னுடைய தொகுதி மக்களின் சார்பாகவும் வரவேற்று, என்னுடைய உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. எம். பி. இரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் அளிக்கப்பட்டிருக்கின்ற 1982-83ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையினை வரவேற்று நான் ஒரு சில கருத்துக்களைக் கூற விழைகிறேன். பாமர மக்களும், ஏழை எளிய மக்களும், கிராமப்புறங்களில் வாழக்கூடிய மக்களும் பயனடைகின்ற வகையிலே இந்த நிதிநிலை அறிக்கை அமைந்திருப்பதை நான் பாராட்டுகிறேன்.

தமிழக அரசு மக்களுக்கு ஆற்ற வேண்டிய பணிகளைச் செவ்வனே செய்து வருகின்ற இந்தத் தருணத்திலே மத்திய அரசானது அதிகாரங்களையும், பொருளாதார உதவிகளையும் அதிகமான அளவிற்கு அளிக்க வேண்டும் என்று கோருகிறேன். மாநில அரசுகளுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கின்ற இந்தத் தருணத்திலே மின் நிலையங்களும், மின் வாரியமும் ஒரே துறையின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும் என்று மத்திய அரசு முடிவு செய்திருப்பதாக மத்திய அரசின் எரிசக்தித் துறையின் செயலாளர் அவர்கள் அறிவித்திருப்பதானது மாநில அரசுகளுடைய அதிகாரங்களைப் பறிப்பது போலவும் அதன் மூலம் நாம் உரிமைகளை இழப்பது போன்றதுமான நிலைமையை மத்திய அரசு உருவாக்கக் கூடாது என்று தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய சூழ்நிலையிலே மின் உற்பத்தியிலும் மின் இணைப்புக் கொடுப்பதிலும் தமிழக அரசானது சிறந்த சாதனையைச் செய்துள்ளது. குறிப்பாக அடுத்த நிதியாண்டிற்கு மின் உற்பத்தி செய்வதற்காக ரூபாய் 220 கோடி ஒதுக்கியும் அடுத்த நிதியாண்டிலே 30,000 வேளாண்மை விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு கொடுப்பதற்காக இலக்கிட்டு இருப்பதையும் நான் வரவேற்கிறேன்.

[திரு. எம். பி. இரத்தினம்] [1982 மார்ச் 5

அடுத்து ஆதி திராவிடர் காலனிகளுக்கு மின் வசதி அளிக்க ஏற்பாடு செய்து அவ்வாறு மின் வசதி பெறாதது எதுவுமே இல்லை என்ற அளவிலே இந்த அரசு சாதனையைப் புரிந்து கொண்டிருக்கின்றது. தமிழகத்தில் மொத்தம் உள்ள கிராமங்கள், குக்கிராமங்கள் அனைத்திற்கும் ஏறக்குறைய 95 விழுக்காடு மின் வசதி அளித்திருப்பது ஒரு இமாலய சாதனையாகும். என்னுடைய தொகுதியைப் பொறுத்த மட்டிலும் மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒருசிலவற்றைக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனைமலைப் பேரூராட்சியை மையமாக வைத்துக் கொண்டு அந்த ஆனமலைப் பேரூராட்சியில் ஒரு சப் ஸ்டேஷன் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று ஒரு வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். பொள்ளாச் சியிலிருந்து ஏறக்குறைய 30 கிலோ மீட்டர் அளவுக்கு மின் கம்பிகள் செல்கின்ற காரணத்தால் மின் அழுத்தமானது கோள எல்லை ஓரத்திலே சரிவர கிடைக் காததால் விவசாயிகள் அவதிப்படுகின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்ற காரணத் தால் அதைத் தவிர்க்கின்ற வகையிலே ஆனைமலைப் பேரூராட்சியில் ஒரு சப் ஸ்டேஷன் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்ற வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, 150 அடி தூரத்திற்கு ஒரு மின் இணைப்பு கொடுக்கலாம் என்று இருந்தது இப்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. ஆகவே அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தளர்த்தினால் விவசாயப் பெரு மக்களுக்கு ஏதுவாக இருக்கும் என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக கல்வித் துறையைப் பொறுத்தமட்டில் இந்த அரசானது மிகவும் முக்கியத்துவம் அளித்துச் செய்து வருவதை நான் பாராட்டுகிறேன். ஆசிரியர் பதவிகளைப் பொறுத்தவரையிலே ஆயிரம் இடைநிலை ஆசிரியர் பதவிகளை ஏற்படுத்தியிருப்பது படித்துவிட்டு வேலையற்று இருக்கின்ற ஆசிரியர்களுக்கு வசதியாக இருக்கும் என்று தெரிவித்து என்னுடைய பகுதியில் குறிப்பாக பொள்ளாச்சி மேற்குப் பகுதியில் உள்ள ஒரு கிராமத்திலே வருகின்ற ஆண்டு ஓர் உயர்நிலைப் பள்ளியினை ஏற்படுத்தி அந்தப் பகுதியில் இருக்கும் கிராமங்களுக்கும் அங்கே வாழ்கின்ற மழலைச் செல்வங்களுக்கும் பயன்படுகின்ற வகையிலே செய்து கொடுக்க வேண்டும் என்று இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1982 மார்ச் 5] [திரு. எம். பி. இரத்தினம்]

(இரவு 7.20)

அடுத்தபடியாகப் பெரும் பாசனத் திட்டங்களையும் நடுத்தர பாசன திட்டங்களையும் செயல்படுத்த ரூபாய் 22.23 கோடி ஒதுக்கியிருப்பதை நான் மனதார வரவேற்கிறேன். அதேபோல் அடுத்த நிதியாண்டில் பெரியார் வவ்நைக் கால்வாயை நவீனப்படுத்துவதற்காக ரூபாய் 10 கோடி ஒதுக்கி யிருப்பதை வரவேற்று பாராட்டுகிறேன். இந்த சமயத்தில் என்னுடைய பகுதியில் இருக்கக்கூடிய சில இடங்களில் பி.ஏ.பி. பாசன வசதி இருக்கிறது. என்னுடைய பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதியில் இன்னும் பி.ஏ.பி. பாசன வசதி அளிக்கப்படாமல் 3 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் வீணாகக் கிடக்கின்றன. அவைகளுக்கு உடனடியாக அந்த வசதியைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக தமிழக அரசு தன்னுடைய தலையாய கொள்கையாக வேளாண்மைத் துறைக்கு—அதன் மேம்பாட்டுக்கு முன் உரிமை அளித்து பல திட்டங்களைக் கொண்டு வந்திருப்பதை நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். விவசாயிகளின் அத்தியாவசியத் தேவைக்காக, விதைகள் உற்பத்திக்காக அடுத்த நிதியாண்டில் ரூபாய் 80 இலட்சம் ஒதுக்கியிருப்பதை நான் மனதார வரவேற்கிறேன். அதேபோல விதைகளைப் பதப்படுத்தும் பணிகளுக்காக ரூபாய் 60 இலட்சம் செலவில் புதிய பிரிவுகளை 3 இடங்களில் ஏற்படுத்தியிருப்பதைப் பாராட்டுவதோடு, விவசாயிகளுக்கு இது மிகவும் நன்மையைப் பயக்கும் என்பதில் எனக்கு எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியைப் பெருக்குவதற்கும், தென்னை வளர்ப்பு மும்முரத் திட்டம் ஒன்றைச் செயல்படத் துவங்கியிருப்ப தற்கும் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிலையில் என் தொகுதி சார்பாக சில கருத்துக்களைச் சொல்லவிரும்புகிறேன். பொதுவாக என்னுடைய பொள்ளாச்சிப் பகுதியில் அதன் தட்பவெப்ப சூழ் நிலை காரணத்தால் பல ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் தென்னை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. ஆகவே, அந்தப் பகுதியில் தென்னை ஆராய்ச்சிப் பண்ணை ஒன்றை அமைக்கவும் இந்த அரசு முயல வேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல கால்நடை மருத்துவ மனைகளுக்கு என்ற வகையில் இந்த 1982-83வது ஆண்டிலே ஐந்து மருத்துவமனைகளுக்குக் கட்டிடங்கள் கட்டு வதற்காகவும், புதிதாக 25 கால்நடை மருந்தகங்கள் தொடங்கவிருப்பதற்

காகவும் நான் இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படியிருக்கிற நிலையில், என்னுடைய தொகுதியில் ஆனைமலையில் அல்லது பெருபோதில் என்ற இடத்தில் கால்நடை மருந்தகம் ஒன்றை ஏற்படுத்தித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழில் வளர்ச்சியில் அதிக அக்கறைக் கொண்டுள்ள இந்த அரசு நம் மாநிலத்தில் 5 இடங்களில் புதிய தொழில் தொகுதிகள் உருவாக்கப்படும் என்று கூறியிருப்பதற்கும், அதற்கென 6 வட்டங்களை பின்தங்கிய வட்டங்கள் என அறிவித்து, அதற்கான சலுகைகளைப்பெற்றுத் தருவதற்காகவும், இந்த அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழகத்தில் இந்த 1982-83 ஆம் ஆண்டில் அமைக்கப்பட இருக்கிற தொழில் வளர்ச்சி நிலையங்களிலே பொள்ளாச்சிப் பகுதியில் ஒரு தொழிற்பேட்டை அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்தப் பகுதியில் ஒரு தொழிற்பேட்டை அமையுமானால், தொழில்களுக்குத் தேவையான மூலப் பொருட்களைக் கொண்டு வருவதற்கு மிக வசதியான இடமாக இருக்[illegible]ற காரணத்தாலும், அந்தத் தொழில் மையத்தை அமைப்பதன்மூலம் தமிழ்நாட்டின் மான்செஸ்டர் இன்னும் அதிக அளவில் வளர்ச்சியடைய அது உதவும் என்ற வகையிலும், இருக்கும் என்ற காரணத்தால் தொழிற்பேட்டை அமைக்கும்போது இதனை நினைவு கூர்ந்துக் கொள்ள வேண்டும் என்று அரசை நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்ததாக, கரும்பஞ்சக்கையிலிருந்து, செய்திதாள், எழுதும்தாள், ஆகியவற்றை தோற்றுவிக்க சுமார் 190 கோடி ரூபாய் செலவில் ஒரு திட்டம் நிறைவேற்ற இருப்பதற்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்று திரு. நா. சுந்தரராஜ் பேச அழைக்கப் பெற்றார்.)

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையின் மீது காங்கிரஸ் கட்சியின் சார்பிலே ஒருசில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். சென்ற ஆண்டு 1981-82 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின்கீழ் வரவு 1,128.27 கோடி ரூபாய் என்றும், செலவு 1,137.84 கோடி ரூபாய் என்றும் சொல்லப்பட்டது. அரசாங்கம் அதிலே வரி. விதிப்பு வகையிலே 20 கோடி என்று எடுத்துக் கொண்டால், மொத்தம் பற்றாக்குறை 102 கோடி.





1982-83 ஆம் ஆண்டுக்கான வரவு ரூபாய் 1,569.49 கோடி. செலவு ரூபாய் 1,370.04 கோடி, வரிவகைகளில் 38 கோடி ரூபாய் துண்டு விழுகிற தொகை ரூ. 20.44 கோடி என்ற வகையில் நிதி அமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். சென்ற ஆண்டைவிட இன்று 100 சதவிகிதம் அளவிற்குக் கூடுதலாக வரிவிதிப்பில்லை திட்டத்தட்ட இருந்தாலும் பற்றாக்குறையும் கிட்டத்தட்ட 100 சதவிகிதம் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இதற்குக் காரணமாக பல்வேறு அம்சங்களை அவர்கள் சொன்னாலும் நான் ஒன்றைத் தெளிவாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த அரசாங்கம் ஒழுங்காக வரிவகைகளை வசூல் செய்வதில் முனைப்புக் காட்டவில்லை என்ற காரணத்தால்தான் இன்று 38 கோடி ரூபாய் வரிகளாகப் போடவேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம், இன்றைக்கு கமர்சியல் டாக்சஸ் என்று சொல்லக் கூடிய அமைப்பின்மூலம் வர வேண்டிய அல்லது வசூல் செய்ய வேண்டிய முறையில் வசூல் செய்வது இல்லை. அரசாங்கத்திற்கு 100 ரூபாய் வசூல் செய்கிறார்கள் என்றால் ரூபாய் 150 அவர்களுக்காக அவர்கள் வசூல் செய்கிற காட்சியைத் தான் பார்க்கிறோம். தீபாவளி, பொங்கல் நேரங்களில் காரைப் போட்டுக் கொண்டு வியாபாரிகளை மிரட்டி தங்கள் சொந்தத்திற்காக வசூல் செய்யும் காட்சிகளைப் பார்க்கிறோம், அரசாங்கத்திற்கு வர வேண்டியதை ரைட் ஆப் செய்வதுபோல், அதற்கு கொடுக்க வேண்டாம் எங்களுக்குத் தந்துவிடுங்கள் என்று சொல்கிற காட்சியைப் பார்க்கிறோம். பல அதிகாரிகள் அப்படிச் செய்கிறார்கள்.

போக்குவரத்துத் துறையில் உள்ளவர்களைப் பொறுத்தவரையில் இன்று ஆம்னி பஸ்கள் என்று ஓடுகின்ற பேருந்துகளின் எண்ணிக்கை கணக்கில் அடங்காது. அரசுக்குத் துணிவு இருக்குமானால் கர்நாடகா மாநிலத்தில் செய்ததைப்போல இந்த ஆம்னி பஸ்களை அரசுடைமையாக்குங்கள். அதே போல் நாட்டுடைமை ஆக்கினால் அதன்மூலம் கிடைக்கும் வருவாயைக் கொண்டு அரசாங்கம் வரி போடாமலேயே ஆட்சியை நடத்த வாய்ப்பு உண்டு.

அதேபோல் இன்று ஆலைகளிலிருந்து அரசுக்குக் கிடைக்க வேண்டிய தொகைகளை பல இடங்களில் கொடுக்காமல் இருக்கிறார்கள். மறைமுகமாக கொடுக்காமல் இருக்கிறார்கள். மட்டுமல்லாமல் நேரடியாகவே அரசுக்குக் கொடுக்காமல் இருக்கிறார்கள். அதிகாரிகள் முழுமையாக நல்ல முறையில் செயல்படாததுதான் காரணம்.

காரணம் ஆலங்குடியில் இது நடக்கிறது, கோடிக்கணக்கான ரூபாய் அளவில் இந்த அரசை ஏமாற்றிக் கொண்டு அரசுக்கு வரி செலுத்தாமல் இன்று ஏமாற்றுகிறக் காட்சியைப் பார்க்கிறோம். அரசை ஒருபுறம் ஏமாற்றுகிறார்கள், அதே நேரத்தில் விவசாயிகளையும் ஏமாற்றுகிறார்கள். எண்பது கிலோ கடலைப் பருப்பு இருக்க வேண்டுமென்று சொன்னால், அங்கே தொழிலாளர்களை வைத்துக்கொண்டு 90 கிலோ போட்டு அதன்மூலம் எவ்வளவோ ஏழை விவசாயிகளை ஏமாற்றுகிறார்கள். முதலாளிகள் பங்கு போடுகிறார்கள். ஒரு மூட்டைக்குப் பத்து கிலோ என்று சொல்லும்போது எவ்வளவு ஆயிரம் விவசாயிகள், எவ்வளவு ஆயிரம் கிலோக்கள், எவ்வளவு ஆயிரம் மூட்டைகள், எவ்வளவு ஆயிரம் ரூபாய்கள், எவ்வளவு விவசாயிகள் இதனால் பாதிக்கப்படுகிறார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அதேபோல், இன்று சாராயக் கடைகளை எடுத்துக் கொண்டால் அரசாங்கம் அவற்றைச் சரியாகக் கண்காணிக்கிறதா என்றால் இல்லை. நீங்கள் அவற்றைக் கண்காணிக்கத் தயாராக இல்லை. அரசாங்க சாராயக் கடைகள் [illegible]கிறவர்கள் கள்ளச் சாராயத்தை வாங்கி விற்கிறார்களே தவிர அர[illegible] சாராயத்தை வாங்குவதில்லை. அதனால் அரசுக்குக் கிடைக்க வேண்டிய வருவாய் கிடைக்காமல் போய்விடுகிறது. ஆனால் 38 கோடி ரூபாய்க்கு வரி போடுகிறார்கள். வரிகள் போட்டுவிட்டு அதைச் சரியாக வசூல் செய்ய ஆற்றல் இல்லை என்று சொன்னால் நீங்கள் வரி போடுவதில் அர்த்தமே இல்லை.

அதேபோல் இன்று மின்சாரத் துறைக்கு பெரிய பெரிய தொழிற்சாலைகளிலிருந்து இலட்சக்கணக்கில் ரூபாய் வரவேண்டியது பாக்கியிருக்கிறது. அதை வசூலிக்க ஏன் தயக்கம் காட்டுகிறீர்கள்? அதை வசூல் செய்யலாமே? அதை முனைப்பாக இருந்து வசூல் செய்தால் நீங்கள் வரி போடாமலேயே ஆட்சி நடத்தலாம்.

கிராம அதிகாரிகளை வேலையை விட்டு நீக்கினீர்கள். ஒரு உத்தரவு மூலம், 15,000 கிராம அதிகாரிகளை இரவோடு இரவாக வேலையை விட்டு நீக்கினீர்கள். ஒன்றரை ஆண்டுகளாக அவர்களுக்கு சம்பளம் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். எவ்வளவு கோடி ரூபாய் சம்பளமாகக் கொடுக்கிறீர்கள். அது ஒரு பக்கம். அவர்களுக்குப் பதிலாக வேலை செய்யும் ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களுக்குக் கூடுதல் அலவன்ஸ் என்ற பெயரில் எவ்வளவு





கோடி ரூபாய் செலவாகிறது? இதையெல்லாம் விட அரசாங்கச் சொத்தாக இருக்கக்கூடிய மரங்களை, எவ்வளவு கோடி ரூபாய் மதிப்புள்ள மரங்கள் வெட்டி அழிக்கப்படுகிறது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். அதைத் தடுப்பதற்கு அரசு முயற்சி செய்ததா? இல்லை. கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள மரங்கள் வெட்டி எடுக்கப்பட்டு வேறு மாநிலங்களுக்கு கடத்தப்பட்டு செல்லும் காட்சியைப் பார்க்கிறோம்.

அதேபோல், கடைசியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். உங்களுடைய கோவில் உண்டியல்களைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்ளுங்கள். அது ஒரு பெரும் காரியமாக இருக்கிறது. அதிலிருந்து பெரிய சொத்து வரக்கூடிய வழி இருக்கின்ற காரணத்தால், கோவில் உண்டியல்களைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளுங்கள். காரணம், திருடு போய்க் கொண்டிருக்கின்றது. சமீபத்திலே திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலிலே, அங்கே ஏற்பட்ட சம்பவத்திற்குப் பின்னால், சமீபத்திலே அங்குள்ள அரசு ஊழியர் ஒருவர் கோவில் உண்டியல் பணத்திலிருந்து திருடி விட்டதாகச் செய்தி வந்தது. ஆகவே, [illegible]கள் கோவில் உண்டியல்களைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

(இரவு 7.30)

அதேபோல இன்றைக்கு ஸ்பாட் பில்லிங் என்று மின்துறை அமைச்சர் அவர்கள் ஒரு தீவிர திட்டத்தின் அடிப்படையிலே ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதிலே கருத்து வேறுபாடு இல்லை. ஆனால், அதே நேரத்தில் கிட்டத்தட்ட 9 ஆயிரம் பேர்கள், அதிலே பணி புரியும் அக்கவுன்ட்ஸ் இலாக்காவைச் சார்ந்தவர்கள், காஷ் இலாக்காவைச் சார்ந்தவர்கள் வேலை செய்யாமல் சம்பளம் மட்டும் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இவைகளை யெல்லாம் நிவர்த்தி செய்தால், இதா வரிகளைப் போடாமலேயே அரசாங் கத்தை நடத்த முடியும் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இங்கே பேசிய காமராஜ் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் மத்திய அரசாங்கம் பாராபட்சக் கண்ணோட்டத்தோடு தமிழகத்தைப் பார்க்கிறது என்றும், காங்கிரஸ் கட்சி ஆட்சிக் காலத்தில் இத்தனை தொழிற்சாலைகள் ஏற்பட்டது என்றும், அதே போல் தி.மு.க ஆட்சிக் காலத்திலே ஏற்படவில்லை, 1976ஆம் ஆண்டு எமர்ஜென்சிக் காலத்திலே சேலத்திலே உருக்காலைத் திட்டம் ஏற்பட்டதென்றும், அதற்குப் பிறகு அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே

எந்தத் தொழிற்சாலையும் ஏற்படவில்லை என்றும் சொன்னார்கள். இப்படி மத்திய அரசைக் குறை சொல்லி மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடந்து கொள்வதாகச் சொன்னார்கள். நான் கேட்க விரும்புகிறேன். அசோக லேலண்ட் தொழிற்சாலையைச் சேர்ந்தவர்கள் 25 கோடி ரூபாய் செலவிலே ஒரு தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டார்களே, அதற்கு நீங்கள் அனுமதி தந்தீர்களா ? அதற்கு மத்திய அரசாங்கமா குறுக்கே வந்தது ? அதேபோல், மத்திய அரசாங்கத்திலே தமிழகத்திலே இன்னொரு ரயில்வே கோச் பேக்டரியை ஆரம்பிக்க இருக்கிறோம், அதற்கு இடத்தைத் தாருங்கள் என்று சொன்னபோது, பல கோடி ரூபாய் மூலதனம் போட்டு ஆரம்பிப்பதாகச் சொன்னார்களே அதற்கு மத்திய அரசாங்கமா தடையாக இருந்தது ? தமிழகத்திலே தொழிற்சாலை ஏற்பட வேண்டுமென்பதில நீங்கள் ஆசை காட்டாமல் வருவதைத் தடுத்தீர்களே தவிர, அதற்கு மத்திய அரசாங்கம் குறுக்கே நின்றது ? எனவே, மத்திய அரசாங்கத்தைக் குறை சொல்லிப் பயன் இல்லை. எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் மத்திய அரசைக் குற்றம் சொல்வதை நான் மறுக்கிறேன். வரவிருந்த தொழிற்சாலையை உங்களால் செயல்படுத்த முடியவில்லை. வரவேண்டியத் தொழிற்சாலைகளுக்கு, உங்களால் மத்திய அரசாங்கத்தை சரியான முறையிலே அணுக முடியவில்லை.

மாற்றுக் கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்களுக்கு கடிதம் எழுதி, எங்கள் ஊரிலே பைப்பைப் போடுங்கள், கிணறுகள் வெட்டுங்கள் என்று சொன்னால், அமைச்சர்கள் உடனேக் கிணறுகள் வெட்டுவதற்கான உத்தரவைப் போடுகிறீர்களா ? எங்கள் தொகுதியில் பலவற்றை உங்கள் நினைவுக்குக் கொண்டு வந்திருக்கிறேன். இதுவரையில் எந்த அமைச்சரும் தமிழ் நாட்டில் மாற்றுக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் பகுதியில் மாற்றாந் தாய் மனப்பான்மையைத் தான் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதைப் போல இன்றைக்கு மத்திய அரசாங்கத்தை அணுகி, நேரடியாகச் சொல்லி அந்தக் காரியங்களைச் செய்யுங்கள் என்று சொல்ல வேண்டும். மத்திய அரசாங்கம் உங்களைப் போல் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட அரசாங்கம்தான். உங்களுக்கு எந்தவிதமான அச்சமும் இருக்க வேண்டியதில்லை. இன்றைக்கு வெஸ்ட் பெங்கால் அரசாங்கத்தைச் சேர்ந்த தொழில் துறை அமைச்சர் மாதத்தில் 10 நாளைக்கு டெல்லியிலேத் தங்கி அங்குள்ள ஒவ்வொரு இலாகாவின் செயலாளரையும், அமைச்சர்களையும் சந்தித்து, காரியங்களை ஆற்றி வருகிறார். ஆனால், உங்களுடைய



அமைச்சர்கள் டெல்லிக்குச் சென்றால், அங்கே எந்த அமைச்சரையும் சந்திப்பது இல்லை. மாறாக இங்கே உட்கார்ந்துகொண்டு, மத்திய அரசாங்கத்தின் கொள்கைகளையும், தொழிற் பிரச்சினைகளைப் பற்றியும், மத்திய அரசாங்கத்தின் இலாகாவைப் பற்றியும், தமிழ்நாட்டிலே இருக்கும் விவசாய அமைச்சர் குற்றம் சாட்டுகிறார். மத்திய அரசாங்கம் தடையாக இருக்கிறது அங்கே கோப்புகள் நகரவில்லை என்று மத்திய அரசாங்கத்தின்மீது சொல்லிக் கூடிய அளவிலேதான் காரியங்கள் இருக்கின்றன. இந்த நிலைமையில் ஆட்சி இருக்கிறது. மத்திய அரசாங்கத்தைக் குற்றம் சாட்டிக் கொண்டிருந்தால், தொடர்ந்து ஆட்சியில் இருக்கலாம் என்று நினைக்கிறீர்கள். நீங்கள் முனைப்போடு காரியங்களைச் செய்ய வேண்டும்.

எட்டு மாநிலங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டபோது, இந்தியாவில் பல் வேறு பகுதிகள் வறட்சியால் பாதிக்கப்பட்டிருந்தாலும், தமிழ் நாட்டிற்குக் கிட்டத்தட்ட 51 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறது என்று சொன்னால் மத்திய அரசாங்கம் பாரபட்சமாக நடந்து கொண்டதா ? இதை நீங்கள் புரிந்துக் கொள்ள வேண்டும். புதுக்கோட்டை மாவட்டம் வறட்சியால் பாதிக்கப்பட்ட போது, அங்கே செயல்பட்ட பல காரியங்களுக்கு இன்றுவரைப் பணம் கொடுக்கப்படவில்லை. பலமுறை சம்மந்தப்பட்ட அமைச்சருக்கும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் சொல்லியும், இன்னும் பல வேலைகளுக்கு, வேலை செய்த ஏழைகளுக்கு பணம் பட்டுவாடா செய்யாத ஒரு அவல நிலை இருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மொத்த நிதி ஒதுக்கீடான 3150 கோடியில் மின்சாரத்துறைக்கு 1023 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1-1-82 நிலவரப்படி கிராமங்கள் 15,595, சிற்றூர்கள் 47,544 ; இவற்றிற்கு மின்கம்பிகள் அமைக்கப்பட்டிருப்பதாகச் சொல்கிறீர்கள். 95 சதவிதம் அச்சில் செய்து விட்டோம் என்று சொல்கிறீர்கள். இதற்கு யார் அடிப்படை மூலக் காரணம் ? அன்றைக்குக் காங்கிரஸ் காலத்தில் போட்ட திட்டங்கள்தான். அன்றைக்கு இருந்த சீஃப் என்ஜினியர் திரு. அப்பாதுரை அவர்களுடைய திறமையும் ஆட்சியினுடைய உதவியும் இன்றைக்குத் தமிழ் நாட்டிலே இந்தளவுக்கு முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்பதை நீங்கள் நெஞ்சைத் தொட்டுத்தான் உண்மையைச் சொல்ல வேண்டும். காரணம் அதுதான் உண்மை. இன்றைக்குக் கிட்டத்தட்ட 13, 14 சீப் என்ஜினியர்கள் இருக்கிறார்கள். யார் சீப் என்ஜினியர் என்றேத் தெரியவில்லை. ஒவ்வொரு மாவட்டத்திற்கு ஒரு சீப் என்ஜினியர் என்று வந்துவிடுமோ என்று அஞ்சுகிறேன். இந்த நிலைமையிலே செலவைக்

குறைத்து, காரியங்களை ஆற்றுவதில் முனைப்பாக இருந்தீர்களானால், பாராட்ட முடியும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதைப்போல இன்றைக்குப் போக்குவரத்துக் கழகங்களிலே நஷ்டம் இருப்பதாகச் சொல்லு கிறார்கள். அரசாங்கம் நடத்துகிறப் போக்குவரத்துக் கழகங்கள் நஷ்டத்தில் ஓடுகின்றன. ஆனால் தனியார் ஒருவர் ஒரு பேருந்து ஓராண்டிற்கு முன் வைத்திருப்பாரானால், இந்த ஆண்டு இரண்டு பேருந்துகளுக்குச் சொந்தக் காரராகிறார். மூன்றாண்டிலே மூன்று பேருந்துகளுக்கு சொந்தக் காரராகிறார். புதுக்கோட்டையிலிருந்து ஒரு சூப்பர் டீலக்ஸ் பஸ் வந்து கொண்டிருந்தது. ஆனால் இப்போது ஒரு சாதாரன பஸ்தான் வருகிறது. அதே நேரத்திலே புதுக்கோட்டையிலே இருந்து 4 டீலக்ஸ் வண்டிகள் ஆம்னி பஸ்கள் என்ற பெயரிலே வருகின்றன. சென்னைக்குத் தினமும் இன்றைக்கு 150லிருந்து 200 ஆம்னி பஸ்கள் வரை வந்து கொண்டிருக்கின்றன என்று சொன்னால் அவர்களுக்கெல்லாம் லாபம் வராமலா ஓட்டுகிறார்கள்: எனவே, அரசாங்கம் ஆம்னி பஸ்களை அரசுடைமையாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்,

புதுக்கோட்டை ஒரு சின்ன மாவட்டம்தான். இந்த மாவட்டத்தில் [illegible] பேருந்துகளை ஓட்டுகின்ற பி.ஆர்.சி நிறுவனம் இன்றைக்குப் 10 நகரப் பேருந்துகள்தான் ஓட்டுகின்றது. புதுக்கோட்டை இன்றைக்குப் போக்கு வரத்து அமைச்சராலோ, அந்த இலாக்காவினாலோ புறக்கணிக்கப்படுகிறது என்று கருதுகிறேன். அப்படிப் புறக்கணிக்காமல் நல்ல நிலைமையில் கொண்டுவர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

தன்னிறைவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் நல்ல திட்டம்தான். முனைப்போடு சென்ற ஆண்டு முயற்சி செய்திருக்கிறார்கள். அதற்காக நான் பாராட்டுகிறேன். ஆனால் இந்த ஆண்டு சென்ற ஆண்டு செய்த அதே தவறு தான் மீண்டும் நடந்திருக்கிறது. சென்ற ஆண்டு 80 இலட்சம் ஒதுக்கீடு செய்து முழுமையாக செய்து முடிக்கப்படவில்லை. இந்த ஆண்டும் 40 லட்சம் ஒதுக்கீடு செய்து முழுமையாக செய்யப்படவில்லை. காரணம் பல இடங்களில் வேலை தெரியாதவர்கள் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். கமிஷனராக இருந்தாலும் சரி யூனியன் என்ஜினியராக இருந்தாலும் சரி 80 லட்சமாக இருந்தாலும், 40 இலட்சமாக இருந்தாலும், அந்த ஒன்றியத்திலே திட்டங்கள் போடுகிறார்கள். அவர் எப்படி போடுவார், தனக்கு வேண்டிய நண்பராக இருக்கிற ஒப்பந்தக்காரர்கள் யார் யார் எந்தப் பக்கம் இருக்கிறார்களோ அதற் [illegible] இடங்கள், வேலைகள் எடுத்துக் கொள்வார்.





பொன்னமராவதி ஒன்றியத்தில் மட்டும் 40 இலட்சம் வேலைகள் ; அதிலே 22 இலட்சம் வெறும் செஞ்சிரளை என்ற கிராவல் மட்டும் அடித்தார்கள். வெறும் மண்ணை மட்டும் அடித்தால் போதுமா ? அடுத்த மழை பெய்தால் கரைந்து விடும். அரசாங்கத்திற்கு சொத்தாகக்கூடிய பாலங்கள், பள்ளிக் கூடங்கள், கட்டிடங்கள் இது போன்ற அமைப்புகளை எடுப்பதன் மூலமாக அவை அரசாங்கத்தின் சொத்தாக அமையும். இனிமேலாவது எடுக்கிற திட்டங்கள் அரசு உத்தரவு மூலமாக இன்னின்னக் காரியங்களுக்கு இத்தனை ரூபாய் ஒதுக்கீடு செய்யுங்கள் என்று திட்டவட்டமாக அறிவித்து அதன் மூலமாக திட்டங்கள் செயல்படுத்துவதற்கு முனைப்பாக இருக்க வேண்டும்.

அதைப் போல இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். என். ஆர். டி.பி. தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம், இதற்கு மத்திய அரசாங்கம் அள்ளி அள்ளி கொடுக்கிறது; ரெஸ்ட்ரிக்ஷனே இல்லை. எத்தனை இலட்சம் வேண்டுமானாலும் செலவழியுங்கள் ; பாலங்கள் வேண்டுமா கட்டுங்கள், பள்ளிக்கூடங்கள் வேண்டுமா கட்டுங்கள், ஒன்றியங்கள் கட்டுங்கள் என்று எவ்வளவு வேண்டுமானாலும் கொடுக்கிறார்கள். இதற்குப் பாராட்டைத் தெரிவிக்க வேண்டாமா அரசாங்கம். உங்களுடைய தன்னிறைவுத் திட்டத் திற்கு மட்டும் பாராட்டை தெரிவித்துக் கொண்டீர்கள். மத்திய அரசாங்கம் கொடுக்கக்கூடிய இத்தனை லட்ச ரூபாய்களுக்கு பாராட்டைத் தெரிவிக்கக் கூடாதா ? அதிலே எனக்குக் குறை உண்டு என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையிலே எந்தெந்த அளவிற்கு நிதி கொடுத்திருக் கிறார்கள், உதவிகள் செய்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துப் பாராட்டி இருக்கிறோம்.

(இரவு 7.40)

திரு நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, அதற்காக நன்றி. அதைப் போல் இன்னொரு நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். 20 அம்சத் திட்டத்தை முழு மனதோடு ஆதரிப்பதாகவும் சொல்லியிருக்கிறீர்கள். மகிழ்ச்சி அடைகிறேன். அதற்காக தனி செல்—மத்திய அரசாங்க மானிடரிங் வைக்கிற போது—அதன் மூலமாக தீவிரமாகச் செயல்படுத்தினால் தமிழ்நாடு [illegible] முன்னேற்றம் அடையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. நா. சுந்தரராஜ்] [1982 மார்ச் 5

வறட்சியைப் பொறுத்தவரையில் பொன்னமராவதி ஒன்றியம், திருமயம் ஒன்றியம், கொளத்தூர் பகுதி, விராலிமலை பகுதி இவைகள் எல்லாம் குடிநீர் இல்லாமையால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. சில இடங்களிலே இன்னும் 10 நாட்களிலே குடிநீர் கிடைக்காத பெரிய பிரச்சினை வந்து விடும். குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக புதுக்கோட்டை மாவட்டமாக இருந்தாலும் சரி மற்ற பல மாவட்டங்களாக இருந்தாலும் சரி தயவுசெய்து டுவாட் போர்டு மூலமாக செய்யவேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் ஏதோ எஜமானர்கள் போலவும் சட்டமன்ற உறுப்பினர்களும் மற்றவர்களும் அவர்களுக்கு ஏவலாட்கள் போலவும் நடத்துகிற முறையில் அந்த அதிகாரிகள் காட்சியளிக்கிறார்கள். ஆகவே தனி போர்டு மூலமாக இல்லாமல் அமைச்சர் திரு. ராகவானந்தம் அவர்கள் கட்டுப்பாட்டின் கீழ் ஒரு துறையாக எப்படி பெருவழித்துறை, பி. டபிள்யு. துறை அமைச்சரின் கீழ் செயல்படுகிறதோ—என்பதைப்போன்று அமைச்சரின் நிர்வாகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள துறையாக செயல்படவேண்டும். இல்லாவிட்டால் குடிநீர் வாரியம் மோசடிக்குத்தான் உதவும். உலக வங்கி உதவியோடு 100 கோடி ரூபாய்க்குத் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. அந்த திட்டம் சேலம், கோவை, மதுரை போன்ற நகரங்களிலும் அவற்றைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் டுவாட் போர்டு மூலமாக செயல்படுத்தப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். நான் அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன், இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். தயவு செய்து 100 கோடி விணாக்காதீர்கள். உலக வங்கி நிதியை விணாக்காதீர்கள். டுவாட் போர்டு மூலமாக செயல்படுத்த நினைக்காதீர்கள். அதிலே 75 கோடி ரூபாய் விணாகிவிடும். பொன்னமராவதி பகுதியிலே 35 ஓவர்ஹெட் டாங்க் வேலை செய்வதாக சொல்கிறார்கள், ஆனால் ஒன்றுகூட வேலைசெய்யவில்லை, ஆனால் அவர்கள் வேலை செய்வதாகச் சொல்கிறார்கள். ஆகவே இந்த அரசாங்கம் டுவாட் போர்டை கலைக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைக்கிறேன்.

தமிழ்நாட்டிலே மட்டுமல்ல, நாடாளுமன்றத்திலே ஒரு செய்தி சொல்லப்பட்டிருக்கிறது.

"A total of 2285 Organisation in Tamil Nadu, Kerala, Karnataka have received financial assistance from foreign countries during the last three years"

என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட பயங்கரமான செய்தி சொல்லப்படுகிறது. 2285 நிறுவனங்கள் தமிழ்நாடு, கேரளா, கர்நாடகம் ஆகிய மாநிலங்களிலே வெளிநாடுகளிலிருந்து கோடிக்கணக்கான ரூபாய்களை சன்மானமாக



1982 மார்ச் 5] (திரு. நா. சுந்தரராஜ்)

பெற்று புழக்கத்திலே நாட்டிலே வந்து கொண்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இந்த அரசாங்கத்தை நான் எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். அந்தப் பணம் எங்கே இருந்து வருகிறது, எப்படி செலவழிக்கப்படுகிறது என்பதைக் கண்காணிக்கவேண்டும். இன்றைக்கு வன்முறையைத் தூண்டுகிற பல காரியங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. கிராமங்களிலே வன்முறையைத் தூண்டுகிற வகையிலே வெளிநாடுகளிலிருந்து வருவதைப்பெற்று இங்கே உள்ள ஏஜன்ட்கள் மூலமாக கைக்கூலிகள் மூலமாக நடந்துகொண்டிருக்கிறது. அரசாங்கம் காவல் துறையின் திறமை மிக்க அதிகாரிகள் மூலமாக அந்தப் பணம் எங்கிருந்து வருகிறது, யார் பெற்றுக்கொள்கிறார்கள், என்ன காரியத்திற்காக செலவிடுகிறார்கள் என்பதையெல்லாம் கண்டுபிடித்து அதைத் தடுக்கவில்லையென்றால் தமிழ்நாட்டிலே பூகம்பம் மட்டுமல்ல, எரிமலையே வெடிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடைசியாக நம்முடைய 100 கோடி ரூபாய் திட்டம். நம்முடைய அரசாங்கம் கொண்டுவந்திருக்கின்ற மிக முக்கியமான திட்டம் இது. மக்களிடமிருந்து வரிப் பணத்தை வசூலிக்க போலீஸ், கலெக்டர் மூலமாக ஜப்தி நடவடிக்கை எடுத்து, குண்டாக்கள், தாலிகள் இவற்றைப் பிடுங்கக்கூடிய நிலைமைக்கு அரசு வந்தது. நூறு கோடி ரூபாய்க்கான திட்டத்தைப் போடும்பொழுது சரியாகக் கணித்திருக்க வேண்டாமா? அதைப்பற்றி நன்றாகக் கவனித்து, ஆராய்ந்து அதைச் செயல்படுத்த முடியுமா என்று சிந்தித்துப் பார்த்துச் செய்யக் கூடாதா? 2 வயது முதல் 10 வயது வரையில் உள்ள குழந்தைகளைப் பெறக் கூடியவர்கள் யார்? 20 வயது முதல் 46 வயது வரையில் உள்ளவர்கள் தான் பெற்றிருக்க முடியும்? 45 வயதுக்கு மேல் அவன் பிள்ளை பெற்றுக்கொள்ள வாய்ப்பிருக்காது என்று நினைக்கிறேன். ஆக, இந்தக் கால கட்டத்திலே இருக்கின்ற ஒருவனைச் சோம்பேறியாக்கி, தன்னுடைய குடும்பத்தைப் பாதுகாக்கின்ற பொறுப்பிலே இருக்க வேண்டியவனுக்கு உழைக்க வேண்டிய வாய்ப்பைத் தராமல் அவனுடைய குழந்தைகளுக்குப் பிசைந்து ஊட்டுகிறேன் என்று சொல்வதால் அவனை ஒருபுறம் சோம்பேறியாக்குகின்ற அதே நேரத்தில் இன்னொரு புறத்தில் பிச்சை எடுப்பதற்கான வழியைச் செய்து கொடுக்கிறீர்கள். இது நல்ல ஆட்சிக்கு அழகல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது சேரிட்டி அரசாங்கம் அல்ல. சேரிட்டி செய்வது என்றால், பெரிய பணக்காரன் தவறு செய்கின்ற நேரத்தில் அந்தத் தவறை மறைப்பதற்காக நான் யாசகம் போடுகிறேன், பத்து ஏழைக் குழந்தைகளுக்கு சாப்பாடு போடுகிறேன், பத்து பேருக்கு வேட்டி கொடுக்கிறேன் என்று சொல்வது வேறு விஷயம். ஆனால் அரசாங்கம் அந்தக் குழந்தைகளைப் பாதுகாக்க வேண்டுமென்று திட்டம் வைத்திருந்தால் அவனுக்கு வேலை வாய்ப்பைக் கொடுங்கள்; அவன் வேலை பார்த்து ஈட்டுகின்ற

(திரு. நா. சுந்தரராஜ்) [1982 மார்ச் 5

பொருளைக் கொண்டு, தன்னுடைய சம்பாதியத்தைக் கொண்டு அதன் மூலமாக
குழந்தைகளை வளர்ப்பதற்கான வழிவகைகளைச் செய்கின்ற திட்டத்தைக்
கொண்டு வாருங்கள். அதற்குப் பதிலாக நான் பிசைந்து ஊட்டுகிறேன் என்றால்
15,000 கிராமங்களில் உள்ள குழந்தைகளுக்கும் பிசைந்து ஊட்டுகிறேன்
என்றால் யார் ஊட்டுவது ? வீட்டிலே பெண்கள் இருப்பார்களா ? அவர்கள்
வேலைக்குப் போக மாட்டார்களா? மதிய உணவுத்திட்டத்திலே 4 முதல் 14
வயது வரையில் உள்ள குழந்தைகளுக்கும், பால்வாடி மூலமாக 3 முதல் 5
வயது அல்லது 7 வயது வரையில் உள்ள குழந்தைகளுககும் அரசாங்கம் சில
காரியங்களைச் செய்து வருகிறது. ஆகவே, இந்தத் திட்டத்தை மறுபரிசீலனை
செய்யும் படியாகக் கேட்டுக்கொள்கிறேன். அதற்குப் பதிலாக பள்ளிக்
குழந்தைகளை, வருங்காலச் செல்வங்களை அரசாங்கமே தத்து எடுத்துக்
கொண்டு அவர்களுக்கு இலவசக் கல்வி மட்டுமல்லாமல், இலவச உணவு,
இலவச உடை கொடுக்கிறோம் என்று சொல்லட்டும். அதற்காக 100 கோடி
ரூபாய் அல்ல 200 கோடி ரூபாய் செலவழித்தாலும் அதைப்பற்றி எனக்கு
ஆட்சேபணை இல்லை. அவ்வாறு செய்தால் அதைப் பாராட்டி வரவேற்கத்
தயாராக இருக்கிறேன். அதற்குப் பதிலாக இம்மாதிரி காரியங்களைச்
செய்வதால் சோம்பேறித்தனம் தான் வளரும். 11 வயதுக்குப் பின்னால்
அரசாங்கம் எதைக் கொடுக்கும் என்று நினைத்து ஏங்கி வாழும் நிலைதான்
ஏற்படும். எனவே தயவு செய்து மறுபரிசீலனை செய்யுங்கள். இதை நல்ல
காரியத்திற்குப் பயன் படுத்துங்கள். தொழிற்சாலைகளை உருவாக்குவதற்
குப் பயன் படுத்துங்கள். கிராமங்களில் நீர் நிலைகளை உருவாக்கி விவ
சாயத்தை நல்ல முறையில் செய்து அதன் மூலம் கிடைக்கின்ற பொருட்களைச்
அந்தக் குழந்தைகளுக்கு கொடுப்பதற்கான வழிவகைகளைச் செய்யுங்கள்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாகச் சொல்ல விரும்புவது என்னவென்றால், சமீப காலங்களிலே
சட்டமன்ற உறுப்பினர்களைப் பற்றி சினிமாவிலேயும் சரி, பத்திரிகைகளி
லேயும் சரி கிண்டலும் கேலியும் செய்கின்ற போக்கு அதிகரித்து வந்துள்ளது
என்பதைத் தலைவரவர்களே தாங்களும் கவனித்திருப்பீர்கள் என்று நினைக்
கிறேன். எந்தக் கட்சி என்று நான் சொல்ல மாட்டேன். ஆனால் பொத்தாம்
பொதுவில் சட்டமன்ற உறுப்பினர்கள் என்றாலே ஏதோ இலஞ்சம் வாங்கு
வதைப்போலவும், மோசமான பேர்வழிகளைப் போலவும், அறிவே இல்லாத
ஜீவிகளைப் போலவும், அறிவற்றவர்களைப்போலவும் சினிமாக்களிலும் கதை
களிலும் எழுதுகிறார்கள். இது நல்ல போக்கு அல்ல. நம்மைத் தேர்ந்
தெடுத்து அனுப்பிய மக்கள் நல்லவர்களைத்தான் தேர்ந்தெடுத்து அனுப்பி



1982 மார்ச் 5] [திரு. நா. சுந்தரராஜ்]

யிருக்கிறோம் என்று நம்புகிறார்கள். ஆனால் இப்படி அசிங்கமாகவும், அரு
வருப்பாகவும் சினிமாக்களிலும், பத்திரிகைகளிலும் வருவது இந்த அரசாங்
கத்தை மட்டுமல்ல எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களையும் கேலி செய்யும்
அளவிற்கு நிலைமைகள் இருக்கின்றன. எனவே, நான் உங்கள் மூலமாக
எச்சரிக்க விரும்புகிறேன். இது போன்ற நிலைமைகள் இனியும் நீடிக்கும்.
நிலை இருந்தால் எந்தக் கட்சியையும் கிண்டலும் கேலியும் செய்வது என்ற
நிலைமை நீடித்தால் அவர்களைப் பற்றியும், அவர்களது உள் விவகாரங்களைப்
பற்றியும் இந்த அவையில் பேசுவதற்கும், கண்டிப்பதற்கும் அனுமதி தர
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜி. மூர்த்தி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு
நிதியமைச்சரவர்கள் கொணர்ந்த இந்த நிதிநிலை அறிக்கையின் மீது
பேசுவதற்கு வாய்ப்பு தந்தமைக்காக முதற்கண் என்னுடைய நன்றியைத்
தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்குத் தமிழக மக்கள் உள்ளப்பூர்வமாக
ஏற்றுக்கொள்ளுகின்ற அருமையான திட்டங்களை இந்த 1982-83 ஆம் ஆண்டு
நிதிநிலை அறிக்கையிலே தமிழக அரசு அறிவித்திருக்கிறது. பல நிதிநிலை
அறிக்கைகளை இந்தத் தமிழகம் கண்டிருக்கிறது. மாடியிலே அமர்ந்துகொண்டு
குடிசை வாழ் மக்களைப்பற்றிச் சிந்திக்கின்ற பட்ஜெட்டுகள் வந்திருக்கின்றன.
மாடியிலே அமர்ந்து கொண்டு குடிசைவாழ் மக்களின் பிரச்னைகளைப்பற்றி
வெளிப்போக்காக, அரசியலுக்காகப் பேசப்பட்டு அந்த மக்களின் எண்ணங்
களைப் பிரதிபலிப்பதாகச் சொல்லப்பட்ட பல பட்ஜெட்டுகளை நாம் கண்டி
ருக்கிறோம். ஆனால் இன்றைக்குக் குடிசையிலே அமர்ந்துகொண்டு அந்த
மக்களின் நல்வாழ்க்கையைப்பற்றிச் சிந்திக்கின்ற ஒரு பட்ஜெட்டாக இந்த
அரசு கொண்டு வந்த பட்ஜெட் திகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதை அறிந்து
நான் உள்ளபூர்வமாகப் பாராட்டுகிறேன்.

(இரவு 7-50)

இன்றைக்குப் பல திட்டங்களை இந்த பட்ஜெட்டிலே அறிவித்திருக்கிறார்
கள். குறிப்பாக இந்த நாட்டிலே உள்ள ஏழை எளிய மக்களுடைய சமுதாய
வாழ்க்கை முன்னேற வேண்டுமென்பதற்காக, அவர்களுடைய பொருளாதாரம்
மேம்பாடு அடைய வேண்டுமென்பதற்காக நிலங்களைச் சீர்திருத்தம் செய்ய
வேண்டுமென்ற ஒரு நல்ல கொள்கையிலே நிலச்சீர்திருத்தச் சட்டத்தை
இந்தத் தமிழக அரசு நிறைவேற்றியிருக்கிறது. அதிலே உச்ச வரம்பு
வைத்திருக்கிறது. அந்த உச்சவரம்பின் மூலம் கைப்பற்றப்
பட்டிருக்கின்ற நிலங்களை இந்த நாட்டிலே இருக்கிற ஏழை, எளிய
மக்களுக்குப் பகிர்ந்து கொடுத்து, நிரந்தரமான வறுமைக்கோட்டிற்கு

அப்பால் இந்த மக்களைக் கொண்டு வருகின்ற ஒரு சிறப்பான திட்டத்தினை தமிழக அரசு கொணர்ந்தது. ஆனால், தமிழகத்தினுடைய துர்பாக்கியம், இன்றைக்கு அது மத்திய அரசால் மறுக்கப்பட்டிருக்கிறது. இந்த நேரத்திலே நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 20 அம்சத் திட்டம் ஒரு பக்கத்திலே சிறப்பாக இந்திய நாட்டிலே பாவிக் கொண்டு வருகிறது. அதிலே சமூகப் பொருளாதாரச் சீர்திருத்தங்களைச் சிறப்பாக எடுத்துக் காட்டியிருக் கிறோம் என்று இன்றைக்கு மத்திய அரசிலே இருப்பவர்கள், அதைப் பெருமை படுத்திப் பேசிக்கொள்கிறார்கள். இந்த நாட்டிலே, தமிழகத்திலே இருக்கிற ஏழை, எளிய மக்களுடைய பொருளாதார மேம்பாட்டிற்காகக் கொணர்ந்த திருக்கிற நிலச்சீர்திருத்தச் சட்டத்திற்கு அனுமதி தர மைய அரசு இன்றைக்குத் தயக்கம் காட்டியிருக்கிறது, கையெழுத்துப் போட மறுத் திருக்கிறது என்ற நிலையை எண்ணிப்பார்க்கிறபோது, தமிழகத்திற்கு மாத்திரம் இப்படிப்பட்ட நிலைமையை ஏன் மைய அரசு உருவாக்கவேண்டு மென்பதை இங்கே இருக்கிற மைய அரசின் சொந்தக்காரர்களான காங்கிரஸ் கட்சிக்காரர்களை நான் மிகவும் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். அப் படிப்பட்ட நிலைமைகளைப் போக்குவதற்கு இந்த ஏழை மக்களின் மீது அக் கறை கொள்வது உண்மை என்று சொன்னால், காங்கிரஸ் கட்சிக்காரர்கள் அதை அம்மையாரிடம் வற்புறுத்த வேண்டுமென்பதை எனது வேண்டுகோளாக விடுக்க ஆசைப்படுகிறேன்.

பல்லாண்டுகளாக, 1967-க்கு முன்பாக, பல தொழிற்சாலைகளைத் தமிழகம் பெற்றது என்று எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பேசினார்கள். அது உண்மை, அது வரலாற்று உண்மை, யாரும் மறுக்க முடியாது தான். ஆனால், 1967-க்குப் பின்னாலே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியானாலும் சரி, அல்லது, இன்றைக்கு, தமிழக அரசை ஆளுகின்ற புரட்சித் தலைவர் ஆட்சியானாலும் சரி, இப்படிப்பட்ட தொழிற்சாலைகள் கிடைக்கவில்லை, வரவில்லையென்ற குறைபாடுகளைப் பல உறுப்பினர்கள் இன்றைக்கு இங்கே பேசக் கேட்டோர். அதிலே ஒரு உண்மையைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். இந்த நாட்டினுடைய தேசிய உணர்வு, எல்லா மாநிலங்களும் ஒரே இருக்க வேண்டும், தேசிய ஒற்றுமையோடு இருக்க வேண்டும், எல்லா மாநிலங்களுக்கும் சம அந்தஸ்தும், சம வாய்ப்பும் தரப்பட வேண்டுமென்ற தேசிய அளவிலே போடப்படுகின்ற அந்த தேசிய உணர்வு கோஷங்கள் எல்லாம் வெறும் வெத்து வேட்டுதானா? வெறும் கோஷத்திற்காகச் சொல்லப்படுகின்ற வார்த்தைகள்தானா என்பதை இன்றைக்கு தமிழக மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். உள்ளபடியே அவர்



களுக்கு அந்த உணர்வு இருக்குமேயானால், எல்லா மாநிலங்களையும் ஒருங் கிணைத்துப் பார்க்க வேண்டும், சமத்துவமாக வைத்துக் கொள்ள வேண்டு மென்ற எண்ணம், மைய அரசிற்கு இருக்குமேயானால், இப்பேர்ப்பட்ட தொழிற்சாலைகளுக்கு தயக்கம் காட்டுவதைத் தமிழக மக்கள் புரிந்து கொள்ள வேண்டுமென்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு இந்த நிதிநிலை அறிக்கையிலே சமுதாய முன்னேற்றத்திற் காகப் பல திட்டங்களை இந்தச் சர்க்கார் அறிவித்திருக்கிறது. தாழ்த்தப் பட்டோர் முன்னேற்றத்திற்காக நல்ல பல திட்டங்களை இன்றைக்கு இந்தச் சர்க்கார் அறிவித்திருக்கிறது. ஒரு சிறப்புத் திட்டத்தின் பேரிலே, தாழ்த்தப் பட்ட மக்களின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்காகப் பல திட்டங்களை இன்றைக்கு அறிவித்திருக்கிறது. இந்தத் திட்டங்களின் மூலம் —இந்த அரசை நான் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 18 சதவீதம் வேலை வாய்ப்புகளிலே தர வேண்டுமென்று அரசியல் சட்டம் சொல்லியிருக்கிறது. —அந்தச் சட்டத்தினை நடைமுறைப்படுத்த வேண்டும். எல்லா சர்க்கார்களும் அதற்கு முன்வரவேண்டும்.

அது மாத்திரமல்ல, இன்றைக்கு வேலையில்லாத் திண்டாட்டம் இந்த நாட்டிலே இருந்து கொண்டிருக்கிற இந்த நேரத்திலே, தாழ்த்தப்பட்டச் சமுதாயத்தைச் சேர்ந்த பலபேர்கள் படித்துவிட்டு இன்றைக்கு வேலை யில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். வீட்டிற்கு ஒருவருக்கு வேலை தர வேண்டுமென்ற ஒரு புரட்சிகரமான திட்டம் தமிழகத்திலே இருந்தாலும், தாழ்த்தப்பட்ட மக்கள் பகுதியிலே இன்றைக்கும் வேலை கிடைக்காத அவல நிலை இருந்து கொண்டிருக்கிறது. அதனாலே, தனியார் நடத்துகின்ற நிறுவனங்களானாலும், அதிலே 18 சதவீதம் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தரப்பட வேண்டுமென்று கட்டாயச் சட்டத்தைத் தமிழக சர்க்கார் மைய அரசுக்குப் பரிந்துரை செய்து, அதை நிறைவேற்ற வேண்டு மென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். காரணம், இந்தச் சட்டத்தைப் பல தனியார் நிறுவனங்கள் புறக்கணிக்கின்றன ஏற்றுக்கொள்ள மறுக்கின்றன. அவர்களுக்கு நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசு முன் வர வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, தாழ்த்தப்பட்ட மக்கள் கொஞ்சமாவது வேலையில் சேர்வதே கடினம். சேர்ந்து விட்டாலும், அவர்களுக்குப் பதவி உயர்வு கொடுப்பதற்கு ரிசர்வேஷன் தர வேண்டுமென்று இன்றைக்கு அரசியல் சட்டத்

தில் வலியுறுத்தி சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட பதவி உயர்வு ஒதுக்கீடு கண்டிப்பாக அமுல் நடத்தப்பட வேண்டும்—புரமோஷனில் ரிசர்வேஷனை அமுல் நடத்த வேண்டும். அதற்கு இரண்டு சர்க்கார்களும் ஒத்துழைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனைப்பட்டாக்களை நமது அரசு பல இடங்களிலே தந்து கொண்டிருக்கிறது. பொதுவாக இதிலே பெரிய குறை இருந்து கொண்டிருக்கிறது. எந்த இடத்திலாவது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனை பட்டாக்களுக்காக நிலம் ஆர்ஜிதம் செய்கிறார்கள் என்றால், அடுத்த நாளே அந்த நிலச் சொந்தக்காரர்கள் கோர்ட்டுக்குப்போய் தடை வாங்கிவிடுகிறார்கள். அந்தத் தடையை உடைக்க 5 ஆண்டுகள், 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள், 20 ஆண்டுகள், 30 ஆண்டுகள்கூட ஆகின்றன. எனவே அந்த மக்களுக்கு வீட்டுமனைப்பட்டா என்பது ஒரு கேள்விக்குறியாக இருக்கின்றது. வட ஆற்காடு மாவட்டத்திலே பல ஊர்களிலே இதுபோன்ற வீட்டுமனைபட்டா கிடைக்காமல், மக்கள் அந்த கோர்ட்டுகளை சந்திக்க முடியாமல் திண்டாடிக்கொண்டு இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே நான் தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறேன். இந்தக் காரியத்திற்காக நிலம் ஆர்ஜிதம் செய்கின்றபோது அந்த ஒரு நிலத்திற்கு மாத்திரம் கோர்ட்டிலே தடை விதிக்கக்கூடாது என்கிற ஒரு சட்டத்திருத்தத்தை தமிழக சர்க்கார் கொண்டு வரவேண்டும். எத்தனையோ சட்டத் திருத்தங்களை நீதித் துறையிலே நாம் செய்கிறோம். ஆனால் இந்த சட்டத்திருத்தமானது தாழ்த்தப்பட்ட மக்களுடைய சமுதாயத்தை பாதுகாப்பதற்காக இருப்பதன் காரணத்தால் அவர்களுக்காக நிலம் ஆர்ஜிதம் செய்யப்படுகிற நேரத்தில் தடை வாங்கும்போது தடை கொடுக்கக் கூடாது. அந்த அதிகாரத்தை சிவில் கோர்ட்டிலே இருந்து பறித்தாக வேண்டும். இல்லை என்றால் தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எந்தக் காலத்திலும் வீட்டுமனைப் பட்டா கிடைக்க இயலாத காரியமாகும். அதனாலே இப்பேற்பட்ட ஒரு சட்டத்திருத்தத்தை இந்த அரசு கொண்டு வரவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் இன்றைக்கு குடிசைகள் மாடி கோபுரமாக ஆகிக்கொண்டு இருக்கின்றன. தமிழகத்திலே, குடிசைகளை இன்றைக்கு எல்லா இடங்களிலும் அடுக்கு மாளிகைகளை கட்டி, ஏழை



மக்களைக் குடியேற்றுவதற்கு பெரும் புனித பயணத்தை இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது. இது விரிவாக்கப்படவேண்டும். மூலை முடுக்குகளுக்கு எல்லாம் இது செல்ல வேண்டும். அதற்காக பணத்தை ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வடார்க்காடு மாவட்டத்தில் பணம் இல்லாத காரணத்தினால் இந்த வேலைகள் நிறுத்தி வைக்கப் பட்டிருக்கிறது. அதாவது முதல் தவணை கொடுக்கப்பட்டு, மற்றுமுள்ள 2-வது, 3-வது தவணைகள் கொடுக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. அதற்கு அதிக நிதி ஒதுக்கி அந்த வீடுகளை கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இதிலே மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்க ஆசைப்படுகிறேன். நகராட்சிப் பகுதியிலே இருக்கின்றவர்கள் 30 ஆயிரம், 50 ஆயிரம் வரை பணம் கொடுத்து வீடுகட்ட உதவுகிறார்கள். ஆனால் கிராமப் புறங்களுக்கு 5 ஆயிரம் 4 ஆயிரம் தான் தருகிறோம். இந்த நிலையை மாற்றி, குறைந்த பட்சம் டவுன்பஞ்சாயத்துகள், பேரூராட்சிகளாக இருக்கின்ற இடங்களிலே அந்த 30 ஆயிரம், 40 ஆயிரம் கொடுத்து வீடுகள் கட்டித் தர அரசாங்கம் முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு பேரூராட்சிகள் எல்லாம் நகராட்சிகளாக ஆகக்கூடிய தன்மைகளைப் பெற்றிருக்கின்ற காரணத்தினால் அங்கே இருக்கின்ற ஏழை எளிய மக்களுக்கு லட்சக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கி வீடு கட்டிக்கொள்வதற்கு வசதியாக இந்தத் திட்டத்தை ரூரல் அவுசிங் டிபார்ட்மெண்டு மூலம், டவுன் பஞ்சாயத்து அளவிலே விரிவு படுத்துவதற்கு இந்த அரசு முன் வரவேண்டும் என்று பணிவோடு இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் இன்றைக்குப் பல புதிய சட்டங்கள் போடப்பட்டு இருக்கின்றன. இந்தத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையிலே அவர்களுக்கு சலுகைகள் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நாம் இப்போது காவல்துறையினருக்குக் கூட பாதி விலையிலே அரிசி தருகிறோம். அதற்காக இந்த அரசை பாராட்டுகிறேன். அந்த மக்களையும் பாராட்டுகிறோம். அதை விட மிக எளிய நிலையிலே வாழ்கின்ற பீடி தொழிலாளர்களுக்கும் அதை விட ஏழ்மையிலே வறுமையிலே வாழ்கின்ற நெசவுத் தொழிலாளர்களுக்கும், மிகவும் வேலையாக வாழ்க்கை நடத்துகின்ற தொழிற்சாலைகளில் தொழிலாளர்களுக்கும் இதுபோன்று பாதி விலையிலே அத்தியாவசியமான பொருள்களை வழங்குகின்ற ஒரு புதிய கொள்கையை இந்த அரசாங்கம் உருவாக்கவேண்டும் என்று கேட்டு, அந்த மக்களின்

(திரு. ஜி. மூர்த்தி) [1982 மார்ச் 5

வறுமையைப் போக்குவதற்கு இது சிறந்த நடவடிக்கையாக இருக்கும் என்று
காரணத்தினால் இந்த வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டு இருக்
கிறேன்.

இன்றைக்கு ஏழைகள் மறுவாழ்வுக்காக குழந்தைகள் சத்துணவுத்
திட்டத்தை இந்த சர்க்கார் கொண்டு வந்திருக்கிறார்கள். பலபேர்கள் இதைக்
கிண்டல் செய்தார்கள். இந்தத் திட்டத்தின் மூலம் பிச்சைக்காரர்களை
ஊக்குவிப்பதாகச் சொன்னார்கள். அதைப்போல சோம்பேரிகளை ஊக்கு
விப்பதைப்போல ஆகும் என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்
சுந்தரராஜ் அவர்கள் சொன்னார்கள். 45 வயதுக்குப் பின்னாலே இப்பேற்
பட்ட குழந்தைகள் பெற்றுக் கொள்ள முடியுமா என்று கூட கேட்டார்கள்.
அது அவர்களுடைய சக்தியையும் திறமையையும் பொறுத்தது. தமிழகத்திலே
அவர் சொல்வதைப்போல எல்லாரும் இருந்துவிட முடியாது. ஆனால்
பிறக்கின்ற குழந்தைகளை பெற்றுவிட்டு, அனாதையாக ஆக்கப்பட்ட
குழந்தைகளைக் காப்பாற்ற வக்கில்லாத பெற்றோர்களுக்கு ஆதாரமாக
அவர்களுடைய வாழ்க்கைக்கு ஒரு ஒளிவிளக்காக இந்தத் திட்டத்தைக்
கொண்டு வந்திருக்கிறார்கள். அதிலே பணக்காரப் பிள்ளைகள்-இன்னும்
வெளிப்படையாக சொல்லவேண்டுமானால்-அவர்கள் இந்த அரசு கொடுக்கின்ற
உணவு வாங்கி சாப்பிடுவதற்குக் கூட சிலர் சாதியின் பெயரால் தயக்கம்
காட்டினாலும் இந்த அரசாங்கம் கவலைப்படக் கூடாது. ஏழை எளிய

(இரவு 8-00)

மக்கள் குறிப்பாக ஆதிதிராவிட மக்கள் இந்த திட்டத்தால் பெரும்பாலும்
பயன் அடையக்கூடும். ஒருவேளை சோறு அவர்களுக்குக் கிடைப்பதால்
அவர்களுடைய இதயம் குளிரும் என்ற காரணத்தால் இதை நாங்கள்
வரவேற்கக் கடமைப்பட்டு இருக்கிறோம். கடைசியாக ஒன்றைச் சொல்ல
விரும்புகிறேன். (மணியடிக்கப்பட்டது). ஒரு முக்கியமான கருத்தைச்
சொல்லி விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முக்கியமான கருத்தை முதலிலேயே
சொல்லியிருக்க வேண்டும். மற்ற கருத்துக்களை பின்னர் வேறு ஒரு
விவாதத்தில் பேசிக்கொள்ளலாம். இப்போது மாண்புமிகு உறுப்பினர்
திரு. மு. ப. முனுசாமி பேசுவார்.

**திரு. மு. ப. முனுசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
1982-83 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீது திராவிட முன்னேற்றக்
கழகத்தின் சார்பாக ஒரு சில கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன்.



1982 மார்ச் 5] (திரு. மு. ப. முனுசாமி)

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் 1982-83 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை
அறிக்கை கொடுத்துள்ளதைப் பார்க்கிறபோது, 1981-82-ல் எந்த வகையில்
நிதிநிலை அறிக்கையைச சமர்ப்பித்தாரோ அதே முறையில் தான்
இருக்கிறது. சென்ற ஆண்டு வளர்ச்சியை உண்டாக்கிக் காட்டுகிறேன் என்று
சொன்னார். ஆனால் வளர்ச்சியைக் காட்டவில்லை. இந்த ஆண்டும் அதே
மாதிரி வளர்ச்சியை உண்டாக்கிக் காட்டுகிறேன் என்று சொல்கிற நிலைமை
தான் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தமிழ் நாட்டில்
பசி, பட்டினி, வறுமை தீர்ந்தபாடில்லை. அதற்கு என்ன காரணம் என்று
கேட்டால், வறட்சி என்று சொல்கிறார்கள். வறட்சி எப்படி ஏற்பட்டது
என்றால், மழை இல்லை என்று சொல்கிறார்கள். மேலை நாடுகளில் மழை
எவ்வப்போது தேவையோ அவ்வப்போது அவர்கள் மழையை உண்டாக்கிக்
கொண்டு, வறட்சியை போக்கும் அளவிற்கு நிலைமைகள் இருக்கின்றன.
ஆனால் இங்கே பல கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்தும் கூட நாம்
வறட்சியைத்தான் கணக்கில் வைத்துப் பார்க்க முடிகிறதே தவிர சரியான
முறையில் அந்த வறட்சியைப் போக்க வக்கு இல்லாமல் பட்டினி, பசி என்றும்
மீண்டும் மீண்டும் சொல்கின்ற நிலைமை தான் இருக்கிறது. ஆகவே,
மேலை நாடுகளில் போடுவதைப் போன்ற திட்டங்களை இங்கே போட்டு,
அந்த வறட்சி நிலையைப் போக்க அரசு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, இங்கேயும் செயற்கை மழை
கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும். வறுமையை ஒழிக்க
வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். அப்படிப்பட்ட திட்டத்தை
இதுவரையில் இந்த அரசு போடாமல் இருந்தது அவர்களுடைய
கையாலாகாத்தனத்தைத் தான் காட்டுகிறது என்பதைச் சொல்லிக்
கொள்கிறேன். எங்களுடைய கட்சியின் தலைவர் கலைஞர் அவர்கள்
முதலமைச்சராக இருந்த நேரத்தில் செயற்கை மழை பெய்யும் அளவிற்கு
நடவடிக்கைகளை எடுத்து அதைச் செய்து காட்டினார். அப்படிப்பட்ட நல்ல
திட்டங்களை எல்லாம் விட்டுவிட்டு, பல கோடிக்கணக்கான ரூபாய்களை
இந்த அரசு வீணாக்கிக் கொண்டு இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட
ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

மழையே பெய்யவில்லை, வறட்சி என்று சொல்லிக் கொண்டு
இருக்கிறார்கள். ஆனால் ஆங்காங்கு ஏரிகளை ஆழப்படுத்துகிறார்கள்.
அதைச் செய்வதற்கு ஒப்பந்தக்காரர்களிடத்தில் விடுகிறார்கள். அந்த
ஒப்பந்தக்காரர்கள் அந்தப் பழைய ஏரியில் உள்ள கற்களையே உடைத்து
புதுப்பித்து விட்டு, அந்தப் பணத்தைப் பெற்றுக் கொண்டு விடுகிறார்கள்.

(திரு. மு. ப. முனுசாமி) [1982 மார்ச் 5

ஆகவே, இந்த மாதிரியான திட்டத்தால் ஒப்பந்தக்காரர்கள் தான் பலன் பெற்றார்களே தவிர, அதனுடைய பலன் நாட்டு மக்களுக்குப் போய்ச் சேரவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிலைமைகள் மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்களுக்கும் தெரியும். ஆங்காங்கு செல்கின்ற மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் தெரியும் என்று சொல்லிக்கொள்கிறேன். வறட்சி நிவாரணப் பணிகள் என்ற முறையில் சாலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. அவைகளும் சரிவர செய்யப்பட வில்லை. ஆகவே, அப்படிப்பட்ட திட்டத்தை வெற்றிகரமாகச் செய்ய அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இமயம் முதல் குமரி வரையில் ஒன்று என்று சொல்கிற நேரத்தில் அங்கே யிருக்கும் ஆறுகளை தென் பக்கத்திற்குத் திருப்பிவிடுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்த காலத்தில், நம்முடைய வறட்சி நிலைமை போக்கப்பட வேண்டுமானால், வட மாநிலங்களில் உள்ள ஆறுகள் தென் மாநிலங்கள் நோக்கித் திருப்பப்பட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள்கைகளை பின்பற்றி வருகிறோம் என்றுசொல்கிற அரசு, இந்தக் கொள்கையை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அங்கேயிருக்கிறவர்கள் நமக்கு அந்த வாய்ப்பைத் தாமல் நாமம் போட்டுக்கொண்டு வருவதால், டாக்டர் நாவலர் அவர்கள் அதை தமிழ் நாட்டுக்குப் பெற்று, தமிழ் நாட்டை முன்னுக்குக் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு நாவலர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி காலத்தில் உணவு அமைச்சராக இருந்த நேரத்தில், திறமையாக உணவுத் தட்டுப்பாட்டைச் சமாளித்தார்கள். அவருக்கு அந்த ஆற்றல் உண்டு. இன்றைக்கு அவர்கள் யாருக்கோ அடிமையாக இருக்கும் அளவில் தன்னுடைய ஆற்றலை குறைத்துக்கொள்ளக்கூடாது என்று சொல்லிக்கொள்கிறேன்.

இப்போது 100 கோடி ரூபாய் செலவில் குழந்தைகளுக்கு உணவு வழங்கும் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. 1975 ஆம் ஆண்டில் உணவுப் பங்கீட்டு அட்டைகள் கிராமங்களில் மற்ற இடங்களில் வழங்கப்பட்டு, குழந்தைகள் கணக்கு எடுக்கப்பட்டு இருக்கின்றன. அந்த அடிப்படையில் குழந்தைகளுக்கு உணவுகள் கொடுக்கலாம். அப்படிச் செய்தால் ஓரளவிற்கு ஏழைக் குழந்தைகளுக்கு உணவு கொடுக்க முடியும். இல்லை என்றால், பாலசேவிகா, ஆயா, மூலம் சிறு குழந்தைகளுக்கு உணவு கொடுப்பது என்றால், அந்தத் திட்டம் தோல்வி அடையும். மேலும், அந்தக்



1982 மார்ச் 5] [திரு. மு. ப. முனுசாமி]

குழந்தைகளுக்கு தரப்படுகின்ற உணவுச் செலவைப் பங்கிட்டு, ஒவ்வொரு குழந்தைக்கும் இவ்வளவு ரூபாய் என்று கொடுத்து விட்டால், அது அந்த கிராமப்புறத்தில் உள்ள ஏழை குழந்தைகளுக்கு மிகவும் பயன் உள்ளதாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அதைப் போலவே சென்ற ஆண்டு மழை இல்லாத காரணத்தால் விவசாயிகளுக்கு மாட்டுத் தீவனம் கிடைக்காததால், உழவு மாடுகளை பாதி விலைக்கு விற்றார்கள். அந்த மாடுகள் வாங்கக்கூட இந்த நாட்டிலே விவசாயிகளுக்கு கையிலே பணம் இல்லை. அப்படிப்பட்டவர்கள் பெற்றக் கடன்களை முழுமையாக, கூட்டுறவுக் கடன்களை முழுமையாக செலுத்த வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதே கூட்டுறவுக் கடனை வேண்டுமென்று கட்டாமல் ஏமாற்றிக் கொண்டிருக்கிறவர்கள், நீதிமன்றத்திற்கு சென்று ஏதோ ஒரு தண்டனை பெற்றுவிட்டால் கட்ட வேண்டியதில்லை என்ற நிலை வந்துவிடுகிறது. கடனைக் கட்டாமல் இருக்கிறவர்களுக்கு கடன் தள்ளுபடி கிடைக்கிறது. அப்படியானால் கடனை ஒழுங்காக கட்டுகிறவன் முட்டாளா? வேண்டுமென்றே கட்டாமல் இருக்கிறவர்கள் கடனை வராத கடன் என்று இந்த அரசு தள்ளிவிடுகிறது. இந்த நிலை இருக்கக்கூடாது. வராத கடன் என்பதை எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. இ. முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற 1982-83 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

ஏழை எளிய குழந்தைகள் நலனை மனதில் கொண்டு, 2 முதல் 10 வயது வரையிலான ஏழைக் குழந்தைகளுக்கு ஒருவேளை இலவச உணவு வழங்குகின்ற இந்தத் திட்டத்தை நாங்கள் முழுமனதோடு வரவேற்கிறோம்.

ஆனால் அதே நேரத்தில் இந்தத் திட்டத்தை நல்ல முறையிலே அமைத்து, கிராமங்களில் ஏற்கெனவே இருந்துவருகிற அந்த பாலவாடி என்று சொல்லப்படுகிற குழந்தைகள் காப்பகங்களின் மூலமாக சிறந்த முறையில், அந்தக் குழந்தைகளுக்கு பாதுகாப்பான முறையில் ஆங்காங்கே காப்பகங்கள் சீராக செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்

[திரு. இ. முத்துராமலிங்கம்] [1982 மார்ச் 5

மேலும் தன்னிறைவு திட்டத்தின் மூலம் பல்வேறு ஊராட்சிகள் பயனடைந்து வருகின்றன. குறிப்பாக என்னுடைய தொகுதியில் உள்ள இராதாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் இந்தத் திட்டம் சிறப்பாக செயல்படுத்தப் பட்டிருக்கிறது. இருப்பினும் போதிய நிதி ஒதுக்கீடு இல்லாமல் ஆங்காங்கே சிமெண்ட் பற்றாக்குறை காரணமாக பல்வேறு வேலைகள் குறிப்பாக சாலை வேலைகள் நடைபெற்றால் கூட ஆங்காங்கே இருக்கிற பெரிய பாலம் சம்பந்தமாக வேலைகள் நடக்கவில்லை. அந்த வேலைகளையும் போதிய அளவுக்கு நிதி ஒதுக்கி, முடித்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் தன்னிறைவுத் திட்டமாவது நகராட்சிகளுக்கும் விஸ்தரிக்கப்பட இருப்பதை பாராட்டுகிறேன். என்னுடைய தொகுதியில் இருக்கிற திசை யன்விளை, பணகுடி, வள்ளியூர் நகராட்சிகளுக்கு இந்தத் திட்டத்தை செயல் படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதி மக்கள் பெரும்பாலும் நிலத்தடி நீரையே நம்பிக் கொண்டிருக்கிறார்கள். நெல்லை மாவட்டத்தில் அதிகமான பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு பெற்றிருப்பது இராதாபுரம் தாலுகா ஆகும். அந்தத் தாலுகாவில் இதுவரை துணை மின் நிலையம் என்று சொல்லப்படுகின்ற சப்-ஸ்டேஷன் இல்லை. ஆகவே, அரசு விரைவிலே ஒரு துணை மின் நிலையத்தை அங்கே அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கெனவே விவசாயப் பெருங்குடி மக்களுக்கு விளைபொருளுக்கு போதிய விலை கிடைக்காமலும், விவசாயத்திற்கு தேவையான பொருட்களின் விலை ஏற்றத்தினாலும் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிற இந்த நேரத்தில் மின்சாரக் கட்டணத்தை உயர்த்தும் அறிகுறி இந்த நிதிநிலை அறிக்கையில் தெரிகிறது. எந்தக் காரணத்தாலும் மின்சாரக் கட்டணத்தை உயர்த்தக்கூடாது. நலிந்து போயிருக்கிற விவசாயிகள் தலையிலே இந்த பாரத்தையும் சுமத்தக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் மத்திய அரசால் அறிவிக்கப்பட்டிருக்கிற கூடங்குளம் அணு மின் நிலையம் திட்டம் என்னுடைய தொகுதியில் உள்ளது. நம்முடைய அரசு மத்திய அரசை வற்புறுத்தி எவ்வளவு விரைவில் அதைச் செயல்படுத்த முடியுமோ அவ்வளவு விரைவில் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1982 மார்ச் 5] (திரு. இ. முத்துராமலிங்கம்)

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் நம்பியாற்றுத் திட்டம், கொடுமுடி ஆற்றுத் திட்டம் என்று இரண்டு திட்டங்கள் இருக்கின்றன. அந்த கொடுமுடியாற்றுத் திட்டத்திற்கு ஏற்கெனவே நெருக்கடி நிலை அமுலில் இருந்தபோது ஏறத்தாழ 30 இலட்சம் ரூபாய் செலவு செய்தும்கூட அந்தத் திட்டம் இப்போது பாதியில் நிறுத்தப்பட்டுள்ளது. அந்தத் திட்டத்தை இந்த நிதி ஆண்டில் எடுத்து, நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல நம்பியாற்றுத் திட்டத்தையும் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(இரவு 8-10)

மேலும் இந்த முதியோர் உதவித் தொகை, விதவைகள் உதவித் தொகை உடல் ஊனமுற்றவர்களுக்கான உதவித் தொகை ஆகியவற்றைப் பொறுத்த வரையில் ஏற்படுத்தி இருக்கின்ற வயது வரம்பினை நீக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்து அந்த உதவித் தொகையை உயர்த்தியதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது).

* திரு. என். பெருமாள் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, 1982-83 ஆம் ஆண்டு நாவலர் அவர்களால் கொண்டுவரப்பட்ட நிதிநிலை அறிக்கையின் மீது பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி இந்த நிதிநிலை அறிக்கையை நடுநிலைமையுடன் ஆராய்ந்து பார்த்தால் ஏழை எளியவர்களுக்கு எந்த வகையிலே வாழ்வு தரலாம் என்ற புரட்சித் தலைவரின் எண்ணங்கள் பொதிந்து கிடப்பதைப் பாராட்டாமல் இருக்க இயலாது. குறிப்பாக உணவு வேளாண்மை, கால்நடை வளர்ச்சி, பால் பண்ணை போன்ற துறைகளில் இந்த அரசு எவ்வளவு அக்கறை காட்டி விவசாயிகளுக்கும் வாங்கிச் சாப்பிடும் ஏழைகட்கும் எந்த அளவு உதவிட முடியுமோ அந்த அளவு நிதிநிலை அறிக்கையில் ஆர்வம் காட்டி இருப்பது புரியும். கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் கொடுக்கப்பட்ட கடன் நிலுவைத் தொகைக்கு அரசு ரூ. 2.07 கோடி அளித்திருப்பதை விவசாயப் பெருங்குடி மக்கள் பாராட்டியே தீருவார்கள். ஆதி திராவிட பழங்குடி மக்களின் நலன் கருதி பல்வேறு கடன் வசதித் திட்டங்களை அளித்திருப்பதும் பாராட்டுக்குரிய ஒன்றாகும். மீனவர் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 8,800 வீடுகள் கட்ட அரசு அனுமதி அளித்திருப்பதும் இறால் மீன் வளர்ப்பு திட்டத்திற்கு ரூ. 2 கோடி செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளதும் பாராட்டப்பட வேண்டியதாகும். காட்டு வளத்தில் இந்த அரசு அக்கறை கொண்டிருப்பது நாட்டு வளத்தை எண்ணியே

(திரு. என். பெருமாள்) [1982 மார்ச் 5

என்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையாகும். 10 ஆண்டுக் காலத்தில் ரூ. 108 கோடி செலவில் ஸ்வீடன் நாட்டு உதவியுடன் காடு வளர்ப்பு பணிகள் மேற்கொள்வது பாராட்டுக்குரிய ஒன்றாகும்.

பாசனத் திட்டங்களுக்கு ரூ. 22.22 கோடி ஒதுக்கி விவசாயிகளுக்கு வாழ்வு தர முன் வந்த இந்த அரசுக்கு விவசாயிகள் என்றும் நன்றி சொல்வார்கள். மின் துறையைப் பொறுத்தமட்டில் 3 ஆயிரம் கோடியில் 1,023 கோடி இதற்கென இவ்வாட்சி நிதி ஒதுக்கீடு செய்ததின் மூலம் மின் துறையில் தமிழகத்தில் மிகப் பெரிய சாதனையை இவ்வரசு புரிந்துள்ளது. 99 சதவீத கிராமப்புற குடிசைகளில் ஒளியேற்றி புரட்சியை ஏற்படுத்தியுள்ளது சாதனையாகும். வறண்ட நெஞ்சங்களில் மிரட்சியை ஏற்படுத்தும் வகையில் பட்ஜெட்டில் பல புரட்சிகளும் புதுமைகளும் உள்ளடக்கியிருப்பது மகிழ்வுக்குரிய ஒன்றாகும். தொழில் வளர்ச்சியைப் பொறுத்தமட்டில் தமிழகம் மிகப் பெரிய தொழிற்புரட்சியை எதிர்நோக்கி இருப்பதை பட்ஜெட்டில் தெளிவாக்கியிருப்பது மிகவும் பாராட்டுக்குரிய ஒன்றாகும். ரூ. 190 கோடி செலவில் கரும்புச் சக்கையிலிருந்து காகிதம் தயாரிக்கும் தொழிற்சாலை உருவாக இருப்பது தமிழகத்திற்கு மிகப் பயனுள்ள செயலாகும். கிராம சிறு தொழில்கள் துவங்க புரட்சித் தலைவரின் அரசு கிராமப்புற ஏழை மக்களை கருத்தில் கொண்டு இதற்கென தனி நிதி ஒதுக்கீடு செய்திருப்பது இந்தியாவில் யாரும் துணிந்து செய்யாத செயலாகும்.

கிராமப்புற மக்களுக்குக் குடிநீர் வழங்குவதில் முன்னுரிமை காட்டி செயல்படுத்துவது பாராட்டுக்குரிய ஒன்றாகும். குடிநீர், சாலைகள், இணைப்பு, மின்வசதி, சுகாதாரம், கல்வி போன்ற துறைகளில் இந்த அரசு எத்தகைய எதிர்கால சிறப்பு சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு காரியமாற்றுகிறது என்பதை இந்த நிதிநிலை அறிக்கை காட்டுவது பாராட்டுக்குரிய ஒன்றாகும். உடல் ஊனமுற்றவர்க்கு என பல வேலை வாய்ப்புக்களை உருவாக்கி உள்ளதும் சிறப்பு பயிற்சி அளித்திட உள்ளதும் நெஞ்சை நெகிழ்விக்கும் செய்தியாகும்.

என்னுடைய தொகுதியான வரகூர் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி என்பதை அனைவரும் அறிவார்கள். அத்தொகுதியில் அலத்தூர் ஒன்றியத்தைச் சேர்ந்த சாத்தனூர் என்ற கிராமத்தில் கல்மரம் ஒன்று உள்ளது. இது மத்திய அரசின் பாதுகாப்பில் உள்ளது. இதை ஆராய்ச்சி செய்வதற்கு இந்தியா முழுவதிலிருந்து பல ஆராய்ச்சியாளர்கள் வந்து பார்வையிட்டுச் சென்றுள்ளார்கள். இந்தக் கல்மரத்தைப் பார்ப்பதற்கு



[1982 மார்ச் 5] (திரு. என். பெருமாள்)

மக்கள் அன்றாடம் சாரை சாரையாக வந்தவண்ணம் உள்ளனர். இந்தக் கல்மரம் சார்பாக தமிழக அரசு சில வசதிகளைச் செய்து தர வேண்டும். அங்கே வழித்தடம் சரியாக இல்லாத காரணத்தினால் அங்கே வரக்கூடிய ஆராய்ச்சி நிபுணர்களும், பொதுமக்களும் செல்வதற்கு பேருந்து வசதிகள் இல்லை. பேருந்து வசதிகள் இல்லாமலும் சாலை வசதிகள் இல்லாமலும் அவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். அதனால் அந்தச் சாலையைச் சீர்திருத்தம் செய்துதரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியான வரகூர் பகுதியில் ஜிப்சம் என்ற ஒருவகைக் கல் நிறைய இருக்கின்றது. சித்தளி, அகூர், குன்னம், போளி, மருவத்தூர், கொட்டரை பனங்கூர், சாத்தனூர், ஓதியம், ஆதனூர், சிறுகண்பூர், கொளக்கானத்தம் ஆகிய கிராமங்களின் ஏழை மக்கள் ஜிப்சம் என்ற கல் தோண்டும் பணிகளில் தனியார் நிறுவனங்களின் கீழ் பணிபுரிந்து வருகின்றனர். ஆகவே அந்தப் பணியினை அரசே ஏற்று தொழிற்சாலை நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1982-83 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சொல்வதற்கு வாய்ப்பு தந்த உங்களுக்கு என்னுடைய நன்றியை முதலிலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த விவாதத்திலே கலந்து கொண்ட ஆளும் கட்சி மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அந்தப் பட்ஜெட்டைப் பற்றி, மிக அற்புதமாகப் பாராட்டி பேசியதைக் கேட்டோம். என்றாலும் கூட, நாவலர் அவர்கள் அளித்த இந்த அறிக்கையைப் பற்றி, இந்த மன்றத்திலே இருக்கிற எதிர்க்கட்சித் தலைவர்களும், ஆளும் கட்சி உறுப்பினர்களும் விவாதித்துக் கொண்டிருக்கிறோமே, இந்த அறிக்கையைப் பற்றி பொது மக்களும் என்ன கருத்து தெரிவித்திருக்கிறார்கள் என்பதைப் பற்றி நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வெறும் தடபுடல் பேச்சுத்தான் மிச்சம் என்று இந்திரா காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் மதிப்பிற்குரிய ஹாஜா செரீப் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். என்.ஜி.ஓ க்கள், அரிசனங்கள், விவசாயிகள், வியாபாரிகள், வியாபாரச் சங்கத் தலைவர்கள் ஆகிய அனைவருக்கும், விரக்தி, வேதனை, பெருத்த ஏமாற்றம், வரலாற்றில் இல்லாத அளவுக்கு என். ஜி. ஓக்களுக்குப் பெருத்த ஏமாற்றம், மிகுந்த ஏமாற்றம், மக்களின் வாழ்க்கைக்கு இங்கே பாராட்டிப் கருத்துக்களை மட்டும் சொல்லி விடை பெறுகிறேன்.

அவர்களின் முன்னேற்றத்திற்கு எந்தவித பயனும் இல்லாத பட்ஜெட், இறுதியாக இது ஒரு சூனியமான பட்ஜெட் என்று தீக்கதிர் பத்திரிகை எழுதத் தக்க அளவுக்கு, இந்த விவாதத்தை நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம்.

என்னைப் பொறுத்தவரையில், சுருக்கமாக நான் இரண்டொரு கருத்துக்களை மட்டும் சொல்லி விடைபெறுகிறேன். இங்கே பேசிய பல உறுப்பினர்களும், கூடுதலாகப் பள்ளிகள் கட்டுவதற்கு பாராட்டி கட்டுவது, கல்லூரிகளுக்குக் கட்டிடம் கட்டுவது, மருத்துவ மனைகள் அமைப்பது ஆகியவைகளைப் பற்றி மிகப் பிரமாதமாக புகழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எந்த ஆட்சி வந்தாலும் எந்தக் காலத்திலும் இப்படிப்பட்ட திட்டங்களை நடை முறைப்படுத்துவார்கள். இது அன்றாட நடவடிக்கையாகும். இது ஒரு அடிப்படை கடமையுமாகும். அவைகளைச் சாதனை என்று எடுத்துக்கொள்கிற நோக்கிலேதான் நாங்கள் கருத்து வேறுபாடுகளைக் கொள்கிறோம். சாதனை என்பது இந்தத் தமிழ் நாட்டு மக்களுக்கு நன்கு நிலைத்து, நீண்ட காலம் என்றைக்கும் பயன்படக் கூடிய அளவுக்கு சிறந்த திட்டங்களை என்றைக்கும் வருவாய் வரக் கூடிய திட்டங்களை, இந்த நாட்டின் பொருளாதாரத்தை வளர்க்கக்கூடிய திட்டங்களை உருவாக்குவதில்தான், புதிய திட்டங்கள், சாதனைத் திட்டங்களே தவிர, பள்ளிக்கூடம் கட்டுவது என்பது மட்டும் பெரிது அல்ல.

அப்படி அதுதான் பெரிது என்றால் ராணி மங்கம்மாள் கட்டிய கடைத் தெருக் கட்டிடத்திலேதான், திருச்சியிலே கலெக்டர் ஆபீஸ் இருக்கிறது. அதற்காக, ராணி மங்கம்மாளை நாம் ஆளவிடவில்லை. யூனிவர்சிட்டி பில்டிங் கட்டியவர்கள் வெள்ளைக்காரர்கள்தான். அதற்காக அவர்களை நாம் தொடர்ந்து ஆளவிட்டுக் கொண்டிருக்கவில்லை. இவைதான் எல்லாம் சாதாரணமாக நடைபெறக்கூடிய காரியங்கள் ஆகும். எந்த ஆட்சி வந்தாலும், 1,500 கோடி ரூபாய்க்கு மேல் வருமானம் வருகிற, அது என்னதான் பற்றாக்குறை பட்ஜெட்டாக இருந்தாலும் கூட, அந்தப் பணத்தை வைத்துக் கொண்டு நம்முடைய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, வருமானத்தை உயர்த்தி ஏதாவது காரியங்களை ஆக்கித் தருகிறீர்களா என்ற அந்த நோக்கிலேதான் இரண்டு கருத்துக்களை மட்டும் சொல்லி விடைபெறுகிறேன்.





1980-81, 1981-82 ஆகிய நிதிநிலை அறிக்கையில் நாவலர் அவர்கள் அளித்த பல்வேறு திட்டங்களுக்கு—தேர்தல் அறிக்கையிலே சொன்ன உறுதிமொழிகளை நான் குறிப்பிடவில்லை—அது காற்றிலே கலந்துவிட்டது. ஆனால் நீங்கள் அறிவித்த திட்டங்களைப் பற்றி, இலட்சியங்களைப் பற்றி, இந்த அறிக்கையிலே எதுவும் குறிப்பிடக் காணோம். தொடர் குறிப்பும் காணோம் என்பது, தொடர்ந்து இந்த 3 பட்ஜெட்டுகளைப் படித்து வந்தவர்களுக்குத் தெரியும். நாவலர் அவர்களுக்கும் நிச்சயமாகத் தெரியும்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக ஒரு லட்சம் பேர்களுக்குக் கடன் வசதி, பிற வசதி போன்றவைகள் கிடைக்கும் என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்களே, 1980-81-லே, ஆனால் இந்த ஆண்டு பட்ஜெட்டிலே அதைப்பற்றி குறிப்பிடுகையில் 20,000 பேர்களுக்குக் கடன் கொடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் போன பட்ஜெட்டிலே 40,000 பேர்கள் அதிலே மெம்பர்களாக ஆக்கப்படுவார்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் அவைகள் பற்றிய விவரம் இதில் இல்லை.

(இரவு 8.20)

என்றைக்கு அந்த இலட்சியத்தை அடைவது? ஆயிரம் பேர்களுக்கு மோட்டார் பொருத்திய ரிக்ஷாக்கள் தரப்படும் என்று சொல்லப்பட்டது. அந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதா? (மணியடிக்கப்பட்டது.) இறுதியாக ஒன்றை மட்டும் சொல்லி விடைபெறுகிறேன். குறிப்புக்களைக் கூட படித்துக் காட்டப் போவதில்லை. அவை நாவலர் அவர்களுக்கும் இந்த மன்றத்திற்கும் உபயோகமாகயிருக்கும்.

நூறு கோடி ரூபாய் கவர்ன்மெண்ட் ரெவின்யூ எடுத்து சத்துணவு தரப்படும் என்று, வறுமைக்கோட்டை விட்டுவிட்டு எழ்மைக்கோட்டிற்கு வந்து விட்டார்கள் இந்த ஆண்டு. அந்த 100 கோடி ரூபாய் திட்டத்தை, ஏழைக் குழந்தைகளுக்கு இலவச உணவு அளிக்கும் திட்டத்தை, மனிதாபிமான முடிவு என்ற கருத்தில் பாராட்டுகிறேன். நானும் ஏழைக் குடும்பத்திலே பிறந்து வளர்ந்தவன்தான். ஆனால், அதுவல்ல பிரச்சினை. இந்த வகையில் திட்டம் போடுவதற்கு முன் அதிகாரிகளைக் கலந்தீர்களா? அறிவிப்பு செய்துவிட்டுத்தான் மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கலக்கிறீர்கள். வண்டிக்குப் பின்னால் குதிரையைப் பூட்டுவதுபோல்தான் நீங்கள் திட்டங்களைப் போடுகிறீர்கள். போட்டுவிட்டு வரையைத் தேடிக் கொண்டு இருக்கிறீர்கள்.

அவர்களின் முன்னேற்றத்திற்கு எந்தவித பயனும் இல்லாத பட்ஜெட், இறுதியாக இது ஒரு சூனியமான பட்ஜெட் என்று தீக்கதிர் பத்திரிகை எழுதத் தக்க அளவுக்கு, இந்த விவாதத்தை நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம்.

என்னைப் பொறுத்தவரையில், சுருக்கமாக நான் இரண்டொரு கருத்துக்களை மட்டும் சொல்லி விடைபெறுகிறேன். இங்கே பாராட்டி பேசிய பல உறுப்பினர்களும், கூடுதலாகப் பள்ளிகள் கட்டுவதற்கு கட்டிடம் கட்டுவது, கல்லூரிகளுக்குக் கட்டிடம் கட்டுவது, மருத்துவ மனைகள் அமைப்பது ஆகியவைகளைப் பற்றி மிகப் பிரமாதமாக புகழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எந்த ஆட்சி வந்தாலும் எந்தக் காலத்திலும் இப்படிப்பட்ட திட்டங்களை நடை முறைப்படுத்துவார்கள். இது அன்றாட நடவடிக்கையாகும். இது ஒரு அடிப்படை கடமையுமாகும். அவைகளைச் சாதனை என்று எடுத்துக்கொள்கிற நேரத்திலேதான் நாங்கள் கருத்து வேறுபாடுகளைக் கொள்கிறோம். சாதனை என்பது இந்தத் தமிழ் நாட்டு மக்களுக்கு நன்கு நிலைத்து, நீண்ட காலம் என்றைக்கும் பயன்படக் கூடிய அளவுக்கு சிறந்த திட்டங்களை என்றைக்கும் வருவாய் வரக் கூடிய திட்டங்களை, இந்த நாட்டின் பொருளாதாரத்தை வளர்க்கக்கூடிய திட்டங்களை உருவாக்குவதில்தான், புதிய திட்டங்கள், சாதனைத் திட்டங்களே தவிர, பள்ளிக்கூடம் கட்டுவது என்பது மட்டும் பெரிது அல்ல.

அப்படி அதுதான் பெரிது என்றால் ராணி மங்கம்மாள் கட்டிய கடைத் தெருக் கட்டிடத்திலேதான், திருச்சியிலே கலெக்டர் ஆபீஸ் இருக்கிறது. அதற்காக, ராணி மங்கம்மாளை நாம் ஆளவிடவில்லை. யூனிவர்சிட்டி பில்டிங் கட்டியவர்கள் வெள்ளைக்காரர்கள்தான். அதற்காக அவர்களை நாம் தொடர்ந்து ஆளவிட்டுக் கொண்டிருக்கவில்லை. இவைகள் எல்லாம் சாதாரணமாக நடைபெறக்கூடிய காரியங்கள் ஆகும். எந்த ஆட்சி வந்தாலும், 1,500 கோடி ரூபாய்க்கு மேல் வருமானம் வருகிற, அது என்னதான் பற்றாக்குறை பட்ஜெட்டாக இருந்தாலும் கூட, அந்தப் பணத்தை வைத்துக் கொண்டு நம்முடைய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, வருமானத்தை உயர்த்தி ஏதாவது காரியங்களை ஆக்கித் தருகிறீர்களா என்ற அந்த முறையிலேதான் இரண்டு கருத்துக்களை மட்டும் சொல்லி விடைபெற [illegible].





1980-81, 1981-82 ஆகிய நிதிநிலை அறிக்கையில் நாவலர் அவர்கள் அளித்த பல்வேறு திட்டங்களுக்கு—தேர்தல் அறிக்கையிலே சொன்ன உறுதிமொழிகளை நான் குறிப்பிடவில்லை—அது காற்றிலே கலந்துவிட்டது. ஆனால் நீங்கள் அறிவித்த திட்டங்களைப் பற்றி, இலட்சியங்களைப் பற்றி, இந்த அறிக்கையிலே எதுவும் குறிப்பிடக் காணோம். தொடர் குறிப்பும் காணோம் என்பது, தொடர்ந்து இந்த 3 பட்ஜெட்டுகளைப் படித்து வந்தவர்களுக்குத் தெரியும். நாவலர் அவர்களுக்கும் நிச்சயமாகத் தெரியும்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக ஒரு லட்சம் பேர்களுக்குக் கடன் வசதி, பிற வசதி போன்றவைகள் கிடைக்கும் என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்களே, 1980-81-லே, ஆனால் இந்த ஆண்டு பட்ஜெட்டிலே அதைப்பற்றி குறிப்பிடுகையில் 20,000 பேர்களுக்குக் கடன் கொடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் போன பட்ஜெட்டிலே 40,000 பேர்கள் அதிலே மெம்பர்களாக ஆக்கப்படுவார்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் அவைகள் பற்றிய விவரம் இதில் இல்லை.

(இரவு 8.20)

என்றைக்கு அந்த இலட்சியத்தை அடைவது? ஆயிரம் பேர்களுக்கு மோட்டார் பொருத்திய ரிக்ஷாக்கள் தரப்படும் என்று சொல்லப்பட்டது. அந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதா? (மணியடிக்கப்பட்டது.) இறுதியாக ஒன்றை மட்டும் சொல்லி விடைபெறுகிறேன். குறிப்புக்களைக் கூட படித்துக் காட்டப் போவதில்லை. அவை நாவலர் அவர்களுக்கும் இந்த மன்றத்திற்கும் உபயோகமாகயிருக்கும்.

நூறு கோடி ரூபாய் கவர்ன்மெண்ட் ரெவின்யூ எடுத்து சத்துணவு தரப்படும் என்று வறுமைக்கோட்டை விட்டுவிட்டு ஏழ்மைக்கோட்டிற்கு வந்து விட்டார்கள் இந்த ஆண்டு. அந்த 100 கோடி ரூபாய் திட்டத்தை, ஏழைக் குழந்தைகளுக்கு இலவச உணவு அளிக்கும் திட்டத்தை, மனிதாபிமான முறை என்ற கருத்தில் பாராட்டுகிறேன். நானும் ஏழைக் குடும்பத்திலே பிறந்து வளர்ந்தவன்தான். ஆனால், அதுவல்ல பிரச்சினை. இந்த வகை யில் திட்டம் போடுவதற்கு முன் அதிகாரிகளைக் கலந்தீர்களா? அறிவிப்பு செய்துவிட்டுத்தான் மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கலக்கிறீர்கள். வண்டிக்குப் பின்னால் குதிரையைப் பூட்டுவதுபோல்தான் நீங்கள் திட்டங்களைப் போடுகிறீர்கள். போட்டுவிட்டு கையைப் பிசைந்து கொண்டு [illegible]

[1982 மார்ச் 5

திரு. ஜி. கே. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவரவர்களே, 1982-83 ஆம்
ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தமட்டில் இங்கே காலையி
லிருந்து பேசிய உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் அவரவர்கள் அனுபவங்
களிலிருந்து அவரவர்கள் விமர்சனங்களை எடுத்து வைத்திருக்கிறார்கள்
என்றே நான் கருதுகிறேன். ஆனால் நான் அதிகமாக அந்த விமர்சனங்களுக்
குள்ளே போய் இன்னொரு விமர்சனத்திற்குப் போக காலம் இடம் கொடுக்காது
என்றே கருதுகிறேன். இப்போது பசி நேரமாக இருந்து கொண்டிருக்
கிறது. நீங்களும் கொஞ்சம் சோர்வாக இருக்கிறீர்கள் என்று கருதுகிறேன்;
இருந்தாலும் இந்த பட்ஜெட்டைப் பொறுத்தமட்டில் சத்துணவுத் திட்டம்
என்ற இந்த 100 கோடி ரூபாய் திட்டத்தை புரட்சித் தலைவர் அவர்கள் சரி
யான முறையில் இங்கே பயன்படுத்தியிருக்கிறார்கள் என்று கூறுகிறேன். இது
பாரதி நூற்றாண்டு விழா. தனி ஒருவனுக்கு உணவு இல்லையெனில் ஜகத்
தினை அழித்திடுவோம் என்று சொன்ன பாரதியின் நினைவாக இன்றைக்கு
இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதைப் பார்க்கிறபோது
எந்த உணர்வோடு அதைப் பயன்படுத்த வேண்டும் என்பது காலத்தால் நீங்கள்
பின்னால் இருந்து பார்க்க வேண்டுமே தவிர எதைச் செய்தாலும் குற்றமாகவே
எடுத்துக் கொண்டு வேண்டாத பெண்டாட்டி கை பட்டால் குற்றம், கால்
பட்டால் குற்றம் என்ற உணர்வில் விமர்சனம் செய்ய போகக் கூடாது. அந்த
உணர்வில் பார்க்கிறபோது மிகச் சிறந்த அத்திட்டத்தை பாராட்டக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

தொழில் துறையில் நம் மாநிலம் மிகவும் பின்தங்கியிருக்கிறது.
மத்திய அரசை இவர்கள் சரியாக அணுகவில்லை என்று திரு. சுந்தராஜ்
அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் அவர்களுக்கு ஒன்று பணிவோடு கூறிக்
கொள்ள விரும்புகிறேன். தொழில் துறையில் வளர்ச்சிக்கு எந்தளவிற்கு
முன்னர் ஆண்டபோது இருந்தது, இப்போது எந்தளவிற்கு அதிகமான சத
விகிதம் ஏற்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்து பார்க்க வேண்டும். 1961-ல்
7.6 சதவிகிதம் என்றிருந்தது. 1978-ல் 10.6 சதவிகிதம் ஆக இருந்தது.
1981-ல் 307.8 கோடி ரூபாய் தொகை பெற்று அனைத்து மாநிலங்களுக்கும்
கிடைத்த மொத்தத் தொகையில் ஐந்தில் ஒரு பங்கு என்ற முறையில்
பெருமைப்படத்தக்க அளவில் தமிழ்நாடு தன்னிறைவு பெற்றிருக்கிறது.
இதெல்லாம் அமைச்சர்கள் முயற்சி என்று மனம் திறந்து பாராட்டாவிட்டா
லும் குறை கூறுகிற நிலைக்குப் பயன்படுத்திக் [illegible]



1982 மார்ச் 5] [திரு. ஜி. கே. சுப்பிரமணியன்]

ஒரு சின்னக் கருத்தைச் சொல்கிறேன். திரைப்படத்தில் கண்ட காட்சியைச்
சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நாடோடி மன்னன் படத்தில் வருகிறது.
திரு. சுந்தரராஜ் அவர்கள் சொன்னதற்காகச் சொல்லக் கடமைப்
பட்டிருக்கிறேன். இரண்டு மன்னர்கள் சந்திக்கிற கட்டத்தில் ஒரு மன்னன்
கேட்பார். நண்பா, நீ என்னைப் போல் இருக்கிறாயே என்று கேட்பார்.
அதற்கு இன்னொரு நண்பர் சொல்வார், அதுதான் எனக்கும் ஆச்சரியமாக
இருக்கிறது. நீயும் என்னைப்போல் இருக்கிறாயே என்று சொல்வார்.
அதற்கு மன்னவனாக நடிக்கிற கதாநாயகன் சொல்வார், நீங்கள் புரட்சிக்
கூட்டத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறீர்களே என்பார். உங்கள் புரட்சி
யாரைப் பற்றியது என்று கேட்பார். அதற்கு அந்த நாடோடி சொல்வார்.
எங்கள் புரட்சி ஆளைத் தீர்த்துக் கட்டுவதற்கு இல்லை. கொள்கையை மாற்றி
காட்டுவதாகும் என்பார். அதற்கு அவர் சொல்வார், மக்கள் ஆட்சித்
தத்துவப்படி நாங்கள் சொல்வதை நிறைவேற்றுவதுதான் எங்கள் புரட்சி
என்பார். அதற்கு அந்த மன்னன் சொல்வார். அப்படியானால் உங்கள்
கூட்டத்தில் நானும் வந்துவிட்டால் என்ன என்று சொல்வார். அதற்கு அவர்
சொல்வார், மன்னா, நீங்களும் அந்தக் கூட்டத்தில் சேர்ந்து விட்டால் நாங்கள்
யாரை எதிர்த்துப் போராடுவது என்று குறிப்பிடுவார். இதை எதற்காகச்
சொல்கிறேன் ? அப்போது சொல்வார், என் மந்திரி இருக்கிறார்,
அதிகாரிகள் இருக்கிறார்கள், குருதேவர் இருக்கிறார், அவர்களையெல்லாம்
வைத்துப் போராடலாமே என்று குறிப்பிடுவார்கள். இங்கே தான், மத்தியிலே
நன்றாக இருக்கிறார்கள். மாநிலத்திலும் நன்றாக இருக்கிறார்கள்.
இடையிலே இருப்பவர்கள் தான் யார் என்பதை அடையாளம் காட்டி,
அவ்வப்போது நாங்கள் களைந்து எடுத்துவிட்டு, சிறந்த திட்டங்களை
புரட்சித் தலைவர் அவர்கள் போட்டு, பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்
என்பதை நான் இந்த நோக்கிலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதை எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்றால், திட்டங்களைப்
போடுவதற்கு முன்பாக, எந்தத் திட்டத்தைப் போட்டாலும், அது
ஐந்தாண்டுத் திட்டமானாலும், அது 10 ஆண்டுகள் கடந்துதான் நடக்கக்
கூடிய சூழ்நிலை எல்லா ஆட்சியிலும் நடந்து வந்திருக்கிறது. நாம் சுதந்திரம்
பெற்று 33 ஆண்டுகள் ஆகிவிட்டது என்று சொன்னீர்கள். 33 ஆண்டுகளாக
இருந்து, இதுவரையிலும் மக்களுடைய அடிப்படைத் தேவைகளை புரிந்து
கொண்டு, எந்த ஆட்சியாலும் அமுல்படுத்தாத, தன்னிறைவுத் திட்டத்தை
புரட்சித் தலைவர் ஆட்சிதான் இன்றைக்கு நிறைவுபடுத்தியிருக்கிறது.

என்னுடைய தொகுதிக்கு வருகிறேன். தயவுசெய்து பேரவைத் தலைவர் அவர்கள் மைக்கைத் தட்டாமல் இருந்தால், சீக்கிரம் முடித்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோரும் சோர்வாக இருக்கிறார்கள் நீங்களும் சோர்வாக இருக்கிறீர்கள். சீக்கிரம் முடியுங்கள்.

திரு. ஜி. கே. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியைப் பொறுத்த மட்டிலும், கீழ்பவானி அணைக்கட்டுத் திட்டம் சார்பாக, ஏறத்தாழ 10 தொகுதிகளுக்கு என் தொகுதியிலே இருந்துதான் தண்ணீர் போகிறது. இதைப் பற்றி இன்னும் விளக்கமாகச் சொல்ல வேண்டுமானால், மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜன் அவர்கள் இதைத் தனியாக கவனிக்க வேண்டும். ஏனென்றால், இதற்கு நாங்கள் மத்திய சர்க்காரைத் தான் அணுக வேண்டியிருக்கிறது. ஒரு தலைவன், தலைவியிடம் சொல்கிறான் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது கதை வேண்டாம். தொகுதியைப் பற்றி மட்டும் சொல்லுங்கள்.

திரு. ஜி. கே. சுப்பிரமணியன் : பிரச்னைக்குத் தான் வருகிறேன் அதிலே ஒரு சின்ன கதை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்ன பண்ண வேண்டும் என்பதை மட்டும் சொல்லுங்கள்.

திரு. ஜி. கே. சுப்பிரமணியன் : இந்தப் பிரச்னையைப் பற்றிச் சொல்ல தயவுசெய்து அனுமதியுங்கள். நான் சொல்ல வந்தது, தலைவி தலைவனிடம் கேட்கிறாள். உன்னுடைய தாயின் இதயம் எனக்குத் தேவை என்று கேட்கிறாள். தலைவன், தலைவியினுடைய அந்தக் காதல் உணர்வைப் புரிந்துகொண்டு, தாயின் நெஞ்சைப் பிளந்து, அவளுடைய இதயத்தை எடுத்து வருகிறான். அப்போது, தடுத்து இதயம் தவறி கீழே விழுந்து விடுகிறது. அப்போது அந்த இதயம் சொல்கிறது, தம்பி பார்த்து வரக்கூடாதா, நான் உடைந்து விட்டால், உன் காதலி உன்னைக் கோபித்துக் கொள்ள மாட்டாளா என்று தாயன்போடு, அந்தத் தாயின் இதயம் சொல்கிறது. அதைப்போல, என் தொகுதியிலிருந்து, கீழ் பவானி அணைக்கட்டிலிருந்து ஏறத்தாழ 9 தொகுதிகளுக்குத் தண்ணீர் கொடுத்து விட்டு, என் தொகுதி கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறது. இதை எவராவது இதுவரை எடுத்துச் சொல்லியிருக்கிறார்களா என்றால், நிச்சயமாக



இல்லை. எனவே, இன்றைக்கு இந்த அப்பர் பவானித் திட்டத்திற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டும், அல்லது குளத்துப் பாசனத் திட்டத்தைக் கொண்டு வந்து, குளங்களை நிரப்பி, அதன் மூலம் கிணறுகளுக்கு தண்ணீர் விட்டு, வறண்டு இருக்கின்ற அந்தப் பாலைவனப் பகுதியை சோலைவனமாக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இதைச் சொன்னால்தான், அது புரியும் என்ற உணர்வோடுதான் சொன்னேன். இது முக்கியமான ஒரு திட்டம்.

ஆனால், அதே நோக்கில் போராட்டம் என்ற விஷயத்தில் சிலருடைய பேச்சைக் கேட்டுக் கொண்டு, பல பேர். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 6—3—1982 ஆம் தேதி காலை 9.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 8-28 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## (8) பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

117. சென்னை மாநகரைச் சேர்ந்த அடையாறு திட்டப் பிரிவு வேளூர்ப் பகுதிக்குரிய விரிவான மேம்பாட்டுத் திட்டத்தையும் அதன் அனைத்து இணைப்புகளையும் பொது மக்கள் பார்வையிடுதல் குறித்து வீட்டு-வசதி நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 17—10—1980 ஆம் தேதியிடப் பெற்ற 1864 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர்-நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 128 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

ஏதுமில்லை

## இணைப்பு 1

[143-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 370-க்கான விடையைக் காண்க.]

விவர அறிக்கை

| சலுகைகளின் விவரங்கள். | எண்ணிக்கை, பயனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை. | தொகை, அரசு அளித்த சலுகைகளின் தொகை. (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. மத்திய கால மாற்றுக் கடன்கள்/தவணை நீட்டித்த மத்திய கால மாற்றுக் கடன்கள் மீதான சாதாரண வட்டி தள்ளுபடி .. .. .. .. | 1.91 | 337.18 |
| 2. விவசாய சேவை கூட்டுறவு சங்கங்களின் குறுகிய கால விவசாயக் கடன்கள் மீதான அபராத வட்டி தள்ளுபடி .. .. .. .. | 3.04 | 140.20 |
| 3. நிலவள வங்கிகளின் நீண்டகால விவசாய கடன்கள் மீதான அபராத வட்டி தள்ளுபடி .. .. | 0.26 | 7.38 |
| 4. சிறு விவசாயிகளின் 31—3—1980-ல் நிலுவையிலுள்ள மத்திய கால மாற்றுக் கடன்கள் மற்றும் தவணை நீட்டித்த மத்திய கால மாற்றுக் கடன்கள் வட்டியுடன் தள்ளுபடி .. .. .. | 4.52 | 4,963.56 |
| 5. 1—7—1975 முதல் 31—3—1980 வரை சிறு விவசாயிகள் மத்திய கால மாற்றுக் கடன்கள் மற்றும் தவணை நீட்டித்த மத்திய கால மாற்று கடன்கள் செலுத்தியதை வட்டியுடன் அவர்களுக்கே திருப்பியளித்தது. | 9.29 | 2,35.877 |
| 6. 30—6—1981-க்குள் குறுகிய காலக் கடன் நிலுவைகளை திருப்பிச் செலுத்திய சிறு விவசாயிகளுக்கு அளித்த வட்டி, மற்றும் அபராத வட்டி சலுகைகள் மற்றும் இதர விவசாயிகளுக்கு அளித்த அபராத வட்டி சலுகைகள் 1—4—1980 முதல் 31—12—1980 வரை குறுகிய காலக் கடன்களுக்கு சிறு விவசாயிகள் செலுத்திய வட்டி அபராத வட்டியும் இதர விவசாயிகள் செலுத்திய அபராத வட்டியும் அவர்களுக்கே திருப்பியளித்தது. இச்சலுகை 31—12—1981 வரை நீடிக்கப்பட்டுள்ளது. இதனால் மேலும் பலர் பயனடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. .. .. .. | 8.46 | 1,460.42 |

## தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

---

**சனிக்கிழமை, 1982, மார்ச் 6**

**துன்மதி, மாசி 22, திருவள்ளுவர் 2013**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9—00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. ராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

"தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு"

காலம் தாழ்த்தாத தன்மை, கல்வியுடைமை, துணிவுடைமை ஆகிய இந்த மூன்று பண்புகளும் நிலத்தை ஆளும் அரசனுக்கு நீங்காமல் இருக்க வேண்டியவை.

### 1. வினாக்கள்— விடைகள்.

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

**செயங்கொண்டத்தில் முந்திரி தொழிற்சாலை அமைக்கும் திட்டம்.**

*வினா எண். 381— திரு. பி. தங்கவேலு : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் உடையார்பாளையம் வட்டம், செயங்கொண்டத்தில் முந்திரி தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் இந்தத் திட்டத்தை அரசு எப்போது நிறைவேற்றும் ?

## இணைப்பு II

(155 ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 376-க்கான விடையைக் காண்க.]

இக்கூட்டத்தின் முடிவுகள் பின்வருமாறு :

(1) குடிமராமத்து.—தமிழ் நாடு பஞ்சாயத்து யூனியன் சட்டம் 1958 இல் குடிமராமத்து பற்றிய பகுதிகளின் சுருக்கம் ஆங்கிலம் மற்றும் மாவட்டங்களில் எல்லா உறுப்பினர்களுக்கும் அவர்களது கருத்துக்களை எளிதாக சுற்றனுப்பப்படலாம் என்றும், அடுத்து நடைபெற இருக்கின்ற கூட்டத்தில் குடிமராமத்து பற்றி முதலில் விரிவாக விவாதிக்கலாம் என்று முடிவு எடுக்கப்பட்டது.

(2) சிறிய பாசனத் திட்டக் குளங்களை பொதுப் பணித் துறையிடம் ஒப்படைத்தல்.—50 ஏக்கர்களுக்கு மேற்பட்ட ஆயக்கட்டுகளைக் கொண்ட குளங்களை பொதுப் பணித் துறையிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் 50 ஏக்கருக்குக் குறைவான ஆயக்கட்டுகளைக் கொண்ட ஏரிகளை பஞ்சாயத்து யூனியன்களே தொடர்ந்து பராமரித்து வரவேண்டும் என்றும் குழு ஒருமனதாக தீர்மானித்தது. இதன் மீது நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களின் கருத்துக்களையும் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கருத்துக்களையும் பெற்று பின்பு முதல் அமைச்சர் அவர்களுக்கு இறுதி முடிவு எடுப்பதற்காக அனுப்பி வைக்கப்படும் என்றும் முடிவு எடுக்கப்பட்டது.

(3) சமுதாயக் கிணறுகள்.—சமுதாயக் கிணறுகள் தோண்டப்பட்டு, காற்றாடிகள் ( Wind Mills ) மூலம் பாசன வசதி செய்யப்படும் வாய்ப்புகளைப் பற்றி பூண்டியில் உள்ள ஆராய்ச்சி நிலையம் ஆராய்ந்து வரும் விவரங்களை அடுத்தக் கூட்டத்தில் குழு முன் வைக்கப்பட வேண்டும் என்றும் முடிவு எடுக்கப்பட்டது.

(4) குளங்களின் படுகைகளில் ஆக்கிரமிப்புகள் செய்வதைத் தடுக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

(5) தொழில் நுட்ப சாத்தியக்கூறுகள், நிதி வசதி இவற்றைக் கருத்திற் [illegible] பின் தங்கிய பகுதிகளில் சில கோடி ரூபாய் மதிப்புள்ள பாசனத் [illegible] எடுத்துக்கொள்ளவேண்டும்.



(6) வைகைக் கால்வாய்களுக்குக் கரை பூசுதல் பற்றிய ஆய்வு வேலைகளை எடுத்துக்கொள்ள வேண்டும்.

(7) மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளில் உள்ள உபரிநீரைத் தமிழ் நாட்டில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குத் திருப்பி விடவேண்டும்.

(இ) உறுப்பினர்கள் யார் யார் ?

(1) பாசன அமைச்சர் (தலைவர்)

(2) திரு. எம். எஸ். மாணிக்கம், எம்.எல்.ஏ.

(3) திரு. மா. சின்னராஜ், எம்.எல்.ஏ.

(4) திரு. எம். கே. இராசமாணிக்கம், எம்.எல்.ஏ.

(5) திரு. பொ. விஜயராகவன், எம்.எல்.ஏ.

(6) திரு. உ. சுப்பிரமணியன், எம்.எல்.ஏ.

(7) திரு. எஸ். ஆண்டித்தேவர், எம்.எல்.ஏ.

(8) திரு. பாபு ஜனார்த்தனன், எம்.எல்.ஏ.

(9) திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள், எம்.எல்.ஏ.

(10) திரு. ரா. கிருஷ்ணன், எம்.எல்.ஏ.

(11) திரு. செ. செம்மலை, எம்.எல்.ஏ.

(12) திரு. வி. கருப்பசாமி பாண்டியன், எம்.எல்.ஏ.

(13) திரு. த. மாரிமுத்து, எம்.எல்.ஏ.

(14) திரு. வ. சத்தியமூர்த்தி, எம்.எல்.ஏ.

(15) திரு. இரா. சண்முகம், எம்.எல்.ஏ.

(16) திரு. க. இராமமூர்த்தி, எம். எல் சி

(17) திரு. ப. மாணிக்கம், எம்.பி.

(18) திரு. டாக்டர் தி. இரா. சனார்த்தனம், எம்.எல்.சி.

(19) திரு. செல்வி அ. லீலாவதி, எம்.எல்.சி.

(20) திரு. ம. சங்கரலிங்கம், எம்.எல்.சி.

(21) திரு. வி. வி. வி. ஆனந்தம், எம்.எல்.சி

(22) திரு. காடுவெட்டி கண்ணப்பன், எம்.எல்.சி.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் முந்திரி தொழிலில் எத்தனை பேர்கள் ஈடுபட்டுள்ளனர் ? இந்த தொழிலை அபிவிருத்தி செய்ய அரசிற்கு முற்போக்கான திட்டம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்திரி தொழிற்சாலை பொறுத்த வரையில் தமிழ்நாட்டில் ஒரு இலட்சம் பேர் இதிலே ஈடுபட்டுள்ளார்கள். தமிழ் நாட்டில் 171 முந்திரி பக்குவப் படுத்தும் தொழிற்சாலைகள் இருக்கின்றன. அதிலே கன்னியா குமரி மாவட்டத்திலே 156 தொழிற்சாலைகள் இருக்கின்றன.

ஆனால் போதுமான முந்திரி பருப்புகள் அவர்களுக்கு கிடைக் காத காரணத்தால் தன்னிறைவை பெறவேண்டுமென்ற நோக் கோடு தமிழக அரசு உலக வங்கியுடன் 37 கோடி ரூபாய் முதலீட்டில் வரும் ஐந்தாண்டுகளில் முந்திரி உற்பத்தியை பெருக்க நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. இது ஒன்பது மாவட்டங்களிலே உலக வங்கி உதவியுடன் 37 கோடி ரூபாய் முதலீட்டில் செயல் படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொலகிறபோது இந்தத் திட்டத்தை ஏற்படுத்துவதற்கான அவசியம் இல்லையென்று சொன்னார்கள். வருங்காலத்தில் நாம் உலக வங்கியிடம் கடன் வாங்கி முந்திரித் தொழிலை அபிவிருத்தி செய்கிற நிலை அரசிடம் இருக்கிறதென்று சொன் னார்கள். திருச்சி மாவட்டம் உடையார்பாளையம் தாலுகா மிகவும் பின்தங்கிய தாலுகா என்பது மட்டுமலல, அங்கே முந்திரி அதிகமாக விளைந்து கொண்டிருக்கிறது. கிட்டத்தட்ட 100 ஏக் கரில் அந்த தாலுகாவில முந்திரி மரங்கள் இருக்கின்றன. தன் னிறைவு என்பதற்கு உலக வங்கி மூலம் கடன் வாங்கி முந்திரி உற்பத்தி செய்வோம் என்பதால் அபிவிருத்தி என்று சொல்வதில் உடையார்பாளையம் தாலுகாவை அரசு எடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு பதில் அளிக்கிற போது திருச்சி மாவட்டம் உடையார்பாளையம் வட்டம், ஜெயங்



கொண்டத்திலே தொழிற்சாலை அமைக்கும் திட்டம் இல்லை யென்று சொன்னேன். இந்த தொழில் வளர்வதற்கு திட்ட மில்லை என்று சொல்லவில்லை. ஒன்பது மாவட்டங்களிலே வரும்போது திருச்சி மாவட்டத்தையும் உள்ளடக்கித்தான் அது வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முந்திரி தொழிற்சாலைக்கு மூலப் பொருள் இல்லாததினால் பல தடவை தொழிற்சாலைகள் மூடப்படுகின்றன. இதற்காக மத்திய அரசாங்கத்தால் போடப் பட்டிருக்கிற கமிட்டியில் தமிழ்நாட்டிற்கு பிரதிநிதித்துவம் இல்லை என்பது உண்மையா ? அந்த பிரதிநிதித்துவத்தைப் பெறுவதற்கு தமிழ்நாடு அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேர வைத் தலைவரவர்களே, அந்த மத்திய அமைப்பில் தமிழ்நாட் டிற்குப் பிரதிநிதித்துவம் இல்லை பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமென்று தமிழக அரசு மத்திய அரசுக்கு வற்புறுத்தி எழுதியிருக்கிறது. தொடர்ந்து வற்புறுத்தும்.

திரு. பெ. திருமாறன் : பேரவைத் தலைவரவர்களே, முந் திரி உற்பத்தித் தமிழ்நாட்டிலே புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வக்கோட்டை ஆதனூர் பகுதியில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர்களில் முந்திரி சாகுபடி செய்யப்பட்டு பல மாநிலங்களுக்கு ஏற்றுமதியாகிறது. எனவே, கந்தர்வக்கோட்டையில் ஒரு முந் திரித் தொழிற்சாலையை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலைகளுக்கே மூலப்பொருள்கள் இல்லை என்பதுதான் பிரச்னை. இருந்தாலும் முந்திரி வளர்கின்ற நேரத்தில் இந்தப் பிரச்னை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சே. சகாக்கலிங்கம் : பேரவைத் தலைவரவர்களே முந்திரித் தொழிற்சாலை அமைப்பது குறித்து அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்தத் தொழிற்சாலையில் என்னென்ன தயா ரிக்கப்படுகிறது ? முந்திரிக் கொட்டையின் தோல் ஆயில் தயா ரிப்பதற்குப் பயன்படுகிறது என்று சொல்கிறார்கள். என்னென்ன ஆயில்கள் தயாரிக்கப்படுகின்றன என்று அமைச்சரவர்கள் தெரி விப்பார்களா ?

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேர வைத் தலைவரவர்களே, இதுபற்றிய குறிப்பு என்னிடத்திலே இல்லை. ஆனால், பொதுவாக முந்திரிக்கொட்டையிலிருந்து

எண்ணெய், ஜாம், பழச்சாறு தயாரிக்க பல ஆய்வுத்
திட்டங்கள் அரசின் தொழில்துறையிடத்தில் இருக்கின்றன.
அது தொடர்ந்து செயலாக்கப்படும்.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவரவர்களே, உற்
பத்தி செய்யப்படும் முந்திரி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்
படுவதாகச் சொல்லப்படுகிறது ? என்னென்ன வெளிநாடுகளுக்கு
ஏற்றுமதி செய்யப்படுகிறது ? குமரி மாவட்டத்தில் உற்பத்தி
செய்யப்படுகின்ற முந்திரி தமிழ்நாடு மாநிலத்தில் ஏற்றுமதியாக
வில்லை என்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேர
தலைவரவர்களே, அது பற்றிய குறிப்புகள் என்னிடத்திலே
இல்லை. தனிக்கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஏ. தங்கராசு : பேரவைத் தலைவரவர்களே, முந்திரி
உற்பத்தி செய்யும் மாவட்டங்கள் ஒன்பது என்று மாண்புமிகு
அமைச்சரவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அவை எந்தெந்த
மாவட்டங்கள் என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத்
தலைவரவர்களே, அதுபற்றிய குறிப்பு இப்பொழுது என்னிடத்தில்
இல்லை ஆனால், 9 மாவட்டங்களில் தென்னார்க்காடு மாவட்
டமும் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்களின்
கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவ
ரவர்களே, ஒன்பது மாவட்டங்களில் வடஆற்காடு மாவட்டமும்
இருக்குமா என்று அறியவிரும்புகிறேன். அப்படி இல்லாவிட்டா
லும்கூட, அது பின் தங்கிய மாவட்டமாக இருப்பதால் வளர்ச்சி
யுறவும், அன்னியச் செலாவாணியைப் பெறும் முறையிலும்
அந்தத் தொழில்களை விஸ்தரிப்பதற்கு ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேர
வைத்தலைவரவர்களே, அதுபற்றிய குறிப்பு எங்கேயோ இருக்
கிறது. ஆனால், அதுபற்றிய தகவலை மாண்புமிகு உறுப்பினர்
களுக்குத் தனியாகக் கொடுக்கிறேன்.





### சாத்தூரில் தொழில் முதலீட்டுக் கழகம் மூலம் தொழிற் பேட்டை அமைக்கும் திட்டம்.

*வினா எண். 382—திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகவை மாவட்டம் சாத்தூரில் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மூலமாக தொழிற்பேட்டை அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

ஆ) ஆம், எனில், எப்போது அமைக்கப்படும் ?

(இ) அதன் மதிப்பீடு என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ), (ஆ) மற்றும் (இ) : தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் (T I I C) தொழில்களுக்கு நிதியுதவி மட்டும் வழங்கி வருகிறது. அந்நிறுவனம் தொழிற்பேட்டை (Industrial Estate) துவங்கும் நடவடிக்கையில் ஈடுபடுவதில்லை.

திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே 1980 ஆம் ஆண்டு முகவை மாவட்டம் சாத்துரிலே சிட்கோ மூலமாக கட்டிடம் கட்டுவதற்கு ஆய்வு செய்யப்பட்டது ஆனால், மாண்புமிகு அமைச்சரவர்கள் இல்லை என்று சொல்கிறார்கள். இருப்பினும் சாத்தூர் வட்டத்திலே ஏதாவது, தொழில்களைத் துவங்குவதற்கு சிட்கோ மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புவதோடு நெல்லை, முகவை மாவட்டங்களில் எந்தெந்த தாலுக்காக்களில் என்னென்ன தொழிற்பேட்டைகள் உள்ளன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, முகவை மாவட்டத்தில் தற்போது காரைக்குடி, சிவகங்கை, விருதுநகர் ஆகிய இடங்களில் அரசு தொழில் பேட்டைகளும், பரமக்குடியில் தமிழ்நாடு சிறுதொழில் அபிவிருத்தி நிறுவனம் தொழில் பேட்டையும், சிவகாசியில் கூட்டுறவு தொழில் பேட்டையும் உள்ளன. திருச்சுழி, மானாமதுரை, பரமக்குடி, சிவகங்கை, காரைக்குடி, வத்திராயிருப்பு, காரியாப்பட்டி ஆகிய இடங்களில் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தினால் டைனி செக்டார்—சிறுதொழில் கூடங்களும் கட்டப்பட்டிருக்கின்றன. அதுமட்டுமல்லாமல் சிப்காட் நிறுவனத்திலுடைய சார்பாக மானாமதுரையில் ஏறத்தாழ 4 கோடி ரூபாய் முதலீட்டில் அங்கு தொழில்கூடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன என்பதனை மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

[1982 மார்ச் 6

[முற்பகல் 9—10]

திரு. நா. கு. பெருமாள் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மானாமதுரையில் கட்டப்பட்டிருப்பது போல, சாத்தூரில் அடுத்த ஆண்டு சிப்காட் மூலம் கட்டமுயற்சி செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, ஏற்கெனவே சாத்தூரை ஒட்டி கோவில்பட்டி, விருதுநகர் ஆகிய இடங்களில் முன்பே தொழிற்பேட்டைகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப் போல மானாமதுரையில் தொழிற்பேட்டை வளர்ந்த பிறகு, அடுத்து சாத்தூரினுடைய உணர்வுகள் பரிசீலிக்கப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க தலைவர் அவர்களே, இதுபோன்ற பிற்படுத்தப்பட்ட தாலுக்காக்களில் தொழிற்பேட்டைக்காக இடம் ஒதுக்குவதிலே—குறிப்பாக என்னுடைய தொகுதியிலே கப்பலூரிலே—இடம் ஒதுக்கியும் பல ஆண்டுகளாக இன்னும் தொழிற்சாலைகள் தொடங்கப்படவில்லை. அதற்கான உண்மையான இடர்ப்பாடுகளை அறிந்து, அதைக் களைந்து விரைவாக அந்தத் திட்டத்தைத் தொடங்க அரசாங்கம் திட்டமிடுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகளை மனதிலே கொண்டு பரிசீலனை செய்து தக்க நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படும்.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, மானாமதுரையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிற அந்த சிப்காட் தொழில் மையத்திற்கு ,அலுவலகக் கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. ஆனால், வேலை கூடங்கள் 4 கோடி ரூபாயில் கட்டப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அங்கே அதிகமாக தொழில் முனைவர்கள் (எண்டர்பிரைசஸ்) வராததற்குக் காரணம், அதிகாரிகள் ஒத்துழைப்பு இல்லாததா அல்லது அந்தப் பகுதிக்கேற்ற தொழில்கள் இன்னின்ன என்று அறிவிக்காதது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மானாமதுரையிலே தொழில் முனைவர்கள் வரவில்லை என்று கருத்து முழுமையானது அல்ல. மானாமதுரை தொழிற்பேட்டையில் 61.90 ஏக்கர் பட்டாநிலம், 381 ஏக்கர்கள் புறம்போக்கு நிலம் உள்ள இடத்தில் ஒதுக்கப்பட்டு இதுவரையில் [illegible] ஏக்கர் நிலத்தில் உள்ள 137 மனைகளில் 29.77 ஏக்கர் நிலத்தில் 6 தொழில் முனைவர்களுக்கு ஒதுக்கப்பட்டு அதற்கு,



1982 மார்ச் 6]

பணிகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. எதிர்காலத்திலே வர இருக்கின்ற முனைவர்களுக்கும் தக்க வசதியை செய்து தர அரசு இருக்கிறது என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 383, 384, 385 ஆகிய வினாக்கள் அமைச்சரின் வேண்டுகோளுக்கு இணங்க தள்ளிவைக்கப்பட்டுள்ளன.

**1977 ஆம் ஆண்டில் ஏற்பட்ட புயல் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பாப்பாப்பட்டி கிராம விவசாய நிலங்கள்.**

* வினா எண் 386— திரு. ரா. பெரியசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருச்சி மாவட்டம், முசிறி வட்டம், தாத்தையங்கார் பேட்டை ஒன்றியத்தைச் சார்ந்த பாப்பாப்பட்டி கிராமத்தில உள்ள சுமார் 100 ஏக்கர் நிலமும், 30 விவசாயக் கிணறுகளும், 1977 ஆம் ஆண்டு புயலினாலும், வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்டு மேற்படி நிலங்களும், கிணறுகளும் மணல் மேடாக குவிந்து விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது.

(ஆ) ஆம் எனில், ஆற்றில் இரு கரைகளையும், விவசாயநிலங்களையும், கிணறுகளையும் செப்பனிட அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) : 1977 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ளத்தால் இக்கிராமத்தி லுள்ள நிலங்கள் யாவும் பெரிதும் பாதிக்கப்படவில்லை. பாதிக்கப்பட்ட நிலங்கள் மற்றும் கிணறுகள நிலச் சொந்தக்காரர் களால சீர்திருத்தம் செய்யப்பட்டு, சாகுபடியும் செய்யப்பட்ட வருகிறது. பாண்டவ நதியின் கரையை மட்டும் உடைப்பு விட்டால் போதும் எனவும், இதற்கு நிவாரணம் தேவையிலலை எனவும் நிலச் சொந்தக்காரர்கள் தெரிவித்ததால மேற்படி மராமத்துப்பணி பொதுப்பணித் துறையினரால மேற்கொள்ளப் பட்டது. இருந்தாலும் இந்த வெள்ளத் தடுப்பை நிரந்தரமாக கடுமையாக்கையில் பாண்டவ நதியின் கரையை பலப்படுத்த ரூபாய் 6.26 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு தலைமைப் பொறியாளரின் (நீர்ப்பாசனம்) பரிசீலனையில் உள்ளது.

[1982 மார்ச் 6

## சாத்தப்பாடியில் ஊராட்சி ஒன்றிய மருத்துவ மனை திறக்கும் திட்டம்

*வினா எண். 387. திருமதி தா. இராசாம்பாள் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

அ) ஒன்றியக் குழுக்கள் கலைக்கப்பட்ட பிறகு, தலைவாசல் ஒன்றியம் சாத்தப்பாடியில் ஊராட்சி ஒன்றிய மருத்துவ மனை திறப்பதற்கு வழங்கப்பட்ட அரசின் ஆணை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதா ?

ஆ) ஆம் எனில், வீரகனூர் பேரூராட்சியில் திறக்க அரசு மறு ஆணை பிறப்பிக்குமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) மற்றும் (ஆ). சாத்தப்பாடி ஊராட்சி ஒன்றிய மருத்துவ மனையை செயல்படுத்தவும், வீரகனூரில் அரசு மருந்தகம் திறக்கவும் அரசு ஆணை ஏற்கனவே பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## கொடைக்கானல் நகரியம்.

*வினா எண் 388— திரு. என். பழனிவேல் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கொடைக்கானல் நகரியம் ஏற்கனவே நகரசபையாக இருந்தது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அந்த நகரியமாக மாற்றியதன் அவசியம் என்ன ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** (அ) ஆம்.

(ஆ) கொடைக்கானல் நகரசபையின் வருவாய் அதிகப்படுத்த முடியாத நிலையில் இருந்ததால் நகரசபையால் நகரத்தை மேம்படுத்தவும், சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்து ஈர்க்கும் பணியைச் செய்ய இயலவில்லை. ஆகவே நகரசபையை நகரியமாக மாற்றுவதால் பல பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் என்று கருதப்பட்டதால் நகரியமாக மாற்றப்பட்டது.



1982 மார்ச் 6]

**திரு. என். பழனிவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே கொடைக்கானல் ஏற்கெனவே நகரசபையாக இருந்து பிறகு நகரியமாக மாற்றியதாகச் சொன்னார்கள். அது எந்த ஆண்டு மாற்றப்பட்டது. அது நகரியமாக மாற்றப்பட்டதற்கு பின்னால் அந்த கொடைக்கானலில் எந்தவித முன்னேற்றமும் இல்லை. ஆகவே அதை மீண்டும் நகரசபையாக மாற்றுவதற்கு அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, கடந்த 1956 ல் அப்போதிருந்த கல்வி மற்றும் நிதி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களிடத்திலே மனு கொடுக்கப்பட்டு, 1958 லே அன்றிருந்த முதல்வர் மறைந்த திரு. காமராஜ் * * * அவர்களிடத்திலே மனு கொடுக்கப்பட்டு, 1959 லே தமிழ்நாடு ஆளுநர் அவர்களுக்கும் மனு கொடுக்கப்பட்டு, அதற்குப் பின்னாலே, 1960 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து அது நகரியமாக மாற்றப்பட்டது. அதற்குப் பின்னாலே தொடர்ந்து நீடிக்கின்றது. ஆனால், நகரியமாக இருப்பதன் காரணமாக, நேரடியாக மாவட்ட ஆட்சித் தலைவருடைய கவனம் அதிலே இருக்கிறது. கொடைக்கானலைப் பொறுத்த அளவில், ஏற்கனவே, கடந்த 1961 லே 10,541 பேர்கள்தான் - மக்கள் தொகையாக இருந்தது. இப்பொழுது வேண்டுமானால் அதிகரித்திருக்கலாம். ஆனாலுங்கூட, நகரியமாக இருந்தால் இன்னும் பல அடிப்படை வசதிகளை மக்களுக்குச் செய்து கொடுக்க முடியும் என்ற காரணத்திற்காகத்தான் அது நகரியமாக மாற்றப்பட்டது. மீண்டும் பழைய நிலைக்குப் போவது என்பது சரியாக இருக்காது.

**திரு. ப. நெடுமாறன் :** பெருந்தலைவர் காமராஜர் * என்று போடுவதில்லை. ஆனால் அமைச்சர் அவர்கள் காமராஜ் * என்று சொன்னார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** * * என்ற வார்த்தையை நீக்கிவிடலாம்.

**திரு. என். பழனிவேல் :** தலைவர் அவர்களே, மீண்டும் நகரசபையாக மாற்றும் முயற்சி, உத்தேசம் இல்லையென்று, அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றைக்குக் கொடைக்கானல் நகரில் போட் கிளப் என்று ஒரு கிளப் நடந்து வருகிறது. அதற்குப் பல இலட்சம் ரூபாய் வருமானம் வருவதாகவும், அதைத் தனியார்கள் நடத்துவதாகவும் தெரிகிறது. அதை அரசு ஏன் எடுத்துக் கொள்ளக்கூடாது.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

அடுத்தபடியாக, அதை நகரசபையாக மாற்றித் தர வேண்டு
மென்று அந்தப் பகுதியிலே ஆளுங்கட்சியினர் உட்பட, அனைத்துக்
கட்சியினரும் அதை நகரசபையாக மாற்றினால நாங்கள் தலை
வராகவும், உறுப்பினர்களாகவும் வர முடியும். மக்களுடைய
குறைகளை உடனுக்குடன் தீர்ப்பதற்கும், சொல்வதற்கும்
வாய்ப்பு ஏற்படும். ஆகவே, அதை மீண்டும், நகரசபையாக
ஆக்க வேண்டுமென்று சர்வ கட்சிகள் சார்பில் மனு கொடுத்தார்
களா? அந்த மனுவின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்
டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே,
கொடைக்கானலில போட் கிளப் இருக்கிறது. அது தனியாருக்குச்
சொந்தமாக இருப்பதால், இன்று வரையிலும் அவர்களால் அனு
பவிக்கப்பட்டு வருகிறது. அதை அரசாங்கமே ஏற்று, நகரியத்
திடம் ஒப்படைக்கலாம் என்கின்ற மனு பரிசிலனையில் இருந்து
வருகிறது. அதன் மூலமாக, நகரியத்தினுடைய வருமானத்தை
அதிகரிக்கவும், இன்னும் சுற்றுலாப் பயணிகளைக் கவரத்தக்க
வகையில், அந்த போட் கிளப்பை சீர்திருத்த வேண்டுமென்ற
எண்ணமும் இருக்கிறது. நான் கொடைக்கானல் சென்ற நேரத்
தில், அந்த போட் கிளப்புக்குச் சென்றிருந்தேன். அதைப்
பார்வையிட்டு, இன்னும் கவனிக்கப்படாமலும், பராமரிக்கப்
படாமலும் அந்தப் பகுதிகள் எல்லாம் இருந்து கொண்டிருக்கின்
றன என்பதைக் கண்டேன். ஆகவே, நகரியத்திற்குச் சொந்த
மாக்கி வருமானத்தை அதிகரிக்கவும், இன்னும் சுற்றுலா பயணி
களை அதிகரிக்கும் வகையில் மாற்றுவதற்கான சூழ்நிலையும்
இருக்கிறது.

மேலும் கொடைக்கானலைப் பொறுத்தவரையில், அது ஒரு
கோடை வாசஸ்தலம். அதன் காரணமாகத்தான் அது ஒரு
நகரியமாக மாற்றப்பட்டிருக்கிறது என்பது மட்டுமல்ல, இருக்கிற
கோடை வாசஸ்தலங்களில் கொடைக்கானல் மிகச் சிறந்த முக்
கிய கோடை வாசஸ்தலம் என்றுதான் சுற்றுலாப் பயணிகள்
சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அந்த அளவு சிறப்புமிக்க
ஒரு கோடை வாசஸ்தலமாக இருக்கிற காரணத்தால், அதை
அரசாங்கமே கவனிக்க ஏற்பாடு செய்துகொண்டு, அதற்குரிய
பணங்களையும் கொடுப்பதற்குரிய நிலைமைகளைப் பரிசிலனை
செய்து கொண்டிருக்கிறது. ஏற்கனவே, நகர்ப்புற வளர்ச்சித்
திட்டத்தின் அடிப்படையிலே கூட பல இலட்சங்கள் கொடுக்கப்
பட்டு, பல்வேறு வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

அதே நேரத்தில், அதை நகரசபையாக்க வேண்டுமென்ற
மனு இன்னும் வரவில்லை. உறுப்பினர் சொல்வது எனக்கு ஒரு
செய்தியாகத்தான் இருக்கிறது. ஆனாலுங்கூட நகரசபையாக
மாற்றுவதில் பல்வேறு தடங்கல்கள் இருக்கின்றன என்பதையும்



இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.
ஆகவே, நகரியமாக இருப்பதன் மூலமாகவே அந்த நகரத்தைச்
சுத்தமாக வைத்துக்கொள்ள முடியும். அதே நேரத்தில் சுகா
தாரமாக வைத்துக்கொள்ள முடியும் என்ற காரணத்திற்காக
அந்த நிலைமையிலிருந்து மாற்றப்பெறாமல் இருப்பதே நல்லது
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. நெடுமாறன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்
களே, கொடைக்கானல் சிறந்த கோடை வாசஸ்தலம் என்று
அமைச்சர் அவர்களே, அறிவித்தார்கள். இதைப்போன்ற இன்
னொரு கோடை வாசஸ்தலமாக உதகமண்டலம் நகரசபையாக
இருக்கும்போது, ஏற்கனவே நகரசபையாக இருந்த கொடைக்
கானலை மீண்டும் நகரசபையாக மாற்றுவதன் மூலம் பல
அபிவிருத்தி திட்டங்களைச் செய்ய முடியும் என்பதோடு மக்கள்
பிரதிநிதிகள் அங்கே உட்கார்ந்து அபிவிருத்தி வேலைகளைப்
பார்வையிட முடியும் என்பதால் அதை நகரசபையாக மீண்டும்
மாற்றுவதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்பு
கிறேன்.

[முற்பகல் 9-20]

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே,
உதகமண்டலத்தைப் பொறுத்தவரையில் இப்போது கொடைக்
கானலில் உள்ள இயற்கைச் சூழல் உதகமண்டலத்திலே இல்லை.
கொடைக்கானலில் மக்கள் தொகை குறைவாக இருக்கிறது.
It has become a business place now.

உதகமண்டலத்தில் மக்கள் தொகை அதைவிட அதிகம். ஆனால்
கொடைக்கானல் இன்னும் கோடை வாசஸ்தலம் என்ற அந்த
தகுதியிலேயே இருந்துகொண்டிருக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட
மன்றத்தினுடைய உறுப்பினர்களை நாம் எல்லாப் பகுதிகளுக்கும்
போடுவதில்லை. அதற்காக விதிமுறைகள் இருக்கின்றன.
எந்த எந்தப் பகுதிகளை நகரசபைகளாக ஆக்க வேண்டும், எந்த
எந்தப் பகுதிகளை நகரியங்களாக ஆக்க வேண்டுமென்று
எல்லாம் குறிப்புகள் நம்மிடத்திலே இருக்கின்றன. ஏற்கனவே
மறைந்த திரு. காமராஜ் அவர்கள் அதைச் செய்திருக்கிறார்கள்.
அதை மாற்ற வேண்டுமென்று காமராஜ் காங்கிரஸ் கட்சி கேட்
கிறதா என்பதைத் திருப்பிக் கேட்க நான் கடமைப் பட்டிருக்
கிறேன்.

**திரு. ஆர். டி. கோபாலன் :** தலைவர் அவர்களே, கொடைக்
கானலை நகரியமாக மாற்றியதைப் போல் மதுரை மாவட்டத்
திலே வேறு எந்தப் பகுதியாவது நகரியமாக மாற்றப்பட்டுள்
ளதா? அப்படி மாற்றியதற்கு என்ன காரணம்?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாற்றப்படவில்லை.
ஆனால் பழனியை நகரியமாக்குவதற்கு செயற் குறிப்புகள்
பரிசீலனையில் இருக்கின்றன. அதற்குக் காரணம் பழனி ஒரு
ஸ்தலமாக இருககிற காரணத்தினால் அந்தக் கோயில்
இல்லாவிட்டால் அது நகரமாகவே இருக்க முடியாது என்ற
சூழ்நிலை இருப்பதால் அது பரிசலனையில் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. இளையபெருமாள்.

**திரு. என். பழனிவேல் :** தலைவர் அவர்களே, பழனியை
நகரியமாக்க வேண்டுமென்று.......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமருங்கள். இரண்டு
கேள்விகள் கேட்டாகிவிட்டன. பழனி என்றவுடனே உணர்ச்சி
வசப்படக்கூடாது. திரு. இளையபெருமாள்.

**திரு. எல். இளையபெருமாள் :** கொடைக்கானல் பகுதி
யிலே அண்ணா நகரிலே பழங்குடி மக்கள் மலைவாழ் மக்கள்
நகரசுத்தி தொழிலாளர்கள ஆகியவர்களுக்குப் பட்டா கொடுக்க
வேண்டுமென்று எழுதியிருக்கிறார்கள். நகரசபையாக இருந்த
போது பட்டா கொடுக்குமாறு ரிசல்யூஷன் எல்லாம் நிறைவேற்றி
னார்கள். ஆனால் தற்போது நகரியத்திலுள்ள ஸ்பெஷல்
ஆபிசர் அவர்களை நானே நேரில் தெரிவித்து சொல்லியும்
அரசாங்கத்திலிருந்து அனுமதி வரவில்லை என்று சொன்னார்கள்.
ஆகவே உடனடியாக அவர்களுக்குப் பட்டா கொடுக்க ஏற்பாடு
செய்யப்படுமா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நகரியமாக மாற்றியது
பற்றி கேள்வி இருக்கிறது. பட்டா வழங்கப்படுவதற்கும் இதற்கும்
சம்பந்தம் இல்லை. நகரியத்திலே உள்ள ஸ்பெஷல் ஆபீசர்
செய்கிற சிறு வேலை தான் பட்டா வழங்குவது. அது வேண்
டாம். மூலக்கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமில்லை.

**திரு. உ. சுப்பிரமணியன் :** நகரசபையாக இருந்த காரணத்
தினால் வருமானம் போதவில்லை, நகரியமாக மாற்றியிருக்கி
றோம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நகரசபையை
நகரியமாக மாற்றியதற்குப் பிறகு வரி கூட்டப்பட்டிருக்கிறதா ?
அதன் மூலம் வருமானம் கூடியிருக்கிறதா ? அல்லது அரசாங்கத்
திடமிருந்து அதற்கு உதவி செய்யப்படுகிறதா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே,
நகரியமாக இருக்கிற காரணத்தினால் பல்வேறு நன்மைகள்
இப்போது விரைவாகச் செய்யப்படுகிறது. அரசாங்கமே பொறுப்பு
ஏற்றுக்கொள்கிற காரணத்தினால் மாவட்ட ஆட்சித் தலைவர்





அதற்குத் தலைவராக இருக்கிறார். நியமிக்கப்பட்ட நான்-அபிசி
யல் மெம்பர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். ஆகவே
நேரடியாக கவனத்தைச் செலுத்த முடிகிறது. வருமானத்தை
அதிகரிக்க முடியவில்லையென்றால் அரசாங்கம் அங்கே சில
பணிகளுக்காக மானியங்கள் கொடுக்கிறது. அவைகள் எல்லாம்
அந்த நகரியத்திற்குப் போயச் சேரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது.
கண்காணிக்கும் பொறுப்பை அரசாங்கமே ஏற்றுக்கொள்கிற
காரணத்தினால் நகரியம் பாதுகாக்கப்படுகிற எண்ணத்தோடு
செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். தேர்ந்தெடுக்கப்பட்ட மன்ற
உறுப்பினர்கள் இருந்தால அவரவர்கள் கட்சி சார்பில்
அந்தப் பணிகளைச் செய்யக்கூடிய நிலைமை இருக்கும்.
இப்போது பயணிகளைக் கவர்ந்திழுப்பதற்கும் நகரத்தை சுத்த
மாகவும் சுகாதாரமாகவும் வைத்துக் கொள்வதற்கும் நாம்
நடவடிக்கை எடுக்கலாம்.

**திரு. இரா. முத்தையா :** கொடைக்கானல் நகரியமாக
மாற்றப்பட்டதற்குப் பிறகு இவ்வளவு காலமாக அதன் வளர்ச்சி
யில் எந்த முன்னேற்றமும் இல்லையென்றாலும் அண்மையிலே
ஒரு மாஸ்டர் பிளான் தயாரிக்கப்பட்டு அது அரசின் பரிசீலனை
யில் இருக்கிறதே அது எப்போது நிறைவேற்றப்படும் ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே,
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய அந்தப் பணிகள்
பரிசீலனையில் இருக்கின்றன. உடனடியாக நடவடிக்கை எடுக்
கப்படும்.

### சென்னை மாநகர வளர்ச்சிப் பணிகளுக்கான நிதியுதவி

*வினா எண் 389— **திரு. பெ. சு. திருவேங்கடம் :** மாண்பு
மிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு
விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சி தமிழ்நாடு அரசை மாநகர
வளர்ச்சிப்பணிகளுக்கு நிதியுதவி கோரியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எவ்வளவு தொகை கேட்டது ?

(இ) அரசு கொடுத்த தொகை எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) ஆம்.

(ஆ) ரூ. 20,73·40 இலட்சங்கள்.

(இ) ரூ. 500 இலட்சங்கள்.

[1982 மார்ச் 6

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவரவர்களே,
அமைச்சரவர்கள் மாநகராட்சி 20 கோடி ரூபாய் கேட்டதாகவும், மாண்புமிகு
அரசு 5 கோடி ரூபாய் கொடுத்திருப்பதாகவும்,
இன்றையதினம் அந்தத் தொகை ஒதுக்கப்பட்டிருப்பது சொன்னார்கள்.
ன்ன பணிகளுக்காக ? மாநகரில் இன்றைய தினம் என்னெ
வசதி சரியாக இல்லை. 'ட்ரெயினேஜில்' பாதை
மல் இருப்பதால் அதிலே குழந்தைகள் மூடிகள் இல்லா
கின்றன. அதையெல்லாம் சீர் செய்ய விழுந்து இறந்துவிடு
ஆகவே, என்னென்ன பணிகளுக்காக வேண்டியிருக்கிறது.
பட்டிருக்கிறது என்பதை அறிய இந்தத் தொகை ஒதுக்கப்
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :
சென்னை மாநகராட்சியின் முக்கியமான தலைவரவர்களே,
மரிப்பதற்காக 3 கோடி ரூபாய் ; அதைப்போல சாலைகளை பரா
ருடன் சேர்க்கப்பட்ட 12 பஞ்சாயத்துக்களுக்கு புதிதாக மாநக
போடுதல், சாலை அபிவிருத்தி செய்தல் தெருவிளக்குகள்
80 இலட்சம் ரூபாய்; மாநகராட்சியில் போன்றவைகளுக்காக
களை பராமரிப்பதற்கும் சுத்தம் உள்ள மழைநீர் வடிகால்
ரூபாய் ; மாநகரிலுள்ள செய்வதற்கும் 20 இலட்சம்
வசதிகளை செய்து கொடுக்க தனியார் தெருக்களில் அடிப்படை
படையில் இந்த 5 கோடி ரூபாயும் ஒரு கோடி ரூபாய் ; இந்த அடிப்
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். செலவிடப்பட்டு வருகிறது

திரு. ஏ. சி. சண்முகம் : தலைவரவர்களே,
மாநகராட்சியின் புதிய வளர்ச்சிப் பணிகளுக்காக சென்னை
யிடம் நிதி கோரப்பட்டுள்ளதா ? உலக வங்கி
கொடுத்த அனைத்துப் பணிகளுக்கும் இதுவரை அவர்கள் கடன்
ளதா என்பதை அறிய விரும்புகிறேன். வேலை முடிக்கப்பட்டுள்

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே,
ஏம். எம். டி. ஏ. என்ற அடிப்படையில் மாநகராட்சியின் அது
வளர்ச்சிப் பணிகள் திட்டத்திற்காக உலகவங்கி உதவித் புறநகர்
செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள் திட்டம்
கிறேன்.

திரு. இல. பலராமன் : தலைவரவர்களே,
அருகில் இருக்கிற புறநகர் பகுதிகளில் சாதாரண மக்கள் மாநகராட்சியின்
பெறியிருக்கிறார்கள். அவர்களுடைய வசதிக்காக குடி
எவ்வளவு செலவிடப்படுகிறது ? புறநகர் இந்த பணத்தில்
[illegible] தனியாக திட்டம் ஏதாவது அபிவிருத்திப் பணி
இருக்கிறதா ?



1982 மார்ச் 6]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எப்படிப்பட்ட பதிலை எதிர்பார்க்கிறார்கள் என்று தெரியவில்லை. புறநகர் அகநகர் என்று இரு பகுதிகள் இருக்கின்றன. சென்னை மாநகர் அகநகர் பகுதி என்றால் அதைச் சுற்றி இருக்கின்ற பகுதிகளை புறநகர் என்று வைத்துக்கொள்ள வேண்டும். புறநகர் சம்பந்தமாக நான் ஏற்கெனவே பதில் சொல்லும்போது சொன்னேன். அது ஊராட்சி ஒன்றியங்களாகத்தான் இருக்க முடியும். அதிலுள்ள 12 பஞ்சாயத்துக்களுக்குத்தான் 80 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு வேலை நடைபெற்று வருகிறது என்று சொன்னேன். இன்னும் சொல்லப் போனால் மாநகரோடு சேர்க்கப்பட்டிருக்கிற பஞ்சாயத்துக்களுக்கு இன்னும் பஞ்சாயத்து வரிதான் போடுகிறார்கள். மாநகராட்சி வரி இன்னும் போட்டு வசூல் செய்யப்படவில்லை. ஆகையால்தான் முதலில் அடிப்படை வசதிகளை செய்ய நடவடிக்கைகளை எடுத்துவருகிறோம். அடிப்படை வசதிகளை எல்லாம் செய்த பின்னால் மாநகர வரி விதித்து வசூல் செய்யலாம் என்ற எண்ணம் இருக்கிறது.

திரு. எல். இளையபெருமாள் : தலைவரவர்களே, மாநகராட்சி வளர்ச்சிக்கு 5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். நகரில் பல பகுதிகளில் நீண்டகாலமாக சாலைகள் அபிவிருத்தி செய்யப்படாமல் இருக்கிறது; ட்ரெயினேஜ் ஸ்கீம் சரியாக இல்லை; இதெல்லாம் அமைச்சருக்கும் தெரியும். ஆகையால் இந்த 5 கோடி ரூபாய் போதும் என்று அரசு கருதுகிறதா? 50 கோடி ரூபாய்க்குமேல் தேவைப் படும் என்று நான் நேரிலே அமைச்சரிடம் தெரிவித்திருக்கிறேன். அமைச்சரவர்களும் பார்த்திருக்கிறார்கள். அப்படி இருக்கும் போது இந்தத் தொகையை அதிகப்படுத்த நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, இப்போது கூட நிதிநிலை அறிக்கையில் இந்த மாநகராட்சிக்கு வடிகால் போடுவதற்கு 55 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு அதனுடைய வேலைகள் நடைபெறுகிறது என்று குறிப்பிட்டிருக்கிறோம். அவர்கள் சொல்வதைப்போல அபிவிருத்திப்பணிகளுக்கு இந்த 5 கோடி ரூபாய் கண்டிப்பாக போதாது. மேலும் 35 இலட்சம் ஜனத்தொகையும் வந்துபோகின்றவர்களுடைய தொகை 10 இலட்சத்தையும் சேர்த்து இந்த 45 இலட்சம் ஜனத்தொகையைக்கொண்ட மாநகராட்சியில் அபிவிருத்திப் பணிகளுக்கு 20 கோடி ரூபாய் செலவழித்தால் கூட போதாது. 50 கோடி ரூபாய்க்கு மேல் இருந்தால்தான் நகரை சுத்தமாக, சுகாதாரமாக வைத்து, எல்லோருக்கும் அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க முடியும். ஆகையால் புதிய வரிகளைப் போடாமல், ஆனால் வசதிகளைப் பெருக்க வேண்டுமென்ற அடிப்

படையில் செயல்படுகிறோம். இருந்தாலும் கூட இன்றைக்கு சேல்ஸ்டாக்ஸ், சர்சார்ஜ் வகையில் சுமார் 4 கோடி ரூபாய் அளவுக்கு அரசாங்கத்திலிருந்து கொடுத்திருக்கிறார்கள். இன்னும் 5 கோடி ரூபாய் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். இந்த முறையிலேதான் நாம் மாநகராட்சிப் பணிகளை அபிவிருத்தி செய்ய வேண்டிய சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கிறோம்.

## இளம் பிள்ளைவாத தடுப்பு மருந்துகள் விற்பனை

*வினா எண். 390—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இளம்பிள்ளைவாத தடுப்பு மருந்துகளை விற்க ஒரு சில மருந்துக்கடைகளுக்கு மட்டுமே அரசு அனுமதியளித்திருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் அதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே—(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[முற்பகல் 9·30]

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நோய் குழந்தைகளைக் கடுமையாகத் தாக்குகின்ற காரணத்தால் இந்த இளம்பிள்ளைவாதத் தடுப்பு மருந்துகளை இலவசமாக ஊர் ஊருக்குச் சென்று கொடுப்பதற்கு ஒரு மருத்துவக் குழுவை அரசாங்கம் அனுப்புமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, இப்போது கூட இலவசமாகத்தான் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். நம்முடைய தமிழகத்திற்கு மொத்தம் 50 இலட்சகு டோஸஸ் தேவைப்படுகிறது. ஆனால் இப்போது நமக்கு கிடைக்கக்கூடிய டோஸஸ் 9 இலட்சம்தான். இதுதான் இருக்கக் கூடிய பிரச்சினை. நமக்குக் கிடைப்பதிலே ஏறத்தாழ 90 சதவீதம் இலவசமாகத்தான் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். 10 சதவீதம்தான் கடைகளுக்குப் போய்க்கொண்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக குழந்தைகளுடைய (Institute of Child Health



என்ற அந்த மருத்துவமனையிலே மட்டுமல்லாமல் எல்லா பெரிய மருத்துவமனைகளிலும் இந்த போலியோ வேக்ஸினேஷன் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. எம். சின்னசாமி : தலைவரவர்களே, இந்த இளம் பிள்ளை வாத மருந்து இலவசமாகக் கொடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு மத்திய அரசு ஏதாவது நிதியுதவி செய்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, மத்திய அரசு நிதி ஒதுக்குவது கிடையாது. Hairskin Bioforme, Bomb y என்ற கம்பெனிதான் இதனைத் தயார் செய்யக்கூடிய இடமாக இருக்கின்றது. அந்த இடத்திலிருந்து எந்தெந்த மாநிலத்திற்கு எவ்வளவு எவ்வளவு கொடுக்கலாம் என்று முடிவுசெய்கிறார்கள். அந்த அடிப்படையில் நாமும் வாங்கிக்கொள்கிறோம்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, இந்த இளம்பிள்ளை வாதத்திற்கான மருந்து அகில இந்திய ரீதியிலே மத்திய அரசே தயாரித்துத் தருகின்றதா ? அல்லது முற்றிலும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து அதிலே பங்கு போட்டு நமக்குத் தரப்படுகின்றதா ? இது மிக முக்கியமான மருந்தாக இருப்பதால் இதைத் தமிழகத்தில் உற்பத்தி செய்வதற்கு ஏதாவது அரசு முயற்சி எடுக்குமா! இதற்காக அலோபதி மருந்துமட்டுமல்லாமல் வேறு மருந்துகளையும் பயன்படுத்தி இந்த வியாதியைத் தடுப்பதற்குரிய தகுந்த மருந்துகள் உண்டா என்பதையும் பரிசீலித்து அரசு அதற்கு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, கடைசியாகக் கேட்ட கேள்விக்கு முதலிலே பதிலளிக்கிறேன். அலோபதி முறையினைத் தவிர வேறு முறைகளிலே தடுப்பு ஊசி எதுவும் கிடையாது. ஆனால் நோய் வந்ததற்குப் பிறகு சித்த மருத்துவ முறையிலே எண்ணெய் போடப்பட்டு அதன்மூலம் ஓரளவுக்கு குணப்படுத்துகின்ற வசதி இருக்கின்றது. அடுத்து இன்னொரு கேள்வியினைப் பொறுத்தவரை மத்திய அரசு பொறுப்பேற்றுக்கொண்டு நமக்கு ஒதுக்கீடு செய்கின்றது என்று நான் ஏற்கெனவே பதில் சொன்னேன். ஹேர்ஸ்கின் பையோஃபார்மா ஆஃப் பாம்பே என்ற அந்தக் கம்பெனிதான் கொடுத்துக் கொண்டிருக்கின்றது. அந்தக் கம்பெனி ஒரு பப்ளிக் லிமிட்டட் என்டர்ப்ரைஸ். அந்தக் கம்பெனியினியிடத்திலே ஒவ்வொரு மாநிலத்திற்கும் எவ்வளவு எவ்வளவு கொடுக்கவேண்டும் என்று கட்டளையிடுகிறார்கள். அந்த அடிப்படையிலே கொடுத்துக் கொண்டு வருகிறார்கள்.

அடுத்து இந்த மருந்து வெளிநாட்டிலே இருந்து வருகின்றதா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையிலே இரண்டு மாதங்களுக்கு முன்பு புரட்சித் தலைவர் அவர்கள் ரோட்டரி க்ளப்பிற்குச் சென்று பேசியதற்குப் பிறகு அங்கே இருக்கக்கூடியவர்கள் இதைப்பற்றி யோசனை செய்யலாம் என்று சொன்னார்கள். ஜனவரி 1 ஆம் தேதி என்று நான் நினைக்கிறேன். அவர்களை அழைத்து அவர்களிடத்திலே கருத்துக்களை எல்லாம் பரிமாறிக் கொண்டதற்குப் பிறகு ஜப்பான் நாட்டிலே இருந்து போலியோ வேக்ஸினேஷன் மருந்தை ஒரு மாவட்டத்திற்கு மட்டும் பரீட்சார்த்தமாகக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள் என்று சொல்லி வடாற்காடு பகுதிக்குக் கொடுக்கத் தயாராக இருப்பதாகச் சொன்னார்கள். வடாற்காடு மாவட்டத்திலே ஒரு கிறிஸ்ட்டியன் மிஷன் மருத்துவமனை இருப்பதால் அங்கே கொடுப்பதற்கு ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே இது குறித்து தொடர்ந்து நாம் பணியாற்றிக்கொண்டிருக்கிறோம். அது கிடைக்கும் என்று நாம் நம்புகிறோம்.

**திரு. செ. இராமலிங்கம் :** தலைவரவர்களே, இந்த இளம்பிள்ளை நோய்க்கு ஹோமியோபதி முறையிலே சிகிச்சை அளிப்பதற்காக கௌரவ மருத்துவராக திரு. வைத்தியநாதன் என்பவரை சேலம் மருத்துவமனையில நியமித்திருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அந்த சிகிச்சை முறையின் மூலம் இந்த இளம்பிள்ளைவாத நோய் தடுக்கப்படுகின்றதா ? அதிலே ஏதேனும் முன்னேற்றம் தெரிகின்றதா ? ஆனால் எனக்குக் கிடைத்த தகவலின்படி அந்த சிகிச்சை முறை நல்ல பலனை அளித்திருப்பதாகத் தெரியவருகின்றது. ஆகவே அதனை மாநிலம் முழுவதும் விஸ்தரிக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி சிகிச்சை வேறு, தடுக்கக்கூடிய முறைகள், வேறு. (One is cure. As far as curative measures are concerned தமிழ் வைத்தியத்திலே இருக்கின்றது. அதிலேயும் ஆராய்ச்சி நடத்தி இருக்கிறார்கள். ஏராளவுக்கு வெற்றியும் கண்டிருக்கிறோம் ஆனால் அந்த நோய்வராமல் தடுப்பதற்குரிய முறையினைப் பொறுத்தவரையிலே ஓரல் வேக்ஸினேஷனைத் தவிர வேறு எந்த முறையும் இந்தியாவிலே கையாளப்படவில்லை.



## தருமபுரி அரசு தலைமை மருத்துவமனை

*வினா எண். 391—திரு. எஸ். அரங்கநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தலைமை அரசு மருத்துவமனையில் இருதய நோய் மருத்துவப்பிரிவு ஏற்படுத்த அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஏற்படுத்தப்படும்?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** (அ) மற்றும் (ஆ) தருமபுரி அரசு தலைமையிட மருத்துவமனையில் ஒரு ஐ. சி. சி. யூனிட் (I.C.C. Unit) ஏற்படுத்த 1981 மே மாதத்தில் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. கட்டிட வேலைகள் முடிந்த பின்னர் இந்தப் பிரிவு திறக்கப்படும்.

**திரு. தி. அன்பழகன் :** பேரவைத் தலைவர் அவர்களே தமிழகத்தில் எத்தனை மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் இந்த இருதய மருத்துவப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதை அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 8 மெடிகல் காலேஜ்ஸ் இருக்கின்றன. அந்த 8 கல்லூரிகளோடு இணைந்து இருக்கும் மருத்துவமனைகளில் இந்த ஐ.சி.சி. யூனிட்டுகள் இருக்கின்றன. அது மட்டுமல்லாமல், கவர்ன்மென்ட் ஹெட்குவார்டர்ஸ் ஆஸ்பிடல்கள், சேலத்திலும், திருச்சியிலும் மற்றும் வேலூரிலும் இருக்கின்றன. தருமபுரி மாவட்டத்தில் இப்போது துவங்க இருக்கிறோம். கட்டிட வேலைகள் முடிந்தவுடன் ஆரம்பிக்கப்படும்.

## ஆறுகளில் சாக்கடை நீர் மற்றும் ஆலைக்கழிவுகள் கலப்பதைத் தடை செய்யும் சட்டம்.

*வினா 392—திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சாக்கடைநீர், ஆலைக்கழிவுகளை ஆற்றுநீரில் கலப்பதை தடைசெய்ய சட்டம் இயற்றப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மைய அரசின் 1974-ஆம் ஆண்டு நீர் (தூய்மை கெடுதல்-கட்டுப்படுத்தல்) சட்டத்தை நமது அரசு பின்பற்றலாம் என்று 1981 ஆம் ஆண்டு

ஆகஸ்டு திங்களில் தமிழக சட்டமன்றங்கள் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி உள்ளன. இச்சட்டத்தின் உதவி கொண்டு சாக்கடை நீர் மற்றும் ஆலைக் கழிவுகளை ஆற்று நீரில் கலப்பதை தடை செய்ய தக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

திரு. குமரி ஆனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய அரசாங்கத்தின் சட்டத்தைப் பின்பற்றி நமது தீர்மானத்தை நினைவுபடுத்தினார்கள். ஆனால் இந்தச் சாக்கடை கழிவும், ஆலை நீர்க்க கழிவும் அமிலமும், ரசாயனப் பொருள்களும் கலந்ததாக இருப்பதால் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களின் பாசனக் கிணறுகள் பாழாகின்றன. குடிநீர் பாழாகிறது என்கிற காரணத்தால், ஏற்கெனவே இருக்கின்ற ஆலைகள் இத்தனை நாளைக்குள் என்று ஒரு காலக்கெடு வைத்து, ஒரு 'டிரீட்மென்ட்' பிளான்ட்' வைக்க வேண்டும் என்று சொல்கிற உத்தரவை அல்லது சட்டத்தை தமிழக அரசு உறுதியாக தெரிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, 1974 ஆம் ஆண்டு வாட்டர் (பிரவென்ஷன் அன்ட் கன்ட்ரோல் ஆப் பொல்யூஷன்) சட்டத்தை (சென்ட்ரல்) ஆக்டை நாம் இப்போது ஏற்றுக்கொண்டு இருக்கிறோம். அந்தச் சட்டத்தின் கீழ் நாம் ஒரு கமிட்டியை நியமித்து இருக்கிறோம். அந்தக் குழுவில் இன்னின்னார் இருக்க வேண்டும் என்று நியமித்து இருக்கிறோம். அந்தச் சட்டத்தில் எப்படி இவற்றைத் தடுப்பது என்பதற்கான சரத்துக்கள் இருக்கின்றன. இந்தப் பொறுப்பை பப்ளிக் ஹெல்த் டிப்பார்ட்மென்ட் செய்து கொண்டு இருக்கிறது. நான் ஏற்கெனவே ஒரு காலிங் அட்டென்ஷன் நோட்டீசுக்கு பதில் சொல்கிற நேரத்தில் சொன்னேன். அம்பாசமுத்திரம் மதுரா கோட்சில் நாம் இதைச் செயல்படுத்த நடவடிக்கை எடுத்து இருக்கிறோம். நமக்கு தகவல் எங்கெங்கே இருந்து கிடைக்கிறதோ அங்கெல்லாம் நடவடிக்கை எடுக்கிறோம். மாவட்ட ஹெல்த் ஆபீசர்களையும் உடனுக்குடன் தகவல் தர வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். டைரக்டர் ஆப் பப்ளிக் ஹெல்த் அவர்களுக்கு இருக்கும் அந்த அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டு, நாம் அவ்வப்போது உத்தரவு போட்டுக் கொண்டு வருகிறோம். அதிலே எந்தவிதமான தொந்தரவும் இல்லை. நாம் புதிதாக இந்தச் சட்டத்தையும் ஏற்றுக் கொண்டதால் இன்னும் சௌகர்யமாக இருக்கும் என்பதால், ஒரு குழு ஏற்படுத்தி அந்தக் குழுவின் பொறுப்பில் நாம் இதைச் செயலாற்றுவதற்கு இருக்கிறோம்.

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஆலையில் இருந்து வெளியாகும் கழிவுப் பொருள்கள் வெவ்வேறு விதமாக இருப்பதால் அவைகளைத் தடுப்பது



அல்லது அவைகளை வேறு வகையில் பதப்படுத்தவது என்பதை ஆராய ஆராய்ச்சிக் கூடம் ஒன்று இருக்கிறதா அல்லது அதை ஏற்படுத்துகின்ற திட்டம் அரசின் செயற்குறிப்பில் இருக்கிறதா என்று அறியவிரும்புகிறேன்.....

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருக்கக்கூடிய அந்தச் சட்டத்தின் அடிப்படையில் நாம் நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். டிஸ்டிரிக்ட் ஹெல்த் ஆபீசர் அவர்களுக்கு அந்தப் பவர்ஸ் இருந்தது. அவர் உடனடியாக இந்தக் கழிவு நீரை எடுத்து அதிலே, எவ்வளவு பையலாஜிகல் யூனிட் இருக்கிறது, மைக்ரோ யூனிட் இருக்கிறது என்று கண்டு பிடித்து நடவடிக்கை எடுப்பார். ஆனால் இப்போது இருக்கும் சட்டத்தின் அடிப்படையில்

A Committee to preserve the environmental hygience is constituted. The following will be the members of the Committee:—

Special Officer, Departmental of Environmental Hygiene (Chairman).

Director of Agriculture.

இதனால் வேளாண்மைத்துறையில் என்ன கஷ்டம் ஏற்படுகிறது என்பதைச் சொல்வதற்கு வசதியாக இருக்கும்.

Director of Town and Country Planning

Director of Public Health and Preventive Medicine

The Chief Engineer, P.W.D.

The Chief Inspector of Factories

The Mayor of the respective Corporations (Madras, Madurai and Coimbatore).

or

Chairman of the respective Municipalities

Chairman, Leather Export Promotion Council.

இவர்களால்தான் இந்தப் பிரச்னை எழுவதால் இதிலே போட்டு இருக்கிறோம்.

Managing Director, Water Supply and Drainage Board, Tamil Nadu

Chairman, Tamil Nadu Electricity Board.

[1982 மார்ச் 6

இத்தகைய ஒரு நல்ல குழுவை ஏற்படுத்தியதால், மிக எளிதாக நாம் இதைக் கண்டுபிடிக்க முடியும் என்று கருதுகிறேன்.

[முற்பகல் 9–40.]

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, சுற்றுப்புற சூழ்நிலையைத் துப்புரவாக வைத்துக் கொள்வதற்கு மத்திய அரசு சட்டத்தை ஏற்றுக் கொள்வதாக இருந்தாலும் அமைச்சர் அவர்கள் சொன்னது போல் அந்தக் குழு ஆலோசனைக் குழுவாகத்தான் செயல்பட முடியும். சரியான ஆறையில் அதை நடைமுறையில் செயல்படுத்துவதற்கான ஆற்றல் அங்குள்ள பாக்டரி இன்ஸ்பெக்டர்கள் மூலம் இதை நிறைவேற்ற வேண்டிய நிலை இருக்கிறது. அந்த பாக்டரி இன்ஸ்பெக்டர்கள் கடமை உணர்ச்சி உள்ளவர்களாக இருந் தாலும் ஆலைச் சொந்தக்காரர்கள் அல்லது ஆலை நிர்வாகிகள் செல்வாக்கு மிகுதியாக இருப்பதால் பலயிடங்களில் ஏழு, எட்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து சரியானமுறையில் நடைமுறைப் படுத்தப்படாமல் திரும்பத்திரும்ப குறைகளே வரும் அளவிற்கு இருப்பதால் நடைமுறைப்படுத்துவதற்கு அட்மினிஸ்ட்ரேட்டிவ் வழியில் இவற்றைக் கட்டாயமாகச் செயல்படுத்த அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : 1974 ஆக்டடை கொண்டுவரவில்லை. அந்தச் சட்டத்தில் ஒரு க்ளாஸ் போட்டி கிறார்கள். அதில்.

Statutory powers are there to take action against all the errants.

யார் தவறு செய்கிறார்களோ அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்கு அந்தச் சட்டத்தில் பிரிவு இருக்கிறது அதுமட்டுமல்ல. ஏற்கனவே டிஸ்ட்ரிக்ட் ஹெல்த் ஆபீஸர்ஸ் மூலம் பல்வேறு இடங்களில் தேவையான நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது இன்னும் தீவிரப்படுத்தப்பட வேண்டும் என்பது என் ஆசை. எதிர் கட்சித் துணைத் தலைவர் அவர்களும் அதை விரும்புவார் கள். அதிலுள்ள சங்கடம் என்னவென்றால், ரொம்பவும் கடுமையாக இருந்தால் மற்றத் தொழில்கள் நசித்துவிடும் ஆபத்து இருக்கிறது. ஆகவே

We have to strike a balance.





இந்தக் குழு அமைத்ததற்குப் பிறகு நல்லவகையில் செயல் படுத்த சௌகரியமாக இருக்கும். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னதுபோல் அதற்கான நடவடிக்கை எடுத்துக் கொள்ள சட்டத்தில் இடம் இருக்கிறது.

திரு. பி. வின்சென்ட் : சென்னை நகரில் உள்ள சாக் கடை நீரை அல்லது ஆலைக் கழிவுகளைக் கூவத்தில் கலக்க விடாமல் பாதாளச் சாக்கடை மூலம் கடலில் கொண்டுபோய் கலக்கப்பதற்குத் திட்டம் ஏதுப்படுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : இதை அரசு நன்கு அறியும். இதற்காக நடவடிக்கை எடுத்து வருகிறார் கள்.

திரு. உ. சுப்பிரமணியன் : காற்றின் வழி சுகாதாரக்கேடு கள் ஏற்படுவதைத் தடை செய்ய சிமெண்ட் ஆலைகளிலே எல்லாம் பில்டர் முறை கட்டாயம் வைக்கப்படவேண்டும் என்று அரசு கட்டாயப்படுத்தும்போது ஆறுகளில் ஆலைக் கழிவுநீர் கலக்கப்படுவதால் வாட்டர் பொல்யூஷன் ஏற்படு கிறது. பவானிசாகர் போன்ற இடங்களில் அரசுத் துறையால் தயாரிக்கப்படும் பலகோடி ரூபாய் பெறுமானமுள்ள மீன்கள் செத்து விடுகின்றன சவுத் இந்தியன் விஸ்கோவிலிருந்து வரும் கழிவு நீரினால். அதனால் பொதுமக்களுக்கும் கெடுதல் ஏற்படுகிறது. ஆகவே அதைத் தடுத்து நிறுத்த ஆலைகளில் உள்ள கழிவுநீரை சுத்திகரிக்க கட்டாயப்படுத்தப்படுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : உறுப்பினர் அவர்கள் இரண்டு பிரச்னைகளை எழுப்பியிருக்கிறார்கள். சிமெண்ட ஆலைகளைப் பொறுத்தவரையில் பால் அவுட் இருக்கிறது. அதைக் கட்டுப்படுத்தவேண்டும் என்று சொல் கிறோம். இரண்டு பாக்டரிகள் அதை ஏற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்தி வருகிறார்கள். அதை நடைமுறைப் படுத்த முடியாது என்று முன்பு வாதாடினார்கள். இப்போது இரண்டு பாக்டரிகளில் நடைமுறைப்படுத்தியிருக்கிறார்கள்? ஆகவே நடைமுறைப்படுத்த முடியும் என்பதை ஆதார பூர்வமாக இன்றைக்குப் பார்க்கிறோம். எல்லா சிமெண்ட் ஆலைகளையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம். திரு. குமரி அனந்தன் அவர்கள் சொன்னதுபோல், காலக்கெடு கொடுத்து அதற்குள்

Show cause notice has been issued stating that 'why licence should not be removed, if you do not comply with the specifications."

என்று ஷோகாஸ் நோட்டீஸ் கொடுக்கத் தயாராயிருக்கி றோம். சவுத் இந்தியா விஸ்கோசில்கூட அண்மையில் ஒரு ட்ரீட்மெண்ட் ப்ளாண்ட் ஒரு கோடி ரூபாய் செலவில் செய்திருக்கிறார்கள். எந்தக் கழிவுநீராக இருந்தாலும் ட்ரீட் மெண்ட் ப்ளாண்ட் போட்டு பயாலாஜிக்கல் கண்டெண்ட்ஸ் யைக் குறித்து கன்டென்ட்ஸ் இவ்வளவுக்கு மேல் இருக்கக் கூடாது, என்று சில டெக்னிக்கல் டீட்டெயில்ஸ் இருக்கின்றன. அதற்காக வற்புறுத்தி நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள உத்தரவு போட்டிருக்கிறோம். எல்லோருக்கும் தெளிவாக ஒரு சர்குலர் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

Show cause notice has been issued why licence should not be removed.

என்று கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

சென்னை அரசினர் பொது மருத்துவ மனைக்கு கூடுதல் பிண ஊர்திகள் வழங்கும் திட்டம்

*வினா எண். 393—திரு. பம்மல் நல்லதம்பி : மாண்புமி மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக் விடையளிப்பாரா—

(அ) சென்னை அரசினர் பொது மருத்துவமனையில் புறநகர் பகுதிகளுக்கு பிணங்களை எதுத்துச்செல்ல பிணவறை ஊர்தி இல்லாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் தனியாக புறநகர் பகுதிகளுக்கு பிணவறை ஊர்தி ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) புறநகர்ப் பகுதிகளுக்கென்று தனியாக ஒரு பிண ஊர்தி சென்னை அரசு பொது மருத்துவ மனைக்கு வழங்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இருக்கிறது.



*வினா எண். 394—திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை பொது மருத்துவமனையில் பிரேதங்களை எடுத்துச் செல்லும் வாகனப் பற்றாக்குறை இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் உடனடியாக கூடுதல் வாகன வசதி செய்துகொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) அரசு பொது மருத்துவ மனைக்கு கூடுதலாக பிண ஊர்தி வழங்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, சென்னை அரசினர் மருத்துவ மனையில் அளவுக்கு மிஞ்சிய பிணங்கள் அங்கே தேங்கிக் கிடக்கின்றன என்று போலீசார் அரசுக்கு தெரிவித்து, அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற அறிக்கை வந்திருக்கிறதா? அது மட்டுமல்ல, இறந்த பிணங்களை டாக்ஸிகளிலே கடத்திச் செல்வதாக அரசுக்கு புகார் வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். ஒன்று, அங்கே அன் கிளெய்ம்ட் ஆக இருக்கிற பிணங்களைப் பற்றியது. அதைப் பொறுத்தவரையில் அதற்காக அன் - கிளெய்ம்ட்டாக எத்தனை நாட்கள் இருக்கவேண்டுமென்று சட்டத்தில் இருக்கிறதோ, அத்தனை நாட்கள் இருக்கிறது. அப்போதும் கிளைமென்ட் யாராவது இருக்கிறார்களா என்று பார்க்கிறோம். இரண்டாவது கேள்வி, டாக்ஸியைப் பொறுத்தவரையில் சில நேரங்களில் இப்படிப்பட்ட தகவல்கள் கிடைக்கின்றது. மார்ச்சுவரி வேன் செயல்படவில்லை என்றாலும், இல்லை செயல்படுவதாக இருந்தாலும். செயல்படவில்லை என்று சொல்லி டாக்ஸியிலே அனுப்புகிற மாதிரி புகார் சர்க்காருக்கு வந்து, உடனடியாக அதிகாரியை கீழ்ப்பாக்கம் மருத்துவ மனைக்கு அனுப்பி, அங்குள்ள டிரைவர் மீது நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

திரு. ். வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது சென்னையிலுள்ள அரசு

[1982 மார்ச் 6

பொது மருத்துவ ம னைகளில் எத்தனை மார்சுவரி வேன்கள்
இருக்கின்றன. எத்தனை வேன்கள் கூடுதலாக அரசு வழங்க
இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, கவர்ன்மென்ட் ஜெனரல் ஆஸ்பத்திரி
யிலே 3 வண்டிகள் ; ஸ்டான்லி மருத்துவமனையில் 1 ; கீழ்ப்
பாக்கம் மருத்துவ மனையில் 1 ; இராயப்பேட்டை மருத்துவ
மனையில் 1. ஆகமொத்தம் 6 மார்ச்சுவரி வேன்கள் இருக்கின்
றன. நாம் இன்னும் கூடுதலாக ஒரு வேன் புறநகர்ப் பகுதிக்கு
மட்டும் என்று கேட்டிருக்கிறோம். நிதித்துறை தேவையில்லை
என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, தனியார் துறை,
லையன்ஸ் கிளப் போன்ற ஸ்தாபனங்கள் மூலமாக ஏற்பாடு செய்
வதற்காக பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவர் அவர்களே, பிணங்
களை எடுத்துச் செல்வதற்கு 3 வேன்கள் அரசினர் பொது மருத்
துவமனையிலே இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.
ஆனால், நாம் எப்போது கேட்டாலும், வண்டி அவுட் ஆப் ஆர்டர்
என்று சொல்கிறார்கள். அதற்கடுத்து, அப்படியே வண்டியிருந்
தாலும் டிரைவர் இல்லை என்று சொல்வதை நானே நேரில்
பார்த்திருக்கிறேன். அமைச்சர் அவர்களே இப்படிப்பட்ட கம்ப்
ளெயின்ட் வந்திருப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். தனி
யார் வண்டிகளில் பிணத்தை எடுத்துக்கொண்டு போக வரமாட்
டார்கள். அப்படியே வந்தாலும், 300, 400 ரூபாய் டிமாண்டு
பண்ணுகிறார்கள். ஆகவே, இதையெல்லாம் கருத்தில் கொண்டு
வண்டிகளை அதிகமாக்குவதோடு, இருக்கின்ற வண்டிகளை உருப்
படியாக வைத்துக்கொண்டு, அதிலே பணியாற்றுகின்ற டிரைவர்,
மற்றும் உள்ள ஊழியர்கள் எல்லாம் பிராம்டாக வேலை செய்
கிற அளவில் சர்க்கார் ஏற்பாடு செய்ய வேண்டும். இப்போது
இப்படிப்பட்ட சங்கடங்கள் எல்லாம் நிறைய இருக்கிறது. குறிப்
பாக, துறைமுகத்திலே ஒருவர் இறந்து, அந்தப் பிணம் 1½ நாட்
களாக அங்கேயே இருந்தது.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனிப்பட்ட ஒருவருடைய
சம்பவங்களுக்குள் எல்லாம் போகக்கூடாது. புதிதாக மேலும்,
வண்டி போடப்படுமா என்று கேளுங்கள். இப்படிச் சொல்ல
ஆரம்பித்தால், அவரவர்கள் சொந்தக்காரர்களைப் பற்றிச் சொல்
லிக்கொண்டிருக்க முடியும். ஆகவே, இதை அனுமதிக்க முடி
யாது. உட்காருங்கள்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பொன்னு
ரங்கம் அவர்கள் கேட்ட கேள்விகளுக்குச் சுருக்கமாக, ஆனால்,



1982 மார்ச் 6]

தெளிவாக பதில் சொல்கிறேன். இந்த மார்ச்சுவரி வேனைப் பொறுத்த வரையில், இன்று நேற்றல்ல. பல ஆண்டுகளாக இப்படித்தான் இருந்து வருகிறது. இந்தப் பிரச்னையைப் பொறுத்த வரையில், அங்கே ஒரு ராக்கெட் மாதிரியாக மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கிறபடி, சில நேரங்களில் அங்கே வேன் இருந்தாலும்கூட, அங்கு டிரைவருக்கும் டாக்டொரர்களுக்கும் இடையே ஒரு அன்டர்ஸ்டான்டிங் இருக்கிற மாதிரி செய்தி வருகிறது.

பல இடங்களில் நாம் உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். பல ஆண்டுகளாக எப்படி திரு. பொன்னுரங்கம் அவர்கள் ஒரு தொகுதியில் வேலை செய்து கொண்டிருக்கிறார்களோ அதைப்போல நானும் ஜெனரல் ஆஸ்பத்திரி தொகுதியில் 10 ஆண்டுக் காலமாக வேலை செய்கிற காரணத்தால் இதுபோல '' கம்ப்ளெயின்ட் '' வந்தால் உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். இதில் என்ன சிக்கல் என்றால், உடனே விவரங்களுடன் கம்ப்ளெயின்ட் யாரும் கொடுப்பதில்லை. இருந்தாலும்கூட, அதற்காக நாங்கள் காத்துக்கொண்டிருக்காமல் மாண்புமிகு பொன்னுரங்கம் அவர்கள் கூறிய கருத்தின் அடிப்படையிலே அது இன்னும் தீவிரமாக கண்காணிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 9–50]

திரு. செ. சிவசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரங்களில் இருக்கக்கூடியவர்கள் மட்டும் பெரிய ஆஸ்பத்திரிகளில் மருத்துவம் பெற்று இறப்பது இல்லை. கிராமப் பகுதியிகளிலேயிருந்து, 100 மைல்களுக்கு அப்பால் இருந்தெல்லாம் வந்து ட்ரீட்மென்ட் பெறக்கூடியவர்கள் இறந்துவிட்டால் கூட இதுபோன்ற பிரச்னைகள் வருகின்றன. இதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புற நகரத்திற்கென்று வண்டி ஏற்படுத்திவிட்டால் பிரச்னை தீரும். அதற்காகத் தான் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

### துவரங்குரிச்சி பகுதிகளில் நகரப் பேருந்து விடும் திட்டம்

*வினா எண். 395—திரு. மே. அ. இராசகுமார் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் மணப்பாறை தாலுக்கா துவரங்குரிச்சி நகர பஞ்சாயத்தை மையமாகக் கொண்டு துவரங்குரிச்சி பகுதிகளில் நகரப் பேருந்துவிடும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம், எனில், அப்பேருந்து விடும் திட்டம் எப்பொழுது தொடங்கப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) ஆம்,

(ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்ட மண்டலப் போக்குவரத்து அலுவலர் தக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

திரு. மே. அ. இராசகுமார் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, நகரப் பேருந்துவிடும் திட்டத்தில் அங்கு நிலம் வழங்கப்பட்டதாக கேள்விப்படுகிறோம். எவ்வளவு நிலம் இதற் காக ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் குறிப்பு என்னிடத்திலே இல்லை. பேருந்து விடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. பராமரிப்பதற்கான நிலம் எவ்வளவு வாங்கப்பட்டிருக்கிறது என்ற குறிப்பு என்னிடத்திலே இல்லை.

### ஆந்திராவிலிருந்து வரும் சுற்றுலாப் பேருந்துகளுக்கான வரிவிலக்கு.

*வினா எண். 396—திரு. சி. கோபால் : மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) ஆந்திராவிலிருந்து தமிழ்நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பேருந்துகளுக்கு அரசு வரியை ரத்து செய்துள்ளதா ?

(ஆ) ஆம், எனில், அதனால் தமிழக அரசுக்கு எவ்வளவு ரூபாய் இழப்பு ஏற்படுகின்றது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) சுற்றுலா வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக பிற மாநிலங்களிலிருந்து மோட்டார் வண்டி கள் சட்டத்தின் பிரிவு 63(6)-இன் கீழ் உரிமம் பெற்று பிற மாநிலங் களிலிருந்து வரும் பேருந்துகளுக்கு அரசு வரி விலக்கு அளித்து ஆணை வழங்கியுள்ளது.

(ஆ) இதனால் தமிழக அரசுக்கு ஏற்படும் இழப்பு 1939-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் பிரிவு 63(6)-இன் கீழ் ஆந்திர மாநில போக்குவரத்து அதிகார மன்றங்களால் (Regional Transport Authorities) அனுமதி அளிக்கப்பட்டு தமிழ்



நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பேருந்துகளின் எண்ணிக்கையும் அவ்வண்டிகளிலுள்ள இருக்கைகளின் எண்ணிக்கையும் பொருத்த தேயாகும்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக அரசு வழங்குகின்ற இதுபோன்ற சலுகைகளை மற்ற மாநிலங்களிலே நம்முடைய வாகனங்களுக்கு வழங்கப்படுகின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழங்கப்படுகிறது.

### பல்லவன் போக்குவரத்துக் கழகத்தினருக்கு புது பேருந்துகள் வாங்கும் திட்டம்.

*வினா எண். 397—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வரும் மூன்று ஆண்டுகளுக்குள் பல்லவன் போக்குவரத் துக் கழகத்திற்கு மேலும் 555 புது பஸ்கள் வாங்கும் திட்டம் தமிழக அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இதுபற்றிய விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) ஆம்.

(ஆ) சென்னை பெருநகர் வளர்ச்சித் திட்டம் II-இன் கீழ் உலக வங்கியின் உதவியுடன் பல்லவன் போக்குவரத்துக் கழகம் பெருநகர் பிரிவு 555 ஒற்றை பேருந்து சட்டங்கள் (Chassis) வாங்க உத்தேசித்திருக்கிறது. திட்ட காலமான 1980–81 முதல் 1982–83 வரையில் இந்த 555 ஒற்றைச் சட்டங்களுள் 195 புது பேருந்துகள் விஸ்தரிப்புக்கும், 360 பழைய வண்டிகளை மாற்றி அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேருந்துகள் சென்னை யிலேயிருந்து எவ்வளவு தூரம் வரை விடுவதற்கு உத்தேசம் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, சென்னை பெருநகர்ப்பிரிவு என்று வைத்து அதற்காக ஒரு வரை யறை வைத்திருக்கிறோம். ஏற்கெனவே ஒரு வரையறை இருக் கிறது. அதற்குள்தான் அது இயக்கப்படும்.

[1982 மார்ச் 6

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற தொரணம் : இந்தத் திட் டம் எப்போது முதற் கொண்டு செயல்படத் தொடங்கும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : இது செயல்படத் துவங்கி விட்டது. ஏறத்தாழ 80 வண்டிகள் வாங்கிவிட்டோம். 555 வண்டிகளை 1983-ஆம் ஆண்டிற்குள் வாங்கிவிடுவோம்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, 555 பஸ்கள் வாங்குவதற்கு உலக வங்கியிடமிருந்து எவ்வளவு கோடி ரூபாய் களைக் கடன் வாங்கியுள்ளது ? அவர்கள் அதற்கு என்ன என்ன நிபந்தனைகளைப் போட்டிருக்கிறார்கள் ? என்ன வட்டி விகிதம் செலுத்தப்படுகிறது என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஏறத்தாழ 12 கோடியே 60 இலட்சம் நாம் பெற்றிருக்கிறோம். அவர்கள் சொல்கிற கண்டிஷன், கட்டணவிகிதம் அவர்கள் சொல்கிறபடி இருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். லாபம் நாம் திருப்பிச் செலுத்துகிற அளவுக்கு நமக்கு வருகிறதா என்ற கணக்கை சொல்லி அதை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நாம் திருப்பிக்கட்ட முடியும். வட்டி விகிதம் பற்றி சரியான குறிப்புகள் என்னிடத்திலே இல்லை. வேண்டுமானால் மீண்டும் தருகிறேன்.

திரு. ஏ. சி. சண்முகம் : பல்லவன் போக்குவரத்துக் கழகத் திலே புதிதாக 555 பேருந்துகள் வாங்க இருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். புதிய போக்குவரத்துக் கழகம் ஆரம்பிக்கிறபோது உலக வங்கி உதவித் திட்டத்தின் கீழ் புதிய பேருந்துகள் வாங்கும் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : புதிய போக்குவரத்துக் கழகம் தொடங்கப்படுகிறபோது தமிழக அரசே பேருந்துகளை வாங்கிக் கொடுக்கிறது. புதிய போக்குவரத்துக் கழகத்திற்கு மட்டுமல்ல, பழைய பேருந்து கழகத்திற்கும் வாங்குகிறது. உலக வங்கி இதுபோன்ற மாநகரத்திற்கு மட்டும்தான் திட்டத்தை வைத்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தின் அடிப்படையில் இது வாங்கப்படுகிறது.



*1982 மார்ச் 6]

அரசு பேருந்துகளில் பயணச்சீட்டு இல்லாமல் பயணம் செய்பவர்களுக்கு விதிக்கப்படும் அபராதத் தொகை.

* வினா எண். 398.—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

தமிழ்நாட்டிலுள்ள அரசு பேருந்துகளில் டிக்கெட் இல்லாமல் பயணம் செய்பவர்களுக்கு ரூபாய் இரண்டு என்று இருக்கும் அபராதத் தொகையை உயர்த்தும் செயற் குறிப்பு அரசின் பரி சீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : ஆம்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு ரூபாய் உயர்த்தப்படுகிறது என்பதை அறிய விரும்புவ துடன், அரசாங்கப் பேருந்துகளில் செக்கிங் அதிக அளவுக்கு இல்லாத காரணத்தினால் கண்டக்டர்கள் வாடிக்கையாளர்களை பழக்கப்படுத்தி வைத்துக்கொண்டு மாமூல் வாங்கிக்கொண்டு டிக் கட் கொடுக்காமல் பயணம் செய்கிற நிலைமை இருக்கிறது. ஆகவே, செக்கிங்கை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு உண்டா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மத்திய அரசாங்கம் உயர்த் துவதற்கான ஒரு சட்டத்தைப் போட்டிருக்கிறது. அதிலே கட் டணத் தொகையிலிருந்து 10 மடங்கு அல்லது 500 ரூபாய் இதிலே எது குறைவோ அந்தத் தொகையை விதிக்கலாம் என்று சொல்லி யிருக்கிறார்கள். இதில் ஏதாவது மாற்றம் செய்யலாமா என் பதை ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். எவ்வளவு செக்கிங் இன்ஸ்பெக்டர்கள் வைக்கவேண்டுமென்று நார்ம்ஸ் சட்டத்திலே இருக்கிறதோ அந்த அளவுக்கு நாம் வைத்துக்கொண்டிருக்கிறோம் அது மட்டுமல்ல, இப்படிப்பட்ட தவறுகள் நடக்காமல் இருப்பதற் காக நேரிடையாக நிர்வாக இயக்குனர்கள் தங்கள் அமைப்பின் கீழே செக்கிங் இன்ஸ்பெக்டர்கள் வைத்துக் கொண்டு செய்கிறார் கள். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற கருத்தின் அடிப்படையிலே அதைப் பரிசீலிப்பதற்கு அரசு தயாராக இருக் கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, அரசுப் பேருந்துகளில் கூட்டமான நேரங்களில் கண்டக்டர்கள் டிக்கட் என்று சொல்லிவிட்டு 5, 10 ரூபாய் அதிகமாகக் கொடுத்தால் டிக்கட் கொடுக்கிறார்கள். எம்.எல்.ஏ., எம்.பி. இவர்கள் வர வில்லையென்றால்—பாஸ் வரவில்லையென்றால்—கண்டக்டர்கள் அந்த நெம்பரை நோட் பண்ணிவைத்துக்கொண்டு டிக்கட் விற்று விடுகிறார்கள். கணக்குகள் எழுதுவது இல்லை. இப்படிப்பட்ட தவறுகள் செய்கிற[illegible]மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற கொரணம் : இந்தத் திட்
டம் எப்போது முதற் கொண்டு செயல்படத் தொடங்கும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : இது செயல்படத் துவங்கி
விட்டது. ஏறத்தாழ 80 வண்டிகள் வாங்கிவிட்டோம். 555
வண்டிகளை 1983-ஆம் ஆண்டிற்குள் வாங்கிவிடுவோம்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, 555 பஸ்கள்
வாங்குவதற்கு உலக வங்கியிடமிருந்து எவ்வளவு கோடி ரூபாய்
களைக் கடன் வாங்கியுள்ளது ? அவர்கள் அதற்கு என்ன என்ன
நிபந்தனைகளைப் போட்டிருக்கிறார்கள் ? என்ன வட்டி விகிதம்
செலுத்தப்படுகிறது என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே,
ஏறத்தாழ 12 கோடியே 60 இலட்சம் நாம் பெற்றிருக்கிறோம்.
அவர்கள் சொல்கிற கண்டிஷன், கட்டண விகிதம் அவர்கள்
சொல்கிறபடி இருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். லாபம்
நாம் திருப்பிச் செலுத்துகிற அளவுக்கு நமக்கு வருகிறதா என்ற
கணக்கை சொல்லி அதை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.
நாம் திருப்பிக்கட்ட முடியும். வட்டி விகிதம் பற்றி சரியான
குறிப்புகள் என்னிடத்திலே இல்லை. வேண்டுமானால் மீண்டும்
தருகிறேன்.

திரு. ஏ. கி. சண்முகம் : பல்லவன் போக்குவரத்துக் கழகத்
திலே புதிதாக 555 பேருந்துகள் வாங்க இருப்பதாக அமைச்சர்
அவர்கள் குறிப்பிட்டார்கள். புதிய போக்குவரத்துக் கழகம்
ஆரம்பிக்கிறபோது உலக வங்கி உதவித் திட்டத்தின் கீழ் புதிய
பேருந்துகள் வாங்கும் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : புதிய போக்குவரத்துக்
கழகம் தொடங்கப்படுகிறபோது தமிழக அரசே பேருந்துகளை
வாங்கிக் கொடுக்கிறது. புதிய போக்குவரத்துக் கழகத்திற்கு
மட்டுமல்ல, பழைய பேருந்து கழகத்திற்கும் வாங்குகிறது. உலக
வங்கி இதுபோன்ற மாநகரத்திற்கு மட்டும்தான் திட்டத்தை
வைத்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தின் அடிப்படையில் இது
வாங்கப்படுகிறது.





அரசு பேருந்துகளில் பயணச்சீட்டு இல்லாமல் பயணம் செய்பவர்களுக்கு
விதிக்கப்படும் அபராதத் தொகை.

* வினா எண். 398.—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு
போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை
யளிப்பாரா—

தமிழ்நாட்டிலுள்ள அரசு பேருந்துகளில் டிக்கெட் இல்லாமல்
பயணம் செய்பவர்களுக்கு ரூபாய் இரண்டு என்று இருக்கும்
அபராதத் தொகையை உயர்த்தும் செயற் குறிப்பு அரசின் பரி
சீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : ஆம்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே,
எவ்வளவு ரூபாய் உயர்த்தப்படுகிறது என்பதை அறிய விரும்புவ
துடன், அரசாங்கப் பேருந்துகளில் செக்கிங் அதிக அளவுக்கு
இல்லாத காரணத்தினால் கண்டக்டர்கள் வாடிக்கையாளர்களை
பழக்கப்படுத்தி வைத்துக்கொண்டு மாமூல் வாங்கிக்கொண்டு டிக்
கட் கொடுக்காமல் பயணம் செய்கிற நிலைமை இருக்கிறது.
ஆகவே, செக்கிங்கை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு உண்டா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மத்திய அரசாங்கம் உயர்த்
துவதற்கான ஒரு சட்டத்தைப் போட்டிருக்கிறது. அதிலே கட்
டணத் தொகையிலிருந்து 10 மடங்கு அல்லது 500 ரூபாய் இதிலே
எது குறைவோ அந்தத் தொகையை விதிக்கலாம் என்று சொல்லி
யிருக்கிறார்கள். இதில் ஏதாவது மாற்றம் செய்யலாமா என்
பதை ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். எவ்வளவு செக்கிங்
இன்ஸ்பெக்டர்கள் வைக்கவேண்டுமென்று நார்ம்ஸ் சட்டத்திலே
இருக்கிறதோ அந்த அளவுக்கு நாம் வைத்துக்கொண்டிருக்கிறோம்
அது மட்டுமல்ல, இப்படிப்பட்ட தவறுகள் நடக்காமல் இருப்பதற்
காக நேரிடையாக நிர்வாக இயக்குனர்கள் தங்கள் அமைப்பின்
கீழே செக்கிங் இன்ஸ்பெக்டர்கள் வைத்துக் கொண்டு செய்கிறார்
கள். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற கருத்தின்
அடிப்படையிலே அதைப் பரிசீலிப்பதற்கு அரசு தயாராக இருக்
கிறது.

திரு. இரா. தாமரைக்கனி :- தலைவர் அவர்களே, அரசுப்
பேருந்துகளில் கூட்டமான நேரங்களில் கண்டக்டர்கள் டிக்கட்
என்று சொல்லிவிட்டு 5, 10 ரூபாய் அதிகமாகக் கொடுத்தால்
டிக்கட் கொடுக்கிறார்கள். எம்.எல்.ஏ., எம்.பி. இவர்கள் வர
வில்லையென்றால்—பாஸ் வரவில்லையென்றால்—கண்டக்டர்கள்
அந்த நெம்பரை நோட் பண்ணி வைத்துக்கொண்டு டிக்கட் விற்று
விடுகிறார்கள். [illegible]கள் எழுதுவது இல்லை. இப்படிப்பட்ட
தவறுகள் செய்கிற[illegible] மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

[1982 மார்ச் 6

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தவறுகள் இருந்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வேலை நீக்கம் செய்யப்படுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்வியில் சொன்னதுபோல் தவறுகள் நடக்குமானால் அந்தக் குறிப்புகளை உடனடியாக எனக்கு சொல்வது உறுப்பினர்களது கடமையாகும், அதுதான் நாட்டுக்கும் நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல் : டிக்கட் இல்லாமல் பயணம் செய்வதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சென்ற ஆண்டு எத்தனை பேர்கள் அப்படி பயணம் செய்தார்கள். அப்படி பயணம் செய்தவர்களைப் பிடித்து எவ்வளவு ரூபாய் அபராதம் வசூலிக்கப்பட்டது, அதன் மூலமாக போக்குவரத்துக் கழகத்திற்கு கிடைத்த வருமானம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அபராதத் தொகை மாற்றியமைப்பதைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன். எவ்வளவு வசூலித்திருக்கிறார்கள் என்ற குறிப்பு என்னிடத்திலே இல்லை. வேண்டுமானால் எல்லா போக்குவரத்துக் கழகங்களிடமிருந்து கேட்க வேண்டும். கேட்டுத் தர தயாராக இருக்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் கேள்வி கேட்கிறபோது பேருந்துகளில் கண்டக்டர்கள் மாமூல் வாங்கிக் கொண்டு டிக்கட் இல்லாமல் பயணம் செய்ய அனுமதிக்கிறார்கள் என்று சொன்னார்கள். அப்படி மாமூல் வாங்கிக்கொண்டு டிக்கட் இல்லாமல் பயணம் செய்ய அனுமதித்தது பற்றி அரசுக்குப் புகார் வந்திருக்கிறதா ? அதன்மீது அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இது சாதாரணமாக ஆங்காங்கே நடக்கக்கூடிய காரியமாக இருக்கிறது. எங்காவது ஒன்றிரண்டு நடக்கிறபோது அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டிய அவசியம் இல்லை, அதற்காகத்தான் தனித்தனியாக மாவட்டத்திற்கு ஒன்று என்ற முறையிலே கூட போக்குவரத்துக் கழகங்களை அமைத்து நிர்வாகத்தை நடத்திக்கொண்டிருக்கிறோம். அவர்கள் நேரடியாக அவற்றைக் கவனித்து நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள்.

[முற்பகல் 10-00]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

*வினா எண். 399. மாண்புமிகு அமைச்சருடைய வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகிறது.



1982 மார்ச் 6]

## நீலகிரியில் அரசுத்துறையில் உருவாக்கப்பட்டுள்ள தேயிலைத் தோட்டங்கள்.

*வினா எண். 400— திரு. கு. ரமணி : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மலையில் இலங்கை அகதிகளுக்காக அரசுத்துறையில் உருவாக்கப்பட்டுள்ள தேயிலைத் தோட்டங்கள் எவ்வளவு?

(ஆ) அவற்றில் வேலை செய்கிற இலங்கை அகதிகள் எத்தனை பேர் ?

(இ) நிதிநிலையில் இது லாபகரமாக இயங்குகிறதா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, (அ) நீலகிரி மலையில் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக்கழகத்தின் கீழ் எட்டு தேயிலைத் தோட்டங்களும், இரண்டு தேயிலைத் தொழிற்சாலைகளும் உள்ளன.

(ஆ) 4,462 இலங்கை அகதிகள் வேலை செய்கின்றனர்.

(இ) வளர்ச்சித் திட்டங்கள் தொடர்ந்து செயல்படுவதால் நிதிநிலையில் இன்னும் இலாபகரமான நிலையை அடையவில்லை.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, நான் கேட்ட கேள்வியில் அகதிகளுக்காக அரசுத் துறையில் உருவாக்கப்பட்டுள்ள தேயிலைத் தோட்டங்கள் எவ்வளவு என்று கேட்டேன். இத்தனை தோட்டங்கள், இத்தனை ஏக்கர்களில் இருக்கின்றன என்று அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா என்பதை முதலில் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அகதிகளுக்காகத் தமிழ்நாட்டில் தேயிலைத் தோட்டங்கள் எட்டு இடங்களில், சேரன்பாடி, சேரன்கோடு, நெல்லியாளம், குன்னூர், கோத்தகிரி, கூடலூர், தேவளா, பாடம்துறை போன்ற இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. முதல்கட்டமாக 1969 இல் 1,503 ஹெக்டேர் நிலப்பரப்பில் தேயிலை பயிரிடப்பட்டுள்ளது. இரண்டாவது கட்டமாக 800 ஹெக்டேர் நிலப்பரப்பில் 1972 ஆம் ஆண்டு பயிரிடப்பட்டுள்ளது. மூன்றாவது கட்டமாக 1981இல் 1,000 ஹெக்டேர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டுள்ளது.

[1982 மார்ச் 6

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, இலங்கையிலிருந்து வந்தி
ருக்கும்படியான தமிழகத்திற்கு வந்திருக்கும்படியானவர்களில்
அதிலேயும் நீலகிரி மலைக்கு என்று அனுப்பப்பட்டுள்ள மொத்த
இலங்கை அகதிகள் எத்தனை பேர் ? அவர்கள் அத்தனை
பேர்களுக்கும் இந்தத் தேயிலைத் தோட்டங்களில் வேலை
கொடுக்கப்பட்டுள்ளதா அல்லது வேலை கொடுக்கப்படாத
அகதிகள் எத்தனை நூறு பேர்களுக்கு அல்லது எத்தனை ஆயிரம்
பேர்களுக்கு இன்னும் வேலை கொடுக்கப்படாமல் இருக்கிறார்
கள். அவர்களுக்குத் தேயிலைத் தோட்டங்களிலேயே
வேலை கிடைக்குமா அல்லது வேறு வேலை கொடுக்க அரசில்
ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திருமதி கோமதி சினிவாசன் : மாண்புமிகு
தலைவரவர்களே, இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியவர்
கள் மொத்தம் 3,77,561 நபர்கள் அடங்கியுள்ள 93,875 குடும்
பங்கள் அடங்கியுள்ளன. நீலகிரி மலையில் எவ்வளவு பேர்கள்
வந்துள்ளார்கள் என்பதற்கான குறிப்பு என்னிடத்திலே இல்லை.
தமிழ்நாட்டுக்கு வந்த அகதிகள் அனைத்துப் பேருக்கும் வேலை
கள் மற்றும் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் இவர்களுக்கு
பிசினஸ் லோன் போன்றவையெல்லாம் அமைத்துக் கொடுத்து,
அதுமட்டுமல்லாமல், விவசாயத் துறையிலும், அவர்களுக்கு
வாய்ப்புகள் கொடுத்து, எல்லா வகைகளிலேயும் அவர்களுக்கு
வாய்ப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. கே. உச்சி : தலைவரவர்களே, இலங்கையிலிருந்து
தாயகத்திற்குத் திரும்பிய தமிழர்களுக்கு ஒரு குடும்பத்திற்கு
இரண்டு பேர்களுக்கு இப்பொழுது வேலை கொடுக்கப்படுகிறது.
ஒரு குடும்பத்தில் கிட்டத்தட்ட 12 பேர் என்று
இருக்கிறார்கள். அம்மாதிரி குடும்பங்களில் அளவிற்கு
குடும்பத்திற்கும் 3 பேர்களுக்குத் தேயிலைத் ஒவ்வொரு
வேலை கிடைக்க அந்தத் தேயிலைத் தோட்டங்களில்
மதிக்கப்படுமா ? அவர்களுடைய நன்மைகளைக் அனு
ஒவ்வொரு வருஷமும் அதிகமான இடங்களில் தேயி ல கருதி
அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். பயிரிட

மாண்புமிகு திருமதி கோமதி சினிவாசன் :
தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் மத்திய மாண்புமிகு
வகுத்துள்ள திட்டம். மத்திய அரசாங்கம்
3 பேர்களுக்கு வேலை கொடுக்கவேண்டுமென்ற வீட்டுக்கு
நாங்கள் எழுதி அனுப்பி. அவர்கள் ஏதாவது ஒரு நியதியை
கடிதத்தை அனுப்பினால் அதன்மூலமாக நல்ல
குடும்பத்திற்கு மூன்று நபர்கள் வீதம் வேலைவாய்ப்பு அவர்களுக்குக்
[illegible] என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். கொடுக்கப்



1982 மார்ச் 6]

திரு. மு. அரங்கநாதன் : மாண்புமிகு தலைவரவர்களே,
அரசு தேயிலைத் தோட்டங்களில் ஒரு ஏக்கருக்கு ஒரு ஆள்
வீதம்தான் தற்போது இருக்கிறார்கள். தனியார் தோட்டங்
களில் அதிக ஆட்கள் இருப்பதைப்போல அரசுத் தோட்டங்
களிலும் ஒரு ஏக்கருக்கு ஒன்றேகால் ஆள், ஒன்றரை ஆள்
வீதம் ஏற்பாடு செய்தால் இலங்கைத் தமிழர்களின் இன்னல்
தீர்ந்து வேலையில்லாத பிரச்னை தீரும் என்பதால் அரசு
இதைப் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சினிவாசன் : மாண்புமிகு
தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கத்திற்கு எழுதி அதன்
மூலம் நாங்கள் பரிசீலிக்கிறோம்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவரவர்
களே, இலங்கையிலிருந்து வந்த அகதிகள் அத்தனைபேர்
களுக்கும் வேலைவாய்ப்புகள் அளிக்கப்பட்டதாக அமைச்சரவர்
கள் தெரிவித்தார்கள். அதன்படி ஆந்திரம், கேரளத்திற்கு
அனுப்பப்பட்ட அகதிகள் அங்கு வேலையிழந்து மீண்டும்
மதுரைக்குத் திரும்பி மதுரை. இராமநாதபுரம் கலெக்டர்
அலுவலகங்களுக்கு முன்னாலே கடந்த 20 நாட்களாக உண்ணா
விரதம் இருந்து வருகிறார்கள் அவர்கள் நிலை அரசுக்கு
ஏதாவது தெரியுமா ? அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்
பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சினிவாசன் : மாண்புமிகு
தலைவர் அவர்களே, இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய
அகதிகளுக்கு நாங்கள் வேலை வாய்ப்பு கொடுத்துள்ளோம்.
ஒருமுறைதான் வேலை வாய்ப்பு கொடுக்க முடியும். பிறகு
ஆந்திரா, கேரளா போன்ற மாநிலங்களுக்கு அனுப்பி அவர்
களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கும் சமயத்தில், அந்த வேலை
வாய்ப்புகளை இழந்து தமிழகத்திற்கு வரும்போது, மீண்டும்
மத்திய அரசுக்கு எழுதிக் கேட்டுத்தான் அவர்களுக்கு வேலை
வாய்ப்பு கொடுக்க முடியும். மாநில அரசால் மட்டும் அதைச்
செய்ய முடியாது. மத்திய அரசு இச்சையோடுதான் அதைச்
செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
ஆந்திராவிலிருந்தும், கேரளாவிலிருந்தும் வேலை வாய்ப்பு
இழந்து வந்த அகதிகள் மதுரையில் உண்ணாவிரதம் இருப்பதாக
மாண்புமிகு நெடுமாறன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதைப்
பற்றி மத்திய அரசுக்கு நாங்கள் எழுதிக் கேட்டு அவர்கள்
என்ன தகவல் கொடுக்கிறார்களோ அதை நாங்கள் செய்
கிறோம் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள்
முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப்
பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது
என்பதைக் குறிக்கும்.]

[1982 மார்ச் 6

## 2. ஒழுங்குப் பிரச்சினை.

(அ) பேரவைக்கூட்டம் நடைபெறுகையில் புதுத்திட்டங்களை பேரவையில் அறிவிக்காது மேலவையில் அறிவிப்பது.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தின் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையின் மீது உறுப்பினர்கள் வாதம் செய்து கொண்டிருக்கிறார்கள் ஆனால், பட்ஜெட்டிலே அறிவிக்கப்பட்ட திட்டங்களுக்கு அப்பாலே பல்வேறு புதிய அறிவிப்புகளைச் சட்டமன்றத் தொடர் கூட்டம் இங்கே நடைபெற்றுக் கொண்டிருந்தாலும், முதல்வர் அவர்கள் இங்கே அறிவிக்காமல், மேலவையிலே தெரிவிக்கிறார். உதாரணமாக, ரூ. 100 கோடி ஏழைக் குழந்தைகளுக்கு இலவச உணவு, சிமெண்ட் ஆலைகளை அரசாங்கம் எடுத்துக் கொள்ளும், மின்சார வாரியத்தை சர்க்கார் எடுத்துக் கொள்ளும் போன்ற அறிவிப்புகளைச் செய்கிறார். நிதி அமைச்சர் அதை அறிவிக்கவில்லை. அதைப்பற்றி விவரம் தராமல் இருந்தால் உறுப்பினர்கள் எப்படி இங்கே விவாதம் செய்ய முடியும்? மாண்புமிகு உமாநாத் அவர்கள் கூட மின்சார வெட்டு சம்பந்தமாக இந்த சபைக்கு அறிவிக்காமல் மேலவையிலே அறிவித்தார்களே, இது மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்ட சபை அல்லவா என்று கேட்ட பொழுது, சபை கூடவில்லை, எனவே சொல்லவில்லையென்று சொன்னார்கள். இன்றைக்கு இதுபோன்ற பல்வேறு அடிப்படை திட்டங்களை முதல்வர் அவர்கள், இங்கே சொல்லாமல், மேலவையிலே சொல்கிறபொழுது நிதியமைச்சரும் அறிவிக்காமல் இருக்கிறபொழுது, வாதத்திலே கலந்துகொள்கின்ற உறுப்பினர்கள் அதுகுறித்து எப்படி விவாதிக்க முடியும்? அதிலுள்ள குறைகளைச் சர்க்காருடைய கவனத்திற்கு எப்படிக்கொண்டு வரமுடியும்? வேண்டுமானால் முதல்வருக்கு மேலவை சௌகரியமாக இருக்கலாம். ஆனால், உள்நோக்கத்தோடு இந்த அவையினுடைய உரிமையை மீறுவதாகவும், இந்தச் சபை உறுப்பினர்களை மதிக்காத ஒரு தன்மையாகவும் இருக்கிறது என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எனவே, அதற்கு அரசாங்கத்திடமிருந்து பதில் எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டு அவைகளும் நடப்பதால் ஏதாவது ஒரு அவையில் அறிவிப்பது (குறுக்கீடு) அந்த அவையிலே அறிவிப்பது இந்த அவைக்கும் சேர்த்துத்தான்.



1982 மார்ச் 6]

திரு. அ. ரகுமான்கான் : அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

*திரு. க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தங்களுடைய ஆலோசனைக்காக ஒன்றை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த அவையிலே வாக்களித்து, அந்த வாக்களித்தது காரணமாக, இந்த அவையிலே நிறைவேறினால்தான் பட்ஜெட் நிறைவேறும். பட்ஜெட் நிறைவேற்றப்பட வேண்டிய அவையிலே தெரிவிக்கப்பட வேண்டிய கருத்துக்களை, பட்ஜெட்டை முறைப்படி, சட்டப்படி நிறைவேற்ற வேண்டிய அவசியம் இல்லாமல், கருத்து விளக்கமாக விவாதிக்கக்கூடிய அவையிலே அதைத் தெரிவிக்கிறபொழுது இந்த அவை புறக்கணிக்கப்படுகிறது என்ற ஒரு எண்ணம் ஏற்பட, இடம் இருக்கிறது. அந்த எண்ணம் ஏற்படாமல் இருக்க இந்த அவையினுடைய உரிமையைக் காப்பாற்ற, அவைத் தலைவர் ஆலோசனை செய்ய வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே, நிதி சம்பந்தமான பிரச்னைகளை எடுத்து, அதைப் புதிய திட்டமாகக் கொண்டு வந்து நிறைவேற்றுகிறபொழுது, அதற்கு வாக்களித்து, இரு அவைகளும் ஒட்டளிக்க வேண்டுமென்ற நிலை வருகிறபொழுது, அந்த நிதி சம்பந்தமான பிரச்னைகளை இந்த அவைக்குத்தான் முதலிலே அறிவிக்க வேண்டுமென்பது முறை. அப்படி வேறு பல திட்டங்கள், கொள்கைகள், மாற்றங்கள் வருகின்றபொழுது, இந்த அவையிலேதான் அறிவிக்க வேண்டும், அந்த அவையிலே அறிவிக்கக் கூடாது என்பது அல்ல. மாண்புமிகு மேலவை உறுப்பினர்கள் விவாதித்துக் கொண்டு வருகின்றபொழுது மேற்கொண்டும் சில ஐயப்பாடுகளை, மற்றவைகளை எழுப்புவார்களானால், அப்பொழுது அதற்குப் பதில் உரை தெரிவிக்க வேண்டுமென்கிற பொழுது, சிலபல விளக்கங்கள் தரவேண்டிய நிலைமைகள் ஏற்படுகின்றன. ஆகவே, இங்கேதான் ஒரு அறிவிப்பும் மற்றவைகளும் செய்ய வேண்டுமென்ற அவசியம் இல்லை. நிதி சம்பந்தமான தன்மைகளில் ஒட்டெடுக்கிற முறையில் இருப்பதைத்தான் இந்த அவையிலே அறிவித்துவிட்டு அதற்குப் பிறகு அந்த அவையிலே அறிவிக்க வேண்டுமென்ற முறையிருக்கிறது. ஆகவே, அங்கங்கே இருப்பவர்கள் எழுப்புகின்ற ஐயப்பாடு. அவர்கள் கிளப்புகின்ற பிரச்னைகள், கூறுகின்ற குறைபாடுகள் ஆகியவற்றிற்கு விடை அளிக்கும்போது, பேரவைக்கு அறிவித்து விட்டு, பிறகு இங்கே வந்து சொல்கிறேன் என்பது பொருந்தி வராது. எங்கெங்கே வருகிறதோ, அங்கங்கே சொல்கிறார். ஆகவே, அதிலே அதிக பிரச்னை இராது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1982 மார்ச் 6

நிதி சம்பந்தமான பிரச்னைகள் வரும்போது பழக்க உள்ளந்
தோடு இந்தப் பேரவைக்கு மதிப்பு அளித்து இங்கே அறி
விக்கின்ற முறை மேற் கொள்ளப்படும். அதுதான் இதுவரையில்
மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

[முற்பகல் 10-10]

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, விதிகள் சம்பந்தமாக நம்முடைய அவை முன்ன
வர் அவர்களுக்கு உங்கள் மூலமாக கவனத்திற்குக் கொண்டு
வரவிரும்புகிறேன். மேலவையினுடைய புரொசிடிங்ஸ், உரி
மைப் பிரச்சினையாக இருந்தாலும் வினா, விடையாக இருந்
தாலும் அவைகள் வேறு. அதைப்போலவே இங்கேயும் வேறு.
நிதி நிலை அறிக்கை சம்பந்தமாக புதிய அறிவிப்புகளை
சொல்லியிருக்கிறார்கள். உதாரணமாக தாலிக்குத் தங்கம்
போன்ற பிரச்சினையில் புதிய அறிவிப்புகள், சொல்லப்பட்டு
இருக்கின்றன. அந்த சபையிலே வருவதை நாங்கள் தெரிந்து
கொள்ள வேண்டும் என்ற அவசியத்தில் இல்லை. பத்திரிகை
யிலே வரலாம் அல்லது புரொசிடிங்கிலே படித்துக் கொள்ள
லாம். அது நாங்களே தெரிந்து கொள்வது. ஆனால் இந்த
அவைக்குத் தெரிவிக்கப்படவில்லை. நிதி அமைச்சரும் தெரி
விக்கவில்லை. இப்போது எதிர்கட்சித் தலைவர் அவர்கள் பேச
இருக்கிறார்கள். நீங்கள் பதில் சொல்லப் போகிறீர்கள்.
ஆனால் இந்த அவையில் இருப்பவர்களுக்கு அந்த அறிவிப்புகள்
பற்றி ஏதுவுமே தெரியாது. தாலிக்குத் தங்கம் பிரச்சினையில்
இன்றைக்கு மாற்றுத் திட்டம்அறிவித்திருக்கிறார்கள் 100 கோடி
ரூபாய் திட்டத்திற்கு மாற்றுத் திட்டத்தை அளித்திருக்கிறார்கள்
மின்சார இலாகா நட்டத்தில் ஓடுகிறது. சர்க்கார் எடுத்துக்
கொள்ளப்போகிறது என்று சொல்லி இருக்கிறார்கள். இது
இங்கே இருக்கக்கூடிய உறுப்பினர்களுக்குத் தெரியுமா!
நாங்கள் தெரிந்து கொள்ளவேண்டிய அவசியம் இல்லை.
மேலவையை மதிக்கிறோம் என்பது வேறு. அது பற்றி
பத்திரிகைகளில் செய்திகள் வரலாம். நாங்கள் பத்திரிகை
படிக்கவேண்டிய அவசியம் இல்லை. அந்தச் செய்திகளைத்
தெரிந்து கொள்ளவேண்டிய அவசியம் இல்லை. இந்த விவா
தம் நடந்து கொண்டு இருக்கின்ற வரைக்கும் நிதி அமைச்சர்
அறிவிக்கவில்லை. எந்த அறிவிப்பும் வரவில்லை. தாலிக்குத்
தங்கம் இருக்கிறதா என்று கேட்டால், இல்லை. ஆகவே இது
முக்கியமான ஒரு ஒழுங்குப்பிரச்சினை, இந்த அவையின்
உரிமையை மீறுகின்ற பிரச்சினை. நீங்கள் தான் எங்களுக்குப்
பாதுகாப்புத் தரவேண்டும் என்று பேரவைத் தலைவர்
அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.



1982 மார்ச் 6]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்
களே, திரு. ரகுமான்கான் அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்சினையை
எழுப்பி இருக்கிறார்கள். அன்றைய தினம் நான் அங்கே இருந்
திருக்கின்ற காரணத்தினால் ஒரு தகவலை மட்டும் சொல்லி
விடலாம் என்று கருதுகிறேன். ஒரு எதிர்கட்சி உறுப்பினர்
தாலிக்குத் தங்கம் என்ற பிரச்சினையில் சில சந்தேகத்தை
எழுப்பினார்கள். அப்பொழுது மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள் அங்கே உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். நான்
அங்கே இருந்த காரணத்தினாலே சொல்கிறேன், தவறாக
குறுக்கிட்டேன் என்று நினைக்கவேண்டாம். அப்போது
அந்தக் கேள்வி எழுப்பிய நேரத்திலே மாண்புமிகு முதலமைச்
சர் அவர்கள் விடை அளித்தார்கள். அதே மாதிரி மாண்பு
மிகு உறுப்பினர் ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் ஒரு சந்தே
கத்தை எழுப்பினார்கள். அப்போது மாண்புமிகு முதலமைச்
சர் அவர்கள் அங்கே இருந்தார்கள். அதற்குப் பதில் கொடுத்
தார்கள். அதே மாதிரி அந்த மன்றத்தில் இருப்பவர்களும்,
எல்லா அறிவிப்புகளையும் அங்கேயே அறிவித்து விடுகிறீர்கள்.
மேலவையில் அறிவிக்கவில்லை என்று கூட கேட்கிறார்கள்.
அப்போது கூட இதே சமாதானத்தை அங்கே சொன்னார்கள்.
சில நேரங்களில் விவாதம் வருகின்ற நேரத்திலே சந்தேகம்
வருகின்றது. அப்படி சந்தேகம் வருகின்ற நேரத்திலே மாண்பு
மிகு முதலமைச்சரோ அல்லது சம்பந்தப்பட்ட அமைச்சர்
களோ அங்கே தொடர்ந்து இருக்கமுடியாது. அதற்கு ஏதா
வது பதில் கொடுக்கவேண்டும். இது தொடர்ந்து பல
ஆண்டுகளாக வந்து கொண்டிருக்கின்றது. முன்பு திராவிட
முன்னேற்றக் கழக ஆட்சியிலே கூட இதே மாதிரியான
பிரச்சினை வந்திருக்கின்றது. அப்போது கூட சில நேரங்
களில் அமைச்சராக இருக்கக்கூடியவர்கள், அங்கத்தினர்கள்
பதில் கொடுத்திருக்கிறார்கள். இந்த பை கேதிரல் லெஜிஸ்
லேஷன் இருக்கக்கூடிய நேரத்தில் இப்படிப்பட்ட பிரச்
சினை வரத்தான் செய்யும். அதே நேரத்தில் அவை முன்னவர்
அவர்கள் சொன்னமாதிரி அந்த முறை கடைபிடிக்கப்படு
வதற்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை. இந்தப்
பிரச்சினை வந்த நேரத்தில் நான் அங்கே இருந்ததால்
இதை விளக்கினேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டு பிரச்சினை
களைச் சொல்லி இருக்கிறீர்கள். அந்த இரண்டு பிரச்சினை
களும் கொள்கை விளக்கமாக இல்லை. ஒரு நிர்வாக அடிப்
படையில் செய்த அறிவிப்பாக இருக்கிறதே தவிர கொள்கை
அறிவிப்பாக இல்லை. இந்த 100 கோடி ரூபாய் திட்டம் ஆண்
களிடம் இருப்பதா பெண்களிடம் இருப்பதா என்று கேள்வி
வந்தபோது, பெண்களிடம் ஒப்படைக்கப்பட்டு நடைபெறும்
என்று நிர்வாக அறிவிப்பில் சொல்லியிருக்கிறார்கள். பொது

கொள்கை அறிவிப்புகள் அறிவிப்பதாக இருந்தால் அமைச்சர்கள் கள், இந்த அவையில் அறிவித்து பின்னர் மேலவையில், அறிவிப்பது நல்லது என்று நான் கருதுகிறேன்.

ஆ. வினாப்பட்டியலில் சேர்க்கப்பெற்ற வினாக்கள் ஒத்திவைக்கப் பெறுதல்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தின் முதல் நிகழ்ச்சியாக வினா—விடை நேரத்தைத் தாங்கள் எடுத்துக் கொள் கிறீர்கள். நாள் ஒன்றுக்கு 20 வினாக்கள் அந்தப் பட்டியலில் இடம்பெறச் செய்கிறீர்கள். அப்படி இடம்பெறச் செய்கின்ற நேரத்திலே அமைச்சர் பெருமக்கள் பல்வேறு பொறுப்புகள் சம்பந்தப்பட்ட அமைச்சர்களின் வினாக்கள் இடம் பெறு கின்றன. பெரும்பாலும் நமது முதலமைச்சர் அவர்கள் கேள்வி இடம்பெறுவது இல்லை. பல்வேறு அமைச்சர்களுடைய வினாக்கள் இடம் பெற்றாலும் கூட, சிற்சில நேரங்களில் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க வினாக்கள் ஒத்திவைக்கப்படுகின்றன என்று சொல்லுகிறீர்கள். அந்த வசதி அமைச்சர்களுக்குத்தான் இருக்கிறதா, உறுப் பினர்களுக்கு இல்லையா ? நான் கேட்பதெல்லாம் இந்த தலையாய மன்றம் கூடுகின்ற நேரத்திலே எப்படி உறுப் பினர்கள் இங்கே வந்து கலந்து கொள்ளுகிறார்களோ அதைப் போலவே அமைச்சர் பெருமக்களும் இந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவேண்டும். அப்படிக் கலந்து கொள்ளவில்லை என்று சொன்னால் இந்த வினாக்களுக்கு விடை அளிப்பதை விட வேறு என்ன முக்கிய பணி அவர்களுக்கு இருக்கிறது என்று நீங்கள் அறிவிப்பீர்களானால் நல்லது. அல்லது அதைக் காரணமாகப் பயன்படுத்திக் கொண்டு ......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தக் கேள்விகள் அப்படியே விடப்படுவதில்லை. இன்னொரு நாளைக்கு எடுத் துக் கொள்ளப்படும். (குறுக்கீடு) எல்லாச் சட்டமன்றங்களிலும் இந்த நிலை நடைமுறையில் நடந்து கொண்டு வருகிறது. சிலர் உடல்நிலை சரியில்லாமல் இருப்பார்கள். சில பேர்கள் வெளி ஊர்களுக்குச் சென்றிருப்பார்கள். வேறு சில நிகழ்ச்சிகள் இருக்கும். எல்லாவற்றையும் சொல்லிக் கொண்டு இருக்கவேண்டிய 'நெசசிட்டி, இல்லை. சிலருக்கு சொல்வது மரபு அல்ல. முறையல்ல. அந்தச்

திரு. கு. பா. பழனியப்பன் :—* * * * *

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது





மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் இப்படிப்பட்ட நடைமுறைகளை ஏற்றுக் கொள்வதாக இல்லை. நினைத்தபடி பிரச்சனைகளை இங்கே எழுப்ப அனுமதிக்க முடியாது. இதை எல்லாம் நான் அவைக்குறிப்பில் இருந்து நீக்குகிறேன்.

(3) வரவு செலவுத்திட்டம் 1982—83, பொது விவாதம்—(தொடர்ச்சி)

* திரு. சே. எஸ். ஜி. ஹாஜாசெரீப் : மிஸ்டர் ஸ்பிக்கர் சார் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் இந்த அவை முன் வைக்-கப்பட்டுள்ள 1982–83 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். பொது வாக வயது முதிர்ந்தவர்களுக்கு ஊதியம் அளிக்கும் திட்டம் குழந்தைகளுக்கு உணவு அளிக்கும் திட்டம் ஆகியவற்றை நான் பாராட்டுகிறேன் வரவேற்கிறேன். ஆனால் 1981–82 ஆம் ஆண்டு மதிப்பீட்டு பட்ஜெட்டுக்கும், கம்மியாகி 1982–83 ஆம் ஆண்டு மதிப்பீட்டு பட்ஜெட்டுக்கும் ஒபபிட்டு பார்த்தால் ஏறத் தாழ 441 கோடி ரூபாய் அதிகமாக இருக்கிறது. எப்போதுமே பட்ஜெட் வரவு, கம்மியாகி செலவு அதிகமாகக் காட்டுவது தான் பழக்கம். இந்த 441 கோடிக்கு மேலே மேற் கொண்டு ஒரு 200 கோடி ரூபாய் வந்தாலும் கூட அதைப் பற்றி நாம் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. இந்த நிலையில் கிட்டத்தட்ட 600–650 கோடி வரும் என்ற நிலையில் நீஙகள் 31 கோடி ரூபாய்க்கு வரியைச் சுமத்தி இருப்பது மிகவும் தவறு என்றுநான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நீஙகள் எதற்கு வரி சுமத்தியிருக்கிறீர்கள் என்று பார்த்தால் கைத்தறிப் பட்டுக்கு சேல்ஸ் டாக்ஸ் இன்கிரீஸ் செய்து இருக்கிறீர்கள். அதனால் ஏற்படும் கஷ்ட நஷ்டங்கள் குறித்து அரசாஙகத்திற்கு பல பெட்டிஷன்கள் வந்து இருக்கின்றன இதை அவர்கள் அவசியம் கைவிடுவார்கள் என்று நம்புகிறேன். கைவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அது மட்-டுமல்ல, எலெக்டிரிக்கல் கூட்ஸுக்கு வரியை ஏற்றியிருக்கிறார்கள். ஆல்கஹாலுக்கு (Alch nai) ஏற்றி இருப்பதை நான் அவசியம் வரவேற்கிறேன். அதற்கு 25 சதவீதம் என்று போட்டு இருப்பதை 50 சதவீதம் என்று போட்டாலும் சரி. ஆனால் மோட்டார் கார் பார்ட்ஸ், டயர்ஸ், ட்யூப்ஸ் பிஸ்கெட்ஸ், சாக்லெட், (Sweets) போன்றவற்றிற்கும் வரி போட்டு இருக்கி றீர்கள். இவைகள் எல்லாம் ஏற்கனவே இருக்கும் பண வீக்கத்தை மேற்கொண்டு எந்த நிலைக்கு உயர்த்தும், விலை வாசிகளை உயர்த்தும் என்பதைக்கருத்தில் வைத்து அரசாங்கம் இந்த (Taxe ) களை நீக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(திரு. கே. எஸ். ஜி. ஹாஜாசெரீப்) [1982 மார்ச் 6

(மான்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

நேற்று என்னுடைய நண்பர் மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா அவர்கள் சில பிரச்சனைகளைப்பற்றிச் சொன்னார்-கள். ஐ.எம்.எப். லோன் மத்திய சர்க்கார் கிட்டத்தட்ட 4.000/5,000 கோடிகளுக்கு வாங்குவது சரிதான் என்று சொன்னார்கள். அதைப்பற்றி ஏற்கனவே விவரமாக பாராளு மன்றத்தில் விவாதிக்கப்பட்டு இருக்கிறது. அதற்கு பிரதம அமைச்சர் அவர்களும், அப்போது நிதி அமைச்சராக இருந்த ஆர். வெங்கட்ராமன் அவர்களும் நல்லவிதத்தில் பதில் கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள்.

எதற்காக நாம் வாங் னோம்? இதனால் எந்தவிதமான தகராறும் ஏற்படாது; தேசத்திற்கு எந்தவிதமான கஷ்டமும் வராது, நஷ்டமும் வராது; தேசத்திற்கு அனுகூலமான நிலை தான் வரும் என்று சொல்லியிருக்கிறார்கள். எதிர்கட்சிக்காரர்கள் எப்போதும் எதிர்க்க வேண்டுமென்று நோக்கத்தில் சில பிரச்சனைகளை உருவாக்கினாலும் தேச மக்கள் இதை வெகுவாக வரவேற்று இருக்கிறார்கள். இதை எல்லாம் எண்ணிப்பகாமல் கனம் சங்கரய்யா அவர்கள் இதைப்பற்றி தவறாகப் பேசுவார்க ளேயானால் அது துரதிரஷ்டம் என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

(முற்பகல் 10–20)

திரு. என். சங்கரய்யா : மாற்றுத் தலைவர் அவர்களே, திரு. ஹாஜாசெரீப் அவர்கள் சர்வதேச நிதி நிறுவனத்திட-மிருந்து பணம் பெற்றதனால் நன்மை என்று கூறினார்கள். அவர் சொல்வது சரி அல்ல. சர்வ தேச நிதி நிறுவனம் இந்த நாட்டிலே உள்ள அரசாங்கம் ஏழை எளிய மக்களுக்கு உணவிலே சிறுமானியம் அளித்தால்கூட அதை மார்கெட் விலைக்கு குறைவாக விற்கக்கூடாது என்று நிபந்தனை விதித் திருக்கிறது. இது திரு. ஹாஜா செரீப் அவர்களுக்குத் தெரியுமா, என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜாசெரீப் : நன்றாகத் தெரியும். அதனால் ஏற்படுகின்ற நன்மை என்ன, கஷ்டம் என்ன என் பதை சீர்தூக்கிப்பார்த்தால் எது உச்சத்தில் இருக்கிறதோ அதைத்தான் நாம் எடுத்துக்கொள்ளவேண்டும். இந்த அரசாங் கத்தை எடுத்துக் கொள்வோம். நம்மிடம் பணம் இல்லை. அவசியம் மக்களுக்கு ஏதாவது நன்மை செய்ய வேண்டுமென்று நினைத்தால் பணம் கேட்டு உலகவங்கியில் நாம்-அப்ளிகேஷன் போட வில்லையா? நாம் போட்ட அப்ளிகேஷனை அவர்கள் பார்த்து கவனித்து பாஸ் செய்கிறார்கள்.



1982 மார்ச் 6] (திரு. கே. எஸ். ஜி. ஹாஜாசெரீப்)

அம்மாதிரியாக இருக்கக்கூடிய நிலையை வைத்துப்பார்க்கும் போது, நமக்கு பணம் கிடைக்கவில்லை என்றால் மிகுதியாக. நன்மை செய்ய முடியாது. அதனால் பல கஷ்டங்கள் ஏற்படும். கஷ்டங்களைத் தவிர்ப்பதற்குகாக பல ஃபினான்ஷயல் இன்ஸ்டி டியூஷன்களின் (Financial Instutions) உதவியைக் கோரு கிறோம்.

இந்த 33 வருஷ காலத்தில் எவ்வளவோ நன்மைகளை செய்திருக்கிறோம். ஒவ்வொரு துறையிலும் கணிசமான அபிவிருத்தி அடைந்திருக்கிறோம். பல இன்ஸ்டிடியூஷன்களி லிருந்து கோடிக்கணக்கில் பணத்தை வாங்கி, அதன் மூலம் நாட்டுக்கு நன்மை செய்திருக்கிறோம்; அதை திருப்பியும் கொடுத்திருக்கிறோம். இவைகளினால் நம்முடைய தேசத்திற்கு நன்மைகள் நிறைய ஏற்பட்டிருக்கின்றன. அதைத் தெரியாமல் மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள், அதை ஒரு பிரதான விஷயமாக வைத்து, அவருடைய கட்சியின் கொள்கையாக வைத்து பிரச்சாரம் செய்கிறார்கள், எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள். அது மிகவும் தவரான எண்ணம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : மாற்றுத் தலைவரவர்களே, தவறான பிரச்சாரம் என்று எப்படி சொல்லமுடியும்? சர்வ தேச நிதிநிறுவனம் எத்தனையோ நிபந்தனைகளை விதித்திருக் கிறது. அவை.......

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இல. பலராமன்) : அவர் பேசி முடித்த பிறகு கடைசியில் நீங்கள் விளக்கம் சொல்ல-லாம்; தயவுசெய்து உட்காருங்கள்; அவர் பேசட்டும்.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப் : அவர்களுடைய தத்துவம் அது என்றால் சைனா, ரஷ்யா, கிழக்கு ஜெர்மன் (East German) போன்ற நாடுகள் எல்லாம்இந்தத் தத்துவத்தைக் கடைப்பிடித்து. அதனால் பெரிய நன்மை ஏற்படவில்லை என்று கருதி, நன்-மைகள் கிடைக்கும் வகையில் அந்த தத்துவங்களை எவ்-வளவோ தளர்த்தி இருக்கிறார்கள். அதைகூட நம்முடைய மாண்புமிகு சங்கரய்யா அவர்கள் அறிய மாட்டார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. என். சங்கரய்யா : மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரு தவரான தக்லைத் தெரிவிக்கிறார்கள் (குறுக்கீடுகள்). மேற்கு ஜெர்மன் ஒரு சோஷலிச நாடு அல்ல. (குறுக்கீடுகள்).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இல. பலராமன்) : நீங்கள் நேற்று பேசும்போது யாரும் குறுக்கிடவில்லை. அவர்கள் பேசும்போது நீங்களும் குறுக்கிடவேண்டாம். ஏதாவது சொல்ல வேண்டுமென்றால் அவர்கள் பேசிமுடித்தபிறகு சொல்லுங்கள்.

[1982 மார்ச் 6

திரு. கே. எஸ். ஜி. ஹாஜாசெரீப் Mr. Acting Speaker Sir, I do not want any interference from the hon. Member. The whole country knows about their schemes, about their designs, about their cult, and the activties they are connected with. இப்போது நீங்கள் எடுத்துக்கொள்ளலாம். அவர்கள் அரசாங் கம் நடத்தும் 3 நாடுகளிலும் என்ன வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது வளர்ச்சிகள் ஏற்படவில்லை என்பது மக்களுக்குத் தெரியும் அவ் வளவு தூரம் இருந்தும்கூட ஒவ்வொரு திட்டத்திலும் ஒவ்வொரு நாளும் இவர்கள் இந்த மாதிரி குறுக்கு செய்து கொண்டே போனால் அதற்கு மக்கள் அஞ்சமாட்டார்கள். எங்கள் கட்சி யினர் அஞசமாட்டார்கள். நாங்கள் எது நன்மை என்று சருது கிறோமோ அதை நாங்கள் அவசியம் செய்து முடிப்போம் என் பதைத் தெரிவித்துக் கொள்ளவிரும்புகிறேன்.

திரு. என். சங்கரய்யா : இதில் அஞசத்தக்க விஷயம் ஒன் றும் இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாற்றுத்தலைவர் அவர்களே இப்படி வரிக்கு வரி குறுக்கிட்டுக்கொண்டிருந்தால் எப்படிப் பேசமுடியும் ?

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

THIRU K. S. G. HAJA SHAREEF: Sir, I never said Wes Germany but I said East Germany. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்கள் வரிக்கு வரி விளக்கம் கொடுக்க வேண்டாம்.

திரு. கே. எஸ். ஜீ. ஹாஜா செரீப் : தலைவரவர்களே,

I want your full protection from the interference of the hon. Member.

தமிழிலே ஒரு பழமொழி உண்டு. கொட்டினால் தான் தேள், கொட்டா விட்டால் பிள்ளைப் பூச்சி என்று சொல்வார்கள். ஆகவே ஏன் இவர்களுக்கு இவ்வளவு அக்கறை வந்து விட்டது. இவர்கள் பேசியபோது நான் ஒரு தடவை தான் குறுக் கிட்டேன். ஆனால் நான் பேசுகின்றபோதோ , வார்த்தைக்கு வார்த்தை குறுக்கிடுகிறார்கள். அது ஏன் என்பது எனக்குத் தெரியவில்லை......(குறுக்குகீடுகள்—குழப்பம்).



1982 மார்ச் 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வார்த்தைக்கு வார்த்தை குறுக்கிட வேண்டாம். மாண்புமிகு ஹாஜா செரீப் அவர்கள் தொடர்ந்து பேசட்டும்.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜாசெரீப் : தலைவர் அவர்களே, நிலச் சீர்திருத்தம் பற்றி சொன்னார்கள். இந்த நிலச் சீர் திருத்தத்தைக் கொண்டு வந்தது யார் ? காங்கிரஸ் ஆட்சிதான் கொண்டு வந்தது. 75 சதவீதம் மக்கள் விவசாயத்தில் ஈடு பட்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களுடைய நிலைமை சீர் திருத்தப்படாவிட்டால் நாட்டிலே நன்மையே ஏற்படாது என்ற காரணத்தால் தான் இதை நாங்கள் கொண்டு வந்தோம். இதனை நாங்கள் அவசியம் வெற்றிகரமாகச் செய்வோம், பூர்த்தி பண்ணாமல் விட மாட்டோம் என்பதைத் திரும்பவும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து தொழில் வளர்ச்சியைப் பற்றி பல கருத்துக்களை இந்த நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவைகளை நாங்கள் வரவேற்கிறோம்.

" Five new Industrial Estates, you are going to create I am happy about it. What is the use of creating all these Industrial Estates without giving them the needed infrastructure facilities.

ஹோசூரிலே இருப்பதை விட வேறு பெஸ்ட் தொழில்பேட்டை எங்கேயாவது இருக்கின்றதா என்று கேட்க ஆசைப்படுகிறேன். ஆனால் அங்கே நூற்றுக்கணக்கான தொழிற்சாலைகளை அமைப் பதற்கு அனுமதி அளித்தும் கூட சுமார் 150 தொழிற்சாலைகள் தான் வந்திருக்கின்றன. மீதியுள்ள தொழிற்சாலைகள் ஏன் வரவில்லை என்பதைப் பற்றி நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

எந்த ஒரு தொழிற்சாலையினை ஆரம்பிப்பதாக இருந்தாலும் ஆரம்பிப்பவர்களுக்கு ஒரு திடமான நம்பிக்கை இருக்க வேண்டும். நாம் ஆரம்பிக்கின்ற தொழிலிலே ஏதாவது கஷ்டம் உண்டானால் அரசாங்கம் இதற்கு உறுதுணையாக இருக்குமா, அனுகூலமாக இருக்குமா, அரசாங்கம் உறுதுணையாக இருக்கும் என்ற வகையிலே நம்பிக்கை அவர்களுக்கு ஏற்பட வேண்டும். ஆனால் அந்தத் தைரியம் அவர்களுக்கு இருப்பதாகத் தெரிய வில்லை. ஏன் அவர்களுக்கு அப்படிப்பட்ட தைரியம் வருவ தில்லை என்பதை நாம் சிந்திக்க வேண்டும். இந்த இரண்டாண்டு காலத்திலே முக்கியமாக இந்த ஒரு ஆண்டு காலத்திலே எத்தனைத் தொழிற்சாலைகள் புதிதாக உருவாகி இருக்கின்றன என்பதைச் சொல்ல முடியுமா? அப்படி எந்தெந்தத் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டன என்ற கணக்கினைப் பார்த்தால் மனம் மிகவும் வேதனைப் படுகின்றது.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா ஷெரீப் : [1982 மார்ச் 6

'There is absolutely no industrial development in our State when compared to what is happening in Andhra, particularly in Karnataka. If Andhra and Karnataka have send letters of intents for 20 or 25. our applications are hardly 2 or 3. Even with those two or three, there is not much scope for industrial development.

(முற்பகல் 10.30)

இதை நீங்கள் கூர்ந்து கவனித்து என்னென்ன முடிவுகள் எடுக்க வேண்டுமோ அந்த முடிவுகளை எடுத்தால் தான் அதிகப் படியான தொழிற்சாலைகள் நம் மாநிலத்தில் வரக் கூடும். முக்கியமாக நம் மாநிலத்தில் அதிகப்படியான சிறிய தொழிற் சாலைகள் வர வேண்டும். அப்படி சிறிய தொழிற்சாலைகள் அதிகமாக வந்தால்தான் நாட்டில் உள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும். ஆகவே அதில் அமைச்சர் அவர்கள் தக்க கவனத்தைச் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நேற்று நான் ஒரு M.gazine-ல் படித்தேன். ராஜஸ் தானத்தில் உள்ள பாலை வனம் சோலையாக மாறியுள்ளது. அதற்கு உறு துணையாக இருந்து நல்ல யோசனைகள் கொடுத் தவர்கள் யு. எஸ். எ. ஐ. டி. ஆவார்கள். நம் பாசனத் துறை அமைச்சர் அவர்கள் இதைப் பார்த்திருப்பார்களோ என்னவோ எனக்குத் தெரியாது. யு.எஸ்.எ.ஐ.டி. நமக்கு உதவிகள் அல்லது யோசனைகள் தருகிறார்களா இல்லையா என்று தெரியவில்லை. ராஜஸ்தான் பாலைவனம் இன்று சோலையாக ஆகி பல்லாயிரக் கணக்கான ஏக்கர்கள் இப்போது நல்ல முறையில் அங்கே சாகுபடி செய்து வருகிறார்கள். இதற்கெல்லாம் காரணம் அவர்கள் கொடுத்த அந்த ஸ்கீம்தான். அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லி யிருக்கிறார்கள். அவர்கள் கொடுத்த ஸ்கீமை இரண்டு ஆண்டு களாக கடைப் பிடித்ததன் காரணமாக ஏறக் குறைய 65,000 ஹெக்டேர் நிலங்கள் புதிதாகப் பாசனம் பெறும். [illegible] பழைய பாசனம் புதிய முறையில் திருத்தியமைக்கப்படும் [illegible] கூறியிருக்கிறார்கள். இதனால் 65,000 மெட்ரிக் டன்னுக்கு மேல் உணவுப் பொருள் உற்பத்தி கிட்டும் அதற்குரிய தொகை [illegible] கோடியாகும். ஆகவே அரசாங்கம் அவர்களைக் கலந்து நல்ல யோசனைகளைப் பெற்று அதன் மூலம் உணவு உற்பத் தியைப்பெருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நமது நகரத்தை எடுத்துக் கொண்டால் நான் மிகவும் வருத்த முடன் தெரிவித்துக் கொள்கிறேன், பல தடவை [illegible] சொல்லியிருக்கிறேன், அது நகரமாகத் [illegible]



சொல்லியிருக்கிறோம்
நரகமாகத்தான் தெரிகிறது என்று
இந்த ஸிட்டியைப் பொறுத்த வரையில் எந்தவிதமான நல்ல
கவனிப்பும் கிடையாது என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படு
கிறேன்.

மெரினாவை மட்டும் சுத்தமாக வைத்துக் கொண்டால்
போதாது. மெரீனாவை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்
டியதுதான், வரவேற்கிறேன். ஏனெனில் அங்கு பல்வேறு
தேசத்திலுள்ளவர்கள் வருகிறார்கள் நடமாடுகிறார்கள். ஆனால்
இந்த மெரினாவில் இருந்து ஒரு பர்லாங்க் உள்ளே போனால்
துர்நாற்றம் அடிக்கிறதே தவிர வேறு எந்த நிலையும் இல்லை.
ஏன் இதை நல்லவிதமாக வைத்துக் கொள்ளக் கூடாது? சிட்டி
கார்ப்பரேஷன் நல்ல முறையில் செயல்பட வேண்டும். அப்படி
இல்லா விட்டால் இந்த மாதிரியான தகராறுகள் வந்து கொண்டு
தானிருக்கும். [illegible] முதலமைச்சர் அவர்கள் சென்ற
ஆண்டு Republic தினத்தன்று பேசும் போது சொன்
னார்கள், இந்த ஆண்டு இறுதிக்குள் தேர்தல்கள் வைத்து விடு
வோம் என்று. ஸிட்டி கார்ப்பரேஷனுக்கும் மற்றக் கார்ப்ப
ரேஷனுக்கும் தேர்தல்கள் வைத்து விடுவோம் என்று சொன்
னார்கள். நான் மிகவும் சந்தோஷப்பட்டேன். ஆனால்
இப்போது பெரும் கவலையில் இருக்கிறேன். காரணம் என்ன
வென்றால், ஸிட்டி நிலைமை அவ்வளவு மோசமான நிலையில்
இருக்கிறது. எங்கு பார்த்தாலும் தெருக்களை சுத்தம் செய்வ
தில்லை. தண்ணீர் குழாய்களில் சரிவர தண்ணீர் வருவதில்லை.
குழாய்த் தண்ணீரில் கழிவு நீர் கலந்து வருவதாகச் சொல்கிறார்
கள், மின்சார விளக்குகள் சரிவர வேலை செய்வது கிடையாது.
சாலைகள் சரியாக இல்லை. குப்பை வாருவது கிடையாது.
இப்போது சென்னை நகரின் மக்கள் தொகை 40 இலட்சமாகும்.
பல தடவை டிவிஷன் ஆபீசுக்குப் போய் ரிப்போர்ட் செய்
தாலும் கூட அவர்கள் கவனிப்பதில்லை. அவர்கள் சொல்வது
எங்களிடம் பணம் இல்லை, பொருள் இல்லை, ஸ்பேர் பார்ட்ஸ்
இல்லை ஆகவே எங்களால் ஒன்றும் செய்ய முடியாது என்று
சொல்கிறார்கள்.

எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. இப்போது ரோடுகள்
வேலைகளை காண்ட்ராக்ட்க்கு விட்டு சரிப்படுத்துகிறீர்கள்.
அதே போல் குப்பை வாருவதையும் கூட ஏன் ஒவ்வொரு டிவி
ஷனுக்கும் காண்ட்ராக்ட் விட்டு காலையிலும் மாலையிலும்குப்பை
வார வேண்டும், வீதிகளை சுத்தமாக வைத்துக் கொள்ளவேண்டும்
என்று ஏன் காண்ட்ராக்ட் முறையை அனுசரிக்கக் கூடாது
என்று தெரியவில்லை. இந்த மாதிரிச் செய்தால்........

* மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, மாநகராட்சி நிலைமைகளைப் பற்றி எதிர்க் கட்சித் தலைவர் திரு. ஹாஜா செரீப் அவர்கள் இங்கே விளக்கமாக, அவருக்குத் தெரிந்த வரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். குறிப்பாக, இந்த மாநகராட்சி பகுதிகளில் எப்படி வேலைகள் நடைபெற்று வரு கின்றன என்பதைப் பற்றி குறிப்பிடவில்லை. ஆனாலும், இருக் கின்ற பணத்தை வைத்துக் கொண்டு இந்த மாநகராட்சிப் பகுதி களை சுத்தமாக சுகாதாரமான முறையில் வைத்துக் கொள்ள வேண்டுமென்பதற்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அவருடைய தொகுதியில் பல்வேறு அசுத்தங்கள் இருக்கின்றன. சுகாதார முறையில் சீர்கேடுகள் இருக்கின்றன என்று என்னிடம் தெரிவித்து, அவரும் நானும் சென்று அந்தப் பகுதியை பார்வையிட்டு, உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட் டிருக்கிறது.

குறிப்பாக, இன்று தேங்கக்கூடிய குப்பை கூளங்களை அள்ளிச் சென்று வேறு இடத்திலே கொண்டுபோய் போடுவதற்கு நமக்கு டம்பிங் கிரவுண்ட் கிடையாது. இருக்கின்ற டம்பிங் கிரவுண்ட் இப்போது ஓட்டல் ஓசியானிக்கிற்குப் பக்கத்தில் இருக்கிறது. அந்த இடத்திலே கூட, குப்பை கொட்டக் கூடாது என்று ஸ்டே வாங்கி விட்டார்கள். அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. நமக்கு நாள் ஒன்றுக்கு ஏறக்குறைய 1,500 டன் குப்பை கூளங்கள் இந்த மாநகராட்சி பகுதியிலே மட்டும் கிடைத்துக் கொண்டு வருகிறது. இவைகளையெல்லாம் எடுத்துச் சென்று உரமாக மாற்றுகின்ற வகையில் ஒரு கம்போஸ்ட் பிளான் நிறுவப் பட இருக்கிறது. இது சைதாப்பேட்டை பகுதியில் வரயிருக்கிறது ஏறத்தாழ 1½ கோடி செலவிலே இந்த காம்போஸ்ட் பிளானை நாம் ஏற்பாடு செய்ய இருக்கிறோம். ஆகவே, இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் இருக்கிறது.

நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள் வது இன்றைக்கு மாநகராட்சியின் வருமானத்தைப் பெருக்கு வதற்கு ஏதாவது ஒரு திட்டம் சொல்லப்படுமானால், அதைச் செயல்படுத்தி, நாம் கூடுதலான வருமானம் பெற்றால், இன்னும் நன்றாக வசதிகளைச் செய்ய முடியும் என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜாசெரீப் :

I am extremly gratef l o he Hon. Minis er for his explanation I have already said that the was kind enough o come o my area and we spent a conple of hours. B t what happened af erwards, I am concerned wirk the resul . So action has been taken what was the result, Nothing has happened.



கண்ட பலன் ஒன்றுமில்லை. அந்தப் பகுதியிலே உள்ளவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். நான் அவர்களிடம் கேட்டுக் கொண்டு 9, 10 மாதங்கள் ஆயிற்று. எந்தவிதமான நடவடிக் கையும் எடுக்கப்படவில்லையே. மிகுதியான தெருக்களில் லைட் எரியவில்லையே ? அதை மறுப்பீர்களா ? மிகுதியான ரோடுகள் சரியாக இல்லையே ? அதை மறுப்பீர்களா ? மிகுதியான தெருக் கள் சுத்தமாக இல்லையே ? அதை மறுப்பீர்களா ? ஏன், இதைப் பற்றி அரசாங்கம் கவனித்து எமர்ஜன்சி நிலைமைபோல் செயல் பட்டால், இதைச் செய்ய முடியாதா என்பதைத்தான் நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

நான்கூட, சென்றதடவை பேசும்போதுகூட ஒரு யோசனை யைச் சொன்னேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த நகரத்திலே ஒரு சூறாவளிப் பயணத்தை மேற்கொள்ளவேண்டும். இந்த நகரத்தை 4, 5. பகுதிகளாகப் பிரித்துக் கொண்டு நமது முதலமைச்சர் அவர்கள் ஒரு வார காலத்திற்கு இந்த நகரத்தைச் சுற்றிப் பார்த்தால், இருக்கின்ற நிலைமைகளை அறிந்து கொள் ளலாம். ஆகவே, அதற்காக அவர்கள் ஒரு ஸ்கீம் போட்டு, ஒவ்வொரு நாளும் சில பகுதிகளுக்குச் சென்று வரவேண்டும். அப்போது நகரத்திலே உள்ள நிலைமைகள் தெரியும் என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

நிலைமைகளை அமைச்சர் அவர்கள் எடுத்துச்சொன்னார்கள். அவர்கள் நல்ல எண்ணத்திலேதான் சொல்கிறார். அவர்கள் அதற்கான நடவடிக்கைகளை எடுத்திருப்பார். ஆனால், நடை முறையில் ஒன்றும். நடைபெறவில்லை என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். எனவே, முதலமைச்சர் அவர்கள் இந்த நகரத்திலே ஒரு சூறாவளிப் பயணத்தை மேற்கொள்ள வேண்டும். அப்படிப் போகும்போது, அந்தந்த ஏரியாக்களிலே உள்ள எம். எல். ஏக்களை உடன் அழைத்துக் கொண்டு போக வேண்டும். அப்படிப் போனால்தான், நிலைமைகள் சீர் அடை யும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். வெயிற் காலம் வருகிறது. என்னென்ன தொத்து நோய்கள் வருமென்பது மக்களுக்கு நன்றாகத் தெரியும் ; இங்கிருக்கக் கூடிய அங்கத்தினர் களுக்கும் தெரியும் ; அமைச்சர் அவர்களுக்கும் நன்கு தெரியும். ஆகவே, இந்த கஷ்ட நிலைமையைப் போக்குவதற்கு வெகு சீக்கிரத்திலே அரசாங்கம் இதற்கு ஒரு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இப்போது நகரத்திற்கு தண்ணீர் கொண்டு வருவதற்கு என்ன என்னவோ யோசனைகள் எல்லாம் நடந்து கொண்டிருக்கின்றது. அங்கே இருந்து கொண்டு வரப்படும், இங்கேயிருந்து கொண்டு வரப்படும், கிருஷ்ணாவிலே இருந்து கொண்டு வரப்போகிறோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். எப்போது கொண்டு வரப் போகிறீர்கள் ? இதற்கு என்னென்ன முடிவுகளை எடுத்து இருக்கிறீர்கள் ?

I am a businessman, Sir, I want things should be expedited. In business, we want result. The results should be achieved in an organisation. If you are going to procrasinate it or delay it, it will be a waste of public funds and money. It will not give the desired results. You should not delay the schemes. From that angle, I want Krishna water scheme to be implemente. இரண்டாவதாக இந்த பக்கிங்காம் Canal, கூவம் Canal இவைகள் ஏற்படுத்தக்கூடிய பெரிய கஷ்டங்கள், துர்நாற்றம், தொத்து நோய்கள் மிக அதிகமாக இருக்கின்றன. பக்கிங்காம் கெனால் சீர்படுத்த 15 வருடமாக எடுத்துக் கொள்ளப்போகி றோம். எடுத்து விட்டோம் என்று சொல்கிறீர்களே தவிர, எடுத்ததாகத் தெரியவில்லை. இதிலே என்ன தாமதம், சிரத்தை யற்ற நிலை ஏன் ஏற்படுகின்றது என்பது தெரியவில்லை. எந்த ஸ்கீம் போட்டாலும் நல்ல ஸ்கீமாக இருக்கிறது ஆனால் அவை செயல்படுவதில்லை. இதனால் பொது ஜனங்கள் மிகுந்த கஷ்டத் திற்கும் ஏமாற்றத்திற்கும் ஆளாகிறார்கள். எந்த ஸ்கீமை நடை முறைப்படுத்த முடியுமோ அதை நான் கொண்டு வர வேண்டுமே தவிர, பெயரும் புகழிற்காகவோ அல்லது பிரச்சாரத் திற்காகவோ கொண்டு வந்துவிட்டு ஸ்கீம் சரியாக நடத்தாவிட் டால் மிகுந்த கஷ்டம் ஏற்படும் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

[முற்பகல் 10-40].

முக்கியமான சிறுதொழில் வளர்ச்சியில் அரசாங்கம் மிகுந்த கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

I am very happy that the Hon'ble Minister for Small-scale Industries is often visiting some of the Industrial Estates. I happened to meet him twice or thrice at Hosur where I have to often go. The Minister should take particular care to see that all the infra structure facilities are created, where there is loss of production due to strike or due to any other reason I want the concerned Minister, particularly the Small-scale Industries Minister, large-scale Industries Minister and the Labour Minister to go and resolve and difficulties. This is a year of production. If we produce more we are going to stand benefitted to a very great extent.

In this state of affairs unless we make an attempt and give the strength of mind to the industrialists that the Government will certainly be with them in their difficulties, I am afraid that the industrial development in this State will not be very much. Thank you.



மாண்புமிகு மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதியாண்டிற்கான வரவு செலவுத் திட்டம் குறித்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களைக் கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆளும் கட்சி அந்தந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை வைப்பதும் திட்டங்களுக்கான வழிவகைகளை எடுத்துக்காட்டு வதும் இதுவரையில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களில் உள்ள குறைபாடுகளையும் அவைகள் களையப்படும் நிலையில் எதிர் காலத்தில் திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டுமென்ற அறி வுரைகளை கூறுவதற்கு ஆக்கபூர்வமாக கடமைப்பட்டது எதிர்க் கட்சி ஆகும். எனவே நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் இங்கே வைத்துள்ள நிதிநிலை அறிக்கைக்கு எதிர்க் கட்சியிட மிருந்து வெறும் பாராட்டுக்களை மட்டும் எதிர்பார்ப்பாரே யானால் அது அவருக்கும் அரசுக்கும் பயன்படாது என்ற காரணத்தினால் நிதியமைச்சர் நாவலர் அவர்களின் மொழியிலே சொல்வதானால் திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சி யாக இருந்த காலத்தில், 1957-ல் தேர்தலிலே போட்டியிட முடிவெடுத்த காலம் தொட்டு, 1967-ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் ஆளும் பொறுப்பை ஏற்ற காலம் வரையில் அவர் மறக்காமல் ஒவ்வொரு கட்டத்திலும் அழுத்தம் திருத்த மாக சொல்லி வந்தது எதிர்க்கட்சி என்பது ஆளும் கட்சிக்கு ஒரு மூக்கணாங்கயிறு போல; எதிர்க்கட்சி என்பது ஆளும் கட்சி என்ற சகடம் சுழல்வதற்கு ஒரு அச்சாணி போல; எதிர்க்கட்சி தான் ஆளுங்கட்சிக்கு ஒரு கடிவாளம்போல. எனவே எதிர்க்கட்சி இல்லாத ஆளுங்கட்சி கடிவாளம் இல்லாத குதிரை யாக மூக்கணாங்கயிறு இல்லாத காளையாக, தார்க்குச்சி இல்லாத எருதாக ஆகிவிடும் என்று நாவலர் அவர்கள் பலமுறை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். எனக்கு அந்தப் பாணியிலே சொல்ல வராவிட்டாலும் அந்தக் கருத்துக்கள் என்னுடைய உள்ளத்திலே பதிந்து போய் இருக்கின்ற காரணத்தால் இன்றைய நிதியமைச்சர் நாவலர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக எடுத்துக் காட்டப் படுகிற குறைபாடுகளை, முறைகேடுகளை நெஞ்சில் நிறுத்தி அரசு மக்களுக்காக நேரிய முறையில் செம்மையான வழியில் திட்டங்களைத் தீட்டுவதற்கு பயன்படுத்திக்கொள்வார் என்று நம்பி எதிர்பார்த்து கருத்துக்களை நான் எடுத்து வைக்க விரும்பு கிறேன்.

(டாக்டர் மு. கருணாநிதி) [1982 மார்ச் 6

இந்த நிதிநிலை அறிக்கையிலே நாவலர் அவர்கள் 3 ஆம்
பக்கத்திலே ஒரு குறிப்பினைத் தந்திருக்கிறார்கள்.
குறிப்பு ''நமக்கிருக்கிற கவலை எல்லாம் அந்தக்
பாரத்தை மத்திய ஆட்சியினர் விரும்புகிறார்களே தூக்க முடியாத
மத்திய அரசின் வலிவு என்பது, மாநிலங்கள் என்பதுதான்.
தனித்தனி வலிமைகளையெல்லாம் கூட்டியதால் ஒவ்வொன்றின்
மொத்த வலிவுதான் என்றால், வாதத்திற்கு ஏற்பட்ட
லுக்கு நல்லது ; காரியத்துக்கும் உகந்தது என்று ஏற்றது; அரசிய
உணரத்தக்கதாகும்''. ''இதனை இந்த குறிப்பிட்டது
ஏற்படும்போதெல்லாம் பேரறிஞர் அண்ணா அவையிலே வாய்ப்பு
யுறுத்தி வந்திருக்கிறார்கள்'' என்று அவர்கள் வலி
நாவலர் அவர்கள் இந்த ஆண்டு நம்முடைய நிதியமைச்சர்
ஆம் பக்கத்திலே குறிப்பிட்டிருக்கிறார்கள். நிதிநிலை அறிக்கையில் 3

நானும் கடந்த காலத்திலே அண்ணா அவர்கள் முதலமைச்ச
ராக இருந்த காலத்திலே இந்த மன்றத்திலே வைக்கப்பட்ட
நிதிநிலை அறிக்கை அல்லது அவர்கள் ஆற்றிய உரைகள் இவை
களையெல்லாம் தேடித்தேடிப் பார்த்தேன். ஆனால் நாவலர்
அவர்களால் 3-ஆம் பக்கத்திலேகுறிப்பிடப்பட்டிருக்கின்ற அண்ணா
அவர்களுடைய அந்த மொழி எந்த இடத்திலும் காணப்பட
வில்லை. பிறகுதான் எனக்கு ஒரு சிந்தனை வந்தது, அந்தக்
கருத்தை நாவலர் அவர்கள் எதிலிருந்து எடுத்திருப்பார் என்று
பார்த்தபோது எனக்கு 1974 ஆம்ஆண்டு பசுமையாக நினைவுக்கு
வந்தது. இதே மன்றத்திலே திராவிட முன்னேற்றக் கழக
ஆட்சியின் சார்பிலே மாநில சுயாட்சித் தீர்மானம் கொணரப்
பட்டு அப்போது எதிர்க்கட்சி வரிசையிலே அமர்ந்திருந்த அண்ணா
தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் அண்ணா அவர்கள், மாநில
சுயாட்சி பற்றிக் கூறவே இல்லை என்று மிகக் கடுமையாக
வாதிட்ட நேரத்திலே என்னுடைய நண்பரும், மாண்புமிகு
அமைச்சருமான திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள்
அன்றைக்கும் அமைச்சராக இருந்த நேரத்திலே அண்ணா அவர்
கள் இல்லஸ்ட்டிரேட்டட் பத்திரிகைக்கு தந்த பேட்டியை
நினைவுபடுத்தி, அண்ணா, ''ஃபுல் அட்டானமி'' மாநிலங்
களுக்குத் தேவை என்று குறிப்பிட்டிருக்கிறார் என்று எடுத்துக்
காட்டியும் அண்ணா தி.மு.க.-வினுடைய சட்டமன்ற உறுப்பினர்
கள் அதை ஏற்றுக்கொள்ளாமல் மாநில சுயாட்சி ஏற்றுக்கொள்ளத்
தக்கதல்ல என்று அழுத்தந்திருத்தமாகக் கூறியபோது நான்
தலைவராகவும், நாவலர் அவர்கள் பொதுச் செயலாளராகவும்
பணியாற்றிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே
அண்ணா அவர்களுடைய பேருரை ஒன்று வெளியிடப்பட்டது.
'அண்ணா அவர்களுடைய மாநில சுயாட்சி முழக்கம்' என்பது
தான் அந்த நூலின் தலைப்பு. நாவலர் அவர்கள் எங்கே
அந்தக் கருத்தை எடுத்தார்கள் என்பது பிறகுதான் எனக்குப்
புரிந்தது. அண்ணா அவர்கள் இந்த அவையிலே ஆற்றிய உரை



1982 மார்ச் 6] (டாக்டர் மு. கருணாநிதி)

யிலே இல்லாது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே வெளியிடப்பட்ட அண்ணா அவர்களின் மாநில சுயாட்சி என்ற புத்தகத்திலே ''நமக்கு இருக்கிற கவலை எல்லாம் தூக்க முடியாத பாரத்தை மத்திய ஆட்சியினர் விரும்புகிறார்களே என்பதுதான். மத்திய அரசின் வலிவு என்பது, மாநிலங்கள் ஒவ்வொன்றின் தனித்தனி வலிமைகளையெல்லாம் கூட்டியதால் ஏற்பட்ட மொத்த வலிவுதான் என்றால், வாதத்திற்கு ஏற்றது ; அரசுக்கு நல்லது ; காரியத்துக்கும் உகந்தது. ஆனால் மத்திய அரசு எல்லா உரிமைகளையும் பலத்தையும் வைத்திருக்கும், மாநிலங்கள் தத்தித்தத்தி நடக்கும் அதிகாரம் தான் வைத்திருக்கும் என்றால் அது எதற்கும் பொருத்தம் உடையதல்ல'' என்று காணப்படுகிற அந்தக் கருத்துக்களை மாநில சுயாட்சி மாநாட்டிலே அண்ணா அவர்கள் எடுத்துக் கூறியதை இங்கே 1974 ஆம் ஆண்டே நாம் எடுத்துச் சொன்ன நேரத்திலே அண்ணா தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் நம்பவில்லை.

நாவலர் அவர்கள் தி.மு.க விலிருந்து அ.தி.மு.க. விற்குப் போய் விட்டாரே என்ற கவலை எனக்கு நெடுநாள் இருந்தது. ஆனாலும் அங்கு சென்றதும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வெளியிடப்பட்ட அண்ணாவினுடைய மாநில சுயாட்சி என்கின்ற அந்தப் புத்தகத்தினுடைய கருத்துக்களை முதலமைச்சருக்குத் தெரிந்தோ தெரியாமலோ அல்லது அந்த அமைச்சரவையிலே இருப்பவர்களுக்குத் தெரிந்தோ தெரியாமலோ, எப்படியோ நுழைந்துவிட்ட பெருமை நம்முடைய நாவலர் நிதியமைச்சர் அவர்களைச் சாரும் என்பதிலே நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். போனாலும் பரவாயில்லை, நல்ல கருத்துக்களை நாம் எடுத்துச் சொன்ன கருத்துக்களை அங்கிருந்து ஒலிக்கின்ற அளவிற்கு நாவலர் அவர்கள் பேரறிஞர் அண்ணாவினுடைய மாநில சுயாட்சி முழக்கம் என்ற புத்தகத்திலேயிருந்து இந்தக் கருத்தை எடுத்து ஆண்டதற்கு நான் அவர்களுக்கு நன்றி கூறிக்கொள்கின்றேன்.

[முற்பகல் 10-50]

ஏழாவது நிதிக் குழுவிற்கு அளிக்கப்பட்ட, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே அளிக்கப்பட்ட குறிப்பு 77-லே அச்சேற்றி வெளியிடப்பட்டது. அந்தக் குறிப்பிலேகூட திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் சார்பிலே சொல்லப்பட்ட கருத்து.

''இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முதற்பிரிவே இந்தியா என்பது மாநிலங்கள் கூட்டாகச் சேர்ந்த ஒரு அமைப்பு என்று விவரிக்கின்றது. எனவே, மொத்தத்தில் பார்க்கப் போனால் மத்திய மாநில நிதி உறவுகளை முறைப்படுத்துகின்ற உயர் கொள்கை அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் மத்திய

அரசுக்கு எனவும், மாநில அரசுகளுக்கு எனவும் ஒதுக்கப் பட்டுள்ள பொறுப்புக்களுக்கும் அலுவல்களுக்கும் முற்றிலும் இயைந்த முறையில் நிதி வகையில் தன்னாட்சியை உறுதிப்படுத்து வதாய் இருக்கவேண்டும். இந்தியக் கூட்டாட்சி அமைப்பில் மத்திய அரசும் மாநில அரசுகளும் சம உரிமை உள்ள கூட்டுப் பங்குதாரர்களாகக் கருதப்பட வேண்டும்.''

இது கழக ஆட்சிக் காலத்திலே ஏழாவது நிதிக் குழுவுக்கு அளிக்கப்பட்ட குறிப்புக்களில் காணப்படுகின்ற வாசகமாகும். இந்த வாசகத்தை ஒட்டித்தான் இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையிலேகூட நிதியமைச்சரவர்கள், மாநிலங்களின் நிதி ஆதாரங்களையும், அதிகார அளவுகளையும் பெருக்குவதற்கான வழி வகைகளை மத்திய அரசு காணவேண்டும் என்று குறிப் பிட்டிருக்கின்றார். அந்தக் கருத்தை நான் மனப்பூர்வமாக வரவேற்கின்றேன்.

மாநிலத்தினுடைய நிதி வருவாய்களில் முக்கியமான இடத்தைப் பெற்றிருப்பது விற்பனை வரி என்பதை நாம் மறந்து விடுவதற்கில்லை. மாநிலப் பட்டியலிலே உள்ள விற்பனை வரியைப் பல பொருள்களின் மீது நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக எக்சைஸ் வரி போடுவதற்கான திட்டம் குறித்து மத்திய அரசு ஒரு ஆய்வுக் குழுவை மோகன்லால் சுகாதியா அவர்களுடைய தலைமையிலே அமைத்தது. அந்தக் குழுவினுடைய அறிக்கை நாடாளுமன்றத்திலே மாநிலங்கள் அவையிலே தாக்கல் செய்யப் பட்ட பொழுது மேற்கு வங்கம், கேரளம், காஷ்மீரம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதற்கு கடும் ஆட்சேபணைகளைத் தெரிவித்தார்கள். மேற்சொன்ன மூன்று மாநில அரசுகளும் இந்த முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித் துள்ளன என்பதை மத்திய அரசின் அறிக்கையும் சுட்டிக்காட்டு கிறது.

நேற்றையதினம் மாண்புமிகு நண்பர் திரு. சங்கரையா அவர் கள் பேசுகின்ற நேரத்திலேகூட வருவாய்த் துறை அமைச்சரவர் கள் குறுக்கிட்டு, தமிழக அரசின் சார்பிலேகூட அதற்கான எதிர்ப் புக்கருத்து இரண்டு முறை டெல்லியிலே எடுத்துச் சொல்லப் பட்டிருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். ஆனால் இந்த அறிக்கை நாடாளுமன்ற அவைகளிலே விவாதிக்கப்பட்டபொழுது இந்தக் கருத்தை எதிர்த்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே மிக அழுத்தந்திருத்தமாக, கட்சியினுடைய உறுப்பினர் திரு. வை. கோபால்சாமி அவர்கள் அங்கு எடுத்துச் சொன்ன அந்த வார்த்தைகளை இங்கே நினைவூட்டுவது மெத்த பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகின்றேன். அவர் பேசினார், ''தி.மு. கழகத்தின் சார்பில் என்னுடைய பலத்த கண்டனத்தை மத்திய அரசாங்கத்தின் இந்த முடிவை எதிர்த்து [illegible]





தரிவிக்க விரும்புகிறேன். மாநிலங்களின் அதிகாரங்கள் மீதும் ரிமை மீதும் ஆக்கிரமிப்பு நடத்துவதற்காக மத்திய அரசு இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளது. மாநிலங்களின் நிதி ஆதாரங் ள் ஏற்கனவே மிகவும் குறைவாக உள்ளன. அதிக ஆதாரங் ளுக்காக மாநில அரசுகள் பல காலமாக வற்புறுத்து வருகின்றன. விற்பனை வரியை நீக்கி விட்டு எக்சைஸ் வரியைப் போட்டு மத்திய அரசு நிதி ஆதாரத்தை மாற்றுவதன் மூலம் மாநில அரசு களைச் சக்தியற்றவைகளாக ஆக்கி மத்திய அரசின் தயவுக்காக மாநில அரசுகள் காத்துக் கிடக்க வேண்டிய நிலையை உருவாக்க இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறதோ என்று அஞ்சுகிறேன். இது மாநில அரசுகளை வெறும் பொம்மை அரசுகளாக ஆக்க போடப்பட்ட திட்டமாகும் என நான் குற்றஞ்சாட்டுகிறேன். நாடாளுமன்றத்திலே கருத்துக்களைக் கேட்காமலேயே இந்த முடிவுக்கு வந்து ஒரு குழுவை நியமித்திருப்பது ஜனநாயக விரோத செயலாகும்'' என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நண்பர் கோபாலசாமி அங்கே கருத்தறிவித்தார். எனக்குள்ள சங்கடம் எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தை விட அதிகமான மாநிலங்களவை உறுப்பினர்கள் இருந்தும் அண்ணா தி.மு.க.வின் சார்பில் ஒரு உறுப்பினர்கூட அந்த அறிக்கை விவாதிக்கப்படுகிற நேரத்திலே, தங்களுடைய எதிர் கருத்துக்களை எடுத்துச் சொல்லவில்லை என்பதுதான் எனக் கிருக்கிற ஆதங்கமும் ஆச்சரியமும் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இதிலே மாத்திரமல்ல, மொழிக் கொள்கையிலே கூட நாம் மிகத் தீவிரமாக இருப்பதாக இங்கே இந்த அரசு பேசிக் கொண் டிருக்கிறது. ஜனதா ஆட்சி நடைபெற்ற காலத்தில், இன்றைக் குள்ள நிலையை விட மிக வேகமாக இந்தியை, இந்தி பேசாத மாநிலங்களிலே திணிக்கின்ற முயற்சி நடைபெற்ற பொழுது அதை எதிர்த்து ஒரு தனியார் தீர்மானம் முரசொலி மாறன் வாயிலாக தரப்பட்டு, தனியார் தீர்மானத்திற்கான நாட்கள் ஒதுக்கப்பட்டு, 4 மாத காலம் விவாதம் நடைபெற்றிருக்கிறது. அந்த விவாதத் திலே திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் கலந்து கொண் டிருக்கிறார்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம் யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள். இந்தி திணிக்கப்பட வேண்டும், இந்தி பரவலாக்கப்பட வேண்டு மென்ற கருத்தைக் கூட, எடுத்துச் சொல்கின்ற அளவுக்கு இந்தி ஆதரவாளர்களாக இருக்கின்ற கட்சிக்காரர்கள் அந்த வாதத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள். ஆனால், இங்கே இருக்கிற ஆளுங்கட்சி யான அண்ணா தி.மு.க.வின் சார்பிலே மாநிலங்கள் அவையிலே யாரும் கலந்து கொண்டு அந்தத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசியதாகத் தெரியவில்லை.

எனவே, அண்ணாவினுடைய இருபெரும் கொள்கைகளான
மாநில சுயாட்சி, பிறமொழி ஆதிக்கத்திலிருந்து தமிழை, தமிழர்
களைக் காப்பாற்றுதல் ஆகிய இந்தச் செயல்களில் மாநிலங்கள்
அவையிலே பணியாற்றுகின்ற திராவிட முன்னேற்றக் கழக உறுப்
பினர்களை விட எண்ணிக்கையிலே அதிகம் கொண்டவர்கள் அக்
கறை செலுத்தவில்லையென்பதை நான் சுட்டிக்காட்டத்தான்
இதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். (குறுக்கீடு) நீங்கள்
பேசியிருக்கலாம், மாநிலங்களவை உறுப்பினர்கள் பேசவில்லை
யென்றுதான் திருப்பி, திருப்பிச் சொல்கிறேன்.

தேசியமயக் கொள்கைத் திட்டம்—ஒவ்வொரு வரவு செலவுத்
திட்டத்திலும் கொஞ்சங் கொஞ்சமாகக் தேய்நது, மாய்ந்து
குறைந்து போகிற நிலைமையைத்தான் எங்களால் காண முடி
கிறது. ஏற்கனவே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்
காலததில், எல்லா மாவட்டங்களிலும் உள்ள பேருந்துகளைத்
தேசியமாக ஆக்குவது என்கின்ற ஒரு திட்டம் கொண்டு வரப்
பட்டு அதை எதிர்த்து உயர் நீதிமன்றத்திலே பேருந்து அதிபர்
களால் வழக்கு தொடுக்கப்பட்டு, அரசுக்குச் சாதகமாக அந்த
வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டு, பிறகு அவர்கள் 1975-ஆம் ஆண்டு
வழக்கில் உச்ச நீதிமன்றத்திலே வழக்கு தொடர்ந்தார்கள்.
1975-க்குப் பிறகு 7 ஆண்டுக் காலம் உச்ச நீதிமன்றத்திலே இந்த
விவகாரம் உறங்கிக் கொண்டிருக்கிறதே அல்லாமல், அதை
விரைவுபடுத்தி, பேருந்துகளை தேசியமயமாக்கிட திராவிட
முன்னேற்றக் கழக அரசு கொண்டு வந்த திட்டத்தை நடை
முறைப்படுத்துகின்ற பணியிலே இந்த அரசு இறங்கவில்லை என்
பதையும் நான் ஒரு பெரும் குறைபாடாக இங்கே எடுத்துக் காட்ட
கடமைப்பட்டிருக்கிறேன்.

கவர்னர் உரையிலே மின்சார உற்பத்தியை இனிமேல் தனி
யாரும் செய்யலாம், அது இலாபகரமாக இருக்குமேயானால்,
அரசுக்கு ஆதாயம் தரத்தக்கதாக இருக்குமேயானால், தனி
மின்சார உற்பத்தி செய்ய அனுமதிக்கப்படுவார்களென்று, அவர்
களுக்கு உரிமை வழங்கிவிட்டு, நிதிநிலை அறிக்கையிலே சர்க்
கரை ஆலைகளைப் பொதுத்துறை ஏற்று நடத்த முன் வராவிட்டா
லும் கூட்டுறவுத்துறை ஏற்று நடத்த முன் வராவிட்டால், அவை
களையும் கூட தனியார்களே நடத்தலாம் என்று கூறியிருப்பது
எந்த வகையிலே தேசிய மயக் கொள்கைக்கு, உடைமைகள் அரசின் பொது உடைமை
கொள்கைக்கு, உடைமைகள் அரசின் பொது உடைமைகளாக ஆக்
கப்பட வேண்டுமென்ற கொள்கைக்கு ஆக்கமும் ஊக்கமும் தரத்
தக்கவை என்பதை ஆட்சியினர் யோசித்துப் பார்க்க வேண்டு
மென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிதி ஒதுக்கீடுகளில் 1981—82 நிதி நிலை அறிக்கைக்கும்,
1982—83-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கைக்கும் உள்ள சில முரண்
பாடுகளை நான் நிதி அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு
வரக் கடமைப்பட்டிருக்கிறேன்.





[முற்பகல் 11-00]

அவர், நான் இங்கே எடுத்து வைக்கின்ற இந்த முரண்பாடு களை தீர யோசித்து, வேண்டுமானால் அதிகாரிகளோடு கலந்து பதில் அளிப்பதற்கு நிறைய நேரம் இருக்கிறது. ஏனென்றால், இன்றைக்கு உடனடியாக அவர் பதில் அளிக்கப் போவதில்லை. காரணம் அனைவரும் ஒத்துக்கொண்ட வேறொரு அலுவல காரண மாக அவர் விமான நிலையம் செல்லவேண்டி இருக்கின்ற காரணத் தால், இடையிலே ஒரு நாள், 1½ நாள் எடுத்து கொண்டு, இந்தக் கருத்துக்கள் சரிதானா, அல்லது நான் புரிந்து கொண்டது தவறா என்பது பற்றிய அறிவிப்பை நிதி அமைச்சர் தருவதற்கு ஏதுவாக நான் தொடர்ந்து இங்கே சொல்ல விரும்புகிறேன்.

இது 1981—82-க்கான நிதி நிலை அறிக்கை. இதிலே, 21-ம் பக்கத்தில் 28-வது பாராவில், ''சாலை வசதி'' என்ற தலைப்பில் ஒரு கருத்து. ''1500 மக்கள் கொண்ட கிராமங்கள் பயனடையும் வகையில் சாலைகள் அமைத்துச் சீரமைக்கும் பணியை அரசு படிப் படியாகச் செய்து வருகிறது. ஐந்து நிலைகளைக் கொண்ட இத் திட்டத்தின் கீழ் 28·25 கோடி ரூபாய் மூலதனச் செலவில் மொத் தம் 4819 கிலோ மீட்டர் கொண்ட சாலைகள் 2,789 கிராமங் களில் அமைக்கப்படும். நடப்பாண்டில் தன்னிறைவு வளர்ச்சி வட்டாரங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இதற்காக 6 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டுக்கு இத்தொகை 7 கோடி ரூபாயாக உயர்த்தப்படுகிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் கால அளவில் இதற்கென மொத்தம் 40 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது'' இங்கேதான் கவனிக்க வேண்டும். ''ஆறாவது ஐந்தாண்டு திட்டக் கால அளவில் இதற் கென மொத்தம் 40 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது'' என்று 1981-82-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்டி ருக்கிறது. நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு 1982-83ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையிலே, சாலைகள் என்ற தலைப்பில், 32-ம் பக்கம், 58-வது பாராவில், ''..தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 1500-க்கும் குறைவாக மக்கள் தொகையுள்ள கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்கப்பட்டு வருகின் றன. அதே திட்டத்தின் கீழ், சாலை மதகுகள் கட்டப்பட்டு வருகின்றன. 1981—82ஆம் ஆண்டில் சாலைகளுக்காகவும் மதகு களுக்காகவும் ஏறத்தாழ 43 கோடி ரூபாய் செலவு செய்யப்படும்'' என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். அப்படியானால் கடந்த ஆண்டு நீங்கள் இங்கே வைத்த நிதிநிலை அறிக்கையின்படி 40 கோடி ரூபாய், ஆறாவது ஐந்தாண்டுக் கால அளவிலே செல வழிக்கப்படும் என்று கூறி இருக்கிறீர்கள், இப்போது 1981-82லே இந்த மார்ச் மாதம் முடிந்தால் இந்த நிதி ஆண்டு முடிந்துவிடுகி றது. இந்த 1981—82ஆம் ஆண்டில் சாலைகள் மதகுகள் ஆகிய வற்றிற்காக ஏறத்தாழ 43 கோடி செலவழிக்கப்படும் என்று

[டாக்டர் மு. கருணாநிதி] [1982 மார்ச் 6

சொல்லி இருக்கிறீர்கள். அது செலவு செய்யப்பட்டிருக்கிறது
என்று பொருள். இந்த முரண்பாடு எனக்கு விளங்கவில்லை.
அதற்கான விளக்கத்தை நிதிஅமைச்சர் தன்னுடைய பதில் உரை
யிலே தெரிவிப்பார் என்று நான் கருதுகிறேன்.

அடுத்து 1981–82 ஆண்டில், குடிசைமாற்று வாரியத்தைப்
பற்றி ஒரு கருத்து. பக்கம் 35, பாரா 45-லே குறிப்பிடப்பட்டுள்
ளது. ''குடிசை மாற்று வாரியத்தின் பணி நல்ல முன்னேற்றம்
கண்டுள்ளது. 1980 வரை, 29 கோடி ரூபாய் செலவில் 27,783
அடுக்குத் தொடர் வீடுகள் (டெனமன்ட்ஸ்) கட்டப்பட்டுள்ளன.
நடப்பாண்டில் ரூ. 3·24 கோடி செலவில், அத்தகைய வீடுகள்
3200 கட்டிமுடிக்கப்பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது'' என்று
சொன்னார்கள். எப்போது? 1981–82-லே சொன்னார்கள்.
1981 மார்ச்சு வரையில் கட்டப்பட்ட வீடுகள் 29 கோடி ரூபாய்
செலவு மறுபடியும் ஒதுக்கியது 3 கோடி. மொத்தம் 32 கோடி
ரூபாய் 32 கோடி ரூபாயாக இருக்க வேண்டும். ஆனால் இந்த
நிதிநிலை அறிக்கையில் குடிசை பகுதி மாற்று வாரியத்தைப்பற்றி
குறிப்பிடுகிறபோது 31-ம் பக்கம் 56-வது பாராவிலே ''குடிசை
மாற்று வாரியத்தின் பணி செவ்விய முறையில் நடந்தேறி வருகி
றது. 1980–81 வரையில் சுமார் 35 கோடி செலவில், 31 ஆயிரம்
குடியிருப்புக்கள் கட்டப் பட்டுள்ளன''. 35 கோடி என்கிறார்கள்.
அதாவது 29 கோடி மறுபடியும் 3 கோடி, ஆக 32 கோடியில்
கட்டப்படும் என்று சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கையில்
கூறுகிறீர்கள். இந்த ஆண்டு 35 கோடி ரூபாயில் 31 ஆயிரம்
குடியிருப்புக்களுக்காக இருப்பதாகச் சொல்லி இருக்கிறீர்கள்.
கட்டப்படுகின்ற குடியிருப்புகளின் எண்ணிக்கை மூவாயிரத்துச்
சொச்சம்தான். ஆனால் 3 கோடிக்கு மாறாக 6 கோடி ரூபாய்
என்று அதிகமாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. இந்த முரண்
பாட்டுக்கும் எனக்கு விளக்கம் தேவை.

மூன்றாவது கிராம வீட்டு வசதித் திட்டம். கிராம வீட்டு
வசதித் திட்டத்தைப் பொறுத்தவரையில் (பக்கம் 34, பாரா
44) 1981–82ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் 1980 ஜூலை
முதல் 1981 பிப்ரவரி வரையிலான கால அளவில் 73,756
கடன் மனுக்களுக்கு 22·68 கோடி ரூபாய் வழங்க அனுமதி அளிக்
கப்பட்டுள்ளது. அக்கால அளவில் 19,952 வீடுகள் கட்டி முடிக்
கப் பெற்றன. அந்தக் கால அளவு—எத்தனை மாதம்?
ஜூலை 80 முதல் பிப்ரவரி 81-வரை 8 மாதம்—அதில் கிட்டத்
தட்ட 20,000 வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டன. இது
1981-82ஆம் ஆண்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது.
அதாவது, நிதி ஆண்டு முடிய இன்னும் ஒரு மாதம் தான் குறைவு.
ஆனால் நீங்கள் இங்கே குறிப்பிட்டு இருப்பது, 1980-81-ல்
40,851 வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டன என்று சொல்கிறீர்கள்.
நிதி ஆண்டில் 8 மாத காலத்தில் ஜூலை 80 முதல் 81 பிப்ரவரி



1982 மார்ச் 6] [டாக்டர் மு. கருணாநிதி]

வரையில் 20 ஆயிரம் வீடுகள் கட்டியிருக்கிறபோது, ஒரே
மாதத்தில் மேலும் 20,000 வீடுகள் எப்படி கட்டமுடிந்தது,
எப்படி சாத்தியம் ஆனது, எப்படி 20,000 வீடுகள் 40,000
வீடுகள் ஆனது என்பதற்கான விவரங்கள் தேவை. இப்படி
இரண்டு வரவு-செலவுத் திட்டங்களிலே 1981-82, 1982-83
தரப்பட்ட திட்டங்களிலே இத்தகைய வேறுபாடுகள் இருக்கின்
றன என்றால் ஏராளமாக இத்தகைய வேறுபாடுகள் மலிந்து
கிடக்கின்றன என்பதற்குச் சான்றாக நான் இரண்டொன்றை
இங்கே குறிப்பிட்டேன். இவற்றிற்கான விளக்கங்களை நிதி
அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது தருவார்கள்
என்று நம்புகிறேன்.

அடுத்து, இந்த அறிக்கையில் இரண்டு வயது முதல் 10 வயது
வரையிலான குழந்தைகளுக்கு சத்துணவு தரப்படும் என்று
ஒரு அறிவிப்பு தரப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பைக்கூட வர
வேற்க மாட்டீர்களா என்று ஆளும்கட்சி தரப்பிலே கேட்கக்
கூடும். இந்த அறிவிப்பை பார்த்தவுடன் யாருக்கும், மேலே
ழுந்தவாரியாக வரவேற்கத்தான் தோன்றும். இந்த வகையிலே
நான் இரண்டு வயது முதல் 10 வயது வரையிலான குழந்தை
களுக்கு இலவசமாகச் சத்துணவு வழங்கப்படும் என்பதை நான்
வரவேற்கிறேன். ஆனால் எனக்கு இருக்கும் சந்தேகம் எல்
லாம், இதை விடக் கவர்ச்சிகரமாக அறிவித்த திட்டங்கள்—
பொது மேடைகளிலே அல்ல—தேர்தல் அறிக்கையில் சொல்லப்
பட்டவைகள் அல்ல இந்த அவையிலே வைக்கப்பட்ட நிதி நிலை
அறிக்கையிலே தரப்பட்ட திட்டங்கள் அவைகளின் கதி என்ன
என்பதை எண்ணிப்பார்க்கும் போது, இதனைச் செயலாற்று
வார்களா என்று ஐயுறத்தான் தோன்றுகிறது.

5 கிலோ அரிசி வாங்கினால் ஒரு கிலோ அரிசி இனாமாக
வழங்கப்படும் என்று பொதுவாக தேர்தல் காலத்தில் சொல்
லப்பட்டது. அதற்குப் பிறகு தேர்தல் அறிக்கைக்குப் பிறகு
நிதி அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்திலே வைக்கப்பட்ட
நிதிநிலை அறிக்கையிலே அது தெரிவிக்கப்பட்டு, யார் யார்
அந்த ஒரு கிலோ அரிசியைப் பெறத் தகுதி உள்ளவர்கள் என்று
கூறுகாட்டினார்கள். எப்படியென்றால், முதியோர்உதவித்தொகை
பெறுவோர், கைம்பெண் உதவித்தொகை பெறுவோர், கண்
ணொளி இழந்து உதவித்தொகை பெறுவோர் மற்றும் ஊனமுற்று
அதன் காரணமாக உதவித்தொகை பெறுவோர் என்று ஒரு பெரிய
பட்டியலைத் தந்தார்கள். ஊனம் உற்றவர்கள் எல்லாம் உதவித்
தொகை பெறுகிறார்களா என்றால் இல்லை, முதியோர் எல்லாம்
உதவித் தொகை பெறுகிறார்களா என்றால் இல்லை, கைம்
பெண் எல்லோரும் உதவித் தொகை பெறுகிறார்களா என்றால்
இல்லை, இருப்பினும் அப்படி ஒரு நிபந்தனை வைத்து, ஒரு

வரையரை வைத்து அந்தத் திட்டத்தை அறிவித்தார்கள்.
அவர்களின் மொத்த கணக்கு—4 கோடிக்கு மேற்பட்டு மக்கள்
தொகை இருக்கும் தமிழ் மண்ணில் 1 லட்சம்பேருக்குத்தான்
இந்த கணக்கு வந்தது. சுமார் 1 லட்சம் பேருக்கு வாரம்
ஒரு கிலோ அரிசி என்று அந்தத் திட்டம் மாற்றம் செய்யப்பட்டு
1980-81ஆம் ஆண்டு அறிக்கையிலே அறிவிப்பு செய்தார்கள்.
ஆனால் இப்போது எவ்வளவு பேர் பெறுகிறார்கள் என்ற
விவரம் தரப்படவில்லை. அதை நிதி அமைச்சர் அவர்கள் தரு
வார்கள் என்று நினைக்கிறேன். 5 கிலோ அரிசி வாங்கினால்
1 கிலோ அரிசி தரப்படும் என்கிற அந்தத் திட்டம் கரைந்து
போய் விட்டது, நலிந்து போய் விட்டது என்பதற்குத்தான்
இதை எடுத்துக்காட்டாகச் சொன்னேன்.

[முற்பகல் 11-10]

1980-81 ஆம் ஆண்டிலே நிதிநிலை அறிக்கையில் ஒரு கருத்
தைத் தெரிவித்தீர்கள். தாலிக்கு தங்கம் பற்றிய கருத்து.
பொற்கொல்லர் கூட்டுறவுச் சங்கம் அமைப்பதற்காக, வேலை
யற்றிருக்கும் பொற்கொல்லர் பற்றிய விவரங்கள் உடனடியாகத்
தொடங்கப்படும். அதன் அடிப்படையில் பொற்கொல்லர்
தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க நடவடிக்கை மேற்
கொள்ளப்படும். ஏழை எளியவர்களுக்கு மலிவு விலையில் திருமண
தாலி செய்து தரும் திட்டம் இதன் மூலம் செயல்படுத்தப்படும்.
இது 1980-81ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 23-24-ம்
பக்கத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்ட வா
க்கங்கள் ஆகும். ஆனால் அது நிறைவேற்றப்பட்டதா அந்த
ஆண்டில்? பொற்கொல்லருடைய கூட்டுறவுச் சங்கம் காணப்
பட்டதா? அது வடிவெடுத்ததா? அங்கே இந்த தாலிகளைச்
செய்கிற தொழில் அவர்களுக்குத் தரப்பட்டதா? அந்தத் தாலிகள்
ஏழை எளியவர்களுக்கு மலிவு விலையில் வழங்கப்பட்டதா?
1980-81ஆம் ஆண்டுத் திட்டம் கிடப்பிலே போடப்பட்டது.

அதற்குப் பிறகு 1981-82ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை
யில் பக்கம் 36-ல் வேறு ஒரு கருத்தைச் சொன்னீர்கள். குறைந்த
விலையில் தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டத்தை நடைமுறைப்
படுத்தும் முயற்சி மேற்கொள்ளப்படும். பொற்கொல்லர்களைக்
காணவில்லை. என்ன ஆனதோ தெரியவில்லை.

1981-82-ஆம் ஆண்டு முதல் கட்டமாக ஏழை [illegible]
பெண்கள் மகளிர் திருமணத்திற்கு குறைந்த விலையில் தாலிக்
குத் தங்கம் வழங்கப்படும். இதற்காக 10 இலட்சம் ரூபாய்
ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் தொகையையே ஒதுக்கி, [illegible]
ஒதுக்கிவிட்டோம் தாலிக்குத் தங்கத்திற்காக என்று நிதி [illegible]
அறிக்கை முழக்கமிட்டது. இந்த நிதியாண்டில், அது [illegible]



படுத்தப்பட்டதா என்றால் இல்லை. மார்ச் 3-ந் தேதி வெளி
வந்த ஆங்கில ஏடுகள் சிலவற்றிலே என்ன செய்தி வந்திருக்
கிறது?

" The Scheme of supplying Thalis for marriage of daughters of poor widows has been abandoned by the AIADMK Government. A provision of Rs. 10 lakhs was made in the 1981-82 Budget for the Scheme with the assurance that a beginning could be made by giving Thali at subsidised cost.

After careful consideration for nearly a year the Government has now decided to grant a marriage allowance of Rs. 1000 instead of Thali. According to Government order 1000 widows will be granted this allowance before the end of March 31, 1982."

கவனிக்கவேண்டிய இடம் Before the end of March 1982. அதுதான்
நிதி ஆண்டு. 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கினீர்களே சென்ற ஆண்டு.
அது இந்த ஆண்டு, 1982-ஆம் ஆண்டு மார்ச் 31-ந் தேதிக்குள்
செலவழிக்கப்பட வேண்டும்.

" To meet marriage expenses of one of their daughters who are in the 18-30 age group ". Among the conditions, totally eight numbers, for grant of marriage assistance were " the mother of the bride should furnish proof that she is a wiodw."

Her annual income should not exceed Rs. 3000.

The Family of the widow should not have an Adult Member to support her financially and

a widow has re-married is not eligible for the assistance.

" The application must be made to the authorities, three months before the marriage.".

இப்படி 7, 8 நிபந்தனைகளைப் போட்டு, அந்த விதவை
இவ்வளவு ஏழ்மையாக இருக்க வேண்டும். அந்த வீட்டில் ஒரு
(அடல்ட்) ஒரு வயது வந்தவர் ஆதாரமாக இருந்திடக் கூடாது.
அந்த விதவை மறுமணம் செய்துகொள்கிற விதவையாகவும்

இருந்திடக் கூடாது. இந்த நிபந்தனைகள் எல்லாம் பொருத்த
மானவைதானா? விதவையாக இல்லாமல் ஒரு ஏழை தாய்,
ஒரு வயதான கணவன், 70 வயதோ, 80 வயதோ உள்ள ஒரு
கணவன், அவருடைய மனைவி—அவர்களுக்கு ஒரு மகள் இருந்து
அந்தக் கணவன் சம்பாதிக்க முடியாத சூழ்நிலையில் இருந்து
மனைவியும் குடும்பத்தை பாதுகாக்க முடியாத சூழ்நிலையில்
அந்த மகளுக்குத் திருமணம் என்றால் ஆயிரம் ரூபாய் தரமாட்
டீர்களா? அதற்காக அவர்களுடைய கணவன் இறந்து போகிற
வரை அந்த அம்மாள் காத்து இருந்து, அவர்கள் கைம் பெண்ணாகி
அதற்குப் பிறகுதான் தன்னுடைய மகளுக்கு திருமணம் செய்து
வைக்க உங்களிடத்திலே ஆயிரம் ரூபாயை பெற்றுக்கொள்ள
வேண்டுமா?

அது மாத்திரமல்ல. மறுமணம் செய்து கொண்டால்
கிடையாது. மறுமணம் செய்துகொள்ள வேண்டும் என்பது சுய
மரியாதை இயக்கத்தினுடைய ஒரு பெரிய தத்துவக் கருத்து.

''கோரிக்கையற்று கிடக்குதண்ணே இங்கே
வேரில் பழுத்த பலா''

என்று என்னைவிட நாவலர் அழகாக பாரதிதாசனுடைய பாடல்
களை எத்தனையோ கூட்டங்களில் சொல்லியிருக்கிறார்கள்.
அப்படி ஒரு ஏழை தாய், ஒரு ஏழை விதவை தன்னுடைய
மகளுக்கு ஆயிரம் ரூபாய் பெற்று திருமணம் செய்துவிட்டு, தான்
இன்னொரு கணவனை திருமணம் செய்து கொள்வது தவறு
என்று, மறு மணம் செய்துகொள்கிற ஒரு புரட்சிகரமானத்
திட்டத்தைக்கூட இந்த நிபந்தனைகள் மூலமாக நீங்கள் எதிர்க்
கிறீர்களா இல்லையா என்று பெரியாருடைய சமுதாய சீர்
திருத்தக் கருத்துக்கள் சார்பாக நான் மிகப் பணிவன்போடு
இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்
கிறேன்.

நேற்று அல்லது நேற்றுமுன்தினம் நம்முடைய முதலமைச்சர்
அவர்கள் மேலவையிலே கூடச் சொல்லி இருக்கிறார்கள். ''ஆயி
ரம் ரூபாய் வேண்டும் என்று கேட்டார்கள், எனக்குத் தாலி கூட
தேவையில்லை, கல்யாணச் செலவுக்கெல்லாம் பணம் வேண்டும்.
ஆகவே ஆயிரம் ரூபாயாகத் தந்து விடுங்கள் என்று கேட்டார்கள்.
ஆகவே ஆயிரம் ரூபாயாகத் தரப்படுகிறது'' என்று சொன்னார்
கள். ஆனால் வேடிக்கையும் வேதனையும் என்ன தெரியுமா?

''The application must be made to the authorities three months before the marriage''

இது மூன்றாம் தேதி பத்திரிகையிலே வருகின்றது. இன்றைக்கு
நாம் 6 ஆம் தேதி கூடி இருக்கிறோம். இந்த மாதம் 31 ஆம்
தேதிக்குள்ளாக இந்த நிதியாண்டு முடிந்துவிடுகின்றது. நிதி





ஒதுக்கிய 10 இலட்சம் ரூபாய் இந்த நிதியாண்டோடு முடிந்து
விடுகிறது. இந்தப் பத்து இலட்சம் ரூபாயிலே ஆயிரம் ரூபாயை
விதவைகள் தங்களுடைய பெண்களின் திருமணத்திற்காகப் பெற
வேண்டுமேயானால் மூன்று மாதத்திற்கு முன்பு அப்ளிகேஷன்
போட்டிருக்க வேண்டும். மூன்று மாதத்திற்குமுன் அப்ளிகேஷன்
போட்டிருக்கவேண்டும் என்று மார்ச் மாதம் சொல்கிறீர்கள்.
இது சாத்தியமான காரியமா? இனிமேல் 3 மாதத்திற்கு மூன்
எப்படி அப்ளிகேஷன் போடுவது? இதையும் எண்ணிப்பார்க்க
வேண்டும். எனவே தாலிக்குத் தங்கம் என்பது பொற்கொல்லர்
சங்கத்திலே ஆரம்பித்து அதற்குப் பிறகு தாலியே தரப்படும்
என்று கடந்த ஆண்டு தெரிவிக்கப்பட்டு கைம்பெண்களுடைய
பெண்களுக்காகத் தரப்படும் என்று சொல்லப்பட்டு இப்போது
ஆயிரம் ரூபாய் அந்த பத்து இலட்சம் ரூபாயிலே வழங்கப்படும்
என்று சொல்லப்பட்டு அந்தப் பத்து இலட்சம் ரூபாயும் செல
வழிக்கப்படாத சூழ்நிலையிலே மூன்று மாதங்களுக்கு முன்பே
விண்ணப்பம் வந்திருக்க வேண்டும் என்று ஒரு பெரிய அணை
போட்டு அந்தப் பத்து இலட்சம் ரூபாயும் செலவழிக்கப்பட
முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது என்பதை அரசி
னுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இதற்கு வேறு என்ன மார்க்கம் தேடப் போகிறார்கள் என்று
முதலமைச்சரும், நிதியமைச்சரும் கலந்து யோசித்து நாளை மறு
நாள் எனக்கு விளக்கம் அளிப்பார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்தது நான் கடந்த கால நிகழ்ச்சிகளைச் சொன்னேனே
அந்த வரிசையிலே அடுத்தது 1980-81 நிதிநிலை அறிக்கையிலே
ஒன்று சொன்னீர்கள். ஏழ்மை நிலையிலே உள்ள கருவுற்ற
மகளிருக்கு 7 ஆம் மாதம் முதல் குழந்தை பிறந்த 4 ஆம் மாதம்
முடியும் வரையில் சத்துணவு வழங்கப்படும், மாதந்தோறும்
அவர்கள் உடல்நலம் பரிசோதிக்கப்பட்டு தக்க அடிப்படை மருந்து
கள் வழங்கப்படும், இந்த வசதிகளுக்காக ஒவ்வொரு ஏழை
மகளிருக்கும் 150 ரூபாய்க்கு குறையாமல் செலவிடப்படும் என்று
சொன்னீர்கள். எவ்வளவு பேருக்குக் கொடுத்தீர்கள்? கொட்
டாம்பட்டியிலே மாத்திரம் இந்தத் திட்டம் நிறைவேற்றப்
படும் என்று 1980-81 அறிக்கையில் தொடர்ந்து பேசும்போது
குறிப்பிட்டீர்கள். ஆனால் தமிழகத்திலே பரவலாக நிறைவேற்றப்
படும் என்று பத்திரிகைகளிலே பக்கம் பக்கமாக கொட்டை
எழுத்திலே செய்தி வெளியிடப்பட்டு வெளி வந்தது. நிதிநிலை
அறிக்கையிலே காணப்பட்ட இந்தக் கருத்தின்படி 150 ரூபாய்
பெற்ற கர்ப்பவதிகள் எத்தனை பேர்? அந்தக் கணக்கை
நாளை மறுநாள் நிதியமைச்சர் அவர்கள் பதிலுரையிலே தருவார்
கள் என்று நான் நம்புகிறேன். ஏன் நம்புகிறேன் என்றால்
அந்த அளவிற்கு தரப்படவில்லை. கொட்டாம்பட்டியோடு
நின்றுவிட்டது. இந்தத் திட்டம் கொட்டாம்பட்டியோடு
கொட்டாவி விட்டு விட்டதா என்று கேட்கப்படுகின்ற அளவுக்கு
அந்தத் திட்டம் இன்று செயலிழந்து கிடக்கின்றது.

படித்துவிட்டு வேலையற்றிருக்கும் பட்டதாரிகள் சுமார் ஒரு
இலட்சம் பேருக்கு மாதம் 50 ரூபாய் வழங்கப்படும் என்று
முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் வேலை
தேட போக்குவரத்துச் செலவுக்காவது அந்தப் பணம் பயன்படும்
என்பதற்காகத்தான் 50 ரூபாய் தரப்படும் என்று முதலமைச்சர்
அவர்கள் அதற்கு வியாக்கியானம் கூடச் செய்தார்கள். ஆனால்
அந்தத் திட்டமும், ஒரு இலட்சம் பேர்களுக்கு, படித்த பட்ட
தாரிகளுக்கு வேலையில்லாதவர்களுக்கு தரப்படும் என்று இதே
அவையிலே அறிவிக்கப்பட்ட அந்தத் திட்டமும்—ஒரு ஆயிரம்,
இரண்டாயிரம் பேர்களுக்குக் கூட தரப்படுகின்றதா? எத்தனை
நிபந்தனைகள் விதிக்கப்பட்டன என்பதை எல்லாம் எண்ணிப்
பார்க்கிற போது அந்தத் திட்டமும் ஏறத்தாழ கிடப்பிலே
போடப்பட்ட ஒரு திட்டமாகத்தான் ஆகி விட்டது. 1979–80,
ஆம் ஆண்டு அறிக்கையிலே இந்த அரசின் சார்பிலே அப்போது
நிதியமைச்சர் படித்த அறிக்கையில் படித்த, படிக்காத வேலை
யில்லாத அனைவருக்கும் வேலை வாய்ப்பு ஏற்படுத்தும் பொருட்டு
உறுதியான வேலை வாய்ப்புத் திட்டம் செயலாக்கப்படும், இத்
திட்டத்தின்கீழ் கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பு இன்றி
இருக்கும் 18 வயதுக்கு மேற்பட்டவர் அனைவரும் வேலை கோரி
தமது பெயர்களைப் பதிவு செய்துகொள்ளலாம். வேலை வாய்ப்பு
மாவட்டத்திற்குள்ளேயே அவர்களுக்கு பொதுவாக
ஏற்படுத்தும் பொருட்டு பணிகள் மேற்கொள்ளப்படும்.
கான்ட்ராக்ட் ஒப்பந்தக்காரர்கள் இல்லாமல் அரசுத் துறையின்
நேரடி மேற்பார்வையிலேயே இப்பணிகள் செயலாக்கப்படும்.
இத்திட்டங்களில் வேலை செய்யும் கிராம மக்களின் ஊதியம்
அன்றாடம் ஆற்றப்பட்ட பணியின் அளவை அடிப்படையாகக்
கொண்டு வாரம் ஒரு முறை வழங்கப்படும். இதன்படி நாள்
ஒன்றுக்கு சுமார் ரூபாய் மூன்றும் அரிசியும், கோதுமையும் ஒவ்
வொருவருக்கும் கிடைக்கும். வேலை ஏதும் அளிக்கப்படாத
நாளிலே அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு ரூபாயோ அல்லது
அதற்கு இணையான அரிசியோ அல்லது கோதுமையோ வழங்கப்
படும். இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டதா? வேலை
அளிக்கப்படும்: அப்படி அளிக்கத் தவறினால் வேலையில்லாமல்
இருக்கின்ற ஒவ்வொரு நாளுக்கும் அவர்களுக்கு ஒரு ரூபாய்
வழங்கப்படும் என்ற இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருந்தால்,
நீங்கள் சொன்னபடி வேலை வாய்ப்புக்கள் வழங்கப்பட்டிருந்தால்,
மக்களை வறுமைக் கோட்டுக்குக் கீழே இருந்து மேலே தூக்கி
விடுகின்ற முயற்சி செம்மையாக மேற்கொள்ளப்பட்டு இருந்தால்
பட்டினி கிடக்கும் குழந்தைகளே இருந்திருக்கமாட்டார்களே.

(முற்பகல் 11.20)

வேலையில்லாதவர்களுக்கும் ஒரு ரூபாய் தரப்படும் என்று
1979–80 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் அறிவித்தீர்களே
அந்த அறிவிப்பின்படி நீங்கள் செயல்பட்டிருப்பீர்களானால்



பட்டினி கிடக்கிற குழந்தைகளே வீட்டில் இருந்திருக்க முடியாதே! இன்றைக்கு குழந்தைகளுடைய உணவு, இந்தத் திட்டத்தின்படி எத்தனை குழந்தைகளுக்கு தர இருக்கிறீர்கள்? அந்தக் கணக்கு சொல்லப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் இங்கே சுட்டிக்காட்டியதைப் போல் இந்த நிதிநிலை அறிக்கையிலே அதன் தொடர்பாக எங்களுக்குத் தரப்பட்டு இருக்கிற புத்தகங்கள் அத்தனையையும் நான் புரட்டிப் புரட்டிப் பார்த்தேன். எந்த ஒரு இடத்திலும் நீங்கள் குறிப்பிட்டிருக்கிற 100 கோடி ரூபாய் இந்தக் குழந்தைகளுடைய இலவச சத்துணவுத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கிற அடையாளமே தெரியவில்லை. ஒதுக்கப்படவே இல்லை. ஒதுக்கப்படாமலேயே 100 கோடி ரூபாய் திட்டம் என்று அறிவித்திருக்கிறீர்கள். முதலமைச்சர் அவர்கள் 60 இலட்சம் குழந்தைகளுக்கு அளிக்கப்படும் என்று ஒரு பொதுக் கூட்டத்தில் அல்லது பொது நிகழ்ச்சியில், அல்லது அரசு நிகழ்ச்சியில் பேசியதாக செய்திகள் வந்தன. அந்த 60 இலட்சத்தில் எந்தெந்தக் குழந்தைகள் சேருகிறார்கள்? அல்லது எந்தெந்தக் குழந்தைகள் விலக்கப்படுகிறார்கள் என்ற விவரங்களும் எங்களுக்குத் தேவை.

1981–82 ஆம் ஆண்டு அறிக்கையில் சொல்லியிருக்கிறீர்கள். குழந்தைகள் காப்பகங்கள், சத்துணவுத் திட்டம் இதற்காக 8.54 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம் என்று 81–82-ல் அறிவித்திருக்கிறீர்கள். அந்தக் குழந்தைகள் இந்த 60 இலட்சத்தில் சேருகிறார்களா அல்லது கழிக்கப்படுகிறார்களா? உலக வங்கி சத்துணவுத் திட்டம் 1981–82-ல் இருந்து மதுரை மாவட்டத்தில் 33 வளர்ச்சி வட்டாரங்களுக்கு நீட்டிக்கப்படும் என்றீர்கள். அதிலுள்ள குழந்தைகள் எண்ணிக்கை எவ்வளவு? அவர்கள் இந்தத் திட்டத்தில் இணைக்கப்பட்டிருக்கிறார்களா அல்லது கழிக்கப்பட்டிருக்கிறார்களா?

பெருந் தலைவர் காமராஜ் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் மதிய உணவுத் திட்டம் இங்கே நடைமுறைப் படுத்தப்பட்டு ஐந்து வயது முதல் பத்து வயது வரை பள்ளிகளில் படிக்கிற சிறார்களுக்கு மதிய உணவு அளிக்கப்படுகிற திட்டம் பெரும் தலைவர் காமராஜ் அவர்கள் காலத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. ஐந்து வயது முதல் பத்து வயது வரை பள்ளிகளுக்குச் செல்கிற அந்தச் சிறுவர்களுக்கு மதிய உணவு அளிக்கிற நேரத்தில் நீங்கள் சொல்கிற 2 வயது முதல் 10 வயது வரை என்கிற இந்தக் குழந்தைகளுடைய கணக்கில் இந்த ஐந்து வயது முதல் பத்து வயது வரை உள்ள குழந்தைகளைக் கழித்து விட்டால் ஆக நீங்கள் சொல்கிற திட்டம் இரண்டு வயது முதல் ஐந்து வயது வரை உள்ள குழந்தைகளுககு, மாத்திரம்தான் என்பது தெளிவாகிறதா இல்லையா? இல்லை நாங்கள் பத்து வயதுக்கும் போடுவோம் என்று சொன்னால்

பள்ளிக்கூடங்களில் அவர்கள் படிக்காமல் இருந்தால் கூட அவர்
களுக்கு சத்துணவு தரப்படும் என்று சொல்வதாக அர்த்தம்.
எப்படியும் கட்டாயக் கல்வி வேண்டும். குக்கிராமங்களில் உள்ள
பிற்படுத்தப்பட்டவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் சமுதாய
வீட்டுக் குழந்தைகள் எப்படியும் படித்திட வேண்டும். அவர்கள்
வயிற்றுப் பசி காரணமாக வேறு வேலையில் ஈடுபட்டு வயிற்றுக்கு
உணவு தேடுவதற்காக வேறு பணிகளில் ஈடுபட்டு அதன் காரண
மாக பள்ளிக்குச் செல்லாமல் இருக்கிறார்கள் என்ற அந்தக்
குறைபாடு வந்ததால்தான் மதிய உணவுத் திட்டம். அந்த மதிய
உணவுத் திட்டம் ஐந்து வயது முதல் பத்து வயது வரை உள்ள
குழந்தைகளுக்குப் பயன்படும்போது நீங்கள் இரண்டு வயது
முதல் பத்து வயது வரை என்று சொல்கிறீர்களே, என்ன
கணக்கு என்று எனக்குப் புரியவில்லை. எனவே உங்கள் கணக்குப்
படி ஐந்து முதல் பத்து என்கிற அந்த வயது வரம்பைக் கழித்து
விட்டால் இரண்டு முதல் ஐந்து வயது வரை உள்ள குழந்தைகள்
தான் பயனை பெற முடியும். அந்தக் குழந்தைகள் எத்தனை
பேர்கள். அதுவும் தெரியாது.

ஒரு புதிய திட்டம் அல்லது அறிவிப்பு அல்லது நிர்வாகக்
கருத்து, அதை நேற்று முதலமைச்சர் அவர்கள் மேலவையில்
எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதைப்பற்றிக் கூட இங்கே
பிரச்னை வந்து பிறகு சுமுகமாக முடிவுற்றது. அவர்கள் கூறும்
போது இந்தத் திட்டத்தை தாய்மார்களை வைத்து நடத்தப்
போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு என்ன
காரணம் என்றால், அந்தக் குழந்தைகளுடைய திட்டத்தில்
யாரும் தவறு செய்துவிடக் கூடாது தாய்மார்களுக்குத் தான்
குழந்தைகளுடைய பசி அருமை தெரியும். எனவே அந்தத் தாய்
மார்களைக் கொண்டே இந்தத் திட்டத்தை நிறைவேற்றப்
போகிறேன் என்ற கருத்தில் அவர்கள் சொல்லியிருக்கலாம். நான்
ஒரு மாற்று யோசனையாகச் சொல்கிறேன். தாய்மார்களுக்கு
தான் இந்தத் திட்டத்தில் அக்கறையுள்ளது என்பதைவிட
தந்தக் குழந்தைகளைப் பெற்ற தாய்களுக்குத்தான் அதிக
அக்கறை என்பதை மனதில் கொள்வீர்களானால், இந்தச்
சத்துணவிற்காக ஒவ்வொரு குழந்தைக்கும் செலவழிக்கப்படுகிறது
ஐம்பது பைசா என்று வைத்துக் கொண்டால், அரை ரூபாய்
என்று வைத்துக் கொண்டால் முப்பது நாட்களுக்கு பதினைந்து
ரூபாய் — சத்துணவு எட்டணாவிற்கு எப்படித் தருவார்களோ
எனக்குத் தெரியாது — அந்த எட்டணாவிற்குள்ளே தருவதாக
இருந்தாலும், இன்னும் கொஞ்சம் அதிகமான தொகை ஒரு
ரூபாய் — நான் சொல்லியிருப்பதால் இன்னும் கொஞ்சம் அதிக
மாகச் சொல்ல வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள்
எண்ணக் கூடும். "ஒரு ரூபாய்க்கு சத்துணவு தரப்போகிறோம்
என்று இங்கே சொன்னாலும், நான் கூறிக்கொள்ள விரும்பு
கிறேன். தாய்மார்களுடைய ஒரு சொஸைட்டி, ஒரு சங்கம்



அல்லது ஒரு நிர்வாகப் பொறுப்பை வைத்து அவர்கள் மூலமாக குழந்தைகளுக்கு அந்த உணவு போய்ச் சேருவதை விட அந்தந்த வீடுகளிலுள்ள, ஏழை வீடுகளிலுள்ள தாய்மார்கள் இடத்தில் "இந்தாம்மா, ஒரு நாளைக்கு எட்டணா, முப்பது எட்டணா ரூபாய் 15, இதை வைத்துக் கொண்டு குழந்தைக்கு மதிய உணவு, சத்துணவு போடு" என்று அந்தத் தாய்மார்களிடமே கொடுத்து விட்டால் அது அந்தக் குழந்தைகளுடைய வயிற்றுக்கு நேராகப் போய்ச் சேரும்.

அது அந்தக் குழந்தைகளுக்கு நேரடியாகப் போய்ச் சேரும். இல்லாவிட்டால், பல வயிறுகளைத் தாண்டித்தான், அந்தக் குழந்தைகளுக்குப் போய்ச் சேரும். இந்த தாய்மார்களைப் பற்றிச் சொல்லும்போது, பெற்ற தாயைவிட, மற்றத் தாய் உற்ற தாயாக இருக்க முடியாது. ஒருசில தாய்மார்களை அடையாளம் காட்டி, விதி விலக்கு வேண்டுமென்று விவாதிக்க வேண்டாம். உரிய தாயிடத்தில் நாளொன்றுக்கு 8 அணா வீதம் அல்லது ஒரு ரூபாய் வீதம் மாதம் ஒன்றுக்கு கணக் கிட்டுக் கொடுத்துவிட்டால் அந்தச் சத்துணவு ஒழுங்காகப் போய்ச் சேரும் என்ற யோசனையை நான் சொல்லும்போது, "இதை மறுப்பீர்களே தவிர, ஆக்கபூர்வமான யோசனையைச் சொன்னீர்களா" என்று கேட்கக் கூடாது என்பதற்காக இந்த யோசனையை நான் சொல்லி வைக்கிறேன்.

இன்றைக்கு இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக 38 கோடி ரூபாய்க்கு வரி போட்டிருக்கிறீர்கள். வரியே போட மாட்டோம் என்று சொல்லப்பட்ட இந்த அரசில் 38 கோடி ரூபாய்க்கு வரி போட்டிருக்கிறீர்கள் எந்த நேரத்திலே? மதுவிலக்கை பெருமளவிற்கு தளர்த்தியிருக்கிறோம் என்று வார்த்தை ஜாலத்திற்காக வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அதையே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், எது தளர்த்தப்பட்டிருக்கிறது? சாராயக் கடைகளிலும், கள்ளுக் கடைகளிலும் உயரத்திலே தொங்க விடப்பட்டிருந்த பெயர்ப் பலகைகள் இப்போது கொஞ்சம் தளர்த்தப்பட்டு, கீழே தொங்க விடப்பட்டிருக்கிறது. இதைத் தவிர, வேறு எதுவும் தளர்த்தப் பட்டதாக எனக்குத் தெரியவில்லை. கிட்டத்தட்ட மதுவிலக்கை ரத்து செய்த மாதிரி செய்துவிட்டு, அதிலே ஏறத்தாழ 100 கோடி ரூபாய் வருமானம் வருகின்ற இந்த சூழ்நிலையில், 38 கோடி ரூபாய்க்கு வரி என்கிறீர்கள். அதிலே பட்டு மீது வரி போடப்பட்டிருக்கிறது. குழந்தைகளுக்கு சத்துணவு கொடுப்ப தாகச் சொல்லப்படுகின்ற இந்த நேரத்திலே, குழந்தைகள் பயன் படுத்துகின்ற பிஸ்கட், மிட்டாய், சாக்லேட் போன்றவைகள் மீது வரிகள் போடப்பட்டிருக்கிறது. இந்த வரிகள் எல்லாம் உறுப்பினர்கள் வாதிட்ட பிறகு, எடுத்துவிடும் வரிகளாக இருக் கும்; அது எனக்குத் தெரியும். சில வரிகள் உறுப்பினர்கள்

கேட்டுக் கொண்டதற்குப் பிறகு, விலக்குகின்ற வரிகளாக,—
அப்படிப்பட்ட வரிகள் போடப்பட்டு, அதைப்பற்றி உறுப்பினர்
களைப் பேசச் சொல்லி, கடைசியாக பலத்த கைத் தட்டலை
அவையிலே எதிர் பார்த்து, அந்த வரிகளை விலக்கிவிட்டோம்
என்று பொதுவாகச் சொல்வது நிதியமைச்சருக்குள்ள மரபு.
நானும் நிதியமைச்சராக இருந்திருக்கிறேன். அதனால், அநு
பவத்தில் சொல்கிறேன். எனவே, அந்த வகையில் இந்த பிஸ்கட்,
மிட்டாய், சாக்லேட் ஆகியவற்றின் மீது போடப்பட்டிருக்
கின்ற வரிகளும், பட்டு மீது போடப்பட்டுள்ள வரியையும் நீக்கப்
படலாம்.

பட்டு, வியாபாரிகள் எங்களைச் சந்தித்தார்கள். நான் அவர்
களைக் கேட்டேன், ' பட்டு ' வந்திருக்கிறீர்களா? என்று
ஆமாம், ' பட்டுத் தான் ' வந்திருக்கிறோம் என்று சொன்னார்
கள். எனவே, அவர்கள் பட்டுப் போகாமல் காப்பாற்றப்பட
வேண்டும் ; கைத்தறி தொழில் பட்டுப் போகாமல் பார்த்துக்
கொள்வது அரசின் பொறுப்பு. இராஜாஜி அவர்கள் கொண்டு
வந்த இந்த விற்பனை வரியை, காமதேனு என்று அனைவரும்
சொல்வார்கள். அந்த இராஜாஜி கூட விற்பனை வரியை அறி
முகப்படுத்திய அந்த காலகட்டத்தில், கைத்தறிக்கு வரி
போட்டது கிடையாது. தவறி போடப்பட்ட 1 சதவிதம்
வரியைக்கூட உடனடியாக விலக்கிவிட்டார் என்றுதான் நான்
கேள்விப்படுகிறேன்.

மத்திய சர்க்காருடைய அமைச்சர் பிரணாப் முகர்ஜி அவர்
கள் சமர்ப்பித்திருக்கின்ற வரவு செலவு திட்டத்திலேகூட,
பாலிஸ்டர் கைத்தறியோடு இணைந்து தயாரிக்கப்படு
மானால், அந்த பாலிஸ்டருக்கு வரி கிடையாது என்று மத்திய
அரசிலேகூட விதி விலக்களித்திருக்கிறார்கள். எனவே, கைத்
தறியாளர்கள் வாழ்வை உயர்த்தவும், அவர்களுடைய கண்ணீ
ரைத் துடைக்கவும், நீண்ட நெடுங்காலமாக பாடுபட்டு வருகின்ற
திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் இந்த அரசைக்
கேட்டுக் கொள்வேன்—கைத்தறிக்கு ரிபேட் போன்ற சலுகை
களை அளிப்பதுதான் நம்முடைய கடந்த கால அரசுகளுக்கு
பழக்கமே தவிர, வரி போடுவது வழக்கமல்ல, ஆகவே, இப்படி
போடப்பட்டுள்ள பட்டு வரியையும், குழந்தைகளின் சத்துணவிற்
காக , பிஸ்கட், சாக்லேட், மிட்டாய் போன்றவற்றின்மீது
போடப்பட்டுள்ள வரியையும் நீக்குவதற்கு இந்த அரசாங்கம்
கவனம் செலுத்த வேண்டும். இந்த வரிகளை யெல்லாம் நீக்க
வேண்டுமென்று சொல்லும்போது, மற்ற வரிகளை வைத்துக்
கொள்ளலாம் என்று எண்ணக் கூடாது. இந்த 38 கோடி ரூபாய்
விற்பனை வரியைப் போடுவதைவிட, விற்பனை வரியிலே 620
கோடி ரூபாய் வருமென்று சொல்லுகிறீர்கள். 620 கோடி
ரூபாயை வசூலிக்கின்ற நேரத்தில், கொஞ்சம் தீவிரமாக,



''டிரைவ்'' என்று சொல்வார்களே, அப்படி தீவிரமாக அது வசூலிக்கப்பட்டால் நீங்கள் எதிர்பார்க்கின்ற 38 கோடி ரூபாய் நிச்சயமாக, இந்த வரிகளை உயர்த்தாமல், புதிய வரிகளைப் போடாமல், இந்த 30 கோடி ரூபாயைப் பெற முடியும்.

மூதறிஞர் இராஜாஜி அவர்கள் காலத்தில், 10,000 ரூபாய் கொள்முதல் வியாபாரம் செய்கின்றவர்களுக்கு விற்பனை வரி யில்லை என்று விலக்களிக்கப்பட்டது. பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராக இருந்தபோது 10,000 ரூபாய் என்ற வரம்பை ரூ. 15,000 ஆக உயர்த்தி, வரி விலக்கு அளிக்கப்பட்டது. அண்ணா அவர்கள் மறைவிற்குப் பிறகு, அந்தப் பொறுப்புக்கு நான் வந்த பிறகு, முதற்கட்டமாக ரூ. 15,000 என்றிருந்த வரம்பை, ரூ. 25,000 ஆக உயர்த்தி, வரி விலக்கு அளிக்கப்பட்டது சிறு வியாபாரிகளுக்கு.

(முற்பகல் 11-30)

அதன் பின்னர் திரு. எஸ். பி. சீனிவாசன், ஐ.ஏ.எஸ்., என்ற ஒரு அதிகாரியின் கீழ் ஒரு நபர் குழு அமைக்கப்பட்டு அது தந்த பரிந்துரைகளின்படி 35 ஆயிரம் ரூபாய் வரி விலக்கு அளிக்கலாம் என்று தந்த பரிந்துரைகளை ஏற்று 35 ஆயிரம் அல்ல 50 ஆயிரம் ரூபாய் வரை வரி விலக்கு அளிக்கலாம் என்று விலக்கு அளித்தது நாவலர் அவர்களுக்கு நன்றாக நினைவிருக்கும், அன்றைக்கு ஆட்சியிலே இருந்தவர்களுக்கும் இன்று எதிர் வரிசையிலே அமர்ந்திருக்கும் அமைச்சர்களுக்கும் மற்றவர்களுக்கும் நினைவிருக்கும், சபாநாயகர் உள்பட; 59 பொருள்களுக்கு பல முனை வரி ரத்து செய்து ஒரு முனை வரியாக ஆக்கியது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி. ஆனால், இன்றைய அரசு அந்த 59-யும் 58-ஆக ஆக்கி வெல்லத்திற்கு பலமுனை வரி விதிக்கப்பட்டிருக்கிறது என்று வியாபாரிகள் சார்பிலே சொல்லப்படுகிறது. கழக ஆட்சிக் காலத்தில் 59 பொருள்களுக்கு பலமுனை வரி நீக்கப்பட்டதல்லவா? ஒருமுனை வரி போடப்பட்டது அல்லவா, அது நீங்கலாக மிச்சமுள்ள பலமுனை வரிக்கு உட்படுத்தப்பட்ட பொருள்களில் இந்த 620 கோடி என்று சுட்டிக்காட்டுகிறீர்களே அந்த 620 கோடி ரூபாயிலே 250 கோடி ரூபாய் பலமுனை வரியாக மாத்திரம் உங்களுக்கு வர காத்திருக்கிறது. இந்த 250 கோடி ரூபாய் வரியைதான் 4 சதவீதம் என்பதை நீங்கள் 5 சதவீதம் ஆக ஒரு சதவீதம் உயர்த்தியிருக்கிறீர்கள். அந்த ஒரு சதவீதம் உயர்வின்படி 250 கோடி ரூபாய் பலமுனை வரியில் உங்களுக்கு கிடைக்கப்போவது 60 கோடி ; இதுவன்னியில் நீங்கள் போட்டிருக்கிற மற்ற வரிகள் மூலமாக 50 கோடி, ஆக ஏறக்குறைய 100 அல்லது 110 கோடி ரூபாய் அளவிற்கு நீங்கள் வரி போட்டிருக்கிறீர்கள்.

மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டதன் மூலமாக 100 கோடி ரூபாய்க்கு மேல் வருமானம் பெறுகிற இந்த அரசு, 100 கோடி ரூபாய்க்கு மேல் வரியாக போட்டுவிட்டு 38 கோடி

(டாக்டர் மு. கருணாநிதி) [1982 மார்ச் 6

ரூபாய்க்கு மட்டும் தான் வரி போட்டிருக்கிறோம் என்று சொல்வது பொருளாதார ரீதியிலே என்னால் ஏற்கவியலாது. நிச்சயமாக இந்த வரிகள் மூலமாக இந்த அரசுக்கு 110 கோடி ரூபாய்க்கு மேல் கிடைக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

வரி உயர்வு ஒரு புறம், புதிய வரிகள் ஒருபுறம். அதே நேரத்தில் கோடிக்கணக்கான வரி தள்ளுபடியும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த வருந்தத்தக்க ஆனால் சொல்லித் தீர வேண்டிய ஒன்றை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

GOVERNMENT OF TAMIL NADU

ABSTRACT: Steel Rerolling Mills—Tax—Tamil Nadu General Sales Tax 1959 and Central Sales Tax 1956—Levy of tax—Levy of tax on the Sale of re-rolled products of Iron and Steel—for the period from 19th January 1976—Exemption—ordered.

---

Commercial Taxes and Religious Endowment G.O. Ms. No. 103, Dated: 24-1-1982

......The Government after careful examination and due consideration have decided to accept the recommendation of the Task Force and order that the end products coming under Item 4 of the Schedule II such as M. S. Rounds, Rolls, and rods, etc. manufactured by the Steel Rolling Mills in Tamil Nadu out of our raw materials specified in Item 4 of Schedule II to the Tamil Nadu General Sales Tax Act which had already suffered tax under the Tamil Nadu General Sales Tax Act be exempted from the tax payable under the Tamil Nadu General Sales Tax Act and the Central Sales Tax Act.

என்று ஒரு வரிவிலக்கு செய்யப்பட்டிருக்கிறது. இது எவ்வளவு நாளைக்கு ? என்றால்

"The exemption will take effect retrospectively from 19th January 1976"



1982 மார்ச் 6] [டாக்டர் மு. கருணாநிதி]

இதன்படி 1976 ஆம் ஆண்டு முதல் 1982 ஆம் ஆண்டு வரையில் ஸ்டீல் ரீ-ரோலிங் மில்ஸ் கட்ட வேண்டிய வரி இந்த அரசுக்கு ஏறத்தாழ ஏழு அல்லது எட்டு கோடி ரூபாய். இந்த ஏழு அல்லது எட்டு கோடி ரூபாய் கட்டப்பட வேண்டியதில்லை. 19–1–1976 முதல் ரெட்ராஸ் பெக்ட்டிவ் எபேக்ட் படி கட்ட வேண்டிய தில்லை. என்று ஒரு எட்டு கோடி ரூபாயை இந்த அரசு இழந்திருக்கிறது. 38 கோடி ரூபாய் வரி போடுகிற நேரத்திலே, எட்டு கோடி ரூபாயை நாம் இழந்திருக்கிறோம் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். விவசாயிகளுக்கு கடன் தள்ளுபடி என்றால், விவசாயிகள் கடனை திருப்பி செலுத்தவில்லை என்றால் பட்டம் போட்டு காட்டுகிற இந்த அரசாங்கம், விவசாயிகளை ஓநாய் என்று சித்தரிக்கிற இந்த அரசாங்கம் காதும் காதும் வைத்தது போல யாருக்கும் தெரியாமல் ஒரு ஜி. ஓ. மூலமாக கிட்டத்தட்ட எட்டு கோடி ரூபாயை ஸ்டீல் ரீ-ரோலிங் மில்ஸ் அதிபர்களுக்கு வரி விலக்கு செய்திருக்கிறது என்பதை என்னால் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. அப்படித்தான் கிராம அதிகாரிகளுக்கு அவசரப்பட்டு இந்த அரசு எடுத்த முடிவின் காரணமாக அவர்களுக்கு வேலை இல்லாமலேயே சம்பளம் தருவதால் ஆண்டு ஒன்றுக்கு 5 கோடி ரூபாய் சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பின்படி இந்த அரசு வழங்கிக்கொண்டிருக்கிறது. ஆக 13 கோடி ரூபாய் — நான் இங்கே எடுத்து காட்டிய இந்தக் கணக்கின்படியே— கூட நாம் வேண்டுமென்றே இழக்கிறோம். 8 கோடி ரூபாய் என்ன காரணத்தாலோ என்ன சலுகையாலோ நான் விவரிக்க விரும்பவில்லை. எப்படியே 8 கோடி ரூபாயை ஸ்டீல் ரீரோலிங் மில்லினுடைய வரியில் நீக்கம் செய்துவிட்டு, ரத்து செய்துவிட்டு கிராம அதிகாரிகளுக்கு 5 கோடிரூபாய் தந்து 13 கோடி ரூபாயை வேண்டுமென்றே இழந்துகொண்டிருக்கின்றது இந்த அரசு என்று குற்றஞ்சாட்டுவது எப்படித் தவறாகும் என்பதுதான் என்னுடைய கேள்வியாகும்.

அடுத்து பல விரையங்கள், வீணான விரையங்கள் எல்லாம் தவிர்க்கப்பட்டு இருந்தால் இப்படி வரிபோட வேண்டிய அவசியம் இருக்குமா, ஒரு பற்றாக்குறை வரவு செலவு திட்டத்தை அறிவிக்க வேண்டிய அவசியம் இருககுமா என்பதையும் எண்ணிப் பார்க்கவேண்டும்.

உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றது. தமிழுக்கு உலக அளவிலே மாநாடு நடைபெறவேண்டியது; நாம் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்று. அறிஞர் அண்ணா அவர்கள் அந்த மாநாட்டை நடத்தி மாப்புகழ் எய்தினார்கள். மாநிலமெங்கும், மாநிலம் என்று நான் குறிப்பிடுவது, உலகத்திலே உள்ள பல நாடுகளாலும் பாராட்டப்பெற்ற மாநாடாக நடைபெற்றது. இந்த ஆட்சியின் சார்பிலே உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றது. நான் அதிலே நடைபெற்ற [illegible] சில்லரை பிரச்சினை

களுக்குள் தலையிட விரும்பவில்லை. ஆனால் இந்த அவையிலே
வாக்களிக்கப்பட்டிருக்கிறது, உலகத் தமிழ் மாநாடு பற்றிய முழுக்
கணக்கையும் இந்த அவையில் வைப்பதாக இந்த அரசால் உறுதி
கூறப்பட்டது. இதுவரையில் அந்தக் கணக்குகள் இந்த அவையில்
வைக்கப்படவில்லை. உலகத் தமிழ் மாநாட்டின்போது பிரதமர்
திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களால் திறக்கப்
படுவதாக அறிவிக்கப்பட்ட தமிழ்த்தாயின் சிலை பின்னர் திரு
மதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் மேடையில் இருக்கிற
நேரத்திலேயே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களால்
திறந்துவைக்கப்பட்டது. அந்தத் தமிழ்த்தாயின் சிலை இப்போது
எங்கே இருக்கிறது, எப்படி தூசி படிந்து கிடக்கிறது, எவ்வளவு
கேவலமாக மோசமான முறையிலே அது மதுரையிலே ஏதோ
ஒரு மூலையிலே தள்ளப்பட்டிருக்கிறது என்ற செய்தியைப் பத்திரி
கையிலே படம் போட்டுக் காட்டினார்கள். நான் கழக ஏடுகளைச்
சொல்லவில்லை. எந்தக் கட்சியையும் சாராத ஏடுகளிலே அந்தக்
கவலை தரும் சம்பவங்களை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.
இப்போது பாரதி, விழா, பாரதிக்கு விழா கொண்டாட வேண்
டும். விடுதலைக்கவி பாரதி, புதுமைக்கவி பாரதி, எளிய நடையில்
அனைவரையும் கவிதை எழுதவைக்கிற ஆசான் பாரதி, அந்தப்
பாரதிக்கு நூற்றாண்டு விழாக் கொண்டாடுவதில் யாருக்கும்
கடுகளவு மறுப்பேனும் இருக்க முடியாது. ஆனால் பாரதிக்கு விழா
எடுக்கும் பெயரால் செலவிடப்பட்ட பணம் ஒழுங்காகச் செல
விடப்பட்டிருக்கிறதா? நான் கேள்விப்பட்ட வரையில் சொல்
கிறேன், நான் கேள்விப்பட்டது தவறு என்றால் திருத்துவதற்கு
சரியான புள்ளிவிவரங்களைத் தருவதற்கு இந்த அரசு கடமைப்
பட்டிருக்கிறது. எட்டயபுரத்திலே உள்ள பாரதி மணி மண்ட
பம் 1947 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் பேராசிரியர் கல்கி
கிருஷ்ணமூர்த்தி அவர்களாலும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச்
சேர்ந்த கே. பி. எஸ். நாராயணன் அவர்களாலும் அவர்கள்
எடுத்துக்கொண்ட முயற்சியால் 50 ஆயிரம் ரூபாய் செலவிலே
கட்டப்பட்ட மிக வலிவான கட்டடம், அந்தக் கட்டடத்திலே
ஒரு சிறிது கீரல்கூட இல்லாமல் இருந்ததை புதுப்பிப்பதாகக் கூறி
அதற்காக இரண்டரை லட்ச ரூபாய்க்கு கான்ட்ராக்ட் விடப்
பட்டிருக்கிறது. இந்தச் செய்தி மெய்யானால் அது வருந்தத்தக்க
ஒன்றா அல்லவா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். 50 ஆயி
ரம் ரூபாய் செலவிலே கட்டப்பட்ட கட்டடத்திற்கு, [illegible]
மேல்பூச்சு பூசுவதற்கு மாத்திரம் 2½ லட்சம் ரூபாய் செலவா
என்பது அதிர்ச்சிக்குரிய ஒரு கேள்வியாகும். மணிமண்டபக் கட்டத்
திற்குப் பின்புறம் 10 ஏக்கர் கொண்ட ஒரு வாழைத் தோட்
டம். அந்த நிலத்தை பொருட்காட்சி நடத்தவேண்டுமென்று
கூறி அதிகாரிகள் பெற்று அந்த இடத்தில் சரளை அடித்து சமப்
படுத்த அந்த வேலைக்கு மாத்திரம் 1 லட்சம் ரூபாய்க்கு கான்ட்
ராக்ட் விடப்பட்டிருக்கிறது. அப்படி கான்ட்ராக்ட் விடப்பட்ட
[illegible] லட்ச ரூபாயோடு கணக்குப் பார்த்தாலும் அதிலே கால்





பகுதிதான் நிலம் வாங்கப்பட்ட விலை. லட்ச ரூபாய்க்கு கான்ட்ராக்ட் சமப்படுத்த, நிலத்தில் விலை அதிலே கால் பகுதி, இதுவும் என் காதுக்கு வந்த செய்தி, தவறு என்றால் விளக்கம் அளித்தால் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். பொருட்காட்சி என்றால் மிகப் பெரிய பொருட்காட்சியல்ல, ஆறே அரங்குகள் மாத்திரம் கொண்ட ஒரு பொருட்காட்சி. அந்த ஆறு அரங்குகளையும்கட்ட சான்ட்ராக்ட் எவ்வளவு தெரியுமா? 2 லட்சரூபாய் சவுக்குத் தூண் நட்டு அதன்மேலே ஆஸ்பெஸ்டாஸ் தகடுகள்போட இரண்டு லட்ச ரூபாய்க்கு சான்ட்ராக்ட் விடப்பட்டிருக்கிறது. அந்த விழாவிற்கு பந்தல்போட 4 லட்ச ரூபாய்க்கு கான்ட்ராக்ட் விடப்பட்டிருக்கிறது. பெரிய மாநில மாநாடுகளையெல்லாம் இந்த இரண்டு கட்சிகளும் ஒன்றாக இருந்தபொழுதுகூட நடத்தியிருக்கிறோம். இப்பொழுது அதனுடைய அந்தக் காலத்துச் செலவினங்களோடு இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்ற பண மதிப்பீட்டை நாம் கணக்கிட்டுப் பார்த்தால்கூட இவ்வளவு செலவாக முடியாது. நான்கு இலட்சம் ரூபாய்க்கு பந்தல் போட மாத்திரம் கான்ட்ராக்ட் விடப்பட்டிருக்கிறது. அந்தப் பந்தலிலே மின் விளக்கு அலங்காரம் செய்ய மாத்திரம் ஏதோ செங்கோட்டையைச் சேர்ந்தவராம் ஒருவர். அவருக்கு இரண்டு இலட்சம் ரூபாய்க்கு கான்ட்ராக்ட் விடப்பட்டதாகத் தகவல். தகவல் சரியில்லை என்றால் மறுத்திடுவதற்குக் கடமை அரசுக்கு உண்டு.

(முற்பகல் 11-40)

எட்டயபுரத்தைச் சுற்றியுள்ள சுற்றுப்புறச் சாலைகள் ஒரு மாத காலத்திற்குக்கூட அலைகள் தாக்குப்பிடிக்கவில்லை. எல்லாம் பழுதடைந்து விட்டன. அந்தச் சாலைகளினுடைய பராமரிப்புக்கு 10 இலட்சம் ரூபாய்க்கு கான்ட்ராக்ட் விடப்பட்டிருக்கிறது.

மதுரையிலே கட்டியதைப்போல எட்டயபுரத்தில் எட்டு கழிப்பிடங்கள். இந்த எட்டு கழிப்பிடங்களைக் கட்ட நான்கு லட்சம் ரூபாய்க்கு கான்ட்ராக்ட். இதுவும் தவறு என்றால் மறுத்தால் நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். எனவே, பாரதி விழா தேவைதான். ஆனால் பாரதி விழா என்கின்ற பெயரால் இந்த அளவிற்கு வரிப்பணம் விரயம் ஆகலாமா என்பதை எண்ணிப் பார்த்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று. கீழ் மேட்டூர் நீர் மின்சாரத் திட்டத்திற்கு டெண்டர் ஷெட்யூல் எண். 1279-இன் படி வேலையினுடைய பெயர் சிவில் கட்டுமான வேலை ஒன்று முதல் நான்கு வரை நான்கு அணைக்கட்டுகள் மற்றும் பாலம் கட்டும் வேலை Foundation, weir pie மற்றும் பிரிட்ஜ் கட்டுதல் இவைகளுக்கு டெண்டர் கோரப்பட்டதில் டெண்டர் போட்டவர்கள் ஷெட்யூல்

ஏ-க்குப் போட்டவர்கள் குமார் அண்ட் கோ, பெங்களூர், ரவி
கன்ஸ்ரக்ஷன்ஸ், பெங்களூர், ஜி அண்ட் டி. கம்பெனி, பம்பாய்,
என்.பி.சி.சி. டெல்லி, (இந்திய அரசின் நிறுவனம்) ஐந்தாவது
ஹெச். சி.சி. லிமிடெட், பம்பாய், இதில் குறைவாக தொகை
கேட்டவர் குமார் அண்ட் கோ. மிக அதிகத் தொகை கேட்டவர்
ஹெச்.சி.சி. அதிகத் தொகை 30 இலட்சம் ரூபாய் அதிகம்.
இதிலே யாருக்குத் தரப்பட்டது என்றால் ஹெச்.சி.சி. லிமிடெட்
என்ற பம்பாய் கம்பெனிக்குத்தான் அந்த வேலை கொடுக்கப்
பட்டது.

ஷெட்யூல் பி—இரண்டாவது திட்டம். டெண்டர் போட்டவர்
கள் ராஜகோபால் அண்ட் கோ. மேட்டூர் அணை, ரவி கன்ஸ்ட்
ரக்ஷன், பெங்களூர், குமார் அண்ட் கோ. பெங்களூர், ஜி அண்ட்
டி. கம்பெனி, பம்பாய், என்.பி.சி.சி. டெல்லி, (இந்திய அரசு
நிறுவனம்) ஹெச். சி.சி. லிமிடெட், பம்பாய். இதில் குறைவான
தொகைக்கு கேட்டவர் ராஜகோபால் அண்ட் கோ. அதிகத்
தொகைக்கு கேட்ட ஹெச்.சி.சி. லிமிடெட், பம்பாய்க்குத்தான்
இது கொடுக்கப்பட்டது.

அதைப்போல முன்றாவது திட்டம். இ. ஆர். ரங்கசாமி
அண்ட் பிரதர்ஸ், ஈரோடு, ரவி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், பெங்களூர்,
குமார் அண்ட் கோ. பெங்களூர், ஜி. அண்ட். டி கம்பெனி, பம்
பாய், என்.பி.சி.சி. டெல்லி (இந்திய அரசு நிறுவனம்) ஆறு.
ஹெச்.சி.சி. பம்பாய். இதிலே குறைவான தொகைக்கு கேட்ட
ரங்கசாமி அண்ட் பிரதர்ஸ்க்கு தரப்படவில்லை. மிக அதிகத்
தொகைக்கு 46 இலட்சம் ரூபாய் அதிகம் கேட்ட ஹெச்.சி.சி.
கம்பெனி, பம்பாய்க்குத்தான் இந்த வேலை கொடுக்கப்பட்டிருக்
கிறது.

ஷெட்யூல் நான்காவது திட்டம். டெண்டர் போட்டவர்கள்
ரவி கன்ஸ்ரக்ஷன்ஸ், பெங்களூர், குமார் அண்ட் கோ, பெங்களூர்,
ஜி. அண்ட் டி. கம்பெனி, பம்பாய், என்.பி.சி.சி. டெல்லி, (இந்
திய அரசு நிறுவனம்) ஹெச்.சி.சி. லிமிடெட், பம்பாய். இதில்
குறைவான தொகை டெண்டர் ரவி கன்ஸ்ட்ரக்ஷன், பெங்களூர்,
அதிக தொகை கேட்டவர் ஹெச்.சி.சி. பம்பாய், சுமார் 30
இலட்சம் ரூபாய் அதிகம் கேட்டிருந்த ஹெச்சி.சி. கம்பெனிக்கு
இந்த வேலை கொடுக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட நான்கு ஷெட்யூலின்படி போடப்பட்ட டெண்ட
ரில் இ. ஆர். ரங்கசாமி அண்ட் பிரதர்ஸ், மொத்தத்தில் கேட்ட
தொகை 2,12,14,160 ரூபாய். ஹெச்.சி.சி. லிமிடெட், பம்பாய்
மொத்தத்தில் கேட்ட தொகை 2,58,43,370 ரூபாய். இதில்
யாருக்குக் கொடுக்க வேண்டும்? ரங்கசாமி அண்ட் பிரதர்ஸுக்குக்





கொடுத்திருக்க வேண்டும். இதிலே வித்தியாசம் 46,29,210 ரூபாய் அதிகமாக பம்பாய் ஹெச்.சி.சி. கம்பெனிக்கு இந்த டென்டர்கள் நாலும் தரப்பட்டிருக்கின்றன.

இதிலே இந்த ரங்கசாமி அனுபவம் இல்லாதவரா என்று கேட்டால், பவானிக்கும் குமாரபாளையத்திற்கும் இடையிலே மிகப் பெரிய பாலம் ஒன்றை 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே, கட்டி குறிப்பிட்ட காலத்தில் கட்டி முடித்துத் தந்தவர். இதைப்போல பல வேலைகளை எடுத்து நிறைவேற்றியிருக்கின்றார். இங்கே அவர்களுக்கு இது தரப்படவில்லை.

அதைப் போலவேதான், இன்னும் இரண்டு உதாரணங்களை மாத்திரம் சொல்கிறேன். பணம் எப்படி விரயமாக்கப்படுகிறது என்பதற்காக.

பஸ் சேசிஸ். உலக நாட்டினுடைய வங்கி, தமிழகத்தில் பல்லவன் போக்குவரத்துக் கழகத்துக்கு 555 பஸ் சேசிஸ்கள் வாங்க பண உதவி அளிக்க முன் வந்தது. இதிலே அசோக் லேலண்ட் நிறுவனம் ஒரு சேசிஸ் விலை 1,25,952 க்கும் டாட்டா என்ஜினியரிங் அண்டு லோகோமோட்டிவ் கம்பெனி லிமிடெட் நிறுவனம் 1,13,423 ரூபாய்க்கும் விநியோகிக்க முன்வந்தன. அதிலே டாட்டா இன்ஜினியரிங் நிறுவனத்தார் 3,422 ரூபாய்க்கு இதர உதிரி பாகங்களை வழங்கவும், முன் வந்தார்கள். அப்படிக் கணக்கிட்டுப் பார்த்தால் 1,10,000 க்கு டாட்டா என்ஜினியரிங் நிறுவனத்தில் சேசிஸ் கிடைக்கிறது. ஒரு சேஸிஸ். மொத்தம் 555 சேஸிஸ்களுக்கும் வெளிநாட்டில் தயாரிக்கப்படும் சேஸிஸ்களைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் பார்த்தால் அசோக் லேலண்டுக்கும், டாட்டா என்ஜினியரிங்கிற்கும் வித்தியாசம் 88,52,805. ஆக அசோக் லேலண்டுக்கு டாட்டா என்ஜினியரிங்கை விட்டுவிட்டு 88,52,805 ரூபாய் அதிகமாகத் தந்து 555 சேஸிஸ் வாங்கப்பட்டிருக்கின்றன. கேட்டால் ஒரு குழு போட்டோம்; பொறியியல் அதிகாரிகள் இருந்தார்கள். அவர்கள்தான் பரிந்துரை செய்தார்கள் என்று அரசு சொல்லும். ஆனால் அதே பரிந்துரைக் குழு டாடா இன்ஜினியரிங் சேசிஸ் தான் சிறந்தது என்று கூறி 1978 ஆம் ஆண்டு 282 சேஸிஸ்களும் 1979 ஆம் ஆண்டு 100 சேசிஸ்களும்; 1980 ஆம் ஆண்டு 180 சேசிஸ்களும் டாடாவிலிருந்து வாங்கப்பட்டிருக்கின்றன. சொல்லிவிடலாம் டாடா என்பது தமிழ்நாட்டிலே உள்ளது அல்ல. அசோக் லேலன்ட் தமிழ்நாட்டிலே உள்ளது என்று, ஆனால் இதை எதிர்க்கட்சிகள் எல்லாம் முன்பு எடுத்துக் காட்டிய பொழுது அரசாங்கத்தின் சார்பில் சொல்லப்பட்ட பதில் டாட்டா இன்ஜின் சேசிஸ் தான் உயர்ந்தவை. அசோக் லேலன்ட்டை விட, எனவே, அதை வாங்குகிறோம் என்று சொன்னார்கள். இப்பொழுது அசோக் லேலன்ட்டிலிருந்து ரூ. 88.52 இலட்சம்

அதிகமாக விலை வைத்து கொடுக்கிறநேரத்தில் டாட்டாவை விட்டு விட்டு , அசோக் லேலண்டில் வாங்க வேண்டிய அவசிய என்ன என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும் என்று நான் கேட்டு கொள்கிறேன். இப்படி பணம் பாழாகும் படலங்கள் நிறை நடைபெறுகிறது.

நான் ஒன்றைச் சொல்கின்றேன், முதலமைச்சர் வருத்தப்பட கூடாது. இந்த ரெட்ராஸ்பெக்டில் எபெக்ட் ஒரு பெரிய வியாதி யாகவே இந்த அரசாங்கத்திற்கு வந்துவிட்டது என்பது என்னு டைய ஆழ்ந்த, வருந்தத்தக்க ஒரு குறிப்பாகும். நம்முடைய முதலமைச்சருக்கு ஒரு கடைநிலை ஊழியர் அவருடைய பெயர் மாணிக்கம். இதுவரையிலே ஒரு கடைநிலை ஊழியரை, ஒரு அமைச்சர் விமானத்திலோ அல்லது டிரயினில் பர்ஸ்ட் கிளாஸ் சிலோ அழைத்துச் செல்வதற்கு அவர்களுக்கென்று பண ஒதுக்கீடு அரசாங்கம் செய்வது இல்லை. ஆனால், Go. No. 1317, Public Establishment IV) dated 3-3-1981ல் என்ன ஆர்டர் போட்டிருக்கிறார்கள் ? In relxaion of Rule 37 of Madras Trevelling Allowance Rules, Government permit Thiru S. Manickam basic servent to Chief Minister to perform the journeys by air while accopanying the Chief Minister on tours both within and outside Tamil Nadu state for administrative reasons with retrospective effect from the date of assumpion of present Ministry with effect from 9—6— 1980 என்று இப்படி ஒரு உத்தரவு போடப்படுகிறது. தேவைதானா? நான் முதலமைச்சராக இருந்தபொழுது, இப்படி பட்ட கடைநிலை ஊழியர்கள்கூட அல்ல, பாதுகாவலர்களாக வருகின்ற அதிகாரிகளை கூட என்னோடு விமானத்திலே வராமல் பெரும்பாலும் முதல் நாள் ரெயிலிலே டெல்லிக்குக்கூட சென்று விடுவார்கள். பிறகு விமானத்திலே நாங்கள் டெல்லிக்குச் செல் வோம். ஆனால், இங்கே மாணிக்கம் என்பவருக்காக, ஒரு ரூலே தளர்த்தப்பட்டு ஒரு கடைநிலை ஊழியர் விமானத்திலே வரக் கூடாதா, என்றால் அந்தக் கேள்விக்குப் பதில், அளிக்கிற நேரத் தில் சமதர்மத்தின் அடிப்படையில் நான் முழுக்க, முழுக்க அதை வரவேற்கிறேன். ஆனால், அப்படி தளர்த்திய, அன்று முதல் அது பலனுக்கு வரும் பயனுக்கு வரும் என்று சொல்லாமல் அதையும் 1980 ஆம் ஆண்டு, இந்த ஆட்சி என்றைக்குக் கொலுவுக்கு வந்ததோ அன்று முதல் அதற்கும் ரெட்ராஸ் பெக்டிவ் எபெக்ட். தேவைதானா? எல்லாவற்றிலும் ரெட்ராஸ் பெக்டிவ் எபெக்ட், ஸ்டீல் ரீ ரோலிங் மில்லுக்கு வரியை குறைப் பது என்றால், அதற்கு 6 ஆண்டுகள் ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட், முதல் அமைச்சர் வீட்டுக்கு வாடகை உயர்த்துவது என்றால் அதற்கு 2 அல்லது 3 ஆண்டுக்காலம் ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் மாணிக்கத்தினுடைய பயணச் செலவு ஒரு பேசிக் சர்வன்டுடைய பயணச் செலவு என்றால், அதற்கும் ஒரு ஆண்டு, இரண்டு ஆண்டுகள் ரெட்ராஸ் பெக்டிவ் எபெக்ட் தேவைதானா என் பதை நான் மெத்தப் பணிவன்போடு இந்த அரசைப் பார்த்துக் கேட்க விரும்புகிறேன்.





இப்படிக் குறைகளைச் சொன்னால் கோபம் வருகிறது. கோபம் வந்தால் வழக்குப் போடுகிறார்கள். போட்ட வழக்கு போதாது என்று இன்னும் என்ன வழக்கு போடலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். இவன் ஒருவன் இருப் பதனாலே இவனை அழித்து விட்டால் ? என்கின்ற எண்ணம் நமமுடைய முதலமைச்ச அவர்களுக்கு ஏற்பட்டிருப்பதை போன்ற ஒரு சாயல் எனக்குத் தெரியாமல் இல்லை. அந்தக் காரணத்தாலேதான் அவர்கள் 1977 ஆம் ஆண்டிலேயிருந்து திருமதி இந்திரா காந்தி வந்த நேரத்திலே , ஜனநாயக ரீதியிலே பிடிக்கப்பட்ட கறுப்புக் கொடி நிகழ்ச்சியிலிருந்து வழக்குப் போடப்பட்டு, என்னை, பேராசிரியரை மற்றுமுள்ள கழகத்தினுடைய தலைவர்களை, நீதிமன்றத்தி னுடைய நெடிய படிக்கட்டுகளிலே ஏற்றி, ஏற்றி, இறக்கி, 400 சாட்சியங்கள் விசாரிக்கப்பட வேண்டிய சூழ்நிலையில் நாங்கள் இந்திரா காந்தி அம்மையாரைக் கொலை செய்ய முயற்சித்தோம், சதி செய்கின்றோம் என்கின்ற ஆளவுக்கு வழக்கு. அந்த ஒரு சதி வழக்கிலே தப்பித்துக் கொண்டால் என்ன செய்வது என்பதற்காக மற்றொரு சதி வழக்கு பின்னப்படுவதற்கான முயற்சிகள் எல்லாம் நடைபெறு வதாக நான் கேள்விப்படுகிறேன். அதிலே, என்னை எப்படி சேர்க்கலாம் என்று இப்படிப்பட்ட காரியங்கள் எல்லாம் நடைபெறுவதாகக் கேள்விப்படுகிறேன்.

இந்தக் குறைகளை எடுத்துச் சொல்கிற காரணத் தால், இப்படிப்பட்ட செயல்கள் வருமானால், அவைகளைச் சந்திக்க தனிப்பட்ட முறையில் நானும் பொதுவாக திராவிட முன்னேற்றக் கழகமும் தயாராக இருக்கிறது என்பதை மாத்திரம் எடுத்துச் சொல்லி அமைகிறேன்.

[முற்பகல் 11.50]

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே , மாண்புமிகு எதிர் கட்சித் தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்கள், அவருடைய பொறுப்புமிக்க உரையில், அவருக்கே உரித்தான பாணியில் அவர் என்னென்ன எண்ணுகின்றாரோ அதை எல்லாம் சொன் னார்கள். அவைகளுக்கு எல்லாம் இறுதியிலே பதில் கிடைக்கும் என்ற காரணத்தால் நாங்கள் அவ்வப்போது எதுவும் சொல்ல

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1981 மார்ச் 6

மல் இருக்கின்றோம். ஆனால், இறுதியில் அவரை ஒழித்து
விட்டால்தான் ஏதோ எனக்கு என்று கூட சொன்னார் என்று
நான் கருதுகிறேன் (—) அப்படி ஒரு எண்ணம் இருப்பதாக
அவர்கள் குறிப்பிட்டு இருட்டார்களேயானால் அது உண்மைக்கு
புறம்பானது என்றும், அப்படிப்பட்ட எண்ணம் எனக்கு இது
வரையில் இல்லை, இனியும் வராது என்றும் தயவு செய்து
தெரிந்து கொள்ள வேண்டும். அவர் இருப்பதால் எனக்கு
லாபமே தவிர, நஷ்டம் எதுவும் இல்லை. ஏனெனில், அவ்வப்
போது அவர் சில காரியங்களைச் சொல்லும்போது எனக்குப்
பதில்சொல்வதற்கோ அல்லது அதை எதிர்த்து செயல்படுவதற்
கோ அவசியம் ஏற்படும்போது நான் கொண்ட கொள்கைக்கும்
என்னுடைய பதவிக்கும், மக்கள் நம்பிக்கைக்கும் ஏற்றவாறு
பயனாக அமைந்து விடுகிறது.

ஆகவே, இதுவரை என்னை அழிக்க நினைத்தவர்களின்
எண்ணத்தின் விளைவாக எனக்கு மக்களிடம் அனுதாபமும்
வலிவும் ஏற்பட்டிருக்கிறதே தவிர, எனக்கு பலவீனம்
ஏற்படுத்த முடியவில்லை. ஆகவே இன்றையதினம் எந்த
வழக்கையும் தேடி அலைந்து, உருவாக்கி, யார் மேலும்
பழி சுமத்தவேண்டிய அவசியம் எனக்கும் இல்லை, என்
கட்சிக்கும் இல்லை. என்னுடைய அமைச்சரவைக்கும்
இல்லை என்பதை திட்டவட்டமாக சொல்ல விரும்புகிறேன்
இருக்கின்ற சாட்சியங்கள் படி அங்கே வழக்குகள் நடைபெறு
கின்றதே தவிர, ஒரே நீதிபதியின் முன் 9 வழக்குகளை என்
மீது போட்டார்கள். அதைப்போல நாங்கள் போடவில்லை
(குறுக்கீடு) போட்டிருக்கிறார்கள். ஒருவேளை உங்களுக்கு
தெரியாமல் செய்திருப்பார்கள்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி இதைச் சொல்லி
வருகிறார். அங்கங்கே பல கூட்டங்களில் முதலமைச்
சராக இருக்கிற என்னுடைய அருமை நண்பர் எம். ஜி.
ஆர். அவர்கள், பல கூட்டங்களில் அவர் எதிர்கட்சியில்
இருந்தபோது, அந்தந்த ஊர் எம்.எல்.ஏ.க்களைப் பற்றி
பேசியதன் காரணமாக அவர்கள் போட்ட மான நஷ்ட
வழக்குகளை எல்லாம் சேர்த்து, அரசு போட்டதாக அவர்
கணக்கிடுவது தவறு.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு
சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே தலை இல்லாமல்
வால் ஆடாது. ஆகவே எது நடந்தாலும் ஒரு முதலமைச்சர்
இது சரியில்லை என்று தெரிந்து வேண்டாம் என்றால் அது
நடக்காது என்பது எனக்குத் தெரியும். ஆனால் அடிப்படையில்
ஏதாவது காரணம் இருந்தால் தான் வழக்குக்கள் வெளிவரு



1982 மார்ச் 6] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

கின்றதே தவிர விருப்பம் இருந்தால்தான் வருமே தவிர
வேறு அல்ல. அந்த விருப்பம் இந்த அரசுக்கு இல்லை என்
பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று 8–3–1982 காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும். விவாதம் நீளுமானால் பேரவை மாலையிலும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 11.52 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 4. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

118. தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனத்தின் 1979–80 ஆம் ஆண்டிற்கான 15–வது ஆண்டறிக்கை (தமிழ், ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு நிறுவனச்சட்டத்தின்) மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

119. சென்னை மாநகர அழகிரி நகர்ப் பகுதிக்குரிய விரிவான மேம்பாட்டுத் திட்டத்தையும் அதன் அனைத்து இணைப்புகளையும் பொதுமக்கள் பார்வையிடுதல் குறித்து வீட்டு வசதி நகர்புற வளர்ச்சித்துறையின் 22–12—1980–ஆம் தேதியிடப் பெற்ற 1,600 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு தமிழ்நாடு [1971–ஆம் ஆண்டு நகர் நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

120. தமிழ்நாடு 1981–ஆம் ஆண்டு தொழில் நிர்வாகச் சட்டத்தினை நடைமுறைக்குக் கொண்டுவருவது குறித்து 24–12–1981–ஆம் தேதியிடப்பெற்ற தொழிலாளர்—வேலை

வாய்ப்புத் துறையின் 2813–ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1981–ஆம் ஆண்டு தொழில் நிர்வாகச் (தொழிலாளர்களுக்கு நிரந்தரத்தகுதி அளித்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம்—46/1981) 10(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

121. தமிழ்நாடு 1981–ஆம் ஆண்டு பிழைப்பு ஊதியச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவருவது குறித்து 29–12–1981–ஆம் தேதியிடப் பெற்ற தொழிலாளர்—வேலை வாய்ப்புத் துறையின் 2838–ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1981–ஆம் ஆண்டு பிழைப்பூதியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1981) 13(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்

எதுவுமில்லை.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

---

திங்கட்கிழமை, 1982 மார்ச் 8.

துன்மதி, மாசி 24, திருவள்ளுவராண்டு 2013.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

ஏரினும் நன்றால் எருஇடுதல் கட்டபின்
நீரினும் நன்றுஅதன் காப்பு

ஏர் உழுதலை விட எரு இடுதல் நல்லது. இந்த இரண்டும் செய்து களை நீக்கிய பிறகு நீர் பாய்ச்சுவதை விட காவல் காப்பது நல்லது.

### 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### தூத்துக்குடியில் அகர் அகர் தொழிற்சாலை நிறுவும் திட்டம்

*வினா எண் 401—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடியில் அரசு தொடங்குவதாக இருந்த அகர் அகர் தயாரிக்கும் முன்னோடித் திட்டம் கைவிடப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில் அதற்கான காரணம் யாது ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(ஆ) அகர் அகர் தொழிற்சாலை முன்னோடித் திட்டமாக அரசால் நிறுவப்படுவதற்குள், பல தனியார் நிறுவனங்கள் இராமநாதபுரம் மாவட்ட கடற்கரைப் பகுதியில் கிடைக்கும் கடற்பாசிகளின் மூலம் அகர் அகர் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை நிறுவியுள்ளன. இந்நிலையில் முன்னோடித் திட்டமாக மீன் துறை நிறுவ முற்படுவதால் அரசிற்கு நட்டமேற்படுமென முன்கூட்டியே உணரப்பட்டதால் இத் திட்டம் கைவிடப்பட்டது. இதற்காக வாங்கியுள்ள சாதனங்கள் மத்திய கடல் மீன் வள ஆராய்ச்சி நிறுவனத்திற்கு [illegible] ஆராய்ச்சிக்காக வழங்கப்பட்டன.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அகர் அகர் தயாரிப்புத் திட்டம் முன்னாலே நம்முடைய முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்களால் கடல் பாசியிலிருந்து அல்வா தயாரிக்கும் திட்டமாக அறிவிக்கப்பட்டது. இதை மூலப்பொருளாகக்கொண்டு, தனியார் துறையில் ஐஸ்கிரீம், ஜல்லி போன்ற பொருள்களைத் தயாரித்து, அதை லாப கரமான முறையில் நடத்தி வருகிறார்கள். அரசாங்கம் இதற்காக நிதி ஒதுக்கி, அதற்குத் தேவையான சாதனங்கள் வாங்கி, பணியாளர்கள் போட்ட பிறகு அதைக் கைவிடுவதற்கான காரணம் என்ன? தனியார்கள் ஆரம்பித்து இருக்கிறார்கள் என்பதால் அரசாங்கம் அத் திட்டத்தைக் கைவிடுவது முறை யாக இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 3 டன் உற்பத்தித் திறன் உள்ள இயந்திரங்களை வைத்து, இந்த அகர் அகர் தயாரிக்கும் திட்டம் 1965-லேயே தீட்டப்பட்டது தான் என்றாலும், தூத்துக் குடி, கோவில்பட்டி, மதுரை ஆகிய இடங்களில் தனியார் துறையில் 70 டன் திறன் உள்ள அகர் அகர் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளைத் துவங்கி இருப்பதால், தனியார் துறையோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது அரசுத் துறை யில் செலவு நிலைமை அதிகமாக ஆகும் என்பதால், அது துவக்கப்படாமல் இருந்து வந்தது. அப்படித் துவங்கினாலும் நஷ்டம் ஏற்படும் என்பதால், துவக்கி நஷ்டம் ஏற்படுவதை விட மத்திய அரசின் ஆராய்ச்சி நிலையம் அதை வாங்கிய விலைக்கே பெற்றுக்கொள்ள முன்வந்த காரணத்தால், அதற்கு அது விற்கப்பட்டு விட்டது. ஆகவே, இதனால் நஷ்டம் எதுவும் இல்லை. தனியார் இதை நடத்தி லாபம் அடையும் சூழ்நிலை இருக்குமானால், அரசு இன்றைக்கு அதைச் செய்யவேண்டும் என்பது இல்லை. தனியாருக்கே விட்டு விடலாம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குக் கிடைத்த தகவல், இதற்கென நிதி ஒதுக்கீடு, பணியாளர்கள் நிய மித்தல், இயந்திரங்கள் வாங்குவதல் போன்றவை செய்தபின்னாலும், அந்தத் தொழிற்சாலை அதைத் தயாரிக்க முடியாததற்குக் காரணம், அதற்குத் சரியான பாய்லர் வாங்காதது என்றும், அதனால் தான் அது கைவிடப்பட்டது என்றும் சொல்லப்படுகிறது. இந்தப் பொறுப்பு யாரிடத்தில் ஒப்படைக்கப் பட்டது. இதைச் சரியாக வாங்கியிருந்தால் அது நிச்சயமாக லாபகரமாக இயங்கி இருக்கும் அல்லவா? இதற்குப் பொறுப்பானவர்கள் யார் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தூத்துக்குடியில் துவங்குவதாக இருந்ததால் அதற்கான இயந்திரங்கள் வாங் கப்பட்டன. ஆரம்பத்திலேயே துவங்கியிருந்தால் அது லாபகரமாக நடந்த





இருக்கலாம் என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். அதற்கான காரணங்கள் என்று அவர் சொன்னது பற்றிய விளக்கக்குறிப்புகள் என்னிடத் தில் இல்லை. 1965-லே வாங்கிய இயந்திரங்களுக்கு யார் பொறுப்பு என்று இப்போது 1982-லே கண்டுபிடிக்க ஆரம்பித்தால், அதற்காக ஆகும் செலவுத் தொகை, இயந்திரங்கள் வாங்குவதற்கு ஆன தொகைக்கு வந்து விடும். அப் போதே இதை ஆரம்பித்தால் நஷ்டம் வரும் என்று எண்ணி கைவிட்டு விட்டார்கள். இயந்திரங்கள் வாங்கியிருந்தாலும், அதனால் நஷ்டம் இல்லை. அந்த இயந்திரங்கள் வாங்கிய விலைக்கே விற்கப்பட்டு விட்டன.

## பெரிய தாளையிலுள்ள மீனவர் குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு வழங்கும் திட்டம்

*வினா எண் 402—திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தான்குளம் தொகுதி பெரிய தாளையில் மீனவர்களுக்கு கட்டிக்கொடுக்கப்பட்டு இருக்கும் குடியிருப்பு வீடுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்படாமல் இருப்பது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது மின் இணைப்பு கொடுக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(ஆ) மீனவர்களுக்கு இலவச வீடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் குடி யிருப்பு வீடுகளுக்கு மின் இணைப்பு அமைக்க வழி வகைகள் இடையாது. வீடுகளுக்கான மின் இணைப்பை குடியிருப்பவர்களே அவர்களது சொந்த செலவில் செய்து கொள்கின்றனர்.

திரு. எஸ். என். இராமசாமி : தலைவரவர்களே, இந்த மீனவர் குடியிருப்பு கட்டப்பட்டு சுமார் 3 ஆண்டுகள் ஆகியும் இதுவரையில் இந்த குடியிருப்புக்கு மின் இணைப்பு கொடுக்கப்படவில்லை. நான் சென்ற ஆண்டு இந்தக் கேள்வியைக் கேட்டபோது மாண்புமிகு அமைச்சரவர்கள் உடனடியாக மின் இணைப்பு கொடுக்க ஏற்பாடு செய்யப்படும் என்று சொன்னார்கள். ஆனால் இதுவரையில் கொடுக்கப்படவில்லை. இனிமேலாவது உடனடியாக மின் இணைப்புக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்த குடியிருப்புப் பகுதிகளுக்கு தெருவிளக்கு போன்றவற்றிற்குத்தான் மின்சாரம் கொண்டுவர ஊராட்சி ஒன்றியங்கள் அல்லது மின்சாரத் துறையினர் முயற்சி செய்வார்கள். அந்தந்த குடியிருப்புகளுக்கு மின்சாரம் பெறுவதற்கு வீடுகளில் குடியிருப்பவர்கள்தான் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

திரு. எஸ். என். இராமசாமி : தலைவரவர்களே, அங்கே எக்ஸிகியூட்டிவ்
என்ஜினீயரை இதுசம்பந்தமாக சென்று பார்த்தோம். உடனடியாக சப்ளை
தருகிறோம் என்று சொன்னார்கள். இதுவரையிலும் சப்ளை கிடைக்காத
தால் தான் அரசை அணுகுகிறோம். ஆகையால் உடனடியாக இந்த குடி
யிருப்புகளுக்கு மின் இணைப்பு கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அந்த
குடியிருப்புப் பகுதிகளுக்கு மின்சாரம் போகாமல் இருந்தால் அதற்கு என்ன
காரணம் என்று ஆராய்ந்து, அதில் இருக்கிற குறைகளை நீக்குவதற்கு வழி
வகை இருக்கிறதா என்று பார்த்து, உடனடியாக நடவடிக்கை எடுக்கலாம்.
கூடியவரையில் எல்லா பகுதிகளுக்கும் மின்சாரத்தைக் கொண்டு சென்று
தெருவிளக்கு வசதி செய்துதரவேண்டுமென்று முயற்சி செய்கிறோம், ஊராட்சி
ஒன்றியங்களும் இந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றன, மின்சாரத் துறையும்
முயற்சி செய்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற இடத்
திற்கு என்ன காரணத்தால் மின்சாரம் செல்லவில்லை என்பதை ஆராய்ந்து
அறிந்து, விரைவில் மின்சாரம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. தி. கா. நல்லப்பன் : தலைவரவர்களே, மீன்பிடிப்பவர்கள் குடியிருக்
கின்ற பகுதிகள் ஆனாலும் அல்லது பிற்பட்ட வகுப்பினர் குடியிருக்கும் பகுதி
கள் ஆனாலும் அங்கே மின் இணைப்பு கொடுப்பதில் மிகுந்த காலதாமதம்
ஏற்படுகிறது என்பதை அரசு அறியுமா? அந்த நிலையை மாற்ற அரசு
முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, வேண்டு
கோள்கள் பல்வேறு இடங்களிலிருந்து வருகின்றன. அதனுடைய அவசியம்,
அதனுடைய நியாயம், அதனுடைய தன்மைகளை ஒட்டி மின்சாரத் துறை
யினர் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். சில குறிப்பிட்ட
பகுதிகளில் மின் இணைப்பு கொடுப்பதற்காக வசதி வாய்ப்புகள் இருந்து,
வேறு காரணங்களால் காலதாமதம் ஏற்படுமானால் அதைத் தவிர்க்க அரசு
முயற்சிகளை மேற்கொள்ளும்.



### 1982 ஆம் ஆண்டு ஜனவரியில் அரசின் இருப்பிலிருந்த உணவுப் பொருள்களின் அளவு.

*வினா எண் 403.—திரு. என். வரதராஜன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1982 ஆம் ஆண்டு ஜனவரியில் தமிழக அரசின் இருப்பில் உள்ள உணவுப் பொருள்களின் அளவு என்ன?

(ஆ) ஒவ்வொரு மாதமும் மத்திய அரசிடமிருந்து பெறும் கோட்டா எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (ஆ) விவர அறிக்கை* ஒன்று அவையின் முன்வைக்கப்பட்டுள்ளது.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கொடுத்திருக்கிற அறிக்கையைப் படித்துப் பார்த்ததிலிருந்து 1980 ஏப்ரல் மாதத்திலிருந்து 1982 பிப்ரவரி மாதம் முடிய உள்ள காலத்தில் மத்திய சர்க்கார் நமக்கு ஒதுக்கீடு செய்திருப்பதில்—கூட்டிக் கழித்துப் பார்த்தால்—மூன்றே கால் இலட்சம் டன் கிடைக்காத நிலைமை அல்லது கொண்டுவர முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஒதுக்கீடு என்பது வெறும் பேப்பர் விவரமாகத்தான் இருக்கிறது மத்திய சர்க்காரைப் பொறுத்தவரையில். ஏற்கெனவே, 'வாகன்' சப்ளை இல்லை என்று அமைச்சரவர்கள் முன்னாலே பதில் சொல்லியிருக்கிறார்கள். இரண்டு வருஷங்கள் ஆன பின்னாலும் வாகன் சப்ளை பிரச்சனையைத் தீர்க்க முடியவில்லையா மத்திய அரசால்? வாகன் சப்ளை இல்லாததால் மத்திய சர்க்கார் ஒதுக்கீடு செய்ததில் மூன்றே கால் இலட்சம் டன் கொண்டுவர முடியாமல் இருக்கிறதே, இந்த மூன்றேகால் இலட்சம் டன் போனது போனதுதானா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மத்திய அரசு நமக்கு மாதந்தோறும் ஒதுக்கீடு செய்கிறது. அவை முழுமையாக இங்கே வந்துசேரவில்லை என்று புள்ளிவிவரம் காட்டுகிறது. அந்த ஒதுக்கீடு முழுவதும் இங்கே வந்துசேருவதற்கு பலதடவை நாங்கள் மத்திய அரசையும் இரயில்வே துறையினரையும் அணுகியிருக்கிறோம். இரயில்வே துறையினரைக் கேட்டால் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு வாகன்களை நாங்கள் மத்திய உணவுத் துறைக்கு ஒதுக்கிவிடுகிறோம். அவர்கள்தான் அந்த வாகன்களை தேவைக்கு ஏற்ப, கேரளம், மேற்கு வங்காளம் இன்னும் மற்றைய பற்றாக்குறை மாநிலங்களுக்கு உணவு தானியங்களை எடுத்துச்செல்ல பிரித்துக் கொடுக்கின்ற நிலை தற்போது இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள்.

* 633 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1982 மார்ச் 8

இதனால் ஏற்படுகின்ற நிலைமைகளை பல தடவை மாநாடுகளில் எடுத்துச்
சொல்லி வற்புறுத்தி யிருக்கிறோம். ராவ் பீரேந்திரசிங் அவர்களிடமும்
சொல்லியிருக்கிறோம். 60,000 டன் ஒதுக்கீடு செய்தாலும் 20 ஆயிரத்துச்
சொச்சம்தான் வாகன் பற்றாக்குறையினால் கொண்டுவர முடிந்திருக்கிறது.
அதன் விளைவாகத்தான் பல கஷ்டங்களை அனுபவிக்க வேண்டி வந்திருக்
கிறது.

(முற்பகல் 9-10)

அந்தக் காரணத்தினால்தான் நாமே சென்ற ஆண்டு அதை வெளி மார்க்
கெட்டிலே வாங்கவேண்டிய அவசியம் வந்தது, வறட்சி காலத்தைப் பொறுத்த
வரையிலும். ஆகவே மத்திய அரசிடம் இது குறித்து நாம் வலியுறுத்தி
வந்தாலும் கூட அவர்கள் ஒதுக்குகின்ற அளவுக்கு நமக்குக் கிடைக்காமல்
இருப்பதற்குக் காரணம் வேகன்கள் போதிய அளவுக்கு இல்லை என்பதுதான்.
ஆகவே வேகன்கள் போதிய அளவுக்கு கிடைக்கவில்லை என்றும் அவர்களுக்கு
கிடைத்த வேகன்களை பல்வேறு இடங்களுக்கும் அனுப்புவதாகவும் அவர்கள்
சமாதானம் சொல்லுகிறார்கள். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
குறிப்பிட்டதுபோன்று நமக்கு ஒதுக்கப்பட்ட அளவு நமக்குக் கிடைக்க
வில்லை. அது போனது போனதுதான். ஒரு மாதத்திலே ஒதுக்கீடு
செய்ததை அடுத்த மாதத்திலே தாருங்கள் என்று கேட்டாலும் அவ்வாறு
கொடுப்பதில்லை என்றும் போனமாதம் போய்விட்டது என்றும்தான் அவர்கள்
கொள்கிறார்கள்.

திரு. கோவைத்தம்பி : தலைவரவர்களே, அரிசி, கோதுமை, பருப்பு
போன்ற பொருட்களைத் தமிழகத்தில் இறக்குமதி செய்வதற்கு தமிழக அரசு
தனியாக ஏதாவது வாகன வசதிகள் செய்துகொள்ள ஏற்பாடு செய்யப்படுமா?
மத்திய அரசிடம் அனுமதி பெற்று வேகன்கள் நிரம்பப்பெற்ற ஒரு ட்ரையினை
வாடகைக்கோ அல்லது விலைக்கோ வாங்கி தமிழ்நாட்டிற்குத் தேவையான
அத்தனை அரிசி கோதுமையையும் கொள்முதல் செய்வதற்கு அரசு முன்
வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அது
சாத்தியமான ஒன்றல்ல. அதனை மத்திய அரசின் இரயில்வே இலாக்கா தான்
கண்காணித்து வருகின்றது. அந்த இரயில்வே இலாக்காவினர் உணவு வழங்கு
துறையினருக்கு அந்த வாய்ப்பு வசதிகளை அளித்து வருகிறார்கள்.

சென்ற ஆண்டு கூட நாம் பஞ்சாபிலே 10 ஆயிரம் டன் உணவுப்பொருள்
வாணிபக் கழகத்தின் மூலமாக வாங்கி வைத்திருந்தும் கூட அதைக் கொண்டு
வர முடியாமல் போனதற்குக் காரணம் வேகன்கள் இல்லாததுதான். அந்த



1982 மார்ச் 8]

நிலையில் அட்வான்ஸைக் கூட திருப்பித் தரவேண்டிய கஷ்டம் கூட ஏற்
பட்டது. ஆனால் நமக்கு வேண்டிய வேகன்களை நாமே வைத்துக்கொள்வது
என்பதைப் பொறுத்தவரையிலே இப்போது இருக்கின்ற சட்டதிட்டங்கள்,
விதிமுறைகளின்படி அதற்கு வழிவகை இல்லை.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவரவர்களே, நெல் அரிசியைப் பொறுத்த
வரையிலே கேரளாவைப்போல நம்முடைய மாநிலம் பற்றாக்குறை மாநிலம்
அல்ல. தமிழ் நாட்டிலே கிடைக்கக்கூடிய நெல், அரிசி ஆகியவற்றைச் சரி
யாகப் ப்ரொக்யூர் செய்தாலே நமக்குப் பற்றாக்குறை ஏற்படாது. மத்திய
அரசினை நம்பி இருக்கவேண்டிய அவசியமும் இல்லை. இப்போது இருக்
கின்ற லெவி பிரகாரம் சரியான அளவுக்கு நெல் வரவில்லை. இது சம்பந்த
மாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகவும் இடதுசாரி கம்யூனிஸ்ட்
கட்சியின் சார்பாகவும் கோரிக்கை கொடுத்திருக்கிறோம்.

திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சி
என்பதையும் சேர்த்துச் சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : கம்யூனிஸ்ட் கட்சி என்று சொல்லி விடலாம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவரவர்களே, சரி கம்யூனிஸ்ட் கட்சி
யினரும் திராவிட முன்னேற்றக் கழகத்ினரும் கோரிக்கை கொடுத்திருக்கி
றோம் . ,

திரு. ரா. உமாநாத் .சிபிஐ, சிபிஎம் என்று சொல்லி விடலாம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவரவர்களே, இதுவரை * *
என்று நினைத்தேன்

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, கம்யூனிஸ்ட் கட்சியினை*
* * மாதிரி நினைக்கிறார்கள் இது சரியா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த வார்த்தைகள் அவைக் குறிப்
பிலே இருந்து நீக்கப் பெறுகின்றன.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவரவர்களே, அவ்வாறு மார்க்சிஸ்ட்
கம்யூனிஸ்ட் கட்சியினரும், திராவிட முன்னேற்றக் கழகத்தினரும் வேண்டு
கோள் கொடுத்திருக்கிறோம். தனியார்கள் தஞ்சை, திருச்சி போன்ற

---

(*) மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்
பெற்றன.

[1982 மார்ச் 8

மாவட்டங்களிலிருந்து நெல்லை வாங்குவது போலவே கூட்டுறவுச் சங்கங்களும்
வாங்கினால் அதிகமான அளவு அரசாங்கத்திற்கும், நெல்லும், அரிசியும்
கிடைக்கும். தமிழ் நாட்டிலே இருக்கின்ற பற்றாக்குறையும் போய்விடும்
என்று கோரிக்கை வைத்திருக்கிறோமே, அது சம்பந்தமாக அரசு ஏதாவது
முடிவு எடுத்ததா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, கூடுமான
வரையிலே லெவி முறையிலே நெல் கொள்முதல் செய்கின்ற முறையினை நாம்
மேற்கொண்டு வருகிறோம். சென்ற ஆண்டு கூட வறட்சி வந்த நோத்திலே
கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக திறந்த வெளிச் சந்தையிலே நெல், அரிசி
வாங்குவதற்குரிய ஏற்பாடு செய்யப்பட்டு ஓரளவுக்கு அதன் மூலமாக வரு
விக்க ஏற்பாடு செய்தோம். இந்த ஆண்டு லெவி முறையாக வசூலித்து
கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக அதைக் கொடுக்க வேண்டும் என்ற ஒரு
எண்ணம் இருந்தாலும் கூட வெளிச்சந்தையின் விலை இந்தப் போட்டியின்
காரணமாக வளர்ந்துவிடும் என்ற காரணத்தாலே அது சிறிது காலம் நிறுத்தி
வைக்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தது போன்று
எதிர்க்கட்சியினரும் கம்யூனிஸ்ட் கட்சியினரும் சேர்ந்து கொடுத்த கோரிக்கைக்
கிணங்கவும், அரசே இதுபற்றி உணர்ந்திருப்பதற்கிணங்கவும் கூட்டுறவுத்
துறையின் மூலமாகவும் வெளிச்சந்தையிலே எவ்வளவுக்குப் போகிறதோ
அதை வாங்கி வைத்து, ஓரளவுக்கு வெளிச்சந்தையிலே அதிகமாகப் போகாத
அளவுக்குக் கட்டுப்படுத்துவதற்கு, கூட்டுறவுச் சங்கங்கள் வெளிச்சந்தையிலே
விற்பதற்கு வாய்ப்பு ஏற்படும் என்று சொல்லி அதற்கான நடவடிக்கைகளை
இந்த அரசு துரிதமாக எடுத்துக் கொண்டிருக்கின்றது. விரைவிலே அது
நடைமுறைக்கு வரும்.

**திரு. மி. வின்சென்ட் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுதோறும்
மத்திய அரசு நமக்குத் தரும் உணவின் அளவு 1981-82-லே கூடியுள்ளதா ?
அல்லது குறைந்துள்ளதா ? நமக்குத் தரவேண்டிய அரிசியை வேகன்கள்
தராமல் தடுப்பது வேதனைக்குரியது என்பதை மாநில அரசு மத்திய அரசிடம்
முறையிடுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, சென்ற
ஆண்டு, வறட்சி ஆண்டைப் பொறுத்தவரையில் ஓரளவுக்கு ஒதுக்கீடு
செய்ததை விடக் கொஞ்சம் கூடுதலாக வந்தது. ஒதுக்கீடு செய்ததைப்
பொறுத்தவரையில் எவ்வளவு ஒதுக்கீடு செய்யப் பெற்றதோ அவ்வளவும்
வந்திருக்கிறது. அப்போதெல்லாம் சற்று கூடுதலாக வந்தது. ஆனால் இப்
பொழுது ஓரளவிற்கு குறைந்து வந்துக் கொண்டிருக்கிறது. நிலைமையை
ஓரளவு சமாளிக்கக்கூடிய அளவுக்கு இங்கேயும் கொள்முதல் செய்து இருப்
பிலே வைத்திருப்பதன் காரணமாக நிலைமை சமாளிக்கப்பட்டு வருகிறது.



1982 மார்ச் 8]

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற விவர குறிப்பிலே, ஜனவரி மாதத்தினுடைய கையிருப்பைப்பற்றிய குறிப்புதான் இருக்கிறது. பிப்ரவரி மாதத்தின் கையிருப்பு பற்றிய விவரம் இல்லை. அரசாங்கத்தின் இந்த உணவு கையிருப்புச் சம்பந்தமாக பல்வேறு சமயங்களில் கேள்விகள் கேட்கப்பட்டும், அதுகுறித்து விவரங்கள் அறிவிக்கப்படவில்லையே. மத்திய சர்க்காரைப் பொறுத்தவரையில், தங்களுடைய கையிருப்பின் தன்மைக்கேற்ப மாநிலங்களின் தேவைக்கேற்ப ஒதுக்கீடு செய்திருக்கிறது என்கிற காரணத்தினால், தமிழகம் புறக்கணிக்கப்படவில்லை என்பதை அரசு ஒப்புக் கொள்கிறதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, புறக்கணிக்கப்பட்டதா, புறக்கணிக்கப்படவில்லையா என்ற பிரச்னையே இல்லை. இருக்கிற நிலைமைகளைச் சமாளிக்க வேண்டும் என்பதுதான் பிரச்னை. அதற்குரிய பொறுப்பு மத்திய அரசாங்கத்திடமும் இருக்கிறது. மாநில அரசாங்கத்திற்கும் இருக்கிறது என்பதுதான் நாங்கள் சொல்வது. 4 கோடியே 80 லட்சம் மக்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு தமிழக அரசுக்கு எவ்வளவு இருக்கிறதோ, அதே அளவு பொறுப்பு மத்திய அரசுக்கும் இருக்கிறது என்பதை உணர்த்தத்தான், இப்படிப்பட்ட நிலைமைகளைச் சமாளிக்க உதவி செய்ய வேண்டும் என்று அவ்வப்போது கேட்டு வருகிறோம். இப்பொழுது கூட கொள்முதல் செய்த மொத்த அரிசியையும் மத்திய சர்க்காருடைய பொது கிடங்குகளுக்கு கொண்டு வந்து சேர்க்கும்படி கூறியிருந்தார்கள். நாங்கள் அப்படிச் செய்யவேண்டிய அவசியம் இல்லை. எங்களுடைய கிடங்குகளிலே இருக்குமானால் நாங்கள் தேவைப்பட்ட நேரத்தில் எடுத்துக் கொள்வோம். மத்திய அரசாங்கத்தினுடைய கிடங்குகளில் இருந்தால், தேவை ஏற்படும் நேரத்தில், வேகன்கள் கிடைக்காமல் போய்விடலாம் என்று கூறி நம்முடைய கிடங்குகளிலேயே கொள்முதல் செய்த அரிசியை சேர்த்து வைத்திருக்கிறோம். தமிழகத்தைப் பொறுத்த வரையில் Self-sufficiency ஆக, மத்திய அரசாங்கத்திடம் கேட்க வேண்டிய சூழ்நிலை இல்லாமல் இருக்க வேண்டும். அதுதான் மிக மிக நல்லது என்ற வகையில் நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். இந்த ஆண்டும் எதிர்பார்க்கும் அளவுக்கு கொள்முதலும், உற்பத்தியும் இருக்குமேயானால், அதிகமாக அவர்களைக் கேட்க வேண்டிய அவசியமே ஏற்படாது. அந்த வகையில்தான் நாங்கள் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம்.

**தர்மபுரி நகரிலுள்ள பழைய ரயில்வே புறம்போக்கு நிலத்தை பட்டா செய்து தரும் திட்டம்.**

*** வினா எண் 404**—திரு எஸ். அரங்கநாதன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி நகரில் பழைய ரயில்வே புறம்போக்கு காலி நிலத்தில் பல ஆண்டுகளாக குடியிருந்து வரும் ஏழை வீடு இல்லாதோருக்கு பட்டா செய்து தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செய்யப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, " தர்மபுரி நகரில் பழைய ரெயில்வே புறம்போக்கு காலி நிலத்தில் பல ஆண்டு களாக குடியிருந்து வரும் ஏழை வீடு இல்லாதோருக்கு பட்டா செய்து தரப் படும். இந்த நிலங்கள் கிராமக் கணக்கில் ரெயில்வே ரோடு புறம்போக்கு என்று இருந்ததை, கிராம நத்தம் புறம்போக்காக மாற்றுவதற்கு வகை செய்வதற்கு அரசு உத்தரவு போட்டிருக்கிறது."

**பெரிய பாளையத்தில் கிடைக்கப்பெற்ற புராதன தங்க நாணயங்கள்.**

*** வினா எண் 405**—திரு. பெ. சு. திருவேங்கடம் & திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1981 மார்ச்சில் செங்கல்பட்டு பெரியபாளையத்தில் புராதன தங்க நாணயங்கள் கிடைத்துள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) & (ஆ) 18—3—1981 அன்று செங்கல்பட்டு மாவட்டம் வேலப்பாக்கம் கிராமம், பெரியபாளையத்தில் இருக்கும் திரு. ஏழுமலை என்பவரது வீட்டில் சுவர் கட்டுவதற்காக மண் தோண்டும்போது ஒரு சிறிய செம்பு பாத்திரம் அகப்பட்டதாகவும் மேற்படி பாத்திரத்தில் சுமார் 60 சவரன் எடையுள்ள 146 தங்க நாணயங்கள் இருந்த தாகவும் தெரியவருகிறது. மேற்படி தங்க நாணயங்களை கூலி வேலை செய்து வந்த திரு. வேலன் என்பவர் மற்ற நபர்களுடன் கூட்டுசேர்ந்து கள்ளத்தனமாக விற்றுவிட்டதாக தெரியவந்துள்ளது. இது சம்பந்தமாக ஊத்துக்கோட்டை காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு செங்கல்பட்டு (மேற்கு) மாவட்ட காவல் கண்காணிப்பாளரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, கைப்பற்றி யிருக்கிற தங்க நாணயங்கள் எந்தக் காலத்தைச் சேர்ந்தது என்று அரசாங்கம் கண்டுபிடித்திருக்கிறதா? இரண்டாவதாக வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்த நாணயங்களை அரசாங்கம் கைப்பற்றியிருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே கூட்டுச் சேர்ந்து விற்றவர்கள் திரு. ஆறுமுக முதலியார், திருமதி அஞ்சம்மாள், திருமதி முனியம்மாள், செல்வி காந்தா, திரு. கோவிந்தசாமி நாயுடு, திரு. சுந்தரம், திரு. வேணுகோபால் பிள்ளை, ஆகியவர்களிடமிருந்து நாணயங்கள் கைப்பற்றப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஏழுமலை என்பவர் கொடுத்த புகாரின் பேரில் இவர்கள் மீது நடவடிக்கையை காவல்துறை எடுத்துக் கொண்டு, திருமதி அஞ்சம்மாளிடமிருந்து 2 ம், திருமதி சந்திரா என்பவரிடமிருந்து 2 ம், திரு. இராசேந்திரன் என்பவரிடமிருந்து 10 ம், திரு. சுந்தரம் என்பவரிடமிருந்து 29 ம், ஆக 43 நாணயங்களைக் அரசு கைப்பற்றியிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். மேற்படி தங்க நாணயங்கள் ஒவ்வொன்றும் 3,300 கிராமம் எடையுள்ளது என்றும் அவற்றின் முகப்பில் சிலவற்றில் இலக்குமியும், வேறொரு மறுபக்கத்தில் நட்சத்திரக் குறியும் பதியப்பட்டுள்ளது என்றும் தெரியவருகிறது. அவற்றை தொல்பொருள் இயக்குநரிடம் காண்பித்தபோது சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்னால் ஆற்காடு நவாப் காலத்தில் அச்சிடப்பட்டவையாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

(முற்பகல் 9-20)

திரு. பெ. சு. திருவேங்கடம் : இப்படி ஆங்காங்கே பொது மக்களிடம் தங்க நாணயங்கள் அல்லது செம்பு கிடைக்கும்போது அந்தக் காலகட்டத்தில் அவைகள் எல்லாம் அரசுக்குச் சொந்தமானது என்பதுதான் இப்போதுள்ள விதி; ஆகவேதான் அதை பலர் மறைத்து விடும் சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே அப்படிக் கிடைக்கக்கூடியதை அரசிடம் கொடுத்தால் அதில் ஒரு சத விகிதத்தை அவர்களுக்கு, அப்படி கண்டெடுத்தவர்களுக்குக் கொடுக்க விதி யிருக்கிறதா ? அப்படி இல்லையென்றால் அப்படி ஒரு விதியை அரசு ஏற் படுத்துமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அப்படி ஒரு விதி இருக்கிறது என்றுதான் நான் கருதுகிறேன். அந்த விதிப்படி எவ்வளவு சதவீதம் என்ற கணக்கு இப்போது என்னிடமில்லை. வேண்டுமானால், தனியாகக் கேட்டால் தகவல் தரலாம்.

**திரு. இரா. தாமரைக்கனி :** இப்படிப்பட்ட புராதன நாணயங்களை சிலர் கைப்பற்றி சொத்துக்கள் வாங்கியதாகவும், மகளுக்கு கலியாணம் முடி திருப்பதாகவும், பெண்களுக்கு நகைகள் போட்டிருப்பதாகவும் சொல்லப்ப றதே, அது உண்மையா ? எல்லா நாணயங்களும் உருக்கப்பட்டு விட்டதா மீதி ஏதாவது உருக்கப்படாமலிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** நான் முதலிலேயே தெரிவித் விட்டேன். 43 நாணயங்கள்தான் கைப்பற்றப்பட்டன. மீதி 99 நாணயங்க கைப்பற்றப்படவில்லை. அதனுடைய சவரன்கள் 40 இருக்கும் என எதி பார்க்கப்படுகிறது. மதிப்பு ரூபாய் 40,735 இருக்கும் என்று கருதப்படுகிறது நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு வருகிறோம்.

**திரு. இரா. தாமரைக்கனி :** கைப்பற்றப்பட்ட இந்த நாணயங்கள் மாராட்டிய மாநிலத்தில் வைத்து உருக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். அது உண்மையா ? இனிமேல் இப்படிக் கிடைக்கக்கூடிய தங்க நாணயங்களை அவை உருக்கப்படாமல் பாதுகாக்க அரசாங்கம் ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** கைப்பற்றியதை நிச்சயமாக உருக்கமுடியாது. கைப்பற்றுவதற்கு முன்னால் உருக்கியிருக்கலாம். அதில் ஒருவர் பகவன் கணபதி நமது மாநிலத்தைச் சோந்தவர். அவர் மாட்டிய மாநிலத்திற்குச் சென்றுவிட்டார் என்ற செய்தியும் வந்திருக்கிறது. அதைப் பற்றியும் அரசு ஆராய்ந்து வருகிறது.

**வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் ஆத்தூர் நகராட்சிப் பகுதிக்கு குடிநீர் வழங்கும் திட்டம்.**

* **வினா எண் 406—திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் சேலம் மாவட்டம் ஆத்தூர் நகரிய பகுதியிலும் அதன் சுற்று வட்டாரத்திலும் குடிநீர் வழங்க புதிய திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் இத் திட்டம் எவ்வளவு ரூபாய் செலவில் எப்போது நிறைவேற்றப்படும் ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** (அ) மற்றும் (ஆ) ஆத்தூர் நகராட்சி குடிநீர் வழங்கும் திட்டத்துக்கு வறட்சி நிவாரணத்தின் கீழ் ரூபாய் 17,73,000 செலவுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இப்பணி தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் முடிக்கப்பட்டுள்ளது.



**திரு. இரா. தாமரைக்கனி :** சேலம் மாவட்டத்தில் வறட்சி நிவாரணப் பணித்திட்டத்திங்கிழ் என்னென்ன முறைகளில் எவ்வளவு செலவழிக்கப் பட்டுள்ளது ? இந்த வேலைகளைக் கவனிக்க குழுக்கள் அமைக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** சேலம் மாவட்டத்தில் பல்வேறு இனங்களில் ஒதுக்கீடு செய்யப்பட்டது ரூபாய் 401.8 இலட்சமாகும். ஆனால் செலவழித்தது ரூபாய் 407.8 இலட்சமாகும். பல்வேறுயிடங்களில் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. வறட்சிப் பணிகளில் என்னென்ன வேலைகள் நடைபெற்றன என்பது உறுப்பினர்களுக்குத் தெரியும். எல்லா மாவட்டங்களைப் போலவே அங்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் குழு போடப்பட்டு சட்டமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் அதில் உறுப்பினர்களாக இருந்தார்கள்.

**திரு. ஏ. சி. சண்முகம் :** வட ஆற்காடு மாவட்டத்தில் பல கிராமங்களில் திரும்பவும் குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. மீண்டும் வட ஆற்காடு மாவட்டம் வறட்சியைச் சந்திக்க இருப்பது அரசுக்குத் தெரியுமா ? மீண்டும் வறட்சி ஏற்படும்போது ஆழ்துளைக் கிணறுகள் போடும் திட்டம் விரைந்து அறிவிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தமிழ் நாட்டில் எங்கெங்கு வறட்சி வந்தாலும் அப்படி வறட்சி வராமல் பாதுகாக்க நடவடிக்கைகள் எடுக்க அரசு தயாராயிருக்கிறது. அதைப்பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் அறிக்கைகள் பெறப்பட்டு வருகின்றன.

**திரு. இரா. தாமரைக்கனி :** மத்திய அரசிடமிருந்து ஏழாவது நிதிக்குழு பரிந்துரைப்படி வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் ஏதாவது உதவி கேட்கப் பட்டுள்ளதா ? மத்திய அரசு உதவியைப் பெற, வறட்சி பணி நிதி முழு அளவில் தமிழ்நாடு பெற மத்திய அரசு நிபந்தனைகள் விதித்துள்ளதா ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் அவர்களே, ஏற்கனவே பல முறை இதற்கு நான் பதில் தெரிவித்திருக்கிறேன். அதை வாங்கி படித்துக் கொள்ளவும்.

**திரு. சி. பழனிமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், ஆத்தூர் நகராட்சிக்கு ரூபாய் 17.73 இலட்சம் குடிநீர் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த ரூபாய் 17.73 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளதா அல்லது கடனாக வழங்கப்பட்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே மானியமும், கடனும் கலந்திருக்கிறது என்று கருதுகிறேன்.

**பி.டி. தேர்வு பெற்ற செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கான சம்பளம்**

* **வினா எண் 407—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் பி.டி. தேர்வு பெற்ற பின்னரும் செகண்டரி கிரேடு சம்பளமே பெற்று வருகிற நிலை இருந்து வருகிறதா ?

(ஆ) ஆம் எனில் காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) மற்றும் (ஆ) ஆசிரியர்களுக்கு அவர்கள் பணி புரியும் பணியிடங்களுக்குரிய ஊதிய விகிதம் தான் அளிக்கப்படுகிறது. அவர்கள் பெறும் கல்வித் தகுதிக்கேற்ப ஊதிய விகிதம் வழங்கப்படுவதில்லை. நடுநிலைப்பள்ளி மற்றும் உயர்நிலைப்பள்ளிகளில் பி.டி. பணியிடங்கள் காலி ஏற்பட்டாலோ அல்லது புதிய பி.டி. பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டாலோ, பி.டி. தகுதி பெற்ற இடைநிலை ஆசிரியர்கள் அப்பணியிடங்களில் அமர்த்தப்படும்பொழுது, அவர்கள் பி.டி. கிரேட் சம்பள விகிதம் பெறுகின்றனர்.

**திரு. பாபு ஜனார்த்தனன்:** பேரவைத் தலைவர் அவர்களே, செகண்டரி கிரேடு படித்து, அதற்குப் பிறகு பி.டி. தகுதி பெற்று, அதற்காக ஊதிய உயர்வு தாவேண்டுமென்று நீண்டகாலமாக கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இதை அனுதாபத்தோடு, விரைவில் அவர்களுக்கு ஊதிய உயர்வு கொடுக்க அமைச்சர் அவர்கள் ஆவனசெய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய தகுதியை உயர்திக் கொண்ட நிலையில் அவர்கள் செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக இருந்துகொண்டு, அந்த தகுதிக்கேற்ப சம்பளம் கொடுப்பதை ஏற்றுக் கொள்வதற்கில்லை. பி.டி. பதவி உயர்வு பெறுவதற்கான வாய்ப்பு பற்றி அரசு இப்போது ஆராய்ந்து வருகிறது.

**திரு. கு. ரமணி:** தலைவர் அவர்களே, செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் அவர்களுடைய பள்ளியில் வேலை செய்யக்கூடிய காலத்தில், தேர்வு எழுதி [illegible]ருந்தும், வேறு பக்கத்திலிருந்து ஆட்களைக் கொண்டு வந்து போடு[illegible] அவர்களுக்கு அந்த வேலையைக் கொடுக்காமல் இருப்பதனால்



நிலைமை இருந்து வருகிறது. பல இடங்களில் இப்படியிருக்கிறது என்று நானே ரிப்போர்ட் செய்திருக்கிறேன், அரசாங்கத்திற்கு. இந்த நிலையில், அந்தப் பள்ளியில் வேலை செய்யக் கூடிய ஆசிரியர்களுக்கே அங்கு ஏற்படும் காலியிடங்களை நிரப்ப முதலிடம் கொடுக்கப்படுமா, அதேபோல் வேறு பள்ளிகளில் காலியிடம் ஏற்பட்டால் வரிசைப்படுத்தி, அதில் முதலிடம் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலியாகக்கூடிய எல்லா இடங்களிலும் பதவி உயர்வு மூலமாகத் தரப்படுவதில்லை. வெளியிலிருந்து படித்துவிட்டு இருப்பவர்களுக்கும் அந்தப் பதவிகள் தரப்படுகின்றன. ஆகவே, குறிப்பிட்ட சதவிகிதம் வெளியிலிருந்து வருகின்றவர்களுக்கும், குறிப்பிட்ட சதவிகிதம் பதவி உயர்வு என்றும் தந்து கொண்டிருக்கிறோம். அப்படி இருக்கின்ற இந்த விதிக்கு மாறாக யாராவது நடப்பார்களானால், அதை எனது கவனத்திற்கு கொண்டுவந்தால், அதுபற்றி நான் கவனிக்கிறேன்.

**திரு. சேலம் மு. ஆறுமுகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் பி.டி. தேர்வு பெற்றவர்கள் தமிழ் நாட்டில் எவ்வளவு பேர் உள்ளார்கள் ? அவர்களுக்கு தமிழாசிரியர்களுக்கு வழங்குவது போன்ற சலுகைகளை வழங்க அரசு முன்வருமா ? பி.டி. தேர்வு பெற்ற ஆசிரியர்களுக்கு ஊராட்சி ஒன்றியங்களில் டிபுடி இன்ஸ்பெக்டர் பதவி அளிக்கப்படுமா? அவர்களுக்கு ஊராட்சி ஒன்றியங்களில் உதவி கல்வி அலுவலர் பதவி அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, எவ்வளவு பேர் பி.டி. ஆசிரியர்கள் இருக்கிறார்கள் என்ற விவரம் தற்போது என்னிடம் இல்லை. ஆனால், ஆண்டுக்கு ஆண்டு இந்த எண்ணிக்கை உயர்ந்து கொண்டிருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் சில பேர் பதவி உயர்வு பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஊராட்சிகளிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டதன் காரணமாக, அவர்கள் அரசுத் துறையிலே ஏற்படுகின்ற காலி இடங்களுக்கு மற்றவர்களைப் போல் வருவதற்கு உரிமை பெற்றிருக்கிறார்கள். ஆனால், அது முறைப்படி, அந்த பணி மூப்புப்படி பெற அவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கும்.

பேரையூரிலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளிக் கட்டிடம்

* வினா எண் 408—திரு. இரா. முத்தையா : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் பேரையூரில் அரசு மேல்நிலைப்பள்ளியின் கட்டிடம் பழுதுபட்டிருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் இப்பள்ளிக்கு புதிய கட்டிடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ) இப்பள்ளியில் 8 வகுப்பறைகளைக் கொண்ட காரைக் கட்டடத்தின் மூன்று வகுப்பறைகளை அடக்கிய கிழக்குப் பகுதி பழுதுபட்ட நிலையில் உள்ளது. இதனைச் சீர்செய்வதற்கான மதிப்பீடுகள் பொதுப்பணித்துறையினரிடம் கோரப்பட்டன. ஆனால் அப்பள்ளி நிலம் குறித்த மண் வளத்தை ஆராய்ச்சி செய்ய வேண்டியிருப்பதால், அவ்வாராய்ச்சி முடிந்த பின்னரே தேவையான மதிப்பீடுகள் அனுப்பப்படுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்டகாலமாக இந்த பள்ளிக் கட்டிடம் பழுதுபட்ட நிலையில் இருக்கிறது. மாணவர்கள் தகுந்த பாதுகாப்போடு படிக்க முடியாத நிலை இருக்கிறது. வெளியில் தங்கி படிக்கவேண்டியிருக்கிறது. எனவே மண் வள ஆராய்ச்சி செய்வதோடு, அரசு தற்காலிகமாக வேறு ஏற்பாடு செய்து இந்த குறையைப் போக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-30)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து அரசு பரிசீலிக்கும்.

திரு. கோவைத் தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்தில் இருக்கும் பல்வேறு பள்ளிகளிலே இப்படி ஒருசில பள்ளிகள் இடிந்திருப்பதும், பள்ளிகளில் பல கட்டிடங்கள் இல்லாமல் இருப்பதும் அரசுக்குத் தெரியுமா ? மத்திய அரசிடமிருந்து கடனை பெற்று புதிய பள்ளிகளை கட்டுவதற்கும், இடிந்த பள்ளிகளை செப்பனிடுவதற்கும் அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருமளவில் பள்ளிகளுக்கு கட்டிடங்கள் போதாமல் இருப்பதும், பள்ளிகளுக்கு கட்டிடமே இல்லாமல் இருப்பதும் குறித்த [illegible]



சேகரித்து உடனடியாக 90 கோடி ரூபாய்க்கு செலவு செய்தால் அந்த குறைந்த பட்சத் தேவையை தீர்வு செய்ய முடியும் என்று அதிகாரிகள் அறிக்கை தந்திருக்கிறார்கள். இவ்வளவு பெரிய தொகையை செலவு செய்கிற நிலையில் நாம் இல்லையென்றாலும் கடன் கிடைத்தால் அந்த தொகையை செலவு செய்வதற்கு முடியும் என்று கருதி கடன் தரக்கூடிய நிறுவனங்களை நாம் அணுகியிருக்கிறோம். மத்திய அரசினுடைய ஒத்துழைப்பைக் கேட்டிருக்கிறோம். அவர்கள் தக்க முடிவு எடுப்பார்களானால், இந்த பிரச்னை எளிதாக முடியும்.

விருத்தாசலம் தொகுதியிலுள்ள பள்ளிகளில் செயல்பட்டு வரும் மதிய உணவுத் திட்டம்

* வினா எண் 409.—திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதியில் 105 பள்ளிகளில் மதிய உணவு மாணவர்களுக்கு அளிக்கப்பட்டு வந்ததை ஜூன் 18 ஆம் தேதி முதல் 48 பள்ளிகளுக்கு மட்டும் வழங்கப்படுவது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், காரணம் என்ன ?

(இ) தற்போது அளிக்கப்படும் உணவு மிகவும் குறைவாக உள்ளது என்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) கடுமையான வறட்சியின் காரணமாக விருத்தாசலம் மத்திய சமையற்கூடத்தில் தண்ணீர் இல்லை. வெளியார் பம்பு செட்டிலிருந்து தண்ணீர் பெறுவதற்கும் சிரமங்கள் ஏற்பட்டன. சமையற்கூட ஊர்திகளில் ஒன்று பழுதாகி மாற்று ஏற்பாடாக மாட்டு வண்டி, சைக்கிள் மூலம் அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யச் சற்று தாமதம் ஏற்பட்டது. ஆயினும் இந்த பிரச்னைகள் தீர்க்கப்பட்டு இப்பொழுது 1981 ஆகஸ்டு மாதம் முதல் 105 பள்ளிகளுக்குத் தொடர்ந்து உணவு அளிக்கப்பட்டு வருகிறது.

(இ) இந்தியா முழுவதும் நண்பகல் உணவுத் திட்டங்களுக்கு கேர் நிறுவனம் அளித்து வந்த இலவச உணவுப் பொருளை இந்த ஆண்டு கணிசமான அளவுக்குக் கேர் நிறுவனம் குறைத்ததன் காரணமாக உணவின் அளவை ஓரளவு குறைக்க நேரிட்டுள்ளது.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மதிய உணவு கொடுப்பதாக சொன்னார்கள் ஆனால் அங்கு சமையல் செய்வதற்கு ஆள் இல்லாமல் தலைமை ஆசிரியர் [illegible] செய்வதும், அங்கு ஓராசிரியர் பள்ளிகளில் ஆசிரியர்கள் கேர் உணவை [illegible]

பெற போய்விட்டால் பள்ளிகள் நல்லமுறையில் நடப்பதில்லை. ஆகவே எதிர் காலத்திலாவது தனிப்பட்டவர்களை வைத்து சமைக்கிற நிலையை உண்டாக்குவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கேள்வி விருத்தாசலம் பற்றியது. தென்னார்க்காடு, வட ஆற்காடு, செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் சமையல் கூடங்களை வைத்து மதிய உணவை தந்துகொண்டு வருகிறோம். ஆகவே அங்கே தவறு நேர இடமிருக்காது.

**திண்டிவனம் வட்டத்தில் கடன் நிவாரணச் சட்டத்தின் கீழ் தள்ளுபடி செய்யப்பட்ட தனியார் கடன்கள்**

* **வினா எண் 410.—திரு. கே. எம். தங்கமணி :** மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் வட்டத்தில் கடன் நிவாரணச் சட்டத்தின் கீழ் தங்களது தனியார் கடன்களை தள்ளுபடி செய்யக் கோரி வந்துள்ள மனுக்கள் எத்தனை ?

(ஆ) அதில் எத்தனை பேர்களது கடன்கள் தள்ளுபடி செய்யப் பட்டன ?

(இ) எத்தனை பேர்களது மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** (அ) 2,794.

(ஆ) 28.

(இ) 2,489.

**திரு. கே. எம். தங்கமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடன் நிவாரணம் கோருபவர்களின் வருமானத்தை முடிவு செய்வதில் பல கோளாறுகள் ஏற்படுகின்றன. திண்டிவனம் வட்டம் வீடூர் என்ற கிராமத்தில் அரிசன காலனியில் வசிக்கும் ஏழுமலை என்பவருக்கு 65 செண்ட் தான் புஞ்சை நிலம் இருக்கிறது. கடன் நிவாரண சட்டத்தின் கீழ் அவருக்கு அந்த உதவியை தரமுடியாது என்று உதவி ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் கூறப்பட்டிருக்கிறது. மேல்முறையீட்டிற்கு அவருக்கு வசதியில்லை. இதுபோன்ற கோளாறுகள் ஏற்படாத வண்ணம் இருப்பதற்கு அரசு இதை ...க்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4,800 ரூபாய்க்கும் குறைவான வருமானம் உள்ளவர்களுக்கு நிவாரணம் தரப்படுகிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக் காட்டுகிறபோது 65 செண்ட் நிலம் பெற்றிருக்கிற ஒருவருக்கு நிவாரணம் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். அதை எதிர்த்து ஆர்.டீ.ஓ. அவர் களுக்கு அப்பீல் செய்யலாம். இதற்கு பணச்செலவு இல்லை, மனு மட்டும் போட்டால் போதும். என்னிடமும் குறிப்பை தந்தால் நானும் நடவடிக்கை எடுப்பேன்.

**திரு. இரா. கருப்பையா :** தலைவர் அவர்களே, கடன் நிவாரணச் சட்டத்தின் கீழ் அடகுக் கடைகளில் அடகு வைக்கப்பட்ட நகைகளைப் பெற முடியாமல்—அந்த அடகுக் கடைக்காரர்கள் கடைகளை மூடிவிட்டு வெளியூர் சென்று விட்ட காரணத்தினால்—அந்தச் சட்டத்தின் மூலமாக அவர்கள் அனுகூலம் பெறலாமென்றாலும், நடைமுறையிலே அவர்களுக்கு அந்த அனுகூலம் கிடைக்காத நிலை இருக்கிறது. கடைகளை மூடிவிட்டு அவர்கள் வெளியூர் சென்றுவிட்டார்கள். அவர்களுக்கு அந்த நகைகளை திரும்ப வாங்கிக்கொடுப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ? அதோடு கடைகளை மூடிவிட்டு வெளியூர் சென்றவர்கள்மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவர் அவர்களே, ஏழைகளிட மிருந்து அந்தப் பொருட்களை வாங்கி—பிளட்ஜ் செய்த அந்தப் பொருட்கள் மீது—கடன் தருகிற சிலர் குறிப்பாக மார்வாரிகள் என்று சொல்லப்படுகிற சிலர் அந்தச் சட்டத்திலிருந்து தப்புவிப்பதற்காக கடைகளையும் மூடிவிட்டு இருக்கின்ற வீட்டையும் காலிசெய்துவிட்டு எங்கேயோ சென்றுவிட்டார்கள் என்ற தகவல் அரசுக்கு வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக் காட்டியதைப் போல சட்ட ரீதியாக நடவடிக்கைகளை மேற்கொண்டு அந்தப் பொருட்களை அந்த ஏழைகளுக்குத் திருப்பிக் கொடுப்பதற்கும், குற்றவாளி களைக் கண்டுபிடித்து தண்டனை கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, கடன் நிவாரணச் சட்டத்தின்கீழ் சலுகைகள் பெறுவதற்காக சொத்து மதிப்பு அடிப்படையில் வருமான அடிப்படையில் அவைகள் வழங்கப்படுகின்றன. வருமானம் எவ்வளவு என்றும் சொத்து மதிப்பு எவ்வளவு என்றும் அவர்கள் வருவாய் ஆய்வாளரிடமிருந்து கேட்டு வாங்கவேண்டியிருக்கிறது. அதன் காரணத்தினால் காலதாமதம் ஏற்படுகிறது, இவ்வாறு காலதாமதம் ஏற்படுவதால் கடன்வழங்கும் தாசில்தார்கள் அந்த மனுக்களை ரத்து செய்து விடுகிறார்கள். எனவே ஒன்று கடன் வழங்குகின்ற அந்த தாசில்...

சொத்துவிவரங்களைப் பார்த்து அந்தத் தகவலை பெற்றுக்கொள்ளும்படியோ அல்லது சொத்து மதிப்பு எவ்வளவு என்பதை வருவாய் ஆய்வாளர் ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் 15, 20 நாட்களுக்குள்ளாக கொடுத்துவிட வேண்டுமென்ற ஆணையைப் பிறப்பிக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவர் அவர்களே, 15 தினங்களுக்குள் என்று அந்த அளவுக்குள் முடிக்கவேண்டுமென்று அரசு ஆணையிட முடியாது. தாசில்தார் அல்லது டெபுடி தாசில்தார் அவர்களுக்கு இருக்கும் பற்பல பணிகளை மேற்கொண்டு வருகிறபோது இடையே இதைப் பார்க்கிறபோது அதற்காக குறைந்த அளவு காலக்கெடுவை விதிப்பது முடியாத காரியம். கடன்பட்டவர்கள் சார்பிலே என்ன சொத்து இருக்கிறது என்று மனுக்கள் மூலமாகக் கேட்டு அதற்குப் பிறகு தான் அந்த விவரங்களைக் கொடுக்க முடியும். அந்த முறையில் தான் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. நான் ஏற்கெனவே சட்டமன்றத்திலே சொல்லியிருக்கிறேன். ப்ரீ லீகல் எய்ட் போர்டு—இலவச சட்ட ஆலோசனைக் குழு—வட்டந்தோறும் அந்தப் பணியை மேற்கொள்கிறது. குறிப்பாக ஏழைகள் கேட்கிறபோது அவர்கள் ஆலோசனை கூறி உதவியைச் செய்யவேண்டி பணிக்கப்பட்டிருக்கிறார்கள். கடந்த 15 தினங்களாக அது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதிலே இந்தப் பிரச்சினைகள் தீரும் என்று அரசு நம்புகிறது.

**திரு. சு. பாலன் :** தலைவர் அவர்களே, ஏழை எளியவர்கள் தாங்கள் அடகுக் கடைகளில் வைத்த பொருட்களைப் பெறுவதற்கு பறக்கும் படை என்ற ஸ்தாபனம் ஈடுபட்டு அந்தக் காரியங்களிலே தலையிட்டு நகைகளை சுலபமாகப் பெற்றுத்தருகிறது என்பது அரசுக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவர் அவர்களே, அந்த பறக்கும் படை அரசின் அமைப்பாக எங்கும் இல்லை.

## வேலூர் மத்திய சிறைச்சாலையில் அச்சடிக்கும் பிரிவு, பைண்டிங் பிரிவுகளை ஏற்படுத்தும் திட்டம்

*** வினா எண் 411—திரு. த. வேணுகோபால் :** மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வேலூர் மத்திய சிறைச்சாலையில் சிறிய அச்சடிக்கும் தொழில் [illegible]தகம் நோட் பைண்டிங் செய்யும் தொழில் போன்ற சிறிய பிரிவுகளை [illegible]ம் உத்தேசம் உண்டா ?



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** வேலூர் மத்திய சிறையில் புத்தகம் பைண்டிங் செய்யும் தொழில் பிரிவு ஒன்று ஏற்கனவே உள்ளது. இச்சிறையில் சிறிய அச்சடிக்கும் தொழில் ஆரம்பிக்கும் உத்தேசம் தற்போது இல்லை.

(முற்பகல் 9-40)

**திரு. பாபு ஜனார்த்தனன் :** பேரவைத் தலைவரவர்களே, வேலூர் மத்திய சிறை மிகப்பெரிய சிறை. அங்கே பல தொழில்கள் இருந்தாலும் அச்சடிக்கும் தொழிலை ஆரம்பிப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். எதிர்க்கட்சிக்காரர்களெல்லாம் அடிக்கடி சென்று வரும் சிறை; நான் சென்றிருக்கிறேன். திரு. உமாநாத் அவர்கள் சென்று நீண்ட நாட்களாகியிருக்கும் என்று கருதுகிறேன். அந்தச் சிறையை நல்லமுறையில் பயன்படுத்துவதற்கு இந்தத் தொழிலைத் துவக்க அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா ? என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. உமாநாத் அவர்களுக்காக சிபார்சு செய்வதெல்லாம் நல்லதல்ல (சிரிப்பு)

**திரு. ரா. உமாநாத் :** என்னைச் சிறைக்குப்போகத் தூண்டிவிடுகிறார். (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** பார்வையாளராகப் போவதற்கு. (சிரிப்பு) மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பைண்டிங் தொழில் பிரிவு தவிர தையல் தொழில் பிரிவு, பூட்ஸ் உற்பத்தி செய்யும் பிரிவு. நெசவுத் தொழில் பிரிவு போன்ற பிற தொழில் பிரிவுகளும் அச்சிறையிலே இருக்கின்ற அச்சடிக்கும் பிரிவு ஒன்றை ஏற்படுத்துவது தேவை என்று முன்னர் நான்கூடக் கருதினேன் ; சொன்னேன்தான். ஆனால் அந்த அச்சடிக்கும் பிரிவின் மூலம் எத்தனை பேர்களுக்கு அங்கே பணி கிடைக்கும் ; பயிற்சிகளைப் பெற முடியும். பிறகு ரிஃபார்ம் ஆகி அவர்கள் வாழ்க்கையிலே செட்டில் ஆகும் பொழுது தக்க பலனை இது தருமா, இதைவிட நல்ல பல பணிகளில் அவர்களுக்குப் பயிற்சி தரலாமா என்று அரசு ஆய்ந்து வருகிறது. சில உத்தரவுகளை யிட்டிருக்கிறது. வேறு சில பிரிவுகளை அங்கே அமைக்க அரசு ஆய்ந்து வருகிறது ; நடைமுறைப்படுத்தப்படும்.

**திரு. ஏ. சி. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கைதிகளின் மூலம் செய்யப்படும் பொருள்களிலிருந்து கிடைக்கின்ற வருமானம் கைதிகளுக்குக் கொடுக்கப்படுகிறதா ? ஒரு தொழிலில் தேர்ச்சியடைந்த கைதி விடுதலையாகும்பொழுது அந்தத் தொழிலில் அவருக்குத் தமிழக அரசே வேலை கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அப்படிப் பயிற்சியிலே அங்கே ஈடுபட்டுத் தொழில்புரிகின்ற கைதிகளுக்கு முன்னர் கொடுக்கப்பட்டதைவிடத் தற்போது ஊதியம் சற்று அதிகமாகக் கொடுக்கப்படுகிறது. ஆனால் அது போதிய ஊதியம் என்று சொல்ல மாட்டேன். போதிய ஊதியம் என்று சொல்ல முடியாது. அவர்கள் சிறையிலிருந்து விடுதலை பெற்று வெளியேறிய பிறகு அவர்கள் வாழ்வில் திருந்தி வருமானத்தோடு வாழ வேண்டுமென்பதற்காகக் கடன் உதவி தந்து, தாழ்த்தப்பட்ட மக்கள் போன்றவர்களாக இருந்தால் மானியமும் தந்து தொழில் அமைக்க அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

**குளத்தூர் தொகுதியிலுள்ள ஆதிதிராவிட மக்களுக்கு வீடுகள் கட்ட வழங்கப்பட்ட கடன்.**

* **வினா எண் 412.—திரு. த. மாரிமுத்து :** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம் குளத்தூர் தொகுதியில் சென்ற ஆண்டு கிராமப்புற வீடுகட்டும் சொசைட்டி மூலம் ஆதிதிராவிட மக்களுக்கு எத்தனை வீடுகளுக்கு கடன் வழங்கப்பட்டது ?

(ஆ) எத்தனை வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** (அ) புதுக்கோட்டை மாவட்டம் குளத்தூர் தொகுதியில் 1980-81 கூட்டுறவு ஆண்டில் கிராமப்புற வீடு கட்டும் சங்கத்தின் மூலம் வீடு கட்ட 539 ஆதிதிராவிட மக்களுக்கு கடன் வழங்கப் பட்டது.

(ஆ) 393 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன.

**திரு. த. மாரிமுத்து :** தலைவரவர்களே, ஆதிதிராவிட மக்களில் பெரும்பாலோர் குடியிருந்து வந்த குடிசைகளை அகற்றிவிட்டு வேறு மனைக்கட்டு இல்லாததால் அதே இடங்களிலேயே புதிதாகக் கட்டும் வீடுகளை அமைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. தவணை முறையில் உரிய காலங்களில் வழங்குவதில் மிகவும் தாமதம் ஏற்படுகிறது. இந்தச் சிரமங்களைத் தவிர்த்து கடன் வழங்க ஆரம்பித்தவுடன் வீடுகள் கட்டக் கட்ட இரண்டாம், மூன்றாம் முறை தவணை முறைகள் உடனுக்குடன் கிடைக்க அரசு ஆவன செய்யுமா ?





**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தவணை முறையில் இல்லாமல் ஒரேமுறையில் கொடுத்து விட்டால் ஒரே முறையில் செலவு செய்துவிட்டுப் பிறகு வீடு கட்டப் பணம் இல்லாமல் தவிப்பார்கள். அதற்காகத்தான் அந்த அளவிற்கு—முதல் அளவிற்குக் கட்டப்பட்ட அளவிற்கு இவ்வளவு, பிறகு இவ்வளவு கட்ட வேண்டும், பிறகு இவ்வளவு கட்ட வேண்டும் என்று அவர்களுக்குப் பாதுகாப்புக்காகத்தான் தவணை முறையில் பணம் கொடுக்கப்படுகிறது.

**திரு. த. மாரிமுத்து :** பேரவைத் தலைவரவர்களே, வீடு கட்டக் கட்டத் தான் கடன் கொடுக்க வேண்டுமென்று நாங்கள் சொல்கிறோம். ஆனால் உடனுக்குடன் கொடுப்பதில்லை. முதல் தவணை கொடுத்து இரண்டாம் தவணை வாங்குவதற்குள் ஆறு மாதங்கள் ஆகிறது. ஆகவே, இரண்டாம் தவணையில் வீடு கட்ட முடியாமல், கட்டிய வீடு இடிந்து விடும் அளவிற்குப் போய்விடுகிறது. எனவே, கட்டி முடித்து விட்டால் முடிக்க முடிக்க உடனுக்குடன் மூன்று தவணைகளும் கொடுக்கப்படுமா ? மேலும் கிராமப்புற வீடு கட்டும் சொசைட்டியிலே சென்ட்ரல் கவர்ன்மெண்ட் எய்ட் மூலம் சில வீடுகள் கட்டிக் கொடுக்கக் கடன் கொடுக்கிறார்களாம். அந்த லோனெல்லாம் இரண்டு மூன்று முறை கிடைப்பது மிகவும் அரிதாக இருக்கிறது. என்னுடைய தொகுதியிலே போராம்பூர், கல்லுப்பட்டி என்ற கிராமங்களிலே முதல் தவணை வழங்கி ஆறு மாதங்களாகியும், இதுவரையில் இரண்டாம் தவணை வழங்காமல் இருக்கக் காரணம் என்ன ? மேலும் வீடுகளின் அளவு இரண்டு அங்குலம், மூன்று அங்குலம் கூடப் போயிருந்தாலும்கூட அந்த வீடுகளுக்கு இரண்டாம் தவணை வழங்க முடியாது என்று அலுவலர்கள் சொல்லிவிடுகிறார்கள். கிராமத்திலுள்ளவர்கள் (மணியடிக்கப்பட்டது) வருடத்திற்கு ஒருமுறைதான் என் கேள்வியே வருகிறது. (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சுருக்கமாக கேள்வியைப் போடுங்கள்.

**திரு. த. மாரிமுத்து :** ரொம்ப நன்றி. இந்த அலுவலர்கள் 17½ இன்டு 11½ என்ற அளவிற்கு மீறி இரண்டு அங்குலம், மூன்று அங்குலம் இருந்தாலும் மறுபடியும் அஸ்திவாரத்தை இடித்துவிட்டுப் புதிதாகக் கட்ட வேண்டுமென்று சொல்வதால் வீடு கட்ட முடியாமல் போகிறது. எனவே, சொன்ன அளவில் மேலே இரண்டு அங்குலம், மூன்று அங்குலம் கூடியிருந்தாலும் அந்த வீடுகளைக் கட்டுவதற்கான தவணைகளை வழங்க அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 200 சதுர அடி பரப்பளவிற்குக் கட்டுவதற்கு மதிப்பீடு ரூ. 4,000 என்று சொல்லி, அந்த ரூ. 4,000-ல் 800-ஐ அவர்களே

போட்டுக் கொள்ள வேண்டும், அல்லது ஷ்ரம்தான்—உழைப்பாகப்—போட வேண்டுமென்று சொல்லி, மீதித் தொகை ஆதி திராவிட மக்களுக்குக் கொடுக்கப்படுகிறது. அதிலே, ரூ. 1,000 மானியமாகக் கொடுக்கப்படுகிறது. ஆதி திராவிட மக்களுக்குக் கொடுக்கப்படுகிற தொகைக்கு வட்டி இல்லை. அந்த வட்டியை அரசே கொடுக்கிறது. அந்த 200 சதுர அடிக்கு மேல் கட்டிக் கொள்ளவேண்டுமென்று யாராவது நினைத்து, அவர்களுடைய பணத்தைப் போட்டு, அந்த வீட்டைக் கட்ட முன்வந்தால் There is no bar for it பெரிதாகக் கட்டிக் கொண்டு போவதென்றால் எங்களுக்குத் தடை இல்லை. நாங்கள் கொடுக்கும் பணத்தில் 200 சதுர அடியில் கட்டுவது நல்லது—அதுதான் முடியும் என்று சொல்லியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினருக்குச் சில தகவல்கள் வந்திருக்கின்றன, சில சரியாக இருக்கலாம், சில சரியில்லாமல் இருக்கலாம். எனவே, குறிப்பிட்ட இடத்தைப் பற்றி இந்த இடத்தில் இந்தச் சிரமம் இருக்கிறது என்று அரசுக்குத் தெரிவிப்பார்களானால் அரசு அதைப் பரிசீலனை செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தகவல் தெரிவித்தால் அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

**திரு. ஜி. மூர்த்தி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, [illegible] திராவிட மக்கள் பொருளாதாரத்திலே பின்தங்கியவர்கள் என்பதற்காக இந்தச் சலுகையை அந்த மக்களுக்கு நாம் தருகிறோம். ஆனால், அடித்தளம் போட்டுவிட்ட பின்னாலே கடன் கொடுக்கிறோம். அதற்கும் முன்னதாகக் கடன் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மூர்த்தி அவர்கள் சொல்கிற யோசனை சிறந்த யோசனை. இதைப்பற்றி நிதானமாகப் பரிசீலனை செய்யலாம்.

**திரு. ஜே. எஸ். இராசு :** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது அரசு விதித்திருக்கின்ற பரப்பளவிற்குமேல் அவர்களாக விரும்பிக் கேட்டுக் கொண்டால், அதை அரசு தடை செய்யவில்லை, தொடர்ந்து கடன் வழங்கப்படும் என்று குறிப்பிட்டார்கள். கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தின் எங்களுடைய கிளையின் தலைவன் என்ற முறையில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன், அமைச்சரிடம் இருந்து அறிய விரும்புகிறேன், குறிப்பிட்ட அளவிற்கு மேல் 1 அங்குலமோ, 2 அங்குலமோ கட்டினால்கூட அதை இடித்து விட்டு மீண்டும் புதிதாகக் கட்ட வேண்டுமென்று அதிகாரிகள் [illegible]றார்கள். சான்றாக, லால்குடி வட்டத்திலே இதுபோன்ற பிரச்னைகள்





ஏராளமாக இருக்கின்றன ; எங்களுக்குப் புகார்கள் வந்திருக்கின்றன. ஆகவே, அமைச்சர் அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக இப்பொழுது ஒரு பிரச்னை சொல்லப்படுகிற காரணத்தால், அரசு அதைப் பரிசீலனை செய்யும்.

**திரு. மு. அம்பிகாபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களுக்குக் காங்கிரஸ் கட்சி காலத்திலே கட்டப்பட்ட வீடுகள் எல்லாம் இடிந்து விட்டன . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பழைய காலத்திற்குப் போனால், விண் பிரச்சினை எழும். இப்போது கட்டப்படுவதைப் பற்றிக் கேளுங்கள்.

**திரு. மு. அம்பிகாபதி :** உண்மையை சொல்லக் கூடாதா ? அரிசன மக்களுக்கு இதுவரை கட்டிக்கொடுக்கப்பட்ட எந்த வீடுகளுமே உத்தரவாதமாக இல்லை. இப்பொழுது இவர்கள் கொடுக்கிற ரூ. 4,000-லே, ரூ. 700-க்கு மேல் உழைப்பின் மூலம் என்று வைத்திருப்பதால் பல வீடுகள் பேஸ்மென்ட் நிலையோடு நிற்கின்றன ; அவை நிலையாக நிற்பதற்கு, விரைவாகச் செயல்படுத்த அரசிடம் ஏதாவது செயற்குறிப்பு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு திரு. அம்பிகாபதி மிகப் பிரபலமானவர். அவருக்கு எல்லா விஷயங்களும் தெரிந்திருக்கும். இந்த வீட்டை அரசு கட்டுவதில்லை. பெனிபிஷியரீஸ், அவர்களே கட்டுவது. எனவே, அவர் சொல்லும் பிரச்னை அதில் எழவில்லை.

### திருச்சி நகர குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள்

* வினா எண் 418—திரு. கே. சௌந்திரராசன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி நகரில் குடிசைப்பகுதி மேம்பாட்டுக்கு ஏதேனும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** (அ) மற்றும் (ஆ)—

(1) திருச்சிராப்பள்ளி நகராட்சிக்கு 1981-82 ஆம் ஆண்டில் "குடிசைப் பகுதி துரித மேம்பாட்டுத் திட்டங்களை" accelerated slum Improvement செய்து முடிப்பதற்கு ரூ. 15.00 இலட்சம் மான்யமாக அரசால் அளிக்கப்பட்டுள்ளது.

(2) திருச்சி நகரில் "கல்மண்டை" என்ற இடத்தில் 64 குடியிருப்பு களும், "பிச்சான்குளம்" என்ற இடத்தில் 391 குடியிருப்புகளும் ஏற்கனவே குடிசை மாற்று அபிவிருத்தி திட்டத்தின்கீழ் மொத்தம் 455 குடியிருப்புகள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன.

(3) தற்போது குடிசைப்பகுதி மாற்று அபிவிருத்தி திட்டத்தின்கீழ் திருச்சி நகரில் எந்தப் புதிய திட்டமும் இல்லை.

**திரு. கே. சௌந்திரராசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடந்த காலத்திலே நடந்து முடிந்த நிகழ்ச்சிகளைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்கள். ஆனால், இன்றையதினப் அங்கேயிருக்கிற பிரச்சினைகள், குடிசைப் பகுதிகள் ஏறக்குறைய 54 இருக்கின்றன. அங்கே எந்தவிதமான வசதிகளும் இல்லாத சூழ்நிலையில், அங்கேயிருக்கிற மக்கள் கழிவுநீரை அகற்றுவதற்கோ, அல்லது குடிநீர் பெறுவதற்கோ வாய்ப்பு வசதியில்லாமல், இன்றையதினம் மிகப்பெரிய அளவிற்கு வியாதிகள் வருகின்ற அளவிற்கு சூழ்நிலைகள் இருக்கின்றன என்று கூட பத்திரிகைகள் எல்லாம் பலமாகச் சொன்ன பின்னாலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்பொழுது திட்டம் இல்லையென்று சொல்வது எனக்கு வியப்பாக இருக்கிறது. அருள்கூர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்னையில் தீவிரமாக நடவடிக்கை எடுத்து, குடிசைப்பகுதி மேம்பாட்டிற்காக உடனடியாகத் திட்டங்களைத் தீட்டுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9.50)

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆக்சிலரேட்ட் ஸ்லம் இம்ப்ரூவ்மென்ட் ஸ்கீம் என்ற வகையில் 1977-78 ஆம் ஆண்டிலே 30 லட்சமும், 1978-79-லே 15 லட்சமும், 1979-80-லே 15 லட்சமும் ஆக 60 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டிருக்கின்றது. 1980-81-ல் ஒதுக்கப்படவில்லை. எனினும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததை மனதிலே கொண்டு நடப்பு நிதி ஆண்டில் 1981-82-லே இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு ரூபாய் 15 லட்சம் வழங்கப்பட்டிருக்கிறது.



**திரு. கே. சௌந்திரராசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு ஆண்டில் 15 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். அங்கே பல்வேறு பகுதிகளில் இன்று வரையிலும் எந்தவிதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை என்பதைத் தெரிவிப்பதோடு, இந்த 15 லட்சம் ரூபாய் என்பது யானைப்பசிக்குச் சோளப்பொறி போடுவது போன்றதாகும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். குத்பாநகர் குத்பா பள்ளம், வடவூர், பீமநகர், உறையூர், சோழராஜபுரம் மேல்சிந்தாமணி, கல்லுக்குழி, மல்லிகைபுரம், அண்டகொண்டார், ஆழ்வார்தோப்பு, வண்ணாரப்பேட்டை, எம்.ஜி.ஆர். நகர், காந்தி நகர் போன்ற பகுதிகள் அத்தனையும் சகதியிலே மிதந்து கொண்டிருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனக்கேயுள்ள சிறந்த திறமையைப் பயன்படுத்தி, அந்தப் பகுதியிலே அவர் ஏற்கனவே இருந்தவர் என்பதையும் நினைவில் கொண்டு, அதை மாற்றி அமைக்க முயற்சி எடுப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரும் நானும் சேர்ந்து எல்லா இடங்களையும் பார்த்திருக்கிறோம். அந்த அண்டகொண்டார் என்ற இடம் முன்பெல்லாம் மனிதர்கள் வசிப்பதற்கு ஏதுவில்லாமல் சுத்தமாக இருக்காது. ஆனால் இப்போது அதைப் பார்த்தால் மிக சிறப்பான இடமாக மாறி இருக்கின்றது. அதைப்போலவே மற்றப் பகுதிகளையும் மாற்றி அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளைப் பராமரிக்கும் பணி

* **வினா எண் 414—திரு. எஸ். ஆண்டித்தேவர் :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு முழுவதும் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு பராமரிப்பதற்கு அரசு செலவில் பராமரிப்பாளர்கள் போடப்பட்டுள்ளனரா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** ஆம். மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளைப் பராமரிப்பதற்காக ஊராட்சி மன்றங்களும் பேரூராட்சி மன்றங்களும், தற்காலிகமாக ஆட்களை நியமித்துப் பராமரித்து வருகின்றன.

**திரு. செ. சிவசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே பல இடங்களில் உள்ள இந்த நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டு நீண்ட நாட்கள் ஆனதன் காரணமாக எங்கு பார்த்தாலும் ஒழுகிக் கொண்டு இருக்கின்றன. பல வருடங்களாக ஒழுகிக் கொண்டு இருக்கின்றன. அவைகளை

ரிப்பேர் செய்ய முடியாத நிலை இருக்கின்றது. ஆகவே அந்தத் தொட்டிகளை சீக்கிரத்திலே ரிப்பேர் செய்து கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல ஆண்டுகளாக ஒழுகிக் கொண்டிருக்கின்றது என்று சொன்னார்கள். ஆனால் அதை இன்று தான் 8—3—1982 அன்றுதான் சொல்லவேண்டுமா ? தவறுகள் எங்கெங்கே உங்கள் கவனத்திற்குக் கொண்டு வரப்படுகின்றனவோ அவைகளை உடனடியாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் மிகவும் வேகமாக நடவடிக்கை எடுக்கப்படும். இந்த அரசைப் பற்றி ஏற்கனவே சொல்லி இருக்கிறேன். தட்டுங்கள் திறக்கப்படும் என்று இல்லாமல் தட்டாமலே திறக்கின்ற அளவுக்கு காரியங்களைச் செய்து வருகிறது. அதைப்போலவே இதுபற்றியும் கவனிக்கும்.

**திரு. கே. தனுக்கோடித் தேவர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குடிநீர் மேல்நிலைத் தொட்டிகள் கட்டப்பட்டு, என்னுடைய தொகுதியிலே அதைப் பழுதுபார்க்க ஆள் இல்லாமல்—ஊராட்சி மன்றங்கள் மூலமாக கட்டப்பட்ட பல மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் பழுதுபட்டிருக்கின்றன. அரசு அதற்குரிய நடவடிக்கை எடுத்து அந்தத் தொட்டிகளைப் பழுது பார்க்க நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவர் அவர்களே, முதுகுளத்தூர் தொகுதி முக்கியமான தொகுதியாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன குறையைத் தீர்ப்பதற்கு மறுபடியும் அதிகாரிகளோடு பேசி ஆவன செய்ய இந்த அரசு ஏற்பாடு செய்யும்.

**திரு. பு. கோ. ஆனூர் ஜகதீசன் :** தலைவர் அவர்களே, குடிநீர் வடிகால் வாரியம் குடிநீர் திட்டத்தை ஏற்பதற்கு முன்னாலே ஊராட்சி ஒன்றியங்கள் பிரஷர் டாங்குகள் கட்டியிருக்கின்றன. அப்படி பிரஷர் டாங்கு மூலம் குடிநீர் விநியோகம் செய்து இருந்தாலும் கூட, பல்வேறு இடங்களில் குடிநீர்ப் பற்றாக்குறை புதிதாக தோற்றுவிக்கப்பட்டு இருக்கிறது. மேலும், அப்படிப்பட்ட பிரஷர் டாங்குகள், மேல்நிலைத் தொட்டிகள் மிகவும் பழுதான நிலையில் இருப்பதால், புதிதாக குடிநீர் தொட்டிகள் அங்கெல்லாம் கட்டித்தர அரசு முன்வருமா ? அதற்கான பராமரிப்புப் பணியாளர்களையும் காலதாமதம் இல்லாமல் உடனடியாக நியமிக்க இந்த அரசு முன்வருமா ? அப்படிப்பட்ட பணியாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டு [illegible] ?



**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவர் அவர்களே, அந்த ஊழியர்களுக்கு குறைந்த பட்ச ஊதியம் என்பதைப் பற்றி அரசு பரிசீலனை செய்யவில்லை. அவர் கூறிய மற்றப் பிரச்னைகளைப் பொறுத்தவரையில் நான் சொல்ல விரும்புவது, எதையும் ஜெனரலைஸ் செய்யாமல், செங்கற்பட்டு தொகுதியில் இன்னின்ன இடத்தில் இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொன்னால், அதற்குத் தக்க நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## முத்தையாபுரம், இராமச்சந்திராபுரம் கிராமங்களுக்கான குடிநீர் திட்டம்.

* **வினா எண் 415—திரு. ஆர். கே. பெருமாள் :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முத்தையாபுரம், இராமச்சந்திராபுரம் கிராமத்திற்கு விளாத்தி குளம் ஆற்றில் இருந்து குடிதண்ணீர் கொண்டு வரும் நோக்கம் அரசுக்கு உண்டா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு மதிப்பீடு ?

(இ) எப்போது வேலை ஆரம்பிக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** (அ), (ஆ) மற்றும் (இ) இராமச்சந்திராபுரம் உள்ளடங்கிய பனையடிப்பட்டி மற்றும் நான்கு சிற்றூர் களுக்கான கூட்டு குடிநீர் திட்டத்தின் மதிப்பீடு ரூ. 9.35 லட்சம் ஆகும். தற்போது திட்டத்தின் அனைத்துப் பணிகளும் முடிவடைந்து சோதனை ஓட்ட அடிப்படையில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. புதூர் ஒன்றியத்தைச் சார்ந்த முத்தையாபுரம் சிற்றூர் பிரிவு 6 (நல்ல குடிநீர் நிலைகள் உள்ளது)-ல் வருவதால், இச்சிற்றூருக்கான குடிநீர் மேம்பாட்டுப் பணிகள், மாநிலத்திலுள்ள பிரிவு 6-ல் அடங்கியுள்ள அனைத்து சிற்றூர்களில் திட்டங்கள் மேற்கொள்ளப் படும்போது, பரிசீலிக்கப்படும்.

## திருச்சி, மதுரை மாவட்டக் காடுகளில் கிடைக்கும் விலையுயர்ந்த பச்சைக் கற்கள்.

* **வினா எண் 416—திரு. எம். சின்னசாமி :** மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், வெள்ளியணை, மதுரை மாவட்டம் வேடசந்தூர், பாளையம் ஆகிய பகுதிகளில் உள்ள காடுகளில் விலையுயர்ந்த பச்சைக்கற்கள் கிடைப்பது அரசுக்குத் தெரியுமா ?

வைரங்களையே வைத்து உலக வியாபாரிகளைக் கவரும் ஜப்பானைப்போல்
இயற்கை வைரத் தொழிற்சாலையையும் வியாபார ஸ்தலத்தையும் குமரியில்
நிறுவ அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** தலைவரவர்களே, நான்
ஏற்கெனவே குறிப்பிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடு
வதைப்போல் அந்த பகுதிகளிலே வைடூரிய கற்கள் பரவலாக கிடைப்பதால்,
எவ்வளவு இருக்கிறது என்ற ஒரு கணக்கு தற்போது அரசிடம் இல்லை.
மாநில புவியியல் பிரிவு ஆய்வு செய்து, இலாபகரமாக இருக்குமானால் ஒரு
தொழில் கூடம் அல்லது விற்பனை நிலையத்தை ஏற்படுத்த வாய்ப்பு
இருந்தால் அதற்குப் பின்னால் இதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

**திரு. டி. மணி :** தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில்
தடிக்காரன்கோணத்திற்கு வடபுறம், பால்குளம் அருகேயும் மகேந்திரகிரி
தோட்டத்திற்கு அருகேயும் இந்த இரத்தின கற்கள் ஏராளமாக
கிடைக்கின்றன. 1976-லே அவை எடுக்கப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது.
இந்தக் கனிவளத்தை எடுக்கின்ற அதிகாரம் மாநில சர்க்கார் பொறுப்பில்
இருக்கிறதா அல்லது மத்திய சர்க்கார் பொறுப்பில் இருக்கிறதா? அந்தப்
பகுதிகளில் இருக்கிற இரத்தின கற்களை முழுமையாகக் கண்டறிய ஒரு
ஆய்வு நடத்தி, வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய தமிழக அரசு ஏற்பாடு
செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** தலைவரவர்களே, அந்த
மாவட்டத்தில் பரவலாக வைடூரிய கற்கள் கிடைக்கின்றன என்று நான்
ஏற்கெனவே சொன்னேன். தமிழ்நாடு புவியியல் பிரிவினர் சார்பிலே ஒரு
விரிவான ஆய்வு அந்தப் பகுதியில் நடத்தப்பட்டு, அதற்கான நடவடிக்கை
மேற்கொள்ளப்படும்.

**வெல்லம்பட்டி, அச்சனம்பட்டி கிராம ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்கும் திட்டம்.**

* **வினா எண் 418.—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :**
மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு
விடையளிப்பாரா—

**வேடசந்தூர் தாலுகா, வெல்லம்பட்டி கிராமம் வெல்லம்பட்டி,**
அச்சனம்பட்டி ஆகிய ஊர்களில் ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டு மனைக்குரிய
இடங்களை ஆர்ஜிதம் செய்து அளிப்பதில் காலதாமதம் ஆவதன் காரணம்
என்ன?



**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** வேடசந்தூர் வட்டம் வெல்லம்பட்டி
கிராமம் உட்கடை அச்சனம்பட்டியில் சர்வே எண் 131/2-ல் உள்ள கிராம
நத்தத்தில் சுமார் 0.45 ஏக்கரில் 8 வீடுகளில் வசித்து வந்த 15 அரிசனக்
குடும்பங்களில் 7 குடும்பங்களுக்கு மட்டுமே வீட்டடி மனை வழங்க வேண்டி
யுள்ளது. இது சம்பந்தமாக திண்டுக்கல் ஆதிதிராவிடர் நலத் தனித்
தாசில்தாரால் சர்வே எண் 131/1டி-ல் உள்ள 0.40 ஏக்கரில் வீட்டுமனைக்காக
நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. உத்தேச நில ஆர்ஜித
நிலத்திற்கு விலை மதிப்பீடு செய்வதற்கு மார்க்கெட் மதிப்பீட்டு நிலங்கள்
சம்பந்தமான புள்ளி விவரம் சேகரிக்கவேண்டியுள்ளது. இப்பணியை விரைவில்
முடித்து நிலம் ஆர்ஜிதம் செய்து பட்டா வழங்கப்படும் என மாவட்ட
ஆட்சியர் அறிவித்துள்ளார்.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** தலைவரவர்களே, ஆதி
திராவிடர்களுக்கான குடியிருப்புகளுக்கு அரசு போய் நிலங்களை ஆர்ஜிதம்
செய்யும்போது காலதாமதம் ஏற்பட பல்வேறு காரணங்கள் இருக்கின்றன.
நிலச் சொந்தக்காரர்கள் நீதிமன்றத்திற்குப் போகிறார்கள். இந்த குறிப்பிட்ட
இரண்டு ஊர்களையும் பொறுத்தவரையில் அந்த நிலங்களின் உரிமையாளர்கள்
அரசு என்ன விலை நிர்ணயிக்கிறதோ அந்த விலைக்கு கொடுக்க நாங்கள்
தயார் என்று எழுதிக்கொடுத்திருந்தும் ஆர்ஜிதம் செய்வதில் காலதாமதம்
ஏற்படுகிறது. ஆகவே, இதற்கு ஒரு கால வரையறையை நிர்ணயம் செய்து
அதற்குள் நில ஆர்ஜிதத்தை செய்து முடிக்க வேண்டுமென்று சம்பந்தப்பட்ட
அதிகாரிகளை அரசு அறிவுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** தலைவரவர்களே, மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போன்று சில இடங்களில் நிலச்
சொந்தக்காரர்கள் எழுதிக்கொடுத்தால், அதுகுறித்து மாவட்ட ஆட்சித்
தலைவர் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசு அறிவுறுத்தும்.
இந்தக் குறிப்பிட்ட இடங்களைப் பொறுத்தவரையில் விரைவில் ஆய்வு செய்து
அதற்கான ஆணை வெளியிட அரசு நடவடிக்கை எடுக்கும்.

**ஆண்டுதோறும் ஆதிதிராவிடர்களுக்காகக் கட்டப்படும் வீடுகள்**

* **வினா எண் 419.—திரு. செ. செம்மலை :** மாண்புமிகு ஆதிதிராவிடர்
நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டொன்றுக்கு அரிசனங்களுக்கு எத்தனை வீடுகள் கட்டிக்
கொடுக்க அரசு முடிவு செய்துள்ளது?

(ஆ) அதை அதிகப்படுத்த அரசு ஏதேனும் முயற்சிகள் மேற்கொள்
ளுமா?

(ஆ) ஆம் எனில், அத்தகைய கற்களை தனியார் எடுத்து விற்பதை தடை செய்து அரசே எடுத்து நடத்த முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) தெரியும்.

(ஆ) தொழில்துறையின் புவியியல் பிரிவு இதைப்பற்றி ஆராய்ச்சி மேற்கொண்டுள்ளது. அரசே இவ்வகை கற்களை வெட்டி எடுப்பது மேற்படி ஆராய்ச்சியின் முடிவைப் பொருத்து இருக்கிறது.

திரு. எம். சின்னசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கற்களை பூமியில் இருந்து எடுப்பவர்கள் சில அப்பாவிகள். அவர்கள் எடுக்கும் கற்களை சிலர் குறைந்த விலைக்கு வாங்கி, அதிக விலைக்கு விற்று, நிறைய லாபம் பெறுகிறார்கள். அரசு இதைத் தடை செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, இந்த அரசின் அனுமதி பெற்று யாரும் அங்கே அந்தக் கற்களை தோண்டி எடுக்க வில்லை. திருட்டுத்தனமாக, யாருக்கும் தெரியாமல் அந்தப் பகுதியில் தவறு செய்கிறவர்கள் மீது வருவாய்த் துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். சிலர் மீது வழக்கும் போடப்பட்டு இருக்கிறது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, இத்தகைய விலையுயர்ந்த கற்கள் வேடசந்தூர், அய்யலூர், செம்மடை, ஒட்டன்சத்திரம், கரூர் பகுதிகளில் ஏராளமாகக் கிடைக்கின்றன. இப்படி ஏராளமாகக் கிடைக்கும் கற்களைப் பற்றி விரிவான ஆய்வு செய்து, தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப்போல, பரவலாக அந்தப் பகுதியில் அந்தக் கற்கள் கிடைக்கின்றன என்று கண்டுபிடிக்கப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதுபோல், தொழில்துறை புவியியல் பிரிவு அந்தக் கற்களைக் குறித்து ஆய்வு மேற்கொண்டு, அந்த ஆபரணக் கற்களை பொருளாதார ரீதியில் லாபகரமாக நடத்தமுடியுமா என்பதற்கான ஆய்வு மேற்கொண்டு இருக்கிறது. ஆகவே, இது குறித்து பின்னர் முடிவு எடுக்கப் படும்.

திரு. பி. எம். தங்கவேல் ராஜ் : தலைவர் அவர்களே, கிருஷ்ணராயபுரம் தொகுதி கோனூரில் பச்சைக் கற்கள், சிவப்புக் கற்கள் அந்தப் பகுதியில் தோண்டி எடுக்கப்பட்டது என்று தெரிந்தவுடன், ஆர்.டி.ஓ. அவர்களுக்கு [illegible]வல் கொடுக்கப்பட்டு, அந்த ஆர்.டி.ஓ. அவர்கள் [illegible] கைப்பற்றி,



கிட்டத்தட்ட 25 மூட்டைகள் கைப்பற்றப்பட்டு, பாதுகாப்பில் வைக்கப்பட்டன. சென்ற ஆண்டு இந்த கேள்வி கேட்கப்பட்டது. மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் அதற்கு பதில் அளிக்கின்ற நேரத்தில் அங்கே தொழிற்சாலை அமைப்பது ஆய்வில் உள்ளது என்று சொன்னார்கள். இந்த ஆண்டாவது அந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன். மாநில புவியியல் பிரிவு இது சம்பந்தமாக ஆய்வு மேற்கொண்டுள்ளது. அதனுடைய முடிவு தெரிந்ததற்குப் பின்னாலே இதுகுறித்து முடிவுகள் மேற்கொள்ளப்படும்.

### குமரி மாவட்டத்தில் கிடைக்கும் இரத்தினக்கற்கள்.

* வினா எண் 417.—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் ஒருவிதமான இரத்தினக் கற்கள் கிடைப்பதாக அரசுக்கு அறிக்கைகள் கிடைத்துள்ளதென்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம்.

(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் கல்குளம் மற்றும் தோவலா வட்டங்களில் கிரைசோபெரில் எனப்படும் ஒருவகை மணிக்கல் (வைடூரியம்) கிடைப்பது கண்டறியப்பட்டுள்ளது. இவைகள் ஒரு குறிப்பிட்ட பகுதிக்குள் அமைந்தில்லாமல், சிதறிய நிலையில் அமைந்துள்ளன. இவை பிற கனிமங்களைப் போல வடிவமும் ஆழ அமைப்பும் இல்லாததால் இவற்றின் இருப்பு அளவை கணக்கிட இயலவில்லை.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. பி. வின்சென்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வைரம் [illegible] மாவட்டம் குமரி மாவட்டம். தமிழ் தாய்க்கு வைரக் கற்களை [illegible] குமரிக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் செயற்கை

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** (அ) 1979-80 மற்றும் 1980-81 ஆகிய இரு ஆண்டுகளுக்கு ஆண்டொன்றுக்கு 5,000 வீடுகள் வீதம் கட்டிக் கொடுக்க ஆணையிட்டுள்ளது.

(ஆ) ஆணையிட்ட கட்டிடங்களை பூர்த்தி செய்வதே அரசின் தற்போதைய நோக்கம். இதை அதிகப்படுத்தும் உத்தேசம் ஏதும் தற்சமயம் இல்லை.

**திரு. செ. செம்மலை :** தலைவரவர்களே, இப்படிக் கட்டப்பட இருக்கிற வீடுகளை நாட்கோவின் சொந்தப் பொறுப்பில் கட்டிக்கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா? அல்லது கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தின் மூலம் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு பரிசீலித்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவிக்கப்பட்டிருக்கக்கூடிய இந்த 10,000 வீடுகளையும் இரண்டு ஆண்டுகளிலே நாட்கோ மூலமாக இலவசமாகக் கட்டித் தரவேண்டும் என்று அரசு ஆணையிட்டுள்ளது. இதற்காக ஒவ்வொரு வீட்டுக்கும் ரூபாய் 5,060 ஒதுக்கீடு செய்து 207 சதுர அடி பரப்பளவிலே வீடுகள் கட்டித் தரவேண்டும் என்று இந்த அரசு ஆணைகளைப் பிறப்பித்திருக்கிறது. ஆனால் தற்போது விலையேற்றத்தின் காரணமாக இந்த விலையிலே வீடுகளைக் கட்டுவது என்பது இயலாத காரியம் என்று நாட்கோ மேலாண்மை இயக்குநர் தெரிவித்திருக்கிறார்கள். அந்தப் பரப்பளவிலே வீடுகளைக் கட்டிக்கொடுக்க ஏறத்தாழ 15,000 ரூபாய் வரையில் செலவாகும் என்ற எண்ணத்தோடு அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அரசு அதைத் தீவிரமாகப் பரிசீலித்து இந்தத் திட்டத்தை தொடர்ந்து நாட்கோ மூலமாகச் செயல்படுத்துவதா அல்லது ரூரல் ஹவுஸிங் ஸ்கீமிலே செயல்படுத்துவதா என்பது பற்றி முடிவு எடுக்க தற்போது அந்த கோப்பு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு சுற்றனுப்பப்பட்டிருக்கின்றது. விரைவிலே அதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு இதன்மீது அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ரா. கிருஷ்ணன் :** தலைவரவர்களே, 1979 ஆம் ஆண்டு 5,000 வீடுகள் கட்டுவது என்பதும் 1980 ஆம் ஆண்டிலே 5,000 வீடுகள் கட்டுவது என்பதும் உத்தேசம். ஆனால் இந்த அரசு வந்த பிறகு நாட்கோ மூலமாக இனாமாகக் கட்டிக் கொடுக்கப்பட வேண்டிய வீடுகள் கட்டிக்கொடுக்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா? ஆகவே குறைந்தபட்சம் இந்த ஆண்டுக்கான வீடுகளையாவது கட்டிக்கொடுக்கப்படும் என்ற உத்தரவாதத்தைத் தர அரசு முன்வருமா?



**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** தலைவரவர்களே, இந்த ஆண்டு அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். ஆனால் தொடர்ந்து இந்த வீடுகளை ரூரல் ஹவுஸிங் ஸ்கீம் மூலமாகக் கட்டுவதற்கான நடவடிக்கைகளை எடுக்கலாம் என்று இருக்கின்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட ஒரு கோப்பிலே இதைப்பற்றி குறிப்பிடுகின்றபோது இத்தகைய வீடுகளை ஆதி திராவிடர்களுக்குக் கட்டித் தருவதை விட, இவ்வளவு அதிகமாக ஒதுக்கீடு செய்து வீடுகளைக் கட்டித் தருவதை விட அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்த ஆதி திராவிட தலைவர்களை அழைத்து ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்து அந்தக் கூட்டத்தின் வாயிலாக ஆதி திராவிட மக்களுக்கு வீடுகளைக் கட்டித் தருவதற்குப் பதிலாக அவர்களுடைய பொருளாதார நிலையினை உயர்த்துவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கலாம் என்று முதல்வர் அவர்கள் ஆணையிட்டிருந்தார்கள். இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டு அரசு நிச்சயமாக இதிலே அதிக அக்கறை செலுத்தி விரைவிலே ரூரல் ஹவுஸிங் ஸ்கீம் மூலமாக எவ்வளவு மானியத்தை அளித்து இந்த வீடுகளைக் கட்ட முடியுமோ அதற்கான நடவடிக்கைகளை எடுக்கும்.

**திரு. இரா. கருப்பையா :** தலைவரவர்களே, 1979 மற்றும் 1980 ஆகிய ஆண்டுகளில் 5,000, 5,000 வீடுகள் கட்டப்படப் போவதாக அமைச்சரவர்கள் அறிவித்திருந்தார்கள். எந்தெந்த இடங்களில் எத்தனை எத்தனை வீடுகளைக் கட்டுவதற்கு அரசு முடிவு செய்திருக்கின்றது? அடுத்து இதுசம்பந்தமாக சில புதிய பிரச்சினைகள் எழுந்திருப்பதாகவும் இந்த வீடுகளைக் கட்டுவதற்கான தொகை சம்பந்தமாக பிரச்சினைகள் வந்திருப்பதாகவும் அது சம்பந்தமாக முதலமைச்சர் அவர்கள் முடிவு செய்யவேண்டும் என்று அமைச்சரவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே இந்த வீடுகளைக் கட்டுவதற்கான வேலைகள் எப்போது துவங்கும் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கக்கூடிய கருத்தின் அடிப்படையிலேதான் அரசைப் பொறுத்தவரையிலே பரிசீலனை செய்து வருகிறது. விரைவிலே இது குறித்து ஆணைகள் வெளியிடப்படும்.

**திரு. ஜி. மூர்த்தி :** தலைவரவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களின் பொருளாதார நிலைமையினை உயர்த்துவதற்காக அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என்று குறிப்பிட்டிருப்பதற்காக எங்களுடைய கட்சியின் சார்பிலே நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆதி திராவிட மக்களுக்காகக் [illegible] அரசாங்கம் [illegible] வழங்கிய [illegible]

கட்டுவதாக முடிவு செய்துள்ளார்களா ? அல்லது ஏற்கெனவே தாழ்த்தப்பட்ட மக்கள் வைத்துள்ள பட்டா நிலங்களிலே கட்டுவதற்கு முன்வருமா ? அல்லது ரெவின்யூ புறம்போக்கு அல்லது டீ.சி. புறம்போக்கு நிலத்திலே இந்த வீடுகள் கட்டப்படுமா ?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீடுகள் கட்டித் தருகின்றபோது ஆதி திராவிட மக்களுக்கு அளிக்கப்பட்டிருக்கக்கூடிய வீட்டுமனை உள்ள இடங்களிலும், அரசு புறம்போக்கிலே அளிக்கப்பட்டிருக்கக்கூடிய மனைகளிலேயும் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எல். இளையபெருமாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிடுகின்றபோது முதல்வர் அவர்கள் இந்த வீடு கட்டும் திட்டத்தை விட பொருளாதார முன்னேற்றம் செய்யலாம் என்ற யோசனையைத் தெரிவித்ததாக அமைச்சர் அவர்கள் தகவல் கொடுத்தார்கள். ஆகவே இந்த வீடு கட்டும் திட்டத்தை அரசு கைவிட விரும்பிவிட்டதா ? இந்த இரண்டாண்டுகளிலேயும் கட்டப்பட வேண்டிய வீடுகளில் நாட்கோ மூலமாக ஒரு வீடு கூட கட்டிக் கொடுக்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா ? ஆகவே, வீடு கட்டும் திட்டத்தைக் கைவிட அரசு விரும்பிவிட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ரா. கிருஷ்ணன் அவர்களும் இதையே கேட்டார்கள். தமிழில் மாற்றி மாற்றி வார்த்தைகளைப் போட்டு, ஒரே கேள்வியையே எல்லோரும் கேட்டுக் கொண்டிருக்கக்கூடாது. அவர் கேட்டதற்குத்தான் சர்வகட்சியின் உறுப்பினர்களும் ஒன்று சேர்ந்து முடிவு எடுக்கலாம் என்று அமைச்சர் அவர்கள் பதில் கூறியிருக்கிறார்கள் . .

THIBU L. ELAYAPERUMAL.—It is a very important question..

The Hon. SPEAKER:—Not only it is a very important question but it is a very good question, also.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்கின்ற அந்தத் திட்டத்தை அரசு கைவிடவில்லை. அந்தத் திட்டத்தை தொடர்ந்து செயலாற்ற வேண்டும் என்ற முயற்சிகளில்தான் ஈடுபட்டு வருகிறது. நான் ஹவுசிங் ஸ்கீம் மூலமாகக் கூட தனியாக அவர்களுக்கு வீடுகளைக் கட்டித்





தருகிறோம். தமிழகம் முழுவதும் ஒரே பேட்டர்ன் என்ற அடிப்படையில் அந்தத் திட்டத்தைக் கொண்டு வருவது குறித்துத்தான் அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

Thiru L. ELAYAPERUMAL.—It is a very importan question. After the formation of the AIADMK Government, under this scheme not a single house was constructed. The Minister was not making a proper reply. The question was not replied by the Minister.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதையெல்லாம் மானியத்திலே பேச உங்களுக்கு வாய்ப்பிருக்கிறது. (குறுக்கீடுகள்-குழப்பம்)

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச வீடுகளை கட்டித் தருகிற திட்டத்தை அரசு கைவிடவில்லை என்று ஏற்கெனவே பதில் அளிக்கும்போது தெரிவித்திருக்கிறேன். ஆனால் தற்போது இருக்கக்கூடிய விலை ஏற்றத்தின் காரணமாக அரசுக்கு ஏற்பட்டிருக்கிற பல்வேறு பிரச்னைகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் நன்றாக அறிவார்கள் என்று நம்புகிறேன். தற்போது பரிசீலனை செய்துதான் அவைகளை தொடர்ந்து செயல்படுத்த முடியும்.

**திரு. எல். இளையபெருமாள் :** இரண்டு வருஷமாக வீடுகளே கட்டப்படவில்லை என்பதுதான் பிரச்னை. வாடகைக்கு விடப்படுவதைப்பற்றி அல்ல. இதுவரையில் எவ்வளவு வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன என்ற விவரம் தேவை . . ,

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** பேரவைத் தலைவர் அவர்களே, 1977-78 ஆம் ஆண்டில் 5 ஆயிரம் வீடுகளைக் கட்ட அரசு உத்தரவிட்டது. அவற்றில் 31—1—1982 முடிய 4,956 வீடுகளைக் கட்டி முடித்திருக்கிறது. இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால்தான் இந்த வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்-குழப்பம்)

**திரு. எல். இளையபெருமாள் :** இந்த இரண்டு ஆண்டுகளில் ஏதாவது வீடுகளை கட்டியிருக்கிறீர்களா இல்லையா என்பதுதான் கேள்வி ?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** பேரவைத் தலைவர் அவர்களே, 1978-79-க்கும், 1980-81-க்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்கிறார்கள் என்று கருதுகிறேன். இந்த இரண்டு ஆண்டுகளில் 5,000 வீடுகள் ஒவ்வொரு ஆண்டுக்கும் என்ற விதத்தில் கட்டப்படவேண்டும் என்று ஆணைகள்

பிறப்பிக்கப்பட்டன. வீடுகளை கட்டிக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் விலைவாசி ஏற்றத்தின் காரணமாக நினைத்தது போல் இந்த வீடுகளைக் கட்ட முடியவில்லை. ஒதுக்கப்பட்ட தொகையில் அவ்வாறு கட்டுவது என்பது சாத்தியப்படாது என்று தாட்கோவின் மேலாண்மை இயக்குநர் தெரிவித்திருக்கிறார். அதைத்தான் இந்த அரசு பரிசீலனை செய்து வருகிறது. பரிசீலனை முடிந்த பிறகு, தேவையான ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

### 1981 மார்ச் முடிய வேலையில்லாத இளைஞர்களுக்கு வழங்கப்பட்ட உதவித்தொகை.

*** வினா எண் 420—திரு. ரா. உமாநாத் :** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1981 மார்ச் மாதம் முடிய வேலை இல்லாத இளைஞர்களுக்கு உதவித்தொகை ஆக கொடுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு ?

(ஆ) மாவட்ட வாரியாக எத்தனை வேலை இல்லாத இளைஞர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது ?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** (அ) ரூ. 21,07,528 (ரூபாய் இருபத்தோரு இலட்சத்து ஏழாயிரத்தி ஐநூற்று இருபத்தெட்டு மட்டும்). இதுவரையில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

(ஆ)—

| | |
|---|---|
| (1) சென்னை | 167 |
| (2) செங்கல்பட்டு | 229 |
| (3) வட ஆற்காடு | 561 |
| (4) தென்னாற்காடு | 584 |
| (5) திருச்சிராப்பள்ளி | 910 |
| (6) புதுக்கோட்டை | 101 |
| (7) தஞ்சாவூர் | 201 |
| (8) மதுரை | 484 |
| (9) இராமநாதபுரம் | 517 |
| (10) திருநெல்வேலி | 381 |
| (11) கோயம்புத்தூர் | 721 |
| (12) தர்மபுரி | 350 |
| (13) சேலம் | 936 |
| (14) நீலகிரி | 271 |





| | |
|---|---|
| (15) கன்னியாகுமரி | 777 |
| (16) பெரியார் மாவட்டம் | 586 |
| மொத்தம் .. | 78,836 |

**திரு. ரா. உமாநாத் :** வேலையில்லாத இளைஞர்களுக்கு நிவாரணம் கொடுப்பது என்பது கடந்த தேர்தல் காலத்தில் ஆளும் கட்சி கொடுத்திருக்கக் கூடிய ஒரு முக்கியமான வாக்குறுதி என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். அந்த வாக்குறுதியை நம்பி பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் தேர்தலில் செயல்பட்டார்கள். அதில் அவர்கள் ஊக்கம் பெற்று செயல்பட்டார்கள். ஆனால் இப்போது கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளுக்கு ஏழாயிரம் பேர்களுக்குத்தான் மாநிலம் முழுவதும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த எண்ணிக்கை அவர்களுக்கு மிகவும் சோர்வை உண்டாக்கியிருக்கிறது. ஆகவே தேர்தல் காலத்தில் கொடுக்கப்பட்ட வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு, இப்படிப்பட்ட வேலையில்லாத இளைஞர்களுக்கு நிவாரணம் கொடுக்க மொத்தமாக ஒரு ப்ரோக்ராம் ஏதாவது அரசாங்கம் தீட்டியிருக்கிறதா ? எவ்வளவு பேர்களை எவ்வளவு ஆண்டுகளில் கவர் செய்வதற்கு திட்டம் தீட்டி இருக்கிறீர்கள் ? இந்தக் குறைவான எண்ணிக்கையில் கொடுப்பதற்குக் காரணம், அரசாங்கம் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்குத் தவறிவிட்டதால்தான் இந்த எண்ணிக்கைக் குறைவா ?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** தேர்தல் நேரத்தில் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் இந்த அரசைப் பொறுத்தவரையில் கவனமாக மட்டுமின்றி அதில் அதிக அக்கறையும் செலுத்தி வருகிறது. இந்தக் குறிப்பிட்ட திட்டம் 1—7—1980 முதல் அமல்படுத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வி 1981 மார்ச் முடிய வேலையில்லாத இளைஞர்களுக்கு உதவித் தொகையாக கொடுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதாகும். அதன் அடிப்படையில் நான் அளித்த பதில் அமைந்திருக்கிறது. தற்போது 31—12—1981 வரை 11,284 பேர்களுக்கு ரூ. 67.31 இலட்சம் செலவிடப்பட்டிருக்கிறது.

**திரு. ரா. உமாநாத் :** நீங்கள் கொடுத்துள்ள கணக்குப் பிரகாரமே எண்ணிக்கை மிகக்குறைவாகத் தானிருக்கிறது. தேர்தல் நேரத்தில் வாக்குறுதி கொடுக்கிறபோது பட்டதாரிகள், பட்டம் பெறாதவர்கள் என்று டிஸ்க்கிரிமினேட் செய்து வாக்குறுதி அளிக்கப்படவில்லை. வேலையில்லாத இளைஞர்களுக்கு என்றுதான் குறிப்பிடப்பட்டிருந்தது. [illegible] முதல்வர் அவர்களிடம் எஸ்.எஸ்.எல்.சி., பி.யு.சி. [illegible] [illegible]

சொன்னார்கள். ஆகவே எஸ்.எஸ்.எல்.சி., பி.யு.சி. பாஸ் செய்தவர்களுக்கும் இதை எக்ஸ்டென்ட் செய்யும் உத்தேசமுண்டா? அதற்கான ப்ரபோசல்கள் உண்டா? இல்லை என்றால் காரணம் என்ன? இல்லாவிட்டால் அவர்களுக்கும் எப்போது கொடுக்கப் போகிறீர்கள்?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** இந்த உதவித் தொகை பெற சில விதிமுறைகளை அரசு வைத்திருக்கிறது. அதில் பெற்றோர்கள் ஆண்டு வருமானம் ரூ. 24,000-க்கு குறைவாக இருக்க வேண்டும் என்றும் விண்ணப்பதாரருக்கு 35 வயது முடிந்திருக்கக்கூடாது என்பன போன்று சில விதிமுறைகள் வைக்கப்பட்டுள்ளன. (குறுக்கீடு) இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் இவ்வளவு அதிகமான வருமான வரம்பை புரட்சித் தலைவரின் இந்த அரசுதான் வைத்திருக்கிறது. இதுமட்டுமின்றி, பல்வேறு படிப்புத்துறைகளில் பட்டம் பெற்ற பட்டதாரிகள், பட்ட மேற்படிப்புப் பட்டம் பெற்றவர்கள், உரிய கல்வித் தகுதி பெற்ற இடைநிலைத் தர ஆசிரியர்கள், உரிய கல்வித் தகுதி பெற்ற தொடக்க நிலைத் தர ஆசிரியர்கள், உரிய கல்வித் தகுதி பெற்ற உடற்பயிற்சி ஆசிரியர்கள், உரிய கல்வித் தகுதி பெற்ற தமிழ்ப் பண்டிதர்கள், உரிய கல்வித் தகுதி பெற்ற கைவினைப் பயிற்சியாளர்கள், பொறியியல் தகுதிப் பட்டம் பெற்றவர்கள் இப்படிப்பட்டவர்களுக்கு உதவித் தொகை தற்போது வழங்கப்பட்டு வருகிறது. மற்றவர்களுக்கு விரிவுபடுத்த

(முற்பகல் 10-20)

வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். அரசின் நிதி நிலைமையைப் பொறுத்துத்தான் விரிவுபடுத்த முடியுமென்றிருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கக்கூடிய கருத்தை அரசு நிச்சயமாகப் பரிசீலனை செய்யும்.

**திரு. சோ. அழகர்சாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, பல நிபந்தனைகளைச் சொன்னார்கள். ஆண்டுக்கு 24,000 ரூபாய் வருமானம் வரக்கூடிய பெற்றோர்களாக இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஐந்து ரூபாய், ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2,000 வருமானம் என்று. அப்படியிருந்தால், தமிழ்நாட்டிலே யாரும் வரமாட்டார்கள். ஆகவே, ஏழை பாமர மக்கள் வேலையில்லாதவர்கள் பயன்பெறும் வகையில் இந்த உதவி கொடுக்க வேண்டியிருக்கிறது. இன்னும் ஒரு நிபந்தனை இருக்கிறது; அதைத் தாங்கள் சொல்ல மறந்துவிட்டீர்கள். ஐந்தாண்டு காலம் தொடர்ச்சியாக வேலை இல்லாமல் இருக்கவேண்டும் என்ற நிபந்தனை இருக்கிறது. அதைத் தளர்த்தவில்லை என்றால் பிரயோசனமில்லை. எனவே, இந்த நிபந்தனையைத் தளர்த்தி, இரண்டு ஆண்டு காலம் வேலையில்லாமல் இருந்தாலும், அந்தக் குடும்பத்திற்கு ஆண்டு வருமானம் ரூ. 3,000 என்று



வைத்துக்கொண்டால், காலாகாலத்தில் ரூ. 50-ஐ வைத்துக்கொண்டு வேலை தேடி அலைவதற்காவது பயன்படும். அந்த ஏற்பாட்டைச் செய்வார்களா?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐந்தாண்டுகள் வேலையில்லாமல், வேலைவாய்ப்பு அலுவலகத்திலே தொடர்ந்து ஐந்தாண்டுகளுக்குக் குறையாத கால அளவிற்கு விண்ணப்பதாரரின் பெயர் இருக்கவேண்டும் என்றும், விண்ணப்பதாரரின் பெற்றோரின் வருமானம் ஆண்டுக்கு ரூ. 24,000-க்கு மேற்படக்கூடாது என்றும், விண்ணப்பதாரருக்கு 35 வயது முடிவடைந்திருக்கக்கூடாது என்றும், ஆனால், ஆதி திராவிடர், பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த விண்ணப்பதாரரைப் பொறுத்தமட்டில், அவருக்கு 40 வயது முடிவடைந்திருக்கக்கூடாது என்றும், அவர் தமிழ்நாட்டிலுள்ள பள்ளியில் அல்லது கல்லூரியில் படித்திருக்க வேண்டும் என்றும் அல்லது அவருடைய பெற்றோரில் எவராவது அல்லது அவருடைய காப்பாளராவது 15 ஆண்டுகளுக்குக் குறையாமல் தமிழ்நாட்டில் வாழ்ந்திருக்க வேண்டும், விண்ணப்பதாரர் சம்பளம் பெறும் பணியாளர் என்ற வகையில் திங்கள் ஒன்றுக்கு ரூ. 50-க்கு அதிகமான வருமானம் ஈட்டுபவராக இருக்கக்கூடாது என்றும் விதிமுறைகள் இருக்கின்றன. பெற்றோர்கள் ஆண்டு வருமானம் ரூ. 24,000 வரை இருக்க வேண்டும் என்று வைத்திருப்பதற்குக் காரணம், அதிகமான அளவிலே படித்த இளைஞர்கள் பயன்பெற வேண்டுமென்ற எண்ணத்தோடு இந்த அரசு வைத்திருக்கிறது.

**திரு. ப. நெடுமாறன் :** மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசின் உதவித் தொகை வேண்டுமென்று விண்ணப்பம் செய்த மொத்த விண்ணப்பதாரர்கள் எண்ணிக்கை எவ்வளவு? அதை அமைச்சர் அவர்கள் அறிவிக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றிய விவரம் என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி கேட்கலாம்.

**திரு. இரெ. இராசமாணிக்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே வேலையில்லாமல் இருக்கக்கூடிய இளைஞர்களுடைய கணக்கு விவரம் எவ்வளவு? அவர்களில் இதுவரை அரசுக்கு உதவித் தொகை கோரி விண்ணப்பம் செய்தவர்கள் எத்தனை பேர்? அப்படி விண்ணப்பம் செய்யப்பட்டவர்களில் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த கேள்வியைத்தான் நெடுமாறன் அவர்கள் கேட்டார்கள். வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப்பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

சொன்னார்கள். ஆகவே எஸ்.எஸ்.எல்.சி., பி.யு.சி. பாஸ் செய்தவர்களுக்கும் இதை எக்ஸ்டென்ட் செய்யும் உத்தேசமுண்டா? அதற்கான ப்ரப்போஸல்கள் உண்டா? இல்லை என்றால் காரணம் என்ன? இல்லாவிட்டால் அவர்களுக்கும் எப்போது கொடுக்கப் போகிறீர்கள்?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** இந்த உதவித் தொகை பெற சில விதிமுறைகளை அரசு வைத்திருக்கிறது. அதில் பெற்றோர்கள் ஆண்டு வருமானம் ரூ. 24,000-க்கு குறைவாக இருக்க வேண்டும் என்றும் விண்ணப்பதாரருக்கு 35 வயது முடிந்திருக்கக்கூடாது என்றும் இதுபோன்று சில விதிமுறைகள் வைக்கப்பட்டுள்ளன. (குறுக்கீடு) இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் இவ்வளவு அதிகமான வருமான வரம்பை புரட்சித் தலைவரின் இந்த அரசுதான் வைத்திருக்கிறது. இதுமட்டுமின்றி, பல்வேறு படிப்புத்துறைகளில் பட்டம் பெற்ற பட்டதாரிகள், பட்ட மேற்படிப்புப் பட்டம் பெற்றவர்கள், உரிய கல்வித் தகுதி பெற்ற இடைநிலைத்தர ஆசிரியர்கள், உரிய கல்வித் தகுதி பெற்ற தொடக்க நிலைத் தர ஆசிரியர்கள், உரிய கல்வித் தகுதி பெற்ற உடற்பயிற்சி ஆசிரியர்கள், உரிய கல்வித் தகுதி பெற்ற தமிழ்ப் பண்டிதர்கள், உரிய கல்வித் தகுதி பெற்ற கைவினைப் பயிற்சியாளர்கள், பொறியியல் தகுதிப் பட்டம் பெற்றவர்கள் இப்படிப்பட்டவர்களுக்கு உதவித் தொகை தற்போது வழங்கப்பட்டு வருகிறது. மற்றவர்களுக்கு விரிவுபடுத்த

(முற்பகல் 10-20)

வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். அரசின் நிதி நிலைமையைப் பொறுத்துத்தான் விரிவுபடுத்த முடியுமென்றிருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கக்கூடிய கருத்தை அரசு நிச்சயமாகப் பரிசீலனை செய்யும்.

**திரு. சோ. அழகர்சாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, பல நிபந்தனைகளைச் சொன்னார்கள். ஆண்டுக்கு 24,000 ரூபாய் வருமானம் வரக்கூடிய பெற்றோர்களாக இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். எனக்கு ஞாபகம், ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2,000 வருமானம் என்று. அப்படியிருந்தால், தமிழ்நாட்டிலே யாரும் வரமாட்டார்கள். ஆகவே, ஏழை பாமர மக்கள் வேலையில்லாதவர்கள் பயன் பெறும் வகையில் இந்த உதவி கொடுக்க வேண்டியிருக்கிறது. இன்னொர் ஒரு நிபந்தனை இருக்கிறது; அதைத் தாங்கள் சொல்ல மறந்து விட்டீர்கள். ஐந்தாண்டு காலம் தொடர்ச்சியாக வேலை இல்லாமல் இருக்கவேண்டும் என்ற நிபந்தனை இருக்கிறது. அதைத் தளர்த்தவில்லை என்றால் பிரயோசனமில்லை. எனவே, இந்த நிபந்தனையைத் தளர்த்தி, இரண்டு ஆண்டு காலம் வேலையில்லாமல் இருந்தாலும், அந்தக் குடும்பத்திற்கு ஆண்டு வருமானம் ரூ. 3,000 என்று



வைத்துக்கொண்டால், காலாகாலத்தில் ரூ. 50-ஐ வைத்துக்கொண்டு வேலை தேடி அலைவதற்காவது பயன்படும். அந்த ஏற்பாட்டைச் செய்வார்களா?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐந்தாண்டுகள் வேலையில்லாமல், வேலைவாய்ப்பு அலுவலகத்திலே தொடர்ந்து ஐந்தாண்டுகளுக்குக் குறையாத கால அளவிற்கு விண்ணப்பதாரரின் பெயர் இருக்கவேண்டும் என்றும், விண்ணப்பதாரரின் பெற்றோரின் வருமானம் ஓராண்டுக்கு ரூ. 24,000-க்கு மேற்படக்கூடாது என்றும், விண்ணப்பதாரருக்கு 35 வயது முடிவடைந்திருக்கக்கூடாது என்றும், ஆனால், ஆதி திராவிடர், பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த விண்ணப்பதாரரைப் பொறுத்தமட்டில், அவருக்கு 40 வயது முடிவடைந்திருக்கக்கூடாது என்றும், அவர் தமிழ்நாட்டிலுள்ள பள்ளியில் அல்லது கல்லூரியில் படித்திருக்க வேண்டும் என்றும் அல்லது அவருடைய பெற்றோரில் எவராவது அல்லது அவருடைய காப்பாளராவது 15 ஆண்டுகளுக்குக் குறையாமல் தமிழ்நாட்டில் வாழ்ந்திருக்க வேண்டும், விண்ணப்பதாரர் சம்பளம் பெறும் பணியாளர் என்ற வகையில் திங்கள் ஒன்றுக்கு ரூ. 50-க்கு அதிகமான வருமானம் ஈட்டுபவராக இருக்கக்கூடாது என்றும் விதிமுறைகள் இருக்கின்றன. பெற்றோர்கள் ஆண்டு வருமானம் ரூ. 24,000 வரை இருக்க வேண்டும் என்று வைத்திருப்பதற்குக் காரணம், அதிகமான அளவிலே படித்த இளைஞர்கள் பயன்பெற வேண்டுமென்ற எண்ணத்தோடு இந்த அரசு வைத்திருக்கிறது.

**திரு. ப. நெடுமாறன் :** மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசின் உதவித் தொகை வேண்டுமென்று விண்ணப்பம் செய்த மொத்த விண்ணப்பதாரர்கள் எண்ணிக்கை எவ்வளவு? அதை அமைச்சர் அவர்கள் அறிவிக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றிய விவரம் என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி கேட்கலாம்.

**திரு. இரெ. இராசமாணிக்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே வேலையில்லாமல் இருக்கக்கூடிய இளைஞர்களுடைய கணக்கு விவரம் எவ்வளவு? அவர்களில் இதுவரை அரசுக்கு உதவித் தொகை கோரி விண்ணப்பம் செய்தவர்கள் எத்தனை பேர்? அப்படி விண்ணப்பம் செய்யப்பட்டவர்களில் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதே கேள்வியைத்தான் நெடுமாறன் அவர்கள் கேட்டார்கள். வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப்பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[1982 மார்ச் 8

## 2. தகவல் கோரல்.

### முன் அனுமதியின்றி எழுப்பப் பெறும் பிரச்சினைகள்.

**திரு. மு. அம்பிகாபதி :** பாயின்ட் ஆப் ஆர்டர், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே போக்குவரத்துத் துறையில் கண்டக்டர்கள், டிரைவர்கள் மத்தியில் பெரிய கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திடீரென்று இவ்வாறு கேட்கக் கூடாது. தனியாக அதுபற்றிக் கேட்கவும்.

**திரு. ப. சுந்தரம் :** பாயின்ட் ஆப் ஆர்டர், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூரிலே நான்கு நாட்களாக மொத்த அரிசி வியாபாரிகள், நெல் வியாபாரிகளின் கடை மூடப்பட்டிருக்கிறது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தனியாக கவன ஈர்ப்பு மூலமாகக் கொண்டு வாருங்கள். திடீரென்று இந்தப் பிரச்னை வராது.

**திரு. இரெ. இராசமாணிக்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பகுதியில் பல நாட்களாக காலரா நோய் கண்டு ஏராளமான பேர்கள் இறந்து வருகிறார்கள். அந்தப் பகுதியில் அதிகப்படியான பேர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதை ஒரு வரைமுறையாக கொடுக்க வேண்டும். இன்று தான் கொடுத்திருக்கிறீர்கள். இனிமேல் ஒவ்வொன்றாக எடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. ரா. கிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்திலே செங்கோட்டை என்னுமிடத்திலே போலீஸ் ஸ்டேஷனில் ஒருவர் அடித்துக் கொல்லப்பட்டிருக்கிறார் என்று பரவலாக ஒரு செய்தி . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வக்கீலுக்குப் படித்தவர். அவசர முக்கியத்துவம், கவன ஈர்ப்பு, குறுகிய கால வினா என்று எத்தனையோ முறைகள் இருக்கின்றன. இவற்றில் ஏதேனும் ஒன்றில்தான் கொண்டு வர வேண்டும். இன்று நிதி அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியாக வேண்டும். நேரமில்லை. இதுபோன்ற தகவல்களை என்னுடைய அறையில் வந்து கேட்க வேண்டும்.



1982 மார்ச் 8]

## 3. கவன ஈர்ப்பு.

### பக்தவத்சலம் தொழில்நுட்பப் பயிற்சிப்பள்ளி விடுதி மாணவர்கள் விஷ உணவு காரணமாகப் பாதிக்கப்பெற்றுள்ளது.

**திரு. இரா. தாமரைக்கனி :** தலைவர் அவர்களே, "விஷ உணவு சாப்பிட்டதால் காஞ்சிபுரத்திலுள்ள பக்தவத்சலம் தொழில் நுட்பப் பயிற்சிப் பள்ளி (பாலிடெக்னிக்) விடுதியைச் சார்ந்த 60 மாணவர்கள் மருத்துவ மனையில் அனுமதிக்கப் பெற்றது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, 17—2—1982 அன்று இரவு 7-45 மணி அளவில் காஞ்சீபுரம் பக்தவத்சலம் பாலிடெக்னிக் குடன் இணைந்த விடுதி உணவகத்தில் உணவருந்திய சில மாணவர்களுக்கு தலைசுற்றுதல், வாந்தியெடுத்தல் போன்ற அறிகுறிகள் ஏற்பட்டதாகத் தெரிகிறது. உணவில் ஏதும் விஷம் கலந்திருக்குமோ என்ற சந்தேகத்தில், உணவருந்திய 59 மாணவர்கள் அனைவரும் முன்னெச்சரிக்கையாக மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்களில் இரு மாணவர்கள் மட்டுமே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். மாவட்ட சுகாதார அதிகாரி, நகர சுகாதார அதிகாரி மற்றும் திருப்புகுழி ஆரம்பச் சுகாதார நிலைய மருத்துவர் ஆகியோர் விடுதிக்குச் சென்று விசாரணை நடத்தி யுள்ளனர். மேலும் உணவு மாதிரியும் பரிசோதனைக்காக எடுத்துச் செல்லப் பட்டுள்ளது. விசாரணையிலிருந்து, உணவில் விஷம் கலந்ததற்கான சாத்தியக்கூறுகள் இல்லையென்று தெரிய வந்துள்ளது. பாதிக்கப்பட்ட மாணவர்கள் எல்லோரும் நல்ல நிலையில் உள்ளனர்.

**திரு. இரா. தாமரைக்கனி :** தலைவர் அவர்களே, உணவு மாணவர்களுக்கு அளிக்கப்படுவதற்கு முன்பாக பரிசோதனைக்கு உட்படுத்தப்படுமா? பல்லி, கரப்பான் பூச்சி போன்றவை உணவுப் பொருள்களில் விழுந்துவிடுவதால் இதுபோன்ற நிலைமைகள் ஏற்பட்டு விடுகின்றன. ஆகவே இவற்றை தடுப்பதற்கு தொல்லை தரும் பல்லி, கரப்பான் பூச்சி போன்றவைகளை ஒழிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, உணவு தயாரிக்கப்படுகின்ற சமையல் அறைகள் சுத்தமாக இருக்கவேண்டும் என்றும் நல்லமுறையில் கண்காணித்து பராமரிக்கப்பட வேண்டுமென்றும் அதற்குப் பொறுப்பாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுவார்கள்.

[1982 மார்ச் 8

(முற்பகல் 10-30)

4. வரவு-செலவுத் திட்டம், 1982-83—பொது விவாதம்—தொடர்ச்சி.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பேரவையில் அளிக்கப்பட்டுள்ள 1981-82-வது ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகள் பற்றியும் 1982-83 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை மதிப்பீடுகள் பற்றியும் மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் தங்கள் தங்களுடைய இயல்புக்கேற்பவும், சூழ்நிலைக்கேற்பவும், மன நிலைக்கேற்பவும் இங்கே கருத்துக்களைப் பல்வேறாக வழங்கியிருக்கிறார்கள். ஆளுங்கட்சித் தரப்பிலிருந்தும் எதிர்க்கட்சித் தரப்பிலிருந்தும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உட்பட, 72 பேர்கள் இந்தப் பொது விவாதத்தில் கலந்து கொண்டிருக்கின்றனர். நாட்டின் மேம்பாடு கருதியும் அரசின் பொறுப்பு, கட்சியின் கடமை ஆகியவற்றைக் கருதியும் இவற்றிற் கிடையே உள்ள தொடர்புகளையும் தன்மைகளையும் உணர்ந்து இந்த நிதி நிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கின்ற திட்டங்களை வரவேற்றும் பாராட்டியும் அதற்கேற்ற அளவுக்குப் பல்வேறு யோசனைகளை நல்கியும், புகழுரைகளை வழங்கியும் எனக்கு ஊக்கம் தந்துள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ள நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

எதிர்க்கட்சி ஆற்ற வேண்டிய கடமையின் அடிப்படையில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தம்முடைய உரையின்போது சில கருத்துக்களை எடுத்துத் தெரிவித்தார், சில ஐயப்பாடுகளை எழுப்பி அதற்கான அரசின் விளக்கங்களைப் பெறவேண்டுமென்ற முறையில் குற்றங்கள் என்றும் குறைகள் என்றும் சில கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள். அவற்றிற்கான தெளிவான விளக்கங்களைக் கொடுப்பதற்கான வாய்ப்பினை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உருவாக்கித் தந்திருப்பதற்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நிதி நிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கின்ற திட்டங்கள் சிலவற்றை வரவேற்றும் பாராட்டியும் சிலவற்றைப் பொறுத்து தங்களுடைய எதிர்ப்புக் கருத்துக்களைத் தெரிவித்தும் பரிந்துரைகள் நல்கியும் தங்களுடைய கருத்துக்களை வழங்கிய ஏனைய எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கின்ற சிலர் அரசாங்கத்தை எதிர்க்க வேண்டுமென்ற ஒரே குறிக்கோளின் அடிப்படையில் நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்கள்—கருத்துக்களை இழித்தும் பழித்தும்



1982 மார்ச் 8] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

பேசியும் கேலி, கிண்டல் செய்தும் தங்களுடைய உணர்வுக்கேற்ப கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். அவர்கள் அவ்வாறு வழங்குவதன் மூலம் அவர்களுக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது என்று சொன்னால் அவர்கள் அப்படி மகிழ்ச்சியடைய இந்த நிதி நிலை அறிக்கை ஒரு கருவியாக அமைந்திருக்கிறதே என்பதிலே எனக்கு மகிழ்ச்சி. அவர்களையும் கூட இந்த வகையிலே மகிழ்ச்சியடையச் செய்திருக்கிறோமே என்பதிலே எனக்கு பெரு மகிழ்ச்சி ஏற்படுகிறது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே பட்டமளிப்பு விழாவின்போது 1967 ஆம் ஆண்டு உரையாற்றுகிறபோது ஒரு அருமையான கருத்தை வெளியிட்டார்கள். அந்தக் கருத்தை இந்த அவைக்கு வைப்பதிலே நான் பெருமைப்படுகிறேன்.

" I read, I study, I examine, I hear, I listen, I reflect and out of all this, I try to form an idea in which I can put as much commonsense as I can "

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். "நான் படிக்கிறேன், நான் கேட்கிறேன், நான் கற்கிறேன், நான் ஆராய்கிறேன், நான் கவனிக்கிறேன், நான் சிந்திக்கிறேன். இவை அனைத்திலும் எனது பொது அறிவை எந்த அளவுக்கு செலுத்தமுடியுமோ அந்த அளவுக்குச் செலுத்தி ஒரு கருத்தை உருவாக்க முயல்கிறேன்" என்று எடுத்துத் தெரிவித்தார்கள். ஆகவே படித்துக் கற்று ஆராய்ந்து இந்த நிதிநிலை அறிக்கை பற்றிய கருத்துக்களை கூர்ந்து பார்ப்பார்களானால் அவற்றின்மூலம் இந்த நாட்டிற்கு நலம் பயக்கும் பல திட்டங்களும் மக்களுக்கு நல்வாழ்வு பயக்கும் பல திட்டங்களும் அமைந்திருப்பதை காணலாம். அந்த வகையிலே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இதைக் கற்று ஆராய்ந்து சில பல கருத்துக்களை எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். சில ஐயப்பாடுகளை எடுத்துச் சொல்லியிருக் கிறார்கள். அதற்கு விளக்கம் அளிப்பதன் மூலமாக நாட்டு மக்களுக்கு இருக்கின்ற ஐயப்பாட்டினை போக்குகின்ற வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதிலேயும் எனக்கு மகிழ்ச்சி. பல்வேறு உறுப்பினர்களும், பல்வேறு கருத்துக்களை அந்த வகையிலே எடுத்துத் தெரிவித்திருப்பதானது, அரசு மேலும் தன்னுடைய பணிகளைச் சிறப்பாகவும், செம்மையாகவும் ஆற்ற உறுதுணை புரிந்திருக்கிறார்கள் என்பதில் மகிழ்ச்சி. ஆனால் சிலர் இந்த பட்ஜெட் பற்பொடி பட்ஜெட்டாகவும், கவைக்கு உதவாத பட்ஜெட் என்றும், ஓட்டைப் படகு பட்ஜெட் என்றும், ஒன்றுமே இல்லாத பட்ஜெட் என்றும், கேடுபுகு நுரை பட்ஜெட் என்றும், சூனியமான பட்ஜெட் என்றும் குறிப்பிட் டிருக்கிறார்கள் என்று சொன்னால் பட்ஜெட் ஒரே தன்மையிலேதான் இருக்கிறது. அவரவர்களுடைய பார்க்கின்ற மன நிலையில் அப்படி இப்படி

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1982 மார்ச் 8

மாறி வருகிறது என்பதைக் காட்டுகின்ற வகையில்தான் இவைகள் அமைந்திருக்கின்றன என்று நான் சொன்னேனே தவிர, அதற்காக நான் வருத்தப்படவில்லை. பாராட்டுவதற்காக நான் மகிழ்ந்து விடவும் இல்லை; பழிப்புரைக்காக வருத்தப்படவும் இல்லை. ஆனால் இந்த நிதி ஆண்டை நடத்திச் செல்வதற்கு இங்கே இருப்பவர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்கள் எந்த அளவிற்குப் பயன்பட்டு வருகின்றன என்று கூர்ந்த தன்மையினுடைய அடிப்படையிலே பார்க்கின்றபொழுது மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் நாட்டின் நலன் கருதியும், மக்களுடைய நல்வாழ்வு கருதியும் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்ற பல்வேறு கருத்துக்கள் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டியவைகளாக இருக்கின்றன என்ற வகையிலே இதில் கலந்து கொண்டு உரையாற்றியவர்கள் அத்தனைபேர்களுக்கும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் கூறுகின்றபொழுது இந்த நிதிநிலை அறிக்கை பற்றாக்குறை நிதிநிலை அறிக்கையாக, அதுவும் 204 கோடி ரூபாய் பற்றாக்குறையாக அமைந்திருப்பதன் காரணமாக இந்த அரசினுடைய நிர்வாகத் திறமையின்மையையே இது காட்டுகிறது என்ற முறையில் குற்றஞ் சாட்டிப் பேசினார்கள். பற்றாக்குறை நிதிநிலை அறிக்கையை வைப்பது என்பது புதிய ஒன்று அல்ல. அது நிர்வாகத்தினுடைய திறமைக் குறைவைக் காட்டுகின்ற ஒன்றும் அல்ல. பற்றாக்குறை நிதி நிலை அறிக்கையை வைக்கும்பொழுது எதிர்காலத்தில் அந்தப் பற்றாக்குறையைச் சமாளிக்க முடியும், சரி செய்து கொள்ளவும் முடியும், அதற்கான சூழ்நிலையை உருவாக்க முடியும்; அதற்கான சூழ்நிலையை எதிர்காலத்தில் பெற முடியும் என்ற தைரியத்தினுடைய அடிப்படையில்தான் அரசுகள் பற்றாக்குறை நிதிநிலை அறிக்கைகளைப் பல்வேறு இடங்களிலே வைப்பதும், அடுத்த நிதி நிலைகள் வருகின்றபொழுது திருத்த மதிப்பீடு கொடுக்கின்றபொழுது அந்த அளவிற்கு அவைகளெல்லாம் சமாளிக்கப்பட்டு வருகின்றன என்பதையும் தெளிவாகவும் அறிந்து கொள்ள முடியும். அப்படிப் பார்த்தாலும்கூட, இந்திய பேரரசு 1979-80-இல் 2,750 கோடிக்குப் பற்றாக்குறையும், 1980-81-இல் 2,400 கோடிக்குப் பற்றாக்குறையும், 1981-82-இல் 1,500 கோடி ரூபாய்க்குப் பற்றாக்குறையும், 1982-83-இல் 1,363 கோடிக்கு இந்த ஆண்டு பற்றாக்குறை பட்ஜெட் இருக்கிறது என்று சொன்னால் அதைச் சமாளிக்க முடியும் என்ற தைரியத்தினுடைய அடிப்படையிலே அதனுடைய நிதியமைச்சர்கள் போட்டிருக்கிறார்கள் என்று வருமே தவிர, அதனுடைய நிதியமைச்சர் களுடைய திறமைக் குறைவின் காரணமாக இத்தகைய நிலைகள் ஏற்பட்டன என்று யாரும் சொல்ல முடியாது.



ஆகவே, எல்லா மாநிலங்களுக்கும் பொருந்தும். இங்கும் பொருந்தும். இறந்த காலத்திலே எடுத்து வைத்த பல்வேறு நிதிநிலை அறிக்கைகளைப் பொறுத்தும் பொருந்தும்.

அது மட்டுமல்ல, நிதி நிலையைப் பொறுத்தவரையில் இந்த மாநிலம் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருவதிலே முனைப்புள்ளம் காட்டி ஆண்டுக்காண்டு சிறந்து வருகின்ற நிலைமையை உருவாக்கி வந்திருந்த பொழுதும் கூட, இந்த மாநிலம் ஓவர் டிராப்ட் வாங்க வேண்டிய ஒரு நிலைக்கு ஆளாகாத அளவிற்குத்தான் தன்னுடைய நிதிநிலையில் நிதானமாகவும், நிதிநிலையைப் பொறுத்தவரையிலும் செம்மையாகவும், சிறப்பாகவும் பணியாற்றி வருகிறது என்பதை இந்த அவையினருக்கு எடுத்துக் கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

சாதாரணமாகப் பார்த்தால் மற்றைய பல மாநிலங்கள் சேர்ந்து வாங்கிய ஓவர் டிராப்ட் என்ற கணக்கைப் பார்ப்போமேயானால் 1979-80-இல் 450 கோடி ரூபாய்க்கு ஓவர் டிராப்டுகளைப் பல்வேறு மாநிலங்கள் வாங்கியிருக்கின்றன. 1980-81-இல் 650 கோடி ரூபாய்க்கு ஓவர் டிராப்டுகள் வாங்கியிருக்கின்றன. 1981-82 ஆவது ஆண்டில் 1,450 கோடிக்கு ஓவர் டிராப்டுகள் வாங்க வேண்டிய நிலைக்குப் பல்வேறு மாநிலங்கள் வந்திருக்கின்றன. இதிலே ராஜஸ்தான் மட்டும் 300 கோடி ரூபாய்க்கு மேல் ஓவர் டிராப்டு வாங்க வேண்டிய நிலையில், மேற்கு வங்கம் 260 கோடி ரூபாய்க்கு ஓவர் டிராப்டு வாங்க வேண்டிய நிலையில் இருந்திருக்கின்றன.

**திரு. ரா. உமாநாத் :** மாண்புமிகு தலைவரவர்களே, மேற்கு வங்கத்தினுடைய ஃபிகர்களைப் பொறுத்தவரைக்கும் டிஸ்ப்யூட் இருக்கிறது. அந்த மாநிலம் அதை மறுத்திருக்கிறது. கரெக்ட் ஃபிகர் அல்ல என்று சொல்லியிருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இருக்கலாம். ரிசர்வ் பேங்கிலிருந்து வந்திருக்கின்ற கணக்கினுடைய அடிப்படையில்தான் இதை வைத்தேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போன்று அதைத் திருத்திக்கொள்ள வேண்டிய ஒன்றாகக்கூட இருக்கக்கூடும். நான் வந்திருக்கின்ற கணக்கைத்தான் எடுத்துச் சொன்னேன். இதை நான் குற்றச்சாட்டாகச் சொல்ல வரவில்லை. ஓவர் டிராப்ட் வாங்குவதற்கு அனுமதியையே ரிசர்வ் பேங்க் அளிப்பதன் காரணமாகத் தான் ஓவர் டிராப்டுகள் வாங்க முடிந்திருக்கிறது. ஆகவே அந்த நிலைக்குச் சென்றிருக்கிறது என்பதைக் காட்டுகின்ற ஒன்றாகத்தான் இதைக் குறிப்பிட்டேன். அந்த வகையிலே நிதி நிலையைப் பொறுத்தவரையிலும் நாம் அது நிதானமாக அமைகின்ற

முறையிலேதான் அதைக் கட்டிக் காப்பாற்றி வருகிறோம் என்பதற்காக ஓவர் டிராப்ட் வாங்காத சூழ்நிலையிலே இதுவரையிலும் காப்பாற்றிக் கொண்டு தான் நாம் வருகிறோம்.

(முற்பகல் 10-40)

அதுமட்டுமல்ல, வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுகின்ற வகையிலே கூட மற்றவர்கள் பாராட்டத்தக்கவும், போற்றத்தக்கவும் அளவிற்கு நாம் நிறைவேற்றி வருகிறோம் என்பதை நிதிநிலை அறிக்கையிலே நான் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறேன். மீண்டும் அதை நினைவுபடுத்துவது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன். ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பொறுத்தவரையிலும் ரூ. 1,200 கோடிக்கு மேல் போடப்பட்டது என்றாலும், ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 3,150 கோடிக்கு மொத்த ஒதுக்கீடு செய்யப்பட்டது, திட்டக் குழுவின் அனுமதியின் பேரில். 1980-81-வது ஆண்டிற்கு மத்திய திட்டக் குழு ஒப்புதல் அளித்தது ரூ. 408.25 கோடி. ரூ. 408.25 கோடிக்கு, 1980-81 திட்டப் பணிகள் நிறைவேறும் என்ற கணக்கின் அடிப்படையிலே மத்திய திட்டக் குழுவும், மத்திய அரசும் ஒப்புதல் அளித்திருந்த போதிலும், மாநில திட்ட சாதனை ரூ. 456.46 கோடி என்று சொல்கிற அளவிற்குத்தான் நாம் நிதிநிலைமையை சீர்படுத்தி, அந்தப் பணியை அவர்கள் ஒப்புக்கொண்டதற்கு மேலாக செய்கின்ற அளவிற்குத் தான் நாம் இந்த ஆண்டிலே போட்டிருக்கிறோம். கூடுதலாக ரூ. 48.21 கோடி நம்மால் செலவழிக்க முடிந்திருக்கிறது. 1981-82 ஆம் ஆண்டு மத்திய அரசு ஒப்புதல் அளித்தது ரூ. 504 கோடி. சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே நான் குறிப்பிடுகின்றபோது ரூ. 504 கோடியை மத்திய அரசு ஒதுக்கித் தந்திருக்கிறது என்றாலும், ரூ. 625.53 கோடி அளவுக்குத் தன்னுடைய திட்டங்களை விரிவுபடுத்திச் செல்ல முடியும் என்ற அளவிற்கு வாய்ப்பு வசதிகளை இந்த மாநில அரசு கொண்டிருக்கிறது என்பதை நாம் எடுத்துத் தெரிவித்தாலும் இறுதியாக, சாதனையினுடைய அளவிலே பார்க்கும்போது, ரூ. 559.46 கோடிக்கு நான் பட்ஜெட்டிலே சொன்னேன். ஆனால், ரூ. 625.53 கோடி அளவிற்கு நம்மால் சாதனையைச் செய்து காட்ட முடிந்திருக்கிறது. ஆக, ரூ. 111.53 கோடி அளவிற்குக் கூடுதலாகத் தான் நம்மால் செய்ய முடிந்தது. இந்த மாநிலத்தினுடைய நிதிநிலை தன்மை அந்த அளவிற்கு உறுதியாக அமைந்திருக்கிறது என்பதை இந்த நிலைமை தெளிவாக எடுத்துக் காட்டும். 1982-83-வது ஆண்டிற்கு ஒப்புதல் அளித்தது ரூ. 711 கோடி. 1980-81, 1981-82 சாதனைகளுடைய தன்மையை ஆராய்ந்துதான் திட்டக் குழு அதிகமான அளவுக்கு மறுப்பு கூறாமல், நம் திட்டத்திற்கு நம்முடைய அளவு என்று எடுத்து வைத்த ரூ. 711 கோடிக்கு அது ஒப்புதல் அளித்தது. அது மட்டுமல்லாமல், சென்ற ஆண்டினுடைய திட்டத்திற்கும்





இந்த ஆண்டு திட்டத்திற்கும் ஒப்பிடுகின்றபொழுது ரூ. 39 கோடிக்கு மேல், கிட்டத்தட்ட 40 சதவிகிதம் கூடுதலாக இந்த மாநிலம் பெறத்தக்க அளவிற்குச் சாதனையை, இந்தியாவிலே வேறு எந்த மாநிலமும் சென்ற ஆண்டு திட்டத்திற்கும் இந்த ஆண்டு திட்டத்திற்கும் 40 சதவிகிதம் கூடுதலாக ஒதுக்கீடு பெறுகின்ற நிலையைப் பெறவில்லை. அதை இந்த மாநிலம் பெற்றிருக்கிறது. ஒப்புதல் அளித்தது ரூ. 711 கோடி என்றாலும் கூட, நாம் இந்த நிதிநிலை அறிக்கையிலே எதிர்பார்த்து குறிப்பிட்டிருப்பது, ரூ. 772.61 கோடி அளவுக்காவது, இந்த ஆண்டு திட்டங்களை மேலும் விரிவு படுத்தி, வளர்ச்சி அடையச் செய்து, இன்னும் உறுதிப்படுத்துவதற்கான சூழ்நிலையைக் கொண்டு வரலாம் என்ற நம்பிக்கையினுடைய அடிப்படையிலே தான் நிதிநிலைமையைப் பொறுத்தவரையிலே, இந்த மாநிலத்தை நாம் கட்டிக்காத்து வருகிறோம்.

அது மட்டுமல்ல, இதனுடைய தன்மைகளை எல்லாம் தெரிந்து ஆராய்ந்து பார்த்து, பல்வேறு மாநிலங்களுடைய சூழ்நிலைகளை எல்லாம் கணக்கிட்டுப் பார்க்கின்ற தகுதியும் தன்மையும் வாய்ப்பும் வசதியும் பெற்றிருக்கிற ரிசர்வ் வங்கியினுடைய தலைவர் திரு. ஐ. ஜி. பட்டேல் அவர்கள் ஐதராபாத்தில் நடைபெற்ற ஒரு செய்தியாளர்கள் கூட்டத்தில் கூறுகிற பொழுது, நிதி ஒதுக்கீடு செய்ததைப் பாராட்டியதோடு மட்டும் அல்லாமல், நிதி நிர்வாகத்தைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்கள். மத்திய அரசு இந்தியாவிலே, ஒவ்வொரு மாநிலத்திலும் ஒதுக்கும் திட்டத் தொகை அதிக அளவில் ஒதுக்கி தமிழ்நாட்டிற்குத்தான். சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு 39.3 சதவிகிதம் கூடுதலாகத் இருக்கிறது. சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு திட்டத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்திற்கு தமிழ்நாட்டிற்குத் திட்டத் தொகை ஒதுக்கீடு செய்துள்ள அதே நேரத்தில், அந்த அளவு தொகை திட்டக்குழு ஒதுக்கீடு செய்துள்ள அதே நேரத்தில், சிறப்பான நிதி நிர்வாகம் தமிழகத்தில் நடைபெறுகிறது என்பதையும் சுட்டிக் காட்ட வேண்டுமென்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். எதற்கு இதை நான் சொல்ல விரும்புகிறேன் என்று கேட்டால், நிதி நிலை கெட்டுவிட்டது என்றும், நிதிநிலை சரியாக இல்லையென்றும் சில மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன அத்தகைய குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரம் இல்லை என்பதோடு மட்டுமல்லாமல், அதற்கு அடிப்படை உண்மையே இல்லையென்பதைத் தெளிவு படுத்தத் தான் இதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, நம்முடைய திட்டப் பணிகள் எவ்வாறு நடைபெறு [illegible] என்பதைக் கண்டதற்காக, இந்திய நாட்டினுடைய தலைமை [illegible] திருமதி இந்திரா காந்தி அவர்கள் சென்ற ஆண்டு செப்டம்பர் [illegible] இங்கே வந்து—பல்வேறு [illegible]

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1982 மார்ச் 8

செல்வதைப் போல், தமிழகத்திற்கு நான் வந்து அதைப்பற்றி கலந்துரையாட விரும்புகிறேன் என்று 9—9—1981 ஆம் தேதி அன்று ஒரு தந்தி அடித்து, 11 ஆம் தேதி இங்கே வருகிறேன் என்று சொன்னார்கள். நாங்கள் கூட, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட, ஒரு வாரம் கழித்து வருவீர்களானால், அதற்கான புள்ளி விவரங்களையெல்லாம் திரட்டி நாங்கள் தரமுடியும் என்றுகூடச் சொன்னோம். எனக்கு வெளிநாடு போகவேண்டிய அவசியம் இருப்பதனாலும், அதற்குப் பிறகு வருவது காலந்தாழ்ந்துவிடும் என்ற காரணத்தினாலும் 11 ஆம் தேதியே வருகிறேன். ஆகவே, இருக்கிற சூழ்நிலையை என்னிடத்திலே விளக்குங்கள் என்று அவர்கள் குறிப்பிட்டார்கள்.

அதன்படி 11—9—1981 ஆம் தேதியன்று இந்தியாவினுடைய பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் இங்கே வந்து, பலவேறு துறைகளைப் பற்றியும் அதன் தொடர்பான அமைச்சர்களோடு இந்தத் திட்டங்கள் எந்த வகையிலே நிறைவேறிக்கொண்டிருக்கின்றது என்பதை, குறிப்பாக சில பல முக்கியமான துறைகளைப் பற்றி எல்லாம் அவர்கள் விசாரித்தார்கள். விசாரித்து அறிந்த பிறகு அவர்கள் நிருபர்கள் கூட்டத்திலே அன்றே பேசுகின்றபோது குறிப்பிட்டு இருக்கிறார்கள். "திட்டப்பணிகள் தமிழ் நாட்டிலே மிகச் சிறப்பாக நிறைவேற்றப்பட்டு வருவதை அறிந்து மகிழ்கிறேன். திட்ட வகைகளைக் கண்டறியவும், மத்திய அரசு எந்த அளவுக்கு உதவி புரிய வேண்டும் என்பதை ஆராயவும் நான் வந்தேன். நிலைமை எனக்குத் திருப்தியை அளிக்கிறது" என்று குறிப்பிட்டார்கள். ஆனால் இந்திரா காந்தி அம்மையார் வருவதே இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதிலே இருக்கின்ற குறைபாடுகளை எல்லாம் கண்டறிந்து இந்த ஆட்சியை விமரிசனம் செய்வதற்காகத்தான் அந்த அம்மையார் வருகிறார் என்றும், அதன் காரணமாக பலவற்றைக் கண்டுபிடிக்கத்தான் அவர்கள் வருகிறார்கள் என்று கூட, சிலபல ஏடுகள் அதைப்பற்றி எடுத்துத் தெரிவித்தன. ஆனால் அவர்கள் நிலைமை எனக்குத் திருப்தியை அளிக்கிறது என்பது மட்டுமல்லாமல் குடும்பநலத் திட்டத்தை நிறைவேற்றுவதில் தமிழகம் முன்னணியில் இருக்கிறது என்று பாராட்டுரையையும் அவர்கள் வழங்கிச் சென்றார்கள். ஏன் இதை எல்லாம் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், நிதி நிலைமையைப் பொறுத்த வரையிலும் எப்போதுமே தமிழகத்திற்கு இருந்து வருகின்ற தன்மையின் அடிப்படையில், இப்போதும் அந்தப் பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. செம்மையாக நடைபெற்று வருகின்றன என்பதைச் சொல்வதற்காகத்தான் குறிப்பிட்டுக் கூறுகிறேன்.



1982 மார்ச் 8] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

சென்ற ஆண்டு நிதிநிலையைப் பொறுத்தவரையிலும் இந்த மாநிலத்திற்குப்
பல்வேறு துறைகளிலே வளர்ச்சிப் பணிகளுக்காகவும் மேம்பாட்டுப் பணிகளுக்
காகவும், மக்கள் நல்வாழ்வுப் பணிகளுக்காகவும் சமூக நலப் பணிகளுக்காக
வும் நாம் செலவிட்டு வந்ததை விட, நாம் கூடுதலாக செலவழிக்கின்ற அளவுக்கு
பல்வேறு இனங்களிலே நாம் நிதிநிலை அறிக்கையைக் கேட்டுப் பெற்றதற்குப்
பிறகு கூடுதலாகப் பெற்றோம் என்ற குறிப்புரைகளை இந்த நிதி நிலை
அறிக்கையிலே நான் சுட்டிக் காட்டி இருக்கிறேன். கிட்டத்தட்ட 300 கோடி
ரூபாய் அளவுக்குக் கூடுதலாக நாம் செய்திருக்கிறோம். மீண்டும் அதை விரிவு
படுத்த நான் விரும்பவில்லை. நிதி நிலை அறிக்கையிலே எந்தெந்த இனத்
திற்கு எவ்வளவு கூடுதலாக செலவழிக்கப்பட்டிருக்கிறது என்ற கணக்கும்
இங்கே கூறப்பட்டிருக்கிறது.

அதேபோல 1982-83 ஆம் ஆண்டிற்கான இந்தத் திட்டத்திலே 711 கோடி
எந்தெந்த இனத்திற்கு எவ்வளவு வளர்ச்சி கருதி, வளர்ச்சியினுடைய சூழ்நிலை
கருதி செலவழிக்கப்பட இருக்கிறது என்பதை நாம் சுட்டிக்காட்டி இருக்கி
றோம். முக்கியமான வகைகளிலே கூட சென்ற ஆண்டுக்கும் இந்த ஆண்டிற்
கும் நகர்கிற அந்தத்தத் துறையின் தேவையைக் கருதி, அந்தந்தத் துறையிலே
செய்யப்படவேண்டிய பணிகளினுடைய அளவையையும், அதனுடைய சிறப்புக்
குரிய தன்மைகளையும் கருதி, கூடுதலாகத்தான் நாம் ஒதுக்கித் தருகின்ற
சூழ்நிலையையும் நாம் பெற்று வருகிறோம்.

சென்ற ஆண்டு கல்விக்காக 253 கோடியே 13 லட்சம் ஒதுக்கியிருக்கிறோம்
என்றால் இந்த ஆண்டு 296 கோடியே 17 லட்சம் ஒதுக்கியிருக்கிறோம்.
மருத்துவ வசதிக்காக சென்ற ஆண்டு 127 கோடியே 94 லட்சம் ஒதுக்கினோம்
என்றால் இந்த ஆண்டு 150 கோடியே 63 லட்சம் ஒதுக்கி இருக்கிறோம்.
வீட்டு வசதிக்கு சென்ற ஆண்டு 42 கோடியே 81 லட்சம் என்றால் இந்த ஆண்டு
48 கோடியே 99 லட்சம் ஒதுக்கியிருக்கிறோம். நகர்ப்புறப் பகுதி, வளர்ச்சிக்கு
4 கோடியே 64 லட்சம் சென்ற ஆண்டு, இந்த ஆண்டு 11.76 லட்சம் ஒதுக்கி
யிருக்கிறோம். வேளாண்மைக்கு 54.31 கோடி சென்ற ஆண்டு, இந்த ஆண்டு
68.74 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. கால்நடை வளர்ச்சிக்கு 15.71 லட்சம்
சென்ற ஆண்டு, இந்த ஆண்டு 18.20 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. கிராமத்
தொழில்கள், சிறு தொழில்களுக்காக சென்ற ஆண்டு 12.15 கோடி என்றால்
13.45 கோடி இந்த ஆண்டு. இப்படி சிலபல முக்கியமான வகைகளுக்கும் கூட
நாம் கூடுதலாகத்தான் நிதி ஒதுக்கி அந்தந்தத் தன்மைகளை மிகச் சிறப்பாக
கவனிப்பதற்கான சூழ்நிலையை நாம் மேற்கொண்டு வருகிறோம்.

மேலும் புதிதாக எந்தத் திட்டமும் இல்லை, புதிதாக எந்த வளர்ச்சியும்
இல்லை என்று சொல்கின்றவர்களுக்கு இந்த நிதிநிலை அறிக்கையை ஆய்ந்து
ஆராய்ந்து படிப்பவர்களுக்கு மிகத் தெளிவுபடச் செய்யும். வளர்ச்சி

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1982 மார்ச் 8

திட்டங்கள், விரிவாக்கத் திட்டங்கள், மேம் பாட்டுத் திட்டங்கள் சமூக நலத் திட்டம் என்பன போன்ற பல்வேறு வகைகளில் 66 க்கும் மேற்பட்ட புதிய பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது என்றும், பல லட்சக்கணக்கான ரூபாய்களும், பல கோடிக்கணக்கான ரூபாய்களும், கிட்டத்தட்ட 66 இனங்களிலே ஒதுக்கப்பட்ட அந்தப் புள்ளிவிவரங்களைப் படிப்பார்களேயானால் இது வெறும் பட்ஜெட் என்றோ, கவைக்குதவாது என்றோ யாரும் சொல்ல மாட்டார்கள். அதுமட்டுமல்ல, தொழில் வளர்ச்சி மற்றவைகளைக் கவனிக்கின்றபோது இந்த மாநிலம் அதனுடைய நிலையை ஓரளவு காப்பாற்றிவருவது மட்டுமல்லாமல், அதிலே மிகவும் அக்கறை கொண்டு, அதிலே மிகவும் ஊக்கத் தன்மையை தந்து வருகிறது. ஏற்கனவே நாம் 24 வட்டங்களை பிற்படுத்தப்பட்ட வட்டங்களாக அறிவித்து அதற்கு மாநில அரசு சலுகைகளை எல்லாம் தந்து, புதிய புதிய தொழில்களை உருவாக்க முன்வருகின்றவர்களுக்கு அதற்கு ஆக்கம் தருகின்ற பணியினை ஏற்று வருகின்றோம். இந்த ஆண்டு பட்ஜட்டிலே மேற்கொண்டு 6 இடங்களை நாம் பிற்படுத்தப்பட்ட வட்டங்களாக அறிவித்து அந்த 6 இடங்களிலேயும் தொழில் துவங்குவதற்கு யாரேனும் முன்வருவார்களேயானால் மாநில அரசு தருகின்ற சலுகைகளும் மற்றவைகளும் அந்தத் தொழிலுக்கும் பொருந்தும் என்பதைக் குறிப்பிட்டு இருக்கிறோம்.

அதுமட்டுமல்ல. இந்த விற்பனை வரியின் மூலமாக வட்டியில்லாக் கடன் தருகின்ற தொகையை நாம் அண்மையில் உயர்த்தி இருப்பது மட்டுமல்லாமல், அவர்கள் தொழிலைத் தொடங்கி அதைத் திருப்பிக் கட்டுவதற்கான சலுகைகளையும் மற்றவைகளையும் கூட மாற்றி தொழிலைத் துவங்குவதற்கு பல பேர்கள் முன் வரவேண்டும் என்ற ஊக்கத்தையும் நாம் தந்து வருகிறோம்.

(முற்பகல் 10-50)

சராசரி நபர் வருமானத்தைப் பொறுத்தவரையிலும், தமிழகத்தினுடைய பொருளாதார நிலை கீழே போகாத அளவிற்கு ஓரளவிற்குக் காப்பாற்றி வருகின்ற காரணமாகத்தான் அகில இந்திய அளவிலே, நாம் விரும்புவது ஒரு கட்டமாக இருந்தாலும் கூட, ஓரளவிற்கு வளர்ந்து வருகிறோம் என்பதை தெளிவுபடுத்தக் கடமைப்பட்டு இருக்கிறேன். 1974-75 முதல் 1976-77 வரையிலான 3 ஆண்டுகளில் சராசரி நபர் வருமானம் தமிழகத்தைப் பொறுத்த வரையில் 585 ரூபாயாக இருந்தது. அகில இந்திய ரீதியில் 644 என்று இருந்தது. 1977-78 முதல் 1979-80 வரையில் கணக்கிட்டுப் பார்த்தால் 3 ஆண்டுகளில் இந்தியா முழுவதும் சராசரி வருமானம் 688 என்று இருக்கின்ற நேரத்தில், தமிழகத்தின் சராசரி நபர் வருமானம் ரூபாய் 690 என்கிற அளவிற்கு உயர்ந்த நிலையில் வந்து இருக்கிறது. தமிழ் நாட்டின் நபர் வருமானம் ஆண்டுதோறும் 5.5 சதவிகிதம் என்கிற வகையில் உயர்ந்து இருக்கிறது,



1982 மார்ச் 8] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

என்றால், அகில இந்திய அளவிலே மற்ற மாநிலங்களின் சராசரி நபர் வருமானத்தைப் பார்க்கிறபோது, 2.2 சதவிகிதம் தான் உயர்ந்து இருக்கிறது. ஆகவே, அகில இந்திய சராசரி தன்மையின் அடிப்படையில் கணக்கிட்டுப் பார்க்கிறபோது தமிழகத்தின் நிலைமை சீர்பட்டு வருகிறது என்பதற்கு இது எடுத்துக்காட்டாக அமைகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழில் உற்பத்தி நிலையை எடுத்துக் கொண்டால், 1970-76 வரையிலான அடிப்படையில்—இந்த ஆறு ஆண்டு காலத்தில்—ஆண்டு ஒன்றுக்கு 5.5 சதவீதம் என்று உயர்ந்தது. 1976-79 ஆண்டு ஒன்றுக்கு 8 சதவீதம் என்று உயர்வு அமைந்து இருந்தது. 1977-79-ல் இந்த இரண்டு ஆண்டு கால இடைவெளியில் ஆண்டு வளர்ச்சி 10 சதவீதம் என்று உயர்ந்து இருக்கிறது. ஆகவே, 5.5 சதவீதத்திற்குப் பிறகு, 8 சதவீதம் என்று உயர்ந்து, இப்போது தொழில் உற்பத்தியின் முன்னேற்றத்தின் அளவு 10 சதவீதம் என்று உயர்ந்த நிலையை தமிழகம் பெற்று இருக்கிறது. 1976-முதல் 1979-வரையில் 3 ஆண்டுகளில் அகில இந்திய உற்பத்திக் கணக்கைப் பார்த்தால் சராசரி 5.5 சதவீதம். இந்தியாவில் சராசரி வளர்ச்சி 5.5 சதவீதம் என்று இருக்கிறபோது தமிழகத்தில் தொழில் உற்பத்தி வளர்ச்சி 10 சதவீதம் என்று உள்ள பாங்கினை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழகத்தின் தொழில் முன்னேற்றம், சிறு தொழில் முன்னேற்றம் ஆகியவற்றைப் பொறுத்தவரையில், நாம் மற்றவர்கள் போற்றத்தக்க அளவிற்கு, பாராட்டத்தக்க அளவிற்கு வளர்ச்சியைப் பெற்று வருகிறோம் என்பதை இந்த மாமன்றத்திலே தொழில் அமைச்சர் அவர்கள் அடிக்கடி எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். மத்தியில் தனி தொழில் அமைச்சராக இருந்த (பி.ஏ. சிங்மா) அவர்கள் 2—6—1981-ல் தஞ்சாவூரில் பல்வேறு தொழிற்சாலைகளை சுற்றிப் பார்த்து விட்டு, தமிழகத்தின் பகுதிகளில் உள்ள தொழிற்சாலைகளைப் பார்வையிட்டுவிட்டு, நிருபர்களுக்கு பேட்டி அளிக்கும்போது சொன்னார்—"கடந்த இரண்டு ஆண்டுகளில் தொழில் வளர்ச்சியில் தமிழகம் முன்னேறியிருக்கிறது. தமிழகத்தில் புதிதாக தொழிற்சாலைகள் தொடங்குவதற்கு 1980-வரையில் 52 பூர்வாங்க அனுமதிக் கடிதங்கள் வழங்கப்பட்டு இருக்கின்றன. முந்தைய ஆண்டுகளை விட இது எண்ணிக்கையில் அதிகமாகும்" என்று சொன்னார்கள். தொழில் துறையில் மிகவும் பின் தங்கிய பகுதிகளில் தொழிற்சாலைகளைத் துவங்குவதற்கான மத்திய அரசு மாநிலங்களுக்கு மானியம் வழங்குகிறது. அதைப் பெறுவதில் மற்ற மாநிலங்களை காட்டிலும் தமிழகம் தான் முன்னணியில் இருக்கிறது. ஏறத்தாழ 15 கோடிக்குமேல் பெற்று இருக்கிறது. இது தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் ஆரோக்கியமான நிலையில் இருக்கிறது என்று அவர்கள் குறிப்பிட, சிறப்பாக எடுத்துச் சொல்லியிருக்கி

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1982 மார்ச் 8

றார்கள். அது மட்டுமல்லாமல் தமிழகத்தின் தொழில் நிலைமை நம்முடைய முயற்சியின் அடிப்படையிலும், மைய அரசின் உதவித் தன்மை அடிப்படையிலும் வளர்ந்து வருகிறது.

அந்த அடிப்படையிலே தான் இந்த அவையிலே அடிக்கடி எடுத்துச் சொல்லப்பட்டு இருக்கிறது. அது முன்பு இருந்த காங்கிரஸ் கட்சி ஆட்சியாக இருந்தாலும் சரி, முன்பு இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியாக இருந்தாலும் சரி, இங்கே விவரங்கள் தருகிறபோது, மைய அரசு தொழில் வளர்ச்சிக்காக ஒதுக்கப்படுகிற தொகைகள், மூலதனம் செய்யப்படும் தொழில்கள் ஆகியவற்றைப் பொறுத்தவரையில், தமிழகம் பெறுவதை மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது குறைந்த அளவில் இருக்கிறது. ஆனால் மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது இங்கே 'நேட்சுரல் ரிசோர்சஸ்' என்று சொல்லப்படுகிற இயற்கை கனிவளங்கள் மற்றவைகள் குறைவாக இருக்கிறது என்றாலும், தொழில் திறமை, நடத்துகின்ற தன்மை, டெக்னீசியன் திறமை பொறுத்தவரையில் வளர்ந்து வரும் பாங்கினை சுட்டிக் காட்டி வந்து இருக்கிறார்கள். அந்த வகையிலே மத்திய அரசின் முதலீடு இப்போதும் ஆண்டுக்கு ஆண்டு திட்டத்தட்ட 10 முதல் 18 சதவிகிதம் வரை அகில இந்திய அளவில் இருக்கிறது என்றாலும், தமிழகத்தைப் பொறுத்த வரையில் 4 சதவிகிதம் தான் இருக்கிறது என்றபோதிலும், நாம் வளர்ந்து வருகிறோம் என்று சொன்னால், அது இருக்கின்ற தன்மைகள், மற்றவைகள் வைத்துக்கொண்டு நாம் வளர்ந்து வருகிறோம். இதைத்தான் பொருளாதார வல்லுநர் டாக்டர் பி. நடராஜன் அவர்கள்—காங்கிரஸ் கட்சி உறுப்பினராக இருந்தவர்—காங்கிரஸ் பற்று உள்ளவர்—ஒரு கட்டுரையில் தெளிவாக குறிப்பிட்டுக் காட்டி இருக்கிறார்கள்.

Dr. B. Natarajan.—"Industrial outlook for Tamil Nadu" "Eastern Economist" special supplement on Tamil Nadu dated 9th October 1981.

என்பதில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார் :—

"The vacuum created by the declining Central investment, was appreciably made good by the resilience of the small units sector and more active role by State Government. The small units continued their efforts in respect of numbers and output and employment. In employment, especially they ranked first among the States of India, accounting for about 15 per cent of the all Indian total. The growth this industrial co-operatives too was impressive during this period. The State Government for its part setup a number of financial and other agencies, like the SIPCOT, TIDCO, TIIC and SIDCO to



1982 மார்ச் 8] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

promote new activities. As a result, the State maintained its lead in selected areas. Its share in leather and leather products remained at about 70 per cent. In the manufacture of auto-ancilleries, machinery and machine tools, its contribution was appreciable, next only to Maharashtra. In 1978-79 State's getting of Industrial licences ranks third among the States."

In the last two years, there has been a gradual improvement in the industrial climate. The industrial relations seem to have become more congenial. The last two budgets also carried some incentives. Here if the centre has the responsibility for investments the States responsibility is no less in efficiently managing them.

என்று மிகத் தெளிவாக தமிழ்நாட்டின் சூழ்நிலைப்பற்றி பொருளாதார வல்லுநர் டாக்டர் ப. நடராஜன் அவர்கள் படம் பிடித்துக் காட்டியிருப்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அதனுடைய தமிழாக்கம்—

"மத்திய அரசின் முதலீடு குறைந்துகொண்டு வருவதன் மூலம் ஏற்படும் வெற்றிடம், சிறுதொழில்களின் பெருக்கத்தாலும், மாநில அரசு எடுத்துக் கொண்ட பெரு முயற்சியின் விளைவாலும் பாராட்டத்தக்க வகையில் நிறைவு பூர்த்தப்பட்டிருக்கிறது. சிறு தொழில்களின் வளர்ச்சி எண்ணிக்கையைப் பொறுத்தும், உற்பத்தியைப் பொறுத்தும், வேலைவாய்ப்பளிப்பதைப் பொறுத் தும், தொடர்ந்து பெருகிக்கொண்டிருக்கிறது. வேலைவாய்ப்பளிக்கும் தன்மையை மட்டும் எடுத்துக்கொண்டு, சிறு தொழில்களின் வளர்ச்சி நிலையைப் பார்த்தாலும் தமிழ்நாடு இந்திய மாநிலங்களில் முதல் இடத்தைப் பெற்று விளங்குகிறது. அகில இந்தியாவிலுள்ள சிறு தொழில்கள் 15 சதவிகிதம் தொழிற்பிரிவுகள் தமிழ் நாட்டில் இருக்கின்றன. இந்தக் காலக் கட்டத்தில் தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சிகூட கவர்ச்சிதரத்தக்க முறையில் அமைந்திருக்கிறது. தொழில் துறையின் புதிய நடவடிக்கைகளாக மாநில அரசும் தன்னுடைய பங்காக பல நிதி நிறுவனங்களையும், தொழில் நிறுவனங்களையும் 'இப்காட்', 'டிட்கோ' டிஐஐசி சிட்கோ போன்றவைகளாக உருவாக்கியிருக்கிறது. இதன் காரணமாக சில முக்கிய பிரிவுகளில் தமிழக மாநிலம் தன்னுடைய முன்னோடித் தன்மையை நிலைநாட்டியுள்ளது. தோல்—தோல் பொருட்கள் உற்பத்தியில் 70 சதவிகித நிலையை தமிழகம் காப்பாற்றி வருகிறது. மோட்டார் வண்டி உதிரிப் பாகங்கள், இயந்திரங்கள், இயந்திரக் கருவிகள் ஆகியவற்றை உற்பத்தி செய்வதில் தமிழ்நாடு பாராட்டத்தக்க வகையில் முன்னேற்றத்தில் இருக்கிறது. இந்த வகையில் மகாராட்டிரத்திற்கு அடுத்த இடத்தை தமிழகம்தான் பெற்றிருக்கிறது. 1978-79-ல் தொழில் உரிமங்கள் பெறுவதில் தமிழ்நாடு, மாநிலங்களிடையே மூன்றாவது இடத்தை வகித்துள்ளது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1982 மார்ச் 8

சென்ற இரண்டு ஆண்டுக் காலத்தில், தொழில் சூழ்நிலையில் சீரான முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. தொழில் துறையின் உறவுகள் மிகவும் சுமூகமான நிலையிலேயே இருந்து வருகின்றன. சென்ற இரண்டு நிதிநிலை அறிக்கைகள் தொழிலுக்கான ஊக்கச் சலுகைகளை வழங்கியுள்ளன. தொழில் முதனீடுகளைச் செய்யும் பொறுப்பு மத்திய அரசுக்கு இருக்கிறது, அவற்றைத் திறம்பட நிருவகிப்பதில் மாநில அரசின் பொறுப்பு எந்த வகையிலும் குறைந்திருக்கவில்லை" என்று அவர்கள் தெளிவுபட எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள்.

ஆக, இந்த அடிப்படையிலேதான் இருக்கிற வசதி வாய்ப்புகளை வைத்து, இருக்கின்ற நிதி ஆதாரங்களை வைத்து, நமக்கு மத்திய அரசு தருகின்ற உதவிகளின் அடிப்படையில்தான் நாம் வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்ற முடிகிறது.

'பர்சென்டேஜ் ஷெயர் ஆஃப் தி ஸ்டேட் இன் தி நெட் டொமஸ்டிக் ப்ராடக்ட்ஸ்' என்ற வகையில் 1979-80 ஆம் ஆண்டில் 'எக்னாமிக் டைம்ஸ்' பத்திரிகை தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறது. அந்தக் கணக்கிலே கூட தமிழ் நாடு 4-வது இடத்தை வகிக்கிறது. மகாராஷ்டிரம் முதல் இடத்தையும், உத்தரப்பிரதேசம் இரண்டாவது இடத்தையும், மேற்குவங்கம் 3-வது இடத்தையும் தமிழ்நாடு 4-வது இடத்தையும் வகிக்கின்றன.

ஸ்டேட் எக்னாமிக்—மாநிலத்தினுடைய பொருளாதார பயன்பாடுகள் அளிக்கின்ற திட்டங்களைப் பார்த்தாலும், அகில இந்திய அளவு 2.9 சதவீதமாக இருக்கின்ற நிலையில் தமிழ்நாடு 4.1 சதவீதமாக அமைந்திருக்கிறது. குஜராத் 8.1 சதவீதமாகவும், அரியானா 5.3 சதவீதமாகவும், மகாராஷ்டிரம் 4.8 சதவீதமாகவும், பஞ்சாப் 4.8 சதவீதமாகவும், தமிழ்நாடு 4.1 சதவீதமாகவும் அமைந்திருக்கின்றன. இந்த 4 மாநிலங்களுக்கு மேலே, 5-வதாக தமிழகம் வருகிறது. நான் இதை எல்லாம் எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்றால் இந்த அரசுக்கு இருக்கிற வசதி வாய்ப்புகளை வைத்து, எதை செய்ய இயலுமோ அதைச் செய்வதில் பின்தங்கிவிடவில்லை என்பதற்காகத்தான்.

(முற்பகல் 11-00)

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நேற்று குறிப்பிட்டபோது நம்முடைய விற்பனை வரியின் மூலம் வருகின்ற வருமானம் பெரும் பகுதி மாநில அரசுகள் தங்களுடைய நிதிஆதாரங்களைப் பெருக்கிக்கொள்ளவும், வசதி வாய்ப்புக்களைத் திரட்டிக்கொள்ளவும், நீண்ட நெடுங்காலமாக இருந்து வருகின்றவையாகும். இந்த ஒரு நிதிவசதியினை வைத்துக்கொண்டுதான்



1982 மார்ச் 8] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

ஒவ்வொரு மாநிலமும் தங்களுடைய பணிகளைத் திறம்பட நிறைவேற்ற
வேண்டி இருக்கின்றது. மற்றைய முக்கியமான வரி இனங்கள் எல்லாம்
மத்திய அரசினுடைய கைகளிலே இருக்கின்றது. ஆகவே ஒரு காலத்திலே
வெள்ளைக்காரர்கள் நாட்டை ஆண்டபோது நிலவரியின் மூலமாக வருகின்ற
வருமானம் பாதியாக இருந்தது. அந்த அளவுக்கு வேறு வகைகளில் வரு
மானம் வராத காலம் அது. ஆனால் இப்போது நில வரியின் மூலம் வருகின்ற
வருமானமும் மற்ற வகைகளில் வருகின்ற வருமானமும் மிக மிகக் குறைவு.
ஆகவே இந்த விற்பனை வரியின் மூலமாகத்தான் மாநில அரசு பல்வேறு
திட்டங்களைத் தீட்டவேண்டி இருக்கின்றது. ஆகவே இந்த விற்பனை வரி
யினையும் மத்திய அரசு ஆயத்தீர்வையாக எடுத்துக்கொள்கின்ற அத்தகைய
முயற்சிகளை வன்மையாகக் கண்டிக்கிறோம் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித்
தலைவர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே இதற்கு முன்னால் இருந்த
அரசும் அந்த கொள்கையைத்தான் கொண்டிருந்தது. இந்த அரசும்
தொடர்ந்து அந்த கொள்கையைத்தான் கொண்டிருக்கின்றது. ஆகவே மாநில
அரசினிடத்திலே இருக்கின்ற விற்பனை வரி இனங்களை எந்தக் காலத்திலும்
மத்திய அரசு எடுத்துக்கொள்வதை இந்த மாநில அரசு விரும்பவில்லை
இதைப்பற்றி நாம் பல வாய்ப்புக்களிலே தொடர்ந்து வற்புறுத்தி வந்திருக்கி
றோம். மறைமுக வரிகள் பற்றிய முதலமைச்சர்கள் மாநாடு நடந்தது. அப்
போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தக் கருத்தை வலியுறுத்திக் கூறி
இருக்கிறார்கள்.

At the Chief Minister's Conference on Indirect Taxation
held on 16-17th September 1980, it has been stated as follos :—

"Sales Tax is the backbone of our financial resources, more so,
in a State like Tamil Nadu, which is enforcing total prohibition
with out any assistance from the Government of India. Any
system which may restrict the scope of levy of Sales Tax by the
State, will be totally unacceptable to us. Tamil Nadu, therefore,
does not agree with the proposal to replace Sales Tax by Addi-
tional Excise Duties and suggests that this proposal be dropped."

1981 ஆம் ஆண்டு நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் கூட்டத்தின்போதும் மீண்டும்
இந்தக் கருத்தினை முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்திக் கூறி இருக்கிறார்கள்.

At the National Development Council meeting held on 13-14th
February 1981, it has been stated as follows:—

"The replacement of Sales Tax with Additional Excise Duties is
entirely a voluntary tax-rental arrangement between the Centre and
the States. Tamil Nadu would urge that there is no need to withdraw

Sales Tax on more commodities and bring them under Additional Excise Duties. Further, the National Development Council at its meeting in December 1970 came to the agreed conclusion that the incidence of Additional Excise Duties as a percentage of value of clearance would be revised to 10.8 per cent in a period of 2 to 3 years and also the ratio between basic and special Excise Duties on the ond hand and additional Excise Duties on the other would not exceed 2 : 1 "

1970-லே நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் கூட்டத்திலே எல்லா மாநில முதல்வர்களும் கலந்துகொண்டு எடுத்த முடிவை மத்திய அரசு நடைமுறைப் படுத்தவில்லை, நடைமுறைப்படுத்தி இருந்தால் கூடுதலாக வருமானம் வரும் என்பதையும் முதலமைச்சர் அவர்கள் 1981-லே நடைபெற்ற கூட்டத்திலே எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

" It is observed that neither of these two directions has been observed in practice "

1970-லே எடுத்த முடிவை கடைப்பிடிக்கவில்லை என்று சொல்லி

" The State Government would strongly urge that the Centre take urgent steps to implement these decisions of the National Development Council in December 1970 "

என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதிலே வற்புறுத்தி வந்திருக்கிறார்கள்.

மறுபடியும் 1981 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 15 ஆம் நாள் விற்பனை வரி பற்றிய முதலமைச்சர்கள் மாநாடு நடைபெற்றபோது கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்

"In conclusion, I would request the Government of India to drop the proposal to extend the scheme of levy of Additional Excise Duty to any futher items and the proposal for expanding the list of declared goods. "

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ஏன் இதை நான் குறிப்பிடுகிறேன் என்றால் இந்த அரசினுடைய கொள்கை அதை அடிஷனல் எக்சைஸ் டியூட்டியாக மாற்றக்கூடாது என்பதை வாய்ப்பு ஏற்பட்டபோது எல்லாம் வற்புறுத்தி வந்திருக்கிறோம் என்பதை சொல்வதற்காகத்தான். அந்த விற்பனை வரி பற்றிய முதலமைச்சர்கள் மாநாட்டிலே நானும் வருவாய் துறை அமைச்சரும் கூட கலந்து கொண்டோம். அப்போது விற்பனை வரியை எக்காரணம் கொண்டு அடிஷனல் எக்சைஸ் டியூட்டியாக மாற்றக்கூடாது என்றும் மாநிலங்கள் பாதிக்கும் என்றும் மேற்கு வங்கம், கேரளா, திரிபுரா, தமிழ்நாடு ஆகிய நான்கு மாநிலங்களும் வற்புறுத்தியதோடு மட்டுமல்லாமல் முதல்நாள் நடந்த மாநில





மாநாட்டிலே கூட இந்தியாவிலே இருக்கின்ற வேறுபல மாநிலங்களும் ' இதை மாற்றுவதன் மூலம் மாநிலங்கள் ரொம்பவும் பாதிக்கும் ' என்றுதான் குறிப்பிட்டார்கள். ஆனால் மறுநாள், ஓட்டு எடுப்பு என்று வருகிறபோது, தமிழ்நாடு, மேற்கு வங்காளம், கேரளா, திரிபுரா மட்டும் தான் எதிர்க்க வேண்டிய நிலைமை ஏற்பட்டபோதுகூட, அப்போதைய மாண்புமிகு நிதியமைச்சராக இருந்த வெங்கட்டராமன் அவர்கள் ஓட்டுக்கு விட வேண்டும் என்று சொன்னார்கள். ஓட்டுக்குவிடக் கூடாது அதனுடைய நியாயத்தைத்தான் கவனிக்க வேண்டும் என்று எவ்வளவோ வற்புறுத்தியும், ஓட்டுக்கு விட்டு, எதிர்ப்பவர்கள், ஆதரிப்பவர்கள் என்று சொல்லி, அதை நிறைவேற்ற வேண்டும் என்ற தன்மைக்கு கொண்டு வந்தபோது கூட, நாம் வற்புறுத்தியிருக்கிறோம். ஏன் இதைச் சொல்கிறேன் என்று சொன்னால், பாராளுமன்றத்திலே இது பற்றி குறிப்பிடவில்லை என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் கழகத்தினுடைய கொள்கைக்கும், கட்சியினுடைய கொள்கைக்கும், எதிர்ப்பு ஏற்படும்போது, வற்புறுத்த வேண்டிய அவசியம் ஏற்படுகிறபோது வற்புறுத்தி வருகிறோம் என்பதுதான். அங்கே உறுப்பினர்கள் இல்லாதிருப்பதற்கும், இருந்திருப்பதற்கும், எடுத்துச் சொல்லாமல் இருப்பதற்கு கழகத்தினுடைய—கட்சியினுடைய கொள்கைக்கும் மாறாக ஆகாது என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

நேற்றைக்கு முன்னாள் கூட, இந்தி மொழி சம்பந்தமாக அங்கே பேச்சு வந்தபோது, நிதியமைச்சர் ஒரு கருத்தினை சொல்லி, வட நாட்டில் இருப்பவர்கள், தென் மாநிலங்களில் உள்ள மொழிகளை படிக்காமல் இருப்பதற்குக் காரணம், தென் மாநிலங்களில் இந்தி எதிர்ப்பு அதிகமாக பரவி வருவதுதான் என்று சொன்னவுடனே, மாண்புமிகு உறுப்பினர்கள் திருமதி சத்தியவாணி முத்து அம்மையாரும், மோகனரங்கம் அவர்களும் எழுந்து, அதனை கண்டித்து, எதிர்த்துப் பேசியிருக்கிறார்கள். உடனே சபாநாயகராக இருந்த இதயத்துல்லா அவர்கள் கூட அதைப்பற்றி கேட்டிருக்கிறார்கள். அந்த அம்மையார் நான் அப்படிச் சொல்லவில்லை என்றார்கள், அவர்கள் அப்படித் தான் சொன்னார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அம்மையார் தங்களுடைய கருத்து அது அல்ல என்று சொன்னதன் காரணமாக, அப்படிப் பட்ட கருத்து இருக்குமேயானால் அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

இவைகளை ஏன் சொன்னேன் என்றால், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பிரச்னைகள் என்று வரும்போது எதிர்க்கிறார்கள். அப்படிப் பிரச்னைகள் வரும்போது எதிர்க்கவில்லையென்றால், இந்தி எதிர்ப்பு உண[illegible] அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கு இல்லை என்ற அ[illegible] முடிவுக்கு அந்த அவையைப் பொறுத்த வரையில் வந்துவிடக் கூடா[illegible] என்பதற்காகத்தான். (குறுக்கீடு)

**திரு. ரா. உமாநாத் :** பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு கட்டங்களில், இந்த எக்ஸைஸ் டியூட்டி சம்பந்தமாக நம்முடைய சர்க்கார் எதிர்த்திருப்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஓட்டுக்கு விடக்கூடாது என்றும், கான்சென்ஸல் ஒபினியன் தான் எடுக்க வேண்டும் என்று நீங்கள் வற்புறுத்தியதற்குப் பிறகு ஓட்டுக்கு விட்டபோது, நம்முடைய அரசு பிரதிநிதிகள் அங்கே அதை எதிர்த்து ஓட்டு அளித்தார்களா என்று தெரிய வேண்டும். ஏனெனில் எங்களுக்கு வந்த தகவலின்படி, நம்முடைய பிரதிநிதி அப்போது அங்கே இல்லை என்று சொல்கிறார்கள். ஆகவே அதை விளக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அது பற்றிய விவர குறிப்பு என்னிடத்திலே இல்லை. ஏனென்றால் அந்த மகாநாட்டு பேச்சு வார்த்தைகள் முடிந்தவுடனே வந்துவிட்டோம். அதனுடைய நிலைமைகளை வேண்டுமானால் பின்னால் நான் தெரிவிக்கிறேன். அதை எதிர்த்துக் கருத்துக்கள் நம்மால் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நான் இருக்கும் போது ஓட்டுக்கு விடும் நிலைமை வரவில்லை. அதற்குப் பின்னால் எப்போது வந்தது என்று தெரியவில்லை. அதுபற்றிய விவரக் குறிப்பை பின்னால் தருகிறேன்.

மற்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். பல்வேறு குறைபாடுகளைப் பற்றியும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். பல்வேறு துறைகளைப் பற்றியும் சொல்லியிருக்கிறார்கள். அவைகள் எல்லாவற்றிற்கும் விளக்கங்கள் சொல்வதற்கு நேரம் இருக்காது. இருந்தாலும் குறிப்பிட்ட பொதுவான கருத்துக்களை மட்டும் சொல்கிறேன். அந்தந்த துறைகளைப் பற்றி தனித்தனியாக எடுத்துச் சொன்ன கருத்துக்களுக்கு, அது குறித்த மானிய கோரிக்கைகள் வரும்போது அதற்குரிய அமைச்சர்கள் எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பு வசதி இருக்கும் என்பதை இந்த நேரத்திலே கூறிக் கொள்கிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நேற்று ஒரு சில ஐயப்பாடுகளை கிளப்பி, சிலபல தன்மைகளை எடுத்துக்காட்டி, அதற்கு விளக்கம் பெற முடியாமல் இருக்கிறோமே அதற்கு விளக்கம் தர வேண்டும் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறினார்கள். அதிலே ஒன்றில், இந்த மக்கள் தொகை அடிப்படையில் கிராமப்புற இணைப்புச் சாலைகள் அமைப்பதற்கான தன்மைகளைப் பற்றி குறிப்பிட்டுக் காட்டினார்கள்.

இதைப் பொறுத்தவரையில் 1981–82-க்கு ஒரு நிலைமை, 1982–83-க்கு ஒரு நிலைமை இருப்பதைச் சுட்டிக்காட்டினார்கள். இதிலே சிலவற்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். 1981–82 ஆம் ஆண்டு வரவு செலவு





திட்ட உரையில், மக்கள் தொகையில் 1,500 க்கும், 1,500 க்கு மேற்பட்டும் உள்ள கிராமங்களுக்கு இணைப்பு சாலைகள் அமைப்பதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 6 வது 5 ஆண்டுத் திட்டக் காலத்திலும் இதற்காக 40 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்துள்ளோம். இந்த ஆண்டில் இது தன்னிறைவுத் திட்ட இடங்களில் நிறைவேற்றப்படும் என்று குறிப்பிட்டுள்ளதை எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டினார்கள். இதிலே ஒன்றை விளக்க விரும்புகிறேன். இத்திட்டம் குறைந்த அளவு தேவைகள் திட்டமாக செயல்பட்டு வருகிறது. அதாவது மினிமம் நீட்ஸ் புரோக்கிராம் என்ற அடிப் படையில் 1,500-க்கும், 1,500-க்கு மேற்பட்ட மக்கள் வாழ்கிற கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் அமைப்பதற்காக, இந்த 5 ஆண்டுக் காலத்தில் 40 கோடி செலவழிக்கப்படும் என்று ஒதுக்கியதின் காரணமாக, ஒவ்வொரு ஆண்டும் செலவழிக்கப்படுகின்ற அளவு, 1980-81-ல் 6 கோடி, 1981-82 ல் 7 கோடி, 1982-83 ல் 11 கோடியே 7 லட்சம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

மற்றொன்று, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையின் உரையில் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 1,500 க்கு குறைவாக இருக்கிற பகுதிகளை தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் நாம் கொடுத்துள்ளோம். 1,500 க்கு மேற்பட்டுள்ளதை மினிமம் நீட்ஸ் புரோக்கிராமின் கீழ் கொண்டு வந்து அந்தத் தொகையை அங்கே போட்டோம்.

(முற்பகல் 11-10)

1,500-க்குக் குறைவாக உள்ள கிராமங்களில் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கு சுமார் 43 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது என்ற குறிப்பு இங்கே காட்டப்பட்டிருக்கிறது. இந்த வகையில் 1980-81, 1981-82, 1982-83 ஆகிய வகைகளில் ரூபாய் 195 கோடி செலவாகி வருகிறது.

தன்னிறைவுத் திட்டம் என்றால் மாநில அரசு பொறுப்பேற்று நடத்துகிற ஒன்று. மத்திய அரசு திட்டக் குழு குறிப்பிட்ட அடிப்படையில் மினிமம் நீட்ஸ் ப்ரோக்ராம்-க்காக 1,500 க்கு மேற்பட்ட வகையில் போடுகிறார்கள். அந்த வகையில் இன்னும் கொஞ்சம் தெளிவுபடுத்தியிருக்கலாம். ஆனால் இதில் ஒன்றும் வேறுபாடு கிடையாது, இதில் ஒன்றும் தவறுகள் ஏற்பட்டு விடவில்லை, இன்னும் கொஞ்சம் தெளிவுபடுத்தியிருக்கலாம். மினிமம் நீட்ஸ் ப்ரோக்ராம்-க்காக இவ்வளவு செலவிடப்பட்டிருக்கிறது, தன்னிறைவுத் திட்டத்திற்காக இவ்வளவு செலவிடப்பட்டிருக்கிறது என்றும் இது 1,500 க்கு மேற்பட்டது இது 1,500 க்கு உட்பட்டது என்று சொல்லியிருந்தால் தெளிவு ஏற்பட்டிருக்கும். அதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சுட்டிக்காட்டி விளக்கும்படி ஒரு சூழ்நிலை ஏற்பட்டதற்காக அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1982 மார்ச் 8

அடுத்து, கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தைப் பொறுத்தவரையில் கிராமப்புற வீட்டுவசதித் திட்டம் கூட்டுறவுச் சங்கங்களால் செயல்படுத்தப் பட்டு வருகிறது. அதைப்பற்றியும் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதில் ஒதுக் கீடு பற்றியும் வீடுகள் பற்றியும் வேறுபாடு வருகிறது என்று குறிப்பிட்டார்கள். கூட்டுறவு ஆண்டு என்பது ஜூலை முதல் தேதியிலிருந்து அடுத்த ஆண்டு ஜூன் 30-ம் தேதிவரை 1980 ஜூலை முதல் 73,756 வீடுகள் அனுமதிக்கப்பட்டு பெப்ரவரி வரையில் 19,952 வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டன. மீதமுள்ளவை பல்வேறு கட்டங்களில் இருந்து ஜூன் 1981 க்குள் கூடுதலாக 20,879 வீடுகள் முடிக்கப்பெற்று 1980-81 கூட்டுறவு ஆண்டில் 40,831 வீடுகள் முடிக்கப்பட்டன. ஆகவே கொடுக்கப்பட்ட புள்ளிவிவரங்கள் சரியானவைதான். இதில் எடுத்துக் கொள்ள வேண்டியது கூட்டுறவு ஆண்டு என்பது ஜூலையில் இருந்து ஜூன் வரை 19,952 வீடுகள் பெப்ரவரியில் தரப்பட்டன. அதற்குப் பிறகு ஜூன் கடைசிவரை உள்ள கணக்குப்படி 40,831 வீடுகள். ஆனால் இதற்குப் பிறகுதான் அவை கட்டப்பட்டன என்பதல்ல. முடிக்கப்பட்ட வீடுகள் 19,952. சில பல வீடுகள் ஆரம்பிக்கப்பட்டு பாதி அளவோடு, முக்கால் அளவோடு, முக்காலேயரக்கால் அளவோடு நிற்கின்றன. அதை கொஞ்சம் தெளிவுபடுத்தி யிருக்கலாம் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் இதில் ஒன்றும் வேறுபாடு இல்லை.

குடிசைமாற்று வாரியம் வீடுகள் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். குடிசை மாற்று வாரிய நடவடிக்கைகள் பற்றி இந்த ஆண்டு உரையில் அளிக்கப்பட் டிருக்கிற விவரங்கள், இந்த ஆண்டு அளிக்கப்பட்ட விவரங்களைப் பொறுத்த வரையில் அது சரியானவைதான். 1980-81 வரை சுமார் 35 கோடி ரூபாய் செலவில் 31,000 வீடுகள் கட்டப்பட்டன. 1979-80 வரை 27,883 வீடுகள் 31 கோடி 24 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளன. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சுட்டிக்காட்டியதற்கு நன்றி தெரிவித்துக்கொள் கிறேன். 29 கோடி ரூபாய் என்று சென்ற ஆண்டு போட்டது தவறு. அந்தப் புள்ளிவிவரம் தவறாக அமைந்துவிட்ட காரணத்தால் அவர்கள் சுட்டிக்காட்ட வேண்டிய அவசியம் வந்துவிட்டது. சென்ற ஆண்டு உரையில் 29 கோடி என்று தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அது 29 கோடி அல்ல. 29 கோடி என்பதை ரூபாய் 31 கோடி 24 இலட்சம் என்று திருத்திக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**டாக்டர் மு. கருணாநிதி :** இந்த 29 கோடி ரூபாய் என்று குறிப்பிடப் பட்டிருப்பது 1981-82 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில். இந்த ஓராண்டுக் காலமாக அதைப் பற்றி யாரும் கவனிக்காமல் அந்த 29 கோடி அப்படியே இருப்பது, திருத்தம் தாரால் இருப்பது மிகவும் வருந்தத்தக்கது. அதையும் நிதி அமைச்சர் அவர்கள் உணர்வார்கள் என்று நம்புகிறேன்.



1982 மார்ச் 8] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சுட்டிக் காட்டியதற்காக ஏற்கனவே நன்றி தெரிவித்தேன். ஆகவே, அதற்காகத் தான் அதைத் திருத்திக்கொள்ள வேண்டுமென்று நான் குறிப்பிட்டேன். அந்த அளவுக்கு அதைத் திருத்திக் கொண்டால், இந்த ஆண்டு கொடுத்த கணக்கில் தவறு ஏற்படவில்லை. அதிலே ஏற்பட்ட புள்ளிவிவர தவறுதான், இதற்குக் காரணமாக ஆகிவிட்டது என் பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இந்த கீழ்
மேட்டூர் புனல் மின் நிலையத்தின் கட்டுமான பணிகளுக்கு ஒப்பந்தம் ஏற்
பட்டதில், அரசுக்கு கூடுதல் செலவு ஏற்பட்டுள்ளது என்று அவர்கள் தன்
உரையில் குறிப்பிட்டார்கள். இந்த கீழ் மேட்டூர் புனர் மின் நிலையத்தின்
கட்டுமான பணிகளுக்கு 4 தடுப்பு அணைகள் அதாவது பாரியர்ஸ் கட்டுவதற்கு
மொத்த ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டிருந்தன. அதுவும் குறிப்பிட்ட
காலத்திற்குள், இரண்டு ஆண்டு காலத்திற்குள் கட்டி முடிக்கப்பட வேண்டு
மென்ற நிபந்தனை இருந்தாலும், முழுமையாக ஒப்பந்தப் புள்ளி அளித்துள்ள
நிறுவனத்திற்குத் தரவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த ஒப்
பந்தப் புள்ளி அளித்தவர்கள் ஈ. ஆர் ரங்கசாமி அண்டு பிரதர்ஸ், கே. ராஜ
கோபாலன் அண்டு கம்பெனி, ரவி கன்ஸ்ட்ரக்ஷன், ஸ்ரீகுமார் அண்டு கம்பெனி,
இந்துஸ்தான் கன்ட்ஸ்ரக்ஷன் கார்ப்பரேஷன், நேஷனல் பிராஜக்ட் கன்ஸ்ட்ரக்
ஷன் கார்ப்பரேஷன், கானன் டங்கர்லி அண்டு கம்பெனி இந்த 7 பேர்கள்,
இதற்கு விண்ணப்பம் செய்திருந்தார்கள். ஒப்பந்தப் புள்ளி கொடுத்தவர்
களில் இருவர் அதாவது ஈ. ஆர். ரங்கசாமி அண்டு பிரதர்ஸ், கே. ராஜ
கோபாலன் அண்டு கம்பெனி ஆகிய இருவரும் 4 அணைகளுக்குப் பதிலாக
ஒன்றுக்கு மட்டுமே விண்ணப்பம் செய்தார்கள். மேலும், இந்த குறிப்பிட்ட
4 அணைகளுக்கும் ஒப்பந்தம் அனுப்பாததால், அது சரியல்ல. கீழ்க்கண்ட
காரணங்களால் ஈ. ஆர். ரங்கசாமி அண்டு பிரதர்ஸ், கே. ராஜகோபலன் அண்டு
கம்பெனி, ரவி கன்ஸ்ட்ரக்ஷன், ஸ்ரீகுமார் அண்டு கம்பெனி ஆகியோர் ஒப்பந்
தப் புள்ளி ஏற்கப்படவில்லை. முதல் இருவரும் ஒரு அணைக்கு ஒப்பந்தம்
கோரியிருந்தனர். மேலும், இப்போது மேற்கொள்ள இருக்கின்ற 4 அணை
களுக்கு பேரியர்ஸ் கட்டி, தண்ணீரைத் திருப்பி விடுவதற்கான செலவைக்
குறிப்பிடவில்லை. இது ஒப்பந்த விவரத்திற்கு மாறானதாகும். மின் வாரியப்
பணிகளை மேற்கொள்வதற்கான தகுதி இருந்ததா என்றால், அந்தப் பணிகளை
மேற்கொள்வதற்கான போதிய நிதி வசதி இல்லை. ஈ. ஆர். ரங்கசாமி அண்டு
பிரதர்ஸ் அவர்களிடத்தில் 1979-80 ஆம் ஆண்டில் ரூபாய் 5,890 தான் வரு
மானம் என்று சான்றளிக்கப்பட்டிருந்தது. இவ்வகையில் தடுப்பு அணைகளைக்
கட்டுவதற்கான அனுபவம் அவர்களுக்கு ஏதுமில்லை என்று தெரிய வருகிறது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1982 மார்ச் 8

ஆகவே, இந்த 3 நிறுவனங்கள் எச்.சி.சி. நிறுவனம் ரூபாய் 8.42 கோடிக்கும். என் பி சி சி நிறுவனம் ரூபாய் 8.72 கோடிக்கும். ஜி டி சி நிறுவனம் ரூபாய் 8.80 கோடிக்கும் ஒப்பந்தம் கோரியிருந்தனர். அவற்றில் மிகக் குறைவாக உள்ள எச். சி. சி. நிறுவனத்தின் ஒப்பந்தப் புள்ளி ஏற்கப்பட்டது. இந்த நிறுவனம் கொடுத்த ஒப்பந்தப் புள்ளி குறைவாக இருந்த காரணத்தால், அவர்களுக்கு இந்த ஒப்பந்தம் கொடுக்கப்பட்டது. அது மட்டுமல்ல. இந்த நிறுவனம் 6 தடுப்பு அணைகளை ரூபாய் 55.81 கோடியில் கட்டி முடித்திருக்கிறார்கள். அதோடு மட்டுமல்ல. ஒரே சமயத்தில் ரூபாய் 27.3 கோடி மதிப்புள்ள பணியை மேற்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த எச்.சி.சி. நிறுவனத்திற்கு கொடுத்ததிலே தவறில்லை, புள்ளி விவரப்படி என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மேற்கொண்டு, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் போக்குவரத்து அடிச் சட்டத்தை, சேசிசை வாங்கியதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்காக 555 அடிச் சட்டங்கள் வாங்கப்பட்டதைப் பற்றியும், அதிலே ஏற்பட்ட அதிகச் செலவை பற்றியும் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். உலக வங்கி உதவியுடன் செயல்படும் இந்தத் திட்டத்தில், 555 அடிச் சட்டங்களை, சேசிசை வாங்க அனைத்து நாடுகளிலிருந்தும் ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டது. அப்படி அனைத்து நாடுகளிலிருந்தும், குளோபல் டெண்டர் கோரப்பட்டபோது, மூலதனச் செலவுடன், உதறி பாகஙகளின் செலவு, எரிபொருள்களின் செலவு போன்றவைகளின் செலவுகளையும் கணக்கில் கொண்டு ஆய்வு செய்யப்பட்டது. இதன் அடிப்படையில் அசோக் லே லண்டு, டெல்கோ ஆகிய நிறுவனங்களிடமிருந்து அடிச் சட்டங்கள், சேசிஸ் வாங்குவதில் ஏற்படக்கூடிய செலவு விவரங்கள் பின்வருமாறு தரப்பட்டுள்ளது. அடிச்சட்டங்கள் விலை அசோக் லேலண்ட் 7,44,14,480

(முற்பகல் 11-20)

என்று குறிப்பிட்டிருந்தது. டெல்கோ 6,69,04,062 என்று குறிப்பிட்டிருந்தது. மற்றைய உதிரி பாகங்கள், பராமரிப்பு செலவுகள் என்று வருகிறபோது அசோக் லேலண்ட் ரூபாய் 16 கோடியே 9 லட்சத்து 31 ஆயிரத்து 646 : டெல்கோ 17 கோடியே 12 லட்சத்து 48 ஆயிரத்து 913 : இந்த இரண்டையும் சேர்த்து கணக்கிட்டு பார்க்கிறபோது அசோக் லேலண்ட் ரூபாய் 23 கோடியே 53 லட்சத்து 46 ஆயிரத்து 126 : டெல்கோ 23 கோடியே 81 லட்சத்து 52 ஆயிரத்து 975 : இந்த விவரங்களிலேயிருந்து அசோக் லேலண்ட் கொடுத்த ஒப்பந்தப் புள்ளிகளை ஏற்பதால் அரசுக்கு செலவு 28 லட்சத்து 6 ஆயிரத்து 840 குறைவாக இருக்கும், என்ற அடிப்படையிலே குழு ஒப்பந்தத்தை அசோக் லேலண்டிற்கு அளிக்க பரிந்துரைத்தது. தங்கள் கருத்துரைகளுக்கு போதிய கவனம்



1982 மார்ச் 8] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அளிக்கவில்லை என்ற சில ஒப்பந்த புள்ளிதாரர்கள் தெரிவித்ததையொட்டி ஒப்பந்த புள்ளிதாரர்களுக்கு விவரங்கள் கூற மீண்டும் வாய்ப்பு அளிக்க, ஏற்கனவே உள்ள குழுவை விரிவு படுத்தியோ அல்லது புதிய குழு அமைத்தோ பரிசீலிக்கும்படி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு கருத்தினை தெரிவித்தார்கள். ஆகவே மீண்டும் அவர்களுடைய விவரங்களைப் பெற்று, ஏற்கனவே இருந்த குழு மீண்டும் கொஞ்சம் விரிவு படுத்தப்பட்டு ஆராயும்படியாக கேட்டுக்கொள்ளப்பட்டது. விரிவு படுத்திய குழுவும் உலக வங்கியின் வழிமுறைகளை கொண்டு, மொத்தச் செலவை கணக்கிட்டு அசோக் லேலண்ட்டிற்கு ஒப்பந்தம் அளிக்கும் முடிவு சரியானது என்று பரிந்துரைத்தது. இரண்டு குழுக்களின் முடிவையும் உலக வங்கி ஏற்றுக்கொண்டுள்ளது. அந்த அடிப்படையிலே அசோக் லேலண்ட், டெல்கோ இரண்டையும் ஒப்பிட்டு பார்க்கும் போது 28 லட்சத்து 6 ஆயிரத்து 840 குறைவாக இருந்ததன் காரணமாக அசோக் லேலண்ட் புள்ளியை ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் அரசுக்கு ஏற்பட்டது என்பதையும் இங்கே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இதில் வேறு எந்த நிலைமையும் ஏற்படவில்லை.

அடுத்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உருக்கு உருட்டாலைகளுக்கு விற்பனை வரியிலேயிருந்து விலக்கு அளித்தது குறித்து விளக்கம் அளிக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். உருக்கு உருட்டாலைகளுக்கு விலக்கு அளித்தது என்பது இரண்டு தடவைகள் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. இதோடு சேர்த்து இரண்டு தடவைகள் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. இ...து. 3—1—1977-லே ஒன்று: ஜனவரியிலே முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. 10—4—1970 முதல் 19—1—1976 வரை 4 சதவிகிதம் வரி விலக்கு ஏற்றுக்கொள்வது என்றும் 3—1—1977 ல் 4 சதவிகிதம் வரியை நிறுத்துவது என்றும் ஒரு முடிவு எடுக்க ஒரு முடிவு எடுக்கப்பட்டது. அதற்கு பிறகு இப்போது ஒரு முடிவு எடுக்க வேண்டிய கட்டம் வந்தது. அதற்கு காரணம் என்னவென்றால்

The Steel Rerolling Mills in Tamil Nadu are liable to pay Sales Tax at two sages, viz.,

(a) 4 per cent at the time of purchasing billets and scraps and (b) 4 per cent at the time of selling their end products, viz., M. S. rounds, rods, etc.

ஆகவே தமிழகத்தைப் பொறுத்தவரையில் 2 கட்டத்திலே உருக்கு உருட்டாலைகளுக்கு தேவைப்படுகிற உருக்கு, பழம் இரும்பு மற்றவைகளை வாங்கும்போது 4 சதவீதமும், அது உருக்கு கம்பிகளாக வெளியிடுகின்ற போது 4 சதவீதமும் ஆக 8 சதவீதம் போடப்பட்டிருந்தது. அவர்கள் தொடர்ந்து 4 சதவீதமே கட்டிக்கொண்டிருந்தார்கள். 8 சதவீதம் போட்டிருந்ததை ஆட்சேபித்து இந்த உருட்டாலை அதிபர்கள் எல்லாம் அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டார்கள்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1982 மார்ச் 8

பிறகு வழக்கு தொடுத்தார்கள். வழக்கு தொடுத்ததின் அடிப்படையிலே சென்னை உயர்நீதிமன்றம் 2 கட்டத்திலே கூடாது, ஒரு கட்டத்திலே தான் போடவேண்டுமென்று தீர்ப்பு அளித்தார்கள். இந்த தீர்ப்பு அளித்ததின் அடிப்படையிலே தமிழக அரசு உச்ச நீதிமன்றத்திற்கு இரண்டு கட்டத்திலேயும் வாங்க வேண்டும் என்பதை வற்புறுத்த சென்றது. ஆனால் உச்சநீதி மன்றத்திற்கு செல்லுகிறபோது 4 சதவிதத்திற்கு மேல் வாங்கக் கூடாது, 8 சதவீதம் வாங்கக் கூடாது என்று சென்னை உயர்நீதி மன்றம் தடுத்து நிறுத்தி, 4 சதவீதம் வாங்க வேண்டும், ஒரு கட்டத்திலே வாங்க வேண்டும், இரண்டு கட்டத்திலே வாங்க கூடாது என்று தீர்ப்பு அளித்த பிறகு ஒரு கட்டத்திலே வாங்குகிற சூழ்நிலை இருந்தது. இதற்கு உச்சநீதிமன்றம் ஸ்டே அளிக்கவில்லை. ஆகவே வழக்கு தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது. 4 சதவீதம் தொடர்ந்து அவர்கள் கட்டிக்கொண்டு வந்தார்கள். உச்ச நீதிமன்றத்திலே எடுத்து வைத்ததற்குப் பிறகு 19—1—1976 இல் உச்ச நீதிமன்றம், இரும்பாக இருக்கிற நிலை வேறு, கம்பியாக வருகிற நிலை வேறு, 2 நிலைகளிலும் தனித்தனியாக வரிப் போடுவதற்கு மாநில அரசுக்கு உரிமை உண்டு என்று சொல்லியது. அதற்குப் பிறகு வரிகளைக் கட்டவேண்டுமென்று சொன்னபோது தாங்கள் வசூலிக்கவே இல்லையென்றும், 4 சதவீதம் தான் வசூலித்தோம் என்றும் சொன்னார்கள். உயர் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பை வைத்து 4 சதவீதம் வசூலித்தோம் உச்ச நீதி மன்றம் தடுத்து நிறுத்தி 8 சதவீதம் வசூலிக்க இடம் தரவில்லை இப்போதும் 8 சதவீதம் எங்களைக் கட்டச் சொல்வீர்களானால் நாங்கள் மேற்கொண்டு 8 சதவீதம் கட்டுவதற்கு இயலாது என்று சொல்லி அவர்கள் அரசாங்கத்திடம் முறையீடு செய்தார்கள். 3—1—1977-இல் தமிழகத்திலே அப்போது குடியரசுத் தலைவர் ஆட்சி இருந்தது. அவர்கள் 4 சதவீதம் விலக்களித்து உத்தரவு போட்டார்கள். அதற்கான காரணங்கள் என்ன என்பதை அவர்கள் தெளிவுபட எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

The above-said collection of tax at two stages was disputed by the Mill Owners. The matter went to the High Court, Madras for a settlement on Sales Tax levy for the period 1970-71 to 1974-75. The Rerolling Mills was numbering 45. The High Court in their Judgement, dated 10th April 1970 ordered that no Sales Tax was leviable on the sale of steel Rolled section manufactured out of billets and scraps which have already suffered tax. This was favourable to the Rerolling Mills.

அதைத்தான் சுப்ரீம் கோர்ட் சொன்னது.

Against this order the Government of Tamil Nadu went on appeal to Supreme Court. The point to be noted here is that no stay of the operation of the Judgment of the High Court, Madras had been



1982 மார்ச் 8] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

obtained by the then Government at the time. Under the circumstances, the Rerolling Mills were under the legal protection of not collecting Sales Tax from the consumers at the selling stage and therefore, no tax liability to Government.

அவர்கள் நாங்கள் 4 சதவிதம்தான் வசூலித்தோமே தவிர 8 சதவீதம் வசூலிக்கவே இல்லை. ஆகவே 8 சதவீதம் கொடுப்பதற்கு இல்லையென்று சொன்னார்கள். அதற்குப் பிறகு சுப்ரீம் கோர்ட் தீர்ப்பிலே

The Supreme Court in their Judgment, dated 19th January 1976, reversed the Judgment of the High Court, Madras and placed the State Government in favour of collecting the Sales Tax.

இரண்டு வகையிலும் விதிக்கலாம் என்று சொன்னார்கள்.

Thereupon, the Mill-owners represented to the State Government for waiver of Sales Tax on the ground that from the date of judgment of High Court, Madras (10th April 1970) till the date of Supreme Court Judgment (19th January 1976) there was no legal basis for collection of tax on their part and therefore, they are eligible for waiver of tax liability for the said period.

வசூலிக்காததை எங்களிடத்திலே வசூலிப்பது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். சரியல்ல என்று அவர்கள் கேட்டுக்கொண்டதற்குப் பிறகு

The point at issue then before Government was whether to waive the tax of the said amount or not.

இப்போது 4 சதவீதம் விலக்கு ஆகவே அவர்கள் கேட்டுக்கொண்டபடி அப்போது இருந்த ஆட்சி அளிப்பதா இல்லையா என்று முடிவுக்கு வரவேண்டிய கட்டத்திற்கு வந்தது.

In deciding this issue, the then Government took advantage of the orders issued in G.O. Ms. No. 973, Revenue, dated 27-5-1967 which contemplates that if the assessee shows that owing to an earlier departmental or an eariler Court interpretation, he did not collect tax an administration waiver should be considered and waived the collection of the Sales Tax due from Mills upto 19-1-1976 in G. O. Ms. No. 4, C. T.& R.E., dated 3-1-1977.

3—1—1977-ல் குடியரசுத் தலைவர் ஆட்சி இருந்தபோது அந்த ஆட்சி 1967-ல் ஒரு சட்டத்தை அடிப்படையாக வைத்து ஒரு முடிவுக்கு வந்தது.

(முற்பகல் 11-30)

1967 ஆம் ஆண்டு மே மாதம் 27 ஆம் தேதி ஒரு ஆர்டர் போடப்பட்டது. கோர்ட்டினுடைய ஆர்டரோ அல்லது அரசாங்கத்தினுடைய இன்ஸ்ட்ரக்‌ஷனோ இவற்றின் பேரிலே குறிப்பிட்டவர்கள் விற்பனை வரியை வசூலிக்காமல் நின்று விடுவார்களானால் அந்த வரியை மறுபடியும் வசூ

விக்கக்கூடாது, அதை வெய்வ் பண்ணவேண்டுமென்று ஒரு ஆர்டர் இருக்கிறது, அந்த அடிப்படையை வைத்து அதைக் காரணம் காட்டி 3—1—1977 இல் குடியரசுத் தலைவர் ஆட்சி இருந்தபோது இந்த 4 சதவிதத்தை 1970 லிருந்து 1976 வரையில் நீக்கி விட்டார்கள். அதற்குப் பிறகும் அவர்கள் நான்கு பர்செண்டைத்தான் தொடர்ந்து வசூலித்து வந்தார்கள். அதற்குப் பிறகும் எங்களுக்கு இந்த நான்கு பர்செண்டை நிர்ணயிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருந்தார்கள். இதை ஒரு தனிக் குழுவிற்கு—அந்தக் குடியரசுத் தலைவர் ஆட்சி, இதை போர்ட் ஆப் ரெவின்யூவிற்கு விட்டு இதைப் பற்றி ஒப்பினியன் சொல்லும்படியாகக் கேட்டார்கள். அதற்குப் பிறகு Task Force என்று இதற்கென்று தனியாக ஆராய்வதற்காக, அவர்கள் நான்கு பர்செண்ட் தான் தொடர்ந்து வசூலித்து வந்தார்கள், இதை ஆராய்வதற்காக Tesk Force ஒன்று வைக்கப்பட்டது. அதிலே

Managing Director, Tamil Nadu Industrial Development Corporation Limited.

Director of Industries and Commerce.

Joint Secretary to Government, C.T. & R.E. Department.

Joint Secretary to Government, Public Works Department.

Deputy Secretary, Finance Department.

இந்த ஐந்து பேர் கொண்டிருக்கின்ற ஒரு குழு ஆராய்ந்து இதுபற்றிய அறிக்கைகளை வெளியிடும்படியாகக் கேட்டுக்கொண்டார்கள். அவர்கள் வெளியிட்டிருக்கின்ற அறிக்கையில், "உருக்கு உருட்டாலைகள் தமிழ் நாட்டில் சரிவர இயங்காமல் பல மூடப்பட்டுள்ளன. இதனால் பல தொழிலாளர்கள் வேலையிழக்கும் நிலை ஏற்பட்டது. மாநிலத்தில் நடைபெறும் கட்டுமானப் பணிகளுக்கு ஆதாரமாக விளங்கும் உருக்குப் பொருள்களின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள இந்தத் தொழில் புத்துயிர் அளிக்கப்பட்டு செம்மையாக செயல்பட வேண்டியது அவசியம். இந்தத் தொழிற்சாலைகள் புத்துயிர் பெற மற்ற மாநிலங்களில் நிறுவப்பட்டுள்ள தொழிற்சாலைகளுடன் போட்டியிடும் வகையில் விற்பனை வரி அமைத்திட வேண்டும். ஆந்திர மாநிலத்தில் உருட்டாலையின் உற்பத்திப் பொருள்களின் விற்பனை வரி விலக்கு பெற்று நான்கு பர்செண்டாக உள்ளது. பிற மாநிலங்களில் சலுகைகளும் விலக்கு, வரி விலக்கு முறைகளும் 'tax holidays' அளிக்கப்பட்டுள்ளன. எனவே, நான்கு பர்செண்ட் வரி விலக்கு அளிக்க வேண்டும்" என்ற அளவிற்கு இந்த டாக்ஸ் குழு பரிந்துரை செய்தது. அதை ஆராய்ந்ததற்குப் பிறகுதான் ஆந்திராவில் 1970-லிருந்து நான்கு பர்செண்ட் இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் நாம் 8 பர்செண்டாகப் போடும்பொழுது ஆந்திரா 4 பர்செண்டைப் போட்டுக் கொண்டு வருங்காலத்து நம்முடைய





மாநிலத்தினுடைய உருக்காலைகள் விற்கப்படாமல் பல தொழிற்சாலைகளை மூட வேண்டிய அவசியம் வந்தது என்றும் இந்தக் குழுவினுடைய அறிக்கையை வைத்து அரசு ஆராய்ந்து பார்த்ததற்குப் பிறகு தான் 1970-இலிருந்து 1976 வரையில் எப்படி 4 பர்செண்டை நீக்கிவிட்டு, 4 பர்செண்ட் கட்ட வேண்டுமென்று வற்புறுத்தினார்களோ அந்த வகையிலேதான் 1976-லேயிருந்து இதுவரையிலும் 4 பர்செண்டை நீக்கிவிட்டு இனிமேல் ஒரு கட்டத்தில் 4 பர்செண்ட் அவர்கள் செலுத்தினால் போதும் என்ற அளவிற்கு இந்த நிலைமைகள் கொண்டு வரப்பட்டன. அப்பொழுதிருந்த விலைவாசியினுடைய அடிப்படையில் ஏற்பட்ட, அந்த விலக்கை அளிப்பதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கின்ற தொகை 1 கோடியே 22 இலட்சம் ரூபாய். இப்பொழுது விலக்கு அளிப்பதற்குக் கிட்டத்தட்ட கொடுக்கப்பட்டிருக்கின்ற தொகை, இந்த ஐந்தாண்டுக் காலத்திற்குள்ளாக, 3 கோடியே 60 இலட்சம் ரூபாய் ஆகும். இப்பொழுது இருக்கின்ற விலைவாசியின் அடிப்படையில் அமைந்த தன்மை. அதைத் தவிர இதிலே வேறொன்றும் தவறாகவோ வேறு நிலைமைகளோ இல்லை. இருக்கின்ற சூழ்நிலைகளைத் தொடர்ந்து இந்த விண்ணப்பம் இருந்து வருவதானாலே, இப்பொழுதும் பல வழக்குகள் சென்னை உயர்நீதி மன்றத்தில் இருந்துகொண்டு வருகின்றன. சில வழக்குகளை வாபஸ் வாங்கியிருக்கிறார்கள். வேறு சில வழக்குகள் தங்களுக்கு இன்னும் சில பல சலுகைகள் தேவைப்படுகின்றன என்று சொல்லி அந்த வழக்கை அப்படியே காப்பாற்றிக்கொண்டிருப்பார்கள். ஆகவே, எந்த வகையிலேயும் இதிலே எந்தத் தவறும் ஏற்படவில்லை என்பதை நான் குறிப்பிட்டுக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதுபற்றி அந்த ஆர்டர்களும் அப்பொழுது 3—1—1977-லேயும், இப்பொழுதும் 24—1—1982-லேயும் போடப்பட்டிருக்கிற ஆர்டர்களும் தெளிவாக இருக்கின்றன.

அடுத்து, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் குறிப்பிட்ட ஒன்றிலே, உலகத் தமிழ் மாநாட்டின் கணக்கு பற்றிக் குறிப்பிட்டார்கள். இந்த அவையிலே வைக்கப்பட வேண்டுமென்று குறிப்பிட்டது, இன்னும் வைக்கப்படவில்லை என்ற கருத்தையும் அவர்கள் தெரிவித்தார்கள். உலகத் தமிழ் மாநாட்டிற்கான கணக்குளோடு மாநாட்டினுடைய பகுதிகளைப் பொறுத்தவரையிலும் ஏற்பட்ட செலவுகளைத் தணிக்கை செய்து, அந்தக் கணக்கும், மாநாட்டையொட்டி மதுரை மாநகர் பல்வேறு வசதி வாய்ப்புகளைப் பெறுவதற்காகச் செலவழிக்கப்பட்ட கணக்குகளும் தணிக்கை செய்யப்பட்டு வருகின்றன. தணிக்கை செய்யப்பட்டதற்குப் பிறகு இரண்டு கணக்குகளையும் சேர்த்து இந்த அவையிலே வைக்க வேண்டுமென்கின்ற எண்ணத்தில் இந்த அரசு இருக்கிறது. அது முழுவதும் முடிந்ததற்குப் பிறகு அந்தக் கணக்குகள் இந்த அவையிலே வைக்கப்படும் என்பதை நான் குறிப்பிட்டுக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1982 மார்ச் 8

லிக்சுக்கூடாது, அதை வெய்வ் பண்ணவேண்டுமென்று ஒரு ஆர்டர் இருக்கிறது, அந்த அடிப்படையை வைத்து அதைக் காரணம் காட்டி 3—1—1977 இல் குடியரசுத் தலைவர் ஆட்சி இருந்தபோது இந்த 4 சதவீதத்தை 1970 லிருந்து 1976 வரையில் நீக்கி விட்டார்கள். அதற்குப் பிறகும் அவர்கள் நான்கு பர்செண்டைத்தான் தொடர்ந்து வசூலித்து வந்தார்கள். அதற்குப் பிறகும் எங்களுக்கு இந்த நான்கு பர்செண்டை நிர்ணயிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருந்தார்கள். இதை ஒரு தனிக் குழுவிற்கு—அந்தக் குடியரசுத் தலைவர் ஆட்சி, இதை போர்ட் ஆப் ரெவின்யூவிற்கு விட்டு இதைப் பற்றி ஒப்பினியன் சொல்லும்படியாகக் கேட்டார்கள். அதற்குப் பிறகு Task Force என்று இதற்கென்று தனியாக ஆராய்வதற்காக, அவர்கள் நான்கு பர்செண்ட் தான் தொடர்ந்து வசூலித்து வந்தார்கள், இதை ஆராய்வதற்காக Tesk Force ஒன்று வைக்கப்பட்டது. அதிலே

Managing Director, Tamil Nadu Industrial Development Corporation Limited.

Director of Industries and Commerce.

Joint Secretary to Government, C.T. & R.E. Department.

Joint Secretary to Government, Public Works Department.

Deputy Secretary, Finance Department.

இந்த ஐந்து பேர் கொண்டிருக்கின்ற ஒரு குழு ஆராய்ந்து இதுபற்றிய அறிக்கைகளை வெளியிடும்படியாகக் கேட்டுக்கொண்டார்கள். அவர்கள் வெளியிட்டிருக்கின்ற அறிக்கையில், "உருக்கு உருட்டாலைகள் தமிழ் நாட்டில் சரிவர இயங்காமல் பல மூடப்பட்டுள்ளன. இதனால் பல தொழிலாளர்கள் வேலையிழக்கும் நிலை ஏற்பட்டது. மாநிலத்தில் நடைபெறும் கட்டுமானப் பணிகளுக்கு ஆதாரமாக விளங்கும் உருக்குப் பொருள்களின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள இந்தத் தொழில் புத்துயிர் அளிக்கப்பட்டு செம்மையாக செயல்பட வேண்டியது அவசியம். இந்தத் தொழிற்சாலைகள் புத்துயிர் பெற மற்ற மாநிலங்களில் நிறுவப்பட்டுள்ள தொழிற்சாலைகளுடன் போட்டியிடும் வகையில் விற்பனை வரி அமைத்திட வேண்டும். ஆந்திர மாநிலத்தில் உருட்டாலையின் உற்பத்திப் பொருள்களின் விற்பனை வரி விலக்கு பெற்று நான்கு பர்செண்டாக உள்ளது. பிற மாநிலங்களில் சலுகைகளும் விலக்கு, வரி விலக்கு முறைகளும் 'tax holidays' அளிக்கப்பட்டுள்ளன. எனவே, நான்கு பர்செண்ட் வரி விலக்கு அளிக்க வேண்டும்" என்ற அளவிற்கு இந்த டாக்ஸ் குழு பரிந்துரை செய்தது. அதை ஆராய்ந்ததற்குப் பிறகுதான் ஆந்திராவில் 1970-லிருந்து நான்கு பர்செண்ட் இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் நாம் 8 பர்செண்டாகப் போடும்பொழுது ஆந்திரா 4 பர்செண்டைப் போட்டுக் கொண்டு நெருங்காலத்து நம்முடைய



1982 மார்ச் 8] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

மாநிலத்தினுடைய உருக்காலைகள் விற்கப்படாமல் பல தொழிற்சாலைகளை மூட வேண்டிய அவசியம் வந்தது என்றும் இந்தக் குழுவினுடைய அறிக்கையை வைத்து அரசு ஆராய்ந்து பார்த்ததற்குப் பிறகு தான் 1970-இலிருந்து 1976 வரையில் எப்படி 4 பர்செண்டை நீக்கிவிட்டு, 4 பர்செண்ட் கட்ட வேண்டுமென்று வற்புறுத்தினார்களோ அந்த வகையிலேதான் 1976-லேயிருந்து இதுவரையிலும் 4 பர்செண்டை நீக்கிவிட்டு இனிமேல் ஒரு கட்டத்தில் 4 பர்செண்ட் அவர்கள் செலுத்தினால் போதும் என்ற அளவிற்கு இந்த நிலைமைகள் கொண்டு வரப்பட்டன. அப்பொழுதிருந்த விலைவாசியினுடைய அடிப்படையில் ஏற்பட்ட அந்த விலக்கை அளிப்பதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கின்ற தொகை 1 கோடியே 22 இலட்சம் ரூபாய். இப்பொழுது விலக்கு அளிப்பதற்குக் கிட்டத்தட்ட கொடுக்கப்பட்டிருக்கின்ற தொகை, இந்த ஐந்தாண்டுக் காலத்திற்குள்ளாக, 1 கோடியே 60 இலட்சம் ரூபாய் ஆகும். இப்பொழுது இருக்கின்ற விலைவாசியின் அடிப்படையில் அமைந்த தன்மை. அதைத் தவிர இதிலே வேறொன்றும் தவறாகவோ வேறு நிலைமைகளோ இல்லை. இருக்கின்ற சூழ்நிலைகளைத் தொடர்ந்து இந்த விண்ணப்பம் இருந்து வருவதானாலே, இப்பொழுதும் பல வழக்குகள் சென்னை உயர்நீதி மன்றத்தில் இருந்துகொண்டு வருகின்றன. சில வழக்குகளை வாபஸ் வாங்கியிருக்கிறார்கள். வேறு சில வழக்குகள் தங்களுக்கு இன்னும் சில பல சலுகைகள் தேவைப்படுகின்றன என்று சொல்லி அந்த வழக்கை அப்படியே காப்பாற்றிக்கொண்டிருப்பார்கள். ஆகவே, எந்த வகையிலேயும் இதிலே எந்தத் தவறும் ஏற்படவில்லை என்பதை நான் குறிப்பிட்டுக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதுபற்றி அந்த ஆர்டர்களும் அப்பொழுது 3—1—1977-லேயும், இப்பொழுதும் 24—1—1982-லேயும் போடப்பட்டிருக்கிற ஆர்டர்களும் தெளிவாக இருக்கின்றன.

அடுத்து, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் குறிப்பிட்ட ஒன்றிலே, உலகத் தமிழ் மாநாட்டின் கணக்கு பற்றிக் குறிப்பிட்டார்கள். இந்த அவையிலே வைக்கப்பட வேண்டுமென்று குறிப்பிட்டது, இன்னும் வைக்கப்படவில்லை என்ற கருத்தையும் அவர்கள் தெரிவித்தார்கள். உலகத் தமிழ் மாநாட்டிற்கான கணக்குகளோடு மாநாட்டினுடைய பகுதிகளைப் பொறுத்தவரையிலும் ஏற்பட்ட செலவுகளைத் தணிக்கை செய்து, அந்தக் கணக்கும், மாநாட்டையொட்டி மதுரை மாநகர் பல்வேறு வசதி வாய்ப்புகளைப் பெறுவதற்காகச் செலவழிக்கப்பட்ட கணக்குகளும் தணிக்கை செய்யப்பட்டு வருகின்றன. தணிக்கை செய்யப்பட்டதற்குப் பிறகு இரண்டு கணக்குகளையும் சேர்த்து இந்த அவையிலே வைக்க வேண்டுமென்கின்ற எண்ணத்தில் இந்த அரசு இருக்கிறது. அது முழுவதும் முடிந்ததற்குப் பிறகு அந்தக் கணக்குகள் இந்த அவையிலே வைக்கப்படும் என்பதை நான் குறிப்பிட்டுக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1982 மார்ச் 8

தமிழன்னை சிலை உலகத் தமிழ் மகாநாட்டையொட்டித் திறந்து வைக்கப் பட்டது. அந்தச் சிலையைப் பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் குறிப்பிட்டார்கள். திறந்துவைக்கப்பட்ட சிலை என்னவாயிற்று என்று அவர்கள் கேட்டார்கள். அந்தச் சிலையைப் பொறுத்தவரையிலும் மதுரை மாநகரத்தில் அதனுடைய இரயில்வே நிலையத்திற்கு எதிரிலே இருக்கின்ற ஒரு முக்கியமான இடத்தில் வைக்க வேண்டுமென்ற தன்மையை வைத்து இரயில்வே போர்டாருக்கு இந்த அரசு எழுதிற்று. அந்த இடத்தை அவர்கள் தருவதற்கில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நாம் மறுபடியும் எழுதி யிருக்கிறோம். அங்கு ஒரு பிள்ளையார் கோயில்கூட இருக்கிறது. அது இருக்கும்பொழுது தமிழன்னைக்கு ஒரு இடம் ஒதுக்கித் தருவதிலே ஒன்றும் தகராறு ஏற்பட வழியில்லை, ஆகவே, மறுபடியும் புனராலோசனை செய்து ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறோம். அந்த முக்கியமான இடமாக இருக்கின்ற காரணத்தால்தான் அந்த இடம் கிடைப்பதற்காக நாம் காத்துக்கொண்டிருக்கிறோம்.

அந்தச் சிலை எங்கும் பழுதுபட்ட நிலையிலோ, பாதுகாப்பற்ற நிலை யிலேயே கிடத்திவிடப்படவில்லை. தமிழன்னை சிலை திருமலை நாய்க்கர் மகாலில் ஒரு பாதுகாப்பான இடத்தில் தான் வைக்கப்பட்டிருக்கிறது. பல் வேறு பொருள்கள் வைக்கப்பட்டிருக்கின்ற இடத்தில் பாதுகாப்பான இடத் தில்தான் வைக்கப்பட்டிருக்கின்றது. இடம் ஒதுக்கப்பட்ட உடனே அந்தச் சிலை அங்கே நிறுவப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பாரதியார் நூற்றாண்டு விழாச் செலவினுடைய தன்மையைப்பற்றி, பல இலட்சக்கணக்கான ரூபாய்கள் விரயமாகச் செலவழிக்கப்பட்டிருக்கின்றன என்ற முறையில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்கள் இங்கே குறிப்பிட் டார்கள். அரசுப் பணம், பல வகைகளில் விரயமாக்கப்படுகிறது என்று அவர் கள் குறிப்பிட்டார்கள். 1947 ஆம் ஆண்டு கட்டப்பட்ட மணி மண்டபம் 35 ஆண்டுகாலமாக, எந்தவிதப் பராமரிப்பும் இல்லாமல் இருந்தது. பாரதி நூற்றாண்டு விழாவை ஒட்டி, அந்த மண்டபத்தில் தளம் அமைக்க, சுவர் களைப் புதுப்பிக்க, கதவு, ஜன்னல்கள், மின் இணைப்புகள், மேல்தளம் ஆகிய வற்றைச் சீர்படுத்த செலவழிக்கப்பட்டன. குடிநீர் அமைப்பும், மேல்நிலை நீர்த்தொட்டி ஒன்றும் கழிப்பிடம் ஒன்றும் மண்டபத்தின் அருகில் கட்டப் பட்டன. வெளியிலிருந்து, மண்டபத்திற்குக் கான்கிரீட் சாலை ஒன்று போடப்பட்டது. இப்பணிகள் அனைத்திற்கும் சேர்த்து ரூபாய் 2.50 இலட்சம் செலவிடப்பட்டிருக்கிறதே தவிர, ரூபாய் 4 இலட்சம் செலவழிக்கப்படவில்லை யென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 5 இலட்சம் மக்கள் பாரதி நூற்றாண்டு விழாவை 3 நாள் கண்டு களித்தார்கள். அவர்கள் அனைவரும் வசதியாக



1982 மார்ச் 8] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இருந்து விழாவினைக் காண்பதற்காக 180 மீட்டர் நீளமும் 90 மீட்டர் அகல
மும் உள்ள பாதை அமைக்கப்பட்டது. அதற்கு ரூபாய் 3.60 இலட்சம் செல
விடப்பட்டது. ரூபாய் 1.60 இலட்சம் செலவில் விழாப் பந்தலில், ஒளி விளக்கு
கள், ஒலிபெருக்கி வசதிகள், மற்றவைகள் அமைக்கப்பட்டன. எட்டையா
புரத்தில் மிகச் சீர்கேடான நிலையிலுள்ள சாலைகளைச் சீர்படுத்த ரூபாய்
2 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 10 சாலைகள் அந்தத் தொகையில்
சீர்படுத்தப்பட்டன. எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டதைப் போன்று
ரூபாய் 10 இலட்சம் செலவு இல்லையென்பதையும், ரூபாய் 2 இலட்சம் தான்
அதற்காக செலவழிக்கப்பட்டது என்பதையும் ஆனால், பத்து சாலைகள்
சீர்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்பு
கிறேன். எட்டையாபுரம் நகரில் ரூபாய் 1.40 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில்,
6 கழிப்பிடங்கள் என்றென்றும் பயன்படத்தக்க அளவுக்கும், என்றைக்கும்
அங்கே விழாக்கள், மற்றவைகள் நடந்தாலுங்கூட, அதைத் தாங்குகிற அள
வுக்கு அமைய வேண்டுமென்று கட்டப்பட்டன. அதற்கான செலவு ரூபாய்
1.40 இலட்சம், ரூபாய் 4 இலட்சம் அல்ல. சாதாரணமாக, அரசு நடத்தும்
பொருட்காட்சிகளுக்கு, சுமார் ரூபாய் 6 இலட்சத்திலிருந்து ரூபாய் 8 இலட்சம்
வரையில் நிதி ஒதுக்கப்படுகிறது. ஆனால், எட்டையாபுரத்தில் நடத்தப்
பட்ட பொருட்காட்சியில் குறைந்த அளவிலான துறைகள் பங்கு கொண்ட
தால், அரங்குகள் அமைக்கவும், பொருட்காட்சியைச் சுற்றித் தட்டியை அடைப்
பதற்கும் மின்சார வேலைகள், மற்றவைகள் செய்வதற்கும் ரூபாய் 2 இலட்சம்
மட்டுமே செலவிடப்பட்டுள்ளது. மக்களுடைய வரிப் பணம் பாழாக வேண்டு
மென்ற தன்மையிலோ, விரயமாக்கப்பட வேண்டுமென்ற தன்மையிலோ அல்ல.
மகாகவி பாரதியாருடைய நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாட
வேண்டுமென்ற நோக்கத்தினுடைய அடிப்படையிலேதான் இந்தச் செலவுகள்
எல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால், இவைகள்பற்றி தணிக்கைகள்,
மற்றவைகள் எல்லாம் வரும். அப்பொழுது இவைபற்றி விரிவான தன்மை
களும் மற்றவைகளும் வெளிப்படுத்தப்படும் என்பதையும் நான் கூறிக்கொள்ள
விரும்புகிறேன்.

அடுத்து பல்வேறு உறுப்பினர்களும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்
அவர்களும் குறிப்பிட்டார்கள், விதவைகளுக்குத் தாலிக்குத் தங்கம் தருவது
என்கின்ற தன்மையைப் பற்றி. அதை சொன்னபொழுதே, 1980-81 ஆம்
ஆண்டு நிதிநிலை அறிக்கையிலேயே அதற்கான குறிப்புகளும் தரப்பட்டிருந்
தன. விதவைத் தாய்மார்களுடைய மகளிருக்குத் திருமண உதவித் தொகை
ரூபாய் 5,000 வழங்குவதற்குரிய ஆணையை அரசு 1982-லே பிறப்பித்தது.
ஆகவே, விதவைகளுக்குத் தாலி தங்கம் வழங்குவது என்ற திட்டத்தை நாம்
எடுத்துக் கொண்டோம். ஆனால், விதவைத் தாய்மார்களிலே பலர் பொது

வாக, தமிழகத்தினுடைய வழக்கத்தின்படி தாலி வாங்குவது மாப்பிள்ளை வீட்டாரைச் சேர்ந்திருக்கிற செலவாக இருக்கும்போது, அந்தத் தொகை அவர்களுக்குத் தான் போகுமே தவிர, எங்களுக்கு அது ஒன்றும் பயன் படாது. ஆகவே, தாலிக்குக் குறைந்த விலையில் தங்கம் தருவதைவிட, நீங்கள் தாலியாகத் தருவதை விட, நீங்கள் எங்களுக்குப் பணமாகத் தருவீர் களானால், எங்களுக்குப் பாதுகாப்பாக அமையும் என்ற ஒரு கருத்தை அவர் கள் எடுத்துத் தெரிவித்ததற்கிணங்கத்தான் அதுபற்றியும் ஆராய்ந்து அதற் காக ஒதுக்கப்பட்ட ரூபாய் 10 இலட்சத்தையும் ஒவ்வொருவருக்கும் ரூபாய் 1,000 விதம் தரலாம் என்று உத்தரவிடப்பட்டது. அது 20—2—1982-லே வெளியிடப்பட்ட போதிலும், அதற்கான விரிவான விளம்பரம் கொடுத்து, மனுக்களை பெற்று, பரிசீலனை செய்து தயாராக வைத்திருக்கும்படி மாவட்ட சமூக நல அலுவலர்களுக்கு சமூக நலத்துறை இயக்குநர் அவர்கள் ஏற்கனவே அறிவுரைகள் வழங்கி உள்ளார்கள். இதுவரை சுமார் 450 மனுக்கள் வந்துள்ளன. என்றாலும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்ட கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். 20—2—1982-லே இந்த ஆணை வெளியிட வேண்டிய அவசியம் வந்தது. மார்ச் மாத இறுதிக்குள் இந்த விண்ணப்பங்களைப் பரிசீலித்து அத்தனை பேருக்கும் தர இயலுமா என்று அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். எந்த அளவிற்குத் தர முடியுமோ அந்த அளவு தருவதற்கான முயற்சி எடுத்து, இந்த ஆண்டு ஒதுக்கிடு ரூபாய் 10 இலட்சத்தில் எவ்வளவு தருகிறோமோ அவ்வளவையும் தந்து, அதிலே மீதப் படுகின்ற தொகையினை அடுத்த ஆண்டிலே தருவதற்கான ஏற்பாட்டினை இந்த அரசு செய்யும் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11-40)

மூன்று மாத கால அளவிலே போதுமான அளவுக்கு இல்லாவிட்டாலும் கூட, தேவைப்பட்டால், வசதிப்பட்டால் எந்த ஒரு காரணத்தை வைத்தும் தள்ளிவிட வேண்டிய அவசியம் இல்லை என்றும், இந்த 3 மாத காலத்தி னுடைய நிபந்தனையை இப்போது வருகின்றவர்களுக்கு தளர்த்த வேண்டிய அவசியம் ஏற்பட்டால், அதைத் தளர்த்தலாம் என்ற அளவுக்கு ஆணையிடப் பட்டிருக்கிறது. கூடுமான வரை இந்த 1,000 பேர்களுக்குக் கிடைக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டாலும், 400-த்திச் சில்லரை பேருக்குத்தான் கிடைக்கிறது என்றாலும் கூட, மீதியை அடுத்த ஆண்டு தருவதற்கும் இந்த அரசு நடவடிக் கையை மேற்கொள்ளும். அடுத்த ஆண்டு 15 இலட்சம் ரூபாய் இதற்காக ஒதுக்கியிருக்கிறோம். 15 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு கிட்டத்தட்ட 1,500 பேர்களுக்கு அடுத்த ஆண்டு தரலாம். இந்த ஆண்டு விட்டுப்போனவைகளை யும் சேர்த்து அடுத்த ஆண்டு இந்த உதவியை வழங்குவதற்கான ஏற்பாடுகள் அத்தனையும் செய்வோம் என்பதை கூறிக்கொள்கிறேன்.





மற்றொன்றையும் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்களுக்கு, விதவை களுக்கு திருமணம் ஆகின்ற சூழ்நிலை ஏற்படுமானால் அவர்கள் விதவைத் தன்மையை இழந்து விடுகிறார்கள். அவர்கள் குடும்பத்திற்கு உரியவர்களாக ஆகிவிடுகிறார்கள். அவர்களுக்குத் தனியாகச் சலுகைகள் தரவில்லை. அவர் கள் விதவைகளாக இருந்து அவர்களுக்குப் பல்வேறு நிபந்தனைகளை எல்லாம் விதித்து, அவர்களுடைய மகள்களுக்கு திருமணம் செய்யவேண்டும் என்று இருக்கின்றது. பல்வேறு நிபந்தனைகளை வைத்து அந்த அடிப்படையிலே 1,000 ரூபாய் வழங்கப்படும். ஆனால் அப்படி இல்லாமல் அவர்கள் மறுமணம் செய்து கொள்வார்களானால் அவர்களுக்கு வேறு வகையிலே வசதிகள் இல்லா மல் இல்லை. விதவைகள், மறுமணம் செய்து கொள்பவர்களுக்கு என்று தனியாக சலுகை அளிப்பதன் காரணமாக அந்த வகையிலே அவர்கள் சலுகை களைப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பிருக்கிறது என்பதைக் கூறிக் கொள்கிறேன்.

'economic assistance towards widows remarriage under which National Savings Certificate to the value of Rs. 5,000 held in deposit for 7 years is given in the names of the husband and wife, etc.'

என்று கூறப்பட்டிருக்கிறது. அந்த வகையிலே 1977-78-லே 93 பேர் களுக்கு ஐயாயிரம் ஐயாயிரமாக விதவைகள் மறுமணம் செய்து கொண்டாலும் அவர்களுக்கு (குறுக்கிடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறுவது போன்று இது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருக்கும்போது கொண்டு வரப்பட்டது என்று நினைவுபடுத்தினார்கள். மகிழ்ச்சி. அது எந்த ஆட்சி கொண்டு வந்தாலும் சரி, நன்மைகள் யார் செய்தாலும் அது பாராட்டவேண்டியதுதான். வெள்ளைக்காரன் காலத்திலே இருந்து கூட நன்மைகள் கொஞ்சம் கொஞ்சமாக வந்து கொண்டிருக்கின்றது. ஒவ்வொரு அரசும் செய்து கொண்டு வரும்போது அதை மறுக்க வேண்டிய அவசியம் இல்லை. இங்கே கொடுத்திருக்கின்ற கணக்குகளை சொன்னேனே தவிர, இதிலே தனிப்புகழைப் பெறவேண்டும் என்று இல்லை. அது விரிவுபடுத்தப்பட் டிருக்கிறது என்று சொன்னேன். 1977-78 லே 93 பேர்களுக்குத் தரப்பட் டிருக்கின்றது, 1978-79-லே 95 பேர்களுக்குத் தரப்பட்டிருக்கின்றது. 1979-80-லே 100 பேர்களுக்குத் தரப்பட்டிருக்கின்றது. 1980-81-லே 373 விதவைகள் மறுமணம் செய்ததன் காரணமாக தரப்பட்டிருக்கின்றது.

**திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, விதவைகள் மறுமணம் செய்து கொள்ளவேண்டிய நிலைமை ஏற்படுமானால், அல்லது முன்வருவார்களானால், அவர்களுக்கு உதவி செய்ய ஒரு திட்டம். விதவைகளாக இருக்கின்ற தாய்கள், அவர்களுடைய பெண்களுக்கு திருமணம் செய்ய விரும்புவார்களானால் அவர் களுக்கு உதவுவதற்கு இப்போது நாவலர் அவர்கள் தெரிவித்த திட்டம்,

பெற்றோர்களே இல்லாத பெண்கள் திருமணம் செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டால் அந்த வகையிலே பெற்றோர்களே இல்லாமல் இருக்கின்ற பெண் களுக்கு உதவுவதற்கு இந்தத் திட்டத்திலே இடம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திலே அதற்கு இடமில்லை. மாண்புமிகு எதிர்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கூறுவதுபோல அதுவும் கவனிக்கப்படவேண்டிய ஒன்று தான். அதைப் பற்றியும் இந்த அரசு ஆராயும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். விதவைத் தாய் இருக்கும்போது பெண்களுக்கு திருமணம் செய்வதற்கு ஆயிரம் ரூபாய் தரும்போது, தாயும் இல்லாமல், தகப்பனும் இல்லாமல் பரிதவித்துக் கொண்டு பெண்கள் இருக்கின்ற சூழ்நிலையை எண்ணி, அதற்கான திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஒத்துழைப்போடு வகுத்து, அதற்கான முயற்சியை கொண்டு வருவதற்கான தன்மையைச் செய்யும் என்று நான் கூறிக்கொள்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டத்திற்குப் பதில் மனுக்கள் பெறப்பட்டு இருக்கின்ற காரணத்தாலே பணமாக உதவி செய்யப்படுவதாக நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். அதற்கு அவர்கள் போட்டிருக்கின்ற நிபந்தனை அவர்கள் விதவைகளாக இருக்கவேண்டும் என்ற கண்டிஷனைப் போட்டிருக்கிறார்கள். வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கக்கூடியவர்கள் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொன்னாலும், திருமணம் செய்ய முடியாத சூழ்நிலையின் காரணமாக, வறுமையின் காரணமாக, பணம் இல்லாமையின் காரணமாகக் கூட ஏற்படுகிறது. எனவே, விதவை என்ற ஒரு அடிப்படையை வைத்து இருப்பது எப்படி சரியாக இருக்கும் ? அந்தக் கண்டிஷனை நீக்கிவிட்டு ஏழை எளியவர்கள் என்பதற்கு உங்களுடைய விளக்கத்தை பட்ஜெட்டிலே நீங்கள் தெளிவுபடுத்தாத சூழ்நிலையிலே, ஏழைகள் அத்தனைபேர்களுக்கும் கிடைப்பதற்கு ஒரு வாய்ப்பை இந்த அரசு ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, பொதுவாக ஏழை எளியவர்கள் எல்லோருடைய நிலையையும் சீராக்கி அவர்களை மாட மாளிகை கூடகோபுரங்களில் கொண்டுவர வேண்டும் என்று சொன்னால் அதற்குக் கோடிக்கணக்கான ரூபாய் தேவைப்படும். இருக்கின்ற வசதியை வைத்து, சமுதாயத்தில் நலிந்தவர்கள், மிகவும் கஷ்டப்படுகிறவர்கள் என்று நாம் படிப்படியாக தேர்ந்தெடுத்து உதவி அளித்துவருவதன் காரணமாக, நாம் அந்த எண்ணிக்கையைக் குறுக்கி ஓரளவுக்கு அவர்களுக்கு





வசதியை நம்முடைய நிதிநிலைக்கு ஏற்ப செய்யவேண்டியிருக்கிறது. மற்ற பல நாடுகளில் எல்லாம் தேவைக்கு ஏற்றளவிற்கு பட்ஜெட் போடுகிறார்கள். நாம் பட்ஜெட் போடுகின்ற நேரத்தில் இருக்கின்ற நிதிவசதிகளை அனுசரித்து இந்தத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. ஆகவே, அந்த வகையில் இந்தத் திட்டங்களை நிறைவேற்றுகின்ற நேரத்தில் அதற்கு இன்னின்னார், இந்த வகையில், இவ்வளவு வருமானம் பெற்றுக்கொண்டு இருக்கிறவர்களாக இருக்கவேண்டும் என்று சொல்லி இருக்கிறோம். எல்லோருக்கும் உதவி செய்வது என்று ஆரம்பித்தால், அந்த உதவியைப் பெறுவதற்கான தகுதி படைத்தவர்கள், அதற்கான சூழ்நிலையைப் பெற்றவர்கள் பலகோடிக்கணக்கான பேர்கள் இருக்கிறார்கள் என்பதை நாம் அறிவோம். ஆகவே, மெல்ல மெல்ல, கொஞ்சம் கொஞ்சமாக, ஆண்டுக் காண்டு ஒவ்வொரு அரசும் திட்டத்தைப் புதிது புதிதாக அவர்களின் நலனுக் காகப் போட்டுக்கொண்டு வருகிறது. இந்தத் திட்டத்தை முழுமையாக அனைவருக்கும் மேற்கொள்ள ஆரம்பித்தால், இன்னொரு 100 கோடி டெபிசிட்—பற்றாக்குறை—பட்ஜெட் போட வேண்டி வந்தாலும் வந்து இருக்கலாம்.

**டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, 38 வயதுடைய ஒரு விதவை தன்னுடைய 18 வயது மகளுக்குத் திருமணம் செய்வதற்காக ஆயிரம் ரூபாய் பணத்தை அரசிடம் இருந்து பெற்றபிறகு, அந்தத் திருமணத்தை முடித்து விட்டு, அந்த விதவைத் தாய் மறுமணம் செய்து கொண்டால், கொடுக்கப்பட்ட அந்தப் பணத்தை திரும்பப்பெற அரசு பரிசீலிக்குமா அல்லது விட்டுவிடுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, விதவையாக இருக்கும்போது அவருடைய பெண் திருமணத்திற்காக ஆயிரம் ரூபாய் வாங்கியிருந்தால், அது வாங்கிக்கொண்டது வாங்கிக்கொண்டது தான். அதற்குப் பிறகு மறுமணம் செய்து கொண்டால், அதற்காக அவருக்கு 5,000 ரூபாய் வழங்கப்படும். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் இங்கே இந்தக் கேள்வியைக் கேட்ட காரணத்தால் சில பேர் இந்தத் தந்திரத்தைக் கையாளக்கூடிய நிலைமை ஏற்படக்கூடும்.

**திரு. ப. நெடுமாறன்:** தலைவர் அவர்களே, அந்த 38 வயது அடைந்த இளம் விதவை மறுமணம் செய்து கொண்டால் என்ன ஆகும் என்று ஒரு ஐயத்தை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எழுப்பினார்கள். அந்த விதவை மறுமணம் செய்து கொண்டால் அவர்களுக்கும் ஆயிரம் ரூபாய் உதவித் தொகை அளிக்கப்படுகிறதா ? அவர்களுக்குத் திருமணம் நடத்திக் கொடுக்க அரசு உதவி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1982 மார்ச் 8

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, விதவைகள் மறுமணம் செய்து கொண்டால் அவர்களுக்கு 5,000 ரூபாய் கொடுக்கப்படுகிறது. 7 ஆண்டுகளில் கிட்டத்தட்ட 10,000 ரூபாய் பெறுகிற அளவிற்கு நிலைமைகள் இருக்கின்றன. இந்த 7 ஆண்டுகள் என்று எதற்காக வைத்து இருக்கிறோம் என்றால் 5,000 ரூபாய் கிடைத்த உடனே விட்டு விட்டு ஓடிவிட்டால் என்ன செய்வது? ஆகவே தான் ஒரு 7 ஆண்டுகாலம் தொடர்ந்து அவர்கள் வாழ்க்கை நடத்த வேண்டும் என்று வைத்து இருக்கிறோம்.

கர்ப்பிணிகளுக்கு ரூ. 150 உதவி செய்வது பற்றிக் குறிப்பிட்டார்கள். 1980-81-ன் நிதி நிலை அறிக்கையில் பாரா 61-ல் இத்திட்டத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறபோது, இத்திட்டம் முனைப்பாக மதுரை மாவட்டம், கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் செயல்படுத்தப்படும். படிப்படியாக இந்தத் திட்டம் சத்துணவு குறைவாக உள்ள செங்கற்பட்டு, இராமநாதபுரம், திருநெல்வேலி, புதுக்கோட்டை, வடாற்காடு மாவட்டங்களில் ஐந்து ஆண்டு காலத்தில் விரிவுபடுத்தப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் குறிப்பிட்டுள்ளதைப்போலவே அத்திட்டம் கொட்டாம்பட்டி ஒன்றியத்தில் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தினால் கொட்டாம்பட்டியில் பயன் பெறும் கர்ப்பிணிப் பெண்கள் எண்ணிக்கை 2,485 ஆகும்; குழந்தைகளின் எண்ணிக்கை 2,915 ஆகும். அந்தக் கொட்டாம்பட்டியில் நடத்திய அந்தத் திட்டத்தின் வாயிலாக ஏற்பட்ட அனுபவத்தை வைத்து இந்தத் திட்டம் 1982-83-ல் மதுரை மாவட்டம் முழுவதும் நீடிக்கப்படுகிறது. வருங்காலத்தில் இராமநாதபுரம், செங்கற்பட்டு, வட ஆற்காடு, புதுக்கோட்டை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் இது தொடர்ந்து விரிவுபடுத்தப்படும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஒரு கிலோ அரிசி தருவதைப்பற்றி குறிப்பிட்டார்கள். ஐந்து கிலோ அரிசி வாங்கினால் 1 கிலோ அரிசி இனாமாகத் தருவது என்று அறிவிக்கப்பட்டு இருந்ததைச் சுட்டிக்காட்டினார்கள். ஐந்து கிலோ அரிசி வாங்குவதற்குப் பணம் வைத்து வாங்கியபிறகு 1 கிலோ அரிசி இனாமாகத் தருவது என்பதை விட சமுதாயத்தில் மிகவும் கஷ்டப்படுகிற அவர்களுக்கு இந்த நிபந்தனை இல்லாமலேயே ஒரு கிலோ அரிசி தருவது பொருத்தமுடையதாக இருக்கும் என்று இந்த அரசு எண்ணிய காரணத்தால்தான், 1980-81-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் பாரா 65-ல் இத்திட்டம்பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த முறையில் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள மிக எளியவர்கள் என்கிற அடிப்படையில் வழங்கப்படும் என்று அறிவித்து—முதியோர் உதவித் தொகை பெறுவோர், விவசாயத் தொழிலாளர்கள் உதவித் தொகை பெறுவோர், உடல் ஊனமுற்றோர் உதவித் தொகை பெறுவோர் ஆகியோருக்கு வாரம்



1982 மார்ச் 8] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

ஒரு கிலோ அரிசி இலவசமாக வழங்கப்படும் என்று திட்டம் தீட்டப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் இப்போது 1,99,188 பேர், கிட்டத்தட்ட 2 லட்சம் பேர் இலவசமாக வாரம் ஒன்றுக்கு 1 கிலோ அரிசி பெற்று வருகிறார்கள். இத்

(முற்பகல் 11-50)

திட்டத்திற்கு 1982-83-ல் 1,76,000 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 2 லட்சம் பேர் பலன் பெற்று வரும் நிலை இன்றுள்ளது. இது ஆண்டுக்கு ஆண்டு இருக்கின்ற நிலைமைகளை ஒட்டி பெருகி வருகிறது.

வேலைவாய்ப்புத் திட்டத்தைப்பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். 1979 ஆகஸ்ட் மாதத்தில் இருந்து வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் செயல்படுகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் வேலை கேட்டு பதிவு செய்துள்ளவர்களுக்கு அந்த மாவட்டத்திற்குள் வேலை அளிக்கப்படும். இத்திட்டத்தின் கீழ் 1981-82-ல் 4,55,000 பேர் மனு செய்தார்கள். அவர்களில் 3,31,000 பேர்களுக்கு வேலை அளிக்கப்பட்டிருக்கிறது. மீதம் உள்ளவர்களுக்கு வேலைக்கு வரும்படி குறிப்பு அனுப்பியும் அவர்கள் வரவில்லை. வேலை கேட்டு மனு செய்துவிட்டு வராமல் இருக்கக் காரணம் கூலி வேலைக்கு வர பலர் விரும்பவில்லை என்று சொல்லப்படுகிறது. ஆக, இந்த வகையில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. 3,31,000 பேர்கள் இந்த வகையில் பயன் பெற்றிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்றொன்றையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சருக்கு துணையாக இருக்கிற திரு. மாணிக்கம் அவர்களுடைய விமானச் செலவு பற்றிய ஒரு செய்தியை இங்கே குறிப்பிட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்கே போவதாக இருந்தாலும் வருவதாக இருந்தாலும் அவர்களுக்குத் துணையாக இருப்பதற்காக திரு. மாணிக்கம் என்பவரை கூடவே அழைத்துச் செல்கிறார்கள். அவர்கள் விமானத்தில் செல்லும்போதும் கூடவே சென்று வருவதற்கு அனுமதி அளித்து ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. 1977-லிருந்து இந்த அரசு கலைக்கப்படும் வரையில், 1980 வரையில் அந்த ஆணை நடைமுறையில் இருந்தது. இந்த அரசு கலைக்கப்பட்டு, மீண்டும் ஆட்சிக்கு வந்த பிறகு, இடையிலே இருக்கின்ற 4, 5 மாதங்களுக்கு அந்த ஆணை பயன்படுத்தப்படாமல் இருந்ததே தவிர வேறு ஒன்றும் இல்லை; 1980-ல் பொறுப்புக்கு வந்த பிறகு அவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கூடவே சென்றுவர விமானக் கட்டணம், மற்றவைகளைத் தர வேண்டுமென்று சொல்லி, கொடுக்கப்பட்டு வருகிறது. ஆக இந்த ஆணை 1977-லேயே பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இது புதிதல்ல. மாண்புமிகு

எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் இது தெரியும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்புக்கு வருவதற்கு முன்னாலே எவ்வளவு வசதி வாய்ப்புகளோடு இருந்தார்கள் என்பதும், இப்போது எப்படி இருக்கிறார்கள் என்பதும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரியும். ஆகையால் இதை அவர்கள் பெரிதாகக் கருதமாட்டார்கள் என்று கருதுகிறேன். ஒரு முதலமைச்சருக்கு அவர்களுடைய நலன் கருதி ஒரு பணியாளர் கூடவே சென்று வருவதற்கான வசதி என்ற அடிப்படையில்தான் இது தரப்பட்டிருக்கிறது. இதிலே வேறு எந்த தன்மையும் அமையவில்லை என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, பற்பொடி வழங்குவதைப்பற்றி இங்கே பலரும் குறிப்பிட்டார்கள். ஒரு இடத்திலே சிரிப்பொலி வருகிறது. மற்றவர்களுக்குத் தெரியாத இந்த பற்பொடி திட்டம் இவர்களுக்கு எப்படி தெரிந்தது என்று சொல்லப்படுகிறது, சொல்கிறார்கள். கிராம மக்களுக்கு இந்தப் பற்பொடி திட்டம் ஏன் என்று கேட்டால், அவர்களுடைய பல் சொத்தையாகி, கெட்டுப் போய், அவர்கள் கஷ்டப்படுவதற்குக் காரணம் அவர்கள் செங்கற்பொடியை, அல்லது மணலை அல்லது மண்ணை, அல்லது கரியை வைத்து பல் விளக்குவதால் அந்த நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, அவர்களுடைய பல் சொத்தையாவதை, கெட்டுப்போவதைத் தடுப்பதற்காக ஒரு திட்டம் வகுக்கப்பட வேண்டுமென்று யோசனை சொன்னார்கள். அந்த யோசனையின் அடிப்படையில்தான் கிராம மக்களின் பல் பாதுகாப்புத் திட்டத்தின் அடிப்படையில் அறிவியல் முறையில் தயாரிக்கப்பட்ட பற்பொடியை வழங்கும் திட்டத்தை அறிவித்திருக்கிறோம். இந்த பற்பொடி மருந்தகங்கள், சுகாதார நிலையங்கள், வட்ட மருத்துவமனைகள் ஆகியவற்றின் மூலம் இலவசமாக கிராம மக்களுக்கு வழங்கப்படும் என்று சொல்லப்படுகிறதே அல்லாமல் வேறல்ல.

கிராம மக்களின் நோயைத் தீர்ப்பதற்கு எல்லா மருத்துவ மனைகளிலும் இலவசமாக அவர்களுக்கு மருந்து தரப்படுகிறது. ஆனால் எந்த ஒரு இடத்திலும் பற்பொடி தரப்படுவதில்லை. நகரப்பகுதிகளில் இருக்கிறவர்கள் பல் வியாதி சம்பந்தமாக மருத்துவர்களை அணுகினால் அவர்கள் இந்த பற்பசையை வாங்கி உபயோகியுங்கள் என்று எழுதிக்கொடுக்கிறார்கள்; அதை வாங்கி உபயோகிக்கிறார்கள். அவர்களால் அதை வாங்க முடிகிறது. ஆனால் கிராமங்களில் இந்த பற்பொடியை அல்லது பற்பசையை வாங்கி பயன்படுத்துங்கள் என்று எழுதிக்கொடுத்தால் அவர்கள் அதை வாங்கி பயன்படுத்துவார்களா என்ற சந்தேகம் இருக்கின்ற காரணத்தால் கிராமங்களில்



இருக்கிற இந்த மருந்தகங்கள், சுகாதார நிலையங்கள், மருத்துவ மனைகள் மூலமாக பல் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவசமாக மருந்து கொடுப்பதைப் போல பற்பொடியையும் கொடுக்க ஏற்பாடு செய்கிறோம்.

அதற்குக் கீழே நிதிநிலை அறிக்கையில் இன்னொன்றும் இருக்கிறது. கிராமப் பகுதிகளில் பாம்புக் கடியால் அவதிப்படும் மக்களுக்கு உடனடியாக சிகிச்சை அளிக்க மருத்துவ துணை நிலையங்கள், ஆரம்பச் சுகாதார நிலையங்கள், மருந்தகங்கள் முதலியவற்றின் மூலமாக 'ஊனீர்' மருந்து அளிக்கும் திட்டம் இருக்கிறது. இந்த ஊனீர் மருந்து அளிக்கும் திட்டம் எப்படிச் செயல்படுகிறதோ அதைப்போலத்தான் இந்த பற்பொடி திட்டமும் செயல்படும். இதனால் வேறு எந்த பெரிய நிலைமையும் ஏற்பட வேண்டுமென்றில்லை. பலரும் சொல்வார்கள், மக்களுக்கு பற்பொடி வாங்கித் தருகிறீர்களே, ஸ்னோ, பௌடர் வாங்கித்தர வேண்டியதும் வரும் என்று சொல்வார்கள்.

அவர்களுக்கு சோப் எல்லாம் கொடுக்கக்கூடிய அவசியம் வந்துவிடும். ஆகவே பல் பழுதடையாமல் இருப்பதற்கும்—பல நோய்கள் வருவதற்கு அடிப்படைக் காரணமானது பல்தான் என்று மருத்துவர்கள் பலர் கண்டு பிடித்து இருக்கிறார்கள்.

**திரு. ஜே. எஸ். இராசு :** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வாறு பல்பொடி தருவது பற்றி மேலவையிலே எழுந்தபோது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் நீலநாராயணன் அவர்கள் ஆலும் வேலும் பல்லுக்குறுதி என்பதை ஒட்டி கிராமப்புற மக்கள் குச்சியாலே பல் துலக்கிக் கொள்கிறார்கள் என்று பேசிக் கொண்டு வந்தார்கள். அப்போது இடையிலே நமது முதலமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்து இருக்கிறார்கள். செங்கற்பொடி, கரி ஆகியவற்றைப் பயன்படுத்தி கிராமப்புறத்திலே இருக்கின்ற மக்கள் பல் துலக்குவதால் வாய், தொண்டை ஆகிய பகுதிகளில் புற்றுநோய் வரக்கூடிய மிகப் பெரிய ஆபத்து இருப்பதாக நாங்கள் அறிகிறோம். ஆகவே மருத்துவர்களின் ஆலோசனையின் பேரில்தான் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறேன் என்று குறிப்பிட்டார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களின் எண்ணத்தின் பிரகாரம் அப்படி கரிக்கட்டி, செங்கற்பொடி ஆகியவற்றால் பல் துலக்குவதால் புற்றுநோய் வருவது என்பது உண்மையாக இருக்குமானால் கிராம மக்களில் 100-க்கு 90 பேருக்கு அவ்வாறு நோய் வருவதற்கு வாய்ப்பு இருக்கின்றது. இன்னொன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். நகர்ப்புறத்திலே இருப்பவர்களுக்குத்தான் பல்லிலே அதிக நோய் வருகின்றதே தவிர கிராமப்புறத்திலே

இருப்பவர்களுக்கு வருவதில்லை என்பது ஒரு தெளிவான கருத்து. ஆகவே இந்தப் பெரிய ஆலோசனையை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எந்த எக்ஸ்பர்ட்ஸ் தெரிவித்தார்கள் !

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சில உண்மைகளை விபரமாகத் தனியாகக் கேட்டால் கூட சொல்லலாம். நானே டூத் பேஸ்ட், ப்ரஷ் ஆகியவற்றை இனாமாகத் தர வேண்டும் என்று திருச்சிக்குப் பக்கத்திலே ஒரு கிராமத்திலே ஏற்பாடு செய்திருந்தார்கள். அங்கே போனபோது பற்களைப் பரிசோதித்து தொண்டையிலே புண்கள் இருக்கின்றனவா என்பதை எல்லாம் பார்ப்பதற்காக டாக்டர் ராஜன் அவர்களின் தலைமையில் ஒரு குழு அங்கே பணியாற்றிக்கொண்டு இருந்தது. ஆகவே அங்கே சென்று பார்த்ததற்குப் பிறகுதான் இந்த நிலைமையை நான் உணர்ந்தேன். அதற்குப் பிறகு இந்த பற்பசை, ப்ரஷ் போன்றவற்றை எல்லாம் வாங்கிக் கொடுப்பது என்பதைப் பொறுத்தவரையிலே ஏதாவது ஒரு கம்பெனி தங்களுடைய பொருளுக்காக நல்லெண்ணத்தோடு ஒரு நாளைக்கு கொடுக்கலாமே தவிர அந்த மக்களுக்கு வாங்கக்கூடிய வகையிலே அது பயன்படாது என்பதை எண்ணிப்பார்த்து அதற்குப் பிறகுதான் அதைப் பற்றி விவாதித்து இந்த முடிவுக்கு வந்தோமே தவிர யாரோ, ஏதோ சொல்லி, ஏதோ தம்பி விளம்பரத்திற்காகவோ அல்லது தன்னிச்சையாகவோ செய்யப்பட்ட காரியமல்ல இது. நகர்ப்புறங்களில் இருக்கின்றதா இல்லையா என்பதைப் பற்றிப் பேசுவதை விட எங்கே வாங்க முடியாத நிலைமையிலும், நல்ல மருந்துகளைப் பயன்படுத்திக் கொள்ள முடியாத நிலைமையிலும் மக்கள் இருக்கிறார்களோ அந்த மக்களுக்குப் பயன்பட வேண்டும் என்றும் அதற்கு ஆவன செய்யவேண்டும் என்ற நோக்கத்தில்தான் இந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டிருக்கின்றது என்பதைத்தான் அவர்கள் சொன்னார்கள்.

**டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, நாங்கள் இன்று வரையிலே இந்த பல்பொடி விநியோகம் பற்றிப் புரிந்துகொண்டது கிராமப்புறத்திலே இருக்கின்ற எல்லோருக்கும் வழங்கப்படும் என்ற அளவிலேதான். ஆனால் நிதியமைச்சர் அவர்கள் பேசுகிறபோது எல்லோருக்கும் வழங்கப்படுவது என்றால் அவர்கள் பவுடர் கேட்பார்கள், வேறு ஏதேதோ கேட்பார்கள், அந்த அளவுக்கு அரசினிடத்திலே பொருளாதாரம் இல்லை என்று குறிப்பிட்டார்கள். பற்கள் மேலும் பழுதாகாமல் இருப்பதற்காக அத்தகையவர்களுக்கு மாத்திரம் பல்பொடி வழங்கப்படும் என்று சொன்னார்கள். ஆகவே எல்லோருக்கும் வழங்கப்படும் என்பதிலிருந்து இப்போது அடுத்த கட்டமாக 'மேலும் பழுதடையாமல் இருப்பதற்காக' என்று வந்திருப்பதன் காரணத்தால் அந்த விளக்கத்தை முதலமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வேடிக்கையாகப் பேசுகின்ற வகையிலே சில வார்த்தைகள் வரும்போது அதை வலியமாக எடுத்துக்கொள்ளக்கூடாது. நிதியமைச்சர் அவர்கள் கருத்தும் இதுதான், அமைச்சரவையினுடைய கருத்தும் இதுதான். ஆலும் வேலும் பல்லுக்குறுதி என்று சொன்னார்களே. அப்படி பயன்படுத்த முடியாத நிலையில் இருக்கின்ற மக்களுக்கு உதவ வேண்டும் என்பதற்காகத் தான் இந்தத் திட்டம். ஆகவே இந்தத் திட்டம் தொடர்பாக நடைபெறும் பணி பல் கெட்டுப் போனவர்களுக்கும் பயன்படவேண்டும், பல் கெடாமல் இருப்பவர்களுக்கும் பயன்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை.

(நண்பகல் 12-00)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து இலவச மதிய உணவுத் திட்டத்தைப் பற்றி இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டதைப் பற்றி, எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கிற மாண்புமிகு தலைவர்களும், உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் கருத்து தெரிவித்தார்கள். நாட்டிலே இருக்கிற பலரும், பல பத்திரிகைகளும் கூட கருத்துக்களைத் தெரிவிக்கிறார்கள். இரண்டு வயதிலிருந்து 10 வயதிற்கு உட்பட்டவர்கள், ஊட்டச்சத்துக் கொண்டிருக்கிற மதிய உணவை இலவசமாகப் பெறுகிற வாய்ப்பை ஏற்படுத்தினால்தான் அவர்களுடைய எதிர்கால வாழ்க்கை மிகச் சிறப்பாக அமையமுடியும் என்ற கருத்தினுடைய அடிப்படையில் இந்த அரசு துணிந்து இந்த திட்டத்தை மேற்கொண்டுள்ளது. விளையும் பயிர் முளையிலே தெரியும் என்பதற்கு இணங்க, ஆரம்பக் கட்டத்திலே, உடலிலே சேரவேண்டிய ஊட்டச்சத்து, அடிப்படையிலேயே, ஆரம்பக் கட்டத்திலேயே, இளமைப் பருவத்திலேயே அவர்களுடைய உடல் திடம் பெறும் வகையில், வலிவு பெறும் வகையில், வளர்க்கப்படவேண்டும் என்பதற்காக இந்த திட்டத்தை உருவாக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தின் அடிப்படையில், 2 வயது முதல் 10 வயதிற்கு உட்பட்ட ஏழை எளிய குழந்தைகளுக்கு ஊட்டச் சத்துக் கொண்ட மதிய உணவை அளிக்க வேண்டும் என்று வைத்தோம்.

அதை எல்லோரும் வரவேற்றிருக்கிறார்கள். அந்த வகையிலே என்னுடைய மகிழ்ச்சியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் இந்த திட்டத்தைக் குறை சொல்லவில்லை. திட்டம் வேண்டாம் என்றும் சொல்லவில்லை. அவர்களும் வரவேற்றார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கிற பலரும் வரவேற்றார்கள். ஆனால் அதை வரவேற்று, அதை நடைமுறைப்படுத்துவதிலே இருக்கிற சிக்கல்களை எடுத்து தெரிவித்தார்கள். இந்த அரசு ஆழ்ந்த கவனிப்போடு உன்னிப்போடு,

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1982 மார்ச் 8

அந்தச் சிக்கல்களை ஆராய தயாராக இருக்கிறது என்பதை நான் கூறிக்
கொள்ள விரும்புகிறேன். இன்றை நிறைவேற்றவேண்டும் என்ற நோக்கத்தை
நாம் எடுத்துக் கொண்டதற்குப் பிறகு, அதை நிறைவேற்றுகிற நேரத்தில்
பல்வேறு சங்கடங்கள் வருகின்றன. அந்தச் சங்கடங்களை தீர்ப்பதற்கான
முயற்சிகளை எடுக்க, வல்லுநர்களையும், அதிகாரிகளையும் மற்றவர்களையும்
வைத்து இந்த அரசு திட்டமிட்டு செயல்படுத்துவதற்கு முனையும். அதே
நேரத்தில் நாட்டின் நலனில் அக்கறை கொண்டவர்கள், நாட்டு மக்களுடைய
நல் வாழ்விலே ஆர்வம் கொண்டிருப்பவர்கள் ஆகிய அத்தனை பேர்களுடைய
சீரிய கருத்துக்களையும் இந்த அரசு எதிர்பார்க்கிறது. இங்கேயுள்ள
மாண்புமிகு உறுப்பினர்கள் சங்கரய்யா போன்றவர்கள், அழகர்சாமி மற்றும்
பல உறுப்பினர்கள் போன்றவர்கள் எல்லாம் இது குறித்து எச்சரிக்கை
செய்தார்கள். இந்த திட்டத்திலே நாம் கொண்ட நோக்கம் கடைசிவரையில்
நிறைவேறுமா என்று கேட்டார்கள்? அப்படி நிறைவேறாமல் போகக்கூடிய
அளவுக்கு, இதிலே குறைபாடுகள் ஏற்பட்டு விடலாம், ஆகவே அதைத்
தவிர்க்க எச்சரிக்கையாக கண்காணிக்க வேண்டும் என்று சில பல வழி
முறைகளை அவர்கள் எல்லாம் சொன்னார்கள்.

ஆக எல்லோருக்குமே அதை நிறைவேற்ற வேண்டும் என்பதிலே ஆர்வம்
இருக்கிறது. நிறைவேற்றப்பட வேண்டும் என்பதையும் அத்தனை பேரும்
ஏற்றுக் கொள்கிறார்கள். திட்டம் நல்ல திட்டம் என்பதையும் ஏற்றுக்
கொள்கிறார்கள். நடைமுறைப்படுத்துவதிலே இருக்கிற சங்கடங்களை இந்த
அரசு உணராமல் இல்லை. ஆகவேதான் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று
எடுத்துக் கொண்டதற்குப் பிறகு, மெல்ல மெல்ல கொண்டு வரவேண்டியவர்
களாக இருக்கிறோம்.

மதிய உணவை அளிக்க வேண்டும் என்று பெருந்தலைவர் காமராசர்
அவர்கள் காலத்தில் எண்ணியபோதுகூட, அவற்றை நடைமுறையிலே கொண்டு
வருவதிலே கூட, பல்வேறு தன்மைகள் ஆரம்பக் காலத்திலே மாறி மாறி ஏற்
பட்டு, இப்போது செம்மைப்பட்டு வருகிறது. எடுத்த எடுப்பிலேயே வேகம்
வரவில்லை. பல்வேறு குறைபாடுகள் கூட ஏற்பட்டன. ஆசிரியர்களைக்
கொண்டே நாம் சமைக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டபோது, போராட்டங்கள்
மற்றவைகள் ஏற்பட்டது. அதற்குப் பிறகும் கூட உணவு சரிவர சப்ளை
யாகாத நிலைமை எல்லாம் இருந்தது. அந்த நிலைமைகளிலே யிருந்து மெல்ல
மெல்ல வளர்ந்து, திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்த காலத்தில், கேர்
நிறுவனம் உதவி செய்ய முன் வந்ததன் அடிப்படையில், சென்டிரல் கிச்சன்
மெத்தட் கொண்டு வந்து அங்கேயிருந்து உணவைச் சமைத்து கொண்டு போய்
கொடுக்கலாம் என்ற அளவுக்கு கிட்டத்தட்ட 100 ஒன்றியங்களுக்கு மேல்



982 மார்ச் 8] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இப்போது அந்தமுறை வந்திருக்கும் என்று கருதுகிறேன். அந்த அளவுக்கு
படிப்படியாக குறைபாடுகளை குறைக்க முடிந்தது. இப்போதும் சில குறை
பாடுகளைப் போக்கிக் கொண்டுதான் இருக்கிறோம். கேர் நிறுவனமும் அந்த
திட்டத்தின் சிறப்பை அறிந்து உதவி செய்து கொண்டு வருகிறார்கள்.
தற்போது நாம் துவக்கப்பள்ளிகளிலே மூன்றிலே ஒரு பகுதியினருக்குத்தான்
சலுகைகளை தர முடியும் என்ற அளவுக்கு, நாம் நிதி ஒதுக்கீடு செய்து வருகி
றோம். கேர் நிறுவனமும் அந்த அளவுக்குத்தான் போதுமானதாக கொடுத்து
வருகிறது.

இந்தத் திட்டத்தின் அடிப்படையிலே ஏழை எளியவர்கள், வறுமை கோட்
டிற்கு கீழே இருப்பவர்கள், வீட்டிலே வசதியில்லாதவர்கள், வெளியிலே படிக்
காமல் திரிபவர்கள் ஆகிய அத்தனைபேரும் உதவி பெறத் தக்க அளவிலே
அமையவேண்டும். ஆகவே, மதிய உணவு தருகிற பொறுப்பை நாம் ஏற்றுக்
கொள்வோமேயானால் நாட்டினுடைய எதிர்காலம் சிறப்பாக இருக்கும் என்
பதுதான் இந்த திட்டத்தினுடைய தன்மையாகும். ஆகவேதான் இந்த பட்
ஜெட்டை உருவாக்குகிறபோது, இந்த திட்டத்தை நாம் பிரபோசல் என்று
சொல்லுகிற செயற்குறிப்பை நாம் கொண்டு வந்திருக்கிறோமே தவிர, முழு
வதையும் ஆராய்ந்து எவ்வளவு ஆகும் என்று திட்டமிட்டு எதுவும் சொல்ல
வில்லை. வேண்டும் என்றால் டோக்கன் அலாட்மெண்ட் என்ற வகையில்
வைத்துக் கொள்ளலாம். ஒரு கோடி ரூபாயை அந்த வகையில் ஒதுக்கிவிட்டு,
திட்டமிட்டதற்குப் பிறகு, மேலே தேவைப்பட்டால், இந்த அவையிலே வந்து
கேட்பதற்கு விதிமுறைகள், நிதிநிலைமைகள் இருக்கின்றன. இருந்தாலும்
தோராயமாக எவ்வளவு ஆகும் என்றுதான் நாம் கணக்குகளைப் போட்டிருக்
கிறோம்.

ஆகவே 100 கோடிக்குக் கீழே வருகிற சூழ்நிலை ஏற்பட்டால் நமக்கு
நல்லதுதான். அதற்கு மேலே போகிற சூழ்நிலை ஏற்பட்டால் எப்படிச்
சமாளிக்கப்போகிறோம் என்ற அளவில் திட்டம் தீட்டவேண்டியவர்களாக
இருக்கிறோம். தோராயமாக 100 கோடி ரூபாயாவது வரவேண்டும் என்று
சொன்னதற்குக் காரணம் முதல் அமைச்சர் அவர்கள் பலயிடங்களில்
தெரிவித்ததற்கிணங்க அரசு தன்னாலான முயற்சிகளைச் செய்கிறபோது
மதிய உணவுத் திட்டம் வழங்கவேண்டும் என்று தமிழக அரசு இந்தியாவிலே
வேறு எந்த அரசும் செய்யாத நிலை இருந்தபோது கேர் நிறுவனம் தான்
உதவி செய்ய முன்வருகிறேன் என்று சொல்லி அத்திட்டத்தில் பங்கு ஏற்றுக்
கொள்ள முன்வந்ததோ அதேபோல் இம்மாதிரி திட்டங்களுக்கு தோராயமாக
செலவு போட்டுக் காண்பித்தால் அதன் மூலம் நம் அரசு செலவழிக்க
வேண்டியதற்குப் பதிலாக அறநிலையங்கள், அகில உலக நிறுவனங்களானாலும்
சரி, வெளிநாடுகளில் இருந்து உதவி செய்கிற நிறுவனங்களானாலும் சரி,

உள்நாட்டு நிறுவனங்களானாலும் சரி இதற்கு உதவி செய்கிற சூழ்நிலை ஏற்படுமானால் நம் பணச் செலவின் சுமை ஓரளவு குறையக்கூடும் என்ற அளவிற்கு தோராயமாக ஒரு திட்டம் போட்டிருக்கிறோம். திட்டவட்டமாக இப்படித்தான் என்ற முடிவிற்கு அரசாங்கம் இன்னும் வரவில்லை. ஆனால் அந்த நோக்கத்தை நிறைவேற்றுவது எப்படி, நிறைவேற்றுவதற்கான யோசனைகளை கேட்பது என்ற முறையில் அந்த அடிப்படையில் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இதில் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் மேலவையில் எடுத்து தெரிவித்ததற்கிணங்க எதிர்க்கட்சி வரிசையில் இருக்கிற அத்தனை பேர்களும் சிறிய யோசனைகளை சிறிய கருத்துக்களைத் தரவேண்டும்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு யோசனை சொன்னார்கள். பதினைந்து ரூபாய் என்று கொடுத்துவிடலாமே என்று. அதில் வருகிற சங்கடங்களை நாம் யோசிக்கவேண்டும். பணமாகக் கொடுத்தால் நம் நோக்கம் நிறைவேறுமா என்பதையும் நாம் யோசிக்க வேண்டும். ஊட்டச்சத்து தரக்கூடிய அளவில் பில்ஸ் வாங்கித் தந்தால் கூட என்ன என்று குறிப்பிட்டார்கள். ஆனால் அதனால் வயிறு நிறையாது. எனவே வெறும் பில்ஸ் பயன்படாது. இப்படிப்பட்ட கருத்துக்கள் எல்லாம் வரவேற்கத்தக்கவைதான். வரவேற்கப்பட்டு அதை நடைமுறைப்படுத்த, ஒரு சுமுகமான நிலை ஏற்படுத்த அத்தனை கட்சி உறுப்பினர்களும் கட்சி வேறுபாடு இன்றி, கட்சி பாகுபாடு கருதாது இந்தத் திட்டத்தை நல்ல முறையில் நிறைவேற்றுவதற்கு எல்லோரும் உறுதுணை புரிய வேண்டும்.

மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கூட மேலவையில் கூறுகிறபோது குறிப்பிட்டார்கள். நாங்கள் கொண்டு வந்துள்ள இந்தத் திட்டத்தை முழுக்க முழுக்க பெண்கள் பொறுப்பேற்று நடத்தச் செய்யலாமா என்பது பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறோம் என்றும், கட்சி வேறுபாடு இன்றி அனைத்துக் கட்சியினரும் பங்கு பெறவேண்டும் என்றும் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். இந்தத் திட்டம் நல்லமுறையில் செயல்பட ஒவ்வொருவருடைய யோசனையும் தியாகமும் பயன்படுத்தப்படும். இந்தத் திட்டத்தை அரசு என்று கருதவேண்டாம், தனியாக நடத்தக்கூடிய ஒரு திட்டமாகும். ஆகவே கட்சி என்ற கருத்து வேறுபாடு இருந்தாலும் குழந்தைகள் என்று வரும்போது அதை எல்லாம் மறந்து சேவை செய்யும் நல்ல உள்ளம் படைத்தவர்கள் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள். அவர்கள் அத்தனை பேர்களும் உதவவேண்டும் என்று அவர்கள் மேலவையில் எடுத்துத் தெரிவித்துள்ளார்கள். இந்த அவையில் உள்ள அத்தனை பேர்களும் இந்தத் திட்டத்தில் உள்ள குறைபாடுகளைச்





சுட்டிக்காட்டி அதை எப்படித் திருத்திக் கொள்ளலாம் என்பதையும், இதை எப்படி நடைமுறைப்படுத்தலாம் என்பது பற்றியும் யோசனைகளை அளிக்க வேண்டும்.

**திரு. அ. ரகுமான்கான் :** திட்டத்தைப் பற்றி எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் யோசனைகளை சொல்லவேண்டுமென்று நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் உங்கள் மூலம் நிதி அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்ள விரும்புவது அந்தத் திட்டத்தைப் பற்றி அரசாங்கம் சார்பாக ஓரளவிற்கு கோடிட்டுக் காட்டினால்தான் எது சரி எது தவறு என்று சொல்லமுடியும். உதாரணத்திற்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மத்தியில்கூட நமது முதல் அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டம் பற்றிப் பேசியதாக பத்திரிகைகளில் வந்திருக்கிறது. அரசாங்கத்தின் சார்பாக 100 கோடி ரூபாய் செலவாகும் என்று சொல்லியிருக்கிறீர்களே தவிர இந்தத் திட்டம் இன்னவிதத்தில் செயல்படும் என்று எதுவும் சொல்லவில்லை. உதாரணத்திற்காகச் சொல்கிறேன். முதல் அமைச்சர் அவர்கள் மேலவையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். பெண்கள் இந்தப் பணிக்குப் பயன்படுத்தப் படுவார்கள் என்று ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் ஏற்கனவே அப்ரூவ்ட் நாஷனல் ஸ்கீம் என்ற ஒரு திட்டம் 1971-ல் இருந்து செயல்பட்டுவருகிறது. ஒவ்வொரு ஒன்றியத்திலும் இத்திட்டத்தைச் செயல் படுத்தி வருகிறார்கள். அதில் சத்துணவோடு கூட படிப்பையும் சேர்த்து கற்பிக்கப்படுகிற நிலை இருக்கிறது. அதில் எல்லாம் பெண்கள்தான் அப்பாயின்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆகவே பெண்கள் இதைப் பார்ப்பார்கள் என்பது ஒரு புதிய அறிவிப்பு அல்ல. தொகை ஒதுக்கி யிருக்கிறோம் என்று சொல்லிவிட்டு திட்டத்தைப் பற்றி எதுவும் சொல்லாமல் எங்கள் ஆலோசனைகளைக் கேட்டால் இருட்டறையில் உட்கார வைத்துக் கொண்டு திட்டத்தைப் பற்றிய யோசனைகளை சொல்லச் சொல்கிறீர்களா என்று நிதி அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-10)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நாம் முதலிலே தாராளமாக ஒதுக்கியிருக்கிறோம். ஒதுக்கியிருப்பதன் நோக்கத்தை நான் ஏற்கனவே சொன்னேன். எதிர்க் கட்சி உறுப்பினர்கள், தலைவர்கள், மற்றவர்கள் தங்கள் யோசனையைக் கொடுக்கலாம். இந்த திட்டத்தை இப்போது உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். எப்படி செயல்படுத்துவது என்ற திட்டவட்டமான முடிவுகளைச் செய்ய இருக்கிறோம். இந்தத் திட்டத்தை இப்போது முழு அளவில் கொண்டு வந்து, பட்ஜெட்டிலே அதற்கான நிதி ஒதுக்கப்பட்டு, அந்த நோக்கம் நிறைவேறுவதற்கான இதா திட்டங்கள்

வகுக்கப்பட்டிருக்கின்றன. இதற்கு முறையான திட்டங்களை வகுத்து, இன்னும் அதற்கான திட்டங்களை முறையாகக் கொண்டுவந்து, எல்லா நோக்கங்களையும் நிறைவேற்றுகின்ற வகையில் இதை ஜூலை முதல் கொண்டு வருவதற்கு திட்டமிடப்பட்டிருக்கிறது. இப்போது மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். இதையும் ஆராய்ந்து, இவைகளையெல்லாம் வைத்து மறுபடியும் யோசித்து, அவர்கள் கூறியுள்ள யோசனைகள் எல்லாம் செயல்படுத்துகின்ற வகையில் இதிலே அதற்கான வாய்ப்புகள் ஏற்படும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த நிதி நிலை அறிக்கையைப் பொறுத்த வரையில், நான் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன். இது ஒரு பற்றாக்குறை பட்ஜெட் என்ற நிலை ஏற்பட்டதற்குக் காரணம், மின் துறையிலே, அந்த ஒரு பகுதியிலே பெரும் செலவினம் ஏற்பட்டதும், இந்த 100 கோடி அளவிலே இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் ஏற்படுகின்ற செலவுமாகும். வருவாய்த் துறையைப் பொறுத்த மட்டில், இது ஒரு உபரி பட்ஜெட்டாக அமைந்திருக்கிறது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதற்கான தன்மையை மின்துறை அமைச்சர் அவர்கள் மின் வாரியத்தின் நிதி நிலை அறிக்கைபற்றி இந்த அவையிலே விவாதித்தபோது, அதற்கான சூழ்நிலையை விளக்கிக் காட்டி யிருக்கிறார்கள். இந்த மின் துறை செலவு உயர்ந்திருக்கின்ற சூழ்நிலையை பல்லாண்டுகளாக இந்த அவையிலே, திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்த காலத்திலும் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, அதற்கான செலவினங்களைப் பற்றி எடுத்துச்சொல்லும்போது, அதை ஒப்புக்கொண்டு, அதற்கான ஆதரவு கிடைக்குமானால், மின்சாரத் துறையிலே, மின் கட்டணம், மின் கருவிகள் போன்றவற்றிற்கு ஏற்பட்டுள்ள உயர்வை மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுச் சொல்லுகின்றபோது, ஓரளவுக்கு நமக்கு கணிசமான தொகை கிடைக்கும்; எனவே இதை ஏற்றுக்கொள்ளவேண்டும். இதனால், நமக்கு ஏற்பட்டுள்ள சுமை ஓரளவுக்கு குறையும். அந்த அடிப்படையில் இப்படிப் பட்ட திட்டங்களை நிறைவேற்றுவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்கிற நிலையில், அதற்கான காரண காரிய விளக்கங்களை எடுத்துச்சொல்லி அதற்கான மானியம் வருகின்றபோது, மன்றத்தினுடைய பெரும் ஒத்துழைப்பும் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்தத் திட்டத்தை முழுமைக்கும் நிறைவேற்ற வேண்டு மென்ற தன்மையின் அடிப்படையிலேதான், பல்வேறு வகையான வரிகளை யெல்லாம் மாற்றியமைக்க வேண்டுமென்ற அவசியம் ஏற்பட்டு, 38 கோடி ரூபாய் அளவிற்கு வரி விகிதங்களை ஒரு குறிப்பிட்ட சில இனங்களுக்கு மட்டும் போட வேண்டுமென்ற அவசியம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நான்





குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறேன். அதன் தன்மையின் அடிப்படையிலே, எல்லோருடைய ஆதரவையும் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். அந்த தன்மையில் சில பல பொருள்களின்மீது நாம் விற்பனை வரியை உயர்த்தியிருக்கிறோம். ஒரே ஒரு அயிட்டத்திற்கு மட்டும் புதிதாக விற்பனை வரியைப் போட்டிருக்கிறோம்.

மின்சாரப் பொருள்களைப் பொறுத்தவரையில், தமிழகத்திலே 9 சதவிகிதம் ஆக இருந்தது, 10 சதவிகிதம் ஆக உயர்த்தியிருக்கிறோம். மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்ததில், இந்த அளவுக்கு உயர்த்தலாம் என்ற தன்மைக்கு வந்திருக்கிறோம். நமக்கு நிதி ஆதாரம் தேவை என்பதால், அதைக் கணக்கில் வைத்து இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. கர்நாடகத்தில் 10 சதவிகிதம் ஆக அவர்கள் செய்திருக்கிறார்கள்; கேரளாவிலே 10 சதவிகிதம் என்றிருக்கிறது. ஆக, அதற்கு சரிசமமாக 9 சதவிகிதம் என்பதை நாம் 10 சதவிகிதம் என்று நாம் ஆக்கியிருக்கிறோம். மின்சாரக் கருவிகளைப் பொறுத்தமட்டில், 9 சதவிகிதத்திலிருந்து 10 சதவிகிதம் ஆக உயர்த்தியதற்குக் காரணம், கர்நாடகாவிலே 10 சதவிகிதம், கேரளாவிலே 10 சதவிகிதம் என்றிருப்பதால் தான்.

அந்நிய மது வகைகளுக்கு 25 சதவிகிதத்திலிருந்து 50 சதவிகிதம் ஆக உயர்த்தியதற்குக் காரணம், 50 சதவிகிதம் கேரளாவிலும், 50 சதவிகிதம் ஆந்திராவிலும் ஏற்கனவே உயர்த்தியிருக்கிறார்கள். எனவே தான் அந்த அளவுக்கு நாமும் சென்றோம். மின்சாரத்தால் இயங்கும் எந்திரங்களைப் பொறுத்தவரையில், நாம் 6 சதவிகிதத்திலிருந்து 8 சதவிகிதம் என்று செய்திருக்கிறோம். ஏற்கனவே கர்நாடகாவில் மின்சாரத்தால் இயங்கும் எந்திரங்களுக்கு 10 சதவிகிதம் என்ற விற்பனை வரி இருக்கிறது; கேரளாவிலே 8 சதவிகிதம் என்றிருக்கிறது. இப்போது நாம் 8 சதவிகிதம் என்று கொண்டு வந்திருக்கிறோம்.

பிஸ்கட், சாக்லெட், மிட்டாய் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதில் 8 சதவிகிதத்திலிருந்து 10 சதவிகிதம் ஆக நாம் கொண்டுவந்திருக்கிறோம். ஏற்கனவே 8 சதவிகிதம் என்றிருந்தது. ஆனால், சாதாரண ஆயிரக்கணக்கான ஏழை மக்கள், பயன்படுத்துகின்ற ரொட்டி, பன், பிஸ்கட் ஆகியவைகளுக்கு சென்ற ஆண்டு, இந்த அவையின் அனுமதி பெற்று அவைகளுக்கு விற்பனை வரி, சென்ற ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் நீக்கப்பட்டது. பேக்கரியிலிருந்து தயாரிக்கப்படும் ரொட்டி, பன், பிஸ்கட் ஆகியவைகளுக்கு விற்பனை வரி அடியோடு நீக்கப்பட்டுவிட்டது. பிராண்டட் கம்பெனிகளான பாரி, பிரிட்டானியா போன்ற கம்பெனிகளுக்கு பிராண்டட் கம்பெனிகள் தயாரிக்கும் பிஸ்கட், சாக்லெட், மிட்டாய் பற்றிக் 8 சதவிகிதம் என்றிருந்ததை, இப்போது 10 சதவிகிதம் ஆக உயர்த்தி

யிருக்கிறோம். பத்து சதவிகிதம் என்று கேரளாவிலே இருக்கிறது; கர்நாடகாவிலே 8 சதவிகிதம் என்றிருக்கிறது. அதையொட்டித் தான், இந்த விற்பனை வரியை நாமும் உயர்த்தியிருக்கிறோம்.

அதுமட்டுமல்ல, மோட்டார் வண்டி டயர், டியூப் முதலியவற்றை பொறுத்த வரையில் 10-லிருந்து 12 சதவீதம் என்று செய்திருக்கிறோம். கேரளத்தில் ஏற்கனவே 15 சதவீதம் வரையிலும், கர்நாடகத்தில் 10 வரையிலும் இருக்கிறது. ஒப்பிட்டுப் பார்த்ததின் பின்தான் இதற்கு வந்தோம்.

பட்டுத் தொழிலைப் பொறுத்தவரையில் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதாவது ஒன்றைச் சொல்லிவிட்டு எடுத்தால் தான் அதன்மூலம் மகிழ்ச்சி ஏற்படும் என்று சொன்னார்கள். ஆனால் இந்த தந்திரம் எனக்கு தெரியாமல் போய்விட்டது. இனிமேலாவது பயன்படுத்திப் பார்க்கலாமா என்று கருதிக்கொண்டிருக் கிறேன். அப்படி எண்ணம் இல்லை. இதற்கு முன்னாலே பருத்தி துணிக்கோ, கைத்தறித் துணிக்கோ நாம் தொடர்ந்து போடவில்லை. பட்டு அதிகமாக விலை கொடுத்து வாங்குகிற குடும்பத்தினர் மற்றவர்கள் தருகிறார்கள் என்று ஓரளவிற்கு நிலைமை வந்து கருதினோமே தவிர; கர்நாடகத்தில் 2 சதவீதம் போட்டிருக்கிறார்கள். கேரளாவை பொறுத்தவரைக்கும் 'சில்க் ஊவன் வித் மில் மேட் காட்டன் கிளாத்' அதன்மீது 7 சதவீதம் போட்டிருக்கிறார்கள். இப்படிப் பார்க்கிறபோது 5 சதவீதம், அதாவது 1,000 ரூபாய்க்கு வாங்குகிறவர்கள் 1,050 தரமுடியாதா என்று ஒரு கணக்கீட்டின் அடிப்படையில் மற்றவைகளை விட்டுவிட்டு 5 சதவீதம் போட வேண்டுமென்று நாம் போட்டோம். இன்றைக்கு ஏற்பட்ட சூழ்நிலைகள், நாட்டில் இருக்கிற நிலைமைகளை பலரும் எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த பட்டு உற்பத்தியிலே இருப்பவர்களும் மற்றவர்களும் தெரிவித்திருக் கிறார்கள். எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கிறவர்களும், பெரிய உறுப்பினர் களும் அத்தனை பேருமே இதுபற்றி எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இதனால் ஏற்பட்டிருக்கிற சில சங்கடங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்கும், என்னுடைய கவனத்திற்கும் கொண்டு வந்தார்கள். இது ஒருமுனை வரியாக எந்த இடத்திலே போடுவது என்று வருகிறபோது அப்போது அடிமட்டத்திலே என்று போட்டுவிடுவதன் காரணமாக சில சங்கடங்களை நெசவாளர்களுக்கும் மற்றவர்களுக்கும் எடுத்துத் தெரிவித்தார்கள். உற்பத்தியாகிற இடத்திலே 5 சதவீதம் என்று வருகிறபோது இந்த பட்டுத் துணியை நெய்கிற ஒவ்வொரு நெசவாளியும் இதை கணக்கு வைத்துக் கொண்டு சேல்ஸ் டேக்ஸ் கணக்கிட வேண்டிய அவசியம், உற்பத்தியாகிற இடத்திலே வைப்போமானால் உருவாகும் என்பதை





அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். காஞ்சிபுரத்தில் 50 சேலைகளை வாங்கிக்கொண்டு வந்து சென்னையிலே விற்கிறவர்களுக்கு எங்கே வைப்பது காஞ்சிபுரத்திலா, சென்னையிலேயா என்பது போன்ற சங்கடங்கள் வருகின்றன. அப்படி வருகிறபோது இந்த நிலைமைகளை நாம் மல்ட்டி பாயின்ட் தான் போடுவது வழக்கம். மல்ட்டி பாயின்ட் என்று வைத்தால் கூட இந்த சங்கடங்கள் எல்லாம் வருகின்றன, என்று மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஒரு பக்கம் ரிபேட் கொடுத்துக் கொண்டிருக்கிறோம், இன்னொரு பக்கம் வரி போடுவதினால் சங்கடங்கள் வருகின்றன என்பதை சுட்டிக்காட்டினார்கள். மற்ற மாநிலங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்ததால், இங்கும் இந்த வரியை போட்டால் கொஞ்சம் பணம் வருமே என்று கருதினோமே தவிர, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரும் மற்றவர்களும் குறிப்பிட்டதைப் போலவும் இந்த விதிக்கப்பட்ட 5 சதவீத வரி நீக்கப்படுகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். புதிய வரிகள் போடுவதின் மூலம் கிட்டத்தட்ட 60 கோடி ரூபாய், இந்த பலமுனை வரிகளின் மூலம் வரும்; மற்ற வரிகள் எல்லாம் சேர்த்து 100 கோடி அளவிற்கு வரும் என்றும் குறிப்பிட்டார்கள். அவர்கள் குறிப்பிடுவதற்கு காரணம் ஒரு தோராயமாக கணக்கைத் தான் குறிப்பிடு கிறார்கள் என்று கருதுகிறேன். ஆகவே புள்ளிவிவரத்தை வைத்துக் கொண்டிருக்கிற நிலை அரசாங்கத்திடமிருக்கிறதால், அதற்கு விளக்கம் அளிக்க வேண்டிய பொறுப்பு இருக்கிறதால் நான் அதற்கு விளக்கம் அளிக்க விரும்புகிறேன். நூறு கோடி இதன்மூலம் வருகிற சூழ்நிலை ஏற்பட்டால் எனக்கு மகிழ்ச்சி தான். இந்த பற்றாக்குறை ஓரளவிற்கு தீர்வதற்கு பயன் பெறும். ஆனால் அந்த அளவிற்கு வராது. காரணம் என்னவென்றால் இந்த விற்பனை வரியின் மூலமாக நமக்கு வருவது கணக்கிட்டு இருப்பது 620 கோடியே 10 லட்சம் வரும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மத்திய விற்பனை வரி சட்டத்தின் மூலம் அவர்கள் வழங்குவது 110 கோடியே 84 லட்சம். அதை கழித்து விட்டு பார்த்தால் 509 கோடியே 26 லட்சம் நமக்கு வரும் இதிலே அடிஷனல் டாக்ஸ் 30 கோடி; இந்த 30 கோடியை குறித்து கணக்கிட்டுப் பார்ப்போமானால் ரூபாய் 479

(பிற்பகல் 12-20)

கோடி வருகிறது. அந்த 479 கோடி ரூபாயிலே கிட்டத்தட்ட விற்பனைவரியினுடைய சதவீதம் எப்படி அமைந்திருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். 1972—73 இல் ஒருமுனை வரி 56 சதவீத மாகவும் பலமுனை வரி 44 சதவீதமாகவும் இருந்தது. அது படிப்படியாக

மாறி, பல முனை வரி ஒரு முனை வரியாக மாற்றியமைக்கப்பட்டதன்
காரணமாக 1974-75-இல் 81 சதவீதம் ஒருமுனை வரியாகவும் 19 சதவீதம்
பலமுனை வரியாகவும் அமைந்திருந்தது. 1975—76 இல் 81 சதவீதம்
ஒருமுனை வரியாகவும் 19 சதவீதம் பலமுனை வரியாகவும் இருந்தது.
1976—77 இல் 82 சதவீதம் ஒருமுனை வரியாகவும் 18 சதவீதம் பலமுனை
வரியாகவும் 1977—78 இல் 84 சதவீதம் ஒருமுனை வரியாகவும் 16 சதவீதம்
பலமுனை வரியாகவும் 1979-80-இல் 87 சதவீதம் ஒருமுனை வரியாகவும்
13 சதவீதம் பலமுனை வரியாகவும் 1980-81-இல் 89 சதவீதம் ஒருமுனை,
வரியாகவும் 11 சதவீதம் பலமுனை வரியாகவும் 1981-82-இல் 90 சதவீதம்
ஒருமுனை வரியாகவும் 10 சதவீதம் பலமுனை வரியாகவும் இருந்தது.
இப்போது 17, 18 அயிட்டங்கள்தான் பலமுனை வரியிலே பாக்கியிருக்கின்றன.
மற்றவைகள் எல்லாம் ஒருமுனை வரியிலேதான் இருக்கின்றன.

வெல்லத்தைப்பற்றிச் சொன்னார்கள். அதிலே உள்ள சிக்கல்களை
எடுத்துச் சொன்னதன் காரணமாக அதை பலமுனை வரியாக மாற்றி
னோம். அதைப்போல பிளாஸ்டிக்கைப் பொறுத்தவரையிலும்கூட அவர்கள்
கோரிக்கை வைத்ததின் காரணமாக பலமுனை வரியாக மாற்றினோம்.
ஸ்டேஷனரிப் பொருள்களுக்கு ஒருமுனை வரியாகத்தான் போட்டிருந்தோம்.
ஆனால் அவர்கள் கோரிக்கை வைத்ததின் காரணமாக பலமுனை வரியாக
மாற்றினோம். அதற்குப் பிறகு கூட 15 இனங்களை நாம் பலமுனை வரியாக
இருந்ததை ஒருமுனை வரியாகக் கொண்டு வந்திருக்கிறோம். இப்போது 90
சதவீதம் ஒரு முனைவரியாக இருக்கிறது. 10 சதவீதம் தான் பலமுனை
யாக இருக்கிறது. 90 சதவீதம் ஒருமுனை வரியாகத்தான் இருக்கிறது.
நான் சொன்ன இந்த 479 கோடியில் 10 சதவீதம் என்று கணக்குப் போட்
டால் 48 கோடி ரூபாய் தான் அது வருகிறது. 4 சதவீதம் 48 கோடி
என்றால் 1 சதவீதம் 12 கோடி ரூபாய் என்று ஆகிறது. இப்போது 1 சத
வீதம் நாம் தாக்கியிருப்பதால் 12 கோடி ரூபாய் தான் கிடைக்கக்கூடும்.

இப்போது பட்டுக்கு நாம் நீக்கிவிட்டதால் 38 கோடி ரூபாயிலே 33
அல்லது 35 கோடி ரூபாய்தான் மொத்தமாக சூழ்நிலை இருக்கும். ஆகவே
அவ்வளவு அதிகமாக வராது. இருக்கின்ற கணக்கின் அடிப்படையிலே
12 கோடி ரூபாய் 1 சதவீதம் தாக்கியதன் காரணமாக வருகிறது, என்ற
விளக்கத்தைத் தந்து பல்வேறு பிரச்சினைகளை எடுத்துச் சொல்லியிருக்
கிறீர்கள். காலம் கடந்துவிட்டதன் காரணமாக பல்வேறு துறைகள் பற்றிய
மானியக் கோரிக்கைகள் மீது பேசுகின்றபோது மற்ற விளக்கங்கள் அப்போது
தரலாம்.



மற்றைய தன்மைகள், சலுகைகள் பற்றியும் மற்றவைகள் பற்றியும் என்.ஜி.
ஓக்கள் பற்றியும் அகவிலைப்படி பற்றி எல்லாம் எடுத்துச் சொன்னார்கள்.
அது தரப்படவேண்டிய ஒன்று. மத்திய சர்க்கார் அறிக்கையை அதனுடைய
அறிவிப்பை நாம் எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறோம். எதிர்பார்த்ததற்குப்
பிறகு முறைப்படி எப்போதும் நாம் கொடுத்துக்கொண்டு வருவதுபோன்று
—அங்கே அகவிலைப்படி பற்றி அவர்கள் முடிவு பண்ணவில்லை—அது வந்த
தற்குப் பிறகு முடிவு செய்ய வேண்டும். மற்றைய சலுகைகள் எல்லாம் நிதி
வசதி ஏற்படும்போது—அது மட்டுமல்லாமல் மற்றவர்களைப் பொறுத்த
ஆண்டுக்கு ஒரு முறை நிதிநிலை அறிக்கை என்று போட்டாலும்,
என்.ஜி.ஓ.-க்களைப் பொறுத்தவரையில் ஆண்டு முழுவதுமே அவர்களுடைய
குறைகளைப் போக்கவும் என்ன என்ன செய்யவேண்டுமோ அதைக் கூடிக்
கலந்துபேசி முடிவு செய்கிறோம். அந்த அடிப்படையில் தொடர்ந்து அவர்
களுடைய பிரச்சினைகளை அரசு கவனிக்கும். சிந்தனை செலுத்தும். அதற்
கான வழிமுறைகளைத் தொடர்ந்து காணும் என்பதைத் தெரிவித்து இந்த
நிதிநிலை அறிக்கையை பொறுத்து பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்து
நாட்டு மக்களுக்கும் மற்றவர்களுக்கும் விளக்கங்கள் தருகின்ற வகையில்
இங்கே பல கருத்துக்களைப் பலரும் எடுத்துச் சொன்னதற்காக எல்லோ
ருக்கும் நன்றியைத் தெரிவித்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்
களும் விளக்கங்கள் தந்ததன் காரணமாகத்தான் நான் இந்த விளக்கங்கள் தர
முடிந்தது என்பதையும் எடுத்துச் சொல்லி அவர்களுக்கும் மற்றவர்களுக்கும்
என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்து என்னுடைய
உரையை முடிக்கிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு நிதியமைச்சர் சொல்லும்போது
அகவிலைப்படி சம்பந்தமாகச் சொன்னார்கள். மத்திய அரசு 2 அகவிலைப்
படியை 80 ஆம் ஆண்டிற்குப் பின்னால் உயர்த்தியிருக்கிறார்கள். நம்முடைய
மாநில அரசு ஆகஸ்டு 80-க்குப் பிறகு ஒன்றுமே கொடுக்கவில்லையே, அது
சம்பந்தமாக ஒன்றுமே சொல்லவில்லை என்பதற்குப் பதில் சரிதானா?
இரண்டு அகவிலைப் படியை மத்திய அரசு ஊழியர்களுக்குத் தருந்தாற்போல்
கொடுப்பதாகச் சொன்னவர்கள் கொடுக்கவில்லையே? அது சம்பந்தமாக
என். ஜி. ஓ.-க்கள் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். இன்றுகூட
உண்ணாவிரதம் இருக்கிறார்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, மத்திய
அரசு இதுவரையிலும் எந்த அளவிற்கு அகவிலைப்படி தந்திருக்கிறதோ
அந்த அளவிற்கு நாமும் தந்திருக்கிறோம். அதற்குப்பிறகு உள்ளதைப்
பொறுத்துத்தான் நம்முடைய பிரச்னையே தவிர அதற்குப் பிறகு

நான்கு தர வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அந்த நான்கு அவர்கள் அறிவித்தால் நாமும் நான்கு தர வேண்டிய அவசியம் ஏற்படும். அதைப்பற்றித்தான் ஆராய்ந்து கொண்டிருக்கிறோம் என்று சொன்னோம். அதுபற்றித் தெளிவான நிலைமையை வாய்ப்பு ஏற்படும் பொழுது நான் விளக்கிக் காட்டுகிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதியமைச்சர் அவர்கள் சொல்லும்பொழுது ஏழை எளியவர்களுக் காக வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவர்களுக்காக 100 கோடி ரூபாய் திட்டத்தில் மதிய உணவு என்று சொன்னார்கள். தற்போது மூன்று முறை யாக மதிய உணவு நடக்கிறது. முதலாவதாக, சென்னை நகரில் நடப்பதுதான், ஒரு பஞ்சாயத்து யூனியன் என்று எடுத்துக்கொண்டால் 30 மைல் தூரமும் 20 மைல் அகலமும் உள்ளபொழுது தற்போது சமைத்த உணவு கூட காலையில் சமைத்து சாயந்தரம் 5 மணிக்குப் போகின்ற அவல நிலை இருக்கிறது. இரண்டாவதாக, ஆதி திராவிடர் நலத்துறையின் மூலமாக எளிய மக்களுக்கு உணவு கொடுக்கப்பட்டு வந்தது; காண்ட்ராக்ட் முறையில் இருந்து வந்தது. அவைகளைக் காண்ட்ராக்ட் முறையை மாற்றி ஆசிரியர் களே செய்ய வேண்டுமென்ற ஒரு நிலையை உருவாக்கியதால் ஒவ்வொரு உபாத்தியாயரும் சோற்றுக்கு அரிசி வாங்குவதா, ... இரண்டு மூன்று உபாத்தியாயர்கள் இருந்தால் யார் அதைப் பங்கிடுவது என்று சண்டைகள் வந்து, காண்ட்ராக்ட் முறையில் நல்லது இருந்தது போய் ஆசிரியர்கள் பொறுப்பேற்ற முறையில் இந்த அவல நிலை இருக்கிறது. மூன்றாவதாக எஜுகேஷன் டிபார்ட்மெண்ட் மூலமாக உணவு கொடுக்கின்ற ஒரு முறை.

இப்படி மூன்று சங்கடங்கள் இருப்பதால் இந்தத் திட்டத்தை அமைச்சர் சொல்லக்கூடிய நல்ல திட்டத்திலே இந்த மூன்றையும் ஒன்றாகச் செய்து இடைப்பட்ட காலத்தின் உணவைச் சமைத்து அதைத் தனியார் முறையில் கொடுப்பதா அல்லது அரசே ஏற்று நடத்துவதா அல்லது காண்ட்ராக்ட் முறையில் கொடுப்பதால் ஊழல் செய்வார்கள், கண்டிப்பாகச் செய்வார்கள். அதிகாரிகள் மேல் விசாரணை செய்வார்கள் என்ற பயம் உண்டாகும். ஆகவே, இப்பொழுது மூன்றாக இருக்கும் நிலைமை இப்படியே விட்டுவிட்டார்கள் என்றால் சரியாக இருக்காது என்ற நிலைமையில் ஒன்றாகச் செய்வார்களா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவரவர் களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறிய கருத்துக்களெல்லாம் சிந்தனை யிலே கொள்ள வேண்டியவைதான். அந்த நிலைமைகளையெல்லாம் ஆராய்ந்து



அதில் இருக்கின்ற குறைபாடுகளைப் போக்குவதற்கும், இதை நிறைவேற்று வதற்கும் திட்டவட்டமான முடிவுகளை மேற்கொள்வதற்கான தன்மைகளைத் தான் நாம் ஆராய வேண்டியிருக்கிறது. அதுபற்றிப் பரிசிலனை செய்து என்ன திட்டம் என்பதை அறிவித்து உங்களுடைய சீரிய யோசனைகளையும் பெற்று அதை நடைமுறைப்படுத்துகின்ற தன்மையிலே அரசு முயலும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. என். வி. என். சோமு : மாண்புமிகு தலைவரவர்களே, நிதி யமைச்சர் நாவலர் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அன்றைக்கு நான் பட்ஜெட்டிலே பேசும்பொழுதுகூடச் சொன்னேன். தேங் கிக்கிடந்த கைத்தறித் துணிகளை எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் முன்பு எப்படிப் பாட்டுபாடி விற்று அதனுடைய தேக்கங்களைக் குறைத்தார்கள் என்று. அதை ஏற்றுக்கொண்டு அந்தப் பட்டுப் புடவைகள் மீதான வரி களைக் குறைத்ததைப் போலவே குழந்தைகள் ஆண்டைக் கொண்டாடி இப்பொழுது அமர்ந்திருக்கிறோம், ஆகவே குழந்தைகள் சாப்பிடுகின்ற பிஸ்கோத்துகள், சாக்லேட்டுகள் ஆகியவைகளுக்கான வரியை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கனவே 8 சதவீதம் இருக்கிறதாம், உட்காருங்கள்.

## (5) அறிவிப்பு.

### மானியக் கோரிக்கைகளை முன்மொழிவது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1982-83 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் பேரவையில் முன் மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப் பெற்றுள்ளது.

"In pursuance of Article 203 clause (3) of the Constitution of India, I, Sadiq Ali, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for Grants for the year 1982-83."

## (6) வரவு-செலவுத் திட்டம், 1982-83—வாக்கெடுப்பு.

### (அ) கோரிக்கை எண். 20—வேளாண்மை.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 20—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 83,98,62,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

**திரு. இரெ. இராசமாணிக்கம் :** தலைவரவர்களே, விவசாயிகள் உற்பத்தி செய்யும் நெல்லுக்கு கட்டுப்படியாகும் நியாய விலை நிர்ணயம் செய்ய வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 20—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூபாய் 82,98,62,000 இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்."

**திரு. கே. எம். தங்கமணி :** தலைவரவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில் பருத்தி விதைப் பண்ணை புதியதாக ஆரம்பித்தல் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 20—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூபாய் 82,98,62,000 இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்."

**திரு. கு. ராமணி :** தலைவரவர்களே, ஏழை நடுத்தர மற்றும் பணக்கார விவசாயிகள் உற்பத்தி செய்கிற பொருட்களுக்கு நியாய விலை கிடைக்கத் தேவையான சட்டப் பாதுகாப்புடன் கூடிய விற்பனைத் திட்டத்தைத் தயாரித்து அமுலாக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 20—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூபாய் 82,98,62,000 இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்."

**திரு. செ. சிவசாமி :** தலைவரவர்களே, தமிழ்நாட்டிலுள்ள முக்கிய பண்ணைக் கழகங்களில் இலங்கையிலிருந்து குடிபெயர்ந்த தமிழர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுப்பதனால் அதிக நட்டம் ஏற்படுகிறது என்ற காரணத்தால் இந்த ஆண்டு விதைத்தல், நடவு வேண்டாம் என உயர்மட்ட அதிகாரிகள் முடிவு செய்ததன் காரணமாக பண்ணைகள் [illegible] பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 20—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூபாய் 82,98,62,000 இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்."





**திரு. எஸ். என். இராமசாமி :** தலைவரவர்களே, சாத்தான்குளம் தொகுதி நாசரேத்தில் வேளாண்மை கல்வி நிலையம் அமைப்பது சம்பந்தமாக விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 20—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூபாய் 82,98,62,000 இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்."

(ஆ) கோரிக்கை எண். 48—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 48—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 7,00,42,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** தலைவரவர்களே, விவசாயிகள் லெவியினால் பெரிதும் பாதிக்கப்படுகிறதனால் அதை அறவே நீக்கி விவசாயிகளின் துயர் துடைக்க வேண்டியதைப்பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 48—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூபாய் 7,00,42,000-இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்."

**திரு. தி. கா. நல்லப்பன் :** தலைவரவர்களே, இரண்டு எக்கர், மூன்று எக்கர், உள்ள சிறு விவசாயிகள் அனைவருக்கும் எண்ணெய் வித்துக்கள் பாதி விலையில் கொடுக்க வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 48—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூபாய் 7,00,42,000-இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்."

**திரு. எஸ். என். இராமசாமி :** தலைவரவர்களே, சாத்தான்குளம் தொகுதி ஆழ்வார் திருநகரியில் ஒரு வேளாண்மைப் பொறியியல் கல்விக்கூடம் அமைப்பது சம்பந்தமாக விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 48—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூபாய் 7,00,42,000-இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்."

(பிற்பகல் 12-30)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏதேனுமாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள கொள்கைக் குறிப்பினை @ நான் பேசியதாக குறிப்பேட் டினில் ஏற்றிட வேண்டுகிறேன். அதன் அடிப்படையில் மாண்புமிகு உறுப் பினர்கள் தங்களுடைய கருத்துக்களை வழங்கிட வேண்டுமெனக் கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

* திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் அவையிலே விவாதத்திற்கு வைக்கப்பட்டிருக்கிற வேளாண்மை—20 ஆம் எண் மானியக் கோரிக்கை மீதும், வேளாண்மை குறித்த மூலதனச் செலவாகிய 48-வது எண் மானியக் கோரிக்கைமீதும் நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். வேளாண்மைத் தொழில் என்பது ஒரு சிறந்த தொழிலாகும். அந்தச் சிறந்த தொழிலுக்கு இன்றையதினம் நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை போதுமானது அல்ல, இன்னும் கொஞ்சம் அதிகம் ஒதுக்க வேண்டு மென்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இதே அவையில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், 1974-75-வது ஆண்டில் ரூபாய் 470 கோடி மட்டுமே வருமானம் வரக்கூடிய அந்த நேரத்தில், பல்வேறு திட்டங்களை விவசாயிகளுக்கு அறிவித்திருந்தார்கள். ஆனால், இன்றைய தினம் தமிழகத்தினுடைய வரவு-செலவுத் திட்டத்தில் 1982-83-வது ஆண்டிற்கு வருவாய்க் கணக்கில் ரூபாய் 1,569.49 கோடி வரவு வரக்கூடிய இந்த நேரத்தில் வேளாண்மைக்காக, அதுவும் மிக முக்கியமான ஒரு தொழி லாக இருக்கக்கூடிய இந்த விவசாயத் துறைக்கு ஒதுக்கியிருக்கிற தொகை, போதுமானது அல்ல. இன்னும் அதிகமான தொகை ஒதுக்கி, இந்த வேளாண் மைத் துறை சிறப்பாகச் செயல்பட இந்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டு மென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இந்த அவையிலே நான் பேசுகிறபொழுது எங்களுடைய இயக்கத்தின் சார்பாக சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்

@ 188-250 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



களை ஆதரித்து ஒருசில கருத்துக்களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக் கிறேன். விவசாயத் தொழில் என்பது ஒரு சிறப்பான தொழில். அதை யாரும மறுக்கமுடியாது. அதை நம்பித்தான் பல கோடி மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அதையும் யாரும் மறுக்க முடியாது. ஆகையினாலே தான்.

'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற்று எல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்'

என்று நம்முடைய பொய்யாமொழிப் புலவர் அவர்களும் உழவுக்கும் தொழி லுக்கும் வந்தனை செய்வோம் என்று நம்முடைய புரட்சிக் கவி பாரதியார் அவர்களும் பாடியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் இத்தகைய சிறப்பான தொழிலுக்கு நம்முடைய அரசின் சார்பாகக் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப் பட்டிருக்கின்றனவா என்பதை எண்ணிப் பார்க்கும்போது, நிறைவேற்றப் படவில்லையென்பதைத்தான் என்னாலே சொல்ல முடியும். பல உறுப்பினர்களும் அதைத்தான் எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிப் பொறுப் பேற்றவுடன் பல திட்டங்களை அறிவித்தார்கள். விவசாயிகள் வாங்கிய கூட்டுறவுக் கடன்கள் அத்தனையையும் ரத்துசெய்வோம் என்று சொன்னீர்கள். அதற்குப் பிறகு 5 ஏக்கருக்கு உட்பட்டவர்கள் வாங்கிய கடனை ரத்து செய்வோம் என்று சொன்னீர்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரூபாய் 240 கோடி கடனை ரத்து செய்வோம் என்று சொன்னார்கள்.

அதோடு மட்டுமல்ல, விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய நெல்லுக்கு நியாயமான விலை வழங்கப்படும் இந்த ஆட்சியிலே என்று சொன்னார்கள். இதுவரையிலே கிடைக்கவில்லை. விவசாயி உற்பத்தி செய்யக்கூடிய நெல் லுக்கு ஒரு குவிண்டாலுக்கு ரூபாய் 20 வண்டிச் சத்தம் போனசாகத் தருவேன் என்று நம்முடைய முதலமைச்சர் இதே அவையிலே அறிவித்து விட்டார். ஆனால், வழங்கப்படவில்லை. அதோடு, விவசாயத் தொழிலாளர் களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படும் என்று சொன்னார். அதுவும் வழங்கப்பட வில்லை. விவசாயத் தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருப்பார்களானால், வேலையில்லாத நாட்களில் ஒரு நாள் ஒன்றுக்கு ரூபாய் 1 வழங்கப்படும் என்று சொன்னார்கள். அதுவும் வழங்கப்படவில்லை. இப்படி சொன்ன வாக்குறுதி கள் எதுவும் நிறைவேற்றப்படாமல் இந்த ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருக் கிறது என்பதை நான் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயி உற்பத்தி செய்யக்கூடிய நெல்லுக்கு நியாயமான விலை வழங்கப் படும் என்று சொன்னீர்கள் நீங்கள். நியாயமான விலை வழங்கிக் கொண்டிருக் கிறீர்களா என்று பார்த்தால் அப்படி எதுவும் வழங்கவில்லை. அப்படி வழங்

[திரு. இரெ. இராசமாணிக்கம்] [1982 மார்ச் 8

காததற்குக் காரணம் கேட்கிறபொழுது, மத்திய சர்க்கார் கொடுக்கவில்லை
யென்று சொல்லப்படுகிறது. ஆனால், அந்த நேரத்தில், திராவிட முன்னேற்
றக் கழக ஆட்சிக் காலத்தில் விவசாயி உற்பத்தி செய்யக்கூடிய நெல்லுக்கு
நியாயமான விலை வழங்க வேண்டுமென்றுதான் வண்டிச் சத்தம், போனசாக,
ஒரு குவிண்டாலுக்கு ரூபாய் 15 கொடுக்கப்பட்டது. அதைச் சுட்டிக்
காட்டித்தான் இந்த அவையில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த
நாங்கள் கேட்கிறபொழுது, நீங்கள் கொடுத்ததை விட, திராவிட முன்
னேற்றக் கழக ஆட்சி கொடுத்ததை விட அதிகமாகத் தருவேன், நான்
ரூபாய் 20 தருவேன் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்.

ஆனால் அதைக் கொடுக்கவில்லை. அதோடு மட்டுமல்ல. இன்றையதினம்
லெவி என்ற பெயரால் விவசாயி உற்பத்தி செய்யக்கூடிய நெல்லை, 50 சதவிகிதம்
வாங்குகிறார்கள். அப்படி வாங்குகின்ற லெவியைக் கூட நம்முடைய
நாவலர் அவர்கள் சொன்னார்களே வியாபாரிகள் தான் லெவி கொடுக்க
வேண்டும் என்று, அப்படி நடக்கிறதா என்றால் இல்லை. விவசாயிகள் வீடு
களிலே சோதனை செய்து பறிமுதல் செய்கின்றார்கள். என்னுடைய தொகுதி
யிலே கூட பல இடங்களில் விவசாயிகள் வீடுகளிலே புகுந்து பறிமுதல் செய்
திருக்கிறார்கள் அதிகாரிகள். இது சம்பந்தமாக மாவட்ட ஆட்சித் தலைவருக்
கும் மனுக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதோடு இன்றையதினம் விவசா
யிகள் கொடுக்கக்கூடிய நெல்லை, வியாபாரிகள் வாங்கி லெவி கொடுக்கின்ற
நேரத்தில் அந்த லெவியைக் கூட, நியாயமான முறையில் கொள்முதல் செய்ய
அதிகாரிகள் மறுக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் கிட்டத்தட்ட 10
ஆயிரம் மூட்டைகள் 4 கொள்முதல் செண்டர்களிலே, கோமுந்தூர், மங்க
நல்லூர், நீடூர், திருவிழந்தூர் போன்ற 4 செண்டர்களிலே 10 ஆயிரம்
மூட்டைகள் கிராமங்களில் தெருக்களிலே, ரோடுகளிலே அடுக்கிவைக்கப்பட்
டிருக்கின்றன. காரணம் கேட்டால் பணம் இல்லை என்று சொல்லுகிறார்கள்.
அடுத்து நாங்கள் ஐ. ஆர். 20 நெல்லை வாங்கக்கூடாது என்று அரசாங்கத்
திலே சொல்லி இருக்கிறார்கள். என்ன சொல்லுகிறார்கள். நெல்லை காய
வைத்துத் தருகிறோம் என்று வியாபாரிகள் சொல்லுகிறார்கள்.
கடந்த 2 தினங்களாக அரசாங்கத்திற்கு பல முறையீடுகள் தந்தி மூலமாக
தெரிவித்திருக்கிறார்கள் இப்படி பத்தாயிரம் மூட்டைகள் தெருக்களிலே
அடுக்கிவைக்கப்பட்டிருக்கிறது. அடுக்கி வைக்கப்பட்ட மூட்டைகளின்
புகைப்படங்கள் கூட நான் கையிலே வைத்திருக்கிறேன். இப்படி லெவி
கொடுப்பதற்காக அரசாங்கத்திற்குக் கொடுப்பதற்காக வியாபாரிகள் முன்
வந்தும் கூட, 10 ஆயிரம் மூட்டைகள் நடு வீதியிலே, நடுச் சாலையிலே
10 நாட்களாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்



1982 மார்ச் 8] [திரு. இரெ. இராசமாணிக்கம்]

கொள்கிறேன். அப்படிப்பட்ட நிலையை உடனடியாக போக்கவேண்டும். விவசாயிகளுக்கு நன்மை செய்கிறோம் என்று சொல்லவேண்டுமானால் இப்படி விவசாயிகள் பாதிக்கப்படுகின்றபோது அவர்களுக்கு உடனடியாக நிவாரணம் கொடுக்கவேண்டும். இரண்டு தினங்களாக தந்தி கொடுத்தும் யாரும் திரும்பிப் பார்ப்பதற்கு நாதி இல்லை.

அதோடு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது கொடுத்ததைப் போல வண்டி சத்தம் போனஸ் கொடுப்பது மட்டுமல்ல, விவசாயிகளுக்குக் கட்டுப்படி விலையாக ஒரு குவிண்டாலுக்கு 150 ரூபாய்க்குக் குறையாமல் வழங்கவேண்டும். கரும்புக்கு, ஒரு டன்னுக்கு 250 ரூபாய்க்குக் குறையாமல் வழங்கவேண்டும். அந்த அடிப்படையில் நீங்கள் செய்ய வேண்டும் என்று உங்களைக் கேட்டுக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

விவசாயிகளுக்கு மிகவும் முக்கியமானது தண்ணீர். அந்தத் தண்ணீரை இன்றையதினம் மேட்டூரிலே இருந்து பெறவேண்டிய நிலையில் தஞ்சை மாவட்டம் இருக்கின்றது. மேட்டூரை நம்பி இருக்கின்றபோது மேட்டூர் ஒப்பந்தம் 1924 ஆம் ஆண்டு ஏற்பட்டது. அது இன்றையதினம் புதுப்பிக்கப் படவேண்டும். பல ஆண்டுகளாக புதுப்பிக்கப்படுகிறது, கூடிப் பேசப்படு கிறது என்று பேசப்படுகிறது. நம்முடைய முதல் அமைச்சர் அவர்களும் சொன்னார்கள். கண்டிப்பாக இந்த ஒப்பந்தத்தை நாங்கள் புதுப்பித்தே தீருவோம் என்று இதே அவையில் சொன்னார்கள். ஆனால் அவர்கள் ஆளுநர் உரையில் பேசும்போது இன்றையதினம் மத்திய சர்க்கார் தலையிட் டால்தான் அதைத் தீர்க்க முடியும். தீர்க்க முடியாத சூழ்நிலை உருவாகி இருக்கிறது என்பதைத் தெரிவித்து இருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை உருவாகி இருப்பதால் விவசாயிகள் வேதனைப் பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அச்சப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். தங்க ளுக்குப் பாதகமான சூழ்நிலை உருவாகிவிடுமோ என்று அச்சப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலை இல்லாமல் 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தப்படி அதற்குக் கொஞ்சம் கூட குறை ஏற்படாத வகையில் மேட்டூர் ஒப்பந்தத்தை மத்திய சர்க்காருடைய ஒப்புதலோடு நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதிகமான அளவு, நிலத்தடி நீரைப் பயன்படுத்தவேண்டும் என்று இந்த அறிக்கையிலே நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். நிலத்தடி நீரை அதிகமாகப் பயன்படுத்தவேண்டும் என்பதற்காகத்தான் விவசாயி களுக்கு ஊக்கம் கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் விவசாயிகள் ஆயில் இன்ஜின் வாங்கினால்,

பம்ப்செட்டு வைத்தால் ஒரு விவசாயிக்கு 1,000 ரூபாய் மானியமாக வழங்கப்
பட்டது. ஆனால் இந்த ஆட்சியில் அது நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது.
அப்படிப்பட்ட நல்ல காரியங்களை நீங்கள் செயல்படுத்தவேண்டும். விவசாயி
களுக்கு ஊக்கமான முறையில் அப்படி ஆயில் இன்ஜின் வாங்கினால்,
மோட்டார் வாங்கினால் அவர்களுக்கு இப்போது இருக்கின்ற விலைவாசியைக்
கருதி ஒரு 2,000 ரூபாயாவது மானியமாகத் தரவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்து தண்ணீர் விடுவதிலாவது ஒரு நிரந்தரமான கொள்கை இருக்
கிறதா என்றால் இல்லை. இல்லை என்றே என்னால் சொல்ல முடியும்.
இந்த ஆண்டு கண்டிப்பாக ஜுன் மாதம் 12-ந்தேதி தண்ணீர் திறந்துவிடுவோம்,
தண்ணீர் திறந்துவிடுவோம் என்று நீங்கள் அறிவித்தீர்கள். பத்திரிகையிலே
செய்தி வந்தது. அமைச்சர்களும் திறந்துவிடுவோம் என்று 30 நாட்களாக
அறிவித்தீர்கள்.

(பிற்பகல் 12-40)

கடைசியில் திறந்து விட்டார்களா என்று சொன்னால் இயற்கையின் சாதக
மான சூழ்நிலை இல்லை என்று சொல்லி திறந்து விடவில்லை. ஆனால்
உங்கள அறிவிப்பை நம்பி, அமைச்சர் சொன்னதை நம்பி, விவசாயிகள்
குளத்து நீரையும், கிணற்று நீரையும் வைத்து விதையை விதைத்து
விட்டார்கள். தண்ணீரும் வரும் என்று எதிர்பார்த்தார்கள். மேட்டூர் திறக்கப்
படும் என்று பார்த்தார்கள். ஆனால் மேட்டூர் திறக்கப்படவில்லை. இப்படி
உங்களுடைய வார்த்தையை நம்பி விதையிட்ட விவசாயிகள் ஆயிரக்கணக்கான
ரூபாய் நஷ்டம் அடைந்து இருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் இந்த
வகையில் பல்லாயிரம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டு இருக்கிறது. அவர்களுக்கு இந்த
அரசாங்கத்தால் ஏதாவது நன்மை செய்யப்பட்டு இருக்கிறதா என்றால்
இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்தாற்போல் நான் தெரிவிக்கவிரும்புவது, தஞ்சை மாவட்டத்
தில் குத்தகை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு அந்த நிலத்தை வைத்து
ஏதாவது கடன் வாங்கிக்கொண்டு, பம்ப்செட் வைத்துக்கொள்ள முடியுமா
என்றால் அதற்கு சட்டத்தில் இடம் இல்லை என்று சொல்கிறார்கள்.
தஞ்சை மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர் கோவில் நிலங்கள், டிரஸ்ட்
நிலங்கள் இருக்கின்றன. அவற்றில் குத்தகை சாகுபடி செய்யும் விவசாயி
களுக்கு அந்த நிலத்தின் மீது பொறுப்பை வைத்து, கடன் பெறுவதற்கோ,
அல்லது அந்த நிலத்தை அவர்களுக்குப் பட்டா செய்து கொடுத்தோ தங்க





ளுடைய நிலையை அவர்கள் உயர்த்திக்கொள்ள வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு சட்டத்தின் மூலமாக வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பயிர் பாதுகாப்பு என்று சொல்கிறபோது, பயிர்பாதுகாப்பு சரியான முறையில் செய்யப்படுகிறதா என்ற ஒரு ஐயம் எழுகிறது. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் குறுவை அறுவடை காலத்தில் மழை அதிகமாகப் பெய்யும். அந்த அறுவடை காலத்தில் புகையான் நோயால் அந்தப் பயிர்கள் தாக்கப்பட்டு, விவசாயிகள் ஏராளமாக நஷ்டப்படுகிறார்கள். அப்படி புகையான் நோய் பயிர்களைத் தாக்குகிறபோது அந்த விவசாயிகளுக்கு இலவசமாக அந்தப் புகையான் நோய் தடுப்பு மருந்தை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த மருந்துகள் தாராளமாகக் கிடைப்பது இல்லை. மேலும், அந்த மருந்துகள் தரமான மருந்துகளாக இருக்க வேண்டும். தரமான மருந்துகள் தற்போது கிடைப்பது இல்லை.

இன்றையதினம் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் பல்வேறு ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன. ஆனால் அந்த ஆராய்ச்சிகளின் மூலமாக ஏதாவது லாபம் ஏற்பட்டு இருக்கின்றதா என்ற ஐயப்பாடு எனக்கு எழுகிறது. பல லட்சக்கணக்கான ரூபாய் நஷ்டம் அடைகின்ற வகையில் ஏதோ ஆராய்ச்சி நடத்துகிறோம் என்று சொல்கிற அளவில் இருக்கின்றன. ஒரு பலனும் அதனால் தெரியவில்லை. இன்றையதினம் பூச்சி மருந்துகள் அடித்தால் அந்தப் பூச்சிகள் இறப்பது இல்லை; மாறாக கொழுத்து வளர்கின்றன. இப்போது என்னுடைய கையில் பூச்சி மருந்து பொட்டலம் ஒன்று வைத்து இருக்கிறேன். செவின், இது உண்மையான மருந்துதானா, போலி மருந்தா என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** எங்கேயிருந்து அதை வாங்கினீர்கள்?

**திரு. இரெ. இராசமாணிக்கம்:** உங்களிடம் அந்த மருந்தைத் தருகிறேன்.

பல்கலைக் கழகத்தில் இன்றையதினம் நியமன முறையில் உறுப்பினர்கள் நியமிக்கப்படுகிறார்கள். நியமனம் செய்யப்படுகின்ற உறுப்பினர்களுக்கு விவசாயத்தில் அனுபவம் எதுவும் இருப்பது இல்லை. எப்படிப்பட்டவர்கள் நியமிக்கப்படுகிறார்கள் என்றால் விவசாயத்தை அறியாதவர்கள். விவசாய அனுபவம் இல்லாதவர்கள் அதிலே இடம் பெற்று இருக்கிறார்கள். அதிலே திரு. ராஜகோபால், திரு. அவினாசிலிங்கம் செட்டியார், திரு. அருணாசலம் இருக்கிறார்கள். அவர்களுக்கு விவசாயத்தில் எதுவும் தெரியாது. அதைப் போலவே, திரு. ராஜாராம் நாயுடு. அவர் பெரிய நிலப்பிரபு. அவருக்கு சிறு விவசாயியைப் பற்றி என்ன தெரியும்? ஆகவே, விவசாயத்தில் அனுபவம் உள்ளவர்களை நியமிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பல்கலைக்கழகத்தில் 1981—ஜூலை மாதத்தில் படிப்பு படிக்க சேரவேண்டி யவர்கள் 1982 பிப்ரவரி வரையில் தேர்ந்தெடுக்கப்படவில்லை, தேர்வு செய்து சேர்க்கப்படவில்லை என்று தெரிகிறது. இப்படிப்பட்ட நிலைமை இருக்கு மானால் எப்படி தரமான ஒரு படிப்பு படிக்கக்கூடியவர்களை உருவாக்க முடியும்? இப்படிப்பட்ட நிலைமையில் பல்கலைக்கழகம் இயங்கிக்கொண்டு இருக்கிறது என்பதை நான் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதோடு, விவசாயிகளுக்குத் தேவையான தழை உரம் உற்பத்தி செய்ய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மானியம் கொடுக்கப்பட்டது; தழை உரம் உற்பத்திச் செய்யப்பட்டது. அது இன்று நிறுத்தப்பட்டிருக்கிறது. மீண்டும் மானியம் கொடுத்து தழை உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையில் நீங்கள் அறிவித்த கொள் கையால், உங்களுடைய தவறான கொள்கையால், உங்களுடைய தவறான விளம்பரத்தால் விவசாயிகள் கூட்டுறவுக் கடனைக் கட்டாமல், உங்களை நம்பி கடன் வாங்கி இன்றைக்கு பெரிய கடன்காரர்களாக இருக்கிறார்கள். கடன் காரர்களாக இன்றைக்கு அவர்கள் எல்லாம் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். ஒரு காலத்தில் இலங்கை மன்னனைப்பற்றிச் சொல்லும்போது "கடன்பட்டார் நெஞ்சம்போல் கலங்கினான் இலங்கை வேந்தன்" என்று சொல்லுவார்கள். அதைப்போல இன்றைக்கு விவசாயிகள் மிகவும் மோசமான நிலையில் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். என்ன காரணம்? நீங்கள் சொன்ன காரணம். எல்லாக் கடனையும் ரத்து செய்வோம் என்று நீங்கள் சொன்னீர்கள். அதை அவர்கள் நம்பி கடனைக் கட்டாமல் இருந்து, இன்றைக்கு கஷ்டப்படுகிறார்கள். ஐந்து ஏக்கருக்கு குறைவாக நிலம் வைத்திருக்கிற சிறிய விவசாயிகள் கடன்கள் கூட ரத்து செய்யப்படவில்லை. அதுபற்றிய ஒரு பெரிய பட்டியலையே வைத்திருக்கிறேன். அதை பின்னால் உங்களிடத்திலே தந்துவிடுகிறேன். அதிலிருக்கிற 2, 3 பெயர்களை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

30—3—1977-ல் ஜெகதீசன் என்பவர் அவர் 5 ஏக்கர் நிலத்திற்கும் குறைவாக உள்ளவர்—வாங்கிய கடன் 1,229 ரூபாய்; அதற்கு வட்டி 904.20 ரூபாய். 30—7—1975-ல் கோபால் செட்டியார் என்பவர் விவசாயக் கூட்டு றவுச் சங்கத்தின் மூலம்—அது என்னுடைய ஊரில் உள்ள கூட்டுறவுச் சங்கம் வாங்கிய கடன், அதாவது அசல் 908 ரூபாய்; அதற்கு வட்டி 908 ரூபாய். 19—8—1978-ல் வாலாம்பாள் என்பவர் வாங்கிய கடன் 202 ரூபாய்; அதற்கு வட்டி 202 ரூபாய். சிவானந்தம் என்பவர் 2—8—1975-ல் வாங்கிய கடன்





225 ரூபாய், அதற்கு வட்டி 225 ரூபாய். கோபால் என்பவர் 18—9—1976-ல் வாங்கிய கடன் 423 ரூபாய்; வட்டி 423. இராமையன் என்பவர் 1—8—1975-ல் வாங்கிய கடன் 1,451 ரூபாய்; அதற்கு வட்டி 1,436 ரூபாய். இதைப்போல இன்னும் நிறைய பேர்கள் இருக்கிறார்கள்; பெரிய பட்டியலே இருக்கிறது. இப்படி வாங்கிய கடனைவிட அசலைவிட வட்டி அதிகமாக இருக்கிறது.

உயர்மட்டக் குழு சிபாரிசுபடி 31—12—1981 வரையில் சலுகைகள் நீட்டிக்கப்பட்டது என்று சொன்னார்கள். வட்டி தள்ளுபடி, அபராத வட்டி தள்ளுபடி என்று சொல்லியிருக்கிறார்கள். அது போதுமானதல்ல. அந்த சலுகைகள் இன்னும் 3 மாதங்களுக்கு நீட்டிக்கப்பட வேண்டும். அப்படி யானால் தான் ஏழை எளிய விவசாயிகள் ஓரளவுக்கு பயனடைய முடியும். ஐந்து ஏக்கருக்கு உட்பட்டவர்கள் கடன்களை எல்லாம் உடன் ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது ரொம்ப முக்கியமான பிரச்சனை. விவசாயிகள் எல்லாம் இன்றைக்கு தவித்துக் கொண்டிருக்கிறார்கள். பெரிய விவசாயிகளுக்கு வட்டியை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும், இன்னும் 3 மாதம் தவணை கொடுத்து அசலை வசூல் செய்ய வேண்டும், அப்படியானால்தான் ஓரளவுக்கு பயன் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: நீங்கள் 20 நிமிடங்கள் எடுத்துக் கொண்டீர்கள். நிறையபேர்கள் பேச வேண்டியிருக்கிறது. சீக்கிரம் முடித்துவிடுங்கள்.

**திரு. இரெ. இராசமாணிக்கம்**: இன்னும் கொஞ்சம் நேரம் கொடுங்கள். ஆறு ஆண்டுக்காலமாக பல்வேறு காரணங்களினால் நிலவரியை வசூல் செய்யாமல் இருந்துவிட்டு இப்போது 6 பசலிக்கும் உள்ள கிஸ்தியை ஒரே தடவையில் கட்ட வேண்டுமென்று சொல்லி, கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள்; ஜப்தி செய்கிறார்கள். கூட்டுறவுக் கடன்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகளைப்போல் இதற்கும் சலுகைகள் அளிக்க வேண்டும்.

அது மட்டுமல்ல. இந்த நில வரியை நிலச் சொந்தக்காரர்களிடம் தான் வசூல் செய்ய வேண்டும்; சாகுபடியாளர்களிடம் வசூல் செய்யக்கூடாது. நில வரியை நிலவுடைமையாளர்களிடம் வசூல் செய்யாமல் இன்றைக்கு சாகுபடி யாளர்களுடைய மகசூலை ஜப்தி செய்கிறார்கள் நிலவரிக்காக. இது நியாயம் தானா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். சாகுபடியாளர்கள் மகசூலை நிலவரிக்காக ஜப்தி செய்வதை உடனடியாக நிறுத்த வேண்டும்; நிலவுடைமை யாளர்களிடம்தான் நிலவரியை வசூல் செய்ய வேண்டும்.

ஆறு ஆண்டுக்காலமாக நிலவரி வசூல் செய்யப்படாமல் ஒத்திவைக்கப்
பட்டிருக்கிறது. அதற்கு ஒரு முக்கியமான காரணம் கிராம அதிகாரிகளை
நீங்கள் நீக்கியதுதான். இருக்கின்ற பல்வேறு சிரமங்களை எண்ணிப்பார்த்து,
இந்த நிலவரிப் பாக்கியை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

(பிற்பகல் 12-50)

விவசாயிகளுக்கு தரமான பூச்சி மருந்து வழங்க வேண்டும்.
பவனுக்கே நிலம் சொந்தமாக்கப்பட வேண்டும். நெல்லுக்கு நியாயமான
விலை வழங்கப்பட வேண்டும். ஒரு குவிண்டால் 150 ரூபாய்க்குக் குறை
யாமல் வழங்கவேண்டும் கரும்புக்கு டன் ஒன்றுக்கு 250 ரூபாய் வழங்க
வேண்டும். உழவு செய்வதற்கு டிராக்டர் குறைந்த வாடகையில் கொடுக்க
வேண்டும். உரம், பூச்சி மருந்து ஆகியவற்றை மானிய விலையிலே வழங்க
வேண்டும். நெல்லுக்கு விதித்திருக்கின்ற லெவி முறையினை ரத்து செய்ய
வேண்டும். குடிமராமத்து மூலம் எல்லா கிராமங்களுக்கும் வாய்க்கால் மரா
மத்து செய்து கொடுக்கவேண்டும். விவசாயத் தொழிலாளர்கள் அனைவருக
கும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கவேண்டும்.
ஒவ்வொரு ஆண்டும் மே மாதத்திலே முத்தரப்பு மாநாடு கூட்டி விவசாயத்
தொழிலாளர்களுக்கு விலைவாசிக்கேற்ப கூலி நிர்ணயம் செய்யவேண்டும்.

தஞ்சை மாவட்டத்தில் அதிகமான மக்கள் விவசாயம் செய்யக்கூடிய
நிலைமை இருப்பதால் தஞ்சை மாவட்டத்தில் வேளாண்மைப் பல்கலைக்
கழகம் அமைக்கவேண்டும்.

கூட்டுறவுக் கடன் அனைத்தையும் ரத்து செய்யவேண்டும் என்று கேட்டுக்
கொண்டு வாய்ப்பு தந்ததற்காக நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஏ. பாலுச்சாமி :** மதிப்பிற்குரிய மாமன்றத்தின் துணைத் தலைவர்
அவர்களே, நம்முடைய நாவலர் அவர்கள் வாசித்தளித்த நிதிநிலை அறிக்கை
யில் கண்டுள்ள கொள்கையின் அடிப்படையில் நம்முடைய வேளாண்மைத்
துறை அமைச்சர் டாக்டர் நாவலரசு அவர்கள் மானியக் கோரிக்கையில்
பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக நான் நன்றி கூறி ஒருசில கருத்துக்களை
இந்த அவை முன் வைக்கலாம் என்று எண்ணுகிறேன்.

எனக்கு முன்னதாகப் பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த
மாமன்ற உறுப்பினர் அவர்கள் இந்த அரசு விவசாயிகளுக்காக எந்த நன்மை
யையும் செய்யவில்லை என்று ஒருசில கருத்துக்களை எடுத்து வைத்தார்கள்.
ஆனால் ஏழை எளிய விவசாயிகளுக்காகப் போராடிக்கொண்டிருக்கின்ற அரசு



புரட்சித் தலைவரின் அரசுதான் என்பதை உங்களுக்கு நான் மெத்தப் பணி
வன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். நெல் விலையினைப் பற்றிக்
கூறினார்கள். ஆனால் விவசாயிகளுக்கு நெல் விலையினை அதிகமாக்கிக்
கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசோடு வாதாடிக்கொண்டிருப்பது
அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் என்பதை
மெத்தப் பணிவோடு எடுத்துக் கூறிக்கொள்கிறேன்.

அதேநிலையில் கரும்பு விலையினைப் பற்றியும் கூறினார்கள். கரும்பின்
விலையினை அதிகமாக்கிக் கொடுக்கவேண்டும் என்று புரட்சித் தலைவர் அவர்
களும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் மத்திய அரசோடு
வாதாடிக் கொண்டிருப்பதைக் கண்கூடாகக் கண்டிருப்பார்கள். ஆகவே
அந்தக் கருத்து அவர்களுக்குத் தெரியவில்லையா என்று அறியவேண்டிய
சூழ்நிலையிலே நாம் இருக்கிறோம். அடுத்து ஏழை எளிய மக்களுக்குக் கடன்
கள் வழங்கவில்லை என்று எடுத்துக் கூறினார்கள். ஆனால் ஏழை எளிய
மக்களுக்காகத்தான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக
அரசு கடன்கள் வழங்கிக் கொண்டிருக்கின்றது. ஆனால் திராவிட முன்னேற்றக்
கழகத்தின் ஆட்சிக் காலத்திலே பெரும் முதலாளிகளுக்கும், நிலச்சுவான்தார்
களுக்கும்தான் கடன்கள் வழங்கப்பட்டது என்பதை இன்று நாட்டு மக்கள்
அறிந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை நான் உங்களுக்கு மெத்தப்பணிவோடு
தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அதேநேரத்தில் பருவமழை பொய்த்து
விட்ட காரணத்தால் இந்த மாநிலத்திலே வறட்சி ஏற்பட்டபோது அந்த
வறட்சியினை இந்த அரசு சமாளிக்குமா என்றெல்லாம் நினைத்த கருத்துக்கு
மாறாக இன்றையதினம் விவசாயத் துறையிலே தன்னிறைவு பெற்று தமிழகத்
திலே எங்கே பார்த்தாலும் நல்ல விளைச்சல் கண்டிருக்கின்றது என்றால்
அதற்கு விவசாயத்துறை அமைச்சர்தான் பொறுப்பு என்பது நாமெல்லாம்
அறிந்த விஷயமாக இருக்கலாம். விவசாய மக்கள் எங்கெங்கு கஷ்டப்படு
கிறார்கள், அந்த விவசாயிகளுக்கு என்னென்ன நன்மைகளைச் செய்யவேண்டும்
என்ற எண்ணத்தின் காரணமாக விவசாயிகளிடம் நேரடியாகச் சென்று
அந்த மக்களைச் சந்தித்து நெற்பயிரினை உற்பத்தி செய்வதற்கு மேலும்
என்னென்ன திட்டங்கள் கொண்டுவரவேண்டும் என்ற எண்ணத்தில், அந்த
ஒரு நல்ல அடிப்படையில் இதுவரை எந்த ஒரு அமைச்சரும் செய்யாத நல்ல
காரியத்தை அமைச்சரவர்கள் செய்த காரணத்தால்தான் இன்று தமிழகத்
திலே விவசாயத்துறை தன்னிறைவு பெற்று இன்று அமோக விளைச்சல்
கண்டிருக்கின்றது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். ஆனால் அனைத்
திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலத்தில்
ஏற்பட்ட வறட்சியைப் பற்றி அவர்கள் சமாளித்துவிடுவார்களா என்றெல்லாம்
நினைத்தார்கள். காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயும், திராவிட முன்னேற்றக்

ஆறு ஆண்டுக்காலமாக நிலவரி வசூல் செய்யப்படாமல் ஒத்திவைக்கப்
பட்டிருக்கிறது. அதற்கு ஒரு முக்கியமான காரணம் கிராம அதிகாரிகளை
நீங்கள் நீக்கியதுதான். இருக்கின்ற பல்வேறு சிரமங்களை எண்ணிப்பார்த்து,
இந்த நிலவரிப் பாக்கியை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

(பிற்பகல் 12-50)

விவசாயிகளுக்கு தரமான பூச்சி மருந்து வழங்க வேண்டும்.
பவனுக்கே நிலம் சொந்தமாக்கப்பட வேண்டும். நெல்லுககு நியாயமான
விலை வழங்கப்பட வேண்டும். ஒரு குவிண்டால் 150 ரூபாய்க்குக் குறை
யாமல் வழங்கவேண்டும் கரும்புக்கு டன் ஒன்றுக்கு 250 ரூபாய் வழங்க
வேண்டும். உழவு செய்வதற்கு டிராக்டர் குறைந்த வாடகையில் கொடுக்க
வேண்டும். உரம், பூச்சி மருந்து ஆகியவற்றை மானிய விலையிலே வழங்க
வேண்டும். நெல்லுக்கு விதித்திருக்கின்ற லெவி முறையினை ரத்து செய்ய
வேண்டும். குடிமராமத்து மூலம் எல்லா கிராமங்களுக்கும் வாய்க்கால் மரா
மத்து செய்து கொடுக்கவேண்டும். விவசாயத் தொழிலாளர்கள் அனைவருக
கும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கவேண்டும்.
ஒவ்வொரு ஆண்டும் மே மாதத்திலே முத்தரப்பு மாநாடு கூட்டி விவசாயத்
தொழிலாளர்களுக்கு விலைவாசிக்கேற்ப கூலி நிர்ணயம் செய்யவேண்டும்.

தஞ்சை மாவட்டத்தில் அதிகமான மக்கள் விவசாயம் செய்யக்கூடிய
நிலைமை இருப்பதால் தஞ்சை மாவட்டத்தில் வேளாண்மைப் பல்கலைக்
கழகம் அமைக்கவேண்டும்.

கூட்டுறவுக் கடன் அனைத்தையும் ரத்து செய்யவேண்டும் என்று கேட்டுக்
கொண்டு வாய்ப்பு தந்ததற்காக நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஏ. பாலுச்சாமி :** மதிப்பிற்குரிய மாமன்றத்தின் துணைத் தலைவர்
அவர்களே, நம்முடைய நாவலர் அவர்கள் வாசித்தளித்த நிதிநிலை அறிக்கை
யில் கண்டுள்ள கொள்கையின் அடிப்படையில் நம்முடைய வேளாண்மைத்
துறை அமைச்சர் டாக்டர் நாவலரசு அவர்கள் மானியக் கோரிக்கையில்
பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக நான் நன்றி கூறி ஒருசில கருத்துக்களை
இந்த அவை முன் வைக்கலாம் என்று எண்ணுகிறேன்.

எனக்கு முன்னதாகப் பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த
மாமன்ற உறுப்பினர் அவர்கள் இந்த அரசு விவசாயிகளுக்காக எந்த நன்மை
யையும் செய்யவில்லை என்று ஒருசில கருத்துக்களை எடுத்து வைத்தார்கள்.
ஆனால் ஏழை எளிய விவசாயிகளுக்காகப் போராடிக்கொண்டிருக்கின்ற அரசு



புரட்சித் தலைவரின் அரசுதான் என்பதை உங்களுக்கு நான் மெத்தப் பணி
வன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். நெல் விலையினைப் பற்றிக்
கூறினார்கள். ஆனால் விவசாயிகளுக்கு நெல் விலையினை அதிகமாக்கிக்
கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசோடு வாதாடிக்கொண்டிருப்பது
அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் என்பதை
மெத்தப் பணிவோடு எடுத்துக் கூறிக்கொள்கிறேன்.

அதேநிலையில் கரும்பு விலையினைப் பற்றியும் கூறினார்கள். கரும்பின்
விலையினை அதிகமாக்கிக் கொடுக்கவேண்டும் என்று புரட்சித் தலைவர் அவர்
களும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் மத்திய அரசோடு
வாதாடிக் கொண்டிருப்பதைக் கண்கூடாகக் கண்டிருப்பார்கள். ஆகவே
அந்தக் கருத்து அவர்களுக்குத் தெரியவில்லையா என்று அறியவேண்டிய
சூழ்நிலையிலே நாம் இருக்கிறோம். அடுத்து ஏழை எளிய மக்களுக்குக் கடன்
கள் வழங்கவில்லை என்று எடுத்துக் கூறினார்கள். ஆனால் ஏழை எளிய
மக்களுக்காகத்தான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக
அரசு கடகள் வழங்கிக் கொண்டிருக்கின்றது. ஆனால் திராவிட முன்னேற்றக்
கழகத்தின் ஆட்சிக் காலத்திலே பெரும் முதலாளிகளுக்கும், நிலச்சுவான்தார்
களுக்கும்தான் கடன்கள் வழங்கப்பட்டது என்பதை இன்று நாட்டு மக்கள்
அறிந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை நான் உங்களுக்கு மெத்தப்பணிவோடு
தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அதேநேரத்தில் பருவமழை பொய்த்து
விட்ட காரணத்தால் இந்த மாநிலத்திலே வறட்சி ஏற்பட்டபோது அந்த
வறட்சியினை இந்த அரசு சமாளிக்குமா என்றெல்லாம் நினைத்த கருத்துக்கு
மாறாக இன்றையதினம் விவசாயத் துறையிலே தன்னிறைவு பெற்று தமிழகத்
திலே எங்கே பார்த்தாலும் நல்ல விளைச்சல் கண்டிருக்கின்றது என்றால்
அதற்கு விவசாயத்துறை அமைச்சர்தான் பொறுப்பு என்பது நாமெல்லாம்
அறிந்த விஷயமாக இருக்கலாம். விவசாய மக்கள் எங்கெங்கு கஷ்டப்படு
கிறார்கள், அந்த விவசாயிகளுக்கு என்னென்ன நன்மைகளைச் செய்யவேண்டும்
என்ற எண்ணத்தின் காரணமாக விவசாயிகளிடம் நேரடியாகச் சென்று
அந்த மக்களைச் சந்தித்து நெற்பயிரினை உற்பத்தி செய்வதற்கு மேலும்
என்னென்ன திட்டங்கள் கொண்டுவரவேண்டும் என்ற எண்ணத்தில், அந்த
ஒரு நல்ல அடிப்படையில் இதுவரை எந்த ஒரு அமைச்சரும் செய்யாத நல்ல
காரியத்தை அமைச்சரவர்கள் செய்த காரணத்தால்தான் இன்று தமிழகத்
திலே விவசாயத்துறை தன்னிறைவு பெற்று இன்று அமோக விளைச்சல்
கண்டிருக்கின்றது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். ஆனால் அனைத்
திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலத்தில்
ஏற்பட்ட வறட்சியைப் பற்றி அவர்கள் சமாளித்துவிடுவார்களா என்றெல்லாம்
நினைத்தார்கள். காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயும், திராவிட முன்னேற்றக்

[திரு. ஏ. பாலுச்சாமி] [1982 மார்ச் 8

கழகத்தின் ஆட்சிக் காலத்திலேயும் வறட்சியை அவர்களாலே சமாளிக்க
முடியாமல் ஒரு படி அரிசி 12 ரூபாய் அன்று விற்றது. அப்போது ஏழை
மக்கள் அதை வாங்கிச் சாப்பிடுவதற்குக் கூட வசதி இல்லாமல் தவித்ததை
இந்த நாட்டுமக்கள் மறந்திருக்கமாட்டார்கள் என்பதை நான் பணிவோடு
தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அதுபோன்று இல்லாது, இன்று ஏழை
எளிய மக்களின் வாழ்க்கையினை எந்த முறையிலேயாவது நல்ல முறையில்
சீர்திருத்தவேண்டும் என்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையிலே, புரட்சித்
தலைவர் அவர்களின் அரசு, இந்த திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறது.
ஆனால் கொண்டு வந்த திட்டங்களை எல்லாம் என்ன திட்டம் என்று ஏளன
மாகப் பேசுகிற ஒரு சூழ்நிலை ஏற்பட்டாலும், அதையெல்லாம் பொருட்படுத்
தாமல், திட்டங்களை நிறைவேற்றி முடித்தே தீருவார். ஆனால் தமிழக
மக்கள் அனைவரும் இந்தத் திட்டத்தை வரவேற்கிறார்கள்.

அதுபோன்று மண்ணெண்ணெய் விலை குறைப்பு, ஏழை எளிய குழந்தை
களுக்கு இலவச உணவு என்று கொண்டு வரப்பட்டிருக்கிற நல்ல திட்டங்களை
எல்லாம், மக்கள் குறைகளைப் போக்குவதற்கென்றே கொண்டு வரப்பட்ட
திட்டங்களாக மக்கள் அதனை வரவேற்று, புரட்சித் தலைவர் அவர்களை
வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள்: அப்பேர்ப்பட்ட ஒரு நல்ல அரசு இது.
இந்த நல்ல அரசின் விவசாயத் துறையில் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கும்
அமைச்சர் அவர்கள், இந்தத் துறையிலே மேலும் மேலும் நன்மைகள் பல
செய்து, வளம் கொழிக்கச் செய்ய, அரும்பாடுபட்டு வருகிறார்கள் என்று
நமக்குத் தெரியும். நம்முடைய மதிப்பிற்குரிய வேளாண்மை அமைச்சர்
அவர்கள் அந்த ஏழை எளிய விவசாயிகளுக்கு உதவி செய்யவும், உற்பத்தியை
அதிகரிக்கவும், உறுதுணையாக இருக்கும் வகையில் இந்த மானியக்
கோரிக்கை கேட்டிருக்கிறார்கள். இந்தத் துறையை இன்னும் நல்ல
முறையில் செம்மைப்படுத்தி வளம்பெறச்செய்ய, இதற்கு இன்னும் அதிகமான
அளவில் நிதி ஒதுக்கீடு பெற அவர்கள் முயற்சி செய்து பெறவேண்டும் என்று
கேட்டு, இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று, நன்றி கூறி முடிக்கிறேன்.
நன்றி, வணக்கம்.

* **திரு. எல். இளையபெருமாள் :** மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, நான் சார்ந்திருக்கிற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின்
சார்பாக வேளாண்மைத் துறை சம்பந்தமாக கொண்டுவரப்பட்டிருக்கிற
இந்த மானியக் கோரிக்கையிலே கலந்துக் கொண்டு சில கருத்துக்களைச்
சொல்ல விரும்புகிறேன்.

"உழுதொழில் நிற்கின் மறுதொழில் நடவா"
"ஓதுவார் எல்லாம் உழுவோர் தலைக்கடை"



1982 மார்ச் 8]

என்றெல்லாம் நமது முன்னோர்கள் இந்தத் தொழிலைப்பற்றி சிறப்பாக கூறி
யிருக்கிறார்கள். ஆனால் இந்த உழவுத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிற
விவசாயப் பெருங்குடி மக்களுடைய நிலைமை நாளுக்கு நாள் நலிந்துக்
கொண்டே வருகிறது. தொழில் வளம் பெருக்குகிற அளவுக்கு,
உணவு உற்பத்தியை பெருக்குகிற வேளாண்மை உற்பத்தியில் ஈடுபட்டிருக்கிற
உழவர் பெருமக்களை அரசாங்கம் ஊக்குவிக்கவேண்டியது மிகவும் அவசிய
மாகும். அது நம்முடைய கடமையுமாகும். ஆனால் அரசாங்கத்தினர் எத்தனை
திட்டங்களை நாட்டிலே போட்டாலும், அதை செயல்படுத்தவேண்டியவர்கள்,
அரசாங்கத்தின் திட்டங்களை நிறைவேற்றும் பகுதியாக இருக்கக்
கூடிய அதிகாரிகள் இன்னும் அதில் அக்கறை காட்டாதவர்களாக இருக்கி
றார்கள். அதை நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். அது அரசியல்
காரணமாக இருந்தாலும் சரி, அல்லது, அனுபவமின்மையற்ற காரணமாக இருந்
தாலும் சரி, அல்லது நம்மை யார் என்ன செய்ய முடியும் என்ற உணர்விலே
நிர்வாக இயந்திரத்திலே உள்ளவர்கள் இருந்தாலும் சரி, அவர்களை கண்
காணிக்கிற பொறுப்பு அமைச்சர்களுக்கு மட்டும் அல்ல, அவர்களைச் சார்ந்
திருக்கிற அதிகாரிகளையும் சாரும் என்று நான் சொல்லிக் கொள்ள விரும்பு
கிறேன்.

நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்வார்கள்—திராவிட பாரம்பரியத்
திலே—என்று ஆரம்பித்து அப்படி நல்ல இலக்கணத்தோடு சொல்லக்கூடிய
நல்ல இளைஞரை நாம் அமைச்சராகப் பெற்றிருக்கிறோம். ஆனால் அந்த
திராவிட பாரம்பரியத்திலேதான் பூச்சி மருந்து தெளிப்பதிலே ஆட்சியிலே
குறை வந்தது என்பதை நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். திராவிட
பாரம்பரியத்திலேதான் கப்பல் வாங்கப்படுவதிலே ஊழல் நடந்தது
என்பதையும் நாம் ஒப்புக் கொள்ளவேண்டிய அவல நிலையில்தான்
இருக்கிறோம். ஆகவே இதில் யாராக இருந்தாலும் சரி, குற்றம் குற்றம்தான்.
நானும் திராவிட பாரம்பரியத்தைச் சேர்ந்தவன் என்பதிலே நிச்சயமாக நான்
மகிழ்ச்சியடைகிறேன். அதைப் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன் . . .
(குறுக்கீடு)

**திரு. துரைமுருகன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்பு
மிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்கள் திராவிட பாரம்பரியத்தைப்
பற்றி அவைக்கு உதவாத குற்றச்சாட்டுகளை ஒட்டு மொத்தமாக இங்கே
கூறிக்கொண்டிருக்கிறார்கள். காங்கிரஸ் தேசிய பாரம்பரியத்திலேதான்
காங்கிரஸ் தேசிய பாரம்பரியத்திலேதான் நந்தனார்
எருக்கஞ்சேரி வந்தது.
ஹோஸ்டல் விவகாரம் வந்திருக்கிறது என்பதை இந்த அவைக்கு நான்
தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[1982 மார்ச் 8

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, குற்றச்சாட்டு என்பது வேறு, கொள்கை என்பது வேறு.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் பெருமகனாரும், மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினரும் நல்ல வழக்கறிஞருமான நண்பர் துரைமுருகன் அவர்களும் நல்ல இரண்டு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். நந்தனார் பள்ளி என்பதும், விடுதி என்பதும், நந்தனார் மடம் என்பதும், நந்தனார் கல்விக் கழகம் என்பதும் வெவ்வேறானவை என்பதை அருமை சகோதரர் உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதோடு, அது யார் காலத்திலே நடந்ததாக இருந்தாலும் சரி, குற்றம் என்பது குற்றம்தான் என்று நான் ஒப்புக் கொள்கிறேனே தவிர, அது யார் காலத்திலோ நடந்தது என்பதற்காக, மறைக்கவோ, தடை சொல்வதற்கோ, விட்டு விடுவதற்கோ ஒரு காலமும் நான் விரும்பாதவன் என்பதை, அருமை சகோதரர் நல்ல வழக்கறிஞர்—விவாதத்திலே நம்பிக்கையுள்ளவர் என்ற முறையிலே நிச்சயமாக நான் சொல்வதை நம்புவார் ஏற்றுக்கொள்வார் என்று நம்புகிறேன்.

(பிற்பகல் 1-00)

நான் இதை ஏன் சொல்கிறேன் என்றால் தேர்தல் முறையில் யார் ஆட்சிக்கு வந்தாலும் தேர்தல்கள் முடிந்த பிறகு நாம் போடுகிற திட்டங்கள் நாட்டு மக்களுக்கு நல்லது பயக்குகிறதா என்று பார்க்கவேண்டும். யார் தவறு செய்கிறார்கள், அரசியல்வாதிகள் தலையிடுகிறார்களா, அதிகாரிகள் தலையிடுகிறார்களா என்று பார்க்கவேண்டும். யார் தவறு செய்தாலும், எந்த அதிகாரிகள் தவறு செய்தாலும் தயவுதாட்சண்யம் இல்லாமல் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும், அப்படிப்பட்டதொரு நிலையை ஏற்படுத்தாதவரையில் அது அரசுக்கும் நல்லதல்ல, திட்டங்களும் நல்லமுறையில் மக்களுக்கு பலன் அளிக்காது என்பதைத்தான் சொல்லிக்கொள்ளவிரும்புகிறேன்.

ஆதி திராவிடர், திராவிடர் என்ற கருத்தைப் பற்றிச் சொல்ல நான் விரும்பவில்லை. இப்போது கூட ஹரிஜனங்களை ஆதி திராவிடர் என்று மாற்றியிருப்பதில் எனக்கு சந்தோஷமும் இல்லை, சங்கடமும் இல்லை. அந்த மக்களுக்குக் கிடைக்கவேண்டிய நல்லவைகள் கிடைத்தால் எந்த ஆட்சியாக இருந்தாலும் அதை வாழ்த்த நான் கடமைப்பட்டவன். அந்த முறையில்தான் சொல்கிறேன். குற்றங்குறைகளை கட்சிக்கண்ணோட்டம் இல்லாமல் களைய வேண்டும்.

வேளாண்மைத் துறை பொறுத்து, ஐந்து ஏக்கர்களுக்குக் குறைவாக இருப்பவர்களுக்கு வரி ரத்து செய்வது, உதவி கொடுப்பது, கடன் சலுகைகள் தருவது என்ற முறைகளை நாம் நிச்சயமாக கையாளவேண்டும் என்பது



1982 மார்ச் 8] [திரு. எல். இளையபெருமாள்]

என் வேண்டுகோள். அதேபோல் விவசாயத் தொழிலாளர்கள், தச்சர்கள், கருமான்கள், உழவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். சேலம், கோவை போன்ற இடங்களை எடுத்துக்கொண்டால் இணற்றுப்பாசனத்திற்காக, தோல் பதப்படுத்தி சால் தைத்தும் தொழில் செய்பவர்கள் ஆயிரக்கணக்கான குடும்பங்கள், நிலமற்ற ஏழைகளாக, தினக் கூலிகளாக இருக்கிறார்கள். விவசாயத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் கொடுப்போம் என்று சொன்னார்கள். சேலம், கோவை போன்ற பகுதிகளில் கூட அது இன்னும் கிடைக்கவில்லை. ஆகவே அது கிடைக்கச் செய்ய ஆவன செய்ய வேண்டும்.

வேலையற்ற நாட்களுக்கு விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களாக இருந்தால் அவர்களுக்கு குறைந்தபட்ச உதவி செய்வோம் என்று சொன்னோம். இன்றுவரை நாம் அதைச் செய்யவில்லை.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்கள் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. ஐந்து ஏக்கர்களுக்குக் குறைந்த குத்தகைதாரர்களுக்கு, கோவில் நிலம் உள்ளவர்களுக்கு இவர்களுக்கு வெள்ளத்தால் ஏற்பட்ட சேதத்திற்காக என்ன உதவியை இந்த அரசு செய்தது என்பது பற்றி இந்தக் குறிப்பில் கூறப்படவில்லை. அவர்களுக்கு உதவி செய்வதற்கு இந்த அரசு தயங்கக் கூடாது.

உலக வங்கி மூலம் கிட்டத்தட்ட ரூ. 36.48 கோடி பெற்றிருக்கிறார்கள். ஆனால் உலக வங்கி பற்றி குறையும் சொல்லலாம், சந்தோஷப்படவும் செய்யலாம். ஆனால் வாங்கப்பட்ட பணம் ஒழுங்காகச் செலவழிக்கப்பட்டிருக்கிறதா என்று பார்க்கவேண்டும். நாம் கடன்கார நிலையில் இருக்கிறோம். மக்கள் தொகை அதிகமாகிக்கொண்டிருக்கிறது. தொழில் முன்னேற்றம் இல்லை. விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஏழை மக்கள் ஒருவேளை ஆகாரம் கூட இல்லாமல் பட்டினி கிடக்கிறார்கள். இந்த அவலநிலையில் வாங்கப்பட்ட கடன் ஒழுங்காகச் செலவு செய்யப்படுகிறதா என்று பார்க்கவேண்டும். 1981-ல் முதல் கட்டமாக எட்டு மாவட்டங்களிலும் 1982-ல் இரண்டாவது கட்டமாக வேலை தொடங்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த எட்டு மாவட்டங்களில் நாம் வாங்கிய அந்த கடன் பணத்தால் கொடுத்த திட்டங்கள் என்ன ? அதற்காக ஏற்பட்ட நிர்வாகச் செலவு என்ன ? அப்படி செலவு செய்யப்பட்டதால் விவசாயத் துறையில் காணப்பட்ட முன்னேற்றம் என்ன ? இவைகளைப் பற்றிய விவரங்களை எல்லாம் கொடுத்திருந்தால் அரசு கவனமாகக் கண்காணித்துக் கொண்டிருக்கிறது என்பதோடு கூட கடன் வாங்கிய பணத்தை ஒழுங்காகச் செலவு செய்து வருகிறது என்று மகிழ்ச்சியடைய முடியும். ஆனால் அதைப் பற்றி எதுவும் இந்தக் குறிப்பில் இல்லை.

[திரு. எல். இளையபெருமாள்] [1982 மார்ச் 8

அதேபோல் பஞ்சாயத்து யூனியன் எல்லைகளில் வேளாண்மைத் தொழில் களுக்கு உதவி செய்ய கமிஷனருக்கு பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது கிராம உத்தியோகஸ்தர்கள் இல்லை. கிராம வேலைகளைக் கவனிக்க ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களை நியமித்திருக்கிறார்கள். ஆனால், அந்த ரெவின்யூ இன்ஸ்பெக்டர் 20 கிராமங்களைச் சுற்றிப் பார்க்கவேண்டும். கலைக்டர் ஆபிசிலே இருந்தும், தாலுகா ஆபிசிலே இருந்தும் அந்த ரெவின்யூ இன்ஸ்பெக்டர் போடப்படுவதால், அவருக்கு மதுரா என்பது என்ன? வட்டம் என்பது என்ன? ஹாம்லெட் என்பது என்ன? அது எங்கே இருக்கிறது? என்பதைத் தெரிந்து கொள்வதற்கு கஷ்டமாக இருக்கிறது. தவிர, அவர் 20 ஊர்களைச் சுற்றிப் பார்ப்பதற்கு வாகன வசதி கிடையாது; படி இல்லை; தனிப்பட்ட சம்பளம் கொடுக்கப்படவில்லை. எனவே, அவர் இந்த 20 கிராமங்களைச் சுற்றிப் பார்த்து, அங்கே நிலைமை எப்படி இருக்கிறது என்பதைப் பார்க்கமுடியாத ஒரு அவல நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட அவல நிலை இருக்கும்போது, மாவட்ட ரீதியாக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தை எப்படி அதிகாரிகள் செலவிட்டார்கள் என்ற குறிப்பு இங்கே இல்லாமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்கதாகும்.

பஞ்சாயத்து ஒன்றியங்களில் இருக்கின்ற கமிஷனர், அவர்கள்கீழ் இருக்கும் அக்ரிகல்சர் எக்ஸ்டென்ஷன் ஆபீசர்கள், அவர்கள்கீழ் இருக்கின்ற டெபுடி கிராம சேவக்குகள், அவர்களுக்கு கீழ் அவர்களிடம் கடன் வாங்குவதற்காக கொடுக்கப்பட்ட மனுக்கள்—அவர்கள் தயாரிக்கின்ற திட்டம், இஷ்டப்பட்டால் கொடுக்கலாம், கொடுக்காமல் இருப்பதற்கான வாய்ப்பும் இருக்கிறது. எல்லோரையும் இதிலே நான் குறைசொல்லவில்லை. இந்தக் குறைகள் இருக்கின்றன. அவைகளை நீக்குவதற்கு நீங்கள் துரிதமாகச் செய்வதற்கு, என்ன திட்டங்களை நீங்கள் வைத்திருக்கிறீர்கள் என்பதற்கான ஆதாரக் குறிப்பு இதிலே இல்லை. அமைச்சர் அவர்கள் இவைகளுக்கெல்லாம் பதில் சொல்லுகிறபோது, என்ன நிலையில் விளங்குகிறது? எப்படியெல்லாம் முன்னேற்றம் அடைந்திருக்கிறது? என்பதைச் சொல்லவேண்டும். பஞ்சாயத்து ஒன்றியத்திலே இருக்கின்ற கமிஷனரோடு நின்றுவிடுகிறதா? ஏதோ பணம் வருகிறது, ஏதோ செலவாகிறது, ஏதோ கணக்கு எழுதப்படுகிறது, ஆடிட்டர்கள் வவுச்சரை செக் செய்கிறார்கள் என்ற எண்ணத்திற்கு இடம் கொடுக்காமல், வாங்கிய கடன் தொகையை வேளாண்மைக்கு, உணவு உற்பத்திக்கு செலவிடப்படுகிறதா என்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் பதில் சொல்லவேண்டும். இவைகளையெல்லாம் கலைக்டரிடம் ஒப்படைப்பதில் பிரயோஜனமில்லை. கலைக்டருக்கு எத்தனையோ வேலைகள் இருக்கின்றது; தாசில்தாருக்கு எத்தனையோ வேலைகள் இருக்கின்றன. அத்தனை வேலை களையும் அவர்கள் பார்த்துக்கொண்டு, இந்தக் கணக்கு பார்க்கின்ற



1982 மார்ச் 8] [திரு. எல். இளையபெருமாள்]

வேலையையும் வேலை நடந்ததா, இல்லையா என்ற வேலையையும், பார்க்க வேண்டிய அவலநிலை இருப்பதால், ஒரு மாவட்டத்திற்கு ஒருவரை அந்த வேலைகளை நேரடியாகப் பார்த்து, தவறுகளைக் கண்டுபிடிப்பதற்கு, ஒரு பிளையிங் ஸ்குவாட் போன்ற ஒன்று இத்தகைய நிலைமைகளையெல்லாம் கண்டுபிடித்து, சரியாக உங்களுக்கு நேராக சொல்லுகின்ற ஒரு அமைப்பை நீங்கள் உருவாக்கிக் கொள்ள வேண்டும். காரணம், கமிஷனருக்கு கீழே உள்ள பஞ்சாயத்து போர்டு இப்போது இல்லை; பஞ்சாயத்து தலைவர் இல்லை; கிராமமக்கள் சொல்லும் குறைகளைக் கேட்க அனுபவ ரீதியாக கணக்குப் பிள்ளை, மணியக்காரர் இல்லை. புதியதாக அமர்த்தப்பட்டுள்ளவர்களிடம் நிலைமையைச் சொல்லவேண்டிய ஒரு நிலைமையை உருவாக்கினால், அது சரியல்ல. அதையெல்லாம் செய்வதற்கு ஒரு அமைப்பை ஏற்படுத்தினால் தான், இந்தப் பணம் பாழ்படாமல், நல்ல நிலையில் இருக்கிறது என்ற ஒரு பெருமிதம் உங்களுக்கு ஏற்படும்.

அதேபோல, நீர்ப்பாசனம். அதேபோல, காடு வளர்ப்பு. இவை எல்லாம் சேர்ந்து வேளாண்மைத் துறையிலே வருகிறது. ஆனால், அமைச்சர்கள் வேறு வேறாக இருக்கிறார்கள். 1893 ஆம் ஆண்டு மேட்டூர் டாம், காட்டுமன்னார்குடி தாலுகா ஹெட் குவார்ட்டர்ஸில் ஒரு காட்ச்மென்ட் ஏரியா என்று அப்போது ரிக்கார்டில் இருக்கிறது. ஆனால், இன்றைக்கு அந்த ஏரியாவில் ஏராளமான, ஆயிரக்கணக்கான வீடுகள், மெத்தை வீடுகள் எல்லாம் கட்டியாகி விட்டது. ஆனால், இன்னும் அந்த ரிக்கார்டு திருத்தப்படவில்லை. ரெவின்யூ அமைச்சரைக் கேட்டால் பதில் சொல்லுவார்; நீர்ப்பாசனத் துறை அமைச்சரைக் கேளுங்கள் என்று. நீர்ப்பாசனத் துறை அமைச்சரைக் கேட்டால், வேளாண்மைத் துறை அமைச்சரைக் கேளுங்கள் என்று. வேளாண்மைத் துறை அமைச்சரைக் கேட்டால், அது நீர்ப் பிடிப்பின் கீழ் வருகிறது என்று. ஆகவே, அமைச்சர்களிடம் மட்டுமல்ல; அதிகாரி களிடையேயும் ஒரு கோ-ஆர்டினேஷன், கோ-ஆபரேஷன் என்ற நிலைமையில் உயர்மட்ட அதிகாரிகளை ஒன்றுசேரச் செய்து, அமைச்சர்களுக்கு சவுகரியப் பட்டால் நீங்களும் கலந்த முறையில் கலந்தாலோசித்து, விவசாயம், வேளாண்மைத் தொழிலுக்கு பல உதவிகரமான திட்டங்களைப் போட்டு, வெற்றிபெறச் செய்யவேண்டும். அல்லது வேலை வாய்ப்பு கொடுப்பது அல்லது உணவு உற்பத்தியைப் பெருக்குவது போன்ற காரியங்களிலே வெற்றி பெறாது.

இடையிலே பல தவறுகள் காணப்படுகின்றன. குறிப்பாக, ஒரு உதாரணத்தைச் சொல்கிறேன். இப்போது காட்டுமன்னார்குடி தாலுகா, விருத்தாசலம் தாலுகா, திண்டிவனம் தாலுகா ஆகியவைகளில் கடந்த 25 ஆண்டுகளாக விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். அது

பி.டபிள்யூ.டி. ஏரியாவைச் சேர்ந்தது. ஆயிரம் ஏக்கர் நிலத்தையுடைய ஒரு
மிராசுதார் 15 வருஷங்களாக பயிர் செய்து வந்தபோது,
தென்படவில்லை. ஆனால், அவசரச் சட்ட காலத்திற்குப் பிறகு, அந்த ஏரியா
பின்தங்கிய மக்கள், ஆதி திராவிட மக்கள், மலைவாழ் மக்கள் ஏழை
அவர்கள் பயிர் செய்கின்றபோது, திடீரென்று அந்த அதிகாரிகளுக்கு அதிலே
நல்லதொரு உணர்வு வந்து, அவர்களுக்கு கொடுக்கக் கூடாது என்றார்கள்.
உடனே, காட்டிலாகா, அங்கே காட்டை உண்டாக்கினால் நாடு நலம் பெறும்
என்று சொல்லி, மரங்களை நடுங்கள் என்று அவர்கள் சொன்னார்கள்.
ஆகவே, காட்டிலாகா ஒரு பக்கம்—அந்த காட்டிலாகா நல்லெண்ணத்தோடு
தான் அவர்கள் செய்கிறார்கள். ஆனால், அங்கே காடு அழிக்கப்பட்டது
உண்மைதான். சில அரசியல்வாதிகள் மறைந்தோ, மறைமுகமாகவோ,
தெரிந்தோ, தெரியாமலோ தலையிட்டதன் காரணமாக அந்தக் காடுகள்
அழிக்கப்பட்டன. அப்படிப்பட்ட நேரத்தில், நிலமற்ற ஏழைகள், மலைவாழ்
மகன், ஆதி திராவிட மகன் பயிர்செய்ய முற்படுகிறபோது, வெளியேற்றப்
படுகிறார்கள். நான்கூட ஆதி திராவிட, மலைவாழ் மக்களுக்காக ஸ்டே
வாங்கிக் கொடுத்தேன். ஆனால், விசாரித்தேன். ஸ்டே ஆர்டர் கொடுத்தாலும்,
மகசூல் அழிக்கப்பட்டது. மக்களுக்கு பயன்படாத நிலை இருக்கிறது.
இதற்கெல்லாம் காரணம் என்ன? வன இலாகாவை வைத்திருப்பவர்களும்,
வேளாண்மைத் துறையில் இருப்பவர்களும், நீர்ப்பாசன துறையில் இருப்பவர்
களும் ஆக மூவரும் சேர்ந்து இன்று விவசாயிகளுக்கு தேவை தானா, என்று
கலந்து கொள்ளாத ஒரு அலட்சியப்போக்கால் தான் இப்படிப்பட்ட
நிலைமைகள் வருகின்றன. மக்களுக்கு உணவு உற்பத்திக்கு நீங்கள்
எண்ணுகிற அளவிற்கு உற்பத்தி செய்யமுடியாத அவல நிலையில்
இருக்கிறீர்கள். ஆகவே வருங்காலத்திலாவது இதை கவனிக்க வேண்டும்.

(பிற்பகல் 1-10)

வன இலாகா 'பி' ரிசர்வேஷன் பாரஸ்ட் என்று சொல்கிறார்கள்.
கள்ளக்குறிச்சியிலேயிருந்து கடலூர் வருகிற ரோட்டிலே வெறும் முட்செடிகள்
இருக்கிறது. 1898-ல் யாரோ வெள்ளைக்காரன் காலத்தில் காட்டிலாக்கா என்று
சொன்ன ஒரே காரணத்திற்காக காடு, காடு என்று சொல்லிக்கொண்டு
பயிரிடுபவர்களை வெளியேற்றுவதும், வசதியுள்ள மனிதன், அரசியலில்
இளையபெருமாள் எனக்கு செல்வாக்கு இருப்பதை வைத்து 10 ஏக்கர்
வாங்குவதும் போன்ற அவல நிலைமை எல்லாம் இருக்கிறது; இவற்றை
அரசாங்கம் கவனிக்க வேண்டும். இப்படிச் சொல்வதினால் யார் என்று
கேட்டாலும் நிச்சயமாக நான் கொடுப்பேன். அரசாங்கத்திற்கு முடியவில்லை
என்றால் நான் பேசியதற்கு ஆதாரம் கொடுக்க எப்போதும் தயங்க மாட்டேன்.





நான் புரிந்து கொள்ளாமல், விவரம் இல்லாமல் இதுவரையில் சொல்லவில்லை, இனிமேலும் சொல்ல மாட்டேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். யாரோ பி-ரிசர்வ்ட் பாரஸ்ட் என்று சொன்னதை வைத்துக் கொண்டு ஏழை எளியவர்களை அவலநிலைமையில் விடக்கூடாது. கோயம்பத்தூரிலே இப்படி, நீலகிரி ஜில்லாவிலே இப்படி தான். இந்த இடங்களிலே உணவு உற்பத்தியை பெருக்குகிறவர்கள் இதிலே விவசாயம் செய்து கொண்டு வந்தார்கள். மலை வாழ் மக்களுக்கு சேர்வராயன் மலையிலும், கொல்லி மலையிலும் நாம் செய்ய வேண்டுமென்று திட்டம் இருந்தும் கூட அங்கே இருக்கக்கூடிய நிர்வாக எந்திரங்களிலே இருக்கக்கூடியவர்கள் விருப்பு வெறுப்பின் காரணமாக செய்கிற பாதகத்தினால் அங்கே இருப்பவர்களுக்கு, உண்மையான விவசாயி களுக்கு அவலநிலை ஏற்பட்டிருக்கிறது. இதை அரசாங்கம் கவனித்து செய்ய வேண்டும்.

அதைப்போல 1981-ல் யூரியா என்று நாம் சொல்லியிருக்கிறோம். 13 ஆவது பக்கத்திலே குறிப்பிட்டிருக்கிறார்கள். உணவு உற்பத்தி செய்கிறவர்களுக்கு, அவர்களுடைய விளைபொருள்களுக்கு நியாயமான விலை கிடைப்பதில்லை. அரசாங்கம் கொடுக்கிற உரத்திற்கு ஒரு உதவியில்லை. அதை 25 சதவீதம் என்று கொடுக்கிறார்கள். அது ஒருசிலருக்கு, செல்வாக்கு உள்ளவர்களுக்கு. ஒரு மூட்டை என்று வைத்துக்கொண்டால் 100 ரூபாய் என்று விற்கிற நிலைமை இருக்கிறது. குவிண்டாலுக்கு 140, 147 என்று; விவசாயிகள் கேட்பது 150 ரூபாய்; மத்திய சர்க்கார், மாநில சர்க்கார் இடையில் பிரச்னைகளை தீர்வு காணாத நிலையில் இருக்கிறார்கள். எப்படி இருந்தாலும் 50 எம்.எம். மெட்ராஸ் படி உள்ள ஒரு மூட்டை விற்றால் சராசரியாக 90 ரூபாய் 100 ரூபாய் என்று விற்கலாம். யூரியா வாங்க வேண்டுமென்றால் 140, 150 என்று ஒரு நிலைமை இருக்கிறது. அது அரசாங்கத்தினுடைய உத்தரவில் கிடைத்தால் இந்த நிலை; அதை விட்டு வெளிமார்க்கெட்டிலே வாங்கினால் அது 150, 200 ரூபாய் என்று மூட்டைக்கு விலை ஆகிறது. ஒரு மூட்டை யூரியா இப்படி வாங்க வேண்டிய நிலை இருக்கிறபோது, அரசாங்கம் எதற்கெல்லாமோ செலவு செய்கிறோம். உணவு உற்பத்தியை செய்கிற அந்த விவசாயிகளுக்கு தேவை என்கிற நிலைமை வருகிறபோது ஒரு மூட்டை 100, 150 ரூபாய் என்றால் அதில் பாதி பங்கு விவசாயியும் பாதி பங்கு அரசாங்கம் மானியமாகவும் கொடுக்க வேண்டும். இப்போது நாம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் கொடுப்பது போதாது. அவர்கள் மிகவும்

[திரு. எல். இளையபெருமாள்] [1982 மார்ச் 8

அடுத்து உழவர் கல்வி என்று 15-ஆவது பக்கத்திலே குறிப்பிட்டிருக்கிறார்கள். உழவுத் தொழிலை செய்கிற மனிதனை சேர்த்து விடுவதில் நமக்கு ஆட்சேபணை கிடையாது. ஆனால் ஏனோ மிட்டாதார், மிராசுதார், என்று வருகிறார்கள், அவர்களும் விவசாயிகள் தான். ஆனால் வயலிலே இறங்காத விவசாயிகள். அவர்களில் எத்தனையோ பேர் படித்தவர்கள், புத்தகங்களைப் படித்து புரிந்து கொள்பவர்கள். ஆனால் அன்றாடம் உழவுத் தொழிலை செய்கிறவர்கள், சிறு விவசாயிகள் இந்த கல்வி முகாம்களில் சேர்ப்பதில் வருங்காலத்திலாவது நாம் அவர்களுக்கு 75 சதவீதம் என்று வைத்து, 25 சதவீதம் நிலச்சுவான்தார்கள் என்ற முறையிலாவது திட்டமிட்டு செயல்பட வேண்டும். அப்போது தான் உழுகின்ற மனிதனுக்கு கல்வி கிடைக்கும்.

அதைப்போலவே 17-ஆம் பக்கத்திலே நிலவள மேம்பாடு சிறு பாசனம் பற்றி சொல்லியிருக்கிறார்கள். கிராமங்களிலே சிறு சிறு குளங்கள், குட்டைகள் இருக்கின்றன. மதுரை, இராமநாதபுரம் ஆகிய ஜில்லாக்களிலே அவை அதிகமாக இருக்கின்றன. இந்த வருடம் நல்ல மழை இருக்கிறது. அந்த மாதிரி குளங்கள், குட்டைகளிலே நல்ல வசதியானவர்கள் வந்து இருந்து கொண்டு பட்டா செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் வசதி இல்லாதவர்கள் கேட்டால் அது குளம் புறம்போக்கு என்றும் குட்டைப் புறம்போக்கு என்றும் ஏரிப் புறம்போக்கு என்றும் பாசன இலாகாவைச் சேர்ந்தது என்றும் சொல்லி உண்மையாகவே கலப்பை எடுத்து உழுகின்றவனை வெளியே போகச் சொல்லக் கூடிய நிலைமை இருக்கிறது. வசதிபடைத்தவர்கள் அங்கே பட்டா வாங்கக் கூடிய நிலைமை இருக்கிறது. தஞ்சை, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களிலே இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன. இவைகளை யெல்லாம் வேளாண்மைத் துறையாக இருந்தாலும், பாசனத் துறையாக இருந்தாலும், வனத் துறையாக இருந்தாலும் எல்லோரும் ஒரு ஜாயிண்ட் கமிட்டியாக வைத்து இவற்றைக் கண்டுபிடித்து உண்மையாக உழைக்கக் கூடியவர்களுக்கு உதவி செய்யவேண்டும்.

அடுத்து 23, 24, 26, 28 ஆகிய பக்கங்களிலே பாசனத் திட்டங்கள் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். வேளாண்மை அமைச்சர் அவர்கள் சற்றுக் கோபமாக இருந்தாலும் மத்திய அரசு பாதி கொடுத்திருக்கிறார்கள் என்று உண்மையை மறைக்காமல்—(குறுக்கீடு)—சிரித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள், அவர்கள் இளையவர், சற்று கோபமாக இருந்தாலும் உண்மையை மறைக்காமல் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏரிகளைப் பொறுத்தவரையில் செம்பரம்பாக்கம் ஏரி, மதுராந்தகம் ஏரி, வீராணம் ஏரி, திருச்சி ஜில்லாவில் உள்ள பொன்னேரி இவைகள் எல்லாம் இருக்கின்றன. கொள்ளிடத்திலே



1982 மார்ச் 8] [திரு. எல். இளையபெருமாள்]

வெள்ள காலத்தின்போது நீர்வீணாகிறது. நான் பாசனத் துறை அமைச்சர் அவர்களிடத்திலேகூட சொன்னேன். திருச்சி ஜில்லாவிலே தஞ்சை ஜில்லாவிலே, தென் ஆற்காடு ஜில்லாவிலே உள்ள எஞ்சினியர்களை, அதிகாரிகளை அழைத்துப் பேசுகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அமைச்சர்களும் கலந்துபேசி சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளை அழைத்துப் பேசி எங்கே வெள்ள காலத்தில் தண்ணீர் வீணாகிறது என்ற கணக்கை எடுத்து அதைப் பயன்படுத்தக்கூடிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். கொள்ளிடத்திலே வருஷாவருஷம் தண்ணீர் வீணாகிறது. லோயர் அணைக்கட்டிலே லட்சக்கணக்கான ஏக்கர் நிலத்திற்குப் பயன்படுத்தக்கூடிய முறையிலே தண்ணீரை தேக்கிவைக்கலாம், இன்றைக்கு அந்த தண்ணீர் பாழாகிறது. அது எந்த கட்சி ஆட்சியாக இருந்தாலும், முன்னாலே இருந்த ஆட்சிகள் காங்கிரஸ் ஆட்சி, தி.மு.க. ஆட்சி என்ற பிரிவினைக்குள்ளே நான் போகவில்லை, செய்யாவிட்டாலும் மக்களிடத்திலே அதிகமான ஓட்டுக்களை வாங்கி வந்திருக்கிறீர்கள். நீங்கள் உங்கள் கடமைகளிலே ஒன்றாக இதை நிறைவேற்றினால்—அவர்கள் காலம், இவர்கள் காலம் என்று பார்க்காமல் ஆதி திராவிடர் பாரம்பரியம், ஆரியர் பாரம்பரியம் என்று பார்க்காமல் திராவிடர் பாரம்பரியம் என்று பார்க்காமல் அழகான வார்த்தைகளைக் கொண்டு நீண்டநாட்களாக மக்களை ஏமாற்றமுடியாது—மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும். கொள்ளிடத் தண்ணீரை கொட்டான்கருப்பு என்ற இடத்திலே டைவர்ட் செய்தால் பொன்னேரியில் 150 ஏக்கர் தேக்கினால் பாசனத்திற்குப் பெரிதும் பயன்படும். கடந்த கால ஆட்சிகளின் போது இந்த சீர்திருத்த வேலைகளைச் செய்யவேண்டுமென்று யாரும் சொல்லவில்லை என்றாலும்கூட இப்போது அரசு இதை கவனிக்கவேண்டும். தமிழ் மாநாடு நடத்துகிறோம் ஆட்சேபணையில்லை, கோடிக்கணக்கான ரூபாய் செலவிடுகிறோம், உணவு போடுகிறோம் என்பதற்காக கோடிக்கணக்கான ரூபாய் செலவிடுகிறோம். உணவு உற்பத்தி செய்யக்கூடிய காரியத்திற்கு உதவுகின்ற எவ்வளவோ கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்கிறோம். அதிலே அக்கறை காட்டினால் தான் உணவு போடமுடியும். வீராணம் ஏரியாக இருந்தாலும், செம்பரம்பாக்கம் ஏரியாக இருந்தாலும் அவைகளை ஆழப்படுத்தி நல்ல நிலைமையை உருவாக்க முடியும்.

உணவு வகைகளிலே பருப்பு வகை முக்கியமானது. டாக்டர் வெங்கடேசன் என்பவர் ஆராய்ச்சி செய்து கோயில்பட்டியிலே குழந்தைகளுக்கு கண்பார்வை மங்கிப் போனதற்கு அற்றுப்போனதற்குக் காரணம் ஊட்டச் சத்துணவு, பருப்புச் சத்துக் குறைவு என்று சொல்லியிருக்கிறார்கள். நம் நாட்டிலே உலகத்திலே பருப்பு வகைகள் அதிகமாக உற்பத்தியாகவில்லை,

உற்பத்தியாகிறது, ஆகவே பருப்பு உற்பத்திக்கு உதவித்தொகை அல்லது மானியம் கொடுக்கவேண்டும். உற்பத்தியாகிற இடம் மானாவாரி, புஞ்சை என்பது நம்முடைய வேளாண்மை துறை அமைச்சர் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்தவர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். நிச்சயமாகப் புஞ்சைப் பகுதிகளிலே, மழையற்றப் பகுதிகளிலே விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் அவல நிலைமை உண்டு. எனவே, ஏதாவது சந்தர்ப்பம் வரும் நேரத்தில் இந்தப் பருப்பு வகைகளை நாம் உற்பத்தி செய்யவேண்டும். வட மாநிலங்களில் போய் பருப்பு வாங்க வேண்டிய நிலையிருக்கிறது. தென் மாநிலங்களிலே, அதுவும் குறிப்பாகத் தமிழகத்திலே புஞ்சை வாரியுள்ள இடங்களில் எல்லாம் ஒரு தனித் திட்டத்தை உருவாக்கி எங்கெல்லாம் உண்டாக்க முடியுமோ அங்கெல்லாம் உண்டாக்குவதற்கு முயற்சிக்க வேண்டும். இதற்காக ஐந்து கோடி ரூபாய் செலவானாலும் கூட தமிழகம் முழுவதும் இப்படி ஒரு நல்ல நிலைமை உருவாக்கினாலொழிய பருப்பு வகைகளிலே நினைக்கின்ற ஊட்டச் சத்துக்களை உருவாக்க முடியாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். நான் குறிப்பாக அமைச்சரவர்களிடம் கேட்டுக் கொள்ள விரும்புவதானது முக்கியமாக . . .

(பிற்பகல் 1-20)

**திரு. கே. தனுக்கோடித் தேவர் :** துணைத் தலைவரவர்களே, வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள் மதுரை மாவட்டம் என்று சொன்னார்கள். நாங்கள் நினைத்துக்கொண்டிருக்கிறோம், எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்று.

**திரு. எல். இளையபெருமாள் :** தெரியும் என்ற கருத்தில்தான் சொன்னேன். அவர் எந்த மாவட்டம் என்பதற்காகச் சொல்லவில்லை. தமிழகத்திற்கே அவர் அமைச்சர். ஆகவே, இந்தப் புஞ்சல் பகுதியில் ஏழை எளிய விவசாயிகளுக்கு மானியமாகக் கொடுக்க வேண்டும்; சிறிய விதைகள் கொடுக்க வேண்டும்; ஓய்வூதியம் கொடுக்க வேண்’ம்; ஐந்து ஏக்கர்களுக்கு உட்பட்ட சிறு விவசாயி களுக்கு மானியம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண்மைத் துறைக்கு வேண்டிய கருவிகளை இன்னும் இறக்குமதி செய்ய வேண்டிய அவல நிலையில் நாம் இருக்கிறோம். நாம் இயந்திரங்களை இறக்குமதி செய்வதில் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. எத்தனை தேவையோ அத்தனையையும் இறக்குமதி செய்ய அரசாங்கம் முன்வர வண்டும்.

அதுமட்டுமல்லாமல், ஐந்து ஏக்கர்களுக்குள்ளே உணவு உற்பத்தி செய்யக் கூடியவர்களுக்கு பெரிய டிராக்டர்களாக இல்லாமல் சிறு கருவிகளை, கையால்



உழுகின்ற சிறு டிராக்டர்களை இறக்குமதி செய்தோ அல்லது வசதி வாய்ப்பு இருந்தால் நாமே உற்பத்தி செய்தோ கொடுத்து சிறு விவசாயிகள் பயன் படுத்திக்கொள்ளும் நிலைமைகளை உண்டாக்க வேண்டும்.

கடைசியாக நான் சொல்லிக்கொள்ள விரும்புவது காய்கறிகள் பற்றியது. அழுகும்பொருளான காய்கறிகளை உற்பத்தி செய்பவர்கள் கிராமத்து மக்கள், சிறு விவசாயிகள். இவைகளையெல்லாம் நகரங்களுக்கு, நம் போன்ற எம்.எல்.ஏ., எம்.பி.-க்களுக்கு, மந்திரியாக இருக்கின்றவர்களுக்கு அந்த ஏழை மகன் தான் உற்பத்தி செய்து கொடுக்கிறான். ஆனால் சின்னச்சின்ன சிற்றூர்களில் உற்பத்தி செய்வதால் அதை மெயின் ரோட்டிற்குக் கொண்டு வருவதற்கு வசதி வாய்ப்புகள் இல்லை. மெயின் ரோடுகளிலிருந்து அந்த நகரப் பகுதிகளுக்கு வருவதற்கான வாய்ப்பு வசதிகள் இல்லை. இந்த மாதிரி சௌகரியங்களை அவனுக்கு அரசு செய்து அதற்குரிய கட்டணத்தை வாங்கிக்கொண்டால் அழுகுகின்ற பொருள்களை அழியாமல் காப்பாற்ற முடியும். அவ்வாறு செய்தால் தோட்டத்தில் உற்பத்தி செய்கின்றவனுக்குத் தரமான விலைகள் கிடைக்கும். மக்களுக்கும் புதிய காய்கறிகள் கிடைக்கின்ற சூழ்நிலை உண்டாகும்.

சூப்பர் மார்க்கெட்டில் காய்கறிகளை விற்பனைக்கு விட்டோம். ஆனால் யாரோ ஒருவர் செய்த தவறின் காரணமாக, ஒரு கேடான காரியத்தைச் செய்து விட்டார் என்பதால் அத்தனையிலும் நஷ்டம் வந்துவிடும் என்ற கணக்கைக் காட்டி அதை நிறுத்துகின்றார்கள். எத்தனை தொழில்களுக்கு அரசாங்கம் எந்தத் திட்டத்தைச் செய்தாலும் நிர்வாகத்தில் இருக்கின்றவர்கள் மனச்சாட்சியோடு செய்தாலொழிய உங்கள் திட்டங்கள் ஒருநாளும் வெற்றி பெறாது. உங்கள் திட்டம் வெற்றிபெறாததற்குக் காரணம் அரசியல்வாதிகளாக இருக்கின்ற நாம் எம்.எல்.ஏ., எம்.பி.-க்களாக இருக்கின்ற நாம் திட்டத்திலே நம்பிக்கையும், திட்டத்திலே இலஞ்ச ஊழலை ஒழிப்பதற்கான எண்ணத்தையும் கொண்டு செயல்பட வேண்டும். அவ்வாறின்றி ஓட்டுக்களை எண்ணிக் கொண்டிருக்கின்ற காரணத்தினால் திட்டங்கள் பாழ்படுகின்றன என்பதை நினைத்து வருங்காலத்திலாவது இவைகளை வெற்றிகரமாக ஆக்குவதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும் எனக் கேட்டு இந்தச் சந்தர்ப்பத்தைத் தந்ததற்காக நன்றி கூறி என்னுடைய வார்த்தைகள் முடிக்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று மாலை 4-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

*பின்னர் பேரவை பிற்பகல் 1-23 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

மாலை 4-05 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

**திரு. எம். அண்ணாதாசன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் நிதிநிலை அறிக்கைக்கு உட்பட்ட வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின்மீது ஒருசில கருத்துக்களை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இங்கே பேசுவதற்கு வாய்ப்பு தந்தமைக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மாமன்றத்திலே, இன்றையதினம் வேளாண்மை மானியத்தின்மீது, உரை நிகழ்த்திய இரண்டு மூன்று சட்டமன்ற உறுப்பினர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவரின் தலைமையிலே நடந்து கொண்டிருக்கிற இந்த அரசு விவசாயிகளுக்கு எந்த விதமான ஒரு நல்ல திட்டத்தையும் செய்யவில்லை என்றதோடு, சொன்னதை அவர்கள் காப்பாற்றவில்லை, விவசாயிகளுக்கு நிறைவேற்றித் தரவில்லையென்ற குற்றச்சாட்டை இங்கே முன்வைத்தார்கள். நான் அந்த மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புவதெல்லாம்,

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்—வீணில்
உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்"

என்ற அந்த உயரிய, ஒப்பற்ற வீரச் சொற்களை இந்தத் தமிழகத்திற்குத் தந்து மறைந்த அந்தப் பெரியவர்கள் எல்லாம் இந்த நாட்டிலே உழவர் பெருமகன் உயர வேண்டுமென்ற கருத்தைச் சொல்லி, இந்த நாட்டிற்கு விடுதலைப் பெற்றார்கள் என்பதை இந்த நாடு அறியும். அதற்குப் பின்னாலே, இந்த நாட்டை ஆண்டு கொண்டிருந்தவர்கள் தேசிய வரலாற்றுக்குச் சொந்தக்காரர்கள் என்பதையும், அதற்குப் பின்னாலே, திராவிட முன்னேற்றக் கழகம் 7½ ஆண்டுக்காலம் இந்த நாட்டை ஆண்டது என்பதையும் நிச்சயமாக எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் மறக்கமாட்டார்கள் என்று கருதுகிறேன்.

இன்றையதினம் விவசாயிகள் மேல் அக்கறை காட்டி, விவசாயிகளுக்கு எந்தவித நன்மையும் செய்யவில்லையென்ற குற்றச்சாட்டை சாட்டுகிற அந்த மரியாதைக்குரிய உறுப்பினர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்,

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்—வீணில்
உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்

என்ற அந்தப் பாடலுக்கு ஏற்ப நீங்கள் ஆண்ட காலத்தில், அந்த விவசாயப் பெருங்குடி மக்களுடைய நலனில் நீங்கள் அக்கறை காட்டியிருப்பீர்களா? என்பதை இன்றைக்கு ஆண்டுக்கொண்டிருக்கிற அனைத்திந்திய அண்ணா.



திராவிட முன்னேற்றக் கழக அரசைக் குறை சொல்கிற நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படி நீங்கள் எண்ணிப் பார்த்திருப்பீர்களானால், கடந்த காலத்திலே, சில ஆண்டுகளுக்கு முன்னாலே, அல்லது, சில மாதங்களுக்கு முன்னாலே, இந்தத் தமிழகத்திலே விவசாயிகள் போராட்டம் என்ற மிகப்பெரிய போராட்டம் உங்களால் தூண்டப்பட்டோ அல்லது உங்கள் சார்பிலோ, வேறு ஒரு காரணத்தினாலே ஆரம்பிக்கப்பட்ட வரலாற்றை இந்த மன்றம் நன்றாக அறியும்.

மதிப்பிற்குரிய நாராயணசாமி நாயுடு அவர்கள், விவசாயிகள் மேம்பாடு அடைய வேண்டுமென்ற காரணத்தினாலே, பெரிய போராட்டத்தைத் துவக்கினார்கள். நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன், திராவிட முன்னேற்றக் கழகமும், அதற்கு முன்னாலே ஆண்ட இந்திய தேசிய காங்கிரசும், இந்த நாடு சுதந்திரம் பெற்று எத்தனை ஆண்டுகளைத் தாண்டியிருக்கின்றன என்பதைத் தயவுசெய்து மறந்து விடவேண்டாம். புரட்சித் தலைவர் ஆட்சி ஏற்பட்டு நான்கு ஆண்டுக் காலம்தான் தாண்டியிருக்கிறது என்பதை நீங்கள் மறந்து விடாதீர்கள். அதற்கு முன்னாலே நீங்கள் ஆண்டு கொண்டிருந்தீர்கள் என்பதை நிச்சயமாக மறக்க முடியாது. உங்களுடைய காலத்திலே விவசாயிகள்மீது அக்கறை காட்டியிருப்பீர்களா? கடந்த சில மாதங்களுக்கு முன்னாலே, துவக்கப்பட்ட மதிப்பிற்குரிய நாராயணசாமி நாயுடு அவர்களுடைய போராட்டம் எந்த அளவிற்கு வலுப்பெற்றது, எந்த நோக்கத்தில் வலுப்பெற்றது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

(மாலை 4-10)

இன்றைக்குக் கேட்டார் அல்லவா அந்தப் பெரியவர் அன்றைக்கே கேட்டிருப்பார் என்று நான் கருதினேன். ஏதோ ஒரு காரணத்திற்காக கேட்க வேண்டும் என்பதற்காக கேட்டாரே தவிர, வேறல்ல. புரட்சித் தலைவர் ஆட்சியிலே போராடத் தொடங்கியதைப்போல கடந்த 19 ஆண்டுகளில் அவர் தொடங்கினாரா என்றால் இல்லை. அல்லது அந்தப் போராட்டம் நடத்தி [illegible] குறிக்கோள் அந்தக் காலகட்டத்திலே இல்லையா. இந்த நாட்டிலே [illegible] விவசாயிகள் உழைத்துக் கொண்டுதான் இருக்கவேண்டுமா, அவனுடைய [illegible] மற்றவர்கள் சுரண்டிக் கொண்டுதான் இருக்கவேண்டுமா என்ற [illegible] கேட்பதற்கு அன்று இடம் இல்லையா . . .

**திரு. மு. ப. முனுசாமி :** துணைத் தலைவர் அவர்களே, நாராயணசாமி நாயுடுவை திராவிட முன்னேற்றக் கழகந்தான் தூண்டிவிட்டது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது நாராயணசாமி நாயுடுவின் விவசாயச் சங்கம் இருந்ததா? இல்லையா? அன்றைக்கு இருக்கும்போது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தாண்டிவிட்டது என்பதை ஒப்புக்கொள்வாரா?

**திரு. எம். அண்ணாதாசன் :** துணைத் தலைவர் அவர்களே, நான் பேசுகின்றபோது திராவிட முன்னேற்றக் கழகம் தாண்டிவிட்டதா அல்லது வேறு வகையிலே அந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டதா என்று குறிப்பிட்டேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல, ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்கின்றேன் என்ற அந்த ஏற்றமிகு சொற்களை மறந்துவிட்டு, 7½ ஆண்டுகாலமாக, 20 ஆண்டு காலமாக எதை எதையோ செய்தவர்கள், ஏழை விவசாயிகள் ஏற்றம் பெறுவதற்கான எல்லா காரியங்களையும் செய்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பார்த்து, ஏழைகளுக்கு நீங்கள் என்ன செய்தீர்கள் என்று கேட்கிறார் . . .

**திரு. பெ. சு. திருவேங்கடம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் 7½ ஆண்டு காலம் ஆட்சியிலே இருந்ததாக சொன்னார்கள். ஒன்பது ஆண்டு காலம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்ததை அவர் மறந்துவிட்டாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. எம். அண்ணாதாசன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 7½ ஆண்டு காலம் கலைஞர் ஆண்ட காலத்தைச் சொல்கிறேன். ஒட்டு மொத்தமாக பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆண்டகாலத்தையும் நீங்கள் சேர்த்துக் கொள்வதாக சொன்னால் அதற்கு நான் துணையாக இருக்க முடியாது.

**திரு. மு. ப. முனுசாமி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கும் முதலமைச்சர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் உறுப்பினராக இருந்தபோது விவசாயிகளுக்கு எந்தக் காரியமும் செய்யவில்லை என்று குற்றம் சாட்டுகிறார்களே, அப்போது அவர் உறுப்பினராக இருந்தபோது எந்தவிதமான நல்ல காரியமும் செய்யவில்லை என்று இப்போது அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் ஒப்புக் கொள்வாரா ?

**திரு. எம். அண்ணாதாசன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வருவதற்கு முன்னால், இரண்டாவது முறையாக மக்கள் தேர்ந்தெடுப்பதற்கு முன்னாலும், அவர் அப்போது கொடுத்த வாக்குறுதிகளை நாங்கள் ஆட்சிக்கு வந்தால் விவசாயி களுக்குப் போட்டிருக்கின்ற கடனை, நடுத்தர விவசாயிகளுக்கும், ஏழை விவசாயிகளுக்கும் போடப்பட்டுள்ள கடன்களை ரத்து செய்வோம் என்று சொன்னார்கள்.





அதுமட்டுமல்ல. அவர்கள் கொடுத்த வாக்குறுதியை மீண்டும் அண்ணா சிலையின் முன்னாலே நின்று, சொன்னார்கள். எங்கள் ஆட்சிக் காலத்தில் 256 கோடி கடனை இந்த ஆட்சி ரத்து செய்யும் என்று சொன்னார்கள். நிச்சயமாக அதை மறுக்கவில்லை. சொன்ன வாக்குறுதியைக் காக்கின்ற வகையிலே புரட்சித் தலைவர் அரசு ஆரம்பகாலத்திலே 1980-81 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்றபிறகு இந்த நாட்டிலே வறட்சி ஏற்பட்டது, அதை மறந்து விடமுடியாது. இந்த வறட்சி ஏற்பட்ட நேரத்திலே இங்கே ஏற்பட்டு இருந்த சூழ்நிலையிலே, 1981-82 ஆம் ஆண்டு தொடக்கத்திலே பாதிக்கப்பட்ட எல்லோருக்கும், அதாவது முந்தைய ஆண்டைப்போல அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்த காரணத்தினால், அந்த வறட்சி காலத்திலே ஏற்பட்ட சூழ்நிலையைக் கருதி ரூபாய் 39 லட்சம் பெறுமான 2 ஆயிரம் டன் நெல்லையும், 100 டன் சிறு தானிய விதைகளையும் வாங்கி பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஆங்காங்கே இருக்கின்ற கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக விநியோகம் செய்தார்கள். இது சொன்ன வாக்குறுதியாகும். எவ்வளவு பெரிய சூழ்நிலை ஏற்பட்டாலும் சொன்னதைக் காப்பாற்றுவோம் என்பதை நிலைநாட்டிக் காட்டியிருக்கிறது இந்த அரசு என்பதை குறிப்பிடக் கடமைப்பட்டு இருக்கிறேன். 1981 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதி வரையில் செயல்படுத்தப்பட்ட திட்டத்தால் இலவசமாக வழங்குவதற்காக இந்த அரசு 39.84 லட்ச ரூபாய் செலவிட்டு இருக்கிறது என்பதை இங்கே நான் கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன். இந்த நிலை தொடர்ந்து 82 ஆம் ஆண்டிலே இருந்தாலும், அரசின் தீவிரமான நடவடிக்கைக் காரணத்தாலும், விவசாயிகளின் உற்சாக வேலைத் திறன் காரணத்தாலும் 1981-82 ஆம் ஆண்டில் உற்பத்தித் திறன் நிலைமைகள் என்னவாக இருக்கும் என்கிற தகவல்கள் நமக்குக் கிடைக்க இருக்கின்றன. அந்த வகையில் அரிசி 60 லட்சம் டன்னும், சிறு தானியங்கள் 22.80 லட்சம் டன்னும், பயறு வகைகள் 3.30 லட்சம் டன்களும், கரும்பு (வெல்லமாக) 22.70 இலட்சம் டன்களும், பருத்தி 4.80 இலட்சம் பேல்களும் என்கிற வகையில் இருந்தது என்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

1981-82 ஆம் ஆண்டில் வறட்சி நிலைமை இருந்ததால் சிறிது உற்பத்தியில் குறைவு இருந்தபோதிலும், அதனால் சோர்வு அடையாமல் இந்த நடப்பு ஆண்டில் அவசியம் உற்பத்தியை அதிகரிக்கவேண்டும் என்கிற அடிப்படையில் அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது. அடுத்த ஆண்டு நமக்குத் தேவைப்படும் இடுபொருள்கள், மூலப்பொருள்கள், ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு 1982-83 ஆம் ஆண்டிற்கு உற்பத்திக் குறியீட்டை அரசு நிர்ணயித்து, இந்த நிதிநிலை அறிக்கையிலும், மானியக்கோரிக்கையிலும் தெளிவுபடுத்தி யிருக்கிறது. அரிசி 68 இலட்சம் டன்கள், சிறு தானியங்கள் 23.60 இலட்சம்

டன்கள். பயறு வகைகள் 4.80 இலட்சம் டன்கள் கரும்பு (வெல்லமாக) 23.52 இலட்சம் டன்கள், பருத்தி 5.00 இலட்சம் பேல்கள் என்று உற்பத்தியைப் பெருக்கின்ற வகையில் திட்டங்கள் தீட்டப்பட்டு இருப்பதை இங்கே கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

இதை நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் உணவு உற்பத்தி செய்யும் விவசாயிகள் எந்த விதத்திலும் பாதிக்கப்பட்டுவிடக்கூடாது, அவர்கள் செய்யும் உற்பத்தி எந்த நிலையிலும் தாக்கப்பட்டு விடக்கூடாது என்கிற வகையில் இன்றைக்கு அரசாங்கம் விவசாயிகளின் நலனில் அதிக அக்கறை செலுத்திக் கொண்டு இருக்கிறது என்கிற அடிப்படையில் இந்தப் புள்ளி விவரங்களை இந்த மாமன்றத்தில் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்து இருக்கிறார்கள் என்பதை நாம் இங்கே மறந்து விடக்கூடாது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

உண்மையை எல்லா நேரத்திலும், எல்லோராலும் மறைத்து விடமுடியாது. அப்படி மறைக்க முற்பட்டால் அது முழுப்பூசணிக்காயை சோற்றில் மறைப்பது போல் ஆகும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். இங்கேயிருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் இதனை எல்லாம் படித்து அறிந்து இருக்கக்கூடும். அப்படி படித்துத் தெரிந்து கொண்டு இருக்கிற நேரத்திலும், இந்த அரசு என்ன செய்து விட்டது, இதிலே ஒன்றுமே இல்லை, விவசாயிகளுக்கு ஒன்றுமே செய்யவில்லை என்று எதிர்க்கட்சி நண்பர்கள் குறைசொல்கிறார்கள். நான் இந்த அவையிலும் அவர்களுக்குச்சொல்ல விரும்புவதெல்லாம் இந்த மாநில சர்க்கார் ஆளுநர் உரையில் சொல்லியிருக்கும் திட்டங்களை நிறைவேற்றிக் காண்பித்து இருக்கிறது.

**திரு. இரெ. இராசமாணிக்கம் :** பாயிண்ட் ஆப் ஆர்டர், சார். நான் பேசுகிறபோது அரசு சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்று சுட்டிக்காட்டி, அதற்கு உதாரணமாக கூட்டுறவு கடன்களை ரத்து செய்வோம் என்று மாண்புமிகு முதலமைச்சர் சொன்னார், ஆனால் தள்ளுபடி செய்யவில்லை, 250 கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்படும் என்று சொன்னார். அதுவும் செய்யப்படவில்லை என்று சொன்னேன். அதை இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் ஒப்புக்கொண்டு இருக்கிறார்கள். உண்மை என்று ஏற்றுக்கொண்டு, அதை அரசு நிறைவேற்றவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படியிருக்கின்ற நேரத்தில் எதிர்க்கட்சிக்காரர்கள் உண்மையை மறைக்கிறார்கள் என்று சொல்வது சரியல்ல. கூட்டுறவுக் கடன் ரத்து செய்யவில்லையே அதற்கு என்ன சொல்கிறீர்கள் என்று கேட்



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல. இந்தக் கருத்தை உங்கள் கட்சியின் உறுப்பினர் பேசுகின்ற நேரத்தில் தெரிவிக்கச் சொல்லியிருக்கலாம்.

(மாலை 4-20)

**திரு. எம். அண்ணாதாசன் :** மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கொடுத்த வாக்குறுதியை படிப்படியாக நிறைவேற்றி வருகிறார்கள். இந்த ஓராண்டு எட்டு மாதத்திற்குள்ளாக 250 கோடி ரூபாயை தள்ளுபடி செய்வோம் என்று சொன்னதில் 118 கோடி ரூபாய் சிறு விவசாயிகளுக்கும் நடுத்தர விவசாயிகளுக்கும் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, 90 கோடி ரூபாய்க்கு இந்த விவசாயிகளுக்கு சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. சிறு விவசாயிகளுக்கு நாங்கள் சொன்னோம்; வாக்குறுதி தந்தோம். அந்த அடிப்படையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு ஒரு குவிண்டால் நெல்லுக்கு 98 ரூபாய் என்று மத்திய அரசு நிர்ணயம் செய்திருந்த போதிலும் அதை 112 ரூபாயாக உயர்த்திக் கொடுத்தது. மத்திய சர்க்கார் குவிண்டாலுக்கு 112 ரூபாய் என்ற நிர்ணயம் செய்தபோது தமிழக அரசு, புரட்சித் தலைவர் அரசு 147 ரூபாய் என்று அறிவித்தது. ஆனால் மத்திய அரசு, நீங்கள் சொன்னதை எங்களால் ஏற்றுக் கொள்ள முடியாது என்று சொல்லிவிட்டது; மறுத்துவிட்டது. இதை எல்லாம் நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், நாங்கள் ஏழை எளிய விவசாயிகள் பக்கம் இருக்கிறோமா இல்லையா? அவர்களுக்கு தோழனாக இருக்கிறோமா அல்லது துரோகியாக இருக்கிறோமா என்பதை எடுத்துக்காட்டுவதற்காகத் தான்.

அது மட்டுமல்ல. சிறு விவசாயிகளுக்கு புரட்சித் தலைவர் அரசு சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்றுகின்ற வகையில் தமிழக அரசு அறிவித்தபடி மத்திய கால மாற்றுக் கடன்கள் தவணை நீட்டித்த மத்தியகால மாற்றுக் கடன்கள் மீதான சாதாரண வட்டி தள்ளுபடி செய்யப்பட்டது. அதனால் பயனடைந்த விவசாயிகள் 91,000 பேர்கள். அவர்களுக்கு அளிக்கப்பட்ட சலுகையின் மதிப்பு 3,37,18,000 ரூபாய்.

அது மட்டுமல்ல. விவசாய சேவை கூட்டுறவுச் சங்கங்களின் குறுகிய கால விவசாயக் கடன்கள் மீதான அபராத வட்டி தள்ளுபடி செய்யப்பட்டது. அதனால் பயனடைந்த விவசாயிகள் 3,04,000 பேர்கள். அவர்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகளின் மதிப்பு 1,40,20,000 ரூபாய்.

[திரு. எம். அண்ணாதாசன்] [1982 மார்ச் 8

அது மட்டுமல்ல. நிலவள வங்கிகளில் நீண்டகால விவசாயக் கடன்களின் மீதான அபராத வட்டி தள்ளுபடி செய்யப்பட்டது. அதனால் பயனடைந்த விவசாயிகள் 26,000 பேர்கள். அவர்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகளின் மதிப்பு 7,38,000 ரூபாய்.

அது மட்டுமல்லாமல். சிறு விவசாயிகளின் மத்திய கால மாற்றுக்கடன் வட்டியுடன் தள்ளுபடி செய்யப்பட்டது. அந்தவகையில் பயனடைந்த விவசாயிகள் 4,52,000 பேர்கள். அவர்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகளின் மதிப்பு 49,63,56,000 ரூபாய்.

செலுத்தப்பட்ட கடன்களை வட்டியுடன் அவர்களுக்கே திருப்பி அளித்த தொகை 23,58,77,000 ரூபாய். அதனால் பயனடைந்தவர்கள் 8,46,000 விவசாயிகள். ஒழுங்காக, தவணை முறையில் செலுத்தியவர்களுக்கு இந்த அளவுக்குத் தொகையை அவர்களுக்கே 1981 மார்ச் 31-ந்தேதி முடிய, திருப்பிக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இத்தகைய பல்வேறு சலுகைகளை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு அளித்திருக்கிறது ; கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றியிருக்கிறது.

இந்த நல்ல நேரத்தில் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களை என்னுடைய தொகுதி மக்களின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியாகிய திருவரும்பூர் தொகுதியில் உய்யக்கொண்டான் கால்வாயோடு இணைந்த குவளை வடிகால் இருக்கிறது. அந்த வடிகால் சரியாக இல்லாத காரணத்தால் வெள்ளைக்காரன் காலத்திலிருந்தே அங்கே தண்ணீர் தேங்கி, சுமார் 20,000 ஏக்கர் நிலத்திலுள்ள பயிர் வீணாகிவிடுகிறது. அதனால் அங்கே இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்கள் பெரிதும் கஷ்டப் படுகிறார்கள். அதை அரசு கவனித்து, உடனடியாக அந்த வடிகாலை செப்பனிட, அங்கே தண்ணீர் தேங்காமல் இருக்க வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. வாழவந்தான்கோட்டை முதல் நத்திகுளம் (டான்ச்) வரை உள்ள பகுதிகளை டெல்டா ஆயக்கட்டாக மாற்றி, மூன்று போகம் சாகுபடி செய்ய அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டு மென்று திருவரும்பூர் தொகுதி விவசாயப் பெருங்குடி மக்கள் சார்பாக நான் பணிவாக கேட்டுக்கொண்டு, இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டு மென்று கேட்டு, பேசுவதற்கு வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, விடைபெறுகிறேன். வணக்கம்.



1982 மார்ச் 8]

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன போது இந்திய தேசிய காங்கிரஸ் சார்பிலே என்ன செய்தார்கள் என்று சொன்னார்கள். அருமைச் சகோதரர் அவர்களுக்கு 47 வயதுக்கு மேலே இருக்காது என்று நான் நினைக்கிறேன். இருந்தாலும் அவர்களுக்கு நான் உண்மை நிலையினைச் சொல்லவேண்டும். காங்கிரஸ் கட்சியின் ஆட்சி இந்த மாநிலத்திலே இருந்தபோது ராஜாஜி அவர்கள் ஆயிரக்கணக்கான விவசாயிகளை கடன் பளுவிலே இருந்து விடுவிக்கின்ற வகையிலே கடன் நிவாரணச் சட்டத்தினைக் கொண்டு வந்தார்கள். அப்படி 1937-லேயும் 1952-லேயும் அப்படிப்பட்ட சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. அதுமட்டுமல்ல. 1948 ஆம் ஆண்டு தொழிலாளர்களுக்கான குறைந்தபட்சக் கூலிச் சட்டமும் 1954 ஆம் ஆண்டு விவசாயத் தொழிலாளர்களுக்கான சட்டங்களும் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டன. இவைகளை எல்லாம் கொண்டு வந்தது காங்கிரஸ் கட்சி. இப்படி காங்கிரஸ் கட்சி ஆட்சியிலே இருந்தபோது விவசாயி களுக்காகவும், விவசாயத் தொழிலாளர்களுக்காகவும் எங்களுடைய கடமையை நாங்கள் செய்தோம் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி விடுதலைக்காகப் போரிட்டது மட்டுமல்ல, விவசாயிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் செய்ய வேண்டிய கடமையைச் செய்திருக்கின்றது என்று தான் நான் சொன்னேன். அதுமட்டுமல்ல. நான் பேசுகின்றபோது இந்த அரசு தேர்தல் காலத்திலே கொடுத்த வாக்குறுதி என்ன ஆயிற்று என்று நான் சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். அண்ணாதாசன் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எனக்கு விளக்கம் சொன்னார்கள். மாநிலங்கள் மொழி வாரியாகப் பிரிக்கப்பட்டதற்குப் பிறகு இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி என்ன செய்தது என்றுதான் கேட்டேனே தவிர வேறு ஒன்றும் இல்லை.

* திரு. டி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1982-83 ஆண்டுக்கான வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

குறிப்பாக விவசாயிகளுக்கு அரசு வினியோகம் செய்கின்ற விதையினைப் பொறுத்தமட்டில் தரமான விதைகளையும் உபயோகமான விதைகளையும் வினியோகம் செய்யவேண்டும். சாதாரணமாக ஒன்றியங்களிலே வினியோகம் செய்யப்படுகின்ற விதைகள் பூராவும் நல்ல தரமில்லாத விதைகளாக இருக்கின்றன.

[1982 மார்ச் 8

அடுத்து தற்போது அதிகப்படியான தென்னங்கன்றுகளை விநியோகம்
செய்கிறார்கள். நல்ல தரமான தென்னங்கன்றுகளை கொடுக்கவேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே கன்னியாகுமரி மாவட்டத்திலே நல்ல
தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. சாதாரணமாக இருக்கின்ற
தென்னங்கன்றுகள், மற்றும் சிவப்பு நிறமான தென்னங்கன்றுகள் மட்டு
மல்லாமல் பச்சை நிறத்திலேயும் ஒருவகையான தென்னங்கன்றுகள் இப்போது
அந்தப் பகுதியிலே அதிகமாக நடமாடுகின்றது. அவை நாலு ஆண்டுகளில்
பலன்தரும். ஒரே கொத்திலே 20, 30 காய்கள் பிடிக்கின்ற அளவுக்கு அந்தத்
தென்னங்கன்று இருக்கின்றது. அந்தத் தென்னங்கன்றுகளை தமிழ்நாட்டிலே
பரவலாக்கவேண்டும். பரவலாக அதனை விநியோகம் செய்தால் பற்றாக்குறை
நீங்கும். அதிகமான எண்ணெய் தயாரிப்பதற்கும் உதவிகரமாக இருக்கும்.
ஆகவே அந்தத் தென்னங்கன்றுகளை குறைந்தவிலையில் விவசாயிகளுக்குக்
கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

அடுத்து பச்சைப் பயிறு, உளுந்து பருப்பு போன்ற தானிய பயிர் வகை
களுக்கு தமிழ்நாட்டிலே பற்றாக்குறை இருக்கின்றது. இதற்கெல்லாம் நாம்
அடுத்த மாநிலங்களை நம்பித்தான் இருக்கவேண்டிய சூழ்நிலை இருக்கின்றது.
ஆகவே இதனை அதிகமாக உற்பத்தி செய்கின்ற வகையிலே சிறப்பு
திட்டங்களைக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சிறிய,
நடுத்தர விவசாயிகளுக்கு அதிகப்படியான கடன் உதவி செய்கின்ற வகையிலே
திட்டங்களைக் கொண்டுவரவேண்டும். அந்தப் பொருட்களை தன்னிறைவு
பெறக்கூடிய வகையிலே உற்பத்தி செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

அடுத்து பூச்சிக் கொல்லி மருந்து விநியோகம் செய்கிறார்கள்.
அந்தப் பூச்சிக் கொல்லி மருந்திலேயும் கலப்படம் செய்யப்பட்டிருப்பதன் ஆனால்
காரணத்தால் அவை பூச்சிகளைக் கொல்ல முடியாத நிலைமையில்
இருக்கின்றன. ஆகவே இந்த நிலைமையினைப் போக்க அரசே தரமான
மருந்துகளை வாங்கி விவசாயிகளுக்குக் கொடுக்கவேண்டும். மேலும் அந்த
மருந்தினை போதிய அளவுக்குக் கொடுத்தால் தான் அதனுடைய பலன்
கிடைக்கும், மேலும் அந்த மருந்தினை விவசாயிகள் பெற்றுக்கொள்கின்ற
நேரத்திலே தேவையில்லாத மருந்துகளையும் ஒன்றியங்களிலே சேர்த்து
தருகின்ற நிலைமை இருக்கின்றது. இப்படித் தேவையில்லாத மருந்துகளையும்
சேர்த்து தலையிலே கட்டுகின்ற நிலைமை இருக்கின்றது. இந்த நிலைமை
யினைப் போக்கி நல்ல தரமான மருந்துகளை விநியோகிக்க வேண்டும்.

அடுத்தபடியாக கிராமப்புறங்களிலே 100 ஏக்கருக்கு ஒரு இடத்திலே
[illegible] கட்டில் கொடுக்கக்கூடிய சூழ்நிலை இருக்கவேண்டும். அதோடு
[illegible] வைப்பதற்காக கிராமங்களின் உட்பகுதியிலே [illegible]



[திரு. டி. மணி]

1982 மார்ச் 8]

தேவையான இடங்களை ஏற்பாடு செய்து கொடுக்கவேண்டும் ஆகவே ஏழை
விவசாயிகளுக்கு அவர்கள் அதிகமான அளவில் நெல்லை உற்பத்தி செய்கின்ற
காலத்தில், அவர்களுக்கு களமும் தேவைப்படுவதாக இருந்தால், அதை
அருகாமையிலேயே அமைத்துக் கொடுத்தால் நலமாக இருக்குமே என்ற
அதைச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாலை 4-30)

அடுத்தபடியாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை எடுத்துக்
கொண்டால், என்னுடைய மாவட்டத்தில் நாகர்கோவிலிலுள்ள ஒழுங்குமுறை
விற்பனைக் கூடத்தை நேற்றைக்கு முன் தினம் கூட நான் பார்வை இட்டேன்.
அங்கே ஒரு மேசையும், நாற்காலியும் போடப்பட்டிருக்கிறதே தவிர, வேறு
யாருமே இல்லை. எந்த பொருளை வாங்குகிறார்கள், விற்பனை செய்கிறார்கள்
என்பது தெரியாது. ஆட்கள் கூட சில சமயங்களில்தான் இருக்கிறார்கள்.
குறிப்பாக என்னுடைய தொகுதியில் மார்த்தாண்டத்திலே, நான் சர்வ
சகஜமாக தினமும் பார்த்துக் கொண்டிருக்கும் இடம். அந்த இடத்தில் உள்ள
ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில், எப்போதோ சில சமயங்களில் சில
நபர்களை அங்கே பார்க்கிறேனே தவிர, மேசையையும் நாற்காலியையும் தவிர
வேறு ஒன்றும் அங்கே இல்லை. அந்த ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள்
ஒழுங்காகச் செயல்படவேயில்லை. ஆகவே அந்த முறைகளை அகற்றி, அவை
கள் ஒழுங்காக வேலை செய்யும் வகையில், ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாயிகளுக்குப் பயிற்சி அளிப்பது பற்றி எடுத்துக்
கொண்டால், ஏதோ ஒரு சில பேர்களுக்கு பயிற்சி கொடுக்கிறார்கள். அது
போதாது. நம்முடைய கிராமப்புறங்களிலே இருக்கிற பல பகுதிகளிலும் உள்ள
பாமர விவசாயிகளுக்கு, உழவுத் தொழிலுக்காக மண்ணிலே இறங்கி வேலை
செய்கிற அந்த ஏழை விவசாயிகள் அனைவருக்கும் வேளாண்மை குறித்த
பயிற்சிகளை அளிப்பதுதான் நலமாக இருக்கும். அதுதான் விவசாயிகளுக்
குப் பிரயோஜனமாக தக்க வகையிலே இருக்கும். எனவே அந்த வகையில்
நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக காய்கறிகள். பெரும்பான்மையான காய்கறிகள் கிராமப்
புறங்களிலே இருந்துதான் உற்பத்தியாகி நகரப்பகுதிகளுக்கு வருகின்றன.
ஆனால் அந்தக் காய்கறிகளை கிராமப்புறங்களிலேயிருந்து நகர்ப்புறங்களுக்கு
கொண்டு வருவதற்கு ஏற்ற வாகன வசதி, போக்குவரத்து வசதி இருக்கிறதா
என்றால் இல்லை. அப்படி அந்த வசதி இல்லாத காரணத்தால், இடைத்
தரகர்கள் நடுவில் நுழைந்து கொள்ளை லாபம் அடிக்கிற நிலைதான்
ஏற்படுகிறது. ஆகவே நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வ

அடுத்து தற்போது அதிகப்படியான தென்னங்கன்றுகளை விநியோகம் செய்கிறார்கள். நல்ல தரமான தென்னங்கன்றுகளை கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே கன்னியாகுமரி மாவட்டத்திலே நல்ல தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. சாதாரணமாக இருக்கின்ற தென்னங்கன்றுகள், மற்றும் சிவப்பு நிறமான தென்னங்கன்றுகள் மட்டுமல்லாமல் பச்சை நிறத்திலேயும் ஒருவகையான தென்னங்கன்றுகள் இப்போது அந்தப் பகுதியிலே அதிகமாக நடமாடுகின்றது. அவை நாலு ஆண்டுகளில் பலன்தரும். ஒரே கொத்திலே 20, 30 காய்கள் பிடிக்கின்ற அளவுக்கு அந்தத் தென்னங்கன்று இருக்கின்றது. அந்தத் தென்னங்கன்றுகளை தமிழ்நாட்டிலே பரவலாக்கவேண்டும். பரவலாக அதனை விநியோகம் செய்தால் பற்றாக்குறை நீங்கும். அதிகமான எண்ணெய் தயாரிப்பதற்கும் உதவிகரமாக இருக்கும். ஆகவே அந்தத் தென்னங்கன்றுகளை குறைந்தவிலையில் விவசாயிகளுக்குக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

அடுத்து பச்சைப் பயிறு, உளுந்து பருப்பு போன்ற தானிய பயிர் வகைகளுக்கு தமிழ்நாட்டிலே பற்றாக்குறை இருக்கின்றது. இதற்கெல்லாம் நாம் அடுத்த மாநிலங்களை நம்பித்தான் இருக்கவேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே இதனை அதிகமாக உற்பத்தி செய்கின்ற வகையிலே சிறப்பு திட்டங்களைக், கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சிறிய, நடுத்தர விவசாயிகளுக்கு அதிகப்படியான கடன் உதவி செய்கின்ற வகையிலே திட்டங்களைக் கொண்டுவரவேண்டும். அந்தப் பொருட்களை தன்னிறைவு பெறக்கூடிய வகையிலே உற்பத்தி செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

அடுத்து பூச்சிக் கொல்லி மருந்து விநியோகம் செய்கிறார்கள். ஆனால் அந்தப் பூச்சிக் கொல்லி மருந்திலேயும் கலப்படம் செய்யப்பட்டிருப்பதன் காரணத்தால் அவை பூச்சிகளைக் கொல்ல முடியாத நிலைமையில் இருக்கின்றன. ஆகவே இந்த நிலைமையினைப் போக்க அரசே தரமான மருந்துகளை வாங்கி விவசாயிகளுக்குக் கொடுக்கவேண்டும். மேலும் அந்த மருந்தினை போதிய அளவுக்குக் கொடுத்தால் தான் அதனுடைய பலன் கிடைக்கும். மேலும் அந்த மருந்தினை விவசாயிகள் பெற்றுக்கொள்கின்ற நேரத்திலே தேவையில்லாத மருந்துகளையும் யூனியன்களிலே சேர்த்து தருகின்ற நிலைமை இருக்கின்றது. இப்படித் தேவையில்லாத மருந்துகளையும் சேர்த்து தலையிலே கட்டுகின்ற நிலைமை இருக்கின்றது. இந்த நிலைமையினைப் போக்கி நல்ல தரமான மருந்துகளை விநியோகிக்க வேண்டும்.

அடுத்தபடியாக கிராமப்புறங்களிலே 100 ஏக்கருக்கு ஒரு இடத்திலே [illegible] கட்டில் கொடுக்கக்கூடிய சூழ்நிலை இருக்கவேண்டும். அறுவடை [illegible] வைப்பதற்காக கிராமங்களின் உட்புறத்திலே [illegible]





தேவையான இடங்களை ஏற்பாடு செய்து கொடுக்கவேண்டும் ஆகவே ஏழை விவசாயிகளுக்கு அவர்கள் அதிகமான அளவில் நெல்லை உற்பத்தி செய்கின்ற காலத்தில், அவர்களுக்கு களமும் தேவைப்படுவதாக இருந்தால், அதை அருகாமையிலேயே அமைத்துக் கொடுத்தால் நலமாக இருக்குமே என்ற அதைச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாலை 4-30)

அடுத்தபடியாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை எடுத்துக் கொண்டால், என்னுடைய மாவட்டத்தில் நாகர்கோவிலிலுள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தை நேற்றைக்கு முன் தினம் கூட நான் பார்வை இட்டேன். அங்கே ஒரு மேசையும், நாற்காலியும் போடப்பட்டிருக்கிறதே தவிர, வேறு யாருமே இல்லை. எந்த பொருளை வாங்குகிறார்கள், விற்பனை செய்கிறார்கள் என்பது தெரியாது. ஆட்கள் கூட சில சமயங்களில்தான் இருக்கிறார்கள். குறிப்பாக என்னுடைய தொகுதியில் மார்த்தாண்டத்திலே, நான் சர்வ சகஜமாக தினமும் பார்த்துக் கொண்டிருக்கும் இடம். அந்த இடத்தில் உள்ள ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில், எப்போதோ சில சமயங்களில் சில நபர்களை அங்கே பார்க்கிறேனே தவிர, மேசையையும் நாற்காலியையும் தவிர வேறு ஒன்றும் அங்கே இல்லை. அந்த ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் ஒழுங்காகச் செயல்படவேயில்லை. ஆகவே அந்த முறைகளை அகற்றி, அவைகள் ஒழுங்காக வேலை செய்யும் வகையில், ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாயிகளுக்குப் பயிற்சி அளிப்பது பற்றி எடுத்துக் கொண்டால், ஏதோ ஒரு சில பேர்களுக்கு பயிற்சி கொடுக்கிறார்கள். அது போதாது. நம்முடைய கிராமப்புறங்களிலே இருக்கிற பல பகுதிகளிலும் உள்ள பாமர விவசாயிகளுக்கு, உழவுத் தொழிலுக்காக மண்ணிலே இறங்கி வேலை செய்கிற அந்த ஏழை விவசாயிகள் அனைவருக்கும் வேளாண்மை குறித்த பயிற்சிகளை அளிப்பதுதான் நலமாக இருக்கும். அதுதான் விவசாயிகளுக்குப் பிரயோஜனமாக தக்க வகையிலே இருக்கும். எனவே அந்த வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக காய்கறிகள். பெரும்பான்மையான காய்கறிகள் கிராமப்புறங்களிலே இருந்துதான் உற்பத்தியாகி நகரப்பகுதிகளுக்கு வருகின்றன. ஆனால் அந்தக் காய்கறிகளை கிராமப்புறங்களிலேயிருந்து நகர்ப்புறங்களுக்கு கொண்டு வருவதற்கு ஏற்ற வாகன வசதி, போக்குவரத்து வசதி இருக்கிறதா என்றால் இல்லை. அப்படி அந்த வசதி இல்லாத காரணத்தால், இடைத்தரகர்கள் நடுவில் நுழைந்து கொள்ளை லாபம் அடிக்கிற நிலைதான் ஏற்படுகிறது. ஆகவே நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வ

முந்திரி பயிர் செய்யவேண்டும். ஆகவே மாநிலத்தில் எந்தெந்த இடங்களில் அதிகமான அளவிற்கு முந்திரி பயிர் செய்யமுடியுமோ அந்தளவிற்குப் பயிரிட்டு ஆலைகளுக்குத் தேவையான முந்திரியை சப்ளை செய்யும் அளவிற்கு முந்திரி சாகுபடியை விஸ்தரிக்கவேண்டும்.

அடுத்தபடியாக, வாசனைப்பொருட்கள். நீலகிரி மாவட்டத்தில் கூடலூரிலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் சில பகுதிகளிலும் ஏலம், கிராம்பு, ஜாதிக்காய், மிளகு போன்றவற்றை அதிகமாகப் பயிரிடுவதாக அமைச்சர் அவர்கள் தந்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது இந்தக் கிராம்பு பயிரிடுவதைப் பொறுத்து மற்ற மாவட்டங்களில் எப்படி என்று எனக்குத் தெரியாது. ஆனால் கன்னியாகுமரி மாவட்டத்தில் மகேந்திரகிரியில் கிராம்பு பயிரிட்டு வருமானம் வர ஆரம்பித்து விட்டது. மாறாமலைப் பகுதியில் கிராம்பு பயிரிட்டுள்ளார்கள். வனத்துறையினரால் அது செய்யப்பட்டு வருகிறது. 1981-82-ல் ஒரு குறைபாடு ஏற்பட்டு கிராம்பு நல்ல நாமான பயிராகி வரும்போது விவசாயத்தைப் பற்றி தெரியாததன் விளைவாக வனத் துறையினராலே சுமார் 2,000 செடிகளுக்கு ஒரு தவறான வீரியம் மிக்க மருந்தை அடித்ததன் காரணமாக பூராவும் கரிந்து விட்டது. இது பூராவும் வனத்துறையினரால் செய்யப்படுகிறது. இந்த மாநில முழுவதும் ஒரு சில பகுதிகள் வனத்துறைப் பகுதி, ஒரு சில பகுதிகள் வேளாண்மைத் துறை பகுதி. ஆகவே நான் சொல்வது என்னவென்றால் இந்தப் பயிர்கள் பூராவும் வேளாண்மைத் துறை கட்டுப்பாட்டின் கீழ் வரவேண்டும். ஆகவே பூராவையும் ஒருமுகப்படுத்தி வேளாண்மைத் துறையின் கீழ் கொண்டு வந்தால்தான் இந்த கிராம்பு, ஜாதிக்காய் நல்ல மிளகு முதலியவற்றை அதிகப்படியாக நாம் உற்பத்தி செய்யமுடியும். அப்போதுதான் நாம் கிராமபு, ஜாதிக்காய், மிளகு ஆகியவற்றை அதிகமாக உற்பத்தி செய்து நல்லமுறையில் ஏற்றுமதி செய்யக் கூடிய அளவில் செய்யமுடியும். ஆகவே இதையும் கவனத்தில் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தோட்டக்கலை.—ஜவ்வாதுமலை, கொல்லிமலை, சேர்வராயன்மலை ஆகிய மலைப்பகுதிகளில் இதை விஸ்தரிக்கப்போவதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பேச்சிப்பாறை அருகாமையிலும் தோட்டக் கலைக்கு என்று ஒரு பகுதி இருக்கிறது அது வனத்துறையின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. அப்படி அது வனத்துறையின் கட்டுப்பாட்டில் இருப்பதால் பல சங்கடங்கள் உள்ளன. அங்கே தற்காலிகமாக கொஞ்சம் பேர்களை வேலைக்கு அமர்த்துகிறார்கள். அவர்கள் பல்வேறு நாற்றுகளை நட்டு (கிராம்பு, ஜாதி, [illegible]கோ, மிளகு) உற்பத்தி செய்கிறார்கள். ஆனால் அந்தப் பணியாளர் [illegible] கொடுக்கப்படும் சம்பளம் மிகக் குறைவாகும். அங்கே ஆயிரக்



கணக்கான நாற்றுகளை உற்பத்தி செய்யவேண்டியிருக்கிறது. அங்கே ஒரு கட்டடம் இருக்கிறது. அங்கு நாற்றுகளுக்குத் தண்ணீர் கஷ்டம் இருக்கிறது. அங்கே ஒரு பம்ப் செட் அமைத்துக் கொடுத்தால் நாற்றுப் பண்ணைகளுக்கு உதவியாக இருக்கும். அதோடு கூட அந்தத் தொழிலாளர்களுக்கு அதிகப் படியான ஊதியம் கொடுக்கவேண்டும். விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச சம்பளம் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். அதுவே போதாது, ஒரு சாதாரண விவசாயத் தொழிலாளிக்கு ரூ. 12 ஊதியம் என்று குமரி மாவட்டத்தில் இருக்கிறது ஆகவே இவர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 8 என்பது போதுமானதல்ல. ஆகவே இப்படிப்பட்ட அன்னாசிப் பழத் தோட்டம், கிராம்பு தோட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும் ஏலக்காய் பயிர் செய்கிறவர்களுக்கும், தோட்டக்கலையில் வேலை செய்கிறவர் களுக்கும் ஆக, எதுவானாலும் சரி, இவற்றில் பணியாற்றுகிற தொழிலாளர் களுக்குக் குறைந்தபட்சம் பத்து ரூபாயாவது சம்பளம் கிடைக்கக்கூடிய ஒரு ஏற்பாட்டைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாலை 4-40)

நெல் சாகுபடியை எடுத்துக் கொண்டால், நம்முடைய மாநிலம் பற்றாக் குறையிலே இருந்து, இன்றைக்கு வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய அளவுக்கு உற்பத்தித் திறன் பெற்றிருக்கிறது. ஆனால், ஒரு பகுதியிலே குறைபாடு உள்ளது. பல்வேறு மாவட்டங்களை எடுத்துக்கொண்டாலும், கன்னியாகுமரி மாவட்டத்திலே, விளவங்கோடு தாலுகாவிலே ஒரு நபருக்கு ஒரு வாரத்திற்கு ஒரு கிலோ அரிசி கொடுக்கின்ற நிலை இருக்கிறது. இதை நீக்கி, அங்கே போதுமான அரிசியை, ஒரு நபருக்கு ஒரு வாரத்திற்கு இரண்டு கிலோ அரிசி என்ற முறையில் நியாயமான விலையில், நல்ல அரிசியை விநியோகிக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பு தந்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

**திரு. சி. சிவப்பிரகாசம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1982-83 ஆம் ஆண்டிற்கான வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்பளித்தமைக்கு துணைத் தலைவர் அவர் களுக்கு நன்றி கூறுகிறேன்.

வேளாண்மை என்பது இன்று நாட்டிலே எவ்வளவுதூரம் சிறப்படைந் திருக்கிறது, புரட்சித் தலைவர் அவர்கள் அரசு உருவாக்கியிருக்கிறது என்பதை வேளாண்மைத் துறையிலே ஈடுபட்டு இருக்கின்ற என்னைப் போன்றவர்களும், வேளாண்மையிலே ஈடுபட்டிருக்கின்ற மக்களும் நல்ல முறையிலே அறிவார்கள். தற்போதைய முறையிலே வேளாண்மைத் துறை

சீரும் சிறப்புடன் உருவாக்கப்பட்டு, அதை நவீன முறையிலே உருவாக்குவதன் மூலம் எதிர்காலத்திலே மக்கள் வளர்ச்சிக்கேற்ப உருவாக்க வேண்டுமென்ற அந்த நல்லெண்ணத்துடன் புரட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் நல்ல பல திட்டங்களைத் தீட்டி, விவசாயப் பெருங்குடி மக்களுக்காக பல சலுகைகளை அறிவித்து, அதைத் திறம்பட செயலாக்கு கின்ற நிலைமையை உருவாக்கியிருக்கிறார்கள்.

வேளாண்மையைப் பொறுத்தவரை, முதலாவதாக விதையை எடுத்துக் கொண்டால், அரசுப் பண்ணையிலிருந்து மானிய விலையில் சிறந்த விதைகளைக் கொடுக்க இந்த அரசு தீவிர கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், விதைகள் நன்றாக வளர வேண்டு மென்றால், அதற்கு எருவும், மற்றும் ரசாயன உரங்களும் தேவைப்படுகின்றன. இன்று நாட்டிலே எரு உற்பத்தி குறைந்துகொண்டே வருகின்றது. இயற்கையான உரங்களை உருவாக்குவதைவிட, அதிகமாக ரசாயன உரங்கள் உபயோகித்து, வேளாண்மை உற்பத்தி செய்தாலும், அதிலே ஒருசில மாறுதல்கள் இருந்தாலும், இயற்கை உரத்தை உருவாக்குவது குறைந்து கொண்டே வருவதால், இயற்கை உரத்தை உருவாக்குவதற்கு ஊராட்சி ஒன்றியங்களிலே உள்ள கிராம அலுவலர்களும், மற்ற பணியாளர்களும் தீவிரமாக அதிலே ஈடுபடுவதற்கு திட்டம் தீட்டி, அதற்கான வழிவகைகளை உருவாக்க வேண்டுமென்று, இதைச் செயலாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, மண் பரிசோதனையை எடுத்துக்கொண்டால், இன்று ஒருசில இடங்களிலே இருந்தாலும், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் இறை ஏற்படுத்தி, அவர்கள் நேரடியாக விவசாயப் பெருங்குடி மக்களின் நிலங் களுக்குச் சென்று, மண் பரிசோதனை செய்து, இந்த நிலங்களில் இந்தப் பயிரைச் செய்தால் நன்றாக விளையும் என்ற உறுதிமொழியை அவர்கள் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், உழவர் கல்வியைப் பொறுத்தவரையில், உழவர் கல்வி பயிற்சி நடைபெற்று வந்தாலும், அந்தப் பயிற்சிகள் சிறப்பாக நடைபெறுவதற்கு, அந்தப் பயிற்சிகளைச் சிறந்த முறையிலே கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்

பயிர் பாதுகாப்பு முறைகளைப் பொறுத்தவரைக்கும், இன்று பல்வேறு மருந்துகள் இருந்தாலும், அந்த மருந்துகள் சிறந்த முறையில், திறம்பட இல்லாமல் இருக்கின்றன. அதைச் சிறந்த முறையில் உருவாக்குவதற்குத் தீவிர நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். [illegible] பண்ணைகளுக்கு வசதிகளைப் பெருக்கியுள்ளதை நான் பாராட்டு





கிறேன். மூன்று விதை சுத்திகரிப்பு நிலையங்கள் ஏற்படுத்தியுள்ளதைப் பாராட்டுகிறேன். தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் கார்ட் அமைப்பின்கீழ் செயல்படும் திட்டம் ஐந்து மாவட்டங்களில்—தஞ்சூர், புதுக்கோட்டை, திருநெல்வேலி, செங்கல்பட்டு, சேலம்—தீவிரமாக செயல் படுவதை நான் பாராட்டுகிறேன்.

வேளாண்மைப் பொறியியல் துறையில் புதியதாக இந்த வருடத்திலே குழாய்க் கிணறு திட்டத்தின்கீழ் 4,800 கிணறுகள் அமைக்கவிருப்பதை வெகுவாகப் பாராட்டுகிறேன். கிணறு தோண்டும் திட்டத்தின்கீழ் 2,400 கிணறுகள் அமைப்பதைப் பாராட்டுகிறேன் வனமுனைக் குழாய் திட்டத்தின் கீழ் 2,200 கிணறுகள் அமைப்பதையும், கிணறுகள் ஆழப்படுத்தும் திட்டத்தின் கீழ் 2,900 கிணறுகள் ஆழப்படுத்துவதையும் வெகுவாகப் பாராட்டுகிறேன்.

மலைப்பகுதிகளிலே, சமவெளிப் பகுதிகளிலே மண்வளப் பாதுகாப்புப் பணிகள் பொறுத்தவரை சமஉயர வரப்புகள் அமைத்தல், நிலச் சீர்திருத்தம், பாசன நீர்க் குழாய்கள் பதித்தல் முதலிய இந்தத் திட்டங்கள் இந்த ஆண்டு 44,800 எக்டேர் நிலங்களில் உருவாக்க திட்டமிட்டிருப்பதை நான் வெகுவாக பாராட்டுகிறேன். இந்தத் திட்டத்தின் முதல் கட்டமாக மலைவாழ் மக்கள் வசிக்கிற கொல்லி மலையில் நஞ்சை நிலங்கள்—மழைக்காலங்களில் தண்ணீரால் அடித்து செல்லப்படுகின்றன—இவை பாதுகாப்பு பெறுகின்றன. இந்தத் திட்டத்தின் மூலம் கொல்லி மலையில் மலைவாழ் மக்கள் பயனீ பெறுகின்ற வகையில் நஞ்சை நிலங்களில் 4,000 எக்டேர் நிலங்கள் எடுத்து அவர்களுக்கு நிரந்தரமாக பயன் அளிக்கச் செய்ய கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ் நாட்டைப் பகுதிகளாகப் பிரித்து நிர்வாகத்தை வலுப்படுத்து கண்காணிப்பு பொறியாளர்களைக் கொண்டே இத்திட்டத்தை செயல்படுத்து வதற்கு பாராட்டுகிறேன். அடுத்து எண்ணெய் வித்துக்கள் துறையை பொறுத்தவரையில் எண்ணெய் வித்துக்கள் 16 இலட்சம் டன் உற்பத்தியை செய்து காட்டியதற்கு தமிழக அரசை நான் பாராட்டுகிறேன்.

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையைப் பொறுத்தவரை 16 அரசு தோட்டக்கலை பண்ணைகளிலிருந்து சுமார் 16 இலட்சம் பலதரப்பட்ட கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு வருவதைப் பாராட்டுகிறேன். அந்த கன்றுகள் தரமுள்ளனவாகவும், நன்கு பயனளிக்கக் கூடியவையாகவும் இருக்க நல்ல குழுவை அமைத்து இந்தத் திட்டத்தைப் பயன்படுத்தி, கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. டி. மணி] [1982 மார்ச் 8

தெல்லாம், பரீட்சார்த்தமாக ஏதாவதொரு விழாவின்போது அல்லது
பண்டிகை தினத்தின்போது, மொத்தமாக காய்கறிகளை கிராமப்புறங்களி
லிருந்து அரசே வாங்கி இந்த ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் மூலமாக
பொது மக்களுக்கு விற்பனை செய்யும் முறையை அமுல் செய்து பார்க்க
வேண்டும்.

ஏனென்றால் கேரளத்திலே ஓணம் பண்டிகையின்போது திருவனந்தபுரம்
நகரத்திலே அவ்வாறு மொத்தமாக நேரிடையாக காய்கறிகளை வாங்கி பொது
மக்களுக்கு விற்றுப் பார்த்தார்கள். இதனால் இரண்டு விதத்தில் பலன்
ஏற்பட்டது. ஒன்று, இடைத்தரகர்கள் இல்லாமல் நேரிடையாக அரசே
கிராமப்புறங்களில் உள்ளவர்களிடமிருந்து காய்கறிகளை வாங்கியதால் அவர்
களுக்கு நியாயமான விலை கிடைத்தது ; மற்றொன்று, பொதுமக்களுக்கும்
கட்டுப்படியாகக்கூடிய விலையில் நல்ல தரமான காய்கறிகளை கிடைக்கச்
செய்தது. ஆகவே அத்தகைய ஒரு நிலையை இங்கேயும் பரீட்சார்த்தமாவது
செய்து பார்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அத்தோடு இப்போது
இருக்கும் நிலையை மாற்ற, கிராமப்புறங்களில் காய்கறிகளை நகரத்திற்குக்
கொண்டு வருவதற்கு, வாகன வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக பழங்கள் உற்பத்தி செய்வதை எடுத்துக் கொண்டால்,
பல இடங்களிலே அரசாங்கம் பழப்பண்ணைகள் அமைப்பதைப் பற்றிச்
சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அவைகள் இன்னும் பல இடங்களுக்கு
விஸ்தரிக்கப்படவேண்டும். இப்போது கொல்லிமலை என்று சொல்லக்கூடிய
பகுதியிலே அன்னாசிப் பழம் அதிகமாக விளைகிறது. பேச்சிப்பாறைக்கு
அருகாமையில் உள்ள பகுதியிலும், இத்தகைய பழங்கள் அதிகமாக
விளைகின்றன ஆகவே, அங்கேயெல்லாம் கூட இத்தகைய பண்ணைகளை
விரிவாக்க முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் சில தனியார் முதலாளிகளுடைய
தோட்டங்களில் மங்குஸ்தீன் என்ற ஒரு வகை பழம் உற்பத்தியாகிறது. அதை
நம்முடைய அரசாங்கத்திற்குச் சொந்தமாக இருக்கும் பழத்தோட்டங்களில்
பயிர் செய்வதற்கு, ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.
மேற்குமலைத் தொடர்ச்சி திட்டத்தின் கீழ் பழங்குடி மக்கள் அதிகமாக
வசிக்கக்கூடிய பகுதியிலே மோதிரமலை, மூக்கறக்கல், வெள்ளாம்பிகாணி,
பத்துகாணி போன்ற இடங்களில் அன்னாசி பழங்கள் அதிக அளவில் உற்பத்தி
யாகின்றன. அந்த மேற்குமலைத் தொடரில் கன்னியாகுமரி மாவட்டத்தில்
பத்துகாணி போன்ற மலைப் பிரதேசங்களில் ஏராளமான பழங்குடிமக்களே
வசிக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவேண்டும் என்று



1982 மார்ச் 8] [திரு. டி. மணி]

தான் நாம் அடிக்கடிச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஆனால் அங்கேயுள்ள
ஏராளமான காட்டுப் பன்றிகள் அவர்கள் விளைவிக்கும் பொருள்களை நாசம்
செய்து கொண்டு இருக்கின்றது. அரசாங்கம் அதுகுறித்து பல பிரச்னை
களை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது என்பது உண்மைதான். ஆனால்
அங்கேயிருக்கின்ற பன்றிகள் போதாது என்று நம்முடைய வனத்
துறையினர் வெள்ளைப் பன்றிகளையும், அங்கே கொண்டு போய்விட்டு,
பழங்குடியினருக்கு தீமையைத்தான் செய்து கொண்டு வருகிறார்கள். ஆகவே
அவர்களுக்கு நாம் எவ்வளவு செய்தும் பிரயோஜனம் இல்லை ஆகவே
இந்தக் குறையைப் போக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க
வேண்டும், அவர்களுடைய பயிர்களைக் காப்பாற்ற வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

கொட்டாரத்தில் நம் அரசுப் பண்ணை ஒன்றிருக்கிறது. அது பழைய
காலப் பண்ணை 50, 60 ஆண்டுகளாக இருக்கிறது. அந்தப் பண்ணையை
விஸ்தரிக்க வேண்டும்.

அடுத்தபடியாக, சமையல் எண்ணெய். இப்போது சமையல் எண்ணெய்
பற்றாக்குறை இருக்கிறது. இந்தப் பற்றாக்குறையைப் போக்க நாம் பல்வேறு
இடங்களில் செம்பனை வித்துக்களைப் பயிரிட சில ஏற்பாடுகளைச் செய்து
வருகிறோம். பேச்சிப்பாறை அருகே வலியஏலா என்ற ஒரு இடத்தைப்
பார்த்திருக்கிறார்கள். அங்கே 100 ஏக்கரில், 141 ஏக்கர்களில் சிறிய விவசாயிகள்
1948-லிருந்து விவசாயம் செய்து வருகிறார்கள். அது போக வலியஏலாவில்
உள்ள பகுதியில் 300 ஏக்கர் இடத்தில் அதிகப்படியாக செம்பனைகளை வளர்த்
தால் எண்ணெய் வித்துக்களை நாம் அதிகமாக உற்பத்தி செய்யலாம். அதோடு
கோதையார் பகுதியிலிருக்கும் புல்மேடுகளிலும் எண்ணெய் பனைப் பயிரிடலாம்.
அதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

அடுத்தபடியாக, முந்திரி. இந்த முந்திரிச் சாகுபடி பற்றி என்ன சொல்லி
யிருக்கிறார்கள் ? 1978-79-ல் 95,000 ஹெக்டேர் நிலங்களில் முந்திரி பயிர்
செய்திருக்கிறார்கள். 1981-ல் அது ஒரு இலட்சத்தைத் தாண்டியிருக்கிறது.
ஆனால் 1982-83-ல் என்ன திட்டம் என்பதைப் பார்க்கவேண்டும். அதைப்பற்றி
பல முறை சுட்டிக்காட்டியிருக்கிறேன். நமது மாநிலத்தில் ஏறத்தாழ முக்கால்
இலட்சம் தொழிலாளர்கள் இந்தப் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள்
கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும். இந்த முந்திரியின் வருமானம் பூராவும்
நமக்குக் கிடைக்குமானால், இது அன்னியச் செலாவணியைத் தேடித்
தருவதாகும். ஆகவே முந்திரித் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு
ஆண்டு ஒன்றுக்கு ஒன்பது பத்து மாதங்கள் வேலை கிடைக்கும் அளவிற்கு
குமரி மாவட்டத்தில் உள்ள மலைப்பிரதேசங்களில் அதிகப்படியான அளவிற்கு

[திரு. சி. சிவப்பிரகாசம்] [1982 மார்ச் 8

அதேபோல வாழைக் கன்றுகள் சேலம் மாவட்டம் சின்ன கல்ராயன் மலையில் உற்பத்தி செய்ய திட்டமிட்டிருப்பதைப் பாராட்டுகிறேன். இந்தக் கன்றுகளை உற்பத்தி செய்கிறபோது ஒரு புதுவகையான நோய் உருவாகி இதனால் பலபேர் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. நோயிலிருந்து பாதுகாத்து இந்தத் திட்டத்தை நல்ல முறையில் செயலாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக அன்னாசிப் பழ சாகுபடி பரப்பு கணிசமான அளவில் பெருக்கப்பட்டிருப்பதைப் பாராட்டுகிறேன். மலைவாழ் மக்கள் மேம் பாட்டிற்காக அமைக்கப்பட்டுள்ள திட்டங்களில் இது ஒரு எடுத்துக்காட்டா கும். அன்னாசிக் கன்றுகளைப் பொறுத்தவரையில் மானிய விலையிலே கொடுத்து மலைவாழ் மக்கள் அனைவரும் பயனடையச் செய்ய கேட்டுக் கொள்கிறேன்.

மலைத் திட்டங்களைப் பொறுத்தவரையில் இன்று கொல்லி மலையில் பல பேர் ரோஜா செடிகளைப் போட்டு நல்ல வருவாயை அடைந்துள்ளார்கள். அரசின் சார்பிலே ஒரு தோட்டத்தைக் கொல்லி மலையில் போட்டு செயலாக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பழம் தரும் மரங்கள், காடுகள் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் இன்று தமிழகத்திலே விவசாயப் பெருங்குடி மக்களுக்கு வேளாண்மைத் துறையின் மூலம் யூகலிப்டஸ் மரங்கள் வழங்கப்படுகின்றன. இந்தத் திட்டத்தில் சில்வர் ஓக்ஸ் போன்ற பயனுள்ள மரங்களைக் கொடுத்து அவர்களை வளர்க்கச் செய்யவேண்டும். இதற்காக 50 சதவீத மானிய விலையில் வேளாண்மைத் துறை கொடுப்பார்கள் என்று நம்புகிறேன். ஒருங்கிணைந்த மலை வாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பழத்தோட்டங்களை அமைக்க சதவீத மானிய விலையில் வழங்கும் திட்டத்தை பெரிதும் பாராட்டுகிறேன்.

(மாலை 4.50)

சேலம் மாவட்டத்தில் சின்னக்கல்ராயன் மலைப் பகுதியில் 5.41 லட்சம் ரூபாயில் காபி தோட்டமும் ரூ. 3.58 லட்சம் ரூபாய் செலவில் காய்கறி விதைகள் உற்பத்தி மையமும் அமைக்க இருப்பதை நான் பாராட்டுகிறேன். விதைச் சான்றளிப்புத் துறையின் சார்பாக கொல்லி மலைப் பகுதியில் சான்று பெறுவதற்கு உருளைக் கிழங்கு விதைப் பண்ணைகள் அமைக்க வழிவகைகள் செய்யப்படும் என்ற அறிவிப்பை நான் பாராட்டுகிறேன். விதைப் பண்ணையிலிருந்து விதைகள் ஆகும்பொழுது அந்த விதை முளைத்த தேதி, [illegible] தேதி ஆகியவற்றைக் குறிப்பிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1982 மார்ச் 8] [திரு. சி. சிவப்பிரகாசம்]

மற்றும் கொல்லிமலையில் பழங்கள் ஆராய்ச்சிப் பண்ணை நிறுவ வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். சென்ற வருடமே அது நிறுவப்படுவதாக இருந்தது. ஏதோ காரணத்தால் சின்னக் கல்ராயன் மலைப் பகுதியில் அது செயல்படத் தொடங்கியது. இந்த ஆண்டாவது கொல்லி மலைப் பகுதியிலே அதை நிறுவுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பயிர் இன்ஷூரன்ஸ் திட்டத்தைத் தமிழகம் முழுவதும் தீவிரமாகச் செயல் படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கொல்லி மலையில் உள்ள அடர்ந்த மலையில் வனக்காடுகளில் வனப் பயிர்களான ஏலம், காபி, கிராம்பு போன்ற பயிர்களைப் பயிர் செய்யவேண்டிய ஏற்பாடுகளைச் செய்தால் அதன் மூலம் மலைவாழ் மக்களுக்கு நிரந்தரமான வேலைவாய்ப்பு அளிப்பதாக இருக்கும் என்று கூறி வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

* திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் சமர்ப் பித்த இந்த மானியக் கோரிக்கைகளின்மீது கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நாட்டிலே பெரும்பகுதி மக்கள் நம்பி வாழக்கூடிய இந்த வேளாண்மைத் தொழில் தொடர்ந்து எப்படி வளர்ச்சி யடைந்துகொண்டிருக்கிறது என்பதைப் பரிசீலனை செய்து பார்த்தால் நவீனமான விதைகள் சீரான முறையில் பயன்படுத்த வேண்டிய வழிவகைகள், அதற்குவேண்டிய பயிர்பாதுகாப்புகள், அதற்கு வேண்டிய உரங்கள் மற்றவை எப்படி இடவேண்டுமென்ற காரியங்கள் சரியாகச் செய்யப்பட்டாலும்கூட நம்முடைய நாட்டிலே இன்னும் உற்பத்தி இலக்கை நாம் அடைந்திருக்கி றோமா என்றால் அது குறைந்து கொண்டே வருகிறது என்று நான் நினைக் கிறேன். அதுவும் சமீப காலங்களில் செழிப்பான நிலங்களில் கூட, நெல் போன்ற பயிர்கள் சீராக வரக்கூடிய நல்ல நிலங்களில்கூட சவுக்கு மரங்களை அதிகமாக சாகுபடி செய்யும் நிலையை நாம் பார்க்கிறோம். அதே மாதிரியாக நல்ல தோட்டங்கள்—சீராக எந்தப் பயிரை வைத்தாலும் வரக் கூடிய நல்ல தோட்டங்கள் இருக்கக்கூடிய நெல்லை மாவட்டம், இராமநாத புரம் மாவட்டங்களிலே நான் சுற்றுப் பயணம் சென்றிருந்தபோது பார்த்தேன் —கருவேல் செடிகளை நட்டியிருக்கிறார்கள். மிளகாய் செடி வரும், தென்னை வரும், அதைவிட்டுவிட்டு கருவேலச் செடிகளை வைத்து விறகுக் காடாக்கக் கூடிய நிலை இருக்கிறது. இதை அரசு கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. சோ. அழகர்சாமி] [1982 மார்ச் 8

ஏற்கெனவே நம்முடைய வேளாண்மைத்துறையைப் பொறுத்தவரையில் உற்பத்தி பெருகுவதற்கு நல்ல விஞ்ஞானபூர்வமான கண்டுபிடிப்புகள் செய்யப்படுகின்றன என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். அதைச் செய்யக் கூடிய காலங்களில் உற்பத்தி பெருகுகிறது என்பதை ஒப்புக்கொள்கிறோம். அந்தத் தொழில் கட்டுப்படியாகாத நிலையில் விவசாயிகள் நட்டப்படுகின்ற நிலை இருப்பதன் காரணமாக அந்தத் தொழிலிலே உற்சாகம், மகிழ்ச்சி இல்லாமல் செய்கிற நிலை இருக்கிறது. அதோடு நாளுக்கு நாள் அந்தத் தொழிலே க்ஷீணதிசையடைக்கூடிய நிலைக்கு சென்றுகொண்டிருக்கிறது. குறிப்பாக எதை எடுத்துக்கொண்டாலும் சரி நம்முடைய மாநிலத்தில் உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால் கரும்புபற்றிச் சொல்லலாம். சென்ற ஆண்டு நாடு பூராவும் சர்க்கரைக்கு ஏகப்பட்ட கிராக்கி இருந்தது. சர்க்கரைக்கு மூலப்பொருளான கரும்பு உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகள் தங்களுக்குக் கட்டுப்படியாகவில்லை என்று சொல்லி அதைப் பயிரிடாமல் விட்டு விடுவார்களோ என்ற நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு ஓரளவிற்கு வெல்லம் காய்ச்சுபவர்களுக்கு விலை கிடைத்தது. சீனி ஆலையில் அதிக விலை சென்ற ஆண்டில் கிடைக்கவில்லை என்றாலும்கூட, வெல்லம் காய்ச்சுபவர்களுக்கு ஓரளவிற்கு விலை கிடைத்தது. ஆனால் இந்த ஆண்டு வெல்லத்தின் விலையும் வீழ்ச்சி அடைந்து விட்டது. கடைகளில் ஒரு கிலோ வெல்லம் இரண்டரை ரூபாய்க்கு விற்கிறது. ஆனால் விவசாயிகளுக்கு எவ்வளவு கிடைக்கிறது என்றால் ஒரு கிலோவுக்கு ஒரு ரூபாய்தான் கிடைக் கிறது. கரும்பு விவசாயிகள் சீனி ஆலைகளை அணுகி நாங்கள் பயிரிட்ட கரும்பை வாங்கி அரைவை செய்யுங்கள் என்று சொன்னால் அவர்கள் மறுக் கிறார்கள்.

தஞ்சாவூரிலே உள்ள சீனி ஆலையில் அவர்களின் கட்டுப்பாட்டின்கீழ் பதிந்துள்ள விவசாயிகளிடம்கூட கரும்பை வாங்குவதற்கு மறுக்கிறார்கள். எனவே, கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிகளிடம் அந்த ஆலைகள் முறை யாக வாங்கி சீரான விலையைத் தர வேண்டும். வெல்லமாக உற்பத்தி செய்தால் அந்த வெல்லத்திற்குச் சீரான விலை கிடைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்றைக்குக் கரும்புக்கு 165 ரூபாய் என்று நிர்ணயம் செய்திருக்கிறோம். விறகுக்குக் கிடைக்கின்ற விலை கூட கரும்புக்குக் கிடைக்கவில்லை. விறகு விலை ஒரு டன்னுக்கு 175 ரூபாய். அந்த விலைகூடக் கரும்புக்குக் கிடைக்க வில்லை. ஆனால் சீனியாக்கிய பிறகு குவிண்டாலுக்கு நானூறு ஐநூறு ரூபாய் வருகிறது. இன்றைக்கு 250 ரூபாயாவது கொடுத்தால்தான் அவர்களுக் குக் கட்டுபடியாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



82 மார்ச் 8] [திரு. சோ. அழகர்சாமி]

அடுத்து நெல்சாகுபடி பற்றிப் பார்த்தோமானால், நெல் அதிகமாக ற்பத்தி செய்ய வேண்டுமென்று சொல்கிறோம். அப்படி உற்பத்தி செய்யக் டியவர்களுக்குக் கட்டுபடியான விலை கிடைக்கிறதா என்றால் கிடைக்க ல்லை. மாநில அரசைக் கேட்டால் மத்திய அரசு விலை அதிகம் கொடுப்ப ற்குக் குறுக்கே நிற்கிறது என்று சொல்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, நான்கைந்து நாட்களுக்கு முன்னால் நம்முடைய மத்திய வளாண்மைத் துறை அமைச்சர் திரு. ராவ் வீரேந்திர சிங் அவர்கள் ங்கே என்ன சொல்லியிருக்கிறார்கள்? இன்ன விலை கொடுக்க வண்டுமென்று தமிழக அரசு கேட்கவில்லை என்று ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும்பொழுது பாராளுமன்றத்தில் சொல்லியிருக்கிறார்கள். இது உண்மையா? கோதுமைக்கு அதிக விலை கொடுக்கும்பொழுது நெல்லுக்கு அதிக விலை கொடுக்க மறுக்கிறார்கள் என்று சொல்லும் சமயத்தில் நாம் கேளாமல் இருக்கிறோமா? அவ்வாறு அவர்கள் சொல்வது உண்மையா? இதற்கு அமைச்சரவர்கள் பதில் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

மஞ்சளிலிருந்து எத்தனையோ பொருட்களை யெல்லாம் செய்வதைப் பார்க்கிறோம். கோவை பெரியார் மாவட்டத்தில் மஞ்சள் உற்பத்தி செய் கிறார்கள். ஆனால் மஞ்சளுக்கு ஏற்பட்ட கடுமையான விலை வீழ்ச்சியின் காரணமாக அங்குள்ளவர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எங்கள் வட்டாரத்திலும், இராமநாதபுரம், திருநெல்வேலி போன்ற மாவட்டங் களிலும் அதிகமாக மிளகாய் வற்றல் பயிரிடுகிறார்கள். அல்லது பருத்தி பயி ரிடுகிறார்கள். முன்பு 1,700 ரூபாய் வரையில் ஒரு குவிண்டால் மிளகாய் வற்ற லுக்கு விலை கிடைத்தது. ஆனால் இந்த வருஷம் 600 ரூபாய் 700 ரூபாய் தான் கிடைக்கிறது. இந்த அளவிற்கு அதிகமான விலைவீழ்ச்சி ஏற்பட்டதன் காரணமாக வேளாண்மையில் ஈடுபட்ட விவசாயிகளுக்கு கடுமையான நஷ்டம் ஏற்பட்டுள்ளது. அவ்வாறு சரியான விலை கிடைக்காத நேரத்தில் நாம் என்னதான் நவீன விதைகளைக் கொடுத்தாலும், சரியான பயிர்ப் பாதுகாப்புக்கு ஆலோசனை கூறினாலும், உலக வங்கி மூலம் செய்யப்படும் பயிற்சி மற்றும் திட்டம் மாதிரி புதிய திட்டங்களைக் கொண்டு வந்தாலும், தொடர்பு வழித் திட்டம் போன்றவற்றை நடைமுறைப் படுத்தினாலும் வேளாண்மைத் தொழில் இலாபகரமான தொழிலாக இல்லை என்றால் உற்பத் தியைப் பெருக்க முடியுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற உறுப்பினர்களுக்குத் தெரியும், கடனுக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும், இந்த வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் தாங்கள் வாங்கியிருக்கின்ற கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான கெடுவை 1981 டிசம்பர் 31 வரையில் தவணை நீட்டித்திருந்தோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இதுமாதிரி சில நிவாரண நடவடிக்கைகளைக் கொடுத்திருப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். கடன் சம்பந்தமாக நிவாரணம் சீராக, முறையாகச் செய்யப் பட்டிருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும். உயர் மட்டக் குழு பரிசீலனை செய்து பல பரிந்துரைகளை அரசாங்கத்திற்குச் செய்திருக்கிறது. அந்தப் பரிந்துரைகளைக்கூட அரசாங்கம் ஏற்றுக்கொண்டு உடனடியாகச் செய்யாத தன் காரணமாகப் பலயிடங்களில் விவசாயிகளின் பொருட்களின் மீது ஜப்தி போன்ற நடவடிக்கைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

வேளாண்மைத் தொழில் சீராக நடக்க வேண்டுமென்றால் முக்கியமான ஒன்று அந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு நஷ்டம் இல்லாமல் இருக்க வேண்டும். அதற்கு அவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டும். நம்முடைய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் மார்க்கெட்டிங் கமிட்டி மூலம் ஏற்பாடு செய்வதாகச் சொல்கிறார்கள். நெல்லின் விலையை நிர்ணயம் செய்து வாங்குவதுபற்றிச் சொல்கிறார்கள். இந்த நடவடிக்கைகள் அத்தனையும் அவர்களுக்குப் பூரண உதவியாக இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயத்திற்கு ஆதாரவாக இருக்கும் சிறுபாசனம், கால்நடை வளர்ச்சி ஆகிய துறைகள் இரண்டு மூன்று அமைச்சர்களிடம் இருப்பது சரியா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தத் துறைகளெல்லாம் இணைந்து ஒரே அமைச்சரிடத்தில் இருப்பது நல்லது அல்லவா என்பதையும் யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதை ஒட்டியதுதான் சிறுபாசனங்கள், கிணறு ஆழப்படுத்துவது; குளங்கள் அமைப்பது, அல்லது கால்நடை வளர்ப்பது இவற்றுக்கு உதவி பெற வேண்டு மென்றால், தனித்தனி அமைச்சரிடத்திலே, தனித்தனியாக இருப்பதன் காரண மாக, முடியவில்லை. இணைந்து ஒருவரிடமே அந்தப் பொறுப்புகள் எல்லாம் இல்லாததால், விவசாயிகளுடைய வருமானத்தைப் பெருக்க, திட்டங்கள் தீட்டுவதிலே சில ஊனங்கள் ஏற்படுகின்றன என்றே நான் நினைக்கிறேன்.

(மாலை 5-00)

அடுத்து, இந்த அவையிலே பலபேர்கள் சொல்லியிருக்கிறார்கள், பல தொழிற்சாலைகளுடைய கழிவுநீர்கள் பல இடங்களில் விவசாயப் பாசன





நீரில் கலப்பதால், விவசாயத்திற்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. கால்வாய்களில் அந்தக் கழிவுநீர் கலப்பதால், விவசாயம் பாதிக்கப்படுகிறது. குறிப்பாக, சிமெண்ட் ஆலைகள் இருக்கின்ற இடங்களிலே, பக்கத்திலே இருக்கின்ற நல்ல நிலங்களில் கூட விவசாயம் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டு விடுகிறது. அந்த சிமெண்ட் தூசியினால். அதைப் போக்க என்ன நடவடிக்கை என்பது பற்றி நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். வேளாண்மைக்கு இடைஞ்சலாக, விவசாய உற்பத்திக்குத் தடங்க லாக இருக்கக்கூடிய தொழிற்சாலைகள் கழிவுநீரை, கழிவுகளை, வேறு வழி களில் அகற்றுவதைப் பற்றி யோசிக்கவேண்டும். அதைக் கேட்டால், சுகாதார அமைச்சர் செய்ய வேண்டுமென்று சொல்வார்கள். குறிப்பாக, திருச்சியில், இருக்கக்கூடிய எரிசாராய தொழிற்சாலையின் கழிவு நீர் வையக்குண்டான் பாசனக் கால்வாயில் கலக்கிறது. அதே மாதிரி, நெல்லை மாவட்டத்திலுள்ள சிமெண்ட் தொழிற்சாலை, ஆலங்குளத்திலுள்ள சிமெண்ட் ஆலை துலுக்கப் பட்டியிலுள்ள சிமெண்ட் ஆலை ஆகியவற்றிலிருந்து வெளி வரும் சிமெண்ட் தூசிகளினால், பல கிராமங்களில் விவசாயிகளுடைய நிலம் பாழாக்கப்பட்டு, அவர்கள் விவசாயம் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. அவர்கள், நாங்கள் நிலத்தை வேண்டுமானால் விட்டுவிடுகிறோம்; நிலம் போனாலும் பரவாயில்லை, எங்களுக்கு ஆலையில் ஒரு கூலி வேலையாவது கொடுங்கள் என்று கேட்கக்கூடிய அவலநிலை, கேவலமான நிலை ஏற்பட்டிருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன். விவசாயத்தை நம்பியிருக்கக்கூடிய மக்க ளுக்கு எவ்வளவு கஷ்டங்கள் ஏற்படுகின்றன என்பதைத் தெரிவிக்கவே இதனைச் சொல்கிறேன்.

அடுத்து, மானிய விலையில் விதை கொடுக்கிறோம். விவசாயியிடம் பணம் இல்லாததால், தனக்கு கிடைக்கும் விதையைக் குறைந்த விலைக்கு வியாபாரியிடம் விற்று விடுகிறான். திரும்பவும் தனக்கு விதை வேண்டும் போது, அதிக விலை கொடுத்து, வாங்க வேண்டியிருக்கிறது. பூச்சி மருந்து அடிக்கும் முழுப் பொறுப்பையும் அரசே ஏற்க வேண்டும். இதனைத் தொடர்ந்து நீண்ட நாட்களாகச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். இன்றைக்கு நம்முடைய ஊராட்சி ஒன்றியங்களுடைய வட்டாரத்திலே கிராமங்களில் வேலையில்லாத இளைஞர்களை வைத்து, முடிந்த அளவு பணம் ஒதுக்கி, பயிர் பாதுகாப்பு நடவடிக்கையை அரசே செய்ய வேண்டும் என்பதை வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

அடுத்து, தொத்து நோயைத் தடுக்க அரசே தன்னுடைய சொந்தச் செல வில் சில நடவடிக்கைகளை மேற்கொள்கிற மாதிரி காலரா ஊசி போடு கிறோம், அம்மை குத்துகிற நடவடிக்கை எடுக்கிறோம். அதேமாதிரி பயிர்

களை அழிக்கிற பூச்சிகளைக் கொல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒரு
பகுதியில் ஒருவர் வயலில் இந்தத் தடுப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டாலும்,
பூச்சி மருந்து தெளித்தாலுங்கூட, அருகிலுள்ளவர், இன்னொருவர் அதனைச்
செய்யாமலிருந்தால் பலனில்லை ; மறுபடியும் பூச்சிகள் தாக்கக்கூடிய நிலை
ஏற்படுகிறது. ஆகவே, தொடர்ச்சியாக, அந்தந்த வட்டாரத்திலே ஏற்படும்
போது, அரசு அந்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்பது ஒன்று. இல்லாவிட்
டால், ஒரு குறிப்பிட்ட குறைந்த, கட்டணத்தை வசூலித்தாவது, ஊராட்சி
ஒன்றியத்தின் மூலமாக, படித்து வேலையில்லாமலிருப்பவர்களுக்கு வேலை
வாய்ப்பளிக்கும் வகையில், இக்காரியத்தைச் செய்தால், ஓரளவு பயிர்களை
பாதுகாக்க முடியும்.

நம்முடைய அரசுப் பண்ணைகள் பல இடங்களில் இருக்கின்றன.
இந்த அரசுப் பண்ணைகள் எப்படி செயல்படுகின்றன என்பதுபற்றி நமக்கு
'ஐடியா' கிடையாது. குளித்தலை தாலுகாவிலே இருங்கூர் விவசாயப்
பண்ணை 200 ஏக்கர் நிலத்தில் இருக்கிறது என்று சொல்கிறார்கள்.
ஆனால், அதிலே 15 ஏக்கர்தான் சாகுபடியாகிறது. இன்னும் சில பண்ணை
களில் இதே போல் முழுவதும் சாகுபடி செய்யாத நிலையிருக்கிறது. ஆகவே,
அங்கங்கே அனுபவம் பெற்ற விவசாயிகளைக் குழுவாகப் போட்டு அவர்
களுடைய ஆலோசனைகளைப் பெறுவது நல்லது என்று கருதுகிறேன்.

அடுத்து, அரசுப் பண்ணைகளிலே வேலை செய்கிற தொழிலாளர்களுக்கு
அரசாங்கம் போட்ட சட்டதிட்டத்தின்படி கூலி கொடுக்காவிட்டால், பிறகு
வேறு யார்தான் கொடுப்பார்கள் ? வெளியிலே நிலப்பிரபுக்கள், முதலாளிகள்,
ஒழுங்கான கூலி கொடுப்பதில்லையென்றுதான் அரசாங்கம் இந்தக் கூலி
கொடுக்க வேண்டுமென்று சட்டம்போடுகிறது ஆனால், அரசாங்கம் நடத்தக்
கூடிய பண்ணைகளிலே சங்கம் அமைத்தாலே அதிகாரிகளுக்குக் கோபம்
வருகிறது. அரசாங்கம் நிர்ணயித்த கூலியைக் கேட்டாலே கோபம் வருகிறது.
சங்கம் வைக்க முயற்சி செய்தால் அவர்களை வெளியேற்றுகிறார்கள். அந்த
மாதிரி இருக்கக்கூடாது. அரசு நடத்தக்கூடிய பண்ணைகளாக இருந்தாலும்
விதைப் பண்ணைகளாக இருந்தாலும், விவசாயப் பண்ணைகளாக இருந்தா
லும், நியாயமான கூலி கொடுத்து வேலை வாங்க வேண்டும். நிர்ணயம்
பண்ணிய கூலியைக் கொடுக்க வேண்டுமென்று சங்கம் அமைத்தால் அதிகாரி
களுக்குக் கோபம் வருகிறது. அதை விடுத்து சங்கம் வைத்தால், அழைத்து,
உங்களுடைய கோரிக்கைகளைச் சொல்லுங்கள் உட்கார்ந்து பேசலாம் என்று
சொல்ல வேண்டும். சங்கம் வைத்தால் சரியல்ல என்று சொல்வது சரியல்ல.
அதை அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அதே மாதிரியாக இன்றைக்கு வறட்சி ஏற்பட்ட காலத்திலே நம்முடைய துறையின் மூலமாக கிணறுகளை ஆழப்படுத்துவதாகச் சொல்லி இருக்கிறார்கள். அதுமாத்திரமல்லாமல், வறட்சி என்று சொல்லக்கூடிய நேரத்திலே, நெல்லை, கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாக மற்ற மாவட்டங்களில்தான் வறட்சி என்று சொல்லி இருக்கிறார்கள். குறிப்பாக நான் சொல்ல விரும்புகிறேன். நெல்லை மாவட்டத்திலே தாமிரபரணி தண்ணீர் பாசனப் பகுதிகள் தவிர, மற்றப் பகுதிகளான கோயில்பட்டி, சங்கரன்கோவில் ஒட்டப்பிடாரம், விளாத்திகுளம் போன்ற பகுதிகள் எல்லாம் வறட்சிப் பகுதிகளாக இருக்கின்றன. கண்மாய்களில் தண்ணீர் இல்லை என்று கலெக்டர் கூட ரிப்போர்ட் அனுப்பியிருக்கிறார். நெல்லை மாவட்டத்திலே நாங்குனேரி தாலுகா, சாத்துக்குடி வட்டம், கோவில்பட்டி தாலுகா, சங்கரன்கோயில் தாலுகா, ஒட்டப்பிடாரம் தாலுகா, விளாத்திகுளம் தாலுகா போன்ற பகுதிகளில் கடுமையான குடிநீர்ப் பஞ்சம் இருக்கிறது. அதைத் தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அடுத்து கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக ஒரு கண்டிஷன் போடப்படுகிறது. 600 அடிக்கு மத்தியில் கிணறுகள் தோண்ட வேண்டுமென்றாலும் ஆழப்படுத்த வேண்டுமென்றாலும் அதற்கு அரசு பணம் கொடுக்காது என்ற கண்டிஷன் இருக்கிறது. அந்த கண்டிஷனை நீக்கிவிடவேண்டும். இதற்கு ரெவின்யூ டிபார்ட்மெண்டிலிருந்து கொடுக்கிற தக்காவிக் கடனை அதிகப்படுத்தி கிணறுகளை ஆழப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

நம் துறையின் மூலமாக வேளாண்மை பொறியியல் கூட்டுறவு இணையம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதிலே 231 டிராக்டர்கள், 185 டிரெய்லர்கள், 149 ஆயில் எஞ்சின்கள், 114 விதை தெளிப்பான்கள் போன்றவைகள் வாடகைக்கு விடப்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த கூட்டுறவு நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்டபோது அவைகளிலே தேர்ந்து எடுக்கப்பட்ட அமைப்புகள் இல்லை. சாதாரணமாக சிறு சிறு விவசாயிகள் பிரைவேட் டிராக்டர்களை 70, 80 ரூபாய் கொடுத்து வாடகைக்கு எடுத்து உபயோகிக்கிறார்கள். அவர்களுக்கு மலிவான ரேட்டிலே வாடகைக்குக் கொடுத்து உதவக்கூடிய முறையில் ஏற்பாடு செய்யும்வகையில் வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கஙளுக்கு அதிகமான டிராக்டர்களை வாங்கவேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக அமைப்புகள் மூலமாக நடவடிக்கை எடுத்தால் பயனுள்ளதாக இருக்கும். அதை உடனடியாகச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு நம்முடைய அரசு பண்ணைக் கழகம் 1974 ஆம் ஆண்டு 2 கோடி மூலதனத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இப்போது 3¾ கோடி நட்டத்தில் இயங்கிக்கொண்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

[திரு. சோ. அழகர்சாமி] [1982 மார்ச் 8

விவசாயத்திலே இலாபம் இல்லை என்று இப்போதாவது தெரிந்து கொள்ள வேண்டும். அதிலே ஏகப்பட்ட நட்டம் ஏற்படுகின்றது. அந்த நட்டத்தைப் போக்க ஏற்பாடுகள் என்ன என்பது சரியாகத் தெரியவில்லை.

இன்னும் பல இடங்களில் தரிசான நிலங்கள் எவ்வளவோ இருக்கின்றன. அரசுக்குச் சொந்தமான தரிசு நிலங்கள். உச்சவரம்பு மூலம் மிச்சமாக இருக்கின்ற நிலங்கள் பல இடங்களில் விநியோகிக்காமல் தரிசாக இருக் கின்றன. அந்த நிலங்களில் இந்த அரசுப் பண்ணைக் கழகங்களின் மூலம் அதிகமாக முயற்சி செய்து நல்ல சாகுபடிக்கு ஏற்பாடு செய்தால் பல பேர் களுக்கு வேலை கிடைக்கும் ஏற்பாட்டை செய்யலாம்.

இன்னும் ஒன்று. இராமநாதபுரம் மாவட்டத்தில் ஏற்கனவே வறட்சி ஏற்பட்ட பகுதிகளிலே, ஆர். எஸ். மங்கலத்திலே கடற்கரை பகுதியிலே உள்ள பாதிக்கப்பட்ட நஞ்சை நிலங்களிலே சீர்திருத்தம் செய்ய 1½ லட்சம் ரூபாய் சாங்ஷன் செய்து இருந்தார்கள். ஆனால் இதுவரையில் எந்தவிதமான செலவும் செய்யப்படவில்லை. அது விவசாயிகளுக்குப் போய்ச் சேரவில்லை, ஆகவே அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய அரசு சார்பிலே தேங்காய் சிவல் தொழிற்சாலை ஒன்று இருக் கிறது. அதிலே 300 பேர்கள் வேலை செய்கிறார்கள் என்று சொல்லப்பட் கிறது. அதிலே திடீர் திடீரென்று வேலை நிறுத்தம் ஏற்பட்டு வேலை இல்லாமல் போய்விடுகிறது. காரணம் கேட்டால், போதிய அளவு தேங்காய் கிடைக்காமல் இந்த நிலை ஏற்படுவதாகச் சொல்லப்படுகிறது. இதற்கு என்ன காரணம் என்று கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து அமைச்சர் அவர்கள் கொடுத்துள்ள அறிக்கையிலே சூரியகாந்தி எண்ணை எடுக்கும் தொழிற்சாலைக்கு 10 சதவிகிதம்தான் நமக்கு வேண்டிய சூரியகாந்தி விதை கிடைக்கிறது என்று சொன்னார்கள். அரசாங் கம் நியாய விலை கொடுக்கும் என்று விவசாயிகள் சூரியகாந்தியை பயிர் செய்தார்கள். ஆனால் விலை சரியாக கொடுக்காததால் மறுபடியும் சூரிய காந்தி போடுவதையே நிறுத்திவிட்டார்கள். மீண்டும் இந்த சூரியகாந்தியை மானாவாரிப் பகுதிகளிலே பயிர் செய்தால், நாட்டிலே எண்ணைப் பஞ்சம் ஓரளவு தீரும். இது மிகவும் பிரயோசனமான தொழில் மட்டுமல்ல, விவசாயத்திற்கு உதவியாக இருக்கின்ற தொழிலாகும். இந்தத் தொழிற் சாலையை வருடம் பூராவும் இயங்கச் செய்கின்ற வகையில், அந்த சூரியகாந்தி விளைச்சலை உற்பத்தி செய்து அந்தத் தொழிற்சாலை இயங்கக்கூடிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1982 மார்ச் 8] [திரு. சோ. அழகர்சாமி]

இன்னும் பல இடங்களில் பார்த்தால் விவசாயிகளுக்குத் தடங்கலாக இருப்பது—கோவை மாவட்டத்தின் விவசாயிகள் சொன்னார்கள்—கோவை மாவட்டத்தில் பல இடங்களில் பயிர்தடுப்பு என்ற திட்டம் வைத்திருக்கிறார் கள். சில இடங்களில் மேடான வழியாக கால்வாய் போகின்ற இடங்களில் கழிவு நீர் போய்க்கொண்டு இருக்கிறது. இந்தக் கழிவு நீர் போகின்ற இடங் களில் நெல் பயிர்தான் பயிரிடமுடியும். இப்படி வாய்க்காலில் நீர் போகின்ற இடங்களில் வேறு எந்தப் பயிரும் போடமுடியாது. அப்படி வேறு பயிர் போட்டால் அந்தப் பயிர் அழுகிவிடும். ஆனால் நெல் பயிர் செய்தால் தண்டத் தீர்வை விதிக்கும் நிலைமை இருக்கிறது. ஆகவே, எந்தெந்தக் காலங்களில் எந்தெந்தப் பயிர் வருமோ அதைப் பயிரிடுவதற்கு விவசாயிகளுக்கு வசதி செய்து தர வேண்டும். இந்த தண்டத் தீர்வை விதிக்கக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாலை 6-10)

நம்முடைய வேளாண்மைக்கு மிகமிக அவசியமானது மின்சாரம். ஆனால் தேவைப்படுகின்ற நேரங்களில் இந்த மின்சாரம் விவசாயத்திற்கு அளிக்கப் படுவது இல்லை. காலையில் இவ்வளவு நேரம், மாலையில் இவ்வளவு நேரம் மின்சாரம் வழங்கப்படும் என்று கண்டிப்பான முறை இருக்கவேண்டும். பல இடங்களில் தேவையான நேரங்களில் மின்சாரம் கிடைக்காத காரணத்தால் பயிர்கள் பூராவும் தீய்ந்து போகும் ஆபத்து இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் மின்சாரத்துறை அமைச்சரோடு பேசி, வேறு பல பெரிய தொழிற்சாலைகளுக்கு, தொழில்களுக்கு ஜென ரேட்டர் மூலமாக மின்சாரம் தயாரித்துக்கொள்ளும் வாய்ப்புள்ளவர்களுக்கு மின்சாரம் அளிப்பதில் முக்கியத்துவம் அளிப்பதை விட, இந்த விவசாயத் திற்குக் குறைந்தபட்சம் ஒரு நாளைக்கு காலையில் 6 மணி நேரம் அல்லது மாலையில் 6 மணி நேரம் நிச்சயமாகக் கிடைக்க உத்தரவாதம் பெற்றுத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இரவு நேரங்களில் மின்சாரம் கொடுத்தால், நெற்பயிருக்கு மட்டும்தான் வாய்க்கால் மூலமாக தண்ணீர் பாய்ச்சிக் கொள்ளவும் சரியாக இருக்கும். ஆகவே, அமைச்சர் அவர்கள் இதற்கான நடவடிக்கைகளை மின்சாரத் துறையோடு பேசி முடிவு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வடாற்காடு மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம், நெல்லை மாவட்டம் ஆகியவற்றில் தொடர்ந்து 2-3 வாரம் மின்சாரம் வராமல் போய்விட்டது. அதன் காரணமாக விவசாயிகள் மிகப் பெருத்த நஷ்டத்திற்குள்ளாக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட நிலைமைகளைத் தவிர்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. சோ. அழகர்சாமி] [1982 மார்ச்

இன்றைக்குப் பெரியார் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், மஞ்சள் வெல்லம் மிக முக்கியமான உற்பத்திப் பொருளாக இருக்கிறது. சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக, கூட்டுறவு சங்கத்தின் மூலமாக அதை வாங்கி விற்பனை செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். இன்றைக்கு வெளிமார்க்கெட்டில் வெல்லம் ஒரு கிலோ ரூபாய் 2½-க்கு விற்கப் படுகிறது. ஆனால் அவர்கள் கொள்முதல் செய்கிற விலை 1 ரூபாய்தான். அரசாங்கம் 2 ரூபாய் என்று கொள்முதல் செய்தால் கூட, 50 பைசா அதிக மாக வைத்து, 2-50 ரூபாய் விற்கலாம். வெல்லத்தைப் பொறுத்தவரையில் இந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதைப் போலவே, மஞ்சள் விலை இன்றைக்குத் தலைகீழாக விழ்ந்து விட்டது. அரசாங்கமே அதை வாங்கி ஏற்றுமதி செய்யலாம். அதற்குவேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் இப்போதே மேற்கொள்ள வேண்டும். அப்படி அரசு நடவடிக்கை எடுத்தால் இந்தமாதிரியான பெரிய நஷ்டம் விவசாயி களுக்கு ஏற்படுவது தடுக்கமுடியும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

இன்றைக்கு விவசாயிகள் மத்தியில் ஒரு கொந்தளிப்பான நிலைமை இருக்கிறது. கட்டுப்படியாகக்கூடிய விலை அவர்கள் உற்பத்திப் பொருள் களுக்குக் கிடைக்கவில்லை என்கிற மிகப் பெரிய கோபம் அவர்களிடத்தில் இருக்கிறது. இந்த நிலையைப் போக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து, நியாயமான விலையை அவர்கள் உற்பத்திப் பொருள்களுக்கு கிடைக்க செய்ய வேண்டும். இப்போது நெல்லுக்கு 115 கொடுக்கிறீர்கள். ஆனால் வெளிமார்க்கெட்டில் 150 ரூபாய் என்று விற்கப்படுகிறது. ஒரு சிறு விவசாயி தன்னுடைய சொந்த உபயோகத்திற்காக 2 மூட்டை நெல்லை அரிசி ஆலைக்கு எடுத்துச்சென்றால்கூட அங்கேயும் அதிகாரிகள் சென்று நிர்பந்த மாக வாங்கிவிடுகிறார்கள். அவர்களால் வெளியேயும் நியாய விலைக்கு விற்க முடியவில்லை. ஆனால் அதே நேரத்தில் திருவாடுதுறை தருமபுர ஆதீனம், போன்ற பெரிய பெரிய மடாதிபதிகள் எல்லாம் லட்சக்கணக்கான மூட்டை களை வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களிடத்தில் லெவி வாங்குவது இல்லை. அவர்கள் லெவி கொள்முதல் எல்லாம் முடிந்தபிறகு அதை வெளியே 150 ரூபாய், 200 ரூபாய் என்று விற்றுவிடுகிறார்கள். தற்போது வெளி மார்க் கெட்டில் 1 கிலோ அரிசி 2.50 ரூபாய் அல்லது 3 ரூபாய் என்று விற்கிறது. 115 ரூபாய் என்று கொள்முதல் செய்தால் 2 ரூபாய்க்கு மேல் அரிசி விலை போகா ஆகவே, இந்த மாதிரி சிறுசிறு விவசாயிகள் பாதிக்கப்படுகிற நிலைமை இருப் பதால், அவர்களுக்கு கட்டுப்படியாகக் கூடிய விலையைக் கொடுக்கவேண்டு என்று கேட்டுக்கொள்கிறேன். நெல்லை மாவட்டம். இராமநாதபுரம் மதுரை மாவட்டம் போன்ற இடங்களில் விவசாயிகளை அடுத்த இடத்துக்கு கொண்டுசெல்ல விடாமல் தடுத்துக் கொள்முதல் செய்கிறார்கள். ஊருக்கு ஊர்



1982 மார்ச் 8] (திரு. சோ. அழகர்சாமி)

செக்போஸ்ட் வைத்து இருக்கிறார்கள். ஓரிரு மூட்டைகளை எடுத்துக்கொண்டு போனால் கூட பிடித்துக்கொள்கிறார்கள். இதை எதிர்த்து ஒரு சில இடங் களில் போராட்டம் கூட நடத்தியிருக்கிறார்கள். இதுகுறித்து முதலமைச்சர் அவர்களிடத்திலும் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உணவு அமைச்சரிடத் திலும் சொல்லியிருக்கிறேன். குறிப்பாக இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் இந்தக் கொள்முதல் கெடுபிடியாக இருப்பதால், அது குறித்து நடவடிக்கை எடுக்க மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர் களும் தகுந்த ஏற்பாடுகளைச் செய்து, அவர்களுக்குக் கட்டுப்படியாகக் கூடிய விலையைப் பெற்றுத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, ஒரு முக்கியமான விஷயத்தை குறிப்பிட விரும்புகிறேன். இன்றைக்கு விவசாய உயர்மட்டக் குழு தன் பரிசீலனைகளைச் செய்திருக் கிறது. அதன்மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பெரிய விவசாயி, சிறிய விவசாயி என்று பார்க்காமல் எல்லா விவசாயிகளுக்கும் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் அமைந்துள்ள உயர்மட்டக் குழுவின் பரிந்துரை அடிப் படையில் வட்டியைத் தள்ளுபடி செய்ய வேண்டும்; கடன்களை, அதாவது அசலை, சுலபமான தவணைகளில் திருப்பிச் செலுத்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இந்தப் பரிந்துரைகளை அந்தக் குழு செய்திருப்பதாக அறிகிறேன்.

சிறு விவசாயிகளுக்குத் தள்ளுபடி செய்திருப்பதாகச் சொன்னார்கள். இராமநாதபுரத்தில் சில இடங்களில் அப்படி தள்ளுபடி செய்யவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் சிவசாமி அவர்கள் ஒரு மனு கொடுத்திருக்கிறார்கள். அங்கே தொடர்ந்து 4, 5 வருஷங்களாக வறட்சி ஏற்பட்டு, கூட்டுறவுக் கடன் களைக் கட்ட முடியவில்லை. வருவாய்த் துறையின் மூலம் அங்கே வறட்சி பாதிக்கப்பட்டிருக்கிறது என்று அறிவித்திருக்கிறார்கள். வறட்சி நிவாரணப் பணிகளைச் செய்திருக்கிறார்கள். ஆனால் திரு. சிவசாமி அவர்கள் சொல் கின்ற அந்த விவசாயக் கூட்டுறவுச் சங்கத்தில் வழங்கப்பட்ட கடன்களை 3 ஆண்டுக் கடன்களாக மாற்றி அமைக்கவில்லை என்ற ஒரே காரணத்திற்காக அவர்களுக்குத் தள்ளுபடி இல்லை என்று சொல்லி, வசூல் செய்வதிலே கெடுபிடி காட்டுகிறார்கள். ஐந்து ஏக்கருக்குக் கீழே இருக்கிற சிறு விவசாயிகளுக்கு நிவாரணம் என்று அறிவித்தாலும், வறட்சி, பஞ்சம் என்று அந்தப் பகுதி அறிவிக்கப்பட்டிருந்தாலும் 3 ஆண்டுக் கால கடனாக மாற்றியமைக்கவில்லை என்ற காரணத்திற்காக வட்டியையும் தள்ளுபடி செய்யவில்லை; அபராத வட்டியையும் தள்ளுபடி செய்யவில்லை. இது சரியல்ல.

அது மட்டுமல்ல. வட்டியையும், அபராத வட்டியையும் ஒன்றாகச் சேர்த்து, அசலை வசூல் செய்வதுபோல ஒரே தடவையில் வசூல் செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். விவசாயிகள் கட்டமாட்டோம் என்று

சொல்லவில்லை. இன்றைக்கு ஒரே ஒரு சங்கத்தைத் தவிர மற்ற விவசாயிகள் சங்கங்கள் எல்லாம் ஒன்றாக இணைந்திருக்கின்றன. அவர்கள் பாக்கியைக் கட்டுகிறோம், ஆனால் முடியவில்லை என்று சொல்கிறார்கள். அதற்கு பல காரணங்களைச் சொல்கிறார்கள். மிளகாய் 1,500 ரூபாய்க்கு விற்றது இன்றைக்கு 700 ரூபாய்க்குத்தான் விற்கிறது. நெல்லுக்கு நியாய விலை கிடைக்கவில்லை. கரும்பை வெல்லமாக மாற்றி விற்றாலும் குவிண்டாலுக்கு 100 ரூபாய்தான் கிடைக்கிறது. ஆகவே, பெரிய விவசாயி, சிறிய விவசாயி என்று பார்க்காமல் எல்லோருக்கும் வட்டியை தள்ளுபடி செய்யுங்கள் என்று கேட்கிறார்கள். அதனால் அரசுக்கு சுமார் ரூபாய் 18 கோடிதான் இழப்பு ஏற்படுகிறது. அசலைக் கொஞ்சம் கொஞ்சமாக வசூல் செய்துகொள்ளுங்கள். கஷ்டத்தில் இருக்கிற விவசாயிகளிடத்தில் போய் நிர்ப்பந்தம் செய்ய வேண்டாம். அதற்குப் பதிலாக கொஞ்சம் நீக்குப்போக்காக அரசாங்கம் நடந்துகொண்டு, சில சலுகைகளை அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசாங்கம் நீக்குப்போக்காக நடந்துகொள்ளவில்லை என்றால் விவசாய உற்பத்தி குறைந்துவிடும். விவசாய உற்பத்தி குறைந்தால் ஆலை உற்பத்தியும் குறையும். இன்றைக்குப் பருத்தி இல்லை என்றால் பஞ்சாலை உற்பத்தி குறைந்துவிடும்; தொழிலாளர்களுக்கு வேலை பாதிப்பு ஏற்படும்.

தமிழ்நாட்டுக்கு 14 இலட்சம் பேல் பஞ்சு தேவையாக இருக்கிறது. ஆனால் இங்கே 4.8 இலட்சம் பேல்தான் உற்பத்தியாகிறது. அடுத்து ஐந்து இலட்சம் பேல் உற்பத்திக்கு இலக்கு நிர்ணயித்திருப்பதாகச் சொல்லப் படுகிறது. இவ்வளவு குறைந்த அளவுக்கு உற்பத்தி ஆவதற்குக் காரணம் என்ன ? இங்கே விவசாயிகள் இல்லையா ? இருக்கிறார்கள். உற்பத்திச் செய்வதற்கான வசதியும் இருக்கிறது. ஆனால் அவர்களுக்கு ஊக்கம் இல்லை, உற்சாகம் இல்லை. அதனால் அவர்கள் உற்பத்தியில் நாட்டம் இல்லாமல் இருக்கிறார்கள். விளையும் நேரத்தில் குறைந்த விலைக்குத்தான் விற்க வேண்டியிருக்கிறது. அதை மில் முதலாளிகள் மலிவான விலையில் வாங்கி வைத்துக்கொண்டு, கோடி, கோடியாக கொள்ளை இலாபம் அடிக்கிறார்கள். அதனால் விவசாயிகளுக்கு எந்தவிதமான பலனும் இல்லாமல் கஷ்டப்படு கிறார்கள்.

மகாராஷ்டிரத்தில் அரசாங்கமே ஒரு கார்ப்பரேஷனை அமைத்து, விவசாயிகளிடமிருந்து நேரடியாக பருத்தியை வாங்குகிறார்கள். அதைப் போல நம்முடைய மாநிலத்திலும் செய்ய வேண்டும். நம்முடைய மாநிலத்தில் இருக்கிற கூட்டுறவு ஆலைகளே இங்கு உற்பத்தியாகும் பஞ்சை



வாங்கலாம். அவர்கள் நியாயவிலை கொடுத்துப் பஞ்சை வாங்கினால் விவசாயிகளுக்குப் பலன் கிடைக்கும். அதைக்கூட செய்ய முடியாததால் அவர்கள் தனியார்களிடம் குறைந்த விலைக்கு விற்கவேண்டியிருக்கிறது. நமக்கு 14 இலட்சம் பேல் தேவையாக இருக்கிறபோது 4 அல்லது 5 இலட்சம் பேல்தான் உற்பத்தியாகிறது. இதையே வாங்க முடியவில்லை. மகாராஷ்டிர ஸ்டேட் ட்ரேடிங் கார்ப்பரேஷன் மாதிரி நம்முடைய மாநிலத்தில் ஒரு கார்ப்ப ரேஷனை அமைத்து பருத்தியைக் கொள்முதல் செய்யப்போவதாகச் சென்ற ஆண்டு நம்முடைய அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மகாராஷ்டிராவில் அப்படிச் செய்கிறார்கள். நம்முடைய மாநிலத்திலும் அப்படிச் செய்தால் பயனுடையதாக இருக்கும். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலம் உளுந்து, மிளகாய் வத்தல், வெல்லம் போன்றவை எல்லாம் விற்பனை செய்யப்படுகின்றன. அவைகளை, விளை கிற காலத்தில் நியாய விலை கொடுத்து வாங்கி வைத்துக்கொண்டால் விவசாயி களுக்குச் சரியான விலை கிடைக்கும். அதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

கரும்புக்கு உரிய விலை கிடைக்கவில்லை. நெல்லுக்கும் விலை கட்டுப் படியாகவில்லை. விளைந்த நெல்லை நல்ல விலைக்கு வெளியில் விற்கமுடிய வில்லை. இப்படிப்பட்ட கஷ்டங்கள் எல்லாம் இருப்பதால் நான் ஏற்கெனவே சொன்னதைப்போல எல்லா விவசாயிகளுக்கும் உதவும் முறையில் முந்தைய கடனுக்கு வட்டியையும் அபாரத வட்டியையும் தள்ளுபடி செய்ய வேண்டும்; கடன் அசலை சுலபமான தவணைகளில் வசூல் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். சிறு விவசாயிகளுக்குப் பூரணமாகக் கடனை தள்ளுபடி செய்ய வேண்டும்; விளைபொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

(மாலை 5-20)

அப்படிச் செய்தால் தமிழகத்திலே தேவையான உணவுப்பொருளை பெற்றுக்கொள்ள முடியும். அதோடு பஞ்சைக்கூட நம்முடைய மாநிலத்திலே முழுமையாக உற்பத்தி பண்ணக்கூடிய வகையிலே நிலைமையை ஏற்படுத்த முடியும். ஆகவே விவசாயிகளுக்கு உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு அவர்கள் மீது வரி, கடன், வசூலில், கெடுபிடி, ஜப்தி என்ற தாக்குதல் நடத்தாமல் பாதுகாப்பு பெற்றுத் தரவேண்டும் என்று வேளாண் மைத்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. எம். எஸ். மாணிக்கம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களாலே கேட்கப்பட்டிருக்கின்ற இந்த மானியக் கோரிக்கைகளின் மீது பேசுகின்ற வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டிலே புரட்சித் தலைவர் அவர்களின் அரசு வந்ததற்குப் பின்னால் வேளாண்மைத் துறையிலே ஏற்பட்டிருக்கின்ற மறுமலர்ச்சியின் காரணமாக வேளாண்மைத் துறை சிறப்புப் பெற்று இன்று விவசாய உற்பத்தி பெருகி இருக்கின்ற நிலைமையினை இந்த நாடு அறிந்திருக்கின்றது. 1981-82 ஆம் ஆண்டிலே அரிசி உற்பத்தி 60 இலட்சம் டன்னாக இருந்தது. இன்று 1982-83 ஆம் ஆண்டிலே எதிர்பார்க்கப்படுவது 68 இலட்சம் டன். சிறுதானிய உற்பத்தியைப் பொறுத்த வரையிலே 22.8 இலட்சம் டன்னாக இருந்தது 23.50 இலட்சம் டன்னாகவும், பயிறு வகைகளைப் பொறுத்தவரையிலே 3.30 இலட்சம் டன்னாக இருந்தது 4.80 இலட்சம் டன்னாகவும், கரும்பினைப் பொறுத்தவரையிலே 28.70 இலட்சம் டன்னாக இருந்தது 23.52 இலட்சம் டன்னாகவும், பருத்தியினைப் பொறுத்த வரையிலே 4.80 இலட்சம் டன்னாக இருந்தது 5.00 இலட்சம் டன்னாகவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வாறு விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களை அதிகப்படுத்துவதற்காக அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது என்பதிலே விவசாயப் பெருமக்கள் அனைவரும் பெருமைப் படுகிறார்கள்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்—தலைமை)

விவசாயிகளுக்கு இன்றையதினம் அவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களுக்குப் போதிய விலை கிடைக்கவில்லை என்பதை இங்கிருக்கின்ற அத்தனை பேரும் ஏற்றுக்கொள்கிறார்கள். மத்தியிலே ஆட்சி நடத்துகின்றவர்களின் திட்டங்களின் காரணமாக இங்கே இடுபொருட்களின் விலையும், விவசாயிகள் பயன்படுத்தக்கூடிய பொருட்களின் விலையும் அதிகமாகி இருக்கின்றன. விவசாயிகள் பயன்படுத்தக்கூடிய எல்லா பொருட்களின் விலையும் இன்று மத்திய அரசு போட்ட திட்டங்களினால் கூடிவிட்டது. ஆனால் விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய உணவுப் பொருட்களுக்கோ கட்டுபடியாகக்கூடிய விலை கொடுக்கப்படாத நிலைமை இருக்கின்றது. இதை மாநில அரசு உணர்ந்து மத்திய அரசிடத்திலே வலியுறுத்தினாலும் மத்திய அரசினர் குறிப்பாக நெல்லை உற்பத்தி செய்யக்கூடிய மாநிலங்களுக்கு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் விலையினை அதிகப்படுத்திக் கொடுக்காத நிலைமை இருக்கிறது. இன்றைக்குப் பஞ்சாப், ஹரியானா போன்ற மாநிலங்களிலே கூட நெல் அதிகமாக உற்பத்தி செய்யக்கூடிய நிலைமை இருந்தாலும் கூட கோதுமைக்கு அதிகமாக விலை கொடுக்கிறார்களே தவிர நெல்லுக்கு அதிகமான விலை தர மறுக்கிறார்கள். இன்றைக்கு அந்த மாநிலங்களும் கூட நெல்லின்



விலையினை உயர்த்தித் தரவேண்டும் என்று வற்புறுத்துகின்ற நிலைமை உருவாகி இருந்தாலும் கூட அவ்வாறு விலையினை உயர்த்தித் தராமல் மத்திய அரசு இருக்கின்றது. அப்படிப்பட்ட நிலைமையிலே விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்கின்ற நெல்லின் அளவைக் கூட குறைத்துக்கொள்ளலாமா என்று எண்ணத்திற்கு ஆளாகக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. அந்த விவசாயிகளுக்குக் கட்டுபடியாகக் கூடிய விலையைத் தர ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களின் மூலமாக நியாயமான விலை விவசாயிகளுக்குக் கிடைக்க இந்தத் தமிழக அரசு முயற்சி எடுத்து வருகின்றது. வேளாண்மைக் கூடங்கள் கட்டி ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களையும் அதிகப்படுத்தி விவசாயிகள் தங்களுடைய உற்பத்திப் பொருட்களை சந்தையிலே வந்து விற்று நல்ல விலையினைப் பெறுவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

அடுத்து விவசாயிகளின் கடன் பற்றி எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். விவசாயக் கடன் எப்படி ஏறியது என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். இதற்கு முன்னாலே ஆண்ட திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே அதிகப்படியான கடன்கள் கொடுக்கப்பட்டன. அதிகப்படியான கடன்கள் கொடுக்கப்போகிறோம். இந்த ஆண்டு 40 கோடி கொடுத்திருக்கிறோம் அடுத்த ஆண்டு 60 கோடி கொடுக்கப்போகிறோம் என்று சொல்லி மத்திய வங்கியிலே இருக்கின்ற தலைவர்களிடத்திலே எல்லாம் கடனை அதிகப்படுத்த வேண்டும் என்று உத்தரவிட்டு அதன்மூலம் நெல் சாகுபடி செய்கின்ற இடத்திலே எல்லாம் கரும்பு சாகுபடி செய்ய முயற்சிப்பதாக எல்லாம் சொன்னார்கள்.

நெல் உற்பத்திக்காக, பின்னால் பருத்திக்காக கடன் என்று சொன்னாலும் உண்மையில் உற்பத்தி செய்யாமல் கடன்களை அதிகப்படுத்தி விவசாயிகளை கடன்காரர்களாக உருவாக்கிவிட்டு அந்த விவசாயிகளின் அல்லல்களை, அவர்கள் சங்கடங்களைப் பயன்படுத்திக்கொண்டு அதன் மூலம் இந்த அரசை ஆட்டிக்கொள்ளலாம் அல்லது இந்த அரசைக் கவிழ்க்கலாம் என்று அவர்கள் போராட்டத்தில் ஈடுபடுகிறார்களே தவிர உண்மையில் விவசாயிகள் கடன்காரர்களானது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில்தான் தொடங்கியது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் இங்கே குறிப்பிட்டார்கள். மேட்டூரில் தண்ணீரை காலதாமதமாகத் திறந்து விட்டு முன்னரே திறந்து விட்டதாகச் சொன்னதாக சொன்னார்கள் என்று, மேட்டூரில் தண்ணீர் அதிகமாக வந்தால்தான் திறக்கமுடியும் என்ற நிலை இருக்கும்போது, குறைந்த அளவு தண்ணீர் இருக்கும்போது திறந்துவிட்டுவிட்டு தண்ணீர் குறைவாக

வருகிறபோது பயிர்கள் எல்லாம் காய்ந்து விவசாயிகள் நஷ்டப்படுவதைவிட சற்று காலதாமதமானாலும் தண்ணீர் தொடர்ந்து கிடைக்கக்கூடிய நிலை வந்தால்தான் தண்ணீர் திறந்து விட வேண்டும் என்று புரட்சித் தலைவர் அவர்கள் அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டது. அதனால் சில விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது உண்மைதான். அந்த விவசாயிகளுக்கு நஷ்டஈடு தொகையை வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் இன்று புரட்சித் தலைவர் அவர்கள் அரசு எந்த அரசும் செய்யாத அளவில் மார்ச் முடியும்வரை தண்ணீரைத் திறந்துவிட்டு காவிரிப் பாசனம் பெறுகிற விவசாயிகளின் தாளடிப் பயிர்களைக் காப்பாற்றியிருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் விவசாய உற்பத்தியை மேம்படுத்த வேண்டும் என்பதற்காக திரு. அழகர்சாமி அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். வேளாண்மைத் துறையை கால்நடைப் பிரிவு என்று பல்வேறு பிரிவுகளாகப் பிரித்து விட்டார்கள், அவற்றையெல்லாம் ஒன்றுபடுத்தி ஒரே துறையின் கட்டுப்பாட்டில் வைத்தால்தான் நிர்வாகம் திறமையாக நடைபெறும் என்று சொன்னார்கள். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் இந்தப் பிரிவுகள் எல்லாம் சேர்ந்து ஒரே துறையின்கீழ்தான் இருந்து வந்தன. ஆனால் அந்தத் துறையில் ஏற்பட்ட வளர்ச்சி காரணமாக, அந்தத் துறையில் பல்வேறு காரியங்களைச் செய்ய வேண்டியிருந்ததால் அதைப் பிரிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. கால்நடைத் துறை என்று தனியாகப் பிரிக்கப்பட்டாலும் கூட, இன்று வேளாண்மைத் துறையே இரண்டு மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருக்கிறது. வேளாண்மைத் துறை, வேளாண்மை பொறியியல் துறை, தோட்டக் கலை பயிர்த் துறை, எண்ணெய் வித்துக்கள் துறை என்று அந்தந்தத் துறைகள் மூலம் பயிர்களை நல்லமுறையில் உற்பத்தி செய்ய வாய்ப்பு வசதி அளிக்க வேண்டும் என்று, விவசாயிகள் நெல் பயிர் மட்டும் சாகுபடி செய்யக்கூடிய நிலையை மாற்றி காஷ் க்ராப்ஸ் பயிர் செய்து விவசாயிகள் தங்கள் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளும்வகையில் செய்யவேண்டும் என்பதற்காகத்தான் அந்தத் துறைகள் விரிவுபடுத்தப்பட்டிருக்கின்றன. அந்த வகையில் விவசாயிகளுக்கு அதிகப்படியான நன்மைகள் கிடைக்கின்றன.

நான் ஒன்றை இப்போது குறிப்பிட விரும்புகிறேன். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் மத்திய அரசாங்கம் இங்கே தமிழ்[illegible] வேளாண்மைப் [illegible]கழகம் ஒன்றைத் துவக்கவேண்டும் என்று [illegible]ன்னார்கள். ஏனென்





றால், இந்தியாவிலே கோவையில் உள்ள விவசாயக் கல்லூரிதான் பழமையானது. அதை அடிப்படையாக வைத்து வேளாண்மைப் பல்கலைக்கழகம் தமிழ்நாட்டில் துவக்கப்படவேண்டும் என்று மத்திய அரசு விரும்பியபோது இங்கே அப்போது ஆண்டு கொண்டிருந்தவர்கள் அந்தப் பல்கலைக்கழகத்தை துவக்கவில்லை. அதைத் துவங்காமல் வேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள். ஆனால் பஞ்சாப் முதல் அமைச்சராக இருந்த பிரதாப் சிங் கெய்ரான் அவர்கள் அந்தப் பல்கலைக்கழகத்தை தாங்கள் ஆரம்பிக்கிறோம் என்று சொல்லி பஞ்சாபில் ஒரு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தைத் துவக்கி வேளாண்மைத் துறையில் பஞ்சாபில் பல்வேறு மாற்றங்களைச் செய்தார்கள். பின்னர் பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்நாட்டில் ஆட்சிக்கு வந்தபிறகுதான் அப்படிப்பட்ட மாற்றங்கள் தமிழ்நாட்டிலும் வரவேண்டும் என்று சொல்லி அப்படி ஒரு பல்கலைக்கழகத்தைத் துவக்கி இன்று வேளாண்மைத் துறையில் பல்வேறு காரியங்கள் நிறைவேற்றுவதற்கு உதவியாக இருந்தார்கள்.

இன்று மராட்டிய மாநிலத்தில் கால்நடை உற்பத்தியைப் பெருக்குவதற்காக . . .

●

திரு. நா. சுந்தரராஜ்: மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது அன்றைக்கு இருந்த மத்திய அரசு தமிழ்நாட்டில் ஒரு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தை துவக்க அனுமதி அளித்த நேரத்தில் அன்று தமிழ்நாட்டில் இருந்த காங்கிரஸ் கட்சி அரசானது அதை வேண்டாம் என்று உதறித் தள்ளிவிட்டதாக ஒரு குற்றச்சாட்டைக் கூறினார்கள். எந்த ஆதாரத்தை வைத்துக்கொண்டு அப்படிச் சொல்கிறார்கள் என்று தெரியவில்லை. நான் ஒன்றை தெளிவாகக் கூற விரும்புகிறேன். அன்று மதுரையில் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில்தான் விவசாயக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது என்பதை நினைவூட்ட விரும்புகிறேன். ஆகவே சம்பந்தமில்லாத குற்றச்சாட்டை என்றைக்கோ நடந்ததாகச் சொல்லி குற்றஞ்சாட்டி தயவு செய்து பேச வேண்டாம்.

(மாலை 5-30)

திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே அவர்கள் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் சித்தன் அவர்கள் இருந்திருந்தால், அவர்களே பதில் சொல்லியிருப்பார்கள். ஏன் சொல்கிறேன் என்றால், கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு பஞ்சாப் மாநிலத்திற்கு சென்றபோது, அந்தப் பல்கலைக்கழகத்திலுள்ள பல்வேறு பேராசிரியர்கள் நாங்கள் கோயம்பத்தூரிலே உள்ள வேளாண்மைக் கல்லூரியிலே படித்

[திரு. எம். எஸ். மாணிக்கம்] [1982 மார்ச் 8

திருந்தாலும்கூட, அந்தப் பல்கலைக்கழகத்தைத் துவக்க வேண்டுமென்று சொல்லுகின்ற நேரத்தில், இங்கே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் தேவையில்லை என்று சொன்னதால், அங்கே பஞ்சாப் முதல்வராக இருந்த கெய்ரான் அவர்கள் அமெரிக்காவிலே படித்திருந்த காரணத்தினால், அப்படிப் பட்ட திட்டங்களை அமெரிக்காவின் உதவியோடு நிறைவேற்றி, அந்தப் பல்கலைக்கழகத்தை அங்கே துவக்கினார் என்றும், தமிழகம் அதிலே பின் தங்கி விட்டது என்றும், அங்கே அந்தப் பல்கலைக்கழகத்திலே பணியாற்று கின்றவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதைத்தான் நான் இங்கே எடுத்துச் சொன்னேனே ஒழிய, வேறு ஒன்றுமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், கால்நடை பராமரிப்பைப் பொறுத்த மட்டிலும், இன்று மராட்டிய மாநிலத்திலே விவசாயிகளுக்கு பலவிதமான ஆடுகள், மாடுகள் வழங்கப்படுகின்றன. அப்படி வழங்கப்படுகின்ற இந்தக் கால்நடைகள், விவசாயிகளுக்கு அவைகளின் வளர்ச்சியைப் பொறுத்து, அதற்கான விலை நிர்ணயம் செய்யப்பட்டு, மானிய விலையிலே வழங்கப்படுகிறது. ஆனால், தமிழ்நாட்டிலே நாம் விவசாயிகளுக்கு அப்படி வழங்குகின்ற ஆடுகள், மாடுகள் எல்லாம் வீணாக, ஏலத்திலே போடப்பட்டு, அங்கே விற்பனைக்கு வருகின்ற அத்தகைய கால்நடைகளை வழங்கக்கூடிய நிலைமை தான் தொடர்ந்து இருந்து வருகிறது. புரட்சித் தலைவர் அவர்கள் இதை மாற்றி, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நல்ல மாடுகளை, நல்ல இனக் கன்றுகளை வழங்குகின்ற திட்டத்தை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல், தஞ்சை மாவட்டத்திலே ஆடுதுறையிலே இருக்கின்ற விவசாய அரசு நிலத்தை மேம்படுத்துவதற்கு இந்த அரசு முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். அதைப்போல், கொருக்கையிலே கால்நடைப் பண்ணை இருக்கிறது. அந்தக் கால்நடைப் பண்ணையில் வேளாண் நிலம் குறைவாக இருக்கிறது. அந்த வேளாண் நிலங்களை, அந்தப் பண்ணையை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தோடு இணைத்து, அதன்மூலமாக நெல் உற்பத்தியை அதிகரிப்பதிலே, உப்புத் தண்ணீர் இருக்கின்ற பகுதிகளின் விவசாய உற்பத்தியை மேம்படுத்துவதற்கான திட்டங்களை நிறைவேற்றி, அதன் மூலமாக ஆராய்ச்சி செய்து, அந்தத் திட்டங்களை நிறைவேற்றி, அந்தப் பகுதியிலுள்ள நிலங்களுக்கு வேளாண் வசதிகளைச் செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. தஞ்சை மாவட்டத்திலே நீர் வடிகால் திட்டம் அதிக மாக இருக்கிறது. அந்த நீர் வடிகால் திட்டத்தை நிறைவேற்றுகிறபோது, அந்தப் பகுதியிலுள்ள மக்களின் நிலைமையைக் கருதாமல், விவசாயத்



1982 மார்ச் 8] [திரு. எம். எஸ். மாணிக்கம்]

துறையைக் கலந்து ஆலோசிக்காமல், இந்தத் திட்டத்தை பல்வேறு இடங்களுக்கு நிறைவேற்றி விட்ட காரணத்தால், அந்த விவசாயிகள் தங்கள் நிலங்களைச் சீர்திருத்த முடியாமல், பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை மாற்ற, விவசாயத் துறை, அந்தப் பகுதியிலுள்ள விவசாயத் துறையைக் கலந்து, அதன் மூலமாக வேளாண் பெருங்குடி மக்களுக்கு உதவி அளித்து, அவர்கள் தங்கள் நிலங்களை சீர்திருத்திக் கொண்டு, அதன்மூலமாக விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் இந்த அரசு பல்வேறு உதவிகளை அளித்து வருகிறது. விவசாயப் பெருங்குடி மக்களுக்கு மானிய விலையில் கருவிகளும், இடு பொருள்களும் வழங்கப்படுகின்றன. இதை இந்த அரசு தொடர்ந்து செய்து வருகின்றது. ஆனால், இந்த நேரத்தில் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இன்றைய நிலைமையில், சிறு விவசாயிகள், ஏழை எளியவர்களுக்கு வழங்கப்படுகின்ற இந்தப் பலன், இந்த ஏழைகளுக்குப் போய்ச் சேருகிறதா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். ஏழைகள் அதைப் பயன்படுத்த முடியாமல், அவர்கள் வசதி படைத்தவர்களுக்கு அதை விற்றுவிடுகின்ற நிலைமை இருக்கிறது. எனவே, அதைக் கொஞ்சம் மாற்றி, மற்ற நடுத்தர விவசாயிகளுக்குக்கூட அந்த விவசாயக் கருவிகளும், விவசாயப் பொருள்களும் வழங்கினால், அவர்கள் அதைத் தாங்களே பயன்படுத்தக்கூடிய நிலைமை உருவாகும். அதன்மூலமாக விவசாயி உற்பத்தியையும், வேளாண் தொழிலில் முன்னேற்றத்தையும் ஏற்படுத்த முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

தமிழ்நாட்டிலே தான் உலக வங்கியின் உதவியுடன், பயிற்சி மற்றும் தொடர்பு திட்டம் அமுல்படுத்தப்படுகிறது. அதன்மூலமாக விவசாயிகள் இன்றைக்கு நவீன முறைகளை அறிந்து, உற்பத்தியைப் பெருக்குகின்ற திட்டத்தை இந்த அரசு கொண்டு வந்திருக்கிறது. இந்தத் திட்டம் 5 ஆண்டுகளில் நிறைவேற்றப்பெற்றிருக்கிறது. அதற்குப் பின், தமிழக அரசு தன் பொறுப்பிலே எடுத்துக்கொண்டு, இந்தத் திட்டத்தை விவசாயிகளுக்கு அறிவித்து, அதன்மூலம் விவசாயிகளுக்குப் பல்வேறு நல்ல காரியங்களை செய்ததினால், விவசாயிகள் பலன்பெற்று வருகிறார்கள்.

அது மட்டுமல்ல. தஞ்சை மாவட்டத்திலே தென்னை மரங்கள் அதிகமாக இருக்கின்றன. அந்தத் தென்னை மரங்களை வளர்ப்பதற்கு இன்னும் அதிகமாக தென்னை உற்பத்தியை, நெட்டை மரங்களுக்குப் பதிலாக குட்டை மரங்களை உற்பத்தி செய்வதன் மூலம், நல்ல பல திட்டங்களை நிறைவேற்றி

வருகிறது. அதைப்போல், செம் பனை பயிரிடுவதற்கு வேதாரண்யம் சதுப்பு நிலம் கொண்ட பகுதியாக இருக்கிறது என்று வல்லுநர்கள் கூறுகிறார்கள். அந்தப் பகுதியிலே காட்டிலாகா அதிகாரிகளோடு இதனை வளர்ப்பதற்கு விவசாயத் துறை முயற்சிகள் எடுக்க வேண்டுமென்று கேட்டு கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மாணிக்கம் அவர்கள் பேசுகிறபோது. . . .

**மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்) :** திரு. இராசமாணிக்கம் அவர்கள் சொல்வதற்கு முன்னால் பாயின்ட் ஆப் ஆர்டர், பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன் என்று ஏதாவது ஒன்றைக் கூறிவிட்டு பேசுங்கள். இல்லாவிட்டால் அனுமதிக்க இயலாது.

**திரு. இரெ. இராசமாணிக்கம் :** பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன். மாண்புமிகு உறுப்பினர் மாணிக்கம் அவர்கள் பேசுகிற போது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே கூட்டுறவுக் கடன்களை அதிகமாக கொடுத்து அனைவரையும் கடன்காரர்களாக ஆக்கியது என்று சொன்னார்கள். இது உண்மைக்கு புறம்பான தகவல். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே கும்பகோணம் மத்திய வங்கியிலே கொடுத்த கடனில் 99.9 சதவிதம் வசூல் செய்து காட்டியது என்பதைத் தெரிவித்து . . .

**மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்) :** உங்கள் கட்சியின் சார்பிலே திருவேங்கடம் அவர்கள் பேசவிருக்கிறார். இதுகுறித்து அவர் பேசுவார், நீங்கள் உட்காருங்கள்.

**திரு. கே. தனுக்கோடித் தேவர் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த விவசாயத் துறை மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பு அளித்தமைக்கு நான் நன்றி கூறி, அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சியின் சார்பில் கருத்துக்களைக் கூற கடமைப்பட்டிருக்கிறேன். இந்த விவசாய மானியக் கோரிக்கையில் அரசு நல்லமுறையில் ஆராய்ந்து ஏழை உழவர்களுக்குச் செய்ய வேண்டிய நல்ல காரியத்தை செய்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பலதரப்பட்ட குறைகள் கூறப்பட்டாலும், இந்த அரசு விவசாயிகளின் நம்பிக்கைக்குரியவர்களாக காட்சி அளிக்கிறது. தேசியத் தலைவர் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் விவசாயத்தைப் பற்றி பேசியிருக்கிறார்கள். நமது நாடு ஏகாதிபத்திய ஆட்சியாளர்களிடம் அடிமைப்பட்டிருந்த காலத்தில் ஜமீன்தார்களும், ராஜாக்களும் அவர்களுடைய கைக்கூலிகளாக மாறி விவசாயிகளுடைய செல்வத்தைச் சுரண்டி சென்று



விட்டார்கள். ஆகவே நம்முடைய நாடு சுதந்திரம் அடைந்த பின் ஒவ்வொருவருக்கும் உணவு, உடை, இருக்க இடம் தேவை என்ற கருத்தைக் கொண்ட ஒரு விவசாயத் துறைக்கு நாம் முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமென்று அன்றே பேசியிருக்கிறார்கள். இந்தக் கருத்தை மாமன்றத்திலும், பட்டி தொட்டிகளிலும் தெரிவிக்கிறார்கள்.

"வெளி நாட்டிலேயிருந்து உணவுப் பொருள்களை ஏற்றிவருகிற கப்பலை மாலை போட்டு வரவேற்கிற ஒரு காலக்கட்டத்திலே இருக்கிறோம். எனவே விவசாயிகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து விவசாயத்தை பெருக்குவதற்கு நாம் முழு மூச்சுடன் இயங்கவேண்டுமென்று" அன்றே பேசியிருக்கிறார்கள். அது படிப்படியாக வளர்ச்சி அடைந்து இந்த நேரத்திலே முன்னேற்றத்தைக் கண்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய அளவுக்கு நாம் தன்னிறைவு பெற்று இருக்கிறோம், அதைப் பார்க்கிறபோது பெருமைப்படுவதில் குற்றம் இல்லை என்று கருதுகிறேன். இப்படி வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்ற அளவுக்கு இருக்கின்ற இந்த நேரத்திலே மானாவாரி பூமியில் விவசாயம் செய்யும் விவசாய மக்கள் மிக மிக கஷ்டப்படுகிறார்கள் என்பது அரசுக்கும் தெரியும், இந்த மன்றத்தின் உறுப்பினர்களுக்கும் தெரியும் என்று கருதுகிறேன் . மானாவாரிப் பகுதியில் உழவடை செய்கின்றவர்கள் அந்தப் பகுதியிலே பெரும்பான்மையாக உழவுத் தொழிலையே நம்பி இருப்பார்கள் என்று கருதுகிறேன். அந்த மக்களுக்கு நீங்கள் விதிவிலக்கு அளித்து அங்கே உள்ள விவசாயிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாலை 5-40)

எங்களுடைய முகவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அங்கே கடலோரப் பகுதியிலே இருக்கின்ற கடலாடிப் பகுதியும் முதுகுளத்தூர் பகுதியும் ஏகாதிபத்திய வெள்ளையன் இந்த நாட்டிலேயிருந்து செல்வத்தைச் சுரண்டிச் சென்ற காலம் முதல் இன்று வரையில் தன்னிறைவு பெறாத நிலையில் இருக்கின்றன. வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களாக அந்தப் பகுதி விவசாயிகள் வாழ்கிறார்கள். இந்த ஆண்டு மழை பெய்திருக்கிறது. விவசாயிகள் மகிழ்ச்சியோடு இருக்கின்ற இந்த நேரத்திலே அங்கே சில குறைகள் இருக்கின்றன என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். காரணம் இந்த ஆண்டு மழை பெய்தாலும்கூட வருகின்ற 3 ஆண்டுகளில் மழை பெய்யாது போனால் உற்பத்தி செய்த பொருளை அடுத்த ஆண்டு மழை பெய்யுமோ பெய்யாதோ என்ற முறையில் வைத்துக்கொள்வார்கள். அதற்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும். அப்படி பாதுகாப்புக்காக அவர்கள் வைத்திருக்கின்ற அந்தப் பொருளை லெவி என்ற பெயரால் சில குறைகளை

[திரு. கே. தனுக்கோடித் தேவர்] [1982 மார்ச் 8

அதிகாரிகள் செய்திருக்கிறார்கள். அதைப்பற்றி அரசுக்கும் தகவல் வந்து இருக்கும் என்று நினைக்கிறேன். அப்படிச் செய்யாமல் அந்தப் பகுதி மக்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

அந்தப் பகுதியிலே வாழுகின்ற விவசாயிகள் ஆண்டுக்காண்டு வறுமையில் வாடுகின்ற காலகட்டத்தை மனதில் வைத்து சரியான ஊதியம் கிடைக்காத நிலையில் அவர்கள் உற்பத்திப் பொருளுக்கு சரியான விலை கிடைக்காத நிலையில் 10 ஏக்கர் வைத்திருக்கின்ற விவசாயிகூட 4 ஏக்கர் தன் உணவுக்காகப் பயிர்செய்துவிட்டு மீதியை வேலிக்கருவேலம் போடக்கூடிய நிலைமையில் அது போட்டால் நல்ல ஆதாயம் கிடைக்கும் என்ற நிலையில் அப்படிப்பட்ட எண்ணத்தைக் கொண்டிருக்கிறார்கள். அந்த எண்ணத்தை மாற்றாது போனால் அப்படிப்பட்ட நிலை விவசாயிகளுக்கு வருமானால் அரசுக்கு மிகப் பெரிய நஷ்டத்தை ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலை வரும். சில சங்கங்களும் அந்த ஏற்பாட்டைச் செய்யலாம் என்பதை நான் ஞாபகப்படுத்த கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அரசைக் காக்கின்றவர்களுக்கு மக்கள் படுகின்ற துன்பத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். முதுகுளத்தூர், கடலாடி ஆகிய இரண்டு பகுதிகளிலும் வாழ்கின்ற மக்கள் மிகமிகப் பின்தங்கிய நிலையில் இருக்கிறார்கள். நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆட்சிக்கு வருவதற்கு முன்னதாக அவர்கள் அந்தப் பகுதிகளிலே சுற்றுப்பயணம் செய்திருக்கிறார்கள், அதனால் அந்தப் பகுதி மக்களை நன்கு அறிவார்கள், மக்கள் அவர்களிடம் பல்வேறு மகஜர்களைக் கொடுத்திருக்கிறார்கள். முதுகுளத்தூர், கடலாடி இரண்டு பகுதிகளிலேயும் உள்ள 90 சதவீத ஏர் உழவு விவசாயிகளின் வாழ்க்கை சீராக அமைய அரசு நல்ல திட்டங்களைத் தீட்டி அந்த மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அங்கே ஏற்கனவே கொண்டு வந்த ஒரு சில திட்டங்களை, அதாவது மலட்டாறு, கிருதமால் நதி, நாராயணகாவிரி போன்ற காட்டாறுகளில் மழை பெய்கின்ற நேரத்தில் ஆங்காங்கு தேக்கங்கள் கட்டி வைத்தால் அங்குள்ள மக்களுக்குக் குடிதண்ணீரும் கிடைக்கும். மானாவாரி பூமியில் உள்ளவர்களுக்கு விவசாயத்திற்கும் சாதகமாக இருக்கும். நமது அரசு ஒரு திட்டத்தைத் தீட்டி இன்றுவரையிலும் அதைச் செயல்படுத்தாத நிலையில் இருக்கிறது என்றாலும் நீங்கள் பொது மக்களைப் புறக்கணிக்க மாட்டீர்கள். எனவே இந்த அரசு அந்தப் பகுதியில் வாழும் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நல்லதொரு திட்டத்தைத் தீட்டி, அந்த மக்களைக் காப்பாற்ற முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,



1982 மார்ச் 8] [திரு. கே. தனுக்கோடித் தேவர்]

இப்பொழுது அங்கே வாழும் விவசாயப் பெருங்குடி மக்கள் மிகவும் கஷ்டப்பட்ட காரணத்தால் வாழ்க்கையோடு போராடி வறுமைக் கோட்டிற்குக் கீழே சென்று இருப்பதால் வரி செலுத்த முடியாமல் இருக்கிறார்கள். நான் இந்த அரசைப் பணிவன்போடு கேட்டுக்கொள்வது என்னவென்றால், அங்கே உழைத்த விவசாயிகள் பூமிக்கான வரியைச் செலுத்தக்கூட வக்கற்ற நிலையில் இருப்பதால், மானாவாரி பகுதியில் வாழ்கின்ற விவசாயம் செய்யும் மக்கள்—பல தரப்பட்ட முறையில் கடன் பட்டிருக்கிறார்கள். 94-வது பசலி என்று கருதுகிறேன், இந்தப் பசலிக்கு நிலவரியை முறையே அந்த விவசாயிகளுக்கு ரத்து செய்ய வேண்டுமென்றுகேட்டுக் கொள்கிறேன்.

நமது அரசு விதைப் பண்ணை ஆரம்பித்திருக்கிறது. கலப்படமான விதைகளை விவசாயிகளுக்குக் கொடுத்திருக்கிறார்கள். சென்ற ஆண்டு தீவிர சாகுபடித் திட்டத்தைக் கொண்டு வந்து 16 வகை விதைகளைக் கொடுத்திருக்கிறார்கள். ஒரு விவசாயி நெல்லை நடவு செய்தால் அந்த ஆண்டில் 16 வகையான எண்ணிக்கையில் கலப்பாக விளைகிறது. இதைப்பற்றி விவசாயக் கிடங்குகளில் கேட்டால் விவசாயப் பண்ணையில் வாங்கியது நன்றாக இருக்கும், இது சம்சாரி பண்ணையில் வாங்கியதால் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். இந்த நிலையைப் போக்க நமது அரசு விதைப் பண்ணையை இன்னும் விரிவுபடுத்தி, விவசாயிகளுக்கு நல்ல தகுதியுள்ள விதைகளாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதில் சில அதிகாரிகள் இந்த அரசின்மீது பழிசுமத்துவதற்கென்றோ அல்லது வேறு முறையிலேயோ அரசை ஏமாற்றிச் சாப்பிடும் சில திட்டங்களைச் செய்கிறார்கள். அதற்கு எடுத்துக்காட்டாக ஒன்றை இந்த அரசின் முன் வைக்கக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

கமுதியில் நமது முதல்வரவர்கள் 1979 ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன், அங்கே ஒரு ஆஸ்பத்திரிக்குக் கல் நாட்டு விழா செய்து, 1980-லே சேங்க்ஷன் ஆகி, 1981-லே டெண்டர் விடப்பட்டு, 1981-லேயிருந்து இதுவரையிலும் அந்த டெண்டர் எடுத்த காண்ட்ராக்டர் கட்டாத நிலையில் இருக்கிறார். நான் வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் இதுபற்றிக் கேட்டபொழுது அங்கே அந்த அதிகாரி எங்களுக்குக் காரணம் சொல்லியிருக்கிறார்கள். அதாவது, அதற்கு வேண்டிய சிமெண்ட் விசாகபட்டிணத்தில் இருந்து வர வேண்டியது வராதது தான் காரணம் என்று சொல்கிறார்கள். நான் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் கேட்டேன், கமுதி ஆஸ்பத்திக்கு மட்டும்தான் விசாகபட்டிணத்திலிருந்து சிமெண்ட் வர வேண்டுமா அல்லது தமிழ் நாட்டிலுள்ள எல்லாயிடங்களுக்கும் அங்கிருந்து வர வேண்டுமா என்று கேட்டபொழுது மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் அந்த அதிகாரியிடம் கேட்டார். எனவே, அதிகாரிகள் இப்படிப்பட்ட அளவிற்குக் கவனக் குறைவாக இருக்கிறார்கள் என்றால் வறட்சியால்

வாடுகின்ற அந்த மாவட்டத்தில் மேலும் கெட்ட பெயர் ஏற்படுத்த வேண்டுமென்ற நிலையில் இருக்கிறார்கள். அந்த அதிகாரிகளை நீங்கள் கண்டறிந்து, அவர்களைச் சரியான முறையில் கண்காணிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மீண்டும் இந்த அரசிடம் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டதெல்லாம், மானாவாரியில் வாழும் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு வரியிலிருந்து விலக்கு கொடுக்க வேண்டும். காரணம், மழை பெய்யாததன் காரணமாக அந்த விவசாயிகளுடைய குடும்பம் வயிறு வளர்க்க முடியாமல் இருக்கிறார்கள். மழை பெய்யவில்லையென்றால் அந்த ஆண்டு முழுவதும் கஷ்டப்பட்டு செய்த விவசாயம் பூராவும் அழிந்து விடுகிறது. இப்பொழுது விவசாய மேல் மட்டக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். அந்தக் குழுவின் மூலமாகவாவது மானாவாரி பகுதியில் உள்ள அவர்களுடைய கஷ்டத்தை நிவர்த்தி செய்வதற்கு என்னென்ன ஏற்பாடுகளைச் செய்யலாம் என்பதைப் பற்றிப் பரிசீலனை செய்து வழிவகை செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய பகுதியைப் பெறுத்தவரையில் அரசு ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருப்பதை வரவேற்கிறேன். அங்கே மேடு பள்ளமாக இருந்த பகுதிகளில் மண் வளப் பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் கிட்டத்தட்ட 25,000 ஏக்கர்களில் சமவெளிப்படுத்தி வரப்பு அமைத்திருக்கிறார்கள். அதற்காக இந்த அரசுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மானாவாரி பகுதியில் வாழ்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களுடைய, அந்த ஏழை எளிய மக்களுடைய நல்லெண்ணத்தைப் பெற்றிருக்கின்ற இந்த அரசு அவர்களுக்கு நல்ல காரியங்களைச் செய்ய முன் வர வேண்டுமாய்க் கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம். நன்றி. ஜெய்ஹிந்த்!

* திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நம்முடைய அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த விவசாய மானியக் கோரிக்கையில் சில கருத்துக்களைச் சொல்ல நான் விரும்புகிறேன். இங்கே கனம் அங்கத்தினர் பேசும்பொழுது, காங்கிரஸ் ஆட்சியிலே பல காரியங்களைச் செய்யாமல் விட்டு விட்டார்கள் என்று சொன்னார்கள். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில்தான் விவசாயிகளுக்கு என்னென்ன காரியங்களை எப்படியெப்படிச் செய்ய வேண்டுமென்று ஆய்ந்து பார்த்து திட்டங்களைப் போட்டு பல ஐந்தாண்டுத் திட்டங்களில் பல காரியங்களைச் செய்திருக்கிறார்கள். அந்தத் திட்டங்களின் அடிப்படையிலே தான் இன்றைக்கு இருக்கின்ற நம்முடைய அரசு அதைப் பின்பற்றி ஏழை எளிய மக்களுக்குப் பல நல்ல காரியங்களைச் செய்து வருகிறீர்கள். அதை நான் பாராட்டுகிறேன்.





வறட்சி நிவாரணப் பணியின்பொழுது நாம் என்னென்ன காரியங்களைச் செய்தோமோ அதைப்போன்று இன்னும் சற்றுத் தீவிரப்படுத்திச் செய்ய வேண்டும். இப்பொழுது வெயில் அதிகமாக இருக்கிற காரணத்தால் மழையில்லாத பகுதிகளில் வாழும் ஏழை எளிய விவசாயிகளுக்குப் பயன்படும் வகையில் பாண்ட் ஸ்கீம்களை ஏற்படுத்த வேண்டும். ஆங்காங்குள்ள கிணறுகளில் தண்ணீர் கீழே போகிறது. கொஞ்சம் கொஞ்சம் தண்ணீர் கிணறுகளில் இருந்தாலும் வெயிலின் கொடுமையால் அது மேலே ஆவியாகப் போய்விடுகிறது. எனவே, அவைகளுக்கெல்லாம் எதை அமல் நடத்த வேண்டுமோ அதை அமல் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாலை 5-50)

அதற்கடுத்து, இன்றைக்குள்ள கிணற்றிலே தண்ணீர் வற்றிய பிறகு, அந்த ஏழை விவசாயிகள், சிறிய விவசாயிகள், நடுத்தர விவசாயிகள், லோன் போடுகிறார்கள். அந்த லோனுக்கு பி.டி.ஓ.-விடத்திலே சென்று அவர்கள் பாங்குகளுக்கு அனுப்புகிறார்கள். பாங்குக்கு அனுப்பும்போது, அங்கே சில பாங்குகளிலே, ஏதோ வட்டிக் கடை நடத்துகிறார்களே, அப்படி சில பாங்குகளிலே, கொடுப்பதற்கு மறுக்கிறார்கள். ஆகையினாலே, பழைய முறையிலே வைத்திருந்த தக்காவிக் கடனை, நீண்டகாலக் கடனாக, கிணறுகளை ஆழப்படுத்துவது, கிணறுகளை வெட்டுவது, பம்ப் செட்டுகளை வைப்பது, அப்படி 10 ஆண்டுகள் தவணைகள் தக்காவிக் கடனை, யூனியன் மூலமாகக் கொடுத்ததினால், விவசாயிகளுக்குச் சற்று சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதை இந்த விவசாயிகள் சார்பாகச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

அதற்கடுத்து பல தடவை நான் இந்த மாமன்றத்திலே சொல்லியிருக்கிறேன், நம்முடைய அமைச்சருடைய மனதிலேயும் இருக்கும் என்று நினைக்கிறேன். 1 ஏக்கர், 2 ஏக்கர் வைத்திருப்பவர்கள் கிணறு வெட்ட முடியாமல் தவிக்கிறார்கள். அவர்களுக்கு 50 ஏக்கர், 100 ஏக்கர் என்று வைத்து, அதிலே பெரிய கிணறுகளை அரசாங்கமே வெட்டிக் கொடுத்து, அதிலே பம்ப் செட் வைத்து, அவர்களுக்குப் பாசன வசதி செய்து கொடுத்து, அவர்களிடத்திலே வாட்டர் செஸ் வரி வசூல் செய்வோமானால், அந்த விவசாயிகளும், நானும் சேர்ந்து நம்முடைய அமைச்சரவையைப் பாராட்டக் கடமைப்பட்டவர்களாக இருப்போம் என்று சொல்ல விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல; பட்ஜெட் உரையிலே கூடப் பேசியுள்ளேன். நெல் விவசாயம் உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகள் லெவியினால் இன்றைக்கு மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தாங்கள் அறுவடை செய்யக் கூடிய நெல்லை வீட்டுக்குக் கொண்டு போகமுடியாமல் தவிக்கிறார்கள்.

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [1982 மார்ச்

5 ஏக்கர், 2 ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்களை விட்டுவிட்டு, அதற்கு மேலே ஒரு ஏக்கருக்கு 2 மூட்டை லெவியாகக் கொடுக்க வேண்டுமென்று நாம் சொல்லி விடுவோமேயானால், நாம் எங்கே சொல்கிறோமோ, அங்கே, அந்த இடத்திலே நெல்லைப் போட்டுவிடுவார்கள். பிறகு, அவர்கள் நெல்லை விற்ற பணத்தைக் கொண்டு உரக் கடனையும், மின்சாரக் கடனையும் கொடுப்பதற்கு ஒரு வாய்ப்பிருக்கும். மதுரை மாவட்டத்திலே அரசாங்கத்திலே நகரங்களில் பணியாற்றக்கூடிய ஆசிரியர்களோ அல்லது இதர தொழிலை செய்யக்கூடியவர்களோ, நெல்லை எடுத்துக் கொண்டு போகமுடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகையினாலே, அதை மாற்றி அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நமக்கு 6 இலட்சம் டன் லெவி தேவை என்று நினைக்கிறேன். அந்த 6 இலட்சம் டன் வந்துவிட்டால், லெவி முறையை அறவே எடுத்து விட்டால் விவசாயிகளுக்குச் சாலச் சிறந்ததாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்கடுத்து கரும்பு விவசாயம். நான் ஒரு கரும்பு விவசாயி என்ற முறையிலே சொல்கிறேன், ஒரு ஏக்கர் விவசாயம் செய்ய ரூபாய் 4,000 ஆகிறது. ஓராண்டுக் காலத்திற்கு காத்துக் கொண்டிருக்கிறோம். அந்த ஓராண்டுக் காலத்திற்குக் காத்திருப்பதோடு உர விலை அதிகமாகிறது, கரும்பிற்கு டன் ஒன்றுக்கு செஸ் ஆக ரூபாய் 5 வசூல் செய்யப்படுகிறது. பர்ச்சேஸ் டாக்ஸ் 12.7 சதவீதம் வசூல் செய்யப்படுகிறது. அதல்லாமல், பர்ச்சேஸ் இப்படிப்பட்ட சூழ்நிலையையெல்லாம் மாற்றி அந்த பர்ச்சேஸ் டாக்ஸைக் குறைத்து 4 சதவீதமாக வைத்தால், அந்தப் பணத்தை கரும்பு விவசாயிகளுக்கு மில்லின் மூலம் கொடுப்பதற்கு சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கரும்பு விவசாயிகளுக்கு மில்லின் மூலம் கொடுப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சாதாரணமாக ஒரு டன் விறகு 200 ரூபாய்க்கு விற்கிறது. ஆகையினாலே இந்தக் கரும்புக்கு 200 ரூபாய் கொடுத்தால் அது சாலச் சிறந்ததாக இருக்கும்.

அது மாத்திரம் அல்லாமல் மண் வளப் பாதுகாப்புத் திட்டத்தைப் பொறுத்தவரையில் பல நல்ல காரியங்களைச் செய்திருக்கிறார்கள். அதற்காக அரசை நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆனால் ஒரு விவசாயிக்கு அதிகபட்சம் 5,000 ரூபாய்தான் என்று தீர்மானம் செய்திருக்கிறோம். பைப்லைன் போடவேண்டும் என்றாலும் மண்ணை அப்புறப்படுத்த வேண்டும் என்றாலும், சுற்று வேலி போடவேண்டும் என்றாலும் இந்தப் பணம் போதவில்லை. காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே ஒரு லட்சம் ரூபாய் வரை கட-



1982 மார்ச் 8] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

கொடுத்தார்கள். எவ்வளவு செலவாகின்றதோ, அந்த அளவுக்குக் கொடுப்பதற்கான அடிப்படையைப் பின்பற்றி இந்த மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தை அமலாக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, உரத்தின் விலை விஷம்போல ஏறிக்கொண்டு இருக்கின்றது. வறட்சியின் போது நம்முடைய காருண்யமிக்க அரசாங்கம் 10 மூட்டைகள் உரம் வாங்கினால், 3 மூட்டைகள் இனாமாகக் கொடுத்தார்கள். அதை மனமாரப் பாராட்டுகிறேன். அந்த அடிப்படையில் ஏழை விவசாயிகளுக்கு மூன்றில் ஒரு பாகம்—மத்திய அரசு மானியம் கொடுக்கா விட்டாலும்—இனாமாகக் கொடுத்தால் ஏழை விவசாயிகளுக்கு சாலச்சிறந்ததாக இருக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து வெள்ளத்தடுப்பு, கடந்த 1979 ஆம் ஆண்டு நம் அமைச்சரவை பொறுப்பை ஏற்ற உடனே வெள்ளம் வந்தது. எல்லாப் பகுதிகளிலும் வெள்ளம் கரைபுரண்டோடிய காரணத்தால் பல இடங்கள் சேதமடைந்தது. நாங்களும் பலமுறை இந்த சட்டமன்றத்திலே சொல்லி இருக்கிறோம். தடுப்புச் சுவர்களைக் கட்டி தாக்கி பல இடங்களில் மண் அடைந்து வைகையில் வெள்ளம் அந்த விவசாயிகள் நிலங்களிலே இருக்கின்ற மண்ணை அப்புறப்படுத்தி கொடுக்க வேண்டும். விவசாயிகளால் பணம் செலவு செய்து அதை எடுக்க முடியாது. என்னுடைய நிலக்கோட்டை தொகுதியைப் பொறுத்தவரை நடகோட்டை—அக்கரைபட்டியில் இருந்து சோழவந்தான் வரை அப்படியே பல இடங்களில் அடைந்து இடக்கின்றது. அதை சரி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு இதற்கான திட்டமும் தீட்டப்பட வேண்டுகின்றேன்.

அதற்குப் பிறகு டிராக்டர். நாம் யூனியனிலே டிராக்டர் வைத்திருக்கிறோம். பல யூனியன்களிலே இன்றைக்கு அந்த டிராக்டர்கள் விவசாயிகளுக்குப் பயன்படுவதில்லை. பல யூனியன்களிலே மலிவு விலையில் வாடகைக்கு அந்த டிராக்டர்களை விவசாயிகளுக்குக் கொடுக்கவில்லை. காரணம் கேட்டால் ரிப்பேர் என்று சொல்லுகிறார்கள். அப்படி விலை உயர்ந்த டிராக்டர்கள், டிரெய்லர்கள் இவைகள் எல்லாம் ரிப்பேராகக் கூடிய சூழ்நிலையில் விவசாயிகளுக்குப் பயன்படாத நிலையில் இருக்கின்றது. விவசாயத்தைப் பொறுத்த வரையிலும் மின்சாரம் திடீர் திடீரென்று கட் ஆகி விடுகிறது. இந்த நிலையில் யூனியன்கள் ஆயில் இன்ஜின்களைப் வைத்து இருந்தால் வாடகைக்கு எடுத்துக் கொண்டு போய் விவசாயத்திற்குத் தண்ணீர் பாய்ச்ச சாலச்சிறந்ததாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு வாழையைப் பொறுத்தவரையில் முடிக்கொத்து நோய் இருக்கின்றது. அதற்கு சரியான மருந்து இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை

என்று சொல்லுகிறார்கள். சிறுமலையிலே கிடைக்கின்ற பழம் இந்த மாநி மட்டுமல்ல அகில இந்தியாவிலேயும் சிறந்ததாக விளங்குகின்றது. அந்த அ வுக்கு அந்த சிறுமலை வாழை இல்லாமல் போய்விடுமோ என்ற சூழ்நிலை வந்து விடும் அளவுக்கு இருக்கின்றது இந்த முடிக்கொத்து நோய். எனவே அந்த நோய்க்கு சரியானபடி மருந்து கண்டுபிடித்து வாழையைப் பா காக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, காய்கறியைப் பொறுத்தவரையில் நாம் தீவிர கவனம் செலுத் வருகின்றோம். நான் கூட ஒரு டிரயலுக்காக பரிட்சார்த்தமாக என்னுடை தோட்டத்தில் பீட்ரூட், காய்கறி, பீன்ஸ் போன்றவைகளை நட்டு வைத்து பார்த்தேன். பின்னர் இந்த காலி பிளவர் வைத்தேன், பெரிய அளவுக்கு பூ பூத்தது. பீட்ரூட்டிலேயும் பெரிய கிழங்கு வந்தது. இந்த முறை கிராமங்களிலே அறிமுகப்படுத்தி அதிக அளவில் இந்த காய்கறிகளை உற்பத் செய்ய வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திராட்சையைப் பற்றி பலமுறை கூறி இருக்கிறேன். திராட்சை விவசா கள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். திராட்சை 5 ரூபாய், 6 ரூபாய்—4 ரூபாய்க்குக் குறைவாக இல்லை. இங்கே ஒரு இ அங்கே ஊரிலே நீங்கள் கொடுக்கின்ற விலை 1½ ரூபாய், 1¾ ரூபாய் மேலும் மழை பெய்தால் 12 அணாவுக்குக் கூட விற்பதில்லை. ஆனா விவசாயிகள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். திராட்சை பக்குவத் தொழிற்சாலை ஒன்று ஏற்படுத்தி, திராட்சை விவசாயிகளைப் பாதுகாத்துக் கொடுக்கும்படி பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு பு

(மாலை 6-00)

என்னுடைய ஏரியாவில் மல்லிகைப் பூ அதிகமாக உற்பத்தி செய்கிறார்கள். அந்த மல்லிகைப் பூவிலிருந்து ஜாஸ்மின் சென்ட் தயாரித்தால் அது அந்நிய நாட்டுச் செலாவணியை அதிகமாக ஈட்டும் என்று சொல்லப்படுகிறது. ஆகவே, அந்தப் பகுதியில் ஒரு சென்ட் தயாரிக்கும் தொழிற்சாலையை அரசாங்கம் ஆரம்பித்தால் அதனால் அந்த விவசாயிகளுக்கு மிகுந்த லாபம் கிடைக்கும் என்பதைத் தெரிவித்து, அதைச் செய்ய அரசு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பட்டுப்புழு கிராமப்புறங்களில் அதிகமாக வளர்க்கப்படுகிறது. கிராம மக்கள் இதை வளர்ப்பதில் அதிக ஆர்வம் காட்டுகிறார்கள். சென்ற ஆண்டு லாபம் கிடைத்தது. இந்த ஆண்டு அதிகமான விலை கிடைக்கிறது. நான் கூட பட்டுப்புழு வளர்க்கிறேன். ஆனால் இதற்கான முட்டைகள் வருகின்ற நேரத்தில் சில முட்டைகள் தரமானதாக இல்லாததால், கூடுகள்





வருகின்ற நேரத்தில் அவைகள் மஞ்சளாக வருகின்றன. இதனால் விவசாயிகள் வெள்ளை கூடு எடுத்துச் சென்றவனுக்கு அதிக விலை, மஞ்சள் கூடு எடுத்துச் சென்ற எனக்குக் குறைந்த விலையா என்று எண்ணுகிற நிலைமை இருக்கிறது. ஆகவே, விவசாயிகள் இதனால் மிகவும் பாதிப்புக்குள்ளாகிறார்கள். ஆகவே. தரமான பட்டுப்புழு முட்டைகளை கிராமப்புறங்களில் தந்து, அந்த மக்களை ஊக்குவித்தால் அவர்களும் நல்ல லாபத்தை ஈட்ட முடியும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

இன்றைக்கு ஐ.ஆர்.டி.பி. திட்டம் மூலமாக கிராமப்புறங்களில் பால்மாடுகள் நிலமற்ற ஏழைகளுக்கு வாங்கிக்கொடுத்து இருக்கிறோம். இந்த கூபாபுல் நல்ல தரமான தீவனமாக இருப்பதால் அவற்றை கிராமப்புறங்களில் இருக்கின்ற கண்மாய்கள், எஸ்டேட் நிலங்களில் இவற்றைப் பயிரிட்டால் நல்ல வளர்ச்சி இருக்கும். அப்படிச் செய்தால் அந்த ஏழைகள் பால்மாடு வைத்து இருப்பவர்கள் பயன் அடையக்கூடிய அளவில் பஞ்சாயத்து மூலமாக 1 கிலோ இவ்வளவு விலை என்று கொடுத்து உதவ ஏற்பாடு செய்யக் கேட்டுக் கொள்கிறேன். பெரிய பெரிய விவசாயப் பண்ணைகளில் தென்னம்பிள்ளைகளுக்கு இடையே நட்டால் கூட அது நல்ல பயனைத் தரும் என்று சொல்கிறார்கள். ஆகவே, இந்தக் கூபாபுல் வளர்ப்பை அரசு நல்லவகையில் செய்யவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

நாம் எவ்வளவோ பணத்தைச் செலவு செய்து கொண்டு இருக்கிறோம். அப்படிப் பார்க்கிற நேரத்தில் இந்த தென்னம் கன்றுகள், விதைக் கன்றுகள் வழங்குவது குறித்து ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சில விதைக் கன்றுகளின் உள்ளே தண்ணீர் ஆடுவதால் அந்த தென்னம் கன்றுகள் சரியாக வளர்வது இல்லை. இத்தகைய கன்றுகளை வாங்கி வைத்தவர்கள் நஷ்டம் அடையும் சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, நல்ல தரமான தென்னம் கன்றுகளை அரசு தருவதற்கு முன்வரவேண்டும் என்று கேட்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன். வாய்ப்புத் தந்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

* திரு. ஏ. சாகுல் ஹமீது : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த வேளாண்மைத்துறை மானியத்தின் மீது பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில் விவசாயம் தான் பெரிய முக்கியமான தொழிலாக நாட்டிலே இருந்து கொண்டு இருக்கிறது. இந்த விவசாயத் தொழிலில் ஈடுபட்டு இருக்கிறவர்களுக்கு அவர்கள் உற்பத்தி செய்யும் விளைபொருள்களுக்குச் சரியான விலை கிடைக்காததால் அவர்கள் தொழிலில் ஊக்கமாகச் செயல்பட முடியாமல் இருக்கின்றனர். இன்றைக்கு உர விலைகள், விதைகள் போன்றவை

கள் எல்லாம் அதிக விலையேறி இருப்பதோடு மட்டுமல்லாமல், அவைகளைப் பெறுவதிலும் அவர்கள் மிகவும் கஷ்டப்படுகின்றனர். ஆகவே, அவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருள்களுக்கு போதிய விலை கொடுக்கவேண்டும்.

இங்கே மற்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினார்கள். நிலவள வங்கியில் கடன் வாங்கி, அந்தக் கடனைக் கட்ட முடியாத நிலையில் பல விவசாயிகள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். இந்த விவசாயிகள் நில வள வங்கியில் பெற்ற கடனில் அசலையும் அதற்குரிய வட்டியையும் கட்டுவதற்குத் தயாராக இருக்கி றார்கள். ஆனால் அபராத வட்டியை மட்டும் தள்ளிக் கொடுக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். எத்தனையோ கோடிக்கணக்கான ரூபாய்களை மக்கள் நல் வாழ்வுக்காகச் செலவிடும் அரசாங்கம் இந்த அபராத வட்டியை ரத்து செய்து, அவர்களிடமிருந்து அசலையும் வட்டியையும் மட்டும் பெறுகின்ற வகையில் உத்தரவிடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நாட்டில் முது கெலும்பாக இருக்கும் விவசாயிகளுக்கு இது ஒரு பெரிய சலுகையாக, வரப்பிரசாதமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் உழவர்களுக்கு இப்போது தண்ணீர் தட்டுப்பாடு இருக் கிற காரணத்தால் பஞ்சாயத்து ஒன்றியங்கள் மூலமாக குறைந்த வாடகைக்கு டீசல் இன்ஜின்கள் கொடுத்தால் அது பயன் உள்ளதாக இருக்கும். மின்சார இணைப்புக் கிடைக்காததால் பலர் கஷ்டப்படுகின்றனர். அவர்களுக்கும் டீசல் இன்ஜின் வாடகைக்கு அளிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் விவசாயிகளுக்கு கூலி மிகவும் குறைவாக இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் என்னுடைய கடயநல்லூர் தொகுதிக்கு வடகரையில் ஒரு வித்துப்பண்ணை இருக்கிறது. அங்கே விவ சாயிக்கு தினம் 7 ரூபாய் கூலி கொடுக்கப்படுகிறது. ஆனால் அவர்களிடம் 10 ரூபாய்க்கு கையெழுத்து வாங்கிக்கொள்கிறார்கள். நாட்டில் சாதாரண மாக 12 ரூபாய் கூலி இருக்கிறது. ஆனால் அங்கே கொடுப்பது 7 ரூபாய் தான். அதையும் வாரா வாரம் கொடுப்பதில்லை. கணக்கில் கொடுக்கப்படா மல் உள்ளது. அவர்களுக்கும் 12 ரூபாய் கூலி கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பயிர் இன்ஷூரன்ஸ் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது என்று தெரிய வில்லை. அதை எல்லா இடங்களுக்கும் விஸ்தரிக்க வேண்டும்.

என்னுடைய தொகுதியில் ஒரு ஆட்டுப்பண்ணை, கோழிப்பண்ணை போன்ற பண்ணைகளை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.





குறிப்பாக, இன்றைக்கு அங்கே மலைப் பகுதிகளில் கிராம்பு, சின்னமன் என்கிற சிருப்பட்டை, கிராம்பு, ஜாதிக்காய் போன்ற வாசனைப் பொருட்கள் அதிகமாக உற்பத்தி செய்ய வாய்ப்புகள் உள்ளன. அவர்கள் செய்கின்ற அந்தப் பயிர்களுக்கு மானியக் கடன் கொடுத்தால் அவர்கள் நிறைய வாசனைப் பொருட்களை உற்பத்தி செய்ய வாய்ப்பு சீர்திருத்தப்படும். மலைப் பகுதிகளின் சரிவுகளில் தட்டுதட்டாக வெட்ட, சீர்படுத்த கடன் கொடுத்து வந்தார்கள், இப்போது அந்தக் கடன் கொடுக்கப்படுவதில்லை. அதையும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில், பஞ்சாயத்து யூனியன்களில் விவசாயிகளுக்கு ட்ராக்டர் அல்லது பவர்-டில்லர் வேண்டுமென்று கேட்டால் ரிப்பேராக இருக் கிறது, கொடுப்பதற்கு இல்லை என்று சொல்கிறார்கள். விவசாயிகள் உழுவதற் காக ட்ராக்டர் கொடுக்க முடியவில்லை என்றால் அதற்கென ஒரு இலாக்கா இருந்தும் யாருக்கும் பயனில்லை. ஆகவே, அவைகளை எல்லாம் உடனடியாக சீர்செய்து, தேவையானவர்களுக்கு கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனக்கு பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்காக நன்றி கூறி, முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. பெ. சு. திருவேங்கடம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1982-83 ஆம் ஆண்டுக்கான வேளாண்மை மானியக் கோரிக்கைகள் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து நான் ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் கூட நிதிநிலை அறிக்கையிலே "இம்மாநிலத்தில் வாழும் மக்கள் பெரும்பான்மையோர் வேளாண்மையை நம்பி வாழ்பவர்கள், எனவே இம்மாநிலத்தில் நிறைவேற்றப்படும் வளர்ச்சித் திட்டம் எதையும் இந்த அடிப்படை உண்மையைக் கருத்திற்கொண்டே வகுக்க வேண்டும்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்கூட இது இந்த மாநிலத்தின் தலையாயக் கொள்கை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இங்கே வேளாண்மைத் துறையி லிருந்து கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கைக் குறிப்பை படித்துப் பார்த்தால் அதற்கு இடமில்லை. இதிலே எனக்கு முன்னால் பேசிய ஆளும்கட்சி உறுப் பினர்கள் ஏதோ புரட்சித் தலைவர் ஆட்சியிலே வேளாண்மைத் துறைக்கு ஏராளமான சலுகைகளை வழங்கி யிருப்பதாகச் சொன்னார்கள். நான் இங்கே வருவதற்கு முன்னால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்த காலத்தில் வேளாண்மைத் துறைக்கு ஒன்றுமே செய்யவில்லை என்பதைப்

போல சொன்னார்கள். அவர்களுக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்
போது என்னென்ன செய்தோம் என்பதில் ஒன்றிரண்டை கூறக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

1967-ல் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தபோது பேரறிஞர்
அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதும் சரி, அதற்குப் பின்னால்
எங்கள் தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்கள் முதலமைச்சராக இருந்த
போதும் சரி, தமிழ் நாட்டில் ஏற்கெனவே இருந்த காங்கிரஸ் அரசு பல்வேறு
பணிகளைச் செய்திருந்தாலும் கூட 1967-ல் திராவிட முன்னேற்றக் கழக
ஆட்சி வந்தபோது கடுமையான உணவுத் தட்டுப்பாடு இருந்தது என்பதை
நாம் எல்லாம் நன்றாக அறிந்திருக்கிறோம். பேரறிஞர் அண்ணா அவர்கள்
தமிழகத்தில் எல்லா வளங்களும் இருந்தாலும்கூட இத்தகைய கடுமையான
உணவுப் பஞ்சம் இருப்பதால் இதைப்போக்க உரிய நடவடிக்கை எடுக்க
வேண்டுமென்று சொல்லி, பசுமைப் புரட்சித் திட்டத்தைக் கொண்டுவந்தார்கள்.

இங்கே பேசிய பல நண்பர்கள் தெரிவித்ததைப்போல அப்போதுதான் இந்த
மாநிலத்திலே இருந்த ஏராளமான தரிசு நிலங்களை பட்டா போட்டுக்
கொடுத்து, நிலவள வங்கிகள் மூலம் கடன் பெற வழிவகைச் செய்தார்கள்
பேரறிஞர் அண்ணா அவர்கள். அதைப்போல கூட்டுறவுச் சங்கங்கள் மூலம்
புதிதாக கிணறுகள் வெட்ட, மின்சார மோட்டார்கள் வாங்க, ஆயில் என்ஜின்
வாங்க, தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்ற—இப்படி பல்வேறு காரி
யங்களுக்கு கடன்களை வழங்கச் செய்தார்கள். அதன் பலனாகத் தான்
இன்றையதினம் தமிழ்நாடு உணவுத் துறையில் தன்னிறைவு பெற்று விளங்கு
கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்த காலத்தில் விவசாயி
களுக்கு செய்த அந்த நல்ல பணிகளுடைய சிறப்பைத்தான் இன்றையதினம்
நீங்கள் அனுபவித்துக்கொண்டிருக்கிறீர்கள் என்பதை நான் தெரிவித்துக்
கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இன்றையதினம் உணவுத் துறையில் தமிழ்
நாடு தன்னிறைவு பெற்றிருக்கிறது என்றால் அதற்கு பேரறிஞர் அண்ணா
அவர்களும், திராவிட முன்னேற்றக் கழகமும் விவசாயிகளுக்கு அளித்த ஊக்க
மும் ஆக்கமும் தான் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட இந்த கொள்கை விளக்கக் குறிப்பில்
தெரிவித்திருப்பதைப் பார்க்கிறபோது, புதிதாக என்ன இருக்கிறது என்று
பார்த்தால், சென்ற ஆண்டும், இந்த ஆண்டும் பயிற்சி மற்றும் தொடர்புமுறை
திட்டம் என்பதை இங்கே நீங்கள் அறிமுகப்படுத்தியிருக்கிறீர்கள்.



(இரவு 6-10)

புதிதாக நீங்கள் சொல்லி இருக்கின்ற திட்டம் இதுதான் என்பதை நான்
ஒத்துக்கொள்கிறேன். அதற்காக 36.48 கோடி ரூபாய் அரசாங்கம் செலவழிக்க
இருக்கின்றது. ஏற்கெனவே சில இடங்களில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்
பட்டன. வருகின்ற ஆண்டிலே வடாற்காடு போன்ற மாவட்டங்களிலே இந்தத்
திட்டம் செயல்படுத்த இருப்பதாக இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
அறிவித்திருக்கிறார்கள். ஆனால் இந்தத் திட்டத்தினால் ஒரு பெரிய பலன்
இருப்பதாக என்னாலே ஒத்துக்கொள்ள முடியவில்லை. காரணம் நான் கேட்
டறிந்த வரையிலும், படித்துப் பார்த்த வகையிலேயும் இந்தத் திட்டம் வரு
கின்றபோது ஏற்கெனவே வேளாண்மைத் துறை ஊராட்சி ஒன்றியத்தோடு
இணைக்கப்பட்டிருந்தது. வேளாண்மைத் துறை அலுவலர்கள் ஒன்றிய
ஆணையாளர்களின் கீழ் பணியாற்றினார்கள். அவர்களுக்கும் கீழே விவசாய
மேஸ்திரிகள், மூன்று வேளாண்மைத் துறை அலுவலர்கள். இந்த வேளாண்மை
இலாக்கா மாவட்ட வேளாண்மை அதிகாரியின் கீழே பணியாற்றினாலும் கூட
ஏற்படுகின்ற பிரச்சினைகளைப் பற்றி ஒன்றியக்குழு அவ்வப்போது கூடுகின்ற
போது இந்த எல்லாம் அலசி ஆராய்ந்து விவசாயிகளுக்கு எந்தெந்த வகை
யிலே இந்தப் பணி செம்மையாகக் கிடைக்கவேண்டும் என்ற வகையிலே நடை
பெற்று வந்தது. ஆனால் இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்துகின்றபோது
இந்த இலாக்காவினை ஊராட்சி ஒன்றியத்திலே இருந்து எடுத்துவிடுகிறீர்கள்.
இது கண்டிக்கத்தக்கது. இந்த இலாக்காவினுடைய பணி செம்மையாக நடை
பெறாது என்பதுதான் என்னுடைய திடமான எண்ணம். ஒன்றியங்களின்
மூலமாக விதைகள் கொடுப்பது, உரம், பூச்சி மருந்து கொடுப்பது, எந்தெந்த
காலத்திலே எந்தெந்தப் பயிர்களை விவசாயம் செய்யவேண்டும் என்று அறி
வுறுத்துவது என்ற வகையிலே இதுவரை பணிகள் செம்மையாக நடைபெற்று
வந்தது. ஆனால் இப்போது இந்த பயிற்சித் திட்டத்தின் மூலம் விவசாயிகள்
எந்தெந்த காலத்திலே என்னென்ன விதை போட வேண்டும், எப்படி பயிர்
செய்யவேண்டும் என்பதைத்தான் இதிலே சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகவே
விவசாயிகளுக்கு இதன்மூலம் தனிப்பட்ட முறையிலே ஏதாவது நன்மை
கிடைக்குமா என்றால் நிச்சயமாக இல்லை.

மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்
தலைவரவர்களே, தங்களின் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்
திலே ஒரு பணிவான வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். இந்தப் பயிற்சித்
திட்டம் இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கின்ற வேறு மாநிலங்களுக்கு
வேண்டுமானால் பொருந்தலாம். ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரையிலே
விவசாயத்திலே முன்னோடியாக இருக்கின்ற மாநிலம். ஆகவே இந்த மாநிலத்
திற்கு இது பொருந்தாது. நாம் செலவழிக்கின்ற பணத்தின்மூலம் பலபேருக்கு
வேலை கிடைக்குமா என்பது தெரியாது. ஒரு வேளை படித்த பல இளைஞர்

களுக்கு வேலை கிடைத்தால் கூட வரவேற்போம்.
அப்படி இல்லை. அப்படி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னால் அதை
நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆகவே இப்போது செலவழிக்கின்ற பணத்தின்
மூலம் விவசாயிகளுக்கு எந்தவிதமான புதிய நன்மைகளும் கிடைப்பதற்கான
வழிவகை இல்லை. அந்த வகையிலே இந்த மாநிலம் முற்போக்கான மாநிலம்.
ஏற்கெனவே நமது விவசாயிகள் இதைப்பற்றி எல்லாம் நன்கு அறிந்திருக்கி
றார்கள். ஆனால் இன்றையதினம் விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருட்
களுக்கு சரியான வருவாய் கிடைக்காத காரணத்தால் இன்றையதினம் விவ
சாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே இந்தத் திட்டம் நம்முடைய
மாநிலத்தின் விவசாயிகளுக்கு நல்ல பலனைத் தராது. ஆகவே வேண்டு
மானால் உலக வங்கியோடும், மத்திய அரசோடும் இதுபற்றி கலந்து விவசாயி
களுக்கு தனிப்பட்ட முறையிலே நன்மை கிடைக்கின்ற வகையிலே இதனை
நீங்கள் மாற்றியமைக்கலாம்.

நான் ஏற்கெனவே சொன்னதைப் போல உதாரணத்திற்கு சிலவற்றை நான்
சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன். நிர்வாகத்திலே ஊராட்சி ஒன்றியத்
திலே இருந்து இலாக்காவைப் பிரித்திருக்கிறீர்கள். எங்களுடைய மாவட்டத்
திலே இதுவரையிலே கூட பிரிக்கப்படவில்லை. இருந்தாலும் என்ன நிலைமை
என்பதைச் சொல்ல விரும்புகிறேன். சாதாரணமாக நான் எல்லாம் ஊராட்சி
ஒன்றியத்திலே 20 ஆண்டுக்காலம் ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினராகவும்,
தலைவராகவும், பெருந்தலைவராகவும் இருந்திருக்கிறேன். ஆனால் அப்போ
தெல்லாம் மூன்று வேளாண்மைத் துறை அதிகாரிகள் இருந்தாலும் ஒன்றியப்
பகுதிகளிலே கிராம சேவக்குகள் இருந்தார்கள். அவர்களிடத்திலே ஸ்ப்ரேயர்
வைத்திருக்கவேண்டும். அதேபோல விவசாய மேஸ்திரிகள் எல்லாம், அரசாங்
கத்திலே இருந்து ஸ்ப்ரேயர்கள் தரப்பட்டு அவர்களும் வைத்திருந்தார்கள்.

அதுமட்டுமல்ல வசதி படைத்த ஊராட்சியிலே நிதி இருந்தால்
அவர்களும் கூட ஸ்ப்ரேயர் வாங்கி வைத்துக்கொண்டிருந்தனர். ஆகவே
சிறு விவசாயிகளும், நடுத்தர விவசாயிகளும் தேவைப்படுகின்றபோது
அந்த ஸ்ப்ரேயரினை வாங்கி பயன்படுத்தக்கூடிய வாய்ப்பு இருந்தது.
ஆனால் இன்று என்ன நிலைமை? இன்றையதினம் விவசாயிகள் தங்கள் நிலங்
களில் பூச்சி இருக்கிறது என்று சொல்லி மருந்து தெளிக்கவேண்டும் என்று
சொன்னால் ஒன்றியத்திற்குச் சென்று ஸ்ப்ரேயர் கேட்டால் இல்லை. மேஸ்திரி
யிடம் சென்று கேட்டால் இல்லை என்கிறார். விவசாயத் துறை இயக்குநர்
எதற்காக உத்தரவு அளித்தார்கள் என்று தெரியாது. மேஸ்திரிகள் எல்லாம்
ஸ்ப்ரேயர்கள் எடுக்கவேண்டாம் என்று உத்தரவு போட்டிருப்பதாக அவர்கள்
சொல்கிறார்கள். என்னைப்போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் கூட என்





தொகுதியில் உள்ள மூன்று ஒன்றியங்களை அணுகினால் கூட பவர் ஸ்ப்ரேயர்
கள் கிடைப்பதில்லை. வசதி படைத்தவர்கள் வேண்டுமானால் தனியாக சொந்தமாக ஸ்ப்ரேயர்கள் வாங்கி வைத்துக்கொள்ளலாம். ஆனால் சிறிய விவசாயிகள் நிலை என்ன? தனியார்களிடம் சென்று ஸ்ப்ரேயர்கள் வாங்கி ஸ்ப்ரே செய்யும் நிலைமைதான் இப்போது இருக்கிறது. இதிலேயும் தனியார் தானா? இந்த அரசு மிகவும் மெத்தனமாக இருக்கிறது, ஒன்றியக் குழுக்கள் இல்லாததால். இன்று விவசாயிகள் அதிகாரிகளை தனியாகப் போய் சந்திக்க முடியுமா? முடியாது. இந்த நிலைமையில்தான் இத்திட்டம் செயல்படுத்தப் படுகிறது.

அடுத்து, இங்கே அறிக்கையில் கூடச் சொல்லியிருக்கிறார்கள். முன்னால் பேரவைத் தலைவர் முனு ஆதி அவர்கள் தலைமையில் விவசாய மேம்பாட்டுக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அதில் என்ன காரணமோ தெரியவில்லை, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் யாருக்கும் பிரதிநிதித்துவம் இல்லையென்று கருதுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அழைத்தாலும் வருவதில்லை, வருவதில்லை என்று பலநேரங்களில் விவாதங்கள் நடைபெறுகின்றன. விவசாயப் பிரச்னைகளை ஆராய என்று ஒரு குழு, சட்டபூர்வமான குழுவை அமைத்திருக்கிறீர்கள். அதில் ஒன்பது ஆண்டுக்காலம் இந்த மாநிலத்தை ஆண்ட கட்சிக்கு பிரதிநிதித்துவம் இல்லை. விவசாயச் சங்கச் செயலாளர்கள் எல்லாம், திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கூட இருக்கிறார்கள். அவர்கள் கூட அதில் உறுப்பினராக இல்லை.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து**: நான் அறிந்தவரை கேட்டவர்கள் தகவல் தரவில்லை என்றாலில்தான் எனக்கு விவரங்கள் தெரியும்.

**திரு. பெ. சு. திருவேங்கடம்**: கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. அழகர்சாமி அவர்கள்கூட ஒரு முறை எங்களிடம் கேட்டார்கள். தலைவரிடம் கேட்டேன். எந்தவிதமான அழைப்பும் வரவில்லை எங்கள் தலைவருக்கு என்று பதில் வந்தது. எனக்குத் தெரிந்த வரையில் உள்ள உண்மைகளைச் சொல்கிறேன். அந்தக் குழு அறிக்கையில் கூட கூட்டுறவு சங்கக் கடன்களை எல்லாம் சிறிது காலம் நிறுத்திவைக்கவேண்டும் என்று சொன்னார்கள் என்று எனக்குக் கிடைத்த தகவல். அந்தக் குழு சொன்ன கருத்தைக் கூட இந்த அரசு முழுமையாக அந்த நோக்கில் ஏற்றுக்கொள்ளவில்லை. சென்ற ஆண்டு நிலவிய கடுமையான வறட்சி நிலை பற்றி இந்த அறிக்கையில் சொல்லியிருக்கிறீர்கள். முனு ஆதிக் குழு சொல்லியும் அந்தக் கருத்தை நீங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. சென்ற ஆண்டு வட ஆற்காடு போன்ற மாவட்டங்களில் வறட்சி நிலை இருந்தும் கூட்டுறவுக் கடன்களை வசூலிக்க கடுமையான ஜப்தி நடவடிக்கைகள் எல்லாம் எடுக்கப்பட்டன. விவசாயிகளின் பாத்திரம் பண்டங்களை எல்லாம் ஜப்தி

செய்தார்கள். நான் கூட அதைப் பற்றி அந்த மாவட்ட வளர்ச்சி மன்றக்
கூட்டத்தில் கேட்டேன். மழை இல்லாமல் சம்பா, நவரை, மணிலா போன்ற
பயிர்கள் எல்லாம் சாவியாகி விட்டன. நிலைமை அப்படியிருக்க எப்படி ஜப்தி
செய்யலாம் என்று நான் கேட்டேன். அதை இந்த அரசும் கேட்டும் கேளாக்
காதினராக இருந்தது. விவசாயிகள் உயர்நீதிமன்றத்திற்குச் சென்று பிறகு
உயர்நீதிமன்ற தீர்ப்புக்கு இணங்க ஜப்தி செய்த எல்லாப் பொருள்களையும்
விவசாயிகளைத் தேடி, கொண்டு போய் கொடுத்துவிட்டு வந்தார்கள்.
அதுதான் வறட்சிக் காலத்தில் விவசாயிகளுக்கு நீங்கள் செய்த நன்மை.
இங்கே கூட ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவர் சொன்னார்கள். கூட்டுறவுச்
சங்கக் கடன்களை ஏராளமாக கொடுத்துவிட்டார்கள் என்று சொன்னார்கள்.
உண்மைதான். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கொடுத்தது. ஆனால் உணவு
உற்பத்தியில் தன்னிறைவு பெறவேண்டும் என்பதற்காகக் கொடுத்தோம்.
கொடுத்த கடன்களை வசூல் செய்து திரும்பவும் கடன்கள் கொடுத்திருக்
கிறோம். ஆனால் நீங்கள் 1977-ல் ஆட்சிக்கு வந்தீர்கள். அப்படி வந்ததற்குப்
பிறகு உள்ள நிலைமை என்ன? கிராமங்களில் உள்ள நிலைமை என்ன? யாராவது
ஒரு கிராமத்தில் நாராயணசாமி நாயுடு சங்கத்தை ஆரம்பித்து கொடிகட்டினால்
உடனடியாக அண்ணா தி.மு.க. ஆட்சியில் யாரும் ஜப்திசெய்ய போக மாட்டார்
கள். அப்படி ஒரு நிலைமையை நீங்கள் உண்டாக்கினீர்கள். அதன் பலன்
என்ன ? எல்லாக் கிராமங்களிலும், எல்லா கட்சியை சார்ந்தவர்களும், திராவிட

(இரவு 6-20)

முன்னேற்றக் கழகம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், காங்கிரஸ் கட்சி
ஆகிய அனைவரும் அந்தக் கொடியைக் காட்டினால் தான், ஒரு பாதுகாப்பு
இந்த ஆட்சியிலே இருக்கும் என்கின்ற நிலைமை அன்றைக்கு வட ஆற்காடு
மாவட்டத்திலே இருந்தது. அதற்குப் பிறகு, சென்ற தேர்தலில் என்ன சொன்
னீர்கள்? அண்ணா தி.மு.க. மறுபடியும் ஆட்சிக்கு வந்தால், விவசாயிகள்
பட்டிருக்கின்ற அனைத்துக் கடன்களையும் நாங்கள் தள்ளுபடி செய்வோம்
என்று தேர்தல் அறிக்கையிலே சொன்னீர்கள். நாங்கள் சட்டமன்றத் தேர்
தலுக்கு நின்றோம். கிராமங்களுக்குச் சென்றபோது, எங்கள் தொகுதியில்
கிராம மக்கள் கேட்டார்கள்—அண்ணா தி.மு.க. இப்படி சொல்லியிருக்கிறார்
களே? உங்களுடைய தலைவரும், காங்கிரஸ் கட்சியும் சொல்லியிருக்கின்ற
அறிக்கையில், ஏதோ மேம்பாட்டு வாரியம் அமைப்போம், விவசாயிகளுக்கு
உதவி செய்வோம் என்று சொல்லியிருக்கிறார்களே தவிர, அனைத்துக் கடன்
களையும் தள்ளுபடி செய்வோம் என்று சொல்லவில்லையே, உங்களுக்கு எப்படி
வாக்களிப்போம், அவர்களுக்கு வாக்களித்தால் கடனைத் தள்ளுபடி செய்வார்
கள் என்று சொன்னபோது, அதற்கு எங்களால் சரியாக பதில் சொல்ல முடிய



வில்லை. அப்படிப்பட்ட ஒரு நிலைமையை தமிழ்நாட்டிலே நீங்கள் உண்
டாக்கினீர்கள். பிறகு விவசாய மக்கள் உங்களை நம்பினார்கள். மதிப்பிற்குரிய
நாராயணசாமி நாயுடு அவர்கள் உங்களை நம்பினார்கள். உங்களுக்குப் பெரு
வாரியான இடங்கள் கிடைத்தன, ஆட்சிக்கு வந்தீர்கள். பிறகு சிறு விவசாயி
கள் என்று சொல்லி, கூட்டுறவுக் கடன்களில், ஒருசில பகுதிகளை தள்ளுபடி
செய்தீர்கள். இல்லை என்று நான் சொல்லவில்லை. ஆனால், நிலைமை என்ன?
ஏற்கனவே, 1974லே இருந்து வறட்சி ஏற்பட்டபோதும் அல்லது வெள்ளம்
அதிகமாக வந்து பாதிப்பு ஏற்பட்டபோதும், விவசாயம் செய்ய முடியவில்லை
என்று சொல்லப்பட்டு கடன்கள் ஒத்திவைக்கப்பட்டன. ஏறக்குறைய 1974,
1975, 1976 ஆம் ஆண்டுகள் ஆகி, இன்றைக்கு 1982-க்கு வந்திருக்கிறோம். இந்த
5, 6 ஆண்டுக் காலம் கூட்டுறவு சங்கக் கடன்களாலும் சரி, விவசாயக் கடனா
னாலும் சரி, நிலவள வங்கியில் கொடுக்கப்பட்ட கடனானாலும் சரி, அந்தக்
கடன்கள் ஒத்திவைக்கப்பட்டன. ஆனால், கூட்டுறவுச் சங்கச் சட்டம் சொல்
வது என்ன? ஓராண்டு கடன் தவணையை குறிப்பிட்ட தேதியில் கட்டவில்லை
என்று சொன்னால், அபராத வட்டி போடுவார்கள். பிறகு இப்படியே வட்டி
கள் கூடிக்கொண்டே வருகிறது. அதைத்தான் எங்கள் கட்சியைச் சார்ந்த
இராசமாணிக்கம் அவர்கள், உதாரணத்திற்காக சில கடன்களைப் படித்துக்
காட்டினார்கள். இன்றையதினம் நம்முடைய அரசாங்கம் கூட்டுறவுச் சங்கக்
கடனானாலும் சரி, நிலவள வங்கிக் கடனானாலும் சரி ஒரு நிலைமையை
ஏற்படுத்தியிருக்கிறார்கள். என்ன நிலைமை ? ஏற்கனவே கொடுத்த கடன்,
நிலவள வங்கியிடமிருந்து வாங்கியிருக்கிற கடன் ஆகிய கடன்கள், இந்த 5, 6
ஆண்டுகளில் கட்டாமல் இருந்ததினால் ஏற்பட்ட வட்டி, அந்த வட்டியைக்
கொடுக்காததால், அதற்கு அபராத வட்டி ஆகிய இவைகளையெல்லாம் சேர்த்து
மொத்தமாக, அசலாக, பிறகு இதைத் தவணையில் கொடுங்கள் என்று சொன்
னால் என்ன அர்த்தம் ? இதைப்பற்றியெல்லாம் விவரமாகப் பேசுவதற்கு நேர
மில்லை. நிலைமை என்ன ஆயிற்று? 1,000 ரூபாய் கடன் பெற்றிருக்கிறவன்,
இன்றையதினம் 3,000 கடன் என்ற அளவில், திருப்பிக் கொடுக்கக்கூடிய
நிலைமை இந்த அரசாங்க உத்தரவினால் ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்கெல்
லாம் நோட்டீஸ் தருகிறார்கள்? அவர்களால் எப்படித் திருப்பித் தர முடியும்?
1,000 ரூபாய் கடன் பெற்ற விவசாயி—சிறிய விவசாயியும் பாதிக்கப்படுகி
றான், பெரிய விவசாயியும் பாதிக்கப்படுகிறான். இங்கே ஏதோ பெரிய மிட்டா
மிராசுதான் ஆதாயம் பெறுகிறான் என்பதல்ல. சிறிய விவசாயி, நடுத்தரக்
குடும்பம், ஏழை எளிய விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். அவர்கள் எப்படி
கடனைக் கட்ட முடியும்? அதைத் தான் நம்முடைய இந்திய கம்யூனிஸ்ட்
கட்சியைச் சார்ந்த தலைவர், தேர்தலிலே எங்களோடு ஒன்றாக இருந்தவர்,
அவர்கள்கூட சொன்னார்கள்.

[திரு. பெ. சு. திருவேங்கடம்] [1982 மார்ச் 8

நீங்கள் இதிலே ஒரு நல்ல நிலைமையை ஏற்படுத்தவேண்டும். தமிழகத்திலே விவசாயிகளுடைய நிலைமை சீரடைய வேண்டுமென்று சொன்னால், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், முதலமைச்சர் அவர்களையும், நிதியமைச்சர் அவர்களையும் கலந்து, விவசாயிகளுடைய அசலைப் பெறவேண்டும் என்று சொன்னால், அபராத வட்டி, ஏற்கனவே ஏறியிருக்கின்ற அசலைவிட இரண்டு மடங்கு போடப்பட்டுள்ள வட்டி, இவைகளையெல்லாம் தள்ளுபடி செய்து, ஓரளவுக்கு அவர்கள் அந்தக் கடனை திருப்பிச் செலுத்துவதற்கு வழிவகை காண வேண்டும்.

நாமே தான் சட்டம் போடுகிறோம். ரூபாய் 4,800 க்கு கீழே ஆண்டு வருமானம் இருந்தால், அவர்கள் சிறு விவசாயிகளாக் கருதப்பட்டு, தனிப் பட்டவர்களிடமிருந்து அவர்கள் கடன் பெற்றிருந்தால், அதைத் திருப்பிச் செலுத்த வேண்டியதில்லை என்ற சட்டத்தை, அவர்களைக் காப்பாற்றுகின்ற முறையில் போடுகிறோம். அதை நாங்கள் வரவேற்கிறோம், எல்லோரும் வர வேற்கிறார்கள். ஆனால், தனிப்பட்டவர்களுக்கு ஒரு சட்டம், அரசாங்கத் திற்கு ஒரு சட்டம் என்றால், அது நியாயமா? இங்கே சிறிய விவசாயிகளுக்கு இப்படிப்பட்ட விதியிருப்பதால் தான், இத்தகைய கடுமையான நிலைமை இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் உணர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன். இப்போது கூட வட ஆற்காடு மாவட்டத்தில் செய்யாறு, திருவண்ணாமலை, கலசபாக்கம், போளூர் போன்ற இடங்களிலும், தென் ஆற்காடு மாவட்டத்திலும் கடுமையான வறட்சி நிலவி வருகிறது. இந்த நேரத்திலும் கடுமையான ஜப்தி நடவடிக்கைகளில் ஈடுபட் டிருக்கிறார்கள். இவற்றை தடைசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். விவசாயிகள் வாங்கிய கடனை ஏமாற்ற மாட்டார்கள். ஆகவே விவசாயிகளுக்கு திருப்பிச் செலுத்துகிற சக்தியை அதிகமாக்குவீர்களானால் நிச்சயமாக அவர்கள் கடனை கட்டுவார்கள். இங்கே கூட சொன்னார்கள். பூசணிக்காயை சோற்றிலே மறைக்கிறார்கள் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் என்று கூட சொன்னார்கள். இன்றையதினம் தமிழகத்திலே என்ன நிலைமை? லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் மின்சாரம் இல்லாமல் காய்கின்றன. ஒத்திவைப்புத் தீர்மானங்கள், வெளிநடப்புகள் என்று எத்தனையோ செய்தோம், ஆனாலும் நிலைமைகள் மாறவில்லை. ஏற்கனவே நீங்கள் ஓராண்டு காலமாக நம்முடைய மின்துறை அமைச்சர் அவர்களும், மற்ற அமைச்சர்களும் தமிழகத்திலே மின்வெட்டு வராது, வேண்டிய மின்சாரம் இருக்கிறது என்றெல்லாம் சொன்னீர்கள். இன்றைதினம் நிலைமை என்ன? நீங்கள் அல்லவா மிக பயங்கரமான நிலையை மறைத்துக் கொண்டிருந்தீர்கள். அல்லவா பூசணிக்காயை சோற்றிலே மறைத்தீர்கள்? இதை



1982 மார்ச் 8] [திரு. பெ. சு. திருவேங்கடம்]

சிந்தித்துப் பார்க்க வேண்டும். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மின்துறை அமைச்சர் அவர் களையும் கலந்து தேவையான மின்சாரத்தை தரவில்லையென்றால் வடஆற்காடு மாவட்டத்திலே பயங்கரமான சூழ்நிலை ஏற்பட்டு விவசாயம் அடியோடு நாசமாகும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பூசணிக்காயை சோற்றிலே மறைக்க வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் பூசணிக்காய் உற்பத்தி செய்வதும் வேளாண்மைத் துறையிலே, தோட்டக்கலையில் மிக முக்கியமான பகுதி.

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்லவில்லை, ஏற்கனவே மாண்புமிகு ஆளும்கட்சி உறுப்பினர் சொன்னார்கள், அதை தான் நான் சொன்னேனே தவிர, வேறொன்றும் இல்லை. அடுத்து விதைகளைப் பற்றி நான் சொல்லியாக வேண்டும். அதிகாரிகள் வேளாண்மைத் துறையிலே இந்த விதைகள் வாங்குவது சம்பந்தமாக தனிப்பட்ட முறையிலே இயங்குகிறார்கள். கிராமங்களிலே விவசாயிகளிடத்திலே வாங்குகிறார்கள். ஏராளமான தவறுகள் ஏற்படுகின்றன. சரியான நல்ல விதைகளை வாங்குவதில்லை. அதை விவசாயிகள் திரும்பவும் அவர்களிடம் வாங்குகின்றபோது விதைகள் எல்லாம் முளைக்காமல் பாதிக்கப் படக் கூடிய நிலை இருக்கிறது. ஊராட்சி ஒன்றியங்களிலே இருக்கிற டிராக்டர்கள் பழுதடைந்து இருக்கின்றன. அதேபோல அக்ரோ என்ஜினியரிங் என்று சொல்கிற நிறுவனங்கள் எல்லாம் இன்றையதினம் சரியான முறையிலே இயங்காமல் அங்கே ஸ்ப்ரேயர், டிராக்டர்கள் மற்றும் தேவையான விவசாயக் கருவிகள் அனைத்தும் பழுதடைந்து இருக்கின்றன. நானே அங்கு சென்று பார்த்தேன். என்னிடத்திலும் சொன்னார்கள். அவைகள் பழுதடைந்து இருக்கின்றன. அவைகளை எல்லாம் புதுப்பிக்க வேண்டும்.

கிணறுகள் ஆழப்படுத்துவதைப் பற்றி நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். சென்ற ஆண்டு வறட்சியின் போதும் இந்த நிலை இருந்தது. ஆழப்படுத்த வேண்டுமென்றால் தோட்டா வைத்து வெடி வைத்து ஆழப்படுத்த வேண்டி யிருக்கிறது. சாதாரணமாக தோட்டா 3, 4 ரூபாய்க்கு கிடைக்கும். என்னுடைய மாவட்டத்திலே 17 ரூபாய் விற்கப்படுகிறது. இதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களையும் அணுகியிருக்கிறோம். ஆகவே தோட்டாக்கள் நியாய விலையில் கிடைப்பதில்லை, இதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். விவசாயிகளுக்கு நெல்லானாலும் சரி, கரும்பானாலும் சரி, மற்றைய பயிர்களானாலும் சரி கட்டுபடியாகவில்லை, உங்களை கேட்டால்

[திரு. பெ. சு. திருவேங்கடம்] [1982 மார்ச் 8

மத்திய அரசை கேட்கிறோம் என்று சொல்கிறீர்கள். உங்களுக்கு லாபகரமாக இருந்தால் மாநில அரசு செய்கிறது என்று சொல்கிறீர்கள். மற்ற சமயங்களில் மத்திய அரசை குறை கூறி அவர்கள் மீது பழி போடுகிறீர்கள்.

(இரவு 6-30)

இன்றைய தினம் நிலைமை என்ன ? 1977 ஆம் ஆண்டு ஒரு விவசாயி மின்சார மோட்டார் 3 குதிரையோட்ட சக்தியுள்ளது வாங்கவேண்டுமென்றால் 1,300 ரூபாய் கொடுத்தால் போதும், இன்றைய தினம் 2 ஆயிரத்திற்கு மேல் கொடுக்கவேண்டியிருக்கிறது. அதேபோல 5 குதிரையோட்ட சக்தியுள்ள மோட்டார் அன்றைய தினம் 2 ஆயிரம் விற்றது, இன்றைய தினம் 3,500 ரூபாய்க்கு விலை போகிறது. 50 கிலோ கொண்ட யூரியா மூட்டை ஒன்று 1976-77-இல் என்ன விலை, 72 ரூபாய் தான். ஆனால் இன்றைய தினம் அதற்கு 125 ரூபாய் அளவுக்கு கொடுக்கவேண்டிய நிலை உள்ளது. கலப்பு உரத்தை எடுத்துக்கொண்டால் 82 ரூபாய் என்ற அளவுக்குக் கிடைத்தது, இன்றையதினம் 134 ரூபாய்க்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. பூச்சி மருந்துகளின் விலைகள் கூட உயர்ந்துவிட்டன இவைகளையெல்லாம் பார்க்கிறபோது கட்டுப்படியாகாத அளவுக்கு விலை பயங்கரமாக உயரக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. மத்திய அரசு மறுக்கிறது என்றால் மத்திய அரசோடு போராடுங்கள், நாங்கள் துணை நிற்கிறோம், மத்திய அரசு ஒத்துக்கொள்ள வில்லை என்று சொல்வதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் நெல், கரும்பு, பருத்தி போன்ற பொருட்களுக்கு கட்டுபடியாகக் கூடிய விலையைக் கொடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மின்சாரத்திலே அதிகமான நட்டம் வருகிறது என்று நம்முடைய நிதியமைச்சர் நாவலர் அவர்கள் திருவண்ணாமலையிலே ஒரு அரசு விழாவிலே பேசுகிறபோது குறிப்பிட்டு, 9 லட்சம் விவசாயிகள் மின்சார மோட்டார்கள் வைத்திருக்கிறார்கள், இவ்வளவு இருந்தும் நட்டம் வருகிறது என்று சொல்கிறீர்கள், நீங்கள் எல்லாம் ஏழைகளா ? நான் யார் தலையைத் தடவிக் கொடுப்பது என்றெல்லாம் அவருக்கே உரித்தான பாணியிலே பேசியிருக்கிறார்கள். நான் நாவலர் அவர்களைக் கேட்டுக் கொள்வது எல்லாம் அவர்களுக்கே தெரியும், இந்த மாநிலத்தின் நிதிநிலை அறிக்கையைப் பார்க்கிறபோது அவருக்கே வருத்தமாக இருக்கிறது, இவ்வளவு ரூபாயை மின்சார வாரியத்திற்குக் கொடுக்கிறோம் என்கிறபோது ஆத்திரப்பட்டுச் சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் எல்லா மக்களுக்கும் உணவு அளித்துவிட்டு எங்களுடைய பட்ஜெட் துண்டு விழுகிற நிலை இருக்கிறதே, எங்களுக்கு கோபம் வாராதா ? ஆத்திரம் வாராதா ?



1982 மார்ச் 8]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, உத்திரப் பிரதேசத்திலே இருக்கின்ற அதே விவசாயிகள் ஒரு யூனிட்டுக்கு 24 காசுகள் கொடுக்கிறார்கள், 22 காசுகள் செலுத்துகிறார்கள். 1974 ஆம் ஆண்டிலே இங்கே 12 காசுகள் என்று விதித்தோம். அப்போது ஒரு ரூபாயின் மதிப்பு 44 காசாக இருந்தது, இப்போது ஒரு ரூபாயின் மதிப்பு 21 காசாக இருக்கிறது. அப்போது 12 காசு என்று வைத்திருந்தாலும் இப்போது கணக்கின்படி பார்த்தால் 5 காசு என்ற அளவுக்குத்தான் ஒரு யூனிட்டுக்கு வருகிறது. மற்றைய மாநிலங்களிலே, உத்திரப்பிரதேசம், பீகார், ஒரிசா மாநிலங்களின் அளவுக்கு அங்கே விவசாயிகள் தாங்குகிற அளவுக்கு இங்கே தாங்க இயலுமா என்றுதான் நான் சொன்னேனே தவிர வேறல்ல. ஒன்பது லட்சம் பம்புசெட்டுகளை வைத்துக்கொண்டிருக்கிறோம் என்று சொல்கிறபோது மற்றவர்கள்மீது வரிப்போட்டுத்தான் அதை ஈடுகட்டவேண்டி யிருக்கிறது என்று தான் சொன்னேன், மற்றைய மாநிலங்களிலே உள்ள அதே விவசாயிகளைப் பார்க்கிறபோது இந்த மாநிலத்தில் உள்ள நிலையை மற்றைய மாநிலங்களில் உள்ள நிலையோடு ஒப்பிட்டுப் பார்த்தால் நியாயமான அடிப்படையில் நாம் செய்திருக்கிறோம் என்பதைச் சொன்னேன். நியாயம் இருக்கிறது என்பதைத்தான் எடுத்துச் சொன்னேன். இந்த நாட்டிலே எந்த மாநிலத்திலே உள்ள விவசாயிகளை எடுத்தாலும் இதே நிலைதான்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : நாவலர் அவர்கள் கூறியதிலே நியாயம் இல்லை என்று நான் வாதாடவில்லை. ஆனால் மாநில அரசின் பட்ஜெட்டைப் பார்க்கிறபோது அந்த வாதம் வருகிறது உண்மைதான். ஆனால் எங்களுடைய நிலையைப் பார்க்கிறபோது ஒரு ஏக்கர் பயிரிட்டால் லாபமே இல்லை. மத்திய அரசாங்கமோ மாநில அரசாங்கமோ எங்களுக்குத் தெரியாது, நெல்லுக்கு குவிண்டாலுக்கு 150 ரூபாயாவது கொடுக்கவேண்டும், கரும்புக்கு ஒரு டன்னுக்கு 250 ரூபாய் அளவுக்காவது கொடுக்கவேண்டிய ஏற்பாட்டைச் செய்வதற்கு வழிவகை காணவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். நியாயமான விலைகள் கிடைக்குமானால் கூட்டுறவுக் கடனைத் திருப்பிச் செலுத்துவோம், மின்சாரக் கட்டணத்தை உயர்த்துமானால் ஏற்றுக் கொள்வோம். அதிலே எங்களுக்கு கவலை இல்லை. ஆகவே மின்சாரக் கட்டணத்தை இப்போது உயர்த்தவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். காய்கறிகள் நகரங்களிலே உள்ள நடுத்தரக் குடும்பங்கள், ஓட்டல்கள் பாதிக்கப்படுகின்ற அளவுக்கு உயர்ந்திருக்கின்றன. இன்றைய தினம் விவசாயி களுக்கு அந்த அளவுக்கு விலை கிடைக்கவில்லை என்ற நிலை இருப்பதால் அதற்காக ஒரு வாரியம் ஏற்படுத்தி அந்த விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டும். அதே நேரத்தில் நகரங்களில் தேவையான அளவுக்கு

[திரு. பெ. சு. திருவேங்கடம்] [1982 மார்ச் 8

காய்கறிகளைக் கொடுப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று அமைச்சர் அவர்களையும் ஆளுங்கட்சி உறுப்பினர்களையும் மெத்தப் பணிவோடு கேட்டு அவர்கள் பேசுகின்றபோது உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்று சொன்னார்கள், நீங்கள் வந்தனை செய்யா விட்டாலும் பரவாயில்லை நிந்தனை செய்யவேண்டாம் என்று சொல்லி முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நூறாண்டுகள் கண்ட வேளாண்மைத் துறையின் மானியக் கோரிக்கைகளின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் தங்களுடைய எண்ணங்களை வழங்கியிருக்கின்றார்கள். பல்வேறு ஆலோசனைக் கூறியிருக் கின்றார்கள். குறைபாடுகளைக் கோடிட்டுக் காட்டியிருக்கின்றார்கள். அந்த வகையிலே இதிலே கருத்து தெரிவித்த அனைத்து உறுப்பினர்களுக்கும் என்னுடைய நன்றியினை முதலில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

வேளாண்மைத் துறை என்கின்ற அடிப்படையில் வேளாண் பெரு மக்களுக்கு உரிய ஆலோசனை சொல்வது, எந்தெந்த இடுபொருட்களைப் பயன் படுத்தலாம் என்று கூறுவது, நவீன வேளாண்மை முறைகளை அவர் களுக்குச் சுட்டிக்காட்டுவது என்று இப்படிப்பட்ட பணிகளை மட்டும்தான் இந்தத் துறை மேற்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். ஆனால் வேளாண்மை தொடர்பான பிரச்னை என்பது, விவசாயிகள் பிரச்னை என்பது இந்தத் துறையிலே மட்டுமல்லாமல் அது பல்வேறு துறைகளிலேயும் பரவிக் கிடக்கிறது என்பதையும், உணவுத் துறை யானாலும், மின்சாரத் துறையானாலும், கூட்டுறவுத் துறையானாலும், தொழிலாளர் துறையானாலும் இப்படிப் பல்வேறு துறைகளும் விவசாயம் தொடர்பான பிரச்னைகளை ஆராய்ந்து முடிவு செய்வதற்குப் பொறுப்பை ஏற்க வேண்டியன என்பதையும், அந்த வகையிலே இங்கே குறிப்பிட்டுக் கூறப்பட்டிருக்கின்ற விவசாயிகள் தொடர்பான பல்வேறு பிரச்னைகளையும் ஆராய, அதுபற்றிய முடிவுகளை எடுக்க இந்தத் துறையின் மூலமாக மட்டும் நேரடியாக இயலாது என்பதையும், ஆனால் நீங்கள் குறித்துக் காட்டியிருக் கின்ற அந்த எண்ணங்களை அரசு கவனத்திற்கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. திருவேங்கடம் அவர்கள் பேசுகின்றபொழுது உயர் மட்டக் குழு அமைக்கப்பட்டிருப்பதை எடுத்துக் கூறி, அந்த உயர்



1982 மார்ச் 8] [கா. காளிமுத்து]

மட்டக் குழுவிலேகூட சட்டசபையிலே இருக்கின்ற பிரதான எதிர்க் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இடம் அளிக்கக் கூடாதா

(இரவு 6-40)

என்று இங்கே கேட்டார்கள். எனக்கு வழங்கப்பட்டிருக்கிற இந்தத் தகவலின் அடிப்படையிலே தெரிவிக்க விரும்புகிறேன், 28-4-1981 அன்று நடந்த உயர் மட்டக் குழுக் கூட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழக விவசாயப் பிரிவையும் இக்குழுவில் சேர்த்துக் கொள்ளலாம் என தீர்மானிக்கப்பட்டது. மேலும், தமிழக விவசாயிகள் சங்கத்திற்குப் பலமுறை கடிதம் அனுப்பியும் அச்சங்கம் குழுவில் உறுப்பினராகப் பொறுப்பேற்க தங்கள் சார்பாளர் யாரையும் குறிப்பிடாததால் அச்சங்கத்தின் சார்பாளருக்குக் குழுவில் இடம் உண்டு என்பதையும், எப்பொழுது வந்தாலும் அச்சங்கச் சார்பாளர், கூட்டத்திலே கலந்துகொள்ளலாம் என்பதைத் தெரிவிக்கலாம் என்றும் குழு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. இதனைத் தொடர்ந்து குழுவின் தீர்மானத்தை 9-5-1981 நாளிட்ட கடிதத்தில் திரு நாராயணசாமி நாயுடு அவர்களுக்கும் திராவிட முன்னேற்றக் கழக விவசாயப் பிரிவுச் செயலாளருக்கும் தெரிவித்து அவ்விருசாராரையும் குழு கூட்டத்திலே கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இதுகாறும் அவர்களிடமிருந்து பதில் ஏதும் கிடைக்க வில்லை என்கின்ற தகவல் எனக்குத் தரப்பட்டிருக்கிறது.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த விவசாய உயர் மட்டக் குழு அமைக்கின்ற சமயத்தில் அதற்குத் தானே தலைவராக இருந்து பணியாற்றுவேன் என்று முதலிலே சொன்னார்கள். அதற்குப் பிறகு நாரயணசாமி நாயுடு அவர்களையே அதற்குத் தலைவராகப் போடுவேன் என்று அப்பொழுது சொன்னார்கள். பிறகு மூனு ஆதி அவர்களைத் தலைவராகப் போட்டு நியமித்திருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகமும், நாராயணசாமி நாயுடு விவசாயச் சங்கமும் அந்தக் குழுவிலே கலந்து கொள்வதில்லை என்று நாங்கள் முடிவு செய்து விட்டோம். அதைச் சொல்லிவிட்டோம். காரணம், விவசாயிகளுக்கு நன்மை செய்வதற்காக அமைக்கப்பட்ட குழு அல்ல இது, அரசாங்கம் செய்வதைச் சரி என்று சொல்வதற்கு மட்டும் அமைக்கப்பட்ட குழு. ஆகையினால்தான் ஜப்தி நடவடிக்கை தொடர்கின்றவரையில், விவசாய விளைபொருளுக்கு விலை கொடுக்காத வரையில், மின்சாரத்தைத் துண்டிக்கின்ற வரையிலே, அதிலே நாங்கள் சேருவதில்லை என்று சொல்லிவிட்டோம்.

**மாண்புமிகு திரு. காளிமுத்து:** துணைத்தலைவர் அவர்களே, குழு கூட்டத்திலே கலந்து கொள்வது, அல்லது கலந்துகொள்ளாமல் இருப்பது அவர்களுடைய உரிமை, அதிலே நான் தலையிடவில்லை, ஆனால், மாண்புமிகு உறுப்பினர் திருவேங்கடம் அவர்கள் இங்கே குறிப்பிடுகிறபொழுது அழைக்கவில்லை, சேர்த்துக்கொள்ளவில்லையென்கின்ற குறைபாட்டை அவர்கள் சுட்டிக்காட்டிய காரணத்தினாலேதான் அழைத்தோம் என்கின்ற விவரத்தை மட்டும்தான் நான் இங்கே தெரிவித்தேன் என்பதைக் குறிப்பிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அவர்கள் இங்கே பயிற்சி மற்றும் தொடர் வழித் திட்டம் இந்தத் துறையினுடைய புதிய திட்டம்—உலக வங்கியினுடைய உதவியோடு நடைமுறைப்படுத்துகிற திட்டம்; அந்தத் திட்டம் ஊராட்சி ஒன்றியத்திலேயிருந்து வேளாண்மைத் துறையைப் பிரித்துவிடக்கூடிய அபாயமாக இருக்கிற காரணத்தினால், அது அவ்வளவு விவசாயப் பெருமக்களுக்குப் பயன் அளிக்காது என்ற கருத்தினைச் சொன்னார்கள். நான் அந்தத் திட்டத்தின் அடிப்படையிலே குறிப்பிட விரும்புவது, ஊராட்சி ஒன்றியத்திலேயிருந்து அதைப் பிரித்து எடுத்து விடுவது என்பது அல்ல நோக்கம். அங்கேயிருக்கிற வேளாண்மை அலுவலர்களுடைய அன்றாட அலுவல் நடைமுறை மாறுகிறதே தவிர, ஊராட்சி ஒன்றியக் கூட்டங்களிலே அவர் கலந்து கொள்ள வேண்டுமென்பதும் அங்கே தேர்ந்தெடுக்கப்படுகிற பெரும் தலைவருக்கோ அல்லது கட்டத்திலே இருக்கிற உறுப்பினர்களுக்கோ அவ்வப்போது உள்ள விவசாயப் பிரச்னைகளைப் பற்றி எடுத்துச் சொல்ல வேண்டுமென்பதும் அவர்களுடைய ஆலோசனைகளைப் பெற்று அந்த வகையிலே திட்டம் வகுக்கப்பட வேண்டுமென்பதும் எந்தவிதமான மாறுதலுக்கும் உரியதாக இல்லையென்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் திட்டத்தினுடைய நோக்கம் ஒவ்வொரு நாளும் இந்த விவசாய அலுவலர் எந்த ஊரிலே இருப்பார், எங்கே விவசாயப் பெருமக்களைச் சந்தித்துக் கொண்டிருப்பார் என்கின்ற முழு விவரம் நமக்குக் கிடைக்கிறது. அவர் அந்த விவசாயப் பெருமக்களுக்கு ஆலோசனை சொல்கிறார், விவசாயிகள் எடுத்துச் சொல்லக்கூடிய பிரச்னைகளை, வயல்வெளிப் பிரச்னைகளை, வேளாண்மை விஞ்ஞானிகளுடைய கவனத்திற்கு நேரடியாகக் கொண்டு போக முடிகிறது. அதற்கு ஆராய்ச்சிக் கூடத்திலே பரிகாரம் காண்பதற்கு வழி இருக்கிறது. ஆகவே, வேளாண்மை விரிவாக்கம் என்பது ஒரு நேரடி நிர்வாகத்தின்கீழ் இந்தத் திட்டத்தின் அடிப்படையிலே வருகிறது என்கின்ற காரணத்தினாலே நான் இந்தத் திட்டம் மிக ஏற்புடைய திட்டம் என்பதனை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். உலக வங்கியிலே இருந்து வந்த பிரதிநிதிகள் சுற்றிப் பார்த்து விட்டு, தமிழகம் இந்தத் திட்டத்தை நன்முறையிலே செயல்படுத்து





கிறது என்கிற பாராட்டைத் தெரிவித்திருக்கிறார்கள். ஒவ்வொரு நாளும்
100 விவசாயக் குடும்பங்களோடு தொடர்புகொள்கிற நேரத்தில் விவசாயப்
பெருமக்களுடைய பிரச்னைகளைப் புரிந்து கொள்ள முடிகிறது; அதற்குரிய
பரிகாரத்தைக் காண்பதற்கு வழி ஏற்படுகிறது. ஆகவே, இது மிக முக்கியமான,
போற்றப்பட வேண்டிய, புகழுக்குரிய திட்டம் என்பதனை இந்த நேரத்தில்
சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தமிழகத்தினுடைய கிராமப்புறங்களில் ஒரு
புதிய மலர்ச்சியை, வளர்ச்சியை உருவாக்க வேண்டுமென்பதுதான் இந்த
அரசாங்கத்தினுடைய நோக்கம். அதற்கு எப்படி பயிற்சி மற்றும் தொடர்பு
கொள்கின்ற இந்தத் திட்டம் பயன்படுகிறதோ, அதைப் போலத்தான்
ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் என்கின்ற திட்டமும் செயல்படுத்தப்
படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். இன்றைய
இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழில்கூட அவர்கள் ஊரக ஏழைகளுக்கான
திட்டம் தோல்வி அடைந்து விட்டது என்கின்ற வகையிலே ஒரு கட்டுரை
வெளியிட்டிருக்கிறார்கள். போற்றுதற்குரிய அந்த ஏட்டிலே வந்திருக்கிற
அந்தக் கட்டுரையின் சாரமாக நான் கருதுவது, அவர்கள் 1979-80 ஆம்
ஆண்டிலே செய்த ஆய்வினுடைய, 1978-79 ஆம் ஆண்டிலே செய்த ஆய்வி
னுடைய அடிப்படையாக அந்தக் கட்டுரையை வடித்திருக்கிறார்கள் என்று
நான் கருதுகிறேன். ஆனால், இப்பொழுதைய நிலைமை, நாம் ஒருங்கி
ணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தை 376 வட்டங்களிலே செயல்படுத்து
கிறோம் என்பதையும் ஒரு வட்டாரத்திற்கு ரூ. 6 இலட்சம் மானியம் வீதம்
மொத்தம் ரூ. 22.56 கோடி அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதையும்
இன்று வரை 22.52 கோடி மானியமாக வழங்கப்பட்டு விட்டது என்பதையும்
இந்தியத் துணைக் கண்டத்திலேயே இந்தத் திட்டத்திலே முதல் வெற்றி
பெற்றிருக்கிற மாநிலமாக, 96 விழுக்காடு செய்திருக்கிற மாநிலமாக, தமிழகம்
விளங்குகிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே பெருமையோடு தெரிவிக்
கக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் திட்டத்தின்கீழ் 40 முதல்
60 சதவீதம் பேர்கள் ஆதி திராவிடர்களாக இருக்க வேண்டுமென்பதை நாம்
அறிவித்து இருக்கிறோம் ஒரு வட்டாரத்திலே இத்திட்டத்தின் கீழ் பயனடை
டையும் 600 பேரில் குறைந்தது 200 பேர் மகளிராக இருக்க வேண்டுமென்றும்
அறிவித்து இருக்கிறோம். இதுவரை இந்தத் திட்டத்திலே 4.22 இலட்சம்
பேர்கள் பயனடைந்துள்ளார்கள். அதில் 1 இலட்சம் பேர்கள் ஆதி
திராவிடர்கள், 80,000 பேர்கள் பெண்கள். ஆகவே, மிகச் சிறந்த முறை
யிலே இந்தத் திட்டம் வெற்றி பெற்றிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே
நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். அதைப் போலவே, வறட்சிப்
பாதிப்பு நேரத்தில், அதனாலே வேளாண்மைப் பொருளாதாரம் வீழ்ந்து
விடுமோ என்கிற சிக்கல் ஏற்பட்ட நேரத்தில், அரசாங்கம் வேளாண்மைப்

பெருமக்களுக்கு உரிய வகையிலே மானியம்ம் அளித்து, அவர்களை அரவணைத்து அதிலே எந்தவிதமான சிக்கலும் ஏற்படாத அளவுக்கு வேளாண்மைப் பொருளாதாரம் காப்பாற்றப்படத்தக்க அளவுக்கு நிலைமைகளை உருவாக்கியது என்பதையும் ரூ. 504.71 இலட்சம் வறட்சி நிவாரணப் பணிகளுக்காக, சிறு விவசாயிகளுக்கும் குறு விவசாயிகளுக்கும் பல்வேறு மானியங்களை வழங்கப்படுவதற்காகப் பயன் படுத்தப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்கள் இங்கே குறிப்பிடுகிற நேரத்தில், நாம் வேளாண்மையைப் பொறுத்தவரையிலே போடுகின்ற இலக்குகளை நிறைவேற்ற முடியாமல் போய்க் கொண்டிருக்கிறோமோ என்ற ஐயப்பாடுகள் தோன்றுகிறது என்று குறிப்பிட்டார்கள். நாம் இலக்குகளை நிர்ணயிக்கிற நேரத்தில், அவைகளை மிகவும் எட்டிப் பிடிக்க முடியாத உயரத்திலே இருக்கக்கூடிய இலக்குகளாகவும் இருக்கக்கூடாது ; அதே நேரத்திலே மிகச் சாதாரணமாக சாதித்து விடக்கூடிய வகையிலும் அந்த இலக்குகள் இருக்கக்கூடாது என்கிற வகையிலேதான் இலக்குகளை நாம் நிர்ணயிக்கிறோம். 1980-81-லே கூட அரிசி, சிறுதானியங்கள் இவைகளின் வறட்சியின் காரணமாக நாம் போட்ட இலக்கை நிறைவேற்ற முடியாமல் போனாலும்கூட, மற்ற பயிர் வகைகளான வெல்லம் பருத்தி போன்றவைகளில் நாம் கருதிய இலக்கினை எய்தி விட்டோம் என்கிற அளவுக்கு நிலைமை இருக்கிறது என்பதை நான் அவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேட்டூர் அணை காலம் தாழ்த்தி திறந்துவிடப்பட்டது என்று திரு. ராஜமாணிக்கம் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டாலும்கூட, குருவையைப் பொறுத்த அளவில் ஒரு ஹெக்டேருக்கு 4,472 கிலோ மகசூல் பெற்று இதுவரையில் இல்லாத அளவுக்கு சாதனையை நிறைவேற்றி இருக்கிறோம் என்பதனை அவர்களுக்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே விதைகளை வழங்குவதற்காக இந்த அரசு பல்வேறு விதமான முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றது என்பதனை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். 2 புதிய விதைப் பண்ணைகள் 49.09 லட்சம் செலவில் அடுத்த ஆண்டிலே தொடங்கப்பட இருக்கின்றன என்று தெரிவித்துக் கொள்கிறேன். இடம் தேர்ந்தெடுக்கப்படாவிட்டாலும்கூட, புதுக்கோட்டையிலே ஏற்கனவே மூடியதாகச் சொல்லப்படுகிற விதைப் பண்ணையை - அதைப்



பயன்படுத்த முடியும் என்று வாய்ப்பு இருந்தால்—அதையும் இந்த அரசு பரிசீலிக்கும் என்பதனை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

ஏறத்தாழ 60 லட்சம் ரூபாய் செலவில், 3 விதைப் பதப்படுத்தும் நிலையங்களை அமைக்கவும், நவீன வசதிகளைக் கொண்ட 5 மத்திய விதை சேமிப்பு கிடங்குகள் கட்டுவதற்கான வசதியைச் செய்வதற்கும் நாம் உரிய முயற்சியை மேற்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

1963-லிருந்து 1976 வரையில் தமிழகத்திலே 140 ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள்தான் இருந்தன. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு 78 ஒழுங்கு முறை விற்பனை கூடங்கள் புதிதாக உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதனை நான் குறிப்பிட்டுக் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன். 16 கிலோ மீட்டருக்கு ஒரு விற்பனை கூடம் என்கிற வகையிலே, விற்பனைக் கூடம் அமைக்கப்பட வேண்டும் என்ற வகையில் அரசு செயல்திட்டத்தை தீட்டி இருக்கிறது என்பதனைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

கிடங்குகள் கட்டுவதற்காக 62 கூடங்கள் கட்டுவதற்கு வருகிற ஆண்டிலே அதைபோலவே 1,000 டன் கொள்ளளவுள்ள அளவுக்கு சேமிப்பு நாம் செயல்திட்டத்தைத் தீட்டி இருக்கிறோம். ஒவ்வொரு சேமிப்பு கிடங்கும் 4 லட்சம் ரூபாய் செலவிலே கட்டி முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து இன்னும் 37 சேமிப்பு கிடங்குகள் கட்டவேண்டும் என்ற வகையிலே மைய அரசைக் கேட்டிருக்கிறோம், என்பதை நான் குறிப்பிட்டுக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே, 20 தரம் பிரிப்பு நிலையங்களையும், 21 அக்மார்க் ஆய்வுக் கூடங்களும் அமைப்பதற்கு உரிய செயல்திட்டம் தீட்டப்பட்டிருக்கின்றது என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

தோட்டக்கலையைப் பொறுத்தவரையில், தோட்டக் கலைத் துறை புதிதாக தோற்றுவிக்கப்பட்ட பிறகு, வாழை, மா, மரவள்ளி, மஞ்சள், முந்திரி இவைகளினுடைய உற்பத்தி அதிகரித்து இருக்கிறது என்பதையும், உற்பத்தியாகின்ற பரப்பளவும் அதிகமாக ஆகி இருக்கின்றது என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

கோவை, திருச்சியிலே வருகின்ற ஆண்டிலே இந்த 2 மாவட்டங்களிலும் 2 பழப்பண்ணைகளை அமைப்பதற்கு திட்டமிட்டிருக்கிறோம். வேலூர் திருச்சி நகரங்களில், காய்கறி மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்தி இருக்கிறோம். சின்ன கல்ராயன் மலைப் பகுதியிலே 89 ஹெக்டேர் பரப்பளவில்

[திரு. கா. காளிமுத்து] [1982 மார்ச் 8

காப்பி தோட்டம் அமைக்க திட்டம் இடப்பட்டிருக்கிறது. அங்கே காய்கறி விதை உற்பத்திக்கும் செயல்திட்டம் தீட்டப்பட்டிருக்கின்றது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் குறிப்பிட்டதைப்போல, பேச்சுப்பாறை அன்னாசி நாற்றங்காலைப் பலப்படுத்தப்படக்கூடிய முயற்சி மேற்கொள்ளப் பட்டிருக்கிறது.

தஞ்சை மாவட்டத்திலே முந்திரி, எலுமிச்சை, மா, வாழை சப்போட்டா ஆகியவை மேம்பாட்டு திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. நவலாக்கில் பழத் தோட்டம் ஒன்று அமைப்பதற்குரிய செயல்திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. ஓசூரில் டென்கனிக்கோட்டையில் கம்பம் பள்ளத்தாக்குப் பகுதியில் தோட்டக் கலையை மேம்படுத்துவதற்குரிய வகையில் அதற்கு 4.40 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை குறிப்பிட விரும்புகிறேன். 37 கோடி ரூபாய் செலவில் முந்திரி உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்பதற்காக உலக வங்கியிடத்திலே பணம் நாம் கடன் கேட்டு மைய அரசை அணுகியிருக் கிறோம். மைய அரசின் மூலமாக அந்தத் திட்டத்தை செயல்படுத்தக்கூடிய ஏற்பாடுகளை நிச்சயமாக மேற்கொள்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப்போலவே தென்னங்கன்றுகளை அதிகமாக வழங்க வேண்டுமென்ற வகையில் 1980-81-இல் 21 லட்சம் கன்றுகள் வழங்கப்பட்டிருக் கின்றன. 1982-83-ல் 32.25 லட்சம் நெட்டை தென்னங் கன்றுகளும் 5.09 லட்சம் நெட்டை-குட்டை கலப்பின தென்னங்கன்றுகளும் வழங்குவதற் குரிய செயல்திட்டத்தை அரசு தீட்டியிருக்கிறது என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். இதிலே நிலக்கடலை, தென்னங் கன்றுகள் போன்றவை களுக்கான இடுபொருட்களை 25 சதவீத மானிய விலையில் 2.7 லட்ச ரூபாய் செலவில் 4,705 ஆதி திராவிடப் பெருமக்களுக்கு நாம் வழங்கியிருக்கிறோம். அடுத்த ஆண்டு, இதற்காக 7.10 லட்சம் செலவு செய்யத் திட்டமிட்டிருக் கிறோம் என்பதையும் தேசியப் பால் வள வாரியத்தினுடைய துணையோடு 7 ஆண்டுகளிலே எண்ணெ வளத்தை அதிகப்படுத்தக்கூடிய அளவுக்கு நாம் முயற்சித்துக் கொண்டிருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமையல் எண்ணெய் பற்றாக்குறையை நாம் முழுமையாகத் தீர்க்கக்கூடிய அளவுக்கு செயல்திட்டம் வகுத்திருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள் பேசும்போது நெல்லின் கொள்முதல் விலையை அதிகமாகத் தரவேண்டுமென்று இந்த அரசே மைய அரசுக்குத் தெரிவித்து இருக்கிறதா என்று கேட்டு ஏனென்றால் மைய அரசு அப்படி கருத்துத் தெரிவிக்கப்படவில்லை என்று நாடாளுமன்றத்திலே சொல்லியிருக்கிறதே என்பதை சுட்டிக்காட்டினார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. திருவேங்கடம் அவர்கள் எதற்கெடுத்தாலும் மத்திய அரசின்மீது பழிபோடுகிறீர்களே என்று



1982 மார்ச் 8] [திரு. கா. காளிமுத்து]

(இரவு 6-50)

மாண்புமிகு உறுப்பினர் திருவேங்கடம் அவர்கள் மத்திய அரசுக்கு வக்கீலாகும் அளவிற்குப் பேசுவது எனக்குக்கூட வியப்பாக இருந்தது. ஆனால் ஒன்றை நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக் கிறேன். இந்த அரசின் சார்பில் விவசாய விளைப்பொருள் நிர்ணயக்குழு கூட்டத்தில் நானும், மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும் கலந்து கொண்ட நேரத்தில், இந்த அரசின் சார்பில் மின் துறை அமைச்சர் அவர்கள் அங்கே கருத்துக்களைச் சொன்ன நேரத்தில் கொள்முதல் விலையை அதிகப்படுத்த வேண்டுமென்ற கருத்துக்களைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள்.

அதுமட்டுமல்ல, 13—8—1981-ம் தேதி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மத்திய வேளாண்மைத் துறை அமைச்சர் ராவ் பிரேந்திர சிங் அவர் களுக்கு ஒரு மடலைத் தீட்டியிருக்கிறார்கள். அதிலே நெல்லுக்கு ஆகும் உற்பத்திச் செலவு 144 ரூ. 70 பைசா ஒரு குவிண்டாலுக்கு ஆகிறது. ஆகவே, 147 ரூபாய் நெல்லுக்கு கொள்முதல் விலையாக நிர்ணயிக்க வேண்டும் என்று அவர்களே சுட்டிக்காட்டி கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு அந்த மைய அரசிடமிருந்து 'கூட்டக்கூடாது' என்று சுற்றாணை வந்தது. அந்த சுற்றாணையில் அவர்கள் சுட்டிக்காட்டி இருப்பது, அப்படி அதிகப்படுத்திக் கொடுக்கக்கூடாது. அப்படிக் கொடுத்தால் ரிசர்வ் வங்கி மூலமாக கடன் பெறுவதில் சிக்கல் ஏற்படும் என்று அதிலே எழுதியிருக்கிறார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய விவசாய அமைச்சர் அவர்கள் முதலமைச்சர் அவர்களே 147 ரூ. என்று நெல்லுக்கு விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்று மத்திய அரசுக்கு எழுதியுள்ளதாகக் குறிப்பிட்டார்கள். தமிழக அரசாங்கம் விவசாயிகளிடமிருந்து நெல்லை வாங்குகின்ற நேரத்தில் ரூ. 147 கொடுக் கிறதா? அப்படி கொடுத்து வாங்கினால் தானே நீங்கள் எழுதியதற்கான ஜஸ்டிபிகேஷன் ஆகும்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, கொள்முதலுக்கு உரிய விலையை நிர்ணயிப்பது மத்திய அரசு. அந்த வகையிலேதான் மத்திய அரசுக்கு நாம் ஆகின்ற உற்பத்திச் செலவை குறிப் பிட்டுக் காட்டி, அவர்கள் எந்த வகையிலே கொள்முதல் விலையை நிர்ண யிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டோம். ஆனால் அதற்கு நமக்குக் [illegible] பதில் — குதிரை கீழேதள்ளியதும் அல்லாமல் குழியையும்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

" மானியக் கோரிக்கை எண் 48 — வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 7,00,42,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் ".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று. நாளை 9-3-1982-ந் தேதி காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 6-56 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.

### 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

#### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

122. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சிகள் விதிகளை (பெண்களுக்கான எண்ணிக்கை மற்றும் இட ஒதுக்கீட்டினை நிர்ணயித்தல்) உருவாக்குவது குறித்து 28-10-1981-ம் ஆண்டு ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் 1794 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 199 (1) பிரிவின்கீழ்] பேரவைமுன் வைக்கப் பெற்றது.

#### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

63. கோரிக்கை எண் 20—வேளாண்மை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1982-83 (தமிழ், ஆங்கிலம்).

64: 1982-83-ஆம் ஆண்டில் வேளாண்மைத்துறை பற்றிய செயல்வினை முறைத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

65. தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகம் பற்றிய ஆய்வுரை 1981-82 (தமிழ், ஆங்கிலம்):

66. தமிழ்நாடு அரசு பண்ணைகள் கழகம் பற்றிய ஆய்வுரை 1981-82 (தமிழ், ஆங்கிலம்).

67. வேளாண்மையில் சாதனைகளும், குறிக்கோள்களும் என்கிற சிறு புத்தகம் (தமிழ்):

68. ' பயிற்சி மற்றும் தொடர்பு வழித்திட்டம் ' என்கிற சிறு புத்தகம் (தமிழ்):



## இணைப்பு



[4-5-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 403-க்கான விடையைக் காண்க.]

(அ) 1982-ம் ஆண்டு ஜனவரித் திங்களில், அரசிடம் 1,42,852 டன்கள் அரிசியும் 1,18,731 அரிசி டன்களுக்கு ஈடான நெல்லும் கையிருப்பில் இருந்தன.

(ஆ) 1980-ம் ஆண்டு ஏப்ரல் முதல் ஒவ்வொரு மாதமும் மத்திய அரசு ஒதுக்கீடு செய்த அரிசியின் அளவும், அவர்கள் கொடுத்த அரசியின அளவும் வருமாறு :—

| மாதம் | | ஒதுக்கீடு செய்த அளவு (டன்களில்) | கொடுக்கப்பட்ட அளவு (டன்களில் |
|---|---|---|---|
| 1980 | ஏப்ரல் | 11,000 | 10,987 |
| | மே | 15,000 | 4,050 |
| | ஜூன் | 15,000 | 4,215 |
| | ஜூலை | 10,000 | 14,559 |
| | ஆகஸ்டு | | 14,880 |
| | செப்டம்பர் | 20,000 | 5,065 |
| | அக்டோபர் | 20,000 | 5,852 |
| | நவம்பர் | 50,000 | 12,460 |
| | டிசம்பர் | 50,000 | 21,136 |
| 1981 | ஜனவரி | 50,000 | 38,730 |
| | பிப்ரவரி | | 22,093 |
| | மார்ச் | 30,000 | 34,356 |
| | ஏப்ரல் | 60,006 | 41,698 |
| | மே | 60,000 | 55,000 |
| | ஜூன் | 60,000 | 49,669 |
| | ஜூலை | 60,000 | 29,711 |
| | ஆகஸ்டு | 66,006 | 48,153 |
| | செப்டம்பர் | 60,000 | 42,017 |
| | அக்டோபர் | 60,000 | 27,416 |
| | பிப்ரவரி | 50,000 | 49,388 |
| | டிசம்பர் | 40,000 | 19,148 |
| 1982 | ஜனவரி | | |
| | பிப்ரவரி | | |
| | டிசம்பர் | | |
| 1981 | ஜனவரி | | |
| | பிப்ரவரி | | |

## இணைப்பு

[542 ம் பக்கத்திலுள்ள அடிகுறிப்பைக் காண்க]
கோரிக்கை எண் 20.

### வேளாண்மைத் துறை கொள்கை விளக்கக் குறிப்பு.

உலக வங்கியின் உதவி பெற்ற "பயிற்சி மற்றும் தொடர்ப்பு வழித் திட்டம்" அமுலாக்கப்படவிருக்கிறது என சென்ற ஆண்டு இச்சபையில் அறிவித்ததை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவீர்கள். அன்று அறிவித்த படி சுமார் ரூபாய் 36.48 கோடி திட்ட மதிப்பீட்டுடன் இத்திட்டம் முதற் கட்டமாக செங்கல்பட்டு, புதுக்கோட்;டை, தஞ்சாவூர், மதுரை, இராமநாதபுரம் தர்மபுரி, கோவை மற்றும் மலைப் பயிர்கள் மாவட்டமான நீலகிரி ஆகிய 8 மாவட்டங்களில் தொடங்கப் பெற்றுள்ளது. 1982 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1 ஆம் தேதி முதல் இத்திட்டம் இரண்டாம் கட்டமாக வட ஆற்காடு, தென் ஆற்காடு, திருச்சி, சேலம், பெரியார், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மற்ற மாவட்டங்களில் அமுலாக்கப்பட உள்ளது. முதற் கட்ட அளவில் இத்திட்டம் அமுலாக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள கிராமங்களில் வேளாண்மை உற்பத்தியில் ஓர் அமைதியான புரட்சி பரவி வருவதை காணு மிடத்து இத்திட்டம் இரண்டாவது கால அளவில் மற்றைய மாவட்டங்களி லும் அமுலாக்கப்பட்ட பின் நம் கோவை விவசாயிகளுக்கு மேலும் முழுமை யாக சீரடைந்து அதனால் வேளாண்மை மற்றும் மலைப் பயிர்களின் உற்பத்தி யில் மேலும் முன்னேற்றம் அடைவோம் என்பது உறுதி.

வேளாண்மை மற்றும் பாசனம் ஆகியவற்றிற்கு நம் பொருளாதாரத்தில் உள்ள முக்கிய பங்கினை உணர்ந்து, இந்த அரசு இவற்றுக்கு அதிக முக்கியத் துவம் கொடுத்துள்ளது. மக்கட் தொகை துரிதமாக அதிகரிப்பதன் காரண மாக உணவு மற்றும் வேளாண்மை சம்பந்தப்பட்ட இதர நுகர் பொருட்களின் தேவையும் அதிகரித்துள்ளது. இதை உணர்ந்தே இவ்வரசு வேளாண் உற் பத்தியை, நிலைநிறுத்துவதற்காக, ஆராய்ச்சி மற்றும் தொழில் நுட்ப வழி முறைகளைக் கடைபிடித்தல், இடு பொருள்களை அதிக அளவு உபயோகித்தல் மற்றும் மாறுபடும் பருவ நிலையை தவிர்த்து சீரமைத்த நீர்ப்பாசன முறை கள் ஆகியவற்றை கையாளும் பல திட்டங்களை செயற்படுத்தியிருக்கிறது. ஏற்கனவே 1981 ஆம் ஆண்டில் 8 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு மற்ற மாவட்டங்களில் 1982 ஆம் ஆண்டில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ள பயிற்சி மற்றும் தொடர்பு வழித் திட்டம் அவற்றினில் ஒன்றாகும்.



சமீப கால போக்குகள், நம் விவசாயத்தில் மேலும் வளர்ச்சியினை பெருக்க வாய்ப்புகள் உள்ளன என்பதை தெளிவுபடுத்துகிறது. இவ்வளர்ச்சி யின் பயனாகிய உயர் வாழ்க்கைத் தரத்தினை பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற நியாயமான விழிப்புணர்ச்சி, நம் கிராம மக்களிடையே உருவாகியுள்ளது. முன்னேற்றத்திற்கான இக்கால கட்டத்திலேயே, புதிய பயிர் நுட்ப வசதிகள் ஒரு சில வசதியான விவசாயிகளுக்கு மட்டுமின்றி பாவலாக அனைத்து விவ சாயிகளுக்கும் கிடைக்கச் செய்வது அவசியமாகிறது. இக் குறிக்கோளுடன் அனைத்து ஒன்றியங்களிலும் ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சி திட்டம் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. பயிர் நுட்பங்களை பரப்புவதிலும், தேவைப்படும் வசதிகளை பெருக்குவதிலும் பாசன பரப்புகள் மட்டுமின்றி பெருமளவில் உள்ள மானாவாரி நிலங்களிலும், நம் தீவிர கவனத்தை செலுத்த வேண்டுமென்பது தெளிவாகியுள்ளது. தர்மபுரி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் செயல்படுத்தப் பெறும் வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம் பாட்டுத் திட்டத்தின் மூலம் அரசு இப் பிரச்சினையை எதிர்நோக்க நிர்மாணித் துள்ளது.

உணவு உற்பத்தி திருப்திகாமாக நிலை நிறுத்தப்பெற்றிருக்கும் இக்கால கட்டத்தில், புரதம், கொழுப்பு முதலிய உணவுச் சத்துக்களின் உற்பத்தியில் கவலைப் படத்தக்க தட்டுப்பாடுகள் பெருகி வருகின்றன. எனவே முன் னோடி உற்பத்தி திட்டத்தின் நோக்கமாக, சரி விகித உணவு மற்றும் உயர் உற்பத்தியை பெறும் வகையில் பயறு மற்றும் எண்ணெய் வித்துக்கள் மட்டு மின்றி வேளாண்மை, கால்நடை பராமரிப்பு, மீன் வளம் ஆகியவற்றின் ஒருங் கிணைந்த வளர்ச்சியும் கவனிக்கப்படும். தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தின் 'கார்ட்' உதவியுடன் வகை மாதிரிகள் தயாரிப்பில் உள்ளன. இவ்வகை மாதிரிகள் 1982-83 ஆம் ஆண்டு 5 மாவட்டங்களில் முன்னோடி விளக்கப் பண்ணைகளாக அமைக்கப்பெறும்.

திரு. மூனு ஆதி அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட உயர் மட்டக்குழு விவசாயிகளின் பல பிரச்சினைகளை ஆய்ந்து வருகிறது. இக்குழு விவசாயி களின் கூட்டுறவுக் கடன்களை வசூல் செய்வதை 1981 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் தேதி வரை ஒத்திப் போட வேண்டும் என்று பரிந்துரைத்ததின் பேரில், அரசும் ஒத்துக் கொண்டுள்ளது. மேலும் இக்குழுவின் பரிந்துரை கட்டண விகிதங்களை மாற்றி அமைக்க வேண்டும் என்பதனையும் ஒத்துக் கொண்டு, பாலுக்கு அதிக விலை நிர்ணயிக்க வேண்டும் என்பதனையும், மின் கட்டண விகிதங்களை மாற்றி அமைக்கவேண்டும் என்பதனையும் ஒத்துக் கொண்டுள்ளது. விவசாயிகளின் பிரச்சனைகளை அவ்வப்போது கண்டறி வதற்கும் அப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் இக்குழு பல மாவட்டங்களில்

சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இக்குழு, இன்னும் நீலகிரி, கோயம்புத்தூர், சேலம், மதுரை, தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவிருக்கிறது. தேவைப்படின், இக்குழு அண்டை மாநிலங்களிலும் சுற்றுப் பயணம் செய்து அங்குள்ள விவசாயிகள் அடைந்து வரும் பலன்களை நேரில் கண்டறிந்து நம் மாநில விவசாயிகளும் அப்படிப்பட்ட பலன்களை அடைய வழிவகுக்கும்.

**பருவ நிலை :**

1981-ன் ஆரம்பத்திலும் வறட்சி நிலை தொடர்ந்து காணப்பட்டதின் காரணமாக, சொர்ணவாரி மற்றும், கார நெல், மானாவாரி சிறுதானியங்கள் மற்றும் பயறு வகைகள் சிறிதளவு பாதிக்கப்பட்டன. தென்மேற்குப் பருவ மழை இந்த வருடம் அதன் இயல்பான நேரத்தில் துவங்கவில்லை. திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களைத் தவிர மற்ற பெரும்பாலான மாவட்டங்களில் மழை போதிய அளவு பெறப்படவில்லை. ஆதலால், மானாவாரி சிறுதானியம் மற்றும் பயறுவகைகள் சரியான தருணத்தில் விதைக்க முடியவில்லை. வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கல்பட்டு மாவட்டங்களில் கிணற்றுப் பாசனத்தின் மூலம் சாகுபடி செய்யப்படும் சொர்ணவாரி நெல், கிணறுகளின் நீர் ஊற்றுத் தன்மை குறைந்ததின் காரணமாக சாகுபடி செய்ய முடியவில்லை. மேட்டூர் நீர்த்தேக்கம் திறந்து விடுதலும் ஒரு மாதத்திற்கு தள்ளி வைக்கப்பட்டது. இதுவரை தவக்கமாக இருந்த குறுவை நடவு மேட்டூர் நீர்த்தேக்கம் திறந்தவுடன் கால தாமதமேயெனினும் விரைவு பெற்று சற்று குறைமானத்துடன் சாதாரண பரப்பாகிய 2.25 இலட்சம் ஹெக்டேர் பரப்பை எட்டியது.

பருவமழையும் சூலை மாதம் சாதகமான நிலைக்கு திரும்பி மாநிலம் முழுவதும் பரவலான மழை பெறப்பட்டது. இதுவரை தாமதப்பட்ட சிறு தானியம், பயறு ஆகியவைகளின் விதைப்பு தொடங்கியது.

வடகிழக்கு பருவமழை பொதுவாக எல்லா மாவட்டங்களிலும் இயல்பான அளவை விட அதிகமாக பெய்து, நீர்த் தேக்கங்கள், ஏரிகள் (செங்கல்பட்டு, வட ஆற்காடு மற்றும் தென் ஆற்காடு மாவட்டங்கள் (நீங்கலாக) மற்றும் கிணறுகளின் நீர் நிலையை அதிக அளவு உயர்த்தியது. இந்த மாற்ற நிலை வெற்றிகரமான சம்பா பயிர் சாகுபடிக்கு வழிகோலியது. மழை மற்றும் வெள்ளம் காரணமாக சில நாட்களுக்கு தஞ்சையில் தாளடி நாற்றங்காலுக்கு சேதம் ஏற்பட்டது. இதைத் தவிர இவ்வருட குறுவை அறுவடை சமீப வருடங்களிலேயே அதிக விளைச்சல் பெற்று புதிய சாதனையை ஏற்படுத்தியிருக்கிறது. தற்போது முடியும் தருவாயில் உள்ள சம்பா நெல் மற்றும் மானாவாரி [illegible] அறுவடையும் நல்ல மகசூலை அளிக்கும் எனத் தெரிகிறது.



இருப்பினும், வட கிழக்கு பருவமழையின் முடிவில் பற்றாக்குறையான மழையின் காரணமாக நவரை நெல் சாகுபடியில் சிறிது குறைபாடு வட ஆற்காடு, செங்கற்பட்டு மற்றும் தென் ஆற்காடு மாவட்டங்களில் எதிர்பார்க்கப்படுகிறது. இதன் விளைவாக கணிசமான அளவு சாகுபடி குறைவதுடன், கோடைகாலத் திட்டமும் முழு அளவில் முந்திய ஆண்டுகளைப் போல் செயல்படுத்த முடியாது.

**வறட்சி நிவாரணப் பணிகள் :**

நமது மாநிலம் 1980-81 ஆம் ஆண்டில் வறட்சியால் பாதிக்கப்பட்டு 1981-82 ஆம் ஆண்டின் தொடக்கத்திலும் தொடர்ந்து பாதிக்கப்பட்டதை எல்லோரும் அறிவோம். முந்திய ஆண்டைப்போல, அரசு உடனடி நடவடிக்கை எடுத்து, ரூபாய் 39 இலட்சம் பெறுமானமுள்ள 2,000 டன்கள் நெல் மற்றும் 100 டன்கள் சிறு தானிய விதைகளை வறட்சியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு இலவசமாக வழங்குவதற்கு கொள்முதல் செய்யப்பட்டது. வறட்சியால் பாதிக்கப்பட்ட சிறு விவசாயிகள் மற்றும் மிகச் சிறு விவசாயிகளுக்கு மேற்கூறிய விதைகளோடு விவசாயக் கிடங்குகளில் இருந்த பயறு வகை மற்றும் பருத்தி விதைகளும் இலவசமாக பின்வரும் அதிகபட்ச மானிய அளவில் வழங்கப்பட்டன :

(அ) எக்டேர் ஒன்றுக்கு ரூபாய் 75 பெறுமானமுள்ள நெல் விதைகள் (அல்லது)

(ஆ) எக்டேர் ஒன்றுக்கு ரூபாய் 25 பெறுமானமுள்ள சிறுதானிய விதைகள் (அல்லது)

(இ) எக்டேர் ஒன்றுக்கு ரூபாய் 50 பெறுமானமுள்ள பயறு விதைகள் (அல்லது)

(ஈ) எக்டேர் ஒன்றுக்கு ரூபாய் 75 பெறுமானமுள்ள பருத்தி விதைகள்

வறட்சியால் பாதிக்கப்பட்ட எல்லா மாவட்டங்களிலும் வறட்சி நிவாரணப் பணிகள் 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள்வரை செயல்படுத்தப்பட்டு நெல், சிறுதானியம், பயறு வகை மற்றும் பருத்தி விதைகள் இலவசமாக வழங்கியதற்காக ரூபாய் 39.84 இலட்சம் செலவிடப்பட்டது.

முந்திய ஆண்டில் பருவமழை பொய்த்ததினால் ஏற்பட்ட வறட்சி நிலை 1981-82 தொடக்கத்தில் தொடர்ந்த போதிலும், பருவ நிலைகளில் பிறகு ஏற்பட்ட அபிவிருத்தி, ஊக்கமுள்ள விவசாயிகளின் உற்சாகம் மற்றும் அலுவ

களின் கூட்டுறவோடு வேளாண்மைத்துறை மேற்கொண்ட நிலையான நட வடிக்கையினால் 1981-82 ஆம் ஆண்டில் பின்வரும் உற்பத்தி அளவை அடைய முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது :—

| | | |
|---|---|---|
| அரிசி | 60.00 | இலட்சம் டன்கள். |
| சிறுதானியம் | 22.80 | ,, |
| பயறு வகை | 3.30 | ,, |
| கரும்பு (வெல்லமாக) | 22.70 | ,, |
| பருத்தி | 4.80 | இலட்சம் பேல்கள். |

**1982-83 ஆம் ஆண்டுக்கான குறிக்கோள்கள் :**

1982-83 ஆம் ஆண்டுக்கு பின்வரும் உற்பத்திக் குறியீடு நிர்ணயிக்கப் பட்டுள்ளது :—

| | | |
|---|---|---|
| அரிசி | 68.00 | இலட்சம் டன்கள். |
| சிறுதானியங்கள் | 23.50 | ,, |
| பயறு வகைகள், | 4.80 | ,, |
| கரும்பு (வெல்லமாக) | 23.52 | ,, |
| பருத்தி | 5.00 | இலட்சம் பேல்கள். |

**நெல் மற்றும் சிறுதானியங்கள் :**

இந்த அரசு நெல் மற்றும் சிறுதானிய உற்பத்தியில் தற்பொழுது நிலவும் சாதகமான நிலையோடு நின்றுவிடாமல், உற்பத்தித் திறனை அதிகரிக்க தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது. குறைந்த வயதுடைய அதிக உயர் விளைச்சல் இரகங்களின் அடிப்படையில் உள்ள அமோக விளைச்சல் திட்டம் மற்றும் பல பயிர் திட்டம் ஆகியவை முக்கிய உத்திகளாகும். பாசனத் திற்கான புதிய வழி முறைகள், நீர் பராமரிப்பு, அனுசரணை ஆராய்ச்சி மற்றும் உற்பத்தியாளர்களின் விளை பொருட்களுக்கு நியாயமான விலை ஆகியவை இதர வழிமுறைகளாகும். உற்பத்தியில் தன்னிறைவு அடைவதோடு, ஏற்றுமதிக்கு அல்லாமல் பெருமளவு கூடுதல் இருப்பை உருவாக்குவதற்கு நமது திட்டங்கள் வழிவகுக்கும். இத்தகைய நடவடிக்கைகளில் தொழில் நுட்பம் முக்கிய பங்கை வகிக்கும் எனத் தெளிவாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பயிற்சி மற்றும் தொடர்பு வழியின் அடிப்படையில் வேளாண்மை விரிவாக்க அமைப்பை மாற்றியமைத்தது இதன் தொடர் நடவடிக்கை தனித்தனி திட்டங்களான தீவிர வேளாண்மைப் பகுதித் திட்டம்



மற்றும் தீவிர மாவட்ட வேளாண்மை பகுதித் திட்டம் ஆகியவை பயிற்சி மற்றும் தொடர்புவழித் திட்டத்துடன் இணைக்கப்பட்டு குறிப்பிட்ட பகுதியில் எல்லா பயிர்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சியே இனி புதிய வழிமுறையாக கொள்ளப்படும்.

**நெல் :**

நெற் பயிரின் மொத்தப் பரப்பு 26.50 இலட்சம் எக்டேர்கள் எனவும் அரிசி உற்பத்தி 68.00 இலட்சம் டன்கள் என்ற அளவிலும் நிலை நிறுத்தப்படும். 1982-83 ஆம் ஆண்டில் உற்பத்தியின் அதிகரிப்பு, அதிக அளவு மற்றும் திட்ட மிடப்பட்ட நீர்ப்பாசனம், தரமான புதிய ரக விதைகளை உபயோகித்தல், தேவையான உரங்கள் மற்றும் நுண்ணூட்டச் சத்துக்களைக் காலத்தே வழங்கு தல், ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளைக் கடைப்பிடித்தல் மற்றும் சேமிப்பு உள்ளடக்கிய அறுவடைக்குப்பின் கையாள வேண்டிய நுணுக் கங்களை அனுசரித்தல் ஆகிய வழிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் அடை யப்பெறும். இவை மூலம் மேட்டூர் அணை ஒரு மாதம் காலதாமதமாக பாசனத்திற்காகத் திறக்கப்பட்ட போதிலும் குறுவைப் பட்டத்தில் நெல் அறு வடையில் பெறப்பட்ட, எக்டேருக்கு 4,432 கிலோ (ஈரம்) மகசூல் சமீப காலங்களில் புதிய சாதனையை ஏற்படுத்தியுள்ளது. இதன் மூலம் நீர்ப் பாசனத்தில் காலதாமதமிருப்பினும் அரிசி உற்பத்தியில் தொடர்ந்து முன் னேற்றம் கண்டுள்ளோம் என்பது தெளிவாகிறது. 1982-83 ஆம் ஆண்டில் இன்னமும் முக்கியமானதாக உள்ள ஒரே பெரிய திட்டமான உயர் விளைச் சல் ரக திட்டத்தின் கீழ் 21 இலட்சம் எக்டேர் பரப்பளவில் ஐ.ஆர். இரகங் களும், 2.50 இலட்சம் எக்டேர் பரப்பளவில் இதர உயர் விளைச்சல் இரகங் களும் பயிரிடப்படும். உரங்களின் உபயோகம், இந்த ஆண்டு நாம் எதிர்பார்க் கும் 85 கிலோ தழைச்சத்து, 36 கிலோ மணிச்சத்து, 36 கிலோ சாம்பல் சத்து (எக்டேருக்கு) என்ற அளவில் இருந்து எக்டேருக்கு 90 கிலோ தழைச்சத்து, 40 கிலோ மணிச்சத்து, 40 கிலோ சாம்பல் சத்து என்ற அளவுக்கு உயர்த்தப் படும். பயிர் பாதுகாப்பில், "புகையான்" ஆண்டுதோறும் தொடர்ந்து தாக்கக் கூடிய பகுதிகள் மற்றும் எலி ஒழிப்பு ஆகியவைகளுக்கு முக்கியத்துவம் தரப்படும். விதை நேர்த்தி, வீரிய நாற்றுக்கள் உற்பத்தி, நீலப் பச்சைப்பாசி உபயோகித்தல், உரங்களைப் பயிர்களுக்கு அருகாமையிலிடுதல் ஆகிய வேளாண் நுணுக்கங்களும் கடைப்பிடிக்கப்படும்.

**சிறு தானியங்கள் :**

மொத்த பயிரிடும் பரப்பளவும் உற்பத்தியும் இந்த ஆண்டு எதிர்பார்க்கும் அளவான 19.55 இலட்சம் எக்டேர் மற்றும் 22.80 இலட்சம் டன்களிலிருந்து 1982-83 ஆம் ஆண்டில் முறையே 19.65 இலட்சம் எக்டேர்கள் மற்றும் 23.50

இலட்சம் டன்கள் என்ற அளவுக்கு அதிகரிக்கப்படும். உயர் விளைச்சல் ரக திட்டத்தின்கீழ், 1981-82 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கும் பரப்பளவான 7.30 இலட்சம் எக்டேர் 1982-83 ஆம் ஆண்டில் 7.85 இலட்சம் எக்டேர் பரப்பளவாக உயர்த்தப்படும். இதில் 2.00 இலட்சம் எக்டேர் சோளம், 3.20 இலட்சம் எக்டேர் கம்பு, 2.20 இலட்சம் எக்டேர் ராகி, மற்றும் 0.45 இலட்சம் எக்டேர் மக்காச்சோளம் ஆகியவை அடங்கும். குடுமியா மலை 1 மற்றும் குடுமியா மலை 2 கம்பு, ஐ.எஸ். 3541 மற்றும் கோயில்பட்டி நெட்டை சோளம், கோ 6 ராகி மற்றும் கே 1 மற்றும் கே 2 மக்காச் சோள இரகங்கள் விவசாயிகளிடையே பரப்பப்படும். உபயோகிக்கப்படும் உரத்தின் அளவு தற்போது எதிர்பார்க்கும் அளவான எக்டேருக்கு 65 கிலோ தழைச்சத்து, 30 கிலோ மணிச் சத்து, 27 கிலோ சாம்பல் சத்து ஆகும். இந்த அளவு 1982-83 ஆம் ஆண்டில் எக்டேருக்கு 70 கிலோ தழைச் சத்து, 35 கிலோ மணிச் சத்து, 30 கிலோ சாம்பல் சத்து என்ற அளவுக்கு அதிகப்படுத்தப்படும்.

**பயறு வகைகள் :**

தமிழ் நாட்டில் பயறு உற்பத்தி ஒவ்வொரு ஆண்டும் ஏறத்தாழ 3 இலட்சம் டன்களாக உள்ளது. நம்முடைய தேவையில் பெரும் பகுதி மற்ற மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றது. எனவே மாநில அரசு பயறு உற்பத்தியை இரு மடங்காக்க திட்டமிட்டு ஆறாண்டு பயறு பெருக்கத் திட்டம் என்றதொரு திட்டத்தை 1980-81 ஆம் ஆண்டில் ஆரம்பித்து பயறு உற்பத்தியை 1985-86 ஆம் ஆண்டின் இறுதியில் 6.40 இலட்சம் டன்களாக உயர்த்த திட்டமிட்டு, செயல்பட்டு வருகின்றது. 1981-82 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட 13.04 இலட்சம் எக்டேர் பரப்பளவில் டிசம்பர் 1981 முடிய 7.386 இலட்சம் எக்டேர் பரப்பளவில் பயறு வகைகள் பயிரிடப்பட்டன.

1981-82 ஆம் வருடம் ஆரம்பத்தில் வறட்சி நிலவியதால் பயறு உற்பத்தி 3.30 இலட்சம் டன்களே அடைய இயலும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1982-83 ஆம் ஆண்டில் பயறு வகைப் பயிர்கள் 13.04 இலட்சம் எக்டேரிலிருந்து 13.83 இலட்சம் எக்டேர் பரப்பளவில் பயிரிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் பயறு உற்பத்தியை 4.80 இலட்சம் டன்களாக உயர்த்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

பயிற்சி வழித் தொடர்பு திட்டம் செயல்படுத்தப்படும் மாவட்டங்களில் பயறு உற்பத்தித் திட்டங்களில் பணியாற்றிய சிறப்பு பணியாளர்கள் மேற்படி திட்டத்திற்கு மாற்றப்பட்டு செயல்பட்டு வருகின்றனர். ஒரு ஏக்கர் நிருபண வயல்கள் 384 இடங்களிலும், கட்டுப்கோப்பு நிருபண வயல்கள் 266 எக்டேர் பரப்பளவிலும் டிசம்பர் 1981 முடிய ஏற்படுத்தப்பட்டன. 25,140 விவசாயிகள் பயறு உற்பத்தி நுணுக்கங்களைப் பற்றி டிசம்பர் 1981 முடிய பயிற்சி அளிக்





கப்பட்டனர். 1982-83 ஆம் ஆண்டில் 36,800 விவசாயிகள் இப்பயிற்சி அளிக்கப்படுவர். பயிறு உற்பத்தியைப் பெருக்க மாதிரி திட்டம் ஒன்று 10,000 ஹெக்டேர் பரப்பளவில் தென்னாற்காடு மாவட்டத்தில் இவ்வாண்டு செயல்படுத்தப்படுகின்றது.

மகசூலை அதிகப்படுத்த விதையுடன் நுண்ணுயிர் கலந்து விதைக்க திட்டமிட்டு 1,06,000 நுண்ணுயிர் பொட்டலங்கள் டிசம்பர் 1981 முடிய விநியோகிக்கப்பட்டது. 1982-83 ஆம் ஆண்டில் 1,74,000 நுண்ணுயிர் பொட்டலங்கள் விநியோகம் செய்யப்படும்.

பயிறு மகசூலை அதிகப்படுத்த 3 சதம் டை அம்மோனியம் பாஸ்பேட் கரைசலை இலை மூலம் தெளிக்கத் திட்டமிட்டு, டிசம்பர் 1981 முடிய 2,506 எக்டேர் பரப்பில் தெளிக்கப்பட்டுள்ளது. 1982-83 ஆம் ஆண்டில் 10,000 எக்டேர் பரப்பில் இந்த டை அம்மோனியம் பாஸ்பேட் கரைசல் எக்டேருக்கு தெளிக்க ஆகும் செலவில் ரூபாய் 10 மானியமாக அளித்து தெளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

செங்கல்பட்டு மற்றும் சேலம் மாவட்டங்களில் பயறு உற்பத்திக்கான முன்னோடித் திட்டம் செயல்பட்டு வருகின்றது. பயிற்சி வழித் தொடர்புத் திட்டம் செங்கல்பட்டு மாவட்டத்தில் செயல்பட்டு வருவதால், இம்மாவட்டத்தில் இத்திட்டத்தில் பணியாற்றிய பணியாளர்கள் மேற்கண்ட பயிற்சி வழித் தொடர்புத் திட்டத்தில் இணைக்கப்பட்டனர். டிசம்பர் 1981 முடிய 676 எக்டேரில் கட்டுக்கோப்பு நிறுபணவயல்கள் ஏற்படுத்தப்பட்டன. மேலும் 1,863 எக்டேர் பரப்பளவில் பயிர் பாதுகாப்பு மருந்து 25 சத மானிய விலையில் வழங்கப்பட்டது. சேலம் மாவட்டத்தில் இரண்டாம் நிலையாக பயிற்சி வழித்தொடர் முறை செயல்பட உள்ளதால் இந்தத் திட்டத்தில் உள்ள பணியாளர், அந்த பயிற்சி வழித் தொடர்பு முறையில் இணைக்கப்பட்டு, இந்தத் திட்டத்தின் நோக்கம் அடையப்படும்.

மத்திய அரசு உதவி பெறும் பயிறு பெருக்கத் திட்டத்தில் டிசம்பர் 1981 முடிய 402 எக்டேரில் கட்டுக்கோப்பு நிரூபண வயல்கள் அமைக்கப்பட்டன. 1981 டிசம்பர் மாதம் முடிய 5,674 எக்டேர் பரப்பில் பயிர்ப்பாதுகாப்பு மருந்துகள் 25 சதம் மானிய விலையில் பூச்சி மருந்துகள் வழங்கப்பட்டும், 8,666 எக்டேரில் பெருமளவு பூச்சி மருந்து தெளிக்கப்பட்டும் உள்ளன. மானிய தொகைகளை குறைக்கும் நோக்கத்தோடு இத்திட்ட ஒதுக்கீடுகள் குறைக்கப்பட்டு 1981 டிசம்பர் மாதம் முடிய 5,674 எக்டேர் பரப்பில் பயிர்ப் பாதுகாப்பு மருந்து 2,548 குவிண்டால் சான்றிதழ் பெற்ற பயறு விதைகளுக்கு, ஒரு குவிண்டாலுக்கு 150 ரூபாய் வீதம் மானியம் அளிக்கப்பட்டுள்ளது. 1982-83 ஆம் ஆண்டில் 3,000 குவிண்டால் சான்றிதழ் பெறும் பயிறு விதைகள் உற்பத்தி

செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1981-82 ஆம் ஆண்டில் புகையிலை சாகுபடி டிசம்பர் 1981 முடிய 14,397 எக்டேர் நிலப்பரப்பில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. 69 செயல் விளக்கப் பாத்தித் தளைகள் அமைக்கப்பட்டுள்ளன. 1982-83 ஆம் ஆண்டிற்கு 19,200 எக்டேரில் புகையிலை சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**இடு பொருட்கள் வினியோகம் :**

வேளாண்மை கிடங்குகள் மற்றும் தனிப்பட்ட வியாபார நிலையங்கள் மூலமாக தரமான விதைகள், உரங்கள் மற்றும் பூச்சி மருந்துகள் வினியோகம் சீரமைக்கப்படுகிறது. இவ்விடு பொருள்களின் தரக்கட்டுப்பாடு அதற்கென நியமித்து இருக்கும் அலுவலர் மூலமாக கண்காணிக்கப்படுகிறது.

**விதைகள் :**

1981 ஆம் ஆண்டு டிசம்பர் முடிய 8,041 டன் நெல் விதைகளும் 214 டன் கேழ்வரகு, சோளவிதைகளும், 317 டன் வீரிய ரக சோளம், கம்பு, மக்காச் சோளம் விதைகளும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. 1982-83 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட அளவு விதைகளை விவசாயிகளுக்கு வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது :—

| | |
|---|---|
| நெல் | 13,500 டன் |
| சோளம் | 161 " |
| கேழ்வரகு | 183 " |
| வீரிய ரக சோளம் | 154 " |
| வீரிய ரக கம்பு | 370 " |
| வீரிய ரக மக்காச்சோளம் | 193 " |

**பயிறு வகைகள் :**

1981 ஆம் ஆண்டின் மொத்த குறியீடான 2,450 டன்களில் டிசம்பர் 1981 முடிய 1,115 டன் சான்றிதழ் பெற்ற விதைகள் உட்பட தரமான விதைகள் வினியோகிக்கப்பட்டன. 1982-83 ஆம் ஆண்டு 13.83 இலட்சம் எக்டேரில் 10 சத பரப்பிற்காக, சற்று அதிகமான அளவான 2,500 டன் பயறு விதைகள் வினியோகிக்கப்படும்.





**பருத்தி :**

1981-82 ஆம் ஆண்டில் 2.02 டன் மூல பருத்தி விதைகள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகத்தில் இருந்து பெறப்பட்டது. இதைக் கொண்டு 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முடிய 4.3 டன் ஆதார விதைகள் வைகைப் பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்டது. சான்றிதழ் பெறாத தரமான விதை, சான்றிதழ் பெற்ற விதை மற்றும், பதிவு செய்த விதைகள் 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முடிய 585.25 டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

மூலவித்துக்கள் மற்றும் ஆதார வித்துக்களின் விதை உற்பத்தி பெருக்கத்தினை சிறந்த முறையில் வைகைப் பண்ணையில் செயல்படுத்த அரசு 1981-82 ஆம் ஆண்டில் அனுமதி அளித்துள்ளது. இப்பண்ணை 450 கிலோ மூல வித்துக்கள் உற்பத்தி செய்யும். இதுவன்றி 6,000 கிலோ மூல வித்து தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்திடம் இருந்து பெறப்படும். 1982-83 ஆம் ஆண்டு இவ்விதைகளைக் கொண்டு 14 டன் ஆதார விதைகள் பெருக்கம் செய்யப்படும். இவ்விதைகளைக் கொண்டு 1,000 டன் சான்றிதழ் பெற்ற மற்றும் தரமான விதைகள் விவசாயிகளுக்கு வினியோகிக்க பெருக்கம் செய்யப்படும்.

**கரும்பு :**

கரும்புப் பயிரில் 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முடிய 26.19 எக்டேரில், முதல் கட்ட நாற்றங்கால், 187.54 எக்டேரில் இரண்டாம் கட்ட நாற்றங்கால், மற்றும் 1,272.60 எக்டேரில் வணிக ரீதியான நாற்றங்கால் அமைக்கப பட்டுள்ளது. 1981-82 ஆம் ஆண்டில் தேர்ந்த கரும்பு விதைக் கரணைகளை விநியோகம் செய்ய, செங்கற்பட்டு மற்றும் பெரியார் மாவட்டங்களில் இரண்டு விதை மையங்கள் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. தேர்ந்த முதல கட்ட மற்றும் இரண்டாம் கட்ட. நாற்றங்கால் உற்பத்தி செய்வதற்கென ஒரு எக்டேரில் 75 டன் கரும்பு கரணை உற்பத்திக்கு ரூபாய் 1,500 மானியம் வழங்க 1981-82 ஆம் ஆண்டு முதல் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. 1982-83 ஆம் ஆண்டில் 35 எக்டேர் முதல் கட்ட 350 எக்டேர் இரண்டாம் கட்ட, மற்றும் 3,500 எக்டேர் வணிக ரீதியான நாற்றங்கால் உற்பத்தி செய்து வினியோகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

1981-82 ஆம் ஆண்டில் 440 கிலோ தேர்ந்த புகையிலை விதைகள் விநியோகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முடிய 303.5 கிலோ புகையிலை விதை உற்பத்தி செய்து விநியோகம் செய்யப் பட்டது. 1982-83 ஆம் ஆண்டில் 440 கிலோ தேர்ந்த புகையிலை விதை உற்பத்தி செய்து விநியோகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. 1982-83 ஆம் ஆண்டில் 24.5 டன்கள் பயறு மூல வித்துக்கள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திடமிருந்து பெறத் திட்டமிடப்பட்டுள்ளது.

பருத்தி :

தமிழ்நாட்டில் பருத்தி தேவை ஆண்டுக்கு சுமார் 14 இலட்சம் பேல்கள் ஆகும். ஆனால் உற்பத்தியோ 4 முதல் 5 இலட்சம் பேல்கள் ஆகும். இதனால் இம்மாநிலம் தன் மீதி தேவைக்கு மற்ற மாநிலங்களிலிருந்து பருத்தியை இறக்குமதி செய்து கொள்கிறது.

பருத்தி உற்பத்தியைப் பெருக்குவதற்காக ஒருங்கிணைந்த பருத்தி அபிவிருத்தி திட்டம் மற்றும் தீவிர பருத்தி மாவட்டத் திட்டம் என்ற இரண்டு திட்டங்கள் இம்மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஒருங்கிணைந்த பருத்தி அபிவிருத்தி திட்டம், சேலம், திருச்சி, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களிலும் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு பகுதியிலும் அரசின் நிதி உதவியோடும், தீவிர பருத்தி மாவட்டத் திட்டம் கோவை, பெரியார், திருநெல்வேலி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் மத்திய அரசின் நிதி உதவியுடனும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பருத்தியின் தரத்தை உயர்த்தவும், தன்னிறைவை அடையவும் நீண்ட இழைப் பருத்திகளைப் பெற அயல்நாடுகளை சார்ந்திருக்க வேண்டிய நிலையை மாற்றவும் மேற்படி திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1981-82 ஆம் ஆண்டில் 3.60 இலட்சம் எக்டேர் பரப்பளவில் பருத்தி சாகுபடி செய்யவும் 4.80 இலட்சம் பேல்கள் உற்பத்தி செய்யவும் திட்டமிடப்பட்டு டிசம்பர் 1981 முடிய 1,897 இலட்சம் எக்டேர் பரப்பளவில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. 1982-83 ஆம் ஆண்டில் 3.60 இலட்சம் எக்டேர் பருத்தி சாகுபடி செய்யவும் 5 இலட்சம் பேல்கள் பருத்தி உற்பத்தி செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

பயிற்சி வழி தொடர்புத் திட்டம் துவங்கப்பட்டதால் மேற்படி இரு திட்டங்களில் பணியாற்றிய பணியாளர்கள் பயிற்சி வழி தொடர்பு திட்டத்தோடு இணைக்கப்பட்டு பருத்தி அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கரும்பு :

கரும்பு பெருக்கத் திட்டம் கரும்பின் தரத்தையும் உற்பத்தியையும் அதிகரித்து மாநிலத்திலுள்ள 21 சர்க்கரை ஆலைகளின் தேவைகளையும் வெல்ல உற்பத்தியாளர்களின் தேவைகளையும் பூர்த்தி செய்ய செயல்படுத்தப்பட்டு வருகிறது.





1981-82 ஆம் ஆண்டில் 1.72 இலட்சம் எக்டேர் பரப்பில் கரும்பு சாகுபடி செய்யவும் 22.70 இலட்சம் டன் வெல்லமாக உற்பத்தி செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. டிசம்பர் 1981 முடிய 1.20 இலட்சம் எக்டேர் பரப்பு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. 1982-83 ஆம் ஆண்டில் 1.75 இலட்சம் எக்டேரில் கரும்பு சாகுபடி செய்யவும் 23.52 இலட்சம் டன் வெல்லமாக உற்பத்தி செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. பயிற்சி வழி தொடர்பு திட்டம் அமுலாக்கப்பட்டதால் கரும்பு பெருக்க திட்டப் பணியாளர்கள் மேற்படி திட்டத்துடன் இணைக்கப்பட்டு கரும்பு பெருக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உயர் ரக விதைக் கரணைகள் விநியோகம் மட்டுமின்றி 1981-82 ஆம் ஆண்டில் 1.72 இலட்சம் எக்டேர் பரப்பில் தகுந்த உரமிடுதல் மற்றும் பயிர்ப் பாதுகாப்பு முறைகளை கையாளவும் திட்டமிடப்பட்டுள்ளது. டிசம்பர் 1981 முடிய 82,471 எக்டேர் பரப்பில் தகுந்த உரமிடுதல் மற்றும் 87,287 எக்டேர் பரப்பில் பயிர் பாதுகாப்பு முறைகளும் கையாளப்பட்டன. 1982-83 ஆம் ஆண்டில் 1.75 இலட்சம் எக்டேர் பரப்பில் மேற்படி முறைகளைக் கையாளவும் திட்டமிடப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறையில் பூச்சி மருந்து தெளித்தல் மற்றும் ஒட்டுண்ணிகள் பூச்சிகளைக் கொண்டும் கரும்பைத் தாக்கும் பூச்சிகள் கட்டுப்படுத்தப்படுகின்றன. இதற்கென இதுவரை 12 ஒட்டுண்ணி உற்பத்தி மையங்கள் இயங்கி வந்தன. 1981-82 ல் புதிதாக 9 மையங்கள் துவக்கப்பட்டு கரும்பைத் தாக்கும் குருத்துப் பூச்சியை கட்டுப்படுத்தும் ஒட்டுண்ணி பூச்சிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. 1981-82 ஆம் ஆண்டில் 8,250 எக்டேர் பரப்பிற்கு ஒட்டுண்ணிகளை விட திட்டமிடப்பட்டுள்ளது. இதில் டிசம்பர் 1981 முடிய 2,680 எக்டேர் பரப்பு அடையப்பட்டுள்ளது. 1982-83 ஆம் ஆண்டில். 10,500 எக்டேர் பரப்பிற்கு ஒட்டுண்ணி விட திட்டமிடப்பட்டுள்ளது.

கரும்பு சாகுபடியாளர்களை பயிற்றுவிக்க செயல் விளக்கத் திடல்கள் அமைக்கப்படுகின்றன. 1981-82 ஆம் ஆண்டில் 245 செயல் விளக்கத் திடல்கள் அமைக்க திட்டமிட்டு டிசம்பர் 1981 முடிய 128 செயல் விளக்கத் திடல்கள் அமைக்கப்பட்டுள்ளன. 1982-83 ஆம் ஆண்டு 500 செயல் விளக்கத் திடல்கள் அமைக்கப் பெறும்.

புகையிலை :

புகையிலையின் தரத்தையும் தற்போதைய மகசூலையும் உயர்த்த, நாற்றங்கால் முதல் அறுவடை வரையிலான உயர்செய் நேர்த்தி முறைகளை செயல் விளக்கங்களின் மூலமும் விளம்பரம் மூலமும் எடுத்துக்காட்ட ஒரு திட்டம்

எரு மற்றும் இரசாயன உரங்கள் :

1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரை 2.46 இலட்சம் டன் தழைசத்து, 0.75 இலட்சம் டன் மணிச்சத்து மற்றும் 0.88 இலட்சம் டன் சாம்பல் சத்துள்ள உரங்கள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டன. இரசாயன உரங்களை இயற்கை எருவான மக்கிய உரம் மற்றும் உயிரின உரமான நீலப்பச்சைப் பாசியுடன் இணைத்து பெருமளவில் பயன்படுத்தும்படி விவசாயிகளுக்கு ஆலோசனை கூறப்படுகிறது. 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரை 612 டன் நீலப்பச்சைப்பாசி பெருக்கம் செய்யப்பட்டு, 61,286 எக்டேர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

இறக்குமதியில் தற்காலிக தாமதம் ஏற்பட்டதால் 1981 ஆம் ஆண்டு நவம்பர், டிசம்பர் மாதங்களில் இரசாயன உரங்களுக்கு குறிப்பாக யூரியாவிற்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. நமக்கு உரம் வழங்கும் பிரதான ஆலைகள் நாட்கள் இயங்காத நிலையில் இருந்ததால் மாநிலத்தில் யூரியாவிற்கு தற்காலிக தட்டுப்பாடு ஏற்பட்டு இருப்பு குறைவான நிலையை எதிர் நோக்கியிருந்தது. அரசு உடனடியாக செயல்பட்டு மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு, அரசு இருப்பிற்காக உரம் கொண்டு வந்த கப்பல்களை இம்மாநிலத்திற்கு வழி மாற்றி வரச் செய்ததினால், மாநிலத்தில் யூரியா வழங்கும் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டது. 1981-82 ஆம் ஆண்டு சாகுபடி பருவத்தில் (ஆகஸ்ட் 1981 முதல் ஜனவரி 1982 வரை) 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முடிய 1.94 இலட்சம் டன் தழைச்சத்து, 0.55 இலட்சம் டன் மணிச்சத்து மற்றும் 0.62 இலட்சம் டன் சாம்பல் சத்துள்ள உரங்கள் வழங்கப்பட்டன. இனி வரும் காலங்களிலும் உரங்கள் வழங்குவதில் திருப்திகரமான நிலைமையே நீடிக்கும் நம்பப்படுகிறது.

இதுவன்றி, பயறுவகை மற்றும் பசுந்தாள் உரப் பயிர்களோடு கலந்து விதைப்பதற்காக 1.65 இலட்சம் நுண்ணுயிர் கலவை பொட்டலங்கள் விநியோகிக்கப்பட்டன. 70.15 இலட்சம் டன் உள்ளூர் எரு, 2.48 இலட்சம் டன் கழிவு எரு ஆகியன 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரை உற்பத்தி செய்யப்பட்டு பயன் படுத்தப்பட்டன.

1982-83 ஆம் ஆண்டில் உர உபயோகத்தின் அளவு 3.75 இலட்சம் டன் தழைச்சத்தாகவும், 1.15 இலட்சம் டன் மணிச் சத்தாகவும், மற்றும் 1.15 இலட்சம் டன் சாம்பல் சத்தாகவும் அதிகரிக்கப்படும். பாசனவசதி திருப்திகரமாக இருக்கக்கூடிய பகுதிகளில் குறைவான உர உபயோகத்தினை அதிகரிப்பது, பெருமளவு மானாவாரி பகுதிகளில் உர உபயோகத்தை அதிகப்படுத்துவது மற்றும் இதர ஊக்க நடவடிக்கைகள் மூலம் உர உபயோகத்தின்



அளவு அடையப்படும். தாக்கட்டுப்பாடு முறைகள் தொடர்ந்து அமுல்படுத்தவதோடு தீவிரமாக செயல்படுத்தப்படும். பயறு மற்றும் பசுந்தாளுர விதைகளோடு கலந்து விதைப்பதற்காக 3.50 இலட்சம் நுண்ணுயிர் பொட்டலங்கள் விநியோகிக்கப்படும். உள்ளூர் உர உற்பத்தியிலும் கவனம் செலுத்தப்படும். ஒரு இலட்சம் எக்டேர் நெல் பயிருக்கு நீலப்பச்சைப்பாசி விநியோகிக்கப்படும்.

பயிர்ப் பாதுகாப்பு :

1982-83 ஆம் ஆண்டில் 56.12 இலட்சம் எக்டேர் பரப்பளவில் பூச்சிகளைக் கட்டுப்படுத்தவும், 15.80 இலட்சம் எக்டேர் பரப்பளவில் பயிர் நோய்களைக் கட்டுப்படுத்தவும், 7,300 டன் தூள் மற்றும் 6 இலட்சம் லிட்டர் திரவ மருந்துகளை வாங்கி விநியோகிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. 1981 ஆம் ஆண்டில் டிசம்பர் திங்கள் வரை 20,509 எக்டேர் நெற்பயிரில் அதிக அளவு தாக்குதலுக்குள்ளாகும் பகுதிகளில் பூச்சிகளைக் கட்டுப்படுத்த, ஒட்டு மொத்த மருந்து தெளிப்பு மேற்கொள்ளப்பட்டது. இந்த திட்டம் 1982-83 ஆம் ஆண்டிலும் தொடரப்படும். குறிப்பிட்ட பகுதிகளில் அதிக அளவில் சேதத்தினை ஏற்படுத்தும் புகையான் பூச்சியைக் கட்டுப்படுத்த 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரை 11,350 எக்டேரில் ஒட்டுமொத்த மருந்து தெளிப்பு மேற்கொள்ளப்பட்டது. மருந்து விலையில் 50 சதவீதம் மானியமாகவும் மருந்தடிக்கும் கான செலவிற்காக எக்டேர் ஒன்றுக்கு ரூபாய் 7.50 மானியமாகவும் இத்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. 1982-83 ஆம் ஆண்டில், 20,000 எக்டேர் பரப்பளவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். மேலும் பயிற்சி மற்றும் பார்வையிடல் திட்டத்திலுள்ள அலுவலர்களைக் கொண்டு பூச்சிகளைக் கண்காணிக்கும் திட்டம் தீவிரப்படுத்தப்படும்.

உழவர் கல்வி மற்றும் பயிற்சி :

உழவர் பயிற்சி நிலையங்களின் பல்வேறு ஒலி-ஒளிக்கல்வி வாயிலாகவும், நடைமுறைப் பாடங்கள் வாயிலாகவும் உழவர்களுக்கு வேளாண்மை குறித்த புதிய உக்திகள் பயிற்றுவிக்கப்படுகின்றன. நம் மாநிலத்தில், இதுபோன்று 15 உழவர் பயிற்சி நிலையங்கள் உள்ளன. வேளாண்மை மற்றும் அதன் தொடர்பான பொருட்களில் இந்நிலையங்களில் ஆண்டொன்றுக்கு, சுமார் 30,000 உழவர்கள் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றனர்.

உழவுக் கருவிகள் மற்றும் சாதனங்களைக் கையாண்டு நவீன சாகுபடி முறைகளை மேலும் சிறந்த முறையில் பயன்படுத்தத்தக்க வகையில், ஊரக இளைஞர்களுக்கு போதித்து, உழவர்களைப் பயிற்றுவிக்க 13 வேளாண்மைப் பள்ளிகள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இப்பயிற்சிக் காலம் ஓராண்டு ஆகும். குறைந்த பட்ச தகுதியாக 8 ஆம் நிலைப் படிப்புடன் 18 முதல் 30

பயறு விதைகள் சேமித்து வைக்கும் போது பூச்சி தாக்குதலிலிருந்து காப் பாற்ற ஈரத்தன்மையை காட்டும் கருவி, விஷப் புகையூட்டுவதற்கான விரிப்பு, உலர்த்தும் களங்கள், எடைபோடும் கருவி ஆகிய நவீன வசதிகள் கொண்ட ஐந்து மத்திய விதை சேமிப்பு கிடங்குகளை செங்கல்பட்டு, திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம், பெரியார் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் கட்ட திட்ட மிடப்பட்டுள்ளது.

நிலத்தை நல்ல முறையில் பயன்படுத்தி அதிகப்படி இலாபம் பெறுவதற் கான வகை மாதிரிகளை ஆய்வு செய்து, அவற்றினை செயல் விளக்கி காட்டு வதற்கான திட்டம் ஒன்று 1981-82 ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் " கார்ட் " அமைப்பிற்கு ஒரு இலட்சம் ரூபாய் ஆலோசனைத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. இந்த முன்னோடித் திட்டத்தின் வகை மாதிரிகள் தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருநெல்வேலி, செங்கல்பட்டு மற்றும் சேலம் ஆகிய ஐந்து மையங்களில் விளக்கிக் காட்டப் படும். தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தால் வரையறுக்கப்பட்ட உகந்த வழிமுறைகள் இத்திட்டத்தின் அலுவலர்கள் மூலம் விவசாயிகளுக்கு விளக்கப்பட்டு பண்ணை செயல்முறைகள் செயல்படுத்தப்படும்.

உரங்களுக்கான தரக்கட்டுப்பாடு பணிகளை அமுல்படுத்துவதற்கென இதர மாவட்டங்களைப் போல் நீலகிரி மாவட்டத்திலும் உர வியாபாரத்திற்கான உரிமங்களைப் பதிவு செய்வதற்கு தனி அமைப்பு ஒன்று நிறுவப்படும். இந்த அமைப்பு உர வியாபாரத்திற்கான உரிமங்களை பதிவு செய்து வழங்குதலையும், பின்வரும் வருடங்களில் அவற்றை புதுப்பிக்கும் பணியை மற்றும் அடிக்கடி சோதனை செய்வதன் மூலம் இவ்வியாபாரத்தில் நடக்கும் தவறான முறை களை கண்டுபிடிப்பதையும் மேற்கொள்ளும்.

மாநிலத்தில் தற்போதுள்ள 41 பரிசோதனை நிலையங்களில் மண் மற்றும் பூச்சி மருந்து மாதிரிகள் சோதனை செய்யும் தரத்தினை அபிவிருத்தி செய்ய தேவையான உதவியையும் மற்றும் அதற்கான வழி முறைகளையும் எடுத்துக் கூற குடுமியாமலையில் ஒரு மத்திய கட்டுப்பாடு பரிசோதனை நிலையம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இது மேற்கூறிய பரிசோதனை நிலையங் களுடன் இணைந்து செயல்படக்கூடிய கட்டுப்பாடு பரிசோதனை நிலைய மாகவும், புதிய அலுவலர்களுக்கு பயிற்சி வழங்கவும் மற்றும் பல்வேறு பரிசோதனை நிலையங்களில் ஆய்வு செய்யப்பட்ட மாதிரிகளை மீண்டும் ஆய்வு செய்து சரிபார்க்கவும் பயன்படுத்தப்படும். இதர பயிற்சி நிலையங் களைப்போல் புதுக்கோட்டையிலுள்ள உழவர் பயிற்சி நிலையத்திற்கும் முழுமையான அளவில் அலுவலர்கள் நியமிக்க திட்டமிடப்பட்டுள்ளது.





வேளாண்மை தகவல் பிரிவு, திரைப்படப் பிரதிகளை மாநிலத்திலுள்ள விரி வாக்க அமைப்புகளுக்கு அனுப்புவதற்கு ஏற்ற வகையில் ஒரு திரைப்பட இருப்பகம் அமைக்க வேண்டும் என்று புது டில்லியிலுள்ள வேளாண்மை விரிவாக்க இயக்ககம் ஆலோசனை கூறியுள்ளது. முக்கியமாக கோடைக்காலங் களில் படப்பிரதிகளில் காளான் வளர்ந்து அவற்றை பாதிக்காமல் இருப்பதற் கேற்ப காற்றோட்டமுள்ளதாகவும் சரியான தட்பவெப்ப நிலையை நிலை நிறுத்தக் கூடிய வகையில் குளிர்சாதனமுள்ளதாக திரைப்பட இருப்பகம் இருக்க வேண்டும் எனவும் ஆலோசனை கூறப்பட்டுள்ளது. ஆகவே வேளாண்மை இயக்ககத்தில் தகவல் பிரிவில் உள்ள ஓர் அறையை இதற்கென குளிர் சாதனமுள்ளதாக மாற்றியும் பராமரிப்பதற்கு தகுந்த அலுவலர்களை அமர்த்திட திட்டமிடப்பட்டுள்ளது.

## வேளாண்மைப் பொறியியல் துறை.

1981 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 31 ஆம் நாள்முதல், தலைமைப் பொறி யாளர் ஒருவரை துறைத் தலைவராகக் கொண்டு இத்துறை இயங்கி வரு கின்றது. விவசாயிகளின் மேம்பாட்டுக்காக இத்துறை கீழ்க்கண்ட திட்டங் களை செயலாக்கி வருகின்றது :—

1. நிலவள மேம்பாட்டுத் திட்டங்கள்.
2. சிறுபாசனத் திட்டங்கள்.
3. மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புத் திட்டங்கள்.
4. பாசனப் பகுதி மேம்பாட்டுப் பணிகள்.

மேற்கண்ட திட்டங்களை செயலாக்குவதோடு, வெள்ளத்தாலும், வறட்சி யாலும் பாதிக்கப்படும் நேரத்தில், இத்துறை நிவாரணப் பணிகளையும் செய்து வருகின்றது.

### நிலவள மேம்பாடு :

இத்துறையிடம் 145 புல்டோசர்களும், 2 முன்புறம் பொருத்தப்பட்ட சமன்செய் கருவிகளும், 192 டிராக்டர்களும் உள்ளன. இவை, மாவட்ட மற்றும் வட்ட அளவில் உழவர்களின் தேவைக்காக வைக்கப்பட்டுள்ளன. நிலச்சமன் பாடு மற்றும் இயந்திர சாகுபடி முறைகளைக் கையாள இந்த புல்டோசர்களும், டிராக்டர்களும் வாடகைக்கு விடப்படுகின்றன. இப்பணிகள் 1982-83 ஆம் தொடரப்படும்.

பயறு விதைகள் சேமித்து வைக்கும் போது பூச்சி தாக்குதலிலிருந்து காப் பாற்ற ஈரத்தன்மையை காட்டும் கருவி, விஷப் புகையூட்டுவதற்கான விரிப்பு, உலர்த்தும் களங்கள், எடைபோடும் கருவி ஆகிய நவீன வசதிகள் கொண்ட ஐந்து மத்திய விதை சேமிப்பு கிடங்குகளை செங்கல்பட்டு, திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம், பெரியார் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் கட்ட திட்ட மிடப்பட்டுள்ளது.

நிலத்தை நல்ல முறையில் பயன்படுத்தி அதிகப்படி இலாபம் பெறுவதற் கான வகை மாதிரிகளை ஆய்வு செய்து, அவற்றினை செயல் விளக்கி காட்டு வதற்கான திட்டம் ஒன்று 1981-82 ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் " கார்ட் " அமைப்பிற்கு ஒரு இலட்சம் ரூபாய் ஆலோசனைத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. இந்த முன்னோடித் திட்டத்தின் வகை மாதிரிகள் தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருநெல்வேலி, செங்கல்பட்டு மற்றும் சேலம் ஆகிய ஐந்து மையங்களில் விளக்கிக் காட்டப் படும். தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தால் வரையறுக்கப்பட்ட உகந்த வழிமுறைகள் இத்திட்டத்தின் அலுவலர்கள் மூலம் விவசாயிகளுக்கு விளக்கப்பட்டு பண்ணை செயல்முறைகள் செயல்படுத்தப்படும்.

உரங்களுக்கான தரக்கட்டுப்பாடு பணிகளை அமுல்படுத்துவதற்கென இதர மாவட்டங்களைப் போல் நீலகிரி மாவட்டத்திலும் உர வியாபாரத்திற்கான உரிமங்களைப் பதிவு செய்வதற்கு தனி அமைப்பு ஒன்று நிறுவப்படும். இந்த அமைப்பு உர வியாபாரத்திற்கான உரிமங்களை பதிவு செய்து வழங்குதலையும், பின்வரும் வருடங்களில் அவற்றை புதுப்பிக்கும் பணியை மற்றும் அடிக்கடி சோதனை செய்வதன் மூலம் இவ்வியாபாரத்தில் நடக்கும் தவறான முறை களை கண்டுபிடிப்பதையும் மேற்கொள்ளும்.

மாநிலத்தில் தற்போதுள்ள 41 பரிசோதனை நிலையங்களில் [illegible] பூச்சி மருந்து மாதிரிகள் சோதனை செய்யும் தரத்தினை அபிவிருத்தி செய்ய தேவையான உதவியையும் மற்றும் அதற்கான வழி முறைகளையும் எடுத்துக் கூற குடுமியாமலையில் ஒரு மத்திய கட்டுப்பாடு பரிசோதனை நிலையம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இது மேற்கூறிய பரிசோதனை நிலையங் களுடன் இணைந்து செயல்படக்கூடிய கட்டுப்பாடு பரிசோதனை நிலைய மாகவும், புதிய அலுவலர்களுக்கு பயிற்சி வழங்கவும் மற்றும் பல்வேறு பரிசோதனை நிலையங்களில் ஆய்வு செய்யப்பட்ட மாதிரிகளை மீண்டும் ஆய்வு செய்து சரிபார்க்கவும் பயன்படுத்தப்படும். இதர பயிற்சி நிலையங் [illegible]போல் புதுக்கோட்டையிலுள்ள உழவர் பயிற்சி நிலையத்திற்கும் [illegible]யான அளவில் அலுவலர்கள் நியமிக்க திட்டமிடப்பட்டுள்ளது.



வேளாண்மை தகவல் பிரிவு, திரைப்படப் பிரதிகளை மாநிலத்திலுள்ள விரி வாக்க அமைப்புகளுக்கு அனுப்புவதற்கு ஏற்ற வகையில் ஒரு திரைப்பட இருப்பகம் அமைக்க வேண்டும் என்று புது டில்லியிலுள்ள வேளாண்மை விரிவாக்க இயக்ககம் ஆலோசனை கூறியுள்ளது. முக்கியமாக கோடைக்காலங் களில் படப்பிரதிகளில் காளான் வளர்ந்து அவற்றை பாதிக்காமல் இருப்பதற் கேற்ப காற்றோட்டமுள்ளதாகவும் சரியான தட்பவெப்ப நிலையை நிலை நிறுத்தக் கூடிய வகையில் குளிர்சாதனமுள்ளதாக திரைப்பட இருப்பகம் இருக்க வேண்டும் எனவும் ஆலோசனை கூறப்பட்டுள்ளது. ஆகவே வேளாண்மை இயக்ககத்தில் தகவல் பிரிவில் உள்ள ஓர் அறையை இதற்கென குளிர் சாதனமுள்ளதாக மாற்றியும் பராமரிப்பதற்கு தகுந்த அலுவலர்களை அமர்த்திட திட்டமிடப்பட்டுள்ளது.

## வேளாண்மைப் பொறியியல் துறை.

1981 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 31 ஆம் நாள்முதல், தலைமைப் பொறி யாளர் ஒருவரை துறைத் தலைவராகக் கொண்டு இத்துறை இயங்கி வரு கின்றது. விவசாயிகளின் மேம்பாட்டுக்காக இத்துறை கீழ்க்கண்ட திட்டங் களை செயலாக்கி வருகின்றது :—

1. நிலவள மேம்பாட்டுத் திட்டங்கள்.
2. சிறுபாசனத் திட்டங்கள்.
3. மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புத் திட்டங்கள்.
4. பாசனப் பகுதி மேம்பாட்டுப் பணிகள்.

மேற்கண்ட திட்டங்களை செயலாக்குவதோடு, வெள்ளத்தாலும், வறட்சி யாலும் பாதிக்கப்படும் நேரத்தில், இத்துறை நிவாரணப் பணிகளையும் செய்து வருகின்றது.

**நிலவள மேம்பாடு :**

இத்துறையிடம் 145 புல்டோசர்களும், 2 முன்புறம் பொருத்தப்பட்ட சமன்செய் கருவிகளும், 192 டிராக்டர்களும் உள்ளன. இவை, மாவட்ட மற்றும் வட்ட அளவில் உழவர்களின் தேவைக்காக வைக்கப்பட்டுள்ளன. நிலச்சமன் பாடு மற்றும் இயந்திர சாகுபடி முறைகளைக் கையாள இந்த புல்டோசர்களும், டிராக்டர்களும் வாடகைக்கு விடப்படுகின்றன. இப்பணிகள் 1982-83 லும் தொடரப்படும்.

**நிலச் சமன்பாடு :**

1981-82 ல், 31—12—1981 வரை 5,880 எக்டேர் பரப்பில் நிலம் சமன் செய்யப்பட்டுள்ளது. 1982-83 ஆம் ஆண்டில் 7,000 எக்டேர் பரப்பில் " நிலச் சமன்பாடு " செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

**இயந்திர சாகுபடி :**

1981-82-ல் 31—12—1981 வரை 25,257 எக்டேர் பரப்பில் இயந்திர சாகுப்படிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1982-83 ஆம் ஆண்டில் 22,000 எக்டேர் பரப்பில் இப்பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. மாவட்டத் தலை நகரங்களிலே மட்டுமுள்ள டிராக்டர்களை வட்டத் தலை நகரங்களுக்கு மாற்றி உழவர்களுக்கு எளிதில் கிடைக்கும்படி செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**சிறுபாசனம் :**

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மேல்நிலை நீர்வளத்தினையும் ஏற்கெனவே பயன்படுத்திவிட்டபடியால் வேளாண்மைக்காக நிலத்தடி நீரையே பெரிதும் பயன்படுத்த வேண்டியுள்ளது. நிலத்தடி நீரை முழுவதும் வெளிக் கொணர்ந்து, வேளாண்மைக்கு நீரை உறுதி செய்யும் நோக்குடன் கீழ்கண்ட திட்டங்களை வேளாண்மைப் பொறியியல் துறை செயலாக்கி வருகின்றது :—

1. தனியார் குழாய்கிணறு திட்டம் ;
2. கிணறுகளில் துளையிடும் திட்டம் ;
3. வடிமுனைக் குழாக் கிணறு திட்டம் ; மற்றும்
4. கிணறுகளை ஆழப்படுத்தும் திட்டம்.

உழவர்கள் தம் நிலங்களில், குழாய்க் கிணறுகள் அமைத்திடவும், கிணறுகளில் துளையிடவும், ஆழப்படுத்தவும் உதவிடும் வகையில், இத்துறையிடம் 10 ஹேமர் விசைத் துளைக் கருவிகளும், 64 சுழல் விசைத் துளைக் கருவிகளும், 57 பெர்குசன் துளைக் கருவிகளும், 11 வாகன் துளைக் கருவிகளும், 12 கற்குடைக் கருவிகளும், 101 பாறை வெடிப்புக் கருவிகளும், 54 நீள் துளைக் கருவிகளும், 400 கைத்துளைக் கருவிகளும், 10 காற்றழுத்தக் கருவிகளும் உள்ளன.

**தனியார்க் குழாய் கிணறு திட்டம் :**

1981-82-ல் 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ஆம் நாள் முடிய 8,040 தனியார் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் 638 குழாய் கிணறுகள் வறட்சி நிவாரணப்பணிகளின்போது அமைக்கப்பட்டவையாகும். 1982-83 ஆம் ஆண்டில் 4,800 தனியார் குழாய்க் கிணறுகள் அமைக்கத் திட்[illegible]



**கிணறுகளில் துளையிடும் திட்டம் :**

1981-82 ல் 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் முடிய 1,725 கிணறுகளில் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இவற்றுள் வறட்சி நிவாரணப் பணிகளின் போது 348 கிணறுகளில் இத்திட்டம் நிறைவேற்றப் பட்டது. 1982-83 ஆம் ஆண்டில் 2,400 கிணறுகளில் இத்திட்டம் நிறைவேற் [illegible] றப்படும்.

**வடிமுனைக் குழாய்க் கிணறு திட்டம் :**

1981-82-ல் 31—12—1981 முடிய 2,050 வடிமுனைக் குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. 1982-83 ஆம் ஆண்டில் 2,200 வடிமுனைக் குழாய்க் கிணறுகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**கிணறுகளை ஆழப்படுத்தும் திட்டம் :**

1981-82-ல் 31—12—1981 முடிய 8,556 கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டுள்ளன. வறட்சி நிவாரணப் பணிகளின்போது ஆழப்படுத்தப்பட்ட 8,006 குடிநீர் கிணறுகளும் இவற்றுள் அடங்கும். 1982-83 ஆம் ஆண்டு, 2,800 பாசனக் கிணறுகளை ஆழப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**நிலம் பற்றிய பௌதீக ஆய்வுகள் :**

நிலம் பற்றிய பௌதீக ஆய்வுகள், நிலங்களின் ஆழ்மட்ட அமைப்புகளில் இருக்கக்கூடிய நீர் வளத்தினைக் கண்டறிய உதவுகின்றன. இப்பணிகளுக்காக இத்துறையிடம் 11 ரெசிஸ்டிவிட்டி மீட்டர்களும் ஒரு மின்சார லாகிங் கருவியும் உள்ளன. ரெசிஸ்டிவிட்டி மீட்டர்கள் புதிய துளைக் கிணறுகளை அமைக்கக் கூடிய சாதகமான இடங்களை தேர்ந்தெடுக்க உதவுகின்றன. மின்சார லாகிங் கருவி எவ்வளவு ஆழத்தில் நீர் ஊற்றுக்கள் நிறைந்த பகுதிகள் உள்ளன என்பதை அறிய உதவுவதோடு உழவர்கள் தம் குழாய்க் கிணறுகளை அறிவியல் முறைப்படி அமைக்க பெரிதும் உதவுகின்றன.

**மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு :**

கீழ்க்கண்ட திட்டங்கள் வேளாண்மைப் பொறியியல் துறையால் ஆண்டு தோறும் நிறைவேற்றப்படுகின்றன :—

1. மலைப்பகுதிகளிலும், சமவெளிப் பகுதிகளிலும் மண்வளப் பாது[illegible] காப்பு பணிகள் ;
2. காற்றரிப்பு தடுப்புப்பணிகள் (திருநெல்வேலி மாவட்டம்).
3. காற்றரிப்பினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு பணிகள் (போடிநாயக்கனூர்).
4. ஓடையரிப்பு தடுப்பு மற்றும் சீரமைப்பு பணிகள் மற்றும்
5. குந்தா நீர்ப்பிடிப்பு பகுதி நீர் பள்ளத்தாக்கும் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள்.

மலை மற்றும் சமவெளிப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள்—

பாதுகாப்பையும் பயனையும் சேர்ந்தளிக்கக் கூடிய மண்வளப் பாதுகாப்புப் பணிகளை சிறிய அளவிலான நீர்வடிப் பகுதிகள் வாரியாக மேற்கொண்டு மண் அரிப்பை தடுத்து நிலத்தினை தகுந்த முறையில் பயன்படுத்துவது இத் திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ் நடைபெறும் பணிகளாவன :—

1. சம உயர வரப்புகள் அமைத்தல், நிலச்சீர்திருத்தம், பாசன நீர்க் குழாய்கள் பதித்தல்.

2. சம உயர கற்சுவர் கட்டுதல், படிமட்டங்கள் அமைத்தல் சம ஆழ வாய்க்கால் வெட்டுதல்.

3. நிலத்தடி நீரைப் பெருக்கவும் நீர்நிலைகளில் வண்டல் படிவதைத் தடுக்கவும் உதவக்கூடிய கசிவு நீர்க் குட்டைகள் கட்டுதல், வண்டல் தடுப்பு சிற்றணைகள் கட்டுதல் முதலியன.

1981-82-ல் 31—12—1981 முடிய 32,100 எக்டேர் நிலப் பரப்பில் இப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1982-83 ஆம் ஆண்டில் 44,800 எக்டேர் நிலப்பரப்பில் இப்பணிகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

திருநெல்வேலி மாவட்டத்தில் காற்றரிப்பு தடுப்புத் திட்டம் :—

திருநெல்வேலி மாவட்டத்தில் 1981-82-ல் டிசம்பர் 1981 முடிய 1,1[illegible] எக்டேர் நிலப்பரப்பில் காற்றரிப்புத் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1982-83 ஆம் ஆண்டு 1,000 எக்டேர் பரப்பில் இப்பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

காற்றரிப்பால் பாதிக்கப்பட்ட போடிநாயக்கனூர் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் :—

1,460 எக்டேர் நிலப்பரப்பில், 1981-82-ல் டிசம்பர் 1981 முடிய பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1982-83 ஆம் ஆண்டு 1,600 எக்டேர் பாதிக்கப்பட்ட நிலப்பரப்பில் இப்பணிகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

[illegible] தடுப்பு சீர்திருத்தத் திட்டம் :—

இத்திட்டம் வடாற்காடு, தென்னாற்காடு மாவட்டங்களில் [illegible] [illegible] பாதிக்கப்பட்ட நிலங்கள் [illegible] [illegible] சீர்திருத்துவதோடு மேலும் [illegible]





வண்ணம் சீர்திருத்தப் பணிகள் 1981-82-ல் 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் முடிய 504 எக்டேர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1982-83 ஆம் ஆண்டு 1,000 எக்டேர் பாதிக்கப்பட்ட நிலப்பரப்பில் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

குந்தா, கீழ்பவானி நதி நீர்ப் பள்ளத்தாக்குப் பகுதிகளில் மண் வளப் பாதுகாப்பு பணிகள்.

தேவையான மண்வளப் பாதுகாப்புப் பணிகளை மேற்கொண்டு நீர் நிலைகளில் வண்டல் படிவதை தடுப்பது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டிய நீர்வடிப் பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவற்றுள் சமஉயர வரப்புக்கள், சமஉயர கற்சுவர்கள், படிமட்டங்கள் சம ஆழ வாய்க்கால்கள், சிற்றோடையரிப்பு தடுப்புபணிகள் வண்டல் தடுப்புச் சிற்றணைகள், கசிவு நீர்க்குட்டைகள் அமைத்தல் முதலிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

1981-82-ல் 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரை 645 எக்டேரில் மண்வளப் பாதுகாப்பு பணிகளும் மரம் வளர்த்தலும், 10 கட்டமைப்புக்களும் 2,360 மீட்டருக்கு ஓடைப் பராமரிப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1982-83 ஆம் ஆண்டில் 1,000 எக்டேர் பரப்பில் மண்வளப் பாதுகாப்பு பணிகளும் அவற்றுக்குத் தேவையான கட்டமைப்புக்களும், மரம் வளர்த்தலும், 2,000 மீட்டர் ஓடைப் பராமரிப்புப் பணிகளும் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளன.

பாசனப் பகுதி மேம்பாடு :—

பண்ணை அளவிலான பாசன மேம்பாட்டுப்பணிகள் "பண்ணைப் பாசன மேம்பாட்டுப்பணிகள்" என அழைக்கப்படுகின்றன. இப்பணிகள் வேளாண்மைப் பொறியியல் துறையினரால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் பணிகளை மேற்கொண்டிட மத்திய அரசு கீழ்க்கண்ட பாசனப் பகுதிகளை தேர்ந்தெடுத்து அனுமதித்துள்ளது.

1. வைகை பெரியார் பாசனப்பகுதி ;
2. காவிரி பாசனப்பகுதி ; மற்றும்
3. கீழ்பவானி பாசனப்பகுதி.

கீழ்க்கண்ட மேம்பாட்டுப்பணிகள் இத்திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன :—

1. வயல்வெளிப்பாசன முறையை தடுக்கும் வகையில் நிலத்தினை 10 [illegible] பகுதிகளாகப் பிரித்து அவற்றுள் பாசன வாய்க்கால்கள் அமைத்து [illegible] பதித்தல் ;

2. வடிக்கால்கள் அமைத்தல் ;

3. நிலச்சீர்த்திருத்தம் ;

4. நிலத்தினை ஒழுங்கு செய்து, நேர்ப்படுத்துதல் ;

5. நீர்கட்டுப்பாடு கட்டுமானங்கள் அமைத்தல் ;

6. அவசியமான இடங்களில் வாய்க்கால்களில் கற்கள் பதித்தல் அல்லது கான்கிரிட் பலகைப் பதித்தல் ;

7. பாசன நீர்ப்பங்கிட்டு முறையினை கையாளுதல்.

**சாத்தனூர்; காவிரி நதிப்பாசனப் பகுதிகளில் நீர்ப்பராமரிப்பு பணிகள்.**

மேற்கூறிய பாசனப்பகுதி மேம்பாட்டுப்பணிகளை "நீர்ப்பராமரிப்பு பணிகள்" எனும் பெயரில் மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், வேளாண்மைப் பொறியியல் துறை முன்பே செயலாக்கி வந்திருக்கின்றது. 1967 முதல் தஞ்சை மாவட்டத்தில் காவிரி பாசனப்பகுதிகளிலும் 1969 முதல் வட ஆற்காடு மாவட்டத்தின் சாத்தனூர் பாசனத்திட்டப் பகுதிகளிலும் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணிகளை தொடரவும் அதிகமான நிலப்பரப்பில் இப்பணிகளை துவக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. 1981-82-ல் 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் முடிய காவிரிப்பாசனப் பகுதியில் 5,496 எக்டேர் பரப்பிலும் சாத்தனூர் பாசனத்திட்டப்பகுதிகளில் 327 எக்டேர் பரப்பிலும் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1982-83 ஆம் ஆண்டு, காவிரிப்பாசனப் பகுதியில் 12,000 எக்டேர் பரப்பிலும், சாத்தனூர் பாசனத்திட்டத்தில் 400 எக்டேர் பரப்பிலும் இப்பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

**பெரியார் வைகை பாசனப்பகுதியில் பண்ணைப் பாசன மேம்பாட்டுப் பணிகள்.**

ரூபாய் 98.50 இலட்சம் செலவில் பெரியார் வைகை பாசனப் பகுதிகளில் பண்ணைப்பாசன மேம்பாட்டுப்பணிகளை நிறைவேற்ற மத்திய அரசும் மாநில அரசும் சரிசமமாக செலவினை ஏற்று செயல் படுத்தக்கூடிய திட்டமொன்றுக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டம் ஒரு கண்காணிப்பு பொறியாளர், இரண்டு செயற்பொறியாளர், மற்றும் 8 உதவி செயற்பொறியாளர் உதவியோடு நிறைவேற்றப்படும். தற்பொழுது பெரியார் திருமங்கலம் கால்வாயின் பாசனப் பரப்பு 13,700 எக்டேர் ஆகும். இப்புதிய திட்டத்தின் மூலம் மேலும் 2,000 [illegible] பரப்பு பாசனத்திற்கு தகுந்ததாக மாற்றப்படும். பாசனப்பகுதியை





10 எக்டேர் கொண்ட சிறிய பகுதிகளாகப் பிரித்து அந்த ஒவ்வொரு சிறிய பகுதிகளிலும் மேற்கண்ட பணிகள் செயலாக்கப்படும். 1982-83 ஆம் ஆண்டில் 18,000 எக்டேர் பரப்பில் மேம்பாட்டுப்பணிகளை மேற்கொள்ளத் திட்டமிடப் பட்டுள்ளது.

**ஏரிகளின் பாசனப்பகுதிகளில் பண்ணைப் பாசன மேம்பாட்டு திட்டப்பணிகள்.**

200 எக்டேருக்கும் மேலான பாசனப்பரப்பு கொண்ட பெரிய ஏரிகள் தமிழ்நாட்டில் நிறைந்துள்ளன. நீர் பராமரிப்பு சரியில்லாததாலும், கட்டு மானப்பகுதிகள் சரியில்லாமலிருப்பதாலும் பாசன நீரை உபயோகப்படுத்தும் திறன் மிகவும் குறைந்து காணப்படுகின்றது. இத்தகைய பகுதிகளில் பண்ணைப் பாசன மேம்பாட்டுப் பணிகளை மேற்கொண்டு, பாசனப்பரப் பினை அதிகப்படுத்தி இத்தகைய ஏரிப்பாசனத்தின் திறனை முழுதும் பயன் படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**வறட்சி நிவாரணப் பணிகள்.**

இத்துறை 1981-82 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாள் வரை கீழ்க்கண்ட வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொண்டது :—

1. கடினப் பாறைப் பகுதிகளில் அமைக்கப்பட்ட துளைக் கிணறுகள். 364
2. மண் பாங்கான பகுதிகளில் அமைக்கப்பட்ட குழாய் கிணறுகள். 455
3. ஆழப்படுத்தப்பட்ட குடிநீர்க்கிணறுகள் 8,442
4. துளையிடப்பட்ட கிணறுகள் 478

**குடிநீர் விநியோகத்திற்கான இரும்புக் கலன்கள் தயாரித்து வழங்குதல்.**

புதிதாக அமைக்கப்பட்ட மற்றும் ஆழமாக்கப்பட்ட கிணறுகளிலிருந்து கிராம மக்களுக்கு அவர்கள் வசிக்கும் இடங்களில் குடிநீர் வழங்கிடும் நோக் குடன், இரும்புக் கலன்கள் தயாரித்து அவைகளில் தண்ணீர் எடுத்துச் சென்று மக்களுக்கு வழங்கும் பணியினையும் அரசு இத்துறைக்கு அளித்தது. இதற் காக ரூபாய் 20 இலட்சம் அரசு வழங்கியது. தமிழ்நாடு சிறுதொழில் நிறு வனம் மற்றும் தென்னக கூட்டமைப்பு நிறுவனம் இவற்றின் உதவியுடன் 196 இரும்புக் கலன்கள் தயாரிக்கப்பட்டு அவைகளின் மூலம் செங்கல்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, கோவை, சேலம், பெரியார், இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் வறட்சி யால் பாதிக்கப்பட்ட இடங்களில் தண்ணீர் விநியோகிக்கப்பட்டது.

**கசிவு நீர்க்குட்டைகள் கட்டுதல் :**

நிலத்தடி நீர்வளத்தினைப் பெருக்கும் நோக்குடனும், அதே சமயம் வேலையின்றி வாழும் கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் பொருட்டும் கசிவு நீர்க்குட்டைகள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டது. இக்குட்டைகள் அமைக்கப்படும் இடங்களின் அருகில் கிணற்று நீர் வற்றாமல் இருக்கின்றது. மேலும் இவை வண்டல் படிவைத் தடுப்பதோடு கால்நடைகட்கு குடிநீர் வழங்கவும் பயனுள்ளதாக விளங்குகின்றன.

ரூபாய் 46.55 இலட்சம் செலவில் 126 கசிவு நீர்க்குட்டைகளை 9 உப கோட்டங்களின் உதவியுடன் இத்துறை மூன்று மாதங்களில் கட்டி முடித்தது. இவற்றால் 4, 19, 720 நாட்களுக்கான வேலை வாய்ப்பு உருவாகியது.

**நிர்வாகத்தினை வலுப்படுத்தலும், திருத்தியமைத்தலும்.**

இத்துறையில் நிர்வாகத் திறனை அதிகரிக்கும் நோக்கத்துடன் தமிழ் நாட்டை பகுதிகளாகப் பிரித்து, இதுகாறும் தனித் திட்டங்களை மட்டும் செயல்படுத்திவந்த கண்காணிப்புப் பொறியாளர்களையே ஒவ்வொரு பகுதிக்கும் பொறுப்பேற்கும்படி ஆணையிடப்பட்டு, இப்புதிய ஏற்பாடு 1982 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 20 ஆம் நாள்முதல் அமுலுக்கு வந்துள்ளது.

**1982-83 ஆம் ஆண்டின் புதிய திட்டங்கள்.**

புல்டோசர்கள் ஒவ்வொன்றின் வயது வரம்பு 12 ஆண்டுகளாகும். இத்துறையில் உள்ள புல்டோசர்களில் அதிகப்படியானவை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டனவாகும். வயது வரம்பினைத் தாண்டிய புல்டோசர்களுக்குப் பதிலாக புதிய புல்டோசர்களை மாற்றி விவசாயிகளின் தேவையினை நிறைவேற்றும் நோக்குடன் 1982-83 ஆம் ஆண்டில் 3 புதிய புல்டோசர்களை வாங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தற்பொழுது புல்டோசர்களும் டிராக்டர்களும் திருவாரூரிலுள்ள வேளாண்மைக் கருவிகள் பணிமனையில், விவசாயிகளுக்கு வாடகைக்குவிட வைக்கப்பட்டுள்ளன. இவை அப்பணிமனையில் செயற்பொறியாளரின் மேற்பார்வையில் உள்ளன. அச்செயற் பொறியாளர் இந்த உழுவை வாடகைத் திட்டத்தினை செயலாக்குவதோடல்லாமல் பணிமனைப் பணிகளையும் மேற்பார்வையிட வேண்டியுள்ளது. அதோடு தஞ்சை மாவட்டத்து உழவர்கள் தங்களது உபயோகத்துக்கான, புல்டோசர்களும் டிராக்டர்களும் வேண்டி திருவாரூருக்கு வர வேண்டியுள்ளது. இக்குறைகள் தீர்ந்திடும் வகையில் உழுவை வாடகைத் திட்டத்தின் கீழ் திருவாரூரிலுள்ள டிராக்டர், புல்டோசர்களைப் பிரித்து, [illegible]ரம், தஞ்சாவூர் ஆகிய இரு இடங்களிலும் உபகோட்டங்கள் அமைத்து,





இப்புதிய கோட்டங்களின் மூலம் விவசாயிகளுக்கு உதவிட திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணி விவசாயிகளுக்கு உதவுவதோடு அரசுக்கும் வருமானம் ஈட்டுவதாக அமையும்.

மதுரை, திருச்சிராப்பள்ளி, கோவை ஆகிய மூன்று இடங்களிலும் இத்துறையின் பண்டகசாலைகளும், பணிமனைகளும் உள்ளன. இப்பண்டகசாலைகளிலும், பணிமனைகளிலும் மிகவும் பளு மிகுந்த பொருட்கள் கையாளப்படுகின்றன. தற்பொழுது இங்கு வேலை செய்பவர்களே இப்பணியினை செய்து வருகின்றனர். இதனால், இங்கு வேலை செய்பவர்களுக்கு மட்டுமல்லாது பொருட்களுக்கும், சேதம் ஏற்பட நேரிடுகிறது. அதோடு கால விரயமும் உள்ளது. இக்குறைகளை நீக்க ஒவ்வொன்றும் 3 டன் பளு தூக்கவல்ல 4 நீரியல் பளு தூக்கிகளை வாங்க திட்டமிடப்பட்டுள்ளது. மூன்று பண்டகசாலைகட்கும், திருவாரூரிலுள்ள வேளாண்மைக் கருவிகள் பணிமனைக்கும் அவைகள் பகிர்ந்தளிக்கப்படும்.

இத்துறையிடம் 145 புல்டோசர்கள் உள்ளன. புல்டோசர்களில் பாதைச் சங்கிலிகளும் உருளைகளும் தேய்மானத்தால் அதிகம் பாதிக்கபடக்கூடிய பகுதிகளாகும். 4,000 மணி நேர வேலைக்குப் பிறகு அவைகள் மிகவும் தேய்ந்து சிதைந்து விடுகின்றன. புதிய பாதைச் சங்கிலிகள் வாங்குவதோ உருளைகள் வாங்குவதோ அதிகப்படியான செலவினை உண்டாக்குவதாகும். புதிய 'பாதைச் சங்கிலி' உருளைகள், வாங்குவதற்குப் பதிலாக பழையனவற்றையே புதுப்பித்து உபயோகிக்கும் நோக்குடன் ஒரு கட்டுமான இயந்திரம் வாங்க திட்டமிடப்பட்டுள்ளது. இது செலவினைக் குறைத்து மிகவும் பயனுள்ளதாக அமையும்.

கடினப் பாறைப் பகுதிகளான கோவை, பெரியார், வட ஆற்காடு, தர்மபுரி முதலிய மாவட்டங்களில் கிணறுகளை ஆழப்படுத்துதல் மிகவும் செலவினம் [illegible]க்கக்கூடியதாக உள்ளது. கிணறுகளை 100 அடி ஆழத்துக்கும் மேல் ஆழப் [illegible]த்தினால் தான் தேவையான பாசன நீர் கிடைக்கின்றது. கிணறுகளை [illegible]ழப்படுத்துவதற்குப் பதிலாக கிணறுகளில் துளையிட்டு நீரை வெளிக் [illegible]ணரலாம். இம்முயற்சிகள் வெற்றிகரமானதாகவும் அமைந்திருக்கின்றன. [illegible]ப்பயன்களினால் உழவர்களிடையே இக்கருவிகளுக்கான தேவை மிகுந்து [illegible]ணப்படுகிறது. விவசாயிகளின் தேவைகளுக்காக மூன்று வாகன் துளைக் [illegible]ருவிகளையும், 3 நீள் துளைக் கருவிகளையும் வாங்க திட்டமிடப்பட்டுள்ளது.

கடினப் பாறைப் பகுதிகளில், துளைக் கிணறுகள் அமைக்க பெர்குசன் [illegible]ளைக் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. இவை மிகவும் பழமையான

இணைப்பு

**1981-82 ஆம் ஆண்டில சாதனைகள் :** [1982 மார்ச் 8

பருவமழை 1981-82 ஆரம்ப காலத்தில் சாதகமாக இல்லாவிடினும், எண்ணெய் வித்துக்கள் சாகுபடி செய்யப்பட்ட பரப்பளவு கடந்த ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து அதிகமாக உள்ளது. அவை யாவன :—

(இலட்சம் எக்டேரில்)

| | 1981-82 (டிசம்பர் முடிய) | 1980-81 |
|---|---|---|
| 1. நிலக்கடலை | 9.08 | 6.82 |
| 2. எள் | 1.02 | 0.48 |
| 3. சூரியகாந்தி | 0.89 | 0.12 |
| 4. ஆமணக்கு | 0.17 | 0.13 |

1980-81 ஆம் ஆண்டில் வறட்சியால் பாதிக்கப்பட்ட சிறிய மற்றும் மிகச் சிறிய எண்ணெய் வித்து சாகுபடியாளர்களுக்கு உரிய காலத்தில் பயிர் செய்ய எண்ணெய் வித்துக்கள், தென்னங் கன்றுகள் முதலியன ரூபாய் 41.92 இலட்சம் செலவில் மானிய விலையில் வழங்கப்பட்டன. மற்றும் உரம், பூச்சிக்கொல்லி மருந்து முதலிய இடுபொருள்கள் வாங்க கூட்டுறவு சங்கங்கள் மூலம் மானியம் வழங்கப்பட்டது.

சூரியகாந்தியைத் தவிர இதர வித்துக்களின் சாகுபடி பரப்பு உற்பத்திக் குறியீடுகளை 1981-82 இறுதிக்குள் அடைந்து விடலாம் என நம்பப்படுகிறது இவற்றின் விவரம் வருமாறு :—

| | பரப்பளவு (இலட்சம் எக்டேரில்.) | உற்பத்தி (இலட்சம் டன்கள்.) |
|---|---|---|
| 1. நிலக்கடலை | 11.00 | 14.45 |
| 2. எள் | 1.48 | 0.71 |
| 3. சூரியகாந்தி | 1.00 | 0.75 |
| 4. ஆமணக்கு | 0.16 | 0.05 |
| 5. தென்னை | 1.34 | 127.30 கோடி தேங்காய் |

இணைப்பு

1982 மார்ச் 8]

**தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்து உற்பத்தியாளர் இணையம்.**

தேசிய பால் வளர்ச்சி வாரியத்தின் உதவியுடன் செயல்படும் கூட்டுறவு எண்ணெய் வித்து உற்பத்தியாளர் இணையம், தலைமைச் செயலரைத் தலைவராகக் கொண்டு தோற்றுவிக்கப்பட்டு 3—1—1981 முதல் செயல்பட்டு வருகிறது. திருவண்ணாமலை, செங்கம், போளூர், வந்தவாசி, திண்டிவனம், செய்யார், திருக்கோவிலூர், கடலூர், செஞ்சி, விருத்தாசலம், கள்ளக்குறிச்சி, மதுராந்தகம் ஆகிய வட்டங்களில் அமைக்கப்பட இருக்கும் 500 கூட்டுறவு எண்ணெய் வித்துச் சங்கங்களின் மூலம் 1.75 லட்சம் எக்டேர் நிலக் கடலைப் பரப்பளவிற்கு தரமான விதை, தொழில் நுட்ப உதவி, பயிர் பாதுகாப்பு, ஏனைய இடுபொருள்கள் அங்கத்தினர்களுக்கு வழங்கி செயல்பட உள்ளது. இக் கூட்டுறவு சங்கப் பகுதிகளில் உள்ள நிலக்கடலை சாகுபடியாளர்களின் மகசூலை இச்சங்கங்கள் கொள்முதல் செய்து, தரம் பிரித்து, பதப்படுத்தி சேமித்து விற்பனை செய்ய வகை செய்கிறது. இதன் மூலம் சாகுபடியாளர்கள் நியாய விலை பெறுவதுடன் கூட்டுறவு சங்கத்தின் இலாபத்தில் 50 சதம் ஊக்க போனசாக சாகுபடியாளர்கள் வழங்கிய நிலக்கடலை அளவிற்கேற்ப கொடுக்கப்படும். இத்திட்டம் 7 ஆண்டுகால அளவில் செயல்பட்டு சுமார் 11.45 கோடி ரூபாய் திட்ட மதிப்புடன் செயல்பட உள்ளது. 31—10—1982 முடிய உள்ள இவ்வாண்டு இலக்காக பதிவு செய்யப்பட வேண்டிய 100 கூட்டுறவு சங்கங்களில் 28 கூட்டுறவு சங்கங்கள் இதுவரை பதிவு செய்யப்பட்டுள்ளன.

தேங்காய், எண்ணெய்க்காக மட்டுமின்றி சமையலுக்காகவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது தமிழ் நாட்டில் ஒரு குடும்பத்திற்கு வாரம் ஒன்றிற்கு 1.6 தேங்காய் கிடைப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இது மிகவும் குறைவு. 1999-2000 ஆண்டிற்குள்ளாக குடும்பம் ஒன்றிற்கு வாரத்திற்கு 4.6 தேங்காய் கிடைக்க வகை செய்யும் நீண்ட காலத் திட்டமொன்று தீட்டப்பட்டுள்ளது. இதனை செயல்படுத்தும் நோக்கத்துடன் தற்சமயம் செயல்பட்டுவரும் தென்னை நாற்றங்கால்களுடன் உயர் விளைச்சல் தரும் மூன்றாவது ஒட்டு ரக தென்னை நாற்றங்கால் மதுரைப் பகுதியில் ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் தென்னை தீவிர சாகுபடித் திட்டம், 1981—82-ல் செயல்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டது. இத்திட்டம் 1982—83-ல் மேலும் 3 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்படும். நகரங்களில் தென்னங் கன்றுகள் வழங்கும் திட்டம் தற்போதுள்ள தென்னை மரங்களை வளப்படுத்தி உற்பத்தியைப் பெருக்கும் திட்டம்

[1983 மார்ச்

முதலியவற்றுடன் தென்னையைத் தாக்கும் தஞ்சாவூர் வாடல் நோய் ஒழி புத் திட்டம் கோளாவாடல் நோய் ஒழிப்புத் திட்டம் ஆகிய திட்டங்கள் 1982-83 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும்.

1981—82 ஆம் ஆண்டு ரபி பருவத்தில் பாசனத்தின் கீழ் நிலக்கடலை சாகுபடி செய்வதால் ஏற்படும் நன்மை குறித்து நிலக்கடலை சாகுபடியாளர் களுக்கு எடுத்துக் கூறப்பட்டு வருகிறது. சூரியகாந்தியை பாசன நிலக்கட லைப் பயிரில் ஊரப் பயிராக சாகுபடி செய்ய பரிந்துரை செய்யப்பட்டு வரு கிறது. மேலும் ஆற்று நீர்த் தேக்கப் பகுதிகளில் உள்ள நீரை பாசனத் திற்குப் பயன்படுத்தி, நிலக்கடலை, எள், போன்றவற்றை பயிர்செய்து, அதன் மூலம் உற்பத்தியை அதிகரிக்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. மேலே கூறப்பட்ட திட்டங்களின் அடிப்படையில் 1982—83 ஆம் ஆண்டிற்கு கீழ் கண்ட குறியீடுகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன :—

| | | பரப்பு— | உற்பத்தி. |
|---|---|---|---|
| | | (இலட்சம் எக்டேரில்) | (இலட்சம் டன்கள்) |
| 1. | நிலக்கடலை | | |
| 2 | எள் | 11.50 | 14.7[illegible] |
| 3 | சூரியகாந்தி | 1.50 | 0.[illegible] |
| 4 | ஆமணக்கு | 1.25 | 0.7[illegible] |
| 5 | தென்னை | 0.16 | 0.0[illegible] |
| | | 1.40 | 1[illegible] |
| | | | கோடி தேங்காய் கள். |

தற்போதுள்ள கருவிதை, ஆதார விதை உற்பத்தி முறைகளை நெறிப் படுத்தி, அரசுப் பண்ணைகளிலேயே தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் உதவியுடன் மேற்படி விதைகளை உற்பத்தி செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. கருவிதை, ஆதார விதை, சான்றிதழ் விதை ஆகியவற்றின் உற்பத்தி இணைப்பை ஒழுங்கு படுத்தி அதன்மூலம் 2 சதம் பரப்பிலிருந்து 3 சதம் பரப்பிற்கு 6,900 டன் தரமான விதை வழங்க திட்ட மிடப்பட்டுள்ளது. இதற்காக நான்கு விதை உற்பத்தி நிலையங்களும், இரண்டு ஆதார விதை உற்பத்திப் பண்ணைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இது போன்று, 52,50 டன் தரமான எள் விதையும், 900 டன் சூரிய காந்தி விதையும் 23 டன் ஆமணக்கு விதையும் 1982—83 ஆம் ஆண்டில் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.



1983 மார்ச் 9]

ஒட்டு மொத்தமாக பயிர்ப் பாதுகாப்பு 45,000 எக்டேர் பரப்பில் செய்யப் படவிருக்கிறது. இதற்காக பூச்சிக்கொல்லி மருந்து பாதி விலையில் வாங்க வும், பூச்சி மருந்து அடிக்கும் செலவை ஈடு கட்டவும் எக்டேர் ஒன்றிற்கு ரூபாய் 40 வீதம் மானியம் வழங்கப்படுகிறது. 500 டன் நுண்ணூட்டச் சத்தும், 17,000 டன் ஜிப்சமும், 1982-83 ஆம் ஆண்டில் வழங்கத் திட்டமிடப் பட்டுள்ளது. 1982-83 ஆம் ஆண்டு இறுதிக்குள் 32.25 இலட்சம் நெட்டை தென்னங் கன்றுகளும், 24.09 இலட்சம் ஒட்டு ரக தென்னங்கன்றுகளும் வழங்க முடியும்என எதிர்பார்க்கப்படுகிறது. 1982—83 ஆம் ஆண்டில் தென் னங்கன்றுகள் உற்பத்தியை பெருமளவு அதிகப்படுத்தி 32.25 இலட்சம் நெட்டை தென்னங்கன்றுகளையும், 5.09 இலட்சம் ஒட்டுரக தென்னங்கன்று களையும் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

### தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை.

தமிழ்நாடு தோட்டக்கலைப்பயிர்கள் அபிவிருத்திக்கு ஏற்றமிகு வாய்ப்பும் வளமும் கொண்டுள்ளது. பல்வேறு மாறுபட்ட தட்ப வெப்ப சூழ்நிலைகள் தோட்டக்கலைப் பயிர்கள் மேம்பாட்டிற்கு உகந்ததாக அமைந்துள்ளது. சுமார் 6.60 இலட்சம் எக்டேர் தோட்டக்கலைப் பயிர்கள் கொண்ட தமிழ் நாட்டில் மேலும் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் பெரியதொரு வாய்ப்பு உண்டு. தோட்டக்கலைப் பயிர்கள் அபிவிருத்திக்கென தனித்துறை ஒன்று 1979 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. மா, வாழை. மரவள்ளிக் கிழங்கு போன்ற பயிர்களில் இத்துறை ஏற்றமிகு சாதனை புரிந்துள்ளது. 1982—83-ல் இத் துறை அடையவிருக்கும் சாதனை கீழே குறிப்பிடப் பட்டுள்ளது :—

| | ஆறாம் ஐந்தாண்டு ஆரம்பநிலை உற்பத்தி குறியீடு. | ஆறாம் ஐந்தாண்டு திட்ட முடிவில் உற்பத்தி குறியீடு. | 1982—83 ஆம் ஆண்டின் உற்பத்தி குறியீடு. |
|---|---|---|---|
| | (இலட்சம் டன்களில்) | | |
| பழங்கள்— | | | 13.57 |
| | 12.31 | 14.38 | |
| 1 வாழை | | | 6.12 |
| | 5.33 | 6.80 | |
| 2 மா | | | |
| 3 எலுமிச்சை வகைகள் | 0.46 | 0.62 | |
| 4 இறவைப் பழங்கள் | 0.10 | 0.13 | 0.12 |
| | [illegible] | [illegible] 98 | |

குறைந்த வேகத்தில் இயங்கக் கூடிய கருவிகளாகும். ஹேமர் துளைக் கருவி கள் போன்ற விசைத் துளைக் கருவிகளின் அறிமுகத்திற்குப் பிறகு பெர்குசன் துளைக் கருவிகளுக்கான தேவை குறைந்து வருகின்றது. சுழல் விசைத் துளைக் கருவிகள் மண் பாங்கான நிலங்களில் குழாய்க் கிணறுகள் அமைக்கப் பயன்படுகின்றன. விவசாயிகளிடம் இவற்றின் தேவையும் அதிகரித்து வருகின்றது. இத்தேவையை முன்னிட்டு பழைமையான பெர்குசன் துளைக் கருவிகளை சுழல் விசைத் துளைக் கருவிகளாக மாற்ற திட்டமிடப்பட்டுள்ளது. 1982-83 ஆம் ஆண்டில் ஒரு பெர்குசன் துளைக் கருவியினை சுழல் விசைத் துளைக் கருவியாக மாற்ற திட்டமிடப்பட்டுள்ளது. இத்துறையில் தற்சமயம் வெளி நாட்டிலிருந்து வாங்கப்பட்ட 12 விசைத்துளைக் கருவிகள் உள்ளன. இவை வெளிநாட்டிலிருந்து வாங்கப்பட்ட கருவிகளாதலால், இவற்றிற்குத் தேவையான உதிரிப் பாகங்கள், உள் நாட்டில் கிடைப்பது அரிதாக உள்ளது. உதிரிப் பாகங்கள் உள் நாட்டிலும் தயாரிக்கப்படுவதில்லை. அவைகள் வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட வேண்டியதால் காலதாமதம் ஆவதோடு, இக்கருவிகள் காலத்தில் பராமரிக்கப்படுவதில்லை. ஆதலால் வெளி நாட்டு என்ஜின்களுக்குப் பதிலாக உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட என்ஜின் களைப் பொருத்தி இத்துளைக் கருவிகளை உபயோகிக்க திட்டப்பட்டுள்ளது. 1982-83 ஆம் ஆண்டில் மூன்று வெளிநாட்டு எஞ்சின்களுக்குப் பதிலாக உள் நாட்டு எஞ்சின்கள் பொருத்தப்படும்.

மத்திய அரசு அங்கீகரித்துள்ள மூன்று பாசனப்பகுதி மேம்பாட்டுத் திட் டத்தில் கீழ்பவானி பாசனப் பகுதியும் ஒன்றாகும். தற்சமயம் இப்பாசனப் பகுதிகளில் வயல் வழிப்பாசன முறையே கையாளப்பட்டு வருகின்றது. இதன் காரணமாக பல்வேறு முறைகளில் நீர் விரயம் ஆகிறது. நீர் விரயத்தால் பாசனப் பரப்பு குறைந்து வருகின்றது. இந்த நீர் விரயத்தினைத் தடுத்து பாசனப் பரப்பை அதிகரிக்க பாசனப் பகுதி மேம்பாட்டுப் பணிகளை மேற் கொள்ளுதல், பாசனப் பரப்பை 10 எக்டேர் கொண்ட சிறு பகுதிகளாகப் பிரித்து அந்தச் சிறு பிரிவுகளுக்கு வேண்டிய நீரினை பங்கிட்டு கொடுத்தல், வடிகால் வசதிகளை உண்டாக்கல், அவசியமான இடங்களில் வாய்க்கால்களை சிமெண்டால் பூசி நீர் விரயத்தினைத் தடுத்தல், நிலச்சமன்பாடு முதலிய பணிகள் மேற் கொள்ளப்படவிருக்கின்றன. 'வாரபந்தி' நீர்ப் பங்கீட்டு முறையினையும் வழக்கத்திற்குக் கொண்டு வரத் திட்டமிடப்பட்டுள்ளது. மொத்த பாசனப் பரப்பான 80,806 எக்டேர் பரப்பில் 1982-83 ஆம் ஆண்டில் 4,000 எக்டேர் பரப்பில் பாசனப் பகுதி மேம்பாட்டுப் பணிகள் செய்ய திட் டமிடப்பட்டுள்ளது.



தமிழ்நாட்டில் பாசன வசதியை தரக்கூடிய ஏரிகள் நிறைய உள்ளன. பெரும்பாலான பகுதிகளில் ஏரிப் பாசனத்தை பயன்படுத்தும் திறன் குறை வாக உள்ளது. பாசன நீரைப் பயன்படுத்தும் திறனை அதிகரித்து, அதிக நிலங்களுக்கு பாசன வசதியைக் கொடுக்கும் வகையில் பாசன மேம்பாட்டுப் பணிகளைச் செய்வதென திட்டமிடப்பட்டுள்ளது. 1982-83 ஆம் ஆண்டில் 2,000 எக்டேர் ஏரிப் பாசன நிலங்களில் 2 உபகோட்டங்கள் உதவியுடன் பாசன மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

பரம்பிக்குளம், ஆளியாறு பாசனப் பகுதிகளில் பாசனப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தினை செயலாக்க திட்டமிடப்பட்டுள்ளது. பாசன நீர் நிர்வாகத் திறன் குறைந்திருப்பதால் பாசனப் பரப்பு குறைந்துள்ளது. பண்ணைப் பாசன மேம்பாட்டுப் பணிகளை செயலாக்கி மேலும் 60,000 எக்டேர் பரப்புக்கு பாசன வசதியினை படிப்படியாக விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது. வயல் வழிப்பாசனத்தை தடுத்தல், நிலச் சமன்பாடு செய்தல் தடுப்புச் சிற்றணைகள் கட்டுதல் முதலிய பணிகள் மேற் கொள்ளப்படும். 1982-83 ஆம் ஆண்டில் 2,400 எக்டேர் பரப்பில் பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

### எண்ணெய் வித்துக்கள் துறை.

எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியைப் பெருக்க தனிக் கவனம் செலுத்தும் நோக்குடன் 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் மூன்றாம் நாள் முதல் எண்ணெய் வித்துக்கள் துறை ஏற்படுத்தப்பட்டு இயங்கி வருகிறது. எண்ணெய் வித்துக்கள், தேங்காய் முதலியவற்றின் மொத்த உற்பத்தியைப் பெருக்குவது டன் உற்பத்தித் திறனையும் அதிகரித்து அதன் மூலம் எண்ணெய் நுகர் வோருக்கு அதிகம் வழங்கி, எண்ணெய் இறக்குமதியைக் குறைப்பது இத்துறை யின் நோக்கமாகும். எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி செய்யும் மாநிலங்களில், தமிழ்நாடு முக்கிய இடம் வகிக்கிறது. இந்தியாவில் உற்பத்தி செய்யப்படுவ தாகக் கணக்கிடப்படும் 114 இலட்சம் டன் எண்ணெய் வித்துக்களில் தமிழ் நாட்டில் மட்டும் 16 இலட்சம் டன் உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழகத்தில் பயிரிடப்படும் முக்கிய எண்ணெய் வித்துக்கள் நிலக்கடலை, எள், சூரியகாந்தி, ஆமணக்கு முதலியனவாகும். சிறு எண்ணெய் வித்துக்களான குசம்பா (Saflower ) சோய மொச்சை, கடுகு முதலியவற்றை தமிழகத்தில் பரப்ப; அனுசரணை ஆராய்ச்சி வயல்கள் அமைத்து, அதில் காணும் பலன்களுக்கு ஏற்ப பயிர் செய்ய ஏற்பாடு செய்யப்படும்.

காய்கறிகள்—

(இலட்சம் டன்னில்)

| | | | |
|---|---|---|---|
| 1 உருளைக் கிழங்கு | 0.83 | 1.04 | 0.96 |
| 2. சர்க்கரை வள்ளிக்கிழங்கு | 0.55 | 0.80 | 0.68 |
| 3. வெங்காயம் | 2.75 | 3.52 | 3.16 |
| 4 பிறவகைக் காய்கறிகள் | 2.00 | 2.58 | 2.27 |
| மொத்தம் | 6.13 | 7.94 | 7.07 |

1981—82 ஆம் ஆண்டின் சாதனைகள்

அதிக மகசூல் தரும் உயர்ரகப் பழக்கன்றுகள் மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கான நடவுப் பொருட்களை விவசாயிகளுக்கு விநியோகிக்க இத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள 16 அரசு தோட்டக்கலை பண்ணைகளிலிருந்து சுமார் 16.00 இலட்சம் பலதரப்பட்ட கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்படும். இத் துறை 14 அரசு தோட்டக்கலைப் பண்ணைகளையும் 6 மிகப் பெரிய பழத் தோட்டங்களையும் கட்டுப்பாட்டில் கொண்டு தோட்டக்கலைப் பயிர்களின் நடவுப் பொருட்களை உற்பத்தி செய்கிறது. கல்லார், பார்லியார் குன்னூர் ஆகிய பழப்பண்ணைகள் நீலகிரி மாவட்டத்தின் தேவையை பூர்த்தி செய்கின்றன.

வாழை :

வாழை மகசூலில் எற்றமிகு சாதனையை இத் துறை கண்டுள்ளது. 1977-78-ல் எக்டேருக்கு 21.40 டன்னாக இருந்த மகசூல் 1980-81-ல் 27.44 டன்னாக உயர்த்தப்பட்டுள்ளது. இது சுமார் 28 சதம் கூடுதல் மகசூல் ஆகும். 1981-82-ல் சராசரி மகசூல் 28 டன்னாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. வாழை மேம்பாட்டிற்காக நவ்லாக், மதனைப்பட்டி, சின்னக் கல்ராயன்மலை ஆகிய இடங்களில் உயரிய வாழைக் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது. சேலம் மாவட்டம் சின்னக் கல்ராயன் மலையில் பிரத்தியேகமாக "மலை வாழைக்" கன்றுகள் உற்பத்தி தொடங்க இருக்கிறது. மதுரை மாவட்ட மலை வாழை சாகுபடியாளர்களுக்கு இது உதவும். வாழை உற்பத்தித் திட்டம் பெரியார் மாவட்டத்திற்கும் விரிவு படுத்தப்பட்டுள்ளது.





**மா :** மா சாகுபடியில் சுமார் 0.34 இலட்சம் எக்டேர் பரப்பிலிருந்து தற்பொழுது 0.37 இலட்சம் எக்டேராக உயர்த்தப்பட்டுள்ளது. இது சுமார் 12 சதம் கூடுதலாகும். ஆண்டுதோறும் சுமார் 30 இனவகைகள் கொண்ட இரண்டு இலட்சம் ஒட்டு மாங்கன்றுகள் தமிழ்நாடு முழுவதும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மரவள்ளிக்கிழங்கு.

மரவள்ளிக்கிழங்கு உற்பத்தியில் தமிழ்நாடு மற்றுமொரு சாதனையுள்ளது. 1977-78-ல் 13.10 இலட்சம் டன்களாக இருந்த மொத்த உற்பத்தி 1980-81-ல் 15.39 இலட்சம் டன்களாக உயர்ந்துள்ளது உயர்விளைச்சல் தரும் எக்டேராக இருந்த சாகுபடி பரப்பு 1979-80-ல் 0.61 இலட்சத்தை எட்டியுள்ளது. 1977-78-ல் 13.10 இலட்சம் டன்களாக இருந்த மொத்த உற்பத்தி 7980-81-ல் 15.39 இலட்சம் டன்களாக உயர்ந்துள்ளது. உயர்விளைச்சல் தரும் நோய் தாக்காத இரு புதிய ரகங்களையும் தமிழ் நாட்டில் இவ்வாண்டு சாகுபடிக்கென விவசாயிகளின் மத்தியில் புகுத்தப்பட்டுள்ளது.

மஞ்சள் :

மஞ்சள் உற்பத்தி சுமார் 80 சதம் உயர்த்தப்பட்டுள்ளது 1977—78-ல் மொத்த உற்பத்தி 30,000 டன்கள் என்ற நிலைமாறி 1980-81-ல் 54,000 டன்களுக்கு உயர்ந்துள்ளது. சாகுபடி பரப்பு 9,630 எக்டேரிலிருந்து 15,130 எக்டேர் பரப்பை எட்டியுள்ளது.

முந்திரி :

முந்திரி சாகுபடியிலும் கணிசமான வளர்ச்சியை எட்டியுள்ளோம் 1979-80-ல் சாகுபடி பரப்பு 0.95 இலட்சம் எக்டேர் என்ற நிலையிலிருந்து 1980-81-ல் 1.01 இலட்சம் எக்டேருக்கு உயர்ந்துள்ளது. உற்பத்தியும் பெருகியுள்ளது.

அன்னாசி :

கன்னியாகுமரி மாவட்டம் பேச்சிப்பாறையிலும் சேலம் மாவட்டம் கொல்லி மலையிலும் 'கியூ' ரக அன்னாசியில் சுமார் நான்கு இலட்சம் அன்னாசி நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகத்தில் இருந்து வருகிறது. சாகுபடிப் பரப்பும் 1,500 எக்டேருக்கு உயர்ந்துள்ளது. பழங்குடி மக்கள் வாழும் பகுதியான கொல்லிமலையில் அன்னாசிப்பழச் சாகுபடிப் பரப்பு கணிசமான அளவில் பெருக்கப்பட்டுள்ளது. மலைவாழ் மக்கள் மேம்பாட்டிற்கு இது எடுத்துக் காட்டாகும்.

**எலுமிச்சை :**

ஆண்டுதோறும் 2.00 இலட்சம் வைரஸ் நோய் தடுப்பு எலுமிச்சை கன்றுகள் உற்பத்தி செய்து விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இது தமிழ் நாட்டில், எலுமிச்சை உற்பத்தியைப் பெருக்க வழி வகுக்கும்.

**காய்கறிகள் :**

தமிழ்நாட்டில் சான்றுபெற்ற காய்கறி விதைகளின் தேவை சுமார் 100 டன்களாகும். இத் தேவையைப் பூர்த்தி செய்ய இத்துறையில் கட்டுப் பாட்டில் உள்ள ஐந்து விதை பெருக்கு மையங்கள் காய்கறி விதை உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன. தற்போதைய உற்பத்தி நிலை 20 டன்களேயானாலும் வரும் ஆண்டுகளில் காய்கறி விதைகள் உற்பத்தியில் தன்னிறைவு பெற ஆக்க வழிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. "செப்டம்பர் முட்டைகோஸ்" "ஸ்னோ காரட்" விதைகள் உற்பத்தியும் இத் துறையினால் தொடர்ந்து மேற் கொள்ளப்பட்டுள்ளது. இச்சிறப்பு இரக விதைகள் நிலகிரி மாவட்ட காய்கறி சாகுபடியாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

**நகர்புற காய்கறி அபிவிருத்தி :**

நகர்புற காய்கறி அபிவிருத்தித் திட்டம் சென்னை மாநகரில் பலப்படுத்தப் பட்டதுடன் மதுரை மாநகருக்கும் விரிவு படுத்தப்பட்டுள்ளது. 0.70 இலட்சம் பழம் மற்றும் இதர முக்கிய செடிகளும் 7.00 இலட்சம் காய்கறி நாற்றுகளும் 4.00 இலட்சம் காய்கறி விதைப் பொட்டலங்களும், 0.40 இலட்சம் பப்பாளிக் கன்றுகளும், 90 டன் இரசாயன உரங்களும், 15,600 கிலோ பூச்சி மருந்துகளும் இத்திட்டத்தின் கீழ் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

மலர்ப் பயிர்களை வியாபார ரீதியில் பயிரிட திட்டங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. புதிதாக மலர் சாகுபடி செய்வோருக்கு இடுபொருட்கள் மானிய விலையில் விநியோகிக்கப்படுகிறது. அலங்காரத் தோட்டங்கள் மலர்க் கண் காட்சிகள் தோட்டக்கலைச் சங்கங்கள் அமைக்கவும் அரசு மானியம் வழங்கப் படுகிறது. செயல் விளக்கப் பாத்திகள் அமைக்கவும் இத்திட்டத்தில் வழியுண்டு.

**மலைப்பயிர்கள் :**

ஒருங்கிணைந்த அணுகுமுறை மூலம் மலைப்பயிர்கள் முன்னேற்றத்திற்காக இதற்கென இத்துறையின் கீழ் தனிப்பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டு மதுரை யைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கி வருகிறது. நடவு பொருள்



உற்பத்திக்கென மைய நாற்றங்கால் ஒன்றும் இத்திட்டத்தில் உள்ளது. மலைப் பயிர்களுக்குத் தேவையான நாற்றுக்களை உற்பத்தி செய்து தென் மாவட்டங் களில் மலைப் பயிர்கள் சாகுபடி பரப்பை அதிகரிக்க வழிவகைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

**விரிவாக்கப்பணி சீரமைப்பு :**

நீலகிரி மற்றும் மதுரை மாவட்டம் கொடைக்கானல் மலைப் பகுதியில் தோட்டக்கலை விரிவாக்கப் பணி சீர்படுத்தப்பட்டு தோட்டக் கலைத் துறை யின் அனைத்துத் திட்டங்களும், பயிற்சி மற்றும் பார்வையிடுதல் திட்டத்தின் கீழ் 1—9—1981 முதல் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

**நீலகிரி மாவட்டத்தில் வாசனைப் பயிர்கள் :**

நீலகிரி மாவட்டம் கூடலூர் பகுதியில் ஏலம் கிராம்பு சாதிக்காய் மிளகு கோகோ போன்ற மலைப் பயிர்கள் மேம்பாட்டுத் திட்டம் இவ்வாண்டு முதல் செயலில் இருந்து வருகிறது. இத் திட்டத்தின் கீழ் நடவுப் பொருள்கள் அனைத்தும் 50 சத மானிய விலையில் விநியோகிக்கப்பட்டு ஐந்தாண்டு காலத்தில் சுமார் 1,200 எக்டேர் கூடுதல் பரப்பு இப்பயிர்களின் கீழ் கொண்டு வரப்படும், மண்வளத்தைக் காப்பதுடன் கூடலூர் பகுதி வாழ் மக்கள் மேம்பாட்டிற்கும் இத்திட்டம் வழி வகுக்கும்.

**பயன்தரும் மரங்கள் கொண்டு காடு வளர்ப்பு.**

சரிவு நிலங்களிலும் அரசு தரிசு நிலங்களிலும் தனியார் நிலங்களிலும் குறுகிய காலப் பயிர்கள் பயிர் செய்வதை கட்டுப்படுத்தி அதிக மதிப்புள்ள நீண்டகாலப் பயிர்களை பயிரிட ஊக்குவிக்கப்படும். இத்திட்டத்தினால் சுமார் 600 ஹெக்டேர் பரப்பில் நீண்ட காலப் பயிர்கள் சாகுபடி செய்யப்படும். நடவுப் பொருள் 50 சத மானிய விலையில் விநியோகிக்கப்படும். இத்திட்டத் தால் நீலகிரி மலையில் ஒரு "பசுமைப் போர்வை" உண்டாக்கப்பட்டு மண் அரிப்பு தடுக்கப்படும்.

**காய்கறி உற்பத்தியாளர் சங்கத்திற்கு நிதி உதவி :**

இஞ்சி பழங்கள் மற்றும் மிளகு வியாபாரத்தை பலப்படுத்தவும் காய்கறிகளில் மொத்த மற்றும் சில்லரை விற்பனையை ஏற்று நடத்தவும் காய்கறிகளை இதர நாடுகளுக்கு ஏற்றுமதி விற்பனைகளை ஏற்கவும்

செய்யவும் நீலகிரி மாவட்ட காய்கறி உற்பத்தியாளர்கள் விற்பனை சங்கத்திற்கு
நிதி உதவி செய்யும்பொருட்டு பங்குத் தொகையாக ரூபாய் 1.00 இலட்சம்
கொடுக்கப்பட்டது. இத்திட்டம் காய்கறி உற்பத்தியாளர்கள் மேம்பாட்டிற்கு
உதவி வருகிறது.

**பகுதி மேம்பாட்டுத் திட்டம் :**

சவ்வாது மலை, கொல்லி மலை, சேர்வராயன் மலை, பச்சை மலை, தாள
வாடி மலை, கீழ் பழனிமலை, இராசபாளையம், திருவில்லிபுத்தூர், மற்றும்
வத்திராயிருப்பு மலைப் பகுதிகள், தனி மலைப்பகுதி, ஆனை மலை ஆகிய
மலைப்பகுதிகளில் தோட்டக்கலை மேம்பாட்டுத் திட்டம் செயலில் இருந்து
வருகிறது. இத்திட்டத்தால் குறைந்த மகசூல் தரும் பயிர்களுக்குப் பதிலாக
அதிக மதிப்புள்ள நீண்டகால தோட்டக்கலைப் பயிர்களை சாகுபடி செய்ய
மலைப்பகுதி மக்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள். இடு பொருள்கள்
அனைத்தும் 50 சத மானிய விலையில் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

**ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம் :**

மலைவாழ் மக்கள் மேம்பாட்டிற்கென தனித் திட்டம் ஒன்றை இத்துறை
செயல்படுத்தி வருகின்றது. 2,200 மலைவாழ் மக்கள் குடும்பங்கள்
தெரிந்தெடுக்கப்பட்டு அவர்களது மேம்பாட்டிற்காகத் தோட்டக்கலைப்
பயிர்கள் சாகுபடிக்கு இடுபொருள்கள் அனைத்தும் 50 சத மானிய விலையில்
வழங்கப்படுகின்றன. பிற்பட்ட நிலை காரணமாக தென் ஆற்காடு மாவட்ட
மலைவாழ் மக்களுக்கு இடுபொருள்கள் 75 சத மானியத்தில் அனுமதிக்கப்
படுகின்றன. பழத் தோட்டங்கள் அமைக்கும் தனியாருக்கு எக்கர் ஒன்றுக்கு
ரூபாய் 1,000 வழங்கப்பட்டு அதில் 50 சதம் மானியம் அளிக்கப்படுகின்றது.
இதனால் சுமார் 400 குடும்பங்கள் கூடுதலாகப் பயன்பெறுகின்றனர். நிலமற்ற
மலைவாழ் மக்களுக்கு வேலை வாய்ப்பினை அளித்திடவும் மலைவாழ்
மக்களுக்குத் தேவையான தோட்டக்கலை பயிர்கள் நடவுப் பொருட்களை
உற்பத்தி செய்து வழங்கவும் சுமார் 400 ஹெக்டேர் பரப்பில் ஒரு மாபெரும்
பழப்பண்ணை சின்னக்கல்ராயன் மலைப்பகுதியில் கருமாந்துறைக்கருகில்
அமைக்கப்பட்டு வருகிறது.

**கிராமப்புற வளர்ச்சிக்கெனத் தனித் திட்டம் :**

தருமபுரி, இராமநாதபுரம் மாவட்டங்களில் இத்திட்டம் செயலில் இருந்து
வருகிறது. 1981-82 ஆம் ஆண்டில் தோட்டக் கலைப் பயிர்கள் அபிவிருத்திக்
கென ரூபாய் 35 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டத்தின்



கீழ் சுமார் 1,000 எக்டேர் பரப்பில் மா மரங்களில் பயிர் பாதுகாப்பு மேற்
கொள்ளப்பட்டு சிறு மற்றும் குறு விவசாயிகள் பயனடைந்துள்ளார்கள்.
இதனால் தருமபுரி மாவட்டத்தில் மா உற்பத்தி கணிசமான அளவில் பெருக
வாய்ப்புண்டு. இராமநாதபுரம் மாவட்டத்தில் தோட்டக்கலைப் பயிர்கள்
மேம்பாட்டிற்கு நடவு பொருள்கள் உற்பத்தி செய்ய 15 வட்டார நாற்றங்
கால்கள் அமைக்கும் செயல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதனால்
இந்த மாவட்டம் தோட்டக்கலைப் பயிர்கள் நடவுப் பொருள் தயாரிப்பதில்
சுய தேவையை எட்டும். நேமம் பழப்பண்ணை மேலும் 10 எக்டேர் பரப்பில்
விரிவுபடுத்தப்படுகிறது.

**பிற்பட்ட பகுதி சிறப்புத் திட்டம் :**

நீலகிரி மாவட்டம் முழுவதிலும் பிற்பட்ட பகுதிக்கான சிறப்புத் திட்டம்
செயலில் இருந்து வருகின்றது. தேயிலை, இஞ்சி, காய்கறிகள், கமலா
ஆரஞ்சு, மிளகு, சாதிக்காய், ஏலக்காய், பழங்கள் மற்றும் காய்கறிகள்
பதனப்படுத்துதல் உழவர்களுக்குப் பயிற்சி போன்ற பல்வேறு திட்டங்கள்
சுமார் ரூபாய் 167 இலட்சம் ஒதுக்கீட்டுடன் இத்துறையினால் செயல்
படுத்தப்பட்டு வருகின்றன. தேயிலைப் பயிர் மேம்பாட்டிற்காகச் சிறு
விவசாயிகளுக்கு இரசாயன உரங்கள் 2 சத மானிய விலையில் வழங்கப்
படுகிறது.

பயிர் பாதுகாப்பு மருந்து தெளிக்க 10 சத மானியமும் அனுமதிக்கப்பட்
டுள்ளது. தோட்டர்களுக்கு நீர்ப்பாசன வசதிகள் 90 கிணறுகள் மூலம் செய்து
தரப்பட்டுள்ளது. நீண்டகாலக் கடனுடன் 25 சத மானியமும் வழங்கப்படு
கிறது. இயற்கை வளத்தை பேணிக்காக்க மண்வள பாதுகாப்பும் இத்துறை
யினால் செயல்படுத்தப்பட்டு 1981-82-ல் ஏறத்தாழ 680 எக்டேர் பரப்பில்
மண்வளப் பாதுகாப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**மேற்குத் தொடர்ச்சிமலை மேம்பாட்டுத் திட்டம் :**

மிதவெப்பப் பழங்கள், காப்பி, தேயிலை மற்றும் வாசனைப் பயிர்களுக்
கான திட்டமும், கமலா ஆரஞ்சுப் பெருக்குந் திட்டமும் செயலில் இருந்து
வருகின்றன. சுமார் 14,000 கமலா ஆரஞ்சு நாற்றுகள் விநியோகிக்கப்
பட்டன. சிறுமலைப் பகுதியில் சுமார் 200 எக்டேர் பரப்பில் ஒரு மாபெரும்
பழப்பண்ணை வளர்ந்து வருகிறது.

முதன் முதலாக 1981—82-ல் 118 ஏக்கர் உருளைக்கிழங்கு பயிர்களை விதைச் சான்றுக்காக பதிவு செய்யப்பட்டதும் "குப்புரிசோதி" என்ற உருளைக்கிழங்கு இரகத்தின் விதைப் பண்ணைகளை தர்மபுரி மாவட்டத்தில் ஓசூர், மதுரை மாவட்டத்தில், கோடைக்கானல் ஆகிய இடங்களில் அமைக்கப் பட்டதும் இந்த வருடத்தின் சிறப்பு அம்சங்களாகும்.

1980-81-ல் சான்று விதை உற்பத்திக்காக 31,812 ஏக்கர் பதிவு செய்யப் பட்டது. 1981-82-ல் இது 35,000 ஏக்கர்களாக நிர்ணயிக்கப்பட்டது. 1981 டிசம்பர் வரையில் 27,000 ஏக்கர் பதிவு செய்யப்பட்டது. இந்த நிதியாண்டுக் குண்டான இலக்கு 35,000 ஏக்கர்கள் நிதி ஆண்டு முடிவடைவதற்கு முன் அடைந்து விடும்.

சோளப் பயிரில் பயிர் விலக்கு தூரம் விதை உற்பத்தியில் ஒரு முக்கியமான அம்சமாகும். இதுசம்பந்தமாக திருச்சி மாவட்டத்தில் 200 ஏக்கர் பரப்பில் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் ஒத்துழைப்புடன் சோதனைத்திடல் ஒன்றை அமைத்து ஆய்வு செய்யப்பட்டது. ஆராய்ச்சி முடிவுகள் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் இருந்து விரைவில் கிடைக்கப் பெற உள்ளன.

விதைச் சான்றளிப்புப் பணிகளில் முறைகளைச் சீர் செய்வதில் மிகவும் கவனம் செலுத்தப்பட்டு, வழக்கமாகத் தேவைப்படும் படிவங்களை சீர் அமைத்து, அச்சிட்டு வழங்க, ஏற்பாடு செய்யப்பட்டது. குறிப்பாகத் தேவைப் படும் சான்று அட்டைகள், பருவங்களுக்கு முன்பே அச்சிட்டு, இருப்பில் வைக்கப்பட்டுள்ளன. விதை சுத்திகரிப்பு நிலையங்களுக்குக் கோட்பாடுகள் விதிக்கப்பட்டது.

**1982-83-க்கான திட்டங்கள் :**

சான்று விதை உற்பத்திக்காக 35,000 ஏக்கர் நிலம் 1982-83-ல் பதிவு செய்யப்படும்.

சிறு விதை ஆய்வுக் கூடங்களால் பெறப்பட்டுள்ள வசதிகளைப் பயன் படுத்தி சான்று உற்பத்தியாளர்களின் விதைகளை ஆய்வு செய்து, விதைச் சான்று திட்டத்தில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் காலதாமதங்கள் நிவர்த்தி செய்யப்படும்.

விதைப் பண்ணைகள் ஆய்வுத் திறனை உயர்த்த அலுவலர்களின் கூட்டு ஆய்வு முறையை இந்த வருடத்தில் கடைப் பிடிக்கப்படும். இது வேலைகளைத் துரிதப்படுத்துவதுடன், குறைபாடுகளைப் போக்கவும் உதவும்.





கொல்லிமலைப் பகுதியில் சான்று பெறுவதற்கு உருளைக் கிழங்கு விதைப் பண்ணைகள் அமைக்க 1982—83-ல் வழி வகைகள் செய்யப்படும்.

மலைப் பகுதி காய்கறிகளில் முக்கியத்துவம் பெறும் 'பீன்ஸ்' முதலிய பயிர்களில் சான்று விதை உற்பத்திக்காக உதகை மற்றும் கொடைக்கானல் பகுதிகளில் 1982—83 ஆம் வருடத்தில் பண்ணைகள் பதிவு செய்யப்படும்.

பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், காய்கறிப் பயிர்கள் ஆகிய வற்றின் சான்று விதைகள் உற்பத்தியில் அதிக கவனம் செலுத்தப்படும்.

விதை ஆய்வாளர்களின் முக்கிய வேலை விதை விற்பனை மையங்களைக் கண்காணிப்பதே ஆகும். இந்த மையங்களில் அரசு விதை விற்பனைக் கிடங்குகள், கூட்டுறவு விதை விற்பனைக் கிடங்குகள், தனியார் விதை விற்பனை மையங்கள் ஆகியவைகள் அடங்கியுள்ளன. 1982—83-ல் 3,000 விற்பனை மையங்களை ஆய்வு செய்து, அறிவுரை வழங்க உத்தேசிக்கப் பட்டுள்ளது.

விதை விற்பனை மையங்களிலிருந்து, விதை மாதிரிகளை எடுத்து, அறிவிக்கப்பட்ட விதை ஆய்வுக் கூடங்களில் சோதனை செய்து, விற்கப்படும் விதைகளின் தரத்தைக் கட்டுப்படுத்துவதே விதை ஆய்வாளர்களின் மற்று மொரு வேலையாகும். 1982—83-ல் 3,000 விதை மாதிரிகளை எடுத்து ஆய்வு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அடிப்படை விதைகளை வளர்த்திட்டுச் சோதனையிடுவதற்கும், கலப்பின பருத்தி விதைகளைச் சோதனை இடுவதற்கும், ஏனைய சான்றளிக்கப்பட்ட விதைகளை உறுதிப்படுத்துவதற்கும், 1982—83-ல் ரூ. 5 இலட்சம் செலவில் ஒரு கண்ணாடி மாளிகை ஒன்று அமைக்கப்படும். மேலும், இவ்வாண்டில் விதைச் சான்றளிப்புத் துறையின் நடவடிக்கைகளைப் பலப்படுத்த அதிக அலுவலர்கள் நியமிக்கப்படுவர். விதைச் சான்றளிப்புத் திட்டம் 1969-ஆம் ஆண்டிலிருந்தே செயல்பட்டுவரினும், இதன் நன்மைகளை அநேக விவசாயிகள் இன்னும் சரிவர பயன்படுத்தவில்லை. எனவே விரிவாக்க விளம்பர முறைகளைக் கையாண்டு, விதைச் சான்றளிப்பின் நன்மைகளை விவசாயி களுக்கு எடுத்துக்கூற ரூ. 2 இலட்சம் செலவில் 1982—83-ல் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

[1982 மார்ச் 8

## வேளாண்மை விற்பனைத் துறை.

வேளாண்மை விற்பனைத் துறை 14—10—1977 முதல் தனித் துறையாக இயங்கி வருகிறது. இதன் நோக்கம் மாவட்டங்களில் உள்ள விற்பனைக் குழுக்களின் பணியைத் தீவிரப்படுத்துவதோடு, விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த பொருட்களை நியாயமான உயரிய விலையில் விற்று, நல்ல பயன் பெறவும், நுகர்வோருக்குத் தரமான கலப்படமற்ற பொருட்கள் கிடைக்கச் செய்வதுமாகும். இத்துறையின் திட்டங்கள்பற்றிய விவரங்கள் கீழேக் கொடுக்கப்பட்டுள்ளன.

**வணிகமுறை தரம் பிரிப்புத் திட்டம் :**

இத்திட்டத்தால் விவசாயிகள் தங்கள் விளை பொருட்களை விஞ்ஞான முறையில் தரம் பிரிப்பதன் அவசியத்தை உணர்ந்து செயல்படுவார்கள். இத்திட்டம் 50 இடங்களில் செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு மையத்திலும் ஒரு வேளாண்மை அலுவலர் பணியைக் கவனிக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

வணிகமுறைத் தரம் பிரிப்பை மேலும் திறம்பட செயல்படுத்த 1979—80 ஆம் ஆண்டு 25 வணிகமுறைத் தரம்பிரிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டன. இந்த மையங்களில் சிறிய ஆய்வுக் கூடங்கள் உள்ளன. இவைகளுக்குத் தேவையான உபகரணங்கள் வாங்கப்பட்டுள்ளன.

**நெய் மற்றும் எண்ணெய் தரம் பிரிப்பு ஆய்வுக் கூடங்கள் :**

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் அன்றாட வாழ்க்கைக்குப் பயன்படுத்தப்படும் உணவுப் பண்டங்கள் கலப்படமற்றதாகவும், சுத்தமானதாகவும் பொதுமக்களுக்குக் கிடைக்க வேண்டும் என்பதற்காக, இரசாயன முறைப்படி ஆய்வுக் கூடங்களில் நவீன நுண்கருவிகளைக் கொண்டு ஆய்வு செய்வதற்காகவும், இந்த ஆய்வு இலவசமாக வேளாண்மை அலுவலர்களால் செய்யப்பட்டு, இதற்காக சிறிதளவு கட்டணம் அங்கீகாரம் பெற்ற உற்பத்தியாளர்களிடம் வசூலிக்கப்படுகிறது.

1978—79 ஆம் ஆண்டில் 15 அக்மார்க் ஆய்வுக் கூடங்கள் செயல்பட்டு வந்தன. 1979—80 ஆண்டில் திண்டுக்கல், காங்கேயம், கும்பகோணம், தூத்துக்குடி, நாமக்கல் முதலிய இடங்களில் 5 அக்மார்க் ஆய்வுக் கூடங்கள் ஆரம்பிக்கப்பட்டன. 1980-81-ல் 10 ஆய்வுக் கூடங்களும், 1981-82-ல் மேலும் 6 ஆய்வுக் கூடங்களும் ஆரம்பிக்கப்பட்டன. தற்பொழுது மொத்தம் [illegible] கூடங்கள் செயல்பட்டு வருகின்றன.



1982 மார்ச் 8]

**முதன்மை ஆய்வுக் கூடம் :**

இயக்குநரின் நேர்முக மேற்பார்வையில், இயங்க வேண்டியிருப்பதால், இந்த ஆய்வுக் கூடம் திருச்சித் தலைமையிடத்திற்குச் சென்னையிலிருந்து மாற்றப்பட்டுள்ளது. இந்த ஆய்வுக்கூடம் மாநிலத்தில் உள்ள எல்லா அக்மார்க் ஆய்வுக்கூடங்களின் பணியை ஒருங்கிணைக்கிறது. தரம் பிரித்துப் பொருட்களின் மாதிரிகளை ஆய்வு செய்யவும், தரம் பிரிப்பாளர்கள் மற்றும் பல்வேறு அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கவும் உதவுகிறது.

**ஆய்வுக்கூட கட்டடங்கள் :**

திருப்பூர், கரூர், திருநெல்வேலி, விருதுநகர், சேலம் முதலிய இடங்களில் ஆய்வுக்கூடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 1932-83ல், திருச்சி, கோயம்புத்தூர், நாகர்கோவில் ஆகிய இடங்களில் ஆய்வுக்கூடம் கட்டப்படும்.

**பருத்தி தரம் பிரிக்கும் மையங்கள் :**

இத்திட்டம் கீழ்க்குறிப்பிட்ட ஊர்களில் செயல்படுத்தப்படுகிறது :—

1. பெருந்துறை
2. சத்திய மங்கலம்
3. பொள்ளாச்சி
4. உடுமலை
5. புதூர்
6. கோவில்பட்டி
7. சங்கரன்கோயில்

**பயிற்சி நிலையம் அமைப்புத் திட்டம் :**

இந்தப் பயிற்சி நிலையம் உதவி வேளாண்மை அலுவலர்களுக்கு வேளாண் விளை பொருள் சம்மந்தமாக அக்மார்க், மற்றும் வணிகமுறை தரம் பிரிப்பு ஆகியவற்றின்கீழ் பயிற்சியளிக்க ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் வரும் வரத்துக்களைத் தரம் பிரிக்கவும், விவசாயிகளுக்குத் தரம் [illegible] பற்றி விளக்கவும், ஆரம்பிக்கப்பட்டது. இந்த பயிற்சி நிலையம் [illegible] 1974 முதல் செயல்பட்டு சுமார் 60 பேர்களுக்கு [illegible] தோறும் பயிற்சி [illegible] வருகிறது.

**தமிழ்நாட்டில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் அபிவிருத்தி :** [1982 மார்ச் 8

தமிழ்நாட்டிலுள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் விவசாயப் பெருமக்களுக்கும் வியாபாரிகளுக்கும் மிகுந்த உபயோகமுள்ளவை என்று ஐயமின்றி நிரூபித்துள்ளன. வேளாண்மை விற்பனைத் துறை தனியாக அமைக்கப்பட்டபின் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் எண்ணிக்கை 140 லிருந்து 248 கூடங்களாக உயர்த்தப்பட்டதோடு அவற்றின் செயற்திறனும் உயர்ந்துள்ளன.

கடந்த மூன்று ஆண்டுகளில் விற்பனைக் கூடங்களுக்கு, வேளாண் விளைபொருள் வரவு விற்பனைக் குழுவின் சாதாரண வருமானம் பற்றிய விவரங்கள் கீழ் வருமாறு :

| | 1978–79 | 1979–80 | 1980–81 |
|---|---|---|---|
| விளைபொருள் வரவு.. | 3.35 இலட்சம். டன்கள். | [illegible].86 இலட்சம். டன்கள். | 4.22. இலட்சம். டன்கள். |
| விற்பனைக்குழுவின் சாதாரண வருமானம். | ரூ. [illegible]4 இலட்சம். | ரூ. 354 இலட்சம். | ரூ. 429 இலட்சம். |

1977-78ஆம் ஆண்டில் 25 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் அபிவிருத்திக்காக மத்திய மானியம் ரூ. 25 இலட்சமும் 1978-79ஆம் ஆண்டில் 9 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு ரூ. 7.50 இலட்சமும் 1980-81 ஆம் ஆண்டில் 12 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு ரூ. 7 இலட்சமும் பெறப்பட்டுள்ளது. 1981-82 ஆம் ஆண்டில் மத்திய மானியம் ரூ. 15 இலட்சம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் அபிவிருத்திக்காக பெறப்பட்டுள்ளது.

**தேசிய அளவில் கிராமச் சேமிப்புக் கிடங்குகள் :**

இத்திட்டம் மத்திய அரசால் தோற்றுவிக்கப்பட்டது. இதன் முக்கிய நோக்கம் விவசாயிகள் தங்களுக்கு அருகாமையிலேயே தகுந்த சேமிப்பு வசதிகளைப் பெறுவதும் அவற்றின்மூலம் தங்கள் பொருள்களின் மேல் கடன் வசதி பெறுவதும் ஆகும். மேலும் இதனால் மிகக் குறைந்த விலையில் விளைபொருட்களை விற்பதை தவிர்க்க முடியும். தமிழ்நாட்டில் வேளாண்மை விற்பனைத் துறையிடம் இத்திட்டம் செயலாக்கும் பொறுப்பை அளிக்க மாநில அரசு தீர்மானித்துள்ளது. மொத்தச் செலவில் 25 சதவீதம் மத்திய அரசு மானியமாகவும் 25 சதவீதம் மாநில அரசு மானியமாகவும்



1982 மார்ச் 8]

பெற்று ஒழுங்குமுறை விற்பனைக் குழுக்கள் கிடங்குகள் கட்டும். இதன் ஆரம்ப கட்டமாக 62 சேமிப்பு கிடங்குகள் கட்டப்படும். இதற்கான திட்டம் மத்திய அரசின் அங்கீகாரம் பெறப்பட்டதோடு முதல் தவணையாக 25 சதவீதமாக மத்திய அரசின் மானியம் ரூ. 31 இலட்சம் பெறப்பட்டுள்ளது.

**உலக வங்கி உதவி :**

புது ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களைத் திறக்கவும் ஏற்கனவே உள்ள விற்பனைக் கூடங்களைப் பெருக்கவும், அபிவிருத்தி செய்யவும், உலக வங்கியின் உதவியைப் பெற ரூ. 102.11 கோடிக்கான ஒரு திட்ட அறிக்கை, மைய அரசின் ஒப்புதல் பெறவேண்டி, அனுப்பப்பட்டுள்ளது. மைய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

**கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டம்.**

கரும்பு ஆணையாளர் என்ற முறையில், சர்க்கரை இயக்குநர் சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு விளையும் பரப்பினை ஒதுக்குகிறார். மேலும் சர்க்கரை ஆலைப் பகுதிகளில் சாலைகளின் அபிவிருத்தியையும் சர்க்கரை இயக்குநர் பார்த்துக் கொள்கிறார். இதற்காகத் தனியாக ஒரு கண்காணிப்புப் பொறியாளர், மற்றும் 3 உட்கோட்டப் பொறியாளர் ஆகியோரைக் கொண்ட பொறியியல் பணியாளர் சர்க்கரை இயக்குநரின்கீழ் பணியாற்றி வருகின்றனர். சர்க்கரை ஆலைகளிலிருந்து மேல்வாரியாக வசூலிக்கப்பட்ட தொகையிலிருந்து கரும்பு சாலைப் பணிகளுக்கு ஆகும் செலவு ஈடுகட்டப்படுகின்றது. புதிய சாலைகள் போடுதலும், ஏற்கனவே போடப்பட்டுள்ள சாலைகளை சரிவரப் பராமரித்தலும் கரும்பினைத் தடங்கலில்லாமல் வழங்குதலை உறுதிப்படுத்துவதால் பெரும்பாலான கரும்பு விளையும் பகுதிகளை சர்க்கரை ஆலைகளுக்கு இணைப்பதில் அரசு முக்கியத்துவம் கொடுக்கிறது. இத்திட்டத்தின் கீழ் கீழ்க்கண்டவாறு செலவு செய்யப்பட்டது :—

| | (இலட்சம் ரூபாயில்) |
|---|---|
| 1978-79 | 109.33 |
| 1979-80 | 150.00 |
| 1980-81 | 180.41 |
| 1981-82 | 230.00 (திட்டத்தில் ஒதுக்கப்பட்டது). |

விவசாய மறுநிதி மற்றும் வளர்ச்சிக் கழக உதவியுடன் செயல்படும் நீர்ப்பாசனமற்ற இதர திட்டங்கள்.

வேளாண்மை மறுநிதி மற்றும் வளர்ச்சிக் கழக உதவியுடன் தோட்டப் பயிர்களான காப்பி, தேயிலை, ரப்பர், கோக்கோ, ஏலம், தென்னை, மா, மற்றும் திராட்சை முதலியவற்றை சாகுபடி செய்வதற்கான திட்டங்களும் மற்றும் பலநோக்குத் திட்டங்களான பால்பண்ணைத் திட்டம், ஆடு வளர்ப்புத் திட்டம், கோழி வளர்ப்புத் திட்டம், கட்டை வண்டிகள் வழங்குதல் போன்ற திட்டங்களும் தீட்டப்பட்டுள்ளன. நிலமற்றவர்களுக்கு நில அடமான பிணை இல்லாமல் பலநோக்குத் திட்டங்களுக்காக நிலவள வங்கிகள் மூலம் ரூ. 5 கோடிக்கு நீண்ட கால கடன்கள் வழங்க அரசின் உத்திரவாதம் வழங்கப் பட்டுள்ளது.

சிறுபாசனமற்ற திட்டங்கள் செயற்படுத்தப்பட்டதில் ரூ. 1,423.35 இலட்சத்திற்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. இதுவரை இதுவரை 145.08 இலட்ச ரூபாய் அளவிற்கு 9 புதிய சிறுபாசனமற்ற திட்டங் களுக்கு விவசாய மறு நிதி மற்றும் வளர்ச்சிக் கழகம் ஒப்புதல் வழங்கி யுள்ளது. தற்போது 1,848.80 இலட்ச ரூபாய் அளவில் 90 சிறுபாசனமற்ற திட்டங்கள் செயல்பாட்டில் இருந்து வருகின்றது. இத்திட்டங்களின் கீழ் 1981-82-ல் 500 இலட்ச ரூபாய் அளவிற்குக் கடன்கள் வழங்க உத்தேசிக்கப் பட்டுள்ளது.

செயல்பாட்டில் இருந்துவரும் திட்டங்கள் தவிர 1,075 இலட்ச ரூபாய் அளவில் 31 புதிய திட்டங்கள் தற்போது பல்வேறு நிலைகளில் தயாரிப்பில் இருந்து வருகின்றன. இத் திட்டங்கள் அனைத்துக்கும் 1982-83-ல் வேளாண்மை மறுநிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தால் ஒப்புதல் அளிக்கப் படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

நகர்ப்புற கலவை எருத்திட்டம் மற்றும் கழிவு நீர் உபயோகத் திட்டம்.

நகர்ப்புற கலவை எருத்திட்டம் 1944 ஆம் ஆண்டில் துவக்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. நகராட்சி களிலும், பேரூராட்சிகளிலுமுள்ள எல்லா கழிவுப் பொருட்களையும் பல்வேறு விதமான பயனற்ற குப்பைகளையும் கலவை எருவாக மாற்றுவதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

98 நகராட்சிகளும், 8 நகரியக் குழுக்களும் நகராட்சிகளின் இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளன. 1981-82 ஆம் ஆண்டில் 3,86,300 டன் கலவை எரு உற்பத்தி செய்யப்பட வேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டு முடிவதற்குள் நிர்ணயிக்கப்பட்ட இலக்கினை அடைந்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது



நகராட்சிகள் தயாரிக்கும் கலவை எருவின் உற்பத்தித் திறனை நிர்ணயிக்க, ஒவ்வொரு நகராட்சியின் கலவை எரு உற்பத்தித்திறன் அதன் மக்கட் தொகையில் 5 சதவிதம் என டன் அளவில் கணக்கிடப்பட்டுள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளில் உள்ளாட்சி நிறுவனங்கள் உற்பத்தி செய்த கலவை எருவின் சராசரி அளவைக் காணும்போது வெகு சில நகராட்சிகள் மட்டுமே உற்பத்தித் திறன் அளவை எட்டியுள்ளது எனத் தெரிய வருகிறது.

அநேக நகராட்சிகளில் தயாரிக்கப்பட்ட கலவை உரத்தின் தரம் குறிப்பிட்ட தரத்தில் இல்லை. இவற்றை நல்ல தரமான முறையிலும், அதிக அளவிலும் உள்ளாட்சி நிறுவனங்கள் உற்பத்தி செய்ய சிறந்த வாய்ப்புள்ளது. உள்ளாட்சி நிறுவனங்களின் நிர்வாக அலுவலர்களுக்கு அவ்வப்போது கலவை எரு தயாரிப்பின் முக்கியத்துவத்தை உணர்த்தி கலவை எருவின் தரத்தை உயர்த்தி இத் திட்டத்தை இலாபகரமாக நடத்தவும், நஷ்டத்தைத் தவிர்க்கவும், தகுந்த வழிமுறைகளைப் பின்பற்றவும் அறிவுறுத்தப்படுகிறது. உரிய முறையில் கலவை எரு தயாரிக்கும் நடைமுறையை சுகாதார ஊழியர்களுக்கு விளக்கிக் கூறவும், கலவை எருக் கிடங்குகளை சிறந்த முறையில் பராமரித்து கலவை எருவின் தரத்தை உயர்த்தவும் பல்வேறு வழிமுறைகளை செயல் படுத்த ஆலோசனையளிக்கும் பொருட்டு பெரும்பாலான நகராட்சிகளுக்கு உர அலுவலர் தீவிர சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். நடப்பு ஆண்டில் 9 மையங்களில் தீவிர பயிற்சித் திட்டத்தின்கீழ் சிறந்த கம்போஸ்ட் உரம் தயாரிப்பது பற்றிய போதனை சுகாதார ஆய்வாளர்களுக்கும் சுகாதார மேற்பார்வையாளர்களுக்கும் அளிக்கப்பட்டது. இதன் விளைவாக கலவை எருவின் உற்பத்தியும் தரமும் உயர்ந்துள்ளது.

தற்போது கலவை எரு உற்பத்திப் போட்டி மாநில அளவில் ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்பட்டு சிறந்த கலவை எரு தயாரிக்கும் உள்ளாட்சி நிறுவனங் களுக்கு சுழற்கேடயம் பரிசளிக்கப்படுகிறது. தரமான கலவை எரு உற்பத்திக்கும் சிறந்த எரு விற்பனைக்கும் சுழற்கேடயம் பரிசுடன் பணமுடிப்பும் நகராட்சிகளுக்கு வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது.

கழிவு நீர் உபயோகத் திட்டம்.

நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளிலுள்ள கழிவு நீர் வேளாண்மைக்கு பயன்படுத்துவது, நகர்ப்புற கலவை எருத் திட்டத்தின் ஓர் அங்கமாகும். கழிவுநீர் முறையை மாற்றி அமைத்தல், கட்டுமானம் செய்தல், சாக்கடை நீரை சேகரித்து பக்குவப்படுத்தி கழிவு நீர்ப் பண்ணைகளில் பாசனத்திற்குப் பயன்படுத்துதல் ஆகியவை இத் திட்டத்தில் அடங்கும்,

தற்போது தீவிர திட்டத்தின்கீழ் 23 உள்ளாட்சி நிறுவனங்கள் கழிவு நீர்ப் பண்ணைகளைப் பராமரித்து வருகின்றன.

புல் மற்றும் இதரப் பயிர்கள் கழிவு நீர்ப் பண்ணைகளில் பயிராகின்றன. இப்பண்ணைகளை முறைப்படி பராமரிக்க உள்ளாட்சி நிறுவனங்களுக்கு தொழில் நுட்ப ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகிறது. 1980-81 ஆம் ஆண்டில் கழிவு நீர்ப் பண்ணைகளிலிருந்து ரூ. 8.17 இலட்சம் வருமானம் வந்துள்ளது.

### ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்.

மத்திய அரசினால் 1978-79 ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. சமூகத்தில் நலிந்து காணப்படும் சிறு விவசாயிகள், பங்கு வேளாண்மை செய்பவர்கள், வேளாண்மை மற்றும் வேளாண்மையைச் சாராத தொழிலாளிகள், கிராமப்புற கைவினைஞர்கள், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் ஆகிய வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்களை உற்பத்தி திட்டங்களின் மூலம் குறிப்பிட்ட காலத்திற்குள் வேலை வாய்ப்பும் நல்ல வாழ்க்கைத் தரமும் அடையச் செய்ய வேண்டுமென்பது இத் திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் 2—10—1980 முதல் தமிழ்நாட்டிலுள்ள எல்லா வட்டாரங்களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது. இத் திட்டம் இருபது அம்ச திட்டத்திலும் சேர்க்கப்பட்டுள்ளது

1981-82 ஆம் ஆண்டிற்கு ஒரு வட்டாரத்திற்கு ரூ. 6 இலட்சம் வீதம் மொத்தம் உள்ள எல்லா வட்டாரங்களுக்குமாக ரூ. 2,256 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1982-83, 1983-84, 1984-85 ஆகிய ஆண்டுகளில் ஒரு வட்டாரத்திற்கு ஆண்டிற்கு ரூ. 8 இலட்சம் என்ற அளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இத் திட்டச் செலவை மத்திய அரசும் மாநில அரசும் 50 : 50 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ளும். மாவட்ட அளவில் இந்த திட்டங்களை செயல்படுத்தவும் செலவினங்களை கவனிக்கவும் அந்தந்த மாவட்ட ஆட்சியாளருக்கு பிற துறைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திட்ட அலுவலர் மற்றும் தொழில் நுட்ப பணியாளர்கள் உதவி புரிகின்றனர்.

இத் திட்டத்தின்படி ஒரு வட்டாரத்தில் ஆண்டு ஒன்றுக்கு 600 குடும்பங்களுக்கு உதவி அளிக்கப்பட வேண்டும். இத் திட்டத்தின்கீழ் பயன் பெறுபவர்களை தேர்ந்தெடுக்கும் போது 60 விழுக்காடுவரை தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்களா என்று உறுதி செய்து கொள்ளுமாறு மாவட்ட ஆட்சியாளர்களை அரசு கேட்டுக் கொண்டுள்ளது. ஒரு வட்டாரத்தில் தேர்ந்தெடுக்கப்படும் 600 குடும்பங்களில்





குறைந்தது 200 மகளிரை இந்த திட்ட பயன் நுகர்வோராக தேர்ந்தெடுக்க சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும் என்பது இந்த ஆண்டு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் ஒரு முக்கிய அம்சமாகும்.

கிடைக்கக்கூடிய அடிப்படை வசதிகளுடன் இப் பயன் நுகர்வோர் திட்டத்தை இணைக்க ஒரு முறைப்படியான முயற்சி செய்யப்பட்டுள்ளது. இதனைக் கீழ்க்காணும் வகையில் விளக்கலாம். இத் திட்டத்தின் கீழ் கடன் பெற்று கறவை மாடுகள் வாங்குவதால் கிடைக்கும் அதிகமான பாலை ஏற்றுக் கொள்ளும் சாத்தியக் கூறுகள் உள்ள பால் வழித் தடங்களுடன் கூடிய பால் பண்ணை இருக்கும் இடங்களில் உள்ள பகுதிகளில்தான் கறவை மாடுகள் வாங்க கடன் கொடுக்கப்படுகிறது. இத் திட்டத்தின்கீழ் சிறு உழவர்கள் 25 சதவீதமும் குறுநில உழவர்கள், வேளாண்மைத் தொழிலாளர்கள் மற்றும் கிராமப்புற கைவினைஞர்கள் 33-1/3 சதவீதமும் உதவித் தொகை பெறுகிறார்கள். ஒரு குடும்பத்திற்கு உதவித் தொகையின் உச்ச வரம்பு ரூ. 3,000 ஆகும். ஆனால் மலைவாழ் மக்களுக்கு அந்த உதவித் தொகை ரூ. 5,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்ட செயற்பாட்டை மேம்படுத்த வேண்டி தீவிர முயற்சி செய்ய 1981 நவம்பரில் அனைத்து மாவட்ட ஆட்சியாளர்கள் கூட்டம் நடைபெற்றது இதனுடன் மேலும் எல்லா மாவட்ட ஆட்சியாளர்களுடன் மண்டல கூட்டத் தொடரும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் விளைவாக எல்லா மாவட்டங்களும் திட்ட ஒதுக்கீடு செய்யப்பட்ட குறியீட்டு அளவான ரூ. 22.56 கோடி மானிய செலவினை எட்ட முடிந்தது. சில மாவட்டங்கள் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஒதுக்கப்பட்ட ரூ. 6 இலட்சத்திற்கும் மேலாக செலவு செய்யலாம் என எதிர்பார்க்கப்பட்டது. இதனால் மத்திய அரசிடமிருந்து கூடுதல் தொகை பெற வழிவகை ஏற்படும். மொத்த குறியீட்டு அளவான ரூ. 22.56 கோடியில், 31—1—1982 வரை ரூ. 18.20 கோடி மானியச் செலவாக இத் திட்டத்தின்கீழ் செலவிடப்பட்டது. இது 81 விழுக்காடாகும். இதனால் 15—1—1982 வரையில் பயன் அடைபவர்கள் எண்ணிக்கை 2,91,567 ஆகும்.

இத்திட்டம் அடிப்படை செலவினங்களுக்கு (Infrastructure) முதலீடு செய்ய வகை செய்கிறது. ஆனால் இந்த அடிப்படை முதலீட்டுச் செலவு ஒரு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் 10 விழுக்காட்டிற்கு (10 சதவீதம்) வரம்பாக அமைக்கப்பட்டுள்ளது. மாநிலத் திட்டத்தில் இணைக்கப்படாத அடிப்படை வசதி திட்டங்கள் (Infrastructural facilities) மட்டும் தான் ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சி திட்டத்தின்கீழ் பரிசீலிக்கப்பட ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இக்கருத்துக்கள் மாநில

மேல்மட்ட கூட்டுக் குழுவின் முன்பு வைக்கப்படுகிறது மைய அரசின் பிரதிநிதி ஒருவரும் இக் குழுவில் கலந்து கொள்கிறார். இக்குழு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டங்களை பரிசிலித்து அவற்றிற்கு ஒப்புதல் அளிக்கும். இதுவரை ரூ 72.30 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டு 48 திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன.

**இராமநாதபுரம் மற்றும் தருமபுரி மாவட்டங்களுக்கான வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டம்.**

வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டம் இராமநாதபுரம், தருமபுரி மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பல அபிவிருத்திப் பணிகள் மூலம் நீண்டகாலமாக வறட்சித் தாக்குதலுக்குட்பட்ட பகுதிகளை மேம்படுத்துவதும், வறட்சித் தாக்குதலினால் இப்பகுதிகளில் ஏற்படும் கடுமையை ஓரளவு குறைப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத் திட்டத்திற்கான செலவை மத்திய அரசும், மாநில அரசும் சமமாகப் பகிர்ந்து கொள்கின்றன.

மேற்கண்ட வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டத்தின்கீழ் ஏனைய பலதரப்பட்ட வளர்ச்சிப் பணிகளோடு தருமபுரி மாவட்டத்தின் கிருஷ்ணகிரியில் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்கு அனுமதி வழங்கப்பட்டு இதற்கான வேலைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. மேலும் இம்மாவட்டத்தில் ஊத்தங்கரை தாலுக்காவில் மாரம்பட்டி என்னும் இடத்தில் பாம்பாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத்திட்டம் முடிவடையும் தருவாயில் உள்ளது.

1981-82 ஆம் ஆண்டிற்கு ரூ. 566.30 இலட்சம் அளவில் பலதரப்பட்ட பணிகளை இராமநாதபுரம். தருமபுரி ஆகிய இரு மாவட்டங்களில் நிறைவேற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டத்திற்கு 1982-83 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு ரூ. 720 இலட்சமாகும். ஆறாவது ஐந்தாண்டு திட்ட வரைவுகள் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ரூ. 3,963.71 இலட்சத்திற்கும், தருமபுரி மாவட்டத்திற்கு ரூ. 2,205.79 இலட்சத்திற்கும் தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும் இராமநாதபுர மாவட்டத்தில் வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டத்தின்கீழ் குளங்களின் பாசன வசதியை இழந்து இருக்கும் ஆயக்கட்டு நிலங்களை நவீனப்படுத்துதல், சீர்படுத்துதல் ஆகிய பணிகளின்மூலம் மீண்டும் பாசன வசதி பெறும் நிலைக்குக் கொண்டுவரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.



**தமிழ்நாடு வேளாண்மை தொழில்கள் கழகம் :**

தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகம் 1966-ஆம் ஆண்டு நிறுவப் பட்டது. வேளாண்மை, கால்நடை பராமரிப்பு, மீன்வளம், கோழி வளர்ப்பு போன்றவற்றை நவீனமுறையில் வளர்ச்சி பெற உதவும் வகையில் அவை சார்ந்த தொழில்களை ஊக்குவித்தலும், உணவுப் பொருட்களைப் பதப் படுத்தும் தொழில்களை ஊக்குவித்தலும், இக்கழகத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

இந்நிறுவனத்தில் தற்போதைய அங்கிகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 400 இலட்சம் ஆகும். இதில் ரூ. 360 இலட்சம் மதிப்புள்ள பங்குகள் வெளியிடப்பட்டு அதற்குரிய தொகை செலுத்தப்பட்டுள்ளது. இதில் தமிழ் நாடு அரசு ரூ.195 இலட்சமும் மத்திய அரசு ரூ. 165 இலட்சமும் செலுத்தி யுள்ளன.

**உரவிற்பனை :**

பல்வேறு வகையான உரவகைகளை விவசாயிகளுக்குக் கிடைக்கச் செய்யும் பொருட்டு, பல்வேறு நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்படும் உரங்களை விநியோகிக்கும் உரிமையைப் பெற்றுள்ளது. 1981—82-ஆம் ஆண்டிற்கு டிசம்பர் திங்கள் முடிய, இக்கழகம் 19,653 டன் அளவுள்ள உரங்களை விற்றுள்ளது. 1982 ஜனவரித் திங்கள் முதல் 1982 மார்ச் திங்கள் வரையிலான மூன்று மாதங்களில் 10,947 டன் அளவிலுள்ள உரங்களை விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. 1982—83-ஆம் ஆண்டில் இக் கழகம் 62,000 டன் அளவுள்ள உரங்களை விற்பனை செய்ய உத்தேசித் துள்ளது.

**டிராக்டர்கள், பவர் டில்லர்கள், மற்றும் உதிரி பாகங்களின் விற்பனை .**

இக்கழகம், விவசாயிகளுக்கு நியாயமான விலையில் உதிரி பாகங்களை தேவைப்பட்ட சமயத்தில் சீராக விநியோகிக்கும் பொருட்டு, தனது விற்பனை நிலையங்களை அமைத்துள்ளது. இந்த விற்பனை நிலையங்கள் மூலம், தரமான உதிரி பாகங்கள், டயர் மற்றும் ட்யூப்கள் மற்றும் மின்கலன்கள் முதலியனவற்றை, விற்பனை செய்து வருகின்றது. இக்கழகம் தனது துவக்கத் திலிருந்து 1980—81 ஆம் ஆண்டு வரை சுமார் 3,186 டிராக்டர்களையும், பவர் டில்லர்களையும் விற்பனை செய்துள்ளது. 1981—82 ஆம் ஆண்டில் (டிசம்பர் 1981 முடிய) 61 டிராக்டர்களும் 35 பவர் டில்லர்களும் விற்பனை செய்யப் பட்டுள்ளன. 1982—83 ஆம் ஆண்டிற்கு 105 டிராக்டர்களும், 90 பவர்

டீலர்களும் விற்பனைக் குறியனவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இக்கழகம் 1982—83 ஆம் ஆண்டில் ரூ. 200 இலட்சம் மதிப்புள்ள டயர், மின்கலன்கள் மற்றும் உதிரி பாகங்களை விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளது.

**மீன்பிடி வலை தயாரிப்புத் திட்டம் :—**

இக்கழகம் மீன்பிடிவலைகளை தயாரிப்பதற்காக, ஆண்டொன்றிற்கு 60 டன் அளவுள்ள நைலான் நூலினாலும் பாலிதின் நூலினாலும் மீன்பிடி வலைகளைத் தயாரிக்கும் திறன் கொண்ட ஒரு நவீன தொழிற்சாலையை சென்னையில் உள்ள கிண்டியில் அமைத்துள்ளது. 1981—82 ஆம் ஆண்டு மற்றும் 1982—83 ஆம் ஆண்டுகளில் 25 டன் மற்றும் 27 டன் அளவுள்ள மீன் பிடி வலைகள் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

**இலைப்புரத மாவுத் திட்டம், உடுமலைப்பேட்டை :**

கால்நடைகளுக்கும் கோழிகளுக்கும், தேவைப்படும் முக்கிய உணவாகிய இலைப்புரத மாவை லூசர்ன் என்ற புல் வகையின் மூலம் தயாரிக்கும் முன்னோடி தொழிற்சாலை ஒன்றை இக்கழகம் உடுமலைப் பேட்டையில், சிறு விவசாயிகள் தங்களது உற்பத்திற்கேற்ப வருவாய் பெறும் பொருட்டு அமைத்துள்ளது. இத்தொழிற்சாலையை உடுமலைப்பேட்டையில் துவக்கிய பிறகு விவசாயிகள் ஒரு டன் அளவுள்ள லூசர்ன் புல்வகைக்கு விலையாக ரூ. 110 என்ற அளவில் பெற முடிந்தது. விவசாயிகள் வருடம் ஒன்றிற்கு ஏக்கர் ஒன்றிற்கு சுமார் 32 டன் அளவுள்ள லூசர்ன் புல்வகை உற்பத்தி செய்ய முடியும். 1978-79, 1979-80, 1980-81 ஆகிய ஆண்டுகளில் முறையே 188 டன், 275 டன், மற்றும் 251 டன் இலைப்புரத மாவு விற்பனை செய்யப் பட்டது. 1981-82-ல், 226 டன் அளவுள்ள இப்பொருள் விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. 1982-83 ஆம் ஆண்டில் இக்கழகம் சுமார் 2,045 டன் அளவுள்ள லூசர்ன் புல்வகையை அரைக்க திட்டமிட்டுள்ளது.

**எண்ணெய் பிழிந்தெடுக்கும் திட்டம்—போச்சம் பள்ளி :**

ரூ. 50 இலட்சம் முதலீட்டில் சூரியகாந்தி எண்ணெய் வித்துக்களிலிருந்து எண்ணெய் பிழிந்தெடுக்க, போச்சம் பள்ளியில் அமைக்கப்பட்ட இத் தொழிற் சாலை தனது வர்த்தக ரீதியிலான உற்பத்தியை 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் துவக்கியது. இக்கழகத்தின் சனோலா என்ற சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் மிகவும் பிரசித்தி பெற்றுள்ளது. உபயோகிப்பாளர்களின் வளர்ந்து வரும் தேவையை ஈடுகட்டும் பொருட்டு பாலிதின் பைகளில் எண்ணெயை



அடைத்து விற்பதற்காக புதியதொரு இயந்திரத்தை இக்கழகம் வாங்கி யுள்ளது. 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் துவக்கப்பட்ட இந்த விற்பனை மிகவும் முன்னேற்றம் கண்டுள்ளது. சனோலா என்ற இந்த எண்ணெயை இக்கழகம் கர்நாடகம், மற்றும் கேரள மாநிலங்களிலும் கிடைக்கும்படி செய்துள்ளது. 1982-83 ஆம் ஆண்டில் 4,000 டன் அளவுள்ள சூரியகாந்தி எண்ணெய் வித்துக்களையும், 5,000 டன் கடலை வித்துக்களையும் அரைத்து எண்ணெய் பிழியத் திட்டமிடப்பட்டுள்ளது.

**பூச்சிக் கொல்லி மருந்துகளுக்கான மூலப் பொருட்களைத் தயாரித்தல் :**

அமெரிக்காவிலுள்ள மேசர்ஸ் ஸடாஃபர் கெமிக்கல்ஸ் என்ற நிறுவனத் துடன் பூச்சிக் கொல்லி மருந்துகளுக்கான மூலப் பொருட்களைத் தயாரிப்ப தற்கான தொழில்நுட்ப உதவிக்கான ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டு, இறுதி யான தொழில்நுட்ப அறிக்கையும் அந்நிறுவனத்திடமிருந்து பெறப் பட்டுள்ளது. இயந்திரக் கருவிகளை வழங்கும் நிறுவனத்தினரை தேர்ந்து எடுக்கும் பணிக்கான பூர்வாங்க ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன.

**கரைத்து எண்ணெய் எடுக்கும் தொழிற்கூடம், பொனக்குளம் :**

நாளொன்றுக்கு 60 டன் அளவுள்ள பிண்ணாக்கிலிருந்து எண்ணெயைக் கரைத்து எடுக்கும் திறன் கொண்ட ரூ. 50 இலட்சம் முதலீட்டில் துவக்கப் பட்டிருக்கும் இத்தொழிற்சாலையின் கட்டிட மற்றும் இயந்திரங்களை நிறுவும் பணி ஏறத்தாழ முடிவடைந்துள்ளது. 1982 ஆம் ஆண்டின் இறுதியில் இத் தொழிற்சாலை தனது உற்பத்தியைத் துவக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது. இத் தொழிற்கூடம் சுமார் 50 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும்.

**பருத்தி நூல் நூற்கும் ஆலைகள்—உடுமலைப்பேட்டை மற்றும் தேனி :**

உடுமலைப்பேட்டை மற்றும் தேனி ஆகிய இடங்களின் சுற்றுப்புறங்களில் விளையும் பருத்தியைக் கொண்டு பருத்தி நூல் நூற்கும் ஆலைகளைத் துவக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. பருத்தி உற்பத்தியாளர்கள் தங்கள் உற்பத்திக் கேற்ற ஊதியத்தை பெற உதவும் பொருட்டும் இந்தியப் பருத்திக் கழகத் துடனும், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் வாயிலாகவும் இத்தொழிற் கூடங்களுக்குத் தேவையான பஞ்சுப் பொதிகளை வழங்கும் பொருட்டு நிரந் தரமான ஏற்பாடுகள் செய்ய முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன.

**வேளாண்மைப் பொறியியல் பணிக் கூட்டுறவு இணையம் :**

தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு இணையம், 1972 ஆம் ஆண்டு ஒரு மாநிலக் கூட்டுறவு சங்கமாக அமைக்கப் பட்டது. வட்டார அளவிலான வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு மையங்களும், மாவட்ட அளவிலான கூட்டுறவு வேளாண்மைப் பொறியியல் பணிச் சங்கங்களும், இவ்விணையத்தைச் சார்ந்த சங்கங்களாகப் பணி புரிந்து வருகின்றன. 1975 ஆம் ஆண்டு வேளாண் பொறியியல் பணிகளின் இயக்குநர் பதவி அரசால் உருவாக்கப்பட்டது. வேளாண் பொறியியல் பணிக் கூட்டுறவைப் பொறுத்த வரையில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருக்கு உரிய அதிகாரங்களை இவர் பெற்றவர் ஆவார். இவ்விணையத்தின் முதன்மையான நோக்கங்களாவன :—

(அ) டிராக்டர்கள், ஆயில் என்ஜின்கள், தெளிப்பான்கள், விசைக் கலப்பைகள், மற்றும் பாறை வெடிக்கும் கருவிகளை வாடகைக்கு விடுதல்.

(ஆ) விவசாய எந்திரக் கருவிகளைப் பழுது பார்த்தால், மற்றும் பராமரித்தல்.

(இ) விவசாயிகளுக்குத் தேவையான விவசாயக் கருவிகள், உதிரி பாகங்கள் மற்றும் விதை, உரம், பூச்சி மருந்து ஆகியவற்றை நியாயமான விலையில் நல்ல தரமாக வழங்குதல்.

சார்ந்த சங்கங்களின் பணிகளை ஒருங்கிணைத்தல், மற்றும் மேற் பார்வையிடுதல், அவைகளுக்குத் தேவைப்படும் ஆலோசனைகளையும் உத்தரவுகளையும் வழங்குதல் முதலியன ஆகும்.

இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ. 100 இலட்சமாகும். 31—12—1981 முடிய செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூபாய் 25.18 இலட்சமாகும். கடந்த 9 ஆண்டுகளில் 30—6—1981 முடிய இந்நிறுவனம் மொத்தம் ரூ. 3.04 இலட்சம் நட்டம் அடைந்துள்ளது.

**கடந்த காலப் பணிகள் :**

மின்வெட்டு காலத்திலும் விவசாயிகள் நீர்ப்பாசன வசதியில் எவ்வித தடையுமின்றி பயிர் செய்ய, இணையம் விவசாயிகளுக்கு டீசல் என்ஜின் பம்பு செட்டுக்களை ஒருங்கிணைப்புத் திட்டத்தின் கீழ் வழங்கியுள்ளது.

ஐந்து இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு என்ற திட்டத்தின் கீழ் 1981—82-ஆம் ஆண்டில் (31-12-1981முடிய) இவ்விணையத்தில் இணைந்துள்ள சங்கங்களின் மூலம் 638 பேருக்கு வேலை வாய்ப்புகள் கிடைத்துள்ளன.



**தற்போதைய பணிகள் :**

**ஒருமுகப்படுத்தும் திட்டம் :** இத்திட்டத்தின் கீழ் கட்டுப்பாடான விலையில் மின்சார மோட்டார், டீசல் என்ஜின் பம்புசெட்டுகள் ஆகியவற்றை இணையம் வழங்குகிறது. 1981-82 ஆம் ஆண்டில் (31—12—1981 முடிய) 204 டீசல் என்ஜின் பம்பு செட்டுகளும், 16 மின்சார மோட்டார் பம்பு செட்டுகளும், ரூ. 9.62 இலட்சம் மதிப்புள்ள 640 தெளிப்பான்களையும், ரூ. 0.58 இலட்சம் மதிப்புள்ள குழாய் மற்றும் உபகரணங்களையும் விவசாயிகளுக்கு வழங்கியுள்ளது.

**இதர வியாபார நடவடிக்கைகள் :**

குழாய் மற்றும் உபகரணங்களையும், கோணிப் பைகளையும், பட்டு நூல் நூற்கும் இயந்திர உருளைகளையும், 1981—82 ஆம் ஆண்டில் இணையம் விநியோகித்துள்ளது. மேலும், இவ்வாண்டில் ரூ 3.91 இலட்சம் மதிப்புள்ள உரங்களையும், ரூ. 11.84 இலட்சம் மதிப்புள்ள பூச்சிக் கொல்லி மருந்து களையும் சார்ந்துள்ள மையங்கள் மூலமாக விவசாயிகளுக்கு அளித்துள்ளது.

**நிலையங்களில் வாடகைக்கு விடும் பணியும், மற்றும் பழுது பார்க்கும் பணியும் :**

இவ்விணையத்தைச் சார்ந்துள்ள மையங்கள், மொத்தம் 231 டிராக்டர்கள், 198 டிரெயிலர்கள், 149 ஆயில் என்ஜின்கள், 314 விசைத் தெளிப்பான்கள், 11 பாறை துளைக்கும் கருவிகள், ஒரு விசைக் கலப்பை ஆகியவற்றை விவசாயிகளுக்குக் குறைந்த வாடகைக்கு அளிக்கின்றன. 1981—82 ஆம் ஆண்டில் (டிசம்பர் 81 வரை) ரூ. 38.01 இலட்சம் டிராக்டர்களை வாடகைக்கு விடுதல் மூலம் வருமானமாக ஈட்டப்பட்டுள்ளது.

மேலும் தேசிய கூட்டுறவு வளர்ச்சி சம்மேளனத்திடமிருந்து ரூ. 1.1 இலட்சம் வீதம், அகஸ்தீச்சுவரம், புவனகிரி, கம்பம், தாராபுரம், திருப்பூர், [illegible]தான் ஆகிய மையங்களுக்கு மொத்தம் ரூ. 5.5 இலட்சம் உதவித் தொகை பெறப்பட்டுள்ளது. இதன் மூலம் 5 டிராக்டர்கள் வாங்கப்பட்டு இம்மையங்களுக்கு டிரெயிலர்கள், பலவித கலப்பைகள், பம்புசெட்டுகள் ஆகியவைகளும் நியாயமான விலையில் வாடகைப் பணிக்கு விடுவதற்காக அளிக்கப்பட்டுள்ளன.

**இயந்திரக் கருவிகள், விவசாயப் பொருட்கள் விநியோகம்:**

சிறு விவசாய மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம் மற்றும் ஏனையத் திட்டங்கள் மூலம் மானிய உதவியுடன் விவசாயிகளுக்குக் குறைந்த விலையில், விவசாய உபகரணங்களான மின்விசைத் தெளிப்பான்கள். கைத் தெளிப்பான்கள், சிறு விவசாயக் கருவிகள், மற்றும்

மாட்டு வண்டிகள் விவசாயத் தேவைப் பொருட்கள் ஆகியவற்றை இணையத்தைச் சார்ந்துள்ள மையங்கள் விநியோகம் செய்கின்றன. இவ் வகையில் ரூ. 272 இலட்சம் மதிப்புள்ள பொருட்களை இச்சங்கங்கள் 1981—82 ஆம் ஆண்டில் (31—12—1981 முடிய) விநியோகித்துள்ளன.

மத்திய அரசின் துணையுடன், இவ்விணையம் தானியங்களை சேதமின்றி சேமித்து வைக்க ஏதுவான குதிர்களை தயாரிக்க முற்பட்டது. இதற்காக ரூ. 42 இலட்சம் கடனாக அரசிடமிருந்து பெறப்பட்டது. 1981—82 ஆம் ஆண்டில் (31—12—1981 முடிய) இந்த மாவட்டச் சங்கங்கள் ரூ. 1.33 இலட்சம் மதிப்புள்ள 319 குதிர்களைத் தயாரித்து ரூ. 1.19 இலட்சம் மதிப்புள்ள 322 குதிர்களை விற்பனை செய்துள்ளது.

**எதிர்காலத் திட்டங்கள் :**

இவ்விணையம் விவசாயிகளுக்குப் பலனளிக்கும் வகையில் தன்னுடைய பணிகளை விரிவாக்கவும் முற்பட்டுள்ளது. இதன்படி—

1. இணையம் இரண்டு பவர் ரோலர்களைக் கிராமங்களில் ரோடு போடும் பணிக்காக வாடகைக்கு விடுவதற்காக ரூ 4 இலட்சம் செலவில் கொள்முதல் செய்துள்ளது. மேலும் ஒரு பவர் ரோலர் பஞ்சாயத்து யூனியன்களின் வேண்டுகோளின் பேரில், வாங்க இருக்கிறது.

2. பி. எச். ஸி., டி.டி.டீ., போன்ற மருந்துகளை மையங்கள் மூலம் விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்கான ஒரு தொழிற்சாலையைத் தொடங்குவதற்கான வாய்ப்பினை ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

**தமிழ்நாடு அரசுப் பண்ணைகள் கழகம் :**

தமிழ்நாடு அரசுப் பண்ணைகள் கழகம் மாநிலத்திலுள்ள தரிசு நிலங்களை சாகுபடிக்கு கொண்டு வரும் முக்கிய குறிக்கோளுடன் 1974-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் துவக்கப்பட்டது. மேலும், இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோருக்குப் பண்ணைகளில் நிரந்தர வேலை வாய்ப்புக் கொடுத்து மறு வாழ்வு அளிக்கும் குறிக்கோளும் இக்கழகத்திற்கு உண்டு. இக்கழகம் நெய்வேலி, காம்பக்குடி, திருவாரூர் மற்றும் காஞ்சிபுரத்தில் பெரிய அளவு பண்ணைகளையும், கொடைக்கானலில் நடுத்தர அளவு பண்ணைகளையும் அமைத்து இதுகாறும் 1,255 எக்டேர் பரப்புள்ள இதுவரை பயிரிடப்படாத நிலத்தை விளை நிலமாக மாற்றி உள்ளது. இதுவரை இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய 1,043 குடும்பத்தினருக்கு இக்கழகத்தின் பண்ணைகளில் மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது.



1980-81 ஆம் ஆண்டு (1980 ஜூலை முதல் 1981 ஜூன் முடிய) இக்கழகம் 1,806 எக்டேரில் சாகுபடி செய்துள்ளது. கடந்த ஆண்டுகளோடு ஒப்பிடும் போது மொத்த பயிர் செய்யப்பட்ட பரப்பளவில் 150 எக்டேர் மட்டுமே குறைந்துவிட்டது. 1981-8- ஆம் ஆண்டு 1,959 எக்டேர் நிலத்தில் பயிரிட திட்டமிடப்பட்டுள்ளது. இக்கழகம் காய்கறிகளை சென்னையிலுள்ள இதன் சில்லறை விற்பனைக் கூடங்கள் மூலம் விற்பனையைத் தொடர்ந்து செய்வதால் காய்கறிகளின் சில்லறை விற்பனை விலையில் நல்ல சீரான நிலையை அந்தந்த இடங்களில் உருவாக்கியுள்ளது.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் :**

**கல்வி.**

**1981-82 ஆம் ஆண்டின் சாதனைகள்.**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக கோவை வளாகத்தில் வேளாண்மை விளைபொருள் விற்பனை மற்றும் நிர்வாகம் பற்றியும் உணவு அறிவியல் மற்றும் சத்துணவு பற்றியும், புதியதாக இரு " எம்.எஸ்ஸி. " பட்டப்படிப்புகள் தொடங்கப்பட்டுள்ளன. மேலும், 46 மாணவர் எண்ணிக்கையுடன் பட்டுப்புழு வளர்ப்பு பற்றிய முழுநிலை டிப்ளமா படிப்பும் தொடங்கப் பட்டுள்ளது. கால்நடை மருத்துவக் கலைப்புலத்தில், நோய் நீக்கலியலிலும், கால்நடை மாபியல் மற்றும் இனப் பெருக்க இயலிலும் " பி.எச்.டி. " பட்டப் படிப்பு தொடங்கப் பெற்றுள்ளது. மேலும், மதுரையில் ஒன்றும் கோவையில் ஒன்றுமாக இரண்டு வேளாண்மை அறிவியல் நிலையங்கள் அமைக்கப் பட்டுள்ளன. பட்ட மேற்படிப்பு மாணவர்கள் பயன்பெறும் வகையில் 1981-82-ல் பல்கலைக்கழகச் சார்பில் மேலும் 83 மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்படும்.

**1982-83 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள் :—**

1982-89 ஆம் ஆண்டில் மனையல் அறிவியல், பட்டுப் புழு வளர்ப்பு ஆகிய இரண்டிலும் பட்டப்படிப்பு தொடங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அறுவடைக்குப் பிந்திய உத்திகள் பற்றியும், நீர்வளம் பற்றியும் பட்ட மேற் படிப்பு கல்வியும் தொடங்கப்படும். கால்நடை மருத்துவக் கல்லூரியில் மருந்தியல், நோயியல், விலங்கியல் ஆகியவற்றில் " பி.எச்.டி. " பட்டப் படிப்புகள் தொடங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் பயிர் பாதுகாப்பு பற்றியும் வீட்டு தோட்டம் அல்லது மலைசார்ந்த பயிர்கள் பற்றியும் டிப்ளமோ படிப்பும் தொடங்கப்பெறும். வேலூர், சாண்டிநல்லா, கோவில்பட்டி ஆகிய இடங்களில் 1982-83-ல் வேளாண்மை அறிவியல் நிலையங்கள் அமைக்கவும், அதன் மூலம் பல்கலைக் கழகத்தின் விரிவாக்கப்பணிகளை தீவிரப் படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

[1982 மார்ச் 8

கோவை மற்றும் மதுரையில் உள்ள உழவர் பயிற்சி நிலையங்கள் பண்ணை அறிவியல் நிலையங்களாக உயர்த்தப்பட்டு அதன் நடவடிக்கைகள் தீவிரப் படுத்தப்பட்டுள்ளன. ஏழு மாவட்டங்களில் பயிற்சி வழித் தொடர்பு திட்டத்தின் மூலமாக ஆராய்ச்சி முடிவுகள் விரிவாக்கப் பணியாளர்களுக்கு மாதாந்திரக் கருத்தரங்கத்தின் வாயிலாக அளிக்கப்பட்டன. இனக் கலப்பு ஆராய்ச்சியாளர்களின் விதைப் பெருக்குத் திட்டம் ஒன்று நடத்தப்பட்டு, அரசு வேளாண்மைத் துறைக்கு விதைகள் அளிக்கப்பட்டன.

V2',31 N82
N83;3'31
122231